ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்

ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்

இடைக்காலம் முதல் தற்காலம் வரை

மொழிபெயர்ப்பு :

கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.,
மா. சண்முகசுப்பிரமணியம் பி.ஏ;பி.எல்.,
எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ;பி.டிஎச்.,
தெசிணி (கவிதைகள்)

வெளியீடு :

சென்னை 1971
தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், இந்தியா &
ஹொர்ஸ்ட் எர்த்மன் ஃபெர்லாக், ஜெர்மனி

Tamil

GERMANIA ILAKKIATHIN SIRAPUP PAKUTHIGAL
CLASSICAL READINGS FROM GERMAN LITERATURE

Year 1971

Edition : 3000 copies

Copyright :

1971 by Southern Languages Book Trust, Madras (India) and Horst Erdmann Verlag, Tubingen (West Germany) and Basel (Switzerland)

Price : Rs. 15.00

Translated by

K. Diraviam, I.A.S.
M. Shanmugasubramaniam, B.A.,B.L.
M. Abdul Wahab, M.A.,P.Th.
Desini (*Poems*)

Published by

Southern Languages Book Trust, Madras-10, India and Horst Erdmann Verlag of Tubingen (West Germany) and Basel (Switzerland)

Printed at

Janatha Printing & Publishing Company Private Limited, 94-B, Peters Road, Royapettah, Madras-14.

முன்னுரை

இந்நூல், வரலாற்றின் இடைக்காலத்திலிருந்து நமது இருபதாம் நூற்றாண்டின் நடுக்காலம் வரையுள்ள ஜெர்மானிய இலக்கியத்தை வாசகர்கள்முன் படைக்கிறது. இதில், பதினொன்று நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த ஜெர்மானிய மக்களின் தத்துவங்களையும் எழுத்தோவியங்களையும் முழுமையாகக் காணலாம். ஆனால், இலக்கியத்தின் வருணனை வரலாறாக மட்டும் இது அமையவில்லை; இலக்கிய மூலத்தை அல்லது ஏற்ற மொழிபெயர்ப்பை வாசகர்கள் நேரடியாகச் சுவைத்து அறிந்து கொள்ளச் செய்வதே இந்நூலின் நோக்கமாகும்.

காலப்பரப்பிலே கருவாகி உருவான இலக்கியக் களஞ்சியத்தில் இருந்து எடுத்துக்காட்டாக நூறு சிறந்த நூற்பகுதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். ஏழாம் நூற்றாண்டில், மக்கள் குடிப்பெயர்ச்சி நாட்களில், இரண்டு பேர்களுக்கிடையே நடந்த துயரமான சண்டையைப் பற்றிய வீரம் நிறைந்த "ஹில்டப்ராண்டு பாட்டு" என்பதிலிருந்து தொடங்கி புகழ்பெற்ற தற்காலப் புலவர்களான கோட்ஃப்ரீட் பென், பெர்த்தோல்த் ப்ரெஹ்ட், பிரான்ஸ் காஃப்கா, தாமஸ் மன் இவர்களின் எழுத்துக்கள் வரையுள்ள இலக்கியத்தின் சுவையான பகுதிகள் தரப்பட்டுள்ளன. சாதாரண வாசகரின் பொதுக்கல்வியறிவின் பாற்பட்ட எண்ணற்ற இலக்கியப்பகுதிகளையும் இதில் சேர்ப்பதென முடிவு செய்தோம். ஜெர்மானிய இலக்கியம் என்றால் இன்னதென நன்கு தெரிந்து கொள்ளுவதற்கு உதவும் பல நூற்பகுதிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். இத்தகைய நூற்பகுதிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுபவை; சரியான நோக்கினால் இவற்றின் இலக்கியத் தன்மை விளங்கும். பொதுவான, மெய்ஞ்ஞானிகளும், அரசியலாரும் பத்திரிகையாளரும், கவிதைகள் நாடகங்கள் இதிகாசங்கள் இவற்றை இயற்றியோரும், தங்கள் நூல்களைத் தாங்களே கூறும்படி செய்துள்ளோம்.

ஜெர்மானிய இலக்கியம் பற்றி உண்மையாகத் தெரிந்து கொள்ளுவதற்கான வாய்ப்பினை முதன் முதலாகப் பலருக்கும் நல்குவது இந்நூல். இதற்காகவே, தற்கால நூல்களுக்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது, இலக்கிய வரலாற்று விளக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஜெர்மானிய இலக்கியம் பற்றி ஏற்கெனவே ஓரளவு தெரிந்தவர்களும் புதிய தகவல்களை இத்தொகுப்பில் காணலாம்.

இந்நூலின் முதற்பகுதி (கி. பி. 700–1700) வரலாற்று நடுக்காலத்தைச் சேர்ந்தது. பழைமை சார்ந்ததும் அதையடுத்து

வந்ததுமான ஜெர்மானிய உயர் இலக்கியம், மனிதப் பண்பாட்டு இலக்கியம், சமயச்சீர்திருத்த இலக்கியம், 'பரோக்' கால இலக்கியம் இவற்றின் மதிப்பாய்வு இப்பகுதியில் உள்ளது. இரண்டாம் பகுதி. (கி. பி. 1700–1790), உயர்வடிவு இலக்கிய மரபுக்கு வழி வகுத்த அறிவு விளக்க இலக்கியத்தைப் பற்றிக் கூறுகிறது. மூன்றும் பகுதி கெதெ (1700–1840) காலத்தைக் காட்டுவது. புயல்–எதிர்ப்புயல், உயர் வடிவு, உயர் உணர்வு இவ்வகை இலக்கியப் போக்கை இப்பகுதியில் காணுகிறோம். நான்காம் பகுதியும் ஐந்தாம் பகுதியும், முறையே, பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டைப் பற்றியவை. கவிதை மெய்ம்மைப் பாட்டிலிருந்து பகர்மைக்கும் அல்லது காப்பிய அரங்குக்கும் மாறும் போக்குகளை இப்பகுதிகள் காட்டுகின்றன. ஒவ்வொரு காலப்பிரிவின் தொடக்கத்திலும், அதன் தன்மைகளைக்கூறும் விளக்கமான முன்னுரை தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆசிரியரைப் பற்றியும் ஒவ்வொரு வாசகத்தைக் குறித்தும் தேவையான விளக்க விவரங்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, வெவ்வேறான முன்னுரைப் பகுதிகளுடன் கூடிய இந்நூல் முழுமையான இலக்கிய வரலாற்றுத் தொகுப்பாக அமைந்துள்ளது.

இதற்கும் மேல், மனிதப் பண்பாடு, சமுதாயச் சீர்திருத்தம் இவை பற்றி புரட்சிகரமாகவும் தாக்கும் போக்குடனும் இலக்கியத்தின் நெடுநாளைச் சிறப்புள்ள மரபு ஜெர்மானிய நாட்டிற்கு உண்டு என்பதற்கு இத்தொகுப்பு ஒரு கவர்ச்சி மிகுந்த சான்றாகும். வால்த்தர் .ஃபன் போகல்வைதெ முதல் பெர்த்தோல்த் ப்ரெஹ்ட் அல்லது கர்ட் டுஹோல்ஸ்கி வரை பல பண்பாளர்களை இந்நூலிலே நாம் காணுகிறோம். அவர்கள் தங்கள் நாட்டின் நிலையைச் சீர்திருத்தவும் நாட்டு மக்களின் நலனுக்காகவும் ஊக்கத்துடனும் ஆய்வறிவுடனும் தங்கள் ஆற்றலைப் பயன் படுத்தினார்கள். இதற்காகத் தங்களுக்கு எது விளைந்தாலும் அதை ஏற்பதற்கு முன்னின்றார்கள்.

தன்னுரிமை மீது எழுச்சிமிக்க வேட்கையும், உடன் வாழும் மக்களைக் குறித்துத் துடிப்பான பொறுப்புணர்வும் அந்நாளைய எழுத்தாளர்களுக்கு இருந்தன என்பதற்குச் சான்றாக, கடந்த நூற்றாண்டுகளின் எழுத்துக்கள் விளங்குகின்றன. வளர்ந்து தலைதூக்கிக் கொண்டிருந்த நடுத்தர மக்களுக்கும் உயர்குடி மக்களுக்கும் நிகழ்ந்த நீண்ட நாள் போராட்டத்தை இதர நூற்பகுதிகள் காட்டுகின்றன. அறிவு விளக்கக் காலத்திய எழுத்தாளர்கள் எதிர்காலத்தை எட்டி நோக்கும் சிந்தனை முறையைப் புகட்டினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் எழுத்துக்களிலே, சமுதாய நீதியும், ஜனநாயக தன்னாட்சி முறையும்

முழங்கப் பெறுகின்றன. இன்றைய எழுத்தாளர்களின் தலையாய கோரிக்கை எல்லா மக்களுக்கும் ஏற்ற நிலை வேண்டும் என்பது தான்.

கலையையும் அழகையும் மட்டுமே நாடிக் கனவுலகில் நிலவாமல், அன்றாடச் சூழ்நிலைகளையும் அவற்றையொட்டிய சிக்கல்களையும் அணுகி ஆய்வதே உண்மையான இலக்கியத்தின் உற்றதோர் இலக்கணமாம். இவ்விலக்கணம் பொருந்திய இந்த இலக்கியத் தொகுப்பு ஜெர்மானிய நாட்டின் வாலாறு, அதன் உயிரோட்டம், அதன் பண்பாடு, அதன் சமுதாய மாறுதல்கள் இவற்றையெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

உள்ளடக்கம்

பக்கம்

700—1700

அறிமுகம் 3

ஹில்டப்ராண்டின் பாடல் 3

எஷென்பாகின் வொல்ப்ராம்
—பார்சிவல் 6

வால்த்தர் ஃபன் ஃபோகல்வைதெ
—ஓடும் நீரின் ஒலியைக் கேட்டேன் 8

யொஹானஸ் ஃபன் தெப்ல்
—பொஹிமியாவிலிருந்து வந்த உழவன் 10

மார்ட்டின் லூதர்
—அடியார்கள் அவையில் நிகழ்த்திய உரை 12
—உழவர்களின் பன்னிரண்டு கோரிக்கைகள் 18

ஹேன்ஸ் ஜேக்கப் கிரிஸ்டாஃபல் ஃபன் கிரிமெல்ஷாசன்
—சிம்ப்லிஷியஸ் சிம்ப்ளிஷிசிமஸ் 21

1700—1790

முன்னுரை 26

கோட்டோல்டு எஃப்ராயிம் லெஸ்ஸிங் 27
—மனித இனத்தின் கல்வி 28
—நாதன் என்னும் அறிஞர் 32
—எது முதன்மையானது என்பது பற்றி விலங்குகளிடையே வழக்கு 35
—சிறுவனும் பாம்பும் 36
—ஏழு கடிதங்கள் 37

ஜார்ஜ் கிரிஸ்டோஃப் லிஷென்பெர்க்
—மணிமொழிகள் 42

இரண்டாம் ஃபிரீட்ரிஷ்
—மாக்கியவெல்லிக்கு மறுப்பு 43

அடால்ஃப் ஃபிரைஹெர் ஃபன் நிக்கெ
—மக்களுடன் கொள்ளும் தொடர்புபற்றி 50

யொகன் கோட் ஃபிரைட் ஹெர்டர் 55
—ஓர் உண்மையான கவிஞன் தன் தாய் மொழியிலேயே எழுத வேண்டும் 56
—என்றுமுள்ள சுமை 58
—ஆப்பிரிக்கத் தீர்ப்பு 59

	பக்கம்
இம்மானுவல் காண்ட்	62
—என் மனத்தில் நிறைந்துள்ள இரு பொருள்கள்	63
—அறிவு விளக்கம் என்பதென்ன? என்னும் வினவுக்கான விடை	64
1770—1840	
முன்னுரை	74
ஃபிரீட்ரிஷ் மக்ஸ்ம்யுலியன் கிலிங்கர்	
—சைத்தானின் உரை	78
ஹெய்ன்ரிஷ் லியோபால்டு வேக்னர்	
—குழந்தைக் கொலை	84
யொகன் உல்ப்காங் ஃபன் கெதெ	
—இளம் வியர்தரின் துன்பங்கள்	88
—கெட்ஸ் ஃபன் பெர்லிஷிங்ஷென்	91
—எக்மான்ட்	94
—வில்ஹெல்ம் மைஸ்தர்	98
—விசித்திர இளம் அண்டை வீட்டுக்காரர்கள்	101
—மொழிபெயர்ப்பாளர் பணி பற்றிச் சில கருத்துக்கள்	112
—எக்கர்மனுடன் உரையாடல்	114
ஃப்ரீட்ரிஷ் ஷில்லர்	116
—கொள்ளைக்காரர்கள்	117
—கௌரவம் இழந்தபின் குற்றவாளி	120
—வாலன்ஷ்டைன்	125
—நெதர்லாண்ட்ஸின் புரட்சி	128
—மனிதனின் அழகுணர்வுப் பயிற்சி பற்றி	130
—ஒரு கடிதம்	133
க்யோர்க் ஃபோர்ஸ்டர்	
—பிரெஞ்சுப் புரட்சி பற்றிக் கடிதங்கள்	136
ழான் பௌல் : இறந்த கிறிஸ்துவின் உரை	143
—கோமகன் குடிமக்களுக்கு வேட்டைக்குப் பின் அளித்த விருந்து	151
நோவாலிஸ்	
—கிறிஸ்துவ உலகம் அல்லது ஐரோப்பா	156
ஹெய்ன்ரிஷ் ஃபன் க்ளோஸ்த் : மிகாயேல் கோல்ஹாஸ்	159
—கடிதங்கள்	164
—லோகார்னேவின் பிச்சைக்காரி	166
கார்ல் பிலிப் மோரிட்ஸ் : ஆந்தோண் ரைஸர்	170

பக்கம்

யோசப் ∴பன் யெஹன்டோர்∴ப்
—ஜெர்மன் பிரபுக்கள் வர்க்கத்தினரின் வாழ்க்கை 176
—'உதவாக்கரையின் நினைவுக் குறிப்புகள்' 183

லுட்விக் ஊலன்ட்
—அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி 194

பத்தொன்பதாம் நூற்றாண்டு

முன்னுரை 201
ஹென்றிஷ் ஹைநெ : ஜூலைப் புரட்சி 203
—விடுதலை 207
லுத்விக் பொயர்னே : செல்வனும் ஏழையும் 215
—பாரிஸிலிருந்து ஒரு கடிதம் 220
ராபர்ட் ப்ரூட்ஸ் : பிரெஞ்சுப் புரட்சி 222
—பிற்போக்குக் கற்பனை யுகம் 225
ஆதோல்ப் கிளாஸ்பிரன்னர் : இரவு, இருண்ட இரவு 232
க்யோர்க் ப்யூஹ்னர் : கடிதங்கள் 235
—லெண்ட்ஸ் 238
—டாண்டனின் மரணம் 240
எட்வர்ட் மொய்ரிக்கே : ஓவியர் நோல்டன் 244
அடால்பெர்ட் ஷ்டி∴ப்டர்
—என் முப்பாட்டனாரின் காகிதங்கள் 248
பேடர் ரோஸக்கர் : கானகத்தின் கணக்கெடுப்பு 254
வில்யம் ராபே : தி ஷீட்டரும்ப் 258
கோட்∴ப்ரீட் கெல்லர் : கிரீன் ஹென்ரி 262
தெயடோர் ஸ்டோம்
—வெண்குதிரை மீது சவாரி செய்பவர் 270
—மேன்மை தங்கிய பல்கலீக் கழகக் குழுவினருக்கு 273
கார்ல் மார்க்ஸ் : மகனுடைய கடிதம் 277
—கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை 281
ஹெர்மன் ஷுல்ஸை-தெலிட்ஷ்
—சமுதாய உரிமைகளு, கடமைகளும் 288
∴ப்ரீட்ரிஷ் வில்யம் ரை.∴ப்யெஸன்
—கடன் வழங்கும் சங்கங்கள் 299
∴பெர்டினண்ட் லாஸ்ஸல்லெ
—அரசு, உழைப்பாளர் கருத்தில் 304
யொகன் பேட்டர் ஹேபல் : பலவகையான மழைகள் 309

பக்கம்

அலெக்ஸாண்டர் ∴பன் ஹும்போல்ட்
—அமெரிக்காவின் நில நடுக்கோட்டுப் பகுதிகளுக்குப் பயணங்கள் 317
மேரி ∴பன் எப்னர்-எஷன்பாக் : அண்டை வீட்டார் 323
தெயடோர் ∴பொண்டானெ : ஸ்டெஷ்லின் 327
—சூரியோதயத்துக்கு முன் 332
∴ப்ரீட்ரிஷ் ஹீட்ஷெ : ஜெர்மனி (1870–1871) 340
ஒட்டோ ∴பன் பிஸ்மார்க்
—ஹெர்∴பன் புட்காமருக்கு ஒரு கடிதம் 347
மார்ஸ் வேபர் : அரசியல்-வாழ்க்கைத் தொழில் 354

இருபதாம் நூற்றாண்டு

அறிமுகம் 367
கெர்ஹார்ட் ஹௌப்தமன் : நெசவாளர் 371
ஹ்யூகோ ∴பன் ஹோ∴ப்மன்ஸ்தால்
—லார்ட் சாந்தோஸ் கடிதம் 381
பிரான் கா∴ப்கா : தீர்ப்பு 396
—வழக்கு 412
கோட் ∴ப்ரீட் பென்
—கவிகள் உலகை மாற்ற இயலுமா? 419
ராபர்ட் முஸீல் : குணங்கள் இல்லாத மனிதன் 431
பெர்த்தோல்த் பிரெஹ்ட் 437
—ஸெட்ஸுவானில் ஒரு நல்ல பிறவி 438
—லா சியோதாத் சிப்பாய் 440
—துன் பவியல் பற்றி முப்புற விவாதம் 443
—பாட்டாளி இலக்கியம் பற்றிச் சில குறிப்புகள் 447
—எசமானர் புன் தீலாவும் அவர் பணியாள் மாத்தியும் 449
குர்ட் பிந்தூஸ் : இளம் கவிகளுக்கு உரை 458
ஆல்பிரெட் டொப்ளின்
—பெர்லின் அலெக்ஸாண்டர் பிளட்ஸ் 477
காஸிமிர் எட்ஷ்மித்—தொழுநோய்க்காரர் காடு 490
க்யோர்க் கைஸர்—போரில் தோல்விக்குப் பின் 513
தாமஸ் மன் : புட்டன் ப்ரூக்ஸ் 516
—ஷில்லர் பற்றிக் கடைசிக் கட்டுரை 525
—வெனீஸில் மரணம் 532
ஹெய்ன்ரிஷ் மன் : அடிமைக் குடிமகன் 541
ஜோச∴ப் ரோத் : ராதத்ஸ்கியூமார்ஷ் 552
கர்ட் டுஹோல்ஸ்கி : சொந்த நாடு 560

700 — 1700

தமிழாக்கம் :

மா. சண்முகசுப்பிரமணியம்

(ஹெய்ன்ரிஷ் லியோபோல்டு வேக்னர்
அத்தியாயம் முடிய)

கா. திரவியம்

அறிமுகம்

ஜெர்மானியக் கவிதை டியூட்டோனிக்கர்களின் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியே தொடங்கியதாகும். எட்டாம் நூற்றாண்டில் கிறித்துவ சமயம் பரவுவதற்கு முந்திய காலம் அது. ஜெர்மானியக் கவிதைஇலக்கியம் ஏடுகள் உருவிலே நமக்குக் கிடைக்கவில்லை; வாய்மொழியாகவே அது வழங்கிவந்தது. அவற்றில் சில பிற்காலத்தில்தான் எழுத்துருப் பெற்றன.

அக்காலத்தில் ஜெர்மானியப் பழங்குடிமக்கள் ஐரோப்பாவில் விரிந்த நிலப் பரப்புக்களில் பரவி வாழ்ந்தனர். அன்று, அரசியல் கூட்டாக அவர்கள் அமைந்து வாழவில்லை. ஆனால், பொதுவான மொழியும் நாகரிகமும் அவர்களை இணைத்து வைத்தன. பல திறப்பட்ட வாழ்க்கையின் முயற்சிகளோடு இணைந்த பல தெய்வங்கள் ஜெர்மானியரின் கருத்துலகிலே உண்டு. அத் தெய்வங்களுக்கெல்லாம் மேலாக ஊழ் நின்றது. "ஊழிற் பெருவலி யாவுள?" என்ற கொள்கைப்படி, அறிய முடியாத, மாற்ற இயலாத அந்த ஊழின் ஆற்றலுக்குப் பணிந்து மனிதன் நடந்தான்.

ஆண்மகனே ஜெர்மானியப் பழங்குடி அமைப்பிலே தலையாய இடம் பெற்றவன். எப்பொழுதும் அவன் ஒரு போர் வீரன். இடுக்கணழியாமை, ஏற்ற குடித்தலைவர்மீது பற்று, தன்மானம், அஞ்சா நெஞ்சம் ஆகிய இந்த இணையற்ற பண்புகளோடு "வகுத்தான் வகுத்த வகை"ப் படி அவன் வாழ்ந்து வந்தான்.

இத்தகைய சமய, ஒழுக்கச்சார்பான கருத்துக்கள் பல திறப்பட்ட ஜெர்மானியக் கவிதை வகைகளிலே பளிச்சிடுகின்றன. அவற்றில் தெய்வங்களை ஏத்தும் பாடல்கள், இளவரசர்களைப் புகழும் பாட்டுக்கள், விதியின் விளையாட்டுக்களையும் மகத்தான செயல்களையும் கூறும் இதிகாசங்கள் இவையெல்லாம் உள்ளன. முதல் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டு வரை அம்மக்கள் குடிபெயர்ந்து கொண்டிருந்தனர். ஐரோப்பாக் கண்டம் முழுதும் பரவிக் கொண்டிருந்த ஜெர்மானியர் கிழக்கிலிருந்து வந்த ஹூனர்களுடனும் மற்றப் பகைவர்களுடனும் போரிட்டனர். இந்த நாட்களில் இதிகாசங்களை மக்கள் விரும்பினர். அக்காலத்துப் புகழார்ந்த வீரர்களின் வெற்றிகளையும் தோல்விகளையும் பற்றிய கதைகளிலே வரலாற்று உண்மையும் புராணப் புகழ்ச்சியும் கலந்திருந்தன. பழங்குடிப் பிரிவினர் பலருக்கும் இந்த இதிகாசங்கள் பொதுவானவை. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னருங்கூட காவியங்கள் எழுதுவதற்கு இவை எழுச்சியூட்டின.

"ஹில்டப்ரான்டின் பாடல்" என்பதன் சில பகுதிகளின் தொகுப்பே இன்று நமக்குக் கிடைத்துள்ள ஜெர்மானிய இதிகாசம் ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு

துறவிகளால் இது எழுதப்பட்டது. செறிவான நடையிலுள்ள அப் பாடல் கீழ்க் கண்டவாறு தொடங்குகிறது :

நேருக் குநேரென எதிரெதிர் அணியிடை யிருந்து பொருதிடவே
போருக் கறைகூவி ஹில்டேவும் ஹாடு பிராண்டுவும் நின்றனராம்;
தாங்கினர் கவசம் தந்தையும் தனயனும்; இடையினில் வாளினையே
ஓங்கினர்; போருடை பூண்டே களத்திடைப் புலியெனப்
பாய்ந்தனரே !

பல ஆண்டுகள் கழித்து, முதுமையடைந்த ஹில்டப்ராண்ட் படை யொன்றுக்குத் தலைமை தாங்கிக் கொண்டு தனது நாட்டிற்குத் திரும் பினான். அவன் நாட்டைவிட்டுச் செல்லுங்காலத்தில் அவனுடைய ஒரே மகனான ஹாதுப்ராண்ட் குழந்தையாக இருந்தான். அந்த ஹாதுப்ராண்டை இன்று நாட்டின் எல்லையிலே போர்வீரனாகக் கண் டான். தன் மகன்தான் என்பதைத் தந்தை தெரிந்து கொண்டான். ஆனால், தந்தை மகனிடம் கூறிய உறுதிக் கூற்றுகள் தனயனின் செவி களில் ஏறவில்லை. நாட்டைக் காக்கும் பொறுப்பேற்ற மகனுக்கு அக் கூற்றுக்கள் வஞ்சனைச் சொற்களாகவே பட்டன; தந்தையையும் அவ னுக்கு அடையாளம் தெரியவில்லை. எனவே, தன்மானத்தைக் காத் துக் கொள்ளவேண்டி, ஹில்டப்ராண்ட் தன் மகனை மற்போருக்கு வரு மாறு அறைகூவி அழைத்து அவனை மடித்துவிட்டான்! ஊழின் வலி யால் விளைந்த இவ்வொழுக்க நெறிப் போராட்டத்திலே வீரமுடிவினை அவன் எடுத்தான். தன்மானக் காப்பும் அரசன்மீதுள்ள பற்றுறுதியும் மகப்பாசத்தை வென்றன. தான் கண்டறியாத தன் தகப்பனின் மன வுணர்வையும் மறப்பண்பையும் ஹாதுப்ராண்டு புகழ்ந்து கூறியது, துயர்நிறைந்த இக்குழப்பத்தின் துயர்நிலையை மிகுதியாக்கியது. கிறித்துவ சமயத்தின் மன்னிக்கும் அன்பு நெறியால் சிக்கல் இனிதாக முடிந்தது என்று நாம் காண்பதற்கில்லை.

எட்டாம் நூற்றாண்டில், பாதிரிமார்கள் ஜெர்மானிய மக்களிடையே கிறித்துவ சமயத்தை முறையாகப் பரப்பினார்கள். கார்லோஸ் (768 – 814) சக்ரவர்த்தியும் அவன் பின் வந்தோரும் கிறித்துவம் பரவுவதை ஆதரித்ததால் அரசாங்கத்துணையும் அம்முயற்சிக்குக் கிட்டியது. அப்பழங்குடியினரின் அரசியல் பகுப்பு அமைவுற்றதாலும், மொழி வளர்ச்சியுற்றதாலும், ஜெர்மானிய இனம், மொழி என்ற கருத் துணர்வு மலர்ந்தது. கிறித்துவ மதம் விரைவிலே பரவியது; வன்முறை வழியிலும் சில சூழ்நிலைகளில் அது பரவியது. ஜெர்மானியக் கோட் பாடுகளும் ஒழுக்க நெறிகளும் கிறித்துவத்தினின்றும் பெரிதும் மாறு பட்டிருந்தன எனவே, ஜெர்மானியப் பண்டைநெறிகளை மறக்கப்பட்டு மறைந்தன.

மடங்களிலுள்ள துறவிகளுக்கே அன்று எழுத்தறிவு இருந்தது. எனவே, அவர்கள்தாம் நாகரிகத்தைப் பரப்பும் பணியைச் செய்தனர்.

ஆதலால், ஜெர்மானிய இலக்கியம் என்று நாம் கொள்ளத்தக்கது ஆன்மீகத்துறை இலக்கியத்தையே ஆரம்பமாகக் கொண்டுள்ளது. இலத்தின் மொழியை மொழிபெயர்த்துப் பழகியதால் தோன்றிய பழைய ஜெர்மானிய மொழி — நாளடைவில் இலக்கிய மொழியாக வளர்ந்தது. கிறித்துவ மறை, வழிபாட்டுப் பாடல்கள், சமயக் கட்டுரைகள் இவைபற்றிய எழுத்துக்கள் கிறித்துவத்தை மக்களிடையே பரப்பின.

(863 – 871 ஆண்டுகளில்) ஓட்ஃப்ரீத் ஃபன் வைசன்பர்க் என்ற துறவி எழுதிய *'கிறித்துவ சமய சாரம்'* என்ற நூல் இவ்வகை நூல்களில் தலைசிறந்ததாகும். ஆனால் தனித்த ஜெர்மானிய இலக்கியம் என்று தொடங்கப்பட்ட முயற்சி, கி. பி. 900ஆம் ஆண்டளவில் கைவிடப்பட்டது. அடுத்த இருநூறு ஆண்டுகளில் கல்வியிற் சிறந்த சமயப்பணியாளர்கள் இலத்தின் கிறித்துவ நாகரிகத்தை வளர்த்தனர். ஏதானியன், சாலியன் பிரிவைச் சேர்ந்த ஜெர்மானிய சக்கரவர்த்திகளின் விருப்பிற்கிணங்க இம்முயற்சி நடைபெற்றது. உயர்ந்த பண்பாட்டை உருவாக்குவதில் இலத்தின் மொழியாட்சி பெரும்பங்கு கொண்டது. இலத்தின் மொழிவழக்குப்படி சமயச்சார் பற்ற பொருள்களைப்பற்றிக் கவிதைகள் பிறந்தன. உயர்தரமான தனித்த ஜெர்மானிய நாகரிகமும் இலக்கியமும் வளருவதற்கேற்ற வாய்ப்பினை பல ஆன்மீக இயக்கங்கள் ஏற்படுத்தின.

அரசவையில் பணிபுரியும் பெருங்குடி சார்ந்த வீரர்களைக் கொண்ட மேனிலை வகுப்பினரால் ஜெர்மானிய நாகரிகமும் இலக்கியமும் வளருவதற்கேற்ற சமுதாயச் சூழ்நிலைகள் தோன்றின. கிறித்துவம் தோன்றிய நாடான பாலஸ்தீனத்தை கிறித்துவ ஆட்சியின் கீழ்க்கொண்டு வரும் நோக்குடன் நடந்த பல சமயப் போர்கள் ஜெர்மானிய வீரர்களின் தன்னம்பிக்கைக்கு உரமேற்றின. 1130ஆம் ஆண்டிலிருந்து சமயச் சார்பற்ற பொருள்களைப்பற்றி வரலாற்றுக் கதைகள் எழுதப்பட்டன. வரலாற்றுக்கதைகளை வரைவதில் கிறித்துவ சமய நோக்கு இருப்பினும், அவை மக்கள் விரும்பிக் களிக்கும் வகையில் வீரர்களின் இன்ப வாழ்க்கைகளைப் படம் பிடித்துக் காட்டின.

1170ஆம் ஆண்டளவில் யொஹன்ஸ்ட்ரௌஃபன் வமிசத்தவரின் கீழ் ஜெர்மனி பேரரசின் அதிகாரமும் புகழொளியும் உச்சநிலை எய்தின. அப்பொழுது இடைக்கால ஜெர்மானிய இலக்கியமும் பண்பாடும் செழித்து வளர்ந்தன. வீரர்களின் வாழ்க்கை முறையையும் உலக நோக்கையும் "உயர்தரமானவை" என்று நாம் கூறலாம். அந்த வாழ்க்கைமுறை சமயத்துறை ஆதிக்கத்தினின்றும் விடுபட்டது; அரசவையின் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளையும், வீரர்களின் இலட்சியங்களையும் ஒட்டி உருவானது; இருப்பினும், அது கிறித்துவத்தின் சாயலைக் காட்டியது. காமவுணர்வுகளைக் கட்டுப்படுத்துவது, எந்நிலையிலும் தன்னிலை குலையாமை, போரிலே நேர்மையும் உரமும்

உடைமை, எளியோரிடமும் தோற்றோரிடமும் தகைமையும் தாராளமும் காட்டுதல், அரசுப்பற்றுடைமை, ஆள்வினையுடைமை; இசைந்து ஏற்ற முற்ற இன்ப வாழ்விற்கு வேண்டிய கட்டுப்பாட்டினையும் கல்வியையும் கைக்கொண்டு ஒழுகுதல் – இவையெல்லாம் இலட்சியப் பண்புகளாயமைந்தன. இம்மை மறுமை, ஆன்மீகம் உலகாயுதம் புண்ணியம் பாவம் என்ற வகையில் நடுக்காலக் கிறித்துவ சமயம் கண்ட வேறுபாடுகளை மாற்றுவதற்கான முயற்சி இந்தக் காலகட்டத்திலே மேற்கொள்ளப்பட்டது. இந்த முழுநிறைவான இலட்சிய வாழ்க்கையை அந்த நாள் கவிதைகள் காட்டின. 1800ஆம் ஆண்டளவில் தோன்றிய உயர்தர ஜெர்மன் கவிதைகள் போன்றே இவையும் ஜெர்மானிய இலக்கியத்தின் மகத்தான சாதனைகள். இத்தகைய ஏற்றமிகு சித்திரத்தை இலக்காகக் காட்டிய கவிதைகள் மக்களின் வாழ்க்கையை வளைந்து பண்படுத்துவதில் பயனுற்றின.

வீரர்கள் பற்றிய காவியங்கள் எழுதிய முதல் கவி ஹார்ட்டுமன் ஃபன் அவு என்பவர். வீரர்களின் போற்றத்தக்க செயல்களை அவர் எழுதிய 'எரெக்' 'ஈவயின்' என்ற காப்பியங்களிலே காணலாம். அசட்டைத் துணிவாலும் கட்டுறுதியின்மையாலும் வரும் இடர்ப்பாடுகள் எவ்வாறு அவர்கள் அரும்பாடுபட்டு அடைந்த வாழ்க்கை முறைகளுக்கு ஆபத்தாகின்றன என்பதையும் அக்காவியங்கள் கூறின. *'பார்சிவல்'* என்ற காப்பியம் *ஃபல் ஃப்ரம் ஃபன் எஷன்பாக்* என்பவரால் கி. பி. 1200—1210 ஆண்டுகளில் இயற்றப்பட்டது. அது ஒரு வீரரின் இறைமைப்பற்றுக்கும் உலக ஒழுக்கங்களுக்கும் ஏற்படும் மோதல்களைப் பற்றிக் கூறுகிறது. வீரன் ஒருவனின் வாழ்க்கை முறையை முழுதுமாகச் சித்தரிக்கும் இக்காவியம் ஆழ்ந்த சமயச் சார்புடையது. அவ்வீரன் இறைவனைத் தேடிச் செல்லும் உலகப் பயணமும் பிறகு அவன் தன்னிறைவு பெறுதலும் பொன்றுப் பொருளுடையதாகும். போரிலே மாண்ட ஒரு வீரரின் மகன் பார்சிவல் என்பவன். பார்சிவலின் தாய் அவனைத் தனிமையில் வளர்த்து வருகிறாள். வீரனைப் போல் தானும் வாழவேண்டும் என்ற நோக்குடன் பார்சிவல் தாயைப் பிரிந்து போகிறான். இளமையின் அறியாமை காரணமாக பெருந்தவறுகள் சிலவற்றை அவன் இழைத்துவிடுகின்றான். பிறகு வீரர் குர்னமான்ஸ் என்பவர் அரசனைச் சேர்ந்த வீரனுக்குள்ள ஒழுக்கம் பற்றி அவனுக்கு விளக்குகிறார். ஆர்தர் என்ற அரசனின் அவையிலே பார்சிவலுக்கு மதிப்பும் புகழும் கிடைக்கின்றன. வீர மரபின் உலக இலட்சியங்களுக்கு உறைவிடமாக ஆர்தர் மன்னனின் அவை இருந்தது. பார்சிவல் கற்றது அதோடு நின்று விடவில்லை. புனித கிரைல் மாளிகையில் இறைபணிபுரியும் வீரர்களில் ஒருவனாக வாழ்கிறான். வீரர்களுக்கான புற ஒழுக்கங்கள் மட்டுமே அவனிடம் உள்ளன. மனித அறநெறிகளை அவன் கடைபிடிக்கவில்லை எனக் குறை காணப்பட்டது. எனவே அவன் அம்மாளி

கையிலிருந்து வெளியேற்றப்படுகிறான். இறைவன் மீது ஐயப்பாடு அவனுக்கு எழுகின்றது இறைவனே அவன் எதிர்க்கிறான். ஆனால் உலகிலே உழன்றதன்பின் இறைநாட்டம் மீண்டும் அவனுக்கு வருகின்றது பல ஆண்டுகள் சுற்றிய பிறகு, ட்ரை.ஃபிஸென்ட்ர் என்ற துறவி அவனது தவற்றை உணர்த்தி கடவுளின் கருணையைக் காட்டுகிறார். கிறித்துவ வீரத்தை எப்போதும் வழியையும் அவனுக்குப் போதிக்கின்றார். இறைவன் கருணையைக் காட்டி நிற்கும் புனித கிரைல் மாளிகைக்கு, புனிதமடைந்த பார்சிவல் திரும்புகிறான். அவனுக்குத் திருமணமாகின்றது அவன் அரசனாகிறான். உலகோர் ஏத்தும் வாழ்வு, இறைக்கு இசைந்த வீரமரபான வாழ்வு அவனது மகத்தான இலக்காக இருந்தது. இந்த வாழ்வை அவன் எய்திவிடுகிறான். கர்னமான்ஸ் கூறிய அறிவுரையின் ஒரு பகுதியைக் காணலாம்:

கேண்மின் மறவ, கேடில்நின் இதயத்தே
வேண்டும் கண்ணியத் திண்மை வேண்டும்!
உணர்வு மட்டுமே உயர்வெனின் அஃது
குணச்சிறப் பன்றே கண்ணியங் குன்றிடின்!
சிறகுதிர்ப் புள்ளின் சிறப்பென முடிப்புகழ்ச்
சிறப்பாங் கண்ணியம் செத்தநெஞ் செற்றுக்கோ?
சிறந்தவன் நீயே நோக்கிலை லேயே
பிறந்ததும் தலைவனுய்ப் பீடுற வன்றே?
நினபெருந் தன்மை தாழ்தல் நீக்கியே
விண்ணூர்ந் துயர்க, வீர! ஒரு சொல்:
நற்குணத் தோடும் கருணைநெஞ் சோடும்
அற்றோர் பாய்வி இரங்கி யருள்க;
துயருறு ஏழையர் விழிநீர் துடைத்தே
அயரா தென்றும்நீ கண்ணியங் காக்கவே!

இக்காலத்தில் எழுந்த மற்றொரு காவியம் *நீபெலுங்கென்லீட்* என்பதாகும். கி. பி. 1200 ஆண்டிற்கு அண்மையில், அதற்கு முந்திய கவிதைகளின் அடிப்படையில், எழுதப்பட்டது. 'அதனுல்தான், டியூட்டோனியர்களின் வீரப் போக்கும் துயர நோக்கும் கொண்டதாக அது உள்ளது. வாழ்க்கைபற்றிய கிறித்துவ வீரர்களின் கருத்தும் கிறித்தவ சமயக் கொள்கைகளும் அக்காவியத்தில் மேலெழுந்தவாரியாகவே காணப்படுகின்றன. காட்ஃபிரீட் ஃபன் ஸ்ட்ராஸ்பர்க் எழுதிய *டிரிஸ்டனும் இஸோல்டும்* என்ற காவியம் காதலின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு, கிறித்துவ வீரர்களின் கொள்கைகளுக்கு ஆபத்தை விளைவித்தது. ஆதலால் அக்காவியம் துயரத்திலேயே முடிகிறது.

மணவாழ்வுக் காதலுக்குப் புறம்பாக இருபாலர்க் கிடையுள்ள உறவுகளைக்கூட நெறிப்படுத்தி கிறித்துவ வீரர்களின் சமுதாயம் அமைத்

திருந்தது 'காதலர் பணி' அல்லது *மின்னடியன்ஸ்ட்* என்ற அந்த அமைப்பு, ''காதல் பாட்டு'' அல்லது *மின்னசேங்* என்ற கவிதையாக உருவெடுத்தது *மின்னடியன்ஸ்ட்* என்ற அமைப்பில் பெண்ணின் சமுதாய உயர்நிலை இன்றியமையாததாகும். கிறித்துவ வீரன் தான் விரும்பிப் போற்றும் பெண்ணைத் தன் தலைவியாக ஏற்று அவளுக்குப் பணிசெய்ய விழைகின்றான். அச்சீமாட்டி தன்னை வரவேற்று நோக்குவதே ஒரு பேறு என அவன் கருதுகிறான். அவன் குறிக்கோள் காதலிலே அவளை வெல்லுவதன்று, அவளுக்குப் பணிசெய்து தான் பண்படைய வேண்டுமென்பதுதான். எனவே, அவள் பெரும்பாலும் திருமணமான சீமாட்டியாகவே இருப்பாள். அவளைத் தனது இலட்சியப் பெண்ணைக் கொள்ளுவதற்குத் தன்னை ஏற்றவளாக ஆக்குவதில் முனைகிறான். இவ்வாறு, *மின்னடியன்ஸ்ட்* வீரர்களுக்கு கல்வி புகட்டும் நோக்குடையது; ஆதலால் சமுதாய முக்கியத்துவம் கொண்டது. குறைவற்ற அரசவை வீரனின் சாதனைகளே சமுதாயத்தின் மையமாக அமைகின்றன. கிறித்துவ வீரர்கள் தங்கள் சமுதாய வாழ்வைத் தாங்களே சித்தரித்துக்காட்டி சீராக உணர்வதற்கென *மின்னசேங்* கவிதை மக்கள் முன்னர்ப் படைக்கப்படுகிறது.

கலை உருவான மின்னசேங் காவியத் துறையில் அரிய சாதனைகளை விளைவித்துள்ளது. வரலாற்று மத்திய காலத்தில் தலைசிறந்த அகவியல் கவிஞரான *வால்த்தர் ஃபன் ஃபோகல்வைதெ* இந்தப் பாடல்களைத் தான் முதலில் தொகுக்க ஆரம்பித்தார். ஆனால், பிற்காலத்தில் இப்பாடல்களின் இயற்கையமைவற்ற நடை அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே, உண்மையான காதல் கவிதைகளை அவர் இயற்றினார். காதலால் விளையும் இன்பதுன்பங்களைப் பற்றி மக்களின் மகள் ஒருத்திக்குக் கூறுவதாக அக்கவிதைகள் அமைந்தன. அரசியல் கவிதைகளையும் கலை உணர்வோடு அவர் இயற்றிப் புகழ் பெற்றார். அரசியல் துறையில் அக்கவிதைகளுக்குச் செல்வாக்கு இருந்தது என்பது அக்கவிஞர் காலத்தவரின் கருத்தாகும். கி. பி. 1197இல் அரசர் யொகன்ஸ்ட் ரௌஃபன் ஹென்ரி – IV திடீரென இறந்தபின், அவர் பதவிக்கு யார் வருவது என்பது பற்றி பூசல் எழுந்தது. அந்நிய அரசுகளும் போப்பும் இதில் தலையிட முயன்றார்கள். இந்த இக்கட்டான நிலையில் ஸ்வாபியா இளவரசர் யோகன்ஸ்ட்ரௌஃபன் பிலிப்பை வால்த்தர் ஆதரித்து, *''ஓடும் நீரின் ஒலியைக் கேட்டேன்''* என்ற கீழ்வரும் பாடலைத் தொகுத்தார்:

நீர்ப்பெருக்குஞ் சலசலப்பை; நீந்தும் மீனை;
நிலத்திலுள பொருளையெலாம் பார்த்து வந்தேன்;
வேர்த்தண்டில்; இலைகளிலே; வயலில்; காட்டில்;
வேய்ம்புல்லில் படர்வனவுங் கண்டேன்; இன்னும்
பார்த்திட்டேன் பறப்பனவும்; இங்கே மண்ணில்
நடக்கின்ற படைப்பையெலாம் அறிந்து வந்தேன்:

ஆர்த்துநிற்கும் பகையின்றி வாழ்வ தில்லை
எப்படைப்பும் என்பதனை உணர்ந்தேன் உண்மை!

மிகக்கொடிய மிருகமென்ன பறவை கூட
விலக்கில்லை இப்பகைக்கு எறும்பும் ஈயும்!
தகவுடைய ஓரரசைத் தங்கட் கென்றே
உருவாக்க வில்லையெனில் பயனு மில்லை;
தகுதியில்லை தாம்வாழ்தல் என்றுங் கூட
மிருகங்கள் கருதுகிற தகைமை காணீர்!
தகுதியுள்ள மன்னருண்டு; ஏவல் உண்டு;
தமைத்தாமே அவைஆண்டு கொள்ளல் பாரீர்!

அத்தகுதி யும்இழந்தீர்; தகுமோ தேய்தல்?
ஜெர்மனியீர்! தேனீக்கும் இராணி உண்டே!
இத்தருண மேதிரும்பிப் பார்ப்பீர் உங்கள்
பழம்பாதை மாற்றிடுவீர்; மகுடஞ் சூடி
நித்திரையில் அங்கியரோ? அடிமை மன்னர்
இடைமறித்தால் தள்ளிடுக, நீசர் அன்னோர்!
இத்தரையின் பேரரசாய் மகுடந் தன்னை
பிலிப்ஐய, சூடுக!எம் மானங் காத்தே!

ஏறத்தாழ கி. பி. 1220இல் அரசவை வீரர்களின் காலம் முடிவுறும் நிலை வந்தது. அவர்களை ஆதரித்த சிறுபான்மையினரான உயர் குடி வகுப்பினர் 13-வது நூற்றாண்டில் தங்கள் முக்கியத்துவத்தை இழந்தனர். இரண்டாவது ஃபிரடெரிக் II–(1215–1250) ஆட்சிக் குப்பின் பேரரசரின் அதிகாரம் பல பகுதிகளில் இருந்த சிற்றரசர் கள் கைக்குப் போய்விட்டது. 13-வது நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் பல ஆண்டுகளாக ஜெர்மானிய நாட்டிற்கு பேரரசர் ஒருவருமில்லை. ரீஷ் என்ற கருத்துக்கு உறைவிடமாக விளங்கிய வர் ஜெர்மானியப் பேரரசர்தான் சமயப் போர்கள், அரசவையில் சடங்குப் பணிகள் இவை மூலமாக கிறித்துவ வீரர்களுக்குச் சமுதாயத்தில் உயர்நிலை அளித்ததும் பேரரசர்தாம். மத்திய காலத்திலுள்ள சமுதாய அமைப்பில் சமயத்துறையினர், போர் வீரர்கள், உழவர்கள் என்று மூன்று தரப்பிரிவுகள் மட்டுமே இருந் தன. நகரங்களில் பொதுநிலை மக்கள் முன்னேற்றமடைந்தபின் இப்பிரிவுகள் சிதைந்தன. செலாவணி முறையில் ஏற்பட்ட முன் னேற்றத்தால் வணிகர்கள் பொருளாதார அதிகாரம் பெற்றனர். காலாட்படை வீரர்களைக் கொண்ட புதிய படைகளால் கிறித்துவ வீரர்களின் இராணுவ அரசியல் முக்கியத்துவம் குறைந்தது. இவ் வாறு பழைய சமுதாய அமைப்பு சிதைவுற்றதை வெர்ன்ஹெர் இயற்றிய *"மையர் ஹெல்ம் ஃப்ரெட்"* என்ற காவியம் நமக்குக் காட்டுகிறது. இது கி. பி. 1250–1280இல் எழுதப்பட்டதாகும்.

இககவிதையில் வீரர்கள் அனைவரும் கொள்ளைக் கூட்டத் தலைவர் களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். மத்திய காலக் கவிதைகளில் பொருள் உணர்த்தும் வேகம் குறைவாகவே இருந்தது. அரச வைக் கவிகளுக்கு வேண்டிய அமைப்புகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் உயர்ந்த ஒழுக்க நெறிகள் கைவிடப்பட்டன. அழகு படுத்திக் கூறலும், மிகைப்படுத்திச் சொல்லலும் அதிகமாயின. பல பொருள்களைப்பற்றி கவிதைகள் எழுந்தாலும் நிலவிய கருத்தின் அடிப்படைகள் தெளிவாக இல்லை.

நடுத்தர வகுப்பினர் இலக்கியம் பண்பாட்டுத் துறையிலே தலை யிடம் பெற்றது. அது அன்றாடக் காரியங்கள் பற்றியே அக்கரை கொண்டது. அதற்கான கலை வடிவு புறக்கணிக்கப்பட்டது; கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாக அது கருதப்பட வில்லை. ஆயினும், கவிதைகளின் அறிவுறுத்தும் நோக்கம் முக்கிய மெனக் கருதப்பட்டது. உலக வாழ்வு உரமற்றது என்ற அனுபவத் தில் வேரூன்றி முளைத்த சமய இயக்கங்களும் சமயத்துறைக் கொள் கைகளும் அக்காலத்தில் நிலவிய உண்மையான பதட்ட நிலையைக் காட்டின. 1300-1600, இந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் மக்கள் கடந்த காலத்தைக் கணிப்பதிலேயே கழித்தனர். இப்பொழுது தான் வரலாற்று மத்திய கால உலகில் ஆன்மீகச் சமுதாயச் சீர்குலைவு ஏற்பட்டது. நகர வாழ்வை ஒட்டிய நடுத்தர மக்களின் நாகரிகம் அமையத் தொடங்கியதுதான் ஆக்கமுடைய வளர்ச்சி யாக அமைந்தது.

தற்காலத் தொடக்கத்தில் தோன்றிய ஆன்மீக ஆற்றல் மறு மலர்ச்சி இயக்கமாகியது; இது ஜெர்மானிய நாட்டில் மனிதப் பண்பாட்டு இயக்கமாகச் சிறந்து வெளிப்பட்டது. பழைய கிரேக்க ரோமானிய நாகரிகங்களை மீண்டும் கண்டு அவற்றைப் பேணும் முயற்சியில் இத்தாலிய நாட்டில் எழுந்ததுதான் மறுமலர்ச்சி இயக்கமாகும். வரலாற்று இடைக்காலக் கிறித்துவ சமயம் மறுமையையே நாடி நின்றது; ஆனால், இப்போக்கு இப்பொழுது எடுபடவில்லை. மறுமலர்ச்சி இயக்கம் இவ்வுலக வாழ்வு மதிப் புள்ளது எனக் கருதியது. சமயத்தின் ஆட்சியிலே உருவாகும் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ற அமைப்பிலே வாழ்வு அடங்கியுள்ள தாக மனிதன் நம்பவில்லை. தன் இச்சைப்படி, தனது வலிமையால் தன் வாழ்வை வகுத்து ஆன்மநிறைவு கொள்ளவேண்டும் என்று அவன் விரும்பினான். இந்த மனப் போக்கை பழைய நூல் ஒன்றிலே காணுகிறோம். *யொஹனஸ் ஃபன் தெப்ல்* (யொஹனஸ் ஃபன் சாஸ் என்றும் இன்னொரு பெயர்) என்பவர் எழுதிய 'தெர் அக்ரமான் ஒள பொஹிமன்' *(பொஹிமியாவிலிருந்து வந்த உழவன்)* என்பது அந்நூல். உழவன் ஒருவனின் மனைவியை எமன் பறித்துக் கொள்ளுகிறான். எனவே, எமனோடு வாதாடுகிறான் உழவன்.

வாழ்விலே அழகு உண்டு, வாழ்வதற்கு உரிமை உண்டு என்று உழவன் கூறுகிறான். வாழ்வு பயனற்றது, வாழும் மனிதன் வஞ்சனையுடையவன் என்று எமன் குறிப்பிடுகிறான். வாழ்விலே ஒன்றுமில்லை என்று கொள்ளும் வரலாற்று மத்திய காலக் கோட்பாடு, வாழ்வின் மீது பற்று வைக்கும் மறுமலர்ச்சிக் கொள்கை இவ்விரண்டும் சீர்தூக்கிக் காட்டப்படுகின்றன. இறுதியில் இறைவனே தீர்ப்புக் கூறுகிறார்:

"நீங்கள் இருவரும் திறம்பட வாதாடினீர்கள்; எனவே வாதிக்குக் கிடைப்பது மதிப்பு, எமனுக்கு கிட்டுவது வெற்றி, ஒவ்வொரு மனிதனின் கடமை, உயிரை எமனுக்கும், உடலை மண்ணுக்கும், ஆன்மாவை இறைவனுக்கு எமக்கும் கொடுப்பதுதான்"

உழவன் எமனைக் குற்றஞ்சாட்டும் பகுதியை இங்கு காண்போம்:

அவமானத்துக்குரிய வஞ்சகனே! உன் மீது பழி சேரட்டும்! இறைவனின் தலையாய அன்பைப் பெற்ற மேதகு மனிதனை நீ எவ்வாறு அழிக்கிறாய்: இழிவு படுத்துகிறாய்: இதனால் நீ இறைவனையே பழித்தவனாகின்றாய்! நீ படைக்கப்பட்டது விண்ணுலகில் என்று கூறுவது பொய் என்று எண்ணுகிறேன். விண்ணுலகிலே நீ பிறந்திருந்தால் மனிதனையும் மற்றப் பொருள்களையும் நன்கு படைத்தவர் கடவுள்தான் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். மற்றப் பொருள்கள் அனைத்திற்கும் மேலாக மனிதனை வைத்தார் என்பதும், அதனால், மற்றப் பொருள்கள் மனிதன் முன் கெஞ்சிக் கிடக்கவும், அவற்றின் மீது மனிதன் அதிகாரம் செலுத்தி, மண்ணின் விலங்கினங்கள், விண்ணின் பறவைகள், கடலின் மீன்கள், உலகத்துப் பயன்கள் எல்லாவற்றையும் ஆட்சி புரிகிறான் என்பதும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். உண்மையிலேயே, நீ கூறுவது போல், மனிதன் மாசுள்ளவனாக, இழிந்தவனாக, கொடியவனாக இருந்தால், இறைவனின் படைப்பு, உண்மையில், மாசுள்ளது, பயனற்றது என்று ஆகிவிடும்.

கி. பி. 1450-க்குப் பின், மனிதப் பண்பாட்டு இயக்கம் ஜெர்மனியில் பரவியது. அந்த இயக்கத்தின் நோக்கம் கிறித்துவ சமயத் துறையினரின் ஆதிக்கத்திலிருந்து சமய விளக்கம், விஞ்ஞானம், கல்வி இவற்றை விடுவிப்பதாகும். மனிதப் பண்பாட்டாளர்கள் சமய நூல்களை மூலத்திலேயே படித்து ஆய்ந்தனர்; தங்கள் நூல்களை இலத்தீன் மொழியில் வெளியிட்டனர். எனவே, இந்த இயக்கம் கற்றறிவாளர்களிடை மட்டுமே அடங்கியிருந்தது. இத்தாலிய நாட்டில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் போலன்றி, நாடு முழுதும் அளாவிய புதிய பண்பாட்டினை இந்த இயக்கம் தோற்றுவிக்க

வில்லை. வரலாற்று நடுக்காலத்தில் நிலவிய சமயத்துறையினரின் தொடர்புகளைக் குறைகாணும் போக்கு சமயச் சீர்திருத்த இயக்க மாக முதிர்ந்தது. இந்த இயக்கத்தை முன்னின்று விளக்கியவர் மார்ட்டின் லூதர் என்பார். (1483-1546). அவர் ஒரு மனிதப் பண்பாட்டாளர்; கிறித்துவ வேத நூலை மூலத்திலேயே படித்தவர்; சமயத்துறையினரின் மரபுகளை ஒதுக்கித் தள்ளியவர். வரலாற்று இடைக்கால முறைப்படி, நம்பிக்கை, அருள், ஞானம் இவற்றின் அடிப்படையில் தம் கொள்கைகளை இவர் வகுத்தார். லூதர் துறவி யாக வாழ்ந்தவர். வெளிக் குறைபாடுகளைச் சாடுவதோடன்றி, அன்றுள்ள சமயத்துறையினரின் ஆதாரக் கொள்கைகளையும் அவர் ஏற்கவில்லை. தமது போக்கைக் கைவிட மறுத்ததால், கிருத்துவத் திருச்சபையிலிருந்து அவர் 1520இல் வெளியேற்றப்பட்டார். ஓராண்டுக்குப்பின், பேரரசன் ஐந்தாவது சார்லஸ், மார்ட்டின் லூதரை அடியார்கள் அவைமுன் வறுமாறு உத்திரவிட்டான். அங்கும் லூதர் தமது கொள்கையைக் கைவிட மறுத்துவிட்டார் 1521 ஏப்ரல் 18 இல் அவர் நிகழ்த்திய புகழ்பெற்ற உரை, நமக்குக் கிடைத் துள்ளது. இறைவனின் கட்டளையே அவர் இதயச்சான்றை இசைப் பது என்று அவர் அதிலே கூறியுள்ளார்.

மார்ட்டின் லூதர்

1521, ஏப்ரல் 18ஆம் நாள் அடியார்கள் அவையில் நிகழ்த்திய உரை:

பேரரசர் முன்னிலையில், பேரரசின் முன்னுல், லூதர் எதிர் நின்ற காட்சி பற்றி எல்லோரும் அறிவார்கள். அங்கு அவர் நிகழ்த்திய உரையின் இறுதிப்பகுதி பழமொழிபோல் பரவிவிட்டதாகும். தம் கொள்கையை விட்டுக் கொடுக்காததால் பேரரசு விதித்த தடையை அவர் ஏற்றுக் கொள்ளுகிறார். ஆனுல், அவர் கவனத்துடன் எழுதிய இவ்வுரையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் எவருக்கும் தெரியாமலிருந்தன. முதலில் ஜெர்மன் மொழியிலும் பிறகு இலத்தீன் மொழியிலும் இது தரப்பட்டது; இலத்தீன் மொழியி லுள்ள வரைவு பாதுகாக்கப்பட்டுள்ளது. இறுதிக் கட்டமான அவ் வேளையிலே லூதர் எதை முக்கியமானதெனக் கருதினர் என்பதை அது காட்டுகிறது. அஃதாவது; இறைவனின் கட்டளையே அவரது இதயச் சான்றை இசைப்பது; அதற்கு மாறுக அவர் எதையும் நிகழ்த்துவதில்லை, நிகழவும் விடுவதில்லை. இவ்வாறுக, சமயச் சீர்திருத்த இயக்கம் காலூன்றி நிற்கத் தொடங்கியது. அந்த இயக்கம் சமயச்சார்பான, அரசியல் சார்பான அதிகார அமைப்பிற்கு

அப்பால் இளங்கியது; இருப்பினும் இது சீர்திருத்தவாதியின் இச்சைக்கும் எண்ணத்திற்கும் கட்டுப்பட்டதன்று. அந்த இயக்கம் வரலாற்றின் படைப்பாக இருப்பினும் அது புரட்சிகரமான செயலாகும்.

நலங்கருணைப் பேரரசே; நாயகரே! அரசிளங்
களங்கமிலாத் தோன்றலீர்! கருணைநல் மறவீர்!

நேற்று மாலை இட்ட கட்டளைக்குப் பணிந்து குறித்த நேரத்தில் உங்கள் முன் நிற்கிறேன். திருவளர் பேரரசரும், ஆன்றமைந்த அரசர்களும், பெருமக்களும் கடவுளின் கருணைக்காக எனது வழக்குரை நேர்மையானது, உண்மையானது. நான் அறியாமையால் எவரையாவது சரியான வயணத்தில் விளிக்கத் தவறிவிட்டாலோ, அவையில் பழக்க வழக்கங்களையும் நடத்தை முறையையும் ஏதாவது ஒரு வகையில் மீறிவிட்டாலோ, என்னை அன்பு கூர்ந்து மன்னித்து விடுங்கள். நான் அரசவையை அண்டி வளர்ந்தவனல்லன்; மடங்களின் குறுகிய இடங்களிலே வளர்ந்த வன், நான். என்னைப்பற்றி ஒன்றை மட்டும் சொல்ல முடியும்; அ.தாவது, இதுவரை எனது எழுத்துக்களும் போதனைகளும் இறைவன் புகழொலியைப் பணியிலேயே, தூயமனமுள்ள கிறித்துவர்களுக்கு நேர்மையாகப் போதிக்கும் பணியிலேயே, முயன்று நின்றன.

திருவளரும் பேரரசே! ஆன்றமைந்த அரசர்களே! நேற்று, திருவளரும் பேரரசர் இரண்டு வினாக்களை விடுத்தார். என்பெயரில் எழுதி வெளிப்பட்ட புத்தகங்களை நான் எழுதிய புத்தகங்களை நான் எழுதிய புத்தகங்களாக ஏற்றுக் கொள்கிறேனா? அவற்றில் சொல்லியவற்றை சரியென்று வாதாடுகிறேனா அல்லது அவற்றைக் கைவிடச் சித்தமாக இருக்கிறேனா? இவையே அவ்வினாக்கள். முதல் வினாவிற்குத் தெளிவாக விடையளித்தேன். அதுவே என் விடை, அதிலிருந்து நான் என்றும் மாறப்போவதில்லை. அப்புத்தகங்களை நான்தான் எழுதினேன்; என் பெயரால் அவற்றை அச்சேற்றி வெளியிட்டேன். என் மீது வன்மங் கொண்ட பகைவர்களோ, வேறு செய்தியாளர்களோ அந் நூலில் ஏதும் மாற்றமோ, நீக்குதலோ செய்திருக்க மாட்டார்கள் என நம்புகிறேன். ஏனெனில், நான் எதை எழுதுகிறேனோ, எனது கொள்கை எதுவோ அதையே என்னுடையவையாக ஏற்றுக் கொள்ளுகிறேன். வேறு எவர் அதற்கு அறிவார்ந்து பொருள் விளக்கம் செய்தாலும் நான் அதை ஒப்புவதில்லை.

இரண்டாவது வினாவைப் பொறுத்த வரையில், திருவளர் பேரரசரும் மன்னர்களும் ஒன்றைக் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறேன். நான் எழுதிய எல்லா நூல்களும் ஒரே தன்மையுடையன அல்ல.

என்னுடைய புத்தகங்களில் முதல் தொகுப்பிலே, சரியான கொள்கை, நேர்மையான வாழ்வு இவை பற்றி நேரடியாகவும் சமயச்சார்போடும் கூறியுள்ளேன். அந் நூல்கள் படிப்போர்க்குப் பயனளிப்பவை, கிறித்துவர்கள் படிக்கத் தக்கவை, திமையற்றவை என்பதை என் பகைவர்கள் கூட ஒப்புக் கொள்கின்றனர். என்னை வன்மையாக எதிர்க்கும். கிறித்துவத் திருச்சபையின் கட்டளைகள் கூட, நான் எழுதிய பல நூல்கள் ஒரு முகமான முடிவுகளைக் கொண்டிருப்பினும், தீமையற்றவை என்று அறிவித்திருக்கின்றன. இங்கிலீயில், நான் எழுதிய நூல்களனைத்தையும் மறுத்து விட்டால் என்ன பயன் விளையுமென்பதைச் சிந்திக்க வேண்டாமா? பகையும் நட்பும் ஏற்று ஒப்புக்கொள்ளும் உண்மையைப் பழிக்கும், உலகனைத்தும் ஒன்றினைந்து ஒப்பியேற்றதை எதிர்க்கும், தனித்த மனிதனுக அன்றே நான் ஆகிவிடுவேன்!

என் நூல்களின் இரண்டாவது தொகுதி, போப்பின் ஆட்சி முறையும் அதைச் சார்ந்தோரையும் தாக்குகிறது. அன்னாரின் போதனைகளும் தீய வழிகளும் கிறித்துவ உலகத்தின் ஆன்மீகத்திலும் புற வாழ்விலும் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டன. இதை எவரும் மறுக்கவோ புறக்கணிக்கவோ முடியாது. போப்பின் திருச்சபை விதிகளும் போதனைகளும் மெய்யடியார்களில் மனச்சான்றை இரங்கத்தக்க வகையில் உறுத்தி உலைத்துவிட்டன என்பதை நாம் ஒவ்வொருவரும் அனுபவித்து அறிந்துள்ளோம். மக்களிடம் நிலவும் பொதுவான மனக்குறை இதற்குச் சான்றாகும். நுகர் பொருள்களை அவை விழுங்கும் நம்ப முடியாத கொடுமையை எங்கும், குறிப்பாக நம் மதிப்பிற்குரிய ஜெர்மானிய நாட்டில், காணுகிறோம். அவர்களுடைய கட்டளைகளில் இச் செயல்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது! திருச்சபைக் கட்டளைகளில் 1-வது 9-வது விளக்களில் 9-வது 25-வது பிரிவுகளில் இதைக் காணலாம். கிறித்துவின் போதனைகளுக்கும் சமயப் பெரியார்களின் போதனைகளுக்கும் மாறுபட்ட இக்கட்டளைகள் தவறுனவை, செயல்திறமற்றவை. எனவே, எனது நூல்களின் கொள்கைகளைக் கைவிட்டேன் என்றால், போப்பாட்சியின் கொடுமையை ஆதரித்து வலிவூட்டுவனாகி விடுவேன். இறை நலமற்ற இதன் நாச வேலைக்கு நான் பெருத்த அளவிலே வழி வகுத்தவன் ஆகிவிடுவேன். இதுவரை இருந்ததை விட எளிதாக நாசவேலை நடந்து விடும். மேலும், எனது கொள்கை மறுப்பு அவலமில்லா வஞ்சனையாளர்களுக்கு உதவுவதாகி விடும்; ஏழை மக்கள் இன்னும் தாங்கமுடியாத அளவிற்கு ஒடுக்கப்படுவார்கள். திருவளர் பேரரசரின், ரோமானியப் புனித பேரரசின் விருப்பப்படி எனது கொள்கை மறுப்பு ஏற்பட்டதென்று விருப்புடன்

அவர்கள் பேசுவார்கள். எனது பணி அவர்களின் வன்மத்தையும் வன்கன்மையையும் மூடி மறைப்பதற்கு உதவுவதாகி விடும்!

என் நூல்களில் மூன்றாவது தொகுதி தனிப்பட்ட பலருக்கு எதிரானது. அவர்கள் ரோமானியக் கொடுமையை ஆதரிக்கவும், நான் போதித்த திருத்துவத்தை முறியடிக்கவும் தூண்டப்பட்டார்கள். சமய நம்பிக்கை சம்பந்தமான காரியங்களைப் பொறுத்து நான் அவ்வளவு கடுமையாக அவர்களைத் தாக்கியிருக்க வேண்டியதில்லை. என் தாக்குதிக்கும் அது ஏற்றதில்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். என்னை ஒரு திருத்தொண்டன் என்று நான் கூறிக்கொள்ளவில்லை; எவருக்கும் நான் வாழும் வழியையும் போதிக்கவில்லை. கிறித்துவின் போதனைகளையே நான் எடுத்துக் கூறுகிறேன். இத்தகைய நூல்களிலுள்ள கொள்கைகளை நான் கைவிடுவது முறையன்று. அவ்வாறு கைவிட்டால், இறைமையற்ற கடுங்கோன்மை என்னைக் குறித்துக்காட்டி முன்னைவிட இன்னும் கோரமாக மக்களைக் கொடுமைப்படுத்தும். ஆனால், நான் கடவுளன்று, மனிதன்தான் என்பதை உணருகிறேன். எனவே, திருத்து பெருமான் எவ்வாறு அவர் போதனைகளைச் சார்ந்து நின்றாரோ அவ்வாறுதான் எழுத்துக்களை நான் சார்ந்து நிற்க முடியும். வேலியாள் அவரது கன்னத்தில் அறைந்த பொழுது, கிறித்துவின் போதனையைப் பற்றி ஐயங்கேட்க, அவர் சொன்னார்: "நான் தீமையைப் பேசினால், அத்தீமைக்கு நீ சான்றாக இருப்பாய்," என்று. (ஜான் 18, 23). தாம் செய்வது தவறாகாது என்று கிறித்து பிரானுக்கு உறுதியாக — தெரிந்தாலும், அவரது போதனைக்கு எதிராக உள்ள சான்றினை இழந்ததோர் ஊழியனிடமிருந்து கூடக் கேட்பதைக் கேவலமாக அவர் கருதவில்லை. அப்படியானால், தவறு இழைக்கக் கூடிய சிறியேன் எனது போதனைக்கு எதிராகக் காட்டக்கூடிய ஒவ்வொரு சான்றுக்கும் காத்திருக்க வேண்டாமா? ஆதலால், திருவளர் பேரரசே! அரசப் பெருமக்களே! மேலோர் கீழோர் எவராயினும் சரி அவர்கள், சான்றுறுதியோடு எனது தவறுகளை மெய்ப்பித்து எண்ணைத் தண்டிக்கட்டும்; அருளார்ந்த அல்லது சமயச் சார்புடைய புனித நூல்களில் சான்றுகளைக் கொண்டு என்மீது வெற்றி கொள்ளட்டும். அப்படிக் காட்டினால், ஒவ்வொரு தவற்றினையும் மறுத்து நான் கைவிடுகிறேன்; நான் எழுதியவற்றை நெருப்பிலிட்டுப் பொசுக்குவதற்கும் நானே முன்னிற்பேன்.

என்னுடைய போதனைகளால் எங்களுக்கும் விளைந்த இடர்ப்பாடுகளையும் முரண்பாடுகளையும், குழப்பங்களையும் அமைதிக் குலைவையும் பற்றிக் கவனமாக ஆழ்ந்து சிந்தித்தேன். நேற்று இதுகுறித்து தீவிரமாக என்மீது குற்றம் சாட்டப்பட்டது. இறைவனின்

இன்னுரையைப் பற்றி அமைதிக் குலைவும் முரண்பாடுகளும் தோன்றியதைக் காண்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடவுளின் உரை செல்லும் பாதையும் பயனும் அதுவேதான்: சிரித்துச் சொல்லுகிறார்:

"நான் வந்தது அமைதியை அளிக்க அன்று, வாளினைக் கொடுக்க. ஏனெனில், தந்தைக்கு எதிராகத் தனயனை இயக்கவே நான் வந்துள்ளேன்...." (மாத்.10, 34) இறைவனின் திருவிளையாடல் எவ்வளவு வியப்பூட்டுவதாக, அச்சந்தருவதாக உள்ளது என்பதை நாம் காணவேண்டும். கடவுளின் வாக்கினைப் பழித்துக் கூறி அமைதியின்மைத் தடுக்க முடியாது; அப்படிச் செய்தால் பொறுக்கொணாத துன்பம் புது வெள்ளம் போல் பெருகி வரும். நமது ஏற்றமுடைய இளஞ் சக்கரவர்த்தி சார்ல்ஸின் அரசாங்கம் வழிதவறி அவப்பேறு அடையாமல் நாம் விழிப்புடன் காத்தல் வேண்டும். இறைவனுக்கு அடுத்து அவர் மீதுதான் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். பல மன்னர்கள் தங்கள் ஆட்சிப் பகுதிகளிலே அமைதியும் ஒழுங்கும் நிலைபெறச் செய்வதற்கென திறமையான திட்டங்களை நிறைவேற்றுகையில்தான் தங்கள் அழிவைத் தேடிக் கொண்டனர். அருள் நூல் கூறும் ஏரோது மன்னன், பாபிலோனிய அரசன், இஸ்ரேல் அரசர்கள் இவர்கள் இதற்கு எடுத்துக் காட்டாக உள்ளனர். சூழ்ச்சி செய்வோர்கள் அச்சூழ்ச்சியிலேயே அகப்பட்டுக்கொள்ளுகின்றனர்; அவர்கள் அறிந்து கொள்ளுவதற்கு முன் மலைகள் புரள்வது போன்ற பெரிய காரியங்கள் நிகழ்ந்து விடுகின்றன. இது இறைவன் செயலாகும். எனவே, இறைவன் மீது அச்சம் நமக்கு வேண்டும். நம் நாட்டின் மேதகு தலைவர்களுக்கு இதுபற்றி எல்லாம் நான் அறிவிக்கவோ, எச்சரிக்கவோ வேண்டியதில்லை; ஆயினும் எனது அருமை நாடான ஜெர்மனிக்கு உரிய கடமையை ஆற்றுவதில் நான் தவறிவிடக் கூடாது என விரும்புகிறேன். திருவளரும் பேரரசப் பெருந்தகையையும் திருவளரும் அரசர்களையும் பணிவுடன் நான் வேண்டுவது, வெறி கொண்ட பகைவர்கள் காரணமேதும் காட்டாமல் உங்களை அவர்கள் வழிக்குத் திருப்பி விடலாகாது என்பதான்.

நான் முடித்து விட்டேன்.

இவ்வாறு உரையாற்றிய பின், பேரரசருக்காகப் பேசியவர் என்னைக் குறைகூறும் வகையிலே பதிலளித்தார்: கேட்ட வினவுக்கு நான் விடையளிக்கவில்லை; திருச்சபைகள் குறைகண்டு நீர்மானித்ததை மீண்டும் ஆய்வு செய்வதற்கு இயலாது. ஆதலால், இருபொருள் ஏதுமின்றி, தெளிவாக வினவிற்கு விடை வேண்டுமென்றனர். எனது கொள்கையைக் கைவிடுகிறேனா இல்லையா? என்பதுதான் அந்த வினா.

அதற்கு நான் கூறியதாவது :

திருவளரும் பேரரசரும், திருவளர் மன்னர்களும் தெளிவான விடையைக் கூறுமாறு என்னைப் பணிக்கின்றீர்கள். அறிதற்கு எளிதான தெளிவான விடையைக் கூறுகிறேன். இதோ அந்த விடை :

அருளுரைகளின் சான்றினாலோ தெளிவான பகுத்தறிவு வாதங்களாலோ நான் தோற்கடிக்கப்படவில்லையெனில் நான் எடுத்துக் கூறிய அருளுரைகளால்தான் நான் வெல்லப்பட்டேன் என்று கொள்ளுங்கள். இறைவனின் கட்டளை ஒன்றுக்கு அடங்கியே என் மனச்சான்று இருக்கிறது. போப்பையோ திருச்சபைகளையோ மட்டும் நான் நம்பி இருக்கவில்லை; ஏனெனில் அவர்கள் பல தடவைகள் தவறிப் போயிருக்கின்றனர், தங்களுக்குள்ளேயே முரண்பட்டிருக்கின்றனர். எனவே, எனது கொள்கைகளில் எதையும் கைவிட்டதாகக் கூற முடியாது, என்றும் அவ்வாறு கூற மாட்டேன். ஏனெனில், ஒருவரது மனச்சான்றுக்கு மாறுக எதுவும் செய்தல் நல்லதன்று, தக்கதுமன்று.

இறைவனே எனக்குத் துணை ! நல்லதாகுக !

அதன் மேல், லூதர் சமுதாய வாழ்வமைப்பிலிருந்து விலக்கப் பட்டார்; அவருக்கு சேக்ஸனித் தலைவரிடம் அடைக்கலம் கிடைத்தது. 1521 இருந்து 1534 ஆண்டுகளில் விலிலிய நூலை ஜெர்மனியில் அவர் மொழியாக்கம் செய்தார். எல்லோருக்கும் புரியும்படியான உயர்ந்த ஜெர்மன் மொழி வளர்ச்சியுறுவதற்கு இந்த மொழியாக்கம் மிக முக்கியமானதாக அமைந்தது. சமயச் சீர்திருத்த இயக்கம் பல தடைகளையும் மீறி ஜெர்மானிய நாடெங்கும் பரவியது. பழைய ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை இருக்க, சபை புரோட்டஸ்டன்ட் அல்லது சமயம் பரப்புவோர் திருச்சபை ஒன்று ஏற்படுவதற்கு அது வழி வகுத்தது.

சமயச் சீர்திருத்த இயக்கத்தின் மற்றொரு விளைவு உழவர்களின் கிளர்ச்சியாகும். நிலையற்ற அரசியல் சமுதாய நிலைகள், வட்டார அரசர்களின் எல்லையற்ற அதிகாரம், நகரங்களுக்கே செல்வஞ் சேர்க்கும் பொருளாதார அமைப்பு இவற்றால் குடியானவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். சமுதாயத்திலிருந்து விலக்கப் பட்டவர்கள் போன்ற அவர்கள் மேற்குடிமக்களின் கொடுமையிலிருந்து விடுதலை பெற விரும்பினார்கள். பின்வரும் "பன்னிரண்டு கோரிக்கைகள்" 1525இல் வரையப்பெற்றவை. தெற்கு ஜெர்மனியில் இருந்து இவை கிடைத்தன. இதில் உள்ள கோரிக்கைகள் மிதமானவை; இறைவனின் கட்டளையைக் காட்டி அவற்றைக் குடியானவர்கள் வேண்டுகின்றனர்.

உழவர்களின் பன்னிரண்டு கோரிக்கைகள்

சுவிட்சர்லாந்து நாட்டில் இருந்தது போலவே மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் குடியானவர்கள் தக்க தன்னுரிமையோடும் மதிப்போடும், கீழ் நிலையில் அழுத்தப்படாமல், வாழ முடியும் என்ற நம்பிக்கை பரவியது. ஜெர்மனி நாட்டில் எழுந்த இந்த ஆர்வத்தைத் திறம்படக் காட்டுவது "சுவாபியக் கோரிக்கைகள்" ஆகும். "செபாஸ்டியன் லோட்சர் என்பார் மெமிஞ்சன் என்ற இடத்தில் இதை எழுதியதாகக் கருதப்படுகிறது. செபாஸ்டியன் லோட்சர் நாடுகளிலே பயணம் செய்து வந்தவர்; 'கிருஸ்டாஃப் ஷேப்பெலர்' என்ற பாதிரியின் உதவியால் எழுத்துக்கலையைத் தெரிந்து கொண்டவர். அச்ச முற்ற எளிய மக்கள் கவலையுடன் ஒயாது கலந்தாலோசித்து, தக்க தருணத்தில் ஒன்றிணைந்து எவ்வாறு செயல்பட்டனர் என்பதை இந்நூலில் காணுகிறோம். கிறித்துவ சமயம் போதிக்கும் தன்னுரிமைத் தத்துவத்தை அழகாகவும் எளிமையாகவும் இந்நூல் கூறுகிறது.

முதலாவதாக, எங்கள் பணிவான வேண்டுதலும் விருப்பமும், எங்கள் அனைவரின் எண்ணமும் இச்சையும் என்னவெனில், சமுதாயத்தினர் சேர்ந்து தேர்ந்தெடுப்பவரையே சமூகத்தின் சமயகுருவாக அமர்த்தும் அதிகாரம் எங்களுக்கு இப்பொழுதிருந்தே வேண்டும்; அவரது நடத்தை சீராக இல்லையெனில் அவரை நீக்கும் அதிகாரமும் வேண்டும்.

இரண்டாவதாக, மனிதர்கள் எழுதிய கொள்கைகளையும் விதிகளையும் சேர்க்காமல், புனிதமான வேதத்தை மட்டும் அவர் எங்களுக்குப் போதிக்க வேண்டும்.

மூன்றாவதாக, இதுவரை எங்களைப் பாவிகளாகப் பாவித்தல் வழக்கமாக உள்ளது. இது இரங்கத்தக்க நிலையாகும். இழிநிலை இடையனையும் மேனிலை மாந்தரையும் எல்லோரையும் இயேசு நாதர் தன் குருதியைச் சிந்தி விடுதலை அளித்துக் காத்திருக்கிறார் என்று படிக்கிறோம். எனவே, நாங்கள் தன்னுரிமையுள்ளவர்கள் என்பது வேதம் கூறும் உண்மை. நாங்களும் அத் தன்னுரிமையையே விரும்புகிறோம். எந்த அதிகாரத்தையும் மீறும் தன்னுரிமையை நாங்கள் விழைய வில்லை; இறைவன் இட்டதும் அதுவன்று. புலன் வழிச் செல்லாமல் புனிதக் கட்டளைகளுக்கு இசைய நாங்கள் வாழவேண்டும் என்பதை அறிவோம். இறைவனை எங்கள் தலைவராக ஏற்போம்; அயலாரிடமும் ஆண்டவனைக் காண்போம்; அயலார் எங்களுக்கு எதைச் செய்ய வேண்டும் என விரும்புகிறோமோ அதையே அவர்களுக்கு நாங்கள் செய்வோம்; இதுவே இறைவன் எங்களுக்கிட்ட கட்டளை.

நான்காவதாக, விலங்குகளையும் பறவைகளையும் ஒடும் நீரி லுள்ள மீன்களையும் பிடிக்கும் உரிமை ஏழை எவருக்கும் கிடை யாது என்ற வழக்கம் இதுவரை உள்ளது. இது ஒப்புரவுக்கு மாறுனது, தன்னலமுள்ளது. நேர்மையற்றது; கடவுளின் கட் டளைக்கு ஒவ்வாதது. எங்களை இழிவுபடுத்தி கேடு விளைக்க வேண்டுமென்று சில இடங்களில் வேட்டைக்காக விலங்கினங் களை ஆளுவோர் வைத்துள்ளனர். இதனால், மக்கள் நலனுக்கான எங்கள் சொத்து பாழாகிறது; இது பற்றி நாங்கள் ஏதும் பேசக் கூடாது என்று சொல்லுகிறார்கள். இவ்வாறு செய்வது இறைவ னுக்கும் பிற மக்களுக்கும் அடுக்காது.

ஐந்தாவதாக, மரங்கள் பற்றியும் எங்களுக்குக் குறை உண்டு. காடுகள் அனைத்தும் மேனிலைக் குடும்பத்தினரின் உடைமை எனக் கொள்ளப்படுகிறது. ஏழை யொருவனுக்குக் கட்டை வேண்டு மெனில் இரு மடங்கு விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. சமயத்தினரும் ஆட்சியாளரும் விலைக்கு வாங்காது வைத்துள்ள காட்டு நிலங்கள் அனைத்தும் சமூகம் முழுமைக்கும் சொந்தமாக வேண்டும்.

ஆறுவதாக, எங்கள் ஊழியப் பழு நாளுக்கு நாள் அதிகமா கிறது. இதை அருள் கூர்ந்து எங்கள் பெற்றோர்கள் எவ்வாறு இறைவன் ஆணைப்படி உழைத்தனரோ அவ்வாறான முறையை ஏற்படுத்த வேண்டும்.

ஏழாவதாக, குடியானவர்கள் மேற்குடி மகனோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி தக்க வரைமொழிகளுடன் நிலப்பிடிமான முறை அமைதல் வேண்டும். இதில் இடர்ப்பாடு எங்களுக்கு ஏற்படுதல் கூடாது. ஒப்பந்தத்திற்கு மேற்கொண்டு உழவர்களை உறுத்துதல் உதவாது. ஊதியம் அளிக்காமல் ஊழியம் கோருதல் கூடாது. அப்பொழுது தான் நிலப்பிடிமானத்தால் பெறும் நலன் களை இடையூறு இன்றி அமைதியாக நாங்கள் நுகர முடியும். மேற்குடி மகனுக்கு உழவரின் ஊழியம் தேவையெனில் அதைச் செய்யக் காத்திருக்கிறோம். அவர்களுக்கு இடையூறு இல்லாத வேளையிலே ஊதியத்திற்கேற்ற ஊழியத்தை உழவர்கள் செய் வார்கள்.

எட்டாவதாக, நிலப்பிடிமானத்திற்குக் கொடுக்க வேண்டிய பகுதி அதிகமாக உள்ளது. நிலத்திற்கேற்றபடி வரி அமைய வில்லை. எனவே வரிகொடுக்க மாட்டாத உழவர்கள் நிலத்தையே இழந்து நசித்து விடுகின்றனர்.

ஒன்பதாவதாக, மேற்குடிமக்கள் நிலத்தை நேர்மையானவர் களைக் கொண்டு அளந்து சரியான வரியைத் தீர்மானிக்கட்டும்.

உழைப்பு வீணுகப் போகாமல் அப்பொழுதுதான் இருக்கும். உழைத்தவனுக்கு ஊதியம் கிடைத்தல் வேண்டும்.

பத்தாவதாக, சமுதாயத்திற்குப் பொதுவான ஓடைகளையும் வயல்வெளிகளையும் சிலர் தங்கள் உடைமைகளாக்கிக் கொண்டனர். சரியான முறையில் வாங்கப்படாதவற்றை சமுதாயத்திற்கென எங்கள் கைவசமாக்கிக் கொள்ளுகிறோம். அவைபற்றித் தக்கபடியான உடன்பாடு செய்து கொள்ளுகிறும்.

பதினொன்றுவதாக, மரணவரி என்ற வழக்கத்தை ஒழிப்போம். பல இடங்களில் அனுதைகள், விதவைகள் இவர்களின் சொத்துக்கள் அறத்திற்கும் நேர்மைக்கும் மாறுகப் பறிக்கப்படுகின்றன. இதை இனிப் பொறுக்க மாட்டோம், அனுமதிக்கவும் மாட்டோம்.

பன்னிரண்டாவதாக, இங்கு பறைசாற்றப்பட்டுள்ள கோரிக்கைகள் எதுவும் கடவுளின் கட்டளைக்கு மாறுனது என்று மெய்ப்பிக்கப்பட்டால், அவ்வாறு விளக்கப்பட்டதிலிருந்து அக் கோரிக்கையை விட்டு விடுவோம். இது எங்களின் முடிந்த முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட கருத்தாகும்.

(1525 – பிப்ரவரி – மார்ச்)

உழவர்களின் எழுச்சி இயக்கத்தை அரசர்கள் கோரமாகப் போர் செய்து ஒடுக்கினர்கள். அதற்குப்பின், உழவர்களின் வாழ்க்கை நிலை இன்னும் மோசமாகியது. இவ்வாறு, சமுதாய, அரசியல் பூசல்களோடு சமயச் சழக்குகள் இணைந்திருந்தன. 1555ஆம் ஆண்டில், ஜெர்மானிய நாட்டில் சமயத்துறையில் ஏற்பட்ட இரு பெரும் பிரிவுகள் சட்டப்படி ஏற்கப்பட்டன. ஆனால், இது அரசியலில் இருந்த பிளவை இன்னும் அதிகமாக்கியது. இதன் காரணமாக விளைந்த பதட்ட நிலை ஐரோப்பாவெங்கும் பரவியது. இது முப்பதாண்டுப் போரில் (1618–1648) போய் முடிந்தது. இப் போரினால் ஜெர்மானிய நாட்டின் பல பகுதிகள் நாசமாயின; மக்கள் தொகையினரில் மூன்றிலொரு பங்கினர் மடிந்தனர்.

இந்தக் காலத்தில்தான் ஜெர்மானிய மொழியில் இலக்கியத்தரமுள்ள புதுநூல்கள் தோன்றின. இதற்கு முந்திய பதினைந்நூற்றாண்டில் சமய சம்பந்தமான சிறு புத்தகங்களுள் மனிதப் பண்பாடு பற்றி இலத்தீன் மொழி இலக்கியம், மக்கள் விரும்பிப் படிக்கும் எளிய நூல்கள் இவையே எழுதப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டின் ஜெர்மன் இலக்கியம் இம்மை மறுமை இரண்டையும் அளாவி நின்றது. போர்களால் விளைந்த கோரச்செயல்கள் உலகப் பொருள்களின் பயனின்மையை மக்களுக்கு நினைவூட்டின. ஆயினும், மக்கள் உலக வாழ்விலே ஒன்றி நின்றனர். இறைமைப் பற்று நிறைந்த மத்திய காலத்தில் நிலவிய மறுமை நோக்கிய

வாழ்வு இனி வளருவதற்கில்லை. விதியின் விளையாட்டுக்களை தாங்குவதற்கும், தம் வலியால் வாழ்க்கையில் வெற்றிபெற்று அதைச் செப்பமுறச் செய்வதற்கும் உள்ள திறனே மனிதனின் சிறப்பு என்று கருதப்பட்டது. இத்தகைய சிந்தனைச் சிக்கல்களுக் கெல்லாம் தீர்வு காணப்பட்டது பதினெட்டாம் நூற்றாண்டில்தான். மனிதனின் பகுத்தறிவு ஆட்சி அப்பொழுது தொடங்கியது. கீழே வரும் புதினத்தில் இக்கொள்கையையே காணுகிறோம்:

ஹோன்ஸ் ஜேக்கப் கிரிஸ்டாஃபல் ஃபன் கிரிமெல்ஷாசன்

எழுதிய

சிம்ப்லிஷியஸ் சிம்ப்ளிஷிசிமஸ்

ஒரு குடியானச் சிறுவனின் கதையைக் கூறுகிறது இப்புத்தகம். தன் பெற்றோர்களின் பண்ணைவீடு குறையாடப்பட்டதை சிம்ப்லி ஷியஸ் சிறு வயதிலே பார்க்கிறான். தெய்வப்பற்றுள்ள துறவி ஒருவர் அவனை வளர்க்கிறார். அவர் இறந்த பின் உலக வாழ்விலே இறங் கிக் கூலிப்படை வீரனாகிறான். கொடிய போர்களிலே அவன் ஈடு படுகிறான். வாழும் ஆர்வத்தால் பயணங்களை மேற்கொண்ட அவன் ஒரு துணிவு மிக்க வீரன் ஆகிறான். உலகில் நிலவிய பகட் டையும் தீமையையும் அவன் கண்டறிகிறான். முடிவில் அவன் இயற்கையின் தனிமையிலே இறைவனுக்குப் பணி செய்யும் துறவி யாகி விடுகிறான். உலகுக்குத் தன்னை உரிமையாக்கியதால் இறைவ னிடமிருந்து அவன் விலகிச் சென்றான்; ஆயினும், உலக ஞானமே முடிவில் அவன் தன்னை அறிந்து கொள்வதற்கும் இறைஞானம் பெறுவதற்கும் வழி வகுத்தது.

முப்பதாண்டுப் போரைக் வரலாற்றுக்களமாக வைத்துக் கதை அமைக்கப்பட்டுள்ளது. உலகத்தின் நிலையற்ற தன்மையை அப் போர் துலக்கியது. இதை உயிர்ச்சித்திரமாக இப்புதினத்திலே காணுகிறோம். கீழேயுள்ள பகுதி சிம்ப்ளிஷியஸ் கண்ட கனவு, துறவி இறந்தபின் அவன் புறப்பட்டது, வீரர்களிடமிருந்து அவன் பெற்ற வரவேற்பு இவற்றைப் பற்றியதாகும்.

சிம்ப்ளிஷியஸ் உலகிலே முதலடி எடுத்து வைத்தான், ஆனால், அப்பொழுது அவனுக்கு நற்பேறு கிட்டவில்லை.

அந்தக் கிழட்டுக் கழுதையின் முறையீடுகளை நான் கேட்க விரும்பவில்லை; அவனுக்குக் கிடைக்க வேண்டியதுதான் கிடைத் தது என்று நான் எண்ணினேன். அவன் ஏழைப் படை வீரர்

காய்களை அடிப்பதுபோல் அடித்தான். எனவே, மீண்டும் நான் நிலமெங்கும் நிறைந்திருந்த மரங்களை நோக்கித் திரும்பிக்கொண்டேன். மரங்கள் ஒன்றையொன்று தள்ளி மோதிக்கொண்டு நகர்ந்து கொண்டிருந்தன. மனிதர்கள் விரைந்து தடுமாறிக் கொண்டு வந்தனர். ஒரு கொடிக்கு முன்வரை அவர்கள் நன்கு உயிருடன் இருந்தனர்; இப்பொழுது ஒருவன் கையை இழந்தான். இன்னொருவன் காலை இழந்தான், மூன்றாமவன் தலையையே இழந்தான். இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எல்லா மரங்களும் சேர்ந்து ஒரே மரமாகத் தோன்றியது. அதன் உச்சியிலே செவ்வாய்கோள் அமர்ந்திருந்தது. அதன் கிளைகள் ஐரோப்பாக் கண்ட முழுவதிலும் பரந்து கவிந்திருந்தன. உலக முழுவதிலுங்கூட அக்கிளைகள் பரவிக் கவிந்திருக்கலாம்; அவ்வாறே எனக்குத் தோன்றியது. பொறுமை, வெறுப்பு, ஐயுறவு, அகந்தை, பெருமை, பேராசை இன்னும் இவை போன்ற பண்புகள் வடக்கிருந்து வரும் ஊதற்காற்றுக மரங்களினூடே வீசின. இதனால் மரம் மெலிந்து பளிங்கு போன்று காணப்பட்டது. எனவே யாரோ ஒருவர் நடு மரத்திலே இக்கவிதையைச் செதுக்கி வைத்திருந்தனர்.

மடமட வெனக்கிளை முறியபேய்க் காற்றில் ஆங்கே
சடசட வென 'ஓக்' சாய்ந்தது மண்ணில்; அதுபோல்
உடன்பிறந் தாரையே கொன்றிடும் போரும் உட்போரும்
தடம்புரட் டிடுதே தரணியை; வாழ்வையே அழிக்கிறதே!

கெடுதலான காற்றின் கடுமையான இறைச்சலும் மரத்தின் தன்னழிவும் என்னை எழுப்பிவிட்டன. நான் தனிமையாகக் குடிசையில் இருப்பதை உணர்ந்தேன். என்னையே நான் என்ன செய்து கொள்ள வேண்டுமென மீண்டும் சிந்திக்கலானேன். காட்டிலே தங்கியிருப்பது இயலாததாகிவிட்டது. என்னிடம் இருந்ததெல்லாம் திருட்டுப் போய்விட்டன; நான் என்னைப் பேணிக்கொண்டு அங்கு வாழ முடியாது. சிதறிக் கிடந்த சில புத்தகங்களே அங்கு இருந்தன. களைந்த கண்களுடன் அப்புத்தகங்களைப் பொறுக்கிக்கொண்டு, நான் செல்லுவதற்கு ஏற்ற வழிகாட்டுமாறு இறைவனை இறைஞ்சும் பொழுது, துறவி உயிருடன் இருந்த நாட்களில் எனக்கு எழுதிய சிறு கடிதம் தற்செயலாகக் கிடைத்தது.

"அன்புடைய சிம்ப்ளிஷியஸ்: இந்தக் கடிதம் கண்டவுடன் காட்டைவிட்டு விலகி, நீயும் மதகுருவும் வரவிருக்கும் கேட்டிலிருந்து தப்பித்துக்கொள்ளுங்கள். சமயகுரு எனக்கு எவ்வளவோ நன்மைகள் செய்துள்ளார். இறைவனை முன்னிருத்தி

எப்பொழுதும் தொழுதுகொண்டே இரு. அவர் உனக்குத் தகுந்த இடத்திற்கு வழிகாட்டுவார். ஆண்டவகீ என்றும் அகத்திலே இருத்திவை. என்னுடன் காட்டில் இருப்பதாக நிகீனத்துக் கொண்டு இறைபணி செய்வாயாக. நான் கடைசியில் கூறிய சொற்களை என்றும் நிகீனவிலே கொண்டு அவ்வழி நிற்பாயாக. நீ காப்பாற்றப் பெறுவாய்."

நான் அக்கடிதத்தையும் துறவியின் சமாதியையும் ஆயிரந் தடவைகள் முத்தமிட்டேன். நான் நாடிய மக்களைத்தேடி என் வழியே சென்றேன். நேராக இரண்டு நாட்கள் நடந்துகொண்டே இருந்தேன். இரவு நேரத்தில் பொந்து விழுந்த மரத்தைத் தங்குமிடமாகக் கொண்டேன். வழியிலே பொறுக்கிய மரக்கொட்டைகளை உணவாகக் கொண்டேன். மூன்றுவது நாள், கெல்ன் ஹௌஸ் அருகிலே சம நிலையான வயல் ஒன்றைக் கண்டேன். அங்கே திருமண விருந்து போன்ற ஒரு விருந்துணவை அருந்தினேன். எங்கும் கோதுமைக் கதிர்கள் காணப்பட்டன. நொயர்த்லிங் போருக்குப்பின் குடியானவர்கள் விரட்டப்பட்டதால் கதிர்கள் அறுவடையாகவில்லை. ஒரு கதிர்க்கட்டை எனக்குப் படுக்கையாக வைத்துக்கொண்டேன். கொடுங்குளிராக இருந்ததால், கதிர்களை நானே தேய்த்துத் தானியங்களை எடுத்து உண்டேன். நீண்ட நாட்களாக இது போன்ற ஒன்றை நான் தின்று பார்த்ததில்லை.

சிம்ப்ளிஷியஸ் எப்படி ஹானேவை வென்றான் என்பதும், சிம்பளியசை எப்படி வென்றான் என்பதும்:

வைகறைப் பொழுதிலே மீண்டும் கோதுமையை உண்டேன். முதலில் கெல்ன்ஹௌஸ் நோக்கிச் சென்றேன். நகரக் கதவுகள் திறந்திருக்கக் கண்டேன். அவை பாதி எரிந்த நிலையில் இருந்தன. பாதி உயரம் வரை குப்பைகளைக் கொட்டித் தடுப்பு ஏற்படுத்தி இருந்தனர். உள்ளே நான் சென்றேன்; உயிருள்ள எவரையும் நான் அங்கு காணவில்லை. தெருக்களிலே மக்களின் சடலங்கள் சிதறிக் கிடந்தன. சடலங்கள் சிலவற்றில் ஆடைகள் முழுதுமாக இல்லை. சிலவற்றில் மேலணி மட்டும் இருந்தது. இந்தத் துயரக்காட்சி எனக்கு அதிர்ச்சியளித்தது. எத்தகைய பெருங்கேடு அங்கு நடந்திருக்க வேண்டும் என்பதை என் எளிய மனத்தால் ஊகிக்க முடியவில்லை. பிறகு, வல்லரசின் வீரர்கள் வீமர் இளவரசரின் வீரர்களுடன் எதிர்பாராதவிதமாகச் சமர் செய்தனர் எனக் கேள்விப்பட்டேன். ஒரிரண்டு கல்லெறி தூரம் போவதற்குள்ளேயே நான் கண்டவை போதும் போதுமென்றாகி விட்டது. எனவே நான் திரும்பிவிட்டேன். ஓடைகளைத் தாண்டி

நெடுஞ்சாலை வழியாக ஹானே பெருங்கோட்டையை அடைந் தேன். முதல்காவல் நிலையத்தை நான் அடைந்த உடன் இரண்டு துப்பாக்கி வீரர்கள் என்னைப் பிடித்து அவர்கள் தலைமை நிலையத் திற்கு இட்டுச் சென்றனர்.

ஏதோ கடற்பூதத்தைப் பார்ப்பதுபோல் என்னை எல்லோரும் உறுத்துப் பார்த்தனர். எல்லோரும் என்னைக் காண விரும்பி னர்கள். ஆனல், என்னைப்பற்றிய கதைகளை அவரவர்கள் புனைந்து கொண்டனர். வேவு பார்ப்பவன் என்று என்னைச் சிலர் நினைத்த னர். பைத்தியம் என்று சிலர் கருதினர்; காட்டுமிராண்டி என்று சிலர் எண்ணினர்கள்; சிலர் பேயென்றும், பேயுருக்கொண்டவ னென்றும் அற்புதமானவன் என்றும் என்னைக் கூறினர். சிலர் என்னை ஒரு முட்டாள் என்று கருதினர்கள். இறைவனைப்பற்றி நான் அறிந்து கொண்டிருக்காவிடில், அவர்கள் என்னை முட்டா ளாகக் கருதியது சரியாகவே இருந்திருக்கும்.

1700 — 1790

முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் ஜெர்மனியின் அறிவுலகை அறிவு விளக்கத் தத்துவமே (Philosophy of Enlightenment) ஆட்சி புரிந்தது. அக்காலத்தில், மனிதன் பகுத்தறிவு வாய்க்கப்பெற்ற ஒரே படைப்புயிராகத் தன்னைக் கண்டான். உண்மையைக் காணுதற்கும், தன்னைப் பேணுதற்கும் பகுத்தறிவே போதுமென்றும், மரபார்ந்த வழிமுறைகளும் உறுதிக் கோட்பாடுகளும் தேவையில்லாதவை என்றும் அவன் நம்பினான். இவ்வாறு, பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்த முடிவுகளுக்கு ஒவ்வாத எதிலும் அறிவுவிளக்கக் கொள்கை மிகுந்த குறையைக் கண்டது. அனைத்துக்கும் மேலாக, நெகிழ்வற்ற கோட்பாடுகளைக்கொண்ட சமயத்தினரும், தேவையற்ற அரசு அல்லது சமுதாய ஆள்வைகளும் (Authorities) அக்கொள்கைப்படி குறைபாடுள்ளவர்களாகக் கருதப்பட்டனர். தன் பகுத்தறிவுமீது கொண்டுள்ள நம்பிக்கை நிகழ்கால முன்னேற்றத்தில் நம்பிக்கையைத் தோற்றுவித்தது; எனவே வரலாற்றுப் பழைமை சிறப்புப் பயனுடையதாக ஏற்கப்படவில்லை. மனிதனின் பகுத்தறிவு அவனுக்கு உணர்த்தியது அவனைச் சுற்றியுள்ள உலகின் உண்மையை மட்டுமேயன்று; ஒழுக்கத்தின்படி நன்மை எது, உண்மை எது என்பவற்றையும் அவனது ஒழுக்க மனச்சான்று அவனுக்கு உள்நின்று உணர்த்தியது. சமயத் துறையினர் எவரும் உண்மையான ஒழுக்கம் எது என்பதை வரையறுத்து அவனுக்குக் கூற வேண்டுவதில்லை; தடையூறுகள் ஏதுமின்றிச் சிந்தித்து அவன் உண்மையை நாடினான்; உண்மையான ஒழுக்கத்தில் அமைந்த நேர்மைநெறியை உணர்ந்தான். இத்தகைய சிந்தனையால் தனது ஏற்றத்தையும் இலக்கையும் மனிதன் கண்டுகொண்டான்.

ஜெர்மனியில், நடுத்தர வகுப்பினரே இந்த அறிவுவிளக்கக் கொள்கையைப் பரப்பியவராவர். அக்காலத்தில் அவர்கள் சமுதாயத்தில் முன்னணிக்கு வரத் தொடங்கி இருந்தனர். அறிவுவிளக்கத்தின் கோட்பாடுகளை விரைவாகப் புரிந்துகொண்டு மக்களிடையே பரப்பியவர் இவ்வகுப்பினரே. பகுத்தறிவின் அடிப்படையில் ஒழுக்க மனப்பான்மையை உருவாக்கலாகுமென்னும் கருத்து நடுத்தர வகுப்பினர் ஒழுக்கத்தைப் போதிக்கும் நிலையைத் தோற்றுவித்து, தனக்குத்தானே முடிவெடுக்கும் திறன் புதிதாக மக்களிடை ஏற்பட்டதால் பகுத்தறிவையே அதிகமாகப் போற்றும் மரபு வளர்ந்தது.

ஆயினும், ஜெர்மனியின் அறிவுவிளக்கக் கொள்கையின் தனியுரிமையாட்சி பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையி

லுமே நீடித்தது. அறிவுவிளக்கக் கொள்கையினரின் கடுமையான தாக்குதலுக்கு இடையில் சமயத்துறையினரின் கோட்பாட்டுடன், ''இறைமைப்பற்று'' (Pietism) என்ற புதியதொரு சமய மனப்பான்மையும் உருவாகியது. அதன் வழி ஒழுகியவர்கள் தங்கள் கோட்பாட்டைத் தங்கள் மன உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே அமைத்துக் கொண்டனர். மன எழுச்சியையும் சமய உணர்ச்சிகளையும் இவ்வாறு வலியுறுத்தியதானது அறிவுவிளக்கக் கொள்கை சார்ந்த இலக்கியத்துக்கு எதிர்ப்பைத் தோற்றுவித்தது. அங்ஙனம் எதிர்த்தோருள் முக்கியமானவர், கவிஞர் கிளாப்ஷ்டோக் (1724–1803) என்பவர் ஆவார். யொகன் காட்ஃபிரைட் ஹெர்டர் என்பவரின் எழுத்துக்களே அவ்வாறு புதிய வழியில் எழுதுவதற்கான கொள்கை அடிப்படைக்கு வழி வகுத்தன. ஆயினும், இவ்வியக்கங்கள் தோன்றிய அதே நேரத்தில், லெஸ்ஸிங், காண்ட் என்போரின் ஆழ்ந்த அறிவின் பயனாக அறிவுவிளக்கக் கொள்கை நிறைவு நிலை எய்தியது. பல்வேறுபட்ட போக்குகளின் இணைப்பாக விளங்கிய உயர்நிலை இலக்கியத்தின் காலம் தொடர்ந்துவரவிருந்தது. அத்தகைய நிலையை உருவாக்குவதற்கு பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதிக்காலம் வகை செய்தது எனலாம்.

தனித்த மெய்பொருளறிஞரான காண்ட் என்பவருக்கு அடுத்தபடியாக, காட்டோல்டு எஃப்ராயிம் லெஸ்ஸிங் என்பார் (1729—1781) ஜெர்மானிய அறிவு விளக்கக் கொள்கையின் தலைசிறந்த புலவராவார். அவர் ஒரு நாடகாசிரியர்; இலக்கியத் திறனாய்வாளர்; சமய மெய்ப்பொருளறிஞர். அவர் தமது வாழ்வில் பெரும்பகுதியைக் கழித்தது வடக்கு ஜெர்மனியில்தான். பதிப்பாசிரியர், அணுக்கச் செயலாளர், நாடக அரங்கு மேலாளர், நூலகர் ஆகிய பல்வேறு பதவிகளை அவர் வகித்தவர். ஆயினும் தனிப்பட்ட எழுத்தாளராகத்தான் தமது சிறந்த பணியை அவர் ஆற்றிவந்தார். லெஸ்ஸிங் எழுதிய விரிவான இலக்கியத் திறனாய்வு நூல்களைப் போலவே அவரது நாடகங்களும் (''மின்னா ஃபன் பார்ன்ஹெல்ம்'' ''எமிலியா கலொட்டி'', ''நாதன், என்னும் அறிஞர்'') ஜெர்மானிய இலக்கிய பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின அந்நாளில் முக்கியமாக இருந்த கொள்கைகளைத் தமது எழுத்துக்களில் மையமாக அமைத்து அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை அவர் மேற்கொண்டார்.

அறிவு விளக்கக் கொள்கை சார்ந்த மெய்ப்பொருள் அறிஞரான அவர் ஒருபோதும் மேலோட்டமான பகுத்தறிவு வாதத்தில் இறங்கியதில்லை. மெய்ப்பொருளறிவு சார்ந்த விரிவான அமைப்பு எதையும் உருவாக்குவதைத் தவிர்த்து, ஒழுக்க மதிப்புடைய நடத்தை பற்றிய கருத்தையே அவர் வலியுறுத்தினார். அவர் காலத்தில் நிலவிய ஒரு தலையான கருத்துக்களையும், கொள்கைப் பிடிவாத மனப்பான்மை

களையும் எதிர்த்துச் சாடும் நேர்மையும் அஞ்சாமையும் அவரிடம் அமைந்திருந்தன; பண்பாட்டுத் துறையில் நிகழ்ந்த வாத எதிர் வாதங்களில் எல்லாம் அவர் எப்போதும் தாமாகவே ஆய்ந்து முடிவு களே மேற்கொண்டார்; எனவே அவரது எழுத்துக்கள் ஆக்கமுறைத் திறனுய்வுக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. சமயச் சிக்கல் களுக்கு அவர் மேற்போக்காகத் தீர்வு காணுவதில்லை. அவரது கட்டுப்பாடற்ற தன்னிச்சையான போக்கின் காரணமாக எந்தக் கட்சியும் ஐயப்பாடின்றி அவரைத் தனது ஆதரவாளர்தான் என்று சுட்டிக்காட்ட இயலவில்லை.

மனித இனத்தின் கல்வி

"மனித இனத்தின் கல்வி" என்பது லெஸ்ஸிங் இறுதியாக எழுதிய பெரு நூலாகும். தமது மறைவுக்கு ஓராண்டுக்கு முன்பு, 1780ஆம் ஆண்டில், அதை அவர் எழுதினர். வரலாறு, சமயம் பற்றிய மெய்ப் பொருளியல் கருத்துக்களின் சாரத்தை இந்நூலில் காணலாம். லெஸ்ஸிங்கின் அறிவார்ந்த சிந்தனைக்கோர் எடுத்துக்காட்டாக இந்நூல் இலங்கியது. திருவருள் காட்டிய உலகச் சமயங்கள் பலவும் மனித குலத்தில் பகுத்தறிவு வளர்ந்த, இனியும் வளரக்கூடிய, ஒரே வழியை உணர்த்துவன என்பதைக் காட்டுவதே அவரது நோக்க மாகும். வரலாற்றுத் தொடர்புடைய இவ்வளர்ச்சியில் மூன்று முக்கிய கூட்டங்களை லெஸ்ஸிங் காணுகிறார். இவற்றுள் முதற் கட்டத்தை ஒரு குழந்தைக்குரிய கல்விக்கு ஒப்பிடலாம். பழைய ஏற்பாட்டில் (Old Testament) கூறப்படும் வரலாறும் சமயப்பற்றும் உள்ள யூதமக்கள் இந்த முதற்கட்டத்தைச் சேர்ந்தவர்கள். இம்மை நலனைக் கருதியே நன்மையைச் செய்ய வேண்டும் என்பது இதற் குற்ற நெறியாகும். இரண்டாவது கட்டம் கிறித்துவோடு தொடங்கு கிறது; "மனித குலத்தின் வளரிளமைப் பருவத்திற்கு"ச் சமய நூலாக அமைவது புதிய ஏற்பாடு (New Testament) ஆகும். மரணத்துக்குப் பின்னும் வாழ்வுண்டு என்ற நம்பிக்கையால், மறுமை நலங்கருதி மக்கள் நற்செயல்களைப் புரிய வேண்டும் என்று இந்நூல் கூறுகிறது. மூன்றாவது கட்டம் முழுநிறைவு நிலையாகும். இது முடிவில் எய்த வேண்டிய மெய்யறிவு நிலை. கல்வியின் குறிக்கோள், மனித இன வரலாற்று வளர்ச்சியின் குறிக்கோள் இதுவேதான். "கடன் என்ப நல்லவை எல்லாம்" என்ற உயர் மனிதப்பண்பு, உண்மை, அருள், ஆகியவற்றைப் பகுத்தறிவின் மூலமாகவே எய்திடும் பருவத்தை மனிதகுலம் அடைந்துவிட்டால், அதன்பிறகு அதற்குச் சமயத்தின் உதவி தேவையில்லை.

இரண்டாவது கட்டமான கிறித்துவச் சமயத்தைப்பற்றிய விளக் கத்திலிருந்து ஒரு பகுதி தரப்பட்டுள்ளது :

54

ஒரே கல்வித் திட்டத்தின்கீழ்ச் சேர்க்கப்படவேண்டுமெனக் கடவுளால் தீர்மானிக்கப்பட்ட மனித இனப்பகுதி கல்வியின் இரண்டாம் நிலையை அடைவதற்கு ஏற்றதாயிற்று. எனினும், அவர் அத்தகைய திட்டத்தில், செயல்வகை ஆட்சிமுறை, பிற இயற்கையான அரசியல் வழியான உறவுகள் இவற்றுல் ஏற்கெனவே இணைந்து ஒன்றான பகுதியினரையே சேர்த்துக்கொள்ள வேண்டுமென இச்சித்தார்.

55

இவ்வுலகில் பெறும் மறுபயன்களும், தண்டனைகளுமே மக்கள் ஒழுக்கநெறி நிற்பதற்கு இதுவரை வழி வகுத்தன. இவற்றைக் காட்டிலும் உயர்ந்த, தகுந்த காரணங்களே ஒழுக்க நிலைக்கு உற்றவை என்று கண்டு உணருமளவிற்கு பகுத்தறிவைப் பயன் படுத்தி முன்னேற்றம் அடைந்துள்ளது இந்த மனித இனப் பகுதி. இது குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவம் எய்தி விட்டது. இனிப்பு வகைகளிலும், விளையாட்டுப் பொருள்களிலும் இனி அதற்கு நாட்டமில்லை. தானும் தன் தமையனைப்போல் தன்னுரிமையோடும், பெருமையோடும், மகிழ்ச்சியுடனிருக்க வேண்டுமென்ற ஆவல் அதற்கு அரும்பிற்று.

56

இந்த மனித இனப்பகுதியில் மிகச் சிறந்த சிலர் (தமையன் மார்கள் என்று மேலே குறிக்கப்பெற்றோர்) ஏற்கனவே, நீண்ட காலமாக அத்தகைய உயர்ந்த நோக்கங்களின்வழி நடந்து பழகி யிருந்தனர். கிரேக்கரும், உரோமானியரும் தம் வாழ்க்கை முடிந்த பின்னர் தம் உடன் குடிகளின் நிலைவிலாவது தொடர்ந்து வாழ்ந் திருக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டனர்.

57

இவ்வாழ்வுக்குப் பின் எதிர்பார்க்கப்படும் மற்றோர் **உண்மை யான** வாழ்க்கையை மனத்துட்கொண்டே (அந்த இளைஞன்) செயலாற்றும் காலம் வந்து விட்டது.

58

ஆன்மா அழிவற்றது என்பதை எடுத்துரைத்த முதல் ஆசிரியர், உறுதியுள்ள செய்திறமுள்ள ஆசிரியர், இறித்து ஆவார்.

59

முதன் முதலாக உறுதியூட்டிய ஆசிரியர் அவர். எதிர்காலத்தைக் கூறும் அருளுரையை நிறைவேற்றியதால் அவர் உறுதியூட்டினர்; இயற்றிக் காட்டிய வியத்தகு செயல்களின் மூலம் அவர் உறுதியூட்டினர்; மரணத்துக்குப் பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்ததன் மூலம் அவர் உறுதியூட்டினர். அவ்வாறு மீண்டும் உயிர்த்தெழுந்ததால் அவர் தம் கொள்கை உறுதி முத்திரை பெற்றது. கிறித்து ஆகியவர் **யார்** என்பதையும், அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தது, பிற வியத்தகு செயல்கள் இவற்றை நாம் **மெய்ப்பிக்க** இயலுமா என்பதையும் நான் ஒதுக்கி வைத்து விடுகிறேன். **அவையஞ்சத்தும்** அவருடைய கொள்கையை **விரும்பியேற்பதற்கு** அக்காலத்தில் பெரிதும் பயன்பட்டிருக்கலாம்; ஆனால் அவர் கொள்கையிலுள்ள **உண்மையை** இப் பொழுது நாம் கண்டு கொள்வதற்கு அவை அவ்வளவு முக்கிய மல்ல.

60

முதன் முதலாகச் செய்திறத்தோடு விளங்கிய ஆசிரியர் அவர். மெய்ப்பொருளியல் வழியில் ஊகித்து, ஆன்மாவின் அழிவிலாத் தன்மையை உய்த்தெண்ணுதலும், விழைவதும், நம்புவதும் ஒன்று; அதன் வழி அகமும் புறமும் செயல்படுவது மற்றொன்று.

61

இதனைக் கற்பித்தவருள் முதல் ஆசிரியர் கிறித்துவே ஆவர். தீச்செயல்களுக்கு மறுமையில் தண்டனை உண்டு என்ற கொள்கை பல நாடுகளிலும் அவருக்கு முன்பே தோன்றியிருந்தது; ஆனால், அத்தீச்செயல்கள் சமுதாயத்திற்குக் கேடு விளைவிப்பவையாக இருந்தமையால் சமுதாயத் தண்டனைக்கு உற்றவையாகவும் இருந்தன. மறுமையை நாடியும் ஒருவன் உள்ளத்தூய்மையுடன் இருத்தல் வேண்டும் என எடுத்துரைத்தது அவர் ஒருவரேதான்.

62

அவருடைய சீடர்கள் இக்கொள்கைகளைப் பற்றுறுதியோடு பரப்பியுள்ளனர். கிறித்துவால் யூதர்களுக்கு மட்டுமே விதிக்கப் பட்டதுபோல் காணப்பட்ட உண்மையை பிற நாடுகளில் விரிவாகப் பரவச் செய்த ஒரே சிறப்புத்தான் அவர்களுக்கு உண்டு என்று கொண்டாலும்கூட, அந்தச் செயலுக்காகவே அவர்களை

மனித இனத்தின் நன்மையாளர்களாக, வளர்ப்பாளர்களாக நாம் மதிக்க வேண்டும்.

63

கிறித்து போதித்த பேருண்மையை, உண்மை விளக்கமில்லாத, பயன் அதிகமில்லாத பிற கொள்கைகளோடு அவர்கள் கலக்கச் செய்திருக்கலாம். இதைத் தவிர்ப்பது எப்படி? இதற்காக அவர்களை நாம் குறை கூறுதல் கூடாது. இவ்வாறு கலந்து உருவான கொள்கைகள் பகுத்தறிவை ஒரு புதிய வழிநோக்கிச் செலுத்தும் தன்மையுடையவையா இல்லையா என்று நாம் ஆய்தல் வேண்டும்.

64

இக்கொள்கைகளைக் கூறும் புதிய ஏற்பாட்டுத் திருநூல்கள் மானிட இனத்திற்கு முன்னதைவிடச் சிறந்த இரண்டாவது சமய நூலாகப் பயன்பட்டன. இன்னும் பயன்பட்டு வருகின்றன என்பதை நம் அனுபவம் தெளிவாகக் காட்டுகிறது.

65

தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி அத்திருநூல்களுக்கு ஒளியேற்றினான் மனிதன். அந்த ஒளிதான், மற்ற எல்லா நூல்களையும் விட, கடந்த பதினேழு நூற்றாண்டுகளில் மனித அறிவைத் தீட்டி விளக்கமுறச் செய்தது.

66

பிற நூல்கள் எதுவும் வேறுபாடுகள் நிறைந்த நாடுகளிடையே பரவி விளங்குவது இயலாது. உண்மையாகவே, பல்வேறு வகைப்பட்ட சிந்தனையோட்டங்களையும் இந்நூல் ஈர்த்தது. எனவே ஒவ்வொரு நாடும் தனக்கென்று தனித்தனிச் சமய நூல்களை வைத்திருந்தால் ஏற்படுவதைவிட இந்நூலால் அதிகமான அறிவு விளக்கம் ஏற்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது.

67

ஒவ்வொருவரும் சில காலத்திற்கு இந்நூலைத் தமது ஞானத்திற்கு முழுமை சேர்ப்பதாகக் கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். இளைஞர் ஒவ்வொருவரும் அவ்வாறே தமது சமய நூலைக் கருத வேண்டும்; இல்லையெனில், அந்நூலைக் கற்று முடிப்பதற்கான பொறுமையின்மையால், ஆழந்தெரியாத பல செயல்களிலே அவர் இறங்கிவிடலாம்.

68

இப்பொழுது கூட இன்னுமொன்று முக்கியமானதாகும். சமய நூலை விரைந்து முடிக்கும் ஆர்வமும் துடிப்புங் கொண்டோரே, கவனமாயிருங்கள்! உங்களுக்குத் தெளிவாக விளங்காததையும் இப்பொழுது விளங்கிக் கொண்டிருப்பதையும், உங்களைப் போன்ற, ஆனல் உங்களிவிடத் திறங்குறைந்த புலவர்களுக்குத் தெரிய விடாதீர்கள்.

69

திறன் குறைந்த புலவர்கள் தங்கள் நிலையை அடையும்வரை இதே சமய நூலை மீண்டும் திருப்பிப் பாருங்கள். போதனை முறையிலுள்ள மாற்றங்களாகவும் திருப்பங்களாகவும் உங்களுக்குத் தோன்றுபவை ஆழமுள்ள வெளிரென்றைக் குறிப்பனவா இல்லையா என்பதையும் ஆய்ந்தறியுங்கள்.

நாதன் என்னும் அறிஞர்

எவ்வகைச் சமயப்பற்றுலும் தூண்டப்படாமலே பிறர் நலம் பேணலும், மனித இனப்பற்றும் ஏற்படலாம் என்பதில் தமக்குள்ள நம்பிக்கையை, லெஸ்ஸிங், 1779ஆம் ஆண்டில் தாம் எழுதிய "நாதன் என்னும் அறிஞர்" என்ற நாடகத்திலே கவியுருவில் காட்டியுள்ளார். நாடகம், கீழை நாடுகளில் நடந்த சமயப் போர்களை நிலைக்களமாகக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது; மாறுபட்ட சமயங்களின் பிரதிநிதிகள் கூடும் ஒரு வேடிக்கையான கதையமைப்பைக் கொண்டது. நாதன் என்னும் யூதக் கிழவர் ஒருவர் அப் பிரதிநிதிகளின் ஆன்மீகத் தலைவராகிறார்; இறுதியில், மனிதப் பற்று, இனப் பற்று என்ற பொதுவானதொரு கோட்பாட்டிலே அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கிறார். நாடகத்தின் உயிர் நாடி மோதிரத்தைப்பற்றிய உருவகக் கதையில் அடங்கியுள்ளது; அக்கதையின் முக்கிய பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. சமயங்களிலெல்லாம் சரியானது எது என முகம்மதிய சுல்தானுகிய சலாவுதீன் வினவியபோது, நாதன் ஓர் உருவகக் கதை மூலம் விடையிறுக்கிறார். மூன்று மோதிரங்களுள் உண்மையான உயர்ந்த மோதிரம் எதுவெனக் கண்டுபிடிக்க இயலாது போயிற்று; அது போலவே உலகின் மூன்று பெருஞ்சமயங்களும் உண்மைத் தகுதிக்குப் போட்டியிடுகின்றன. சமயங்களின் பிணக்கை, அறத்தைக் கடைப்பிடிப்பதில் மனிதகுலத்தினர் இடும் போட்டியாக மாற்றுவதே இதற்குத் தீர்வுகாணும் வழியாகும். ஒரு சமயத்தின் உண்மையை அதன் கோட்பாடுகள் மெய்ப்பிப்பதில்லை, புற அமைப்

புக்களும் மெய்ப்பிப்பதில்லை; வரலாறும், தற்செயல் நிகழ்வுகளுமே அவற்றைத் தோற்றுவிக்கின்றன. மனிதர்களைக் கவரும் தன்மையுடைய மோதிரத்தைப்போன்று, சமயமும் வாழ்க்கையில் தொடர்வுறுத்தப்பட்ட மனிதப் பண்பின் நயத்தினாலேயே மெய்ப்பிக்கப்படுகிறது. இவ்வுருவகக் கதையின் இறுதியில், மனிதப் பண்புநயம் என்பது என்ன என்று கூறப்பட்டுள்ளது. தூய்மையான அன்பு, பண்பு, உளமார்ந்த சகிப்புத்தன்மை, ஒப்புரவு, இறைவனிடம் ஆழ்ந்த ஈடுபாடு ஆகியவற்றைக் கொண்டதே மனிதப் பண்பு என்று விரித்துரைக்கப்படுகிறது.

களம் 3, காட்சி 7.

நாதன்: பண்டைக் காலத்தில் கீழை நாட்டில் ஒருவன் இருந்தான். அன்பான ஒருவரிடமிருந்து அவன் விலைமதிக்கவொண்ணா மோதிரமொன்றைப் பெற்றான். அதில் பன்னிறம் ஒளி வீசும் மணிக்கல்லொன்று பதிக்கப்பட்டிருந்தது. தன்னை அணிந்து கொண்டவரைக் கடவுளும், மனிதர்களும் விரும்புமாறு செய்ய வல்ல வியத்தகு ஆற்றல் அதற்குண்டு. எனவே அம்மனிதன் அம்மோதிரத்தை எப்போதும் கழற்றாமல் அணிந்திருந்தான்; அதனை என்றும் தன் வீட்டில் வைத்திருக்க ஏற்பாடு செய்தான். இறுதியில், அவன் அதனைத் தன் மக்களுள் தனக்கு மிகவும் பிரியமான மகனுக்குத் தந்தான்: அதைப் பெற்ற மகன் மீண்டும் அவனது அன்புக்குரிய மகன் யாரோ அவனுக்கு அளிக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தான். அவ்வாறு மோதிரத்தைப் பெற்றவன் தலைமகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அம்மோதிரத்தைப் பெற்றவன் என்பதனாலேயே இல்லத்தின் தலைவனாக—இளவரசனாக வேண்டுமென்றும் அவன் ஆணை பிறப்பித்தான். கேளுங்கள், சுல்தான் அவர்களே!

சலாவுதீன்: புரிகிறது. மேலே கூறுங்கள்!

நாதன்: இவ்வாறு, இம்மோதிரம் வழிவழியாக வந்து, கடைசியாக மூன்று புதல்வர்களையுடைய தந்தை யொருவரிடம் வந்து சேர்ந்தது. அம் மூன்று புதல்வர்களும் தந்தையிடம் மிகப் பணிவாக நடந்து கொண்டமையால், தந்தை மூன்று பிள்ளைகள் மீதும் சமமாக அன்பு பாராட்டினான். எனினும், ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியாக அவனோடு இருந்தபோது, அந்தப் பிள்ளையே பிறரைக் காட்டிலும் மோதிரத்தைப் பெறுதற் கேற்றவனாக அவனுக்குத் தோன்றியது. எனவே, அவ்வப்பொழுது நிலையற்ற மனமுடையவனாக இருந்ததால், மோதிரத்தைத் தருவதாக ஒவ்வொரு மகனுக்கும் தனித்தனியாக வாக்களித்தான். நெடுங்காலம் இவ்வாறே நடந்தது. ஆயினும், தந்தைக்கு மரணம்

நெருங்கியது; என்ன செய்வதெனத் தெரியாமல் தந்தை திகைத்தான். ஒரு மகனுக்கு மோதிரத்தைக் கொடுத்தால், அவன் வாக்குறுதியை நம்பிய மற்ற இரு பிள்ளைகளின் மனத்தைப் புண்படுத்த வேண்டுமே! என்ன செய்வது! யாருமறியாமல் ஒரு பொற்கொல்லனை வரவழைத்து தன்னிடமுள்ளது போலவே மேலும் இரு மோதிரங்களைச் செய்து தருமாறு தந்தை பணித்தான்; அவ்விரு மோதிரங்களும் எல்லாவகையிலும் தன்னிடமுள்ள மோதிரத்தைப் போலவே இருக்க வேண்டுமென்றும், செலவையோ சிரமத்தையோ பாராமல் முற்றிலும் ஒத்திருக்கும் படியான மோதிரங்களாகச் செய்து தரவேண்டுமெனக் கூறினான். பொற்கொல்லனும் மோதிரங்களை அவ்வாறே செய்து முடித்தான். அவன் மோதிரங்களைக் கொண்டு வந்தபோது தந்தைக்கே உண்மையான மோதிரம் எது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. மகிழ்ச்சியோடு தந்தை தன் மூன்று பிள்ளைகளையும் தனித் தனியாக வரவழைத்து, ஒவ்வொருவருக்கும் தன் ஆசியை வழங்கி, மோதிரத்தையும் கொடுத்துவிட்டுக் காலமானான். கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா, சுல்தான் அவர்களே?

இரு நீதிக் கதைகள்

ஓர் இலக்கிய சாதனமாக அமையும் நீதிக் கதைக்கு லெஸ்ஸிங் கூறிய வரையுரையாவது: "பொதுவானதோர் ஒழுக்க நெறியைக் குறிப்பிட்டவொரு நிகழ்ச்சிக்குப் பொருத்தி, அதற்கு உண்மைத் தோற்றமளித்து, அதனை வைத்துக் கதையைக் கற்பித்துக் கூற வேண்டும்; அக்கதையினின்றும் முன்னர்க்கூறிய ஒழுக்கநெறி தெளிவாகத் தெரியவேண்டும். அத்தகைய கதையே நீதிக்கதை எனப்படும்". நீதிக்கதைகள் எல்லாம் பெரும்பாலும் விலங்குகளைப் பற்றியதாகவே இருக்கின்றன. அவையனைத்தும் மனிதர்களைப் போலவே பகுத்தறிவு வாய்ந்தவையாகவும், பேசக்கூடியனவாகவும் உள்ளன. நீதிக்கதைகளில் இவ்வாறு வருதல் இயல்பென்றே கொள்ளப்படுகிறது. காரணம், பிராணிகளுக்கு தனித்தனிப் பண்புகள் உண்டு என்பது பொதுவாகத் தெரிந்த தொன்றாகும் என்று லெஸ்ஸிங் விளக்குகிறார். இவ்வாறு, பல்வேறு பிராணிகளுக்கு அவைகளுக்கே உரிய தனிப் பண்புகள் ஏற்றிக் கூறப்படுகின்றன, என்றும் அவர் கூறுகிறார். இதனால், கதையைப் படிப்போர் அதிலுள்ள நீதியை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. நெறியுறுத்தும் தன்மை கொண்ட நீதிக்கதைகள் அறிவு விளக்கக் கொள்கை பரவிய காலத்தில், நடுத்தர வகுப்பினரால் விரும்பப் பட்டன. கருத்தைக் கூறும் கலைத்திறனும், சிறிய தவறுகளையும்

திருத்தும் பண்பும் லெஸ்ஸிங்கிடம் அமைந்துள்ளதை கீழ்க்காணும் இரு நீதிக்கதைகள் காட்டுகின்றன.

எது முதன்மையானது என்பது பற்றி விலங்குகளிடை வழக்கு

1

விலங்களுக்குள் முதன்மையானது எது வென்பதைப் பற்றிய தொரு விவாதம் நடந்தது. அவ் விவாதத்திற்குக் குதிரை தீர்வு காண முயன்றது. "நாம் இதைப்பற்றி மனிதனைக் கேட்கலாம்; இவ் வழக்கில் அவன் கலந்து கொள்ளவில்லையாதலால் ஒருபாற் கோடாது தீர்ப்பளிக்க அவனே வல்லவன்" என்றது குதிரை.

"ஆனலும் அதற்கான அறிவு அவனுக்குண்டா?" என்று அகழ் எலி கேட்டது; "பெரும்பாலும் நம்முள் மறைந்தே கிடக்கும் நற்பண்புகளை ஆய்ந்தறிந்து கூற உண்மையிலேயே அவனுக்கு மிகச் சிறந்த அறிவு வேண்டுமோ என்றது அது.

"மிகவும் சரியான கேள்வி" என்று வயல் எலி அதனை ஒட்டிக் கூறியது.

"ஆம், உண்மை! அதற்கேற்ற துட்பமான அறிவு மனிதனுக் கிருப்பதாக நான் கருதவில்லை" என்று கூவியது முள்ளெலி.

"அமைதி!" எனக் கட்டளையிட்ட குதிரை "தன் கட்சி வெல்லும் என்ற நம்பிக்கை இல்லாதவன் நீதிபதியின் அறிவில் ஐயங் கொள்பவன் ஆவான் என்பது நாம் நன்கு அறிந்ததேயாகும்" என்று கூறியது.

2

மனிதன் நீதிபதியாக ஆக்கப்பட்டான். "நீங்கள் தீர்ப்பளிப்ப தன் முன்னர் ஒரு வார்த்தை! எங்கள் திறன்களைப் பற்றி ஆய்ந்து முடிவெடுப்பதற்குத் துணையாகத் தாங்கள் கொள்ளப் போகும் விதிகள் யாவை?" என்று வீறுகொள் தோற்றத்துடன் விளங்கிய சிங்கம் கேட்டது.

"விதிகளென்ன? நீங்களெல்லாம் எனக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறீர்கள் என்பதைக் கொண்டுதான் முடிவு செய் வேன்" என்று மனிதன் மறுமொழி கூறினன்.

"மிக நன்று!, அவ்வாறு அளப்பதானல் நான் கழுதையைக் காட்டிலும் எவ்வளவு தாழ்ந்து போவேன்! முடியாது. மனிதா, நீ எங்களுக்கு நடுவணராக இருக்க முடியாது. கூட்டத்தை விட்டுச் செல்று விடு!." என்று சிங்கம் புண்பட்ட மனத்துடன் கூறியது.

3

மனிதன் போய்விட்டான். "குதிரையே, இப்போது என்ன செய்கிறாய்? மனிதன் நமக்கு நடுவணராக இருக்க முடியாது என்று சிங்கமும் கருதுகிறது. எங்கள் கருத்துடன் சிங்கத்தின் கருத்தும் ஒத்திருக்கின்றது." என்று அகழ் எலி ஏளனமாகக் கூறியது. வயல் எலியும், முள்ளெலியும் மீண்டும் ஆமோதித்தன.

"மனிதனை நடுவணராக நான் ஏற்க மறுத்ததற்குக் காரணம் உங்கள் காரணத்தை விட உயர்ந்ததாகும்" என்ற சிங்கம் இகழ்ச்சியோடு பார்த்தது.

4

சிங்கம் மேலும் கூறியது: "நன்றாக ஆய்ந்து பார்க்குமிடத்து, முதன்மைபற்றிய இப்பிணக்கு நம் தகுதிக்கேற்றதில்லை. நமக்குள் மிகவும் சிறந்தவனுகவோ, மிகத் தாழ்ந்தவனுகவோ என்னை நீங்கள் கருதிக் கொள்வதை நான் பொருட்படுத்தவில்லை. என்னை நான் தெரிந்து கொண்டாலே போதுமானது", இவ்வாறு கூறி விட்டு சிங்கம் கூட்டத்தை விட்டகன்றது.

அறிவுள்ள யானையும், துணிவுள்ள புலியும், ஆர்வமிக்க கரடியும், சூழ்ச்சிமிக்க நரியும், மேதகு குதிரையும் சிங்கத்தைத் தொடர்ந்து வெளியேறின; சுருங்கக் கூறினால், தத்தம் தகுதியைத் தெரிந்து கொண்ட, அல்லது தெரிந்து கொண்டதாக நம்பிய, எல்லா விலங்குகளும் சிங்கத்தைத் தொடர்ந்து வெளியேறின.

முடிவடையாத கூட்டத்தை யெண்ணிக் குறைப்பட்டுக் கொண்டே இறுதியாகச் சென்றவை குரங்கும், கழுதையும்தாம்.

சிறுவனும் பாம்பும்

ஒரு சிறுவன் பழக்கப்பட்ட பாம்பொன்றுடன் விளையாடினான்.

"என் அன்புக்குரிய சிறு பாம்பே! உன்னிடமிருந்து கஞ்சை அவர்கள் அகற்றாது விட்டிருந்தால் நான் உன்னோடு இவ்வளவு நெருங்கிப் பழக முடியுமா? பாம்புகளாகிய நீங்கள் மிகவும் தீய, நன்றிகெட்ட உயிரினங்கள். பாம்புக்கு உதவிய ஏழைக் குடியான வனுக்கு என்ன நேர்ந்தது என்பதைப் படித்திருக்கிறேன். அவன் ஒரு புதரடியில் உன்னைப் போன்றப் பாம்பொன்றை—அது உன்னுடைய முன்னோரில் ஒன்றாகவும் இருக்கலாம் – கண்டான். அது குளிரால் பாதி விரைத்துப் போயிருந்தது. அவன் அதனிடம் இரக்கங்கொண்டு அதனை எடுத்துத் தன் மார்பகத்தில் வைத்துச் சூடேற்றினான். அப்பொல்லாத பாம்பிற்கு உணர்வு

வந்ததோ, இல்லையோ, உடனே தனக்கு நன்மை செய்தவனைக் கடித்து விட்டது", என்று அச்சிறுவன் பாம்பினிடம் கூறினான்.

இதைக் கேட்ட பாம்பு, "எனக்கு வியப்பாக உள்ளது. உங்கள் வரலாற்றாசிரியர்கள் எவ்வளவு ஓரவஞ்சனையுள்ளவர்களாக விருக்கிறார்கள்! எம்மவர்கள் இக்கதையை வேறு விதமாகக் கூறுகிறார்கள். நீங்கள் கூறிய அந்த நல்ல மனிதன் அப்பாம்பு உண்மையிலேயே பனியால் விரைத்து இறந்துவிட்டது என் றெண்ணி, அது பன்னிறங்கொண்ட இனத்தைச் சார்ந்ததாகை யால், வீட்டிற்குக் கொண்டுபோய் அதன் அழகிய தோலை உரித் தெடுத்துக்கொள்வதற்காகவே அதனை எடுத்துச் சென்றானாம். அது நியாயமா?", என்றது.

"சரிதான், சும்மாயிரு! நன்றி கெட்டவர்கள் எப்போதும் ஏதா வது காரணங்களைக் கூறுவார்கள்" என்று சிறுவன் மறுமொழி கூறினான்.

இவ்வுரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனின் தந்தை, "மகனே! நீ சரியாகக் கூறினாய். என்றாலும், நன்றிகெட்ட செய லைப் பற்றிய ஏதேனும் நிகழ்ச்சியைக் கேள்விப்பட நேர்ந்தால், நன்றிகொன்றவன் என்னும் அருவெறுக்கத் தக்கக் களங்கத்தை ஒருவனுக்கு உண்டாக்குவதற்கு முன்பு, சூழ்நிலைமைகளை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். உண்மையாக உதவுவோர், நன்றி கெட்ட மக்களுக்கு அரிதாகத்தான் உதவியுள்ளனர்; உதவியதே யில்லையெனக் கூறுவதே மனித குலத்துக்குப் பெருமையாகும். சிறுமைமிக்க, தன்னல நோக்கமுடையோரே அத்தகையோருக்கு உதவுவர்; எனவே, அவ்வாறு உதவுவோர் எடுத்துக் கொண்ட சிரமத்திற்காக, நன்றியறிதலைப் பெறுவதற்குத் தகுதியாகார்," என்று இடைமறித்துக் கூறினர்.

ஏழு கடிதங்கள்

லெஸ்லிங் திருமணம் செய்து கொண்ட சில காலத்துக்குள் ளேயே அவருடைய "ஆண்குழந்தை பிறந்தவுடன் இறந்தது; அதன் பின்னர் சின்னஞ்சிறுகளிலேயே அவருடைய மனைவியும் இறந் தாள். லெஸ்லிங், தனது உடல் பிறந்தவரான கார்ல் கோட்ஹெல்ப் என்பவருக்கும், ஷேக்ஸ்பியரின் நூல்களை மொழியாக்கம் செய்த வரான யொகன் யோயாக்கிம் எஷென்பர்க் என்பவருக்கும் எழுதிய கடிதங்கள் மனித உணர்வுகளைச் சித்திரிக்கும் ஓவியங்களாகும். பகுத்தறிவுக்கொள்கை சார்ந்தவரான லெஸ்லிங்கின் ஆழ்ந்த உணர்ச்சிகளை அக்கடிதங்கள் காட்டுகின்றன; ஆழ்ந்த கவலையை யும் மனக்கசப்பையும், பெரும் இழப்பினாலேற்பட்ட எரிச்சல் மனப்

பான்மையையும் எதிர்த்து அவர் போராடியதையுங் கூட அக் கடிதங்கள் காட்டுகின்றன. கவலையால் இடிந்து போன நிலையிலும், பகுத்தறிவின் இதமான குரலைச் செவிமடுக்கவும், அவருக்கு நேர்ந்த வற்றில் அடங்கிய உட்பொருளைக் காணவும் அவர் முயன்றார்.

யொகன் யோயாக்கிம் எஷென்பர்க்

என்பவருக்கு எழுதியவை

வொல்ஃபென்பூட்டல்,
டிசம்பர் 31, 1777.

அன்புள்ள எஷென்பர்க்,

என் மனைவி முற்றிலும் நினைவிழந்த நிலையிலுள்ள இத்தருணத் தில், தங்கள் அன்புக்கும் பரிவுக்கும், நன்றி தெரிவித்துக் கொள்ளு கிறேன். என் மகிழ்ச்சி குறுகிய காலத்துக்குத்தான் நீடித்தது. என் மகனை இழப்பதற்கு நான் அஞ்சினேன்! ஏனெனில், அவன் அத்தனை அறிவுள்ளவனாயிருந்தான்! அவ்வளவு அறிவாளி! ஆனால் தகப்பனாயிருந்த அச் சில மணி நேரத்தில் நான் தந்தை யென்னும் உணர்ச்சியில் மூழ்கி விட்டதாக நினைக்க வேண்டாம். நான் உணர்ச்சி வசப்படாமல்தான் பேசுகிறேன். இவ்வுலகில் அடியெடுத்துவைக்க அவன் மறுத்தான். இருப்புக்குறட்டினால் இழுத்துத்தான் அவனை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தோம். அழுகிப்போன இவ்வுலகின் நாற்றத்தை இவ்வளவு விரைவில் உணர்ந்து கொண்டதும், தனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இதைவிட்டுப் புறப்பட்டுவிட்டான். இது ஞானச் செயலன்றே! எனினும், அந்தச் சிறிய வம்பன் தன் தாயையும் தன்னோடு இழுத்துச் செல்லப் பார்க்கிறான். நான் அவனை என்னோடு நிறுத்திக் கொள்வேனென்பதில் சிறிது நம்பிக் கைகூட இல்லை. மற்றவர்களைப் போன்றே நானும் மகிழ்ச்சி யோடிருக்க விரும்பினேன்; ஆனால் எனக்கு நற்பேறு இல்லை.

லெஸ்லிங்
சனவரி 3, 1778.

என் அன்பார்ந்த எஷென்பர்க்,

மீண்டும் சற்று நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறேன். அநேக மாக, என் மனைவி உயிரோடிருப்பாள் என நேற்று முதல் மருத்து வர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதன் விளைவாக நான் நிம்மதி யடைந்து விட்டேன். நான் மீண்டும் எனது சமயச் சச்சரவுகளைப் பற்றி நினைக்கத் தொடங்கிவிட்டேன் என்பதிலிருந்தே நீங்கள் இதைப் புரிந்து கொள்ளலாம். எனவே, மீண்டும் அந்த குறிப்

பிட்ட அரசிதழைத் தாங்கள் எனக்கு அனுப்பிவைக்கக் கூடுமாயின், நன்றியுடையவனாவேன்.

லெஸ்ஸிங்

கார்ல் கோட்ஹெல்ப் லெஸ்ஸிங்

என்பவருக்கு எழுதியது

வொல்ப்பென்பூட்டல்,
சனவரி 5, 1778.

என்னருமைச் சகோதரரே,

என் மாற்றும் புதல்வன் மீது நீங்கள் அத்தனை அன்பைக் காட்டியபோதும் உங்களுக்கு நான் கடிதம் எழுதாமைக்கு இந்தத் தடவை தகுந்த காரணமுள்ளது; எனவே என்மீது பிரிவு காட்டுங்கள். கடந்த பதினைந்து நாட்களும் என் வாழ்க்கையிலேயே மிகவும் துயரந்தோய்ந்த காலமாகும். நான் என் மனைவியை இழந்துவிடக் கூடிய நிலையிலிருந்தேன்; அந்த இழப்பு எஞ்சியுள்ள என் வாழ்நாளிலெல்லாம் என்னை மிகவும் துயரத்திலாழ்த்தியிருக்கும். அவள், அழகும், உடல் நலமும், சுறுசுறுப்பும் மிக்கவோர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். ஆயினும் அக்குழந்தை இருபத்திநான்கு மணி நேரமே வாழ்ந்திருந்தது; பின்னர், இவ்வுலகுக்கு அவளை இழுத்து வருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட குரூரமான முறைக்கே அவள் பலியாகிவிட்டாள். எத்தகைய வாழ்க்கையை அவள் அனுபவிக்க வேண்டுமென அவ்வாறு வன்முறையில் வரவேற்கப்பட்டாளோ, அவ்வாழ்க்கையை அவள் எதிர்பார்க்கவில்லை போலும்! ஆகவே தானாகவே அவள் பின் வாங்கிவிட்டாள். சுருங்கக் கூறுமிடத்து, நான் தந்தையாகி விட்டேன் என்பதைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. என் மகிழ்ச்சி அத்தனை விரைவில் மறைந்து விட்டது. மிகப்பெருங் கவலையானது என் துயரத்தை வற்றச் செய்து விட்டது. ஏனெனில், குழந்தையின் தாய். ஒன்பது, பத்து நாட்கள் நினைவிழந்த நிலையிலேயே இருந்தாள். அந்நிலையிலும் அவள் என்னை அடையாளந் தெரிந்துகொண்டாள். எனவே, நான் அவள் அருகிலிருந்தால் அவள் இறுதிக் காலத்தில் துன்பம் அதிகமாகும் என்று கூறி ஒவ்வொரு நாளும், ஒவ்வோர் இரவும் என்னை அவள் படுக்கையருகில் நெருங்கவிடாமல் பலமுறை விரட்டியடித்தார்கள். ஆனால், கடைசியாக அவள் நோயில் திடீரென ஒரு திருப்பமேற்பட்டது. கடந்த மூன்று நாட்களாக, அவள் என்னோடு இருப்பாள் என்னும் தெளிவான நம்பிக்கை எனக்கேற்பட்டது. அவளுடைய இப்போதைய நிலையிலும், அவளுடைய துணை எனக்கு மணிக்கு மணி மென்மேலும் இன்றியமையாததாய்த் தோன்றுகிறது.

இந்தப் பதினொன்று நாட்களாக நான் கடிதமெழுதாமைக்கு என்னை மன்னிப்பது போன்றே, தற்போது மேலும் எழுதாமல் இத்துடன் முடிப்பதற்கு நிச்சயம் என்னை மன்னிக்க வேண்டும். நம்முடைய மாற்றரும் புதல்வன் இப்போது உங்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறான் என்பதை நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையிலும் இறைவன் உங்களுக்கு மேலும் இன்பத்தை நல்கட்டும்!

கோட்ஹெல்ஃப்

பொகன் யோயாக்கிம் எஷென்பர்க்
என்பவருக்கு எழுதியவை

வொல்ஃபென்பூட்டல்,
சனவரி 7, 1778.

என் அன்பார்ந்த எஷென்பர்க்,

நான் தங்களுக்கு எழுதியதான துயரம் தோய்ந்த கடிதத்தை என்னால் நினைவுபடுத்திக்கொள்ள முடியவில்லை. எனினும், நான் எழுதிய வரிகளிலே என் மனமுறிவில் நிழல் படர்ந்திருக்குமானால் நான் அதற்காக பெரிதும் வெட்கப் படுகிறேன். உண்மையில், மனமுறிவு என்பதை விட சிறுபிள்ளைத்தனமே என் குறையெனலாம்; அது சில சமயங்களில் மனக்கசப்பாகவும், மனித இனத்தின் மீது கொண்ட வெறுப்பாகவும் வெளிப்படுகிறது. என் நண்பர்கள் என் குறை, நிறைகளுடனேயே என்னை ஏற்க வேண்டும்.

கடந்த சில நாட்களாக என் மனைவி குணமடைவாள் என்றும் நம்பிக்கை சிதறிவிட்டது; உண்மையில், அத்தகைய நம்பிக்கை மீண்டும் தோன்றக்கூடும் என்னும் நம்பிக்கையில்தான் தற்போது நான் இருந்து வருகிறேன்.

அந்தக் கட்டுரையின் நகலை அனுப்பியதற்கு நன்றி, உண்மையில் இத்தகைய காரியங்களே, தற்போது என் கவனத்தைத் திருப்பக் கூடும்.

தங்கள் ஆர்வமிக்க நண்பன்,
லெஸ்ஸிங்

வொல்ஃபென்பூட்டல்,
சனவரி 10, 1778.

அன்புள்ள எஷென்பர்க்,

என் மனைவி இறந்துவிட்டாள்; ஆக, இப்போது அந்த அனுபவத்தையும் நான் அடைந்து விட்டேன். ஆனால் இத்தகைய அனுபவங்கள் மேலும் எனக்கு ஏற்படுவதற்கில்லை யென்பதைக்

குறித்து மகிழ்ச்சியடைகிறேன்; அப்படி எண்ணும்போது என் மனச்சுமை நீங்குவதை உணர்கிறேன். அதோடு, தாங்களும், ப்ரௌன்ஷ்வகிலுள்ள நம் நண்பர்களும் என்னிடம் பரிவிரக்கங் கொள்வீர்கள் என்பது உறுதி என்று அறிவதில் மகிழ்ச்சியடை கிறேன்.

தங்கள்

லெஸ்ஸிங்

கார்ல் கோட்ஹெல்ப் லெஸ்ஸிங்
என்பவருக்கு எழுதியது

வொல்பென்ப்யூட்டல்,
சனவரி 12, 1778.

என்னருமைச் சகோதரரே,

நான் கூறப்போகும் எத்தனை துயர மிகுந்த செய்தியை என் மாற்றும் புதல்வனுக்குக் கூற வேண்டியவராக இருக்கிறீர்கள்! ஆயினும், உடன் பிறந்த பாசம் மிகுந்த தங்கள் இதயத்திற்கும் இச் செய்தியைத் தாங்கிக் கொள்ள வலிவு வேண்டும். அவ னருமைத் தாய்—என் மனைவி மடிந்து விட்டாள். நீங்கள் மட்டும் அவளை அறிந்திருப்பீர்களே யானால்....! ஒருவர் தமது மனைவியைப் புகழ்வது தற்புகழ்ச்சியே யாகுமெனக் கூறுகிறார்கள். சரி, அவளைப்பற்றி இனி ஒரு வார்த்தையும் கூறமாட்டேன். ஆயினும் உங்களுக்கு மட்டும் அவளைத் தெரிந்திருக்கு மேயானால்....! நமது நண்பர் மோசஸ் (மெண்டல்ஸோன்) என்னைக் கண்டதுபோல, இனி நீங்கள் ஒருபோதும் அவ்வாறு என்னைக் காணமாட்டீர்கள்: அவ்வளவு அமைதியோடும், மன நிறைவோடும் என்னுடைய வீட்டில் வாழ்ந்தேன். தங்களாலியன்ற அளவு அவனுக்கு மனவுறுதியளித்த பின்னரே அவனிடம் இச் செய்தியைக் கூறுங்கள். அவன் அமைதியடையும் வரையில் அவன் தங்களை விட்டு நீங்குமாறு விடாதீர்கள். இறந்துபோன தன் தாயைக் காண அவனால் இயலாது; ஏனெனில், இன்று காலையில் அவள் அடக்கம் செய்யப்பட்டாள். அவன் திரும்பி வருவதற்குப் பணம் தேவைப்பட்டால், தயைகூர்ந்து அவனுக்குக் கடனாகக் கொடுங்கள்; மறு அஞ்சலில் பணம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்; அத்துடன் சென்ற முறை தாங்கள் செலவழித்த பணத்தையும் அனுப்புகிறேன்; அதனை முன்பே திருப்பித்தர மறந்து போனதற்காக வெட்கப்படுகிறேன். விடை பெற்றுக் கொள்ளுகிறேன். நானும் என் மனைவியும் தங்களுக்கு எழுதலா மென நம்பியிருந்தேன்; ஆனால், அப்பேறு எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. தங்களிடமிருந்தும் தங்கள் மனைவியிடமிருந்தும் கடிதங்களை விரும்புகிறேன்.

கோட்டோல்ட்

யொகன் யோயாக்கிம் எஷென்பர்க்
என்பவருக்கு எழுதிய

வொல்ஃபென்ப்யூட்டல்,
சனவரி 14, 1778.

என் அன்பார்ந்த எஷென்பர்க்,

நேற்று காலை என் மனைவியின் இறுதிச்சடங்கு முடிவுற்றது. எஞ்சியுள்ள என் வாழ் நாட்களில் ஒரு பாதியை விலையாகக் கொடுத்து மறுபாதியில் என் மனைவியோடு வாழ்ந்திருக்கும் இன்பத்தை வாங்கியிருக்க முடிந்திருக்குமானால், எத்தனை மகிழ்ச்சியோடு நான் அவ்வாறு செய்திருப்பேன். ஆனால், அது இயலாதுபோயிற்று; இப்போது மீண்டும் நான் என் வழியே தட்டித் தடுமாறிச் செல்லத் தொடங்க வேண்டும். இலக்கியத்திலும், சமய நூல்களிலும் மனத்தைச் செலுத்துதலே எனக்கு அமைதி நல்கும் மருந்தாகும்; அந்தத் துயர்தணிப்பு மருந்தைப் பெருமளவு பயன்படுத்துவதே நாட்களோ ஒவ்வொன்றுக்க் கழித்து நான் உயிர் வாழத் துணையாகும். அதற்காகவே, தங்களிடமுள்ள ஜான்சனின் பெரிய நூலிலிருந்து (ஆங்கில மொழியகராதி) "சான்றியல்" பற்றிய முழுக் கட்டுரையையும், அனைத்துக் குறிப்புகளுடனும் நகலெடுத்து எனக்கனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதில் ஏதோ வொன்று படித்தது நினைவிருந்தாலும், அது என்னவென்று சரியாக நினைவுபடுத்திக்கொள்ள இயலவில்லை. முந்திய கட்டுரையை நகலெடுத்த அதே ஆளைக் கொண்டு தயைகூர்ந்து இதனையும் நகலெடுக்கச் செய்யவும். நான் ப்ரௌன்ஷ்வகிக்கு வரும்போது இரண்டுக்கும் தந்து விடுகிறேன்.

தங்கள்,
லெஸ்ஸிங்

ஜார்ஜ் கிரிஸ்டோஃப் லிஷென்பெர்க்

மணிமொழிகள்

ஜார்ஜ் கிரிஸ்டோஃப் லிஷென்பெர்க் (174–1799) ஒரு விஞ்ஞானியும் எழுத்தாளருமாவார். அவர் ஒரு விஞ்ஞானி என்ற முறையில், மூட நம்பிக்கைகளை யெதிர்த்து சிறுசிறு ஆய்வுக் கட்டுரைகள் வரைந்தார். அதன் மூலம் அறிவு விளக்கக் கொள்கையைப் பரப்பினார். அவருடைய "மணிமொழிகள்", சிறு குறிப்புகள், ஆகியவற்றினாலேயே அவர் புகழ் நிலைத்திருக்கிறது. அவை சுருக்கமாக எழுதப்பட்டவை, சிறந்த வகையில் உருவாக்கப்பட்டவை பழக்கப்பட்ட வழிகளிலேயே சிந்தனை செய்வதைக் கடுமையாக எதிர்க்கும் அவரது

ஆய்வுத் திறனையும், இன்றுங்கூடப் பொதுமக்களின் மனத்தில் நன்றாக ஊடுருவிப் பதிந்திராத நுண்கருத்துக்களையும் அவர் எழுத்துக்களிலே நாம் காணுகிறோம்.

ஸ்பெயின் நாடு முன்பெல்லாம் பெருமையடித்துக் கொண்டது போன்று, ஓரரசரின் நாடுகளில் ஞாயிறு மறைவதே இல்லை என்பது சிறப்பன்று; அந்நாடுகள் மீது அது செல்லுகையில் அதற்குக் காணக்கிடைக்கும் காட்சிகள் எத்தகையன என்பதே முக்கியமாகும்.

தொலைவில் ஒரு தீவிலுள்ள எல்லா வீடுகளிலும் குண்டுகளைக் கொண்ட துப்பாக்கிகள் சுவர்களில் தொங்கிக் கொண்டிருப்பதையும், இரவில் இடைவிடாது மக்கள் காவல் புரிவதையும் காண்பானுயின், அந்த இன மக்களைப் பார்க்கும் வழிபோக்கன் என்ன நினைப்பான்? அத்தீவு முழுவதிலும் கொள்ளைக்காரர்களே வாழ்கின்றனர் என்றுதானே? ஐரோப்பிய நாடுகளின் நிலை இதனை விட எவ்வகையில் வேறுபட்டுள்ளது? இதிலிருந்து சமயத்தைத் தவிர வேறெந்த நெறியையும் ஏற்றுக் கொள்ளாத மக்களிடைகூட, சமயத்தின் செல்வாக்கு எவ்வளவு குறைந்துள்ளது என்பதையும், உண்மையான சமயத்தினின்றும் எவ்வளவு தூரம் நாம் விலகியிருக்கிறோம் என்பதையும் எவரும் நன்றாகக் காணமுடியும்.

தாய் நாட்டுக்காகச் செய்யப்பெற்றன எனப்படும் செயல்கள் உண்மையில் யாருக்காகச் செய்யப்பட்டவை என்பதை அறிந்து கொள்வதற்கு நான் எதுவும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

வதைக்கும் கருவியிலே கொலையாளியை இடுகிறோமே, அச்செயல் தான் மோதிக் கொண்ட நாற்காலியை அடிக்கும் குழந்தையின் தவற்றைப் போன்றதன்றோ?

ஒரு பெருங் குற்றவாளியின் கதையைப் படிக்கையில், அவனைப் பழித்துரைக்கு முன்னர், நேர்மையானவரெனக் கூறிக்கொள்ளும் உங்களை அத்தகைய சூழ்நிலைகளில் சிக்கவைக்காத இறைவனின் கருணைக்கு எப்போதும் நன்றி கூறுங்கள்.

இரண்டாம் ஃபிரீட்ரிஷ்

மாக்கியவெல்லிக்கு மறுப்பு

பேராளர் இரண்டாம் ஃப்ரீட்ரிஷ் (1712—1786) 1740 முதல் பிரஷ்யாவின் மன்னர் அறிவு விளக்கக் கருத்துக்களின்படி அரசாண்ட மன்னரென அவர் காலத்தவர்களாலேயே புகழ்ந்துரைக்கப் பட்டவர்.

அவர் தமது அரசியல் திறனாலும், பல போர்களில் கண்ட வெற்றியாலும், பிரஷ்ய நாட்டை ஓர் ஐரோப்பிய வல்லரசாக ஆக்கினார். உள்நாட்டில், ஆட்சி முறை, வேளாண்மை, உள்நாட்டு, வெளி நாட்டு வாணிபம் ஆகியவற்றில் எண்ணற்ற சீர்திருத்தங்களைச் செய்து நாட்டை முன்னேறச் செய்தார். இறைவனால் உரிமை பெற்ற மன்னராக இல்லாமல் அரசின் முதல் ஊழியராக இருந்தே நாட்டை ஆண்டபோதிலும், அவர் ஏழு அதிகாரம் பெற்ற மன்னராகவே திகழ்ந்தார்.

"மாக்கியவெல்லிக்கு மறுப்பு" என்ற சிறு நூலை அவர் அரியணை ஏறுவதற்கு ஓராண்டுக்கு முன்பு, 1739 இல் எழுதினார்.

அது நிக்கோலாமாக்கியவெல்லி என்பவரால் எழுதப்பெற்று, 1513இல் வெளியாகிய "அரசன்" என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டதாகும். மாக்கியவெல்லி (1469–1527) ஓர் அரசியல் வாதியும், இத்தாலிய மறுமலர்ச்சி வரலாற்று ஆசிரியருமாவார். ஓர் அரசன் தன் அரசியல் இலக்குகளை அடைதற்கு நேர்மையற்ற வழிகளைக்கூடக் கையாளுவது தவறில்லையென அவர் நூல் கூறுவதாகக் கருதப்பட்டது. பேராளர் ஃப்ரீட்ரிஷின் ஆராய்ச்சி நூல் அறிவு விளக்கக் கொள்கையைச் சார்ந்த மனித இன நலக் குறிக்கோள்களால் துண்டப்பட்டதாகும். அவர் மாக்கியவெல்லியின் கருத்துக்களை வன்மையாக மறுத்தபோதிலும், தம்முடைய காலநிலையை உணர்ந்திருந்தது போலவே, மாக்கியவெல்லி வாழ்ந்த காலநிலையையும், வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு புரிந்துகொள்கிறார். தமது இளமைக்காலத்தில் எழுதப்பட்ட நூலின் குறிக்கோள்களையே அவர் எப்போதும் கடைப்பிடித்தார் என்று கூறமுடியாது. அரியணையேறியவுடனேயே ஆதிக்க வேட்கையினால் உந்தப்பட்ட வராய்ப் போர்களைத் துவக்கினார். ஆயினும் கூட, அவருடைய உள்நாட்டுக் கொள்கைகளும், உயர்ந்த உள்ளமும் அவரை விளங்கிய அறிவுடன் துலங்கிய மன்னராக ஆக்கின.

மூன்றாம் அதிகாரம்

மாக்கியவெல்லி வாழ்ந்த காலமாகிய பதினைந்தாம் நூற்றாண்டு, இன்னமும் நாகரிகமற்ற வாழ்க்கை முறைகளையே கொண்டிருந்தது. அக்காலத்தில், வெற்றியால் அடக்கி ஆள்வோரின் செயல்களைக் கண்டு மக்கள் புகழ்ந்தனர். அதனால் அவர்களுக்கு ஒரு மாற்றம் பிறந்தது. இது வருந்தத்தக்கதாகும். இரக்கம், நீதி இனிமை போன்ற எல்லா நலன்களைக் காட்டிலும் வீரர்களின் சிறப்பு மேலானதாகக் கருதப்பட்டது. இப்போது, ஒரு வெற்றி வீரரின் எல்லாத் தன்மைகளைக் காட்டிலும் அவன் குணநலன்களே மேலாகக் கருதப்படுவதைக் காணுகிறேன். உலகை அழிக்க

வல்ல குரூர உணர்ச்சிகளைக் கிளறிவிடுமளவுக்கு அறிவற்றவராக இன்னமும் மக்கள் இருக்கவில்லை.

ஒருவன் பேராளனாவதற்கு அவனைத் தூண்டுவது எது என்பதை அறிய விரும்புகிறேன். அவன் பிறருடைய துன்பத்தினாலும் அழிவினாலும் தன்னுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்ள முடியுமெனக் கருதுவதற்கு என்ன காரணம்? மக்களை மகிழ்ச்சியற்றவர்களாக்குவதனாலேயேதான் புகழுடைய முடியுமென அவன் கருதுவது எங்ஙனம்? ஓர் அரசன் வென்றடைந்த புதிய நாடுகளால் ஏற்கெனவே அவன் கீழிருந்த நாடுகளின் வளம் அதிகமாவதில்லை. அவ்வெற்றிகளால் அவன் குடிமக்கள் நலமேதும் எய்துவதில்லை; எனவே அவற்றின் மூலம் அவனது இன்பம் பெருகுகிறது என்று அவன் நினைத்தால் அது தவறுனதாகும். தங்கள் தளபதிகள் வென்ற மாநிலங்களைப் பார்த்தேயறியாத மன்னர்கள் எத்தனைபேர்! இவை அம்மன்னர்களுக்கு, ஓரளவு கற்பனை வெற்றிகள் தாம், உண்மை வெற்றிகளாக மாட்டா. எனவே இது பெரும்பாலும் புகழுக்கு உரியவனல்லாத ஒரு தனி மனிதனின் சபலத்தை நிறைவேற்றுவதற்காகப் பல மக்களுக்குத் துன்பம் சேர்ப்பதாகும்.

இவ்வாறு வெற்றி கொள்ளும் மன்னன் உலகனைத்தையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவருவதாக வைத்துக் கொள்வோம்; அவ்வாறு வென்ற உலகை அவன் ஆளத்தான் இயலுமா? எத்தனை சிறப்பு வாய்ந்த அரசனுக அவன் இருப்பினும் அவனது ஆற்றல் அளவற்றதல்லவே? அந்நாடுகளின் பெயர்களை நினைவில் வைத்துக்கொள்வது கூட அவனால் முடியாது. அவனது பெரும் புகழ் அவன் உண்மையில் எவ்வளவு சிறியவன் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவே பயன்படுவதாகும்.

ஓர் அரசன் ஆளும் நாட்டின் அளவன்று, அவனுக்குப் பெருமை தேடித் தருவது; மேலும், சில மைல்கள் பரப்புள்ள நிலத்தையடைவதால் அவன் புகழைடைந்துவிட முடியாது. அவ்வரசரின் அதிகமான பரப்புள்ள நிலங்களை வைத்துள்ளவர்கள் பெரும் புகழ் படைத்தவர்களாக இருந்திருப்பர்.

நாடு பிடிப்பவர்களின் புகழைக் குறித்து மாக்கியவெல்லி செய்த தவற்றை அவர் காலத்தில் அனைவரும் செய்திருக்கக் கூடும்; ஆனால் உறுதியாக அவர் கொண்டிருந்த மனக்காழ்ப்பை வேறெவரும் கொண்டிரார். வென்ற நாடுகளை அரசர்கள் தம் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவர் கூறும் பல்வேறு வழிகள் நமக்கு அதிர்ச்சியளிக்கின்றன.

அவ்வழிகளை நன்றாக ஆராய்ந்து பார்த்தால், அவற்றுள் ஒன்று கூட அறிவுக்கேற்றதாகவோ, நியாயமானதாகவோ இல்லை. ஒரு

நாட்டை வென்றவர், தாம் வெற்றிகொள்வதற்கு முன்பு அந் நிலப்பரப்பை யாண்ட மன்னர்களின் இனத்தை அடியோடு அழித்துவிட வேண்டுமாம். தீயெண்ணங் கொண்ட மாக்கியவல்லி இவ்வாறு கூறுகின்றார். இத்தகையவற்றைப் படிக்கும்போதே அருவருப்பும் அடங்காத சினமும் நமக்கு வருகின்றன. இவ்வாறு செய்வதானால், உலகிலுள்ள புனிதமானவற்றை யெல்லாம் காலடியில் போட்டு மிதிப்பதாகும்; தன்னலத்துக்காகத் தீய வழிகளிலெல்லாம் தடையின்றிச் செல்வதாகும். என்ன? ஓர் அரசனின் நிலங்களைப் பேராசை மிக்க வொருவன் கவர்ந்து கொள்வதாக வைத்துக் கொள்வோம்; அதனால், அவ்வரசனைக் கொன்றே நஞ்சூட்டியோ ஒழிப்பதற்கு அவனுக்கு உரிமையுண் டென்று கூறலாமா? வெற்றி கொள்ளும் அரசன் இவ்வாறு செய்வதால், தனக்கே அழிவை விளைக்கக் கூடியதொரு வழக் கத்தை இவ்வுலகில் உண்டாக்குகிறான். இவனைவிடப் பேராசை யும் திறமையும் உள்ள வேறொருவன் இவனுடைய நிலத்தைக் கவர்ந்துகொண்டு. இவன் முந்தியவனை எப்படி அழித்தானோ அதேபோல் குரூரமாக இவனை அழிப்பான். மாக்கியவெல்லியின் காலத்திலேயே இதைப் போன்ற பல நிகழ்ச்சிகளைக் காணலாம். ஆரும் அலெக்சாண்டர் போப் தமது தீயொழுக்கங்களின் காரண மாகப் பதவி நீக்கம் செய்யப்படும் இடர்ப்பாட்டில் இருக்க வில்லையா? கலகம் செய்த அவருடைய புற மணப்பிள்ளை யாகிய சீசர் போர்சியாவின் வெற்றி நிலங்களெல்லாம் கவர்ந்து கொள்ளப்பட்டு அவன் பரிதாபமாக மரண்மடையவில்லையா? மிலானிலுள்ள மாதாக்கோயிலின் மத்தியிலே கலீஜோ ஃபோர்ஜா என்பவன் கொல்லப்படவில்லையா? முடியைக் கவர்ந்த லுடோ லிகோ போர்ஜா என்பவன் பிரான்ஸ் நாட்டில் ஓர் இரும்புக் கூண்டிலடைபட்டு மடியவில்லையா? யார்க், லங்காஸ்டர் அரசர் கள் ஒருவரையொருவர் அழித்துக்கொள்ளவில்லையா? கிரேக்கப் பேரரசர்கள் ஒருவரையொருவர் கொன்றுவிட்டு, இறுதியில் அவர்கள் இழைத்த குற்றங்களின் விளைவால் வலிவிழந்த அவர்கள் ஆட்சிக்கு, துருக்கியர்கள் முடிவு காணவில்லையோ? இக்காலத்தில் கிறித்துவர்களிடையே நிகழ்ச்சிகள் அருகித் தோன்றுவதற்குக் காரணம், நலமிக்க நல்லொழுக்கக் கோட் பாடுகள் பரவத் தொடங்கியிருப்பதே யாகும். மக்கள் அறிவை வளர்த்துக் கொண்டனர்; எனவே அவர்கள் முரட்டுவெறி குறைந் தவராக உள்ளனர்; ஒருவேளை, ஐரோப்பாவைப் பண்படுத்திய அறிஞர்களே இதற்குக் காரணமாயிருக்கலாம்.

வெற்றிகொண்ட அரசன் தனது இருப்பிடத்தைப் புதிய நாட்டி லேயே அமைத்துக்கொள்ள வேண்டுமென்பது மாக்கியவெல்லி யின் இரண்டாவது விதியாகும்: இது எவ்வகையிலும் கொடுமை

யாகாது; பலவிதங்களில் இது நல்லதாகக் கூடத் தோன்று கிறது. ஆயிலும், பேரரசர்களுடைய நாட்டின் அமைப்பை நோக்கு மிடத்து, அவர்கள் நாட்டின் மையத்தில் அமைந்துள்ள கலீல நகரினின்றும் நீங்கினால் நாடு முழுவதும் பாதிக்கப்படும் என்பதை யும் எண்ணிப்பார்க்க வேண்டும். அரசின் எல்லாச் செயல்களும் அரசர்களிடமிருந்தே தொடங்குவதால், அவர்கள் தலீலநகரை விட்டு நீங்கினால் நாட்டின் எல்லீப்புறங்கள் பலவீனமடையும்.

புதிதாக வென்றடையப்பட்டப் பிரதேசத்தில் குடியேற்றங் களீ யமைத்தால்தான், அரசப்பற்று ஏற்பட வழியுண்டாகும் என்பது அரசுக்கான மூன்றாவது விதி. ஆசிரியர், உரோமானியர் களின் வழக்கத்தையே இங்குக் குறிப்பிடுகிறார். ஆனால், உரோ மானியர்களின் குடியேற்றஞ் செய்ததோடு, பெருஞ்சேனைகளீ யும் அனுப்பியிராவிட்டால் அவர்கள் விரைவில் அப்பகுதிகளீ இழந்திருப்பர் என்பதை அவர் எண்ணிப்பார்க்கவில்லீ. உரோமா னியர்கள் இக்குடியேற்றப் பகுதிகளீக் கூட்டாட்சியின் மூலம் நட்பரசுகளாக்கிக் கொள்ளும் வகையை நன்கு அறிந்திருந்தன ரென்பதையும் அவர் எண்ணிப்பார்க்கவில்லீ. குடியரசு செழித் தோங்கிய காலத்தில், நிலத்தைப் பாழாக்கிய, திறன்மிக்க கொள்ளீக்காரர்களாக அவர்கள் விளங்கினர். அவர்கள் அநீதி யால் கைப்பற்றியதை அறிவுத்திறத்தால் தக்கவைத்துக் கொண் டனர். எனினும், இறுதியில், வெற்றியால் நாடு கவர்ந்தோர் அனைவருக்கும் நேரும் கதியே இந்நாட்டுக்கும் நேர்ந்தது; இதுவும் அழிக்கப்பட்டது.

எந்தக் குடியேற்ற நாடுகளுக்காக அரசர் அநீதி இழைக்க வேண்டும் என மாக்கியவெல்லி சொல்லுகிறாரோ, அவை உண்மை யில் அவர் கூறுவது போன்று அத்தனைப் பயன் விளீப்பனவா என்பதை இப்போது ஆராயலாம். புதிதாகக் கைப்பற்றப்பட்ட மாநிலங்களுக்கு, பெரிய அளவிலோ சிறிய அளவிலோ குடி யேற்றம் செய்வீர்கள். அது பெருத்த அளவில் இருந்தால் உங்கள் நாட்டின் மக்கள் தொகை குறிப்பிடுமளவுக்குக் குறைந்து விடும். மேலும், உங்கள் புதிய குடிமக்களுள் பலரை விரட்டி யடிக்க நேருமாதலால் அதுவும் உங்களாட்சியின் வலிமையைக் குறைக்கும். குடியேறும் மக்கள் எண்ணிக்கையில் குறைந்தவர் களானால் நீங்கள் கைப்பற்றியவற்றை அவர்கள் சரியாக நிரு வகிக்கமாட்டார்கள்; எனவே, உங்களால் விரட்டியடிக்கப்பட்ட மக்கள் அல்லற்படுவார்கள்; எனினும், அதனால் உங்களுக்கேதும் பயன் விளீயப்போவதில்லீ.

ஆகவே, புதிதாகக் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புகளுக்குப் போர் வீரர்களீ அனுப்புவதே மேலாகும்; அவர்கள் பெற்றுள்ள

இராணுவப் பயிற்சியின் காரணமாக, குடிமக்களை அடக்குமுறை கொடுமைக்கு உள்ளாக்க மாட்டார்கள், அவர்கள் செல்லும் நகரங்களுக்குத் தீங்கிழைக்கவும் மாட்டார்கள்.

இக்கொள்கையே சாலச் சிறந்ததாகும்; ஆயினும் மாக்கிய வெல்லியின் காலத்தில் இது தெரிந்திருக்க முடியாது. அக்காலத் தில் அரசர்கள் பெருஞ் சேனைகளை வைத்திருக்கவில்லை. சேனைப் பிரிவுகளுள் பெரும்பகுதி வன்முறைச் செயல்களிலும், கொள்ளை களிலும் ஈடுபட்டுப் பிழைக்கும் கொள்ளைக் கூட்டங்களாகவே இருந்தன. அமைதிக் காலத்திலும் ஒரு போர்ப்படையை எப் போதும் ஏற்ற நிலையில் வைத்திருப்பதால் விளையும் பயன் என்னவென்பது அப்போது தெரிந்திருக்கவில்லை. அமைதிக் காலத்தில் அயலாரிடத்திலிந்தும் கூலிப்படையினரிடமிருந்தும் கூட நாட்டைக் காப்பதற்கான படைப்பொருட் களஞ்சியங்கள், படைக் குடியிருப்புகள் போன்ற எண்ணற்ற ஏற்பாடுகளைப்பற்றி அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கவும் முடியாது.

"ஓர் அரசன் அண்டையிலுள்ள சிற்றரசர்களைத் தன் வயப் படுத்திப் பாதுகாப்பளித்தல் வேண்டும்; அவர்களுக்குள் பிணக்கு ஏற்படுமாறு செய்தல் வேண்டும்; அப்போதுதான் அவன் விருப் பப்படி யாரையும் உயர்த்தவும் தாழ்த்தவும் முடியும்". இது மாக்கியவெல்லியின் நான்காவது விதியாகும். இதைத்தான் அகாகரிக மன்னர்களுள் முதன்முதலில் கிறித்துவராக மாறிய கிளாட்விக் என்பவர் செய்ய முற்பட்டார். கொடுமை இழைப் பதில் அவருக்குச் சற்றும் இசைக்காத மன்னர்கள் அவரை இவ் வகையில் பின்பற்றினர். ஆனால் ஒரு நேர்மையான மனிதன், சிற்றரசர்களுக்கு இடையில் நடுவராயிருந்து, அவர்கள் பிணக்கு களை யெல்லாம் நன்முறையில் தீர்த்துவைத்துத் தன்னுடைய நேர்மையாலும், ஒரு பாற்கோடாத நன்மையாலும், சிறிதும் தன்னலமின்மையாலும் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திர மாவான். அத்தகைய நேர்மையாளனுக்கும் கொடுங்கோலர் களுக்குமிடையில் எத்தனை வேறுபாடு! அவனுடைய கூர்த்த மதிநுட்பம், அண்டையிலுள்ளவர்களுக்குத் தந்தை போன்றவனு கச் செய்யுமே ஒழியே, அவர்களை அடக்கியாள்பவனாக ஆக்காது. அவனது வலிமை அவர்களை அழிப்பதில்லை, காப்பாற்றும்.

மேலும், வலிமையால் பிற அரசர்களை உயர்த்த நினைக்கும் அரசர்கள் தங்கள் வீழ்ச்சிக்குத்தான் வழிசெய்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த நூற்றாண்டிலேயே நாம் இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காணலாம்; ஸ்டேனிஸ்லாஸ் என்பவரை போலந்து நாட்டு அரியணையிலமர்த்திய பன்னிரண்டாம் சார்லஸ்

ஓர் எடுத்துக்காட்டு; மற்றொன்று மேலும் அண்மைக் காலத்தது ஆகும்.

எனவே, போரால் பிற நாட்டைக் கைக்கொள்ளுபவன் புகழுக்குரியோனாய் என்றும் ஆக மாட்டான். கொலைச் செயல் எப்போதும் மனித இனத்துக்கு வெறுப்பூட்டுவது. புதிய குடிமக்களுக்கு அநீதியும் வன்முறைக் கொடுமைகளும் இழைக்கும் அரசர்கள் மக்களின் உள்ளங்களைத் தம்பால் ஈர்ப்பதில்லை. மாறுபாடு கொள்ளுமாறே செய்கின்ற குற்றங்கள் புரிவதற்கு நியாயம் கூற இயலாது; அதற்கு முற்பட்டால் மாக்கியவெல்லி போன்று தவறுகவே முடிவெடுக்க நேரிடும்.

பிறரை இணங்கச் செய்யுங் கலையை மனிதகுலத்தின் நலனுக்கெதிராகப் பயன்படுத்துவதானது, தனது தற்காப்புக்கு உள்ள வாளால் ஒருவன் தனக்குத்தானே ஊறு செய்து கொள்வதையொக்கும்.

அடால்ஃப் ஃபிரைஹெர் ஃபன் நிக்கே

மக்களுடன் கொள்ளும் தொடர்பு பற்றி

அடால்ஃப் ஃபிரைஹெர் ஃபன் நிக்கே (1752–1796) பல நூல்கள் எழுதினார். ஆயினும், 1788இல் வெளியிடப்பெற்ற "மக்களுடன் கொள்ளும் தொடர்பு பற்றி" என்னும் ஒரே நூல்தான் நம் காலத்திலும் மக்களுக்குத் தெரிந்துள்ளதாகும். வெளியானவுடனேயே அந்நூல் பெருமளவில் விற்பனையாயிற்று; அந்நூலின் பெயரைத் தெரியாதார் ஜெர்மனியில் இல்லை.

குடும்பத்தினரிடையேயும், உயர்மட்ட சமுதாயத்தினரிடையேயும் எல்லாத் தரத்திலுமுள்ள மக்களிடையேயும் ஏற்படும் உறவுகளைப்பற்றிக் கூறுகிறது இந்நூல். எல்லாவிதமான நிலைமைகளிலும் நடந்து கொள்ளவேண்டிய முறையைப் பற்றிய அறிவுரையையும் அதில் நாம் காணுகிறோம். அறிவு விளக்கக்கொள்கைக் காலத்திற்கேற்ற நோக்குடன், பொதுவாகக் கூறப்படும் கருத்துக்களைக் குறிப்பிட்ட சூழலில் ஒழுகவேண்டிய விதிகளோடும், ஒழுக்கக் கருத்துக்களை உலக அறிவோடும் இணைத்து இந்நூல் காணுகின்றது. உயர்குடிப் பிறப்பாளரும், செல்வரும், சமுதாயத்தின் உயர்நிலையில் இருப்பவர்களாதலால், அவர்கள் ஒழுக்கக் கேடுள்ளவர்களாக மாறியே தீருவர். அவர்களை கடுமையாகக் குறைகூறுகிறார் ஆசிரியர். செய்தொழிலால் அன்றி, மக்களின் பிறப்பிலுள் ஏற்றமோ தாழ்வோ ஏற்படுத்தி, சமுதாய நிலைகளில் ஏற்றத்தாழ்வுகளையுடைய வகுப்பினர்களாகச் சமுதாய மக்களைப் பிரிப்பதை அவர் அதில் கண்டித்துள்ளார். மன்னர்களின் ஆதிக்கம் தெய்வீக உரிமையால் பிறந்தது என்னும் கூற்றுக்கு எதிராக, அறிவு விளக்கமுடைய கட்டற்ற மன்னராட்சியே அவரால் சிறப்பிக்கப்படுகிறது. மக்களே இறைமையுடையோர் என்னும் கருத்தை அவர் நூலில் தெளிவாகக் காணுகிறோம். மக்களே தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கவும், திருப்பியழைத்துக்கொள்ளவும் கூடிய ஒரு மக்களாட்சி அரசியலமைப்பைப்பற்றிய கருத்தையும் அதில் கண்டறிகிறோம்.

உலகில் வல்லமை வாய்ந்தவருடனும், அரசர்களோடும், உயர்குடி மக்களோடும், செல்வரோடும் தொடர்புகொள்ளுதல் பற்றியது.

அரசர்கள், உயர்குடியில் தோன்றியோர், மிகுந்த செல்வந்தர்கள் ஆகியோரில் எல்லோருமே இணங்கிப் பழகும் தன்மையற்றவர்களாகவும், உணர்ச்சி இல்லாதவர்களாகவும், உண்மையான நட்புக்கு அருகதையற்றவர்களாகவும் உகந்து பழகுதற்கு இசைவில்லாதவர்களாகவும் இருப்பதாகக் கூறுவது நேர்மையாகாது.

ஆயினும், அவர்களில் பெரும்பாலோரிடம் அக்குறைகள் பொதுவாகக் காணப்படுவதாகக் கூறுதல் தவருகாது. அவர்களுடைய கல்வி புறக்கணிக்கப்படுகிறது; குழுவிப் பருவந்தொட்டே அவர்கள் முகப்புகழ்ச்சியால் கெடுக்கப்படுகின்றனர்; எதிலும் கண்டிப்பு இன்றி வளர்கிறார்கள். மக்களில் ஒருவர் உதவி மற்றொருவருக்கு எவ்வளவு தேவையாகிறது என்பதையும், இவ்வுலகின் இன்னல்கள் சிலவற்றைத் தனியாக நின்று பொறுப்பது எவ்வளவு கடினம் என்பதையும், அன்பும் பரிவும் காட்டும் ஆன்மாக்களைக் காண்பது எவ்வளவு இனிமையானது என்பதையும், அவர்கள் அறிவதில்லை. பின்னொரு நாளையில் நாம் பிறருடைய உதவியை நாட நேரிடுமாதலால், பிறரைப்பற்றி அக்கரை கொள்ளுதல் எவ்வளவு முக்கியமான தென்பதையும் அவர்கள் என்றும் தெரிந்து கொள்வதேயில்லை. இதற்குக் காரணம் எல்லாவகைத் தேவைகளும், குறைகளும் இல்லாத உயர்ந்த சமுதாய நிலையில் அவர்கள் இருப்பதேயாகும். மேலும், சிக்கலும் துயரமும் அவர்களை அண்டுவதில்லை. அவர்களுடைய குறைகளையும் தவறுகளையும் பற்றிப் பிறர் மனத்தில் ஏற்படுத்தும் இழிவெண்ணங்களை அவர்கள் அறிய மாட்டார்கள். அவர்களிடம் தங்களுக்குள்ள அச்சத்தால் மக்கள் தங்கள் எண்ணங்களை அவர்களுக்கு உணர்த்துவதில்லை; எனவே, அவர்கள் தங்களைப் பற்றி தெரிந்து கொள்வதில்லை அவர்கள், தங்களை உயர்வகையினராகவும், தலைமை பூண்டு ஆட்சி செய்வதற்கு இயல்பாகவே உரிமையுடையவராகவும் கருதிக் கொள்கின்றனர்; தங்களுக்குக் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் தங்களுடைய தன் முனைப்புக்கும், தற்பெருமைக்கும் பணிய வேண்டும், தங்களுடைய மனப்போக்குகளையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். தங்கள் கருத்துக்களையெல்லாம் புகழ்ந்துரைக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

வல்லவர்களுள்ளும், செல்வர்களுள்ளும் பெரும்பான்மையினர் அநேகமாக இவ்வருணனைக்கு ஏற்றவராகவே இருப்பவர் என்னும் எண்ணத்தின் அடிப்படையில் தான் அவர்களை நாம் நோக்க வேண்டும். எனினும் அவர்களிலே ஒருவரிடம் தக்க கல்விமுறையால் உருவாகும் பெருமிதம், நயத்தக்க நாகரிகம், பெருந்தகையை, பண்பாடு ஆகியவையுடன் கூடிய நலன்களைக் கண்டால் நாம் மகிழ்வெய்துகிறோம். அவர்களிடையேயும் அத்தகையோர் உள்ளனர் என்பதை மீண்டும் கூறுகிறேன்; ஆயினும் அவர்கள் மிகச் சிலரே; அவர்களது புகழும் மக்களிடை பரவுவதில்லை. அத்தகைய புகழையோ, பத்திரிகையாளர்களின் தம்பட்டங்களையோ அதிகமாக நாம் நம்பிவிடக்கூடாது, மனித குலத்துக்கு உதவ வந்தவர் எனவும், மேன்மைக்கும் பாடுபடுபவர்

எனவும் மக்களால் வியந்து போற்றப்படுபவர்களோ, நெருங்கிப் பார்த்தால், அவர்கள் எவ்வளவு சிறுமையுடையவராக, இழிந்த வர்களாகக் காணப்படுகிறார்என்பதோ நான் பன்முறை கண்டு பெரும் வேதனையடைந்திருக்கிறேன். பெரும்பாலும் சிறந்த அரசர்களைப் பற்றி மக்களிடம் அதிகமான புகழுரைகளையோ இகழுரைகளையோ நாம் கேட்பதில்லை. அவர்களையோ, அவர் களைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் குழந்தைகளையோ கெடுப்பதும், சீரழிப்பதுமான செயல்களில் இறங்கி விடா தீர்கள்; அவர்கள் முன்னிலையிலேயே அவர்களைப் புகழ்ந் துரைக்காதீர்கள்: அவர்களுடைய அகந்தை, அறிவுச்செயல்கள், வீண்பெருமை மற்றும் பயனற்ற புலனுகர்ச்சி இன்பங்களில் நாட்டம் ஆகியவற்றுக்குத் துணைபோகாதீர்கள்! பிறவிப் பண்பு களையும், இறைமையுரிமைகளையும் இயல்பாகப் பெற்றுள்ளதாக அவர்கள் கூறிக்கொள்ளும் பிதற்றல்களை ஆதரித்து உறுதிப் படுத்தாதீர்கள். அவர்களிடம் உங்கள் மனத்தை மறைத்து நடக்க வேண்டாம். உண்மையை கசப்பாக இருந்தாலும்—மறைக்கா தீர்கள்! அவமரியாதையின்றியும், உங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளாமலும், அவர்களிடம் வெளிப்படையாகப் பேசுங்கள். ஒழுக்கம் ஒதுக்கப்பட்டாலும், பெருந்தன்மை பழிக்கப்பட்டாலும், அவற்றின் சார்பிலிருங்கள். பெருமைக்குரிய ஒருவரின் புகழுக்கு அரசவைச் சூழ்ச்சிகளால் களங்கம் நேரிட்டால் அப்பெருமைக் குரியவரின் சார்பிலிருங்கள்! ஆனால் அவ்வாறு செய்கையில், உங்கள் நிலைமைக்கேற்றவாறும், அவருடைய பகைவர்கள் இன்னும் அதிகமாகப் பகைமை கொள்ளாதவாறும் விழிப்போ டிருத்தல் வேண்டும். அச்சம், ஏழ்மை, தன்னடக்கம் உள்ளோர், மிகவும் தளர்ச்சியடைந்தோர், தவருகக் கருதப்படுவோர், மிகவும் தாழ்ந்த நிலைமையில் உள்ளோர். இவர்கள் அரசவைகளை நெருங்க முடியாத நிலையில் இருக்கலாம். இவர்களின் விருப்பம், நற்பெயர், நியாமான வேண்டுகோள் ஆகியவற்றுக்குச் சாதகமாயிருந்து அவற்றை நிறைவேற்ற உதவுங்கள்! நியாயமானவரும், பொதுவாக மதிக்கப்படுபவருமான ஒருவரை வல்லவர்கள் கலந்து ஆலோசிப்பதால் விளையும் பயன், அது நற்பயனை தீப் பயனை—அளவற்றதாகும்.

வல்லவர்கள் தங்கள் நற்பெருமைக்குப் பொருந்தும்படியே எல்லாவற்றையும் புரிந்து கொள்வார்கள்.

வலிவு இல்லாத மேற்குடித் தலைவரொருவரின் ஆதரவுக்கு உரியவராகும் கேடு உங்களுக்கு நேர்ந்தால், இந்த மகிழ்ச்சி நிலைக்காது என்றோ, முகப்புகழ்ச்சி செய்து வேறொருவர் உங்களை விலக்கி விடலாம் என்றோ நினைத்து விதி விட்ட வழி என்று இருந்து விடாதீர்கள். உங்கள் சுல்தானின் நல்லெண்ணத்தை

மட்டுமே நீங்கள் முழுதுமாக நம்பியிருக்கவில்லை யென்பதை அவருக்கு உணர்த்துங்கள். அத்துடன், இப்பயனற்ற வாய்ப்பை நம்பியிருக்கவில்லை யென்பதையும், தற்செயலாக நேர்ந்த இந்த நற்பேறு உங்களுடைய உயரிய ஒழுக்க வாழ்விற்கு அற்பமானதும் தேவையற்றதும் என்பதையும் மக்களுக்குக் காட்டுங்கள். அப்போது தான், பதவியினின்றும் உங்களுக்கு வீழ்ச்சி ஏற்பட்டால், நல்லவர்களாவது உங்களைத் தாழ்ந்து விட்டவரென்றே கேடடைந்தவரென்றே ஒதுக்கித் தள்ள மாட்டார்கள்; அந்த நன்றிகெட்ட கொடியவரும் தம் உதவியின்றியே வாழக்கூடியவர்கள் இருக்கின்றனர் என்பதை உணர்ந்து கொள்வார். வலிவுடையோரின் நட்பு, மாறுதன்மை, பற்றுறுதி ஆகியவற்றை நம்பியிராதீர்கள். தேவைப்படும் வரையில்தான் உங்களை அவர்கள் மதிப்பார்கள்; அவர்கள் மனவுறுதியற்றவர்கள்; பிறரைப்பற்றி நன்முறையில் நினைப்பதைக்காட்டிலும் தவறாகவே கருதக்கூடியவர்கள்; மேலும், கடைசியாகத் தம்மிடம் பேசியவர்களைத்தான் அவர்கள் எப்போதும் நம்புவார்கள்.

ஆனால், அவர்கள் உங்களிடம் ஆர்வங்கொண்டுள்ள காலத்தில், எல்லோரிடமும் நேர்மையாகவும் பற்றுறுதியுடனும் உண்மையாகவும் இருக்குமாறும், பிறர் மீது அன்பு காட்டுமாறும் நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். அவர்களுடைய நிலைமையும், உடைமையும் மக்கள் மனமுவந்தளித்த சிறப்புக்கள் என்பதையும், அவை தவறாகப் பயன்படுத்தப்படுமாகில் அவற்றை அவர்கள் இழக்க நேரிடும் என்பதையும் நீங்கள் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். பொதுமக்களாகிய நம்முடைய உடைமைகளும், வாழ்வும் அவர்களுக்குச் சொந்தமல்லவென்பதை அவர்கள் மறந்துவிடச் செய்யாதீர்கள். அவர்களிடமுள்ள அனைத்தும் மக்களின் சொத்துக்கள். ஏனெனில், மக்கள் தாம் அவர்களுடைய தேவைகளையும் அவர்கள் குடும்பத்தாரின் தேவைகளையும் நிறைவேற்றுகிறோம்; அவர்களுக்கு மேன்மையையும் பெருமையையும் பாதுகாப்பையும் அளிக்கிறோம்; அவர்களுடைய இன்ப வாழ்விற்கு ஏதுவாயிருப்போர்களுக்கும் நாம் ஊதியமளிக்கிறோம் ஒரு தனிமனிதனுக்கு – நாட்டிலேயே மிகவும் பலவீனனுக்கும் அவன் இருக்கக்கூடும் — அவனைக்காட்டிலும் அறிவு மிக்கவர்களாகவும், சிறந்தவர்களாகவும் உள்ள இலட்சக்கணக்கானவர்களிடமிருந்து பணம்பறிக்கும் பிறப்பு வழி உரிமை உண்டு என்று எவரும், அறிவு விளக்கம் பெற்ற இந்தக் காலத்தில் நம்பப்போவதில்லை. இதையும் அவர்கள் மறந்து விடக் கூடாது. அவர்கள் பணியாற்றவேண்டிய மக்களின் அன்புக்கும் பாத்திரமானவர்களெனில், காவலாளிகளின் பாது

காப்பின்றி அவர்கள் அமைதியாகத் தூங்கலாம், மக்களும் அவர்களோ வாழ்த்துவார்கள்.

அனைவருமறிந்த இவ்வுண்மைகளை கூட வெளிப்படையாக வன்றி இதமாகக் கூற வேண்டும். அப்பொழுதுதான் உயர் நிலையிலுள்ளவர்களின், வல்லமை பெற்றவர்களின் மரத்துப் போன காதுகளில் அது இதமாக ஒலிக்கும்.

யொகன் கோட்ஃபிரைட் ஹெர்டர்

யொகன் கோட்ஃபிரைட் ஹெர்டர் (1744–1803) தொடக்க காலத்தில் எழுதிய திறனாய்வு நூல்களைத்தாம் அறிவு விளக்கக் கொள்கை பற்றிய இலக்கிய வகையில் சேர்க்க முடியும்; அவருடைய முக்கியமான கோட்பாட்டியல் நூல்களிலுள்ள கருத்துக்களின் ஒரு பகுதி—'வரலாறு, மனித இன நலக் கோட்பாட்டை நோக்கி மனிதன் செல்லும் வழி என்ற அவரது கருத்துப் போன்றவை—அறிவு விளக்கத் தத்துவத்தில் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஆகும். அந் நூல்களிலுள்ள கருத்துக்களின் மற்றொரு பகுதி—எல்லா நாகரிகங்களும் வரலாற்றின் அடிப்படையிலேயே தோன்றி வளர்ந்தவை யாகுமென்னும் அவரது நோக்குரை போன்றவையும், குறிப்பாகக் கவிதை பற்றிய அவரது புதிய கருத்துப் போன்றவையும்,—அறிவு விளக்கத் தத்துவத்துக்கு மாறுனதாகும். பகுத்தறிவால் விளையும் மனவெழுச்சியற்ற நிலைக்கு மாறுக, உணர்ச்சியின் உந்துதலே இன்றியமையாதது என்று அவர் குறிப்பிடுகின்றார். ஹெர்டரின் கருத்துப்படி, மனிதன் இயற்கையோடு இணைவதிலிருந்து எழுவதே கவிதையாகும்; அது இயல்பாயமைவது; வகுத்த அமைப்புக்கள் ஏதும் அதற்குத் தேவை இல்லை. எனவேதான் ஹெர்டர், எல்லாக் காலத்தையும் எல்லா மக்களையும் சேர்ந்த நாட்டுப் பாடல்களை ஒன்று திரட்டினார்; அதன் மூலம் நாட்டுப் பாடல்களில் மக்களின் கவனத்தை ஈர்ந்தார்.

"ஓர் உண்மையான கவிஞன் தன் தாய் மொழியிலேயே எழுத வேண்டும்" என்பது அவர் அறிவுரை. கவிதையையும் மொழியையும் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து இதிலிருந்து புலனாகும், மொழி, கவிதை, சிந்தனை இவை ஒன்றுக்கொன்று இயல்பாகவே இணைந்தவை, பிரிக்க முடியாதவை மொழியும் சிந்தனையும் ஒன்றிணைந்தவையாயினும், சிந்தனையை வெளிப்படுத்தி எடுத்துரைப்பதற்கான வெறும் சாதனமாக மட்டும் மொழி அமையவில்லை. மனிதனின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் உருவாக்கும் ஆற்றல் தாய் மொழிக்கே உண்டு; இதுவே அதன் தனித் திறனாகும். சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் ஆகியவற்றில் மட்டுமே அடங்குவதன்று ஒரு மொழியின் வளம்; அதன் உயிரோட்டத்திலும், இயற்கையோடியைந்த புறநோக்கிலும் மொழியின் வளத்தை நாம் காணுகிறோம். ஹெர்டரே கூட, தெளிவான கருத்துக்களுடன் கூடிய தத்துவ நடையைக் கையாளாமல் கற்பனை வளமும், கவிதை உணர்வுஞ்செறிந்த நடையில் எழுதினார். என்பதைக் கீழே தரப்பட்டுள்ள பகுதியில் காணலாம், "என்றுமுள்ள சுமை", "ஆப்பிரிக்கத் தீர்ப்பு" ஆகிய இரு பகுதிகளும், லெஸ்ஸிங்கின் நீதிக் கதைகளின் வகையைச் சேர்ந்தவை எனலாம்; இவ்விரு பகுதிகளும் அறிவு விளக்கக் கொள்கையினடிப்படையில் தோன்றியவை. இவ்விரண்டு

பகுதிகளும், வெளி நாடுகளை நிலைக்களனுக்கு கொண்டு ஐரோப்பாவின் பல்வேறு சூழ்நிலைகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாக வும் அமைக்கப்பட்டுள்ள திறம் நம் கவனத்தை ஈர்ப்பதாகும்.

ஓர் உண்மையான கவிஞன் தன் தாய் மொழியிலேயே எழுத வேண்டும்

நான் இன்னும் ஒரு படி மேலே சென்று கூறுவேன்: கவிதை யிலே சிந்தனையும், சொல்திறமும் ஒன்றி இணைந்தவை என்றால், கவிதைக்கு ஏற்ற மொழி எது? எம்மொழியில் சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தும் வல்லமை எனக்கு இருக் கிறதோ, எம்மொழிச் சொற்களின் பொருளை நான் நன்கு அறிந் திருக்கிறேனோ, எம்மொழியில் நான் துணிந்து எழுதினால் மனம் போன போக்காக அமையாது என்று உறுதியாக நான் உணரு கிறேனோ அம்மொழியில்தானே நான் எழுதியாக வேண்டும். அது தாய் மொழிதான் என்பதில் ஐயமேது? கவிஞனுக்கு, அரும் பொருட் களஞ்சியமாகவுள்ள கருத்துக்களும் உருவங்களும் கொண்ட உலகத்தை சொற்கள் மூலமாக உணர்ந்தேற்ற நம் பச்சிளம் பருவத்தில், நம் உள்ளத்திலே உறைந்த முதலாவது மொழி அதுதான். இசையோடு ஆழ்ந்து நினைக்கவும் அதை வெளிக் காட்டவும், கவிஞனுக்கு உதவுவது தாய் மொழியே யாகும். அவனுக்கு இன்றியமையாத கற்பனை வளத்தில் வடிவங் களும் வண்ணங்களும் அம்மொழியில்தான் அமைகின்றன. தெய் வங்களின் அருளாளனை அவன் ஏவி விடும் இடியின் ஒலிப்பெருக் கும் மின்னலின் ஒலி வீச்சும் தாய் மொழியிலேயே பிறக்கின்றன. நம் சிந்தனையின் சீரமைப்பு தாய் மொழியை அடிப்படையாகக் கொண்டது. பேசிடும் வாயும், கேட்கும் செவியும் அறியும் ஆன்மாவும், தாய் மொழி என்ற வார்ப்பிலே உருவானவை. பின்னர், என் தாய் மொழியைக் காட்டிலும் வேறு எம்மொழியில் என் கருத்துக்களை நன்றாக நான் எடுத்துரைக்க முடியும்? நம் முடைய ஒருவனது தாய்நாடு பிறநாடுகளைக் காட்டிலும் சிறப்பு டையது. மனிதன், தாய் மொழி என்ற அன்னையின் மார்பகத் திலே பாலுண்டு தவழ்ந்து வளருகிறான்; அவளது மாணவனாகப் பயிலுகிறான்: அத்தாயின் முதிர்ந்த பருவத்தில் மகிழ்ச்சிதரும் மகனாக, முதுமைப் பருவத்தில் மதிப்பு ஈட்டும் நம்பிக்கைச் சின்ன மாக அவன் விளங்குகிறான்.

ஒரு குழந்தை தான் புதிதாகப் பெறும் எல்லாக் கருத்துக் களையும் புதுக்கருத்தமைப்புக்களையும் ஏற்கெனவே தனக்குத் தெரிந்தவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றது; அதுபோலவே, நம்முடைய மனம் பிற எல்லா மொழிகளையும் நம் தாய் மொழிக்

கேற்ப நாமறியாமலே ஏற்றியழைத்துக் கொள்கின்றது. அம் மொழிகளை முதலில் பேசுமளவு கற்றாலும், பின்னர் மனமானது மொழிகளினிடையே உள்ள வேறுபாடுகளை ஆழ்ந்தறிய முற்படு கின்றது. பிறமொழிகளை அது நினைவில் வைத்துக் கொண்டு, அவற்றில் இடைவெளிகளையும், குறைபாடுகளையும் காணும் போது தன் தாய் மொழியின் வளத்தையெண்ணி மகிழும்; பிற மொழிகளில் நிறைவையும், வளத்தையும் காணும்போது, முடிந்த அளவு, அவ்வளத்தைக் கொண்டு, தன் மொழியின் தேவைகளை ஈடு செய்யும். அயல்மொழிகளைக் கற்போர்களின் மனம் அம் மொழிகளிலே சிக்குண்டு போகாமல் வழிகாட்டி நிற்பது அவர்கள் தாய் மொழியே யாகும்; அயல் மொழிக் கடலிலே அது ஆழ்ந்து விடாமல் கரக்கும் தெப்பம் தாய் மொழிதான். மொழிப் பிரிவுக் குழப்பத்திலே ஒற்றுமை சேர்ப்பது தாய்மொழி. நான் வேற்று மொழிகளைக் கற்பது என் சொந்த மொழியை மறப்பதற்காக அன்று; நான் வேற்று நாடுகளில் பயணஞ்செய்வது என்னை வளர்த்த பாங்குகளையும், வழக்கங்களையும் மாற்றி விடுவதற்காக அன்று; நான் இன்னொரு நாட்டில் குடியுரிமை பெறுவது, என் சொந்த நாட்டில் குடிமகனுக்குள்ள உரிமைகளை இழந்து விடுவதற் காக அன்று; அவ்வாறு இல்லையெனில் நான் பெற்றதைவிட இழந்ததே அதிகமாகும். என் சிந்தனைக்கு ஏற்ற வகையில் என் மொழியை அணி செய்வதற்கு வேண்டிய மலர்களைக் கொய்து கொண்டு வருவதற்காகவே நான் அந்நிய மொழி என்ற தோட்டத் திற்குச் செல்லுகிறேன். எங்கோ இருக்கும் சூரியனின் ஒளியால் பழுக்கும் பழங்களைப் போன்று பிற நாட்டு வழி முறைகளைக் கற்று எனது நாட்டு வழி முறைகளைக் கனிவுறச் செய்து, தாய் நாட்டுத் தனிச் சிறப்புத் தன்மைக்கேற்ப அவற்றை மாற்றி யமைத்து வழங்குதற்கு முயலுகிறேன்.

உண்மையில், கருத்துக்களை சிறந்த முறையில் வெளியிடும் திறத்தினை வேண்டி நிற்கும் கவிஞன், தான் பிறந்த மண்ணின் மேல் உண்மைப் பற்றுள்ளவனாக இருத்தல் வேண்டும். இந் நாட்டை அவன் நன்கு அறிவானாதலால், இங்கு ஆற்றல் மிக்க சொற்களை அவன் அள்ளி விதைக்க முடியும். நிலம் அவனுக் குரியதாதலால், அவன் இங்கு மலர்களைக் கொய்தல் முடியும். இங்கு காணப்படும் எல்லாம் அவனுக்கே உரியனவாதலால், இங்கு நிலத்தை ஆழமாக அகழ்ந்து பொன்னைத் தேடிப் பார்க்க லாம்; மலைகளை உண்டாக்கலாம், நதிகளை ஒதுக்கிடலாம். ஒரு கணமே தோன்றும் உண்மையான மன நிலையை ஒருவருடைய சொந்த மொழியில்தான் வெளிப்படுத்த முடியும். ஒரு மொழிக்கு மேல் வேறொரு மொழியை என்னால் குறைவறப் புரிந்துகொள்ள முடியுமென நான் ஒருபோதும் நினைத்ததில்லை யென்பதை

வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுகிறேன். "குறைவற" எனக் கூறுகையில் நான் குறிப்பது எது? என் முன்னிலையில் நின்று கொண்டு ஃபிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றைப் பேசிக்கொண்டிருக்கும் மூன்று இளைஞர்களும், இலத்தீன், கிரேக்கம், காப்டிக் ஆகிய மொழிகளை நன்கு அறிந்த மூன்று பள்ளியாசிரியர்களும் என் கூற்றை மறுத்துரைக்க மாட்டாதவர்களாய் இருப்பார்கள். பிறர் கூறிச்சென்றதை — சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளதை — அவர்களுள் யாரேனும் ஒருவர் மூன்று மொழிகளிலும் கூற முடியுமானால், நான் அவரைப் பாராட்டுவேன். தெரியாதவர்போல் பாவனை செய்யும் சாக்ரடீஸின் ஆவியை அழைத்துக் கேட்பேன். ஹோமருக்கு இருந்த நிறைவற்ற மொழித்திறம் போன்ற யாருக்காவது ஒரு மொழிக்குமேல் ஏற்பட வழியுண்டா? மாண்டொழிந்த ஒரு மொழியில் ஒரு பிண்டாருக்கோ, ஹொரேசுக்கோ இருந்த புலமை போன்று யாருக்கேனும் புலமையேற்பட முடியுமா? அல்லது தன் சொந்த மொழியிலன்றி வேறு எந்த மொழியிலாவது ஷேக்ஸ்பியர் போன்ற புலவராக முடியுமா? என்று கேட்பேன். பின்னர் புரூட்டஸைப் போன்று கீழே விழுந்து தாயாகிய மண்ணைத் தழுவிக்கொள்வேன்; அந்தத் தாய் நாட்டின் மொழியே என் கலீத் தெய்வம் ஆகும்.

என்றுமுள்ள சுமை

ஆடம்பர வாழ்வை விரும்பும் காலிஃப் ஹக்கம் என்ற அரசன் தன் அரண்மனைத் தோட்டத்தை விரிவாக்கி அழகுபடுத்த விரும்பினான். அதனையடுத்துள்ள எல்லா நிலங்களையும் வாங்கிக் கொண்டு அவற்றின் உரிமையாளர்கள் அவற்றுக்கு என்ன விலை கேட்டாலும் அதைக் கொடுத்தான். ஆனால், ஏழை விதவை ஒருத்தி தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த நிலத்தை விற்கலாகாது என்னும் தூய எண்ணத்தால் எவ்வளவு பொருள் கொடுப்பதாகக் கூறியும் தன் நிலத்தை விற்க மறுத்து விட்டாள். இந்தப் பெண்ணின் பிடிவாதம் அரச மாளிகைகளின் மேற்பார்வையாளனுக்கு எரிச்சலூட்டியது. அவன் அந்த நிலத்தை அவளிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கிக்கொண்டான்; ஏழை விதவை அழுதுகொண்டே நீதிபதியிடம் சென்றாள்.

அச்சமயம் இபின்பெஷிர் என்பவர் நகர நீதிபதியாக இருந்தார். வழக்கை விசாரித்த அவர் அது ஒரு சிக்கலான வழக்கு எனக் கண்டார். ஏனெனில் அக் கைம்பெண்ணின் கட்சியே சரியானதெனச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது; என்றாலும், "தமது விருப்பமே சிறந்த நீதிக்கொப்பானது" எனக் கருதும்

ஓர் அரசரை பழங்காலச் சட்டமொன்றுக்கு இணங்கிப்போகு மாறு செய்வது எப்படி?

நேர்மைமிக்க அந்நீதிபதி என்ன செய்தார்? தன் கழுதைக்குச் சேணமிட்டார்; அதன் கழுத்தைச் சுற்றி பெரிய பை ஒன்றைத் தொங்கவிட்டார்; அதன் மீதேறி சவாரி செய்து கொண்டு தாமதமின்றி அரண்மனைத் தோட்டத்தை யடைந்தார்; அப்போது காலிஃப் விதவையின் பூர்வீக நிலத்தில் தான் கட்டிய அழகிய மாளிகையில் அமர்ந்திருந்தான்.

நீதிபதி, கழுதையோடும், பையோடும் அங்கு வந்தது அவனுக்கு வியப்பையளித்தது. இபின் பெஷிர் அவனடியில் வீழ்ந்து "ஐயா, இந்நிலத்திலிருந்து மண்ணை இப் பையில் நிரப்பிக்கொள்ள எனக்கு அனுமதி தாருங்கள்" என்று கேட்டது அவனுக்கு மேலும் வியப்பாயிருந்தது. ஹக்கம் அதற்கு அனுமதியளித்தான். பையை நிரப்பியானதும், இபின் பெஷிர் அப்பையைக் கழுதை மேல் ஏற்றுவதற்குக் கை கொடுத்து உதவுமாறு காலிஃபைக் கேட்டுக் கொண்டான். இப்படிக் கேட்டது ஹக்கமுக்குப் புதுமை யாகத் தோன்றிய போதிலும், அம்மனிதனின் கருத்து என்ன வென்பதையறிய விரும்பி, ஒரு கைகொடுத்துப் பையைத் தூக்கினான். ஆனால், பையை நகர்த்த முடியவில்லை. "நீதிபதி, இச்சுமை மிகவும் கனக்கிறது; மிகவும் பளுவாயிருக்கிறது!" என்று காலிஃப் கூறினான். இபின் பெஷிர், "ஐயா, ஓர் ஏழை விதவையிடமிருந்து நீங்கள் அநியாயமாய்ப் பறித்துக் கொண்ட நிலத்தில் ஒரு சிறு பகுதிதான் கையில் இருக்கிறது; இந்தச் சுமையே கனக்கிறது என்கிறீர்களே, இறுதித் தீர்ப்பு நாளன்று உலகனைத்துக்கும் நீதிபதியானவர் தாங்கள் கவர்ந்து கொண்ட எல்லா நிலத்தையும் தங்கள் தோள்களின் மேலேற்றிவைக்கும் போது எவ்வாறு சுமக்கப் போகிறீர்கள்" என்று மேலோர்க்கே யுரித்தான துணிச்சலோடு பதிலளித்தார். காலிஃப் வியப் படைந்து, நீதிபதியின் துணிவையும் அறிவையும் புகழ்ந்துரைத்து, அந்நிலத்தை அதில் அவன் கூட்டியிருந்த கட்டடங்களோடு விதவையிடம் திருப்பியளித்து விட்டான்.

ஆப்பிரிக்கத் தீர்ப்பு

மாசிடோனியாவின் மன்னரான அலெக்சாந்தர் ஆப்பிரிக்காவில் ஒரு கோடியிலுள்ள மாநிலத்துக்கு ஒருமுறை வந்தார். அங்கு தங்கம் மிகுதியாகக் கிடைத்தது. அங்கு வசிக்கும் மக்கள் அவரிடம் சென்று பாத்திரங்களில் தங்க நிறப் பழங்களை நிரப்பிக் கொண்டு போய்க்கொடுத்தனர். அலெக்சாந்தர் அவர்களை நோக்கி, "இப்பழங்களை நீங்களே வீட்டுக்குக் கொண்டுபோய்

சாப்பிடுங்கள்: நான் உங்கள் செல்வங்களைக் காண வரவில்லை; உங்கள் வழக்கங்களை அறிந்து போகவே வந்தேன்" என்று கூறினர். அதன்மேல் அவர்கள் அவரைக் கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அந்நாட்டு மன்னன் வழக்குகளை ஆய்ந்து தீர்ப்பளித்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு குடிமகன் முன்வந்து, "ஓ, மன்னரே! நான் இம்மனிதரிடமிருந்து ஒரு பை நிறைய உமியை வாங்கினேன். அதில் அருஞ்செல்வம் நிறைந்திருப்பதைக் கண்டேன். உமிதான் என்னுடையது; இம்மனிதர் அதனைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள மறுக்கிறார். ஓ, அரசரே! அச் செல்வம் அவருக்குச் சேர வேண்டுமாதலால் அவரிடம் இதனை எடுத்துக் கூறுங்கள்" என்றான்.

அவனுடைய எதிர் வழக்காளனும், அந்நாட்டின் குடிமகனே யாவான். அவன் "எப்பொருளையும் நியாயமற்ற வகையில் வைத்திருக்க நீர் அஞ்சுகிறீர்; நான் மட்டும் உம்மிடமிருந்து அதனைப் பெற்றுக்கொள்ள அஞ்சமாட்டேனே? நான் அந்தப் பையை அதனுள்ளிருக்கும் எல்லாப் பொருள்களோடும்தான் உமக்கு விற்றேன்; எனவே உமக்குச் சொந்தமாகி விட்டதை நீரே வைத்துக்கொள்ளும். ஓ, மன்னரே! இதனை நீங்களே அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று பதிலளித்தான்.

மன்னன் முதலாமவனை நோக்கி அவனுக்கு ஒரு மகன் இருக்கிறானே என்று வினவினன். அவனிடமிருந்து "ஆம்" என்று மறுமொழி கிடைத்தது. "நல்லது, நீங்கள் இருவரும் நேர்மையானவர்கள். உங்கள் மக்களிருவரையும் மணமக்களாக்கி அவர்களுக்கு நீங்கள் கண்டெடுத்த இச்செல்வத்தைத் திருமணப் பரிசாக வழங்குங்கள். இதுதான் என் தீர்ப்பு" என்றான் மன்னன்.

இத்தீர்ப்பைக் கேட்டதும் அலெக்ஸாந்தர் வியப்பில் ஆழ்ந்து போனார். "நான் தீர்ப்பளித்ததில் தவறேதுமுண்டா? பின்னர், தாங்கள் இவ்வாறு வியப்பதற்கு என்ன காரணம்?" என்று மன்னன் வினவினன். "இல்லையில்லை! ஆனால் எங்கள் நாட்டில் வேறுவிதமாகத் தீர்ப்புக் கூறுவோம்" என்று அலெக்சாந்தர் மறுமொழி கூறினர். "எவ்விதம் கூறுவீர்கள்?" என்று ஆப்பிரிக்க மன்னன் கேட்டான். "இரு வழக்காளர்களும் தங்கள் தலைகளை இழப்பர்; செல்வம் அரசனுக்குச் சொந்தமாகிவிடும்" என்று அலெக்சாந்தர் கூறினர்.

அதைக்கேட்ட மன்னன் இரு கைகளையும் கொட்டிக் கொண்டு, "அப்படியானால் நீங்கள் வாழுமிடத்தில் சூரியன் ஒளிர்கிறதா? வானம் பொழிகிறதா?" என்று கேட்டார். அலெக்சாந்தர்,

''ஆம்'' என்று மறுமொழி கூற, தொடர்ந்து மன்னன் கூறினான்: ''அப்படியானால் அது உங்கள் நாட்டில் வாழும் களங்கமற்ற விலங்கினங்களுக்காகத்தான், உங்களோப் போன்றோர் இருக்கு மிடத்தில் வெயிலும் காயாது; மழையும் பெய்யாது.

இம்மானுவல் காண்ட்

இம்மானுவல் காண்ட் (1724–1804) தம்முடைய வாழ்க்கை முழுவதையும் கிழக்கு பிரஷ்யாவிலுள்ள கோனிக்ஸ்பர்க் என்னுமிடத்திலேயே கழித்தார்; அங்கு அவர் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றினார். உலகின் மெய்யறிவாளர்களுள்ஒரு வரான அவர், அறிவு விளக்கக் கொள்கையின் ஆன்மீக அடிப்படைகளைச் செம்மையாக்கியதுடன் அமையாது, அவற்றின் எல்லைகளையும் கடந்துசென்றார். அவருடைய மெய்ப்பொருளியல் நூல்களுள் முக்கியமானவை, "தனித்த பகுத்தறிவுக் கொள்கையைப் பற்றிய திறனாய்வு" (1781), "நடைமுறைப் பகுத்தறிவைப்பற்றி" (1788), "தீர்ப்பின் திறனாய்வு" (1790) என்பன அடியிற் காணும் இரு பகுதிகளில் அவருடைய தத்துவத்தின் சில அடிப்படைப் போக்குகளைக் காணலாம். "அறிவு விளக்க மென்பது என்ன? என்னும் வினாவுக்கான விடை" என்ற கட்டுரையின் தொடக்கத்தில் அறிவு விளக்கக் கொள்கைக்கு அவர் கூறியுள்ள இலக்கணம் உள்ளது. சமுதாய, ஆன்மீகத் துறைகளில் அறிவு விளக்கக் கொள்கையின் நிலைகளைப்பற்றியும். அதன் எதிர்காலப் போக்குகளைப்பற்றியும் அவர் ஆய்ந்தறிய முயல்கிறார். அறிவு விளக்கமே மனிதகுலம் என்றென்றும் உழைத்துப் பெறவேண்டிய சாதனையாகும் என்கிறார் அவர். லெஸ்லிங்கைப் போலவே இவரும், பகுத்தறிவு விளக்கத்தை நோக்கி இடைவிடாது முன்னேறிக்கொண்டிருத்தலே மனிதனின் குறிக்கோள் என்கிறார். இவ்வாறு, "அறிவு விளக்கம்" என்ற சொற்றொடர் ஒரு முழுமையான பொருளைப் பெறுகின்றது; பதினெட்டாம் நூற்றாண்டு ஜெர்மனியில் எழுந்த ஆன்மீக இயக்கத்தை மட்டுமேயன்றி, பொதுவாக, மனிதனின் ஆன்மீகப் பாதையை அது குறிப்பிடுகின்றது. நடக்கும் புதுக் காலத்தின் தொடக்கத்திலேயே தெளிவாகப் புலப்பட்ட அந்த இயக்கம் இன்றும் தொடர்ந்திருந்து, எதிர்காலத்திலும் இயங்கப்போகிறது – "நடைமுறைப் பகுத்தறிவைப்பற்றி" என்னும் அவர் நூலின் இறுதியிலிருந்து எடுக்கப்பட்ட "என் மனத்தில் நிறைந்துள்ள இரு பொருள்கள்" என்னும் பகுதியானது காண்ட்டின் தத்துவத்தின் ஒரு பகுதி, எவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவு விளக்கக் கொள்கையைக் கடந்துபோகிறது என்பதைக் காட்டுவதாகும். மனிதனின் பகுத்தறிவால் இவ்வுலகிலுள்ள பொருள்களின் உண்மையான இயல்பை அறிந்துகொள்ள இயலாது என்னும் கருத்தே அவரது கொள்கையாகும். எனினும், அப்பகுத்தறிவு, மனிதனின் நெஞ்சுள்ளே நிற்கும் "ஒழுக்க நெறியை" உய்த்துணர்வதற்கு உதவுகிறது. இவ்வாறு உய்த்துணர்வதே, அறிவு படைத்த மனிதனின் குறிக்கோளாகும். "பொதுவான சட்டத்திற்கு ஏற்ற கொள்கையை இயற்றும் வகையில் உனது இச்சையில் எழும்

நடத்தைநெறி அமைதல் வேண்டும்''-இவ்வாறு ஒழுக்க நெறியை காண்ட் வகுத்துள்ளார். எனவே காண்ட், மானிடப் பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதிகளே அதாவது கருத்துக்களையுடைய தாகவும், இவ்வுலகில் கடைப்பிடிக்க வேண்டிய சரியான ஒழுக்க மாகவுமே சமய நெறி இருக்கவேண்டும் என கருதுகிறார். பின்னர் தோன்றிய ஜெர்மானியக் கோட்பாட்டுத் தத்துவம், காண்ட்டின் கருத்தமைப்பினின்றும் உருவானதேயாகும், கவிஞர்களுள் குறிப்பாக ஷில்லர் என்பவரே காண்ட்டின் தத்துவத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர்.

என் மனத்தில் நிறைந்துள்ள இருபொருள்கள்

என் மனத்திலே நிறைந்துள்ளவை இருபொருள்கள்: அவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க, புதிய ஆர்வமும், வியப்பும் பொங்கி எழுகின்றன. எனக்கு மேலிருக்கும் விண்மீன்கள் நிறைந்த வானம்; எனக்குள்ளிருக்கும் ஒழுக்க நெறி, இவையே அவ்விருபொருள்களும். அவை ஏதோ இருளில் மறைந்து விட்டது போலவும், எனக்கு எட்டாத் தொலைவில் இருப்பது போலவும் நான் அவற்றைத் தேடிப் பார்க்கவோ, ஊகிக்கவோ, தேவையில்லை. அவற்றை நான் காண்கிறேன்; என் வாழ்வின் உணர்வோடு அவற்றைப் பிணைத்துப் பார்க்கிறேன். முதலில் கூறப்பட்ட விண்மீன்கள் நிறைந்த வானம், புலனுணர்வுப் புறவுலகிலே நான் வாழுமிடத்தினின்றும் தொடங்குகிறது; நான் நின்று கொண்டிருக்கும், இவ்வுலக அமைப்பிலே எல்லையில்லாப் பெரு வெளியோடு இணைக்கிறது; உலகங்களின் மேல் உலகங்கள், அமைப்புக்களின் மேல் அமைப்புக்கள், அவற்றையுங் கடந்த வரையில்லாத பரவெளி இவற்றின் இயக்கத்தில் தொடக்கத் தோடும் தொடங்கி நிகழும் இயக்கத்தோடும் இணைக்கின்றது. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டது என்னுள்ளிருக்கும் ஒழுக்க நெறி; இது காட்சிக்குப் புலனாகாத என்னுடைய ''நான்'' என்பதிலிருந்து — என் ஆளுமையிலிருந்து தொடங்குகிறது; அந்தமில்லாத ஓர் உலகில் என்னை நிறுத்துகிறது; அந்தமில்லாத அதனை அறிவாற்றலால் மட்டுமே நாம் உணரமுடியும். இவ்வுலகுடன் உள்ள உறவு ஏதோ தற்செயலாக ஏற்பட்டதன்று என்பதைப் புரிந்து கொண்டேன். இவ்வுறவின் பயனாக, காட்சிக்குப் புலனாகும் எல்லா உலகங்களுடனும் நான் இணைக்கப்படுகிறேன். இவ்வுறவு எல்லோருக்கும் பொதுவானதும் இன்றியமையாததுமாகும். எண்ணற்ற உலகங்களில் கூட்டமாகிய ''அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி''யில் நான் — உயிருடன் வாழும் உடம்பு – ஏதும் பொருட்டில்லாத – அணுவுக்கணுவாகத்தோன்றி

கிறது; சிலகாலம் உடம்பிலே ஏற்றப்பட்ட உயிர் எங்கிருந்து எப்படி வந்தது எனத் தெரியவில்லை. இரண்டாவது காட்சிலே, என் ஆளுமையின் வாயிலாக அறிவு ரூபமாகத் தோன்றுகிறேன். அந்த வகையில் என் மதிப்பு எல்லையின்றி உயருகிறது, உடம் பிற்கு அப்பாற்பட்ட, ஏன், புலனுணர்த்தும் உலகிற்கும் அப்பாற் பட்ட, ஓர் உயிர் எனக்கு உள்ளது என்பதை ஒழுக்க நெறி காட்டுகிறது. இவ்வுலக வாழ்வின் வரைகளுக்கும் உட்படாத இலக்கிணை எல்லையற்றதை எட்டும் இலக்கினைக் கொண்டது என் வாழ்வு என்பதை அறிநெறி உணர்த்துகிறது.

அறிவு விளக்கம் என்பதென்ன? என்னும் வினவுக்கான விடை

அறிவு விளக்கம் என்பது தானே ஏற்படுத்திக்கொண்ட பிறர் வயப்படுதலினின்றும் மனிதன் பெறும் விடுதலையாகும். பிறர் வயப்படுதல் என்பது மனிதன் மற்றொருவர் காட்டும் வழி யிலன்றி தன்னறிவைப் பயன்படுத்த இயலாமையேயாகும். பிறர் வயப்படுதலை ஒருவர் அவராகவே ஏற்றுக் கொள்ளுவது போதிய அறிவின்மையாலன்று; பிறர் உதவியின்றித் தம் அறிவைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய உறுதியும், துணிவும் இல்லாமையே காரணமாகும்...

"உங்கள் சொந்த அறிவைப் பயன்படுத்தத் துணிவு கொள் ளுங்கள்" — இதுவே அறிவு விளக்கத்தின் இலக்குரை.

பிறர் வழிகாட்ட வேண்டிய நிலையிலிருந்து இயற்றை மனிதர் களை விடுத்து நீண்ட காலமாகிவிட்டது. எனினும், மிகப் பெரும் பான்மையான மக்கள் வாழ்நாள் முழுவதும் பிறர் வயப்பட்ட நிலையிலேயே இருந்து வருவதற்கும், பிறர் அவ்வளவு எளிதாக மக்களுக்கு வழிகாட்டிகளாக அமைவதற்கும் காரணம் என்ன? மக்களின் மடிமையும் துணிவின்மையுமேதாம்! பருவ முதிர்ச்சி எய்தாமலே இருத்தல் மிக எளிது. எனக்குப் பதிலாகத் தானே அறிந்துகொள்ளக் கூடிய ஒரு புத்தகமும்: எனக்குப் பதிலாகத் தாமே நன்மை தீமைகளை ஆய்ந்தறியும் மனச்சான்று கொண்டி ருக்கும் ஒரு சமய குருவும், நான் என்ன உண்ணவேண்டும் என்று முடிவு செய்யும் ஒரு மருத்துவரும் இன்னும் இவர் போன்ற பிறரும் எனக்கு இருப்பார்களாகில் நான் எந்த முயற்சியும் மேற் கொள்ளத் தேவையில்லை. அதற்கென நான் பணம் தரக்கூடு மானால், நான் சிந்திக்க வேண்டிய தேவையே இல்லை; தொல்லை யான அவ்வேலையை எனக்காகப் பிறர் மேற்கொள்ள முன்னிற் கின்றனர். தகுதித் திறம் பெறுவதற்குச் செய்யும் முயற்சி

சிரமமானதென்பதோடு மிகவும் ஆபத்தானதென்றும் மக்களில் பெரும்பாலோர் — மகளிர் குல முழுமையும் கருதுகின்றனர்; இதைக்காணும் பிறர் கருணையோடு அவர்களைக் கண்காணித்து வழிகாட்டும் பணியை மேற்கொண்டுள்ளனர். இந்த வழிகாட்டிகள் மக்களை வாலில்லா விலங்குகளாக ஆக்கி வண்டியிலே பூட்டி விடுகின்றனர். தாமாக ஒரு அடிகூட எடுத்து வைக்கும் துணிவு அந்தக்கால்நடைகளுக்கு ஏற்படாதவாறு கண்காணிக்கின்றனர். பூட்டிய வண்டியின்றித் தாமாக அவை அடியெடுத்து வைத்தால் ஆபத்து என்று காட்டுகின்றனர். உண்மையில் இதில் உள்ள இடர்ப்பாடு அத்தனை பெரியதன்று; சில தடவைகள் விழுந்து விட்டாலும் கூட அவர்கள் இறுதியில் தனியாக நடக்கக் கற்றுக் கொள்வார்கள். ஆனால், ஒருமுறை தோல்வியுற்றதை எடுத்துக் காட்டி, மக்களை அச்சுறுத்திக் கோழைகளாக்கி மீண்டும் முயற்சிகள் செய்யாமல் தடுத்து விடுகின்றனர்.

இவ்வாறு, பிறர் வயப்பட்டு வாழ்வது, மக்களுக்கு இயல்பான தாகிவிடுகிறது. அவனின்றும் தானே முயன்று வெளியேறுதல் எந்தத் தனி மனிதனுக்கும் கடினமான காரியமாகும். பிறர் வயப்பட்ட வாழ்வில் அவனே விரும்பி இருக்கின்றான்; நன்னறியைப் பயன்படுத்த அவனால் இயலுவதில்லை; அவ்வாறு பயன்படுத்தும்படி அவனைப் பிறரும் விடுவதில்லை. சட்டங்களும், விதிகளும் ஒருவன் தன் இயற்கைத் திறன்களைப் பகுத்தறிவு முறையில் பயன்படுத்துவதற்கு தவறாகப் பயன்படுத்துவதற்கு என்பதே பொருத்தமாகும் — அமைந்த கருவிகளாகும்; அவை மக்களைப் பிறர் வயப்படும் பிணைப்பிலே என்றும் இருத்தி வைக்கும் தளைகளாகி விடுகின்றன. அவற்றை உதறி எறிவதற்குரிய பள்ளத்தைத் தயக்கத்தோடு ஒருவன் தாண்டுவது போலாகிறது; ஏனெனில் அவனுக்குத் தன்னையின்றி நடமாடும் பழக்கம் இல்லை. எனவே, தன்னறிவைப் பயன்படுத்தித் தம் திறமையின்மையைப் போக்கிக் கொண்டு நிலையான முன்னேற்றம் கண்டவர்கள் மிகச் சிலரே ஆவர்.

ஆனால், பொதுமக்கள் அறிவு விளக்கம் பெறுதல் நடக்கக் கூடியதாகும்; உண்மையில், அவர்களுக்குச் சுதந்திரத்தை மட்டும் அளித்துவிட்டால் அதைத் தொடர்ந்து உறுதியாக அறிவு விளக்கமும் பெற்றுவிடுவார்கள். ஏனெனில், மாபெரும் மக்கள் தொகுதிக்கு வழிகாட்டிகளாக நிலைபெற்று இருப்பவர்களிலுங் கூட தானாகவே சிந்திப்போர் உண்டு; தாங்கள் சுமந்து கொண்டிருக்கும் பொறுப்பை எறிந்து விட்டு, தங்கள் மதிப்பையும் தானே சிந்திக்கும் திறனுள்ள பிறர் மதிப்பையும் போற்றும் வகையில் மக்களிடை ஆர்வத்தை அவர்கள் பரப்புவார்கள். மக்களுக்கு

வழிகாட்டுவதற்கென்றுள்ள சிலர் அறிவு விளக்கம் பெற்று உண்மையை எடுத்தோதினாலும், மக்கள் அவர்களை அப்பொழுப் பினின்றும் விடுவிப்பதில்லை. அறியாமையை மக்களிடையே பரப்புவது, பிற்காலத்தில் அவ்வாறு பரப்பியவர்கள் மீதோ பழிதீர்க்கும் செயலுக்கு வித்திடுகின்றது. எனவே, பொது மக்கள் படிப்படியாகத்தான் அறிவு விளக்கம் பெறக்கூடும். தனிமனிதனின் கொடுங்கோன்மையையோ, பேராசையாளரின் அடக்குமுறைகளையோ புரட்சியால் வீழ்த்திவிடலாம், ஆனால் அப்புரட்சியின் மூலம் சிந்தனை முறையில் உண்மையான சீர்திருத் தம் எதையும் ஏற்படுத்த ஒருபோதும் இயலாது. மாறாக, புதிய தப்பெண்ணங்களும் பழையனவற்றைப் போலவே சிந்தனையற்ற மக்கள் தொகுதியை அடக்கி நடத்தவே உதவும்.

இந்த அறிவு விளக்கத்துக்குத் தேவையானது தன்னுரிமை ஒன்றுதான். உண்மையில் அறிவு விளக்கம் என்ற சொல்லால் குறிக்கப்படுவனவற்றிலெல்லாம் தீங்கற்றது தன்னுரிமையே யாகும். ஒருவன் தனது சிந்தனைத் திறனை ஒவ்வொரு காரியத் திலும் வெளிப்படையாகப் பயன்படுத்துவதற்கான தன்னுரிமை தான் அது. ஆனால் எங்கு திரும்பினாலும் நான் கேட்பது என்ன? "ஏன் என்று கேட்காதே", என்பதைத்தான். "ஏனென்று கேட்காதே, சொன்னதைச் செய்", என்கிறான் அரசாங்க ஊழியன். "ஏனென்று கேட்காதே, பணத்தைக்கொடு" என்று வரி வாங்குபவன் கூறுகிறான். "ஏனென்று கேட்காதே, நம்பிக்கை வை!" என்று சமயகுரு போதிக்கிறார். (உலகிலேயே ஒரேயொரு மன்னர்தாம், "நீங்கள் விரும்புமளவு வாதிடுங்கள்; எதைப்பற்றி வேண்டுமாயினும் வாதிடுங்கள், ஆனால் பணிந்து நடக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். எங்கும் தன்னுரிமைக் குத் தடைகள் காணப்படுகின்றன. அவற்றில் அறிவு விளக்கத் துக்குத் தடையாயிருப்பது எது? தடையாயிராமல் அதனை வளர்ப்பது எது? நான் விடையளிக்கிறேன்: ஒருவன் எப்பொழு தும் பகுத்தறிவைத் தடையேதுமின்றிப் பொதுமுறையில் பயன்படுத்த வேண்டும்; அப்பொழுது தான் மக்களிடையே அறிவு விளக்கம் ஏற்படும். தனிமுறையில் மட்டுமே பகுத்தறி வைப் பயன்படுத்தினால், அது அறிவு விளக்க முன்னேற்றத் திற்குத் தடையாக இல்லாவிடினும், குறுகிய நிலையில் நின்று விடுகிறது. ஒருவனது பகுத்தறிவைப் பொதுமுறையில் பயன் படுத்துவதென்பது, கற்கும் மக்கள் அனைவரும் அறியும்படி கற்றறிந்த ஒருவன் தன் பகுத்தறிவைப் பயன்படுத்துதலாகும். ஒருவன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குறிப்பிட்டவொரு பொதுத்துறை அலுவலிலோ, பதவியிலோ தன் பகுத்தறிவைப் பயன்படுத்துதலையே நான் தனிமுறைப் பயன்பாடு என்று

குறிப்பிடுகிறேன். சமுதாய நலங்கருதிச் செய்யப்படும் பல காரியங்களுக்கு, ஒழுங்கமைவான ஏற்பாடு ஒன்று தேவைப் படுகிறது. அதன் மூலமாகத்தான் சமுதாயத்தின் சில உறுப் பினர்களோ ஒருமனப்போக்கோடு கட்டுப்பட்டு நடந்து கொள்ளு மாறு செய்யமுடியும். அப்போதுதான் அரசு பொதுவான இலக்குகளை அடைவதற்கு அவர்களை வழி நடத்திச் செல்லுதல் இயலும்; அல்லது அத்தகைய இலக்குகளை அவர்கள் கெடுத்து விடாமலாவது தடுக்கமுடியும். இவ்வகைக் காரியங்களில் ஏன் என்று கேட்டு வாதிடுதல் கூடாது — எவரும் கட்டளைக்கு அடங்கியே நடக்க வேண்டும். ஆனால், ஒருவர் அதே நேரத்தில் தம்மை மனித சமுதாயத்தின் ஒருவராகவோ உலகக் குடிமக்கள் குழுவின் ஓர் உறுப்பினராகவோ கருதிக் கொண்டு எழுதிய நூல்களின் மூலமாக எதைப்பற்றியும் ஏன் என்று கேட்டு வாதிட லாம். கற்றறிவாளர் என்ற முறையில் பொதுமக்களுக்குத் தம் கருத்துக்களை அவர் தடையின்றிக் கூறலாம். குறிப்பிட்ட சமுதாய உறுப்பினர் என்ற வகையிலே அவர் நேரடியாகப் பங்கெடுக்காமல், ஆனால் பொறுப்பேற்கும், காரியங்களுக்கு இதனால் கேடு விளைவதில்லை. இராணுவத்திலுள்ள ஓர் அலுவலர் தமக்கு மேலதிகாரி இட்ட கட்டளை சரியானதா, பயனுள்ளதா என்பதைப்பற்றி வாதம்புரிந்தால் அழிவே விளையும்: அதற்குக் கீழ்படிந்தே ஆக வேண்டும். ஆனால் ஒரு கற்றறிவாளர் என்ற முறையில் இராணுவப் பணியிலுள்ள குறைகளைப் பற்றிக் கருத்து தெரிவிப்பதற்கும், அவற்றைப் பொதுமக்களின் தீர்ப் புக்கு வைப்பதற்குமான உரிமையை அவருக்கு வழங்க மறுத்தல் நியாயமாகாது. ஒரு குடிமகன் தன்மீது விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்த மறுக்கக்கூடாது. உண்மையில், தன்மீது விதிக்கப் பட்ட வரிகளைப் பற்றி ஒருவன் வேண்டுமென்றே குறை கூறினால், அது அவ்வருமே பொதுவாக முரண்டு பிடிப்பதற்கு வழி வகுக்கு மாகையால் அவன் தண்டிக்கப்படலாம். என்றாலும், அதே மனிதர் ஒரு கற்றறிவாளன் என்ற முறையில் வரிகள் விதித்தது தவறு என்றும் நேர்மையற்றது என்றும் தன் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவது, குடிமகனின் கடமைக்கு மாறான தாக ஆகாது. அதுபோன்றே, திருச்சபையின் சமயகுரு ஒருவர் தமது மாணவர்களுக்குச் சமயப் பேருரையைக் கற்பிக்கும் கடப் பாடுடையவர்; அவர் நடத்தும் சமயத் திருக்கூட்டங்கள் அவர் எந்தக் கிறித்துவத் தொகுதியில் பணியாற்றுகிறாரோ அதன் சின்னத்துடன் நடத்தப் பெறுதல் வேண்டும்; ஏனென்றால் இந்தக் கட்டுவரையின்தான் அவர் சமய குருவாக ஏற்கப் பட்டுள்ளார். ஆனால், ஒரு கற்றறிவாளனென்னும் முறையில், அச்சின்னத்தின் கீழ்த் தவறாக உள்ளவற்றைப் பற்றி, தான்

கவனத்துடன் ஆய்ந்து, கண்ட உண்மைகளை நல்லெண்ணத்துடன் மக்களுக்குத் தெரிவிக்கவும், சமயக்குழுவையும், திருச்சபையையும், மேலும் சிறந்தமுறையில் அமைப்பதற்கான ஆலோசனைகளைக் கூறவும் அவருக்கு முழு உரிமை உண்டு: அது அவரது கடமையும் ஆகும்; இதைச் செய்வதில், தம் மனச்சான்றுக்கு மாறாக எதையும் அவர் செய்வதாகக் கூறமுடியாது. ஏனெனில், திருச்சபையின் பிரதிநிதியாகவுள்ள தம் பதவியின் காரணமாக அவர் எதைக் கற்பிக்கிறாரோ, அதைத் தம் கருத்துக்கேற்ற வாறு கற்பிக்கத் தமக்கு உரிமை இல்லையென அவர் கருதுகிறார். பிறருடைய கட்டளையின்பேரில், பிறருடைய பெயரால் அக் கருத்துக்களை எடுத்துரைப்பதற்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். "நம்முடைய திருச்சபை இதைப் போதிக்கிறது, அதைக் கூறுகிறது. விளக்கச் சான்றுகளாக இவற்றைத் தருகின்றது" என்று அவர் கூறுவார். இவ்வாறு, திருச்சபையின் விதிகளிலிருந்து திருக் கூட்டத்திற்கு நடைமுறையில் பயன்படக்கூடியவைகளை அவர் எடுத்துக் கூறுகிறார்: ஆனால், அவ்விதிகளை அவரே முழு மனத்துடன் நம்பியேற்றுக் கொள்ளமாட்டார். ஆனால் அவற்றை விளக்குவதில் அவர் உறுதியாகவே இருப்பார்: ஏனெனில் அவற்றிலும் உண்மை மறைந்திருத்தல் கூடும்: எவ்வாறாயினும், அகச்சமயத்துக்கு முரண்பட்ட கருத்துக்கள் ஏதும் அவற்றிலிருக்காது. ஏனெனில், அத்தகைய கருத்துக்கள் அவற்றிலிருப்பதாக அவர் நம்பினால், அவருடைய பதவிக்கான கடமைகளை அவர் மன நிறைவோடு ஆற்ற முடியாது; எனவே, அவர் அப்பதவியைத் துறக்க வேண்டும். ஆதலால், நியமிக்கப்பட்ட ஓர் ஆசிரியர், திருக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தமது பகுத்தறிவைப் பயன்படுத்தினால் அது வெறும் தனி முறைப் பயன்பாடே ஆகும். இக் கூட்டம் எத்துணைப் பெரியதானாலும் அது குடும்பம்போன்ற கூட்டமேயாகும்; அதைப் பொறுத்தவரை, சமய குருவாக இருப்பதால் அவருக்குத் தன்னுரிமை இல்லை — தன்னுரிமை யுடையவராக இருக்கவும் முடியாது; ஏனெனில் அவர் பிறருடைய கட்டளைகளையே நிறைவேற்றுகிறார். ஆனால், தமது எழுத்துக்களின் மூலம் பொதுமக்களோடு—உலகத்தோடு பேசக்கூடிய ஒரு கற்றறிவாளர் என்ற முறையில், அந்தச் சமய குருவின் பகுத்தறிவு பொது முறையில் பயன்படுகிறது; அவ்வாறு, தமது பகுத்தறிவைப் பயன்படுத்தித் தமது சொந்த முறையில் பேசுவதற்கு அவருக்கு அளவற்ற தன்னுரிமையுண்டு. ஆன்மீகக் காரியங்களில் மக்களின் வழிகாட்டிகளாக உள்ளவர்களே தக்கதிறம் இல்லாதவர்களாகவிருப்பது மடமையாகும்; இந்த நிலை மற்ற மடமைகளை எல்லாம் நிரந்தரமாக்கி விடும்.

ஆனால், சமய குருக்களின் சங்கமொன்றே, திருச்சபை மாநாடொன்றே, மாற்றமில்லாததொரு சின்னத்துக்குட்படுவதாக ஆணையுறுதி எடுத்துக் கொண்டு சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அதன் வழி மக்கள் அனைவருக்கும் என்றென்றைக்குமாகத் தொடர்ந்து வழிகாட்டிகளாக இருந்து வருவது சரியாகாதா? இது அறவே இயலாததென்று நான் கூறுகிறேன். மனித இனத்துக்கு மென்மேலும் அறிவு விளக்கம் ஏற்படாதவாறு தடைசெய்யும் அத்தகைய ஒப்பந்தம், உயர் அதிகாரத்தால், நாடாளுமன்றங்களால், மிகப் புனிதமான உடன்பாடுகளால், உறுதி செய்யப்பட்டாலுங்கூட அது செல்லாததாகும். ஒரு தலைமுறை, அறிவை மேலும் விரிவாக்கிக் கொள்ளவும், தவறுகளைப் போக்கித் தூய்மைப்படுத்திப் பொதுவான அறிவு விளக்கத்தில் முன்னேற்றங் காணவும் முடியாத நிலைக்குத் தன்னை வைத்துக்கொண்டு, பின்வரும் தலைமுறையையும் அந்நிலைக்குக் கட்டுப்படுத்தி வைத்தல் இயலாது. அவ்வாறு கட்டுப்படுத்துவது, அறிவு விளக்கத்தின் முன்னேற்றத்தையே தனது உண்மையிலக்காகக் கொண்டுள்ள மனித இயல்புக்கு எதிராக இழைக்கப்படும் குற்றமாகும். எனவே, அவர்களின் வழித்தோன்றல்கள் அக்கட்டுப்பாடுகள் தேவையற்ற முறையிலும், மனக்காழ்ப்புடனும் ஏற்படுத்தப்பட்டன என்று மறுத்தொதுக்குவது நியாயமே. எதையும் ஒரு சட்டம் என்று ஆய்ந்து முடிவு கட்டுவதற்கு, அத்தகைய சட்டத்திற்கு மக்கள் தங்களை ஆட்படுத்திக் கொள்வார்களா என்பதே உரைக்கல்லாகும். அத்தகையதோர் தொடர்பிணைப்பு, குறுகிய காலத்துக்கே இருக்க முடியும். மக்கள் நல்ல காலத்தை எதிர்பார்த்து இருப்பார்கள். கற்றறிவாளர் என்ற முறையில் தற்போதைய அமைப்பிலுள்ள குற்றங் குறைகளைப் பற்றித் தமது கருத்துரைகளை எழுத்துருவில் தயக்கமின்றி வெளிப்படையாக எடுத்துரைக்குமாறு ஒவ்வொரு குடிமகனையும் குறிப்பாகச் சமய குருவையும் அனுமதிக்க வேண்டும். இக்குறைபாடுகளைப் பொதுவாக நுணுகி ஆய்ந்து, அக்குறைகளை ஒப்புக் கொள்ளும் பெரும்பாலோர், ஒரே கருத்துடையவர்களல்லாவிடினும், ஒருங்கு சேர்ந்து அரசுக்கு எடுத்துரைத்து தமது நற்கருத்துக்களின்படி மாற்றத்துடன் கூடியதொரு புதிய சமய அமைப்பை நிறுவவதற்காக அரசின் பாதுகாப்பை நாட வேண்டும். பழைய அமைப்பில் இருக்க விரும்புவோர் அவ்வாறே இருக்கலாம். ஒருமனிதனுல் தன் ஆயுட்காலம் முழுவதுமே தமது ஐயப்பாட்டினை மக்களிடம் எடுத்துரைக்க இயலாதபடி ஒரு நிலைத்த சமய நிறுவனத்தில் சேருவது மனித இன முன்னேற்றத்திற்கான காலத்தை வீணடிப்பதாகும். இதை முற்றிலுமாகத் தடுத்தேயாகவேண்டும். தன்னைப் பொறுத்தவரை ஒரு மனிதன்,

தான் அறிந்துகொள்ள வேண்டியவற்றைப் பற்றி அறிவு விளக்கம் பெறுவதைத் தள்ளிப்போடலாம்: அதுவும் கூட ஒரு சிறிது காலத்துக்கு மட்டுமே. ஆனால், அதனை முற்றிலுமாகத் துறந்து விடுதல் — அதைவிட தம் வழித்தோன்றல்கள் குறித்தும் அதைத் துறந்து விடுதல் மனிதகுல உரிமைகளுக்கு ஊறு விளைப்பதும், அவற்றை அவமதிப்பதும் ஆகும். எதை மக்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக்கொள்ள மாட்டார்களோ, அதை அவர்கள் மீது அரசன் விதிப்பது கூடாது. ஏனெனில், அரசனுக்குள்ள சட்டமியற்றும் அதிகாரம் பொதுமக்களின் விருப்போடு தன் விருப்பை ஒன்றுபடுத்துவதையே அடிப்படையாகக் கொண்டது. சமுதாய வாழ்வின் ஒழுங்கமைதிக்கு இசைந்த வாறு எல்லாச் சீர்திருத்தங்களும் சீர்திருத்தங்கள் என கூறப்படுபவையும் அமைகின்றனவா என்பதை மட்டும் அரசன் கண்காணித்துக் கொண்டால், தங்கள் ஆன்ம நலத்துக்குத் தேவையென மக்கள் விரும்புவதை அவர்களே செய்து கொள்ளுமாறு அவன் விட்டு விடலாம். ஆன்மீகம் பற்றி அவன் கவலை கொள்ள வேண்டியதில்லை: ஆனால், மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் நலனைக் கண்டு பேணுவதில் ஒருவர் மற்றொருவருக்கு வன்முறையில் இடர் விளைக்காமல் தடுப்பது அரசனின் பொறுப்பாகும். இந்தக் காரியங்களில் தலையிடுவது அரசனின் மாண்பினைக் குறைக்கின்றது: இது மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் எழுத்துக்களின் மூலம் தெரிவதாகும். மாமன்னர் சீசர் கூட தவறு செய்யாதவனன்று என்ற உண்மையை மறவாமல் அரசன் தனது ஆட்சியை மதிப்பிட வேண்டும். சமயச் சபைகளைச் சேர்ந்த சிலர் மற்ற மக்கள் மீது கொடுமையாக அதிகாரம் செலுத்துவதை அரசன் ஆதரித்து தமது உயர் அதிகாரத்தை இழிவு படுத்துவது அவனது மாண்புக்கு ஊறு விளைப்பதாகிறது.

"நாம் வாழ்வது அறிவு விளக்கம் பெற்றுவிட்ட காலத்தில் அல்லவா?" என்று கேட்டால் "இல்லை" என்பதே விடையாகும். ஆனால், நாம் வாழும் காலம் அறிவு விளக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது உள்ள நிலையில், மக்கள் சமய சம்பந்தமான காரியங்களில் உறுதியோடும், பிறர் தலையீடின்றியும் தங்கள் சொந்த பகுத்தறிவைச் சரியான முறையில் பயன்படுத்துகின்ற சூழ்நிலை இல்லை. ஆனால், மக்கள் இக்காரியங்களில் தம்மிச்சையாக நடப்பதற்கு வழியேற்பட்டிருக்கிறது; பொதுவாக அறிவு விளக்கம் பெறுதற்கும், தமக்குத் தாமே விதித்துக் கொண்ட பிறர் வயப்படும் நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் உள்ள தடைகள் ஒவ்வொன்றாக நீக்கப்படுகின்றன. இவ்வகை

யில் இது அறிவு விளக்கம் பெறும் காலம் அல்லது .:பிரெடெரிக் கின் நூற்றாண்டாகும்....

மக்களின் சமய ரீசம்பந்தமான காரியங்களில் எதையும் விதிக் காமல் அவர்களுக்கு முழு உரிமை அளிப்பதே தம் கடமை என்று கருதி, இதைப் பரந்த மனப்பான்மை என்று செருக்குடன் கூறிக் கொள்ளாமல் இருக்கும் அரசன் அறிவு விளக்கம் பெற்றவன். உலக மக்களும் பின் தலைமுறையினரும் அவரை நன்றியுடன் போற்றுவார்கள். மனச்சான்றைப் பொறுத்த காரியங்களில் தங்கள் அறிவைப் பயன்படுத்தவும், பிறர் வழிப்பட்டு நின்ற நிலையை அகற்றவும் மக்களுக்கு வழி செய்த அரசன் என்று அவன் புகழப்படுவான். அத்தகைய அரசனின் ஆட்சியில், புனிதத் திருச்சபையாளர்கள், கற்றறிவாளர்கள் என்ற முறை யில், தமது அலுவல் முறைக் கடமைகளை மீறுமல், ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்குச் சிறிது மாறுபடும் ஆய் வுறைகளையும், கருத்துக்களையும் மக்களின் ஆய்வுக்குத் தடை யின்றி வைக்கலாம். அலுவல் முறைக் கடமைகளின் கூட்டுப் பாடு இல்லாதவர்களுக்கு இன்னும் அதிகமான உரிமை உண்டு. இந்த உரிமை வேட்கை நம் நாட்டோடு நிற்பதன்று; தங்நலம் எது என்று புரிந்து கொள்ளாத அரசாங்கங்களால் விதிக்கப் பட்ட தடைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் மற்ற நாடுகளுக்கும் இது பரவுகின்றது. இந்த உரிமை அளிக்கப்பட் டால் சமூக நிலையமைப்பும் பொது அமைதியும் குலைந்து விடும் என்று கவலைப்பட வேண்டிய தேவையில்லை. மக்களை நாகரிக மற்ற நிலையிலேயே வைத்திருப்பதற்கு வேண்டுமென்றே சூழ்ச்சி களேதும் செய்யப்படாமலிருந்தால், அவர்கள் தாமாகவே படிப் படியாக அந்நிலையிலிருந்து வெளியேறி விடுவார்கள்.

சமயத்துறையைவிட்டு, கலை, அறிவியல் முதலிய துறைகளில் மக்களுக்கு வழிகாட்டும் அக்கரை ஆளுவோருக்கு இல்லை. சமயத் துறையில் வளரும் அறியாமையே மக்களுக்குத் திமை பயப்பது; எல்லாவற்றையும் விட இழிவு சேர்ப்பது. எனவே, சமயத்துறை யில் தாங்களாகவே ஏற்றுக் கொண்ட பிறர்வழிப்படும் நிலை யிலிருந்து மக்கள் தப்புவதே அறிவு விளக்கத்தின் முக்கிய செயலாகும். சமயத்துறையில் அறிவு விளக்கம் பெறுதலை ஆதரிக்கும் ஒரு அரசனின் சிந்தனைப் போக்கு இன்னும் மேலே போகிறது; அவர் தமது குடிகள் தங்கள் பகுத்தறிவைப் பொது முறையில் பயன்படுத்தித் தாம் இயற்றும் சட்டங்களை எவ்வாறு மேலும் செம்மையாக அமைக்கமுடியும் என்பதைப் பற்றிய தங்கள் கருத்துக்களையும் ஏற்கெனவே இயற்றப்பட்டுவிட்ட சட்டங்களைப் பற்றிய தங்கள் வெளிப்படையான திறனாய்வு

களையுங் கூட வெளியிட அனுமதிக்க வேண்டும். அதனால் சட்ட மியற்றும் முறைக்கு ஏதும் ஆபத்து ஏற்படாது என அவர் கருது கிறார். நாம் போற்றும் ஒப்புயர்வில்லாத நமது மன்னரே இதற் குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாவார்.

தாமே அறிவு விளங்கப் பெற்றவராகவும், நிழல்களைக் கண்டஞ்சாதவராகவும், பொதுமக்களிடையே அமைதியை நிலை நாட்டக்கூடிய கட்டுப்பாடுள்ள பெருஞ் சேனையை வைத்திருப் பவராகவுமுள்ள ஒரு மன்னரால்தான், "நீங்கள் விரும்புமளவு வாதிடுங்கள், எதைப்பற்றி வேண்டுமாயினும் வாதிடுங்கள்; ஆனால் கட்டளைக்கு கீழ்ப்படியுங்கள்!" என்று கூற முடியும். ஒரு குடியரசு அவ்வாறு கூறத் துணிவதில்லை. இங்கு, மனித விவகாரங்களில் புதிரான எதிர்பாராத ஒரு போக்கைக் காணு கிறோம். குடியரசு முறையில் கூர்ந்து பார்க்குமிடத்து அநேக மாக எல்லாமே முரண்பாடாகவே தோன்றுகின்றன. பெருமளவு குடியுரிமை அளித்தால் அது சிந்தனை யுரிமைக்கு துணைபுரிவ தாகத் தோன்றினாலும், அது தவிர்க்கவியலாத கட்டுப்பாடுகளை யும் தோற்றுவிக்கிறது; மாறாக, அதைக் காட்டிலும் குறைந் தளவுள்ள குடியுரிமை ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும் இயன் றளவுக்கு விரிந்து நிற்க வழிசெய்கிறது. கட்டுப்பாடெதுவும் இன்றித் தானைகச் சிந்தனை செய்வதற்கேற்ற மனப்பாங்கு என்னும் வித்தினை கடினமான மேலோட்டிலுள்ளிருந்து இயற்கை வெளிப்படுத்தி விட்டது. இதனால், மக்களுடைய பண்பியல்பு களில் சிறிது சிறிதாக மாற்றம் விளைந்து, அவர்கள் தன்னுரிமை பேணி வாழும் திறமுடையோர் ஆகின்றனர். இறுதியில், அது அரசின் கோட்பாடுகளைப் பற்றுறுதியுறுகின்றது; மக்களை உயிரற்ற பொறிகளாகக் கருதாமல் அவர்களின் மாண்புக்கேற்றபடி நடத் தலே நன்மை என்பதை அரசாங்கம் உணருகிறது.

1770 — 1840

முன்னுரை

அறிவுவிளக்க இலக்கியத்திற்கு எதிரான இயக்கம் கி. பி. 1770 அளவில் தோன்றியது. இலக்கியம், வாழ்க்கை இரண்டையும் காண்பதில் ஒரு புதுமையை ஹெர்டர் (Herder) என்பாரின் எழுத்திலே அதிகமாகக் காணலாம். அவ்விலக்கியத்தில் பகுத்தறிவு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. மன எழுச்சியே, பகுத்தறிவுக்கு ஒவ்வாத உணர்ச்சியே, அதில் தலையிடம் பெற்றது. முதல் நூல்களாகவும் ஆசிரியர்களின் தனித் தன்மையைக் காட்டுவனவாகவும் அப்பொழுது வளர்ந்தது. அதை எழுதிய "பேரறிவாளர்கள்" இலக்கியம் தங்கள் உணர்ச்சிகளின், அடிப்படை இயல்புகளின் வழியே சென்றனர். வரைமுறைகள் எதையும் அவர்கள் பின்பற்றவில்லை; அவை அவர்களுக்குத் தேவையுமில்லை. பழைமையான பழக்கங்களையும் கட்டுப்படுத்தும் வரைமுறைகளையும் எள்ளி நகையாடும் மனிதன், ஊக்கமும் உணர்ச்சியும் உள்ள மனிதன், இவனே புதிய இலட்சிய மனிதன் ஆனான். இயற்கையான வாழ்வை நாடும் இந்தப் போக்கு நாகரிகச் சாதனைகளிலே சிறப்பெதையும் காணாத நிலையை ஏற்படுத்தியது. வரலாற்றிலே தொடர்ந்த முன்னேற்றத்தை அவர்கள் காணவில்லை, பின்னேற்றத்தையே அவர்கள் கண்டனர். இயற்கைக்கு மாறான, ஒழுக்கக் குலைவான பிற்போக்கு நிலையே அவர்களுக்குத் தென்பட்டது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த மெய்ஞ்ஞானி ஜீன்-ஜேகுஸ் ரூசோ (1712–1778) என்பவர்தான் இத்தகைய மனப்போக்கைத் தோற்றுவித்தவர். ஜெர்மனி நாட்டிலிருந்த பல சிற்றரசுகளில் காணப்பட்ட அரசியல் சமுதாய நிலவரங்கள் பற்றிக் கடுமையாகக் குறை கூறப்பட்டன. சமுதாயத்திலிருந்த பல்வகைப் பிரிவுகள், மன்னர்களின் தன்னிச்சைப் போக்கு, சமுதாய உயர்மட்டத்தில் உள்ளவர்களின் ஒழுக்கக் குலைவு இவையெல்லாம் இயல்பான சமுதாய அமைப்பிற்கு முரண்பட்டதாயின. அறிவுவிளக்க இலக்கிய எழுத்தாளர்கள் கூறிய இக்குறைபாடுகள் இன்னும் கடுமையாகத் தாக்கப்பட்டன.

அறிவுவிளக்கத் தத்துவம் கூறுவது போல் மனிதன் தன்னுரிமையுடன் வாழுவதுதான் விரும்பத்தக்கதெனக் கொள்ளப்பட்டது. மரபொட்டிய, பழைமைசார்ந்த கோட்பாடுகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற அவா எழுந்தது. பகுத்தறிவின் அடிப்படையில் சமயத்தை அமைத்தது அறிவுவிளக்கத் தத்துவம்; ஆனால், உணர்ச்சியின் அடிப்படையில் சமயத்தைக் கண்டது இந்த எதிரியக்கம். இது இயற்கையின் அமைப்பிலே இறைவனைக் காணும் முயற்சியாகும்.

இயற்கைக்கு மாறுன வாழ்க்கை நிலைகளைக் குறை காணுவதையும், இயற்கையோடு இயைந்த மனிதனைப் போற்றுவதையும், இக்காலத்திய உணர்ச்சி மிகுந்த நாடகங்களிலே நாம் காணுகிறோம். இத்தகைய நாடகம் ஒன்றை ஃப்ரீட்ரிஷ் மக்ஸ்ம்யுலியன் கிலிங்கர் என்பார் எழுதினார். இந்த நாடகத்தின் தலைப்பே 1770–1785இல் நடந்த இத்தகைய இயக்கத்தின் பெயராக அமைந்தது. *"புயலும் நெருக்கடியும்"* (Sturm and Drang) என்பது அந்நாடகத்தின் தலைப்பு. கோதெ, ஷில்லர் இவர்கள் முதலில் எழுதிய நூல்கள் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவைதாம். ஆனால் இக்கவிகள் இவ்வியக்கத்தைத் தாண்டி மேலிலை எய்தி விட்டனர். 1785ஆம் ஆண்டிலிருந்து ஜெர்மானிய இலக்கியத்தின் உயர்நிலைக் காலத்தை அவர்கள் தொடங்கி வைத்தனர். இலக்கியம், பண்பாடு இச்சாதனைகளில் உச்சநிலை இப்பொழுது எய்தப்பட்டது.

அறிவுவிளக்க இயக்கத்தின் தெளிவான பகுத்தறிவுப் பாதைக்கு இந்த உயர்நிலை இலக்கியம் மீண்டும் வந்தது. புதிதாகத் தோன்றிய மனவெழுச்சி இயக்கங்கள் உணர்வும் அறிவும் ஒன்றிணைந்த நிலையைக் குறிக்கோளாகக் கொண்டன. காண்ட் என்பார் தோற்றுவித்த ஜெர்மானிய இலட்சியத் தத்துவம் இக்கால மக்களின் கோட்பாடுகளை உருவாக்கியது. உய்த்துணர வேண்டிய ஒழுக்க நெறிகள், நன்மை, உண்மை, அழகு இவையெல்லாம் மனிதனுக்கு மேம்பட்ட நிலையில் நிற்கின்றன. கட்டுப்பாடில்லாத தன்னிச்சையோடு மனிதன் இவற்றை எய்த முயலுகிறான். இம்முயற்சி, மனிதப் பற்றுடைமை பொதுநலத்திற்கென மனித இனத்தின் மீது கொள்ளும் தூய அன்புடைமை இவற்றிற்கு இட்டுச் செல்லுகிறது. சமுதாய ஒழுங்கு, அமைப்பு, அளவமைதி—இவையெல்லாம் மதித்துப் போற்றப்பட்டன. ஜெர்மானிய உயர்நிலை நாடகங்கள் இசைந்து பொருந்திய வடிவுடையன. அடிப்படைக் குறியுடைய பிரச்சினைகளைப் பற்றி ஆயும் அந்நாடகங்கள், வாழ்வு நெறிகள் எங்கும் என்றும் ஏற்புடையன என்பதை உணர்த்தின.

இக்காலத்தில் நடந்த முக்கியமான அரசியல் நிகழ்ச்சி கி. பி. 1789ஆம் ஆண்டில் நடந்த பிரஞ்சுப் புரட்சியாகும். அதன்பின் புரட்சிப் போர்கள் நடந்தன. நெப்போலியன் ஆதிக்கம் பெற்றார். ஜெர்மன் நாடுகளிடையே அவர் படைகள் வெற்றி நடை போட்டன. ஜெர்மன் இலக்கியத்தின் உயர் நிலைக்காலத்தில் தலைசிறந்த கோதெயும் ஷில்லரும் மெய்ஞ்ஞான ஆய்விலே ஈடுபட்டிருந்தாலும், இந்நிகழ்ச்சிகள் அவர்களையும் பாதித்தன. அன்று நடந்த தேசிய, அரசியல் பற்றிய காரியங்களைவிட ஆன்மீகப் பண்பாடு, மனிதனின் ஒழுக்கமுறைக் கல்வி, உலகளாவிய மனிதப்பற்று இவையே அவர்களுக்கு முக்கியமாகத் தோன்றின.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி. தலைசிறந்த உயர்நிலை நூல்கள் இனிமேல்தான் வரவிருக்கின்றன. இங்கிலாயில், இலக்கியம், வாழ்க்கை இவை பற்றி ஒரு புதிய மனப்பாங்கு பரவத் தொடங்கியது. இதைப் "புத்துணர்வு இயக்கம்" என்பார்கள். அறிவுவிளக்க இயக்கத்திற்கு எதிரியக்கமாக *"புயலும் நெருக்கடியும்"* தோன்றியது போல், உயர்நிலைக் காலத்தில் விளைந்த வடிவத் தூய்மைக்கும் தெளிவிற்கும் எதிராகக் கிளம்பியது புத்துணர்வு இயக்கம். அது மட்டுமன்று, "புயல்-நெருக்கடி" இயக்கத்தின் பல கூறுகளோ 'உடையதுதான் புத்துணர்வு இயக்கம் என்றாலும், அறிவு விளக்க இயக்கத்தின் ஆய்வு மனப் போக்கையும் அது கொண்டிருந்தது. பொருள்களின் புறநிலை ஒழுங்கமைவினை விட அகநிலையில் அமையும் தடையற்ற சுதந்திரத்திற்கும் படைப்பு வளத்திற்கும் சிறப்பிடம் அளிக்கும் ஜெர்மானிய தத்துவத்தால் 'புத்துணர்வு இயக்கம்' உருப்பெற்றது. உணர்ச்சிகள், மெய்ப்பாடுகள், கனவுகள், எல்லையில்லாப் பரம்பொருள் குறித்த வேட்பு, விருப்பு,—இத்தகைய ஆன்மீகக் கூறுகளால் வாழ்வு பற்றிய புத்துணர்வு மனப்பாங்கு வளம் பெற்றது. இவ்வாறு, புத்துணர்வு இயக்கமானது, மாயம், கோரம், அருஞ்சுவை ஆகிய தன்மைகளோ நாடி ஏற்றது. பரம் பொருள் நாட்டமும், தடையற்ற சுதந்திரத் தேட்டமும் உடைய புத்துணர்வுக் கவிகள் திடமான கவிவடிவம் எதையும் எய்த முயலவில்லை. உயர்நிலை எழுத்தாளர்களின் படைப்புக்கள் போலன்றி, புத்துணர்வுக் கவிகளின் எழுத்துக்கள் திடமான உருவமைவின்றியும் தொடர்பற்ற துண்டுப்பகுதிகளாகவும் உள்ளன; பல்வகைக் கவிதைகள் கலந்து நின்றன; இடைவிடாது கருத்துக்கள் மாறும் நிலையைக் கவிஞர்களே குறை கூறிக் கொள்வது வழக்கமாயிற்று இதனால், அவர்கள் நூல்களின் பயன் அழிக்கப்பட்டது. ஹெர்டர் செய்ததுபோல், அந்த எழுத்தாளர்கள் எழுச்சிமிக்க முதனூல்கள் வேண்டுமென்ற வேட்கையால் மக்கள் இலக்கியத்தை, அதிலும் முக்கியமாகப் பாட்டுக்களையும் தேவதைக் கதைகளையும் சேகரித்தனர். மக்களிலக்கியத்தின் எளிய இனிய நடையையே தங்கள் நூல்களிலும் புத்துணர்வுக் கவிகள் கையாண்டனர். ஓவியமாகவும் இசையாகவும் மலர்ந்த புத்துணர்வு, வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிப் படர்ந்தது. கற்பனைக் கதைக்கும் உண்மை நிலைக்கும், கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூட அது மறைத்து விட்டது. கலை பற்றி உலகளாவிய மனப்பாங்கு அகில உலக இலக்கியத்தை அளாவி நின்றது. எனவே, அயல் நாட்டு நூல்கள் பல மொழிபெயர்க்கப் பட்டு ஜெர்மன் மக்களுக்குக் கிடைத்தன. எழுத்திலே எழுச்சியும் எளிமையும் நாடும் பண்பு புத்துணர்வுக்கால முடிவிலே (1830)

அதிகமாகியது. நடுத்தர வகுப்பினரே புத்துணர்வு இயக்கத்தை அப்பொழுது ஆதரித்தனர்.

ஜெர்மானிய நாடு சம்பந்தப்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் உயர்நிலை மரபு எழுத்தாளர்களை விட புத்துணர்வு எழுத்தாளர்களையே அதிக மாகப் பாதித்தது. குறிப்பாக. ரஷ்ய நாட்டின் மீது நெப்போலியன் கொண்ட வெற்றி (1806–1807), பிறகு நடந்த சுதந்திரப் போராட் டம் (1813–1815) இவை கவிதைகளிலும், துண்டு வெளியீடுகளி லும் உணர்ச்சியுடன் எதிரொலித்தன. புத்துணர்வு எழுத்தாளர்கள் நாட்டுப் பற்றுடன் தங்கள் நாட்டின் பழம் பெருமையையும் ஆற்றலையும் நினைத்து இயங்கியதே இதற்குக் காரணமாகும்.

ஃபிரீட்ரிஷ் மக்ஸ்ம்யுலியன் கிலிங்கர்

சைத்தானின் உரை

ஃபிரீட்ரிஷ் மக்ஸ்ம்யுலியன் கிலிங்கரின் பெற்றோர்கள் வறுமை நிலையில் இருந்தவர்கள். அவரது பல்கலைக் கழகப் படிப்பிற்குகோதே தான் உதவினர். சில காலம், கிலிங்கர் நாடகக் குழு ஒன்றில் சேர்ந்திருந்தார். படைத்துறையில் வேலை பார்த்த பிறகு, முடிவில் ரஷ்யாவில் ஒரு படைத்தலைவர் ஆனார். அவர் தொடக்கத்தில் எழுதிய நூல்கள், **''புயலும் நெருக்கடியும்''** என்ற இயக்கத்தைச் சேர்ந்த நாடகாசிரியராக அவரை ஆக்கின. பிறகு, 1790–1800 ஆண்டுகளில் பல புதினங்களை அவர் இயற்றினர். தத்துவஞான அடிப்படையில் அவை அமைந்துள்ளன உலகம் பற்றிய அவரது மனப்பாங்கு அதில் குறை காணுவதாக மட்டுமன்றி, நம்பிக்கை இழந்ததாகவும் உள்ளது

''ஃபாஸ்டின் வாழ்வும், செயல்களும், நரக வீழ்ச்சியும்'' (1791) என்ற புதினத்திலிருந்து ''சைத்தானின் உரை'' என்ற பகுதி கீழே தரப்பட்டுள்ளது. ஃபாஸ்ட் என்பவன் மனிதப் பிறவிதான். அதிகார வெறியும் அறிவு வேட்கையும் அவனைத் தூண்டியதால் பிசாசு ஒன்றுடன் அவன் உடன்பாடு செய்து கொண்டான். இத்தகைய பொருள் இடைக்காலத்திலிருந்து இலக்கியத்திலே வருவதாகும். அச்சடிப்பதைக் கண்டுபிடித்தவராகவும் ஃபாஸ்ட்டை ஆசிரியர் ஆக்கியுள்ளார். இப்புதினத்தின் இடையில், தொடர்பின்றி வரும் கதைக் காட்சியிலே சைத்தான் ஃபாஸ்ட்டுக்கு உலகைக் காட்டுகிறான். மனித சமுதாயத்தைப் பொதுவாகக் குறை கூறுவதற்கு ஏதுவாக இந்த இடம் அமைகிறது. அதிகமாக முன்னேற்றமடைந்துள்ள பண்பாடு, நாகரிகம் இவற்றால் சமுதாயம் ஒழுக்கக் கேடும் தூய்மைக் கேடும் உற்றுள்ளதாகக் குறை கூறப்படுகிறது. இங்கு ரூசோவின் சாயல் நமக்குப் புலனாகிறது.

நரகத்திற்கு ஃபாஸ்ட்டை வரவேற்று சைத்தான் உரையாற்றுகிறான். தற்கால உலகம் கொடிய கண்களுக்கு எவ்வாறு தோற்றுகிறது என்பது அதில் அடங்கியுள்ளது. சைத்தானின் கண்களுக்கு அது சிதைந்து காணப்படுவதை கிலிங்கர் வரலாற்று அனுபவத்தோடு எழுதியுள்ளார்.

அரசிளங்குமாரர்களே, ஆற்றல் மிக்கோர்களே, அழியாத ஆன்மாக்களே, அனைவரையும் நான் வரவேற்கிறேன்; எண்ணற்ற வீரர்களை நான் காணும் பொழுது இன்ப வெறியால் என் உடல் சிலிர்க்கின்றது. ஆழங்காண முடியாத இக் குழியிலே முதன்

முதலாக விழித்து ஒன்றுகச் சேர்ந்தோமே, அந்த நிலையில்தான் இன்றும் நாம் இருக்கிறோம். இங்குதான் ஒரே உணர்வு இருக்கிறது; நரகத்தில் மட்டுமே ஒற்றுமை நிலவுகிறது; இங்கு மாத்திரமே ஒவ்வொருவரும் ஒரே நோக்குடன் உழைக்கின்றனர். உங்கள் மீது ஆட்சிபுரிபவன் சலிப்பான சுவர்க்கத்தின் சுட ரொளியை எளிதில் மறந்து விடக்கூடும். நாம் அதிகமாகவே துன்பத்திற்குள்ளானோம். இப்பொழுதும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஏன் இத்துன்பம்? அவனுக்கு நாம் அஞ்சுவதைவிட அவன் நமக்கு அஞ்சுகிறான். எனவே, நம் அதிகாரத்தை அவன் அடக்கி வைத்துள்ளான். இந்தத் துன்பத்திற்கெல்லாம் ஈடு ஒன்று உள்ளது. மண்ணில் பிறந்த மக்கள் மீது நாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவோம். வலியற்ற இவர்கள் அவனது அன்புக்குரியவர்கள். அவர்கள் பைத்தியத்தன்மையும் பழித்துரையும் அவன் நோக்கங்களை இடைவிடாது தடுக்கின்றன. இந்த எண்ணத் தீயால் எழுச்சியுறும் உங்கள் அனைவருக்கும் வெற்றியுண்டாகுக!

இன்று நான் உங்களுடன் கொண்டாடும் விருந்துக்கான காரணத்தைக் கூறுகிறேன், கேளுங்கள். அஞ்சாத மனிதனை ∴பாஸ்ட் என்பான் என்றுமுள்ள இறைவனுடன் பிணைக்க முற்றான். அவனது உள்ளத்து உரத்தால் இந்த நரக வாழ்வை அவன் மேற்கொள்ளும் தகுதிச் சிறப்பினை அவன் ஒருநாள் பெறுவான். அவன் புத்தகங்களை ஆயிரக்கணக்கில் பெருக்கும் கலையைக் கண்டுபிடித்துள்ளான். அவை மனிதர்களின் ஆபத்து நிறைந்த விளையாட்டுப் பொருள்கள். வெறித்தனத்தையும் தவறுகளையும் பொய்களையும் கோரக்காட்சிகளையும் பரப்புபவை தானே புத்தகங்கள்! வேதனை தோய்ந்த ஐயப்பாடுகளுக்கும் அகந்தைச் செருக்கிற்கும் மூலமாக அமைவது புத்தகங்கள் தாம்! இதுவரை அவைகளின் விலை அதிகமாக இருந்தது. செல்வர்களுக்கே அவை கிட்டின. அதனால், இதயத்திலே இறைவன் வைத்துள்ள எளிமை, பணிதல் இவற்றை மறந்து இறுமாப்பை அவர்கள் மேற்கொண்டனர். அறிவு, ஆய்வு என்ற ஆபத்தான நஞ்சு இப்பொழுது எல்லோருக்கும் கிடைத்துவிடும். இது வெற்றிதான்! சித்த மயக்கம், ஐயுறவு, அமைதியின்மை, புதுத் தேவைகள் முதலியன இனிப் பரவும்; கவர்ச்சி மிக்க இந்த நஞ்சினை உண்டு நம்மிடம் வருவோருக்கு இந்தப் பரந்த நரகத்திலே போதிய இடம் இருக்குமா என்பது ஐயப்பாடுதான். ஆனால், இது ஒரு சிறு வெற்றியே. நான் காலத்தை முன்னேக்கிக் காண்கிறேன். நமக்குக் காலம் என்பது கடிகாரமுள்ளின் ஒரு சுற்றுத்தான். ∴பாஸ்ட்டின் புதுக் கண்டுபிடிப்பு பழைமையைச் சாடும் துணிவாளர்களின் கருத்துக்களை தொற்றுநோய் போல்

எங்கும் பரவச் செய்யும். அக்காலம் நெருங்கிவிட்டது. அப் பொழுது செய்தித் தொடர்புகள் எளிதாகும்; ஏழையின் குடிசைக்கும் போதனைகள் எட்டும். எனவே, விண்ணுலகையும் மண்ணுலகையும் சீர்திருத்த முற்படுவோர் பலர் இளம்புவார்கள். பொய்மை எண்ணங்களிலிருந்து விடுவித்து மக்களைத் தூய்மை யாக்குவதாக அவர்கள் கருதிக்கொள்ளுவார்கள். நன்மையைச் செய்வதில் மனிதன் எப்பொழுதாவது வெற்றியடைந்தானு? அப்படியே வெற்றி யடைந்தாலும் அதை எவ்வளவு காலத்திற்கு நிலைக்க வைக்க முடியும்? பாவத்தைக் காட்டிலும், உயர்ந்த முயற்சிகள் தவருகப் பயன்படுவதால் விளையும் தீங்குகளே மனிதனைப் பற்றுகின்றன. நரகத்தின் வாயில் விழுந்துவிடாமல் தம் மகத்தான திருவினையாட்டால் காப்பாற்றும் ஆண்டவனின் அன்புக்குரிய மக்கள் இருக்கிறார்களே அவர்கள் எவருக்கும் புரியாத கொள்கைகளுக்காகப் போர் நடத்துவார்கள். காட்டு விலங்குகள்போல் ஒருவரையொருவர் கிழித்தெறிந்து கொல்லு வார்கள். மனித இனம் தோன்றிய நாளிலிருந்து அவர்களுடன் சேர்ந்து வளர்ந்த வெறிகள் அத்தனையையும் மிஞ்சிய கோரச் செயல்களால் ஐரோப்பாக் கண்டம் பாழ் வெளி ஆகிவிடும்.

எனது நம்பிக்கை அதிகத் துணிச்சலானது என்று நீங்கள் கருதுகிறீர்கள். அதை உங்கள் முகம் காட்டுகிறது. இன்னும் நான் கூறுவதைக் கேளுங்கள். மனித இனத்தின் கொடுமை நிறைந்த வரலாறு காணுத இப்புதிய வெறியை "ஜயப்போர்" என்று அழைக்கின்றார்கள். வெறுப்புணர்வு, மூடநம்பிக்கை இவற்றில் பிறந்த கொள்கைவெறி மனிதஇயல்பான உறவுகளை உதறி எறிகின்றன. இக்கொடிய வெறியைத் தணிப்பதற்காக வென்று, மகனைத் தகப்பன் கொல்லுவான், தகப்பனை மகன் கொல்லுவான்! குடிகளின் குருதியிலே தோய்ந்த கைகளுடன் அரசர்கள் களித்திருப்பார்கள். கொள்கையிலே மாறுபட்ட வர்கள் என்ற காரணத்திற்காக உடன் வாழ்வோர்களைக் கொன்று குவிக்கும்படி வெறியர்களுக்கு அவர்கள் வாள்களை வழங்கு வார்கள். அப்பொழுது நதிகளிலே செங்குருதி பாயும்; கொலை யுண்டோர்கள் அழுகைக்குரல் நரகத்தையே நடுங்க வைக்கும். தண்டனைக்கெட்டாத கொடுஞ்செயல்களால் பழியேறிய பாவிகள் நம்மிடம் வருவதை நாம் காண்போம். உல்லாச வாழ்வால் உளுத்துப்போய், தந்திரந்தால் இணைந்து நிற்கும் ஆண்டவனின் ஆட்சிபீடத்தை அவர்கள் தாக்குவதை நான் இப்பொழுதே மனக் கண்ணால் காண முடிகிறது. நாம் வெறுக்கும் சமயத்தைத் தாங்கும் தூண்கள் இடிந்து விழும் நிலையில் இருக்கின்றன. இடியும் அக்கட்டடத்தைத் தாங்கிக் காப்பதற்கு இறைவன் ஏதாவது புதிய அற்புதங்கள் நிகழ்த்தாவிடில் உலகிலிருந்து அது

அழிந்து மறைந்துவிடும்; நாம் மீண்டும் பூசனைக்குரிய தெய்வங்களாகக் கோவில்களிலே விளங்குவோம். புனிதமெனக் கருதிப் போற்றிய பொருளின் போலித் தன்மையை மனிதன் கண்டு கொண்டால் அவன் என்னதான் செய்ய மாட்டான்? நேற்று நடுங்கவைத்த கொடுங்கோலனின் கல்லரை மீது இன்று அவன் நடனமாடுவான்; பலியிட்ட பீடத்தைப் பாழடிப்பான்; சுவர்க் கத்தை அடையும் வழியைத் தானே தேடிக் கொள்வான். மனிதனின் அமைதியற்ற ஆன்மாவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிணைத்து வைக்க யாரால் முடியும்? தான் படைத்த மனிதன் நரகத்தை நாடாமல் சுவர்க்கத்தையே நாடுமாறு செய்யக் கடவுளால்தான் முடியுமா? அவனது ஆன்மீக ஆற்றலையும் உடல் வலிவையும், அவன் காணுவது, கேட்பது, தொடுவது; உணர்வது, எண்ணுவது ஒவ்வொன்றையும் மனிதன் தவருகப் பயன்படுத்துகிறான். அவன் விளையாட்டுப் பொருள்களும் விரும்பி ஏற்பவைகளும் தவருகத்தான் பயன்படுகின்றன. கையிற் கிடைப்பவைகளை நொறுக்கி அழிப்பதோடு அவன் மன நிறைவடைவதில்லை; கற்பனைச் சிறகுகளால் பறந்து சென்று தெரியாத உலகங்களையும் கற்பனையால் பாழடிக்கிறான். இரத்தத்தை ஆறுகப் பெருகவிட்டு அடைந்த பெறுதற்கரிய சுதந்திரத்தைக் கூட நன்கு அனுபவிப்பதற்கு முன்பே, தங்கத்திற்கும் இன்பத்திற்கும் விற்றுவிடுகிறான். நன்மை செய்ய இயலாத நிலையில் தீமையின் முன்னே அவன் நடுங்குகிறான். அதிலிருந்து தப்புவதற்கென்று கோரச் செயலுக்குமேல் கோரச் செயலாக அவன் செய்து, தான் கையாலாக்கியதைத் தானே அழித்து விடுகிறான்.

சூருதி சிந்தும் போர்களில் நடக்கும் படுகொலைகளுக்குப் பின் அவன் சோர்ந்து சிறிதுநேரம் ஓய்வெடுக்கிறான். அப்பொழுது அவனது நஞ்சுமிழும் வெறுப்புணர்வு கள்ளமாகவும் நயவஞ்சகமாகவும் வெளிவருகின்றன. சிலர், இந்த வெறுப்புணர்வினை, சமயத்தை எதிர்த்தோரை நீதி முறைப்படி பழிவாங்குவதாகக் காட்டுவார்கள். தங்கள் கொள்கைகளை ஏற்காதவர்களை சிதையிலே போட்டு உயிரோடு அவர்கள் எரித்துவிடுவார்கள். பொருள் தெரியாத புதிர்களையும், புரிய இயலாத நிகழ்வுகளையும் குறித்து சினமுறுவார்கள் சிலர். அறியாமை இருளிலே உள்ளவர்கள் அறிவொளிக்காக முரட்டுத்தனமாகச் சண்டையிடுவார்கள். கொழுந்து விட்டு எரியும் அவர்களது கற்பனை ஆயிரம் புதுந் தேவைகளை உண்டாக்கும். உண்மை, எளிமை, சமயம் இவற்றைப் புறக்கணித்துவிட்டு, பணமும் புகழும் பெறுவதற்கென்று நூல்களை எழுதுவார்கள். புத்தகம் எழுதுவது என்பது எல்லோரும் கையாளும் கலையாகிவிட்டது. புகழும் முன்னேற்றமும் அடைவதற்கென மெய்யறிஞர்களும்

அதை எழுதுகின்றனர். அது மக்கள் மனத்தைக் குழப்பு கின்றதா, நல்லோர்கள் இதயத்தில் எரிச்சலை யூட்டுகின்றதா என்பதைப் பற்றி அவர்கள் அக்கரைப்படுவதில்லை. விண்ணையும் மண்ணையும் இயற்கையிலடங்கும் இயக்கங்களையும், இயற்கை விளக்கும் கேடுகளின் காரணங்களையும், அண்ட கோளங்களைச் சுழற்றும் ஆற்றலையும், வால் மீன்களைப் பரந்த விண் வெளியிலே வீசியெறியும் சக்தியையும், கருதுதற்கரிய கால வெள்ளத்தை யும், அச்சமூட்டும் ஆண்டவனையும், கண்ணிற்குப் புலனுகும் ஒவ்வொன்றையும், புலனுகா அனைத்தையும் உணருதற்கும் அளப்பதற்கும் அறிந்து கொள்ளுதற்கும் அவர்கள் நாட்டமுறு கிறார்கள். சிந்தனைக்கு எட்டாத அனைத்திற்கும் பெயர்களையும் எண்ணிக்கைகளையும் கொடுக்க முயலுவார்கள். தத்துவத்திற்கு மேல் தத்துவம் என்று ஏற்றி உலகத்தில் அறியாமை என்ற இருளை வரவழைப்பார்கள். ஐயப்பாடுகள் என்ற மின்னல்கள் தாம் அந்த இருளிலே ஒளி காட்டுகின்றன. அந்தப் பொய் யொளியை நம்பிச் செல்லுவோர் சேற்றிலழுந்தித் திகைப் பார்கள். அப்பொழுதுதான் தங்களுக்கு நன்றுகப் பார்க்க முடிகிறது என அவர்கள் எண்ணுவார்கள். அவர்களுக்காக நான் காத்திருக்கிறேன்! பிறகு, நகரத்தின் கதவுகளை அகலமாகத் திறவுங்கள். மனித இனம் முழுதும் நுழையட்டும்! இதற்கு முதல் நடவடிக்கை எடுத்தாகிவிட்டது, இரண்டாவது நடவடிக்கை யும் நெருங்குகிறது.

இன்னுமோர் அச்சமூட்டும் புரட்சி உலகில் நடக்க இருக்கிறது. அதுபற்றி விரைவாகத் தொட்டும் தொடாததுமாகச் சொல்லு கிறேன். விரைவிலேயே பழைய உலகில் வாழ்வோர்கள் இது வரை கண்டறியாத புதிய இடங்களை உலகிலே கண்டுபிடிப் பார்கள். அங்குள்ள தங்கத்தைக் கைப்பற்றுவதற்கென இலட்சக் கணக்கான மக்களை நெறித்துக் கொல்லுவார்கள். இப் புதிய இடங்களில் தங்கள் தீச்செயல்களைப் பரப்பி, அங்கிருந்து பழைய இடங்களில் இன்னும் கொடுமையைப் பரப்பும் பொருள் களைக் கொண்டுவருவார்கள். நமது பழிவாங்கும் செயலில் இருந்து, அறியாமையாலும் தூய்மையாலும் பாதுகாக்கப்பட்ட நாடுகள் இனி நமக்கு இரையாகிவிடும். கொடுங்கோலனை கடவுள் பெயரால் பலநூற்றாண்டுகளுக்கு உலகிலே குருதி சிந்தப்படும். இவ்வாறு, சுவர்க்கத்திற்கு வேண்டியவர்களின் மூலமாகவே நம்மை இக்குழியில் தள்ளிய இறைவன்மீது நரகம் வெற்றிபெறும்.

ஆற்றல் மிக்கோர்களே! இதுவே நான் உங்களுக்கு அறிவிக்க விரும்பிய செய்தியாகும். இப்பொழுது என்னுடன் சேர்ந்து

இவ்விருந்து நாகூக் கொண்டாடுக. வரவிருக்கும் வெற்றி குறித்து இன்றே களிப்பெய்துக. மனிதர்களே நான் அறிவேன், எனவே வெற்றி கிடைப்பது உறுதி. ∴பாஸ்ட் நீண்டநாள் வாழ்வானுக!

ஹெய்ன்றிஷ் லியோபால்டு வேக்னர்

குழந்தைக் கொலை

ஹெய்ன்றிஷ் லியோபால்டு வேக்னர் (1741-1779) என்பார் கிலிங்கர், லென்ஸ் இவர்கள் போன்று முக்கியமானவர் அல்லர். இருப்பினும், அவர் சிந்தனைப் புயல் எழுப்பும் நாடகாசிரியர்களின் வகையைச் சேர்ந்தவர். "குழந்தைக் கொலை" (1776) என்ற அவரது நாடகம் புகழ்பெற்றது. கற்பிழந்த பெண்ணைருத்தி களவிலே பிறந்த குழந்தையைக் கொன்றுவிடுகிறாள் என்பதுதான் நாடகத்தின் கருப்பொருள். கிலிங்கர் காலத்தினர் இப்பொருளை அடிக்கடி கையாண்டனர். கெதெ எழுதிய "பாஸ்ட்டின் கிரஷென்" என்ற கதையிலும் இப்பொருள் கையாளப்பட்டுள்ளது.

சாதாரண குடிமகன் ஒருவனின் மகள் ஈவ்ஷென் என்ற பெண்ணை உயர்குடி வீரன் ப.ன் குரோனிங்செக் என்பான் கற்பழித்துவிடுகிறான். அவன் மனச்சான்றும் உணர்ச்சிகளும் செயல்முடிந்த பின்பே எழுச்சியுறுகின்றன. பிறகு, ஈவ்ஷென்னின் வாழ்விற்கு வகைசெய்யவேண்டும் என்று அவன் விரும்பி வாணிபத்திற்கென பயணத்தை மேற்கொள்ளுகிறான். காதலியிடம் விடைபெறும் காட்சியில் உள்ள பகுதிகளை இங்குக் காணுகிறோம். ஆனால், அவன் திரும்பிவரும்பொழுது எல்லாம் முடிந்துவிடுகிறது. ஈவ்ஷென் தனியாக வாழ்ந்தபொழுது அவளுக்குக் குழந்தை பிறக்கிறது. தன் காதலன் குரோனிங்செக் தன்னைக் கைவிட்டுவிட்டதாக அவள் கருதினாள். சமுதாயம் தன்னை இழிவாகக் கருதுமே என்று அஞ்சினாள். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் பெற்ற குழந்தையை அவள் கொன்றுவிட்டாள். இந்த நிகழ்ச்சித் தொடர்களை, சமுதாயத்தின் பல வகுப்பினர்களையும் பின்னணியாக வைத்து அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார் வேக்னர் அதிலே, சமுதாயத்தைக் குறைகூறும் போக்குக் காணப்படுகிறது. சாதாரண குடிமக்களின் பெண்கள் நிலையைப் பயன்படுத்திய உயர்நிலை அதிகாரிகளின் அகந்தையையும் உணர்ச்சியின்மையையும் வேக்னர் சாடுகின்றார். தீவிர ஒழுக்கத்தையும் நெறியையும் மிகைபடக் கருதிய நடுத்தர வகுப்பினர் "வழுக்கி விழுந்த" இளம் பெண்கள் மீது பரிவும் இரக்கமும் காட்டாது இருந்ததையும் அவர் தாக்கியுள்ளார்.

ஈவ்ஷென்: நீ எப்பொழுது திரும்பி வருவதாக எண்ணம்?

சீபன் குரோனிங்செக்: பயணம் அநேகமாக இரண்டு மாதங்கள் பிடிக்கலாம்.

ஈவ்: இரண்டு மாதங்களா! என் இதயம் தாங்காது. இருப்பினும் நான் பொறுத்திருப்பேன். உன் பணத்திற்கு மாருக நீ விரைவிலே திரும்புமாறு என்றும் நான் வேண்ட மாட்டேன். எப்படியும் எனக்குத் துயரந்தான்.

கீபன்: விரைவில் திரும்பவேண்டும் என்பதுதான் எனது ஆசையும்.

ஈவ்: உனது ஆசையும் அதுதானே! நான் உன்னை நம்புகிறேன், உன் நேர்மையை நம்புகிறேன். ஆனால், எதிர்காலம் பற்றி எவர் கூற முடியும்? யாரும் கூற முடியாது. உன்னால் கூட முடியாது. விதி எப்படியோ! அதை யார் அறிய முடியும்? ஆனால் நான் அடக்கி வைக்க இயலும் என் உள்ளெண்ணம் எனது விதி கொடுமையானதாக இருக்கும் என்று உணர்த்துகிறது?

கீபன்: ஈவ்ஷென்! நீ எப்படி இவ்வாறெல்லாம் பேசுகிறாய்?

ஈவ்: எப்படியா! இது இயல்புதானே. நீ உன் வாக்கைக் காப்பாற்றவில்லையென்றால்?

கீபன்: அது ஒருநாளும் நடக்காது!

ஈவ்: காலம்தான் அதைக் காட்டவேண்டும். கொஞ்சம் கேள்! நீ உன் வாக்குப்படி நடக்காமல் என் விதிப்படி நான் போகட்டும் என்று என்னை விட்டு விட்டாயானால் என்ன ஆகும்? தந்தையின் சிற்றத்தையும் உறவினரின் சினத்தையும், எனக்கு ஏற்படும் அவமானத்தையும் நான் எவ்வாறு தாங்குவேன்! தாங்கிக் கொள்ளுவேன் என்று எண்ணுகிறாயா? ஒரு நாளும் இல்லை. மக்களிடம் இருந்து விலகிப்போய் தனிமையில் கண்காணாத காட்டுப் புதர்களிலே நான் மறைந்து வாழத் தலைப்படுவேன். ஓடையிலே கூட நீர் அருந்த மாட்டேன். கற்பிழந்த எனது உருவின் நிழலை அந்த ஓடை காட்டிவிடுமே! அதனால் மழை நீரை மட்டுமே குடிப்பேன். இதற்கொல்லாம் தப்பி இறைவன் அருளால் நான் உயிருடன் இருப்பின், நான் செய்வது ஒன்றுண்டு. தந்தையின்றி அன்னையாகப் பிறக்குமே குழந்தை; அது மழலை மொழியிலே அப்பா! அம்மா! என்று சொல்லுவதற்கு முன் அதன் செவிகளிலே "துரோகம்," "ஏமாற்று" என்ற கொடுஞ் சொற்களை இறைத்து கூறிக்கொண்டே இருப்பேன். அச்சொற்களைத் தெளிவாகத் திருப்பிக் கூறுவதற்கு குழந்தையும் கற்றுக்கொள்ளும்! பிறகு சித்தம் கலங்கி எங்கள் ஆராத் துயரத்திற்கு ஒரு முடிவைத் தேடிக்கொள்வேன். இது விதியின் கொடுமையல்லவா, குரோணிங்செக்?

கீபன்: ஆமாம்! எனக்கு மயிர்க்கூச்செரிகிறது. நான் வீரன். எத்தனையோ போர்க்களக் காட்சிகளை இளம் வயதில் கண்டிருக்கிறேன். ஆனால், அது போல்....

ஈவ்: இந்தக் காரியங்கள் நடக்கின்றனவா என்பது உன்னைத் தான் பொறுத்திருக்கிறது.

ஃபன்: அவற்றிலிருந்து ஆண்டவன் உன்னைக் காப்பாற்றட்டும்! அவற்றை நினைக்கவே உள்ளம் கூசுகிறது! ஈவ்லென்! இத் துயரக் கனவுகளை மனத்திலிருந்து அகற்றிவிடு, என்னை நம்பு. நான் கொடுத்த வாக்குறுதியை எனது நேர்மையை, நம்பு. என்னிடம் உள்ள நேர்மை ஒலி சிறு பொறியளவு இருந்தாலும் அதை நீ இப்பொழுது தூண்டி பெரிதாக்கிவிட்டாய்.

ஈவ்: சரி. குரோனிங்செக்! அப்படியே ஆகட்டும். நானும் வாக்குறுதி அளிக்கிறேன்.

ஃபன்: அமைதியுடனும் நம்பிக்கையுடனும் நான் திரும்பும் வரை காத்திருப்பதாக நீ வாக்களிப்பாயா?

ஈவ்: (யோசித்து) வாக்களித்துவிட்டு அதை மீற நான் விரும்பவில்லை.

ஃபன்: எனது அன்பே! நான் நேர்மையானவன் என்று நீ நம்பினால் உனது வாக்குறுதியைக் காப்பாற்ற முடியும்.

ஈவ்: எனது செயலை வெளிக்காட்டி எனது பெற்றோர்களுக் கும் அது தெரியவேண்டும் எனில் நான் உன்னை நம்பித்தான் ஆக வேண்டும். நீ எவ்வளவோ என்னைக் கட்டாயப்படுத்தியிருக் கிறாய். ஆனால் அச்சம்.....

ஃபன்: தயவு செய்து இதை வெளியில் கூற வேண்டாம். உன் தந்தையை நினைத்தால் எனக்கு நடுக்கமெடுக்கிறது. சிரித்த முகத்துடன் இருக்க முயல்வாயாக. எவரும் எவ்வித ஐயுறவும் கொள்ளக்கூடாது.

ஈவ்: எனது மாமன் மகனும் இதை அறிய மாட்டான். அவனது கூரிய கண்கள் எனது தன்னுறுதியைக் குலைத்துவிடு கின்றன. நீ கூறிய செய்தி அவன் மனத்தை உறுத்துவதுபோல் இருக்கிறது. அவன் பார்வையில் அது தெரிகிறது. நான் ஏதும் கண்டுகொள்ளாதவள் போல் இருக்கிறேன்.

ஃபன்: உனக்கு ஏதாவது அவன் கேடு செய்ய முயலுவானா?

ஈவ்: இல்லை, குரோனிங்செக்! அவன் எனக்கு இடர் விளைக்க விரும்பவில்லை, எனது நன்மையையே அவன் விரும்புவான். ஆனால், அவனுக்கு என்மீது ஒரு கண் உண்டு. அதற்கு என் தாயும் இசைந்திருக்கலாம். மதகுருவாகப் போவோர்களும் தங்கள் மனைவியாகத் தக்க பெண்களைத் தேர்ந்தெடுத்துவைத் துக் கொள்ளும் வழக்கம் உண்டு. பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் கழித்து ஒரு சிற்றூரில் மதகுரு வேலை கிடைத்தால் அப்பொழுது மனைவிக்கென்று ஒரு பெண்ணைத் தேடிப்போக வேண்டியதில்லை யல்லவா?

ஃபன்: அதற்குள் நாமே ஒரு பெண்ணைப் பெற்று அவனுக்குக் கொடுத்து விடலாமே!

ஈவ்: அப்பெண் தனது தாயை நினைத்து அவமானப்படாமல் இருக்க வேண்டுமே. அது உன் பொறுப்பு. இப்பொழுது நீ இங்கிருந்து போய்விடு. இவ்வளவு நேரங்கடந்த வேளையில் எனது அறையில் விளக்கு எரிந்ததில்லை. அண்டையிலுள்ளோர் இதைப் பார்ப்பார்கள்.

ஃபன்: அண்டை வீட்டைப்பற்றியும் நீ கவலைப்படுகிறாயா?

ஈவ்: இதயத்திலே (நெஞ்சைக்காட்டுகிறாள்) அமைதி இல்லையென்றால், அது நம்மை உறுத்தினால், நமது நிலை கண்டு கூட நாம் அஞ்சுகிறோம். இப்பொழுது நீ போய்விடு. நாளை மீண்டும் நான் என் தாயுடன் இருக்கும் பொழுது வா. அவளிடமும் நீ விடை பெற்றுக்கொள்வாயல்லவா?

ஃபன்: உன்னைப்பார்த்தும் நான் உன்னிடம் பேசாமல் இருக்கவா?

ஈவ்: பேசும் உனது விழிகளை நான் புரிந்து கொள்வேன். (அவர்கள் வாயிலருகில் செல்லுகின்றனர்) இரண்டு மாதங்கள் என்றுதானே நீ சொன்னாய்?

ஃபன்: விஞ்சிப் போனால் இரண்டு மாதங்கள்! மீண்டும் இந்த வெண்ணிலா முன்னிலையில் விண் மீன்கள் முன்னிலையில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இரண்டு மாதங்கள்தான்! நாளை நான் வண்டியிலே ஏறும்பொழுது எனது பிரியா விடைப் பார்வையிலே அந்த உறுதியைக் காண்பாய். அமைதியாக இரு! எனதன்பே!

(அவன் ஈவ்ஷெனின் கரங்களை அழுத்திப் பிடித்துவிட்டுச் செல்லுகிறான். பாதி திறந்த கதவின் வழியே தலையை வெளியிலே நீட்டி மெல்லிய குரலிலே ஈவ்ஷென் கூறுகிறாள்.)

ஈவ்: இன்னுமொரு சேதி குரோனிங்செக்! (அவன் திரும்பி வருகிறான். அவனை முத்தமிட்டவாறே அவள் கூறுகிறாள்). உனது பயணத்திற்குப் பரிசாக இதை நாளைக்கு நான் அளிக்க முடியாதல்லவா! (அவன் வெளியே நிற்க, கதவை விரைவிலே அவள் தாளிட்டுக் கொள்ளுகிறாள்)

யொகன் உல்ப்காங்க் ஃபன் கெதெ

கெதெ (1749–1832) மெயின் மேல் பிராங்க் ஃபர்ட்டில் பிறந்தவர். இளமையில் அவர் 'ஸ்டோர்ம், திரங்க்' (புயல், நெருக்கடி) பாணியைப் பின்பற்றிய ஜெர்மன் இலக்கிய இயக்கத்திடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 1775இல் டியூக் கார்ல் அகஸ்ட் அவரை, வைமாரில் தமது கோமகன் கொலுமண்டபத்துக்கு அழைத்துச் சென்றார். பொறுப்புவாய்ந்த அரசியல், நிர்வாகப் பணிகளைக் கெதெ ஏற்றுத் தம் வாழ்வில் பெரும்பகுதியை அங்கு கழித்தார். 1786-1788இல் இத்தாலிக்கு பயணம் சென்றபோது, பழமையான உருவாக்கம் சார்ந்த கலையினால் அவர் ஈர்க்கப்பட்டார். தெளரிஸில் இபிகேனியா, 'டார்க்குவேட்டோ தாஸ்ஸோ' போன்ற கலையழகும் நிறைவும் மிக்க நாடகங்களை அவர் அக்கட்டத்தில் தான் படைத்தார். ஷில்லருடன் அவர் கொண்டிருந்த நட்பும் அவரை ஊக்குவித்து, இலட்சிய உந்துதலாக அமைந்தது. 1794ஆம் ஆண்டு முதற்கொண்டு இரு எழுத்தாளரும், நெருங்கிய தொடர்பு கொண்டு, தங்கள் கருத்துக்களை நயமுறப் பரிமாறி வந்தனர். தமது பதவியை விட்ட பின், வைமார் அரசவை நாடக அரங்கை நிர்வகிப்பதிலும், விரிவான விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும், கெதெ ஈடுபட்டார். வளமான, அனுபவம் மிக்க, நீண்ட வாழ்வு வாழ்ந்த பின், 1832இல் அவர் மரணமடைந்தார். அவருடைய தலை சிறந்த நாடகப் படைப்பான 'பாஸ்ட்', இறைவனை நாடி மனிதன் உலகில் அலைவதை உருவகப்படுத்துகிறது.

தமது வயோதிகப் பருவத்தில், கெதெ, தமது எழுத்துப் பாணியில், வீரகாவிய இலக்கிய அம்சங்களுக்கும் (Romantic elements), சமூகப் பிரச்சினைகள் பற்றிய சிந்தனைகளுக்கும் இடமளித்தார். இவ்வகையில், 19வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றவிருந்த சில போக்குகளுக்கு அவர் முன்னோடியாக விளங்கினார். கவி என்ற முறையில், ஒவ்வொரு வகையான படைப்பிலும் கெதெ இலட்சிய நிறை நிலையை எய்தினார். இப்படைப்புகளினாலும், மெய்யியல் தத்துவ எழுத்துக்களினாலும், ஐரோப்பிய இலக்கியத் துறையிலும், தற்கால சிந்தனை வளர்ச்சியிலும், அவர் மகத்தான செல்வாக்குப் பெற்றுள்ளார்.

இளம் வியர்த(ரி)ன் துன்பங்கள்

'இளம் வியர்த(ரி)ன் துன்பங்கள்' (1774) என்ற புதினத்தைக் கெதெ, தம் இளம் வயதில் எழுதினார். அந்த கட்டத்தில், அவரு டைய அனுபவங்களையும், வாழ்க்கை பற்றி மன நிலையையும் அப் புதினம் பிரதிபலிக்கின்றது. புதினத்தில் பெரும் பகுதி, கடிதங்கள்

வடிவத்தில் அமைந்துள்ளது. அக்கடிதங்களிலிருந்து வியர்த(ரி)ன் கதை விரிகிறது. வியர்த(ர்) ஆழ்ந்த உணர்வும், வளமான ஆன்மீக நம்பிக்கைகளும் கொண்ட இளைஞர். இயற்கை, கலை ஆகியவற்றின் செல்வாக்கினால் அவன் பெரிதும் கவரப்பட்டவன். ஆனால் வாழ்வில் காணும் அநீதிகளுக்கு எதிராக அவன் கொதித்து எழுகின்றான். சமூகத்துடனும் தனிப்பட்டவர்களுடனும் அவன் கொண்டிருந்த உறவு, அவன் வளர்ச்சிக்குக் குந்தகமாய் இருக்கின்றது. ஆகவே தொடர்ந்து அவனுக்கு ஏற்படும் ஏமாற்றங்கள் அவனுக்குக் கசப்பை உண்டு பண்ணுகின்றன. ஒருத்திமேல், நிறைவேறமுடியாத காதல் கொண்ட துன்ப அனுபவம் அவனைத் தற்கொலைக்கு உந்துகிறது. அவன் காதலித்த பெண் லாட்டி, அதற்கிடையில் ஆல்பெர்ட் என்ற இன்னொருவரை மணம் புரிகிறாள். புதினத்தின் இறுதியில் லாட்டியை அவன் பார்க்கச் சென்ற கடைசி சில முறைகளைச் சித்திரிக்கும் பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. கடிதங்களின் பதிப்பாளர் என்ற கற்பனைப் பாத்திரம் கூறுவதாக இது அமைந்துள்ளது. வியர்த(ர்) பிரசுரமானவுடனேயே அமோக வெற்றிபெற்றது. கதாநாயகனின் கட்டுக்கடங்கா உணர்ச்சிப் பெருக்கும், உறுதி தளராத, மேதை ஒளிபெற்ற பண்பும், அந்தக் காலத்துக்கு ஏற்ற படைப்பாக அப் புதினத்தை ஆக்கியது.

தன் நண்பனுக்குக் கடிதம் எழுதின அதே நாளன்று—கிறிஸ்து மஸுக்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை அது—வியர்த(ர்) லாட்டியைப் பார்க்கச் சொன்னான். கிறிஸ்துமஸை முன்னிட்டுத் தன் சகோதர சகோதரிக்களுக்காகத் தயாரித்திருந்த சில பொம்மைகளை அடுக்கும் வேலையில் அவள் முனைந்திருந்தாள். குழந்தைகளுக்குக் கிட்டும் இன்பம் பற்றியும், எதிர்பாராமல் ஒரு கதவைத் திறந்ததும், மெழுகுவர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்து மஸ் மரத்தையும், இனிப்புப் பண்டங்களையும் ஆப்பிள்களையும் கண்டு இன்ப லோகத்துக்கு அழைத்துச் செல்லப்படும் பரவசநிலை பற்றியும், அவன் பேசினான். லாட்டி, புன்சிரிப்பில், தன் உணர்ச்சிகளை மறைக்க முயன்றாள். "நல்லவனாய் நடந்து கொள்வதாக வாக்களித்தால், உனக்கும் ஒரு பரிசு கிடைக்கும். அழகான மெழுகுவர்த்தித் தண்டும் இன்னும் ஏதாவது தருவேன்," என்று லாட்டி கூறினாள்.

"என் அன்புக்குரிய லாட்டி, நல்லவன் என்றால் நீ நினைப்பது என்ன? நான் நல்லவனாயிருக்க எப்படி நடக்கவேண்டும்?" என்று அவன் கேட்டான்.

"வியாழக்கிழமை மாலை கிறிஸ்துமஸுக்கு முன்னாள் மாலை. குழந்தைகளும் என் தந்தையும் வருவார்கள். எல்லோரும் அப் பொழுது பரிசுகள் பெறுவார்கள். நீயும் அப்பொழுது வர

வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் அதற்கு முன் வரக் கூடாது,'' என்று அவள் பதில் கூறினாள்.

வியர்த(ர்) திகைப்படைந்தான்.

''தயவுசெய்து அப்படித்தான் நடக்கவேண்டும். இப்படியே நாம் போய்க் கொண்டிருந்தால், எனக்கு மன நிம்மதியே இராது. என்னால் இதைத் தாங்கமுடியாது,'' என்று அவள் நொந்து கொண்டாள்.

'இப்படியே போய்க்கொண்டிருக்க முடியாது,' என்று அவள் சொன்னதையே தனக்குள்ளாக முணுமுணுத்துக்கொண்டு, அவன் அவளிடமிருந்து வேறுபுறம் திரும்பி, அறையில் குறுக்கே யும் நெடுகவும் நடக்கத் தொடங்கினான். தன் சொற்கள் அவ னுக்கு அதிர்ச்சியைத் தந்துவிட்டன என்பதை உணர்ந்த லாட்டி, அவன் கவனத்தைத் திருப்ப, வேறு எதை யெல்லாமோ பற்றிக் கேள்வி கேட்டாள். ஆனால் அவன் சமாதானம் அடையவில்லை. ''சரி, லாட்டி. நான் இனிமேல் உன் கண்ணில் படவே மாட்டேன்,'' என்று அவன் கூறினான்.

''ஏன் அப்படி? வியர்த(ர்), நீ எங்களை இனிமேலும் வந்து பார்க்கலாம்; அவசியம் வந்து பார்க்கவும் வேண்டும். ஆனால் இவ்வளவு வேகமாய் இராமல், நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், அவ்வளவுதான். உனக்கு ஏன் இவ்வளவு வேகம்? நீ தீண்டுவதில் எல்லாம், கட்டுக்கடங்காத உணர்ச்சி வெறியை ஏன் பாய்ச்சவேண்டும்?'' அவன் கையைப் பற்றிக் கொண்டே அவள் கூறினாள்: ''உன்னைச் சிறிது நிதானப்படுத்திக் கொள். உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். உன் உயர்ந்த மனம், உன் அறிவு, உன் ஆற்றல், இவை உனக்கு எத்துணை இன்பம் கொண ரும் என்பதை எண்ணிப்பார். ஆண் மகனைப் நடந்துகொள். உன்மேல் அனுதாபம் தான் கொள்ளக்கூடிய இந்தப் பிறவியிடம் கொண்டுள்ள அளவற்ற காதலை வேறு திக்கு நோக்கித் திருப்பு.''

அவன் தன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, அவளை வருத்தத்துடன் உற்று நோக்கினான். அவன் கையை இறுகப் பற்றிக்கொண்டே, அவள் கூறினாள்: ''வியர்த(ர்), ஒரு நிமிடம் அமைதியாகச் சிந்தித்துப் பார். வேண்டுமென்றே உன்னையே நீ ஏமாற்றிக் கெடுத்துக் கொண்டிருக்கின்றாய் என்பதை நீ உணர வில்லையா? என்னை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும், வியர்த(ர்)? எல்லோரையும் விட்டு விட்டு என்னை, நீ சொந்தமாக்கிக்கொள்ள முடியாது என்பதை உணர்வதேதான், என் மீது உன் ஆசையைக் கட்டுக் கடங்காததாய் ஆசையைக் ஆக்குகிறது என்று நான் அஞ்சுகிறேன்.''

அவள் கையிலிருந்து தன் கையை விடுவித்துக்கொண்டு, வெறித்து, ஆத்திரம் நிறைந்த பார்வையுடன் அவகீ அவன் உற்று நோக்கினன்.

"மிகவும் கெட்டிக்காரத் தனமாய்ப் பேசுகிறாய்? ஒரு வேகீ ஆல்பர்ட் சொன்ன சொற்களேயே நீ என்னிடம் ஒப்பிக்கின்றாய் போலும். உண்மையில் மிகவும் சாமர்த்தியமான பேச்சுதான்", என்று அவன் கூறினன்.

இடைமறித்து அவள் பேசினள். "இச் சொற்களீ எவருமே சொல்லக்கூடும். இந்த பரந்த உலகில், உன் இதய ஆசைகளீ நிறைவு செய்யக்கூடிய ஒரு பெண் இருக்க மாட்டாளா? உன்னீ ஒருநிலைப் படுத்திக்கொண்டு, அவளீத் தேடு. அவளீ நீ நிச்சயமாய்க் காண்பாய், என்று நான் உறுதி கூறுகிறேன். நீயே உன் மேல் விதித்துக்கொண்டுள்ள கட்டுப்பாடுகளால், உன்னைப் பற்றியும், நம்மைப் பற்றியும், நான் நீண்ட நாட்களாகவே கவலைப்பட்டு வருகிறேன். தன்வசமிழந்த நிலையிலிருந்து மீள முயல். எங்காவது பயணம் சென்றால், அது உன் மனத்தைத் திருப்ப உதவக்கூடும். நிச்சயமாக அது உதவும். உன் அன்புக்கு அருகதையான ஒருத்தியை நாடிக் கண்டுபிடி. அதன் பின் திரும்பி வா. உண்மையான நட்பின் இன்பத்தை நாம் அப் பொழுது துய்க்க முடியும்."

கெட்ஸ் ∴பன் பெஹ்லிஷிங்ஷென்

(கெட்ஸ் ∴பன் பெஹ்லிஷிங்ஷென்) (இரும்புக் கரம் கொண்ட கெட்ஸ்) 1773இல் எழுதப்பட்டது. (ஸ்டோர்ம், திரங்க்) பாணியில் எழுதப்பட்ட கெதெயின் சிறந்த நாடகம். பதினாறும் நூற்றாண்டு ஜெர்மனியின் வரலாற்று இயக்கங்கள் என்ற பரந்த பின்னணியில் கதாநாயகனைச் சித்திரிக்கிறது அப் புதினம். அக்காலத்தில் எழுந்த அரசியல் கொந்தளிப்புகளில், பழைய அமைப்பு மூழ்கிப் புது அமைப்பு—பல்வேறு சிறுசிறு மாநிலங்கள் கொண்ட அமைப்பு —உருவாகியிருந்தது. இந்தச் சிறு ஆட்சிகளின் சமயச் சார் புடைய, சமயச்சார்பற்ற அவைகளில், எதேச்சாதிகார, சுயநலமிக்க அதிபதிகளீ எதிர்த்துத் தான், முத்திரை வீரர் (Knight) கெட்ஸ் தம் உரிமைகளீயும் தனிப்பட்ட சுதந்திரத்தையும் காக்கப் போராடு கிறார். அவர் நேர்மையானவர்; துணிவும் தீரமும் உடையவர். மாமன்னருக்கு மட்டுமே தாம் கட்டுப்பட்டவர் என்பதை ஏற்றுக் கொண்டவர். அவர் கைவிடப்பட்டு வஞ்சிக்கப்பட்டபின், அவர் குடியானவர் பட்டாளத்துத் தலைவர் ஆகின்றார். இறுதியில் அவர் சிறை செய்யப்பட்டு, இறக்கின்றார். ஆனால் அந்தக் காலத்தின்

அநீதிகளையும் கொடுமைகளையும் தன்னந்தனியாக எதிர்த்துப் போராடிய வீரராக அவர் நினைவு போற்றப்படுகின்றது. கெட்ஸ் விசாரணை செய்யப்படும் காட்சியிலிருந்து ஒரு பகுதி இங்கு தரப் பட்டுள்ளது. கெட்ஸின் மனத் தூண்டுதல்கள், அவர் எதிரியின் சூழ்ச்சிகள் ஆகியவற்றை இக் காட்சி புலனுக்குகின்றது.

எழுத்தர் : கெட்ஸ் .:பன் பெஹ்லிஷிங்ஷென் ஆகிய நான், இக்கடிதத்தின் மூலம் பகிரங்கமாய் ஒத்துக்கொள்வது என்ன வென்றால், நான் அண்மையில் மாமன்னரையும் அவர் பேராட்சி யையும் எதிர்த்துக் கலகம் செய்துள்ளதால்....

கெட்ஸ் : அது உண்மையல்ல. நான் கலகக்காரன் அல்ல. மாட்சிமை மிக்க மாமன்னருக்கு நான் துரோகம் எதுவும் செய்ய வில்லை. பேராட்சி பற்றி எனக்குச் சிறிதும் அக்கறை இல்லை.

கவுன்சிலர் : நிதானமாய் இரு. மேலே கேள்.

கெட்ஸ் : இதற்கு மேல் நான் எதுவும் கேட்க மாட்டேன். யார் வேண்டுமானாலும் முன்வந்து சாட்சியம் கூறட்டும். மாமன்னரை எதிர்த்தோ, ஆஸ்திரிய அரச வம்சத்துக்கு எதிராகவோ, நான் ஒரு சிறு நடவடிக்கையாவது எடுத்துள்ளேனா? ரீஜெண்டுக்கு ஜெர்மனி எவ்வளவு கடமைப்பட்டுள்ளது என்பதையும், குறிப் பாகக் குறைந்த செல்வாக்கு உடையவர்களும், வீரத்தளபதி களும், சுதந்திரக் குடிமக்களும் தங்கள் மாமன்னருக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளனர் என்பதையும், மற்றவர்களைவிட, நான் அதிகம் உணர்ந்துள்ளேன் என்பதை என் நடவடிக்கைகள் அனை வற்றிலும் நான் காட்டவில்லையா? இக் கடிதத்தில் கையொப்ப மிட நான் இசைந்தால் நான் ஒரு மோசமான கயவனாக இருக்க வேண்டும்.

கவுன்சிலர் : இதமாக உன்னிடம் பேசி நியாயத்தை எடுத்துக் காட்டவும், அவசியமானால் உன்னைக் கோட்டைத் தூபியில் தள் ளிச் சிறைப்படுத்தவும், எங்களுக்குக் கண்டிப்பான உத்தரவு கிடைத்திருக்கிறது.

கெட்ஸ் : கோட்டைத்தூபிச் சிறையிலா ? என்னையா?

கவுன்சிலர் : நாங்கள் இப்பொழுது காட்டும் கருணையை ஏற்றுக்கொள்ள நீ சித்தமாயிராவிடில், சிறையிலே கிடந்து நீதி வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளச் சித்தமாகு.

கெட்ஸ் : கோட்டைத்தூபிச் சிறையிலா ? மாமன்னரின் அதி காரத்தை நீங்கள் தவறுகப் பயன்படுத்துகின்றீர்கள். கோட்டைத் தூபிச் சிறை! அது அவர் உத்தரவாய் இருக்கமுடியாது. துரோகி களே, முதலில் நீங்கள் எனக்கு ஒரு வக்கீல் விரித்து, வீரமகன் எல்ற முறையில் உங்கள் வாக்குறுதி மூலம் ஆசைகாட்டி, வீர

மகனுய் என்னைச் சிறையில் தள்ளிப், பின்பு உங்கள் வாக்குறுதியை மீற நீங்கள் சதி செய்கிறீர்கள்.

கவுன்சிலர்: கொள்ளைக்காரனிடம் நாங்கள் ஏன் மரியாதை காட்ட வேண்டும்?

கெட்ஸ்: நான் போற்றி வணங்கும் மாமன்னரின் முத்திரையை நீங்கள் அணிந்து களங்கப்படுத்திக் கொண்டிராவிடில், 'கொள்ளைக்காரன்' என்ற சொல்லை நீங்களே விழுங்குமாறு செய்வேன்; அல்லது அச்சொல்லே உங்கள் குரல்வளையில் சிக்க, நீங்கள் மூச்சுத் திணறிச் சாவீர்கள். கண்ணியமிக்க ஒரு போராட்டத்தில் நான் ஈடுபட்டுள்ளேன். நான் எந்தச் சாதனைக்காக இங்கு உங்களிடம் பிடிபட்டு நிற்கின்றேனோ, அதைப்போன்ற உயர்ந்த ஒரு சாதனையை நீங்கள் வாழ்க்கையில் ஒரு முறையாகிலும் செய்திருந்தால், அதற்கு நீங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துவதுடன் உலகின் முன்னிலையில் பேரும் புகழும் பெற்றிருப்பீர்கள்.

கவுன்சிலர் ஒரு சைகை காட்ட, செனேட்டர் மணிக்கயிற்றை இழுக்கிறார்.

கெட்ஸ்: நான் புறப்பட்டது, அற்ப இலாபத்திற்கோ, எண்ணிவிட வல்லமையில் குறைந்த, ஆயுதமற்ற, முத்திரை வீரர்களிடமிருந்து (Knights) நிலத்தையும் பணியாட்களையும் பறிக்கவோ அல்ல. என் மகனை விடுதலை செய்து, என் உயிரைக் காக்கவே நான் புறப்பட்டேன். அதில் தவறு எதுவும் நீங்கள் காண முடியுமா? பஞ்சணையில் சுகவாசம் செய்யும் மாமன்னரும் பேராட்சியும் எங்கள் தேவைகளை உணர்ந்திருக்க முடியாது. இறைவன் அருளால் எனக்கு இன்னமும் ஒரு கை இருக்கிறது. அக் கையை நான் பயன்படுத்தியது நியாயம் தானே.

கையில் கம்புகளும் இடுப்பில் ஆயுதங்களும் தாங்கிக் குடிமக்கள் உள்ளே வருகின்றனர்.

கெட்ஸ்: இது என்ன?

கவுன்சிலர்: நீ இணங்காமாட்டாய், அவனைப் பற்றிச் செல்லுங்கள்.

கெட்ஸ்: அதுதான் பொருளா? ஸ்பெயின் நாட்டுக் காளையாய் இருந்தால் ஒழிய, யாரும் என்னருகே நெருங்கி வராமல் இருப்பது நல்லது. அவ்வாறு நெருங்கி வந்தால், என் வலது கையால் அவன் காதுக்குக் கிடைக்கும் திருகலில், தகிலவலி, பல்வலி உள்பட உலகில் உள்ள எல்லா வலிகளும் அவனுக்குக் குணமாகி விடும்.

[அவர்கள் அவனை நெருங்குகின்றனர். அவன் ஒருவனைத் தரையில் வீழ்த்துகின்றான். மற்றொருவனிடமிருந்து தொங்கிக்

கொண்டிருக்கும் ஆயுதங்களைப் பறித்துக் கொள்கிறான். அவர்கள் பின் செல்கின்றனர்.]

வாருங்கள், வாருங்கள் உங்களில் வீரமிக்கவனைச் சந்திக்க விரும்புகிறேன்.

கவுன்சிலர்: பணிந்து விடு!

கெட்ஸ்: கையில் வாள் இருக்கும் போதா? முயல்வேட்டை யாடும் இந்தக் கூட்டத்தைச் சிதறடித்து, நான் தப்பிச்செல்ல முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் உங்கள் சொல்லைக் காப்பாற்ற உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கிறேன். முத்திரை வீரனுக்குரிய முறையில் என்னைச் சிறையில் நடத்துவதாக வாக்களியுங்கள். அப்படியானால் நான் என் வாளைக் கொடுத்து விட்டு முன்போல் உங்கள் கைதியாக இருப்பேன்.

கவுன்சிலர்: கையில் வாளுடன், மாமன்னருடன் வழக்காட விரும்புகிறாயா?

கெட்ஸ்: மாமன்னரை எதிர்த்தால் இறைவன் என்னைச் சபிக்கட்டும். உங்களுடனும், உங்கள் உத்தமக் கூட்டத்துடனும் தான் நான் வழக்காடுகின்றேன். குடிமக்களே, நீங்கள் நல்லவர் கள்; வீட்டுக்குத் திரும்புங்கள். இங்கு நீங்கள் வீணுக்கும் நேரத் திற்காக உங்களுக்கு ஊதியம் எதுவும் கிடைக்காது. இங்கோ, காயங்கள் தவிர, வேறெதுவும் உங்களுக்குக் கிட்டாது.

கவுன்சிலர்: அவனைப் பிடியுங்கள்! மாமன்னர் மீது உங்கள் விசுவாசம், உங்களுக்கு இதற்குமேல் தைரியம் ஊட்டவில்லையா?

கெட்ஸ்: அவர்களுக்குத் தைரியமும் வராது. அவர்கள் வீரத்தால் கிடைக்கக் கூடிய காயங்களுக்குக் கட்டுப்போட மாமன்னர் கட்டுத்துணி தரவும் போவதில்லை.

எக்மான்ட்

'எக்மான்ட்' என்ற தமது நாடகத்தை ஆக்கும் பணியைக் கெதெ. 1775ஆம் ஆண்டிலேயே தொடங்கி, 1787இல் தான் முடித்தார். இருந்தபோதிலும் படைப்பாற்றல் மிக்க அவருடைய இளமை ஆண்டுகளின் பண்புகள் பல அதில் காணப்படுகின்றன. பதினாறும் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டு ஆக்ரமிப்புப் படையினரை எதிர்த்து நெதர்லாண்ட்ஸ் மக்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒட்டியே நாடகத்தின் போக்கும் அமைந் துள்ளது எனலாம். ஆயினும் நாடகத்தில் மையமாய் நிற்பது, அந்த வரலாற்று நிகழ்ச்சியல்ல; எக்மான்டின் ஆளுமையே யாகும். சுதந்திர இயக்கத் தலைவராகவும், பாமர மக்களின் உள்ளங்களைக்

கொள்கை கொண்டவராகவும் விளங்கிய உயர்குடிப் பிரபுவான எக்மான்ட், தம் அதிர்ஷ்டத்திலேயே நம்பிக்கை வைத்து நடக்கின்றார். அமைதியான தன்மையும் கவலையற்ற போக்கும் கொண்ட அவர், ஆபத்தான நிலைமையைக்கூட உணரத் தவறியதுடன், அமைதியான அறிவுத் தெளிவுடனும் அடக்கமான விவேகத்துடனும் நடந்துகொள்ளும் அவருடைய நண்பரும் நிதானப் போக்குக் கொண்டவருமான, ஆரஞ்சின் எச்சரிக்கைகளையும் புறக்கணிக்கின்றார். ஆதலால், ஸ்பெயின் இனத்தவர் விரித்த வலையில் எக்மான்ட் சிக்கிவிடுகிறார். ஸ்பெயின் இனத்து இராணுவத் தளபதி, ஆல்பா கோமகனும், எக்மான்டும் நடத்தும் உரையாடல், இங்கு தரப்பட்டுள்ளது. இருவருடைய நேர்மாறான மனநிலைகளும் இந்த உரையாடலில் மோதுகின்றன. இக்காட்சியைத் தொடர்ந்து, எக்மான்ட் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டு, இறுதியில் பொதுவிடத்தில் சிரச்சேதம் செய்யப்படுகிறார்.

அங்கம் நான்கு, காட்சி இரண்டு

எக்மான்ட்: இந்த எதேச்சாதிகார — மாறுதல்கள், உச்ச நிலை ஆதிக்கத்தின் கட்டுக்கடங்காத தலையீடுகள்—ஆயிரம் மனிதர்கள் செய்யக்கூடாததை ஒரு தனி மனிதர் செய்யத் துணிந்து விட்டார் என்பதை இவை பிரகடனம் செய்யவில்லையா? தன் ஆசை ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக்கொள்ள, தன் எண்ணம் ஒவ்வொன்றையும் செயல்படுத்த, தனக்கு மட்டும் முழு சுதந்திரம் எடுத்துக் கொள்ள அவர் விரும்புகிறார். உத்தமமான, விவேகமிக்க அரசர் என்ற முறையில், அவரைப் பூரணமாய் நாம் நம்ப வேண்டுமென்று வைத்துக் கொண்டால் கூட, அவருக்குப் பின் வருபவர்களுக்கு அவர் பொறுப்பேற்க முடியுமா? அவர்களில் ஒருவர் கூட ஒருபோதும் இரக்கமற்ற, கொடுமையான, ஆட்சி நடத்தமாட்டார்கள் என்று அவரால் நமக்கு உறுதி கூற முடியுமா? மேலும் அவர், தமக்குப் பிரியமானவர்களையும் தம் பணியாளரையும் அனுப்பி வைத்து, இந்த நாட்டையும் அதன் தேவைகளையும் அறியாத அவர்கள் தங்கள் விருப்பம் போல் ஆண்டு, எதிர்ப்பு எதுவும் இல்லாத காரணத்தால், தாங்கள் எவருக்கும் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்ற எண்ணம் இல்லாமல் நடந்து கொண்டால், அந்த எதேச்சாதிகார வெறியாட்டத்திலிருந்து நம்மைக் காப்பது யார்?

ஆல்பா: **(இதற்கிடையே சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருக்க)** ஒரு மன்னர் தம் நேரடிப் பொறுப்பில் ஆட்சி செலுத்தி, தம் ஆக்கினைகளை நிறைவேற்றும் பொறுப்பைத் தம்மை நன்கு அறிந்தவர்களிடம், தம்மை நன்கு அறிய விழைகின்றவர்களிட

மும், நிபந்தனையின்றித் தம் ஆணைகளைச் செயல்படுத்துகின்றவர்களிடமும், ஒப்படைப்பது தானே இயற்கை.

எக்மான்ட்: அது போலவே, தன்னோடு பிறந்து வளர்ந்து, தன்னைப் போலவே நியாய அநியாய நியதி நெறிகளைத் தெளிந்து ஏற்றுக்கொண்டு, நான் சகோதரன் என்று மதிக்கக் கூடி ஒருவர், தன்னை ஆட்சி செய்ய வேண்டுமென்று குடிமகன் விரும்புவதும் இயல்பு தானே?

ஆல்பா: அப்படியல்லவே. உயர் குடிப் பிரபுக்கள், தங்கள் சகோதரர்களெனப்படும் மக்களுடன், எதையும் சமமாகப் பகிர்ந்து கொண்டதில்லையே.

எக்மான்ட்: அது பல நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டதில்லை. அதை மக்கள், சிணுங்காமல், இப்பொழுது ஏற்றுக் கொண்டு விட்டனர். ஆனால் தேவையில்லாமல் அனுப்பப்படும் புதியவர்கள் இரண்டாம் முறையாக, நாட்டைச் சுரண்டித் தங்களுக்குச் செல்வம் தேட முற்பட்டால் — கட்டுக்கடங்காத, கொடுமையான, வெட்கமற்ற, பேராசைக்கு மக்கள் ஆளாக்கப் பட்டால்—அது, எளிதில் தாளாக அடங்காத ஒரு கொந்தளிப்பை மூட்டிவிடுமல்லவா?

ஆல்பா: நான் கேட்கக் கூடாததை நீ எனக்குச் சொல்கிறாய். நானும் இந்த நாட்டில் அன்னியன் தானே.

எக்மான்ட்: நான் உன்னிடம் அதைக் கூறுவதிலிருந்தே, நான் உன்னைக் குறிக்கவில்லை என்பது தெளிவாகிறதே.

ஆல்பா: இருந்தாலும், அதை நான் உன்னிடமிருந்து கேட்க விரும்பவில்லை. பிரபுக்களின் ஆதரவை நான் பெற முடியுமென்று எதிர்பார்த்து, மன்னர் என்னை இங்கு அனுப்பினார். மன்னர் தாம் விரும்புவதை ஆக்கினையிடுகிறார். ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின், மக்கள் நலனுக்கு எது உகந்தது என்று மன்னர் கண்டுள்ளார். இப்பொழுது நிலைமை சென்று கொண்டிருப்பது போல், இனியும் தொடர்ந்து செல்ல முடியாது. மக்களின் நலனுக்காகவே அவர்கள் மீது தடைகள் விதிப்பது; அவர்களுக்கு எது நல்லதோ, அதை அவசியமானால் அவர்கள் மீது வலுக்கட்டாயமாகச் சுமத்துவது; மற்றக் குடிமக்கள் அமைதியாக வாழ்ந்து, விவேகமிக்க ஆட்சியின் பலன்களை அடைய வழிவகுக்கும் பொருட்டுக் குடிமக்களிடையேயுள்ள தீயவர் சிலரைத் தியாகம் செய்வது; இவையே மன்னரின் நோக்கங்கள். அது தான் அவருடைய முடிவு. அதைப் பிரபுக்களுக்கு அறிவிக்க எனக்கு ஆக்கினை இடப்பட்டுள்ளது. அவர் பெயரால் இன்று நான் கேட்பது, அம் முடிவைச் செயல்படுத்தச் சிறந்த வழி எது என்பது பற்றிய ஆலோசனை தானே ஒழிய, எதைச் செயல்

படுத்துவது என்பது பற்றியல்ல. அதை அவரே முடிவு செய்து விட்டார்.

எக்மரன்ட்: மக்களின் அச்சங்கள், எங்கும் பரவியுள்ள அச்சம், நியாயமானது என்பதைத் தான் உம் சொற்கள் மெய்ப்பிக்கின்றன. எந்த மன்னரும் முடிவு செய்யக் கூடாததை ஆவர் முடிவு செய்து விட்டார். மக்கள் மீது ஆவர் எளிதாக ஆட்சி செலுத்துவதற்காக, அவருடைய மக்களின் உறுதியை, அவர்கள் உணர்வை, தங்களைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள கோட்பாட்டையே, சீர் குலைத்து, அடக்கி, அழிக்க, முடிவு செய்து விட்டார். அவர்கள் அந்தரங்க அகத் தன்மையையே, திரித்துக் குலைக்க அவர் விரும்புகிறார்; — இன்பமாய் அவர்கள் வாழச் செய்வதற்காகத் தான். அவர்கள் இப்பொழுது என்னவாய் இருக்கின்றார்களோ, அதிலிருந்து மாறுபட்ட பொருள்களாய் ஆவதற்கு, அவர்களையே அழித்து விட விரும்புகிறார். அவருடைய எண்ணங்கள் நல்லவை என்றால், அவை தவறான வழியில் செல்கின்றன என்று தான் கொள்ள வேண்டும். மன்னர் அதிகாரத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. தவறான வழியில் வரும் தத்தக்க முதல் படியை எடுத்து வைக்கும் மன்னரைத் தான் எதிர்க்கின்றோம்.

ஆல்பா: உம் கருத்துக்கள் இவ்வாறு இருக்கும்போது, நாம் ஒத்த முடிவு காண முடியும் என்று எதிர்பார்ப்பது தவறு என்று தான் தோன்றுகிறது. நீர் இதுவரை சொன்னதனைத்தும் ஏற்கெனவே ஆலோசிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை நீர் உணரத் தவறும் போது, நீர் மன்னரை அவமதித்து, அவர் அமைச்சர்களைத் துச்சமாகக் கருதுகிறீர். இரு சார்பிலும் சொல்லக் கூடிய வாதப் பிரதிவாதங்களில் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்வது என் பொறுப்பு அல்ல. நான் மக்களைக் கேட்பதெல்லாம், அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதே. பாராளுமன்ற பிரபுக்களாகிய நீங்கள், தங்களுக்கு வழி காட்ட வேண்டுமென மக்கள் எதிர் பார்க்கின்றனர். உங்களிடமிருந்து நான் கேட்பது, ஆலோசனை, செயலாற்றல். உங்கள் கடமையை நிபந்தனை எதுவுமின்றித் தவறாது செய்ய வேண்டுமென்று தான் உங்களிடம் கேட்கின்றேன்.

எக்மரன்ட்: எங்கள் தலையையே கேட்டு, ஒரேயடியாய் எடுத்துக் கொள்ளுங்கள். இத்தகைய நுகத்தடியின் பாரத்தில் கழுத்து குனிந்தாலும் சரி, தூக்கு மேடையில் உடல் தொய்ந்தாலும் சரி, உத்தம இதயம் தாங்குபவர் ஒருவருக்கு எல்லாம் ஒன்று தான். நான் இவ்வளவு நேரம் பேசியதே வீண்தான்.

காற்றைக் கலக்கியதைத் தவிர, என் சொற்களால் வேறு பலன் எதுவுமில்லை.

வில்ஹெல்ம் மைஸ்த(ர்)

'வில்ஹெல்ம் மைஸ்த(ர்)' (1795—1796), இளைஞன் ஒருவனின் ஒழுக்கநிலை உருவாவதைச் சித்திரிக்கும் கல்விநூல் என்று சொல்லக்கூடிய புதினம். மரபுக்கு இசைந்ததாய், வாழ்க்கைபற்றி கெதெ கொண்டிருந்த மனநிலையை இப் புதினம் பிரதிபலிக்கின்றது. ஆசிரியரின் காலத்திலேயே, கதை நிகழ்கிறது. வணிகரின் மகனான, இளம் வில்ஹெல்ம் மைஸ்த(ர்), ஒரு பயணம் மேற் கொள்கின்றான். அப் பயணத்தின் போது, எண்ணற்ற பல அனுபவங் களாலும் சந்திப்புகளாலும், மிகுந்த உலக அறிவும் விவேகமும் பெறுகின்றான். சூழ்நிலையின் செல்வாக்கும், அதை ஒட்டி அவன் உள்ளத்தில் எழும் கருத்துக்களும், அவனுடைய ஒழுக்கப் பண்புடன் சேர்ந்து, கலமான சாதகமான நிலையை உருவாக்குகின்றன. இப் புதினத்தில், தானெனும் சக்திக்கும் உலகுக்கும் இடையே, தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையே, சித்திரிக்கப்பட்டுள்ள இசை வான உறவு, (வியர்தல்) சித்திரிக்கப்படும் மோதல்களுக்கு முரண் பட்டதாய் உள்ளது. தொடக்கத்தில், வில்ஹெல்ம் மைஸ்த(ர்), சில்லரை முதலாளி வர்க்கத்தின் சின்னமாய் விளங்கும் தன் பெற்றோர் வீட்டின் குறுகிய சூழலிருந்து தப்பி ஓடித் தன் சுய ஆற்றலைச் சுதந்திரமாக வளர்த்து, நாடக மேடையில் நிறைவுகாண விழைகின்றான். ஆனால் சமூகத்தில் தனக்குரிய இடத்தை உணர்ந்து ஏற்று, தன் தனி நலனுக்கு அப்பாற்பட்ட ஒரு பொறுப்பை ஏற்று, தன் சகோதர மக்களுக்குச் சேவை செய்வதில் தான், இன்பம் கண்டு, வாழ்வின் குறிக்கோளை எய்த முடியு மென்பதை, அவனுடைய வாழ்க்கை அனுபவங்களும், அவன் நண்பர்களில் பக்குவம் அடைந்தவர்கள் ஆலோசனை கூறி, மறை முகமாய் அவனுக்கு வழிகாட்டி அளித்த உதவியும், அவனுக்கு வழிகாட்டி அளித்த உதவியும் அவனுக்கு உணர்த்தியிருந்தன. இப் புதினத்தைத் தொடர்ந்து, 'வில்ஹெல்ம் மைஸ்த(ரி)ன்' 'அலைவு திரிவு', என்ற தலைப்பில் பின்னர் எழுதிய புதினத்தில், இந்தக் கருத்தை ஆசிரியர் மேலும் விரிவுபடுத்தி வளர்க்கின்றார். அப் புதினத்தில் வில்ஹெல்ம் ஒரு மருத்துவராகின்றார்.

வில்ஹெல்ம், அவனுடைய நண்பன் வெர்னர் ஆகியோரின் பெற்றோர்கள் நடத்திய சில்லரை முதலாளித்துவ வர்க்க வாழ்க்கையை, இங்கு தரப்பட்டுள்ள பகுதி சித்திரிக்கின்றது. தம் காலத்து நடுத்தர வர்க்கத்தினர், ஒழுங்கு முறையான, திறமையான கண்ணியமான, வாழ்க்கை நடத்தியதையும், சிலர் கௌரவமாக

ஒதுங்கி வசதியாக வாழ்ந்ததையும், வேறு சிலர் தாராளமாகப் பழகி உலக இன்பங்களைத் துய்த்ததையும், கெதெ சித்திரிக்கின்றார். மென்மையான கலையுணர்வுகள் கொண்ட வில்ஹெல்முக்கு, இத்தகைய வாழ்க்கை மேல்வாரியானதாகவும் சாரமற்றதாகவும் தொடக்கத்தில் தோன்றியிருக்கவேண்டும். ஆகவே தான், அவன் தனக்கு வேறு திட்டங்கள் வகுத்துக்கொள்கிறான். ஆனால் வாழ்க்கையில் பயிற்சி பெற்றுப் பக்குவம் அடைந்தபின், தன் திருமணத்தின் மூலம், பரிவுமிக்க உயர்குடிப் பிரபு வர்க்கத்துடன் உறவு கொண்டதால் மேம்பட்ட சில்லரை முதலாளி வர்க்க வாழ்வை அவன் விரும்பி ஏற்றுக்கொள்கிறான்.

முதல் புத்தகத்திலிருந்து பகுதி

வில்ஹெல்மின் தந்தை பற்றியும் வெர்னரின் தந்தை பற்றியும் நாம் இன்னும் அதிகம் தெரிந்து கொள்வது அவசியம். சிந்தனைப் போக்கில் அவர்கள் இருவரும் பெரிதும் மாறுபட்டவர்கள். ஆனால் அவர்கள் இருவர் கருத்துக்களும் ஒன்றுகவே இருந்தன. வாணிபமே, தொழில்களில் உத்தமமானது என்று இருவரும் கருதினர்கள். தங்களுக்கு லாபம் தேடித் தரக்கூடிய எந்த வர்த்தக பேரத்திலும், இருவரும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தனர். தன் தந்தை இறந்தபின், சித்திரங்கள், ஓவியங்கள், செப்புச் சாசனங்கள், தொல்கலைப் பொருட்கள் ஆகிய அரிய சேகரிப்புக்களை, வயது முதிர்ந்த மேன்டர் விற்றுப் பணம் திரட்டியிருந்தார். தம் வீட்டை அடியோடு புதுப்பித்து, முற்றிலும் புதிய பாணியில் வீட்டை அலங்கரித்திருந்தார். மற்ற சொத்துக்களிலிருந்து எவ்வளவு லாபம் திரட்ட முடியுமோ, அவ்வளவும் திரட்டுவதற்குரிய பல்வேறு வழிகளையும் கையாண்டார். செல்வாக்கு மிக்க வணிகராகக் கருதப்பட்டு, தம் வியாபார பேரங்கள் அனைத்திலும் லாபம் சம்பாதிக்கும் வழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த மூத்த வெர்னரின் ஆலோசனையின் பேரில், அவர் தம் செல்வத்தில் பெரும் பகுதியை வர்த்தகத்தில் பயன் படுத்தினர். தம்மிடம் இல்லாத பண்புகளையும் தம் மகனிடம் வளர்க்க வேண்டும் என்பதையும், தாம் மிக முக்கியமாக மதித்த வசதிகள் தன் குழந்தைகளுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்பதையும் விட, மேஸ்தருக்குப் பலமான ஆசை வேறு கிடையாது. இருந்த போதிலும், நேர்த்தியும் மேம்பாடும் நிறைந்தவற்றிலும்—கண்ணுக்குக் கவர்ச்சியாகவும், அதே சமயத்தில் உண்மையான மதிப்பும் உறுதியும் பெற்றனவாகவும் இருந்த பொருள்களில்—அவருக்குத் தனியான ஓர் ஈடுபாடு உண்டு. அவர் வீட்டில் இருந்த பொருள்கள் எல்லாம் உறுதியாகவும் கனமாகவும் கம்பீரமாகவும் இருந்தன. சாப்பாட்டுச் சாதனங்கள் கனமாகவும்

இருந்தன. மேசை நாற்காலிகள் உயர்ந்த ரகமாகவும் நேர்த்தி யாகவும் இருந்தன. அதே சமயத்தில், அவர் வீட்டுக்கு விருந் தாளிகளை அடிக்கடி அழைப்பதில்லை. ஒவ்வொரு விருந்தையும் ஒரு விழாப் போலவே நடத்தியதால், அதிகச் செலவும் சிரமமும் ஏற்பட்டதால், விருந்துகளை அடிக்கடி ஏற்பாடு செய்ய இயல வில்லை. நிதானமான, ஒரு சீரான போக்கில், அவர் வீட்டின் நிகழ்ச்சியும், வீட்டில் இடம் பெற்ற ஒவ்வொரு பொருளும், ஒருவருக்கும் உண்மையான மகிழ்ச்சி தராத வண்ணம் அமைந்திருந்தன.

மூத்த வெர்னர், தம்முடைய இருளடைந்த, தட்டுப்பாடு நிரம் பிய வீட்டில், முற்றிலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். இந்தக் குறுகிய மண்டி வீட்டில், தன் தொன்மை யான மேசை எதிரே அமர்ந்து, அன்ருட வேலையை முடித்த பின்பு, வெர்னர் மிகச் சொகுசாக உண்ணவும் அதை விடச் சுக மாகக் குடிக்கவும் விரும்பினர். இந்த இன்பங்களைத் தனியாகத் துய்ப்பதில் அவர் திருப்தி அடையவில்லை. உணவு வேளையில், தன் குடும்பத்துடன், தம் நண்பர்களை மட்டுமல்ல, தம் குடும்பத் துடன் சிறிது தொடர்பு கொண்டவர் எவரையும், அவர் நன்கு அறிமுகமானவரல்ல என்ற போதிலும், அழைத்து விருந்து படைக்க விரும்பினர். அவருடைய நாற்காலிகள் பழைய காலப் பாணியில் செய்யப்பட்டவை: அவற்றின் வயதைக் கணிப்பதே அரிது. ஆயினும் அந்த நாற்காலிகளில் அமர, ஒவ்வொரு நாளும் அவர் சிலரை அழைத்தார். நேர்த்தியான உணவு வகைகள் விருந்தாளியின் பாராட்டுதலைக் கவரும் வண்ணம் இருந்தன. மிகச் சாதாரண தட்டுக்களில் அவை பரிமாறப்பட்டன என்பதை எவரும் சட்டை செய்யவில்லை. அவருடைப் மதுபான அறையில், எண்ணற்ற மதுபான வகைகள் இல்லை. ஆனல் ஒவ்வொரு புட்டி காலியானதும், அதன் இடத்தில் அதை விட உயர்ந்த ரகப் புட்டிகள் நிரப்பப் பட்டன.

இந்த இரு தந்தைகளும் இவ்வாறு வெவ்வேருன வாழ்க்கை நடத்தினர். ஆனல் இருவரும் அக்கறை கொண்டிருந்த பொது விவகாரங்கள் பற்றி, அவர்கள் அடிக்கடி கூடிப் பேசுவார்கள். நாம் குறிப்பிட்டுப் பேசும் நாளன்று, சில வியாபார வேலைகளை ஒட்டி, வில்ஹெல்மை வெளியூருக்கு அனுப்ப முடிவு செய்யப் பட்டிருந்தது.

கிழவர் மைஸ்தர்(ர்) கூறினர்: "அவன் உலகைச் சுற்றிப் பார்த்து அறிவை வளர்த்துக் கொள்ளட்டும். அதே சமயத்தில், தொலைவிடங்களிலும் அவன் நம் தொழிலைத் தொடர்ந்து நடத் தட்டும். வாழ்வில் அவன் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்

டிய தொழிலில், தொடக்கத்திலேயே அவனைப் பழக்கி விடுவதை விட, ஓர் இளைஞனுக்கு நாம் செய்யக் கூடிய உபகாரம் வேறில்லை. தன் முதல் பயணத்திலிருந்து, உங்கள் மகன், மிகுந்த மகிழ்ச்சி யுடன் திரும்பினான். அது மட்டுமல்ல; தன் வேலைகளை மிகத் திறமையாக முடித்திருந்தான். என் மகன் எப்படி இதைச் செய்து முடிக்கின்றான் என்பதைக் காண எனக்கு ஆவல் அதிக மாய் இருக்கின்றது. அவன் தன் அனுபவத்தை, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கும் என்று அஞ்சுகிறேன்".

உண்மையில், தன் மகனின் ஆற்றலையும் திறமைகளையும் பற்றிக் கிழவர் மைஸ்த(ரு)க்கு மிக உயர்வான எண்ணம் உண்டு, இவ்வாறு தான் சொன்னபோது, தன் நண்பர் அதை மறுத்துப் பேசித் தன் மகனின் அரிய குணங்களைப் பாராட்டுவார் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் இதில் அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டார். பண விவகாரங்களைப் பொறுத்தவரை, நம்பிக்கைக்குரியவன் என்று ஒருவன் தன்னை நிலை நாட்டிக் கொள்ளும் வரை அவனை நம்பத் தயங்கும் இயல்புடைய மூத்த வெர்னர் சாவதானமாகப் பதில் கூறினார்: நாம் எல்லா முயற்சி களையும் செய்து பார்க்க வேண்டும். என் மகன் மேற்கொண்ட அதே பயணத்தை இவனுக்கும் ஏற்பாடு செய்வோம். அவனுக் குத் துணையாக, வழிமுறைக் கடன்கள் இருக்கின்றன. பழைய தொடர்புகளைப் புதுப்பிக்க வேண்டும். புதிய தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். நான் குறிப்பிட்ட வர்த்தக பேரத்தை முடிக்க அவன் உதவவும் முடியும். அந்தந்த இடத்திற்குச் சென்று, உடனுக்குடன் நிலைமை பற்றிய தகவல்களைச் சேகரித் தால் ஒழிய, இந்த வியாபாரத்தில் ஒன்றும் சாதிக்க முடி யாது."

விசித்திர இளம் அண்டை வீட்டுக்காரர்கள்

'விசித்திர இளம் அண்டை வீட்டுக்காரர்கள்' என்ற கெதெயின் கதை, 'தேர்ந்தெடுத்த உறவு' என்ற அவர் புதினத்தின் (1809) ஒரு பகுதி. அந்தக் கண்ணோட்டத்துடன் தான் இப்பகுதியைப் படிக்கவேண்டும். காதலுக்கும், திருமணப் பிணைப்புகளுக்கும் சமூகத்தின் விதிகளுக்கும் இடையேயுள்ள போராட்டங்களைப் புதினம் சித்திரிக்கின்றது. உணர்ச்சி மேலீடும், அமைதியும், ஒத்துச் செல்ல இயலாத பகைவர்கள் என்று காட்டப்படுகிறது. வாழ்க்கை யின் பிற்பகுதியில் கெதெ இதை எழுதியிருந்தபோதிலும், இரண் டுக்கும் இடைவழியை அவர் காட்டவில்லை. அதற்கு வேறு வழி, நாசமடைவது, அல்லது தன்னைத் தானே மறுத்து, அடக்கிக் கொள்வது என்றுதான் அவர் காட்டுகிறார். புதினத்திற்கிடையே

புகுத்தப்படடுள்ள 'விசித்திர இளம் அண்டை வீட்டுக்காரர்கள்' என்ற கதை, புதினம் ஆராயும் அதே பிரச்சினையைத்தான் ஆராய்கிறது; ஆனல் முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்துடன் நோக்குகிறது. இக்கதையில், மேல்வாரியான, தற்காலிகமான, போராட்டங்களேயே, காதல் மூட்டுகிறது. இறுதியில் அக் காதல், திருமணத்தில் நிறைவு பெற்று, குற்றச்சாட்டுக்கு இலக்காகாமல், சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. புதினத்தில், மெருகு பூசிய சமூக மரியாதை நெறிகள் சித்திரிக்கப்படுகின்றன. அதற்குப் பதிலாகக் கதையில் வரும் பாத்திரங்கள் அமைதியானவர்களாகவும், இதமாகப் பழகுபவர்களாகவும், இயற்கையுடன் நெருங்கிய உறவு கொண்டவர்களாகவும் சித்திரிக்கப்படுவதால், தேவலோக இன்பக் கதை போன்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த உணர்வின் காரணமாய்க் கதையின் இன்ப முடிவின் ஏற்புடமை ஓரளவு குறைகிறது. அது போலவே, புதினத்தின் துன்பமான முடிவின் ஏற்புடைமையும் குறைகிறது. அதே சமயத்தில், இன்பகரமான தீர்வுகள் காண முடியும் என்பதைக் கதை கோடிட்டுக் காட்டுகிறது.

உயர்குடியைச் சேர்ந்த அண்டைக் குடும்பங்களில் ஒரு பையனும் பெண்ணும் இருந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் கணவனும் மனைவியுமாக இணையக் கூடிய வயதுடைய அவர்கள், வருங்காலத்தில் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் என்ற அடிப்படையில், ஒன்ருக வளர்க்கப் பட்டார்கள். எதிர்காலத்தில் நடக்க விருக்கும் திருமணம் குறித்துப் பெற்ருேர்களும் ஆர்வத்துடன் இருந்தனர். ஆனல் அவர்கள் திட்டம் தடைப்படும் போல் தோன்றியது. இருவருடைய உயர்ந்த பண்புகளிடையே, விளங்க முடியாத ஒரு முரண்பாடு தோன்றி வலுத்து வந்தது புலனுயிற்று. ஒருவேளை இருவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டு இருந்ததே காரணமாக இருந்திருக்கலாம். இருவரும் தங்களைப் பற்றியே அதிகம் சிந்தித்தனர்; தங்கள் தேவைகள் பற்றித் தெளிவாகவும் தங்கள் விருப்பம் பற்றி உறுதியாகவும் இருந்தனர். இருவரிடமும், அவர்கள் தோழர்கள் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர். இருவரும் ஒன்ருய்க் கூடிய போது, எதிரிகளாகவே இருந்தனர்; தங்கள் சொந்த நலனில் மட்டும் நாட்டம் செலுத்தி, சந்தித்தபோது ஒருவர் மற்றவர் நலனுக்குப் பாதகமாக நடந்து கொண்டனர். நட்புணர்வுடன் போட்டியிட்டுக் கொண்டனர் என்று கூட சொல்ல முடியாமல், ஒரு குறிக்கோளை மனத்திற் கொண்டு ஓயாது சண்டையிட்டுக் கொண்டனர். இருவரும் இனிய இயல்பும், அன்பான தன்மையும், கொண்டவர்கள். ஆயினும் ஒருவரோடொருவர் கொண்டிருந்த உறவில், வெறுப்பும் சூதும்தான் வெளிப்பட்டன.

இந்த விபரீத உறவு அவர்கள் குழந்தைப் பருவ விளையாட்டுக் களிலேயே வெளிப்பட்டு, வயது ஆக ஆக, வலுத்தது. இயல் பாக, பையன்கள் தான் போர் விளையாட்டு விளையாடி, இரு கட்சிகளாகப் பிரிந்து, ஒருவரோடொருவர் மோதுவது வழக்கம். ஒரு முறை ஒரு கட்சிக்குப் பிடிவாதம் மிக்க இந்தப் பெண்ணே தலைமை ஏற்று மிகுந்த ஆத்திரத்துடனும் கொடூரமாகவும் போரிட்டால, மாற்றுர் சேனை தலை தெரிக்க ஓடித் தோல்வி யுற்றிருக்க வேண்டும். ஆனல் அவளுடைய எதிரியான பையன் இறுதிவரை உறுதியுடன் நின்று, அவளைக் கைப்பற்றித் தோல்வி யுறச் செய்தான். அவளோ பிடிபட்ட போதும் கூட ஆவேசத் துடன் எதிர்த்ததால், அவன் தாக்குதல்களிலிருந்து தன் கண் களைக் காத்து, அதே சமயத்தில் அவளையும் காயப்படுத்தாமல் இருக்கும் பொருட்டு, அப்பையன் தன் பட்டுக் கைக்குட்டையை எடுத்து அவளுடைய கைகளைச் சேர்த்துக் கட்ட வேண்டிய தாயிற்று.

அதை அந்தப் பெண் மறக்கவோ மன்னிக்கவோ இல்லை. அப் பையனுக்கு எப்படியாவது தீங்கு செய்ய அவள் எத்தனையோ இரகசிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் செய்தாள். சில கால மாகவே இந்த விபரீதப் பகைமை உணர்ச்சியைக் கவனித்துவந்த பெற்ருேர்கள் தங்களுக்கிடையே ஒரு உடன்பாடு கண்டு, பகைமை உணர்வு கொண்டிருந்த இருவரையும் பிரித்து வைக் கவும், அவர்கள் திருமணம் பற்றித் தாங்கள் கொண்டிருந்த ஆசையைக் கைவிடவும், முடிவு செய்தனர்.

புதிய சூழ்நிலையில் பையன் வெகு விரைவில் முன்னேற்றம் கண்டான். எல்லாவிதப் பயிற்சிகளிலும் அவன் தேர்ச்சி பெற்ருன். தன் சொந்த ஈடுபாட்டுக்கு இணங்கவும், நல் லெண்ணம் கொண்டிருந்த நண்பர்கள் விருப்பத்துக்கு ஏற்பவும், அவன் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினன். அவன் சென்றவிடமெல்லாம் அவன் மற்றவர்கள் அன்பையும் பாராட்டு தலையும் கவர்ந்தான். துடிப்புமிக்க அவன் இயல்பு மற்றவர் களுக்கு ஆதரவாகவும் இதமாகவும் அமைந்தது. அவன் தன் நிலையில் மிகுந்த திருப்தி கொண்டிருந்தான். இயற்கை தனக் கெனப் படைத்திருந்த ஒரே எதிரியை இழந்துவிட்டது பற்றிய தெளிவான உணர்வில்லாமலே அவன் வாழ்ந்தான்.

அந்தப் பெண்ணே, திடீரெனப் புதிய சூழ்நிலையில் வாழ வேண்டியவளானுள். அதுவரை பையன்களுடன் சேர்ந்து அவள் விளையாடி வந்த முரட்டுத்தனமான விளையாட்டுக்களில், அவள் தன் வயது காரணமாகவும், வளர்ந்து வந்த மென்மைப் பண்பு காரணமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாகப் புதியதோர் அக

உணர்வின் காரணமாகவும், பங்கெடுத்துக் கொள்ள முடியாத வளாஞுள். மொத்தத்தில், ஏதோ ஒரு குறைபாடு இருந்த உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. அவகோச்சுற்றி, அவள் பகைமையை மூட்டவல்லது எதுவும் காணப்படவில்லை.

முன்பு அண்டை வீட்டில் வசித்த அவள் எதிரியைவிட வயதில் மூத்த ஓர் இளைஞன் தன் அன்பான அக்கறை முழுவதையும் அவள்பால் செலுத்தினன். உயர்குடியில் பிறந்து, செல்வத்திலும் குணத்திலும் சிறந்து விளங்கிய அந்த இளைஞன் சமூகத்தில் நன்மதிப்பு பெற்றவனையும், குறிப்பாகப் பெண்களின் பாராட்டுதலைக் கவர்ந்தவனுகவும் இருந்தான். நண்பனுகவும், அவகோப் பாராட்டிப் போற்றுபவனுகவும், பணியாளனுகவும், ஓர் இளைஞன் அவளிடம் அக்கறை காட்டியது, அதுதான் முதல் முறை. அவகோவிட வயதில் மூத்தவர்கள், கல்வியிலும் அறிவிலும் சிறந்தவர்கள், வேடிக்கையாகப் பேசக்கூடியவர்கள், பலரை விட்டுவிட்டுத் தன்னை அவன் விரும்பியது, அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. அடிமைப்பட்டவன் போல் நடந்துகொள்ளாமல், தன்னிடம் அவன் தொடர்ந்து காட்டிய ஈடுபாடு; பல இக்கட்டான நிலைமைகள் ஏற்பட்டபோது, அவன் அவளுக்கு அளித்த விசுவாசமான ஆதரவு; அவள் இன்னமும் சிறிய பெண்ணுகவே இருந்ததால், அவளுடைய பெற்ருேர்களுடன் இயல்பாகவும், ஆர்வத்துடன் ஆனல் மரியாதையாகவும் அவன் பழகிய தன்மை இவையெல்லாம் அவனிடம் அவளுக்கு ஈடுபாடு உண்டாக்கின. இவர்கள் இருவரையும் பற்றி மற்றவர்கள் கொண்டிருந்த எண்ணமும், அவர்களை நடத்திய விதமும், இந்த ஈடுபாட்டை உறுதிப்படுத்தின. திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட முறைப் பெண் என்றே மற்றவர்கள் அடிக்கடி அவகோப் பற்றிப் பேசிவந்ததால், அவளும் அவ்வாறே தன்னைப்பற்றி நாளடைவில் கருதலானுள். நீண்டகாலமாகவே அவன் அவகோத் திருமணம் செய்து கொள்ளப் போவது உறுதி என்று கருதப்பட்டதால், அவளும் அவனும் மோதிரம் மாற்றிக்கொள்ளும் போது, இடஞ்சல் எதுவும் இராது என்றே அவளும் மற்றவர்களும் எண்ணியிருந்தனர்.

இவ்வாறு முடிவு செய்யப்பட்ட பிரச்சினை என்றே எல்லோரும் கருதியதால், முறைப்படி நிச்சயம் செய்துகொள்வதை அவசரப்படுத்த வேண்டுமென்று யாரும் கருதவுமில்லை. உறவை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை என்று இரு தரப்பினரும் ஒத்துக்கொண்டனர். அவளும் அவனும் ஒன்ருய் இருந்ததில் பெரும் மகிழ்ச்சி கண்டனர். எதிர்காலத்தில் சோதனை மிக்க வாழ்க்கையைத் தொடங்குமுன், வாழ்வின் வசந்த காலத்தை

ஒன்றுய் அனுபவிப்பதில் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண் டிருந்தனர்.

அதற்கிடையில், முன்பு அவளுடன் பழகிய அண்டைவீட்டு இகாளுஞு, தொலைவிடங்கள் பலவற்றிற்கும் சென்று, வாழ்வில் உயர்நிலையைக் கடும் உழைப்பின் பயனுய் அடைந்திருந்தான். தன் குடும்பத்தினரைப் பார்க்க அவன் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்திருந்தான். சிறு வயதில் தன்னுடன் பழகியிருந்த அண்டைவீட்டு அழகியை அவன் சந்தித்தபோது, அவளிடம் அவன் இயல்பாகவே பழகிய போதிலும், நிதானத்துடனும் கட்டுப்பாடுடனும் நடந்துகொண்டான். அவளோ, தனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது என்ற எண்ணத்தில், மணப் பெண் போலவே, பரிவுடனும், தன்னைச் சுற்றி இருப்பது அனைத் துடனும் நட்புறவு கொண்டிருந்த அமைதி உணர்வுடனும், பழகினுள். தான் இன்பமாய் இருந்ததாக அவள் கருதினுள்; ஒருவகையில் அவள் இன்பமாகவே இருந்தாள். ஆனுல் இப் பொழுதோ, நீண்ட நாட்களுக்குப்பின் முதன் முறையாக, அவள் தனக்கு எதிராக உள்ள ஒன்றை எதிர்நோக்கி நிற்கும் நிலையில் இருந்தாள். அது அவளுடைய வெறுப்பிற்குரிய ஒன்றல்ல. எதன் மீதும் வெறுப்பு கொள்ளக்கூடிய நிலையை அவள் கடந்துவிட் டாள். முன்பு சிறு பிள்ளைத்தனமாக அவள் கொண்டிருந்த வெறுப் புக்கு ஆதாரமாய் இருந்தது, வெறுப்புக்குரிய பொருளின் அருமையை அவள் உள்ளூர உணர்ந்ததன் மறைமுகமான பிரதி பலிப்பேயாகும். இப்பொழுதோ, நீண்ட நாட்களுக்குப் பின் ஏற்பட்ட சந்திப்பினுல் இதமான இனிய உணர்ச்சி, புதிதாக என்ன நடக்குமோ என்றறியும் ஆர்வம், மரியாதையாய்ப் பழக வேண்டுமென்ற நிதானம், இவற்றுடன்தான் அவனுடன் பழகி னுள். அவள் பழகினதற்கு ஓரளவு அவள் விருப்பமே காரணம்; அந்தப் பழக்கத்தில் ஓரளவு தயக்கமும் கலந்திருந்தது. சந்தர்ப் பங்களின் காரணமாய், பழகுவதைத் தவிர்க்க முடியாதென்ற எண்ணமும் ஏற்பட்டிருந்தது. இரு தரப்பினரும் இந்த உணர்வு டனும் நிதானத்துடனும், தயக்கம் கலந்த ஆர்வத்துடனும் தான் பழகினர். நீண்ட காலம் இருவரும் பிரிந்திருந்ததால், இருவரும் தங்கள் அனுபவங்கள் பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டனர். குழந்தைப் பருவத்தில் அவர்கள் இருவரும் கொண்டிருந்த பகைமை உணர்ச்சி பற்றி இப்பொழுது நினைத்துப் பார்த்தபோது, அறிவுத் தெளிவு பெற்றிருந்த நிலையில் அவர்களுக்கு அது விசித் திரமானதாகவே தோன்றியது. பகைமை உணர்வின் காரணமாய் ஒருவரையொருவர் பரிகசித்துப் பழித்துக்கொண்டதற்கு ஈடு செய்ய, அவர்கள் இப்பொழுது நட்புணர்வுடனும், மரியாதை யுடனும் நடந்துகொள்ள ஈர்க்கப்பட்டனர். அவர்களிடை ஏற்பட்

டிருந்த மனத்தாங்கலை மறக்க, ஒருவரையொருவர் வெளிப்படையாகப் பாராட்டிக்கொள்ள முற்பட்டனர்.

அவளைப் பொறுத்தவரை அவன் நிதானத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொண்டான். தன்னுடைய அந்தஸ்திலும் உயர்நிலையிலும், ஆசை அபிலாஷைகளிலும் நம்பிக்கைகளிலும் அவன் ஆழ்ந்து ஈடுபட்டிருந்ததால், அவன் வேறெதையும் பற்றிக் கவலைப்படவில்லை. இன்னொருவனைத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்த பெண் என்ற முறையிலேயே, அவள் மீது தான் உரிமை எதுவும் கோராமல், அவளுடைய நட்பைத் தனக்குக் கூடுதலாகக் கிடைத்த ஒரு பரிசு என்று ஏற்றுக்கொண்டான். அவனைத் திருமணம் செய்யவிருந்தவன்மேல் அவனுக்குப் பொறுமை எழவில்லை. அவனுடனும் அவன் நண்பனுகவே பழகினான்.

ஆனால் அவளைப் பொறுத்த வரையில் அவள் நிலை வேறாக இருந்தது. ஒரு கனவிலிருந்து விழித்து எழுந்தவள் நிலையில் இருந்ததுபோல் அவளுக்குத் தோன்றியது. இளமைப் பருவத்தில் அவள் அவனுடன் சண்டையிட்டுக் கொண்டது, முதன் முதலில் அவனை ஆட்கொண்டிருந்த உணர்ச்சிப் பெருக்காக அவள் கருதினாள். அவனுடன் ஏற்பட்ட இந்த மோதல், உண்மையில் அவன் மேல் அவளுக்கிருந்த பிரியத்தின் மறைமுகமான வெளிப்பாடு தான் என்று அவளுக்குத் தோன்றியது. இப்பொழுது எண்ணிப் பார்க்கும்போது, எப்பொழுதுமே அவன் மேல் தான் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்ததை அவள் உணர்ந்தாள். ஆயுதங்களைக் கையில் தாங்கிக் கொண்டு அவனுடன் மோதுவதற்கு வாய்ப்புகள் தேடி அலைந்ததை அவள் இப்பொழுது நினைத்துப் பார்த்துத் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள். அவன் அந்த ஆயுதங்களைத் தன்னிடமிருந்து பறித்துக்கொண்டபோது அவளுக்கு ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சி அவள் நினைவிலிருந்து நீங்கி, அதைப் பற்றி இதமான உணர்வே அவளிடம் நிலைத்து நின்றது. அவனை அவன் கட்டிப்போட்ட போது தனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதாகவே அவள் இப்பொழுது கற்பனை செய்துகொண்டாள். அவனுக்குத் தீங்கு செய்து எரிச்சல் உண்டாக்க அவள் செய்த முயற்சிகள் அனைத்தும் உண்மையில் தன்பால் அவன் கவனத்தை ஈர்க்கும் பொருட்டுச் செய்த முயற்சிகள் என்றே அவளுக்குத் தோன்றியது.

தனக்குள்ளாகவே அடக்கி வைத்திருந்த இந்த உணர்ச்சிகளை வெளிக் கொணர்ந்து, விளக்கம் கண்டு, அவளுடன் பகிர்ந்து கொள்ள எவரும் முன்வந்திருந்தால், அவர் அவளைக் கடிந்து குறை கூறியிருக்க மாட்டார். ஏனென்றால், அவளைத் திருமணம் செய்ய விருந்தவனையும், அவள் அண்டைவீட்டுக் குழந்தைப் பருவ

நண்பனையும் ஒன்றாகக் கண்டு ஒப்பு நோக்கிப் பார்த்தால், அவள் இளமைப் பருவ நண்பனுக்கு ஈடாக, அவள் முறை மாப்பிள்ளை நின்றிருக்க முடியாது. மாப்பிள்ளையுடன் பழகும்போது ஓரளவு தயக்கத்துடன் பழகவே ஒருவருக்குத் தோன்றும். ஆனால் குழந்தைப் பருவத் தோழனைப் பொறுத்தவரை, அவன் ஒருவருடைய நம்பிக்கையையும் நட்பையும் முற்றிலும் கவர்பவனாய் விளங்கினான். மாப்பிள்ளையுடன் பழகுவதில் ஒருவருக்கு மகிழ்ச்சி ஏற்படுவது நிச்சயம். ஆனால் மற்றவனையோ நெருங்கிய நண்பனாகவும் தோழனாகவும் ஏற்றுக்கொள்ளும் ஆர்வம் பிறக்கும். வழக்கத்துக்கு மாறான நிலைமைகளில் எப்படி நடந்து கொள்வானென்று, உயர்ந்த அனுதாப உணர்வு காட்டுவானென்று, என்ற ஐயப்பாடு மாப்பிள்ளையைப் பொறுத்தவரை ஏற்படக்கூடும். ஆனால் அந்த நண்பனைப் பொறுத்தவரை அத்தகைய ஐயப்பாட்டுக்கே இடமில்லை. இத்தகைய உறவுகளைப் பொறுத்தவரை, அவற்றை அறிந்து போற்றும் ஆற்றலும் தெளிவும் பெண்களுக்கு இயல்பாகவே, அந்தரங்க உணர்வை அடிப்படையாகக் கொண்டே, அமைந்துள்ளன. அந்த உறவுகளைப் போற்றி வளர்க்க, நியாயமும் வாய்ப்புக்களும் பெண்களுக்கு நிரம்ப உண்டு.

முறைப் பெண் இத்தகைய எண்ணங்களை இரகசியமாகப் போற்றி வளர்க்கையில், அவளுடைய முறை மாப்பிள்ளைக்குச் சாதகமாக, அவனைப் பற்றி உற்சாகமாகப் பேச வாய்ப்பும், மற்றவர்களுக்குக் குறைந்து வந்தது. அவள் என்ன போக்கைப் பின்பற்றுவது உசிதம், எந்தக் கடமைகளை ஆற்றுவது அவசியம். சூழ்நிலையின் காரணமாக எது தவிர்க்க முடியாதது, என்பதை அவளுக்கு எடுத்துக் காட்டக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. பெண்ணின் இதயமோ, அவளுடைய ஆசைப் பிடிப்பில் ஊன்றி நின்றது. ஒரு புறம், சமூகம், குடும்பம், திருமண நிச்சயம், முறை மாப்பிள்ளை, தானே அளித்த ஒப்புதல் என்ற பிணைப்புகள் கலக்க முடியாமல் பலமாக இருந்தன. இன்னொரு புறம், அவள் குழந்தைப் பருவத்தோழன் தன் எதிர்காலத் திட்டங்களையும் வாய்ப்புக்களையும், அவன் அடையக்கூடிய உயர்நிலையையும் பற்றி வெளிப்படையாகவே கூறிய நேரத்தில், அவளைப் பொறுத்தவரை, விசுவாசமான, ஆனால் அன்புப் பிணைப்பு அதிகம் இல்லாத, ஒரு சகோதரன் போலவே அவன் நடந்து வந்தான். விரைவில் அவன் அங்கிருந்து செல்லக்கூடும் என்ற பேச்சும் எழுந்தது. அவளுடைய பழைய குழந்தைப் பருவ உணர்வுகள் மீண்டும் விழிப்படைந்து ஓங்கி, கட்டுக்கடங்காத வேகத்துடனும் சூதுடனும் அவளை ஆட்கொண்டு, அவள் பிற்கால வாழ்வில் ஆதிக்கம் செலுத்தித் தன்னையே நாசப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு அவளைத் தூண்டி அழைத்துச் செல்லும்போல் தோன்றியது.

ஒரு காலத்தில் தன் வெறுப்புக்கும், இப்பொழுது தன் அன்பின் பெருக்குக்கும் ஆளாகியிருந்த அவன், தன்னிடம் அசட்டையாய் இருப்பதற்காக அவனைத் தண்டிக்கும் பொருட்டும், அவனைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளமுடியாது போனதால், சிந்தனையிலும் மன ஏக்கத்திலுமாவது அவனுடன் இணைபிரியாது பிணைக்கப்பட்டிருக்கும் பொருட்டும், அவள் சாவதே மேல் என்ற முடிவுக்கு வந்தாள். தான் உயிரிழந்து கிடந்த நிலையில், அந்தச் சவ உருவம் அவனை என்றென்றும் ஆட்கொண்டிருக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள். அவள் உயர்ந்த பண்பினை உணர்ந்து மதித்துப்போற்றத் தவறியதற்காக அவன் என்றென்றும் தன்னையே சபித்துக்கொள்ளும் நிலையை அவள் ஏற்படுத்த விரும்பினாள்.

இந்த விபரீத வெறி அவளைப் பலமாக ஆட்கொண்டது. அதைப் பல வழிகளிலும் அவள் மறைக்க முயன்றாள். அவள் போக்கு விசித்திரமாய் இருந்தது என்பதை மற்றவர்கள் கண்டபோதிலும், அதன் உண்மையான, உள்ளோடிய, காரணத்தை அறியும் அளவுக்கு அவர்களுக்குத் தெளிவோ கூர்மையோ இல்லை.

இதற்கிடையில், நண்பர்களும் உறவினரும் அறிமுகமானவர்களும், பல்வேறு உபசாரங்களுக்கான ஏற்பாடுகள் செய்து அலுத்துவிட்டனர், அநேகமாக ஒவ்வொரு நாளும் புதிதாக, எதிர்பாராத, ஓர் ஏற்பாடு செய்தனர். கவர்ச்சி மிக்க காட்சியாக அமைந்த எல்லா இடங்களிலும், உல்லாசமான இளைஞர்களை உபசரிக்க ஏற்பாடு செய்து அவற்றை அலங்கரித்து அழகுபடுத்தியிருந்தனர். நம் இளம் நண்பரும் ஊரை விட்டுச் செல்லுமுன், தானே முன்னின்று உபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்ய விரும்பினான். ஆகவே நிச்சயதார்த்த தம்பதிகள் இருவரையும், நெருங்கிய சுற்றத்தாரையும், ஆற்றில் உல்லாசப் பயணத்துக்கு அழைத்துச் செல்ல அவன் ஏற்பாடு செய்தான். பெரிய, நேர்த்தியான, வசதிகள் நிறைந்த படகில் அவர்கள் ஏறிப் பயணம் தொடங்கினர். ஒரு சிறு பொது அறையும் நிறையச் சிறு சிறு அறைகளும் கொண்டிருந்த அந்த உல்லாசப் படகு, நில வாழ்க்கையின் வசதிகள் அனைத்தையும் நீரின் மேலும் அளிக்கும் முறையில் அமைந்திருந்தது.

வெயில் அதிகமாயிருந்த நேரம், இசை ஒலிக்க அவர்கள் பயணத்தைத் தொடங்கினர். கீழ் தளத்தில் இருந்த அறைகளில் பயணிகள் கூடி, சாமர்த்திய, அதிர்ஷ்ட, விளையாட்டுக்களில் ஈடுபட்டுப் பொழுதைக் கழித்தனர். ஒன்றும் செய்யாமல் ஓய்வாக இருப்பதை எப்பொழுதுமே விரும்பாத இளம் நண்பன் படகை ஓட்டிச் செலுத்தும் பொறுப்பில், உதவி செய்ய முன்வந்து,

சுக்காணைப் பிடித்துச் செலுத்திக் கொண்டிருந்தான். படகின் மாலுமியோ அவன் பக்கத்திலேயே உறங்கிக்கொண்டிருந்தான். இருமருங்கிலும் இரு தீவுகள், நடுவில் ஆற்றுப் படுகையை மிகக் குறுகியதாக்கியிருந்த இடத்தைப் படகு நெருங்கிக்கொண் டிருந்தது. அங்கு கூழாங்கல் தரை ஒரிடத்தில் ஒரு பக்கத் திலும், இன்னோரிடத்தில் மற்றொரு பக்கத்திலும் முட்டிக்கொண் டிருந்தது. ஆகவே நீர்ச் சுழி அபாயகரமாய் இருந்தது. மிகக் கவனமாகவும் நிதானமாகவும் படகைச் செலுத்திக்கொண்டிருந்த இளைஞன், முதலில் படகு மாலுமியை எழுப்புவது நலமென்று எண்ணினான். பிறகு தானே சமாளித்துக் கொள்ளமுடியுமென்ற நம்பிக்கையில், படகை அக்குறுகிய பகுதி நோக்கிச் செலுத்தி னான். அந்த நேரத்தில், அவன் குழந்தைப் பருவ எதிரியான அழகி, கொத்து மலர்களைக் குழலில் சூடிக் கப்பலின் மேல் தளத் தில் தோன்றினாள் மலர்களை முடியிலிருந்து எடுத்துப் படகை ஓட்டிக்கொண்டிருந்த தன் தோழனிடம் வீசி, "என் அன்பின் நினைவாய் இதை ஏற்றுக்கொள்", என்றாள். பூச் செண்டைப் பிடித்துக்கொண்டே, அவன் கூறினான்: "என்னைத் தொந்தரவு செய்யாதே. என் கவனம், பலம், முழுவதும் எனக்கு இப்பொழுது தேவை." "சரி. நான் உன்னை மீண்டும் தொந்தரவு செய்ய மாட் டேன். இனி நீ என்னைப் பார்க்க முடியாது", என்று கூறிக் கொண்டே, அவள் கப்பலின் அடிக்கோடிக்குச் சென்று, அங்கி ருந்து நீரில் குதித்துவிட்டாள். "அவள் மூழ்குகிறாள். காப்பாற் றுங்கள், — காப்பாற்றுங்கள்", என்று சிலர் கூக்குரல் இட்ட னர். அவனுக்கு என்ன செய்வது என்ற தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்தில் இரைச்சலைக் கேட்டு மாலுமி விழித் துக்கொண்டுக் கப்பலைச் செலுத்தும் பொருட்டுச் சுக்காணைப் பிடிக்க விரும்பினான். இளைஞனும் அதை அவனிடம் கொடுக்க விழைந்தான். ஆனால் கைமாற்ற நேரமில்லை. கப்பல் தரை தட்டி யது. அதே நிமிடத்தில், இளைஞன் தன் மேலாடைகளைக் களைந்து விட்டு, நீரில் குதித்து, அப்பெண்ணை நோக்கி வேகமாக நீச்சலடித் தான்.

நீருக்குப் பழக்கப்பட்டவர்களுக்கும், அதை எப்படி நடத்த வேண்டுமென்று தெரிந்தவர்களுக்கும், நீர் சாதகமான ஒரு சக்தியே. நல்ல நீச்சல்காரன் என்பதால், அவனால் நீரை அடக்கி ஆள முடிந்தது. நீர் அவனைத் தாங்கிச் சென்றது. விரைவில் அவள் அழகியை நெருங்கி, அவளைப் பிடித்துத் தூக்கிக் கொண் டான். வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த நீர் இருவரையும் பலமாக அடித்துச் சென்றது. தீவுகளையும் திட்டுகளையும் தாண்டி வெகுதூரம் கடந்து, ஆறு அகலமாகவும் அமைதியாகவும் ஓடிக் கொண்டிருந்த இடத்தை அவர்கள் அடைந்தனர். ஆபத்தைச்

சமாளிக்க எதைப் பற்றியும் சிந்திக்காமல் பாய்ந்திருந்த அவன், இப்பொழுது சற்று நிதானமடைந்து, தன்னைச் சுற்றுமுற்றும் நோக்கினான். ஆற்றிலே வசதியாகக் காணப்பட்ட ஒரு மேட்டை நோக்கித் தன் முழுப் பலத்துடன் நீந்தினான். மேட்டை அடைந்தும், அழகியைத் தரையில் கிடத்தினான். ஆனால் அவளிடம் மூச்சு இருப்பதாகவே தோன்றவில்லை. என்ன செய்வதென்று அறியாமல் திகைப்புற்றிருந்த நிலையில், செடிகள் நடுவே ஒரு பாதை செல்வது அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. தன் அழகிய சுமையை மீண்டும் தூக்கிக் கொண்டு, அப்பாதையில் அவன் ஓடியபோது, தனியாக நின்ற ஒரு குடில் அவன் கண்ணில்பட்டது. அக்குடிலில் அனுதாபமிக்க இளம் தம்பதிகள் இருவர் இருந்தனர். தங்களுக்கு ஏற்பட்ட சோதனையை அவன் சுருக்கமாக அவர்களிடம் கூறினான். தங்கள் உடனடியான தேவைபற்றியும் அவன் கூறினான். அவற்றிற்கு அவர்கள் உடனே ஏற்பாடு செய்தார்கள். கணப்பு தர, நெருப்பு மூட்டப்பட்டது. ஒரு கட்டிலின்மீது கம்பளி, தோல் விரிப்புகள், முதலியவை விரிக்கப்பட்டன. குளிரைப் போக்கக்கூடிய ஆடைகள் கொண்டு வரப்பட்டன. பெண்ணைக் கரப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வ மேலீட்டில், வேறொன்றையும் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஆடையின்றி நிர்வாணமாய், அசைவின்றிக் கிடந்த அந்த அழகியின் உடலில் உயிர் மூச்சை மீண்டும் வெளிப்படுத்த, எல்லாவித முயற்சிகளும் செய்யப்பட்டன. அம்முயற்சிகள் வெற்றியும் பெற்றன. அவள் கண் திறந்து, தன் நண்பனைப் பார்த்தவுடன், அழகு மிக்க தன் கைகளால் அவன் கழுத்தை அணைத்துக் கொண்டாள். நீண்ட நேரம் அந்நிலையிலேயே இருந்தாள்; அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ப் பெருகியது. பெருகிய கண்ணீரிலேயே அவள் உடல் வாட்டமும் கரைந்துவிட்டது. "உன்னை நான் மீண்டும் இவ்வாறு கண்டெடுத்து, உன்னை வந்து அடைந்த பின்பும், நீ என்னைவிட்டுச் செல்ல விரும்புகிறாயா?" என்று அவள் அங்கலாய்த்தாள். "ஒரு போதும் உன்னைவிட்டுச் செல்ல மாட்டேன்", என்று, தான் சொல்வதென்ன, செய்வதென்ன என்பதை அறியாத நிலையிலேயே, அவன் கூறினான். "ஆனால் பதட்டப்படாதே. உடம்பை அலட்டிக் கொள்ளாதே. உனக்காகவும் எனக்காகவும் உன் உடம்பைக் கவனித்துக் கொள்", என்று அவன் வேண்டிக்கொண்டான்.

அப்பொழுதுதான், தானிருந்த அலங்கோல நிலையை அவள் உணர்ந்தாள். தன்னைக் காப்பாற்றிய காதலன் முன் அவள் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவன் உடம்பெல்லாம் நனைந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவன் தன்

உடம்பைக் கவனித்துக்கொள்ளும் பொருட்டு அவள் தன் பிடியை விலக்கி அவகீ விடுவித்தாள்.

அக்குடிலில் வசித்த இளம் தம்பதிகள் கூடிப் பேசினர். அவர்களுடைய திருமண ஆடைகள் அக்குடிலில் தொங்கிக் கொண்டிருந்தன. தம்பதிகள் இருவரை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை போர்த்துவதற்கு அந்த ஆடைகள் போதுமானவையாய் இருந்தன. அந்த ஆடைகளை அவர்கள் இருவருக்கும் தந்து அணியச் செய்தார்கள். நகீனந்து காய்ந்திருந்த இருவரும் அந்த ஆடைகளை அணிந்து கொண்டு நேர்த்தியாகத் தோற்றமளித்தனர். அந்த ஆடைகள் அவர்க்ளுக்கு அணி செய்தன. இருவரும் ஒருவரையொருவர் வியந்து நோக்கிப் பார்வையால் விழுங்கிக் கட்டுக்கடங்காத காதலுடன் கட்டித் தழுவினர்—தாங்கள் அணிந்திருந்த புதிய ஆடைகளை நோக்கிப் புன்னகை புரிந்துகொண்டே இளமையின் வேகத்திலும் பூரிப்பிலும், அவர்கள் தங்கள் வேதனையை நொடிப்பொழுதில் மறந்து, உற்சாகப் பெருக்கில் திளைத்தனர். அவர்கள் களிநடம் புரிவதற்கு இன்னிசை இல்லாதது ஒன்றுதான் குறையாகத் தோன்றியது.

நீரிலிருந்து மீண்டு நிலத்தை, மரணத்திலிருந்து தப்பி வாழ்வை, மனச் சோர்விலிருந்து பரவச நிலையை, ஒதுங்கியிருந்த நிலையிலிருந்து அன்பின் பிணைப்பை, அவர்கள் ஒரு நொடிப்பொழுதில் அடைந்திருந்தனர். சுற்றத்தாரிடமிருந்து பிரிந்து அவர்கள் எங்கோ அஞ்ஞாத வாசம் செய்து கொண்டிருந்தனர். இதையெல்லாம் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் அவர்கள் அறிவுக்கில்லை. அறிய முற்பட்டால், மண்டை வெடித்துவிடும்போல், அல்லது அறிவு குழம்பிவிடும்போல் தோன்றியது. அதிர்ச்சியிலிருந்து மீளவும் இம்மாறுதலுக்குத் தாங்கிக் கொள்ள, இதயம்தான் முன்வர வேண்டும்.

கூடி மெய்ம்மறந்து இருந்த அவர்கள், சிறிது நேரத்திற்குப் பின்தான், தங்களுடன் வந்து காணாமற்போயிருந்த மற்றவர்களின் அச்சங்களையும் கவலைகளையும் பற்றி எண்ணத் தொடங்கினர். மற்றவர்களைச் சந்திக்கும்போது, தங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற அச்சமும் கவலையும் மெல்லத் தலை தூக்கின. 'நாம் ஓடிப் போய்விடுவோமா? ஒளிந்து கொள்வோமா?" என்று இளைஞன் கேட்டான். 'நாம் ஒன்று சேர்ந்து இருப்போம்,' என்று கூறி, அவள் அவனைப் பற்றிக் கொண்டாள்.

தரைதட்டிய கப்பல் பற்றிய செய்தியை அவர்களிடமிருந்து கேட்டறிந்திருந்த குடியானவன், மேலும் கேள்விகள் எதுவும் கேட்காமல், ஆற்றங்கரை ஓரத்துக்கு விரைந்தான். பெரு முயற்சிக்குப்பின் கப்பல், தரைதட்டிய நிலையிலிருந்து விடுபட்டு,

அப்பொழுதுதான் உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தது. காணுமல் போன இருவரையும் தேடும் முயற்சியில், அவர்கள் நிச்சயமற்று இங்குமங்கும் போய்க் கொண்டிருந்தனர். அக் குடியானவன் ஒலி எழுப்பிச் சைகை காட்டிக் கப்பல் பயணிகளின் கவனத்தை ஈர்த்துக் கப்பல் வசதியாகக் கரையோரம் வருவதற்கேற்ற ஓரிடத்திற்கு ஓடிச் சென்று சுட்டிக் காட்டிய, இடைவிடாது சத்தம் போட்டுக் கையை ஆட்டித் திசை காட்டிக் கொண்டும் நின்றபோது, கப்பல் கரையை நோக்கித் திரும்பியது. அவர்கள் கரையைச் சேர்ந்தபோது, அக்காட்சி சித்திரிக்க முடியாததாய் இருந்தது. திருமணம் நிச்சயமாகியிருந்த இளம் தம்பதிகளின் பெற்ருேர்கள் முதலில் கரைக்கு விரைந்தனர். பாசமிக்க முறை மாப்பிள்ளே நிலையிழந்து நிதானமிழந்து காணப் பட்டான். இருவரும் பத்திரமாக இருந்தனர் என்ற செய்தி அவர்களுக்கு நிம்மதி அளித்த அக்கணமே. இருவரும், தங்கள் மாறு வேடத் தோற்றத்தில், புதர்களுக்குப் பின்னிருந்து வெளியே வந்தனர். அவர்கள் நெருங்கி வரும்வரை, அவர்களே மற்றவர்கள் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லே. "இது யார்?" என்று தாய்மார்கள் இருவரும் கூவினர். "நாம் காண்பது என்ன?", என்று தந்தையர் இருவரும் வியந்தனர். இருவரும் அவர்கள் முன் தரையில் வீழ்ந்து வணங்கினர். "நாங்கள் இரு வரும் உங்கள் குழந்தைகள். ஒன்ருய்ப் பிணைக்கப்பட்டு விட்டோம். உங்கள் ஆசியைக் கோருகிருேம்," என்று அவர்கள் கூவினர். "எங்களே மன்னித்தருளுங்கள்," என்று கெஞ்சினுள் பெண். "உங்கள் ஆசியை அளியுங்கள்," என்று இளேஞன் கோரினுன். "நல்லாசி கூறுங்கள்," என்று இருவரும் கோரினர். அனேவரும் வியப்பில் மூழ்கித் திகைத்து நின்றனர். "நல்லாசி" என்ற வேண்டுகோள் மூன்ரும் முறையாக ஒலித்தது. அந்த வேண்டுகோளே யார்தான் மறுத்திருக்க முடியும்?

மொழிபெயர்ப்பாளர் பணி பற்றிச் சில கருத்துக்கள்

'மொழிபெயர்ப்பாளர் பணி பற்றிச் சில கருத்துக்கள்' என்ற தலேப்பில் 1828இல் கெதெ எழுதிய கட்டுரை, மற்ற நாட்டு இலக்கியங்களின் இயல்புகள், பண்புகள் பற்றி, அவருடைய கருத்துக்களே வெளியிடுகின்றன. உலக இலக்கியத்தின் படிப்பினேயாகிய பொதுமையான மனிதாபிமான உணர்வும், தேசியப் பண்பு நெறிகளும், மக்களிடையே பரஸ்பர மதிப்பையும் சகிப்புத் தன்மையையும், உலகத்தையும் தழுவும் மக்கண்மை உணர்வையும் போற்றி வளர்க்கின்றன. அனேத்து நாட்டுக் கலாசாரப் பரிவர்த்தனே, முக்கியமான அடிப்படைத் தேவை என்பதைக் கெதெ வலியுறுத்துகின்ருர்.

அகிலத்துலகுக்கும் பொதுவான மனிதத் தன்மைகளைப் போற்றி வளர்க்கப் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சிறந்த கவிகள், அழகுணர்வு எழுத்தாளர் ஆகியோரின் படைப்புக்கள் சென்ற சில காலமாக உதவியுள்ளன என்பது தெளிவாகியுள்ளது. அவரவர் எண்ணங்கள் அடிப்படையில் படைக்கப்பட்டதாயினும் சரி, வரலாறு அல்லது இதிகாசம் அல்லது கற்பனையின் அடிப்படையில் ஆக்கப்பட்டதாயினும் சரி, அகிலத்திலும், இந்தப் பொதுமை உணர்வு, தேசியத் தொகுதிகளிலும் தனி மனித ஆளுமையிலும் ஊடுருவி, ஓங்கி நின்று, ஒளி வீசுவதை நாம் மேலும் மேலும் காண முடியும்.

அன்றூட நடைமுறை வாழ்விலும், இதே இயக்கம் ஓங்கி நின்று, உலகில் நிலவும் காட்டுமிராண்டித்தனம், கொடுமை, வஞ்சகம், எத்து ஆகியவற்றுடன் கலந்து பின்னி, அவற்றை ஓரளவு குறைத்துக் கட்டுப்படுத்த முயன்று வருவதால், உலக சமாதானம் நிலைநாட்டப்படும் என்று நாம் எதிர்பார்க்க இயலாதென்றாலும், தவிர்க்க முடியாத மோதலின் பயங்கரத் தன்மை குறைந்து, போரின் நாசத் தன்மை ஓரளவு தணிந்து, வெற்றியில் செருக்கின் தன்மை ஓரளவு அடங்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

இந்த நிலைக்கு வழிவகுத்து வசதிசெய்யும் தன்மை எது எல்லா நாடுகளின் இலக்கியங்களிலும் காணப்படுகிறதோ, அப் பண்பைத் தான் மற்றவர்களும் ஏற்றுப் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு நாட்டின் தனித் தன்மையையும் இயல்புகளையும் நாம் அறிந்து, அவற்றை அந்நாடு பின்பற்ற உரிமை பெற்றது என்பதை ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையில் அந்நாட்டுடன் நம் உறவை வளர்க்கவேண்டும். ஒரு நாட்டின் தனியான, விசித்திரமான, பண்பியல்கள், அந்நாட்டின் மொழியையும் நாணயச் செலாவணியையும் போன்றவை. ஒருவரோடொருவர் உறவு கொள்வதை அவை எளிதாக்குகின்றன. உண்மையில், அவை இல்லாவிடில், அந்த உறவுகள் முழுமை பெறுவது இயலாது.

தனி மனிதர்கள், தேசியத் தொகுதிகள் ஆகியவற்றின் தனித் தன்மைகளை ஏற்றுக்கொண்டு, அதே நேரத்தில், உண்மையில் நிலையான சிறப்பு வாய்ந்த அம்சங்கள், மனித சமுதாயம் முழுவதுக்கும் சொந்தமானவை, என்பதை உணரும்போதுதான், உலகளாவிய பொதுமையான நோக்கையும் சகிப்புத் தன்மையையும் நாம் எய்த முடியும். இத்தகைய சமரச உணர்வை வளர்க்கவும், பரஸ்பர மதிப்பை நிலைநாட்டவும், நீண்ட காலமாகவே ஜெர்மானியர் பாடுபட்டு வந்துள்ளனர். ஜெர்மன் மொழியை அறிந்து பயில்பவன், எல்லா நாடுகளின் சிறப்புக்

கலையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுகின்றன. அச்சிறப்புக் கலை உலகுக்கு எடுத்துக் கூறி, அவற்றால் தானும் வளம்பெறும் ஆற்றலைப் பெறுகின்றன.

உலகளாவத்துக்கும் பொதுமையான இந்த ஆன்மிகப் பரிவர்த்தனையில் ஈடுபட்டுப் பண்புகளைப் பரிமாறிக் கொள்பவனுகவே, ஒவ்வொரு மொழி பெயர்ப்பாளரையும் மதிக்கவேண்டும். மொழி பெயர்ப்பில் எவ்வளவுதான் குறைகள் இருந்தபோதிலும், உலகப் பொதுப் பரிவர்த்தனையில் அதுதான் மிக முக்கியமான சிறப்பான சாதனமாகத் தொடர்ந்து அமையவல்லது.

"ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் அவரவர்கள் மொழியிலேயே ஒரு தீர்க்கதரிசியை இறைவன் அளித்துள்ளான்," என்று திருக் குர்ஆன் கூறுகிறது. ஆகவே ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரும், அந்தந்த நாட்டு மக்களிடையே ஒரு தீர்க்கதரிசியாவான்.

எக்கர்மனுடன் உரையாடல்

வயோதிகப் பருவத்தில் கெதெயின் விவேகத்தையும், நீண்ட வளமான, வாழ்க்கையின் அனுபவச் சாரத்தையும், கெதெயின் செயலாளரான எக்கர்மனுடன் அவர் நடத்திய உரையாடல்களை அச் செயலாளரே குறித்துவைத்து நமக்கு அளித்துள்ளதிலிருந்து நாம் அறிய முடிகிறது. 1824இல் நடந்த ஓர் உரையாடலிலிருந்து ஒரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. புரட்சிகளின் தன்மையை வரலாறு பூர்வமாய் அறிந்து, தெளிந்து, அப் படிப்பினைகளைக் கெதெ இந்த உரையாடலில் நமக்கு அளிக்கின்றார். 1789ஆம் ஆண்டுப் பிரெஞ்சுப் புரட்சியைப் போன்ற புரட்சிகள் அவசியமானவை, ஆக்கபூர்வமான பலன்கள் தரக்கூடியவை என்பதை அவர் ஒத்துக்கொள்கின்ற நேரத்தில், புரட்சிகளை ஒட்டி எழும் விளைவுகளின் காரணமாய் மொத்தத்தில் புரட்சிகள்மீது கெதெ ஆழ்ந்த வெறுப்பு கொண்டிருந்தார். இதற்குக் காரணம், அரசியலில் அவர் ஆழ்ந்த பிற்போக்கு வாதத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதல்ல. ஒருங்கிணைந்த இசைவும் சமநிலை நோக்கும் கொண்ட அமைப்பாக உலகை அவர் மதித்து, நிதானத்தையும் சமரச உணர்வையும் நிலைநாட்ட அவர் பாடுபட்டதே இதற்குக் காரணமாகும்.

சனவரி 4, 1824

பிரெஞ்சுப் புரட்சியின் நண்பனுக நான் விளங்க முடியாது என்பது உண்மைதான். அதன் கொடுமைகள் எனக்கு மிகத்

தெளிவாகப் புலனுகி, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், எனக்கு ஆத்திரத்தை மூட்டின. அதன் நன்மைகளோ அப்பொழுது தெளிவாகப் புலனுகவில்லே. வரலாற்றின் நிர்ப்பந்தத்தின் பயனுய்ப் பிரான்சில் எழுந்த அக் காட்சிகளோ, இயற்கைக்கு விரோதமாய் ஜெர்மனியிலும் வருவித்து, வலுக்கட்டாயமாக உருவாக்க, மக்கள் முயல்கின்றனர் என்பதையும் நான் உணராமல் இருக்கமுடியாது.

ஆனல் அதே சமயத்தில், நான், ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்தின் நண்பனும் அல்ல. மகத்தான புரட்சிகள் அனேத்தும் அரசாங்கங்களின் குற்றமேயல்லாது, ஒருபோதும் மக்களின் குற்றமாகாது என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன். அரசாங்கங்கள் நியாயமாகவும் விழிப்புணர்வுடனும் தொடர்ந்து இயங்கி, சீர்திருத்த நடவடிக்கைகளோ உரிய காலத்தில் மேற் கொண்டு, புரட்சி இயக்கத்தை நடுவழியில் சந்தித்து, அவசிய மான மாறுதல் கீழ்மட்டத்திலிருந்து உருவாகும்வரை அதை எதிர்க்காமல் இருந்தால், புரட்சிகள் எழுவதற்கே இடமில் லாமல் போகும்.

புரட்சிமீது நான் வெறுப்பு கொண்டிருந்ததால் இப்போதுள்ள அதிகார அமைப்பு தொடர்ந்து நிலேபெறுவதை ஆதரிப்பவன் என்று எனக்கு முத்திரை இடப்பட்டது. ஆனல் இன்றைய அமைப்பின் ஆதரவாளன் என்ற பட்டம் தெளிவற்றது: அதை நான் ஆட்சேபிக்க விரும்புகிறேன். இன்றுள்ள அமைப்பு முற்றிலும் நியாயமானதாகவும் நேர்மையானதாகவும் சிறந்ததாகவும் இருந்தால், அதில் எனக்கு ஆட்சேபம் எதுவும் இராது. ஆனல் இன்றுள்ள அமைப்பில், நல்ல அம்சங்கள் பலவற்றுடன், கெட்டதும், நியாயமற்றதும் குறைபாடுகள் நிறைந்ததுமான பல அம்சங்கள் கலந்திருப்பதால், இன்றுள்ள அமைப்பின் ஆதரவாளன் என்பது, கெட்டதையும் காலத்துக்கு ஒவ்வாததையும் ஆதரிப்பவன் என்றும் பொருள்படும்.

ஆனல் காலமோ, ஓயாத முன்னேற்றத்துக்கும் மாறுதலுக்கும் கட்டுப்பட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை, மனித விவகாரங்கள் மாறி, வேறு உருவெடுக்கின்றன. ஆகவே 1800இல், சிறந்ததாக விளங்கிய ஒர் அமைப்பு 1850இல் குறைபாடுகள் பல நிறைந்ததாக அமையக்கூடும்.

ஃப்ரீட்ரிஷ் ஷில்லர்

ஃப்ரீட்ரிஷ் ஷில்லர் (1759–1805), உர்த்தம் பெர்கில் மார்பாஹ் ஊரில் பிறந்தார். ஸ்டட்கார்ட்டில் கோமகன் கார்ல் ஒய்கோன் இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்றபோது, அதிகாரம் அனைத்தையும் தன் கைவசப்படுத்தியிருந்த ஓர் அரசின் நிர்ப்பந்தத்தின் கீழ், தனி மனித சுதந்திரத்தில் எவ்வளவு குறுக்கீடுகள் ஏற்பட முடியும் என்பதை அனுபவத்தினால் அறிந்தார். உர்த்தம் பெர்கிலிருந்து அவர் ஓடியபின், பல சோதனைகளும் ஏமாற்றங்களும் நிறைந்த வாழ்க்கையை நடத்தினார். சமூகத்தில் அவர் கண்ட குறைபாடுகளை, அவர் தம் நாடகங்களில் சுட்டிக் காட்டினார். இந்தப் பருவத்தில் அவர் எழுதிய நாடகங்களில் 'கொள்ளைக் காரர்' என்ற நாடகத்துக்கு அடுத்தபடியாக, 'லூயிஸ் மில்லெரின்' என்ற நாடகம் முக்கியமானது. மரபுவழிவந்த இலட்சியவாத நாடகங்களை ஷில்லர் எழுதத் தொடங்கிய போக்கு, 'டான் கார்லோஸ்,' (1787) என்ற நாடகத்துடன் தொடங்கியது. 1787-இல் ஷில்லர் வைமாரில் குடியேறினார். அங்கு கெதெயுடன் நெருங்கிய நட்பு கொண்டு வாழ்ந்தார். அவர்கள் உறவின் பயனாக, ஜெர்மன் மரபுவழி இலக்கியத்தின் முக்கிய கேந்திரமாக வைமார் விளங்கியது. 1796 வரை ஷில்லர் முக்கியமாக இலக்கிய, மெய்யியல் சித்தாந்தக் கட்டுரைகளை எழுதிவந்தார். ஷில்லரின் நூல்களைத் திறனாய்வு செய்வதற்கு, அக் கட்டுரைகள் மிக முக்கியமானவை. உலகைப்பற்றி அவர் கொண்டிருந்த இலட்சியக் கண்ணோட்டத்தை அக் கட்டுரைகள் தெளிவாக விளக்குகின்றன. அவருடைய தெளிவான மெய்யியல் தத்துவக் கோட்பாடு, அடிப்படை அம்சங்களில் காண்டின் தத்துவத்திலிருந்து வேறுபட்டதாய் இருந்தபோதிலும், அத் தத்துவத்துடன் சார்பு கொண்டதாய் அமைந்திருந்தது. 1799 முதல் 1805இல் அவர் மரணமடைந்த வரை, அவர் ஓயாமல் நோய்வாய்ப்பட்டிருந்தார் ஆயினும் அக் கட்டத்தில் தான், தமது விடாமுயற்சியாலும் மன உறுதியாலும், தம் அறிவாற்றலைப் பயன்படுத்தி, ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வெளிவந்து தம் முக்கிய நாடகங்களை எழுதினார். 'வாலன்ஷ்டைன்,' 'மேரியா ஸ்டுவர்ட்,' 'ஜோன் ஆப் ஆர்க்,' 'மெஸ்ஸினுவைச் சேர்ந்த மணப் பெண்,' 'வில்லியம் டெல்,' ஆகியவை அந்த நாடகங்களில் முக்கியமானவை. உயர்ந்த விதிகளால் ஆளப்படும் உலகின் தத்துவார்த்தப் பின்னணியில், இந்த நாடகங்களின் கதைப்போக்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் நேரில் நிலவும் நிலைமைக்கும், இலட்சிய நிலைக்கும் இடையே உள்ள பெரும் பிளவை ஷில்லர் நன்கு உணர்ந்துள்ளார். இயற்கையுடனும் உலகுடனும் இரண்டறக் கலந்து, அதன்மூலம் இசைவு காண

விரும்பிய கெதெக்கு மாறுக, இலட்சியவாதியின் போராட்டத்தை—நேரில் நிலவும் நிலையைக் கண்டு, அத்துடன் மோதித் துன்பகரமான முடிவை எய்தியபோதும், தன்னுடைய அகத்தின் சுதந்திரத்தால் தலைவிதியை வென்று, அதன் மூலம் தன் இலட்சியத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் இலட்சியவாதியின் போராட்டத்தை—ஷில்லர் சித்திரித்தார்.

கொள்ளைக்காரர்கள்

ஷில்லரின் முதல் நாடகமான 'கொள்ளைக்காரர்கள்'. (1781), கெதெயின் 'கெட்ஸ்' போலவே, தன் உட்பொருளின் அடிப்படையில் 'ஸ்தோர்ம், திரங்க்' இனத்தைச் சேரும். நாடகத்தின் கதைக் கரு கடந்தகால நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், நாடகத்தின் செய்தியும் படிப்பினையும், ஷில்லர் வாழ்ந்த காலத்திற்கு உரியதாகவே இருந்தன. நாடகத் தலைவன், கார்ல் மூர், சுதந்திரம், நீதி, துணிவான செயலாற்றல் ஆகிய வற்றில் எல்லையற்ற ஈடுபாடு நிறைந்தவன். தான் அனுபவித்து உணர்ந்த, அநீதிகளும் லஞ்ச ஊழல்களும் நிறைந்த ஒரு சமூகத்தை எதிர்த்துக் கொள்ளைக் கூட்டத் தலைவன் என்ற முறையில் அவன் கலகக்காரனாக மாறுகிறான். ஆனால் ஷில்லரின் பிந்தியகால இலட்சியவாத நாடகங்களின் அடிப்படையில், நாடகத்தின் முடிவில் ஒரு மனமாற்றம் நிகழ்கிறது. உலகப் பொதுமையான அற நெறிகளையும் நியதிகளையும் மீறிக் குற்றம் இழைத்ததைக் கார்ல் மூர் உணர்ந்து, அதிகாரிகளிடம் சரணடைகின்றான். அவன் சகோதரன் பிரன்ஸ்மோர், அவனுக்கு மாறுபட்ட குணம் கொண்டவன். லோகாயதம், இன்மைக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்க்கையை நோக்கிய அவன், மனித இனத்தின் மீது கொண்ட அருவருப்பு காரணமாகவும், எதிலும் நம்பிக்கை கொள்ளாத போக்கின் காரணமாகவும், கயவனாக நடந்துகொள்கிறான். தன் சுயநலத்திட்டங்களுக்குச் சாதகமாகத் தன் தந்தையைச் சாகடிக்கும் உபாயங்கள் பற்றி அவன் கொண்டிருந்த எண்ணங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது இங்கு தரப்பட்டுள்ள பகுதி.

புரட்சிகரமான தாக்குதலாக மதிக்கப்பட்ட இந்த நாடகம் எடுத்த எடுப்பிலேயே பெரும் வெற்றிபெற்றது. ஷில்லர் எழுத்துப் பணியைத் தொடரக்கூடாதென்று, அவருடைய அதிபதி, ட்யூக், தடை உத்தரவு விதித்தார்.

அங்கம் 2, காட்சி 1.

பிரான்சஸ் டி மோர்: (தன் அறையில் தனியாகச் சிந்தனை செய்துகொண்டிருக்கிறான்) நான் பொறுமையனைத்தும்

இழந்துவிட்டேன். மீண்டும் அவர் உடல் தேறிவருகிறது என்று டாக்டர் கூறுகிறார். வயோதிகன் வாழ்வு முடிவற்றது போலும். வேதாளக் கதைகளில் நரகத்தில் உள்ள காவல் நாய்போல், செல்வத்தை நான் அடைவதற்குக் குறுக்கே நின்று தொலைக்கும் இந்த மாமிசப் பிண்டம் மட்டும் இல்லாவிடில், என் பாதை எவ்வளவு சுலபமாகவும் சொகுசாகவும் இருந்திருக்கும்!

அந்த இயந்திரத்தின் இரும்புப் பிடிக்கு அடங்கித்தான் என் திட்டங்கள் பணிந்து செல்லவேண்டுமா? சடப் பொருளின் நத்தை வேகத்தில், என் உத்தம ஆன்ம உணர்வும் ஊர்ந்து செல்ல வேண்டுமா? இறுதிச் சொட்டு எண்ணெயில் எரிந்து கொண்டிருக்கும் ஒரு தீபத்தை அணைப்பது போல்தான் அது இருக்கும். இருந்தாலும் அதை நானே செய்ய விரும்பவில்லை. மக்கள் அவர் தாமாக மரணமடைய வேண்டும். திறமையிக்க ஒரு மருத்துவரைப் போல் இயங்க, ஆனால் வழக்கமாக அவர் செய்வதற்கு மாறுகச் செய்ய, நான் விரும்புகிறேன். இயற்கையின் சக்கரத்துக்கு முட்டுக்கட்டை போடாமல், அச் சக்கரம் வேகமாக உருளச் செய்வதையே நான் விரும்புகிறேன். ஆயுட்காலத்தை நம்மால் நீடிக்கமுடிகிறது. அப்படியானால் அதைக் குறைக்க மட்டும் தடை ஏன் விதிக்க வேண்டும்?

பொறியமைப்பின் இயக்கங்களோடு, ஆன்ம உணர்வின் வெளிப்பாடு நிலைகளும் இணைந்து நிற்கின்றன என்பதை மெய்யியல் அறிஞரும் பௌதிக இயல் வல்லுநரும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றனர். பொறி இயக்கத் துடிப்பு விரைகிற நேரத்தில், உள்ளத்தின் உற்சாகம் குறைகின்றது. உணர்ச்சிப் பெருக்கு ஏற்படும்போது, நம் சக்தி ஊற்றுகள் வற்றுகின்றன. மனத்திலே சுமக்கும் கவலைகள், உடற்கூட்டை வீழ்த்தித் தரையில் கிடத்துகின்றன. வாழ்க்கை என்னும் கோட்டைக்குள் மரணம் புகுவதற்கு, உள்ளத்தின் மூலமாக உடலை அழிப்பதற்குப், புதுப் பாதை ஒன்றை அமைத்துக் கொடுக்க முடிந்தால், அது ஓர் அரிய கண்டுபிடிப்பாக அமையும். அதைக் கண்டுபிடிப்பவன் உண்மையில் ஒரு சாதனையைச் செய்தவனாவான். மூர், அதைப் பற்றி எண்ணிப்பார். நீ அந்தக் கலையின் கண்டுபிடிப்பாளராக அமைவதற்கு ஏற்ற அருகதை அந்தக் கலைக்கு உண்டு. நச்சு ஊட்டும் சூழ்ச்சியினை, அறிவியல் துறையின் நிலைக்கே உயர்த்திவிடவில்லையா? பரிசோதனைகள் பல செய்து, தன் எல்லைகளை வெளிப்படுத்த இயற்கையைக் கட்டாயப்படுத்தவில்லையா? நாடித் துடிப்பைப் பல ஆண்டுகளுக்கு முன்பே அளந்து அறுதியிட்டு, இதுவரை செல்லலாம், இதற்குமேல் செல்லக்கூடாது என்று நாடிக்குச் சொல்லக்கூடிய வகையில் நாம் முயற்சிகள்

செய்யமுடியாதா? இத்துறையில் நம் ஆற்றலை வெளிப்படுத்தி வளர்க்க நாம் ஏன் முயலக்கூடாது?

ஆன்மாவிற்கும் உடலுக்கும் உள்ள இனிய, அமைதியான இசைவைக் கலைத்துக் குலைக்க, நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? எந்த வகையான உணர்ச்சியை நான் தேர்ந்தெடுக்க வேண்டும்? வாழ்க்கை எனும் இழையை முறிக்கும் பலமும் வலிவும் எந்த உணர்ச்சிக்கு இருக்கும்? **சினமா?** இல்லை. தீராப் பசி கொண்ட அந்த ஓநாய், தன் உணவை வெகு விரைவிலேயே விழுங்கிவிடுகிறது. **துக்கமா,** இல்லை. அது, ஊனிலே நீண்ட காலம் நெளியும் புழு. **துன்ப வேதனையா?** அந்த நச்சரவு மிக மந்தமாகப் புரளுகிறது. **அச்சமா?** இல்லை. நன்மம்பிக்கை அதன் முனையை மழுக்குகின்றது. என்ன? இவைதான் நம்மிடம் உள்ள நாசக் கருவிகளா? அழிவின் ஆயுதசாலை அதற்குள் காலியாகி விட்டதா? **(ஆழ்ந்த சிந்தனை செய்து கொண்டே)** என்ன? வேறெதுவும் இல்லையா? **(திடீர் அதிர்ச்சியுடன்)** நான் கண்டு பிடித்துவிட்டேன். **கிலி!** கிலியால் சாதிக்கமுடியாதது என்ன இருக்கிறது? அந்த அசுரனின் சில்லிடச் செய்யும் பயங்கரத் தழுவலுக்கு எதிராக **அறிவோ,** சமயமோ, என்ன செய்ய முடியும்? ஆனால் இந்தச் சூரைக் காற்றையும் அவன் தாங்கிக் கொண்டால், என்ன செய்வது? அப்பொழுது, **மனவேதனை,** தவறுக்காகக் வருந்தித் திருந்தும் **ஏக்கம்,** ஆகிய இரண்டும் தான் என் துணைக்கு வரவேண்டும். ஆன்மாவிற்குள் புரையோடிச் செல்லரிக்கும் புற்று நோய்கள் அவை. அவை உனக்கு உணவு ஊட்டி, உன் மலத்தையே விழுங்குபவை. அவை நின்று அழிக்க வல்ல நாச சக்திகள்; உன்னிடையே நச்சை உருவாக்கும் ஊற்றுக்கள். உனக்கு விட்டுச் செல்லப்பட்டுள்ள உன் சொந்த செல்வத்தை விரயம் செய்துவிட்டு, அன்னையின் ஊனிலே வளர்ந்து கொழுக்கும், ஓயாது சிணுங்கிக் கொண்டிருக்கும் **மன உளைச்சலே,** நீயும் என் உதவிக்கு வா. பரிவான தேவதைகளே, இதமான புன்சிரிப்புடன் கூடிய **'இறந்த காலம்'** எனும் தேவதையே, பொங்குவளக் கொம்பினைத் தாங்கி நிற்கும், மலர்ச்சி **மிக்க, 'எதிர்காலம்'** எனும் தேவதையே! நீங்களும் என் உதவிக்கு வாருங்கள். ஆர்வத்துடன் கைப்பற்றவரும் அவனுடைய கைகளில் பிடிபடாமல் நீங்கள் தப்பியோடும் நேரத்திலேயே, பேரின்ப வீட்டின் பரவசங்களை, உங்கள் கைக் கண்ணாடிகளில் அவனுக்குக் காட்டுங்கள். இவ்வாறு, தள்ளாடும் அந்த உயிரின் மீது, நான் அழிவுக் கணைகளை ஒவ்வொன்றாக வீசுகையில், என் அறிவுத் தேவதைகள் பட்டாளத்தின் கடைசியில், **'மன முறிவு'** என்பவள் வரட்டும். வெற்றித்திட்டம்! என்னுடைய திட்டம் தயாராகிவிட்டது; இதைவிடத் தந்திரமான

துணிவான திட்டம், நம்பிக்கையான, பத்திரமான, திட்டம் வேறு இருக்க முடியாது. கத்தியால் அறுவை செய்து பார்க்கும்போது, காயத்தின் அறிகுறியோ, உடலை அரித்த நச்சுவின் அறிகுறியோ, காணப்படாது. **(உறுதியுடன்)** இப்பொழுது துணிந்து செயலாற்றுவதில் முனைவேன். இயந்திரத்திலிருந்து இறைவனே வெளிவரட்டும்! **(ஹெர்மன் வருகிறார்)** ஹா—ஹெர்மன்.

கௌரவம் இழந்தபின் குற்றவாளி

'கௌரவம் இழந்தபின் குற்றவாளி', என்ற ஷில்லரின் சிறுகதை (1785), உண்மை நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. அதிலிருந்து, ஒரு பகுதி, சுருக்கி இங்கு தரப்பட்டுள்ளது. ஒரு குற்றவாளியின் உள்ளக் கிடக்கைகளையும் நோக்கங்களையும் இளம் ஷில்லர் பரிசீலனை செய்கிறார். தன் தவறுக்கு ஏற்கெனவே தண்டனை அனுபவித்து விட்ட ஒரு குற்றவாளியை மதிக்கத் தவறும் சமூகத்தையே பழி சாருமென்ற முடிவுக்கு அவர் வருகிறார். இவ்வாறு சமூகத்தால் நிராகரிக்கப் படுவதால், அவன் மேலும் குற்றங்கள் செய்ய உந்தப்பெற்று, முக்கியமாக, தண்டனைகள் நிறைவேற்றப்படும் விதத்தினால், மோசமான நிலையிலிருந்த அவன் இன்னும் கேவலமான நிலையை அடைகின்றான். இயல்பாகவே, கிறிஸ்டியன் உல்ஃப் கொடுமையான, கேவலமான, நடத்தை உடையவனல்ல; கண்ணியத்தைப் போற்றி நடப்பவன் தான். தன் சூழ்நிலையின் காரணமாகவும், சமூகத்தின் பொது நோக்கின் காரணமாகவும், முதலில் தவறு செய்யத் தூண்டப்படும் அவன், நாளடைவில் மேலும் மேலும் பெரிய குற்றங்களைச் செய்யத் துணிகிறான். ஷில்லர், மிகுந்த மதி நுட்பத்துடனும் தெளிவுடனும் ஆராயும் பிரச்சினை, இன்றும் நம்முடன் இருக்கின்ற பிரச்சினைதான். நம் நூற்றாண்டிலேயே பல முக்கிய புதினங்களில் இப்பிரச்சினை ஆராயப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தில் கிராமப் பகுதியில் சிற்றூரில் ஒரு சத்திரம். ஊரின் பெயரை சொல்லக்கூடிய நிலையில் இல்லாதது ஏன் என்பது போகப் போகத் தெளிவாகும். அந்தச் சத்திரத்துச் சொந்தக்காரருக்குக் கிறிஸ்டியன் உல்ஃப் என்ற பெயரில் ஒரு மகன். தந்தை இறந்துவிட்டதால், தன் இருபதாவது வயது வரை, சத்திரத்தை நடத்தத் தன் அன்னைக்கு அவன் உதவி வந்தான். தொழில் திருப்திகரமாயில்லை. ஆகவே அவனுக்கு ஓய்வு நேரம் அதிகம் இருந்தது. பள்ளிக்கூடத்தில்கூட, 'இனம் கண்டுகொள்ள முடியாத புள்ளி,' என்று அவன் கருதப்பட்டான். அவனுடைய துடுக்குத்தனம் பற்றி, வயதுப் பெண்கள் புகார் செய்தனர். அவனுடைய கற்பனைத் திறனைப் பாராட்டினர்,

நகரத்துக் காளைகள். அவன் உடம்பை அச்சுவார்த்தபோது; இயற்கை அவனிடம் அதிக இரக்கம் காட்டவில்லை. குட்டையான, கவர்ச்சியற்ற தோற்றம்; கண்ணை உறுத்தும் கருநிறத்தில் சுருட்டை முடி; சப்பையான மூக்கு; ஏற்கெனவே தடித்த மேலுதடு; குதிரை ஒன்று கொடுத்த உதையில், மேலும் வீங்கிக் கோணியிருந்தது. இவையெல்லாம் சேர்ந்து, அருவருக்கத்தக்க தோற்றத்தை அவனுக்கு அளித்திருந்தன. பெண்கள் அவனைக் கண்டு கூசினர். அவன் நண்பர்கள் அவனை ஓயாமல் பரிகசிக்க, அவன் தோற்றம் ஒன்றே போதும்.

இயற்கை தனக்கு மறுத்துவிட்டதைத் தன் சொந்த முயற்சிகளாலேயே அடைய அவன் விரும்பினான். அவன் இயல்பாக இனிய தோற்றம் உடையவனாக இல்லாததால், மற்றவர்களிடம் இனிய முறையில் பழகி, அவர்களைக் கவர முற்பட்டான். புலனிச்சைகளுக்கு அவன் அதிகம் கட்டுப்பட்டவன். தான் காதல் கொண்டிருப்பதாக எண்ணித் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டான். அவன் தேர்ந்தெடுத்த பெண், அவனை மிகத் துச்சமாக நடத்தினாள். தன்னுடன் போட்டியிட்ட மற்ற காதலர்களிடம், அவள் பிரியமாகவே நடந்துகொண்டாள் என்று அவனுக்குத் தெரியவந்தது. அந்தப் பெண்ணை ஏழை. அவள் அன்புக்கு அவள் தன் இதயத்தைத் திறக்க மறுத்தபோதிலும், அவன் அன்பளிப்புகளுக்காகிலும் இதயத்தைத் திறப்பாள் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவனுக்கும் பணமுடை இருந்தது. சத்திரத்திலிருந்து அவனுக்குக் கிடைத்த சொற்ப வருவாயும், தன்னை அலங்கரித்துக்கொள்ள அவன் செய்த முயற்சிகளிலேயே கரைந்துவிட்டது. மோசமாகிக் கொண்டிருந்த தன் குடும்ப நிலையைத் தூக்கிநிறுத்தச் சூதாட்ட வர்த்தக பேரங்களில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஊக்கமோ, அறிவோ, அவனிடம் இல்லை. தான் இதுவரை வகித்து வந்த, சொந்தக் காரன் என்ற அந்தஸ்தைத் துறந்து, குடியானவன் நிலையை ஏற்றுக்கொண்டு, தான் பெரிதும் மதித்துப் போற்றிய சுதந்திரத்தைக் கைவிடும் முடிவுக்கு அவனால் வரவும் இயலவில்லை—அவன் செருக்கினாலும், சொகுசினாலும். ஆகவே அவனுக்கு ஒரே ஒரு வழிதான் புலனாயிற்று. அவனுக்கு முன்னும் அவனுக்குப் பின்னும் ஆயிரக் கணக்கானவர் பின்பற்றி, அவனைவிட வெற்றி கண்டுள்ள பாதை அது. அதுதான், நேர்மையான திருடனாகும் வழி. அவனுடைய ஊரின் எல்லையில், இளவரசனுக்குச் சொந்தமான ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் திருட்டுத் தனமாய் வேட்டையாடுவதில் முனைந்தான் அவன். அதில் கிடைத்த லாபத்தை, அவன் விசுவாசத்துடன், தான் நேசித்த பெண்ணின் கையில் கொட்டினான்.

ஹன்ஷின் என்ற அப் பெண்ணின் காதலர்களில் ஒருவன், காட்டு எல்லை அதிகாரியால் அமர்த்தப்பட்டிருந்த காப்பாளன் ராபர்ட் என்பவன். தனக்குப் போட்டியாய் வந்திருந்த உல்.ப் பணத்தைத் தாராளமாகச் செலவிடுவதன் மூலம் பெண்ணின் மனத்தைக் கவர்ந்துவருவதை உணர்ந்து, வசதிக்குறைவாய் இருந்தவனுக்குத் திடீரென வருவாய் பெருகியதன் இரகசியத்தை ஆராயப் பொறுமையால் உந்தப்பெற்றான். தன் எதிரியின் சத்திரமான 'சூரியனுக்கு' அடிக்கடி அவன் செல்லத் தொடங்கினான். கூர்ந்து கவனித்ததில், பணம் எங்கிருந்து வந்தது என்பது பற்றிய துப்பு அவனுக்குப் புலனுயிற்று. இதற்குச் சிறிது காலத்துக்கு முன்தான், கள்ளத்தனமாய் வேட்டையாடுவதைக் கடுமையாகத் தண்டிக்கும் சட்டம் புதுப்பிக்கப்பட்டு, சட்டத்தை மீறுவோர் கடுங்காவல் தண்டனைக்கு ஆளாவர் என்று விதிக்கப்பட்டிருந்தது. தன் எதிரியின் இரகசிய நடமாட்டத்தை அம்பலப்படுத்த ராபர்ட் அயராது அலைந்து பாடுபட்டான். இறுதியில், கள்ளத்தனமாய் வேட்டையாடிய தன் எதிரியைக் கையும் மெய்யுமாய்ப் பிடிப்பதில் அவன் வெற்றி பெற்றான். உல்.ப் கைது செய்யப்பட்டான் அபராதம் செலுத்திச் சிறை செல்வதிலிருந்து தப்ப, அவனிடமிருந்து சிறிதளவு சொத்து முழுவதையும் அவன் பரிகொடுக்க வேண்டியதாயிற்று.

ராபர்ட் போட்டியில் வெற்றி பெற்றான். அவனுடைய எதிரி, இடம் தெரியாமல், விரட்டப்பட்டான். பிச்சைக்கார நிலையை அடைந்திருந்த அவனை ஹன்ஷின் சட்டை செய்யவில்லை. உல்.ப் தன் எதிரியை இனம்—கண்டுகொண்டு விட்டான். அந்த எதிரி தன் பெண்ணைக் கைப்பற்றிக் கொண்டான் என்பதையும் அவன் அறிந்தான். அவன் ஆண்மைக்கு ஏற்பட்டிருந்த அவமான உணர்வுடன், தன் குறைபாடுகளை அறிந்ததால் அவனுக்கு ஏற்பட்டிருந்த மனச்சோர்வும் சேர்ந்து கொண்டது. வறுமை, பொறுமை, இரண்டுமே அவன் மென்மை உணர்வுகளைத் தாக்கின. பட்டினி, பரந்த வெளியுலகிலே, அவனைப் பிடரி பிடித்துத் தள்ளியது. பழிவாங்கும் வெறியும் ஆத்திரமும் அவனைத் தம் வசமாக்கி அழுத்தி வைத்தன. இரண்டாம் முறையாக, அவன் கள்ளத்தனமாய் வேட்டையாடுவதில் ஈடுபட்டான். இரண்டாம் முறையாக, ராபர்ட்டின் திறமை அவனைப் பிடித்துக் கொடுத்தது. இம்முறை அவன் சட்டத்தின் தண்டனையின் முழு வேகத்துக்கும் இலக்காக வேண்டியிருந்தது. பணம் கொடுத்துத் தப்பிக்கொள்ள, அவனிடம் எதுவும் எஞ்சியில்லை. ஒரு சில வாரங்களில் அவன் சிறை புகுந்தான்.

ஓராண்டு சிறைவாசத்துக்குப்பின் அவன் வெளிவந்தபோது, இவ்வளவு காலம் தொலைவில் இருந்த காரணத்தால் அவன்

ஆசையின் வேகம் அதிகரித்துத்தானிருந்தது. அவன் தாங்கிய துன்பச் சுமையில் அவன் ஆத்திரம் வளர்ந்திருந்தது. அவன் விடுதலை அடைந்த உடனேயே, அவன் தன் சொந்த ஊருக்கு விரைந்து, யோஹானேயைக் காண முயன்றான். அவன் கண்ணில் பட்டதும், அனைவரும் அவனைவிட்டுத் தூர விலகி ஓடினர். வறுமையும் துன்பமும் அவன் பெருமையை அடக்கி, அவன் சொருசை மாற்றி யிருந்தன. அக்கம் பக்கத்துச் செல்வரிடம், நாட்கூலி பெறும் பணியாளனாக வேலை செய்ய அவன் முன் வந்தான். குடியானவர்களோ, அவன்மீது சிறிதும் இரக்கம் கொள்ளாமல், மெலிந்த நோஞ்சானாக இருந்த அவனை ஒதுக்கி விட்டு, வாட்ட சாட்டான பலசாலிகளான மற்றவர்களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு அமர்த்தினர். இறுதியாக அவன் ஒரு வேலைக்கு முயற்சி செய்தான். ஒரு வேலை இன்னமும் காலியாய் இருந்தது. ஒரு காலத்தில் உயர்ந்த அந்தஸ்து கொண்டிருந்த ஒருவனின் வீழ்ச்சியின் இறுதிக் கட்டாயமாய் அந்த வேலை அமைந்திருந்தது. ஊர்ப் பன்றி மேய்ப்பாளனாய் வேலை பார்க்க அவன் முன்வந்தான். ஆனால் உதவாக்கரை ஒருவனிடம் தங்கள் பன்றிகளை ஒப்படைக்க ஊர்மக்கள் சித்தமாயில்லை. தன் முயற்சிகள் அனைத்திலும் ஏமாற்றம் அடைந்து, அனைவராலும் நிராகரிக்கப்பட்ட அவன், மூன்றாம் முறையாகக் கள்ளத்தனமாய் வேட்டையாடுவதில் ஈடுபட்டான். மூன்றாம் முறையும், கவனமிக்க தன் எதிரியின் கையில் பிடிபட்டான்.

முதல் தண்டனைக்குப் பின்னும், இருமுறை மீண்டும் குற்றம் செய்திருந்ததால், அவன் கடும் தண்டனைக்கு உரியவன் என்று கருதப்பட்டது. நீதிபதிகள் சட்ட நூல்களைத் துருவி ஆராய்ந்தனரே ஒழிய, குற்றவாளியின் உள்ளத்தைத் துருவிப் பார்க்க வில்லை. கள்ளத்தனமாய் வேட்டையாடுவதன்மீது சட்டப்படி விதிக்கப்பட்டிருந்த தடையை வலியுறுத்த, மற்றவர்களுக்குக் கடும் எச்சரிக்கையாய் அமையும் வகையில் அவனுக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்று கருதப்பட்டது. கோட்டைச் சிறையில் மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், தூக்குமர முத்திரையை அவன் முதுகில் பச்சை குத்த வேண்டுமென்றும் தீர்ப்பு கூறப்பட்டது.

இந்த மூன்றாண்டுகளும் கடந்து சென்றன. அவன் சிறையிலிருந்து வெளியே வந்தான்—சிறைக்குள் புகுந்தபோது இருந்ததைவிட முற்றிலும் மாறுபட்ட மனிதனாய். இக் கட்டத்தில், அவன் வாழ்வில் புதிய படலம் ஒன்று தொடங்கியது. அப் படலத்தைச் சித்திரித்து அவனே பின்னர், தன் ஆன்மிக ஆலோசகரிடமும் நீதி மன்றத்திடமும் கூறிய சொற்களை இப்பொழுது

கோட்போம். அவன் கூறினான்: 'வழி தவறிச் சென்றவனைய் நான் சிறைக்குள் புகுந்தேன். ஊதாரியாய்ச் சிறையிலிருந்து வெளியே வந்தேன். நான் உலகில் அருமையாய்ப் போற்றி மதித்தது, இன்னமும் எனக்கு எஞ்சியிருந்தது. என் பெருமை, அவமானத்திற்கு முன் தலைகுனிந்தது. நான் சிறைக்குக் கொண்டுவரப்பட்டபின், இருபத்தி மூன்று கைதிகளுடன் அடைக்கப்பட்டேன். அவர்களில் இருவர் கொலைகாரர்கள்; மற்றவர்கள் பேர்போன திருடர்கள்; போக்கிரிகள். நான் இறைவனைப் பற்றிப் பேசியபோது, அவர்கள் எள்ளி நகையாடினர். இரட்சகரைப் பற்றி அவதூறுகளைச் சொல்லுமாறு அவர்கள் என்னை வற்புறுத்தினர். வேசிப் பாட்டுக்களை அவர்கள் எனக்குப் பாடிக் காட்டினார்கள்; ஒழுக்கம் கெட்ட எனக்கே, அவை அருவருப்பையும் பயங்கரமாகவும் இருந்தன. ஆனால் அங்கு நான் கண்ணால் கண்டவை, என் மான உணர்வுக்கு மேலும் அதிர்ச்சியைத் தந்தன. ஒரு கேவலமான வரலாற்றைக் கூறுமல், நீதான சூழ்ச்சிக்குத் திட்டமிடாமல், ஒரு நாள் கூட கழியவில்லை. தொடக்கத்தில், அவர்களிடமிருந்து ஓடி, என்னால் இயன்றவரை, அவர்கள் உரையாடலைக் கேட்காமல் ஒதுங்கியிருக்க முயன்றேன். ஆனால் யாருடனாவது பழகவேண்டுமென்று நான் துடித்தேன். இரக்கமற்ற சிறைக் காப்பாளர்கள், என் நாயைக் கூட என்னுட விட்டுவைக்கவில்லை. வேலையோ கடுமையாகவும் உடலை முறிப்பதாகவும் இருந்தது. என் உடல் நலனை சீர்கெட்டிருந்தது. எனக்கு ஆதரவும், வெளிப்படையாகக் கூறினால், அனுதாபமும், தேவையாயிருந்தன. என் மனச்சான்றில் எஞ்சியிருந்ததை விலை கொடுத்தாகிலும், நான் இவற்றை வாங்க வேண்டிய நிலையில் இருந்தேன். ஆகவே, மிகக் கீழ்த்தரமான செயல்களுக்கும் நான் சிறிது சிறிதாகப் பழக்கப்பட்டேன். ஓராண்டின் இறுதிப் பகுதிக்குள், நான் குருவையும் மிஞ்சிய சீடனாகிவிட்டேன்:

"அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் நான் விடுதலை பெறவும், பழிதீர்த்துக்கொள்ளவும், துடித்தேன். மற்றவர்கள் அனைவருமே என்னைவிட உயர்ந்தநிலையில், என்னைவிட மகிழ்ச்சியாக, வாழ்ந்தனர். ஆகவே அவர்கள் அனைவரும் என்னை அவமதித்ததாகவே நான் கருதினேன். சட்டங்களுக்குக் காவு கொடுக்கப்பட்ட பலி ஆடு என்றும், இயற்கை நீதியினால் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட தியாகி என்றும் நான் என்னைப்பற்றிக் கருதிக்கொண்டேன். சிறையிருந்த மலைக்குப் பின்னிருந்து கதிரவன் எழுந்தபோது, நான் என் பற்களைக் கடித்து, விலங்குகளை உரசிக் கொண்டேன். பரந்த காட்சி புலனாவது, இருவகைகளில், கைதிக்கு நரக வேதனை தருவது. சிறைத் தூபியில் காற்றுத் துவாரங்கள் வழியாக ஒளை

எழுப்பிய காற்றும், சாளரத்தின் இரும்புக் கம்பிகள் மேல் தத்திய தூக்கணங்குருவியும், தாங்கள் சுதந்திரம் துய்ப்பதைச் சுட்டிக்காட்டி, ஏளனம் செய்து, என் சிறைவாசக் கொடுமையை மேலும் தாங்க முடியாததாக்கிற்று. மனிதனைப் போல் தோற்ற மளிக்கும் எதன் மீதும் என்றும் தீராத, தணியாத வெறுப்பு கொள்வதாக, அந்த வேளையில் தான், நான் சூளுரைத்துக் கொண்டேன். அந்தச் சூளுரைக்கேற்ப உண்மையாகவே நான் நடந்து வந்துள்ளேன்.''

வாலன்ஷ்டைன்

1799இல் எழுதப்பட்ட 'வாலன்ஷ்டைன் மரணம்', 1618–48 ஆண்டுகளில் நடந்த 'முப்பதாண்டுப் போரில்' அரசர் சேனையில் தலைமைத் தானுதிபதியான வாலன்ஷ்டைன் என்ற வரலாற்றுப் பாத்திரத்தை மையமாகக் கொண்டு ஷில்லர் எழுதிய மூன்று நாடகத் தொடரில் இறுதி நாடகம். வெளித்தோற்றத்துக்கு, நாடக நிகழ்ச்சி, வரலாற்று நிகழ்ச்சிகளைப் பின்பற்றி அமைக்கப் பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. ஆனால் ஷில்லர் அந்த நிகழ்ச்சி களுக்கு அப்பாற் சென்று, அதிகாரம், செயல்கள், ஆகிய மனிதப் பிரச்சினைகளைத் துருவி ஆராய்கிறார். அரசியல் வழியில், வாலன் ஷ்டைன் தன் சொந்த வழியிலேயே செல்கிறார். தன் அதிகாரத்தை மேலும் வளர்த்து வலுப்படுத்த அவர் திட்டங்கள் தீட்டுகிறார். இக் குறிக்கோள்களை எய்த அவர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இரகசியமாய் ஆயத்தம் செய்கிறார். நேரடியாக நடவடிக்கையில் இறங்கித் தாமே பொறுப்பேற்றுக் கொள்ளத் தயங்கும் நேரத்தில், நிகழ்ச்சிகளைத் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்த அவர் முயல்கிறார். அவ்வளவு எச்சரிக்கையாகவும் நிதானத்துடனும் நடந்துகொண்ட போதிலும்—உண்மையில், அவ்வாறு நடந்துகொண்டதன் காரண மாகவே—அவர் அழிகின்றார். வரலாறு, தன் சக்கர உருளைகளின் கீழ் அவரை நசுக்குகிறது. சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் அவர் இலக்காகின்றார். இறுதியில் அவர் கொலை செய்யப்படுகிறார்.

வாலன்ஷ்டைன் அழிவை நோக்கிச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது என்பதற்கான காரணங்களை விளக்குகிறது, நாடகத்திலிருந்து இங்கு நாம் அளிக்கும் தனி உரையாடல். முடிவுக்கு வந்து, செயலை மேற்கொள்ள வேண்டியது, அவசியம், அவசரம், என்ற சூழ்நிலையில் அவர் பிடிபடுகின்றார். ஊகங்களிலும் அனுமானங்களிலுமே அவர் அளவுக்குமீறி நேரத்தைச் செலவு செய்துவிட்டார். சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தத்தால் அவர் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், காலம் தாழ்த்தி மேற் கொள்ளப்படுவதால், அவற்றை அடக்கி ஆளமுடியாது போகின்றன

என்பதுமட்டுமல்ல, அவருக்குப் பாதகமாகவும் அமைகின்றன. நிலைமையில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டாலும், தன் நலனை உறுதிப் படுத்தி நிலைநாட்டிக்கொள்ள அவர் செய்த முயற்சிகள் வீணாகி விட்டன. வரலாற்றின் தவிர்க்கமுடியாத போக்கு, அதன் வேகத் திலேயே, அவரை வென்றுவிடுகிறது. நேரிடை நிலையைக் கண்டு, அதன் அடிப்படையில் உலகுடன் உறவுகொள்ள முயலும் வால்ன் ஷ்டைன் பக்கத்தில், அப்பழுக்கற்ற இலட்சியவாதியான மக்ஸ் பிக்கோலோமினியைக் காண்கிறோம். மக்ஸ், தம் அரசியல் நடவடிக்கைகளில் கூடத் தன் மனச்சான்றைப் பின்பற்றி, அறநெறி விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க முயல்கிறார். ஆனால் அது இயலாததாகின்றது. இறுதியில், அவரும் முடிவு எய்துகிறார்.

வாலன்ஸ்டைன்: (தனக்குத்தானே பேசுகிறார்.)

நினைத்தபடி நான்நடக்க முடிக்தி டாதோ?
நினைத்திட்டால் பின்வாங்கல் இனியு முண்டோ?
நினைத்திட்டேன் அவ்வாறு என்ப தாலே
அச்செயலை நான்செய்தல் வேண்டு மாமோ?

இஃதென்ன அலைக்கழிப்பு நெஞ்சுக் குள்ளே?
இன்கனவோ! நடவாதே என்ற றிந்தும்
அப்போதும் வாய்ப்புக்கு வாயில் தன்னைத்
திறந்துவைக்க அறிந்தேனு? இலையே எண்ணம்!

சுதந்திரமும் ஆற்றலுமென் சிந்தை சூழ்ந்த
கற்பனையில் சுகித்திருந்தேன்—வேறென் றில்லை;
இதந்தந்த நம்பிக்கை ராஜ பார்வை
இன்பத்தில் திளைத்திருந்தேன் தவறே அஃது?

திரும்பிவரத் திறந்திருத்த அந்தப் பாதை
திக்கினைநான் காண்கிலையோ? இருந்தும் யாரோ
விரும்புகிற பக்கம்யான் அவர்க்குப் பின்னே
விரைந்துகொண்டே யிருப்பதையும் உணர்கி லேனே!

மறைகிறதே என்பின்னே பாதை யெல்லாம்;
மாறுகிறேன் வழியென்று தடுப்ப தற்கோ
மறைக்கின்ற கோபுரம்போல் எனது சொந்த
மாளிகையின் சுவரொன்றே உயரு தம்மா!

(மீண்டும் அசையாமல் நிற்கிறான்)

நிற்கிறேன் குற்ற ஆளனுய் வாழ்வின்
வெற்றுத் தெளிவிலாக் குழப்ப விளைவால்!
தூயவர் செயலையும் தவறுரைத் தூற்றி
ஐயப் பட்டிட, நஞ்சென ஆகுமே!

காட்டிக் கொடுக்கும் கயவன் என்றெனை
நாட்டிட முயல்கிறார்! அங்ஙன மாயின்—
தினமும் சிறந்து தோன்றியிருப் பேனே;
உணர்ச்சிக்கும் உளையா திருந்திருப் பேனே!
ஆனால் யானே அறிவன்றென் றறிந்தும்
ஏனை உணர்ச்சிச் சிறுமைக் கிறங்கினேன்:
உணர்ச்சிமே லீட்டால் குதூகல உணர்வும்
சினமுஞ் சேர வெடித்த சொற்களோ
வன்மை யாகவே சிதறின! ஆம், ஆம்
உண்மை என்னில் செயல்அவ் வாறிலை!
எண்ணு மலேயே நடந்த தென்னவோ
அன்ன விளைவே திட்டமாய் அமைய,
எனது சொற்களே எனக்கெதி ராக
எனதழி வுக்கென்றே பின்னி எழுந்திடும்!
வலியின் இடையே வாயினைப் பொத்தி
வலியது எழுப்பிடும் குற்றச்சாட் டுக்குத்
தலைகுனிய வேண்டும்நான்; பலாத்கா ரந்தான்
வலியை அறுத்து விடுதலை வழங்குமோ!

(அறை வழியாக விரைந்து நடையை ஓட்டும்போது மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் இடைநிறுத்தி)

உத்வேகச் சுதந்திரத்தில் செய்தேன் முன்பு
அஞ்சாமல் அதுவேறு; ஆனால் இன்றோ
அத்தகைய அச்சமிலாச் செய்கைக் கென்னைத்
தற்காப்பு நெருக்குகின்ற நிலைக்கென் செய்வேன்?
செய்தாக வேண்டுமென ஆகி விட்டால்
செப்புவதென்? அதற்குப்பின் விதியின் மீதே
கைதாக்க நேர்ந்தாலும் வியத்தற் கில்லை
பிணச்சாம்பற் கலயத்தும் கைகள் தோயும்!
இந்தசெயல் மட்டுமென் நெஞ்சை விட்டே
இறங்கிவிட்டால், இவ்வுண்மை வெளியே சென்றால்
தந்திரத்தில் வல்லவர்கைச் சேரும்; பின்னர்
செய்தவன்நான் என்றாலும் நம்பார் யாரும்!
உன்முயற்சி தானென்ன அதனை யேனும்
நேர்மையுடன் ஒப்புக்கொண் டிருக்கின் றாயா?
எண்ணுகிறாய் கவிழ்த்துவிட அதிகா ரத்தை
ஆயிரங்கால் வேர்க்கொண்ட சிக்கல் தன்னை!

முடிமட்டும் இருக்குமங்கே உள்ளீ டில்லை ;
முளைக்கின்ற பிராயத்துத் தூய்மை யான
துடிப்போடு பழக்கத்தால் ஊன்றிப் போன
துரைத்தனத்தைச் சாய்ப்பதுதான் அந்தப் போரோ ?

வலிமைக்கும் வலிமைக்கும் இடையே அல்ல
என்பதனால் எனக்கில்லை அச்ச மேதும் ;
வலிவுள்ள பகைவனெனில் அவன்கண் ணுக்குள்
நான்பார்க்க அவனுமெனைத் தூண்ட வேண்டும் !

அதைவிடுத்து முதுகின்பின் என்னை ஏசி
எதிர்த்துவரும் கோழையென அவனி ருப்பின்
அதற்கேயான் அஞ்சுகிறேன் ; அழிவுக் கோட்டின்
எல்லையிலே வாழ்வுபற்றி அச்ச முண்டோ ?

நேற்றென்னும் வீண்பொழுது ; இன்றும் நாளை
நேற்றுரும் நிரந்தரமாய்; நினைத்தால் நெஞ்சு
கூற்றுரும்; பழக்கத்தால் மனிதன் கூட
உற்சாக மின்றியங்கும் அடிமை தானே !

முன்னோரின் முடிமயிரைக் கூடக் காக்கும்
அவனுக்கோ பழங்குப்பை மதிப்புச் சொத்தாம்;
முன்னோக்கும் 'ஆண்டு'என்னுங் காலம், அன்னோன்
முதுபொருளைத் தீவிரமாய்ப் புனிதஞ் செய்யும் !

முதுமையினால் நரைத்திட்டா லென்ன, மூத்த
பொருளெல்லாம் அவனுக்குப் புனிதந் தானே ?
அதனையெலாம் நீஉடைத்தா யிருந்தால், மக்கள்
புனிதமுடன் உனக்காக அதனைக் காப்பர் !

நெதர்லாண்ட்ஸின் புரட்சி

'நெதர்லாண்ட்ஸின் புரட்சி' என்ற தலைப்பில் ஷில்லர் 1788இல் எழுதிய வரலாற்று நூல், பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து, நெதர்லாண்ட்ஸ் விடுதலை பெற நடத்திய போராட்டத்தைச் சித்திரிக்கின்றது. 'எக்மான்ட்' என்ற நாடகத்தில் கெதெ சித்திரித்துள்ளது போல், முரண்பட்ட குண வியல்புகள் கொண்ட இரு உயர்குலத் தலைவர்களான எக்மான்ட், ஆரஞ்ச் என்பவர்களைப் பற்றியது, இங்கு தரப்பட்டுள்ள பகுதி. இதே போன்ற முறையான, ஆனால் இன்னும் விரிவான, ஆராய்ச் சியை, 'முப்பதாண்டுப் போர்' என்ற தமது நூலில் (1791-92), ஷில்லர் மேற்கொண்டுள்ளார். அந்நூலில், வரலாற்று வல்லுநர் என்ற நோக்குடன், அவர் பொருளை அணுகியுள்ளார். வாலன்ஸ்டைன்

பற்றி அவர் பின்னர் எழுதிய மூன்று நாடகத் தொடரில், அதே பொருளைக் கவிதா நோக்குடன் அணுகிப் பொதுவான ஏற்புடைமை கொண்ட முறையில் தம் கருத்துக்களை அளித்துள்ளார்.

முதல் பத்தகத்திலிருந்து : 'ஆரஞ்சும் எக்மான்டும்'

எக்மான்டுக்குக் கொள்கைகள் இருந்ததைக் காட்டிலும், மனச் சான்று தான் அதிகமாக இருந்தது. அவருடைய மனம், தனக் குரிய நியதி நெறிகளை இன்னமும் வகுத்துக் கொள்ளவில்லை. ஒரு நியதி நெறி அவர் மனத்தில் புகுத்தப்பட்டு, ஊன்றிப் பதிக்கப் பட்டிருந்தது. ஆகவேதான், குறிப்பிட்ட ஒரு செயலின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே, அச் செயலை மேற்கொள்ளமுடியாத ஒரு நிலை அவருக்கு ஏற்பட்டுவிடக்கூடும். அவருடைய உலகில், மனிதர்கள் நல்லவர்களாய் இருக்கவேண்டும். அல்லது கெட்டவர் களாய் இருக்கவேண்டும். அவர்களிடம் சில நல்ல இயல்புகள், சில கெட்ட இயல்புகள் என்று பேசுவதற்கே இடமில்லை. அவருடைய ஒழுக்க சித்தாந்தத்தில், நல்லதற்கும் தீயதற்கும் தொடர்பு சிறிதும் இல்லை. ஆகவே தனியொரு நல்ல பண்பை மட்டும் வைத்துக்கொண்டு, ஒரு மனிதனைப் பற்றிச் சாதகமான பொது முடிவுக்கு அவர் வந்துவிடுவார். வீரனுக்குரிய பண் பியல்புகள் அனைத்தும் எக்மான்டிடம் உருண்டு திரண்டிருந்தன. ஆரஞ்சை விட அவர் சிறந்த போர்வீரர்; ஆனால் அரசியல் விவேகி என்ற முறையில், ஆரஞ்சு அவரைவிடப் பெரிதும் உயர்ந்தவர். உலகத்தை, உள்ளது உள்ளபடியே, உணர்ந்திருந்தார் ஆரஞ்சு. கற்பனைச் சிறப்பு என்ற விந்தைக் கண்ணுடியிலே, உலகைக் கண்டார் எக்மான்ட். இயற்கை சில மனிதருக்கு எதிர்பாராத வெகுமதிகள் அளிக்கின்றது. அந்த வெகுமதிக்கான நியா யத்தையோ, இயற்கையான காரணங்களையோ, தங்கள் செயல் களில் காணமுடியாத அந்த மனிதர்கள், காரண காரியத் தொடர் பையும் நியாயப் பொருத்தத்தையும் அடியோடு மறந்துவிட முற் படுகின்றனர். அதற்குப் பதிலாக, அற்புதப் பரம்பொருளின் அதிசய சக்தி என்ற காரணத்தை, நிகழ்ச்சிகளில் இயல்பான தொடர்ச்சியிலே வலுக்கட்டாயமாக நுழைத்து, இறுதியில் அந்த சக்தியில் அசட்டுத் துணிச்சலுடன் பரிபூர்ண நம்பிக்கை வைப் பார்கள். அவ்வாறுதான் சீசரும் தம் அதிர்ஷ்டத்தில் குருட்டு நம்பிக்கை கொண்டிருந்தார். எக்மான்டும், அத்தகைய மனிதர் களில் ஒருவர்தான். நன்றியுணர்வில் மற்றவர்கள் தம்மிடம் கண்டு, மிகைப்படுத்திப் பாராட்டிய அருங்குணங்களைப் பற்றிய பெருமையில் போதை அடைந்து, அற்புதக் கனவுலகில் சஞ்சரிப் பதுபோல், இந்த இனிய கற்பனையிலும் பாவனையிலுமே அவர்

உலகில் தள்ளாடி முன்னேறிவந்தார். பொதுமக்களின் பேரபிமானம் என்ற நம்பமுடியாத ஒரு வாக்குறுதியை இயற்கை அவருக்கு அளித்திருந்தது. அதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்ததால், அவர் எதையும்பற்றி அச்சம் கொள்ளவில்லை. தாம் இன்பமாக வாழ்ந்துவந்ததால், அவர் நீதியிலும் நியாயத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஸ்பெயின் சத்தியத்தை மீறிய பயங்கர அனுபவத்துக்குப் பின்னும் கூட, அந்த நம்பிக்கை அவர் ஆன்மாவைவிட்டு அகலவில்லை. தூக்கு மேடையில் நின்ற போது கூட, இறுதியாக அவர் வலியுறுத்தியதும் அந்த நம்பிக்கையைத்தான். தம் குடும்பத்தினரிடம் மிகுந்த பரிவும், அவர்களைப் பற்றிய கவலையும் அவர் கொண்டிருந்ததன் காரணமாய், தம் நாட்டுப்பற்று ஆர்வத்தை அவர் சற்று சாமானியப் பொறுப்புக்களிலேயே செலவுசெய்ய வேண்டியதாயிற்று. தம் உடைமை பற்றியும் உயிர்பற்றியும் அவர் அச்சம் கொண்டிருந்ததால், குடியரசுக்காகத் தீவிரத் தொண்டாற்றும் துணிவு அவருக்கு வரவில்லை. எதேச்சாதிகார வெறியாட்டம் அவருடைய தன்மான உணர்ச்சிக்கு அறைகூவியதால், ஆரஞ்சைச் சேர்ந்த வில்லியம் மன்னருடன் உறவை முறித்துக்கொண்டார். எக்மான்ட் தற் பெருமை கொண்டவர். ஆகவேதான் அரசர்களின் தயவையும் கருணையையும் நம்பிப் போற்றி அவர் வாழ்ந்தார். ஆரஞ்சு உலகக் குடிமகன்; ஆனல் ப்ளெமிங் இனத்தைச் சேர்ந்தவன் என்ற எல்லைக் கோட்டைத் தாண்டிச்செல்ல, எக்மான்டால் ஒரு போதும் இயலவில்லை.

மனிதனின் அழகுணர்வுப் பயிற்சி பற்றி

'மனிதனின் அழகுணர்வுப் பயிற்சி' 1795இல், பல கடிதங்கள் வடிவில், ஷில்லரால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் உட்பொருள். மனிதனின் வளர்ச்சி, கல்வி பற்றி, ஞானத் தெளிவு இயக்கப் பாணியில், எழுதப்பட்ட மெய்யியல் தத்துவ ஆராய்ச்சி நூல் அது. மனிதனின் கடமைகளையும் அவன் விருப்பங்களையும் ஒன்றுக இணைக்கும் ஒழுக்க நெறி ஒன்றை உருவாக்குவதே, இலட்சிய நிலை என்று ஷில்லர் கருதினர். அத்தகைய நிலையை அடைவதற்கு இன்றியமையாத சாதனம், கலை. உருவும் பொருளும், புலன்சார்ந்தவையும் ஆன்மாவைச் சார்ந்தவையும், ஒன்றுக இணையப் பெறுவது கலையில் தான். ஆகவே தான் கலை, அந்த இலட்சிய நிலையை ஏற்கெனவே அடைந்து விட்டது. ஷில்லரின் கட்டுரையின் அடிப்படை வாதமும் முக்கிய கருத்துக்களும் இங்கு தரப்பட்டுள்ள பகுதியில் அடங்கியுள்ளன. கலையின் இலட்சிய நிலை பற்றி அழகுணர்வுடன் ஈடுபட்டு இருப்பது மட்டும் போதாது, பிரெஞ்சுப் புரட்சி போன்ற அன்றைய

அரசியல் பிரச்சினைகளையும் பற்றி நேரடி உணர்வுடன் ஆராய்வது முக்கியம், அவசியம், என்பதை ஷில்லர் உணர்ந்து அதனை வலியுறுத்தியுள்ளது இக்கட்டுரையின் சிறப்பான அம்சம்.

இரண்டாவது கடிதம்

நுண்கலைத் துறையில் உன் முழுக் கவனத்தையும் திருப்புவதற்குப் பதிலாக, வேறு சிறந்த வழியில், நீ எனக்கு அளித்துள்ள சுதந்திரத்தை நான் பயன்படுத்த முடியாதா? ஒழுக்கப் பிரச்சினைகள் நம் உடனடியான கவனத்தை ஈர்ப்பதாலும், கலைப் படைப்புகளில் மிகச் சிறந்த படைப்பான, உண்மையான அரசியல் சுதந்திரத்தை உருவாக்குவதில், மெய்யியல் ஆய்வு உணர்வை ஈடுபடுத்தக் காலத்தின் சூழ்நிலை அவசர அழைப்பு விடுப்பதாலும், அழகியல் உலகுக்கு விதிமுறைகளும் நியதி நெறிகளும் கொண்ட புதுப் புத்தகத்தைத் தொகுக்க வேண்டிய நேரம் கடந்துவிட்டதல்லவா?

இன்னொரு நூற்றாண்டில் வாழ்ந்து, வேறொரு நூற்றாண்டுக்குத் தொண்டாற்ற, நான் விரும்பியிருக்க மாட்டேன். ஒருவன் ஒரு நாட்டின் குடிமகன் என்பது போலவே ஒரு யுகத்தின் குடிமகனும் ஆவான். தான் வாழும் வட்டாரத்தினர் பழக்க வழக்கங்களிலிருந்து ஒருவன் ஒதுங்கி நிற்பது, பொருத்தமற்றது, என்பது மட்டுமல்ல, அனுமதிக்கப்பட முடியாதது, என்றுள்ளபோது, ஒருவன் தன் தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த நூற்றாண்டின் தேவைகளையும் ஈடுபாடுகளையும் மனத்திற்கொண்டு முடிவு செய்யவேண்டும் என்ற கடமையை வலியுறுத்துவதும் அவசியம் தானே.

ஆனால் அவ்வாறு காலத்தின் தேவைகளுக்கு மதிப்புத் தருவது, கலையின் நன்மைக்கு உகந்ததா என்பது ஐயத்திற்குரியது. அதிலும் சிறப்பாக நான் இங்கு ஆராய முற்பட்டுள்ள குறிப்பிட்ட ஒரு கலையின் நன்மைக்கு அது நிச்சயம் உகந்ததல்ல என்று கூறமுடியும். நிகழ்ச்சிகளின் போக்கு, கால உணர்வைத் திசை திருப்பி, இலட்சியக் கலைக்கு வெகு தொலைவில் அழைத்துச் சென்றுவிட்டது. இலட்சியக் கலை, நேரடி நிலையிலிருந்து உயர்ந்து, தேவையால் கட்டுண்ட நிலையிலிருந்து துணிவுடன் விடுபட வேண்டும். கலை, சுதந்திரத்தின் மகள். ஆன்மாவின் உந்துதல்களிலிருந்து அவள் படிப்படியே கற்றுக்கொள்ள விரும்புவாளே ஒழிய, புறநிலையின் தேவைகளுக்குப் பணிந்து செல்ல விரும்பமாட்டாள். ஆனால் இப்பொழுதோ, தேவைதான் ஓங்கி நின்று, வீழ்ச்சி அடைந்துள்ள மனித இனத்தைத் தன் ஆதிக்கப்பிடியில் அழுத்திவைத்துள்ளது. **'பயன்படு தன்மை'** தான், இன்றைய

யுகத்தின் மூல தேவதை. அதை அனைவரும் போற்றி வணங்க வேண்டுமென்றும், அதற்குப் பணிந்து அனைவரும் பாடுபட வேண்டுமென்றும் இன்று, கருதப்படுகிறது. தரக்குறைவான இந்தத் தராசுப்படி, கலையின் ஆன்மிகப் பெருமைக்கு மதிப்பு கிடையாது. அதற்கு ஆக்கமும் ஆதரவும் அளிக்கப்படாததால், இந்த நூற்றாண்டின் இரைச்சல்மிக்க சந்தையிலிருந்து, ஆன்மிகப் பெருமை அடியோடு மறைந்துவிடுகிறது. மெய்யியல் ஆய்வு உணர்வும், தன் கற்பனையில், கலையில், ஆட்சியிலிருந்து ஒவ்வொரு பகுதியாகப் பறித்து வருகிறது. அறிவியல் தன் எல்லைகளை விரிவாக்கும் நேரத்தில், கலையின் எல்லைகள் குறுகிச் சுருங்கி வருகின்றன.

மெய்யியல் அறிஞர், உலகப் பற்றுதல் கொண்டவர் ஆகியோர் கண்கள், அரசியல் உலகை, ஆவலுடன் நோக்கி நிற்கின்றன. மனித இனத்தின் தலைவிதி நிர்ணயிக்கப்படுவது அரசியல் உலகில் தான் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. உலகப் பொதுமையான இந்த உரையாடலில் பங்கு கொள்ளாமல் இருப்பது, சமூக நலனைப் பொறுப்பற்ற முறையில் புறக்கணிப்பதாகாதா? அரசியல் துறையின், உட்பொருளாலும் விளைவுகளாலும், மனிதன் என்று தன்னை அழைப்பவன் ஒவ்வொருவனின் கவனத்துக்கும் ஈடுபாட்டுக்கும், அத்துறை உரித்தாகிறது. அது போலவே, அரசியல் துறையின் பிரச்சினைகள் அணுகப்படும் விதத்தால் சுதந்திரச் சிந்தனையாளர் அனைவருடைய கவனத்தையும் அது ஈர்க்கின்றது. வல்லவனின் குருட்டு வலிமையின் அடிப்படையில்தான், இக் கேள்விக்கு முன்பு பதிலளிக்கப்பட்டு வந்தது; இப்பொழுதோ, அப்பழுக்கற்ற அறிவின் அடிப்படையில், இக் கேள்விக்குப் பதில் அளிக்கப்படுகிறது. முழுமையின் மையத்தில் தன்னைப் பொருத்தித் தன் தனித் தன்மையை ஓர் இனப் பண்பாக உயர்த்தும் ஆற்றல் உடைய ஒவ்வொருவனும், அறிவின் நீதிமன்றத்தின் உறுப்பினராகும் அருகதை பெறுகின்றான். மனிதன் என்ற முறையிலும், உலகக் குடிமகன் என்ற முறையிலும், அவன் அறிவின் நீதி மன்றத்தின் ஓர் அம்சமாகத் தன்னைக் கருதி, தன் எதிர்கால வாழ்வு, அதன் வெற்றியோடு பின்னிக் கிடப்பதை உணர்கிறான். ஆகவே இந்த மகத்தான சட்டப் பிரச்சினையில் முடிவு செய்யப்படுவது, அவனுடைய சொந்த விவகாரம் மட்டுமல்ல. அறிவு சார்ந்த சக்தி என்ற முறையில், எந்த விஞ்ஞானிக்கும் வகுக்கும் ஆற்றலையும் அதிகாரத்தையும் அவன் பெற்றிருக்கின்றானே. அந்த விதிகளின் அடிப்படையிலேயே அவன் பேச வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பரந்த மனப்பான்மை கொண்ட உலகக் குடிமகனாய் விளங்கும் அந்த நேரத்தில், அனுதாபம் மிக்க சிந்தனையாளராகவும் விளங்

கும் ஒரு மனிதனுடன் இப் பிரச்சினையை ஆராய்ந்து, மனித இனத்தின் நலனில் ஆர்வமிக்க ஈடுபாடு கொண்ட ஓர் இதயத்திடம், அப் பிரச்சினைகளை முடிவுசெய்யும் பொறுப்பை ஒப்படைக்க என்னால் இயன்றால், அது எவ்வளவு நன்றாகவும் கவர்ச்சி மிக்க தாயும் இருக்கும்? கருத்துக்களிடையே உள்ள பெரும் வேறுபாடுகள் ஒரு புறமிருக்க, நிச உலகின் நிர்ப்பந்தங்கள் காரணமாய், நீயும் நானும் வெகு தொலைவில் பிரிந்து சென்றுவிட்டதும் ஒருபுறமிருக்க, காம்ப்பும் உவப்பும் இல்லாத உன் உணர்வைக் கருத்துக்கள் அடிப்படையில் சந்தித்துப் பயனான உரையாடல் நடத்த முடிவது, எவ்வளவு இதமான மகிழ்ச்சியை அளிக்கின்றது! இந்தக் கவர்ச்சிமிக்க ஆசைக் கண்ணியில் நான் சிக்கி விடாமல், சுதந்திரத்துக்கு முன்னால் அழகு செல்ல இடம் கொடுக்கின்றேன் என்றால், அதற்கு என் சொந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் அல்லாமல், கொள்கைகளின் அடிப்படையில் நான் நியாயம் காட்ட முடியுமென்று நம்புகிறேன். இப் பிரச்சினை, காலத்தின் தேவைகளுக்குத் தொலைவில் இருப்பதைக் காட்டிலும், காலத்தின் ஈடுபாட்டுக்கு மிகத் தொலைவிலும் மாறுபட்டதாகவும் இருக்கின்றது என்பதை நீயும் ஒத்துக் கொள்ளச் செய்ய முடியுமென்று நம்புகிறேன். ஆம். அழகின் வாயிலாகத்தான் சுதந்திரத்தை நோக்கி உலாவ முடியும் என்பதால், இந்த அரசியல் பிரச்சினைக்கு அனுபவ அடிப்படையில் தீர்வு காண, அழகு உணர்வு மூலமாகவே அணுகவேண்டும். ஆனால் அரசியல் சட்டங்களை இயற்றும்போது, அறிவு தனக்குத்தானே வழிகாட்ட எந்த அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுகிறதோ, அவற்றை உனக்கு நினைவூட்டாமல், நான் இந்த உண்மையை உனக்கு மெய்ப்பிக்க இயலாது.

ஒரு கடிதம்

அறிவுத் தெளிவை ஒயாது நாடும் பொறுப்பு மனிதனுக்கு உண்டு, என்பதைக் கான்ட் வலியுறுத்தியது போலவே, ஷில்லரும் 1793இல் எழுதிய ஒரு கடிதத்தில் அறிவுறுத்தினார். ஆனால் போதிய அளவு அறிவுத்தெளிவு பெருததற்குச் சோம்பல், கோழைத்தனம் ஆகியவை மட்டுமே காரணங்கள் என்று கான்ட் எடுத்துக் காட்டியதற்கு மாறாக, அன்றாட வாழ்வின் இன்றியமையாத் தேவைகளும் ஒரு காரணம் என்று ஷில்லர் கூறினார். ஆகவே மக்கள் தங்கள் ஆன்மிக, ஒழுக்கப் பக்குவம் அடைய முயல்வதற்கு முன், வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் அவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்று ஷில்லர் கூறுகிறார். 'மூன்று காசு இசை நாடகம்' என்ற தமது நாடகத்தில், 'முதலில் நமக்கு உணவு கிடைக்கட்டும்'

அதற்குப் பின்பு அறவியலைப் பற்றிக் கவனிக்கலாம்' என்ற வாசகத்தின் மூலமாக பெர்டோல்ட் பிரெஷ்ட் இந்தக் கருத்தை வலியுறுத்தியது வரை, இந்த நிபந்தனை ஜெர்மன் இலக்கியத்தில் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்படுகிறது.

ஒரு நாடு அறிவுத் தெளிவுபெறச் செய்யும் பணியை எப்படித் தொடங்கவேண்டும்?

மனித இனத்தில் பெரும்பகுதியினர், அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் போராட்டத்திலேயே அலுத்துக் களைத்து விடுவதால், கற்பனை இலட்சியங்களுடனும் காழ்ப்பு உணர்ச்சிகளுடனும், புதிய அகப் போராட்டம் நடத்தும் வல்லமை அவர்களிடம் எஞ்சவில்லை. இன்றியமையாத் தேவைகள் பற்றிய கவலையே மனிதனின் ஆற்றலையும் வல்லமையையும் உறிஞ்சி விடுகிறது. அவற்றைப் பெறுவதில் அவன் வெற்றி கண்டுவிட்டால், அவனுக்குத் தேவைப்படுவது ஓய்வே ஒழிய, புதிய தொரு மனப் போராட்டமல்ல. அவன் சிந்தனை செய்ய அனுமதிக்கப் படுவதேயில்லை என்ற நிலையோடு அவன் திருப்தி அடைந்து, தன் கருத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை, மன மொப்பி மற்றவர்களிடம் ஒப்படைக்கின்றான். மற்றவர்கள் விவேகத்தின்மீது, கண்ணை மூடிப் பாரத்தைப் போடுவதன் மூலம், அக் கருத்துக்களை அலசி ஆராயும் கசப்பான பொறுப்பிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்கிறான். இதற்கு மேம்பட்ட தேவைகள் அவன் நெஞ்சிலும் அறிவிலும் எழுந்தால், அரசும் திருச்சபையும் அளிக்க முன்வரும் சூத்திரங்களில் மக்களின் விடுதலை வேட்கையையும் விழிப்புணர்வையும் நிறைவு செய்யத் தொன்று தொட்டுத் தாரக மந்திரங்களாய் அவர்கள் அளித்துள்ள சுலோகங்களில் உறுதியான நம்பிக்கை கொண்டு, அவற்றை ஊன்றுகோலாகப் பற்றிக்கொள்ள அவன் ஆர்வத்துடன் துடிக்கின்றான்.

ஆகவேதான், அடக்குமுறைக்கு அதிகம் ஆளாகியுள்ள மக்கள்தான், அறியாமையிலும் அழுந்தியுள்ளனர் என்ற பொதுவான உண்மையை நாம் காணமுடியும். அதனால்தான், நாடு அறிவுத் தெளிவு பெறச் செய்யும் பணியில் முதற்படியாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வசதிகளையும் உயர்த்த முற்பட வேண்டும். வறுமை என்ற பிடிப்பிலிருந்து ஆன்மாவை விடுவித்த பின்தான், அறிவின் சுதந்திர நிலைக்கு அதை அழைத்துச் செல்ல இயலும். இந்த முறையில்தான், குடிமக்களின் வாழ்க்கை வசதிகளுக்கு உத்தரவாதம் அளிப்பதை, அரசின் முதல் கடமையாக மதிக்க வேண்டும். மனிதன் மனப்பக்குவம் பெறுவதற்கு வாழ்க்கை வசதி இன்றியமையாத் தேவை என்றிராவிடில், இந்த

வாழ்க்கை வசதி என்பது தனியான குறிக்கோளாய் அவ்வளவு முக்கியத்துவமும் மதிப்பும் பெறுது. வயிறு நிறைய உண்டு வசதியாக வாழும்போதும், மனிதன் சிறுமைத் தனமாகவே இருக்கலாம். ஆனல் அவனிடம் மறைந்துநிற்கும் உயர்தன்மை விழிப்புற்று எழுச்சிபெறச் செய்யவேண்டுமானல், அவன் வசதியாக வாழ்ந்து வயிறார உண்பது மிக அவசியமாகும்.

(1793 ஈவம்பர் 11ஆம் தேதியன்று இளவரசர் ∴பிரீட்ரிஷ் கிறிஸ்தியன் ∴பன் ஹோல்ஷ்டைன் — ஸொன்டெர்பெர்க் — அகஸ்டன்பெர்க்குக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி.)

கியோர்க் ஃபோர்ஸ்டர்

பிரெஞ்சுப் புரட்சி பற்றிக் கடிதங்கள்

கியோர்க் ஃபோர்ஸ்டர் (1754—1794) பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் நூல் நிலையக் காப்பாளராகவும் பணியாற்றினார். இயற்கை வளங்களையும் மனித இனப் பிரச்சினைகளையும் ஆராய அவர் பல நாடுகளிலும் பயணம் செய்து, பயண நூல்கள் பலவற்றில் தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். பண்பாட்டுச் சார்பான மனித இன இயல் பற்றியும் இடக்கிடப்பியல் பற்றியும் அவர் எழுதிய ஒப்புநோக்கு ஆராய்ச்சி நூல்களைத் தவிர, கலையின் வரலாறு பற்றி அவர் எழுதிய நூல்களும் முக்கியமானவை. பிரெஞ்சுப் புரட்சியில் பேரார்வம் கொண்டிருந்த அவர், மெயின்ஸ் நகரக் குடியரசுக் கட்சியின் பிரதிநிதியாக 1793இல் பாரிசுக்குச் சென்று, பிரான்ஸுடன் அரசியல் இணைப்புக்காக வாதாடினார். அதன் பயனாய் ஜெர்மனிக்குள் நுழையக் கூடாது என்று அவர் மீது தடை விதிக்கப்பட்டது. ஓராண்டுக்குப் பின், அவர் நண்பர்கள் எவருமின்றி, வேதனைமிக்க நிலையில் பாரிசில் மரணமடைந்தார்.

புரட்சியின் தொடக்க காலத்தில், 1789இல், அவர் எழுதிய கடிதங்களிலும், 1790இல் அவர் எழுதிய கடிதங்களிலும் எல்லையற்ற உற்சாகம் ததும்புகின்றது. 1793இல் ஃபோர்ஸ்டர் பாரிசில் வாழ்ந்து, நிலைமையை நெருங்கிக் கவனிக்க வாய்ப்புப் பெற்றிருந்தபோது, புரட்சியின் விளைவாய் ஏற்பட்ட தீங்குகளையும் பாதகங்களையும் காண முடிந்தது. சர்வாதிகாரம் தோன்ற அது வழி கோலக்கூடும் என்பதைக் கூட அவர் சுசகமாக அறிந்தார். மக்களுக்கு உடனடியாக இன்பம் விளைவிக்கவில்லையெனினும், பிரெஞ்சுப் புரட்சி வரலாற்றுக் சிறப்பு உடையது என்பதில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஒழுக்க உயர்வு, அரசியல் சுதந்திரத்தின் விளைவாய் ஏற்படும் பலன் மட்டுமல்ல; அரசியல் சுதந்திரம் பெற வேண்டுமானால், அது இன்றியமையாத் தேவை என்றும், (ஜெர்மனியைப் பொறுத்த வரையிலுமாவது) அவசியமானால், அரசியல் சுதந்திரத்தின் இடத்தை ஒழுக்க உயர்வு கைப்பற்றிக்கொள்ளவும் கூடுமென்றும், தமது கடைசிக் கடிதத்தில் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

மெய்ன்ஸ் ஊரிலிருந்து
ஹெய்னேய்க்கு எழுதிய கடிதம்

மெய்ன்ஸ், 30, ஜூலை, 1789

பிரெஞ்சுப் புரட்சி பற்றி நீ என்ன நினைத்தாய்? அது அமைதியாக நடக்க இங்கிலாந்து இடம் கொடுத்தது, அப்பாவித்தனம்

அதிகமானதற்கும் அரசியல் அறிவுக் குறைவுக்கும் அறிகுறி யாகும். இருபத்தொரு மில்லியன் மக்கள் தொகை கொண்ட குடியரசினுல், அத்தனை குடிமக்கள் மீது ஆட்சி செலுத்தும் எதேச் சாதிகார மன்னனுல் ஏற்படுவதை விட, இங்கிலாந்துக்கு அதிகத் தொந்தரவு ஏற்படும். ஆனுல் சிந்தனையில் கனிந்திருந்த சித்தாந் தம், முந்திய எடுத்துக்காட்டின் துணை எதுவுமின்றி, செயல் முறையில் அரசில் நிறைவேற்றப் பட்டுள்ளதையும், உயிர்ச் சேதமும் அழிவும் அதிகம் இல்லாமல் இவ்வளவு முழுமையான தொரு மாற்றம் ஏற்பட்டுள்ளதையும் காணும்போது. உவகை பிறக்கின்றது. உண்மையில் நன்மை எது என்பதையும், அவர்கள் உரிமைகளையும் மக்கள் உணரச் செய்வதற்கு அது ஒன்று தான் இன்னமும் வழியாக இருக்கின்றது. அதைத் தொடர்ந்து மற்ற தனைத்தும் தானுக வரும்.

ஹெய்னேய்க்கு

மெய்ன்ஸ், 13, ஜூலை, 1970

பிரான்ஸ் நாட்டைச் சுற்றி வேகமாகப் பயணம் செய்ததன் பயனுய், ஒன்றை நான் உணர முடிந்தது. எதிர்ப் புரட்சி. எதையும் பற்றிப் பேசுவதற்கே இடமில்லை. எங்கும் அமைதி நிலவுகிறது. புது அமைப்புக்கள் வெற்றி பெறுவதற்கான எல்லா வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. பொதுமக்களிடை பொங்கியெழும் ஆர்வப் பெருக்கு அதிலும் குறிப்பாக மாபெரும் தேசியத் திருவிழாவுக்காக ஆயத்தங்கள் வேகமாக நடந்துவரும் சாம்ப் டி மார்ஸில் காணப்படும் உற்சாகம் இதயம் எழுச்சி பெறச் செய்கிறது. அந்த ஆர்வம் மக்களிடையே எல்லா வர்க் கத்தினரிடையும் பரவி, மேலோங்கி, தனியார் சுய நலனைப் பொருட்படுத்தாமல், மக்களின் பொது நலனுக்கு உகந்த முறை யில் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுகிறது. என்னிடம் பலபேர் சொன்னர்கள் : "நாங்கள் எவ்வளவோ துன்பப் படு கிறோம். வேதனைகளைத் தாங்கிக் கொண்டு, போராடி வரு கிறோம். சொத்தில் பெரும்பகுதியையும் இழக்க வேண்டியிருக் கும். ஆயினும் எங்கள் குழந்தைகள் இதற்காக எங்களை வாழ்த்து வார்கள் என்பதை நாங்கள் அறிகிறோம். அவர்கள் நலனுக்காகத் தான் நாங்கள் இன்று பாடுபடுகிறோம்". இவ்வாறு தங்கள் நலனைத் தியாகம் செய்து அவர்கள் முன்வந்ததில், உண்மையான ஒழுக்க நெறியால் கிட்டும் இன்பத்தை அவர்கள் ஓரளவு அனு பவிப்பார்கள் என்பதோடு, எதிர்காலம் சிறப்பாக அமையு மென்று துணிந்து கூறலாம்.

பிரான்ஸிலிருந்து
நொய்ஷாத்தலில் உள்ள தம் மனைவிக்கு

பாரிஸ், 5, ஏப்ரல், 1793

மக்களுக்கு இன்பத்தையோ துன்பத்தையோ கொண்டுவந்த அடிப்படையில் புரட்சியைக் கருதாமல், மனித இனத்தில் மாபெரும் மாறுதல்களை உண்டாக்க விதி கையாண்டுள்ள மகத்தான சாதனங்களில் ஒன்றாகப் புரட்சியைக் கருத வேண்டுமென்று முன்னர் நான் கூறியதையே மீண்டும் வலியுறுத்துவேன். பிரெஞ்சு மக்களைக் குறை கூறுவோரும், அவர்கள் எதிரிகளும். அந்த மக்களின் குணவியல்புகள் குறித்துக் கொண்டுள்ள அதிருப்தியில் நானும் பங்கு கொள்கிறேன். ஆனால் அவர்கள் குற்றங்களையும் குறைபாடுகளையும் உணரும் அதே நேரத்தில், அவர்கள் நல்ல பண்புகளையும் நான் உணர்கின்றேன். எந்தத் தனியொரு நாட்டையும் இலட்சிய நாடாக நான் கருதவில்லை. நல்லவர்கள், கெட்டவர்கள், ஒன்று சேர்ந்தது தான் மொத்த மனித இனத் தொகுதி. எதிர்காலத்தில் புரட்சி விளைவிக்கும் நன்மைகளுக்குக் கட்டாயமாகத் தியாகிகளை உருவாக்கும் பொறுப்பு பிரெஞ்சு மக்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அது அவர்கள் மேல் விதிக்கப்பட்ட ஒரு தண்டனை என்று கூடக் கொள்ளலாம். ஹூத்தரின் காலத்தில், சமய சீர்திருத்தத்தை ஏற்று, தங்கள் இரத்தத்தைச் சிந்தி, அதைக் காத்துப் பொது நலனுக்காகத் தியாகிகளாக, ஜெர்மானியர் முன்வர வேண்டியிருந்ததுபோலவே, இப்பொழுது பிரெஞ்சு மக்கள் முன்வர வேண்டியுள்ளது.

பாரிஸ், 13, ஏப்ரல், 1793

இங்கு நடக்கும் சூழ்ச்சிகளை மேலும் மேலும் தெளிவாக உணர, ஒருவர் முற்படுவதற்கு ஏற்ப, திருக்கு மறுக்காய்த் திக்கு தெரியாமல் வளைந்துள்ள பயங்கரப் புதிர்க் கூடத்துடன் ஒருவருக்கு மேலும் மேலும் பழக்கம் ஏற்படுவதற்கு ஏற்ப, அறம் அனைத்தும் தழைக்காது என்ற மனச்சோர்வு கொள்ளாமல் இருக்கவும், தேவ நீதியின் பயனுள்ள நல்ல முடிவுக்காக அமைதியாகக் காத்திருக்கவும், தூய மெய்யியல் சித்தாந்தத்தின் துணைதான் ஒருவருக்கு மேலும் மேலும் தேவைப்படுகிறது. நான் அண்மையில் அனுபவித்துள்ள துன்பத்துக்குப் பின்பு எனக்கு இருந்த குறை ஒன்றுதான். எவரும் நாணயமாகப் பாடுபடாத ஒன்றிற்கு, வெறிபிடித்த உணர்ச்சிக்குத் திரையாகப் பயன்படும் ஒன்றுக்கு, உண்மையான விசுவாசத்துடன் நான் உழைத்து, என் வல்லமையில் கடைசிச் சொட்டையும் மடமைக்கும் பலி கொடுத்தேன் என்ற உணர்வு எனக்கு வரவில்லை என்பதுதான் அக்குறை.

சுயநலமற்ற தொண்டு, சுதந்திரப் பற்று, என்பவை இன்று, சிறு பிள்ளைகளிடம் தரப்படும் கிலுகிலுப்பைகளாக, வெற்றுப் பேச்சுக்களாக, நாட்டின் தலை விதியை நிர்ணயிப்போர் பேச்சில் தோன்றும் கபடக் கற்பனைகளாக மட்டுமே இருக்கின்றன என்பது உண்மைதான். தூய தியாக உணர்வு ஓங்குமென்று நாம் எதிர்பார்த்த இடங்களில், ஆணவச் செருக்கு மட்டுமே ஓங்கி நிற்கிறது என்பது உண்மைதான். ஏய்ப்பவர்கள் ஒருபுறமிருக்க, ஏய்க்கப்படுபவர்கள் ஒருபுறமிருக்க, அந்த இருசாராருக்கும் இடையிலே, நாம் நம்பக்கூடிய, உறவு கொள்ளக்கூடிய, மூன்றாவது சக்தி தனியாக இல்லை என்பது உண்மைதான். அனுபவம் நமக்குச் சுட்டுணர்த்தும் இந்த உண்மைகளை ஏற்றுத் தாங்கிக் கொண்டு, அதன் பின்பும் தனி மனிதர் இதய உணர்விலே, விவேகத்திலும் மக்கள் பற்றிலும் நம்பிக்கை கொண்டிருப்பதற்கு, நமக்குத் துணிவும் தீரமும் நிச்சயமாக வேண்டும்.

பாரிஸ், 11, மே, 1793

மனித விதி என்ற மாபெரும் சுழலிலே இப் புரட்சி மிகுந்த முக்கியத்துவம் கொண்டது என்று நான் இப்பொழுது உறுதியாக நம்புகிறேன். இப்புரட்சி நடைபெற்றதைத் தவிர்த்திருக்க முடியாது என்று மட்டுமல்ல, வளர்ச்சிக்கான புதிய வல்லமையையும், சிந்தனைப் போக்கில் புதியதொரு நெறியையும் அது புகுத்தும் என்றும் நான் நம்புகிறேன். சாதாரண நிகழ்ச்சிப் போக்குக்கு அப்பாற்பட்ட நடவடிக்கையில் பிரான்ஸ் நாட்டு மக்கள் முனைந்து ஈடுபட்டுள்ளனர். அதன் மூலம், இன்பம் என்ற சொல்லுக்கு இயல்பான பொருளுக்கு இணங்க, தங்கள் வாழ்வில் இன்பம் பெருகியுள்ளதா என்ற கேள்வியை, மனித விவகாரங்கள் பற்றி ஒருபோதும் சிந்திக்காதவர்களும், அனுபவம் ஈட்டாதவர்களும்தான், எழுப்புவார்கள். இந்த வகையான இன்பம் பற்றி இயற்கையோ விதியோ ஆராயவில்லை. மனிதர் செயல்பட்டு, வேதனை அனுபவித்து, இரண்டிலும் ஒரு நேரத்தில் இன்பமும் மற்றொரு நேரத்தில் துன்பமும் அனுபவிக்கின்றனர் என்பதுதான் இயற்கையின், விதியின், நியதி. விளைவுகள், எதிர்விளைவுகள் ஆகியவற்றின் பலதரப்பட்ட பலன்கள், உணர்ச்சிகள், ஆசாபாசங்கள் ஆகியவற்றின் பல வகையான வளர்ச்சியின் பலன்கள் ஆகியவை நம் வாழ்வின் ஒரு குறிக்கோளாக அமைகின்றன. அதை நாம் விரும்புகிறோமா, இல்லையா, என்ற கேள்வி நம்மிடம் கேட்கப்படுவதேயில்லை. செயல்படும்போதும் வேதனை அனுபவிக்கும்போதும் நாம் உணர்வுத் தெளிவுடன் செயல்படுகிறோம் என்ற முறையில், இதில் ஒழுக்க நெறியைப் புகுத்தும் பொறுப்புதான் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுக்க நெறி

எப்பொழுதுமே தனி மனிதனின் சாதனையாகவே அமைகிறது. அந்தச் சாதனை, தன்னிடமே சில தொடர் விளைவுகளைப் புகுத்துகின்றது. ஆகவே தான், நல்லவர்களையும் விவேகமிக்கவர்களையும், இன்பமாய் வாழ்பவர்களையும் தவிர வேறு யாருமே இல்லாத இலட்சிய உலகம் ஒன்றைச் சுதந்திரமாகச் செயலாற்றி அமைக்க முடியும் என்று கற்பனை செய்கின்ற நல்லெண்ணம் படைத்த இலட்சியவாதிகளின் கனவுகளைக் கண்டு நான் நகைக்கின்றேன். ஒருவர் ஆற்றலையும் வல்லமையையும் வளர்க்கச் சுதந்திரம் அதிக வாய்ப்பு அளிக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் இதுவும் ஒரு வகையில் ஒரு தலைப் பாங்கானதாகவே முடிகின்றது. செயலாற்றல், வேதனை அனுபவித்தல் ஆகிய பணிகளின் மொத்த விளைவு, ஒரு கெட்ட அரசியல் அமைப்பைக் காட்டிலும், நல்ல அரசியல் அமைப்பில், ஒழுக்க நெறியை நிலைநாட்ட அதிகம் உதவுகிறது என்று வேண்டுமானால் நாம் துணிந்து கூறலாம். ஆனால் புதிய அமைப்பு தோன்றியதற்கு முக்கிய காரணம், பழைய அமைப்பின் காலத்துக்கு ஒவ்வாத தன்மையேயாகும். பழைய அமைப்பில் ஆற்றல் ஒடுங்கி விட்டது. மீண்டும் அனைத்தையும் இயக்குவதற்கு, ஒரு வேகமான உந்துதல் வேண்டியிருந்தது. இன்னும் நீண்ட காலத்திற்குப் பிரான்ஸ் நாட்டிற்கு அமைதி கிட்டுமென்றோ, குடிமக்களுக்கு இன்ப வாழ்வு என்று சொல்லப்படுவது கிட்டுமென்றோ, நான் எதிர்பார்க்கவில்லை. பொருள்களின் நிலையாமை இப்பொழுது அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தப் பட்டுள்ளதால், இதுவரை இந்த வசதிகளை இறுகப் பற்றிக் கொண்டிருந்தவர்கள், இப்புறவசதிகள் இல்லாமல் அவற்றுக்கு மேம்பட்டு வாழவும், உறுதிகொண்டு வாழ்வதில் உள்ள உவகையைத் துய்க்கவும், இனிக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. இக்கொந்தளிப்பை அடக்கி ஒடுக்குவதற்கு, ஐரோப்பா நீண்ட காலம் பாடுபடவேண்டும்.

பாரிஸ், 4, ஜூன், 1793.

இங்கு அனைத்தும் அமைதியாக இருக்கின்றது.... குறிப்பாகக் கொந்தளிப்பில் உள்ள ஒரு குடியரசில், சீரழிவுக் காலத்தில், எழும் உணர்ச்சிப் பெருக்கு எதைச் சாதிக்க இயலுமோ, அதையெல்லாம் நான் எதிர்பார்க்கின்றேன். நாம் உணர்வதற்கு முன்பே, தனியோர் அதிகார அமைப்பு உருவானால், நான் வியப்படையமாட்டேன். ஆனால் வெகு விரைவிலேயே, அதுவும் கரைந்து வெறுமையில் கலந்துவிடும். அன்னிய அரசுகள் பிரான்ஸ் நாட்டில் இன்னும் ஆழமாக ஊடுருவுவது, அநேகமாக நடக்காமல் போகலாம். ஆயினும் சென்ற ஆண்டில் அது அசாத்தியமாய் இருந்ததுபோல், இப்பொழுதும் அசாத்தியம் என்று

கூறுவதற்கில்லை. அவர்கள் பாரிஸ் நகரைக்கூடக் கைப்பற்றக் கூடும். அப்பொழுதும் குடியரசு பறிபோய்விடாது. அதற்கு மாறுகக் குடியரசு உறுதியாக வேரூன்றி நிலைபெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அது எவ்வளவு காலம் நிலைக்கும் என்பது, இராணுவப் படைகளின் முன்னேற்றத்தையோ, தேசிய மாநாட்டையோ, நம்பியதல்ல....

பாரிஸ், 23, ஜூன், 1793

...பார்வையாளராக மூன்று மாதங்கள் இங்கு தங்கியபின், இங்கு நடப்பதைப் பற்றி உற்சாகத்துடன் பேசவோ எண்ணவோ ஒருவரால் நிச்சயமாக இயலாது. மிகச் சிறந்த நாவன்மைக் குப் பின்னால், சுயநலம் ஒளிந்திருந்து தலை தூக்குவதைத் தான் எங்கும் காண்கிறோம். உண்மையில் மக்களுக்கு நன்மை செய்ய விரும்பும் நேர்மையாளர் மிகச் சிலரே. அதனாலேயே அவர்கள், அதிகார மோகம் கொண்ட மற்றவர்களின் வெறுப் புக்கு ஆளாகின்றனர். கைதிகளில் பலர் மிகவும் நாணய மானவர்கள் என்று கூறப்படுகிறது. தூக்குத் தண்டனை மன்றம், புரட்சிக்கே ஓர் அவமானச் சின்னம். அதைப் பற்றி எண்ணவே என் மனம் கூசுகிறது. இக் காட்சிகள் கடந்தகால நிகழ்ச்சிகளான பின், அவற்றின் மூலமாக அல்லாமல், புரட்சியின் பொதுப் படையான விளைவுகளாய்ச் சாதிக்கப்பட்ட நன்மைகளைப் பெரி தாகக் கருதி, வரலாற்றுப் போக்கில் இக் காட்சிகளைப் புறக்கணிக் கக் கூடும். ஆனால் உடனடியாக எழும் உணர்ச்சி பயங்கரமானது. இக் காட்சிகளைப் பார்க்கும் இக் காலத்தவருக்குப் பெரும்பாலும் வெறுப்பும் அருவருப்பும் தான் ஏற்படுகின்றன. இன்றுள்ளதை விட அமைதியான சூழ்நிலைகளில் வேண்டுமானால், இவற்றைப் பற்றி நாம் உணர்ச்சிவசப்படாமல் பேசக்கூடும்.

பாரிஸ், 26, ஜூன், 1793

...நீண்ட நாட்களாக இங்கு நாங்கள் தங்கிவிட்டோம். அரசியல் சுதந்திரம் மூலமாக, மற்றவர்கள் அடையவேண்டிய நிலையை, அதாவது ஒழுக்க சுதந்திரம் பெற்றவர்கள் நிலையை, நாம் மெல்ல மெல்ல அடைந்து வருகிறோம். சுதந்திரம் பெற்ற பின்னும் மக்கள் காட்டுமிராண்டிகளாகவே இருந்தால், அவர்கள் ஆற்றல், ஒழுக்க உயர்வாக எளிதில் பண்பட்டு வளராமல் இருந்தால், அவர் களுக்குச் சுதந்திரம் வழங்குவதோ, சுதந்திரம் வழங்க வேண்டு மென்று விரும்புவதோ, அறிவீனமாகும். அரசியல் சுதந்திரம் விரும்பத்தக்கதாயும் அவசியமாகவும் இருப்பதற்கு இது ஒன்று தான் காரணம். சுதந்திரமான நாடுகளில்தான், அறப் பண்பு ஓங்கமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால் நம் தனி

மனித அந்தஸ்தைப் பொறுத்தவரை, நாம் இவ்வுலகில் தோன்றி வாழ்ந்துள்ள சூழ்நிலையின் காரணமாய், சுதந்திரமான அரசியல் சட்டத்தின் துணை இல்லாமல், அல்லது அவ்வளவு சுதந்திரமான தாக இல்லாத ஒரு அரசியல் சட்டத்தின் உதவியுடன், அந்தக் குறிக்கோளுக்காகப் பாடுபடும் உரிமையும் செல்வாக்கும் பெற்ற ஒரு வர்க்கத்தினராக நாம் ஆகியுள்ளோம். பாதாளச் சிறைகளிலும் விலங்குச் சங்கிலிகளுடனும் கூட நாம் சுதந்திரமாக இருக்கின்றோம். ஆகவே அரசியல் சுதந்திரம் இல்லாத குறையைப் பற்றி, நம்மைப்போல் இல்லாத மற்ற மக்கள் குறை கூறுவதைவிடக் குறைவாகவே நாம் குறை கூறவேண்டும். அரசியல் சுதந்திரம் மிகப் போற்றத் தக்கதாய் நமக்குத் தோன்றுவதன் ஒரே காரணம், நம் சகோதர மக்களின், நலனுக்கு அது ஆதரவாக இருக்கின்றது என்பதுதான். அரசியல் சுதந்திரம் அவர்கள் தலையாய தேவை என்ற அடிப்படையை நாம் ஏற்றுக்கொண்டபின், அதை அவர்கள் அடைய இயலாதபோதும், கையவர்கள் அதை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்கின்ற போதும், அதை வலியுறுத்தித் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள அவர்களுக்குப் போதிய வல்லமை இல்லாதபோதும், நமக்கு மிகுந்த வேதனை ஏற்படுகிறது. ஆனால் இந்த வேதனையாலும் வருத்தத்தாலும் உருவான பலன் ஏற்படுவதில்லை. அது போலவே நம் நேரடி முயற்சிகளாலும் நம்மால் எதையும் சாதிக்க முடிவதில்லை. நேர்மையான எண்ணங்களையும் பயனுள்ள அறிவையும் பரப்புவதன் மூலமாகவும், நம்முடைய சொந்த சிந்தனையை வளர்த்து உணர்ச்சிகளுக்குத் தெம்பூட்டுவன்மூலமாகவும், நாம் நேரடியாகச் செயல்பட முடியும். இதுவே ஜெர்மனிக்கு மிகவும் உத்தரவாதமான, பாதுகாப்பான, வழியாகும்.

ழான் பௌல்

ழான் பௌல் முழுப் பெயர் யொஹன் பௌல் ∴பிரீட்ரிஷ் ட்டர் 1763–1825 ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த அவர், தம்முடைய உரைநடைப் படைப்புகளால், தம் காலத்தின் இணையற்ற எழுத் தாளராக விளங்குகின்றார். அவர் காலத்தில் பரவியிருந்த இலக்கிய, அல்லது அறிவு சார்ந்த, இலக்கியங்கள் எதிலும் சேர்ந்தவருக அவரை மதிப்பிட முடியாதென்ற போதிலும், அந்த இயக்கங்கள் அனைத்தி லும் அவர் பங்கு கொண்டார். தாம் தேர்ந்தெடுத்த பொருள்களிலும் நடைப் பாணியிலும் எல்லையற்ற கற்பனை வளம்; கேலிக்குரியதையும், இயல்புக்கு மாறுனதையும், முற்றிலும் எளிதானதையும் பற்றி, மிகுந்த அனுதாபத்துடனும் நகைச்சுவையுடனும் எழுதும் ஆற்றல் ஆகியவை அவர் எழுத்தின் தனித்தன்மைகள். ஆனால் ழான் பௌல், அன்ருட வாழ்க்கையின் அற்பமான பிரச்சினைகள் பற்றி மட்டும் கவலை கொண் டிருக்கவில்லை. இலட்சியங்களுக்கும் நடைமுறைக்கும் இடையே யுள்ள பெருத்த வேறுபாடு, மனிதனுக்கு உண்மையான கல்விப் பயிற்சி அளித்தல், மனிதனின் முடிவான இறுதிக் குறிக்கோள், நம்பிக்கை விசுவாசம் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு ஆகிய மகத் தான பிரச்சினைகள் பற்றி, அவர் குறிப்பாக தமது நீண்ட புதினங்கள் மூலம், ஆராய்ந்து, உருவான கருத்துக்களைத் தெளிவுபடுத்தாத போதிலும், ஓரளவு விளக்கம் தருகின்றார்.

இறந்த கிறிஸ்துவின் உரை

'இரைவன் இல்லை என்று விளக்கி, உலகக் கட்டடத்திலிருந்து, இறந்த கிறிஸ்து நிகழ்த்திய உரை' (1796) என்ற அவர் நூல், மரணத்தைப் பற்றிய ஐயப்பாடுகளும் இறைவன் இருக்கின்றாரா என்பது பற்றி அவர் மனத்தில் எழுந்த கேள்விகளும் அவரை எவ்வளவு தூரம் வருத்தி வாட்டின, என்பதை விளக்குகிறது. அக் கற்பனை உரையை அவர் படைத்தது, தம்முடைய ஏக்கத்தையும் நம்பிக்கை கொள்ள முடியா நிலையையும் விளக்குவதற்காக அல்ல; இறைவன் இல்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளும்போது ஏற்படும் பயங்கர விளைவு களைச் சித்திரித்து, அதனாலேயே மனிதனின் சமய நம்பிக்கைகளை வலி யுறுத்துவதற்காகவே எழுதப்பட்டது. தம் கனவில், ழான் பௌல் தம் கற்பனை கட்டுக்கடங்காமல் செல்ல இடம் கொடுத்து, கிறிஸ்து உயிர்த்தெழும் பயங்கரக் காட்சியை, வல்லமை மிக்க சொற்களிலே வடித்துத் தருகிறார். இறைவன் இருப்பதற்கான தலையாய சான்றாய் விளங்கும் கிறிஸ்துவே, இறைவன் இல்லை என்று உலகுக்கு எடுத்துரைக்கின்றார். பயங்கர நிலை தாங்கமுடியாத அளவுக்கு வலுக்கும் கட்டத்தில், கனவு காண்பவன் விழித்தெழுந்து,

அமைதியான ஓருலகில் ஆண்டவனிடம் தாம் கொண்டிருந்த நம்பிக்கை மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டதைப் பரவசத்துடன் அறிவிக்கின்றார். ஆயினும் அவர் ஐயப்பாடுகள் முடிவாகத் தீர்ந்தபாடில்லை. இறுதியான, முடிவான, நிச்சயமான, தெளிவு எதுவும் ஏற்படவில்லை. தனிமையில் தவிக்கும் மனிதன் பாதுகாப்பும் நிம்மதியும் தேடி அலைகையில் மனிதன் உள்ளத்திலும் உணர்ச்சிகளிலும் மட்டுமேதான் கடவுள் இருக்கிறார் என்ற எண்ணம் வெகு தெளிவாக எழுகின்றது.

இறைவன் இல்லை என்று கூறி, உலகக் கட்டடத்திலிருந்து,
இறந்த கிறிஸ்து நிகழ்திய உரை*

முன்னுரை

இக் கதையின் நோக்கம் தான், இதன் துணிச்சலுக்கான நியாயமும் சமாதானமும் ஆகும். இறைவன் இருக்கின்றான் என்பதைப் பெரும்பாலோர் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளும்போது, எப்படி உணர்ச்சி வசப்படாமல் இருக்கின்றார்களோ, அதுபோலவேதான் சிலர் உணர்ச்சி வசப்படாமலே இறைவனை மறுக்கின்றனர். மெய்யான நம் சித்தாந்தத் தத்துவங்களில் கூட, நாம் வார்த்தை களையும், நாணயங்களையும் பதக்கங்களையும், பேராசையுடன் பழைய நாணயங்களைச் சேகரிப்போரைப் போலவே, சேர்த்து வைக்கத்தான் செய்கிறோம். பிற்பாடுதான் இந்தச் சொற்களை உணர்ச்சிகளாக, இந்த நாணயங்களை இன்பங்களாக, மாற்றிக் கொள்கிறோம். ஆன்மா அழிவற்றது என்று இருபது ஆண்டு களாக ஒருவன் நம்பலாம். ஆனல் இருபத்தோரவது ஆண்டில் தான், உணர்ச்சி செறிந்த ஒரு நிமிட நேரத்தில் தான், இந்த நம்பிக்கையின் வளமான செல்வத்தை, இரச கற்பூரச் சுடரிலி ருந்தது போல் இம் மூலத்திலிருந்து வரும் இதமான வெப்பத்தை திடீரென உணர்ந்து வியப்படையக் கூடும்.

அது போலவே நாத்திகக் கோட்பாட்டின் அமைப்புக்குள்ளாக முதன் முறையாகப் புகுபவன் மூச்சுத் திணறச் செய்யப் பொங்கி எழும் நச்சு வாயுவைக் கண்டு நான் அச்சம் கொண்டு நடுங்கி னேன். இறைவனை நான் மறுக்கும்போது ஏற்படும் வேதனை யைப் போல், அவ்வளவு அதிக வேதனை அழிவற்ற அமரத் தன்மையை மறுக்கும்போது எனக்கு ஏற்படுவதில்லை. பிந்திய

* இறைவன் இருப்பதை உறுதிப்படுத்தும் உணர்வு அழியும் அளவுக்கு, எப் பொழுதாவது என் இதயம் துன்பத்தில் ஆழ்ந்தும், மரத்துச் செத்துப் போயும் இருந்தால், இக் கட்டுரையைக் கொண்டே எனக்கு நான் அதிர்ச்சி உண்டாக்கு வேன். அப்பொழுது அது என்னைக் குணப்படுத்தி என் உணர்ச்சிகளை எனக்கு மீட்டுத் தரும்.

தில், மூடுபனியில் போர்த்தப்பட்ட ஒருலகைத் தவிர வேறெதை யும் நான் இழக்கவில்லை. முந்தியதில் நான் இப்பொழுதுள்ள உலகையே, அதாவது அதன் கதிரவனையே, இழந்து விடுகிறேன். ஆன்ம உலகு முழுவதும், நாத்திகத்தின் கையால், நொறுங்கி, ஒளி வீசி, ஒடி ஒன்றுச் சேர்ந்து அலைந்து, இசைவோ நிலையான தன்மையோ இல்லாமல், விலகிப் பிரியும் எண்ணற்ற பல, தானெனும் ஆணவப் புள்ளிகளாய்ச் சிதறுகிறது. ஒரு நாத்தி கனைப் போல் பிரபஞ்சத்தில் தனியாக இருப்பவன் வேறு யாரும் கிடையாது. மாண்பு மிக்க தந்தையைப் பறிகொடுத்த அனைதை இதயத்துடன், அவன் அழுது அங்கலாய்க்கின்றான். பிரபஞ்ச உணர்வினால் உயிர்ப்பிக்கப்பட்டு பிணைக்கப்படாததாகவும், கல்லறைக்குள் வளர்வதாகவும், உள்ள இயற்கை யெனும் அள விட இயலாத சவத்தின் அருகே நின்று அவன் அழுகின்றான். அச் சவத்திடமிருந்து உதிர்ந்து விலகும் வரை அவன் ஓலமிட்டுக் கொண்டே இருப்பான். மணலில் பாத்திப் புதைந்துள்ள பெரிய எகிப்தியச் சூரரிமாச் சிலை போல உலகம் முழுவதும் அவன் முன் பரந்து கிடக்கின்றது. உருவற்ற முடிவற்ற கால வெளியின் கொடுமையான இரும்பு முக மூடி பிரபஞ்சம்.

ஒரு சில பல்கலைக் கழக விரிவுரையாளரின் உள்ளத்திலும் என் கதை அச்சத்தைப் புகுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன். திறனுய்வுக்குரிய மெய்யியல் என்ற அமைப்பின் அடித்தளத்தை யும் சாக்கடைகளையும் தோண்டும் வேலையில் அன்றுடக் கூலியாட் களாக இந்த விரிவுரையாளர்கள் முனைந்தவுடனே, கடல்பாம்பு, அல்லது ஒற்றைக் கொம்புக் குதிரை இருப்பது பற்றிப்பேசுவது போல், இறைவன் இருப்பது பற்றி உணர்ச்சி இல்லாமலும் உள் ளக் கிளர்ச்சி இல்லாமலும் ஆராய்கின்றனர்.

பல்கலைக் கழக விரிவுரையாளர்போல் அவ்வளவு தூரம் இன்னும் செல்லாதவர்கள் நன்மைக்காக நான் ஒன்று கூறுவேன். நாத்தி கத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் அதே நேரத்தில், அதற்கு முரண்பாடு இல்லாமல், அழிவற்ற அமரத்துவ நிலையில் நம்பிக்கை கொண்டிருப்பதும் சாத்தியமே. நானென்னும் அகந்தையின் ஒளி வீசும் பனித்துளியை இந்த வாழ்வில் ஒரு மலரின் புறவிதழ் வட்டத்தில் வீசி, சூரிய வெளிச்சத்தில் கலக்கச்செய்யும் நிர்ப் பந்தம், அடுத்த வாழ்விலும் அதை மீண்டும் செய்யக்கூடும். உண்மையில், முதன் முறையில் காட்டிலும் இரண்டாம் முறையில் எளிதாக, எனக்கு உடல் உருவை அது அளிக்கக்கூடும். நடுநிசி யில், நம் உறக்கம் நம் ஆன்மாவை அணுகி நெருங்கி, நம் கனவுகள் மீதும் இருள் படர்த்தும்போது, இறந்தவர்கள் தங்கள் உறக்கத் திலிருந்து விழித்தெழுந்து, உயிருள்ளவர்கள் திருச்சபையில் நடத்தும் ஆராதனைகளைப் பின்பற்றுவர் என்று, நம் குழந்தைப்

பருவத்தில், மற்றவர்கள் சொல்வதை நாம் கேட்கும்போது, இறந்தவர்களை நினைத்து, மரணத்தைக் கண்டு நடுங்குகின்றோம். நிசப்தம் குடிகொண்டுள்ள திருச்சபையின் மீண்ட சாளரங்களிலிருந்து, இரவின் தனிமையில், நாம் நமது கண்களைத் திருப்பிக்கொள்கிறோம். உண்மையில் சந்திரனிடமிருந்துதான் வருகிறதா என்பதைக் காண, அந்த ஒளிச் சுடரை உற்று நோக்க நாம் அஞ்சுகிறோம்.

குழந்தைப் பருவமும், அதன் இன்ப நினைவுகளைக் காட்டிலும் பயங்கர நினைவுகளும், கனவுகளில் சிறகு முளைத்துப் பறந்து மீண்டும் ஒளி வீசுவதுடன், ஆன்மாவின் குறுகிய இரவில் மின்மினிப் பூச்சிகள்போல் விளையாடுகின்றன. பறந்து ஊசலாடும் இந்தப் புள்ளிகளை அழித்து விடாதீர்கள். மெய்ம்மைக்குக் கோடிட்டுத் தெளிவாகப் புலப்படுத்தும் அரை நிழல்களைப்போல், இருள் நிறைந்த, வேதனை தோய்ந்த, நம் கனவுகள் நமக்கு எஞ்சி நிற்கட்டும். நீர் வீழ்ச்சியின் அதல பாதாளக் கொந்தளிப்பிலிருந்து குழந்தைப் பருவத்தின் அமைதியான உச்சிக்கு அக்குறுகிய மலைமுகட்டில், வானத்தின் கண்ணாடியாக, வாழ்க்கை எனும் ஆறு, ஓசையின்றி, தன் பாதாளக் குழிகளில் சிக்காமல் தப்பி ஓடும் உச்சிக்கு — நம்மை அழைத்துச் செல்லும் கனவுகளை இழந்துவிட்டால், அந்த இடத்தை வேறென்ன நிறைவு செய்ய முடியும்?

ஒருநாள், கோடைகால மாலைப்பொழுதில், மலைச்சாரலில் சூரிய வெளிச்சத்தில் நான் படுத்துக்கொண்டே உறங்கிவிட்டேன். கல்லறைச் சதுக்கத்தில் நான் விழித்ததாகக் கனவு கண்டேன். திருச்சபைக் கடிகாரத்தின் சுழல் சக்கரங்கள் பதினேழு மணி அடித்த ஓசை கேட்டு நான் விழித்திருந்தேன். காலியாயிருந்த வானத்தில் கதிரவனைத் தேடினேன். கதிரவனையும் சந்திரனையும் சேர்த்து ஒரு கிரகணம் மூடிவிட்டிருந்ததாக நான் நம்பினேன். கல்லறைகள் அனைத்தும் திறக்கப்பட்டிருந்தன. எலும்புக் கிடங்கின் இரும்புக் கதவுகள், கண்ணுக்குப் புலப்படாத கைகளால் மேலும் கீழும் தூக்கி இறக்கப்பட்டன. எவருடைய நிழல்கள் என்று கண்டுகொள்ள முடியாமல், நிழல்கள் சுவர்களின் மேல் படர்ந்து ஊசலாடின. மற்ற நிழல்கள், வெறுமையான காற்றில், நிமிர்ந்து நடந்துகொண்டிருந்தன. காலியாயிருந்த சவப்பெட்டிகளில் குழந்தைகளைத் தவிர, வேறுயாரும் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. வானத்தின் மீது, சாம்பல் நிறமான, வெப்பம் மிகுந்த, மூடு பனி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. பிரம்மாண்டமான ஒரு நிழல், அந்த மூடு பனியை, ஒரு வலை போல், இறுகப் பின்னி, இன்னும் நெருக்கமாக இழுத்து, மேலும் வெப்ப மூட்டிக்கொண்டிருந்தது. எனக்கு மேல் பெரிய நீர் வீழ்ச்சிகளின் இரைச்சல்

தொலைவில் ஒலித்தது. எனக்கு அடியில், பயங்கரப் பூகம்பத்தின் முதல் குமுறல்கள் ஒலித்தன. தங்களுக்குள்ளாக மோதி, ஒன்றுக இணையும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காணுமல், ஒலித்த இரு முரண்பட்ட ஒலிகளிடையே எழுந்த ஓயாத போராட்டத்தினால், தேவாலயமே ஆட்டி உலுக்கப்பட்டது. அவ்வப்போது, சாம்பல் நிறமான ஒளி, அதன் சாளரங்கள் மேல் படர்ந்து ஒளி வீசியது. அந்த ஒளிவீச்சின் கீழ், ஈயமும் இரும்பும் உருகிக் கீழே பாய்ந்தன. வலைபோல் பின்னியிருந்த மூடுபனியும், பொருமிக்கொண்டிருந்த பூமியும் சேர்ந்து, என்னை இரண்டு ஆலயத்திற்குள் தூக்கிச் சென்றன. ஆலயக் கதவுகளுக்கு முன்பு, இரண்டு நச்சு வேலிகளில், ஒளி வீசும் கண்களுடன், நச்சுப் பாம்புகள் புரண்டு கொண்டிருந்தன.

கடந்த கால நூற்றாண்டுகளின் முத்திரை பொறிக்கப்பட்டிருந்த விசித்திர நிழல்களுக்கு நடுவே நான் நடந்தேன். அந்த நிழல்கள் அனைத்தும், ஆராதனை பீடத்தைச் சுற்றி நின்று, நடுங்கிக் கொண்டு, தங்கள் இதயத்துக்குப் பதிலாக நெஞ்சில் அடித்துக் கொண்டிருந்தன. முதலில் திருச்சபையில் புதைக்கப்பட்டிருந்த ஒரு மனிதன் மட்டும், நடுங்கும் நெஞ்சு இல்லாமல், தன் தலையணை மேல் இன்னமும் படுத்துக்கொண்டிருந்தான். அவன் சிரித்த முகத்தில், இன்பக் கனவு ஒன்று தவழ்ந்தது. ஆனால் உயிருள்ள ஒரு மனிதன் புகுந்தபோது அவன் விழித்துப் புன்சிரிப்பை அடக்கிக்கொண்டான். சிரமப்பட்டு, அவன் தன் கனமான கண்ணிமையை உயர்த்தினான். ஆனால் அதற்கு அடியில் கண் இல்லை. விம்மிய அவன் மார்பில், இதயத்திற்குப் பதிலாக, ஒரு புண் இருந்தது. அவன் தன் கைகளை உயர்த்தி வழிபாட்டில் கைகூப்பினான். ஆனால் அவன் முன்னங்கைகள் நீண்டு, தனியாக வந்து விட்டன. கூப்பிய கைகள் கீழே விழுந்து விட்டன. திருச்சபையின் உயர்ந்த கூரையின்மேல், அழிவற்ற நிலை என்ற கடிகாரத்தின் முகப்பு நின்றது. அதில் எண்கள் இல்லை. கடிகாரமே, மணிகாட்டும் முள்ளாகவும் இருந்தது. ஒரு கருநிற விரல் அதைச் சுட்டிக் காட்டியது. இறந்தவர்கள், அந்தக் கடிகாரத்தில் மணி பார்க்க விரும்பினர்.

அப்பொழுது, என்றும் நீங்காத துயரத்தின் முத்திரை படிந்த முகப் பார்வையுடன், உயரமான, உத்தமமான, தோற்றம் கொண்ட ஒருவர் ஆராதனைப் பீடத்துக்கு மேலிருந்து கீழே இறங்கினார். இறந்தவர்கள் அனைவரும் அவரைப் பார்த்து, "கிறிஸ்துவே, இறைவன் இல்லையா?" என்று கூவினர்.

"இறைவன் என்று ஒருவரும் கிடையாது", என்று அவர் பதில் கூறினார்.

இறந்தவர்கள் ஒவ்வொருவருடைய மொத்த நிழல் முழுவதும், நெஞ்சு மட்டுமல்ல, நிழல் முழுவதும்—நடுங்கியது. அந்த நடுக்கத்தில் ஒவ்வொருவரும் பிளவுபட்டனர்.

கிறிஸ்து மேலும் கூறினார்: "நான் உலகங்கள் நெடுகிலும் உலவினேன். கதிரவன்களை எட்டிப் பிடித்து, விண்மீன்களுடன் வானத்தின் வெற்று வெளியிலே பறந்தேன். ஆனால் எங்கும் இறைவன் இல்லை. உயிர் தன் நிழலை வீசும் தூரம் வரை சென்று, பாதாளத்திற்குள் நோக்கி, தந்தையே, நீர் எங்கு இருக்கின்றீர்?" என்று உரக்கக் கூவினேன். ஆனால் எவர் ஆட்சிக்கும் அடங்காத முடிவற்ற புயலின் ஓசைதான் என் காதில் ஒலித்தது. உயிர்களின் ஒளி வீசும் வானவில், பாதாளத்தின் மேல் வளைந்து தொங்கியது. அவ்வுயிர்களைப் படைத்த பகலவன் அங்கில்லை. தெய்வீக வழியை நாடி, எல்லையற்ற பிரபஞ்சத்தை நான் நோக்கியபோது, விழியற்ற வெற்றுக்குழிப் பொருத்தின் பாதாளப் பள்ளம்தான் என்னை வெறித்து நோக்கியது. எல்லையற்ற நிலை, குழப்பத்தின் மீது படர்ந்து கிடந்து, அதைக் கடித்துத் தின்று, அசைபோடுவதுபோல் சுவைத்தது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட ஒலிகளே, நீங்கள் உரக்கக் கூவுங்கள். உங்கள் ஓலத்தினால் நிழல்களைத் தகர்த்து நொறுக்குங்கள். ஆண்டவன் என்பவன் இல்லை.

பனியினால் உண்டான வெள்ளை வாயு, வெப்ப மூச்சில் கரைந்து மறைவது போல், நிறமில்லா அந்த நிழல்கள் நீங்கி மறைந்தன. அண்டத்தும் வெறுமையாக இருந்தது. அதற்குப் பிறகு, இதயத்தில் வேதனை பாய கல்லறைச் சதுக்கத்தில் விழித்தெழுந்திருந்த இறந்த குழந்தைகள் ஆலயத்திற்குள் நுழைந்து, ஆராதனை பீடத்தின் மேல் நின்ற உயர்ந்த தோற்றம் முன் வணங்கி விழுந்து, "ஏசுவே, எங்களுக்குத் தந்தை இல்லையா?" என்று கேட்டார்கள். கண்களிலிருந்து நீர் வழிய, அவர் பதில் கூறினார்: "நீங்களும், நானும், அனைவரும், அனைதைகள். நமக்குத் தந்தை கிடையாது."

முரண்பட்ட ஒலிகள் இன்னும் உரக்க ஒலித்தன. நடுங்கிக் கொண்டிருந்த சுவர்கள் இன்னும் அகன்று விரிந்தன. ஆலயமும் குழந்தைகளும் பாதாளத்தில் வீழ்ந்தன. அவர்களைத் தொடர்ந்து, உலகம் முழுவதும் கதிரவனும் கீழே வீழ்ந்தன. பிரம்மாண்டமான பிரபஞ்ச அமைப்பு முழுவதும் எங்களைத் தாண்டிக் கீழே விழுந்தன. எல்லையற்ற இயற்கையின் உச்சிக்கும் மேலாகக் கிறிஸ்து நின்று, ஆயிரம் சூரியன்களுடன் பிரபஞ்சம் முழுவதும், ஒரு பாதாளச் சுரங்கத்தில் வீழ்வதைப்போல்,—சூரியன்கள் சுரங்கத் தொழிலாளர் விளக்குகள் போலவும், விண்மீன்கள் வெள்ளி நாணங்கள் போலவும், இரவில் ஊடுருவிச் செல்ல, அந்த முடிவற்ற இரவைச்

சுற்றி வீழ்ந்ததைப் போல்,—பிரபஞ்சம் தவிடு பொடியானதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

உலகங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதுவதையும், தேவ லோகத்துக் கொள்ளிவாய்ப் பேய்களின் தீவட்டி நடனத்தையும், துடிக்கும் இதயங்களின் பவளக் கரைகளையும் கிறிஸ்து பார்த்த போது—நீர்ச் சுருள் ஒளித் திவலைகளை அலைகள் மீது சிதறடிப்பது போல், நிலவுலகம் ஒவ்வொன்றுக் தன் ஒளிவீசும் ஆன்மாக் களைச் சாவின் கடலில் வீசியதைப் பார்த்தபோது மனிதப் படைப் பில் மிக உயர்ந்தவர் உயரத்துக்கு எட்டி நின்று, வெறுமையையும், காலியான, முடிவற்ற கால வெளியையும் நோக்கித் தம் கண்களை உயர்த்தி அவர் கூறினர்: உணர்வற்ற, மதிகெட்ட வெறுமை! கொடுமையான, முடிவற்ற, நிர்ப்பந்தம்! வெறிபிடித்த போக்கு! என்ன நடக்கப் போகிறது என்று நீங்கள் இருவரும் சேர்ந்தாவது கூற முடியுமா? பிரபஞ்ச அமைப்பையும் என்னையும் நீங்கள் எப்பொழுது தகர்த்தெறியப் போகிறீர்கள்? தற்செயலான போக்கே! விண்மீன்களின் பனிமாரியின் ஊடே சூரிவளி கொண்டு நீ எப்பொழுது பாய்ந்து, ஒன்றன் பின் ஒன்றாகச் சூரியன்களை ஊதி அணைப்பாய் என்பதும் நீ பவனி வரும்போது, எப்பொழுது கடைசி முறையாய்க் கோள்களின் பனித்துளி ஒளி வீசும் என்பதும் உனக்கே தெரியுமா? பிரபஞ்சத்தின் பிரம்மாண்ட மான கல்லறையில் நாம் ஒவ்வொருவரும் சிறிதும் துணையின்றித் தனியராய் நிற்கின்றோமே. தந்தையே! என்னருகே என்னைத் தவிர வேறு யாருமில்லை. தந்தையே! முடிவற்ற உன் நெஞ்சு எங்கே, அதன் மீது தலைசாய்ந்து நான் ஆறுதல் பெற? தானெனும் உணர்வு ஒவ்வொன்றும் தன் சொந்தத் தந்தையாக வும் படைப்பாளராகவும் இருக்கும்போது, அதுவே தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் தேவதையாகவும் ஏன் இருக்கக் கூடாது?

"என் பக்கத்தில் இன்னமும் ஒரு மனிதன் இருக்கின்றானா? பாபம். உன் அற்ப வாழ்வு, இயற்கையின் பெருமூச்சோ, அதன் எதிரொலியோ தான். அது உட்குழிவான ஒரு கண்ணாடி. உங்கள் மண்ணுலகில் இறந்தோரின் சாம்பல் குவியலான தூசி மேகங்கள் மீது தன் ஒளிக் கற்றைகளைக் கீழே வீசும் கண்ணாடி! அப்பொழுது தெளிவற்ற, மேகத்திரை போர்த்திய உங்கள் உருவங்கள் எழு கின்றன. பாதாளத்தை உற்று நோக்குங்கள். சாம்பல் மேகங்கள் அதன் மேல் கடந்து செல்கின்றன. இறந்தவர் கடலிலிருந்து, உலகங்கள் நிறைந்த மூடுபனிகள் எழுகின்றன. எதிர்காலம் என்பது மேலே எழும்புகின்ற மூடு பனி; நிகழ்காலம், கீழேவிழும் மூடு பனிப் படலம். உன்னுடைய புவியை உன்னால் அடையாளம் காண முடிகிறதா?"

இக் கட்டத்தில கிறிஸ்து கீழ் நோக்கிப் பார்த்தார். அவர் கண்களில் நீர் நிரம்பியது. அவர் கூறினார்: "ஆ! ஒரு காலத்தில் நான் அபபுவியில் இருந்தேன். அப்பொழுது, அழிவற்ற என் தந்தை என்னுடன் இருந்தார். மலைகளிலிருந்து, மகிழ்வுடன் மேல் நோக்கி முடிவற்ற வானைப் பார்த்து, குத்துப் பட்டிருந்த என் நெஞ்சை, ஆறுதல் அளிக்கவல்ல அவர் உருவத்தோடு சாத்தி, என் கொடுமையான மரணத்தின் நடுவிலும், கூற முடிந்தது. "தந்தையே, இரத்தக் கிளறியான இந்த நரகத்திலிருந்து உம் மகனை மீட்டு, உம் இதயத்தோடு சேர்த்துக்கொள்ளும்.' புவிமேல் அளவுக்கு மீறி இன்பமாய் வாழும் நீங்கள், இன்னமும் இறை வனை நம்புகிறீர்கள். இப்பொழுது ஒருவேளை உங்கள் கதிரவன் மறைந்து கொண்டிருக்கும். மலரும் பூக்களிடையும், ஒளியிடை யும், கண்ணீரிடையும், நீங்கள் முழங்காலிட்டு, ஆசிபெற்ற உங்கள் கைகளை உயர்த்தி, ஆயிரம் இன்பக் கண்ணீருடன், திறந்த வானை நோக்கிக் கூவுவீர்கள்; (அழிவற்ற பரம்பொருளே, என்னையும் என் இரண காயங்கள் அனைத்தையும், உமக்குத் தெரியும், என் மரணத்திற்குப் பின், நீர் என்னை ஏற்றுக்கொண்டு, என் புண்கள் எல்லாவற்றையும் குணப்படுத்துவீர்கள்....' பரிதாபத்திற்குரியவர்களே, மரணத்துக்குப் பின் உங்கள் புண்கள் மூடப்பட மாட்டா. துரதிருஷ்டவசமான மனிதன், புண்கள் நிறைந்த முதுகுடன் பூமியிலே கிடந்து, விழிக்கும்போது, வாய்மையும், இன்பமும் நல்லறமும் நிரம்பிய எழில்மிக்க காலைப் பொழுதைக் காண முடியுமென்று நம்பி, உறக்கத்திலே அதற் காகக் காத்திருந்தால், உண்மையில் அவனுக்கு நேரிடுவதென்ன? சூரிவளி குழப்பத்திலே, என்றும் நீங்காத நடு நிசியிலே அவன் விழித்தெழுவான். காலைப்பொழுதும் விடியாது; குணப்படுத்தும் கையையோ, அழிவற்ற பரமபிதாவையோ, அவன் காண முடியாது. —என்னருகே நிற்கும் அழியும் பிறவியே; நீ இன்னமும் உயிரோடிருந்தால், இறைவனை இறைஞ்சு; இல்லாவிடில், அவனை அடியோடு இழந்தவராவீர்."

கீழே விழுந்த நான், பிரபஞ்சத்தின் ஒளிமிக்க அமைப்புக்குள் உற்று நோக்கியபோது பேரழி எனும் பிரும்மாண்டமான பாம்பின் துரக்கிய வகாயங்களைக் கண்டேன். அந்தப் பாம்பு அண்டத்தைச் சுற்றி வகாத்துக் கொண்டிருந்தது. அதன் வகாயங்கள் கீழே விழுந்து, அண்டத்தைச் சுற்றி இரட்டைச் சுருளாக அமைந்தன. அதற்குப் பின்பு பாம்பு, இயற்கையைச் சுற்றித் தன்னைத்தானே ஆயிரம் முறை சுருண்டு வகாந்துகொண் டது. உலகங்களை ஒன்றாய் நசுக்கியது. முடிவற்ற ஆலயத்தை நசுக்கிக் கல்லறைக் கோவிலாக்கியது. அனைத்தும் குறுகியதாய், கனியிழந்ததாய், பயங்கரமாய், மாறியது. கணக்கின்றி நீண்ட

கண்டாமணியின் தாக்கு, காலத்தின் இறுதி மணி அடித்து, உலகின் அமைப்பையே தகர்க்கும் தருவாயில் இருந்தது.....அந்த நேரத்தில், நான் விழித்துக்கொண்டேன்.

மீண்டும் இறைவனை வழிபடும் வாய்ப்புக் கிட்டியது குறித்துப் பரவசத்தில் அழுதது என் ஆன்மா பரவசமும் அழுகையும், அவனிடம் கொண்டிருந்த நம்பிக்கையும்தான் அந்த வழிபாடு. நான் விழித்தெழுந்தபோது, தழைத்துச் செழித்திருந்த பயிருக்கு அப்பால் கதிரவன் ஒளி வீசி, வைகறைப் பொலிவின்றி காலையில் எழுந்த சிறிய சந்திரனை எட்டும் வரை, தன் மாலை ஒளியின் பிரதி பலிப்பை அமைதியாகப் பெய்தது. தேவலோகத்துக்கும் மண்ணுலகுக்கும் இடையே மகிழ்ச்சி மிக்க, இடைவரவான, ஒருலகம் தன் குறுகிய சிறகுகளை விரித்து, என்னைப் போலவே, பரமபிதாவின் முன்னிலையில் உயிருடன் இயங்கியது. என்னைச் சுற்றி இயற்கை முழுவதிலும், தொலை தூரத்தில் ஒலிக்கும் மாலைமணி ஓசைகள் போல், அமைதியான ஒலிகள் ஒலித்தன.

(ஸிபென்கேஸ்லிருந்து)

கோமகன் குடி மக்களுக்கு வேட்டைக்குப் பின் அளித்த விருந்து

ஜெர்மனியின் சிறு மாநிலங்கள் பலவற்றில் நடக்கும் அநீதிகளை அம்பலப்படுத்த, ழான் பௌல், பத்திரிகைகளில் வெளிவந்ததாக ஒரு அறிக்கையைக் கற்பனை செய்து, அதன் பேரில் தம் கருத்துக்களையும் வழங்குகின்றார். மாநிலக் கோமகன்களின் ஏதேச்சாதிகார ஆட்சியின் கொடுமைகளிலிருந்து மீள, அரசியல் சட்ட அடிப்படையில் எந்தப் பாதுகாப்பும் இன்னமும் அளிக்கப்படாத கிராமக்குடியானவர்கள் நிலையையும், சிப்பாய்களின் அவல நிலையையும் அவர் இதில் சித்திரிக்கின்றார். 'ஞானத் தெளிவு யுகத்தில்' போல், அவர் மெய்யியல் தத்துவ வாதங்களைக் கட்டுரையில் எழுப்பவில்லை. 'ஸ்டர்ம், டிரங்க்' பாணியில், கட்டுக்கடங்காத கண்டனக் குரலையும் அவர் எழுப்பவில்லை. அவர் குறை கூறுவதன் காட்டத்தை நகைச் சுவை தணிக்கின்றது. கோமகனைப் புகழ்வதுபோல் புகழ்ந்து உண்மையில் குறைகூறும் போலி நவிற்சி அணி கட்டுரையின் நேரடித் தாக்குதலை மறைக்கின்றது. ழான் பௌல் எழுதியுள்ளதற்கு நேர்மாறானதை வலியுறுத்தவே உண்மையில் விரும்புகிறார் என்பதை வாசகர் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. ஆயினும் அவர் எழுதுகிற பாணியினாலும், குறிப்பாக வேண்டுமென்று மிகைப்படுத்திக் கூறும் உயர்வு நவிற்சி அணியினாலும், அவர் கண்டனத்தின் காட்டம் தணிகின்றது.

மனித இனத்தின் மீதும் பாமர மக்கள் மீதும் கொள்ளும் பற்று தலும், பொதுவாக எல்லா உயர்ந்த உணர்வுகளுமே, பெரும் பாலான அரச அரியணையில் கூடு கட்டியுள்ளன. அந்நிலையில் இந்த உணர்வுகளை வெளிப்படுத்துவது, வியத்தற்குரிய அதிசயம் ஒன்றுமில்லை. ஆயினும் ஒவ்வொரு முறையும் கோமகன் ஒருவர் ஒரு பெரிய சாதனையைச் செய்யும்போது — அவருடைய சிறிய நடவடிக்கையும் பெரிய சாதனையாகத்தான் அமைகிறது என்று கருதுகிறேன் — பெருந்திரளான மக்கள் கூடி, அவரை வெகுவாகப் பாராட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவேண்டும். குறிப்பாகப் பத்திரிகை நிருபர்கள் பாராட்டவேண்டும். உலக வரலாற்றிலிருந்து ஒரு பக்கத்தைத் தனி உலகமாகவே மதிப்பவர்கள் பத்திரிகை நிருபர்கள். பிரெஞ்சுக் காசு ஒன்றை எனக்குப் பரிசளித்தாலோ, அல்லது குரலில்க்காக்க இளம் வயதிலேயே ஆண்மை குலைக்கப்பட்ட பாடகனுய் நான் இருந்தால், இரு நூறு காசுகள் எனக்குப் பரிசளிக்கப்பட்டாலோ நான் அதைப் பெரிய சாதனை என்று கூறுவேன். சனிக்கிழமைச் செய்தித் தாளில், ஒரு உத்தம சாதனையின் விவரம் தரப்பட்டுள்ளதை, சிறப்பான ஒரு மனநிலையுடன் படித்துப் பாருங்கள். ஆனல் உத்தம சாதனைகள் பாராட்டப்படுகிற போதிலும், அவற்றை யாரும் வழக்கமாகப் பின்பற்றுவதில்லை என்பதை மனதிற்கொள்ளாமல், படித்துப் பாருங்கள்.

29, ஆகஸ்ட்

மாட்சிமை மிக்க நம் கோமகன், இந்த ஆண்டு இலையுதிர் காலத்தில், — நாட்டுத் தூதுவரைக் கௌரவிக்கச் சிறப்பான வேட்டை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தருளினர் என்பது மட்டுமல்லாமல், அவ் வேட்டைகளில் குடியானவர்களும் பங்கு கொள்ளப் பெருமனதுடன் அனுமதி அளித்தார். நீண்ட காலமாக மன்றுடியதற்குப் பின், வேட்டையாடப்படும் மிருகங்களை ஈர்க்க இரவு முழுவதும் காவல்காக்கும் இடைஞ்சலான பொறுப்பிலிருந்து, திடீரென விடுவிக்கப்பட்டதால், குடியானவர்களின் மகிழ்ச்சி அளவிடற்கரியதாய் இருந்தது. அந்த விடுதலை பெற்ற மகிழ்ச்சியில், ஆர்வமிக்க வேட்டைக்காரர்கள், திறமைக் குறைவினுல், தங்கள் கைகால்களை மிக எளிதாக முறித்து விட்டனர் என்பதைக் கூடக் குடியானவர்களில் சிலர் உணரவில்லை. வீட்டுக்குத் திரும்பியபின்தான், தங்களால் எழுந்து நிற்க முடியவில்லை என்பதைக் குடியானவர்கள் புரிந்து கொண்டனர். ஆனல், வேட்டையால் பயிர்கள் மிதித்து நசுக்கப் பட்டு, அழிக்கப்பட்டதற்கு, இந்த வேட்டை மட்டும் ஈடு செய்ய வேண்டுமென்று கருணை மிக்க கோமகனர் விரும்பவில்லை. ஒவ்வொரு குடியானவருக்கும் குடியானவன் சொந்தச் செலவிலே,

ஒரு விருந்து படைப்பதற்குக் கருவூலம் தாராளமாக முன் பண உதவி செய்ய வேண்டுமென்று கோமகனுர் பெருந்தன்மையுடன் உத்தர விட்டார். குடியானவர்கள் பழக்கப்பட்டிருந்த சாதாரண அன்ருட உணவுப் பாத்திரங்களுக்குப் பதிலாகப் பகட்டான அலங்காரப் பாத்திரங்கள் மட்டுமே புழங்கப்பட வேண்டுமென்று கோமகன் ஆணையிட்டார். குடியானவர்கள் மகிழ்ச்சியை அதிகரிக்கவும், சாதாரண கிராமத்து மக்களையும் கோமகன் தமக்குச் சமமாகக் கருதித் தமக்கு உணவு படைக்கப் புழங்கும் பாத்திரங்களையே அவர்களுக்கும் அளிக்கின்ருர் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற் படுத்தவும்தான், கோமகன் இவ்வாறு ஆணையிட்டார். இதில் சிக்கனத்தைப் பொருட்படுத்தாமல், பணம் வாரி இறைக்கப்பட்டது. பல வகையான அலங்காரப் பாத்திரங்கள், பீங்கானாலும் கண்ணாடி யாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள், பொடி செய்யப்பட்ட வெண் கலவைக் கல்லினால் தீட்டப்பட்ட மெழுகுச் சித்திரங்களும் வண்ண ஓவியங்களும் தாங்கிய பாத்திரங்கள், முகம் பார்க்கும் கண்ணாடிக் தாம்பாளங்களில், நீளச் சிவப்பு வண்ண மேசைகளில் வைக்கப் பட்டன. அவற்றைப் பார்த்து ரசித்துக்கொண்டே குடியானவர்கள் இரு வரிசைகளில் அமர்ந்திருந்தனர். அவர்கள் பெரிதும் ரசித்த ஒரு பாத்திரம், வேட்டைக்காரர்களாலும் விலங்குகளாலும் அழித்து மிதிக்கப்பட்ட தங்கள் வயல்களின் மெழுகுச் சித்திரம் தாங்கிய ஒன்று.

இந்தப் பாத்திரங்களைக் கண் குளிரப் பார்த்த பின்னர், மேசை யிலிருந்து எழுந்து, நகர மக்கள் விற்பதற்குக் கொண்டு வந்திருந்த பலவகை உணவுப் பொருட்களை விலைக்கு வாங்கிக்கொள்ள, விருந் தாளிகள் அனுமதிக்கப்பட்டபோது, உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கி வழிந்தன. வேட்டையில் கிடைத்த பிராணிகளைக் கூட, அவர்களால் விலைகொடுத்து வாங்கக் கூடிய அளவுக்கு வாங்கிக் கொள்ளக் கோமகன் தாராள மனதுடன், அனுமதி வழங்கினுர். வேட்டைப் பொருள்கள் ஏராளமாக இருந்தன என்பதைப் பார்த்துப் பலரும் திருப்தி அடைந்தனர். வேட்டைப் பொருள்கள் ஏராளமாக இருந்ததால், அவற்றில் சில ஊசிப்போய் நாற்றமடிக்கத் தொடங் கின. குடியானவர்கள் வாங்க முடியாமல் விட்டு வைத்த மிச்சத்தை, வேட்டை நாய்களால் தின்று தீர்க்க முடியவில்லை. பாமர மக்கள் உல்லாச வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதில் (அவரது துணைவி யாரைப் போலவே), மிகுந்த ஆர்வம் கொண்ட நமது காருண்யக் கோமகனுர், இதுபோல இன்னும் சில வேட்டைகளுக்கும் விருந்து களுக்கும் ஏற்பாடு செய்யப் போவதாக அறிவித்து விட்டார்.

பார்த்து ரசித்து, வயிற்றுக்கு ஓய்வு தரப் பயன்படும் இந்த அலங் காரப் பாத்திரங்களை சிறந்த முறையில் பயன்படுத்தக் கோமகன்

அரிய யோசனை ஒன்றை வகுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. சிப்பாய்களின் வாய்கள், செயற்கை முறையில் அகலப்படுத்தப் படுமாம். ஒவ்வொரு மாதமும் சம்பள நாளன்று, கத்தோலிக்க ஆராதனைகளில் பயன்படுத்துவதுபோன்ற, பெரிய பட்டாள ரொட்டித் துண்டை எடுத்துச் சென்று, ஒவ்வொரு பட்டாளத்திற்கும் காட்டப்படுமாம். அஜீரணம் உண்டாகக்கூடாது என்பதற்காக, அந்த ரொட்டி காட்டப்படுமாம். அஜீரணம் உண்டாகக் கூடாது என்பதற்காக, அந்த ரொட்டி காட்டப்படுமே ஒழிய, ஒருவருக்கும் வழங்கப்படாதாம். ஏனென்றால், சிக்கனத்தை மனதிற்கொள்ளாமல், சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற காரணத்தால், நமது கோமகன், ரொட்டிக் கடைக்காரர்கள் சாதாரணமாக விளம்பரத்துக்குச் செய்வதுபோல், வழக்கமான உளுத்துப்போன மாவால் ரொட்டியைச் செய்யாமல், சுத்தமான, பசுமையான களிமண்ணினால் ரொட்டியைச் செய்ய உத்தரவிட்டுள்ளார். களிமண், பட்டாளத்தின் பசியைத் தீர்க்கப் பயன்படாது என்பதால், பட்டாளங்கள் கிராமத்தில் பிச்சையெடுத்துத் திரிந்து, அவ்வப்போது சிறிது உணவைத் திருட முயல்கின்றனர்.

இப்பத்திரிகைச் செய்தி பற்றி நான் இரண்டு கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். மிகவும் போற்றுகின்ற வேட்டைப் பொருளைப் போல், கோமகனுர் தங்களே நடத்தவில்லை என்பதை எல்லாக் குடியானவர்களும் முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். குடியானவனைக் கோமகன் சுடுவதில்லை. அதே சமயத்தில், கடுமையான குளிர் காலத்திலும், தீனிபோட்டு வேட்டை விலங்குகளைக் கொழுக்க வைப்பது போல், குடியானவனுக்குத் தீனி போடுவதில்லை. இரண்டாவதாக ஒரு சிப்பாய், உயிர்வாழ்வதற்கு, வீரத்தைத் தவிர, உணவும் அவசியமாக வேண்டும். போர்க் காலத்தில் மட்டுமே வீரம் தேவைப்படும். ஆனால் உணவோ, போர்க்காலம், சமாதான காலம், இரண்டிலும் தேவைப்படும். ஆகவே இராணுவ உடுப்புகள் மீதும் கருவிகள் மீதும் தேவையின்றி மீட்டிக்கொண்டிருப்பவற்றை நீக்குவதற்கு மேற்கொள்ளப் படும் சிக்கன நடவடிக்கைகள் போலவே, படைவீரர்களின் வயிற்றைச் சுருக்கவும் நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். சாதாரண உடல் வலிமை கொண்ட ஒரு சிப்பாய் சாகாமல், எவ்வளவு நாட்கள் உண்ணுநோன்பு மேற்கொள்ளமுடியும் என்பது பற்றிப் பரிசோதனைகள் நடத்திப் பார்ப்பது நலம். அந்த சிப்பாயை 'உண்ணுநோன்பு அணித் தலைவர்,' அல்லது 'பட்டினிப் படைவீரர்' என்று நியமித்து, அவருடைய வயிற்றுச் சுற்றளவையே மற்ற தனிப்பட்ட படைவீரர்களின் வயிற்றுக்கும் உச்சவரம்பாக நிர்ணயிக்கலாம். இத்தகைய வரையறைப்பில் அவர் பிழைக்காவிடில், அவருடைய சகாக்களில் யாராவது ஒருவர் பிழைக்கக்கூடும். அவருக்குப்

பதிலாகப் பட்டினிப் படைவீரராக நியமனம் செய்யப்படும் சிப்பாயினுல் செலவு அதிகமாகி விடாது. (இப்பொழுதுதான், நோயாளி ஒருவன் சாப்பிடும் அளவை, உடல்நலமான சிப்பாய் ஒருவனும் சாப்பிட்டு விடுகிறானே!) பட்டினியின் விளிம்புகளிலிருந்து தேறி ஓய்வு பெறச் சிப்பாய்களை ஆறுமாதத்துக்கு ஒரு முறை அவர்கள் வீட்டுக்கு அனுப்புவதும் அவசியமாயிராது. பட்டினியைத் தாங்கிக்கொண்டு அவர்கள் பட்டாள முகாமிலேயே தங்கி விடலாம். பலவீனத்தின் காரணமாக, அவர்கள் எழுந்து நிற்கக் கஷ்டப்படுவார்கள் என்பது உண்மைதான். ஆனுல் கோமகனுர் அனைவரும் கூடிப்பேசி, ஒவ்வொரு பட்டாளத் தலைவரும் 365 நாள் உண்ணு நோன்பு மேற்கொள்ளத் தன் படை வீரர்களுக்கு உத்தரவிட வேணடுமென்றும், நிரம்பிய வயிறுடைய எவரையும் பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ள மறுக்க வேண்டுமென்றும், தங்களுக்குள்ளாக ஒரு முடிவு செய்து கொண்டால் இப் பிரச்சினைக்கு எளிதில் தீர்வு கண்டுவிட முடியும். எதிரியின் புண்ணில் குண்டு பாயும்போது, உடைந்த குண்டோ, உடலில் நச்சைப் புகுத்தக் கூடிய குண்டோ, பாயக்கூடாது என்று இப் பொழுது கூடிப் பேசி முடிவு செய்துள்ளது போலவே, இதையும் முடிவு செய்து, ஒரு பட்டினி உடன்படிக்கையை நிறைவேற்றி விடலாம். அவ்வாறு செய்தபின், பட்டினியால் பலவீனமடைந்த சிப்பாய்கள், தங்களைப் போலவே பலவீனமான சிப்பாய்கள் மீது தான் சுடுவார்கள் என்பதால், இப்பிரச்சினையை எளிதில் தீர்த்து விடலாம்.

கிறிஸ்துவ உலகம் அல்லது ஐரோப்பா

'நோவாலிஸ்' என்ற புனைபெயர் சூட்டிக்கொண்ட ஃப்ரீட்ரிஷ் ஃபன் ஹார்டன்பர்க் (1772-1801)வீர காவியக் கவிஞர்களின் (Romantics) தொடக்கப் பருவத்தின் தலைசிறந்த கவியாய் விளங்கினார். உலகை உருமாற்றிய அற்புதக் கற்பனை ஆற்றலும், தமக்குத் திருமணமாக நிச்சயிக்கப்பட்டிருந்த 15 வயதுப் பெண்ணின் மரணத்தாலும், தாமே நோய்வாய்ப்பட்டிருந்ததாலும், மரணத்தில் ஈடுபாடும் நாட்டமும் கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருந்த ஆழ்ந்த தீவிர ஆன்மீக உணர்வும், அவர் படைத்த ஒரு சில நூல்களுக்கு ஆதாரமாய் அமைந்தன. (கிறிஸ்துவ உலகா, ஐரோப்பாவா' என்ற தலைப்பில் 1799இல் அவர் எழுதிய கட்டுரை. இறைவன், உலகம், மனிதன், ஆகியோர் இணைந்து இசைவு கண்டிருந்த பொற்காலமாக வரலாற்றின் மத்திய காலத்தைக் கருதிப் போற்றும் உணர்விற்குச் சிறப்பான எடுத்துக் காட்டாகும். வரலாற்றை இந்த அடிப்படையில் திறனுய்வு செய்யும் போக்கும், ஜெர்மன் வீர காவியக் கவிஞர்களைப் பெரிதும் ஆட்கொண்டிருந்தது. இறைவன், உலகம், மனிதன் ஆகியோரின் ஒருங்கிணைந்த இசைவைக் குலைக்கும் ஒரு பிளவாகச் 'சமயச் சீர்திருத்த இயக்கம்' கருதப்பட்டது. நவீன விஞ்ஞான வளர்ச்சி அற்புத தெய்வீகச் சாதனைகளையும், தேவ இரகசியப் புதிர்களையும், ஒழித்து விடுமென்று கருதப்பட்டது. அந்தப் போக்கின் இறுதிக் கட்டமான ஞானத் தெளிவு இயக்கம், நோவாலிஸின் வாழ் நாளிலேயே பிரெஞ்சுப் புரட்சியைத் தோற்றுவித்தது. அப்புரட்சி, வரலாற்றில் ஒரு திருப்பு முனை என்று அவர் கருதினார். புதிய நம்பிக்கைகளின் அடிப்படையில், புதிய சமாதான யுகத்தை அறிமுகப்படுத்த, இரண்டாம் சமயச் சீர்திருத்த இயக்கம் வேண்டுமென்று அவர் கோரினார். மத்திய யுகத்துக்குப் பின் மனிதனின் கண்டுபிடிப்புகளைக் கைவிடவேண்டுமென்று கருதப்படவில்லை. ஆனால் புதிய நம்பிக்கைக்கு உண்மையான சுதந்திர இயல்பை அக் கண்டுபிடிப்புகள் தரவேண்டும். பகுத்தறிவின் அடிப்படையில் வெறும் அரசியல் ஒற்றுமையை மட்டும் உருவாக்குவதற்கு மேலாக, பழைய சமயப் பாரம்பரியத்தைப் புதுப்பித்து வளமாக்குவதே ஐரோப்பாவின், புனிதமான, வரலாற்றுச் சிறப்புடைய பொறுப்பாகும் என்று நோவாலிஸ் கருதினார்.

நம் காலத்து அரசியல் நாடகத்தை நாம் இப்பொழுது காண்போமாக. பழைய உலகும் புதிய உலகமும் ஒன்றோடொன்று மோதுவதில் முனைந்துள்ளன. இதுவரை நிகழ்பெற்

றுள்ள அரசாங்க அமைப்புகளின் ஆற்றலற்ற தன்மையும் வறட்சியும், மிகப் பயங்கர முறைகளில் வெளியாகியுள்ளன. விஞ்ஞான இயல்களிடை எழுந்தது போலவே, ஐரோப்பிய நாடுகளிடை, இன்னும் நெருங்கிய பலதரப்பட்ட தொடர்பும் ஒற்றுமையும் உருவாகச் செய்வதே, போரின் தலையாய, வரலாற்றுச் சார்பான குறிக்கோள் என்று ஏற்பட்டால், அந்நிலையில் என்ன செய்வது? இதுவரை உறங்கிக் கொண்டிருந்த ஐரோப்பாவில் ஒரு புது எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டு, ஐரோப்பா மீண்டும் மறுமலர்ச்சி அடைய வேண்டுமானால், என்னசெய்வது? அரசுகளின் அரசு என்ற ஓர் அமைப்பு உருவாகி, அரசியல் தத்துவம் ஒன்று தோன்றும் தருவாயில் இருந்தால் என்ன செய்வது? இந்த அதிகாரப்படி நிலை அமைப்பு, நாடுகளின் சரிசீரான அடிப்படை அமைப்பு, அரசுகளின் கூட்டாட்சி அமைப்புக்கு ஆதாரக் கோட்பாடாக இருந்து, அரசியல் அகங்காரத்தின் அறிவு சார்ந்த எதிரொலியாக இருக்க வேண்டுமா? உலகப்பற்று கொண்ட வல்லரசுகள், தங்களுக்கிடையே சமாதானத்தையும் நிதான நிலையையும் நிலைநாட்ட முடியாது. உலகப் பற்று கொண்ட அதே சமயத்தில், உலகப் பற்றுக்கு மேம்பட்ட ஈடுபாடு கொண்ட மூன்றும் சக்திதான் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நாடுகளிடையே சமாதானத்தை உறுதிப்படுத்த முடியாது. எல்லா சமாதான ஒப்பந்தங்களும் உண்மையில் ஒரு மருட்சியே: பொய்த் தோற்றமே. அவை துப்பாக்கித் தாக்குதல் நிறுத்த ஒப்பந்தங்களாகவே இருக்கின்றன. அமைச்சரவையில் உள்ளவர்களைப் பொறுத்த வரை, இருசாராரர்க்கும் பொதுவான, மனச்சாட்சிக்கு ஏற்ற உடன்பாடு காண முடியாது என்று அவர்கள் கருதுகிறார்கள். இரு சாராரர்க்கும் பலமான உரிமைகளும் முக்கியமான அவசியமான கோரிக்கைகளும் இருக்கின்றன. உலகப் பற்றுதலாலும், மனித இனத்துக்கு இயல்பான உணர்வாலும் உந்தப்பெற்று, அந்தக் கோரிக்கைகளை வற்புறுத்தி வலியுறுத்துகின்றனர். இரு சாராரும் மனித ஆன்மீக உணர்வின் அழிக்க முடியாத கூறுகள். பழமையிடம் கொண்டுள்ள மதிப்பு, மரபிலும் பாரம்பரியத்திலும் உள்ள பற்றுதல், முன்னோர்களின் நினைவுச் சின்னங்களிலும், நாட்டின் பழமையான சிறப்புமிக்க குடும்பங்களிடமும் அன்பு, பணிந்து கீழ்ப்படிதலில் உள்ள இன்பம் ஆகியவை ஒரு புறம். மறுபுறம் இன்பச் சுதந்திர உணர்வு: செல்வாக்குமிக்க செயலாற்றலுக்கான வாய்ப்புக்கள் கிட்டுமென்ற, நிபந்தனையற்ற ஆவல்: புதிதாகவும் இளமையானதாகவும் உள்ளதில் காணும் இன்பம்: நாட்டின் சகோதரக் குடிமக்கள் அனைவருடனும் தடையின்றிப் பழகும் உறவு: மனித இனம் அனைத்துக்கும் உரித்தான

பொதுமையான கோட்பாடுகளின் ஏற்புடைமையில் பெருமை: தனி உரிமையிலும், பாமர மக்களின் சொத்துரிமையிலும், எழும் மகிழ்ச்சி; வல்லமை மிக்க குடிமை உணர்வு ஆகியவை. எவரும் இன்னொருவரை அழிக்க முடியுமென்று எண்ணி ஏமாறவேண்டும். இராணுவ வெற்றிக்கு இங்கு பொருளில்லை. ஏனென்றால் ஒவ்வொரு நாட்டின் அகனமர்ந்த தலைநகரம், கோட்டைச் சுவர்களுக்குப் பின் அமைந்ததல்ல; அதை யாரும் சூறையாடிக் கைப்பற்ற முடியாது.

மனித வரலாற்றில் போதும் போதுமென்ற அளவுக்குப் போர்கள் எழுந்து முடிந்து விட்டன என்று யாரால் கூற முடியும்? ஆனால் ஆன்மீக ஆட்சி மட்டுமே அளிக்கக் கூடிய சமாதானச் சின்னத்தை, நாம் உறுதியாகப் பற்றுவிடில், போர் ஒருக்காலும் ஓயாது. சுற்றிச் சுற்றித் தங்களை விரட்டியடிக்கும் பயங்கர வெறியாட்டம் பற்றி எல்லா நாடுகளும் எச்சரிக்கையாய் இருக்கக் கற்றுக்கொள்ளும் வரை — தெய்வீக இசையால் அமைதியும் எழுச்சியும் பெற்று, ஒன்று கூடிக் கலந்து முன்பு போற்றப்பட்ட ஆராதனை பீடங்கள் அருகே அணிவரும் கூடி, சமாதானப் பணிகளை மேற்கொண்டு, புகைந்து கொண்டிருக்கும் போர்க்களங்களின் மீது கொதிக்கும் கண்ணீர் சிந்தி, அன்பெனும் அரிய விருந்தை விழாக் கோலத்துடன் கொண்டாட முன்வரும் வரை—ஐரோப்பா இரத்தப் பெருக்கில் ஊறி மூழ்க வேண்டியிருக்கும். ஐரோப்பா புதியதொரு விழிப்பு பெறுவதற்கும், எல்லா நாடுகளும் பாதுகாப்பான உத்தரவாதமான வாழ்வு வாழ்வதற்கும், கிறிஸ்துவ உணர்வின் பேராட்சியை உறுதியாக நிலைநாட்டுவதற்கும், சமய உணர்வு தான் வழிகாட்ட இயலும்.

ஹெய்ன்ரிஷ் ஃபன் க்ளோஸ்த்

ஹெய்ன்ரிஷ் ஃபன் க்ளோஸ்த் (1777—1811) தலைசிறந்த ஜெர்மன் நாடகாசிரியர்களில் ஒருவர். வீரகாவிய இலக்கியப் படைப்பாளர்கள் கையாண்ட பொருள்களுக்கும், க்ளோஸ்த் கையாண்ட பொருள்களுக்கும் பெருமளவில் ஒற்றுமை உண்டு. ஆனால் ஷான் பௌலின் படைப்புகளைப் போலவே, க்ளோஸ்தின் படைப்புகளும் தனித்தன்மை வாய்ந்தவை. க்ளோஸ்த் மிகக் கண்டிப்பான கட்டுப்பாடுகளைத் தாமே விரும்பி ஏற்றார். இவ்வாறு, தம் ஆற்றலுக்கு மீறிய கட்டுப்பாடுகளுக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டதால், அவர் வாழ்வில் பல சோதனைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன. தொடர்ந்து தோல்விகளின் பேரணி அவரைத் தாக்கியது. இராணுவ ஊழியம், ஆராய்ச்சிக் கல்வி, வேளாண்மை, அரசாங்கப் பதவி, பத்திரிகைத் தொழில், எதுவும் அவருக்கு முழு மன நிறைவு அளிக்கவில்லை. நோக்கில் தெளிவும் செயலில் துணிவும் கொள்ளவும், வாழ்வில் உறுதியான ஒரு பிடிப்பு கொள்ளவும், அவர் கொண்டிருந்த ஓயாத வேட்கை, அவர் எழுத்திலும் காணப்பட்டது. மனிதத் தெளிவு நோக்காற்றலைத் திறனுய்வு செய்த காண்ட் கருத்துக்களால் நம்பிக்கை இழந்த க்ளோஸ்த், மனிதனின் அகத்தின் அடித்தளத்தில் ஆழ்ந்த உணர்வுகளே மனிதனுக்குப் பாதுகாப்பு அளிக்குமென்று நம்பினார். வாழ்க்கை மீது மனிதனுக்குள்ள உரிமைகளையும், அவனுடைய உள்ளக் கிளர்ச்சிகளின் வெற்றியையும், மட்டுமல்லாமல், முரண்பாடு நிறைந்த நேரடி நிலைமையுடன் அவன் மோதி, மனம் முறிந்து, அழிவு நோக்கிச் செல்வதையும், அவர் தம் நாடகங்களிலும் கதைகளிலும் சித்திரித்தார். 'ஆம்ப்ரிபித்ரியோன்' (1807), 'பென்தெசீலியா,' (1808), 'ஹோம்பர்க் இளவரசர்,' (1811) ஆகியவை அவருடைய நாடகங்களில் முக்கியமானவை.

மிகாயேல் கோல்ஹாஸ்

1808இல் எழுதிய 'மிகாயேல் கோல்ஹாஸ்' என்ற தமது கதையின் தொடக்கத்தில், 'தன் யுகத்தின் தலை சிறந்த நீதிமானாகவும், அதே சமயத்தில், மிகப் பயங்கரமான மனிதர்களில் ஒருவராகவும்,' கதாநாயகனை ஆசிரியர் சித்திரிக்கின்றார். உச்ச கட்டத்தை அடைந்திருந்த அவருடைய உறுதியான நியாய உணர்வு, அவனை ஒரு கொள்ளைக்காரனாகவும் கொலைகாரனாகவும் ஆக்குகின்றது. வரலாற்று அடிப்படையில், இக்கதை இக்கருத்தை விளக்குகிறது. கோல்ஹாஸ் என்ற குதிரை வியாபாரியிடமிருந்து, ஒரு நிலப் பிரபு சட்டத்தை மீறி, இரண்டு குதிரைகளைப் பறித்துக்கொள்கிறார்.

குதிரை வியாபாரி, வழக்கமான விதிமுறைகளின்படி நியாயம் பெற முயல்கிறார். ஆனால் அவனுக்குத் தன் வழக்கு பற்றி எடுத்துச்சொல்லும் வாய்ப்பே மறுக்கப்படுகின்றது. இறுதி மனு ஒன்று தாக்கல் செய்ய அவன் சென்று கொண்டிருக்கையில், அவனுடன் சென்ற அவன் மனைவி காயம்பட்டு உயிரிழக்கின்றாள். அதற்குப் பின்பு, அவன் சட்டத்தைத் தானே தன் கையில் எடுத்துக்கொள்ள முடிவு செய்கிறான். நாளுக்கு நாள் பெருகி வரும் ஒரு கூட்டத்துக்குத் தலைமை தாங்கி, அவன் நாடெல்லாம் சுற்றிச் சூறையாடி, கொலை, கலகம், தீ வைத்தல் ஆகியவற்றில் முனைகின்றான். கோல்ஹாஸைக் கண்டனம் செய்து ஒரு பிரகடனத்தைப் பொதுவிடத்தில் ஒட்டும்படி, மார்ட்டின் லூதர் ஆணையிடுவதும், பின்னர் அவனுடன் இதை அவர் விவாதிப்பதும், இக் கதையில் திருப்புமுனை மட்டுமல்ல உச்சகட்டமுமாகும். அதைச் சித்திரிக்கும் சில பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. நீதி வேண்டுமென ஆத்திரத்துடன் கோல்ஹாஸ் கோருவதற்குப் பதில் கூறுமுகத்தான், மன்னிப்பு என்ற கோட்பாட்டை அவன் முன் வைக்கின்றார் லூதர். அதே சமயத்தில் அவனுடைய பழிவாங்கும் செயல்களின் அத்து மீறிய போக்கையும், ஆணவச் செருக்குடன் சட்டத்தை எதிர்த்த போக்கையும் லூதர் வன்மையாகக் கண்டித்தார். இறுதியில் கோல்ஹாஸுக்கு நியாயம் கிடைக்கிறது. அவனிடமிருந்து பறிக்கப்பட்ட குதிரைகள் அவனிடம் மீண்டும் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவன் இழைத்த கொடுமைகளுக்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

லூதரின் பிரகடனம்

"கோல்ஹாஸ், நீதியின் போர்வாளே வீச உரிமை பெற்றிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நீ, என்ன செய்ய முனைந்துள்ளாய்? கண்மூடித்தனமான ஆத்திர வெறியில் சிக்கியுள்ள ஆணவப் பிறவியே! உன் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை, உடல் முழுவதும் அநீதியும் அக்கிரமமும் நிறைந்திருக்கின்றன. இந்த நாட்டின் அதிபதிக்கு நீ கீழ்ப்படிய வேண்டியவன். அற்ப சொத்து பற்றிய ஒரு விவகாரத்தில் உன் உரிமையை அவர் மறுத்து விட்டார் என்ற காரணத்தைச் சொல்லி, ஒழுக்கம் கெட்ட மனிதனான நீ, வாளும் தீப்பந்தமும் தாங்கிக் கலகம் செய்து, அந்த அதிபதி காப்பாற்றி வரும் அமைதியான சமூகத்திற்குள் பாலைவனத்திலிருந்து வரும் ஓநாய் போல், பாய்கின்றாய். பொய்யும் ஏமாற்றும் நிறைந்த கூற்றுக்களைக் கூறி மனிதர் மனத்தைக் குழப்பும் பாவியே, இறைவன் முன்பு நீ நிற்க வேண்டிய நாளன்று, அனைவருடைய இதயங்களிலும் ஊடுருவும் ஒளிவீசும் நாளன்று, நீ செய்த பாபங்களுடன் தப்பித்துக்கொள்வாய் என்று நினைக்கின்றாயா? நியாயம் பெற நீ செய்த ஒரு சில

முயற்சிகளின் தோல்விக்குப் பின்பு, நியாயம் நாடுவதையே கைவிட்டுக் கேவலமான பழிவாங்கும் வெறி பிடித்தாடும், ஆத்திரம் கொண்ட மிருகமே, உன் உரிமை உனக்கு மறுக்கப் பட்டுள்ளது என்று நீ எவ்வாறு கூறலாம்? கோர்ட்டுப் பணி யாளரும் காவலரும் கொண்டு வரப்படும் ஒரு கடிதத்தைப் பறித்துக் கொள்கின்றதும் கொடுக்க வேண்டிய ஒரு தகவலைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்துக்கொள்கிறதும்தான், உன் அரசாங்கமா? இறைவனுல் தள்ளி வைக்கப்பட்டுள்ள மனிதனே, உன் வழக்கு பற்றி உன் அரசாங்கத்துக்கே ஒன்றும் தெரியாது. நீ எந்த அதிபதியை எதிர்த்துப் போராடுகிறாயோ, அந்த அதிபதிக்கு உன் பெயரே தெரியாது. ஆகவே எதிர்காலத்தில், இறைவனின் அரியணை முன் நீ நின்று, உன் அதிபதியைக் குற்றம் சாட்ட முற்படும்போது, 'இறைவா, இவனுக்கு நான் அநீதி எதுவும் செய்யவில்லை. இதுபோல் ஓர் ஆள் இருந்ததே எனக்குத் தெரியாது,' என்று சிறிதும் தயக்கமின்றி அவர் கூற முடியும். நீ வீசும் வாள், இரத்த வெறியின், அழிவின், சின்னம். நீ ஒரு கலகக்காரன்; நீதியின் உறைவிடமான இறைவனின் போர் வீரனல்ல. இந்த உலகில் உனக்குக் காத்து நிற்பது தூக்கு மேடை. உன் கொடுமைகளுக்காகவும், தெய்வ பக்தியற்ற போக்குக்காகவும், இனி வரவிருக்கும் வாழ்வில் உனக்குக் காத் திருப்பது, முடிவற்ற நாசம்தான்.

விட்டன்பர்க்.

மார்ட்டின் லூதர்.

* * * *

அவன் உட்கார்ந்தபோது, லூதர் கேட்டார்: 'உனக்கு என்ன வேண்டும்?' கோல்ஹாஸ் பதில் கூறினன்: "நான் நேர்மை யற்றவன் என்ற உங்கள் எண்ணத்தை மாற்ற விரும்புகிறேன். என் வழக்கு பற்றி என் அரசாங்கத்திற்கு எதுவுமே தெரியாது என்று நீங்கள் உங்கள் பிரகடனத்தில் கூறியிருக்கிறீர்கள். நான் பாதுகாப்பாய்ப் போய்த் திரும்பிவர, உத்தரவாதத்துக்கு ஏற் பாடு செய்யுங்கள். நான் டிரெஸ்டனுக்குப் போய், என் வழக்கை எடுத்து உரைக்கத் தயார்." இந்தச் சொற்களால் மனக்குழப்ப மும், அதே சமயத்தில் மன அமைதியும் பெற்ற லூதர் கூவினர்: 'ஒழுக்கம் கெட்ட பயங்கர மனிதனே! ஏதேச்சதிகார சட்டத் தீர்ப்புக்களை ஒட்டி, ட்ரோங்கா பிரபுவைத் தாக்கவும், அவர் கோட்டையில் இல்லாததால், அவருக்கு ஆதரவளித்த சமூகத் தையே வாளாலும் நெருப்பாலும் தாக்கிச் சூறையாடவும், உனக்கு உரிமை தந்தது யார்?" கோல்ஹாஸ் பதிலளித்தான்: "தொழுகைக்குரிய ஐயா, இந்த நிமிடத்திலிருந்து அந்த

உரிமையை எனக்கு எவரும் அளிக்கமுடியாது. டிரெஸ்டனி லிருந்து எனக்குக் கிடைத்த ஒரு செய்தி என்னை ஏமாற்றித் தவருன வழியில் அழைத்துச் சென்றது. சமூகத்திலிருந்து என்னை உதறி விலக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டவுடன்—அத் தகைய உறுதிமொழியை நீங்கள் எனக்கு இப்பொழுது அளித் துள்ளீர்கள்—நான் சமூகத்துக்கு எதிராக நடத்தும் போர், தவரு கவும் கொடுமையாகவும் ஆகிவிட்டது." "உதறி விலக்குவதா? உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? நீ வாழ்ந்து கொண்டிருந்த நாட்டின் சமுதாயத்திலிருந்து உன்னை யார் விலக்கியிருக்க முடியும்? அரசுகள் வரலாறு முழுவதையும் எடுத்துக்கொண்டால், ஒருவராவது இதுபோல் விலக்கி வைக்கப் பட்டதுண்டா?" என்று லூதர் கேட்டார். தம் கைமுட்டியை இறுக்கிக்கொண்டே, கோல்ஹாஸ் கூறினுன் : "சட்டத்தின் பாது காப்பு எவனுக்கு மறுக்கப்படுகின்றதோ, அவன்தான் விலக்கப் பட்டவன் என்று நான் கூறுகிறேன். என் சமாதானமான தொழில் தழைப்பதற்கு, இந்தப் பாதுகாப்பு எனக்குத் தேவை. அதற்காகத்தான், நான் இதுவரை ஈட்டியுள்ளதைத் திரட்டிக் கொண்டு நான் இந்த சமூகத்திடம் ஓடிவந்து அதன் பாதுகாப் பைக் கோரியுள்ளேன். அதை எனக்கு மறுப்பவன், என்னைப் பாலேவனத்துக் கொடிய விலங்குகளிடம் விரட்டி அடிக்கின்றன் என்னைக் காப்பாற்றக்கூடிய தண்டத்தை அவன்தான் என் கையிலே தருகின்றன்." லூதர் கேட்டார் : "சட்டத்தின் பாது காப்பை யார் உனக்கு மறுத்துள்ளது? நீ எந்தப் பிரபுவுக்குப் புகார் செய்து கொண்டாயோ, அந்த பிரபுக்கு உன் புகார் பற்றித் தெரியவே தெரியாது என்று நான் உனக்கு எழுத வில்லையா? அவருக்குத் தெரியாமலே, அரசாங்க ஊழியர்கள் வழக்குகளைத் தடுத்து நிறுத்தி விடுவார்களானால், அல்லது அவருக்குத் தெரியாமல், அவர் புனிதப் பெயரைக் களங்கப் படுத்துவார்களானால், அத்தகைய ஊழியர்களைத் தேர்ந்தெடுத்த தற்காக இறைவனைத் தவிர வேறு யார் அவரைக் குறை கூற முடியும்? இறைவனின் சாபத்துக்கு ஆளாகியுள்ள பயங்கரப் பாபியான உனக்கு அப் பிரபுவைப் பற்றித் தீர்ப்பு கூற அருகதை உண்டா?". கோல்ஹாஸ் பதில் கூறினுன் : "நல்லது. நாட் டின் அதிபர் என்னை விலக்கவில்லை யென்றால், நானும் அவர் ஆதரித்துப் பாதுகாக்கும் சமூகத்திற்குத் திரும்பி வருவேன். நான் மீண்டும் கூறுகிறேன். டிரெஸ்டனுக்குப் பத்திரமாகப் போய்வர நீங்கள் எனக்கு உரிமை வாங்கித் தாருங்கள். அப்படி யானால், லூட்ஸென் கோட்டையில் நான் திரட்டியுள்ள கூட்டத் தைக் கலைத்துவிடத் தயார். எந்தப் புகாரை ஏற்றுக்கொள்ள மறுத்து, என்னை விரட்டினர்களோ, அந்தப் புகாரை மீண்டும் நீதி

மன்றம் முன் இப்பொழுது தாக்கல் செய்யத் தயார்.'' தம் மேசை மேல் அலங்கோலமாகக் கிடந்த தாள்களை வீசிவிட்டு, சுளித்த முகத்துடன், லூதர் மௌனமாக இருந்தார். அரசின் அதிகாரத்தை எதிர்த்துப் போராடிய இந்த இளைஞன் பெற்றிருந்த செல்வாக்கைக் கண்டு லூதருக்கு எரிச்சல் ஏற்பட்டிருந்தது. கோல்ஹாஸென்ப்ருக்கிலிருந்து பிரபுவுக்குக் கோல்ஹாஸ் அனுப்பியிருந்த அதிகார தாக்கீது பற்றி எண்ணிக் கொண்டே லூதர் கேட்டார்: ''அப்படியானால், டிரெஸ்டனில் உள்ள நீதி மன்றத்திலிருந்து நீ என்ன எதிர்பார்க்கின்றாய்?'' ''சட்டப்படி நிலப் பிரபுவைத் தண்டிக்க வேண்டும். குதிரைகளை மீட்டுத் தர வேண்டும். நாங்கள் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதால், மூஹ்ல்பெர்க் அருகே, நானும் என்னுடைய பணியாள் ஹெர்லேயும் கீழே விழுந்ததால் அடைந்த காயங்களுக்கு நட்ட ஈடு வேண்டும்'' என்று கோல்ஹாஸ் பதில் கூறினான். ''காயங்களுக்கு நட்ட ஈடா? யூதர்களிடமிருந்தும் கிறிஸ்துவர்களிடமிருந்தும், கடன் பத்திரங்களும் நாணய மாற்றுத் தாக்கீதுகளும் கொடுத்து, ஆயிரக் கணக்கில் நீ பணம் திரட்டி உள்ளாயே, உன்னுடைய சுயநலப் பழிவாங்கும் திட்டங்களுக்காக. அவர்களுடைய பணத்தையும் நீ திருப்பிக் கொடுப்பாயா?'' என்று லூதர் கேட்டார். ''வீடு வாசல், எனக்கிருந்த சொத்து, இவற்றை நான் திருப்பிக் கேட்கவில்லை. என் மனைவியின் ஈமச் சடங்குகளுக்கான செலவையும் நான் திருப்பிக் கேட்கவில்லை. ஹெர்லேக்கு மருத்துவச் செலவு என்ன வாயிற்று, டிரோங்கா கோட்டையில் அவனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டவை எவை, என்பது பற்றிய விவரங்களை ஹெர்லேயின் வயோதிக அன்னை தருவாள். குதிரைகளை விற்பனை செய்யாததால் எனக்கு ஏற்பட்ட நட்டத்தை அரசாங்கம் நிபுணர்களைக் கொண்டு நிர்ணயம் செய்யலாம்'' என்று கோல்ஹாஸ் கூறினான். ''வெறிபிடித்துப் பிதற்றும் வீணனே! நிலப் பிரபுவை நீ உன் கொடிய வாள்கொண்டு, மிகப் பயங்கரமான முறையில் பழிவாங்கி விட்டாய் – அதன் பின்னும், வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டு அவருக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று ஏன் நீ சாதிக்கின்றாய்? அதில் அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டாலும், நீ ஏற்கெனவே பழிவாங்கியுள்ளதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அத் தண்டனை மிக அற்பமானதாகத்தானே இருக்கும்'' என்று லூத்தர் கேட்டார். அப்பொழுது ஒரு கண்ணீர்த் தாரை, கன்னத்தில் சிந்தக் கோல்ஹாஸ் பதில் கூறினான்: ''வணக்கத்திற்குரிய ஐயா, நான் என் மனைவியைப் பறி கொடுத்துள்ளேன். ஒரு அநியாயக் குறிக்கோளுக்காக, அவள் பலியாகவில்லை என்பதை உலகுக்கு நான் உணர்த்த விரும்புகிறேன். ஆகவே இதில் மட்டும் என் விருப்பத்துக்கு நீங்கள் பணியுங்கள். நீதி மன்றம்

தீர்ப்பு கூறட்டும். சச்சரவில் உள்ள மற்றெல்லா விவகாரங்களிலும், நான் உங்களுக்குக் கீழ்ப் படிகின்றேன்."

கடிதங்கள்

தம்முடைய நாடகங்களிலும் உரை நடையிலும், தம் சொந்த வாழ்வுப் பிரச்னைகளிலேயே க்ளோஸ்த் ஈடுபட்டிருந்தார் என்பதை அவர் கடிதங்கள் காட்டுகின்றன. அச் சொந்தப் பிரச்னைகளை அவர் சமாளிக்க முடியாமல் தான், இறுதியில் தற்கொலைக்கு உந்தப் பெற்றார். 1803 அக்டோபர் 26இல் அவர் தம் சகோதரிக்கு எழுதிய கடிதத்தில், தற்கொலை முயற்சி செய்துகொள்ளப் போவதைக் குறிப்பாக அறிவிக்கின்றார். அரசாங்கப் பணியில் திருப்தி காணாத க்ளோஸ்த், 'ராபர்ட் குவிஸ்கார்ட்,' என்ற தம் நாடகத்தில், துன்பவியல் நாடகக் கலையின் உச்ச நிலையை எய்த விரும்பினார். ஆனால் தாம் எதிர்பார்த்த உயர்ந்த தரத்தை நாடகம் எய்தவில்லை. நாடகத்தின் கையெழுத்துப் படியை அவர் பாரிசில் கொளுத்தி விட்டார். இங்கிலாந்தைப் படையெடுக்க வேண்டுமென்ற தங்கள் திட்டத்தைப் பிரெஞ்சு மக்கள் கைவிட்டதால், தம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த எண்ணத்தைக் க்ளெயிஸ்த் செயல்படுத்த முடியவில்லை. அவர் உடல் நலம் கெட்டு, நீண்டகாலம் நோய்வாய்ப் பட்டிருந்தார்.

அவர் தம் சகோதரிக்கு எழுதிய மற்றொரு கடிதம், 1811 நவம்பர் 21ஆம் தேதி, தற்கொலை செய்துகொண்ட நாளன்று எழுதப்பட்ட கடிதம். "உலகில் எனக்கு யாரும் உதவமுடியாததுதான் உண்மை," என்று தம் வாழ்க்கையின் உட்பொருளைத் தாமே ஒரு சூத்திரத்தில் அக்கடிதத்தில் விளக்குகிறார். "எந்த ஒரு மனிதனும் வாழ்ந்த வாழ்க்கையைவிட, வேதனைக் கொடுமைமிக்க வாழ்க்கை" தன் வாழ்க்கை என்று இன்னோர் இறுதிக் கடிதத்தில் அவர் கூறுகிறார். ஆயினும் அவர் முடிவு, ஏக்கத்தில் பிறந்த முடிவல்ல; அமைதியான, நிறைவான, நம்பிக்கையில் பிறந்ததே.

உல்ரீக்கெ ∴பன் க்ளோஸ்த்துக்கு

என் அன்புள்ள உல்ரீக்கெ, ('மன உறுதி பெற்ற பெண்ணைப் இரு' என்று எழுதி அது அடிக்கப்பட்டிருந்தது.)

நான் இப்பொழுது உனக்கு எழுதப்போவது, உன் உயிருக்கே ஆபத்து உண்டாக்கலாம். ஆயினும் அதை நான் செய்து தீர வேண்டும்; செய்தே தீரவேண்டும். நான் எழுதியிருந்தவரை என் நூலைப் பாரிசில் படித்துப் பார்த்து, அதை நிராகரித்துக் கொளுத்திவிட்டேன். உலக வாழ்வின் பரிசுகளில் தகுதி பெறுவதை, புகழை, எனக்குத் தெய்வம் மறுக்கின்றது. ஏமாற்றம் பிடித்த

குழந்தைபோல, மற்றப் பரிசுகளோ, அவன் பின் நான் விட்டு எறிகின்றேன். உன் நாட்டிற்கு அருகதை உடையவனுய் நான் வாழ முடியவில்லை. அந்த நட்பு இல்லாமல் என்னுல் வாழவும் முடியாது. ஆகவே நான் மரணத்தை நோக்கிப் பாய்கின்றேன். மாசற்ற பெண்மணியே, நீ அமைதியாய் இரு. போர்க்களத்தின் எழில்மிக்க மரணமே என்னுடைய மரணம். இந்த நாட்டின் தலை நகரத்தை விட்டுச்சென்று, நாட்டின் வடக்குக் கடலோரத்திற்கு வந்துள்ளேன். பிரெஞ்சுப் பட்டாளத்தில் நான் சேரப்போகி றேன். பட்டாளம் விரைவில் இங்கிலாந்து நோக்கிப் புறப்படும். எங்கள் அணிவகுப்பும் ஊழிக் காலம் கடல் அலைகளில் காத்து நிற்கிறது. முடிவற்ற மாண்புமிக்க சமாதி எய்தும் நிலையை நான் ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கிறேன். என் அன்புக்குரிய சோதரி நீயே என் இறுதி நினைப்பாய் இருப்பாய்.

ஹெய்ன்ரிஷ் ∴பன் க்ளோயிஸ்த்

ஸெயின்ட் ஓமர்; 26, அக்டோபர், 1803.

உல்ரீக்கெ ∴பன் க்ளோஸ்த்துக்கு

ஓடர் மேல் உள்ள பிராங்க்பர்ட்டில், மதிப்புமிக்க மிஸ் உல்ரீக்கெ ∴பன் க்ளோஸ்த்.

மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் நான் உள்ளபோதிலும், உலகம் முழுவதுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக, என் பேரன் பிற்குரிய உல்ரீக்கெ, உன்னுடனும், நான் மனத்தைச் சமாதானம் செய்து கொள்ளாமல், நான் மரணம் அடையமுடியாது. க்ளோஸ்த் குடும்பத்துக்கு எழுதிய கடிதத்தில் உள்ள கடுமை யான சொற்களோ நான் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்பு கிறேன். என்னைக் காப்பாற்ற, ஒரு சகோதரியால் செய்யக் கூடியது அனைத்தையும் மட்டுமல்ல, ஒரு மனிதப் பிறவியால் செய்யக்கூடியது அனைத்தையும், நீ செய்துள்ளாய். உலகில் எனக்கு யாரும் உதவமுடியாது என்பதுதான் உண்மை. ஆகவே நான் விடைபெற்றுக்கொள்கிறேன். எனக்குக் கிட்டுவதுபோன்ற ஒரு மரணம் உனக்குக் கிட்டி, எனக்குக் கிட்டிய மகிழ்ச்சியில், சொல்லிமாளாத பேரின்பத்தில் பாதியாகிலும், உனக்குக் கிட்ட வேண்டுமென்பதுதான், நான் உனக்கு அளிக்கக்கூடிய மனப் பூர்வமான, விசுவாசமான, வாழ்த்து.

உன்

ஹெய்ன்ரிஷ்

போட்ஸ்டாம் அருகே ஸ்டிம்மிங்க்ஸ்

என் மரண நாளன்று காலை (21—11—1811)

லோகார்ஞேவின் பிச்சைக்காரி

'லோகார்ஞேவின் பிச்சைக்காரி' ஒன்ற கதை, க்ளோஸ்தின் கதை களில் முக்கிய இடம்பெறுகிறது. அதற்கு, அதன் சுருக்கம் ஒரு காரணமாகும். இக் கதையில் சித்திரிக்கப்பட்டுள்ள சம்பவம், ஒரு சிறிய குற்றத்தையும் அதன் பயங்கர விளைவுகளையும் அடிப்படை யாகக் கொண்டது. இச் சம்பவம் இயல்புக்கு மாறுனது; விபரீத மானது. நிகழ்ச்சிப் போக்கும் நடைமுறைக்கு ஒவ்வாததாய்க் கற்பனையில் மட்டுமே நடக்கக்கூடியதாகத் தோன்றுகிறது. வீர காவிய இலக்கியப் பாணியில் கதை எழுதப்பட்டுள்ளது, இந்த உணர்வை மேலும் உறுதிப்படுத்துகிறது. இந்த விசித்திரமான இயல்புகளுக்கு விளக்கம் எதுவும் இருக்கமுடியாது. அவை இருளடைந்தனவாகவும், துருவிப்பார்க்க முடியாதனவாகவும், அமைந்துள்ளன.

வடக்கு இத்தாலியில், ஆல்ப்ஸ் மலை அடிவாரத்தில், லோகார்ஞே அருகிலே, ஒரு கோமகனுக்குச் சொந்தமான பழைய கோட்டை மாளிகை ஒன்று இருந்தது. ஸையின்ட் கோட்ஹார்டிலிருந்து ஒருவர் வந்தால், இக்கோட்டை இப் பொழுது பாழடைந்து கல்லும் காரையுமாய்க் கிடப்பதைப் பார்க் கலாம். முன்பு அந்தக் கோட்டையில் உயர்ந்த, விசாலமான, அறைகள் பல இருந்தன. ஒருநாள், பிச்சை கேட்டுக் கோட்டை வாயிலில் நின்ற நோய்வாய்ப்பட்ட கிழவி ஒருத்திமீது, வீட்டுச் சீமாட்டி இரக்கப்பட்டு, ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று, வைக்கோல் படுக்கை விரித்து, அக்கிழவியைப் படுக்கவைத் தாளாம். வேட்டையிலிருந்து திரும்பிய கோமகன், தம் துப்பாக்கியை வைப்பதற்கு வழக்கம்போல் அந்த அறைக்குள் சென்றபோது, கிழவியைக் கண்டு கோபம் கொண்டு, படுக்கையைவிட்டு எழுந்து, அடுப்புக்குப் பின்னல் போய்க் கிடக்குமாறு, உத்தரவிட்டார். கிழவி எழுந்தபோது, வழவழ வென்றிருந்த தரையில் அவளுடைய ஊன்றுகோல் பிடிப்பு கொள்ளாமல் நழுவியதால், அவள் கீழே விழுந்துவிட்டாள். அவளுடைய முதுகில் பலமான அடிபட்டது. மிகுந்த சிரமத்துடன் தான், அவளால் எழுந்து, அறையைத் தாண்டி, அடுப்புவரை நடக்கமுடிந்தது. அடுப்புக்குப் பின்புறம், வலியால் முணகி, முணுமுணுத்துக்கொண்டே, விழுந்த அக்கிழவி அங்கேயே இறந்துவிட்டாள்.

பல ஆண்டுகளுக்குப் பின், போரினாலும் மோசமான அறு வடைகளினாலும், நெருக்கடியான பொருளாதார நிலை அக் கோம

கனே வருத்தியபோது, அழகான இடத்தில் அமைந்திருந்த காரணத்திற்காக கோட்டை மாளிகையை வாங்க விரும்பிய, ப்ளாரென்ஸ் நாட்டு வீரர் ஒருவர் அங்கு வந்தார். அந்த வியாபாரப் பேரத்தை முடித்து விடுவதில் கோமகனுக்கு மிகுந்த ஆர்வம். ஆகவே அழகாகவும், நேர்த்தியாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்த அறையில், அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோமகன் தம் மனைவியிடம் கூறினர். ஆனால் நடு நிசியில் அந்த வீரர் வெளிறிய முகத்துடனும் திகிலுடனும், கீழே வந்து, தம் அறையில் ஒரு பிசாசு இருக்கிறதென்று தான் உறுதியாகக் கூற முடியுமென்றும், கண்ணுக்குப் புலனாகாத ஒரு பொருள் ஒரு மூலையில் வைக்கோல் படுக்கையிலிருந்து எழுந்து, காலடி ஓசை தெளிவாகக் கேட்க, மெதுவாகத் தள்ளாடி, அறையைக் கடந்து சென்று, முனகி முணுமுணுத்துக்கொண்டு, அடுப்புக்குப் பின் விழுந்ததுபோல் தோன்றியதென்றும் அவர் கூறியபோது, கோமகனும் சீமாட்டியும் அதிர்ச்சி அடைந்தனர்.

இச் சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. மாளிகையை வாங்க விரும்பியவர்கள் பலர், இதைக் கேள்விப்பட்டு அஞ்சிப் பின் வாங்கினர். இது கோமகனுக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கியது. நடு நிசி நேரத்தில், அந்த அறையில் ஒரு பிசாசு நடமாடுகிறது என்ற ஒரு வதந்தியைத் தம் பணியாளரே, ஆதாரமின்றியும் அவசியமின்றியும் பரப்பிக்கொண்டிருந்ததால், அந்த வதந்திக்கு நிச்சயமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் தாமே மறு இரவு நேரில் சென்று பார்வையிடக் கோமகன் முடிவு செய்தார். அவ்வாறே அந்தி வேளை வந்தபோது, அந்த அறையில் தமது படுக்கையைப் போடச்செய்து, உறங்காமல், நடு நிசி வேளைக்கு அவர் காத்திருந்தார். நடு நிசி வேளையில், விளங்க முடியாத அந்த ஓசை தமக்குப் பின்னால் ஏதோ ஒன்று, சலசலப்பு ஓசையுடன் வைக்கோலிலிருந்து எழுந்து அறையைத் தாண்டிச் சென்று, முணுக்கொண்டே அடுப்புக்குப்பின் விழுந்த ஓசையும், பின்பு மரணத்தின் ஓலமும் — அவர் செவியில் தெளிவாக விழுந்ததும் அவர் மிகுந்த அதிர்ச்சி அடைந்தார். மறுநாள் காலை அவர் கீழே இறங்கி வந்தபோது, என்ன நடந்தது என்று சீமாட்டி கேட்டாள். கோமகன் சற்று முற்றும் பயத்துடன் பார்த்துக் கதவைத் தாழிட்டுக் கொண்டு, பிசாசைப் பற்றிய செய்தி உண்மை தான் என்று கூறினர். அதைக் கேட்ட சீமாட்டி பெரிதும் கலவரமடைந்தவளாய், வேறு எவரிடமும் இதைப் பற்றி மூச்சு விடுவதற்கு முன், தன்னையும் வைத்துக்கொண்டு, இன்னொரு முறை பதட்டப்படாமல், பரிசோதனை நடத்திப் பார்க்குமாறு

யோசனை கூறினாள். மறு இரவு, அவர்களும், அவர்கள் அழைத்துச் சென்ற ஒரு விசுவாசமான பணியாளும், அதே பிசாசு ஒலிகளைக் கேட்டனர். எப்படியாவது கோட்டையை விற்றுவிட வேண்டுமென்ற கவலையில், தங்கள் பணியாள் முன்னிலையில் அச்சத்தை அடக்கிக் கொண்டு, அந்த நிகழ்ச்சிக்குச் சாதாரணமான, பொருத்தமான காரணம் ஒன்று இருந்தே தீருமென்றும், அது விரைவில் விளங்குமென்றும், அவர்கள் தைரியமாகக் கூறிக் கொண்டனர். மூன்றாம் நாள் மாலை, இருவரும், துடித்து நடுங்கிய நெஞ்சங்களுடன், இப்பிரச்னைக்கு எவ்வாறாகிலும் ஒரு முடிவு காணவேண்டுமென்ற கவலையுடன், விருந்தாளி அறைக்கு ஏறிச் சென்றபோது, யாரோ அவிழ்த்து விட்டிருந்த வீட்டு நாய் அந்த அறையின் வாசலில் வந்து நின்றது. மேசையில் இரு மெழுகு வத்திகளை ஏற்றி வைத்துக்கொண்டு, சீமாட்டி தன் உடைகளைக் களையாமல் உட்கார்ந்திருந்தாள். தம் அருகேயிருந்த அலமாரியிலிருந்து கோமகன் வாளையும் துப்பாக்கிகளையும் எடுத்துத் தயாராக வைத்திருந்தார். இரவு பதினொரு மணிக்கு இருவரும் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு, பேச்சில் பொழுதைப் போக்க முயன்று வந்தனர். அதற்கிடையில் நாய், அறையின் நடுவே சுருண்டு படுத்து உறங்கியது. நடுநிசி வேளையில் மீண்டும் அந்தப் பயங்கர ஓசை கேட்டது. யார் கண்ணுக்கும் புலப்படாத ஓர் உருவம், மூலையில் ஊன்று கோலுடன் எழுந்தது. வைக் கோலின் சலசலப்பு கேட்டது. அறையைத் தாண்டி அந்த உருவம் எடுத்து வைக்கும் காலடி ஓசை கேட்டவுடன், நாய் விழித்துக் கொண்டு, காதுகளை நிமிர்த்திக்கொண்டே, குரைத்துக்கொண்டு எழுந்து நின்றது. யாரோ ஓர் ஆள் தன்னை நோக்கி வருவது போல், அந்த நாய் அடுப்பருகே பின் வாங்கியது. இதைப் பார்த்த வுடன் சீமாட்டி, திகிலில் தன் முடியெல்லாம் விறைத்து நிற்க, அறையை விட்டு வெளியே ஓடினாள். கோமகனை 'யாரங்கே', என்று கூவிக்கொண்டே வாளை உருவி நின்று, தம் கேள்விக்கு எவரும் பதில் கூறுததால், வெறிபிடித்தவர்போல், இங்குமங்கும் வாளை வீசிக் காற்றைச் சீவினார். சீமாட்டியோ, கோச்சு வண்டியைப் பூட்டச் சொல்லி, அந்த நிமிடமே பட்டணத்திற்கு ஓடிவிடச் சித்தமானாள். ஆனால் ஒரு சில பொருட்களைத் திரட்டிக் கொண்டு, கோச்சில் ஏறிக் கோட்டை வாயிலை விட்டு வெளியேறு முன்பே, கோட்டை மாளிகை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தீப் பிடித்து எரிவதை அவள் கண்டாள். அச்சமும் திகிலும் தன்னை ஆட்கொள்ள, வாழ்விலே சலிப்புக் கொண்ட கோமகன், ஒரு மெழுகு வத்தியை எடுத்து, மரப் பலகைகள் பொருத்தப்பட்டிருந்த அறையின் நான்கு பக்கங்களிலும் தீ வைத்திருந்தார். சீமாட்டி பதறிப் போய்க், கோமகனைக் காப்பாற்ற ஆட்களை

உள்ளே அனுப்பினள். ஆனல் அவள் முயற்சிகள் வீணுயின. மிகப் பயங்கரமான, பரிதாபமான முறையில், கோமகன் அழிந்து விட்டார். அவருடைய நண்பர்கள் திரட்டிய அவருடைய வெள்ளி எலும்புகள், இப்பொழுது கூட, லொகார்னே பிச்சைக்காரியை அவர் எந்த அறையில் விரட்டினரோ, அந்த அறையின் மூலையில் தான் கிடக்கின்றன.

கார்ல் பிலிப் மோரிட்ஸ்

ஆந்தோண் ரைஸ(ர்)

மெய்யியல் அறிஞராகவும் அழகியல் வல்லுநராகவும் விளங்கிய கார்ல் பிலிப் மோரிட்ஸ் (1756—1793), 'ஆந்தோண் ரைஸ(ர்) (1785—1790) என்ற புதினத்துடன் எழுத்தாளராகப் புகழ் பெற்றார். சொந்த வரலாற்று அம்சங்கள் பல நிறைந்த அப்புதினம் கெதெயின் 'வில்ஹெல்ம் மைஸ்த(ர்)' போல் இதுவும் ஒரு கல்வி நூல் எனலாம்; ஆனால் ஓர் இளைஞனின் வளர்ச்சியை அது வேறு விதமாகச் சித்திரிக்கின்றது. ஆற்றல் மிக்க ஆந்தோண் ரைஸ(ர்), தன் பெற்றோர்களின் உதவியைப் பெறவில்லை. உடலுழைப்பு செய்யவேண்டிய ஒரு தொழிலில் அவன் சிற்றுளாகப் பயிற்சி பெற்று அவமானத்துக்கு உள்ளாக வேண்டியிருந்தது. அவன் தன் தந்தையின் முடிவை மீறி, உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து, தான் விரும்பிய கல்வியைப் பெற பல பொருளாதாரத் தடைகளையும் எதிர்ப்புகளையும் மீறி ஓயாது போராடவேண்டியிருந்தது. முடிவில், சலிப்பு தரும் இப் போராட்டத்தைக் கைவிட்டு, நாடக மேடைக்குத் தப்பி ஓடி, நடிகனாக நிறைவு பெற முயல்கிறான். இங்கும் தோல்வியும் ஏமாற்றங்களும் தான் அவனைத் தொடர்கின்றன. இவ்வாறு அந்த இளைஞனின் ஒழுக்கத்தை உருவாக்குவதில், சூழ்நிலை அவனோடு இணைந்து இசைவு கண்டு உறவாடி ஆதரவாய் அமையவில்லை. உண்மையில் சமூகமும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், அவனிடம் காட்டிய அனுதாபமற்ற தன்மையும், அவனைப் பொருட்படுத்தாது இருந்த மெத்தனப் போக்கும், அவன் வளர்ச்சிக்குத் தடையாகவும் முட்டுக்கட்டையாகவும் இருந்தன. ஆனால் ஆந்தோண் ரைஸரின் நடத்தையும் முழுதும் போற்றத்தக்கதாக அமையவில்லை என்பதையும் கோணல்களும் நெரிசல்களும் நிறைந்திருந்தது என்பதையும் கதையே விளக்குகிறது. ஆந்தோண் ஒழுக்கத்தை ஆசிரியர் திறனாய்வு செய்வது, இன்றைய முற்போக்கான ஆராய்ச்சித் தரங்களுக்கு ஏற்றதாய் அமைந்துள்ளது வியப்பிற்குரியது. புதினம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே எழுதப்பட்டதாயினும், அது உண்மையில் 19-வது நூற்றாண்டுக்கு உரிய படைப்பேயாகும். தொப்பிக்கடை முதலாளி லோஹன்ஷ்டைன் என்பவரிடம் தொழில் பழகும் சிற்றுளாக ஆந்தோண் பயிற்சி தொடங்கியதைச் சித்திரிக்கிறது இங்கு தரப்பட்டுள்ள பகுதி.

ப்ரௌன்ஷ்வைக்கிலிருந்த தொப்பிக்கடை முதலாளி, ஆந்தோணிடம் அனுதாபமான அக்கறை காட்டுவாரென்றும், தன் குழந்தைகளில் ஒருவனாகவே அவனை நடத்துவாரென்றும், கணக்கு எழுதுதல், எடுபிடி வேலை செய்தல் போன்ற எளிதான,

அவனுக்கேற்ற வேலைகளையே அவன் செய்யவேண்டியிருக்கு மென்றும், மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு வேலையில் நிச்சய மாகும்வரை, அவன் பள்ளிக்கூடம் செல்லலாமென்றும், அதற்குப் பின்பு தான் செய்ய விரும்புவதைத் தேர்ந்தெடுக்கலாமென்றும் கூறப்பட்டது. இச் செய்தியும் குறிப்பாகப் பள்ளியைப் பற்றிய கடைசிச் செய்தியும், ஆந்தோணுக்கு மிகவும் பிடித்திருந்தது. பள்ளியில் படிக்க மட்டும்தான் வழிகண்டு விட்டால், படிப்பில் முன்னேறத் தான் தவற முடியாதென்றும், வாழ்க்கையில் உயர வழிகளும் வாய்ப்புகளும் தாமாக அவனுக்குக் கிட்டுமென்று அவன் நம்பினான். தொப்பிக் கடை முதலாளி லோஹன்ஷ்டைனுக்குத் தன் தந்தை எழுதிய ஒரு கடிதத்துடன் தானும் ஒரு கடிதம் எழுதினான். தன் முதலாளி மீது அவனுக்கு ஏற்கெனவே அதிகப் பிரியமும் மதிப்பும் உண்டாகியிருந்தன. அவருடன்தான் இன்பமாகக் கழிக்கப்போகும் நாட்களை எண்ணி, அவன் பெரிதும் மகிழ்ந்தான்.

வேறு ஊருக்குத் தான் போகப் போவதைப் பற்றித்தான் அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! ஹேனோவரில் வாழ்க்கையும், அதே தெருக்களையும் வீடுகளையும் ஓயாது பார்த்துச் சலிப்படைந்ததும் அவனுக்குத் தாங்க முடியாததாய் இருந்தது. புதுத் தூபிகள், வாயில்கள், கோட்டை மதில்கள், கோட்டை மாளிகைகள் ஆகியவை பற்றிய காட்சிகள் அவன் மனக்கண்முன் எழுந்தன. ஒரு சித்திரம் தோன்றியதும், இன்னொரு புதுச் சித்திரம் தோன்றி முந்தியதை விரட்டியது. அவன் நிலை கொள்ளாமல், பதட்டமாய்ப் புறப்படும் நேரத்திற்கு இன்னும் எத்தனை மணி நேரம், எத்தனை நிமிடங்கள் என்று பொறுமையிழந்து எண்ணிக் கொண்டிருந்தான்.

இறுதியில், அவன் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த நாள் வந்தது. ஆந்தோண் தன் அன்னையிடமிருந்தும், தன் இரு சகோதரர்களிடமிருந்தும் விடைபெற்றான். அவர்களில் மூத்தவன் ஐந்து வயதுக் கிறிஸ்டியன். இளையவன் சைமனுக்கு ஒரு வயது கூட நிரம்பவில்லை. சைமன் என்று, தொப்பிக்கடை முதலாளி லோபன்ஷ்டைன் பெயரே, அவனுக்கு இடப்பட்டிருந்தது.

அவன் தந்தை அவனுடன் சென்றார். பாதி தூரம் நடந்து சென்றனர். பாதி தூரம் சவாரி செய்ய, அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

தன் வாழ்க்கையில் முதன் முறையாக, ஆந்தோண், இந்த நடை பயணத்தை ரசித்து வரவேற்றான். எதிர்காலத்தில், நடைபயணத்திற்கு அவனுக்குப் போதிய வாய்ப்புக்கள் மட்டுமல்ல, போதும்

போதும் என்று சொல்லுமளவுக்கு வாய்ப்புகள் கிட்டவிருந்தன. ப்ரௌன்ஷ்வைக்கை நெருங்கியதும், ஆர்வமும் பரபரப்பும் அதிக மாயிற்று. சிவப்புக் கவிகை மாடம் தாங்கிய பரிசுத்தர் ஆண்ட்ரூ வின் தூபி கம்பீரமாக நின்று வானை முட்டியது. மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. தொலைவில், கோட்டையின் உயர்மதிலின்மேல் காவல் வீரன் இங்கு மங்கும் நடந்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் எழுந்து மறைந்தன. தன் புரவலராக இருக்கப்போகும் முதலாளி எப்படி இருப்பார்? அவர் தோற்றம், வயது, நடை, அங்க அடையாளங்கள் என்ன? இறுதியில் கற்பனையில் அவரை வரைந்த சித்திரத்தின் மீதே அவன் அன்பு கொண்டுவிட்டான். குழந்தைப் பருவத்தில் அவன் ஒரு பழக்கத்தை மேற்கொண்டதுண்டு. ஆட்கள், அல்லது ஊர் களின் பெயர்களோக்கொண்டு அவன் அவற்றைப் பற்றிச் சில விசித்திரக் கற்பனைகள் செய்துகொள்வதுண்டு. அப்பெயர்களில் உயிரெழுத்தின் ஒலி, ஓங்கியோ, தாழ்ந்தோ இருந்தால், அதைக் கொண்டு அவற்றின் குணத்தை அவன் நிர்ணயித்துக்கொள் வான். அந்த அடிப்படையில், ஹேனேவர் என்பதன் ஒலியைக் கொண்டு, அவன் மிகச் சிறப்பான, கம்பீரமான, ஒரு காட்சியைக் கற்பனை செய்து கொண்டிருந்தான். அந்த நகரத்தைப் பார்க்கு முன்பே, உயரமான வீடுகளும் தூபிகளும், உற்சாகமான ஒளி மயமான தோற்றமும் கொண்ட நகரமாக அவன் அதைக் கற்பனை செய்திருந்தான். ப்ரௌன்ஸ்விக், பெரிய, ஆனால் இருள் நிறைந்த, நகரமாக, அவனுக்குத் தோன்றியது. பாரிஸ் என்ற பெயரின் ஒலியிலிருந்து, ஒளிமயமான வெள்ளோநிற வீடுகள் கொண்ட மிகப் பெரிய தொகுதியாக, அதைக் கற்பனை செய்திருந்தான்.

இது ஓரளவு இயல்பானதே. பெயரைத் தவிர வேறொன்றும் ஒருவருக்குத் தெரியாத நிலையில், மிகச் சிறிய அடையாளங்களோக் கொண்டு கூட, உள்ளம் ஒரு கற்பனையை உருவாக்கிக் கொள் கிறது. வேறு இயல்களோப் பற்றி அறியாத நிலையில், பெயரில் தஞ்சம் புகுந்து, அந்த ஒலிகள் கனமாகவோ, மென்மையாகவோ, நிறைவாகவோ, மெல்லியதாகவோ, உரத்ததாகவோ, தாழ்ந்த தாகவோ, தெளிவாகவோ, மங்கலாகவோ இருப்பதை வைத்துக் கொண்டு, அந்தப் பெயருக்கும் பொருளுக்கும் பொருத்தம் காணும்போது, சில சமயங்களில் அந்த ஊகம் தற்செயலாக உண்மையாக அமைந்து விடக்கூடும். லோபன்ஸ்டனின் என்ற பெயரைக் கேட்டதும், நேர்மையான ஜெர்மன் முகத்துடனும், திறந்த பார்வையுடனும், உயரமான தோற்றம் உள்ள உருவத்தை ஆந்தோண் கற்பனை செய்து கொண்டான். ஆனால் இம்முறையோ பெயர்ப் பொருத்த ஆராய்ச்சி அவனை அடியோடு ஏமாற்றி விட்டது.

இருள் சூழ்ந்த நேரத்தில், ஆந்தோணும் அவனுடைய தந்தையும், ஊர்வாயிலிலிருந்த பெரிய இறங்கு பாலத்தைத் தாண்டி, வளைவான வாயில்கள் வழியாக, ஊருக்குள் நடந்து சென்றனர். பல தெருக்கள் வழியாக அவர்கள் நடந்து, கோட்டை மாளிகையைக் கடந்து, ஒரு நீண்ட பாலத்தைத் தாண்டி, இருளடைந்த ஒரு தெருவை வந்து அடைந்தனர். அந்தத் தெருவில் தான், நீளமான பொதுக் கட்டடம் ஒன்றின் முன், தொப்பிக் கடை முதலாளி லோஹன்ஸ்டைன் குடியிருந்தார்.

அந்த வீட்டு முன்னால் அவர்கள் நின்றனர். அதன் வெளித் தோற்றம் இருளடைந்ததாய் இருந்தது. ஒரு பெரிய, கருநிறக் கதவில், நெருக்கமாகப் பல ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன. அதற்குமேல் தொப்பியின் படமும், லோஹன்ஸ்டைன் என்ற பெயரும் தாங்கியிருந்த அடையாளப் பலகை ஒன்று தொங்கியது. வீட்டுப் பணியாளரான ஒரு வயதான அம்மா, அவர்களை உள்ளே கூப்பிட்டு வலது பக்கம் ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றாள். அந்த அறைச் சுவரில், கருநிறச் சித்திரப் பலகைகள் பொருத்தப் பட்டிருந்தன. ஐம்புலன்களையும் உருவகப்படுத்திய ஒரு சித்திரம், பாதி அழிந்து, மங்கலமாக இருந்தது, உற்று நோக்குகையில் தெரியவந்தது. வீட்டுச் சொந்தக்காரர் இங்கே அவர்களை வரவேற்றார். அவருக்கு நடுத்தர வயது இருக்கும்; அவ்வளவு உயரமில்லை; கட்டையான உருவம் என்றே கூற வேண்டும். இளமை தங்கிய, ஆனால் ஓரளவு வெளிறிய, சோகை படர்ந்த முகத்தில், எப்பொழுதாவது, வலிய வரவழைக்கப்பட்ட புன்சிரிப்பு படரும். கருமையான முடி ஓரளவு கவர்ச்சிகரமான கண்கள்; பேச்சிலும், தோற்றத்திலும், நடையிலும், பாட்டாளி மக்களிடம் மிக அரிதாகக் காணப்படும் ஒரு மென்மை. அவர் பேச்சு சுத்தமாக இருந்தது. ஆனால் மெதுவாகவும், இழுத்து இழுத்தும், அவர் பேசினார்; அதிலும் குறிப்பாக சமயப் பிரச்னைகள் பற்றிப் பேசியபோது, சொற்களை இழுத்து நீட்டி, மந்த நடையில் அமைந்திருந்தது அவர் பேச்சு. தனது கரிய புருவங்களைச் சுழித்து, மனிதரின், குறிப்பாகத் தன் குடும்பத்தினர், அல்லது அண்டை வீட்டுக்காரரின் கயமைத்தனத்தையும் கொடுமையையும் பற்றி அவர் பேசியபோது, கடுமையான ஆத்திரமும் கசப்பும் அவருடைய நடையில் காணப்பட்டன.

ஆந்தோண் முதலில் அவரைப் பார்த்தபோது, பச்சை நிற ரோமக் குல்லாயும், நீல நிற இடை அங்கியும், தோல்நிறச் சட்டையும், கருநிற மேலங்கியும் அணிந்திருந்தார். வீட்டில் வழக்கமாக அவர் அணியும் உடை, அதுதான். தான் கற்பனை செய்ததுபோல், ஒரு நண்பரும் புரவலரும் கிடைப்பதற்குப் பதிலாகக் கடுமையான எசமானர் கிடைத்து விட்டார், என்பதை ஆந்தோண் எடுத்த

எடுப்பிலேயே உணர்ந்து விட்டான். அவரைப் பார்ப்பதற்கு முன்பே அவர் மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த அன்பு, அடியோடு பட்டுப்போனது — நீரில் அவிந்துபோகும் நீர்ப்பொறிபோல—, நண்பனுகத் தான் கற்பனை செய்து செய்துகொண்டிருந்த முதலாளி, பார்த்த முதல் பார்வையே, கடுமையான, உக்கிரமான பார்வையே, ஒரு சிற்றுளாகத் தான் தன்னை அவர் நடத்துவார் என்பதை ஆந்தோனுக்கு உணர்த்தியது.

அவன் தந்தை அவனுடன் தங்கிய ஒரு சில நாட்கள், அவனுக்கு ஓரளவு சலுகை காட்டப்பட்டது. ஆனல் அவர் சென்றவுடனேயே, மற்ற சிற்றுளர்போல், அவனும் கடையில் வேலை செய்ய வேண்டியதாயிற்று. மரத்தைப் பிளத்தல், தண்ணீர் மொண்டு வருதல், கடையைப் பெருக்கிச் சுத்தப்படுத்துதல் போன்ற கேவலமான வேலைகள் அவனுக்குத் தரப்பட்டன. அவனுக்கு இது மிகுந்த ஏமாற்றம் அளித்த போதிலும், வேலை புதிதாக இருந்ததால், ஓரளவு ஆர்வத்துடன் அதைச் செய்தான். மரம் பிளப்பது, பெருக்கிக் கூட்டுவது, நீர் மொண்டு வருவது ஆகிய வேலைகளில் கூட, அவன் ஒரு வித மகிழ்ச்சி கண்டான்.

உண்மை நிலையை ஒப்பனை செய்யவல்ல அவன் கற்பனைத் திறன் அவனுக்கு ஓரளவு துணை நின்றது. இரவும் பகலும் சிறு விளக்குகளின் ஒளியால், வெளிச்சம் பெற்ற அந்தப் பெரிய தொழிற் கூடத்தின் கருநிறச் சுவர்களையும் களையிழந்த தோற்றத்தையும் மறந்து தான் ஆராதனை செய்யும் ஓர் ஆலயம் அது, என்று அவன் கற்பனை செய்து கொண்டான். நாள் முழுவதும் பலருடைய மும்முரமான வேலைக்கு ஆதாரமாய் இருந்த பெரிய கணப்பு அடுப்புகளில் அவன் காலையிலேயே நெருப்பு மூட்டுவதை ஒரு புனிதப் பணியாக மேற்கொண்டான். தன் வேலைகள். கண்ணியமும் மதிப்பும் மிக்க பொறுப்புகள் என்று அவன், தனக்குத் தானே கற்பனை செய்து கொண்டான்.

தொழிற்கூடத்தை அடுத்துப் பின்னல் ஆக்கர் ஆறு ஓடியது, அதிலிருந்து நீர் இறைக்கப் பலகைகளால் ஒரு படித்துறை கட்டப்பட்டிருந்தது. இதெல்லாம் தன் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதி என்று அவன் ஒருவகையில் கருதினன். சில வேளைகளில், அவன் கடையைச் சுத்தப்படுத்திக் கற்கட்டடத்தில் அமைக்கப் பட்டிருந்த கொதிகலன்களை நிரப்பி, அவற்றின் கீழ் நெருப்பை மூட்டியபோது, அந்தத்திற்கும் உரிய மதிப்பு அளித்துவிட்டதாக எண்ணி, அவன் தன் வேலையிலேயே மகிழ்ச்சியையும் நிறைவையும் காண்பான். ஓயாத தன் கற்பனையில், தன்னைச் சுற்றியிருந்த பொருள்களையும், உயிருள்ள படைப்புகளாகப் பாவித்து, அவற்றுடன் உறவுகொண்டு, உரையாடி, அவற்றோடு சேர்ந்து

வாழ்ந்தான். வேலைகள் அனைத்தும் கிரமப்படியும் முறையாகவும் இயங்கி வந்ததைப் பார்த்து, ஒழுங்காக வேலை செய்யும் இந்த இயந்திரத்தில் தானும் ஒரு சக்கரம் என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது. அவனுடைய வீட்டில், வேலைகள் இவ்வாறு ஒழுங்காக நடந்ததில்லை. எல்லாம் முறைப்படி நடக்கவேண்டும் என்பதில் முதலாளிக்கு மிகுந்த கவலை. தொழில் செய்தல், உணவு உண்ணுதல், உறங்குதல் எல்லாம் குறித்த நேரத்தில் ஒழுங்காக நடக்கவேண்டும். இந்த ஒழுங்கு முறையிலிருந்து எப்பொழுதாவது விலக்கு அளிக்கப்பட்டால், அது உறக்கத்தைப் பொறுத்த மட்டிலும்தான். வாரம் ஒருமுறையாகிலும், உறக்கத்தைத் துறந்து, இரவிலும் வேலை செய்யவேண்டியிருந்தது. நண்பகல் உணவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு; சிற்றுண்டி, காலை எட்டு மணிக்கு இரவு உணவு இரவு எட்டு மணிக்கு. இவற்றை இலக்குகளாக நிர்ணயம் செய்துகொண்டுதான் வேலை செய்தனர். காலை ஆறு மணியிலிருந்து, சிற்றுண்டியை எதிர்பார்த்துக் கொண்டே, அதைக் கற்பனையில் சுவைத்துக் கொண்டே, ஆந்தோண் வேலை செய்வான். சிற்றுண்டி வேளை வந்தபோது, அரைத்த காப்பிக் கொட்டையுடன் சிறிது பாலும், சொட்டித் துண்டும்தான் சிற்றுண்டிக்குக் கிடைத்தன என்றபோதிலும், ஆர்வத்துடனும் சுவையுடனும், அதை சுவைத்துத் தின்றான். பிறகு மீண்டும் வேலையில் முனைவான். வேலை சலிப்பூட்டுவதாக இருந்தாலும், நண்பகல் உணவு பற்றிய எண்ணம் அவனுக்கு உற்சாகம் மூட்டி, வேலை செய்ய அவனை உந்திவந்தது. அந்த நாட்களில் ஆந்தோணின் வாழ்வு அவ்வாறுதான் கழிந்தது.

யோசப் ஃபன் யெஹன்டோர்ஃப்

தமது உரைநடைப் படைப்புக்களாலும் செய்யுட்களாலும், யோசப் ஃபன் யெஹன்டோர்ஃப், ஜெர்மன் வீரகாவிய இலக்கியப் படலப் பிற்காலத்தின் முக்கியப் படைப்பாளர்களில் ஒருவராய் விளங் கினர். நெப்போலியனை எதிர்த்து, விடுதலைப் போராட்டங்களில் லெப்டினென்டாக அவர் போரிட்டார். உயர்நிலை அரசாங்க அதி காரியாக அவர் பணியாற்றினர். இயற்கையில் ஆழ்ந்த ஈடு பாடும், சூட்சுமமான ஆன்மீக உணர்வுகளும் அவர் கவிதைகளில் காணப்படுகின்றன. வீர காவிய இலக்கியப் படைப்பாளரின் சோர்வுமிக்க, முரண்பாடான அம்சங்கள் எதுவும் அவர் எழுத்தில் காணப்படவில்லை.

ஜெர்மன் பிரபுக்கள் வர்க்கத்தினரின் வாழ்க்கை

தந்தத் தூபியில் தஞ்சம் புகுந்த, கனவுலக சஞ்சாரி அல்ல யெஹன்டோர்ஃப் என்பதற்கும், அவர் மிகத் தெளிவான தொலை நோக்கு கொண்டிருந்தார் என்பதற்கும், ஜெர்மன் பிரபுக்கள் வர்க்கத்தைப் பற்றி அவர் 'பிரபுக்களும் புரட்சியும்' என்ற தலைப்பில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை, சிறந்த சான்றாகும். இங்கு தரப்பட்டுள்ள பகுதி, ஜெர்மனியில் பிரபுக்களின் நிலையை, வரலாற்று அடிப்படையில், தெளிவாகவும் சுருக்கமாகவும் ஆராய்வது. பிரபுக்கள் வர்க்க அமைப்பு, காலத்துக்கு ஒவ்வாத தென்றும், அது சீர்குலையும் தருவாயில் இருந்த தென்றும், அவர் மறுக்க முடியாத முடிவுக்கு வருகிறார். தாம் வாழ்ந்த காலத் திற்குச் சற்று முந்திய கால கட்டத்தில், பிரபுக்கள் வாழ்க்கையை உணர்ச்சி மிக்க முறையில், சித்திரிக்கும் இந்த வர்ணனையில் நாட்டில் பிரபுக்களின் அரசியல் சமூக செல்வாக்கின் முடிவு காலத்தை அறிவித்த பிரெஞ்சுப் புரட்சிக் கோட்பாடுகளின் முத்திரையும் காணப்படுகிறது.

பொற்காலம் என்று சொல்லப்படும் பழைய நாட்கள், நம்மில் வயோதிகர் நினைவில் இன்றும் நிற்கக் கூடியவை. ஆனால் உண்மையில் அது பழைய காலமும் அல்ல; பொற்காலமும் அல்ல; பழைய பொற்காலத்தின் கேலிச் சித்திரமே அது. போர் வாள், ஆடைக்கு அணி செய்யும் வாளாக மாறியிருந்தது. வீரக் கவசத் தொப்பி, அலங்கார, பின்னலணிந்த, தொப்பியாக மாறி யிருந்தது. பழங்காலத்தில், வழியில் சென்ற வியாபாரிகளைக் குறையாடிய கோட்டை மாளிகைப் பிரபுக்குப் பதிலாக, இன்று ஓய்வு பெற்ற இராணுவக் கர்னல், தொழிலதிபர்கள் ஆதிக்கப் பிடியில் சிக்கி, அவர்களால் சூழப்பட்டு வாழ்கிறான். உலகம்

இனியும் இகாளுனகத் தன்கூ மதிக்கவில்கல என்பதை உணர முடியாமல், அதைக் கண்டு ஆத்திரம் கொண்டு, சீமாட்டிகளுடன் உல்லாச உறவு கொள்வதில் முகீனந்துள்ள வயோதிக டம்பாச் சாரிக்கு அவரை ஒப்பிடலாம். இதுவரை நிலவியுள்ள பிரபுத்துவ அமைப்பு, வரலாற்றின் நடுக்காலத்திற்கே ஏற்ற, பழைய அமைப்பு. விண்மீன்கள் மண்டலத்தில் போல், மாமன்னர் குலத்து மத்திய சூரியகீனச் சுற்றி இளவரசர்களும் கோமான் களும் சூழ்ந்திருக்க, அவர்களகீச் சுற்றிச் சந்திரன்களும் கிகீக் கோள்களும் சூழ்ந்திருப்பது போன்ற வாழ்க்கை முறையே, பிரபுத்துவ வர்க்க முறை. பிரபுவையும், அவருடைய அடிமை களகீயும், லோகாயத விவகாரங்கள் அகீத்திலும் ஒன்ருகப் பிகீணத்தது, பரஸ்பர சமய விசுவாசமும் கட்டுப்பாடும்தான். அத்துடன் உலகு முழுவதிலும், வரலாறு நெடுகப் பிரபுக்களின் செல்வாக்கும் சக்தியும், இந்தப் பிகீணப்பைப் பலப்படுத்தின. ஆனல் வரலாற்று இடைக்காலத்தின் பெரும் சாபமாக விளங்கிய முப்பதாண்டுப் போர், நீண்ட காலமாகவே முதுமையின் தளர்ச்சி யால் சீரழிந்து கொண்டிருந்த பிரபுத்துவ வர்க்கத்தை அடியோடு முறித்து அதன் அழிவுக்கு அடிகோலியது. மாமன்னர் என்ற கோட்பாட்டை மையத்திலிருந்து நீக்கியதன், அல்லது நடை முறையில் திசை திருப்பியதன், விகீவாய், கட்டுக்கோப்பாக உருவாக்கப்பட்டிருந்த அமைப்பு முழுவதும் நிகீலகுகீலந்து போயிற்று. அரச விசுவாசம் என்ற குறிக்கோள் அதுவரை வகித்துவந்த இடத்தை, செல்வத்தின் வல்லமை கைப்பற்றியது. நிலக்கிழாரில் வல்லமை மிக்கவர், கூலிப் பட்டாளத்தினரைத் திரட்டிக் கொள்கூக்கூட்டத் தகீலவர்களாயினர். பொதுவாக நிலவிய குழப்பத்தில், தாங்கள் யாருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதை அறியாத நிகீலயிலிருந்த வசதியற்ற பண்கீணயாட்கள், எங்கு ஊதியம் அதிகம் கிடைத்ததோ, அல்லது லாபம் அதிகம் கிட்டுமோ, அங்கு சென்று சேர்ந்தனர். இறுதியில் நிகீலமையில் நிதானம் ஏற்பட்டபோது, அரசு அதிகாரம் என்ற கப்பலில் தங்களுக்கிருந்த இடத்தைப் பறிகொடுத்துவிட்டனர் என்பதை யும், தங்கள் நிகீல ஆட்டம் கொடுத்துவிட்டது என்பதையும் பிரபுக்கள் வர்க்கம் உணர்ந்தது. சுதந்திரமாயிருந்த பிரபுக்கள் தங்களகூ அறியாமலே, தங்கள் சுதந்திரத்தைப் பறிகொடுத்து, அரசவையில் அரசருக்கு ஊழியம் செய்வதிலும், பட்டாளத்தில் சேர்ந்து பணியாற்றுவதிலும் ஈடுபடலாயினர்.

இந்த வகையில், முத்திரைவீரர்கள், அகீவருமே, தற்கால அதிகாரிகள் பட்டாளத்தில் சேர்ந்தனர். ஏழாண்டுப் போரில், தற்காலிகமாக, இவர்கள் தங்கள் பழைய முக்கியத்துவத்தை மீண்டும் பெற்றுச் சிறிது நேரம் கடைசிமுறையாக ஒளி வீசினர்.

புகழ்நாடும் ஆர்வம், வீர சாகசச் செயல்கள் புரிவதில் ஈடுபாடு, துணிவு, தியாக மனப்பான்மை ஆகிய பலன்கள்—வரலாற்று இடைக்காலத்தை ஒளிமயமாக்கிய பண்புகள்–மீண்டும் தழைத்து ஓங்கின. ஆயினும் பழைய முத்திரை வீரர்களின் இணைந்த அணி மீண்டும் உருவாகவில்லை. ஒருசில வீரர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் பெயரையும் போர்வீரத்தையும் நிலைநாட்டி அழியாப் புகழ் தேடிக்கொண்டனரே யொழிய, வீர இயக்கத்தின் அடிப் படை உணர்வைப் புதுப்பித்து நிலைநாட்டவில்லை. இங்கும் இப் புதிய வீரர்களின் இராணுவ உடையே, அவர்கள் புதிய தன்மைக் குச் சான்றாகவும் அடையாளமாகவும் அமைந்தது. இது தற் செயலாய் அமைந்ததல்ல; உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாய் அமைந்ததுமல்ல. இரும்புக் கவச உடை, மார்புக் கவசமாகத் தேய்ந்தது. அதுவும் தேய்ந்து, மார்புப் பட்டையாயிற்று. நாளடை வில் அதுவும் மறைந்து, கையளவு தகரப் பட்டை, மறைந்து போன கவச உடையின் நினைவுச் சின்னம் போல், கழுத்தைச் சுற்றி அணியப்பட்டது. முன்பு கைப்பட்டை இல்லாமல் காட்சியளிக் காத வலது கை, கம்பீரமான ஸ்பெயின் நாட்டுக் கைப் பிரம்பைத் தாங்கியது. முன்பு தலையின் இருபுறங்களிலும் கழுகுகளின் சிறகுகள் காட்சியளித்ததற்குப் பதிலாக, வாசனைப் பொடி பூசப்பட்ட தலையைச் சுற்றி, வளைந்த இரண்டு சுருள்கள் காணப் பட்டன. பின்னல், முதுகில், சடை தொங்கியது. சடை இல்லாத முத்திரை வீரர், ஏதோ ஊனமுடைய பயங்கரப் பிறவி போன்றவர். ஏழாண்டுப் போரின் வீரர்களின் உருவச் சிலைகளைச் செதுக்கும் சிற்பிகள். இந்தப் பரிதாபமான ஊனத்தை எண்ணி வருந்துகின்றனர். அசிங்கமான அந்தச் சடை, கால மாறுதலின் சின்னமாகவே விளங்குகிறது. இயற்கையானது அனைத்தையும் இடைஞ்சல் என்று ஒதுக்கிவிட்டு, காலத்தோடு அழிந்தது என்று களைந்துவிட்டு, பொம்மை போல பொட்டலம் கட்டிய அந்த உருவங்கள், அன்றைய இராணுவத்தின் அமைப்பின் சின்ன மாகவும், சிதறிக்கிடந்த தன்மையின் சின்னமாகவும் விளங்கின.

அன்றைய பிரபுவர்க்க இளைஞர் இராணுவத்தில் சேர்ந்தது, போரில் ஈடுபடுவதற்காக அல்ல. தங்கள் வீரத்தைச் சீமாட்டி களைத் துரத்துவதில் தான் அவர்கள் காட்டினர்கள். தங்களுக் குரிய நிலபுலன்களை அனுபவிக்கும் காலம் வரும்வரை, அவர்கள் இதில் தான் ஈடுபட்டனர். சொந்தமாக நிலபுலன்கள் இல்லாத வர்கள், தங்கள் பகட்டான இராணுவ உடுப்பைக் காட்டி, அழகாகவோ, விகாரமாகவோ, இருந்த ஒரு சீமாட்டியை தங்கள் ஏராளமான கடன்களை ஏற்று அவற்றைச் செலுத்தச் சம்மதித்த, பணவசதி படைத்த ஒரு சீமாட்டியை—அடையும் வரை அவர்கள் இந்தப் போரை நடத்தினர்கள். முத்திரை வீரர் இயக்கம் பற்றி

ஏதோ சில விசித்திரமான எண்ணங்களை அவர்கள் ஏற்றுத் தங்களுக்கு விருப்பமான முறையில் அமைத்துக் கொண்டனர். பெண்ணினத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற பழைய கோட்பாட்டில், பெண்களுடன் உல்லாசச் சல்லாபம் செய்வதை மட்டும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். தன்மானம் என்ற பழைய ஜெர்மன் கோட்பாட்டிற்குப் பதிலாக, கௌரவம் பற்றிய பிரெஞ் சுக் கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டனர். உறுதியான பிரபுக் கள் வர்க்க ஒற்றுமையின், பிணைப்புகளுக்குப் பதிலாகக் குறுகிய வர்க்கச் செருக்குக்கு மேம்படாத, தன்னிச்சையான வர்க்க உணர்வை அவர்கள் மேற்கொண்டனர்: நிலப் பிரபுக்கள் போக்கை அவர்கள் பின்பற்றினர். காவல்படை அதிகாரிகளின் பாணியும், நாகரிக மெருகு பூசிய பேச்சு நடையும் கொண்ட ∴போக்கின் வீரர்கள் கூட இந்தப் போக்குக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர்.

அந்த நாட்களில் பிரபுக்கள் வர்க்கம், முற்றிலும் வேறுபட்ட மூன்று முக்கியத் தொகுதிகளாய்ப் பிரிந்தது. பெரிய நகரங்களி லிருந்து வெகு தொலைவில், தனியாக ஒதுக்கப்பட்டு, மற்றவர் களுடன் நெருங்கிய தொடர்பு இல்லாத, சிறு பண்ணைகளின் சொந்தக்காரர்கள் ஒரு பிரிவு. இப் பிரிவு தான் அதிக எண்ணிக் கையும் செல்வாக்கும் கொண்டதாயும் இருந்தது. நெடுஞ்சாலை களும் இரயில்வேக்களும் மக்களையும் நாடுகளையும் ஒன்றுசேர்த்துள்ள இன்று, எண்ணற்ற சஞ்சிகைகள், வண்ணத்திப் பூச்சிபோல், உலகெங்கும் நாகரிகத்தின் மகரந்தத் தூளை எடுத் துச் செல்லும் இன்று, அந்த வகுப்பினர் அன்று தனியாக ஒதுங்கி, சமூகத்திலிருந்து பிரிந்து வாழ்ந்ததை எண்ணிப் பார்க்கவே முடியாது. காட்டுக்கு அப்பால் தொலைவில் காணப்பட்ட நீல மலைகள், எவரும் அடையமுடியாத, அறியமுடியாத, இரகசிய மாகவும் புதிராகவும் இருந்து, இந்த வகுப்பினரின் தீராத வேட்கை யையும் புதுமை ஆர்வத்தையும் தூண்டின. வெளியுலக வாழ்க்கை பற்றிச் செய்தித்தாள்கள் அவ்வப்போது சில செய்திகளைக் கொண்டுவந்தன. மொத்தத்தில் அது கற்பனையில் கூடக் காண முடியாத இலட்சிய உலகமாகத் தொலைவில் நின்றது. பரபரப் பில்லாமல், ஒரே மந்தப்போக்கில் சென்ற வாழ்க்கையில், அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்ட வேட்டைகளும், பக்கத்துக் கிராமச் சிற்றூரில் நடந்த சந்தைக்கு அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருந்த பயணங்களும்தான், சலிப்பை முறிக்க வாய்ப் பளித்தன. வேட்டைகளை ஒட்டி, அடங்காத இரைச்சலும், உற்சாகமான குண்டு வீச்சும், வேட்டைக்காரர்களின் வீராப்பான கதைகளும் எழுந்தன. சிற்றூர்ச் சந்தைப் பயணங்களோ விசித் திரமாயிருந்தன. இப்பொழுது நடக்கும் கொண்டாட்டங்களை

ஒட்டிய அலங்காரப் பவனிகளில் இடம்பெறத்தக்கவை அவை. இப்பயண அணியின் தொடக்கத்தில், தங்கள் அலங்கார ஒய்வு நாள் உடைகளை உடுத்திய சீமாட்டிகள் செல்வார்கள். பாதைகள் அக்காலத்தில் கரடுமுரடாக இருந்ததால், அப்பயணத்தால் அவர்கள் உயிருக்கு ஆபத்தோ, உடலுக்கு ஊனமோ, ஏற்படக் கூடிய அபாயமும் அதிகமாயிருந்தது. நான்கு கருநிறக் குதிரை களால் இழுக்கப்பட்ட பழைய காலத்துக் கோச்சு வண்டிகளில் அவர்கள் சவாரி செய்தார்கள். வண்டிச் சட்டத்தில் தோல்பட்டை களிலிருந்து தொங்கிய இக்குதிரைகள், மிகவும் ஆபத்தான முறையில் ஊசலாடின. நீளமான, திண்டுகள் பொருத்திய, ஒரு பெட்டியில் கனவான்கள் பயணம் செய்தனர். ஹைமான் குழந்தைகள், அப்பெட்டிமேல், ஒருவர் பின் ஒருவராக இறுக்க மாக உட்கார்ந்து, ஒருவர் தலைக்கு மேலாக ஒருவர் எட்டிப் பார்த் துக்கொண்டு சென்றனர்.

பனி படர்ந்த தங்கள் பண்ணைகளில், தொடர்ந்து ஒவ்வொரு பிரபுக் குடும்பத்தினரும் முறையாக ஏற்பாடு செய்த மாரிக்காலக் கேளிக்கைகளில்தான் அவர்களுடைய முழு ஆற்றலும் வெளிப் பட்டது. இயந்திர சாதனங்களின் உதவி இல்லாமலே இந்த உல்லாச விளையாட்டுகளை ஏற்பாடு செய்ய முடியும் என்பதை அக்கேளிக்கைகள் தெளிவாக்கின. உற்சாகம் இல்லாத காரணத் தால் தான் அவை இன்று வெற்றி பெறுவதில்லை. உற்சாகம் மட்டும் இருந்து விட்டால் போதும்: வேறு வசதிகளும் சாதனங் களும் இல்லாவிட்டாலும், இக் கேளிக்கைகளைத் திறமையாக நடத்தி விடலாம் என்பதற்கு அன்றைய அனுபவமே சிறந்த சான்று.

வரவேற்பறைகளில் மிகப் பெரிய அறை, அவசர அவசரமாகச் சுத்தப்படுத்தப்பட்டு, அபாயகரமாக வளைந்து கொடுத்த தரைப் பலகைகளையும் பொருட்படுத்தாது, நடன அறையாகப் பயன் பட்டது. பள்ளிக்கூட ஆசிரியரும் அவர் 'பாண்டு வாத்தியக் குழு' வும்தான், நடனத்துக்குப் பின்னணி இசைக் குழுவாகப் பயன் பட்டது. வெவ்வேறு விதமான மெழுகுவத்திப் பூண்களில் ஒரு சில மெழுகுவத்திகள் வீசிய ஒளி, அறையின் மூலைவரை முழுதும் எட்டாமல், பிரபுக்கள் நடனமாடிக்கொண்டிருந்ததைத் திறந்த பக்கக் கதவின் வழியாகப் பார்த்து, மரியாதையுடன் ஒதுங்கி நின்ற, வனக் காவலாளர், பணியாளர் ஆகியோர் மனைவிகள் கூட்டத்தின் மீது, அந்திக் கால ஒளிபோல், அரைமனதான ஒளி வீசியது. ஆனால் ஓயாமல் தங்களுக்குள் இரகசியமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் கேலி செய்து கொண் டிருந்த துடிப்புமிக்க கிராமப் பெண்களின் கண்கள், இந்த மெழுகு வர்த்திகளை விட அதிக ஒளி வீசின. அப்பெண்களின் சூதில்லாத

கொஞ்சுதலே, ஒழுக்க நிர்ப்பந்தத்தின் அறிகுறியாகவே பெரும் பாலும் அமையும், போலி நாணம் கெடுக்கவில்லே. சூரிய வெளிச் சத்தில் திளேத்து, கட்டுக்கடங்காமல், அதே சமயத்தில் அழகுறத் துள்ளித் திரியும் பூனேக்குட்டிகளுக்கு அவர்களே ஒப்பிட்டிருக்க லாம். வெண்சிவப்பு மலர்களேப்போல் அலங்கரித்துக் கொண்டு, இறுக்கமான தங்கள் உல்லாச உடைக்குள் தங்கள் உடம்பைத் திணித்து, ஆடைகொள்ளாமல், உடல் செழிப்பு பிதுங்கிக்கொண் டிருந்த நிலேயில் இருந்த ஒரு சில சிவப்புப் பெண்களேத் தவிர, அநேகமாக எல்லோரும் அழகாக இருந்தார்கள். வழக்கமான வேடிக்கைச் சுருள் நடனத்தை அலங்கோலமாக ஆடியதுடன் தொடங்கும் இந்த நடனக் கொண்டாட்டம், இறுதியில், அதற்கு நேர்மாறாக, ஆரவாரம் மிக்க 'கேஹ்ராஸ்' நடனத்துடன் முடியும். தேர்ச்சிபெற்ற ஒரே ஒரு கனவானும் ஒரு சீமாட்டியும் 'காலக்ஸ் நடனம்' ஆடுவார்கள். அவள் எழிலுடன் உல்லாசமாக ஆட, அவர் ஆரவாரமாகத் துணிச்சலுடன் ஆட, இருவரும் சுற்றி ஆடாமல் மாறிமாறி ஒருவர்முன் ஒருவர் நின்று ஆடுவார்கள். இருவரையும் சுற்றி நின்று, மற்றவர்கள் நடனத்தை வியந்து பாராட்டுவார்கள். அந்த நாட்களில் முழுமனதான ஆர்வத் துடனும் ஈடுபாட்டுடனும், தியாக உணர்வுடனும் நடனம் ஆடுவார்கள்; உடலேயும் உள்ளத்தையும் நடனத்தில் ஈடுபடுத்தி ஆடுவார்கள். அத்துடன் ஒப்பிட்டு நோக்கினுல், இன்று ஆடப் படும் நேர்த்தியான, ஆனுல் ஈடுபாடற்ற நடனம், களேயிழந்த தாகவும் சலிப்பு ஊட்டுவதாகவும் தோன்றும். நடனம் நடந்து கொண்டிருக்கையில், வயலின்கள் ஓயாது ஒலிக்கும்; குழாய்க் கருவிகள் முழங்கும்; பக்கத்து அறையில் மதுபானக் கண்ணுடி டம்ளர்கள் கலகலவென ஒலி எழுப்பும். பல்வகைப் பழ மதுபானம் காட்டம் நிறைந்ததாக இருந்தால், அந்தப் போதை யில், வயோதிக ஆண்கள் கூட, உடலில் உற்சாகத்தை வலுக் கட்டாயமாக வரவழைத்துக்கொண்டு, நடனம் ஆடிக் குதிப் பதைக் கண்டு அவர்கள் மனேவிமார்களுக்கு எரிச்சல் உண்டாகும். ஒருவர் உற்சாகம், தொற்று நோய்போல், மற்றவர்களேயும் பற்றிக்கொள்ளும். இறுதியில், நடனம் முடிந்து, களங்கமற்ற, விண்மீன்கள் ஒளிரும், வானத்தின் கீழ், மாரி காலத்தின் நிசப்தம் நிறைந்த காட்சியின் ஊடே, விட்டுக்குத் திரும்பும்போது, எழில் மிக்க பெண்களின் உள்ளங்களில், இன்பக் கனவுகள் குடி கொண்டிருக்கும்.

பண்ணே வீடுகள் என்று அழைக்கப்பட்ட தங்கள் ஆடம்பர மற்ற வீடுகளில், இவர்கள் பெரும்பாலும், சிக்கனமான வசதி யுடன் நிம்மதியான வாழ்க்கை நடத்தி வந்தனர். எழில்மிக்க கிராமியச் சூழ்நிலேயில் இந்த வீடுகள் அமைந்திருந்தாலும்,

அழகுணர்வுடன், வெளிப்புறக் காட்சியின் பொலிவு விளங்கக் கட்டப்படவில்லை. வீட்டின் ஒவ்வொரு சாளரத்திலிருந்தும், லாயங்கள், குதிர்கள் ஆகியவை தடையின்றித் தெரிவதற்கு வசதியாகவே இந்த வீடுகள் கட்டப்பட்டிருந்தன. சிறந்த குடியானவராய் விளங்குவதே, ஒவ்வொரு கனவானின் குறிக்கோளாக இருந்தது. குடும்பத்தைச் செட்டாகவும் சிக்கனமாகவும் நடத்துபவள் என்று பெயர் பெறுவதே, ஒவ்வொரு சீமாட்டியின் குறிக்கோளாக இருந்தது. இயற்கையின் எழில்களை அறிந்து போற்றும், ஆற்றலோ அவகாசமோ அவர்களுக்கில்லை. அவர்களே இன்னமும் இயற்கையின் படைப்புகளாகத்தான் இருந்தனர்.

வாழ்க்கையில் எஞ்சியிருந்த சிறிது ரசனை உணர்வு, அக் குடும்பங்களின் இளம் பெண்களிடம் விடப்பட்டிருந்தது. அதையும் அவர்கள் அவசியமாகக் கருதாமல், ஆடம்பர வசதியாகவே கருதினர்கள். அவர்களுக்குக் கிடைத்த சில மணி ஓய்வு நேரத்தில், பழங்காலத்து மெட்டுக்களையும் பாடல்களையும் பழைய பியானோவில் வாசிப்பதிலும், வீட்டுக்குப் பின்புறமிருந்த காய்கறித் தோட்டத்தில் வண்ண மலர்ப் பாத்திகள் அமைப்பதிலும், ஈடுபட்டனர். காலைப் பொழுதில், வீட்டுக்குள்ளாக ஒரே இரைச்சலும் ஆரவாரமும் எழும். புதிதாக வீட்டுக்கு வந்திருக்கும் அயலார், அந்த இரைச்சலில் மிதிபடாமல் இருக்கத் தோட்டத்துக்கு ஓடிப் புகலிடம் தேடுவார்கள். வீடு முழுவதும், மூடும் கதவுகளை வேகமாகத் திறக்கும் சத்தமும், படாரென்ற சத்தமும் கேட்கும். ஓயாத கூச்சலுக்கும் சண்டைக்கும் இடையே, வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்துதல், பால் கறத்தல், வெண்ணெய் திரட்டல் ஆகிய வேலைகள் நடைபெறும். தூக்கணங் குருவிகள், தாங்களும் குடும்ப வாழ்வில் பங்குகொள்வதுபோல், இரைச்சலுக்கு நடுவே, வீட்டுக்குள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருக்கும். திறந்த சாளரங்கள் வழியாக, காலைக் கதிரவனின் ஒளி வீட்டுக்குள் பரவி, மங்கலான குடும்பத் தலைவர்களின் படங்கள்மீதும், சொக்காலை என்ற மிகு ஒப்பனைக் கலைப் பாணியைச் சார்ந்ததாக இப்பொழுது கருதப்படக்கூடிய பழைய மேசை நாற்காலிகள் மேலிருந்த பித்தளைப் பூண்கள்மீதும் ஒளிவீசும். காலை காலத்தில், மாலை நேரம் உற்சாகமாக இருக்கும்போது, சுற்றுப் பகுதிகளிலிருந்து விருந்தாளிகள் வீட்டுக்கு வருவதுண்டு. அவர்களை உரத்த குரலில் வரவேற்று, 'மதிப்புமிக்க அவர்கள் உடல்நலன்' பற்றி மரியாதையாக குசலம் விசாரித்தபின், பாழடைந்த கோடைக் கூடத்திற்கு அவர்கள் செல்வார்கள். இந்தக் கூடங்களின் ஓட்டுக் கூரைமேல் கவர்ச்சிகரமாக வண்ணம் பூசப்பட்டிருந்த மரக் காமன் சிலையிலிருந்து, வில்லும் அம்புகளும் உடைந்திருக்கும்.

இங்கு பெண்களைக் கேலி செய்து, வம்புப் பேச்சு நடக்கும். கோப்பை கோப்பையாகக் காப்பி குடிப்பார்கள். ஏராளமான புகையிலை செலவாகும். உணவு தானியங்கள் விலை, அறுவடை நேரத்தில் எதிர்பார்க்கப்படும் பருவநிலை, வழக்கு வியாச்சியங்கள், கடுமையான வரி விதிப்பு ஆகியவை பற்றி உரையாடுவார்கள். பண்ணை வீட்டு இளவல்கள், செர்ரிப் பழ மரத்தில் உல்லாசமாக உட்கார்ந்து கொண்டு, சலிப்புடன் உட்கார்ந்து கொண்டிருந்த சகோதரிகள் மீது பழக் கொட்டைகளை வீசிக் கொண்டிருப்பார்கள். அப் பெண்களோ, பக்கத்து ஊரில் பட்டாளத்து முகாமில், தங்களுக்குப் பழக்கமாயிருந்த இராணுவ அதிகாரிகள் வருகையை இரகசியமாக எதிர்பார்த்துக் கொண்டு, பசுமை நிறைந்த வயல்களிலிருந்து, அவர்கள் அலங்காரத் தொப்பிகள் திடீரென்று காட்சியளிக்காதா என்று ஆவலுடன் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தனர். இதற்கிடையே, எலுமிச்சை மரத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த தூக்கணங் குருவிகளின் ஓசைவாரம் வயல் முற்றத்திலிருந்து ஒலிக்கும். வான்கோழிகளின் சத்தமும், கதிரடிக்கும் இயந்திரங்களின் ஓயாத ஓசையும், கிராமியக் காட்சியின் இயல்பான ஒலிகளுடன் காற்றில் கலந்து மிதக்கும். ஆல்ப்ஸ் மலையால் ஆட்கொள்ளப்பட்ட ஸ்விஸ் மக்களைப்போல், தூர தேசங்களுக்குச் சென்றிருந்த பண்ணைக் குடும்பத்தினரும், இக் காட்சிகளை மனக் கண்ணால் கண்டு, சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்ற ஆவலில் ஏங்குவார்கள். கீழே, பள்ளத்தாக்குகளில், பருத்தி வயல்களிடையே சலசலப்பு ஒலி பரவும். ஒருவகையில் விபரீதமாகத் தோன்றும், வெப்ப உணர்வு சூழ்ந்திருக்கும். மேற்கே புயல் உருவாகி உருமிக் கொண்டிருந்தது என்பதையும், கானத்தின் கருமுடிக்கு மேல், அவ்வப்போது மின்னல்கள் தோன்றி, வரவிருப்பதற்கு எச்சரிக்கைக் குறிகளாய் அமைந்தன என்பதையும், யாரும் கவனிக்கவில்லை; கவனித்தாலும், அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பிரான்சில், நீண்ட வத்தி எரிந்தபின் இறுதியில் வெடித்த ஒரு குண்டினால், பிற்போக்கான, பழமையான, பிலிஸ்டைன் போக்குப் பரவியிருந்த உலகில் ஏற்பட்ட திடீர்க் கொந்தளிப்பையும், அதைத் தொடர்ந்து பரவிய அதிர்ச்சியையும் அளவற்ற குழப்பத்தையும், கற்பனை செய்து பார்ப்பதுகூட இன்று கடினமாகத்தான் இருக்கும்.

'உதவாக்கரையின் நினைவுக் குறிப்புகள்'

யெஹன்டோர்.ப் கதையான 'உதவாக்கரையின் நினைவுக் குறிப்புகள்' (1826) மறைந்துவிட்ட வீர காவியக் கற்பனையாளர்

(Romantics) வாழ்வைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தைப் பிரதி பலிக்கிறது. மாவு ஆலை சொந்தக்காரன் மகன் தன் வயதுவந்த வாழ்க்கையைத் தொடங்குகிறான். தொலை நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற தீராத வேட்கை அவனுக்கு. அவனுக்குப் பல விசித்திரமான அனுபவங்கள் ஏற்படுகின்றன. இறுதியில் இனிய தொரு மணம் முடித்துக் கொள்கிறான். காதல், இயற்கை, இசை ஆகியவை பற்றிய உணர்ச்சிகள் கதையில் மண்டியுள்ளன. இடை யிடையே செய்யுள்களுடன் கூடிய இக் கதையின் நடைப்பாணி, மிக எளிதாக இருந்த போதிலும், கால நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுவதாய் உள்ளது.

ஏழாவது அதிகாரம்

கோட்டையிலிருந்து பலர், ஆரவாரம் செய்துகொண்டு, தீவட்டி களையும் நீண்ட கத்திகளையும் தூக்கிக்கொண்டு, ஆவேசத்துடன் என்னைத் துரத்தி வருவது போன்ற ஒலி என் காதுகளில் எப் பொழுதும் துளைத்துக் கொண்டிருந்ததால், நான் இரவு பகலென்று பாராமல் வேகமாகச் சென்றேன். வழியில் சந்தித்த குடியானவனிடமிருந்து, ரோம் நகரத்துக்கு இன்னும் சில மைல் தூரம்தான் இருக்கின்றது என்றறிந்தேன். இச் செய்தியைக் கேட்டதும், நான் பரவசத்தால் துடித்தேன். நான் வீட்டில் சிறு குழந்தையாக இருந்தபோதே, ரோமாபுரியின் மாண்பு பற்றிப் பல அதிசயக் கதைகள் கேட்டிருந்தேன். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளைகளில், ஆலைக்கு எதிரே புல்வெளியில் நான் படுத்திருந்தபோது, என் தலைக்குமேல் உலவிய மேகங்களில், மாண்புமிக்க ரோமாபுரியைக் கற்பனைக் கண்கொண்டு பார்த் தேன். அதிசய மலைகளுடன், நீலக் கடல் பின்னணியாய் அமைய, உயரமான, தங்க வாயில்களும் தங்கத் தூபிகளும் ஒளிவீசப் பொன்னை உடுத்திய தேவ கன்னிகள் அங்கிருந்து துதிப் பாடல்கள் பாடியதாக நான் கற்பனை செய்தேன். இரவு படர்ந்து வெகு நேரமாகிவிட்டது. திங்கள் துல்லியமாக ஒளிவீசிக் கொண்டிருந்தது. அந்நேரத்தில் காட்டிலிருந்து நான் வெளியே வந்தபோது, மலை உச்சியை அடைந்தேன். மலைக்கு எதிரே, வெகு தொலைவில், நீண்ட நாளாய் நான் அன்பு கொண்டிருந்த நகரம், காணப்பட்டது. தொலைவில் கடல் ஒளி வீசியது. எண் ணற்ற விண்மீன்கள் கொண்ட வானம் மின்னி ஒளி பெய்ததை அறியும் ஆற்றல் புலன்களுக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. அவற்றின் கீழே, அப் புனித நகரம் காட்சியளித்தது. ஒரு சிறு மேகப் பட்டைபோல் அந்நகரம் தோன்றியபோதிலும், சுற்றிலும் மலைகள் இராட்சதர்கள் போல் நின்று கவனித்துக் கொண்டிருக்க,

நிசப்தமான பூமியின்மேல் கிடந்து உறங்கிக் கொண்டிருந்த சிங்கம் போலவும் அந்நகரம் தோன்றியது.

பாழான, பெரியதொரு, புதர்க் காட்டை முதலில் அடைந்தேன். கல்லறையில் போல் அனைத்தும் கனியிழந்தும் தனிமையாகவும் காணப்பட்டது. இங்குமங்கும் பாழடைந்த ஒரு சுவரோ, கணுக்கள் நிறைந்து வளைந்து நெளிந்து, காய்ந்துபோன புதரோ காணப்பட்டது. இரவுப் பறவைகள் அவ்வப்போது காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தன. என் நிழலே என்னைப் பின் தொடர்ந்து வந்து, தனிமையில் மீண்டு தாழ்ந்தது. காலத்தைப் போல் தொன்மையான ஒரு நகரம் இங்கே புதைபட்டுக் கிடக்கிறதென்றும், அந்நகரத்தில் வீனஸ் சீமாட்டி சயனித்திருக்கிறாள் என்றும், சில வேளைகளில் அந்த முதிய காட்டுமிராண்டிகள் தங்கள் கல்லறையிலிருந்து எழுந்து, அங்கு நடமாடுவோரை வழிதப்பி எங்கோ அழைத்துச் செல்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் நான் நேராக நடந்து சென்றேன். எதுவும் என்னைத் தடுத்து நிறுத்த நான் இடம் கொடுக்கவில்லை. நான் எடுத்துவைத்த ஒவ்வோர் அடியுடன், நகரம் நெருங்கிவந்து, தெளிவாகவும், முன்னிலும் மாட்சிமை மிக்கதாயும், என்முன் காட்சி அளித்தது. உயரமான மலைகளும் தூபிகளும், பொன்மயமான தூபி மாடங்களும், மதியின் தெள்ளிய ஒளியில், பொலிவுடன் திகழ்ந்து கூரைத் தளங்கள் மேல், பொன்னுடைகள் அணிந்துநின்று, நிசப்தம் நிறைந்த நிசியிலே பாடுகின்ற தேவதைகள் போல்—விளங்கின.

அவ்வாறு முதலில் சிறு வீடுகளைத் தாண்டிப் பின்னர் கம்பீரமான வாயில் வளைவைக் கடந்து, புகழ்பெற்ற ரோமாபுரியில் நான் புகுந்தேன். திங்கள், மாளிகைகளிடையே ஒளி வீசி, பகற் பொழுது போலாக்கியது. ஆனால் தெருக்கள் மொத்தத்தில் காலியாகவே இருந்தன. இங்குமங்கும், ஒரு பளிங்குப் படிக்கட்டின் மேல்—நிதான இரவில் சாவைப்போல்—கந்தை அணிந்த ஒருவன் படுத்து உறங்கினான். நிசப்தமான முற்றங்களில் நீர்த் தாரைகள் சலசலப்பு ஒலி எழுப்பின. தெருவருகே இருந்த தோட்டங்கள், அந்த நீர்த் தாரைகளுடன் உரசிப் பொங்கி எழும் இனிய மணம் காற்றிலே கலந்து பரவிநிற்கச் செய்தன.

இன்பத்தாலும், திங்களின் தண்ணொளியாலும், இனிய நறுமணத்தாலும் ஆட்கொள்ளப்பட்ட நான், எங்கு போவது என்பது பற்றிக் கவலைப்படாமல், உலவிக் கொண்டிருந்தபோது, நந்தவனத்தின் உள்ளிருந்து, 'கிட்டார்' யாழின் ஒலி கேட்டது. "அட கடவுளே! கீண்ட மேலங்கி அணிந்த அந்தப் பைத்தியக்கார மாணவன் என்னை இரகசியமாகப் பின்தொடர்ந்து வந்து இங்கு சேர்ந்திருக்கின்றான்" என்று நான் எண்ணிக்கொண்டேன்.

ஆனால் அந்த இசை ஒலியுடன், தோட்டத்தில் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் குரல் மிதந்து வந்தது. நான் மெய்ம்மறந்து நின்றேன். என் எழில்மிக்க உத்தமப் பெண்ணரசியின் குரல்தான் அது. திறந்த பலகணி அருகே நின்று, வீட்டில் எத்தனையோமுறை அவள் பாடியிருந்த அதே இத்தாலியப் பாட்டைத்தான் இப்பொழுதும் பாடினாள்.

அந்த இனிய பழைய நினைவுகள் என் இதயத்தை அத்துணை பலத்துடன் ஆட்கொண்டன. விடிவெள்ளிப் பொழுதிலே கோட்டையின் முன்பிருந்த தோட்டத்தின் அமைதியை எண்ணியும், அந்த அறிவுகெட்ட ஈ என் மூக்குக்குள் பறந்ததற்குமுன், நான் புதர்ச் செடிகள் முன்பு எவ்வளவு இன்பமாய் நின்று கொண்டிருந்தேன் என்பதை எண்ணியும், உணர்ச்சிவசப்பட்ட நான் கதறி அழுதுவிடுவேன் போல் தோன்றியது. என்னால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை. இரும்புக் கிராதியுள்ள கதவில், மேல் பூச்சுப் பூசப்பட்டிருந்த பூண்களின்மேல் கால் வைத்து ஏறிப் பாட்டொலி எழுந்த தோட்டத்திற்குள் குதித்தேன். நான் கதவில் ஏறிக்கொண்டிருந்ததை, நெட்டிலிங்க வகை மரத்தின் கீழ், தொலைவில் நின்று, ஒரு மெல்லிய வெண்ணிற உருவம் வியந்து நோக்கிக்கொண்டிருந்ததைக் கண்டேன். திடீரென அந்த உருவம், இருண்டிருந்த தோட்டத்தின் வழியாக வீட்டை நோக்கி விரைந்து சென்றது. அது பறந்து சென்ற வேகத்தில், தரையில் அடியெடுத்து வைத்ததே, நிலவொளியில் தெரியவில்லை. 'அவளேதான்,' என்று கூவினேன். வேகமாக ஓடிய, அச்சிறு பாதங்களை நான் அடையாளம் கண்டபோது, என் இதயம் பரவசத்தால் துடித்தது. துரதிருஷ்டவசமாக, தோட்டக் கதவிலிருந்து நான் குதித்ததில், என் வலதுபாதம் சிறிது சுளுக்கியிருந்தது. ஆகவே வீட்டை நோக்கி ஓடுவதற்கு முன், சிறிது தூரம் நான் மெல்ல நொண்டி நடக்க வேண்டியிருந்தது. அதற்குள் கதவும் சாளரக் கதவுகளும் இறுக மூடப்பட்டன. அடக்கத்துடன் நான் கதவைத் தட்டினேன்; சற்று நேரம் பொறுத்திருந்து, மீண்டும் தட்டினேன். உற்றுக் கேட்டபோது, வீட்டுக்குள்ளிலிருந்து மகிழ்ச்சி கலந்த ஒலிகளும், தாழ்ந்த குரலில் பேச்சும், மெல்லிய சிரிப்பொலியும், கேட்டது போல் எனக்குத் தோன்றியது. நிலவொளியில், சாளரத் திரைகளுக்கு நடுவே, மின்னும் கண்களின் ஒளிவீச்சை ஒருமுறை பார்த்தது போல் எனக்குத் தோன்றியது. பிறகு எங்கும் நிசப்தம் மீண்டும் குடிகொண்டது.

'நான்தான் என்று அவளுக்குத் தெரியவில்லை' என்று நான் எண்ணிக்கொண்டு, என்னுடன் இன்னமும் வைத்துக் கொண்டிருந்த வயலினை எடுத்து, வீட்டுக்கு முன் நடைபாதையில் மேலும்

கீழும் நடந்து, 'எழில்மிக்க பெண்ணரசியே' என்ற பாட்டை மீட்டியும் பாடியும் வந்தேன். அதுபோலவே என் மகிழ்ச்சிக் காகவே எல்லாப் பாடல்களையும் நான் பாடி முடித்தேன். முன்பு, மனத்திற்கினிய இரவுகளில் அழகிய கோட்டை நந்தவனத்தில் அமர்ந்து நான் பாடியதும், சுங்கத் தண்டலகம் முன்பு மரப் பலகை இருக்கையில் நான் அமர்ந்து, கோட்டைச் சன்னல்கள் வாயிலாக என் பாட்டொலி உள்ளே செல்லுமாறு நான் பாடியதும் என் நினைவிற்கு வந்தன. ஆனால் எவ்வளவு பாடியும் பலனில்லை. வீடு முழுவதும் ஒரு ஜீவன்கூட அசையவோ எழவோ இல்லை. மிகுந்த வருத்தத்துடன் நான் வயலினைக் கீழே வைத்து, நீண்டதூரம் நடந்த களைப்பில், கதவின் முன் பாகப் படிக்கட்டில் படுத்து உறங்கிவிட்டேன். இரவு இதமாக இருந்தது. வீட்டுக்கு முன்னிருந்த மலர்ப் பாத்திகள் இனிய நறுமணம் வீசின. தோட்டத்தின் உள்புறத்தின் நிழலில், அலங்கார நீர்த்தாரை ஒன்று, அந்த இனிய நறுமணத்திற்கு ஏற்ற இன்பச் சலசலப்பு ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது. ஆகவே, கனவில் சஞ்சரிப்பது போலவே, கொள்ளையழகு கொண்ட நீல மலர்களையும், எழில்மிக்க, பசுமை படர்ந்த, கவர்ச்சியான புல் வெளிகளைப் பற்றியும், அங்கு வசந்தம் தவழ்ந்ததையும், ஓடைகள் அமைதியாக ஓடியதையும் இன்பப் பறவைகள் இதமாகப் பாடியதைப் பற்றியும், நான் எண்ணிக்கொண்டே, உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

'நான்தான் என்று அவளுக்குத் தெரியவில்லை' என்று நான் எண்ணிக் கொண்டு, என்னுடன் இன்னமும் வைத்துக் கொண்டிருந்த வயலினை எடுத்து, வீட்டுக்கு முன் நடைபாதையில் மேலும் கீழும் நடந்து, 'எழில்மிக்க பெண்ணரசியே' என்ற பாட்டை மீட்டியும் பாடியும் வந்தேன். அதைப்போலவே என் மகிழ்ச்சிக்காகவே எல்லாப் பாடல்களையும் நான் பாடி முடித்தேன். முன்பு மனத்திற்கினிய இரவுகளில் அழகிய கோட்டை நந்தவனத்தில் அமர்ந்து நான் பாடியதும், சுங்கத் தண்டலகம் முன்பு மரப்பலகை இருக்கையில் நான் அமர்ந்து, கோட்டைச் சன்னல்கள் வாயிலாக என் பாட்டொலி உள்ளே செல்லுமாறு நான் பாடியதும் என் நினைவிற்கு வந்தன. ஆனால் எவ்வளவு பாடியும் பலனில்லை. வீடு முழுவதும் ஒரு ஜீவன் கூட அசையவோ, எழவோ இல்லை. மிகுந்த வருத்தத்துடன் நான் வயலினைக் கீழே வைத்து. நீண்ட தூரம் நடந்த களைப்பில், கதவின் முன்பாகப் படிக்கட்டில் படுத்து உறங்கி விட்டேன். இரவு இதமாக இருந்தது. வீட்டுக்கு முன்னிருந்த மலர்ப் பாத்திகள் இனிய நறுமணம் வீசின. தோட்டத்தின் உட்புறத்தின் நிழலில், அலங்கார நீர்த்தாரை ஒன்று, அந்த இனிய நறுமணத்திற்கு ஏற்ற இன்பச் சலசலப்பு

ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது. ஆகவே, கனவில் சஞ்சரிப்பது போலவே, கொள்ளையழகு கொண்ட நீல மலர்களையும், எழில் மிக்க, பசுமை படர்ந்த, கவர்ச்சியான புல்வெளிகளையும் பற்றியும், அங்கு வசந்தம் தவழ்ந்ததையும், ஓடைகள் அமைதியாக ஓடியதையும் இன்பப் பறவைகள் இதமாகப் பாடியதைப் பற்றியும், நான் எண்ணிக் கொண்டே, உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

நான் விழித்தபோது, காலைக் காற்றின் குளிர்ச்சி என்னை, உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆட் கொண்டது. எனக்கு முன்பே விழித்திருந்த பறவைகள், என்னைக் கேலி செய்வது போல், மரங்களில் உட்கார்ந்து கல கல ஒலி எழுப்பின. நான் குதித்து எழுந்து சுற்று முற்றும் பார்த்தேன். நந்தவனத்தில் நீர்த்தாரை இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் வீட்டில் ஒரு சிறு ஒலி கூடக் கேட்கவில்லை. பச்சை நிறத் திரைச் சீலையைத் தாண்டி நான் ஓர் அறைக்குள் உற்று நோக்கினேன். அங்கு ஒரு சோபாவும், மென்மையான, சாம்பல் நிறத் துணியால் போர்த்தப்பட்டிருந்த பெரிய வட்ட மேசையும் இருந்தன. சுவரோரமாய் நாற்காலிகள் ஒழுங்கு வரிசையில் நின்றன. மற்ற சாளரங்களின் திரைகள் அகன்றும் இறுக மூடப்பட்டிருந்தன. நீண்ட பல ஆண்டுகளாக வீட்டில் யாரும் குடியிராதது போல் தோன்றியது. திடீரென. நடமாட்டம் இல்லாத அந்த வீட்டையும் தோட்டத்தையும் நினைத்தும், முந்தின நாள் மாலையில், வேகமாக ஓடிய வெள்ளை உருவத்தை நினைத்தும், எனக்குத் திகில் ஏற்பட்டது. மேலும் யோசிக்காமல், நிழல் படர்ந்த அமைதியான நடைபாதைகள் மூலம் நான் வேகமாய் ஓடி, வாயிற் கதவில் மீண்டும் ஏறினேன். ஆனால் அந்த உயரமான இருப்புக் கிராதிக் கதவின் மேல் உட்கார்ந்தபடியே, மாட்சிமைமிக்க அந்த நகரைப் பார்த்தபோது, நான் பரவசத்தால் ஆட்கொள்ளப் பட்டவன்போல், அங்கேயே உட்கார்ந்து விட்டேன். காலைக் கதிரவன், வீட்டுக் கூரைகள் மீதும், நீண்ட, நிசப்தமான, தெருக்கள் வழியாகவும், தன் ஒளியைப் பெய்தது. என் இதயத்தில் பொங்கிய இன்ப உணர்ச்சியில் நான் வாய்விட்டுக் கூவினேன். புத்தார்வம் பொங்க, நான் துள்ளி ஓடினேன்.

ஆனால் புதிதான இப் பெரிய நகரத்தில் நான் எங்கு செல்வது? இரவில் ஏற்பட்ட அனுபவமும், அந்த அழகியின் இத்தாலியப் பாட்டும் என் தலையில் ஏதாது சுழன்று கொண்டிருந்தன. ஆள் நடமாட்டம் இல்லாத வெளியிடத்தின் நடுவில் இருந்த நீர்த் தாரையின் கற்சுவர் மீது உட்கார்ந்து, குளிர்ச்சியான நீரில் என் கண்களைக் கழுவி, ஒரு பாட்டுப் பாடினேன்:

சின்னஞ் சிறியதோர் காட்டுப் பறவையாய்
நானிருந் தாலதைப் பாடிடுவேன் ;
மின்னுஞ் சிறகுகள் மட்டும் இருந்திடின்
விண்வெளி யெல்லாம் பறந்திடுவேன் !

"கதிரவனின் முதல் சுடரைக் கண்ட வானம்பாடி போல் உற்சாகமாகப் பாடுகிறாயே", என்று என் கண்ணில் படாமலே, நீர்த்தாரை அருகில் வந்திருந்த ஓர் இளைஞர் வியந்து பாராட்டினர். எதிர்பாராமல், ஜெர்மன் மொழியில் ஒருவர் பேசுவதைக் கேட்ட எனக்கு, என் சொந்தக் கிராமத்தில் திருச்சபை மணி ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு என்னை அழைத்தது போன்ற ஒரு நிறைவு ஏற்பட்டது. "என் சொந்த நாட்டுச் சோதரனே. கடவுள் ஆசி உனக்கு உரித்தாகுக," என்று, கற் சுவரிலிருந்து குதித்து, இன்ப மேலீட்டில் அவனை வாழ்த்தினேன். அந்த இளைஞன், சிரித்துக் கொண்டே மேலும் கீழும் என்னைப் பார்த்தான். "இங்கு, ரோமாபுரியில் என்ன செய்து கொண்டிருக்கின்றாய் ?" என்று அவன் என்னைக் கேட்டான். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் என்ன பதில் சொல்ல வேண்டுமென்று எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று. ஆயினும் எழில் மிக்க சீமாட்டியின் பின்னால் நான் ஓடிவந்தேன் என்று சொல்ல விரும்பவில்லை. ஆகவே உலகைச் சுற்றிப் பார்க்க, உலவிக் கொண்டிருக்கின்றேன் என்று கூறினேன். "அப்படியானால், நாம் இருவரும் ஒரே வேலையில் தான் ஈடுபட்டுள்ளோம். நானும் அதையேதான் செய்து கொண்டிருக்கின்றேன். உலகைச் சுற்றிப் பார்த்து, அதில் சிறிதளவேனும் என் ஓவியத்தில் படம் பிடித்துக் காட்டுவது தான் என் தொழில்," என்று அந்த இளைஞன், சிரித்துக் கொண்டே கூறினான். "என்ன, நீ ஓர் ஓவியனா?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டேன். ஓவியன் என்ற சொல்லைக் கேட்டதும், லியோனர்டு, கிடோ ஆகியோர் நினைவு எனக்கு வந்தது. ஆனால் நான் பேசுவதற்கே, அந்த நண்பன் அவகாசம் தரவில்லை. "நீ என்னுடன் வந்து சிற்றுண்டி அருந்த வேண்டும். அப்பொழுது பார்த்தவர் வியக்கும் வண்ணம் உன்னை நான் படம் எழுதுவேன்" என்று அவன் கூறினான். நானும் விரும்பி இசைந்தேன். அக்கலைகளுடன் நடந்து சென்றேன். தெருக்கள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன. இங்குமங்கும் ஒரு பலகணி திறந்திருந்தது. குளிர்ச்சியான காலைக் காற்றை அனுபவிக்கத் தூக்கம் இன்னமும் முழுதும் கலையாத ஒரு முகம் இங்குமங்கும் பலகணி அருகே தோன்றி, வெண்ணிறக் கைகள் இரண்டை வெளியுலகுக்குக் காட்டியது.

நீண்ட நேரம், சுற்றிவளைத்த, குறுகிய, கலையிழந்த சந்துகள் வழியாக அவன் என்னை அழைத்துச் சென்றான். இறுதியில்,

புகை படர்ந்த ஒரு பழைய வீட்டை அடைந்து அங்கு ஒய்வெடுத் தோம். அங்கு, வானத்தையே எட்டிப் பிடிக்கப் போவது போல், ஒன்றன்பின் ஒன்றுகப் பல படிக்கட்டுகளில் ஏறிச் சென்றோம். இறுதியில், கூரைக்கு அடியே, ஒரு கதவருகே நின்றோம். எதையோ தேடி, தன் சட்டைப் பை ஒவ்வொன்றையும் ஓவியன் துளாவினான். கதிரவன் உதயத்தைக் காணக் காலையில் அறையை விட்டு வெளியே செல்லும்போது, சாவியை உள்ளே வைத்துக் கதவைச் சாத்தியது அவன் நினைவுக்கு வந்தது. அவன் கவலைப்படாமல் தன் தோள்களைக் குலுக்கியவாறே, சாத்திய கதவில் ஓங்கி உதைத்து, அறையுள் நுழைந்தான்.

அது நீளமான, பெரியதோர் அறை. அறையில் இருந்த சாமான்களை அப்புறப்படுத்தினால், அங்கேயே ஒரு பெரிய நடனக் கேளிக்கைக்கு ஏற்பாடு செய்யக் கூடிய அளவுக்குப் பெரிய அறை. ஆனால் அறையில் காலணிகளும் காகிதங்களும், ஆடை களும் தலைகீழாகச் சாய்க்கப்பட்ட வண்ணக் கலசங்களும், அலங் கோலமாகச் சிதறிக் கிடந்தன. கிராமவாசிகள் பேரிக்காய்களைப் பறிக்கப் பயன்படுத்துவது போன்ற ஒரு பொறி, அறையின் நடுவில் இருந்தது. சுற்றிலும் சுவரில் பல பெரிய சித்திரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு நீளமான மர மேசை மீது ஒரு தட்டு இருந்தது. அதில், சாயப் பூச்சு பக்கத்தில், வெண்ணெய் யும் ரொட்டியும் இருந்தன. பக்கத்திலேயே மது பானப் புட்டி ஒன்று இருந்தது.

"என் சொந்த நாட்டுச் சோதரனே, முதலில் உண்டு பருகு," என்று உவகையுடன் ஓவியன் என்னை அழைத்தான். ரொட்டித் துண்டில் வெண்ணெய் தடவப் போனேன். ஆனால் கத்தி எதுவும் கண்ணில் படவில்லை. மேசையில் காகிதக் குவியலில் நீண்ட நேரம் தேடியபின், ஒரு சிப்பத்திற்கடியில் ஒரு கத்தி கிடைத்தது. ஓவியன் சன்னல் கதவைத் திறந்தான். குளிர்ச்சியான காலைக் காற்று அறைக்குள் துள்ளி விளையாடியது. நகரத்தைத் தாண்டி, தொலைவில் மலைச் சாரல்வரை, கவர்ச்சிமிக்க காட்சி என்னை ஆட்கொண்டது. காலைக் கதிரவனின் ஒளி, வெண்ணிற வீடுகள் மீதும், பசுமையான திராட்சைத் தோட்டங்கள் மீதும் பெய்தது. "மலைகளுக்கு அப்பால் உள்ள, நம் ஜெர்மனியின் குளிர்ச்சியான பசுமை என்றென்றும் வாழ்க!" என்று ஓவியன் உவகையுடன் வாழ்த்திக் கொண்டே, மதுபானப் புட்டியிலிருந்து குடித்து விட்டு, அதை எனக்கும் நீட்டினான். நான் மரியாதையாக அவனுக்கு நன்றி செலுத்தி விட்டுத் தொலைவில் இருந்த சொந்த நாட்டை ஆயிரம் முறை மனத்திற்குள் வாழ்த்தினேன்.

இதற்கிடையில், சித்திரச் சட்டத்தை ஓவியன் சன்னலருகே தள்ளினான். அச் சட்டத்தின்மீது அகலமான காகிதம் விரிக்கப்

பட்டிருந்தது. அந்தக் காகிதத்தில் கருப்புப் புள்ளிகளோ மட்டும் கொண்டே ஒரு பழைய குடிசை அழகாக வரையப்பட்டிருந்தது. அந்தக் குடிசையில், எழில்மிக்க, உற்சாகம் நிறைந்த, அதே சமயத்தில் அனுதாபமும் மனச் சோர்வும் படர்ந்திருந்த, மேரி மாதாவின் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அவள் காலடியில், சிறு வைக்கோல் பரப்பில், குழந்தை ஏசு, இனிய புன்சிரிப்புடன், ஆனால் பெரிய, கவலைபடிந்த கண்களுடன் படுத்திருந்தது. குடிசைக்கு வெளியே, படியில், இரண்டு மேய்ப்பர் சிறுவர்கள், தங்கள் கம்புகளுடனும் பைகளுடனும் மண்டியிட்டுக் கொண்டிருந்தனர். "இதோ பார்; இந்த ஆடு மேய்க்கும் சிறுவர்களில் ஒருவனுக்கு உன்னுடைய முகத்தைத் தர விரும்புகிறேன். உலகெங்கும் மக்களுக்கு உன்முகம் அறிமுகமாகும். நாம் இருவரும் இறந்து புதைக்கப்பட்டு, நற்பேறு பெற்ற இந்தச் சிறுவர்களைப் போல், வந்தனைக்குரிய மேரி மாதா முன்பும், அவள் திருக்குமாரன் முன்பும் மண்டியிட்டுக் கொண்டிருக்கையில், நீண்ட நாட்களுக்குப் பின்னும், நம் முகங்களைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி கொள்வார்கள்," என்று ஓவியன் கூறினான். இவ்வாறு கூறிக்கொண்டே, ஒரு பழைய நாற்காலியை அவன் பிடித் திழுத்தான். அதைத் தூக்கிப் பிடிக்கும்போதே, நாற்காலியில் பாதி முறிந்து, அவள் கையில் வந்துவிட்டது. ஆனால் முறிந்த பாதியை அவன் நாற்காலியில் பொருத்திவைத்து, அது நன்றாகப் பொருந்த, தரையில் ஓங்கி அடித்துச் சட்டத்திற்கு முன்பு அதைத் தள்ளிப்போட்டு, அதில் உட்கார்ந்து, ஒரு பக்கமாய் என் முகத்தைத் திருப்பிக்கொள்ளுமாறு கூறினான். ஆடாமல், அசையாமல், அப்படியே நான் சில நிமிடங்கள் உட்கார்ந்திருந்தேன். ஆனால் சில நிமிடங்களுக்குமேல், அப்படி உட்கார்ந்திருப்பதை இனியும் சகித்துக்கொள்ள முடியாது என்று தோன்றியது. என்னை அறியாமலேயே, நான் இடதுபுறமும் வலதுபுறமும் அசைந்துகொடுத்தேன். எனக்கு எதிராக ஒரு கண்ணாடி தொங்கியது. அதில் நான் என் உருவத்தையே உற்றுநோக்கிப் பொழுதுபோக்க, என் உருவத்தையே கேலிசெய்து கோணங்கி செய்து கொண்டிருந்தேன். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஓவியன் இறுதியில் உரக்கச் சிரித்து, இனி நான் எழலாமென்று சைகை காட்டினான். ஆடு மேய்க்கும் சிறுவனின் தோள் மேல் என் முகத்தின் படம் பொருத்தப்பட்டிருந்தது. அப்படம் என்னை அப்படியே உரித்துவைத்தாற்போல் இருந்ததால், எனக்கு மிகுந்த திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

குளிர்ச்சியான காலைக் காற்றில், ஒரு பாட்டின் மெட்டை முணு முணுத்துக்கொண்டே, சாளரம் வழியாக எழில்மிக்க காட்சியை அவ்வப்போது பார்த்துச் சுவைத்துக்கொண்டே, ஓவியன்

தொடர்ந்து சித்திரம் தீட்டிக்கொண்டிருந்தான். நான் இன்னு மொரு சொட்டித் துண்டை வெட்டி, வெண்ணெய் தடவிச் சாப்பிட்டுக்கொண்டு, படங்களைப் பார்த்துக் கொண்டே, அறையில் குறுக்கேயும் நெடுகவும் நடந்து கொண்டிருந்தேன். அப் படங்களில் இரண்டு குறிப்பாக என்னைக் கவர்ந்து மகிழ்ச்சி ஊட்டின. "இவற்றையும் நீதான் வரைந்தாயா?" என்று கேட்டேன். "நாசமாய்போக! அவை ஓவியக் கலை வல்லுநர்களாகிய லியனர்டோ, டாவின்ஸி, கிடோரேனி ஆகியோரால் வரையப்பட்டவை. ஆனால் அதெல்லாம் உனக்கு எப்படித் தெரியப் போகிறது?" என்று அவன் பதிலுக்குக் கேட்டான். அந்தக் கடைசிச் சொல் என்னை உறுத்தியது. "என் சட்டைப் பையை நான் அறியும் அளவுக்கு, அந்த இரு ஓவிய வல்லுநரையும் நன்கு அறிவேன்," என்று சாந்தமாகவும் சாவதானமாகவும் கூறினேன்.

அவன் கண்களை விரித்து என்னை வெறித்துப் பார்த்தான். "நீ கூறுவதன் பொருள் என்ன?" என்று கேட்டான்.

"இரவு பகலாகக் குதிரைமீதும் கோச்சு வண்டியில் நான் அவர்களுடன் சவாரி செய்தவனல்லவா? என் தொப்பியைச் சுற்றிக் காற்று ஊளையிட்டதே. அவர்கள் இருவரும் மதுபான விடுதியிலே காணமற்போக, நான்மட்டும் அவர்கள் கோச்சு வண்டியில் வேகமாகச் சவாரி செய்யவில்லையா? பிரம்மாண்டமான கற்கள்மீது, அக் கோச்சுவண்டி, குண்டுபோல் விரைந்தது. பிறகு....."

நான் அறிவை இழந்துவிட்டதுபோல என்னை ஓவியன் வெறித்துப் பார்த்தான். திடீரென உரக்கச் சிரித்துக் கொண்டே அவன் கூவினான்: "போதும், போதும்; எனக்குப் புரிகிறது. கிடோ, லியனர்ட் என்ற இரு கலைஞர்களுடன் நீ பயணம் செய்தாயா?" ஆம் என்று நான் கூறவே, அவன் துள்ளி எழுந்து, என்னை மேலும் கீழும் உற்றுநோக்கினான். என்னைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே அவன் கூறினான்: "இறுதியில் இப்பொழுது எனக்கு விளங்குகிறது. நீ வயலின் வாசிப்பாயல்லவா?" நான் என் சட்டைப்பையைத் தட்டி, உள்ளிருந்த வயலின் கணீரென்று பதில் ஒலிக்கச் செய்தேன். உண்மையில், ஒரு ஜெர்மன் சீமாட்டி, இரண்டு கலைஞர்களும், அவர்களுடன் ஒரு வயலின் பாடகரும், வந்தனரா என்று கேட்டு, ரோமில் மூலைமுடுக்கெல்லாம் தேடிக் கொண்டிருந்தாள்," என்று அவன் கூறினான். "ஜெர்மனியிலிருந்து ஒரு சீமாட்டியா? அவளுடன் போர்ட்டரும் வந்தானா? உனக்குத் தெரியுமா?" என்று மிகுந்த பரபரப்புடன் கேட்டேன். ஓவியன் இதமாகப் பதில் கூறினான்: "எனக்கு

விவரங்கள் தெரியாது. ஒரு பெண் நண்பர் வீட்டில் அவளை இரண்டு மூன்று தடவை நான் பார்த்தேன். அந்த நண்பர் இங்கு நகரத்தில் வசிப்பவரல்ல. "உனக்கு அந்தச் சீமட்டியைத் தெரியுமா?" என்று கேட்டுக்கொண்டே, ஒரு மூலையில் நின்ற சித்திரத்தை மூடியிருந்த திரையை அவன் விலக்கினான்.

பாதாளச் சிறையில் ஒருவன் அடைபட்டுக் கிடக்கும்போது, திடீரென ஒரு சாளரம் திறந்து, அவன்மேல் சூரிய வெளிச்சம் பாய்ந்தது போன்றதோர் உணர்வு என்னை ஆட்கொண்டது. அச் சித்திரத்தில் காணப்பட்டது, என் அன்புக்குரிய அழகுச் சீமாட்டிதான். கருப்பு வெல்வெட் உடையணிந்து, ஒரு தோட்டத்தில் நின்று, ஒரு கையால் முகத்திரையை விலக்கிக் கொண்டு, எழில்மிக்க காட்சி ஒன்றை இன் முகத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் அவள். நான் அதைப் பார்க்கப் பார்க்க, அத் தோட்டம் கோட்டையின் தோட்டம் போலவே தோன்றியது. மலர்களும் இலைகளும் காற்றிலே மென்மையாக ஆடிக் கொண்டிருந்தன. தொலைவில் சுங்கத் தண்டலகம் காணப்பட்டது. பெரிய சாலை வளைந்து பசுமையான நிலப் பரப்புடன் கலந்தது. டான்யூப் ஆறும், தொலைவில் நீல மலையும் சித்திரத்தில் காட்சியளித்தன.

"அவளே தான்! அவளே தான்" என்று நான் கூவி, என் தொப்பியைப் பற்றிக் கொண்டு, தலை தெறிக்கக் கதவைத் தாண்டிக் கீழே ஓடினேன். மாலையில் நான் மீண்டும் வரவேண்டுமென்றும் அப்பொழுது நமக்கு மேலும் சில உண்மைகள் தெரிய வரக் கூடுமென்றும், அதிர்ச்சி அடைந்த அந்த ஓவியன் என்னை நோக்கிக் கூறியது மட்டும் என் காதிலே ஒலித்துக் கொண்டிருந்தது.

லுட்விக் ஊலன்ட்

அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி

லுட்விக் ஊலன்ட் (1787 — 1862), ஒரு கவி; அறிஞர்; அரசியல் வாதி. பாமரரையும் கவரும் முறையில் எழுதப்பட்ட அவர் கவிகள் மூலம், செல்வாக்கு இழந்து கொண்டிருந்த வீர காவிய இயக்கத்தின் (Romantic movement) கடைசிப் பிரதிநிதிகளில் ஒருவராஞர். பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், பின்னர் டீபிங்கனில், சிறப்பு மாணவனுகவும், அவர் பழைய ஜெர்மன் மொழியையும் கவிதையையும் பயின்ருர். அவருடைய அரசியல் நடவடிக்கைகளாலும், முற்போக்கான கொள்கைகளினுலும், தம் தொழிலில் பல்வேறு இடையூறுகளை அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது, 1848ஆம் ஆண்டு ஜெர்மன் புரட்சிக்குப் பின், பிராங்பர்ட் தேசியப் பேரவையில் உறுப்பினராஞர். ஜெர்மனி முழுவதற்கும் ஒரு புதிய அரசியல் சட்டத்தை வகுக்கும் பொறுப்பு பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஜனநாயகப் பிரதிநிதித்துவ முறைப்படி மக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதும், அதுவரைக் கட்டுக்கோப்பாக இராமல் ஒன்றேடொன்று உறுதியற்ற தொடர்பு கொண்டிருந்த பல்வேறு ஜெர்மன் மாநிலங்களை, ஜெர்மன் ரைஷ் அமைப்பில் இணைத்து ஒன்று சேர்ப்பதும், அப் பேரவையின் நோக்கமாய் இருந்தது. ஆஸ்திரியா முழுவதும் ஜெர்மன் தேசிய அரசில் இணைக்கப் பட வேண்டுமென்று நம்பிய 'மாபெரும் ஜெர்மன் கட்சி உறுப்பினராக, ஊலன்ட் இருந்தார். ஆயினும் புரட்சியால் உடனடியான நன்மைகள் எதுவும் ஏற்பட வில்லை. தேசியப் பேரவை ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த போதே, தனித்தனி ஜெர்மன் மாநிலங்கள், தங்கள் பழைய நிலைக்கே திரும்பின. பிராங்க்பர்ட் பேரவையில் ஊலன்ட் நிகழ்த்திய உரை இந்தப் பகுதியில் தரப்பட்டுள்ளது. அவருடைய முற்போக்கான, ஜனநாயக நம்பிக்கைகளுக்கு இந்த உரை சிறந்ததொரு சான்ருகும்.

கனவான்களே, மக்களின் பிரதிநிதிகள் கூடி, ஜெர்மன் அரசுத் தலைவரை அவ்வப்போது தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கொள்கையை நான் ஆதரிக்கின்றேன். ஆளும் இளவரசர்கள் தான் அரசுத் தலைவர் பதவிக்கு வரத் தகுதி உடையவர்கள் என்று நிபந்தனை விதித்த பிரேரணையின் பகுதியை நான் பேரவையின் சென்ற கூட்டத் தொடரில் எதிர்த்துத் தகுதி நிர்ணயம் செய்யும் போது, பல பேரையும் அதில் சேர்க்கும் வகையில், விதிகள் வகுக்க வேண்டுமென்று வற்புறுத்தினேன். எனக்கு ஆதரவு

கிடைக்குமென்று நான் அப்பொழுதே எதிர்பார்க்கவில்லை. இப் பொழுதோ, பிரேரணை, தன் மூல வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஆகவே நான் இப்பொழுது செய்ய வேண்டியது ஒன்று தான். அரசுத் தலைவர் பதவி, தந்தையிடமிருந்து மகனுக்கு என்று பரம்பரை அடிப்படையில் செல்ல வேண்டும் என்ற யோசனையை நான் எதிர்க்கின்றேன். ஜெர்மன் மாநிலங்களில் குறிப்பிட்ட ஒரு மாநிலத்திற்கும், ஜெர்மன் மக்களில் குறிப்பிட்ட ஓர் இனத்திற்கும், தனியான சலுகை காட்டத் தான் அந்த யோசனை உதவும். ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜெர்மன் நாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஆஸ்திரியாவை விலக்குவதையும் நான் எதிர்க்கின்றேன்.

நான் நீண்ட உரை நிகழ்த்த விரும்பவில்லை. நம் இளமைக் கனவுகள் பற்றி நாம் இப்பொழுதெல்லாம் பேசி வருகிறோம். என்னைப் பொறுத்தவரை, என்னை இன்றும் ஒரு கனவு—1848-ஆம் ஆண்டு வசந்த காலத்தின் கனவு—ஆட்கொண்டுள்ளது என் பதை ஒத்துக் கொள்கின்றேன். அரசரைப் பரம்பரை அடிப் படையில் நியமிப்பதும், அவர் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்ற முறையும், இப்பொழுது தனித் தனி ஜெர்மன் மாநிலங்களில் வழங்கி வரும் சட்ட அமைப்புக்குட்பட்ட முடியாட்சி முறையை ஜெர்மன் நாட்டுத் தலைவர் தேர்தலுக்கும் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையில் எழுந்தவை-பிறப்பால் அரசராகிக் குடிமக்களுக்குப் பதில் கூற வேண்டிய பொறுப் பில்லாத நிலை, அரசின் ஒரு சீரான தொடர்ச்சியான ஆதிக்கத்தை தனியொரு மனிதராய் உருவகப் படுத்துவதாகும். இந்தத் தொடர் உருவகத் தோற்றங்களின் தொகுப்பே அரசர். அவர் ஆட்சி செலுத்துவதாக உள்ள கற்பனையில், இயற்கை வாய்மை இல்லை. அவர் பதவிக்கு வருவது, அவருடைய தனிப்பட்ட திறமைகளால் அல்ல; பரம்பரை அடிப்படையில் தந்தையின் பதவிக்கு மகள் என்ற முறையில் தான். ஆகவே அவருடைய அதிகாரம் சரியான வழியில் பயன்படுத்தப் படுகிறதா என் பதைக் கவனிக்கப் பொறுப்புள்ள 'கவுன்சிலர்கள்' வேண்டும். இத்தகைய ஆதிக்கத்தின் கீழ், சுதந்திர ஒழுக்க நெறியும் மனப் பாங்கும் தழைக்க முடியாது. அத்தகைய சுதந்திர மனப்பாங்கு உடையவர் தன் ஆற்றலை வெளிப்படுத்த விரும்பினால், உயிர்ப் பாவைக் காட்சியில் ஒரு காட்சிப் பொருளாக இருக்கும் இக்கட் டான நிலையை மீற அவர் விரும்பினால், சட்ட திட்ட அமைப்பு முறைகளுடன் அவர் மோதவேண்டும். சட்ட அமைப்புக்குட்பட்ட முடியாட்சி முறை, இங்கிலாந்தில் வரலாற்றுடன் வளர்ந் துள்ளது. அங்கிருந்து பெயர்த்து, மற்ற நாடுகளிலும் நடப்

பட்டுள்ளது. எல்லாக் காலத்துக்கும் ஏற்ற முறை இதுதான் என்று ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. அது ஜெர்மனியில் தோன்றிய முறையல்ல, அரச வம்சம் திறமையாக இயங்கிய வரை, தந்தைக்குப் பின் மகனென்ற முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜெர்மன் அரசர்கள் வேறு வகையானவர். இந்த அரசர்கள் ஆர்வமிக்க, ஆக்கம் படைத்த, தலைவர்களாய், ஒளிவீசும் கண் களுடன் கம்பீரத் தோற்றம் கொண்டவர்களாய், நல்லது செய் தாலும் கெட்டது செய்தாலும், வல்லமை மிக்கவராய், விளங் கினர். ஆனால் பகர ஆட்சியாளர், தம் உத்தமமான முடிவுகளைச் செயல்படுத்துவதைத் தடுக்கும் ஒரு முறைதான், ஜெர்மனி முழுவதற்கும் ஏற்ற முன் மாதிரியாக நமக்கு எடுத்துக் காட்டப் படுகிறது.

மக்கள் சக்தியை நம்புகின்ற மகத்தான ஓரியக்கம், தன் அடிப் படை உணர்வுக் கேற்ற ஒரு முறையை உருவாக்க வேண்டும். மரத்தின் உச்சி நிலையில் முடியாட்சி முறையை ஒழித்து விட்டுக் கீழே நிலையில் அம்முறை நீடிக்கச் செய்வது, ஒரு முரண்பாடாகும் என்று அண்மையில் கூறப்பட்டது. நான் இன்னொரு முரண் பாட்டைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்போதுள்ள ஜெர்மன் தேசிய வாழ்வின், உயர் குலப் பகுதியிலிருந்தோ, முடியாட்சி, வம்ச ஆட்சிப் பகுதியிலிருந்தோ, எழுந்ததா நமது அரசியல் சீர்திருத்தம்? நிச்சயமாக இல்லை. ஜனநாயகப் பகுதி யிலிருந்து தான் அது எழுந்தது. ஆகவே வேர்கள், ஜனநாயக வேர்கள் தான்; மரத்தின் உச்சி, வளர்வது, கிளைகளிலிருந்து அல்ல; வேர்களிலிருந்து தான். பரம்பரை அரசாட்சிப் பருந்துகள் வளரும் இடத்தை, புது ஜெர்மன் கருவாலி மரத்தின் உச்சியில் ஒட்டு சேர்த்தால், அது மரத்தின் இயல்பான வளர்ச்சிக்கு ஒத்த தாய் இராது. இன்று நிலவும் அரசியல் சித்தாந்தங்களையும் கோஷங்களையும் மனத்திற் கொண்டு பார்க்கும்போது. ஆட்சி முறைகளிடையே பெரும் வேறுபாடு இருப்பது போல் தோன்று கிறது; ஆனால் நடைமுறையில் அந்த அளவு வேறுபாடு இருப்ப தில்லை. ஆகவே தனி ஜெர்மன் மாநிலங்களின் அரசியல் சட்டங்கள், இன்றையச் சூழ்நிலையில் ஜனநாயகத் தேவைகளை நிறைவு செய்யும் நிலையை நெருங்கி வரும், அரசியல் வர்க்கச் சலுகைகள் ஒடுக்கப் படுவதாலும், முற்போக்கான தேர்தல் முறைகள் புகுத்தப் படுவதாலும்.

ஜெர்மன் நாட்டின் மகத்தான வளர்ச்சி, சிறந்த அரசியல் தலைவர்களை முன்னணிக்குக் கொண்டுவருமென்றும், இனிமேல், மிக உயர்ந்த, சிறந்த தலைவர்கள் தான், ஒற்றுமையான ஜெர்மன் அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்பார்கள் என்றும் நான் ஒரு காலத்தில் கனவு கண்டேன். அது கனவு என்று நான் ஒத்துக்

கொள்கிறேன். ஆனால் இது தேர்தல் முறையில்தான் சாத்திய மாகுமே யொழிய, தந்தையிடமிருந்து மகனுக்குப் பதவி என்ற பரம்பரை முறையில் அல்ல. விரிந்து பரந்த வெளியிடம் இங்கு நம்மை வரவேற்கின்றது. உண்மையான, துணிவான சிந்தனைக்கு இங்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. இச் சிந்தனையை வரவேற்கப் பக்குவமான நிலையில் ஜெர்மன் மக்கள் இருக்கின்றனர் என்று நான் நம்புகிறேன். வம்ச செல்வாக்கும் பரம்பரைப் பெருமையும் இல்லாமல் தனியொரு மனிதன் என்ன சாதித்துவிட முடியுமென்று நீங்கள் கேட்கலாம். ஆனால், ஜெர்மன் மக்களின் ஆதரவு நமக்குத் துணையாய் இருந்த அந்த நாட்களில்—மக்களைச் சார்ந்தவர்கள் என்ற உறவை அரசியல் தலைவர்கள் ஒதுக்கிவைக்கும் நிர்ப்பந்தம் இல்லாத அந்த நாட்களில்—வன்முறைச் சக்திகளை அடக்கியாண்டு, உணர்ச்சிப் பெருக்கின் வெறியாட்டங்களைக் கட்டுப்படுத்தி, ஆக்கபூர்வமான வழிகளில் திருப்பி விடவல்ல முறையில், சாதாரணக் குடிமகனின் தூய எளிமையையும், பண்பட்ட உள்ளத்தின் உயர்ந்த நெறியினையும், ஒருங்கே இணைத்த ஒரு தலைவனை, அந்த நாட்களிலேயே நாம் தேர்ந்தெடுத்திருந்தால், ஜெர்மன் நாட்டுக் குடிமக்கள் அனைவருமே அவருடைய வம்சத்தினராக அமைந் திருப்பார்கள்.

முதல் அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்து, அதன்பின் அவர் வம்ச வழியில் அப் பதவி செல்வதானால், அந்த முதல் தேர்தல், உண்மையில் இறுதித் தேர்தலாகத்தான் இருக்கும். இப் பிரச்னையில் வாக்களிக்கத் தங்களுக்குள்ள உரிமையைத் துறப்பதாகும். அவ்வாறு அவ்வுரிமையைக் கைவிடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். எந்த உணர்வின் அடிப்படையில் நீங்கள் இப் பேரவைக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களோ, அந்த உணர்வுக்குத் துரோகம் செய்வதாகும், நீங்கள் அந்த வாக்குரிமையைத் துறப்பது. புரட்சியும் வம்சவழி வரும் மாமன்னரும்;—நரைமுடியுடைய ஓர் இளைஞனுக்குத்தான் இதை ஒப்பிடமுடியும்.

பழைய, ரணமான புண்ணில், மீண்டும் கைவைத்து, ஆஸ்திரியாவை விலக்கியுள்ளது பற்றி குறிப்பிட விரும்புகிறேன். **விலக்கம்,** அதுதான் பொருத்தமான சொல். எனென்றால் ஆஸ்திரியா இல்லாமல் வம்சவழி ஜெர்மன் பேரரசு முடிவு செய்யப்பட்டுவிட்டால், ஆஸ்திரியாவை ஜெர்மன் அரசில் எப் பொழுதாவது சேர்க்கமுடியும் என்று எண்ணுவதற்கு வாய்ப்பு இல்லை. இங்கு நம்முடைய தொடக்க நாட்களை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். ஆஸ்திரியா கைவிடப்படுமென்று எவர் எண்ணியிருப்பார்? ஜெர்மன் கொடிகளை ஏந்தி, சுதந்திரப் போராட்டத்தில் தங்கள் ஆயுதங்களைத் தாங்கி, ஆஸ்திரியப்

பிரதிநிதிகள் நம் பேரவைக்குள் நுழைந்து, நம் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றபோது—இன்னும் ஓராண்டு செல்வதற்குள், ஆஸ்திரியப் பிரதிநிதிகள் இந்த அவையிலிருந்து துச்சமாக வெளியேறுவார்கள் என்று எவராகிலும் கனவு கண்டிருப்பார்களா? ஜெர்மனியின் ஒற்றுமையை நிலைநாட்டவேண்டும். ஆனால் அந்த ஒற்றுமை வெளிச் சின்னங்களில் அடங்கியதல்ல. இல்லாவிடில், ஜெர்மன் பேரரசுச் சின்னத்திலிருந்து ஒவ்வொரு பாளம் பாளமாக உரித்து எறிந்து, இறுதியில் ஜெர்மனி, லீஷ்டென்ஸ்டீன் உள் அடங்கிநிற்கும் நிலையை அடையக்கூடும். உண்மையான இணைப்பு, ஜெர்மன் நாடுகள் அனைத்தையும் தழுவ வேண்டும். மூன்றில் ஒருபகுதியை வெளியில் ஒதுக்கிவிட்டால், அது குழப்பமே ஒழிய இணைப்பு ஆகாது. சில சமயங்களில், ஆஸ்திரியப் பிரதிநிதிகள் இப் பேரவையில் பேசியபோது, அவர்கள் பேசியது என் மனத்திற்கு ஒப்பவில்லை என்ற போதிலும்கூட, டைரால் மலைகளிலிருந்தோ, ஏட்ரியாட்டிக் கடல் அலையிலிருந்தோ,* குரல் ஒலித்தது போன்ற பரவசம் எனக்கு ஏற்பட்டது. ஆஸ்திரியாவை விலக்கிவிட்டால், நம் பார்வையே குறுகிவிடும். மேற்குப்புற மேட்டு நிலங்கள் பின்னேக்கிச் செல்லும். டான்யூப் ஆற்றின் நிறைந்த பரந்த நீரோட்டம் ஜெர்மன் ஆற்றங்கரைகளைத் இனித் தழுவாது. அரசியல் திட்டங்களை வகுத்துத் தேசப் படங்களை அளப்பது மட்டும் போதாது. நாட்டின் அடிப்படை உணர்வை நாம் கிரகிக்க வேண்டும். ஜெர்மன் ஆஸ்திரியாவின் வளம்மிக்க உயிர்ச்சத்தை உணர, உன் உள்ளத்தைத் திறக்கவேண்டும். ஆஸ்திரியாவை விலக்குவதால், அதிகாரம், நிலப்பரப்பு, மக்கட்தொகை ஆகிய வற்றில் நமக்கு ஏற்படும் இழப்பு பற்றி ஏற்கெனவே போதுமான அளவு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒன்று மட்டும் நான் சேர்த்துச் சொல்ல விரும்புகின்றேன். ஆஸ்திரியாவில் உள்ள எட்டு மிலியன் ஜெர்மன் மக்களிடையே ஓங்கியுள்ள ஆன்மீக சக்திகளையும் உணர்ச்சி வளங்களையும் ஜெர்மனி இழக்க வேண்டியிருக்கும்.

நாம் இன்று எழுப்ப விரும்புவது, தகைத் திருக்கோயில், பண்டைக்காலக் கட்டட வல்லுநர், பிரும்மாண்டமான திருக் கோயில்களை எழுப்பும் பணியில் ஈடுபட்டபோது—இம் மகத்தான பணியைச் செய்து முடிக்கத் தங்களால் இயலுமா என்ற நிச்சயம் இல்லாமல், ஒரு தூபியை முடித்துவிட்டு, மற்றொரு தூபிக்கு அடித்தளம் இடுவார்கள். இன்று பிரஷ்ய நாட்டின் தூபி வானை முட்டுகிறது. ஆஸ்திரிய நாட்டுத் தூபியையும் பக்கத்திலே எழுப்ப நாம் இடம்விட்டு வைப்போம். இறுதியாகக் கூறுகிறேன், கண்பர்களே. வம்சாவழி அதிகாரத்தை நிராகரியுங்கள். ஆதிக்கச் செருக்குற்ற ஓர் அரசை உருவாக்காதீர்கள். ஆஸ்திரியாவை உதறித் தள்ளாதீர்கள். வாக்குரிமையைக் காப்பாற்றுங்கள்! அது மக்களின் விலைமதிப்பற்ற உரிமை. அரசின் புது அதிகாரத்தின் தோற்றுவாய் மக்கள் என்பதற்காக இன்று எஞ்சியுள்ள ஒரே ஒரு சின்னம் அதுதான். ஜனநாயக எண்ணெயின் ஒரு முழுச் சொட்டால் திரு முழுக்காட்டப்படாத எந்தத் தகையும் ஜெர்மனிமீது ஒளிவீச முடியாது இது உறுதி.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

தமிழாக்கம் :

எம். அப்துல் வஹ்ஹாப், எம்.ஏ.,பி.டிஎச்.

முன்னுரை

இயல்பாகவே, இலட்சிய வாதம், தொன்மை, இலக்கிய மரபு, (வாழ்க்கையின் உண்மை நிலைகளைப் பொருட்படுத்தாத) கற்பனை இவை அனைத்தின் காலமும் பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்காலக் கட்டம், வெளிப்புறத் தோற்றத்தில் கெதெயின் மரணத்தோடு (1732) முடிவடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் வேகமான புறநிலை ஆராய்ச்சித் துறையின் எழுச்சி, இலட்சிய வாதத்தின் சிதைவுக்கும், மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்ததற்கும் காரணமாக இருந்தது. இப்பொழுது தத்துவ இயலர் தனி மனிதனின் உள்ளார்ந்த வாழ்வுபற்றி அக்கறைப் படலாயினர்; அல்லது மார்க்ஸிஸம் என்ற வடிவில் அரசியல் வெடி மருந்தின் ஆற்றலைப் பெற்ற உலகாயத வரலாற்றுத் தத்துவத்துக்கு அடித்தளம் அமைத்து வந்தனர். விஞ்ஞான மேம்பாட்டின் உடனடியான நடைமுறை விளைவுகள் என்னவென்றால் பொருளாதாரம், தொழில் நுட்ப வளர்ச்சியையும், ஆலைத்தொழிலையும் சார்ந்திருக்கவேண்டி வந்ததுதான். இது சமுதாயத்தின் அமைப்பையே மாற்றி நெருக்கடிகளையும் சிக்கல்களையும் தோற்றுவித்தன. அந்த நூற்றாண்டின் தன்மையையும் போக்கையும் தொன்மைக் காலத்தைப்போல் *கவிஞர்கள்* நினைக்கவில்லை. *தத்துவ வாதிகளும் விஞ்ஞானிகளும்* அரசியலாரும் நிர்ணயித்தனர். (கற்பனை வாதங்களை விட்டுவிட்டு) உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும் என்ற இயக்கத்தில் எழுத்தாளர்கள் பங்கு கொண்டாலும், அக்காலத்தில் தோன்றிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் எழுத்தாளர்கள் கணிசமாக எதுவும் வழங்கவில்லை.

பொதுப் புரட்சிக்கு (1848) முன்னரே சிறுசிறு எதிர்ப்பு இயக்கங்களும் எதிரெழுச்சிகளும் இருந்தன. தனிப்பட்டோர் வாழ்விலும், சமுதாய, அரசியல் துறைகளிலும் எழுந்த சிக்கல்களையும் பரந்த அமைதிக் குலைவுகளையும் பற்றி ஆயும் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, பெரும்பான்மை பூர்ஷுவா—நடுத்தர வகுப்பைச் சார்ந்தோரும் — பண்டைய சகாப்தத்தின் ஆதிக்கத்தில் இன்னுமிருந்த எழுத்தாளர்களும் நடப்பதுபோல் நடக்கட்டுமென்று ஒதுங்கி விட்டனர் 'இளைய ஜெர்மனி' என்று அறியப்படலான ஓர் இளைஞர் குழு இப்படி ஒதுங்கிப் போவது அரசியல் பிற்போக்குத் தன்மையைத் தோற்றுவிக்கும் என அதை எதிர்த்தது. அரசியல், சமுதாய பிரச்னைகளை விமர்சிக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதன்மூலம் ஜெர்மனியின் நிலைகளை மாற்றுவதற்கான ஆக்கச் செயல்களில் இக் குழுவினர் முனைந்தனர்; 1789ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர் மீண்டும் கொண்டு வரப்பட்ட முடியாட்சியை

எதிர்த்த பிரான்சின் ஜூலைப் புரட்சி (1830) தான் இவர்களுக்கு முன் மாதிரியாக இருந்தது. ஜெர்மனியின் இந்த இயக்கத்தின் குறிக்கோள்கள்: ஜெர்மனியை ஐக்கியப் படுத்தல், அரசியல் செல்வாக்கை நடுத்தர மக்களுக்கு மாற்றிக் கொடுத்தல், அரசியலமைப்பின் மூலமாக உரிமைகளையும், வழிவழி வந்த சலுகைகளையும் உறுதிப்படுத்தல் ஆகியவைதாம் ''இளைய ஜெர்மன்'' குழுவினருடன் இரக்கமோ, இணக்கமோ கொண்ட எழுத்தாளர், பத்திரிகையாளர் பலர் துன்புறுத்தப்பட்டனர்; கைது செய்யப்பட்டனர்; நாடு விட்டு ஓடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஜெர்மனியில் பூர்ஷுவா புரட்சி ஆண்டான 1848இல் 'கம்யூனிஸ்ட் (கட்சியின் அறிக்கை) மானிபெஸ்டோ' *கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ்* ஆகிய இருவராலும் வெளியிடப்பட்டது. ஆனால், புதிதாக எழுந்த நான்காவது வகுப்பான தொழிலாளிகளையே பூர்ஷுவா சுரண்டல்களை எதிர்த்தெழ இந்த மானிபெஸ்டோ தூண்டி அழைத்தது. போதிய வசதி வாய்ப்புள்ள நடுத்தர வகுப்பினர் தொழில்மயமாக்கல் மூலம் அதிகமதிகமாகச் செல்வம் சேர்த்து பொருளாதாரத்தையே அடக்கியாளும்போது, தொழிலாளிகளும் கைவினைஞர்களும் உழவர்களும் வறுமையிலாழ்ந்து, கடன் பட்டு, பொறுக்க இயலாச் சூழ்நிலைகளில் உழைக்கவேண்டியதாயிற்று. சமுதாய அமைப்பைப் புரட்சி மூலமாகக் கவிழ்க்க வேண்டுமென்ற கம்யூனிச நோக்குக்கு எதிராகக் கீழ் வகுப்பாரின் பொருளதார நிலையை உயர்த்தி, அதன் மூலம் நிலவிலிருக்கும் சமுதாய அமைப்போடு அவர்களை இணங்கவைக்க முயன்றனர் சமுதாய சீர்திருத்தவாதிகள்.

பெரும்பாலும் நாவல்களும், சிறுகதைகளும் கொண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த இலக்கியம், 'உள்ளதை உள்ளபடியே' கூறும் இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த இலக்கியம் அப்பட்டமான உண்மைகளை ஓரளவுதான் பிரதிபலித்தது. வாழ்க்கையை ஆத்மானுபவ — மெய்ஞ்ஞான வழியில் மேம்பாடுடையதாகக் கூறி அதற்கு விளக்கங்கள் தருவதையும் இதே இலக்கியம் புறக்கணித்து ஒதுக்கினாலும், அக்காலத்தின் மிகச் சிக்கலான பிரச்னைகளை சமுதாய பிணக்குகளையும் முரண்பாடுகளையும்—இது தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. போதுவாக, இந்த இலக்கியம் தனி மனிதனின் பிரச்னைகளைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது உண்மைக்கு ஒவ்வாத ஒரு நிலையிலேயே சமுதாய வாழ்க்கையின் மேம்பாட்டையும், இலட்சியத் தன்மையையும் இது படம் பிடித்துக் காண்பித்துக் கொண்டிருந்தது. தியடோர் ∴போண்டானே ஒருவர்தான் முற்றமுற்ற வாழ்க்கை உண்மைகளை ஒட்டிய எழுத்தாளர் என்று கூறலாம்.

ஹெய்ன்ரிஷ் ஹெநெ

முக்கிய எழுத்தாளர்களில் ஹெய்ன்ரிஷ் ஹெநெ ஒருவர்தாம் தம் எண்ணத்தினால் — சிந்தனைப் போக்கினால் "இளைய ஜெர்மனி" இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தவர் என்று சொல்லக்கூடியவர். அவர் சட்டம் பயின்றார். பல்வேறு அரசியல் ஏடுகளுக்கு எழுத்தாளராக இருந்தார். அவருடைய கவிதைகள் — அவை வசைப் பாங்குடையவையாக வளர்ந்து சென்றபோதிலும் கூட — உண்மையில் உணர்ச்சி முனைப்புடைய இலக்கிய இயக்கத்தில் வேரூன்றியிருந்தன. 1831ஆம் ஆண்டிலிருந்து அவர் பாரிஸில் வாழ்ந்து வந்தார். அங்கிருந்தே ஜெர்மனியின் நிலைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அவ்வப்போதைய அரசியல் பிரச்னைகள் பற்றிய நூற்களோடு, அரசியல் பத்திரிகைகளுக்கும் அவர் அதிக மதிகம் எழுதலாயினார். அவருடைய கூறிய நோக்கையும், மொழியாற்றலையும், காரசாரமான நகைத்திறனையும், அவருடைய விமர்சனத்தின் நுட்பமான கேலிச் சுவையையும் அவருடைய எழுத்துக்கள் காட்டுகின்றன. 1835இல் அவருடைய எழுத்துக்கள் ஜெர்மனியில் தடை செய்யப்பட்டன.

பாரிஸ் ஜூலை 1830ஆம் ஆண்டுப் புரட்சிபற்றி ஹெநெயின் விளக்கக் குறிப்புக்கள் அவருடைய சொந்த உணர்வுகளையும், அந்நிகழ்ச்சி பற்றிய அவருடைய பேரார்வத்தையும் பிரதிபலிக்கின்றன. அப்பொழுது பத்தாம் சார்லஸ், நிலவிலிருந்த அரசியலமைப்பை எதிர்த்து சுதந்திரத்தை அடக்கி, யதேச்சதிகாரப் போக்குக் கொண்டிருந்தமையால் அரசு துறக்கக் கட்டாயப்படுத்தப் பட்டார். 1789ஆம் ஆண்டுக்குப்பின் நிகழ்ந்தவை போலல்லாமல் வன்முறைகளும், கொலைகளும் வரம்பு கடவாமலே இப்புரட்சியின் போக்கு அமைந்திருந்தது.

அவருடைய 'பயண நூலில்' ஹெநெ இப் புரட்சி பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் அனைத்துலக வரலாற்றையும் பற்றி அவர் அறிந்திருந்ததன் விளைவுதான் அவருடைய ஆர்வத்துக்குக் காரணமாக இருந்தது. புரட்சி சக்திதான் அதற்கு முந்திய ஆட்சியாளர்களின் சக்திக்குத் தகுந்த பதிலடியாகும் என்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார்.

ஜூலைப் புரட்சி

ஹெல்கோலான்ட், 6, ஆகஸ்ட்

தன்னுடைய படை லன்கோபார்டுகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தபோது, ஹொலூலிய மக்களுடைய அரசன் கூடாரத்தில் அமைதியாக உட்கார்ந்து சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தானும்.

'தோல்வி' என்று எவரேனும் அறிவித்தால் அவருக்குச் சாவு தான் என்று பயமுறுத்தி வைத்திருந்தான். ஒரு மரத்தில் உட்கார்ந்து களத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காவலாள், 'நாம் வெற்றியடைந்து வருகிறோம்: நாம் வெற்றியடைந்து வருகிறோம்' என்று கூவிக்கொண்டேயிருந்தான். இறுதியாக ஓர் ஏக்கப் பெருமூச்சோடு கத்தினான்: 'துரதிருஷ்டம் பிடித்த அரசன்; நற்பேறில்லா ஹெரூலியன் மக்கள்'. அப்பொழுதான் வெற்றியை இழந்து விட்டதை அரசன் அறிந்தான்; என்ன பயன்? காலம் கடந்து விட்டதே! அந்தி நேரத்தில் லங்கோபார்ட்கள் அரசனின் கூடாரத்துக்குள் புகுந்து, அவனைக் குத்தினர்கள்.

இக்கதையை நான் பௌல் வார்னெஃபிரீடின் நூலைப் படித்துக் கொண்டிருந்தபோதுதான், ஒரு செய்தித் தாள் கட்டு நெஞ்சைத் தொடும் அத்தகவல்களைச் சுமந்து கொண்டுவந்தது. வெறும் செய்திகளா அவை? இல்லை; பத்திரிகைத் தாளில் சுற்றி வந்த ஒளிக் கிரணங்கள். நெஞ்சத்தில் புத்தொளியையும், பேரார்வத்தையும். புகுத்திய ஒளிக் கற்றைகள். என்னுடைய உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த மட்டற்ற இன்பத்தாலும் பேருணர்ச்சியாலும் வடதுருவம் வரை மாகடல் முழுவதையும் பற்றி யெரியச் செய்ய முடியும் என்பதை உணர்ந்தேன். கடல் முழுவதும் 'கேக்' (தின் பண்டத்தால்) ஏன் மணக்கிறது என்று இப்பொழுது தான் புரிகிறது! ஸீன் ஆறு இந்த மகிழ்வு நிறை சேதியை, நேராகக் கடல் முழுவதும் பரப்பிவிட்டது; எப்பொழுதுமே வீரத்தைப் போற்றும் கடற் கன்னிகள் இதைக் கொண்டாடியிருக்கிறார்கள். எனவேதான் கடல் முழுவதும் 'கேக்' வாசனையால் மணம் வீசிக் கொண்டிருந்திருக்கிறது.

பிரெஞ்சு மக்களே! நீங்கள் சுதந்தரமாக இருக்க அருகதை யுடையவர்கள். ஏனெனில் சுதந்திரத்தை உங்கள் உள்ளங்களிலே இடம்பெறச் செய்திருக்கிறீர்கள். இந்த விஷயத்தில் நீங்கள் உங்கள் தந்தையரை விடச் சிறப்பம்சமுடையவர்கள். நூற்றாண்டுகளான அடிமைத் தகிலியிலிருந்து அவர்கள் வெளிப்பட்ட போதிலும், வீர சாதனைகள் புரிந்தபோதிலும், மனிதகுலத்தைக் காத்து நிற்கும் வானவர் கூடத் தம் முகத்தை மறைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு அவர்கள் கொடுமைகளும் கோரச் செயல்களும் செய்தனர். ஆனால் இக்கட்டத்திலோ போருக்குப் பின் மக்கள் கரங்கள் இரத்தக்கறை படிந்திருக்க வில்லை. நியாயமான தற்காப்புக்காக ஏற்பட்ட போரின் அமளி துமளியில் தான் அவர்களின் கரங்களில் இரத்தக்கறை படிந்தது. தேச சமுதாயமே தன் விரோதிகளின் காயங்களுக்கு மருந்து போட்டு ஆற்றிற்று: இந்நற்செயல் முடிந்ததும் சமுதாயம் தன் அன்றாட அலுவல்களைக் கவனிக்க அமைதியுடன் திரும்பிற்று.

தன் பெருந் தொண்டுக்காக, அருஞ் செயலுக்காக, அது ஒரு சிறு பரிசு கூட எதிர்பார்க்க வில்லை.

ஹைல்கோலான்ட் 10, ஆகஸ்ட்

லாபயெத், மூவர்ணக் கொடி, மார்ஸை....

சமாதானத்துக்கான என் ஏக்கம் மறைந்து விட்டது. நான் என்ன விரும்புகிறேன்; என்ன செய்யவேண்டும்; என்ன செய்தாக வேண்டும் என்பதை இப்பொழுது நான் மீண்டும் அறிந்து கொண்டேன். புரட்சியின் மைந்தன் நான். என் அன்னை மந்திர சக்தி படைத்தத் தன் ஆசியை அருளிய அந்த மாய ஆயுதங்களை நான் மீண்டும் பற்றிப் பிடிக்கிறேன். மலர்கள்! மலர்கள்! வாழ்வா, சாவா என நிர்ணயிக்கும் இப்போருக்காக நான் முடிசூட்டிக் கொள்கிறேன்; யாழையும் என்னிடம் கொடுங்கள். நான் போர்ப் பரணி பாடவேண்டும். உயரே உயரே யிருந்து பாய்ந்து வந்து மாட மாளிகைகளை எரித்து, குடிசைகளை ஒளிமய மாக்கும் எரி வெள்ளிகளைப் போன்ற சொற்கள். ஏழாம் சுவர்க்கத் துக்குச் செல்லக் கூடியவையும், புனிதத் தலங்களுக்குள்ளே புகுந்து கொண்ட வேடதாரிகளை—நயவஞ்சகர்களைத் தாக்கவல்ல பளிச்சிடும் ஈட்டி போன்ற சொற்கள்; என் உள்ளம், உடல், உதிரம் எல்லாம் மகிழ்வு; இசைப் பண்; வாள்; தீப்பிழம்பு!

ஒருவேளை நான் சித்தப் பிரமையிலும் இருக்கலாம். அந்தப் பத்திரிகைத் தாளில் சுற்றிவந்த பானுவின் கதிர்களில், ஒன்று என் மூளையில் பாய்ந்துவிட்டது போலும். என் எண்ணங்களே தீப்பிழம்புகளாகிவிட்டன. பயனில்லாமலேயே, கடலுக்குள் என் தலையை முக்குகிறேன். இந்த கிரேக்க நெருப்பை எந்தத் தண்ணீரும் அணைத்துவிடாது; நீருற்றுகளுக்கு வந்த விருந் தினர்களைகூட இந்த வெப்பத்தாக்கு பாதித்துவிட்டது. வட கடலெல்லாம் பெர்லின்காரர்களே நிறைந்துவிட்டனர் என்று கூறும் அளவுக்கு, இந்த ஆண்டு பெருந் தொகையினராக வந்து, தீவு, தீவாகச் சுற்றி வரும் அவர்களையும் இந்தச் செய்தி பாதித்து விட்டது. ஏதோ நடந்துவிட்டது என்று உணரும் ஆற்றல் மட்டும் கொண்ட ஹைல்கோலான்டினர் கூட மகிழ்ச்சி மிகுந்து காண் கிறார்கள். மக்கள் குளிக்கச் செல்லும்பொழுது அந்தச் சின்னஞ் சிறு தீவுக்கு என்னைப் படகில் ஓட்டிச் சென்ற, மீன் பிடிப்பவன் கூட என்னைப் பார்த்து, 'ஏழை மக்கள் வென்றுவிட்டார்கள்!' என்று கூறிச் சிரித்தான். ஆம்! நமக்கு இருக்கும் எல்லா ஞானங் களையும்விடத் தங்கள் உணர்வுகளினாலே இந் நிகழ்ச்சிகளைப் பற்றி நன்கு புரிந்து கொள்கின்றனர் பொது மக்கள். "கேப்ஸிக் போரில்" யாருக்கு வெற்றி என்பது தெரியாமலேயிருந்த, தம்

பணிப் பெண் ஓடிவந்து, 'செல்வர்கள் வென்றுவிட்டனர்' எனக் கூறியதாக ஒருதடவை ∴பன் ∴பர்ன்ஹாகன் சீமாட்டி கூறினார்.

எனக்கு இப்பொழுது தூங்கவே முடியவில்லை. என்னுடைய பேருணர்ச்சி பெற்ற உள்ளத்திலே பெரிதும் விஷேதமான காட்சிகள் இரவெல்லாம் பளிச்சிட்டு ஓடுகின்றன. ஹங்காக் கனவுகள் ஒன்றின் மீது ஒன்று இடறி விழுந்தவாறு தோன்று கின்றன. அவற்றில் காணும் உருவங்கள் ஒன்றிலொன்று இணைந்தும், பின் மறைந்தும் நிழலாட்டத்தில் வருவதுபோல் ஒரு சமயம் குறுகிக் குள்ளமாகவும், மறு சமயம் நீண்டு, இராட்சத உருவிலும் காட்சியளித்து, என்னையே சித்தப்பிரமை கொள்ள வைத்துவிடும் போலிருக்கிறது. இந்த நிலையில் என்னுடைய அவயவங்களே, பூதாகாரமாக இருந்து நீட்டப்பட்டு, நான் இராட்சதக் காலுடன் ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும், பின்னர் திரும்பி ஜெர்மனிக்கும் ஓடிச் செல்வதுபோல் தோன்றுகிறது. ஆம்: சென்ற இரவு நான் இப்படி எல்லா ஜெர்மன் மாநிலங்கள் வழியாகவும் ஓடி, என்னுடைய நண்பர் களின் வீட்டு வாயில்களைத் தட்டி, அந்த நல்லவர்களைத் தூக்கத் திலிருந்து எழுப்பியதுபோல நினைவு கூர்கிறேன். பலதடவை அவர்கள் வியப்புடன் என்னைப் பார்த்த பார்வை, எனக்கே அச்சத்தை மூட்டி, எதற்காக அவர்களை எழுப்பினேன்: எனக்கு என்ன வேண்டும் என்று திகைக்க வைத்தது. அருவறுப்பாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த, கொழுத்த அற்பர்கள் பலரை நான் விலா வெலும்பைத் தட்டி விழிப்படை யச் செய்தபோது அவர்கள், "இப்பொழுது என்ன நேரம்?" என்று கொட்டாவி விட்டுக் கொண்டே வினவினர். அன்பு நண்பர்களே, பாரிஸில் சேவல் கூவிவிட்டது அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!

பாரிஸில் ஜூலையின் புனிதமான நாட்கள்! முற்றிலும் அழித்து விட முடியாத, அடிப்படை மனித மேம்பாட்டுக்கு, ஓ, புனித நாட்களே, நீங்கள் என்றும் நிலையான சாட்சியம் கூறுங்கள்! அந்நாட்களில் உங்களோடிருந்து அனுபவப்பட்டவன், பழைய சமாதிகளைப் பற்றி அழுது கொண்டிருக்கமாட்டான்; உலக சமுதாயங்கள் புனர் வாழ்வு பெறும் என்பதை அவன் இன்புற விரும்புகிறான்–புனித ஜூலை நாட்களே! அப்பொழுது சூரியன் எவ்வளவு அழகாக இருந்தது; பாரீஸ் மக்கள்தாம் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தனர். அப்பெரும் போரை வானத்திலே யிருந்து கவனித்துக் கொண்டிருந்த தேவர்கள்கூட வியந்து மகிழ் கிறார்களே; தங்களுடைய பொன்னான ஆசனங்களை விட்டு இறங்கி, பாரிஸின் குடிமக்களாவதற்கு பூமிக்கு வருவதற்கே அவர்கள் இசைந்திருப்பார்களே; ஆனால் அ(வ்வான)வர்களுக்குப்

பொருமை: ஓர் அச்சம்: 'மனிதன் மிக உயர்ந்தவனுக, மிக மேன்மையுடையவனுக மலர்ந்து விட்டால்....!' எனவேதான், 'ஒளி வீசுவதை இருளடையச் செய்யவும், தூய்மை மிக்கதைப் புழுதியில் தள்ளவும் அவர்கள் தங்களுக்கு என்றுமே கீழ்ப்படியும் மதகுருக்கள் மூலம் முயன்றார்கள். தெ போத்தேயின் இழிந்த சூழ்ச்சியான பெல்ஜியம் புரட்சியைத் தூண்டினார்கள். சுவர்க் கத்தை எட்டும் அளவுக்கு சுதந்திரத் தருக்கள் வளர்ந்துவிடக் கூடாதே என்று பெரிதும் கவனம் செலுத்தப்பட்டது.

விருதலி!

லோம்பார்ட், டஸ்கனி குடியரசுகள்; ஸ்பானிய மாகிலங்கள், ஜெர்மனியின் சுதந்திர நகரங்கள், மற்றும் பல நாடுகளின் வரலாறுகளில் காணப்படும் முக்கிய முயற்சிகளெல்லாம் பொது மக்களின் எழுச்சிகள் என்று அழைக்கப்படுவதற்கு அருகதை யற்றவை: வழிவழி அனுபவச் சலுகைகள் பெறுவதற்கே யல்லாது முழுச் சுதந்திரம் பெறச் செய்யப் பெற்ற முயற்சி களல்ல! உரிமைகள் பெறுவதற்கல்ல, சில வசதிகள் பெறுவதற் கான போராட்டங்கள்தாம் அவை. மன்றங்கள் தனி உரிமை களுக்காகப் போராடின. ஆக, மன்றங்கள், தொழிலமைப்புக்கள் ஆகியவற்றின் உள்ளேயே இப் போராட்டங்கள் நின்றுவிட்டன.

(பதினேழும் நூற்றாண்டில் நடந்த) சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றிய பின்னர்தான் இப் போராட்டம் பொதுவானதாகவும், மனம் ஒன்றியதாகவும் உருவெடுத்து சுதந்திரம் என்பது வழி வழியாக வந்த ஓர் உரிமை. எனவே, அது வேண்டும் என்றில் லாமல், மனித அடிப்படை உரிமையே சுதந்திரமான வாழ்வுதான். சுதந்தரம் என்பது மனிதன் முயன்று பெறவேண்டிய ஒன்றன்று: அவன் இயல்பிலேயே அது அமைந்திருக்கிறது—என்று சுதந்திரம் கோரப்பட்டது. பண்டையச் சுவடிகளோ மேற்கோளாகக் காட் டாது கொள்கைகளைக் கூறி சுதந்திரம் கேட்டனர். ஜெர்மானியக் குடியானவர்களும், ஆங்கில நாட்டு கடுந்தூய்மைக் கட்சியினரும் (Puritans) இன்றும் கூட நம்முடைய விவேக வாதங்களைப் போன்று அதிகாரமுடைய விவிலியத்தை மேற்கோள் காட்டினர். மனிதர்கள் அனைவரும் உயர்வான பிறப்புடைவர்களே, (எனவே இதை மதியாத) ஆணவமும், மமதையும் கண்டிக்கப்பட வேண்டும். அளவு கடந்து பொருள் குவிப்பது பாவமாகும். அனைவருக்கும் பிதாவான ஆண்டவனின் அழகு மலர்க்காவை அனுபவிப்பதற்கு எல்லோரும் உரிமை பெற்றிருக்கின்றனர் போன்ற கருத்துக்கள் அங்கு தெளிவாகவே கூறப்பட்டன.

ஒரு கரத்தில் பைபிளையும், மறுகரத்தில் வாளையும் ஏந்திய வாறு உழவர்கள், தெற்கு ஜெர்மனி வழியே கடந்து சென்றார்கள். 'எதிர் காலத்தில் உழவனெருவனின் குடிசையைவிட மாறுபட் டிருக்கும் எந்த இல்லமும் பேரரசில் நிலையாக நிற்கும்படி விடப்பட மாட்டாது' என்று அவர்கள் ஓங்கி உயர்ந்த மாளிகைகளையுடைய நூரெம்பெர்கின் உரிமைக் குடியினருக்குச் சேதி தெரிவித் தார்கள். அவ்வளவு முழுமையாகவும், செம்மையாகவும் அவர்கள் 'சமத்துவம்' என்பதைப் பற்றிப் புரிந்துகொண்டார்கள். பிரான்ஸ் கோனியாவிலும், சுவாபியாவிலும் இன்று கூட இந்தச் சமத் துவக் கொள்கையின் தடத்தைப் பார்க்கலாம். விண்மதியின் தண்ணொளியில், 'உழவர்களின் போர்'க் காலத்திலிருந்து எஞ்சி நிற்கும் கோட்டை கொத்தளங்களின் இருண்ட இடிபாடுகளைப் பார்க்கும் பிரயாணியை அன்றையப் புனிதமான உணர்வு பேரச்சம் கொண்டு நிற்கச் செய்கிறது. இங்கு வந்து போகும் நிதான புத்தியுடைய ஒருவன் வேறெதையும் பார்க்க முடியாது போனால் இன்பநினைவோடு இருந்துவிடுவான். ஆனால், நீங்கள் வரலாற்று மாணவராக இருப்பின் தோற்றுப்போன மக்களை ஜெர்மன் உயர்குடிமக்கள் எப்படி வேட்டையாடினார்கள் என்பதும் புலப்படும்; உலகத்திலே அவ்வளவு குரூரமான ஒரு மனித வேட்டை இருந்திருக்க முடியாது. ஆயுதமில்லா அம் மக்கள் எவ்வாறு குண்டாந்தடிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்கள்; சித்திரவதை செய்யப்பட்டு; உடல் மூட்டுக்கள் கழற்றப்பட்டு, எவ்வாறு சாகடிக்கப்பட்டார்கள்; கழுவேற்றப்பட்டு ஆயிரக் கணக்கானவர் எவ்வாறு மடிந்தனர் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்! வயல் வெளிகளில் இளங்காற்றில் அசைந்தாடும் பயிர்ச்செடிகளிடையே இரத்தக் கறை படிந்த அந்த உழவர்களின் சிரங்கள் கூட சாய்ந்தாடுவதுபோல் மர்மமாகப் புலப்படும்; இவை எல்லாவற்றுக்கும் மேல், வஞ்சினம் தீர்க்கும் வெறியோடு நீளதிர் குரலால் பாடும் வானம்பாடியையும் கேட்டிருப்பீர்கள்.

இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் இருந்த இவர்களின் சோத ரர்கள் இவர்களை விட நற்பேறு பெற்றவர்கள்; அவர்களுடைய தோல்வி இப்படி இழிவுடையதாகவோ, இழிப்புடையதாகவோ யில்லை; அவர்களுடைய ஆட்சியாக பயன்களை இன்னும் காண லாம். ஆனால் அதைத் தொடர்ந்து பேணிவர அவர்களால் முடியாது போயிற்று. முன்போல், 'ஒயிலார்ந்த காவலியர்' (முதலாம் சார்லஸ் காலத்திய அரச) கட்சியின் அதிகாரத்தில் வீற்றிருக்கிறார்கள். தங்கள் பொழுது போக்குக்காக அவர் களுக்கு இசைவான கவிஞர் பாகாக வர்ணித்துள்ள அந்தப் பிடி வாத முள்ளோரைப் பற்றிய இன்பக் கதைகளைப் படித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்தில் எந்தச் சமுதாயப் புரட்சி

யும் நிகழவில்லை; அரசியல், 'பூர்ஜுவா' அமைப்புக்களின் வரை யறைகள் இன்னும் சிதையாமலே இருக்கின்றன; வகுப்புப் பிரிவும், தொழில்துறைச் சங்கங்களும் இன்னும் எஞ்சி நிற் கின்றன. நவீன பண்பாட்டியலின் ஒளியும், சூடும் அதை ஊடுரு விச் சென்றாலும் இங்கிலாந்து இன்னும் மத்திய கால நிலையா லேயோ அல்லது காலத்தினின்றும் ஓரளவு நாகரிகம் பெற்ற தாகவோ — இன்னும் நிலைத்துள்ளது. இந்த மத்திய கால வகோந்து கொடாத் தன்மையிலிருந்து அங்கு முற்போக்கியலுக் குக் கிட்டிய ஒவ்வொரு சலுகையும், பாடுபட்டு வலிந்து பெறப் பட்டதாகும்.

நவீன கால முன்னேற்றங்கள் அனைத்தும் கொள்கைகளினால் அடிகோலப்பட்டவை அல்ல; அவசியத்தின் காரணமாக உரு வானவை. அவையெல்லாம் அரை குறை வேலைப்பாட்டுக்குள்ள சாபக்கேடுடையவையாகவே இருக்கின்றன; ஏனென்றால், அரை குறையான வேலைகள் புதுத் தொல்லைகளையும் வன்மையான புதிய போராட்டங்களையும் அவற்றால் ஏற்படும் ஆபத்தான விளைவுகளையும் தோற்றுவிக்கும். இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த மும் பாதியிலேயே நின்று விட்டது; அதனால் அழகாக வர்ணம் தீட்டப்பட்டு, மென்மையாக அமைக்கப்பட்டிருக்கும் கத்தோலிக்க ஆன்மீக இருள் குகையை விட, எந்த அலங்கரிப்புமில்லாமல், சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளே இருப்பது போன்ற இந்தப் புதிய சர்ச்சிலுள்ளே முன்னிலும்மோசமான நிலையிலேயே ஒருவன் தன்னைக் காண்கிறான்; அரசியல் சீர்திருத்தமும் இதைவிட முன் னேறி விடவில்லை. பொது மக்களுக்குப் பிரதிநிதித்துவமும் இன்னும் நிறைவில்லாமலே யிருக்கிறது. பல்வேறு வகுப்புக்களை யும் முன்போல அவர்தம் பிரத்யேக உடைகளினால் அறியப் படாது போனாலும் கூட, சட்டபூர்வமான அந்தஸ்து வேறு பாடுகளாலும், அரசியல் ஆதரவுகளினாலும் அரசவையில் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மையினாலும், பண்டைய சலுகைகள், தனி முதலுரிமைகள் ஆகியவற்றாலும் இன்னும் மக்கள் பிரித்தே வைக்கப்பட்டுள்ளனர். மனிதர்களின் உடைமைகளும், அவர் களின் உயிர்ப் பாதுகாப்பும் முன்போல ஆட்சியாளர்கள், மேற் குடியினர் ஆகியோரின் விருப்பு, வெறுப்பைச் சார்ந்தல்லாது சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டு நின்றாலும்–இச்சட்டங்களே ஆட்சி– மேற்குடி இனத்தினருக்குத் தங்கள் இரையைக் கௌவுவதற்குப் புது வகையான கோரப் பற்களை அமைத்துக் கொடுப்பனவாக அமைந்துள்ளன. மக்கள் வஞ்சகமாகக் குத்துவதற்குத் தகுந்த உடைகளாகவே இச்சட்டங்கள் பயன் பெறுகின்றன. ஆங்கில மக்கள் சட்டத்தால் கட்டாயப்படுத்தப் பட்டுச் செலுத்தும் இத்தனை வகையானவர்களை ஐரோப்பாவிலுள்ள எந்தக் கொடுங்

கோலனும் தன் மனம் போன போக்கில் தன் குடிமக்களிடமிருந்து கசக்கிப் பிழிய மாட்டான். ஆங்கில குற்றயியல் சட்டத்தைப் போன்று எந்தக் கொடுங்கோலனும், ஒவ்வொரு நாளும் ஒரு ஷில்லிங்குக்காகச் சட்டத்தின் துணை கொண்டு கொலை செய்ய மாட்டான். சமீப காலத்தில் இங்கிலாந்தில் இந்த சோகமான நிலையில் பல மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பினும், மதத் துறையிலிருப்பவர்களுடையவும், பிறருடையவும் பேராசைக்கு ஓர் வரைமுறை வகுக்கப் பட்டிருப்பதினும், பொது மக்களின் வாக்குரிமை விஷயத்தில் சிறிது முன்னேற்றம் காணப் படினும், பிற பிரிவினருக்கும் சில உரிமைகள் வழங்கியதன் மூலம் கொடிய சகிப்புத் தன்மை இல்லாமை ஓரளவு மட்டுப் படுத்தப்பட்டதும் உண்மைதான். எனினும், இவையெல்லாம் நெடுநாள் நீடிக்க முடியாத அரை குறைத் தையல் வேலைதான். இங்கிலாந்தில் உள்ள மிக முட்டாள் தையல்காரன் கூட அண்மையிலோ, சேய்மையிலோ அரசியலின் இப்பழைய உடை கந்தல் கந்தலாகப் போய்விடும் என்று முன்கூட்டியே கண்டு கொள்வான்.

பழைய உடையைத் தைப்பதற்கு வெறும் புதுத் துணியைப் பயன்படுத்துவதில்லை, அந்தப் பழைய துணியிலேயே ஒரு துண்டைக் கிழித்துத்தான் ஒட்டுப்போடப்படும். ஆகக் கிழிசல் தான் இன்னும் மோசமாகப் போகும், புதிய மதுவை பழைய புட்டிகளிலும் எந்த மனிதனும் ஊற்றிவைப்பதில்லை. ஏனென்றால் அதனால் புட்டிகள் உடைந்து மது கொட்டி விடுகிறது; புட்டிகளும் அழிந்து விடும்; புதிய மதுவை புதிய புட்டிகளில்தான் ஊற்றி வைப்பார்கள். அதனால் இரண்டும் பாதுகாக்கப் படுகின்றன.

அழியாத் தடம் பதிக்கும் பேருண்மைகள், பெருங் கருணையுடைய உள்ளத்துக்கே புலப்படும். அதனால்தான் ஜெரூசலத்தின் மேட்டுக் குடியினர்க்கு எதிராகப் பேருரை ஆற்றிய ஏசுநாதரின் கருத்துக்களும், பாரீஸ் தேசியப் பேராண்மைப் பேரவையில் அரசியலின் அமைப்பை மட்டுமல்ல, சமுதாய வாழ்வை—அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சீர்திருத்தாது — முழுமையாகப் புத்துரு அடையச் செய்து முன் ஒரு புதுப் பிறப்பே அடையுமாறு செய்ய வேண்டும் என்று ஒரு மூவர்ணக் கொள்கையைப் போதித்தார்களே அவர்களுடைய கருத்துக்கும் இசைவான ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அருளார்ந்த பேருண்மைகளின் திருவெளிப்பாட்டுக்காக தெய்வ ஆணையால் ஒரு சிலர் தேர்ந்தெடுக்கப்படுவது உண்டு. ஆனால் அதை விட முக்கியமானது ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் எதிரொலிப்பதும், அறிவுக்கு அடிப்படை அமைப்பதுமான மெய்யறிவு. இந்த மூல உணர்விலிருந்துதான் நான் பேசிக் கொண்டிருக்கும் பிரெஞ்சுப் புரட்சி சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் தன் உயிர் மூச்சாகக்

கொண்டு உருவெடுத்தது. ஜனநாயக உணர்வோடு உயர் குடியினர் என்று சொல்லிக் கொள்வோரின் அந்த உரிமைகோரியும், சிறப்பு வகுப்பினர் என்று கருதிக்கொள்வோரையும் எதிர்த்து நாமெல்லோரும் சிறு அளவிலோ பேரளவிலோ பங்கெடுத்துக் கொண்ட இப் போராட்டத்தின் சரித்திரம்தான், இப் புரட்சியின் வரலாறுமாகும். பாரோவாக்களுடன் 'சாகும்வரை' போர் தொடுத்தது இப் புரட்சியாகும்.

பகைவர்களுடைய வாளின் கூர்மை நாள் தோறும் மங்கி வந்தாலும் கூட மிக நல்ல இடங்களை நாம் ஆக்கிரமித்துக் கொண்டாலும் கூட நம் பணியை நிறைவு செய்யும் வரை நாம் வெற்றிப் பண் பாட முடியாது. போர் நிறுத்தக் காலத்தில் இரவுகளில் தானே கையில் விளக்குகளைப் பிடித்துக்கொண்டு நாம் போர்க் களத்திற்குப் போகிறோம் — இறந்தோரைப் புதைப்பதற்காக; அப்பொழுது மரணமடைந்தோர்க்காக ஓதப்படும் அந்தச் சிறு பிரார்த்தனையால் என்ன பயன்? மிகச் சிறந்தோரின் புனித— குழிகளில் கூட ஆணவ முடையோரின் இழிவுரைகள் பிசாசுகளைப் போல் ஒட்டிக் கொள்கின்றன.

தங்களை எதிர்த்தோரின் புகழையெல்லாம் தம் தந்திரத்தால் நச்சாக்கும் சத்தியத்தின் பரம வைரிகளையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும். இத்தகையோர் சுதந்திரத்தின் தூய்மையான வீரர் ஏசுநாதரை பழித்தவர்களல்லவா இவர்கள். அவர் மனிதர்களிலே மிக உயர்ந்தவர் என்பதை இவர்கள் மறுக்க முடியாதபோது, அவரைக் கடவுளர்களில் மிகச் சிறியவராக மாற்றி விட்டார்களே! மத குருக்களை எதிர்ப்பவர்கள் தந்திரமான பொய்களினாலும், எளிதில் நம்பவைக்கக் கூடிய இழிவுரைகளினாலும் தங்களின் நல்ல பெயர் சிதைக்கப்பட்டு, சீர்குலைவதைக் காணத் தயாராகிக் கொள்ள வேண்டும். ஆனால், குண்டுகளினால் சிதைவுற்று, வெடி மருந்துகளினால் சரிந்து போகும் போர்க் கொடிகள் தான், போர் வீரர்களைச் சேர்ப்பதற்காக, நாட்டில் பயன்படுத்தப்படும் பளபளப்பான கொடிகளை விட மேலானவை, சிறப்புடையவையாகக் கொள்ளப்படுகின்றன. முந்தியவை தான் பெரும் கோயில்களில், தேசியச் சின்னங்களாகப் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. இது போலவே இன்று நம் வீரர்களின் பெயரும் புகழும் அதிக, அதிகமாக சிதைக்கப்பட; கரிக்கப்பட, அவை ஆர்வத்துடன் சுதந்திரத்தின் தூய திருக் கோயில்களில் மரியாதை செய்யப்படும்.

இந்த வீரர்களைப் போல, பிரெஞ்சுப் புரட்சியைக் கூடப் பல்வேறு பிரசுரங்களில் அரசர்களுக்கு அது நடுக்கம், பேரச்சம் என்றும், மக்களுக்கு அது சோளக்கொல்லைப் பொம்மையைப் போன்றது

என்றும் இழித்துப் பழித்துரைக்கப் படுகிறது. புரட்சியில் நிகழ்ந்த வையென இட்டுக் கட்டப்பட்டுள்ள அட்டூழியங்களின் பட்டியலைப் பள்ளிச் சிறுவர்கள் பாராமல் படிக்குமாறு செய்யப் பட்டுள்ளனர்; திருவிழாக்களிலும், பொருட்காட்சிகளிலும், தலைவெட்டும் பொறியின் (Guillotine) நயநலமில்லாப் படங்கள் தவிர வேறு எதையும் நீங்கள் காணமுடியாது. மடையர்களின் தலைகளை அவர்களுடைய இரக்கமற்ற நெஞ்சங்களிலிருந்து எளிதாகப் பிரிக்கும் இப்பொறி பிரெஞ்சு மருத்துவரும், அறிஞருமான கில்லட்டினால் கண்டுபிடிக்கப்பட்ட அது–சற்று அதிகப்படியாகவே பயன்படுத்தப்பட்டது என்பது–மறுக்க முடியாததுதான். ஆனால் அறவே குணப்படுத்தப் முடியா தேசத்துரோகம் ஏமாற்று, உறுதித் தளர்வு போன்ற பிணிகளுக்காகத்தான் இது பயன்படுத்தப் பட்டது. பண்டைய காலத்தில் சாதாரண மக்களும் உழவர்களும், பாமரர்களும் ஆயிரக்கணக்காகச் சித்திரவதை செய்யப்பட்டும், சக்கரங்களில் கட்டப்பட்டு எலும்போடு முறிக்கப்பட்டும், கட்டிப் போட்டுக் கை கால்கள் இழுத்துப் பிய்க்கப்பட்டும் கொல்லப்பட்டார்களே அதுபோல் இப்பொறியில் குற்றவாளிகள் வதைக்கப்படவில்லை. நாட்டுத் தலைவரைக் கூட இப்பொறியினால் பிரெஞ்சுக்காரர்கள் துண்டித்து விட்டார்கள் என்பது பயங்கரமான செயல்தான். இதனால் அவர்கள் மீது சோதரக் கொலைக்குக் குற்றம் சாட்டுவதா, அல்லது அவர்கள் தற்கொலை செய்ததாகச் சொல்வதா என்றே தெரியவில்லை. ஆனால் எல்லாத் தகவல்களையும் வைத்துக் கொண்டு பார்த்தால் பிரான்சின் லூயி மன்னர் வெறிச் செயலினால் வெட்டப்படவில்லை; தடுக்க முடியா நிகழ்ச்சிகள் அப்படி ஒரு விளைவை ஏற்படுத்தி விட்டன. எனவே, மக்களை இதற்குத் தூண்டியவர்களும், அரசர்களின் செங்குருதியைப் பலப்பொழுது இதைவிட அதிகமாகச் செய்தவர்களும் இப்பொழுது பெருங் கூச்சலிட்டுக் குற்றம் சாட்டுபவர்களாகக் காட்சியளிக்க வேண்டாம். இரண்டே யிரண்டு அரசர்கள்–அவர்கள் மக்களுடைய மன்னர்கள் கூட அல்லர்–மேற்குடியினரின் அரசராகவே இருந்தனர்–அவ்வருவர் மட்டும்தாம் மக்களால் பலியிடப்பட்டனர்; அதிலும் அமைதி நிலவும் காலத்திலோ, அல்லது தங்களுடைய சொந்த இலாபங்களுக்கவோ அல்ல; போரின் உச்சத்தில் தங்களை அவ்விருவரும் காட்டிக் கொடுத்து விட்டனர் என்பதை மக்கள் கண்டபோது; தங்களுடைய இரத்தமும் சிந்தப் பட்டுக் கொண்டிருந்தபோதுதான் இவ்விருவரையும் பலிகொடுத்தனர். பேராசை, சுயநலம் ஆகியவற்றின் காரணமாக, குத்து வாளாலும், பட்டாக்கத்தியாலும் மேற்குடியினரும், மத குருக்களும் ஊட்டிய நஞ்சினாலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அரசர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்

களே, ஒரு வேளை இந்த அரசர்களைக் கொல்வது தங்களுக்குள்ளத் தனி உரிமைகளுள் ஒன்று என இவ்வகுப்பினர் கருதி அதனால் சுயநல நோக்கோடு, பதினென்காம் லூயியுடையவும், முதலாம் சார்ல்ஸுடையவும் சாவைப் பற்றி இவ்வளவு அழுதரற்றுகிறார்களே என்று எண்ணத் தோன்றுகிறது. இப்படிக் கொலைஞர்களாக மாறக்கூடிய பிரபுக்களின் காலடி விட, சட்டத்தின் பாதுகாப்பில் தாங்கள் ஆபத்தின்றி வாழமுடியும் என்று இந்த அரசர்கள் உணர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

புரட்சியும், புரட்சி வீரர்களும் மட்டும் அல்ல; நம் சகாப்தம் முழுவதுமே இழிவு செய்யப்பட்டுள்ளது; நம்முடைய அருள் வழி பாட்டுத் தொகுப்பான தூய கருத்துக்களும் எப்பொழுதுமில்லாத குரூரத்துடன் ஏளனம் செய்யப்பட்டுள்ளது. நம்மை இப்படிக் கீழ்த்தரமாக இழிவுபடுத்துவோர் மக்கள் திரளைச் சந்தைக் கூட்டம் என்றும், மக்களில் திமிர் பிடித்தோர்தான் சுதந்திரத்தை விரும்புகிறார்கள் எனவும் சுவர்க்கத்தை நோக்கிய கண்களோடும், பக்திப் பெருமூச்சோடும், நாம் சிறுமையுடையவரென்றும் மதமே இல்லாதோர் என்றும் அவர்கள் பேசியும், எழுதியும் வருவதும் நாம் அறிந்ததே. மதப்போர்வையில் புகுந்து கொண்டு தாங்கள் இரகசியமாகச் செய்த பாவங்களின் பளுவினால் கூனிக் குறுகிப் பதுங்கி நடக்கும் இத்தகையோர்தாம் முந்திய எக்காலத்திலும் மிகப் புனித சகாப்தமான இக்காலத்தை இழிவுபடுத்துகிறார்கள். கடந்த காலங்களில் செய்யப்பட்ட பாவங்களுக்கும், வருங்கால இன்பத்துக்குமாகத் தன்னையே பலி கொடுத்தது இந்தச் சகாப்தம்! காலங்களிலே இந்த சகாப்தம் ஒரு மீட்பாளரைப் போன்றது; கேளிக்கைப் பாடல்களை அவ்வப்பொழுது பாடிக் கொண்டும் இக்காலத்திய ஆசாரக்கள்ளர்களையும், சதுசேயர்களையும் பற்றியும் கேலி பேசிக் கொண்டும் இல்லாவிடின், குருதி தோய்ந்த முட்கிரீடத்தையும் மிகப் பளுவுள்ள சிலுவையின் கனத்தையும் மீட்பாளர் போன்ற இந்தச் சகாப்தம் சுமந்திருக்கவே முடியாது. அந்தக் கேலியும், கிண்டலும் இல்லாவிடின் இந்தச் சுமையில் ஏற்படும் ஆழிய வேதனை பொறுக்க முடியாததாக இருக்கும். நகைமுகம் தளராமல் பின் செல்லும். அதற்குச் சான்றாக பிரெஞ்சு மக்களில் இருவரைச் சொல்லலாம். தூகுளோ, லூவ்வேத கூவ்ரே ஆகிய இருவரும் பொழுது போக்குக்காகவும், புலனுணர்வைத் தூண்டக் கூடியதாகவும் எழுதினர்; எனினும் கண்டிப்பாகவும் கடினமாகவும் இருக்கவேண்டிய ஒரு கட்டம் வந்ததும் உயிர்த் தியாகிகளின் வீரத்தோடும், பற்றுதலோடும் சுதந்திரத்துக்காகப் போராடினர்; அந்தோ! துரதிருஷ்டவசமாக இவர்கள் மதமற்றவர்களாக இருந்தனர்.

ஆனால், **சுதந்திரம்** மதத்தைப் போன்ற சிறப்புடையதல்லவா? எனவே, நமக்கு சுதந்திரமே மதமாயிருக்கும் பொழுது அதனை இழிவுபடுத்துவோரை சிறுமையுடையோரென்றும், மதமற்றோரென்றும் கூறினால் என்ன?

ஆம்! சுதந்திரம்தான் புதிய மதம்; நம் காலத்தின் மதம் என்று நான் மீண்டும் சொல்கிறேன். ஏசுநாதர் அம்மதத்தின் கடளாயில்லாவிட்டால் கூட, அதன் தலைமைக்குருக்களில் ஒருவராக அவர் இருக்கிறார்; அவருடைய சிடர்களின் நெஞ்சங்களில் அவர் பெயர் இன்ப நிறைவோடு கூடர்விட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் புதிய மதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பிரெஞ்சு மக்களே ஆவார். அவர்களுடைய மொழியிலேதான் இந்த மதத்தின் வேதமும், கொள்கைகளும் பதிவு செய்யப்பட்டன. பாரீஸ் தான் புதிய ஜெரூஸலம். சுதந்திரத்தின் புனித பூமியை பிலிஸ்தியர்கள் நாட்டிலிருந்து வேறு பிரிக்கும் அர்தன் ஆறுதான் ரைன் நதியாகும்.

(பயண நூல் - நான்காம் பாகம்)

லுத்விக் பொயர்னே

லுத்விக் பொயர்னே (1786—1837) அரசியல் எழுத்தாளர், பத்திரிகையாளர் என்ற நிலையிலே சமுதாய ஆத்மீக சுதந்திரத்துக்கு ஜனநாயகம் முன்னணித் தேவை எனக் கருதி அதற்குத் தம்முடைய பேராற்வமிக்க ஆதரவையளித்தார். அவருடைய கருத்துக்களைக் கொண்டிருந்தோரைப் போலவே அவரும் 1830ஆம் ஆண்டிலிருந்து பாரிஸிலே வாழ்ந்தார். கார்ல் மார்க்ஸ் பிற் காலத்தில் விரிவான திட்டமாக உருவாக்கிய கருத்துக்களை, இவர் தம்முடைய கனல்பொறி தெறிக்கும், "செல்வனும், ஏழையும்" என்னும் கட்டுரையில் தொட்டுச் செல்கிறார். அரசியலுக்கும், சமுதாய பொருளியல் நிலைக்குமுள்ள தொடர்பை பொயர்னே சுட்டிக் காட்டுகிறார். சமுதாயத்தின் மேல் மட்டத்தில் செல்வர்கள் இருக்கிறார்கள்; இவர்கள்தாம் அரசியலிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்; எனவே, கீழ்மட்டத்திலுள்ள ஏழை மக்களை உரிமை குறைந்த வர்களாக அடக்கி வைக்க அவர்களால் முடிகிறது; இன்னும் அவர்களோ, பார்ப்பதற்கு சட்டப்பூர்வமானவையாகத் தோன்றினாலும் உண்மையிலேயே குற்றமான வழிகள் மூலம் மேலும், மேலும் ஏராளமாகப் பொருள் சேர்க்க முடிகிறது. பிரான்சில் புரட்சி இன்னும் உண்மையான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கவில்லை, எனவே, மீக்கூறிய நிலை பிரான்ஸுக்கும் பொருந்தும்.

ஜெர்மனியில் தடை செய்யப்பட்ட "பாரிஸிலிருந்து கடிதங்கள்" (1832—34) என்னும் தொடரில் பிரெஞ்சு ஜூலைப் புரட்சியை ஆய்ந்த பொயர்னே ஜெர்மனியிலும் ஒரு புரட்சி அவசியம் என்ற முடிவுக்கு வந்தார். நாம் இங்கு தெரிந்தெடுத்துள்ள கடிதம் ஜெர்மனியில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லாமையைப் பற்றிக் கண்டிக்கிறது. அந்தச் சுதந்திரத்தை அரசு வழங்க மறுப்பதற்குக் காரணம் பொது மக்கள் தங்களைக் குறை கூறத் துவங்கிவிடுவார்களே என்ற அச்சம் மட்டுமல்ல; ஜனநாயக அமைப்பைப் பற்றிய எண்ணமே அவர்களுக்கு இல்லாததுமாகும்.

செல்வனும் ஏழையும்

ஏழைகளுக்கு எதிரான செல்வர்களின் பயங்கரப் போராட்டம், நாம் அதன் நடுவிலே வாழ்வது போன்று என் கண்முன்னே தெளிவாக நிற்கிறது; இதைத் தடுத்து, உலக அமைதியை உறுதிப்படுத்த முடியும்; ஆனால் எல்லா ஆட்சிகளும் அழிவைத் தோற்றுவிப்பதற்காகவே இணைந்து பாடுபடுகின்றன. ஏதேனும் பொல்லாங்குகளுக்கு எதிரே நடுங்கிக் கொண்டு நிற்கும், அரசியல் வாதிகள் தாங்களால் இயன்றவரை எல்லாம் செய்துவிட்டதாக

கம்புகின்றனர். பிரெஞ்சு ஏழை மக்களின் பிரதிநிதி எவரும் சட்ட மன்றத்தில் இலர். அண்மைக் காலத்தில் பிரெஞ்சு அரசியல் அமைப்பு, பழைய மனப் பீராந்திகளையும், பழைய அதிகாரங்களையும், பண்பற்ற பழைய அரசியல் முறைகளையும் பேணிக் காத்து வைத்துக் கொண்டுள்ளது. வாக்குரிமையைச் சொத்தோடு இணைத்து, சொத்தில்லாதோரை, கௌரவமும் இல்லாதாரக்கி வைத்துள்ளது. இங்கிலாந்தின் சீர்திருத்தச் சட்டம் மத்திய தர மக்களின் நிலையைத்தான் முன்னேற்றியிருக்கிறதே தவிர: கீழ் மட்டத்திலிருக்கும் வகுப்பார் உரிமை யற்றவர்களே என்ற நிலைமையை மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளது. நாடாளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் கொழுத்த பணம் படைத்தோரும், ஏராளமான சொத்துக்கள் உடையோரும் தொழில் அதிபர்களும் தாம் அமர்ந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் தங்கள் சுய நன்மைகளிலேயே கண்ணும், கருத்துமாயிருப்பார்கள். இவை உழைத்து வாழும் மக்களின் நலன்களுக்கு நேரெதிரானவை. நாடாளும் அவைகளின் பிரதிநிதிகளிடையே கீழ் மட்டத்திலிருக்கும் வகுப்பாரின் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும் என்று கூர்த்த மதிப்புடையோர் விரும்பும்போது, நரைத்து வயது முதிர்ந்து விட்ட மூத்த அரசியலாரின் விவேகம் ஆத்திரப்படுகிறது. "இவர்களுக்குச் சொத்தில்லை; எனவே, இவர்கள் எதையும் இழக்கப் போவதில்லை. இவர்கள் எப்படி நாட்டின் பொது நன்மைக்குப் பாடுபடுவதில் பங்கு பெற முடியும்? ஒவ்வொரு சூழ்ச்சிக் காரனும் வஞ்சகமாக இவர்களுடைய ஓட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது வாங்கிவிடவோ முடியும்." என்று மேல் மட்டத்தினர் கூறுகின்றனர். இவர்கள் நினைப்பதற்கு நேர் மாறான நிலை இருப்பதை மறைப்பதற்காகவே இவ்வாறு அவர்கள் சொல்கின்றார்கள். ஏனென்றால், செல்வர்களிடையே இருப் போரைவிட, ஏழை மக்களிடையே நேர்மையுடையோர் அதிகம்; மற்றோரைப் போல ஏழைகளை இலஞ்சத்தில் அவ்வளவு தூரம் வசப்படுத்தி விட முடியாது. எனவே தான், பொது மக்களின் பிரதிநிதிகளுக்கு மத்தியிலே ஏழைகளைக் காண மந்திரிகள் விரும்புவதில்லை. தங்களுடைய இரகசியப் பதிவேடுகளை நம்மிடம் காண்பிக்கலாம்; தங்களைப் பின்பற்றுவோர்; பிறரைக் காட்டிக் கொடுக்கும் தகவலைத் தங்களுக்குத் தருவோர்; தங்களுடைய அரசியல் தரகர்கள், தங்களுடைய உளவாளிகள் ஆகியோரின் பெயர்களை எல்லாம் நாம் அப்பதிவேடுகளில் படிக்கக் கூடும். அதன் பின்னர் தங்களுடைய சுய நன்மைகளுக்காகவும், பேராசைகளுக்காகவும் தம் மனசாட்சியை விற்ற செல்வர்கள் அதிகமா அல்லது தம் பசியைத் தணிக்க இவ்வாறு செய்த ஏழைகள் அதிகமா என்பதைக் கண்டுகொள்ள முடியும். செல்வர்

களே தாம் சட்டங்கள் இயற்றுகிறார்கள். வரித் தொகைகளை அவர்களே இன்னின்ன வகைக்கு என்று ஒதுக்கிக் கொள் கிறார்கள்—ஆனால் இவற்றில் மிக அதிகமான—அழுத்தும் சுமை யுடைய—வரிகளை இவர்கள் ஏழைகள் மீது விதித்திருக்கிறார்கள். நாட்டின் எல்லா வரிகளும் எவ்வளவு அநீதிமாக ஒதுக்கப் படுகின்றன என்பதைக் காணும்போது நம் நெஞ்சம் குமுறு கிறது. பட்டணவாசியான செல்வன், 'வரி அதிகம்' என்று முறை யிட நீங்கள் எப்பொழுதாவது கேட்டதுண்டா? பாதி நசுங்கியவர் களாக ஐரோப்பிய மக்கள் தேம்புகிறார்களே—இப்படி நசுக்கும் கடுஞ் சுமையைச் சுமப்பவர் யார்? கிராமங்களும், உழைத்துத் தொழில் செய்வோரும் தானே! மற்றோருக்குக் கிராமங்களை ஆண்டவன் உல்லாசப் பயணங்களுக்காகவும், சர்ச் திருவிழாக் களுக்குமாகத் தான் படைத்தான் போலிருக்கிறது. உழவன் தன் ஏழ்மையையும் பொருட்படுத்தாது செல்வனின் உபரிச் சொத்தைப் பாதுகாப்பதற்காக ஏழை கொடுக்க வேண்டியிருக் கிறது. இதனால், ஏக்கமடைந்தவனுக்க அந்த ஏழை முணுமுணுத் தால் அவனுக்கு ஒரு மகனிருந்தாலும், அந்த ஒரே மகனையே அனுப்புகிறார்கள். ஏன் அந்த ஒரே மகன் ஒரு நாளைக்கு ஐந்து கிராய்ட்ஸர் பணத்துக்காகத் தன் தந்தையைக் கொல்லும் பாவத்துக்கும் தயாராக இருக்க வேண்டும். வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருள்கள் மீது தான் எல்லா வரிகளும் விதிக்கப்படுகின்றன ; ஆனால் பணக்காரர்களின் உல்லாசப் பொருள்கள் மீதோ அவர்கள் அனுமதிக்கும் அளவுக்குத்தான் வரி விதிக்கப்படும். மனித இனம் துன்பத்தோடு வாழ்ந்தால் மட்டும் தங்களுக்குத் திருப்தி ஏற்படாது? வரும் தலை முறைகளும் அழிந்துபோகும் என்று உறுதிப்பட்டால்தான், தாங்கள் அமைதியாகச் சாக முடியும் என்று கருதியவர்கள்தாம், சாபக் கேடான இந்த அரசாங்கக் கடன்களைக் கண்டுபிடித் திருக்க வேண்டும். இக்கடன்களே வாணிபத்துக்கும், தொழிலுக் கும் வேண்டிய மூலதனத்தைக் கிடைக்கவிடாது தடுக்கின்றன. இப்படி ஓர் அழிவை ஏற்படுத்திப் பின்னர் இதை விட நம்முடைய பேரழிவுக்கும் காரணமாகும் வகையில் தங்களுக்கு வரி விதிக்கப் படாமலே தப்பித்துக் கொள்கிறார்கள். அரசு இவ்வாறு இழைக் கும் வருமானம், பாவம் பாக்கியிருக்கும் தொழிலிருந்து வசூலிக்கப்படுகிறது. செல்வம் படைத்த ஆலை முதலாளி, தன் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு துருக்கிச் சால்வை வீதம் கிடைக்காவிட்டால் தான் அழிந்து விட்டதாகக் கருதுகிறான் ; இப்படித் தன்னுடையவும், தன்னுடைய குடும்பத்தினருடையவும் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்காக நஷ்ட இனங்களை எல்லாம் தொழிலாளர்கள் மீது தள்ளிவிட்டு

அவர்களுடைய அன்றாடக் கூலியைக் குறைத்து விடுகிறான். பாரிஸ் நகரத்துக்கு ஆண்டுதோறும் நான்கு கோடி (பிராங்) தேவைப்படுகிறது; இதில் ஒரு கணிசமான பகுதி 'வேண்டியவர்களான' குத்தகையாளர்கள், காண்டிராக்டர் போன்றோர் கையில் தங்கி விடுகிறது. இப்பொழுது அவர்களுக்கு இன்னும் பணம் தேவைப்படுகிறது: புதிய வரிகளை மது, வெண்ணெய், நிலக்கரி ஆகியவற்றுள் எதன்மீது விதிப்பது என்பது பற்றிச் சிறிது காலமாக ஆலோசித்து வருகிறார்கள். இதனால் செல்வனுக்குச் சிரமம் ஏற்பட்டு விடக் கூடாது; வழக்கம்போல ஏழைதான் கொடுக்க வேண்டும். ஒரு புட்டி ஒயினுக்கு ஏழு காசுகள் வரி. ஏழைகள் குடிக்கும் மலிவான ஒயினுக்கும், பணக்காரர் குடிக்கும் உயர்ந்த வகை மதுவுக்கும் இதே வரிதான். முப்பது ரூபாய் விலையுள்ள உயர்தர மது பன்னிரண்டு காசே விலையுள்ள மலிவு ஒயினை விட அதிக வரி விதிக்கப்படுவதில்லை: ஆண்டுக்கு அறுபதினாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் இசைப் பாடகி ஒன்றும் செலுத்துவதில்லை. ஆனால் தெருப்பாடகன்தான் தெருவில் பாடிப் பிச்சையெடுக்கும் பெரும்பகுதியை போலீஸுக்குக் கொடுக்க வேண்டி இருக்கிறது. வெறுக்கத் தக்க குலுக்குச் சீட்டு (லாட்டரி) இருக்கிறதே, அது முழுக்க முழுக்க மக்களில் மிக்க ஏழை வகுப்பினரையே அழுத்துகிறது: பாதிக்கிறது. அன்றாடக் கூலிகளிடம் மட்டுமிருந்து இந்த அரசு ஆண்டுக்கு நான்கு கோடி ரூபாயைத் திருடிக் கொள்கிறது. இப்படிச் செய்யும் அரசுக்கு ஒரு சிறு திருடனை கைதிக்கூண்டில நிறுத்தவும்; கொள்ளைக்காரனைத் தூக்கிலிடவும் மனது வருகிறது. இத்தகைய வெறுக்கத் தக்க செய்கைகளுக்கெல்லாம் மேலாக, இழப்பதற்கு ஒன்றுமேயில்லா பரிதாபத்துக்குரிய ஏழை மக்களை இவர்கள் இழித்துரைத்து, இத்தகைய காட்டு விலங்கு (மக்) களிடம் செல்வர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் கூறுகிறார்கள். எத்தனையோ வன்முறைச் செயல்களைத் தடுத்து, வன்முறைச் செயல்களால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு செய்து வரும் சுதந்திரமான பத்திரிகைகளுள்ள பிரான்ஸிலேயே இதெல்லாம் நடந்தால், எல்லோரும் ஊமையர்களாக வாயைத் திறக்க முடியாத-நிலையில் இருக்கும் நாடுகளில் ஒவ்வொரு மனிதனும் தன் வேதனையைத் தவிர பிறர் வருத்தத்தைக் கவனிக்க முடியாத நிலையில் இருக்கும் நாடுகளில் என்னென்ன நடவாது? ஏழைகள் அங்கு எப்படி கருதப்படுகிறார்கள்; எப்படி நடத்தப்படுகிறார்கள்; எப்படி இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்பவற்றை யெல்லாம் நம் முடைய கவனத்துக்கு மிகத் தெளிவாகக் கொண்டு வந்தது— காலரா! ரஷ்யாவிலும், ஆஸ்திரியாவிலும், பிரஷ்யாவிலும் எப்படிச் சிரித்தார்கள்; கேலி செய்தார்கள்; தங்களுக்குத்

தான் இவ்விஷயம் பற்றி அதிகம் தெரியும் என்று உரிமை கொண்டாடினார்கள். அவர்களுடைய புன்சிரிப்பே பளபளக்கும் வாளாக இருந்தது; அவர்களுடைய கட்டளைகள் பீரங்கியின் வாயிலிருந்து வந்தன; அவர்களுடைய ஏளனமே சாவாயிற்று: "உயர்குடி மக்களும் செல்வர்களும் தங்களுக்கு நச்சூட்ட விரும்பு கிறார்கள்; அந்தக் காலரா நோயே பகையும், வெறுப்பும் வடித் திறுத்த மருந்துக் கலவை என்ற மக்கள் மருட்சியைக் கண்ட செல்வர்கள் எப்படிச் சிரித்தார்கள்?" ஆனால், இந்த மருட்சிக் குள்ளே மறைந்து கிடக்கும் உண்மை—செல்வர்கள் பயன்படுத்து வதற்கான அப்பாவிக் கருவிகள்தான் ஏழைகள் என்ற இருண்ட உணர்வு — உபயோகமானவுடன் துண்டு துண்டாக முறுக்கித் தள்ளப்படும் கருவிகள் நாம் ஏழை மக்கள் — என்றும் இந்த உண்மை ஏளனக்காரருக்கும், கல்விச் செருக்குடையோருக்கும், புலனுகாமல் போயிற்று. அப்படியானால், இந்த ஏழை மக்கள் குண்டாந் தடிகளால் கட்டாயப்படுத்தப்பட்டு மருத்துவ நிலையங் களில் அனுமதிக்கப்பட்டார்களே, தங்களுடைய வீடுகளையும், குடும்பங்களையும் விட்டு விலகியிருக்குமாறு செய்யப்பட்டார்களே —இவை யெல்லாம் மக்கள் மீது கருணை கொண்டதனால் நிகழ்ந்த வையா? இல்லை. செல்வர்களின் கவலைகளைத் தணிப்பதற்காகத் தான். காலரா ஏழைகளையும், கீழ்மக்களையும்தான் பாதிக்கும்; செல்வர்களும் உயர்மட்டத்திலிருப்போரும் இதைப் பற்றி அஞ்ச வேண்டியதில்லை என்று இச்செல்வர்கள் பத்திரிகைகளில் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்ளவில்லையா? இக் கொடிய நோய் தங்களைத் தாக்காது என்று இவர்கள் எக்களிக்க வில்லையா? அப்படியானால் மக்கள் இப்பேச்சுகளைக் கேட்கமாட் டார்களா, படிக்கமாட்டார்களா, சிந்திக்க மாட்டார்களா? பொது மக்கள் ஏழையைப் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள் என்ற உண்மை யில் இவர்கள் ஆறுதல் பெறுகிறார்கள். ஆனால் எண்ணம் ஒரு கனியைப் போன்றது; செயல் மரத்தின் வேரைப் போன்றது— பொது மக்கள் உண்மையில் சிந்திக்கத் துவங்கியதும் நீங்கள் ஐயப்பட்ட காலமெல்லாம் போய்விடும்; அக்காலத்தை நீங்கள் திரும்பக் காணமாட்டீர்கள்; என்னுடைய ஆத்திரம் இதோடு நிற்கட்டும்; ரஷ்யாவில் ஆட்டிடையர் ஒருவர் இருக்கிறார்; அவருக்கு நூற்று அறுபது வயதாகிறது. ஆனால் ரஷ்யர் ஆத்திரத் துக்கு இடம் கொடுப்பதில்லை. சவுக்கால் அடிப்பார்; அல்லது சவுக்கடி படுவார்; உறுதி பெறுவார்; அல்லது உறுதி பெறவைப் பார். ஆனால் பண்பட்ட ஜெர்மானியர்களான நாம் அவ்வளவு நல முடையவர்களல்லர். இருந்தாலும் மக்கள் சிந்தித்து உண் மையை உணரும் காலம் இங்கும் வரும்.

பாரிஸிலிருந்து ஒரு கடிதம்

பாரிஸிலிருந்து ஒரு பத்திரிகை வெளியிடப் போவதாக 'கோட்டா' திட்டமிட்டுள்ளார் என்று 'டி' இப்பொழுதுதான் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். 'டி'யின் துணையையே தற்காலிகமாக இவ்விஷயத்துக்காக கோட்டா கோரியிருக்கிறாராம். இத்திட்டம் மட்டும் நிறைவேறிவிட்டால்—சுவர்க்கானுபவம்தான். நூறு ஜெர்மன் மந்திரிகளுக்குப் பைத்தியம் பிடித்துவிடும். ஆர்வம் மட்டும் கொண்டுவிட்டால் தன் செல்வம், தன் செயற்பாடுகள், வணிக வட்டாரத்திலுள்ள செல்வாக்கு, ஈடுபாடுகள் கொண்டு ஒரு மனிதன் என்னதான் சாதிக்க முடியாது? சோர்வடைந்தோ, துணிவற்றோ இருக்கும் பேனுவுக்குத் தெம்பூட்ட, இரகசியங்களை விற்போர் எவரும் எளிதில் காணவண்ணம் அவற்றை மூடி வைத்திருக்கிறார்களே, அந்த ஒளிவிடங்களை எப்படித் திறப்பது என்பதெல்லாம் இப்படிப்பட்ட மனிதனுக்கு மட்டுமே தெரியும்; தணிக்கை செய்கிறார்களே, அதைப்பற்றி நினைக்கும்போது சுவரில் என் தலையை மோதிக் கொள்ளலாம் போலிருக்கிறது. ஒருவனைச் செயலிழக்கச் செய்வதற்கு இது போதும். பத்திரிகை சுதந்திரம் என்பது ஒரு வெற்றியல்ல; ஒரு போர்கூட அல்ல: ஆயுதங்களைத் தரித்துக் கொள்வதற்கு இது ஒரு வழி. ஆனால் போரில்லாமல் ஒருவன் எவ்வாறு வெற்றி தேடமுடியும்; ஆயுதங்களில்லாமல் ஒருவன் எவ்வாறு போரிட இயலும்? வகுந்து வகுந்து வரும் இச் சிந்தனைச் சுழல்தான் ஒருவனைப் பைத்தியமாக அடிக்கிறது. வனவிலங்குகள் தங்கள் பற்களால் செய்வது போலும், நாமும் நம்முடைய வெறுங் கைகளால் நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தாமாக அவர்கள் நமக்குப் பத்திரிகை சுதந்திரம் ஒருபோதும் வழங்கமாட்டார்கள். தங்கள் ஊழல்களையும், தாங்கள் செய்யும் தீமைகளையும் தொடர்ந்து செய்ய விடாது பத்திரிகைகள் அம்பலப்படுத்துகின்றதே என்பதுதான் எங்கும் எப்பொழுதும் பிடிவாதமாகப் பத்திரிகை சுதந்திரம் வழங்குவதற்கு அவர்கள் மறுக்கும் காரணம் என்று நான் அறுதியிட்டுச் சொல்லமாட்டேன். அப்படிச் சொல்லி, நம் அரசர்களுக்கும், அவர்களுடைய ஆலோசகர்களுக்கும் நான் அநீதி இழைக்கமாட்டேன். சுவர்க்கத்திலே வானவர்களைப் போல அவர்கள் ஆண்டாலும் எதிலும் குற்றம், குறை காணும் ஒரு குடிமகன் கூட அவர்கள் ஆட்சியிலே எந்தப் பிழையும் காணுதவாறு அவர்கள் நடந்தாலும்—அப்பொழுது அவர்கள் பத்திரிகை சுதந்

திரம் வழங்கமாட்டார்கள். அவர்களுடைய இயல்பு ஆந்தையைப் போன்றது; பகலின் ஒளியை அவர்களால் பொறுக்க முடியாது, தாங்க முடியாது. வைகறையில் கோழி கூவியதும் மறைந்து போய்விடும் பேய்களைப் போன்றவர்கள் அவர்கள்.

ராபர்ட் ப்ருட்ஸ்

பிரெஞ்சுப் புரட்சி' என்னும் தம் கட்டுரையில், 1789 ஆம் ஆண்டுச் சாதனையின் அடிப்படைக் கொள்கைகளையும், அதன் முக்கியத்வத்தையும் முழுமையாக மீண்டும் பாராட்டி எழுதுகிறார், பத்திரிகையாளரும், எழுத்தாளரும், இலக்கிய வரலாற்றுசிரியரு மான ராபர்ட் ப்ருட்ஸ் (1816—1872). பிற்போக்குக் கற்பனா யாளர்கள் என்னும் கட்டுரையில் 'இளைய ஜெர்மனி' இயக்க எழுத் தாளர்கள் அனைவரும் கொண்டுள்ள ஒரு கருத்தை - அதாவது கெதேயையும், கற்பனையுலகக் கவிஞர்களையும் கண்டிக்கும் கருத்தை—ப்ருட்ஸ் கூறுகிறார். கற்பனையாகக் கவிஞர்களின் சில அம்சங்கள் இனங் கண்டுகொள்ளப்படுகின்றன; இருந்தாலும், அவை திரித்தும், காய்தல், உவத்தலோடும் தான் கூறப்படு கின்றன: அல்லது அவற்றின் உள்ளக் கிடக்கைகள் தவருகப் புரிந்துகொள்ளப்படுகின்றன: எனினும், 'இளைய ஜெர்மனி' இயக் கத்தின் நோக்குகளே இந்த ஆய்வு விமர்சனத்தில் தெளி வாக்குகின்றன.

பிரெஞ்சுப் புரட்சி

கனியைக் கொண்டு மரத்தை அறிய முடியும். பதினெட்டாம் நூற்றாண்டு முழுதும் பழுத்துக் கனிந்து பொன்னிறமான, இரத்தச் சிவப்புடைய பழம் அதோ இருக்கிறது. பூ மொக்கு கனியாவது போல, அந்த நூற்றாண்டின் நுனியிலிருந்து இக்கனி காற்றில் அசைந்தாடி நம்மை அழைக்கிறது. அதன் நிறைவு, அதன் முழுமை—நன் மரத்தின் மலர் மொட்டு கனியாக முழுமை யுடையது போல—பிரெஞ்சுப் புரட்சியாக ஏற்றம் கண்டது.

எவ்வளவு சிறிய விஷயமாக இருந்தாலும் பிரெஞ்சுப் புரட்சி யைப் பற்றி ஒன்றை திருப்பித் திருப்பிச் சொல்லியாகவேண்டும்; ஏனென்றால், இன்னும் பொதுமக்கள் மட்டும் அல்லர், மோபல்ஸ் காரர்கள் மட்டும் அல்லர், மிகச் சாதாரண தணிக்கை, பாது காப்பு அலுவலர்கள் மட்டுமல்லர், அறிஞர்கள், வரலாற்றுசிரி யர்கள், அரசியலார் போன்றார் கூட பிரெஞ்சுப் புரட்சிக்குரிய காரணங்களைப் பற்றிக் கடிதங்கள், நினைவுக் குறிப்புகள், விளக்க அட்டவணைகள் மூலம் தாங்கள் கொண்டுள்ள ஒரு கருத்தை நமக்கு விளக்க முற்படுகிறார்கள்.

சரி: பிரெஞ்சுப் புரட்சி எதினின்று தான் இளர்ந்தெழுந்தது?


பிரெஞ்சு மக்கள் இயல்பாகவே கட்டுப்பாடுகளுக்கு உட்படாத வர்கள்; வரிகள் கடுமையாக இருந்தன; விலைச்சலில்லாது

போயிற்று; அந்த மனிதர் அமைச்சரானார்; அல்லது இந்த மனிதரை அமைச்சராக்கத் தவறிவிட்டார்கள்; பதினான்காம் லூயி மன்னர் இதைச் செய்தார் அல்லது செய்யாது போனார்; அல்லது குறிப்பிட்ட ஒரு சம்பவம் வேறுவிதமாக நிகழ்ந்திருக்க வேண்டும்.—சுருக்கமாக பிரெஞ்சு மக்களிடத்தில் மட்டும், (புரட்சி நடப் பதற்கு முன்னர்) வலிமையுடைய ஜெர்மன் பேராசிரியர் ஒருவர் இருந்திருந்தாராலுல்; தூரநோக்குப் படைத்த, தந்திரம் மிக்க ஜெர்மன் அரசியல் தூதுவர் பிரெஞ்சுக்காரர்களுடன் இருந் திருந்தாராலுல் கதையே வேறுக யிருந்திருக்கும்! பதினான்காம் லூயி—அல்லது அவருடைய பேரப் பிள்ளைகள் இன்றும் அரசாண்டு கொண்டிருப்பார்கள்; நெப்போலியன் இப்பொழுது ஓய்வுபெற்ற இராணுவ மேஜராக யிருப்பார்—எல்லாம் அந்த ஜெர்மன் பேராசிரியரின் விவேகத்தினாலும், தூர நோக்காலும் இவ்வாறு நடந்திருக்கும் என்று கூறுவோரும் இருக்கிறார்கள்! ஆனால் முன்னர் கூறியதைப் போல பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றி ஒரு சிறு விஷயத்தை மீண்டும், மீண்டும் சொல்லித்தானாக வேண்டும்; அதாவது அது பிரெஞ்சு நாட்டு மக்களின் புரட்சி மட்டுமல்ல; அது உலகு சார்ந்த புரட்சி; சரித்திரத்தின் புரட்சி! ஒரு புது சகாப்தத்தின் துவக்கமாகும்.


அரசப் பற்றும், அமைதி விருப்பமும் கொண்ட ஜெர்மன் மக்களாகிய நாம்; பணிவு, கீழ்ப்படிதல் ஆகியவற்றில் ஊறிப் போன நாம் கூட அந்தப் புரட்சியின் தோற்றத்திலும் வளர்ச்சி யிலும் பங்கு கொண்டுள்ளோம். இந்த எண்ணம் நமக்கே நடுக் கத்தைத் தரலாம்; என்றாலும் இந்த எண்ணம் தவிர்க்க முடியாதது. புதிய, சுதந்திரமுள்ள இன்பமான சகாப்தத்தை—நீதியையும், புத்துயிர் பெற்ற மனிதப் பண்பையும் கொண் டுள்ள ஒரு புதிய சகாப்தத்தை இரத்தச் சிவப்புள்ள விடிவெள்ளியைப் போன்று உலகின்மீது தோற்றுவித்திருக்கும் இந்தப் புரட்சியின் பயன்கள், நமக்கு மிகக் குறைவாகவே கிட்டி யிருக்கக்கூடும். என்றாலும் கூட, நாம் அதன் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பங்கு கொண்டிருக்கிறோம். ஏனென்றால் அப் புரட்சியில் விளைந்த பயன்கள், மனிதர் அனைவரும் சுதந்திரத் துடனும், சமமாகவும்தாம் பிறக்கின்றனர்; நாம் அனைவரும் இறை அம்சமுடைய மனிதப் பண்பைப் பெறச் சமமாகவே அழைக்கப்படுகிறோம்; மனிதன் கற்பிக்கும் வேறுபாடுகளைத் தாண்டி எல்லோருக்கும் சமமான ஆத்மீக மேம்பாடு உண்டு என்பன போன்ற கருத்துக்கள்—பதினெட்டாம் நூற்றாண்டு முழு வதிலும் நம்முடைய கவிஞர்களையும், சிந்தனையாளர்களையும் ஈர்த்து இழுத்த—பண்பாட்டையும், சுதந்திரத்தையும் பற்றிய இக் கருத்துக்கள்—நமக்கும் பிரெஞ்சு மக்களுக்கும் பொது

வானவை; அனைத்துக் கவிதை ஊற்றுக்களிலிருந்தும் பாய்ந்து வரும் இந்த எண்ணங்கள்—ஸாலமனின் உலகளாவிய ஒரு மந்திரக் கட்டளையைப் போல சிந்தனையாளர்கள், தத்துவ ஞானிகள் அனைவர் உள்ளத்திலும் உறைந்து இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் வெளியான இவை எல்லோருக்கும் பொதுவானவை. ஒரு குழந்தை தான் சொல்ல விரும்புவதற்குத் தேவையான சொற்களைத் தேடி—தன் சிறு நாவு திக்கித் திணறி எழுப்பும் ஒலிகளின் பொருளையும் அறியாது பிதற்றுவது போல இக் கருத்துக்கள் கூறப்பட்டு வந்தாலும்—இத்தகைய உயரிய எண்ணங்களை நாம் தேடினோம்; அவற்றை உச்சரிக்க முயன்றோம் என்பதே போதுமானது. ஆனால், அந்த நூற்றாண்டின் இறுதியிலே பிரான்சில் கைவந்ததென்ன? சாவைத் தேடும் அந்த மார்ஸே தேசிய கீதத்தில் எதிரொலிப்பது என்ன? தலை வெட்டும் பொறியின் படிகளிலிருந்து கழுவாய் தேடி நம் முன்னே சொட்டுச் சொட்டாக விழும் இரத்தத் துளிகள் என்ன எடுத்துரைக்கின்றன.....?

நம்மைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளை மெல்லிய கரங்களால் அகற்றுவதற்குப் பதிலாகச் சுதந்திர தேவன் அவற்றைக் கோடரியால் பிளந்து எறிந்ததும்: உலக முழுவதும் கம்பீரமாகச் சுற்றி மக்களுக்கு ஆசி கூறி அவர்களை மகிழ்ச்சி பெறச் செய்வதற்குப் பதிலாக, தன்னுடைய தூய ஆடைகளை இரத்தம் தோயவிட்டதும்—அதாவது நிகழ்ச்சிகளின் போக்கே இப்படி ஒரு பயங்கரமானத் திருப்பத்தை அடைந்ததும்—அந்தச் சுதந்திர தேவனின் தவறல்ல; சுதந்திரத்தின் கருத்துப் படிவம் குருதிக் குளத்தில் நீந்த வேண்டும் என்பதல்ல; கொடுமை நம்மைப் பட்டு மெத்தையில் கிடத்தி, அன்பாகத் தட்டிக் கொடுத்து, சிறப் புணவும், பானங்களும் தருவதில்லை; சுதந்திரக் கோரிக்கையும் வெட்டுவதுமில்லை; தூக்கிலிடுவதுமில்லை. புரட்சியை இயக்கும் புனித ஆவியிலே பேயுருவைக் கண்டார்களே—அந்த எழுச்சியிலே தங்களுடைய வீழ்ச்சியைக் கண்டார்களே—புரட்சி புலர்ந்த வைகறை ஒளியை ஊழித் தீயாக உருவகப்படுத்திக் கொண்டார்களே அவர்கள் செய்த தவறுதான் இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது. ஒரு பாய்லர்—கொதிகலம்—வெடிக்கும்போது, பாய்லரைவிட அதற்குச் சூடேற்றிய நீராவிதான் காரணம் என்று சொல்லமுடியாது. ஆனால், கொதிகலத்தை அளவுக்குமீறிச் சூடாக்கியவன்—நீராவிக்கு பாய்லர் வெடிக்குமளவு அழுத்தம் கொடுத்தானே அவன்: அழுத்த எல்லை மீறும்போது நீராவி வெளியேறுவதற்குரிய அமைப்பைத் திறக்க மறந்தானே அவன் தான் குற்றத்தைச் சுமப்பான். எனவே புரட்சியின் குருதி படிந்த உருவைக் கண்டு நாம் நடுங்கவேண்டியதில்லை; பிரெஞ்சு மக்கள்




மார்ட்டின் லூதர்
(1483—1546)





கோட்ஹோல்ட் எ.ப்ராயிம் லெஸ்ஸிங்
(1729—1781)

இரண்டாம் ப்ரீட்ரிஷ்
(1712—1786)


யொகன் கோட்ப்பிரைட் ஹெர்டர்
(1744—1803)








இம்மானுவல் காண்ட்
(1724—1804)




யொகன் உல்ப்காங்க் ஃபன் கெதெ
(1749—1832)

ஃப்ரீட்ரிஷ் ஷில்லர்
(1759—1805)

ழான் பௌல்
(1763—1825)





சுதந்திரத்தை இரத்தத்தால் "ஞான ஸ்நானம்" செய்வித் தார்கள் என்பதற்காகவோ அல்லது ஊழல் நிறைந்த பதினெட் டாம் நூற்றாண்டு இப்படி பயங்கரமான ஓர் உச்சத்துக்குப் போய் விட்டதே என்றோ அம்மக்களைக் கரிக்க வேண்டியதில்லை. பண் டைய ரோமர்கள் கொடிய குற்றம் செய்தோரை கொண்டுபோய் உருட்டி விடுவதற்காக வைத்திருந்தார்களே டார்பியன் குன்று அந்த அளவுக்கல்லவா இப் புரட்சி ஓங்கிவிட்டது. எனவே வரலாற்றின் பயங்கரத் தேவைகள் எவ்வாறு அமைந்துவிட்டன என்பதைக் கண்டு வேண்டுமானால் வீரச்சம் கொள்வோம். அதே நேரத்தில், அதிலிருந்து பாடங்களும் கற்றுக்கொள்வோம்— பாய்லரை வெடிக்கவைக்கும் அளவுக்குச் சூடேற்றக்கூடாது என்னும் ஒரு சிறு பாடமாக அது இருந்தாலும் சரிதான்! இறுதி யாக, பிரெஞ்சுப் புரட்சி இப்படித்தான் காட்சி தருகிறது: 'பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் ஊடாடிச் சென்ற உயிருள்ள, சுதந்திரத்தையே உயிர் முச்செனக் கொண்டுள்ள— அறிவொளியும், விடுதலையுணர்வும் அடிப்படையாகக் கொண் டுள்ள—கருத்துக்களின் சாதனை உருதான் அது: வெறும் ஏட்டுக் கொள்கை நடைமுறையாக, இலக்கியம் அரசியலாகப், பண் பாடு செயல்முறையாக மாற்றியதுதான் பிரெஞ்சுப் புரட்சி: ஏதென்ஸின் காவல் தெய்வமான பாலாஸ் ஏதெனை தன்னை யுண்டாக்கிய தெய்வீகப் படைப்பாளனை தன் தந்தை ஜூபிடரின் தலையிலிருந்து ஆயுத பாணியாக, வாள்கள் ஒலி யெழுப்ப உதித்தது போன்றதுதான் பிரெஞ்சுப் புரட்சி!'

பிற்போக்குக் கற்பனையுகம்

இலக்கியத்துக்குள் ஓர் இலக்கியம்: தேசியத்துக்குள் ஒரு தேசியம்: கல்வியறிவும், கலையுணர்வும் பண்பு நயமில்லா பாமரர் களுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது தனித்தன்மையும் சலுகை கொண்ட ஒரு சிறு சமூகம். இவற்றை நிறுவுவதில் இன்பங் கொண்டனர் கற்பனையுகக் கலைஞர்கள். ஷில்லரும், பிஷ்டேயும் எந்த நல்ல அம்சங்களைக் கொண்டு உயர்வுபெற்றார்களோ அக் கவின்மிகு ஆர்வமும் பொறுமை சார்ந்த போதனை இயலும் இவர் களிடம் இல்லை. இந்த அம்சங்களில்லவிட்டால் திறமையிலும், செயலாற்றலிலும் ஒருவன் பொதுவே உயர்வு பெற முடியாது: இந்த அம்சங்களில்லை யெனின் உயர்வு பெறுவதற்கு வேண்டிய உண்மை அடிப்படையை—தேசிய உணர்வின் அடிப்படையையே —ஒருவன் கைவிட்டவனாகின்றான்.

வேறு பல விஷயங்களைப் போல இவ்விஷயத்திலும், கற்பனை யுகத்தார் கெதேயுடன் இணைந்து கொள்கிறார்கள்: கெதேயின்

மேம்பாடு அடிக்கடி, பெருமளவில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேம்பாடு என்று சொல்லும்போது, ஒரு சிறு நாட்டின் அமைச்சரின் மகனைப் போலவோ, அல்லது ஒரு பெரு நகரின் பிரபு மகனைப் போலவோ மக்களிடம் கூடிப் பழகாது விறைப்போடு—கெதேயிருந்ததாகச் சொல்லப்படுகிறதே, அந்த மனப்பான்மையின் மேம்பாட்டைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. பாமர மக்களிடத்திலே வெறுப்பு, பொதுமக்களைப் பார்த்தால் ஓர் இகழ்ச்சி—அதாவது ஷில்லருக்கு நேர்மாறான இத்தன்மைகளை பெருமளவில் பெற்றிருந்த அம் மகா கவிஞரின் இலக்கிய மேம்பாட்டைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். கெதே சம்பந்தப்பட்ட வரையில் இந்த மேம்பாடு அவருடைய இயல்பின் நேர்டியான விளைவுதான். அவர் கவின்மிகு தற்பெருமையாளர்; பிறரைப் பற்றி அக்கறைப்படாத—பிறரைப் பற்றி அக்கறைப்பட வேண்டிய அவசியமில்லை எனக் கருதும்—முழுமையான தனித் தன்மை வாய்ந்தவர்!

இந்தக் கற்பனையுகக் கலைஞர்கள் சம்பந்தப்பட்டவரை இந்த 'மேம்பாடு' தற்பெருமையுள்ள, செயற்கையான ஒரு மேம்பாடு. அவர்கள் பெரும்பான்மைப் பொதுமக்களை இறுமாப்புடன் வெறுத்தொதுக்கியதற்குக் காரணம் தாங்கள் விவேகமிக்கவர்கள் என்பதுமட்டுமல்ல, பொதுமக்கள் அவ்வளவு முட்டாள்களாக யிருக்கிறார்கள் என அவர்கள் நினைத்ததுமாகும். கெதேயின் 'வாழு, வாழவிடு' என்னும் மூதுரை, அவர்களுக்கு—உயர் மட்டத்தில் இருப்போருக்கு — உகந்த ஒரு மெய்யுரையாகி விட்டது. "நான் வாழ்கிறேன்; பிறர் வாழ்வதாகக் கற்பனைதான் செய்கிறார்கள்" என்பதை ஒரு மெய்யுரையாக இவர்கள் கொண்டு விட்டார்கள். கெதே, "தான் எனும் உள்ளுணர்வு முனைப்போடு" வாழ்ந்தார்; ஆனால் இவர்களோ குறுகிய மனப்பான்மையோடு பிறரோடு ஒட்டாமல் வாழும் கூட்டமாகிவிட்டார்கள். கெதே, உலகப் போக்குக்கு வெறுப்புக் காட்டாது இணங்கி இன்பங் கண்டார்; கற்பனையுகத்தார் உலகை இகழ்ந்து, ஏளனம் செய்தனர்.

பெரும்பான்மையான பொதுமக்களிடமிருந்து இவர்கள் இப்படி விலகி, உறவு முறித்துக்கொண்டு தாங்கள்தாம் பிறர் எல்லோரையும்விட உயர்ந்தோர், விவேகமுடையோர், நுண்ணறிவு படைத்தோர் என எண்ணிக்கொண்டு போய்விட்டதால் பொதுமக்களோடு கலந்து தங்களுடைய திறமைகளெல்லாம் கரைந்துவிடக்கூடாதே என்பதற்காக இவர்கள் தங்களுக்கெனத் தனிக் குழு, உட்குழு என்று ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இக்கற்பனை யுகத்தார்தாம் நம் இலக்கியத்தின் ஒற்றுமை உள்ளம் இல்லாப் பிரிவினையாளர்கள். இப்படி தன்னலம் சார்ந்த,

பிறரை வெறுத்தொதுக்கும் பிரிவினைக் குழுக்கள் எப்பொழுதாவது தோன்றினாலும் அவை நெறி பிறழ்ந்த, மனித இயல்புக்கு மாறான தன்மையுடையோரின் அழுகிய முயற்சிகளாகவே இருந்தன. கற்பனையுகக் கலைஞர்கள்தாம் இப்பிரிவினைக் குழுக்களை வளர்த்து, அவற்றை ஒரு தனிப்பட்ட கொள்கையாக்கிவிட்டனர். வெட்கத் திரையை விலக்கி, இலக்கிய உலகில் தன்னலத்துக்காக நாடக்கூடிய அற்ப செயல்களையும், கபடச் சூழ்ச்சிகளையும், கீழ்த்தரமான நடவடிக்கைகளையும் திறந்த சந்தைப் பொருள்களாக்கியவர்கள். இதற்கு முன்னரும் இவ்வாறு எப்பொழுதேனும் நடந்ததுண்டு; ஆனால் அப்பொழுது இத்தகைய இழி செயலில் ஈடுபட்டவர்கள் மறைமுகமாக, இரகசியமாக இத் தொழிலில் ஈடுபட்டனர். இப்பொழுதுதான் மேற்குறித்த இழி செயல்களை எல்லாம் ஆரவாரமான அளவில், வசதியோடு அமைக்கப்பெற்ற பத்திரிகைகள் மூலம் பொதுமக்கள் நோட்டமிடுவதற்கென்று வைத்தார்கள். இவர்கள்தாம், "இலக்கியத்தில் முதன் முதலில் ஊழலையும், ஒழுக்கந் தவறிய செயல்களையும் தேடு" என்று பொதுமக்களைப் பழக்கப்படுத்தியவர்கள்.

இதுபோக, இலக்கியத்தில் மட்டும் இக்குழு நடவடிக்கை முடங்கிக் கிடக்க வில்லை; இலக்கியத்தில் ஒரு தன்னலக் கும்பல் என்ற நிலையில் மட்டும் இது நின்று விடவில்லை. சமூக நிகழ்ச்சிகளிலும், ஏன் நம் குடும்ப வாழ்க்கையிலும் கூட ஊடுருவிவிட்டது. இந்நிலை தான் இதன் மிக மோசமான, கேடு கெட்ட அம்சமாகும். இலக்கியத்தையும், அதனுடன் ஒட்டிய கலைகள், நாடக, இசை அரங்குகள் அனைத்தையும் சமூக நிகழச்சிக்கானத் தனிப் பொருள்கள் என்று ஆக்கி பொது வாழ்க்கையின் நடவடிக்கைகள், வரலாற்றுப் போக்கு, தாய்நாட்டின் நலன், குடியுரிமைக் குரிய ஈடுபாடுகள் — இவை பற்றியே வாய்திறவாது, மௌனம் சாதிப்பதுதான் பெரும் அவல நிலையாகும். ஒரு நூல், கலைப் படைப்பு, புகழார்ந்த மனிதன்—இவற்றைச் சுற்றி அறிவு விருந்து இல்லாவிட்டாலும் இன்புற வாய்ப்பிருக்கிறது என்ற எண்ணத்தில் மனம் நிறைத் தேநீர் விருந்துகளில் மக்கள் குழுமுகிறார்கள். ஆர்வத்தினாலே, இவர்கள் இவ்வாறு செய்யவில்லை. இதுதான் நாகரிகமான செயல்; இதுதான் பண்புடையது; மெச்சத் தகுந்தது என்று கருதப்படும் என எண்ணிக் கொண்டு இப்படிக் கூடுகிறார்கள். ஆனால் உண்மையிலே இவர்களுக்குச் சலிப்புத்தான் மிச்சம். ஆனால் சாதாரண கேளிக்கைகளினால் இன்பம் எய்தும் பாமர மக்களை விடத் தாங்கள் மிக உயர்ந்தவர் என்று இந்தச் சலிப்படைபவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். இதுதான் கலையின் சோர்வுணர்ச்சி.

எவனும் பற்றுக் கோடில்லாத ஒரு வெறுமையில் காலந்தள்ள முடியாது—கவிஞன் கூறுவது போல தன் ஆத்மா பற்றிக் கொள்வதற்கு ஏதாவது ஒரு பிடிதாரம் மனிதனுக்கு வேண்டும். உள்ளார்ந்த மெய்ப்பொருளில் நம்பிக்கையற்றவன், புலன் வெறிகளில் நம்பிக்கை கொள்கிறான்; தன் தெய்வத்தைத் தகர்த் தெறிபவன், சிலைகளைச் சமைத்துக்கொண்டிருக்கிறான்.

உயிர்த்துடிப்பின் ஆக்கச் சக்திகள் அனைத்தையும் திட்டமிட்டுக் குறுக்கி, தன்னைச் சுற்றி வேண்டுமென்றே ஒரு செயற்கைப் பாலைவனத்தைப் படைத்துக் கொண்ட இக்கற்பனாவாதிகள் நாளடைவில் இதிலும் திருப்தி காண முடியவில்லை. வாழ்வுக்கு வேண்டிய இயற்கையின் அடிப்படையையும், வரலாறு, மக்கள், மரபு ஆகிய அனைத்தின் அடிப்படையையும் அவர்கள் கைவிட்டார் கள். எனவே ஒரு புதிய அடிப்படையை—செயற்கையான ஒன்றை—தேடினார்கள். ஆனால், செடி, கொடிகளும், மரப் பாசிகளும், புற் பூண்டுகளும் மூடியிருக்கும் ஒரு படுகுழி சில சமயம் தீவைப் போல் தோற்றமளித்து ஏமாற்றும் என்று இயல் நூல் வல்லார் கூறுகின்றனரே, அது போன்றுதான் இயற்கையின் கதகதப்பையும், முழுமையும் உயிர்த்துடிப்புமுள்ள இதயத்தை யும் நம் மார்பிலிருந்து தம்மையே அழித்துக் கொள்ளும் ஒரு வெறியில் வெட்டியெறிந்து விட்டார்கள். எனவே அதற்குப் பதிலாக ஒரு செயற்கைக் கருவியை அங்கு வைத்து நிரப்பப் பார்க்கிறார்கள். கடிகாரத்தைப் போன்று முள்களையும் சக்கரங் களையும் கொண்டு சலிப்புத் தட்டும்படி ஒரே மாதிரியாகக் கிறீச் சிட்டு இயங்கும் இந்தச் செயற்கைக் கருவி, சுதந்திரமாக, கவி னுறு அழகொடு துடிக்கும் உயிர் நாடிக்கு ஒப்பாக இருக்குமாம். ஆகவேதான் இலக்கியத்தை மையப்படுத்த ஒரு குவிமுனை வேண்டும் என்ற கூக்குரல் கற்பனாவாதிகளின் காலம் முழுவதி லும் நிறைந்திருந்தது; எனவே தான் காவிய மரபு கொண்டு விட்டதாகக் கருதப்படும் சில காலாகட்டங்களையும், சில இலக்கிய நிலைகளையும், சில முன் மாதிரிகளையும் மேலெழுந்தவாரியாக இணைக்க வேண்டும் என்ற தேவை எழுந்திருக்கிறது. தனி சாதனங்கள், தனி கலை வடிவங்கள் இப்பொழுது உயிரில்லாது போய்விட்ட இடத்தில் ஒரு புது மலர்ச்சி, புத்துயிர்ஊட்டல் ஆகிய வற்றின் மூலமாகக் கலையை வெளியிலிருந்து கொண்டுவரு வதற்காகத் தான் இத்தனை முயற்சிகளும் பெரும் பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன: இந்தச் சுற்றித்திரிதல், துணிச்சல் எல்லாம் அதற்காகத்தான்!

இலக்கியம் வரலாற்று வழியே—அதாவது சுதந்திரமான படைப்பின் வழியே—அழகின் வழியே போக விரும்பாததனால் பொது நிலைமைகளினால் பெரும்பாலும் கட்டாயப்படுத்தப்பட்டு

அது அந்த அழகு வழியே செல்ல முடியாமையினால்—அது மூன்று திசைகளில் தடம் புரண்டு போயிற்று என்பதை இங்கு இனங் கண்டு கொள்ளமுடியும்.

ஒன்று: இடை நிலைக் காலத்தின்* மீது ஒருதலைப் போக்கான மோகம் நவீன உலகுக்கு முந்திய காலத்தின் 'அந்தி மயங்கும்' வேளைதான் இந்த இடைநிலைக்காலம் என்பது. இப்பொழுது நம் உலகை ஆட்டிவைக்கும் எதிர்ப்புகளெல்லாம் எப்பொழுதேனும் கனவிலே நேர்வது போல இவை உறுப்புக் கொண்டாலும்—பெரும்பாலும் மேற்பரப்புக்கு வராமல் அடியிலேயே அயர்ந்து உறங்கிக் கொண்டன. எப்பொழுதேனும் இந்த எதிர்ப்புக்கள் விழித்துக் கொண்டால் இவை அண்ட அமைதியின் நடுவிலே இனம் புரியா தீக்குறியான சப்தங்களை எழுப்புவதுண்டு. இந்தக் கனவு யுகத்தில் தனி மனிதனின் அமைதியை எந்த வரலாற்றின் எந்தத் திருப்புக் கட்டமும் குலைக்காத அந்த யுகத்தில்தான் மனித இனத்தின் நிறைவு பெற்ற வாழ்வைக் காணலாம் என கற்பனாவாதிகள் எண்ணினர். நலங் கொழிக்கும் புதுமையும் உயிரோட்டமுள்ள ஆற்றலும், எளிமை வாய்ந்த அழகும்கொண்ட பண்டைய உலகு தேவைகளைப் பெருக்கிக் கொண்ட பலஹீனமான இப்புது யுகத்துக்கு இசைவும், இணக்கமும், பயனும் அற்ற தாகத்தான் தோன்றிற்று. கற்பனை யுகத்தினரின் கோளாறுள்ள உள் விருப்பமும் குறிக்கோளற்ற உழைப்பும் ஊக்கமில்லா வெறியியலும், உண்மையில்லா வேகமும் இடைக்கால உலகின் குழம்பிய, சிதைந்த வடிவங்களின் பால் ஈர்க்கப்பட்டன.

இதோடு ஒரு தேசிய அம்சமும் சேர்ந்து கொண்டது.

இங்கு எந்த தேசியத்தைக் குறிக்கிறார்கள் என்ற வினு எழுகிறது. அவர்கள் பேசும் ஜெர்மனி எங்கே இருக்கிறது? நமக்கு அவர்கள் பரிந்துரை செய்யும் பொது நிறுவனங்கள், வரலாற்று நிலைகள் யாவை? தற்காலத்திய வாழ்வில் மகிழ்வோடு தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல், தங்களுடைய இன்றைய உரிமைகளையும் தேவைகளையும் கவனியாமல் அவர்கள் கடந்த காலத்தை நோக்கிச் செல்லவில்லையா? புதிய சுதந்திரமான யுகமென்று அவர்கள் முழங்குகிறார்களே அதற்கு நம்மை அழைத்துச் செல்லாமல், ஒரு செயற்கையான, பொய்யான இடைக்கால உலகை அல்லவா நம் மீது திணிக்கிறார்கள். ஆக, அந்த இடைக்கால உலகின் உயிர்ப்பு மட்டுமல்ல, அதன் தீய ஆவிகள் கூட வருங் காலத்தின் பெரு நிகழ்ச்சிகளுக்கு முன் செல்கின்றன. என்றாலும் கதிரவன் நிச்சயமாக உதிப்பான்: நலம் பயக்கும் விடுதலை வழங்கும் தன் கதிர்களால் இந்த அவல நிழல்களை அவை எந்த

* வரலாற்றின் இடைக்காலம் என்பது கி. பி. 600—1500.

வெறுமையிலே தோன்றிற்று அந்த வெறுமையிலே கரைத்து விடுவான் என்று நம்பிக்கை கொள்வோமாக!

இரண்டு: அடுத்தபடியாக, கற்பனையுக வாதிகள் தங்கள் கலைக்கு கத்தோலிசத்தில் ஒரு குவி முனையைத் தேட முனைந்தார்கள். வரலாற்று இடைக்காலத்தின்மீது தங்களுக்கு இருந்த இணக்கத்தாலோ அல்லது ஒரு முகமான ஆர்வத்தோடு அவர்கள் பயின்ற ஸ்பானிய இலக்கியத்தின் காரணத்தாலோ, அல்லது பொதுவே தென் ஐரோப்பிய இலக்கியங்களின் மீது அவர்களுக்கு இருந்த ஈடுபாடுகளினாலோ அவர்கள் கத்தோலிசத்தின் பால் ஈர்க்கப்படவில்லை; இவர்கள் இசையிலும், எழுத்திலும் ஏங்கித் தேடிய அழியா அமைதியையும், நல்லாசி பெற்றவர்களுக்காகவே அமைக்கப்பெற்ற அமைதி தவழும் ஓர் ஆழ்ந்த தீவை இடைக்கால உலகின் கம்பீரமான, அசைக்க முடியாத, தனித்தொதுங்கி நிற்கும் கத்தோலிக்க ஆலயங்கள் கத்தோலிசத்தின் பால் அணுகவில்லை. தங்களுடைய உறுதியற்ற தன்மையினாலும், ஒழுக்கத் தளர்வினாலும், ஆயிரக்கணக்கான தவறுகளுக்கும், மோதல்களுக்கும், பிணக்குகளுக்கும், பின்னர் தேய்ந்து, சோர்ந்து சிதைந்து இவர்கள் கத்தோலிக்கக் கைகளில் போய்ச் சேர்ந்தார்கள். கற்பனை வாதத்தின் முக்கிய ஆதரவாளர்கள்—கத்தோலிசத்தைப் பெருங்குரலில் பிரச்சாரம் செய்தார்கள்; கத்தோலிக்கச் சின்னங்களையும், படங்களையும் கோக்கி நின்றவர்கள்;—இவர்களில் எவரும் கத்தோலிக்கர்களாகப் பிறக்கவோ, வளரவோ இல்லை. இவர்கள் அனைவரும் புரோடஸ்டண்டுகளாக இருந்து கத்தோலிக்கர்களானவர்கள். கலங்கி கவிழ்ந்து, சோர்ந்து, தளர்ந்துபோன ஆத்மாக்கள் புயலுக்குப்பின் ஒரு பாதுகாப்பான துறைமுகமாக கத்தோலிசத்தைக் கருதி அதனிடம் வந்தவர்கள்.

மூன்று: இலக்கியத்துக்குத் தேவைப் பட்ட நேரடியான, உயிர்த் துடிப்புள்ள, பருப்பொருளான ஒரு நிறைவைக் கொடுப்பதற்காக இலக்கியம் இலக்கியத்தையே உண்டு வளரும்படி செய்ய முயன்றார்கள். அதாவது, இலக்கியத்துக்கு இலக்கியத்தினூலே ஊட்டம் கொடுத்தார்கள். புத்தகங்களைப் பற்றிப் புத்தகங்களும், கவிதைகளைப் பற்றிக் கவிதைகளும், நாடகங்களைப் பற்றி நாடகங்களுமாகவே எழுதலானார்கள். இலக்கியம் கருப்பொருளில்லாதிருந்து, கருப்பொருள் இருந்தால்தான் அதைக் கைவசப்படுத்தி, வடிவம் கொடுத்து, பயன் தோற்றுவிக்க முடியும். வேலைக்காரி தன் கொழுப்பையே உண்டு வாழுமாமே அதுபோல் இலக்கியத்தைப் பற்றியே இலக்கியங்கள் சமைக்க முடியாதா என்ன? இதைப் போலவே உண்மை வாழ்க்கையைப் பிரதிபலிக்காத நாவல்களும், எழுந்தன. இவை தனி மனிதனின் வாழ்வையோ சமுதாயங்களின் நிலைகளையோ பற்றி வரையாது இலக்கியப் போர்களையும், கலைத்

துறைப் பூசல்களையும், இழிந்த கூலி எழுத்தாளர்களின் மோசமான நூற்களையும்தான் அரங்கில் கொண்டு வந்து நிறுத்தின. இவை மனிதனின் பேராற்வத்தையோ, அறிவுத் திறனையோ, நல்லுழைப்பையோ எடுத்துக்காட்டுபவை அல்ல.

மக்களின் ஈடுபாட்டையும், பெரும்பான்மை பொது மக்களின் இணக்கத்தையும் இம்முயற்சிகளில் கைவிடப்பட்டன, வரலாற்றின் இடைக் காலத்தால் மக்களுக்கு என்ன வந்தது? கத்தோலிசத்தால்—அதிலும் குறிப்பாக கலங்கலான—திகட்டக் கூடிய—மனம் போன போக்கில் செல்லும் கத்தோலிசத்தால் மக்களுக்கு என்ன வந்தது? இந்த இலக்கியப் பூசல்களும், உட்குழுப் போராட்டங்களினால்—இவற்றினால்தானே கற்பனா வாதிகள் தங்களை ஹோமர்களாக்கிக் கொள்ள நாடினர்கள்—இவற்றினால் மக்களுக்கு என்ன பயன் விளைந்தது?

எனவே கற்பனா வாதிகள் எந்த அம்சங்கள் மூலம் இலக்கியத்தைக் காக்க முனைந்தார்களோ, அவையேதான் இலக்கியத்தை மேலும் பாதாளத்தில் கொண்டு தள்ளிற்று. எந்த அம்சம் கலைக்கு ஓர் அடிப்படையையும், உட்பொருளையும் ஒரு குவிமுனையையும்—அதாவது மக்களை—விட்டு கலையை இன்னும் தொலைவுக்குக் கொண்டு போக வேலை செய்தது.

ஆதோல்ப் கிளாஸ்பிரன்னர்

இரவு, இருண்ட இரவு

நூலாசிரியராகவும், பத்திரிகையாளராகவும் அவர் வெளியிட்ட முற்போக்குக் கருத்துக்களுக்காக, ஆதோல்ப் கிளாஸ்பிரன்னர் (1810—1876) இளமையில் சில காலம் அரசாங்க நடவடிக்கைக்கு ஆளானார். அவருடைய பிற்கால எழுத்தோவியங்களிலும், அவர் பெர்லின் நகைச்சுவையுடன் கலந்த நாட்டுப் புற இலக்கியத்தின் மூலகர்த்தாவானார். இங்கு இடம் பெற்றுள்ள பகுதி அவர் காலத்தில் நிலவிய கருத்துக்களை ஒரு அசாதாரண வடிவத்தில் தருகிறது—நையாண்டி செய்யும் போலித் தோற்றமுடைய உருவகக் கதை. ஆனால் காலத்துக்கொத்த அதன் செய்தியும், விவாத உட்கருத்தும் மிகத் தெளிவாகப் புலனுகின்றன—அதாவது ஜெர்மனியின் பிற்போக்குச் சக்திகள் அனைத்தும் ஒருங்கிணைந்து சுதந்திர எண்ணத்தை அடக்குகின்றன என்பதுதான்.

இரவு; இருண்ட இரவு; மலைகளுக்கு நடுவிலே ஒரு மிகப் பெரிய தொட்டிலைக் கண்டேன். அதனுள்ளே கல்ல, உயிரோட்டமுடைய சமுதாயம் கிடந்தது. மலைகளில் ஒன்றில் உயர்தர அதிகாரி ஒருவர் அமர்ந்து தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தார். அந்தச் சமுதாயம் தூங்கட்டும் என்று ஒரு பாசுரம் பாடிக் கொண்டிருந்தார். வான முகட்டில், ஒரு நட்சத்திரம் ஒளி வீசத் துவங்கியதும், அவர் மேலேறி அதை அணைத்து விட்டார்; ஏனென்றால் மினுமினுக்கும் அதன் அழகான ஒளிக்கதிர்கள் குழந்தைகளின் கண்களில் விழக் கூடாதல்லவா? பிறகு அவர் எல்லா நட்சத்திரங்களையும் அணைத்து விட்டார். எல்லாம் இப்பொழுது ஒரே இருளாகி விட்டது; புதை குழியிலிருப்பது போன்ற அமைதி அங்கே நிலவிற்று.

ஆனால் மிகத் தொலைவிலிருந்து மேகங்கள் வந்தன—ரோஜா வண்ணமுடைய கனவுகளைச் சுமந்தவாறு—மேகங்கள் வந்தன. சுதந்திரத்தையும், அனைத்துலக நேசத்தையும் போற்றும் இனிய பாடல்கள் மேகங்களில் எதிரொலித்தன. அப்பாடல்களைக் குழந்தைகளும் கேட்டுக் கொண்டிருந்தது போலத் தோன்றிற்று; ஏனெனில் அவை அசைந்து கொடுத்து, புன்முறுவல் பூத்தன. பாடல்கள் மிக இனிமையாகவும், மகிழ்ச்சி நிறைந்தவையாகவும் ஒலிக்கலாயின. குழந்தைகள் விழித்துக் கொண்டு, ரோஜா வண்ணமுடைய கனவுகளை நோக்கித் தம் கைகளை நீட்டின.

அந்த உயர்தர அதிகாரிக்குக் கோபம் வந்து விட்டது; குழந்தைகள் அனைவரையும் தொட்டிலில் போட்டுக் கட்டினார். பிறகு,

மனிதர்கள் பலரை அழைத்தார். அவர்கள் மீண்ட கறுத்த உடை களே அணிந்திருந்தார்கள்; அவர்களுடைய முகங்கள் இருண்டு, பயங்கரமாகக் காட்சியளித்தன.

அந்தக் கறுத்த மனிதர்கள் தொட்டிலைச் சுற்றி நின்று கொண்டு' ரோஜா வண்ணமுடைய கனவுகளைச் சுமந்து வந்த மேகங்களைத் துரத்தினார்கள். பிறகு, குழந்தைகளிடம், "பிரார்த்தனை செய்யுங் கள்; பிறகு தூங்குங்கள்; மறுபடியும் தூங்குங்கள்; பிரார்த்தனை செய்யுங்கள்; உங்களை இங்கு அனுப்பிய இறைவனின் சித்தம் அதுதான்" என்று கூறினார்கள்.

அக் கறுத்த உருவங்களைக் கண்டு குழந்தைகள் அஞ்சின; கண்களை மூடிக் கொண்டன.

பின்னர் அம்மனிதர்கள் சப்தத்தை உயர்த்தி முழுத் தொனியு மில்லாத பேய்க்குரலில் பாடலானார்கள்:

வித்தகம் யாவையும் வெறுத்துத் துறந்து
சித்தத் தெளிவினைச் சபித்திடு கின்றோம்;

ஒளியினைத் துறந்தோம்; உலக மைந்த,
தளைகள் உறுத்தலைச் சபித்தான் தலைவன்!

அன்னவன் இருக்கை அணிநிலம் எழவே
இன்னே துயில்க; இறைஞ்சித் தொழுக!

எங்கள் கருத்தோ இறைவன் தருபவை
வெங்கொடுங் கோன்மையைப் பழிப்பது வில்லை!

ஒன்று மட்டுமே சிந்திக்க நமக்கு
நன்று என்பது நாயகன் கட்டளை;

கொற்றத் தலைவனின் கோலும் பீடும்
பற்றிய அஃதொன்றே சுதந்திரச் சிந்தனை!

இங்கே சுதந்திரமாய்க் களித்தே இருப்பவனை
அங்கே பழிக்குப் பழிவாங்கக் காத்துளது—

நிரந்தரமாய் என்றைக்கும் நெடுமலைக்கும் மேலே!
வரம் பெற்றார் கவியறியார்; சிந்தனையில் வறியார்—

கொடுத்து வைத்தவர்கள் அவர்கள்! நாமோ,
கொடுங்கோன்மை புகழ்கின்றோம்; தொழுகின்றோம்;
ஓய்கிறோமே!

இப்பேய் மனிதர்களைக் கண்டு குழந்தைகள் மேலும் அஞ்சின; கண்களை இறுக மூடிக்கொண்டு மீண்டும் தூங்கலாயின. அந்த

இனிமையான, மகிழ்ச்சி நிறைந்த பாடல்களைப் பற்றிக் கனவு கண்டன. இம்மக்கள் உறங்குவதைக் கண்டதும் அம்மனிதர்கள் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டு, ஏளனம் செய்தார்கள். அந்த உயர் அதிகாரி மீண்டும் தொட்டிலை ஆட்டிக்கொண்டு, அந்தப் பாசுரத்தைப் பாடலானார்.

க்யோர்க் ப்யூஹ்னர்

க்யோர்க் ப்யூஹ்னர் (1813—1837) மருத்துவ இயலும், இயற்கைச் சாத்திரமும் பயின்றார். சிறு வயதிலேயே தீவிர அரசியல் எதிர்ப் பணியில் சேர்ந்தார். ஹெஸ்ஸெ மாநிலத்தில் நிலவிவந்த பிற்போக்கு நிலைகளைப் புரட்சிகரமாக மாற்றி யமைப்பதற்கென 1834–ஆம் ஆண்டில் 'மனித உரிமைக் கழகம்' என்னும் இரகசிய சங்கத்தை நிறுவினார். 'ஹெஸ்ஸியன் நாட்டுப்புறத் தூதுவர்' என்ற அவருடைய துண்டுப் பிரசுரம் இளமையிலேயே அவருக்கிருந்த சோஷலிஸப் பற்றைக் காட்டுவதுடன், அவரைக் கைது செய்ய வாரண்டையும் பிறப்பித்தது. 1835ஆம் ஆண்டு ஜெர்மனியை விட்டு ஓடி, முதலில் ஸ்டிராஸ்போர்டுக்கும் பின்னர் ஸூரிச்சுக்கும் சென்றார். பிந்திய இடத்தில் பல்கலைக் கழக விரிவுரையாளரானார். அங்கேயே தம் இருபத்து மூன்றும் வயதில் டைபாய்டு காய்ச்சலால் மரணமடைந்தார்.

ப்யூஹ்னரின் நூற்கள் மிகச்சிலதாம்; ஆனால் அவை ஒவ்வொன்றும் அவருடைய தனித்தன்மையை எடுத்துக்காட்டுவதுடன், காவியச் சிறப்பும், தத்துவ முக்கியமும் கொண்டதாக இருந்தது. மெய்யியல்பை ஆழ்ந்து ஆய்ந்து எதிலும் தீய சார்பே காணும் பாங்கும் சூனியவாதிக் கொள்கையும் அவர் பெற்றுவிட்டார். வாழையடி வாழையாக வந்தனவும், சமுதாயம் கையாள்பவையுமான சக்திகளுக்கு எப்படி மனிதன் இரையாகி விடுகிறான் என்பதுடன், (அவருடைய 'வாய்ச்செக்' என்னும் நாடகம் இதை எண்பிக்கிறது) மனித வாழ்வின் பொருளென்ன, சத்தென்ன என்னும் மிக முக்கியப் பிரச்னைகளையும் அவருடைய எழுத்துக்கள் ஆய்கின்றன.

கடிதங்கள்

வாழ்விலே இன்பம் வேண்டுமென்று அவர் துடித்து நின்றதையும், தம் வாழ்க்கை இன்பம் அழிக்கப்பட்டுப் போகும் என்று அஞ்சி இருந்ததையும் புலப்படுத்தும் ப்யூஹ்னரின் கடிதங்களே மேலே நாம் வரைந்துள்ள பின்னணியை வைத்துப் படிக்கவேண்டும். அவர் மணம் முடிப்பதாக இரகசியமாக ஏற்பாடு செய்திருந்த அவருடைய காதலி வில்ஹெல்டினே யேக்ளேக்கு மார்ச் 1834இல் எழுதிய கடிதம் இது. ஜனவரி 1837இல் வில்ஹெல்டினேயுக்கு ப்யூஹ்னர் வரைந்த பிறிதொரு கடிதம், அவரிறப்பதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தான் எழுதப்பட்டது. ஸூரிச்சிலிருந்து அவர் தம் குடும்பத்தினர்க்கு 1836 நவம்பரில் எழுதிய கடிதத்தில் ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய இரு நாடுகளின் நிலைகளையும் ஒப்புவமை காட்டி பிந்தியது சிறப்பாக இருப்பதாக அவர் கருதினார். மின்னி

கெரோடெ என்ற அவருடைய சக மாணவர் ஒருவர் இறந்து விட்டதால் அதிகம் பாதிக்கப்பட்டு எழுதிய இக்கடிதத்தில் ஜெர்மனியில் புரட்சிகரமான மாறுதல் இன்னும் ஏற்படலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். (சக மாணவர் இறந்ததாகத் தவருக அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.)

காதலிக்குக் கடிதம்

மார்ச், 1834.

குழந்தை! உன்னை எது குணமாக்கிக் கொண்டு வருகிறது என்பது தெரிந்திராவிட்டால் ஆற்றொணாத் துயரமடைந்திருப்பேன். இப்பொழுது தினம் ஒரு கடிதம் எழுதுகிறேன். நேற்று ஒரு கடிதம் எழுத ஆரம்பித்து விட்டேன். தார்ம்ஷ்டாட்டுக்குப் பதிலாக நேரே ஷ்ட்ராஸ்புர்க் போய்விட்டால் என்ன, என்று எனக்குத் தோன்றுகிறது. உன் உடல் நலம் மோசமாகிவிட்டால் ஒரு கணத்தில் நான் அங்கே யிருப்பேன். ஆனால் இந்தச் சிந்தனைகள் எதற்காக? எவை எனக்கு மர்மங்களாகவே இருக்கின்றன. என் முகம் ஈஸ்டர் முட்டையைப் போல இருக்கின்றது. இன்ப உணர்வு அதில் சிவப்புப் புள்ளிகளாப் பரப்புகிறது. நான் வெறுப்புத் தரும் வகையிலல்லவா எழுதிக் கொண்டிருக்கிறேன். இது உன் கண்களைத் தாக்கி, உன் காய்ச்சலை அதிகமாக்கும். இல்லை; அப்படி ஒன்றும் நான் நம்பவில்லை; அந்த பழைய வழியின் பின்விளைவுகள்தாம் இவை. வசந்தத்தின் மென் காற்று வயதானவர்களுக்கும் எலும்புருக்கி நோயுடையோர்க்கும் சாவின் முத்தத்தைத் தருமாம். பழைய வலியும், வேதனையும் தான் உனக்கு இப்பொழுது இருப்பவை; அந்த வலியும் வேதனையும் தான் செத்து வருகின்றன; உன் உயிரே அவற்றுடன் போவதாக நீ நினைக்கிறாய். ஒளி வீசும் புது நாளை நீ பார்க்கவில்லையா? உன்னை நோக்கி மீண்டும் நான் அடியெடுத்துவைத்து வரும் சப்தம் உனக்குக் கேட்கவில்லையா? இங்கே பார்! உனக்கு முத்தங்களையும், வெண் மலர்களையும், மணம் நிறைந்த மஞ்சப் பூக்களையும், செங் கருநீல மலர்களையும், இளங் கதிரவனின் கண்ணிலே சென்றுறைக்கும் மண்ணின் நாணப் பார்வை—இவை அனைத்தையும் உன்னிடம் அனுப்பிவைக்கிறேன். பாதி நாள் அறையைத் தாளிட்டு உன் படத்தை வைத்துக்கொண்டு உன்னுடனே பேசிக் கொண்டிருக்கிறேன். நேற்றுக் காலை உனக்கு மலர்கள் கொண்டு தருவதாக வாக்களித்திருந்தேன்; இதோ இருக்கின்றன. அம்மலர்களுக்குப் பதிலாக எனக்கு என்ன தருவாய்? என்னுடைய இந்தப் பைத்தியக்கார விடுதியைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அக்கறையோடு ஏதாவது வேலை செய்ய நான் ஆரம்பித்தால், நாடகத்தில் வரும் லாரிபாரியைப்

போலாகிவிடுகிறேன்—அவன் வாகீர உருவினுல், அது முயல் வாலாக வருகிறதே, அதுமாதிரி.....!

எதுவுமே சொல்லாமல் இருந்தால் நன்ருக இருக்குமே எனத் தோன்றுகிறது. இனம் தெரியாத ஒரு பயம் என்னைப் பற்று கிறது. எனக்கு உடனே எழுது; ஆனல் உனக்கு இது மிகவும் சிரமமாக இருந்தால் தயவுசெய்து எழுதவேண்டாம்; ஏதோ வழி யிருக்கிறது என்று சொன்னயே. என் ஆருயிரே, நீண்ட நாள் இது என் நாவிலேதான் ஒட்டிக்கொண்டிருக்கிறது; ஆனல் நம் முடைய இரகசியத்தை ஆசையோடு வைத்திருந்தேன். உன் தந்தையிடம் எல்லாவற்றையும் சொல்லி விடு—ஆனல் இரு நிபந்தனைகள். உன் நெருங்கிய உறவினர்களிடம் கூட இதுபற்றி வாய் திறவாதே. ஒவ்வொரு சமையல் பாத்திரமும் இதைப் பற்றிப் பேச வேண்டாம், பல்வேறு அத்தைகளும், சித்திகளும் இதுபற்றி முகஞ் சுளிக்க வேண்டாம். இரண்டாவது: நான் எழுதுவதற்கு முன்னர் என் பெற்ருருக்கு எழுதிவிடாதே. மற்றெல்லாவற்றையும் உன்னிடமே விட்டுவிடுகிறேன். உன்னை அமைதிப்படுத்திக் கொள்ள என்னென்ன தேவையோ அனைத் தையும் செய்துகொள். உன்னை நேசிக்கிறேன் என்பதைத் தவிர நான் வேறு என்ன சொல்லமுடியும். நேசம், காதல், பாசம், உறுதி என்னும் சொற்களில் பொதிந்து கிடப்பவற்றைத் தவிர வேறு உனக்கு நான் என்ன வாக்களிக்க முடியும்? ஆனல் என்னைப் பராமரித்துக் கொள்வது எப்படி? இன்னும் இரண் டாண்டுகளுக்கு மாணவனுக இருக்கவேண்டும்; கொந்தளிப்பான ஒரு வாழ்க்கை காத்திருக்கிறது, அதுவும் விரைவிலே வெளி நாடு களிலும் இருக்கலாம் என்னும் உறுதி ஏற்பட்டுவிட்டதே!

குடும்பத்தினருக்கு ஒரு கடிதம்

ஸுரிச், நவம்பர் 20, 1835

அரசியல் நடவடிக்கைகளைப் பற்றியவரை நீங்கள் கவலைப்படாது, அமைதியோடு இருக்கலாம். பத்திரிகைகளில் வரும் கட்டுக் கதைகளால் கலக்கமடைய வேண்டாம். சுவிட்ஸர்லாந்து ஒரு குடியரசு; ஆனல் எந்த நாடும் குடியரசாக இருக்கமுடியாது என்பதைச் சொல்வதற்கு இவர்களுக்கு ஒரே வழிதான் இருக் கிறது: அதுதான் நம்முடைய ஜெர்மன் நல்லாரிடத்தில் தினசரி குழப்பமும், கொள்ளையும், கொலையும் நடப்பதாகச் சொல்வது. என்னைப் பார்க்க வரும்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வரும் வழியிலேகூட நல்ல நல்ல வீடுகளைக் கொண்ட அன்பான, அழகான கிராமங்களைப் பார்க்கலாம். ஸுரிச்சுக்கு அருகே வர, வர—ஏரியைச் சுற்றிலும்கூட வளமையையும், செழுமையையும்

பார்க்கலாம். நம்முடைய வீட்டிலிருப்போர்க்கு கிராமங்களும், சிற்றூர்களும் தரும் தோற்றத்தைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்காது. இங்கு தெருக்கள் போர் வீரர்களாலும், அதிகாரிகளாலும், மந்தமான அரசியல் சிப்பந்திகளாலும் நிறைந்திருக்கவில்லை; உங்கள்மீது எந்த பிரபுவின் வண்டியும் ஏறிவிடுமோ என்ற ஆபத்துமில்லை. எங்கும் சுறுசுறுப்பான, உடல்நலம் மிக்க மக்களையே காண்பீர்கள். மிகக் குறைந்த செலவில் இயங்கும் முழுக் குடியரசு ஆட்சியைக் காண்பீர்கள். வருமான வரியைக் கொண்டு இந்தக் குடியரசு தன்னைப் பராமரித்துக் கொள்கிறது. ஆனால் இதே வகையான வரியைக் குழப்பத்தின் உச்சி என்று பழிப்பார்கள்.

மன்னிக்ரோட் இறந்துவிட்டதாக யாரோ எனக்கு எழுதினார்கள்—அப்படியானால் இவர் மூன்றாண்டுகளாகச் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டு இறந்திருக்கிறார். இரத்தக் கறை படிந்த பிரெஞ்சு ஆட்கள் சில மணி நேரத்தில் கொன்று விடுவார்கள்—முதலில் தீர்ப்பு, பிறகு தலைவெட்டும் பொறி (கில்லெட்டின்) மூன்றாண்டுகள்! உண்மையிலேயே நம் ஆட்சி மனிதப் பண்புடையது.—ஏனென்றால் இரத்தம் சிந்துவதைப் பார்க்க அது விரும்பாது (சித்திரவதையினாலே கொன்று விடுகிறதல்லவா?). ஏறத்தாழ நாற்பது ஆட்கள் இன்னும் சிறைச்சாலையிலேயே இருக்கின்றனர். இப்படி இருந்தும் இது சட்ட ஒழுங்கற்ற ஆட்சியில்லை; மாறாக இந்தப் பெரிய மனிதர்கள் சட்ட ஒழுங்கற்றது என அவர்கள் கருதும் சுவிட்ஸர்லாந்தை நிர்ணயத்தாலே திடுக்கிட்டு விடுகிறார்களாம். நிச்சயமாக இம்மனிதர்கள் பெரும் மூலதனத்தைக் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்—இதை ஒருநாள் மிகக் கடுமையான வட்டியோடு கொடுக்க வேண்டியிருக்கும்.

லெண்ட்ஸ்

முடிவுறாத 'லெண்ட்ஸ்' (1836) என்னும் எழுத்தோவியம்தான் ப்யூஹ்னரின் ஒரே தொடர் உரை. அமைதியில்லாத, கொந்தளிப்பான வாழ்வு வாழ்ந்து இறுதியில் புத்தி பேதலித்துப்போன நாடகாசிரியர் யாகோப் மிக்காயில் சென்றென்ஹொல்ட் லெண்ட்ஸின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சியை வர்ணிக்கிறது. அல்ஸாடியாவில் 1778இல் அவர் மதகுரு ஓபர்லினுடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தியது இந்நிகழ்ச்சி. ஓபர்லின் கொடுத்த விவரமான குறிப்புக்களின் அடிப்படையில் ப்யூஹ்னர் இதை எழுதினார். மனோதத்துவ ஆய்வான அவருடைய வர்ணனை லெண்ட்ஸின் அதிகரித்துச் சென்ற மனச் சோர்வையும், தளர்ச்சியையும் காட்டுகிறது. இந்த மனச் சோர்வும், தளர்ச்சியும் அவரைத் தற்கொலைக்குத் தூண்டின. இங்கு தரப்பட்டிருப்பது

ப்யூஹ்னர் எழுதியதின் கடைசிப் பகுதி. தனிமையும், கவலையும் அவரை அல்லற்படுத்தின. மதத்தைப் பற்றிப் படிக்கவே விரும்பினர். ஆனால், உலகின் வேதனையும் துன்பமும் லெண்ட்ஸை நாத்திகராக்கிற்று.

எட்டாம் தேதி காலையில் லெண்ட்ஸ் எழுந்திருக்கவில்லை. அவருடைய அறைக்கு ஓபர்லின் போனார். தம் படுக்கையில், கிட்டத்தட்ட ஆடையில்லாத நிலையில், மிகவும் மனங் குழம்பியவராக லெண்ட்ஸ் படுத்திருந்தார். ஓபெர்லின் அவரை மூடிப்போட விரும்பினார். "எல்லாம் எவ்வளவு கனமாக இருக்கிறது." என்று முணகினார். தம்மால் நடக்க முடியும் என்று அவர் நினைக்கவில்லை. காற்றுக் கூட மிக கனமாக இருப்பதாய் அவர் உணர்ந்தார். ஓபெர்லின் அவரைத் தேற்றி மகிழ்விக்க முயன்றார்; ஆனால் லெண்ட்ஸ் அந்நாளின் பெரும்பகுதி அதே நிலையிலே இருந்தார், உணவு எதுவும் அருந்தவில்லை.

மாலை நேரத்தில் ஒரு நோயாளியைப் பார்ப்பதற்காக ஓபெர்லின் அழைக்கப்பட்டிருந்தார். வானிலை மிதமாக இருந்தது; வான் மதி ஒளி வீசிக் கொண்டிருந்தது; திரும்பும் வழியில் ஓபெர்லின் லெண்ட்ஸைச் சந்தித்தார். அப்பொழுது, லெட்ண்ஸ் நல்ல சுய உணர்வோடு இருந்தார்; நிதானமாகவும் இணக்கமாகவும் பேசினர். நெடுந் தொலைவு நடக்க வேண்டாமென்று ஓபெர்லின் கேட்டுக்கொண்டதற்கு, அவ்வாறே லெட்ண்ஸ் வாக்களித்தார். அவர் நடந்து போகலானார். சட்டென்று திரும்பிவந்து ஓபெர்லினை அணுகி, "செவரண்ட்! அதை இனியும் கேட்க வேண்டியிராவிட்டால், நான் நலமடைந்துவிடுவேன்" என்றார்.

"அன்பரே! எதை?"

"ஏன்! உங்களுக்குக் கேட்கவில்லை? வானவெளியெங்கும் கூப்பாடு போடும் அந்த பயங்கரமான ஆவியை நீங்கள் கேட்கவில்லையா? இதைத்தானே நாம் 'அமைதி' என்று சொல்கிறோம். சந்தடி பெற்ற இந்தச் சரிவிற்கு வந்ததிலிருந்து, நான் அதை எப்போதும் கேட்டு வருகிறேன்; அதனால் நான் உறங்கவும் முடியவில்லை. செவரண்ட்! என்னால் மறுபடியும் தூங்க மட்டும் முடிந்தால்...?" தலையை ஆட்டிக்கொண்டு அவர் மேலே நடந்து சென்றுவிட்டார்.

வால்டுபாக்குக்குத் திரும்பிய ஓபெர்லின் எவரையாவது லெண்ட்ஸுக்குப் பின்னால் அனுப்ப நினைத்துக்கொண்டிருக்கும் போது, படியில் யாரோ ஏறிவரும் சப்தமும், ஒரு கணம் கழித்து வெளியில் ஏதோ விழும் ஓசையும் கேட்டன. மனிதர்கள் யாரும் விழுந்த சத்தமாக ஓபெர்லினுக்குத் தோன்றவில்லை; அவ்வளவு

உரக்கக் கேட்டது அந்த ஓசை. வெளிறி, நடுநடுங்கிப் போய் நர்சு உள்ளே வந்தாள்...


சரிவிலிருந்து மேற்கே வண்டியில் போகும்போது லெண்ட்ஸ் அமைதியாக, உட்கார்ந்திருந்தார். எங்கே அவரை இட்டுச் செல்கிறார்கள் என்பதைப் பற்றி அவர் அக்கறை காட்டவே யில்லை. கரடுமுரடான தெருக்களில் வண்டி பலமுறை சிக்கல் களில் மாட்டிக்கொண்டபோதும் அவர் சலனமற்று, எதைப் பற்றியும் ஆர்வம் காட்டாது அமைதியுடன் அமர்ந்திருந்தார். குன்றுகளைத் தாண்டிச் சென்ற அந்தப் பயணம் முழுவதிலும் இப்படியே இருந்தார். மாலைக் கதிரவனின் கிரணங்கள் செங்கிற வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. மலைக் குன்றுகள் கரு நீலப் பளிங்குபோல மாலையின் மினுமினுப்பில் நிமிர்ந்து நின்றன. இவற்றையெல்லாம் தாண்டி வண்டி ரைன் பள்ளத்தாக்கு வந்த டைந்தது. ஷ்ராஸ்புர்க்கை அணுகும்போது இருட்டிவிட்டது. வான்மதி உச்சிக்கு வந்து விட்டது. தொலைவிலிருக்கும். பொருள் களெல்லாம் கறுப்பாகத் தோன்றின. பக்கத்திலிருந்த மலைதான் கூர்மையாகத் தெரிந்தது. பூமி முழுவதும் ஒரு பொற் கிண்ணத் தைப் போலவும், அதன் விளிம்பில் தண்மதியன் பொன்னிறக் கதிர்கள் நுரைப்பது போலவும் தோன்றிற்று. லெண்ட்ஸ் சலன மற்று முன்னே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்; எந்த ஆசையும், எந்த அச்சமும் அவர் மனதில் இல்லை. ஆனால், இருள் கவியக் கவிய எல்லாப் பொருள்களும் அதில் மங்கிப் போகவே, இலேசாக ஏதோ அச்சம் தோன்றலாயிற்று. வழியில் அவர்கள் பயணிகள் விடுதி ஒன்றில் தங்க வேண்டி வந்தது, பல தடவை லெண்ட்ஸ் தற்கொலை செய்துகொள்ளப் பார்த்தார். ஆனால், அவரை மிகக் கவனமாகப் பாதுகாத்து வந்தார்கள்.

மறுநாள் காலை மேகமும், மழையுமாக இருந்தது. ஸ்டாஸ்புர்க் வந்து சேர்ந்தார். இப்பொழுது முழுக்க முழுக்க சுய உணர் வோடு இருந்தார்; எல்லோரிடமும் பேசிக்கொண்டார்; பிறரைப் போலவே நடந்துகொண்டார்; ஆனால் அவருள்ளத்தில் ஒரு பயங்கரமான வெறுமை தோன்றி விட்டது. இப்பொழுது அவருக்கு முற்றிலும் அச்சமுமில்லை. ஆசையுமில்லை. வாழ்வே ஒரு தவிர்க்க முடியாத பெருஞ் சுமையாகிவிட்டது.


இப்படியே அவர் வாழ்ந்து சென்றார்.

டாண்டனின் மரணம்

பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி (1789) செம்மையான வரலாற்று ஆய்வுகளுக்குப் பிறகு, 1835ஆம் ஆண்டு ப்யூஹ்னர் 'டாண்டனின் மரணம்' என்னும் நாடகத்தை இயற்றினார். புரட்சி இயக்கத்தில்




ஹெய்ன்ரிஷ் ஃபன் க்ளோஸ்த்
(1777—1811)





யோசப் ஃபன் யெஹன்டோர்ஃப்
(1788—1857)

ஹெய்ன்ரிஷ் ஹைநெ
(1797—1856)


க்யோர்க் ப்யூஹ்னர்
(1813—1837)









எட்வர்ட் மொய்ரிக்கே
(1804—1875)



அடால்பெர்ட் ஷ்டிஃப்டர்
(1805—1868)



வில்யம் ராபே
(1831—1910)



கோட்ஃப்ரீட் கெல்லர்
(1819—1890)

அவர், வெற்றி பெருவிட்டாலும், தீவிரமாக ஈடுபட்டிருந்தார். ஆனல் அவரெழுதிய நாடகத்தில் புரட்சி ஆர்வத்தைத் தூண்டக் கூடிய, காலத்துக்கு வேண்டிய எந்தத் தகவலும் இல்லே. மாருக, சோர்வு மனப்பாங்கும், விதி விட்ட வழி என்ற எண்ணமும் அந் நாடகத்தில் ஆழத் தடம் பதிந்துள்ளன. அவருடைய ஊக்கம் முடங்கி விட்டது; மனம் போன போக்குக்கு அதை விட்டு விட்டார்; அவருடைய பேச்சுக்கள் மூச்சு விடுவதெல்லாம் சூனியமும், வெறுப்பு மனப்பான்மையும்தான். புரட்சியின் தலேவர்களில் ஒருவ ராகயிருந்த டாண்டன் இன்னும் அரசியல் ஆற்றலில் உச்சத்தில் தானிருந்தார்; எனினும், புரட்சியைப் பற்றியும், ஏன் வாழ்வைப் பற்றியும் கூட அவர் சோர்வடைந்து, தளர்ந்து போனமைக்குரிய அடையாளங்கள் தென்பட்டன. அவருடைய எதிராளி—நன்னெறி பேசினும் நட்பார்வமில்லா ரோப்ஸ்பியர், வரலாற்றின் சிக்கலான அம்சங்களே எண்பித்துக் காட்டும் வகையில் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் வன்முறையாலும், அச்சங் காட்டுவதாலும் பெற முயன்ருர். புரட்சி மன்றக் காட்சிகளுக்காக, உண்மை நிகழ்ச்சி களிலே ஆற்றப்பட்ட உரைகளிலிருந்து நெடிய பகுதிகளே புக்னர் பயன்படுத்தினுர். மிகப் புரட்சிகரமான பேராவத்தையும் அதே நேரத்தில் தனி மனிதரைப் பற்றிய வெறுப்பையும் கலந்து காட்டும் கீழ்க்கண்ட பேச்சு, ஸாங்க் யுஸ் என்பவரால் நிகழ்த்தப் பட்டது.

ஸாங்க் யுஸ்

"இரத்தம்' என்னும் சொல்லேயே கேட்க விரும்பாத சில மென் மையான செவிகளும் இந்த மன்றத்திலிருப்பதாகத் தோன்று கின்றன. இயற்கையை விடவோ, காலத்தை விடவோ நாம் கொடுமையானவர்களில்லே என்பதைச் சில பொதுக் குறிப்புக் கள் அவர்களுக்கு உறுதிப்படுத்தும். இயற்கை தன்னுடைய சுய விதிகளே அமைதியாக, தடுத்து நிறுத்த முடியாதவாறு பின்பற்றி வருகிறது. அந்த இயற்கை விதிகளுடன் மனிதன் எப்பொழுதா வது மோதினுல், அவன் அழிக்கப்படுவான். காற்றின் கலவைப் பொருள்களில் நிகழும் ஏதேனும் மாற்றம்—நீர்ப்பரப்பின் சம நிலேயில் ஏற்படும் ஏற்றக் குறைவுகள்—கொள்ளே நோய், வெடிக்கும் எரிமலே, வெள்ளப் பெருக்கு இவை பல்லாயிரக் கணக் கான மக்களேச் சாவுக்கு இழுத்துச் செல்லும். இதன் பின்விளேவு என்ன? இயற்கை அமைப்பில் ஏற்படும் சின்னஞ் சிறு மாறுதல், நம் கவனத்தில் கூடப் படாதது, தான் விட்டுச் செல்லும் சடலங் களேத் தவிர வேறெந்த சுவடும் இல்லாமற் போய்விடும் மாறுதல் அவ்வளவே!

என்னுடைய கேள்வி இதுதான்: உயர் நலம் சார்ந்த (அதாவது, மனிதன் தோற்றுவிக்கும்) புரட்சிகள் இயற்கை நிகழ்த்துகிறப் புரட்சிகளை விட இரக்கமுடையனவாக இருக்கவேண்டுமா? இயற்கை நியதியை—விதியை—எதிர்த்தால் எப்படியோ, அதுபோல ஒரு கருத்தும் தன்னை எதிர்ப்போரை அழிக்கக்கூடாதா? மனிதகுலத்தின் ஒழுங்கமைப்பையே மாற்றவல்ல ஒரு நிகழ்ச்சியை இரத்தம் சிந்துவதற்கு அனுமதிக்கக்கூடாதா? இயற்கை எரிமலைகளையும், வெள்ளத்தையும் பயன்படுத்துவதுபோல, அகாண்டாகாரமான உள்ளறிவுத் திறன், தன் துறையில் சில ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது. மனிதன் கொள்ளை நோயில் மாண்டானென்ன, அல்லது புரட்சியில் மடிந்தானென்ன?

"மனிதனின் முன்னேற்றம் மிக மெதுவானது; அது எடுத்து வைக்கும் அடிகளை நூற்றாண்டுகளில்தான் கணக்கிட முடியும்; அது எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் பின்னால், பல தலைமுறையினரின் சமாதிகள் எழுகின்றன, மிகச் சிறு கண்டுபிடித்தங்களும், அடிப்படை கொள்கைகளுக்குமாக இலட்சக்கணக்கானோர் உயிர் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே வரலாற்றின் போக்கு துரிதப்படும்போது, பலருக்கு மூச்சு வாங்கத்தான் செய்யும் என்பது ஒரு சாதாரண உண்மையல்லவா?

"நாம் காணும் முடிவு எளிமையானது! விவேகமானது: சமநிலைகளின் கீழ் மனிதர்கள் அனைவரும் படைக்கப்பட்டிருக்கும்போது, அவர்கள் அனைவரும் சமமானவர்களே—இயற்கை தானாகச் செய்திருக்கும் மாறுதல்களைத் தவிர; எனவே ஒவ்வொருவரும் எல்லா முன் வாய்ப்புகளும், அனுகூலங்களும் பெறத் தகுதியுடையவர்; சிறப்பு உரிமைகள் பெற எவருக்கும் தகுதி இல்லை—தனி மனிதனை இருப்பினும் சரியே; சிறிய, பெரிய குழுவினராகயிருப்பினும் சரியே. இவ்வாக்கியத்தின் ஒவ்வொரு பகுதியும் நடைமுறைக்குக் கொண்டு வந்தபோது அது மக்களின் சரிவுகளுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. ஜூலை 14, ஆகஸ்ட் 10, மே 31 இவைதான் இவ்வாக்கியத்தின் (கமா போன்ற) நிறுத்தக் குறியீடுகள் அவ்வாக்கியம் தன் இலக்கை அடைவதற்கு நான்கு ஆண்டுகள் வேண்டியிருந்தது: சாதாரண சூழ்நிலைகளாக இருந்தால் ஏழு நூற்றாண்டு வேண்டியிருந்திருக்கும்; அப்பொழுது பல தலைமுறைகள் அவ்வாக்கியத்தின் நிறுத்தக் குறியீடுகளாக இருந்திருக்கும். எனவே, புரட்சியின் ஆற்றொழுக்கு ஒவ்வொரு பாராவிலும், ஒவ்வொரு திருப்பத்திலும் சபலங்களைத் தூக்கி எறிந்துவிட்டுப் போகிறது என்பது வியப்புக்குரியதா?

"அவ்வாக்கியத்தோடு இன்னும் சில முடிவுகளைக் கோக்க வேண்டும்; சில நூறு சடலங்கள் அத்தகைய முடிவுகளுக்கு நாம்

வருவதிலிருந்து நம்மைக் கட்டுப்படுத்த முடியுமா? மோஸஸ் தம் மக்களைச் செங்கடல் வழியாகவும், பாலைவனம் வழியாகவும் அழைத்துச் சென்றார். பழைய, உளுத்துப்போன தலைமுறை, அவர் ஒரு புது நாட்டைத் தோற்றுவிப்பதற்குள், தொறுங்கிப் போயிற்று. பெலியாஸின் மகள்களைப் போன்றது புரட்சி; மனித குலத்துக்குப் புத்திளமை யூட்டுவதற்காகவே அதன் சில உறுப் புக்கள் வெட்டி யெடுக்கப்படுகின்றன. (நோவா காலத்திலேற் பட்ட) பெரு வெள்ளத்துக்குப் பின்னர், அத்தண்ணீரால் பூமி புத்திளமை பெற்றதுபோல், இந்தக் குருதிக் கொப்பரையிலி ருந்து மனித குலம், அப்பொழுதுதான் படைக்கப்பட்டது போன்ற வலிமை வாய்ந்த உறுப்புக்களோடு எழும்! (நீண்ட நேரம் கைதட் டல்; உறுப்பினர் உணர்ச்சிப் பெருக்கால் எழுந்து நிற்கின்றனர்).

"ஐரோப்பாவில் கொடுங்கோன்மையின் இரகசியப் பகைவர் அனைவரும், புரூட்டஸின் குத்துவாளைத் தங்கள் அங்கிக்குள்ளே சுமந்து செல்வோர் அனைவரும் மேம்பாடுடைய இந்தக் கணத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ளட்டும்" [பார்வையாளர்களும் மன்ற உறுப்பினர்களும் தேசிய கீதம் பாடலாயினர்.]

எட்வர்ட் மொய்ரிக்கே

ஓவியர் நோல்டன்

கெதெக்கு அடுத்தபடியாக, எட்வர்ட் மொய்ரிக்கே [1804—1875] தான், நூற்றாண்டின் உணர்ச்சிக் கவிதைகள் இயற்றிய மிகப்பெரும் கவிஞராவார். தென் ஜெர்மனியில் இவர் ஓய்வாக, எளிமையாக வாழ்ந்து வந்தார். இவருடைய கவிதைகளில் கற்பனையியல், கவிதாம்சம், தொண்டைக் கவிதையின் வடிவம்: இயற்கையெல்லாம் ஆழ்ந்து நேசிக்கும் பண்பு; காண்பவற்றைத் தத்ரூபமாக வர்ணிக்கும் திறம்; நாடோடிப் பாடல்களோப் போன்ற எளிமை; மகிழ்ச்சியூட்டும் நகைச்சுவை — அனைத்தையும் காணலாம். 'பெயிண்டர் நோல்டன்,' [1832] என்னும் அவருடைய துவக்க கால நாவல் கலைஞனின் பிரச்னைகளோ கற்பனையியல் வாதத்தின் அடிப்படையில் விரிந்துரைக்கிறது. தன் உள்ளுணர்வு காண்பதும், தீர்ப்பெடுப்பதும் தான் சரியென்ற எண்ணத்தோடு வாழ்பவன் தியோபால்ட் நோல்டன்; நாளடைவில் இது ஆழங் காண முடியாத, மாயமான ஒரு சக்தியாக வளர்ந்து விடுகிறது. இதனால் தான், பாதுகாப்பிழந்த ஒரு நிலையிலிருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. வாழ்க்கையில் சிலரை மட்டும் விட்டுப் பிரியமுடியாது, ஏன் அவன் ஒட்டி வாழ்கிறான் என்பது போன்ற சில அம்சங்கள் விளக்கப்படாமல் இருந்தாலும் இதர கதாபாத்திரங்கள் நன்றாக உருவாக்கப்பட்டு மனோதத்துவ ரீதியில் தெளிவாக வரையப்பட்டுள்ளன — இப்படி மனோதத்துவ ரீதியில் கதா பாத்திரங்களோ விளக்குவது பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவல்களின் மரபுதான். இங்கு தரப்பட்டுள்ள பகுதி இரண்டு பெண்களுக்கிடையே நோல்டன் இடர் செறிந்த கட்டத்திலிருப்பதையும், அதனால் அவன் புத்தி பேதலித்துப் போகக்கூடிய நிலைக்கு வந்து விட்டதையும் காட்டுகிறது. சிறு வயதிலேயே தன் மாமன் மகளான நாடோடிப் பெண் எலிஸபெத் மீது அவன் காதல் கொண்டு விட்டான்; எவ்வளவு முயன்றும் அவனால் அவளிடமிருந்து பிரியமுடியவில்லை: இரண்டாவது பெண்: ஆக்னஸ், வனத்துறை ஊழியர் ஒருவரின் மகள். இவளுடைய காதலை, எலிஸபெத்தின் தலையீட்டினால், அவன் அடைய முடியவில்லை.

அவள் தியோபால்டிடம் வந்தாள்; அவன் கைமீது மெதுவாகத் தன் கையை வைக்க முயன்றாள். அவன் அதை உதறித் தள்ளி விட்டு; "சீரழிப்பவளே! என் கண்ணில் விழிக்காதே! நான் போகுமிடமெல்லாம் என்மீது சாபக்கேட்டைக்கொண்டு வரும் வெட்கங் கெட்ட பேயுருவே! நாம் சந்தித்த அந்த நாள் பாழாய்ப்போக! ஒன்றும் அறியாச் சிறுவனாகயிருக்கும்போது என் மிகப் புனித

மான உணர்வுகள் உன் அபாக்கிய நிலையால் உன்னிடம் ஈர்க்கப் படுவதற்கு அனுமதித்தேனே, அதற்காக என்ன பாடுபட்டு விட்டேன்! சகோதரி யன்பு என நீ வர்ணிக்கும், நய வஞ்சகமான பரிவு எப்படி வெட்கங்கெட்ட வெறிக்கும், பேய்த்தனமான பழிக் கும் என்னை ஆளாக்கிவிட்டது. நான் யாரிடம் உறவு கொண் டேன் என்பது சிறு பிள்ளைத்தனமான, யோசனையற்ற எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆண்டவனே! இந்தத் தண்டனை மிகக் கொடிது. நம்ப முடியாததாக, ஒப்புவமையில்லாததாகத் துன்பத் துக்கு மேல் துன்பம் என்னைச் சார்கிறது. இரக்கம் ஒரு பக்கமும் வெட்கப் படத்தக்க சந்தேகம் பிறிதொரு பக்கமுமாக என்மீது கண்ணைப் பதித்திருப்பவனே, என் உள்ளத்தைப் பாழ்வெளி யாக்கி விட்ட இக்கடுந் துயர் என் குற்றத்துக்குச் சமமானது என்று நம்பி விடாதே! வீடு வாசலற்ற இப்பெண்ணின் கொடுந் துன்பம் அவள் இமைகளிலே எழுதப்பட்டிருப்பதை நீ படிக்க முடியுமே! இந்தக் கொடுந் துன்பத்திலிருந்து கடலளவு தொல்லை யும், குழப்பமும் என்மீது அலையடித்துச் சென்றனவே? அவளை ஒரு குற்றவாளியெனக் கூற மாட்டேன்—என் இரக்கத்துக்கு அவள் தகுதியுடையவள்; என் வெறுப்புக்கல்ல! ஆனால், கருணை யுள்ள வானமே கொடுமை செய்து, கொடுமை செய்து சோர்ந்து விடும்போது, யார்தான் நீதமாக இருக்கமுடியும், யார்தான் மனிதப் பண்போடு இருக்கமுடியும்? இறுதியாக வரப்போகும் அதிர்ச்சியை — அடியை — உணரமுடியாதவாறு இப்பொழுதே, இந்த இடத்திலேயே பைத்தியம் பிடித்து வெறிகொண்டு விட்டால் கூட வியப்பில்லை! ஆமாம் அந்த இறுதி நிகழ்ச்சியும் தடுத்து நிறுத்த முடியாதவாறு நெருங்கி வருகிறது. இங்கு நின்று நான் ஏன் ஓலமிட்டுக்கொண்டிருக்கிறேன்; மேலே வானவரே வாழ்வு சாவா என்று போராடிக்கொண்டிருக்கும்போது, நாம் எல்லோ ரும் ஏன் இங்கே நின்று கொண்டிருக்க வேண்டும்? அவள் இறந்து கொண்டிருக்கிறாள்! அவளை நான் பார்க்கட்டுமா? இன்னும் அவள் உயிரை நான் காப்பாற்ற முடியுமா? என்னைப் பின்தொடர்ந்து வா—எங்கு? இதோ மார்கட் அவளிடமிருந்து நேரே வருகிறாள். ஆமாம்! அவள் முகத்தைப் பார்த்தே நான் சொல்லிவிட முடியுமே—அது நடந்தே விட்டது. அக்னஸ் செத்து விட்டாள். செத்து விட்டாள். செத்தே விட்டாள்; நான் ஓடிப் போய் விடுகிறேன்!"

எலிஸபெத் அவளை இறுகப் பிடித்துக்கொண்டாள். மிகப் பெரும் வேதனையில் அவளைப் பார்த்து அருவருப்பான ஒரு சொல்லைச் சொன்னாள்; ஆனால் அவள் அவன் முழங்காலைப் பற்றிப் பிடித்துக்கொண்டாள்; அவளால் நகர முடியவில்லை. நெஞ்சைப் பிளக்கும் இக்காட்சியை விட்டுத் தம் கண்ணைத்

திருப்பிக்கொண்டார் பிரஸிடெண்ட். "ஓ! ஓ! என் அன்பிற்குரியீர் என்னைச் சபிக்கும்போதே, அவர் பிறந்த நட்சத்திரமே கடுங்குகிறது? என்னை நீ கண்டுகொள்ள முடியவில்லையா? அன்பே, என்னை அடையாளம் சொல். என்னை இங்கு என்ன இழுத்துக் கொண்டு வந்தது? அந்த நெடுந்தொலைவுகளுடே எனக்கு எது வழி காட்டிற்று? இரத்தம் கசியும் இந்தப் பாதங்களைப் பார்! நன்றி கெட்ட பையனே, காதலல்லவா இவை அனைத்துக்கும் பின் நின்றன. கதிரவனின் எரிக்கும் வெயிலிலே; இரவிலும், புயலிலும்; முள்ளிலும், சேற்றிலும் என் காதல் ஏங்கி ஏங்கி என்னை உந்தித் தள்ளிற்றே: என் உயிர் சோர்வில்லாதது; அதை அணைக்க முடியாதே! இந்த இனிய—கொடிய—துயரத்திலேயே எத்தனை மகிழ்வோடு ஓடிப் போனவனைக் கண்டுபிடிக்கும் வரை நடந்து வந்தேன் தெரியுமா! ஆம் நான் இறுதியில் அவனைக் கண்டுபிடித்து விட்டேன்; ஆனால் அவன் அதோ, அங்கே நின்று கொண்டே என்னைக் கண்டுகொள்ள மறுக்கிறான். அன்பே, நீயும், நானும் ஒருவரையொருவர் இவ்வளவு நாளாக இழந்து தவித்ததை எண்ணி, இப்பொழுது இன்பமயமான வரவேற்பு இருக்கும் என்றல்லவா நான் எதிர்பார்த்தேன். ஆனால் என் நெஞ்சத் துயரை நீ ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லையே: தன் ஆயுளை விட்டுப்போகாது, அவன் பாதத்தை நக்கியவாறு நிற்கிறது ஒரு பிராணி; ஆனால் அதை ஒரு சொறி பிடித்த நாயாக விரட்டுகிறானே அது போலல்லவா, என்னை நீ உதறித் தள்ளுகிறாய். ஏ மக்களே! இவன் இப்படி நடப்பதன் பொருளென்ன? என் உரிமையைப் பெற்றுத் தர ஏன் ஒருவரும் துணை செய்ய மாட்டேன் என்கிறீர்கள்; புனித வானமே! இவன் எனக்குரியவன் என்னைச் சந்தித்த குன்றின்மீது, நெடுநாட்களுக்கு முன்னர் என் னுடையவனாகவே யிருப்பேன் என்று ஆணையெடுத்தான். சுவர்க்கத்தைச் சுற்றி வீசிய இலையுதிர் காலத்துக் காற்றும் இவன் ஆணையைச் செவியேற்றது. ஒவ்வோராண்டும் அக்காற்று அந்த இன்பமான நாளைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருக்கிறது. நான் மீண்டும் அங்கே சென்றிருந்தேன்; "எவ்வளவு அருமையான பையனாகயிருந்தேன்; அவன் நல்லவனாகவே இருந்திருந்தால்...." என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் குழந்தைகள்தாம் உண்மையைப் பேசும். 'அக்னஸ்' உனக்கும், அவளுக்கும் என்ன இருக்கிறது? அவளுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்று அவளிடம் நீயே ஒத்துக் கொண்டாய். அதுதான் அவளையும் நோய்க்குள்ளாக்கிற்று; இன்று மாலையில் அதைப் பற்றி அவள் என்னிடம் குறைப்பட்டாள். அவளிடம் நம்பிக்கையில்லாதவனாக நீ யிருந்தால், என்னிடம் இரு மடங்கு நம்பிக்கையில்லாதவனாகயிருந்திருக்கிறாய்."

இக்கடைசிச் சொற்கள் ஓவியனின் உள்ளத்தில் இடியைப் போல் தாக்கிற்று. அவன் தன் மீதே ஆத்திரப்பட்டான்; பிரஸிடெண்ட் நியாயத்தோடு பேசிய போதெல்லாம் கூட அதைக் கேளாது செவிடனாக நின்ற அவன் இப்பொழுது மயிரைப் பிய்த்துக் கொண்டு தகாத சொற்களைப் பேசினான். கடைசியாக அவன் மாளிகையை நோக்கி ஓடலானான்; பிரஸிடெண்ட் இரக்கம் மிகுந்தவராய் அவனுக்குப் பின்னால் விரைந்தார். சைகை காட்டவே, அந்தப் பைத்தியக்காரியைச் சிலர் பிடித்து அடக்க முயன்றார்கள்; ஆனால் காற்றிலேயிருந்து பிடிங்கிக் கொண்டது போல ஒரு நீண்ட கத்தியைச் சுழற்றி எல்லோரையும் அவள் அச்சுறுத்தினாள்; எவரும் அணுகத் துணியவில்லை. பின்னர் அமைதியாக நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தாள்; பிரியா விடை பெறும் வேதனை மிக்கக் கை அசைவோடு நோல்டன் சென்ற திசையை நோக்கி இரு கரங்களையும் விரித்தவளாகத் திரும்பி, தட்டுத் தடுமாறி நடந்து, இருளுக்குள் மறைந்தாள்.

அடால்பெர்ட் ஷ்டிஃப்டர்

என் முப்பாட்டனரின் காகிதங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரும் நாவலாசிரியர் அடால்பெர்ட் ஷ்டிஃப்டர் (1805—1868); ஜெர்மனியின் தொன்மை மரபுக்கொப்ப, ஒழுக்கக் கருத்தார்வத்துடன், ஆத்மீக முன்னேற்றத்தையே இலட்சியமாக வைத்து, அவர் நாவல்களைப் படைத்துள்ளார். அவருடைய எழுத்துக்களில் உணர்ச்சிகளைக் கீழடக்கி அமைதியும், எளிமையும் மேலிடம் பெற்றுச் சிறப்படையக் காண்கிறோம். ஷ்டிஃப்டரின் படைப்புக்களில் மனிதனோடு இணைந்து இயற்கை முக்கிய பாகம் வகிப்பதைக் காண்கிறோம். அவருடைய ஓளியார்ந்த வர்ணனைகளில், அவருடைய பொஹீமியத் தாய் நாட்டைப் பார்க்கிறோம். அகஸ்தினஸ் என்ற டாக்டரைப் பற்றிக் கூறும், 'என் முப்பாட்டனரின் காகிதங்கள்' (1842) என்னும் இக்கதை, இதைச் சொல்பவரின் முப்பாட்டனருடைய குறிப்புக் களிலிருந்து உருவாக்கப்பட்டது. முன்மாதிரியான கிராமிய மருத்துவராகவும், பண்பாடு வளர்க்கும் முன்னோடியாகவும் அகஸ்தினஸ் தம் சமூகத்துக்குப் பணியாற்றுகிறார். ஆனால் விதி அவரைக் கடுமையாகத் தாக்கி விடுகிறது; அதோடு கட்டுப் பாடில்லாத தம் மனப்போக்கினாலும் அவர் பெரும் ஏமாற்றத்துக்குள் ளாகிறார். ஆனால் இந்த இடங்களை எல்லாம் அவர் வெற்றி கொண்டு, நேர்மை பொது நல ஆர்வம், பிறரை நேசித்தல், நல் வெண்ணம் போன்றவற்றால் நிரம்பிய மனிதப் பண்பாட்டைப் பெற்றுக் திகழ்கிறார். இத்தொடருரையில் கர்னல் உல்ஸின் என் பாரின் வாழ்வுச் சரிதையும் புகுத்தப்படுகிறது. அதன் துவக்கம் தான் கீழே இடம் பெற்றுள்ளது. மனிதனின் தவறு செய்யும் இயல்பையும், அதிலிருந்து அவன் மீட்சி அடைவதையும் இது கூறுகிறது.

"உல்ஹைம் என்னும் குடும்பத்தைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதுண்டா?"

"ஆமாம்! நான் பிரேக்கிப் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது கேள்விப் பட்டிருக்கின்றேன். காஸ்மீர் ஃபன் உல்ஹைம்"

"ஞதாடி, முரடன்; ஊதாரி"

"ஏதோ அது மாதிரித்தான்" நான் பதில் கொடுத்தேன்.

"நான்தான் அந்த காஸ்மீர் ஃபன் உல்ஹைம்!"

"கர்னல் உல்ஸின் நீங்களா? இருக்க முடியாது," என்று நான் கத்தினேன்.

"இருக்க முடியும், ஏனென்றால் அதுதான் உண்மை காஷ்மீர் உல்லீன் .ப்ன் உல்ஹைம்" என்று அவர் சொன்னார். "என்னைப் பற்றிய சில வதந்திகள் உண்மையாக யிருக்காலம். நான் அவ்வளவு நல்லவனாக இருந்ததில்லை. என்னைப் பற்றிய சில விஷயங்கள் பொதுமக்கள் தெரிந்திருப்பதை விடவும் நல்லவை தான்; ஆனால் எது மோசமானதோ அதை மக்கள் மிக நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். என் இயல்பில் எது நல்லதாக இருந்ததோ, அது அவர்களுக்கு மோசமாக இருந்தது. என்னிட மிருந்த மிகச் சிறந்த அம்சங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியவே தெரியாது; அவற்றை நான் பெருந்துன்பங்கள் மூலமாகத்தான் அடைந்தேன். நண்பரே! இப்பொழுது எனக்குச் சற்றுச் செவிசாயும். எனக்குப் பதினாறு வயதாகும் வரை நான் என் தந்தையார் வீட்டிலேயே வளர்ந்தேன். என் தாயார் வெகு நாட்களுக்கு முன்னரே காலமாகிவிட்டார். எனக்கு ஓர் அண்ணன் இருந்தார். நாங்கள் மதகுரு ஆசிரியர் ஒருவரால் பயிற்றுவிக்கப் பட்டோம். என் தமையனார் என்னை விட எப்பொழுதும் நல்ல வராகவே யிருந்தார்; நான் எப்பொழுதும் என் தந்தைக்கு வருத்தத்தையும், கோபத்தையும்தான் உண்டாக்கி வந்தேன். எனக்குப் பதினாறு வயதானபோது என் தந்தையார் இறந்து விட்டார். அவருடைய கடைசி உயிலுடனிருந்த கடிதத்தைத் திறந்து பார்த்தபொது, என் தமையனார்தான் முழுவாரிசாகக் குறிக்கப் பட்டிருந்தார். சட்டத்தின்படி எனக்கு எது உண்டோ, அதைத்தான் நான் பெற்றுக்கொள்ள வேண்டியவனாகயிருந்தேன். பிரம்மச்சாரியான எங்கள் சித்தப்பாதான் எங்கள் முதுகுணர் (கார்டியன்). என் தந்தையாரின் சொத்தையும், தம் உடைமைகளை என் தாயார் விட்டுப் போனவற்றையும் அவர் நிர்வகிக்க வேண்டியவரானார். என் தமையனாரைக் கயவனாக நான் கருதினேன். உலகில் முன்னேறி வாலன்ஸ்டைன் என்ற ஜெனரலைப் போலவும், மற்றும் முப்பதாண்டுப் போரில் பெயர் பெற்றவர்களைப் போலவும் நான் ஆக விரும்புதாகக் கூறினேன்; இதனால் எல்லோரையும் வன்மம் தீர்க்கலாம் என்று எண்ணினேன். இராணுவத்தில் சேர்வது மிகச் சிறந்த யோசனை; ஏனென்றால் அங்குதான் எனக்கு நல்ல புத்தி போதிப்பார்கள் என்று என் கார்டியன் ஆமோதித்தார். ஆனால் தம் சக்திக்கேற்ற வாறு என் பரம்பரைச் சொத்தைத் தாம் நிர்வகிக்க வேண்டியிருக் கிறது என்றும், எனவே தகுந்த ஈடு இல்லாது என் சொத்தில் எந்தப் பகுதியையும் தாம் தரமுடியது என்றும் அவர் கூறி விட்டார். எனினும், என் செலவுக்காக வேண்டித் தம் சொந்தப் பணத்தில் சிறிது கடன் தருவதாகவும்; அதை நான் நல்ல முறை யில் பயன் படுத்த வேண்டுமென்றும், ஏனென்றால் அதற்கு

மேலும் எனக்குப் பணம் கிடைக்காது என்றும் அவர் சொன்னார், அந்தப் பணத்தைக் கடனாக நான் பெற்றுக் கொள்வதாகவும், அதற்குத் தகுந்த பிணையம் அவர் கையிலேயே இருப்பதாகவும் நான் கூறினேன். என் சித்தப்பாவின் புத்திமதிகளையும், எச்சரிக்கைகளையும் சிறிதும் மதியாது நான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

"இராணுவத்தில் ஒரு பதவி வேண்டும் என்று நான் கூறியதால், என்னைப் பரீட்சித்துப் பார்க்கவும், பள்ளிக் கூடத்துக்கு அனுப்பவும் விரும்பினார்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை. எனவே, பவேரிய ஆளுநரிடத்தும், கவுண்ட் பாலபீனிடமும் சென்றேன். ஆனால் எங்கும் ஒரே கதைதான். எனவே நான் ஜெர்மனியை விட்டு இன்னும் மேற்கே போனேன். ஒரு நாள் நான் ரைன் ஆற்றைக் கடந்து அரசரின் பாதங்களிலே என் வாளை வைப்பதற்காக ஃபிரான்சுக்குள் நுழைந்தேன். பாரிஸ் சென்றடைவதற்குள் நான் பல பிராந்தியங்களைத் தாண்டிச் சென்றேன். எங்கள் மதாசிரியரிடமும், புத்தகங்களிலும் நான் கற்றுக் கொண்ட அளவுதான் எனக்கு ஃபிரெஞ்சு மொழி தெரியும். எனக்குத் துணைபுரியக் கூடிய ஒருவரைக்கூட பாரிஸில் எனக்குத் தெரியாது. இருப்பினும் மன்னரின் சமூகத்தில் நான் அனுமதிக்கப் படும் வரை சோர்வில்லாமல் முன்னேறிச் சென்றேன்.

"என் சேவைகளை நான் அவருக்குச் சமர்ப்பணம் செய்ததும் நான் முதலில் என்ன கற்க விரும்புகிறேன் என்று வினவினார். "ஃபிரெஞ்சு மொழி" என்றேன். "அதைச் செய்; பிறகு சிறிது பொறுத்திரு; உன்னை நினைவில் வைத்திருக்கிறேன்," என்று அவர் வாக்களித்தார். எனவே என்னிடம் பேச இசையும் எல்லோரிடமும் நானும் பேசிப் பேசி மொழியைக் கற்றுக் கொண்டு, காத்திருந்தேன். ஒரு சில பொற்காசுகள் தவிர என் பணமெல்லாம் கரைந்ததும் நான் கேள்விப்பட்ட ஒரு சூதாட்ட மனைக்குச் சென்று, சிறிது பணம் தேட முயன்றேன். ஒரு நாள் அங்கு சென்று, சூதாட்டம் நடக்கும் அறைக்குள் புகுந்தேன். எனக்கு ஆட்டத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது; சிறிது நேரம் அதை ஊன்றிக் கவனித்தேன். பின்னர் மற்றவர்கள் செய்ததைப்போன்று நானும் ஒரு பொற்காசை எடுத்து ஒரு சீட்டில் வைத்தேன். ஒரு மனிதன் முணுமுணுத்துக் கொண்டே ஒவ்வொரு சீட்டாகத் தீழே வைத்துக் கொண்டிருந்தான்; சிறிது நேரத்துக்குப் பின்னர் கை நிறையப் பொற்காசுகளை என்னிடம் தள்ளினார்கள்; அவற்றை ஒரு குவியலாக என் முன்னே வைத்துக் கொண்டேன். இழந்தேன்; மீண்டும் கெலித்தேன்; ஆட்டம் முடிந்ததும் என் சட்டைப் பை நிறையப் பொற்காசுகள் இருந்தன.

"அடுத்த இரவும் நான் சூதாட்ட மகீனக்குத் திரும்பிச் சென்றேன்; மீண்டும் பணம் சேர்ந்தது. இப்படி இரவுக்குப் பின் இரவாகச் சென்று கொண்டிருந்தேன். எனக்கு அதிர்ஷ்டம் இருந்தது. சில சமயம் நான் தோல்வி கண்டாலும், இழந்ததை விட அதிகமாக மீண்டும் கெலித்து விடுவேன். நான் கவனிக்கப் படலானேன். நான் பணம் வைக்கும் சீட்டுகளிலே பிறரும் பணம் வைக்கலாயினர். எனக்கு ஆட்டத்தைப் பற்றி நன்கு தெரிய லாயிற்று; எந்தச் சீட்டை நம்பலாம்; எதை நம்பக்கூடாது; எப்பொழுது ஆட்டத்தை நிறுத்த வேண்டும்; எப்பொழுது மீண்டும் துவங்க வேண்டும் என்பதையெல்லாம் ஊகிக்க எனது சிந்தனைக்கு வேலை கொடுத்தேன். தோகையோடு கூடிய ஒரு தொப்பியும்; அழகான ஆடையணிகளும் வாங்கினேன். சிறிது காலத்துக்கெல்லாம் ஆர்லியான் பிரபுவின் இலாயத்திலுள்ள தற்கு ஒப்பான ஒரு குதிரையை வாங்கினேன். ஏன், பின்னர் என்னிடம் மூன்று குதிரைகள் இருந்தன. பலர் மாளிகைகளுக்கு என்னை அழைக்கலாயினர்: பலகணிகள் வழியாகப் பார்த்துக் கொண்டோ, அல்லது அழகிய வாகனங்களில் சென்று கொண்டோ இருந்ததை மட்டும் முன்னர் கண்டிருந்த நான் இப்பொழுது அப்படிப்பட்ட சீமாட்டிகளிடமும், இளநங்கை யரிடமும் தாராளமாகப் பேசமுடியும். என்னுடைய நண்பர்கள் பொழுதுபோக்கு விடுதிகளுக்கு என்னை அழைத்துச் சென்றார்கள்; அப்பெரும் நகரின் வாழ்வு பற்றி நன்கு அறியலானேன். பளபளக்கும் என் ஆடையில், மினுமினுக்கும் ஓர் உடைவாள் சொருகப்பட்டிருக்கும். அதன் பிடியில் பதிக்கப்பட்டிருந்த வைரத்தைப் போல எவரும் வெளியே காண முடியாது."

"ஒருநாள் நகருக்கு வெளியேயிருந்த வனத்துக்குச் சென்றேன். அங்கு ஒல்லியான, வெளிறிய இளைஞன் ஒருவனிடம் நான் பேசினேன்: இதற்கு முன் பல தடவை நான் அவனைப் பார்த்திருக் கின்றேன். என்னைக் கூர்ந்து நோக்கிய அவன், அன்றும் பேசாமலேயே தன் முதுகைத் திருப்பிக் கொண்டான். அவன் எதிரே சென்று, 'என்னை ஏன் அவமானப்படுத்தினாய்?' என்று கேட்டேன். இப்பொழுதும் அவன் எதுவும் பதில் சொல்லவில்லை. 'செவிட்டுமையாக இல்லாவிட்டால் என்னுடன் மற்போருக்கு வா!' என்று அவனுக்குச் சவால் விட்டேன். 'கயவன் ஒருவனை நோக்கி என் வாளை உயர்த்த மாட்டேன்' என அவன் சொன்னான். 'அப்படியானால் நான் உன்னைக் கட்டாயப்படுத்துவேன்' என்று நான் பதிலிறுத்தேன். 'கொலைகாரர்களிடமிருந்து, வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் நிச்சயமாக என்னை நான் தற்காத்துக் கொள்வேன்' என்று அவன் கூறினான். நான் சினமடைந்தேன்; தன் வாளை அவன் உருவினான்; சிறிது

நேரத்தில் அவன் செத்தவனைப் போலத் தரையில் வீழ்ந்தான். 'எதற்கும் தகுதியில்லாதவன் கரங்களால் நான் மடிகிறேன்' என்று அவன் கூறினான். நான் துணுக்குற்று நடுங்கி விட்டேன். காயம்பட்ட மனிதனைத் தாங்கள் பேணிப் பார்த்துக் கொள்வதாகவும், நான் அங்கிருந்து ஓடிவிடவேண்டுமென்றும் என் நண்பர்கள் கூறினர்கள். நான் நகருக்குத் திரும்பினேன்."

"அடுத்த நாள் அவர்கள் என்னிடம் வந்து, அந்த மனிதன் உயிரோடிருப்பதாகவும், அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருப்பதாகவும் தெரிவித்தனர். அவன் யாருடன் சண்டையிட்டான் என்று எவருக்கும் தெரியாதென்றும், அது ஓர் இரகசியமாகவேயிருக்கும் என்றும் கூறினர். சின்னட்களுக்குப் பிறகு என் எதிராளி ஷ்வாஸேல் பிரபு என்றும், அவர் உயிர் தப்பி இப்பொழுது அவருடைய அரண்மனையிலேயே சிகிச்சை பெற்று வருவதாயும் அறிந்தேன். இதை இன்னும் இரகசியமாக வைத்துக் கொள்வதாக ஆணையெடுத்துக் கொண்டோம். அவருடைய உடல் நலம் தேறிவருவதாக நான்கு வாரங்களுக்குப் பின் சேதியறிந்தோம். நான் ஓர் அநாதை விடுதிக்குச் சென்று அதன் நிர்வாகியிடம் என்னிடமிருந்த எல்லாவற்றையும்—தங்கம், நகைகள், அழகிய ஆடைகள், குதிரைகள் அனைத்தையும் கொடுத்தேன். நான் அநாதைகளுக்காகக் கொடுத்தவற்றுக்கு ஒரு ரசீதும் வாங்கிக் கொண்டேன். நான் பாரிலுக்கு வரும்போது எவ்வளவு பணம் வைத்திருந்தேனே, அதுவும் ஒரு சாம்பல் நிறக் குதிரையும் மட்டும் மீந்தன.

"இரண்டு வாரங்களுக்குப் பின்னர் என்னைப் பார்க்கக் கோரி அந்தப் பிரபுவுக்கு எழுதினேன்; அநாதை விடுதியில் பெற்றுக் கொண்ட ரசீதையும் உடன் வைத்தனுப்பினேன். என்னை வருமாறு அந்தப் பிரபு அழைத்தார். தம் பணியாட்களை அனுப்பி விட்டு, 'இப்போது உங்களிடம் நான் பேசுவேன்; கிராம மாளிகையிலோ, நகர அரண்மனையிலோ இருக்கும் எந்த பிரெஞ்சுப் பிரபுவும் உங்களிடம் இப்போது பேச விரும்புவார்' நான் ஜெர்மன் பேரரசு 'வீரப் பெருந்தகை' (Knight) என்பதற்குள்ள ஆதாரச் சான்றுகளைக் காண்பித்து, நான் அவருக்குச் செய்த தவற்றுக்காக மன்னிக்குமாறு கோரினேன்."

"என்னுடன் போரிட்ட மனிதனைப்பற்றி இதுவரை வாய்மூடியிருந்தேன். உடல் நலம் முற்றும் தேறியவுடன் அவன்மீது வழக்குத் தொடர விழைந்தேன். இனி நான் வழக்குத் தொடரவே மாட்டேன், பிரபு ஒருவரை அவருடைய மதிப்புக்குக் குறைவு ஏற்படுமாறு செய்து, என்னுடன் மற்போரிடும் கட்டாயத்திற் குள்ளாக்கிவிட்டேன் என்பதை வெளிப்படையாகவே சொல்

வேன். அந்த பிரபு வழி தவறியிருந்தார்; ஆனால் இப்பொழுது அவர் தவற்றை உணர்ந்து அதற்குக் கவினுறு கழுவாய் தேடி விட்டார். இப்பொழுது அந்த என் எதிராளியைக் குறித்து நான் பெருமைப் படுகிறேன்' என்று கூறினர்."

"இச்சொற்களைக் கேட்டவுடன், இன்னும் ஏதாவது ஈடு செய்ய வேண்டுமானாலும் நான் தயாராகயிருப்பதாகக் கூறினேன். 'நம்மிடையே இவ்விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது; வேறு எவரும் ஈடு எதுவும் கேட்க முடியாது' என்று அவர் கூறிவிட்டார். ஏதாவது ஈடு தரவேண்டுமென்பதற்காக நான் பிரான்சில் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், ஜெர்மனிக்குத் திரும்பி, என் தாயகத்தின் இராணுவத்தில் சேர்ந்து பணி புரியப் போவதாகச் சொன்னேன்.

"'அது மிகக் கண்ணியமான முடிவு' என்று தம் கையை நீட்டினர். நான் கைகுலுக்கினேன். 'ஒரு வேளை நாம் மீண்டும் சந்திக்கலாம்' என்றார். பிறகு, நான் விடைபெற்றுக் கண்டு, என் ஆதாரச் சான்றுகளையும் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினேன். அங்கு அரசரின் இராணுவத்தில் எனக்கு மிகக் கீழ்நிலைப் பணி யாளராக வேலை தந்திருப்பதாக ஒரு கடிதம் வந்திருந்தது. வாளால் அதைக்குத்தியெடுத்து, முக்கியமில்லா இதர காகிதங் களுடன் என்பையில் போட்டுக் கொண்டேன்."

"மறுநாள் என் குதிரையில் ஏறிக் கொண்டே கிழக்கே—ரைன் ஆற்றை நோக்கிப் பயணமானேன்."

பேடர் ரோஸக்கர்

கானகத்தின் கணக்கெடுப்பு

பேடர் ரோஸக்கர் (1843—1918) ஆஸ்திரிய மலைக் காடுகளில் வாழ்ந்து வந்த உழவர் ஒருவரின் மகன். அவர் தம் குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் அங்கேயே கழித்தார். அதன் பிறகு கிராஸ் நகருக்குச் சென்று அங்கு 1870-க்குப் பிறகு தம்முடைய முக்கியமான நூற்களை எழுதினார். அந்நாளைய தொழில் உலகினின்று முற்றிலும் வேறுபட்ட அவருடைய தாய் நாட்டு உழவர் பெருமக்களின் வாழ்வைச் சித்தரிப்பவை அவருடைய பெரும்பாலான கதைகள். அவருடைய எழுத்துக்கள்— அவருடைய கதை சொல்லும் திறனையும், தத்ரூபமான கற்பனையையும், நேர்மையையும், கூர்ந்த நோக்கையும் எண்பிக்கின்றன. இங்கு இடம் பெறுகின்ற 'மக்கள் தொகைக் கணக்கெடுப்பு', அறிக்கையிலும் பின்னிப் பிணைந்து நிற்கும் இந்த அம்சங்கள்தாம் ரோஸக்கருடைய எழுத்துக்களை — குறிப்பாக அவருடைய சுயசரிதப் பகுதிகளை—பிரபலப்படுத்தின. செயற்கையான உணர்ச்சிகளிலிருந்து வேறுபடும் சிறப்பான மேம்பாடுடைய கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

சில வாரங்களுக்கு முன்பு, கையில் ஒரு காகிதத்துடன் காடுகளிலுள்ள குடிசைகளுக்குகெல்லாம் சென்றேன். அக்குடும்பங்களின் தலைவர்களிடம் அவர்களுடைய அலுவல்களின் நிலை, குடும்ப அங்கத்தினர்கள் எண்ணிக்கை, அங்குள்ள குழந்தைகளின் பிறந்த ஆண்டுகள், பெயர்கள் முதலியவற்றைக் கேட்டேன். பொதுவாக, பிறந்த வருடங்களை உடனிகழ்வான நிகழ்ச்சிகள். நிலைமைகளை நினைவில் வைத்துக் கொண்டு கொடுத்துவிட முடியும். — இவன் கோடை காலத்தில் அந்தப் பெருவெள்ளம் போது பிறந்தவன்; பனிக் காலத்தில் நாங்கள் புல் சொட்டிகளை உண்ண நேர்ந்ததே, அப்பொழுது பிறந்தவள் இவள். இத்தகையவை நினைவில் நிற்கக் கூடிய முக்கியமான நிகழ்ச்சிகள்.

பெயர்ப் பட்டியலில் மிகுந்த வேறுபாடுகளைக் காணமுடியாது. குடியிருப்பாளர்கள் ஆண்களாக யிருப்பின் ஹான்ஸ் ஸெப்ப் பெர்த்தொல்த் டோனி மாத்தஸ் என்று அழைக்கப்படுவர். பெண்களாயிருந்தால், கதரீனெ மரியா என்னும் பெயர்களையுடையவர்கள் மினி, மிர்த்ஸெ, மீர்ல், மில்லி, மார்ஸ் என்று ஏதேனும் உருமாற்றப்பட்டு அழைக்கப்படுவார்கள். மற்றப் பெயர்களும் இதே மாதிரிதான். அந்தச் சமூகத்திற்கு வளி

யிலிருந்து யாரேனும் வந்தால், உடனே அவன் பெயர் அம்மக்களின் மொழியில் உருமாற்றப்படும். சில சமயங்களில் அவர்கள் என்னை ஆண்த்ரெல் என்று அழைப்பார்கள். ஒரு சிறிய மனிதனுக்கு அது மிகப் பெரிய பெயராக அவர்களுக்குத் தோன்றியதால், இன்று நான் வெறும் ரேதல் தான்.

வெகு சிலர் மட்டுமே தங்கள் குடும்பப் பெயர்களை அறிந்திருந்தனர். பலர் அவற்றை மறந்தோ அல்லது இழந்தோ விட்டனர். இன்னும் பிறருக்கோ அப்படி ஒன்றே இருந்ததில்லை. அந்த மக்கள் தங்கள் பரம்பரையையும், உறவு முறையையும் குறிக்கத் தனிமுறை ஒன்றைக் கையாண்டு வந்தனர். ஹன்ஸ்ல்-டோனி-ஸெப்ப்'ஸ்' இது ஒரு வீட்டின் பெயர்; அந்த வீட்டின் சொந்தக்காரர் ஸெப் என்று அழைக்கப்பட்டார். அவருடைய தந்தையின் பெயர் டோனி என்றும், பாட்டனார் பெயர் ஹன்ஸ்ல் என்றும் இருக்கும் 'காத்தி-ஹானி-வாஸா-மிர்ஸ்-மார்கரெட்' அதாவது காத்தி என்பவள் மார்கரெட் என்பவளின் பாட்டிக்குப் பாட்டி. அந்தக் குடும்பம், நெடுங்காலமாக இந்தக் கானகத்தின் தனிமையில் இருந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு மனிதன் பெரும்பாலும் அரை டசன் பெயர்களால் வர்ணிக்கப்படுவான். ஒவ்வொருவனும் அவனுக்குப் பின் தன் மூதாதையரின் துருப்பிடித்தச் சங்கிலியை எடுத்துக் கொண்டு போவான். அதுதான் தனித்த வழிவழி உடைமையாகவும், நிரந்தரச் சின்னமாகவும் இருக்கும்.

எப்படியிருப்பினும் இந்தப் பெயர்க் குழப்பம் தொடரக்கூடாது. பிறப்பு—இறப்பு கணக்கெடுப்பு ஏட்டிற்காக இவர்களுடைய பெயர்கள் தயாரிக்கப்பட இருந்தன. கிறிஸ்தவப் பெயர்களுடன் தொடர்புடையவையாக இருக்கும் வகையில் ஒரு கண்டுபிடித்தம் நிகழ்ந்தாக வேண்டும்! ஓர் அடிப்படை விஷயத்தை விடாது பிடித்துக் கொண்டோமானால் இது கடினமாக இருக்காது. மக்கள் அவர்களுடைய தன்மைகளுக்கு ஏற்பவோ, அவர்களுடைய தொழில் அல்லது நிலைக்கு ஏற்பவோ பெயரிடப்படவேண்டும். இதைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிட முடியும்; பின்னர் இதை அழியாமல் பாதுகாக்கவும் முடியும்.

அன்னமிர்ல் என்பவரை மணந்த பௌல் என்னும் மரவேலையாரை நான் ஹீஸல்-ஃபிரான்ஸெல்-பௌல் என்று குறிப்பிடப் போவதில்லை. சாதாரணமாக 'மரவேலை பௌல்' என்றே அழைக்கப் போகிறேன். ஏனென்றால் அவன் இழுப்புப் பலகை மூலம் தடிகளை, கட்டைக் கரி அடுப்பிற்கு மாற்றுகிறான். மக்கள் இத்தொழிலை மரவேலை என அழைக்கின்றனர்.

தன் தந்தையின் பெயரை மறந்துவிட்ட மரம் ஏறும் ஸைப்பும் இதே போன்று எளிமையாக 'மரம் ஏறி' ஸைப் என்று அழைக்கப்பட விருக்கிறான். அவனும் அவனுடைய பரம்பரையினரும் தங்களைப்பற்றி விருப்பமானதைக் கூறிக் கொண்டாலும் அவர்கள் 'மரம் ஏறி'களாகவே நிலைத்து விடுவார்கள்.

கிலியர் கோர்ஜ் என்னும் இடத்திலுள்ள ஒரு குடிசையை நான் (ஊற்றுக் குடிசை) என்று அழைக்கிறேன். ஏனென்றால் நீர் நிறைந்த ஓர் ஓடை அதைச் சுற்றிப் பொங்கிக் குமிழிட்டுக் கொண்டிருந்தது. அக்குடிசையின் சொந்தக்காரனை நான் ஏன் ஹீஸல்-மிக்கேல்-ஹீஸல்-ஹன்னெஸ் என்று அழைக்கவேண்டும்? அவன் திருவாளர் நீரூற்றாகவும், அவன் மனைவி திருவாட்டி நீரூற்றாகவும் இருக்கட்டுமே! பிற்காலத்தில் அவன் மகன் போர் வீரனாகவோ, வண்டியோட்டியாகவோ அல்லது வேறு எந்தத் தொழிலைச் செய்பவனாக மாறினாலும் அவன் என்றும் 'நீரூற்று' தான்.

ஸ்டார்ம்ஹான்ஸ் என்பவனுடைய குடிசை அடிக்கடி புயல் வீசக்கூடிய ஓநாய் மலைச்சரிவில் இருக்கிறது. ஆனால் அவன் பெயர் ஸ்டார்ம்ஹான்ஸ் (புயல் சார்ந்த இடத்தில் வாழும் ஜெர்மானியன்).

அடுப்புக்கரி எடுத்துச் செல்லும் ஸைப்பகுள்ளன் சுரப்பி வீக்கத்தினால் பெரிய குரல்வளையை உடையவன். அவன் நெடுங் காலமாக யோடிடல்நெக் (பெருங்கழுத்தான்) என்றே அழைக்கப் பட்டு வருகின்றான். ஒரு நாள் அவன் பெயரை 'யோஸைப் யோடெல்நெக்' என்று என் பட்டியலில் பதிவு செய்து கொள்ளட்டுமா என்று கேட்டேன். அவன் அதற்கு உடனே சம்மதித்தான். அவன் குழந்தைகளும், பேரப்பிள்ளைகளும் கூட யோடெல்நெக் என்றே அழைக்கப்படுவார்கள் என்பதையும் விளக்கினேன். உடனே அவன் கலகலவென்று சிரித்துவிட்டு, "அப்படிப் பத்துத் தடவை வேண்டுமானாலும் கூப்பிடட்டுமே!" என்றான். அதன் பிறகு அந்த வாயாடி, "நல்லது! இப்பொழுது பெயர் கிடைத்து விட்டது, கடவுளுக்கு நன்றி; பெயர் வைக்க ஒரு மகனும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று சொன்னான்.

'பேரருவி'களுக்கு அருகில் ஒரு குறுகிய மலை இடுக்கில் அடர்ந்த மூன்று ஃபிர் (ஊசி) மரங்கள், மேற்பார்வையாளனை விறகு வெட்டியோ ஸெல்-ஹன்ஸல்-ஆண்டன் என்பவனால் மனிதர் களுக்கும், விலங்குகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்காக விடப் பட்டிருந்தன. இதற்குக் கைமாறாக அவன் ஊழிக்காலம் வரை, 'ஆண்டன்-ஷீல்ட் ஃபிர் (ஃபிர் மரங்களுக்குப் பாதுகாப்பளித்த ஆண்டன்) என்று அழைக்கப்படுகிறான்.

இந்தப் புதுப் பெயர்கள் பிடித்திருந்தன. இத்தகைய பெயர் கூறித் தாங்கிய ஒவ்வொருவனும் தலை நிமிர்ந்தவனுகவும், முன்னைவிட நம்பிக்கையுடையவனுகவும், தன்னுறுதி வாய்ந்த வனுகவும் இருக்கிறன். அவன் யாரென்பது இப்பொழுது அவனுக்குப் புரிந்து விட்டது. இப்பொழுதிலிருந்து தனி புதுப் பெயருக்குரிய புகழையும், பெருமதிப்பையும் பெற்றுத்தர வேண்டியதுதான் பாக்கி.

எப்பொழுதும் காடுகளின் உட்பகுதியில் அலைந்து, திரிந்து கொண்டிருப்பான் ஒரு மனிதன். அவனுக்கு ஏதாவது பெயர் இருக்கிறதா, அப்படியானல் அது என்ன என்பதும் எனக்குத் தெரியாது. அப்படி ஏதாவது இருப்பினும் அது மோசமான தாகவே இருக்கும் என்பது நிச்சயம். அவன் என்னிடமும் பிறரிடமும் கலந்து பழகாமல் ஒதுங்குகிறன். நெடுநாட்களுக்கு அவன் எங்கேயோ போய் விடுகிறன். எங்கே என்று யாருக்கும் தெரியாது. எதிர்பாராத நேரங்களில் திடுதிப்பென்று மீண்டும் கண்ணில் படுவான்; ஏன் இப்படி என்று யாருக்கும் தெரியாது. இதனல் அவனைத் 'தனிமையானவன்' என்று குறிப்பிடுகிறேன்.

வில்யம் ராபே

தி ஷீட்டரும்ப்

வாழ்க்கையின் அப்பட்டமான உண்மைகளைக் கூர்த்த நோக்குடன் நுணுகிக் கண்ட வில்யம் ராபே (1831—1910) ஒரு புற வாய்மையாளர் ..... இதனால்தான் தளர்வு, அவநம்பிக்கை, இளக்காரம் ஆகியவற்றுடன் அவர் இன்றைய நாகரிகத்தை அணுகுகிறார். ஆனால் இந்தப் புறவாய்மைக்கும் மேலாக நல்லுணர்வு, ஆத்மா ஆகியவற்றின் சக்திகளுமுண்டு என்பதை அவர் ஏற்றுக் கொண்டார்; இவையே மனித ஈடேற்றத்துக்குரிய சாதனங்கள் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். இதனால் நகைச்சுவையும் வாழ்விலக்கியத்தில் இடம்பெற வழியுண்டு என்று கருதினார். 'தி ஷீட்டரும்ப்' என்னும் அவருடைய நாவல் (1869), எதிலுமே தீய சார்பு காணும் தன்மையைச் சார்ந்தது. அந்தோனியா ஹோய்ஸ்லர் என்னும் அநாதை பெண் லல்வன்ஹோப் என்ற கிராமத்தில் ஸ்கொயர் ஹென்னிகின் அன்னையாரால் மிகச் செல்லமாக வளர்க்கப்படுகிறாள். அவளுக்கு வயது பதினாறும் போது தலைமறைவாகியிருந்த வஞ்சகனும், ஏமாற்றுக்காரனுமான அவள் தாத்தா ஊர் திரும்புகிறான். இதற்கிடையில் அவன் பெரும் பணக்காரனாகி விட்டான்; தன் சில வருங்காலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தன் பேத்தியை ஒரு திருமணத்துக்குக் கட்டாயப்படுத்த விரும்புகிறான். அமைதியான கிராமியச் சூழலிலிருந்து, ஒழுக்கக்கேடும், பேராசையும், சுயநலமும் மிகுந்த மோசமான வியன்னா நகருக்கு இழுத்து வரப்படுகிறாள். அந்தோனியா தன் ஆன்ம நலத்தைக் காக்கும் முயற்சியில் வலிவடைந்து, மரிக்கிறாள், கயமை வெற்றி காண்கிறது.

முள்ளால் குத்துவது போன்ற ஓர் உணர்வு அமைதியின்மை, பரபரப்பு ஆகியவற்றால் ஸ்கொயர் ஃபன் லல்வன் அதிகமதிகமாக ஆட்கொள்ளப்பட்டு வந்தார். அவருடைய சிரமமில்லாத வாழ்க்கையைக் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருந்த அவனுக்கு அறிமுகமானவர்களுக்குத் தங்களுடைய காலம் எப்படிக் கழிகிறதோ என்பதே தெரியாது; ஆனால் ஃபன் லல்வனோ தாம் குரோதெபெக்கில் வாழ்வதே, வாழ்க்கையின் நலங்களை இழந்து காலங் கழிப்பதற்காகத்தான் என நம்பினார். ஆனால் இப்பொழுது அவருடைய வயதும், சுதந்திரமான நிலையும் பிறர்மீது தம் விருப்பு வெறுப்புக்களைச் சுமத்துவதைச் சாத்தியமாக்கிற்று; தம் தாயாரையே தம் முடிவுக்குக் கட்டுப்படச் செய்ய முயன்றார்; அல்லது அவ்வாறு செய்யப் போவதாக

அறிவித்தார். ஆனால் இவ்வாறு அறிவித்ததைத்தான் தவறான நேரத்தில் செய்துவிட்டார்.

எனவே நிர்வாகப் பொறுப்பைத் தம் தாயிடமும், லவ்வன்–ஹோப் நிறுவன மேலாளரான ஹெர்.ப்ரோஷ்லரிடமும் ஒப்படைத்து விட்டு, நெடுங்காலத்துக்குத் தன் நிலபுலங்களை விட்டுப் போவதாக அறிவித்த அன்று, அந்த மூதாட்டி கலவரமும், ஆத்திரமும் அடைந்தாள். இதன் பின்னர் வன்மையான வாக்குவாதமும், சலிப்புத்தட்டும் பேச்சுக்களும் தொடர்ந்தன; ஆனால் ஹென்னிஷ் தாம் பிடித்த பிடியை விடவில்லை. தாம் விரும்புவதைச் செய்ய அனுமதியளிக்காவிட்டால் தாம் அழிந்து விடவும் தயாரென்றார். இன்னும் சிறிது காலம் இந்த கிராம வாழ்க்கையைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றால், முதலில் தாம் சுற்றுப் பயணம் செய்து உலகைப் பார்க்கவேண்டுமென்றார். பாரிஸுக்கும் இத்தாலிக்குமாக எல்லோரும் போய் வந்திருக்கிறார்கள்; வெசுவியஸ் எரிமலையில் வாய் கொப்பளிக்க வேண்டுமென்று எவ்வளவு ஆசை! இதெல்லாம் கவனித்து ஒருவகை அடிமைத்தகையிலிருந்து இன்னும் ஒரு தடவை சிறிது விடுவிக்க வேண்டாமோ? அதன் பிறகு சொயட்ஸ் ப்ன் ப்பெர்லிஷிங்கென் வீரத் திருத்தகை போல சூரோதெபெக் எல்கீலையைத் தாண்டி எந்தக் காலத்திலும் போவதில்லையென்று இவருக்குத் தருவதாகவும் சொன்னார்.

இவற்றுக்கு எதிராகத் தாயார் மிகப் பொருத்தமான வாதங்களை அடுக்கித் தொகுத்துக் கூறினார்; பேச்சு சிறிது முரட்டுப் போக்கிலும் போயிற்று. ப்ன் லவ்வன் குடும்பத்தில் எந்தப் பிரபுவும் வெளிநாட்டுக்குப் போய் கையில் காசோடு திரும்பி வந்ததில்லை என்றார். இத்தாலிய நாட்டைப் பற்றிச் சாதகமாக எதையும் தாம் கேள்விப்பட்டதில்லை, ஏன் ஸ்கொயர் ப்ன் லவ்வன், அங்கு ஸுப்லினிங்கள் புர்க் பேரரசர் லோத்தருடன் போன கதைதான் ஊழூழிக் காலத்துக்குத் தம் வாரிசுக்களுக்கெல்லாம் எச்சரிக்கையாக இருக்குமே: கிளொபி கேனின் வீரத்திருத்தகைகூட எந்நேரத்திலும் அந்த முட்டாளைப் பற்றிக் கூறுவாரே என்றெல்லாம் அம்மூதாட்டி வாதம் புரிந்தார்.

கிளொபி கேனின் வீரத் திருந்தகை ஏதோ முணு முணுத்துக் கொண்டாரே தவிர, வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை. ஆனால் அழகுமிகு ப்ரான்ஸைப் பொறுத்த வரையில், பயணத்திலுள்ள சிரமங்களையும், ஆபத்துக்களையும் கருதாமல் ஆர்லியன்ஸ்காரர், குடியரசுவாதிகள், நெப்போலியன் கட்சியைச் சார்ந்தோர் போன்றோரையும் கூடப் பொருட்படுத்தாது தாமும் கூடப் பயணம் வருவதை வெறுக்கவில்லை என்றும் அம்மூதாட்டி

கூறினர். இளைஞன் ஒருவன் இப்படி ஒரு துணிச்சலால் தூண்டப் பட்டு செயல்படுவது பொருத்தமானது என்றே தாம் கருது வதாகவும் சொன்னர்.

"ஆனால் இத்தாலிக்குப் போவது இருக்கிறதே, அது வம்புப் பேச்சு; நான் அதற்கு அனுமதி தரவே மாட்டேன். ஆகவே நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள் ஹென்னிஷ்!" என்று கூவிவிட்டுப் பெருங்கலவரத்துடன் வெளியேறினர் அடல்ஹைட் ∴பாள் லவ்வன் பெருமாட்டி.

கொடுங் காற்று வீசிக் கொண்டிருந்த பிப்ரவரி மாதத்தின் ஒரு மாலையில் இவ்விவாதம் நடந்தது. தலையிலும் மூடுவதற்கு எதுவுமில்லாது, மிக உணர்ச்சி வசப்பட்டு முற்றத்தைத் தாண்டித் தான் பணிப்பெண் மொல்க்மையரிடத்திலாவது ஆறுதல் பெற்று வரலாமென்று வெளிப்போந்த அந்த மூதாட்டி தன் வாழ்க்கை யில் முதல் தடவையாகச் சளி பிடித்து, நோய்வாய்ப்பட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, கடுமையான காய்ச்சலும், வயிற்றிலே ஏதோ புண்ணின் தாங்க முடியாத வேதனையும் இருந்தும் கூட, தன் மகனின் காதை பிடித்துத் தன் முகத்தருகே வைத்துக் கொண்டு,

"சிரித்த முகமாகயிரு! மூஞ்சியைத் தூக்கிக் கொண்டிருப்பவர் களோடு நான் எனக்குக் கட்டோடு பிடிக்காது; ஹென்னிஷ் நீ மிக நல்ல பையன்; இன்னும் காலம் இருக்கும் போதே உன் இள மையை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ள விரும்புவது மிகச் சரிதான். என் காலத்தில் நானும் சரி என்று நினைத்ததைச் செய்து விடுவேன்; என்னைச் சுற்றி இருந்த சிடுமூஞ்சிகளைப் பற்றி நான் கவலைப்பட்டதேயில்லை. மாடியில் தோட்டத்தைப் பார்த்தாற்போல மூலை அறையொன்றிருக்கிறதே! அங்கு போ! மேஜையில் அடி இழுப்பறையின் உள்ளே இரண்டு ஜோடி காலுறை சணற்கயிறினால் கட்டப்பட்டிருக்கும். அந்தக் காலுறை களை நான் மிக முக்கியமானவையாகக் கருதி வைத்திருக்கிறேன். நான் எண்ணியிருப்பதுபோல, அவை நிறைந்திருந்தால் நிச்சயம் மதிப்பு மிக்கதாக யிருக்கும். என்னுடைய முப்பத்தாறாண்டு காலச் சம்பாத்தியம் அதிலிருக்கிறது; அனைத்தும் உனக்குத்தான். எனக்குப் பெயர் வைக்கும்போது தரப்பட்ட இரு பொன்னிகளும் அதில் இருக்கும். அவற்றையும் எடுத்துப் புழக்கத்திற்குக் கொண்டு வா; அவை வெளியே செலவாணியாகக் காலம் போனதா என்ன? ஹென்னிஷ், லவ்வனுப் என்றுமே சட்டப்படி உன்னுடையது தான்; ஆனால் அந்த வீரத் திருத்தகையையும், அவர் மனைவியையும் உன்னிடமே விட்டு விடுகிறேன். பாவம், அவ்விருவரையும் உணவு மேஜையில் எப்பொழுதும் போல

நடுநாயகமாக வீற்றிருக்க நீ அனுமதிப்பாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதுதான் பொருத்தமானது; ஆனால் அவர்கள் இங்கிருக்கவும், நான் போகவும் வேண்டிய நிலை வியப்புக்குரிய தல்லவா? வாழ்க்கையைப் பற்றி யார் ஒயாது முணு, முணுத்துக் கொண்டு குறைப்பட்டுக் கொண்டிருந்தது: நான, அவர்களா? நிச்சயமாக நானில்லை. எவ்வளவோ சிரமங்கள் இருந்த போதிலும் ஒவ்வொரு வைகறையிலும், நான் புதுமையாகக் கண்டு நேசித் தேன். மற்றவர்களைப் போல ஒரு வேளை நான் வாழ்க்கைச் சிக்கல்களை ஆழ்ந்து அறிந்து கொள்ளாதிருக்கலாம்; ஆனால் அதில் எப்பொழுதும் புதுமையைக் கண்டேன். அந்த இருவரும் என் கை கால்களை நீவிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று எதிர் பார்க்கவே யில்லை. இப்பொழுது அதைப் பற்றி என்ன அக்கறை; வாழ்க்கையின் நலங்களை அனுபவித்தவன் அல்லாதவற்றையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; அதற்கு நீயும் விதி விக்காக மாட்டாய், குழந்தை இப்பொழுது நீ போகலாம்; போய் அவளை அனுப்பு. கெட்ட காலத்தில் ஒருவருக்கு உதவி செய்யும் அவன் பண்பை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். ஹென்னிஷ், ஓ ஹென்னிஷ், எப்பொழுதும் அவன் மேஜையில் நடுநாயகமாக வீற்றிருக்கட்டும், அவனுக்கு எல்லா மரியாதையையும் கொடு; எப்பொதும் அவன் ஆலோசனையைக் கேள்—அவன் யோசனையை விட உனக்கு எதைப் பற்றியாவது நன்கு தெரிந்து அவன் ஆலோசனையைப் பின்பற்ற விரும்பாவிட்டாலும் கூட! நான் எப்பொழுதுமே அப்படித்தான் செய்து, நன்றாகவே இருந்திருக் கின்றேன்....!"

கோட்ஃப்ரீட் கெல்லர்

கிரீன் ஹென்ரி

பார்த்துணரக் கூடிய உண்மைகளின் பரப்பை அடிப்படையாக வைத்து, முறுவல் பூக்கும் விவேகமும், வெதுவெதுப்பான நகைச் சுவையும் கொண்டு தம் கதைகள் அனைத்தையும் அமைத்திருக்கிறார் சுவிட்ஸர்லாந்தைச் சார்ந்த கோட்ஃப்ரீட் கெல்லர். வாழ்வின் இருளும், இடரும் சூழ்ந்த பகுதிகள் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக, வாழ்வின் இயற்கையான, நிதானமும் நலமும் வாய்ந்த நிலைகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. அடிக்கடி கெல்லரின் கனமான நாட்டின் பூர்ஷுவா, வகுப்புப் பிரிவு பற்றிய உணர்வு புலப்படுகிறது. அவருடைய துவக்க கால நூற்களில் ஒன்று 'கிரீன் ஹென்றி' (1854), ஆனால் எழுத்தாளர் என்பதற் குரியத் தனிச் சிறப்புப் பண்பெதுவும் இதில் முழுதும் உருவாகவில்லை. கெதெயின் வில்யம் மெயிஸ்டர் போன்ற ஓர் இலக்கிய வடிவு தானென்றாலும், இது தொன்மை இலக்கியத்தின் இலட்சியமான அமைதியைப் பெறவில்லை; குறிப்பாக இந்த நாவலின் முதற்பதிப் புருவில் இது தெளிவாகத் தெரிகிறது. ஓவியர் ஹெய்ன்ரிஷ் (ஹென்றி) வாழ்க்கைத்துறையில் தாம் கலைஞன் என்று நம்புகிறார்; ஸ்விட்சர்லாந்தில் தம் அன்னையாரால் இவர் வளர்க்கப்பட்டிருந்தாலும், எதிலும் உறுதி காண முடியாதவாறு, உணர்ச்சி வசப்பட்ட குழப்பத்தில் தத்தளிக்கிறார். மூனிக்கில் படிக்கும் காலத்தில் அவர் சூழலின் காரணமாக இங்கிலீ இன்னும் மோசமாகிறது; இறுதியில், அவர் தம் கலையிலும், வாழ்க்கையிலும் தோல்வியடைகிறார். இதனால் செயலிழந்தவராகத் தம் வீடு திரும்புகிறார்: இதற்குள் இவர் தாயார் மனம் உடைந்து மரணமடைகிறார். தனிமையிலும், தன் குற்ற உணர்வினால் அலைக்கழிக்கப்பட்டு ஹெய்ன்ரிஷ் விரைவில் இறந்து விடுகிறார். கெல்லர் பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாவலைத் திருப்பி எழுதி, ஆக்க உணர்வுடன் அது முடியும்படி செய்தார். இந்த அமைப்பின்படி ஹெய்ன்ரிஷ், வாழ்க்கையின் உண்மைத் தத்துவமே, ஊக்கத்தோடு தன் சமுதாயத்துக்குப் பணி யாற்றுவதுதான் என்பதை நன்குணர்ந்து, சரியான நேரத்தில் வீடு திரும்புகிறார். இங்கே தரப்பட்டுள்ள பகுதியில் ஹெய்ன்ரிஷ் ஸ்விட்சர் லாந்தில் தன் இளமைக் கால நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவு கூர்கிறார்.

வேலியின் துவக்கம்:

இரவில் நேரங்கழித்து, அன்னவும் அவள் தந்தையும் புறப் பட்டுச் சென்றபொழுது நான் அங்கில்லை; அதனால் அன்ன

என்னிடம் விடை பெற்றுக் கொண்டு செல்லமுடியவில்லை; அவளை மீண்டும் காணமுடியாமற் போனதற்காக நான் மிகவும் மனம் நொந்தேன் என்றாலும், என் இளமைப் பரவசம், துக்கத்தை அமுக்கி விட்டது. என் அறையில், பலகணியின் கீழே ஒருமணி நேரம் முழுவதும் படுத்திருந்து எல்லையில்லா வான வெளியில் தங்கள் செல்வழியில் காணப்பட்ட விண்மீன்களை நோக்கிக் கொண்டிருந்தேன். கீழே வெள்ளியை உருக்கி வார்த்தாற் போன்ற தண்மதியின் ஒளிக்கிரணங்களை களங்கலில்லாத அலைகள் தங்கள் தோள்களிலே சுமந்து கொண்டு பள்ளத்தாக்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. நகைத்துக் கொண்டே அலைகள் வேகமாகப் போவதைப் பார்த்தால், ஒளிக்கிரணங்களைத் திருடிக்கொண்டு ஓடுவதைப் போலத் தோன்றிற்று; அத்துடன் இந்தப் பாரத்தைச் சுமக்க முடியாதது போல, சில ஒளிக்கற்றைகளை இருகரைகளிலும் ஆங்காங்கே தூக்கியெறிந்து கொண்டே போயின. இந்தப் பயணம் முழுவதிலும் அவை குதூகலமாக வாண்டர் லீட் நாடோடிப் பாடலைப் பாடிக்கொண்டே சென்றன. இனிமையாக, காண முடியாதவையாக, வெது வெதுப்பாக அந்த ஒளிக் கிரணங்கள் வாயைச் சுற்றிக் கிடந்தன. அந்த வெது. வெதுப்பினூடே அறை புதுப்பனி போலக் குளிர்ச்சியையும் தந்தது.

இன்னும் அந்த இயற்கை வனப்பின் மயக்கத்திலும், இன்பக் கனவு கண்டவனுகவும் என் உறவினர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டேன்: அங்கு பகல் நேர அறையில் என்னைத் தம் சிறு வண்டியில் நகருக்கு அழைத்துப் போவதற்காக காத்திருந்த மாவறைப்பவரான என் அண்டை வீட்டுக்காரரைப் பார்த்தேன். இம்மனிதர் தம் தொழில் விஷயமாகப் புறப்படும்போது நானும் நகர் திரும்ப வேண்டுமென்று, முன்னரே ஏற்பாடகியிருந்தது; அவருடன் நானும் ஓரளவு வசதியுடன் பயணம் செய்யலாமல்லவா? ஆனல் இதைப் பற்றி நான் அதிகமாக எதுவும் விசாரித்து வைத்திருக்கவில்லை; மேலும் அவர் எதிர்பாராமலும், அவர் எப்பொழுது வருவார் என்று நாங்கள் நினைத்திருந்தோமோ அதற்கும் முன்னடியாகவே வந்து விட்டார். அதனல் என் சித்தப்பாவும், அவர் குடும்பத்தினரும் அவர் வேண்டுமானலும் போகட்டும், நான் தாமதித்துச் செல்லலாம் என விரும்பினர். இதயமோ அன்னையும், மெல்லமைதி வாய்ந்த ஏரிக்கரையையும் நினைத்துக் கதறிக் கொண்டிருந்தது, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவசியம் போயாக வேண்டுமென்று உறுதியாகக் கூறி, அவசர அவசரமாகப் பசியாறிவிட்டு; சாமான்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு என் உறவினர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

பின்னர் ஆலக்காரருடன் அந்தச் சிறு வண்டியில் ஏறிக் கொண்டதும், வண்டி கட கடவென்று ஓடி, தாமதமில்லாமல் கிராமத்தைத் தாண்டி, நெடுஞ்சாலைக்குள் புகுந்து விட்டது. இவ்வளவு நடக்கும் போதும், நான் ஒருவித மதி மயக்கத்தில் தானிருந்தேன்; அன்னுவுக்காகத்தான் நான் தங்கியிருந்தேன். அவளை நான் காதலிக்கிறேன் என்பதை அவர்கள் நொடியில் கண்டு கொள்வார்கள் என நினைத்தேன்; வேறு இனம் புரியாத ஏதோ முரண்பட்ட உளப்போக்கும் என்னை ஆலக்காரருடன் புறப்படத் தூண்டியிருக்கும்.

கிராமத்தை விட்டு நூறு தப்படி தாண்டியதும், இப்படி வந்து விட்டதற்காக வருந்தினேன். வண்டியிலிருந்து குதித்து விடலாமா எனக்கூட எண்ணினேன். ஏரியைச் சுற்றி நின்ற குன்றுகள் நீலநிறம் பெற்று வருவதையும், பார்க்கப் பார்க்க அவை தோற்றத்திலும் சுருங்கி வருவதையும் உணர்ந்து கொள்ளாமலே அவற்றை நோக்கிக் கொண்டிருந்தேன்; ஆழ்ந்து, விரிந்த ஏரிகளிலிருந்து அம் மலைத் தொடர் எழுந்து நிற்பதைப் போலத் தோன்றிற்று.

வீட்டுக்குத் திரும்பிய முதல் சில நாட்களில் நான் எங்கிருக்கிறேன் என்பதே புரியவில்லை. நகரத்தைச் சுற்றிய வண்ணம் பகட்டான காட்சிகளைவிட, நான் விட்டு வந்த நாட்டுப்புறம்தான் என் பார்வைக்குச் சுவர்க்கமாகத் தோன்றிற்று; அதனுடைய உள்ளார்ந்த, போலிப் பெருமையற்ற, எளிமையான அழகையும், அதன் அமைதியையும் இப்பொழுதுதான் முதன் முதலாக முழுமையாய் உணரலானேன். நகரத்தைத் தாண்டி, நாட்டின் மிக உயர்ந்த மலை உச்சியையும் கடந்து, நீல மயமான தொலை தூரத்துக்குப் பின்னே அந்தக் கிராமம் இருக்கவேண்டிய அந்தச் சிறு நிலப்பரப்பையும், அதனருகேயுள்ள பள்ளியாசிரியர் ஏரியையும் நான் கூர்ந்து நோக்கிய போதெல்லாம் அவைதாம் என் காட்சிப் பரப்பு முழுவதிலும் பேரழகு வாய்ந்த இடமாக எனக்குத் தோன்றிற்று. அந்தப் பகுதியிலேயிருந்து மெல்ல வீசி வந்த காற்று தூய்மையானதாகவும், மகிழ்ச்சி தருவதாகவும் இருந்தது; பனிபடர்ந்த நீல மாலையொளிக் கப்பல், தொலைவில், கண்ணுக்குத் தெரியாத இடத்தில் அன்னுவின் வீட்டுக்கும் இடைப்பட்ட நிலப் பரப்பில் மந்திரம் போட்டு வைத்திருப்பதுபோல் தோன்றிற்று. ஆழ்ந்த, ஒடுங்கிய பாதையில் இறங்கும்போது, அடிவானம் தெரியவில்லை. வான வெளியைத்தான் தேடினேன். அதைத்தான் உணர்ந்தேன். என்னருகேயிருந்த குன்றுகளும், சுவர்க்கப் பரப்புக்குப் பாதை காட்டும் நீலவானமும் அந்த கிராம வீட்டை நினைவுறுத்தி, ஏக்கங்கொள்ளச் செய்தன.

இதற்கிடையில் என்ன பணியை நான் மேற்கொள்வது என்ற பிரச்னை மீண்டும் எழுந்து, ஒவ்வொரு நாளும் தீவிரமாகிக் கொண்டு வந்தது. ஏனென்றால் நான் இது பற்றி ஒரு முடிவு எடுக்காமலோ, அல்லது வேலையில்லாமலோ அதிக நாளிருக்க அனுமதிக்கப்படக் கூடாதல்லவா?

சதா சிந்தனையில் மூழ்கியவனுகவும், ஓவியத்தைக் கைவிட வேண்டி வந்த என் தலைவிதியை நொந்தவனுகவுமே இருந்தேன். இது என் அன்னையின் இதயத்தைத் தொட்டுவிட்டது; அவர் பிரிதொரு தடவை இதைப் பற்றி யோசித்து, என்ன வந்தாலும் வரட்டும் என்று நான் விரும்பிய வழியிலே என்னை விட்டுவிடத் தீர்மானித்தார்.

கடைசியில் நகருக்கு வெளியே, ஒரு பழைய கன்னி மடத்தில் அநேகமாக எவருக்கும் தெரியாது, ஏதோ ஒருவகை விசித்திரமான கலையை வைத்துக் காலம் தள்ளிவந்த மனிதர் ஒருவரை ஏற்பாடு செய்தார். அவர் ஓவியம் தீட்டுவார்; செப்புத் தகட்டில் செதுக்குவார்; கல்லச்சில் வரைவார்; அச்சிடுவார். பிரபலமான ஸ்விட்சர்லாந்துக் காட்சிகளை, இப்பொழுது பழமையாகப் போன ஒரு பாணியில், வரைந்து, பிறகு அவற்றைச் செப்புத் தகட்டில் செதுக்கி, அச்சிட்டு, இளைஞர் சிலரைக் கொண்டு வண்ணம் தீட்டச் செய்வார். பின்னர் இவற்றைப் பல இடங்களுக்கு அனுப்பி, நல்ல வாணிபம் செய்துகொண்டிருந்தார். இந்த வேலைகளில் வல்லமையும், நேர்மையும் படைத்த இளைஞர் கூட்டம் ஒன்று அவருக்குத் துணை செய்தது; இவையெல்லாம் நடைபெற்று வந்த இடம் முன்னர் கன்னித் துறவிகளின் உணவுக் கூடமாக இருந்தது. நீண்ட இதன் இரண்டு பக்கங்களிலும், ஆறு, ஆறு உயர்ந்த சன்னல்கள், வட்ட வட்டக் கண்ணுடிகள் பதிக்கப் பட்டிருந்தன. இக்கண்ணுடிகளின் அலைஅலையான மேற்பரப்பு, வெளிச்சம் உள்ளே வர அனுமதித்தாலும், உள்ளேயிருப்பவர்கள் வெளியே பார்க்க விடாது தடுத்து நின்றது. ஆனல் இது கலைப் பள்ளியின் தொழிலுக்குப் பெரிதும் சாதகமாகவே அமைந்து விட்டது. ஒவ்வொரு சன்னலிலும் ஒரு மாணவர், தமக்குப் பின்னலிருப்பவருக்கு முதுகைக் காண்பித்துக் கொண்டு. உட்கார்ந்திருப்பார். இந்தப் படையின் முக்கிய உறுப்புக்கள் இளைஞர்கள். எண்ணிக்கை: நான்கு முதல் ஆறு வரை. பையன்களும் சிலரிருந்தனர். இவர்கள் சுவிட்சர்லாந்து இயற்கைக் காட்சிகளை, ஒளியுமிழும் வண்ணங்களில் தீட்டுவார்கள். இதன் பின்னர் ஓயாத இருமலும், நோய் பிடித்த தோற்றமும் கொண்ட மனிதர் ஒருவர் வந்து செப்புத் தகடுகளில் மரப்பிசினையும், வெடியக்காடியையும் தடவி, இவை செப்பைத் தின்று, அதில்

துவாரங்கள் போட்டதும் செதுக்கும் ஊசியை வைத்துக் குத்துவார்; இவரை செப்புத் தகட்டைச் செதுக்குபவர் என்று அழைப்பார்கள்; இவருக்குப் பிறகு கல்லச்சுக்காரர் வருவார். இவர் கள்ளங்கபடமற்ற மனிதர்; கலகலவென்று இருப்பார், நம் ஓவியருக்கு அடுத்தபடியாக இவருடைய ஆதிக்க வட்டம்தான் பெரிது. ஏனென்றால் இவர் எப்பொழுதும் கலைப் பள்ளியில், சாக்பீஸ், பேனு இவற்றோடு, அரசியல்வாதி, சாராயப் பட்டியல், சூட்டடுப்பு இயந்திரத்தின் உருவரைப் படம், அல்லது சிறு பெண்களுக்கான வணக்க வழிபாடுகளைக் கொண்ட புத்தகத்தின் முகப்புப் பக்கம் இவற்றில் ஏதாவதொன்றின் ஒப்புருவைப் பிசகாது கல்லில் மாற்றுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். கலைப்பள்ளியின் பின்புறத்தில் செம்பிலும், கல்லிலும் செதுக்கும் இருவருடையவும் உதவியாளர்கள் இருந்தனர். கரிய நிறங்கொண்ட இவ்விருவரும், கலைஞர்கள் முடித்து வைத்திருக்கும் உருவரைப் படங்களை ஈரத் தாள்களில் ஒற்றியெடுத்துக் கொண்டிருப்பார்கள். கடைசியாக இந்தக் கூட்டத்துக்குப் பின்னல், எல்லாவற்றையும் பார்வையிட்டவாறு வீற்றிருப்பார் முதலாளி; திரு. ஹாபர்ஸாட் கலைஞர்; கலைப்பொருள்கள் விற்பனையாளர்; செம்பில் செதுக்குதல், கல்லச்சில் தீட்டுதல் போன்றவற்றை மேற்கொள்ளும் நிறுவனத்தின் உரிமையாளர். எந்தக் கலைப் பணியை ஒப்படைத்தாலும் அதை நிறைவேற்றி வைக்கத் தயாராயிருப்பவர்; மேசையின் முன் உட்கார்ந்து நுட்பமான—கடினமான வேலையை—கணக்குப் புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டும், கடிதப் போக்குவரத்தில் கவனம் செலுத்திக் கொண்டும்; தயாராகும் கலைப் பொருள்களை 'பார்சல்' செய்து கொண்டுமிருப்பார்.

இவரிடம் பேச்சு வார்த்தைகள் நடத்துமாறும், அவர் தொழில் நடத்தும் விதத்தைப் பார்வையிடுமாறும், யாரோ என் அன்னைக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள்; என் துறையில் முன்னேற்றமடைய அது தகுந்த இடமென்றும், குறிப்பாகத் தன் தொழில் துறையில் என்னை ஈடுபடுத்தாமல், போதிய ஊதியம் பெற்றுக்கொண்டு, தனக்குத் தெரிந்த அளவு என்னைப் பயிற்றுவிக்க அவரிடம் கேட்குமாறும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அவர் தாம் பெரிதும் இசைவதாகக் கூறி, ஓர் இளைஞனை உண்மையான கலைஞனுக்குப் பயிற்சி கொடுப்பதில் தாம் மிக்க மகிழ்ச்சியடைவதாகவும் சொல்லி, இதற்காகப் போதிய பணம் செலவளிக்க நாடிய என் அன்னையாரையும் அவர் மிக உயர்வாகப் பாராட்டினார். தான் தொடர்ந்து சிக்கனமாக வாழ்ந்ததின் பயனை என் வருங்காலத்துக்காகத் தியாகம் செய்யவேண்டிய நேரமும், பொழுதும் வந்துவிட்டன என்று என் தாயாருக்குத்

தோன்றிற்று. எனவே ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது; இரண்டாண்டுகள் எனக்கு மிகப் பயன்தரும் பயிற்சிக்காகக் கலேப்பள்ளியில் கழிக்கவேண்டும் என்றும், அதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அவருக்கு முறையாக ஊதியம் அளித்து வரவேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. இந்த ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையெழுத்திட்டதும், ஒரு திங்கட்கிழமைக் காலேயில் பலதரப்பட்ட என்னுடைய கலேப்படைப்புகளேயும், சாதனேகளேயும் என்னுடைய புதிய தலேவர் கேட்டால் காண்பிக்க வேண்டுமென்று, எடுத்துக் கொண்டு, அந்தப் பழைய கன்னி மடத்துக்குச் சென்றேன். அடுத்து, நான் வரைந்திருந்த விசித்திரமான தாள்களே ஒவ்வொன்றுக எடுத்ததும், என்னுடைய உள்ளார்ந்த நோக்கங்களேக் கண்டு தாம் மகிழ்வடைவதாகக் கூறித் தம்முடைய நிறுவனத்திலிருந்த உறுப்பினர்களுக்கு அவர் என்னே அறிமுகப்படுத்தியதும், அவர்கள் அனேவரும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து நின்று, கலேப்பள்ளிக்குள் நுழைவதற்கு முன்னரே, இப்படி உண்மை மாணவனுகி விட்டிருந்த என்னே ஆர்வத்தோடு நோக்கினர். இத்தகைய மாணவர் ஒருவருக்கு ஒழுங்கான பயிற்சி அளிப்பதில் தாம் பேரானந்தம் அடைவதாகவும், நான் விடாமுயற்சியுடனும், பேரார்வத்துடனும் பயின்று வருவேன் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கருத்து தெரிவித்தார்.

வண்ண ஓவியம் தீட்டும் ஒருவர் பலகணியருகேயிருந்த தம்மிடத்தை விட்டு நீங்கி மற்றவர்களுடன் உட்காரவேண்டி வந்தது. அந்த இடத்தில் நான் இருத்தப்பட்டேன். பின்னர் காலி மேசைக்கு முன்னர், இன்னும் என்ன நடக்கப் போகிறதோ என்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும்போது, திரு. ஹாபர் ஸாட் அவருடைய கெட்டித்தாள் பையுறையிலிருந்து, நான் பள்ளிக்கூடத்தில் பலதடவை பார்த்திருப்பது போன்ற ஓர் இயற்கைக் காட்சியின் உருவரைப் படத்தை வெளியே எடுத்தார். இது எளிமையான வகையில் கல்லச்சில் தயாரிக்கப் பெற்றது. முதன் முதலில், மிக கவனமாக இதற்குச் சரியான ஒரு நகல் எடுக்க வேண்டுமாம். ஆனுல் நான் உட்காருவதற்குள், தாளும், பென்சிலும் எடுத்து வருவதற்காக மாஸ்டர் என்னே அனுப்பி வைத்தார். பயிற்சி வேலேயை எப்படித் துவங்கப் போகிறேன் என்பதுபற்றி அதுவரை சிறிதும், சிந்தித்துப் பாராமையினுல், தாள், பென்சில் வேண்டும் என்பது பற்றியே எனக்கு நினேவிருக்க வில்லே. என்னிடம் பணம் இல்லே; எனவே முதலில் நெடுந்தூரம் நடந்து வீட்டுக்குப் போகவேண்டும்; பிறகு புதிதும், நல்லதுமான பொருளே வாங்க கடைக்குப் போகவேண்டும்; இப்படியாகக் கலேப் பள்ளிக்குத் திரும்பும்போது உச்சிப்பொழுது ஆவதற்கு

அரைமணி நேரம் தானிருந்தது. ஒரு துண்டுத் தாளும், பென்சிலும் தராமல்: அவற்றை வெளியே போய் வாங்கி வருவதற்காகத் தெருக்களிலெல்லாம் என்னை அலையவைத்து, அதற்காக என் அன்னையாரிடம் போய்ப் பணமும் கேட்க வைத்து. இவ்வளவு சிரமத்துக்குப் பிறகு எல்லோரும் மதிய உணவுக்குப் போவதற்குச் சற்று முன் நான் வேலை துவங்க வேண்டிய நிலையையும் இவர்கள் ஏற்படுத்தியதை நினைக்கும்போது, ஒரு கலை நிறுவனத்தில் எப்படிக் கலைஞர வேலைகள் நடக்குமென்று நான் கற்பனை செய்து வைத்திருந்ததற்கு நேர்மாறாக இருந்தது மட்டுமல்ல, இது மிகச் சிறுமையுடையதாகவும், கலைப்பண்பு அற்ற செயலாகவும் இருந்தது. இதனால் என் உள்ளம் மிகவும் துயரப்பட்டது.

ஆனால், இந்த எண்ணத்தை நான் அதிவிரைவிலேயே மாற்றிக் கொள்ளவேண்டி வந்தது. எனென்றால் பயிற்சி கொடுப்பதில் ஹாபர்ஸாட் மிகக் கண்ணும் கருத்துமாக இருந்து நான் வரையும் ஒவ்வொரு கோடும் கூட மூலத்திலிருப்பதற்கு முற்றிலும் சரியாக இருக்க வேண்டும், வரைந்த படம் மூலத்துக்கு அளவில் ஒரு சிறிது கூடவோ, குறைவாகவோ இருக்கக் கூடாது என்றும் கண்டிப்பாகயிருந்தார். ஆனால் என்னுடைய நகல்கள் எப்பொழுதும் மூலத்தை விடப் பெரிதாகவே அமைந்து விடும்: ஆனால் நீள—அகல—உயரம் பெரிய அளவுக்குத் தகுந்தவாறு பொருத்தமாகவே இருக்கும். தம்முடைய கண்டிப்பையும், துல்லியத்தையும் வெளிப் படுத்துவதற்கு இவ்வாய்ப்பைப் பயன் படுத்தி, கலை எவ்வளவு கடினமான தென்று விளக்கி, நான் நினைத்தவாறு அவ்வளவு வேகத்தில் இக்கலையில் தேர்ச்சி பெற முடியாது என்று உணரவைப்பார்.

துவக்கத்தில் படிகம் போன்ற கூர்மைக்கும், அழுக்குத் தடம் பதிந்த மழுங்கலுக்கும் எனக்கு வேற்றுமை கண்டுபிடிக்க முடியவில்லை; வடிவமும் தன்மையும் சரியாக வர வேண்டுமென்பதில் தான் அதிகக் கவனம் செலுத்தினேன்; எனவே சிறிது காலம் எல்லாவற்றுக்கும் தன்னையே எதிர்பார்த்திருக்கும் நிலையில் வைத்துவிட்டார். ஆனால் தூரிகையை வைத்து இடைவிடாது பயின்று வந்ததன் காரணமாக, இந்த மர்மத்தின் அடிப்பரப்புக்கே போய்விட்டேன். இப்பொழுது ஒன்றன்பின் ஒன்றாக குறிப்பிட்ட ஒரு பாணியில் தூரிகையினால் பல சித்திரங்களை முடித்து விட்டேன். இப்படி எத்தனை ஓவியம் தீட்டி முடித்தேன் என்பதைப் பற்றியே நான் எண்ணிக் கொண்டிருந்தாலும், இவற்றை விற்பதில் எனக்கு மகிழ்விருந்தது. எதை வரைவது என்பதில் மிக்க பயனுறுதியுள்ள—கருத்தைக் கவரக்கூடிய பொருள்கள்

கூட என் விருப்பத்துக்கு இசைந்தவையாக இல்லை. எனவே முதற் குளிர் காலம் முடிவதற்குள் என் ஆசிரியர் வைத்திருந்த படங்கள் முழுவதையும்—அதிலும் அவர் வரையும் பாணியிலே—வரைந்து தீர்த்து விட்டேன். துல்லியமும், நேர்த்தியும் செறிந்த ஓவியத்தைத் தீட்டுவதற்கு வேண்டியது என்னென்ன என்று என் மனத்தில் பதியலானதும், மாஸ்டரின் வண்ணப் பூச்சுத் திறமைக்கொப்ப, எனக்கும் தேர்ச்சி வந்து விட்டது. இது வேகமாகவே கைவந்தது என்று தான் சொல்லவேண்டும்; ஏனென்றால் உணர்வாற்றலிலும், உண்மையை ஆழ்ந்து கணிப்பதிலும் நான் கீழ்ப் படியில்தானே யிருந்தேன்.

தெயடோர் ஸ்டோம்

வெண் குதிரை மீது சவாரி செய்பவர்

தெயடோர் ஸ்டோமுடைய (1817—1888) கதைகள் மனிதனின் அகவாழ்க்கையைப் பற்றியவை; சமுதாய வாழ்க்கையைப் பற்றிய வர்ணனைகள் அவருடைய கதைகளில் மிகக் குறைவாகவேயிருக்கும். தனி மனிதனின் மனக் கிளர்ச்சியையும், உணர்ச்சி வேகத்தையும், மனிதனோடு மனிதன் நெருங்கி உறவாடுவதில் ஏற்படும் பிணக்குகளையும், சச்சரவுகளையும் குறித்தே அவர் கருத்தூன்றி எழுதியுள்ளார். தனிமை; இறுதியில் எதுவுமே பயன் தராது என்ற விரக்தி; சோக உணர்வு ஆகியவற்றுடன் கனிவும், மென்மையும் சேர்ந்து அவர் கதைகளில் மிகைத்து நிற்கின்றன. நிகழ் காலத்தை விட கடந்த கால நினைவுகளே விரும்பப்படுகின்றன. கடலையடுத்த ஸ்டோமின் வட ஜெர்மனி தாயகம், அவருடைய எல்லாக் கதைகளுக்குப் பின்னணியையும், மனப் பாங்கையும் அமைத்துத் தருகிறது.

தன் இளமையிலிருந்தே தன் தனி வாழ்விலும், தொழில் துறையிலும் வெற்றி மீட்டுவதற்காகப் பேருக்கத்துடன் பாடுபடும் ஹௌக்கெ ஹையெயினின் வாழ்க்கையை வர்ணிக்கும் 'வெண் குதிரைச் சவாரிக்காரர்' (1888) ஸ்டோமின் கதைகளில் சிறப்பிடம் வகிக்கிறது. ஹௌக்கெ "கவுண்ட் ஆப் திடைக்" என்று அழைக்கப் பெற்ற, அம் மாவட்டத்தின் முது நிர்வாகியின் மகனை மணம் புரிகிறார். பெரியவரின் மரணத்துக்குப் பிறகு இந்த நிர்வாகப் பதவி ஹௌக்கெக்குக் கிடைக்கிறது. ஆனால் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்காக அணைகரை ஒன்றை அவர் கட்டியபோது, கடலின் சக்தியோடு மட்டுமல்ல, பொது நலனுக்காகத்தான் ஹௌகெக் இதைச் செய்கிறார் என்பதை உணரா கிராமவாசிகளின் பகைமையையும், பிடிவாதத்தையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டிவருகிறது. கிராம மக்களின் இந்த எதிர்ப்பு, செருக்கும், புகழார்வமும் கொண்டிருந்த ஹௌக்கெ ஹையெயினை விட்டுக் கொடாத தன் போக்கிலே இழுத்துச் செல்கிறது. இதனால் கடன் பட்டு, அவருடைய வலிமையும் தேயலாயிற்று. கடைசியாக அந்த அணைகரையே உடைந்து, அவருடைய மனைவியும், குழந்தையும் தண்ணீரில் மூழ்கி மடிய நேர்ந்ததும், வெண் குதிரையோடு அவரும் கடலில் பாய்ந்து விடுகிறார். அடக்கி ஆட்கொள்ளும் ஊழ்வலிக்கு எதிராகத் தன்னந் தனியே போராடும் அவர் இயற்கை மீறிய அதிமானுடத்தன்மை பெறுகிறார். இங்கு தரப்பட்டுள்ள பகுதி தம் முக்கியத்தைப் பற்றி ஹௌக்கெ ஹையெயின் வைத்திருந்த மிகைபட்ட கருத்தைக்

காண்பிக்கிறது; எல்லோரையும் எதிர்த்து நின்று போராடிய அந்த அணைக்கட்டையும், தாம் மீட்ட நிலத்தையும் தம்முடையச் சொந்த சாதனையாகவும், சுய வெற்றியாகவும் அவர் கருதுகிறார்.

அடுத்த நாள் கடைசி வாரளவு மண்ணும் தோண்டியாயிற்று: காற்றுவேகம் குறைந்து, நீரிலும், நிலத்திலும் கவினுறு வகைவுகளில் நாரைகளும், கடற் பறவைகளும் அங்குமிங்குமாகப் பறந்து கொண்டிருந்தன. இந்நாளில் வடகடல்—கரையிலேயே சுணங்கி நிற்க மனங்கொண்டு விட்ட காட்டு வாத்துக்கள் யேவர்ஸ் தீவிலிருந்து பல குரல்களில் ஒலி யெழுப்பத் துவங்கின. சதுப்பு நிலத்தில் படிந்திருந்த பனியிலிருந்து தங்கமயமான ஒரு புது நாள் மலர ஆரம்பித்து, தன்னொளியை மனிதனின் கரங்கள் தோற்றுவித்த அந்த அரிய சாதனை மீது பரப்பிற்று.

சில வாரங்களுக்குப் பிறகு, தலைமை அதிகாரியும், கமிஷனர்களும் இதை நேரில் பார்வையிட வந்தனர். வயதான தெதெ .:போல்கர்த்தின் பிரேத அடக்கத்துக்குப்பின் அங்குற்ற முக்கிய நிகழ்ச்சி அணைக்கட்டு நிர்மாணம் நிறைவு பெற்றதுதான்: எனவே அதைச் சிறப்பிக்க ஒரு விருந்து நடந்தது. நிகோ காவலர்களும், முக்கிய உரிமைப் பட்டங்கள் வகிப்போரும் வந்திருந்தனர். விருந்து முடிந்ததும் எல்லோரும் அங்கு நின்றிருந்த பல்வேறு வாகனங்களில் ஏறிக் கொண்டனர். தலைமை அதிகாரியின் மனைவியை வண்டியில் அழைத்துக் கொண்டு, புது அணைகரை வழியாகக் கலகலப்பாக வண்டிகளை ஓட்டி, கடலிலிருந்து மீட்கப் பட்ட தாழ்நிலப் பகுதிக்குக் கடைசியாக வந்து சேர்ந்தனர்.

இதற்கிடையில் தென் மேற்கிலிருந்து ஒரு மென் காற்று எழுந்தது: இந்த இரு திசைகளிலிருந்து அலைகள் வேகமாக வந்து கொண்டிருந்தன, ஹொளக்கெ ஹையெயின் முன்னரே கூறியாது போலவே அணைக்கட்டுச் சுவரின் மெல்லிய வகைவுகள் அலைகளின் மோதுதல் வேகத்தை மிதப்படுத்தின. கமிஷனர்கள் புகழ்ந்து போற்றினர்கள். நிகோக் காவலர் சிலர் அணைக்கட்டுப் பற்றிக் கூறிய அரை மனதான குறைபாடுகளெல்லாம், பொதுப் பாராட்டில் அமுங்கிப் போயின.

இப்படியர்க, இந்தப் பெரிய நாள் கழிந்தது; ஆனல் புது அணைக் கட்டு வழியே, சிந்தனையில் மூழ்கியவராகத் தம் குதிரையில் சென்று கொண்டிருந்த ஹொளக்கெ ஹையெயினின் நெஞ்சு குளிர பிறிதொரு வாய்ப்புக் கிட்டிற்று. தாமில்லா விட்டால், இப்பகுதியே அடைக்கப்பட்டிராது. நீண்ட இரவுகளில் தம் உழைப்பாலும், தாம் வியர்வை சிந்தியதாலும் கடலிலிருந்து மீட்கப்பட்டது இங்கிலம்: அப்படியிருந்தும் இதற்கு அதிகார பூர்வமாக புது கரோலின் போல்டர்—காரோலின் புது மீட்பு

நிலம்—என்று இளவரசிகளுள் ஒருத்தியின் பெயரை இதற்கு ஏன் சூட்ட வேண்டும் என்று எண்ணமிட்டவாறு தம் வெண் குதிரையை ஓட்டிக் கொண்டிருந்தார். ஆனால் அரசாங்கத்தின் ஆவணங்களில் — பதிவுப் பத்திரங்களில் — இப்படித் தான் அப்பெயர் காட்சியளிக்கிறது. சில பத்திரங்களில் தடித்த சிவப்பு எழுத்துக்களில் அக்ஷக்கட்டு வேலியாட்கள் இருவர் உழைப்புக் கருவிகளைத் தோளில் சுமந்து கொண்டு ஒருவருக்குப் பின் ஒருவர் இருபதடி இடை வெளியில் வந்து கொண்டிருந்தனர். தொலைவிலே வந்த வேலியாள் மற்றவரிடம் தமக்காகக் காத்திருக்கும்படி மற்றவர் கேட்கக் கத்தினர், அக்ஷக்கட்டிலிருந்து மீட்பு நிலத் துக்குப் போகும் பாதைக்குள் இப்பொழுது நுழைந்து விட்ட இரண்டாம் வேலியாள், வேறெப்பொழுதாவது பார்த்துக் கொள்ளலாம்; இப்பொழுது எனக்கு நேரமில்லை யென்ஸ் பொழு தாகிவிட்டது; கொஞ்சம் புல் அறுத்துக் கொண்டு வர வேண்டும்!" என்று பதில் வந்தது.

"எங்கிருந்து புல் அறுக்கப் போகிறாய்?"

"ஏன், ஹௌகெக் ஹையெயின் மீட்பு நிலத்திலிருந்துதான்!"

தனக்கு முன் கிடந்த அந்தச் சதுப்பு நிலம் முழுதும் கேட்கும் படியாக உரத்த குரலில் வேலியாள் வந்துகொண்டே பதில் கூவிச் சென்றார். தம்முடைய பெயர் அக்ஷத்துலகும் கேட்கும் படியாக முழங்கப்படுகிறது என்னும் உணர்வு ஹௌக்கெயை ஆட்கொண்டது. தமக்கு வலது புறம் விரிந்து கிடந்த நிலப் பரப்பில் பார்வையைப் பதித்தவாறே குதிரையை முடுக்கினர். 'ஹௌகெக் ஹையெயின் மீட்பு நிலம்' என்று தம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார். வேறு எந்தப் பெயரும் இதற்குச் சரிப்பட்டு வராதது போலல்லவா தொனிக்கிறது. அவர்கள் அக்ஷவரும் தம்மை எதிர்த்து நின்றால் தானென்ன; அவருடைய பெயரைத் திருப்பித் திருப்பிக் கூறாது தப்ப முடியுமா? இளவரசி கரோலின் பெயர் தாளிலே, பத்திரங் களிலே மட்டும்தானே அப்பெயர் தங்கப்போகிறது. நாலு கால் பாய்ச்சலில் வீரூப்போடு குதிரை பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. 'ஹௌக்கெ ஹையெயின் மீட்புநிலம், ஹௌக்கெ ஹையெயின் மீட்பு நிலம்'—என்னும் சொற்றொடர்கள் அவர் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. அவருடைய அடிமனத்தின் ஆழத்தில், அக்ஷக்கட்டின் வெறுமை உலகின் எட்டாவது அதிசய மாகும் அளவுக்கு விரிந்தது, பிரீஸ்லாண்ட் (வடக்கு ஹாலந்து) முழுவதிலுமே இதற்கு ஒப்பாக எதுவுமே யில்லையே. தம்முடன் வெள்ளோக்குதிரை மீது, உடல் ஆடி அசையப் போய்க் கொண் டிருந்த அவருக்குத் தம்மைச் சுற்றி தம் நாட்டவர் அக்ஷவரும் நிற்பதுபோலத் தோன்றிற்று; அவர்களுக்கு மத்தியில் தாம்

மட்டும் மேம்பட்டு, தலைநிமிர்ந்து நிற்பதாக அவருக்குப் பட்டது. அவருடைய கூரிய கண்கள் இரக்கத்தோடு அக்கூட்டத்தின் மீது அங்குமிங்கும் பாய்ந்தவாறு இருந்தன.

அறிணக்கட்டு முடிந்து, மூன்றாண்டுகள் மெதுவாக நகர்ந்து சென்று விட்டன. நீரும், நிலமும்; கனலும், காற்றும் அதற்குத் தலை தாழ்த்திச் சென்று விட்டன; பழுதுபார்க்கும் செலவுகள் மிகக் குறைவாகவே யிருந்தன. மீட்பு நிலம் முழுவதும் வெள்ளை 'புளோவர்' குருவிகள் நிறைந்து நின்றன; அடுத்திருந்த பசும்புல் நிலத்தினூடே நடந்து செல்லும்போது பயிர் பச்சைகளிலிருந்து இனிய மணத்தை தென்றலினங்காற்று சுமந்து செல்வது போலிருந்தது.

மீட்பு நிலத்தில் மக்களுக்குப் பெயராளவில் இருந்த பங்குகளை உறுதிப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது சட்டம் ஏற்றுக் கொள்ளும் பங்கீடு முறைப்படி, புதிய உரிமையாளர்களுக்கு ஆங்காங்கே நிலப் பகுதிகள் ஒதுக்கப்பட்டு பட்டாப் போடப் பட்டது. புதிதாக வரும் பங்குகளை வாங்க ஹௌக்கெ ஹையெ யின் தவறவில்லை; ஆனால் முதியவர் பேடர் மட்டும் சிடுசிடுப்புடன் மறுத்து விட்டார்: மீட்கப்பட்ட நிலத்தில் அவருக்குப் பங்கே யில்லை. நில ஒதுக்கீட்டை உறுதிப் படுத்துவதற்கு முன் வழக்க மான பூசல்களும், பிணக்குகளும், சில்லறைச் சச்சரவுகளும் இருக்கத்தான் செய்தன: இறுதியாக உடன்பாடு ஏற்பட்டு விட்டது. ஹௌக்கெ ஹையெயினுக்கிருந்த இந்தத் தடையும் நீங்கிற்று.

மேன்மை தங்கிய பல்கலைக் கழகக் குழுவினருக்கு

ஹாலேவர் நாட்டு மக்கள் முற்போக்குக் கொள்கையுடைய ஓர் அரசியல் அமைப்பைப்பெறும் தங்கள் போராட்டத்தில் 1833ஆம் ஆண்டில் வெற்றி கண்டனர். ஆனால் புதிதாக அரியணை ஏறிய அரசர் எர்ன்ஸ்ட் ஆகஸ்ட், இந்த அரசியலமைப்புக்கான அடிப் படைச் சட்டத்தைச் செல்லாதது என்று 1837 நவம்பர் முதல் தேதியன்று அறிவித்தார். இதற்கு அவர் கொடுத்த காரணங்கள்! அரசப் பிரதிநிதியும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து, ஒரு முகமாக இந்த அரசியலமைப்பை நிறைவேற்றவில்லை; அரச உறவினர்களின் உரிமைகளும், தம்முடைய ஆட்சி உரிமை களும் மீறப்பட்டுள்ளன. இதையடுத்து கோய்ட்டிங்கன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் எழுவர், பல்கலைக் கழகக் குழுவினருக்கு நவம்பர் 18ஆம் தேதி மறுப்புரை ஒன்றைக் கையெழுத்திட்டு அனுப்பினர்கள். கையெழுத்திட்டோரின் விருப்பத்துக்கு எதிராக

இது பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. அயல்நாட்டுப் பத்திரிகைகளும் இம்மறுப்புரை பற்றிக் குறிப்பிட்டன. முற்போக்கு இயக்கத்தை வலிந்து கட்டுப்படுத்த முடியாது என்பதற்கு ஓர் அடையாளமாக இது அனைத்து ஜெர்மனியின் கவனத்தையும் ஈர்த்தது. கோய்ட்டிங்கன் எழுவரில் ஒருவரான தால்மன்: "அடிப்படையில் இந்த மறுப்புரை மனச்சாட்சியின் ஆட்சேபமாகும்; தன் கடமைக்கு மாறுன எதையும் சுமத்தினுல் மனச்சாட்சி அதை ஏற்றுக்கொள்ளாது என்னும் அதன் உரிமையை இது உறுதிப் படுத்துவதாகும். அதோடு, அதன் உட்பொருளை வைத்துப் பார்க்கும்போது, அதை ஓர் அரசியல் ஆட்சேபமாகக் கொள்ள வேண்டும்." 1837 டிசம்பர் 11ஆம் தேதி, அரசர் பிறப்பித்த ஆணைப்படி பேராசிரியர் எழுவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். தால்மன், யாகோப் கிரிம், கெர்விநூஸ் ஆகிய மூவர் நாடு கடத்தப் பட்டனர். ஆனல் 1848ஆம் ஆண்டில் இந்த எழுவரில் பெரும் பான்மையினர் பிராங்க்பர்ட் தேசிய மன்றத்தில் உறுப்பினராகி விட்டனர்.

கோய்ட்டிங்கன்
18, நவம்பர் 1873

அரசினர் பல்கலைக் கழகத்தின் உறுப்பினர் சிலர் நவம்பர் முதல் தேதியிட்ட அரசின் ஆணை பற்றி சமர்ப்பிக்கும் பணிவார்ந்த விண்ணப்பம்.

கீழே பணிவுடன் கையெழுத்திட்டிருப்போர் தங்கள் மனச் சாட்சிகளினுல் கட்டாயப் படுத்தப்பட்டு, நவம்பர் முதல் தேதிய அரச கட்டளையின் உள்ளடக்கம் பற்றி, இந்த அறிக்கையை மேன்மை தங்கிய பல்கலைக் கழக உறுப்பினர்க்குச் சமர்ப்பிக் கின்றனர். காலம் சென்ற மாட்சிமை மிகு அரசர், அடிப்படை அரசியல் சட்டம் முழுவதையும் ஒரு கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் நிறுவவில்லை; இன்னும்; அதனை அறிவிக்கும்போது மன்றத் தின் சில உத்தேசங்களை உறுதிப்படுத்தவில்லை; மேலும், சில திருத்தங்களை மன்றத்தில் வைத்து முற்கூட்டியே ஒப்புதல் பெறவில்லை என்னும் காரணங்களுக்காக, அந்த அமைப்பு முழுவதும் சட்ட விரோதமானது, எனவே செல்லுபடியற்றது என்பதை அவர்கள் மனசாட்சி உறுதிப்படுத்தவில்லை. ஏனெனில், ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட, விதி முறைகளின் படி, முழு அமைப்பையும் பாதிக்காத ஒரு சில தனியம்சங்களை மட்டும் செல்லுபடியாகாதவை எனக் குறிக்கலாமே தவிர, முழு அரசியல் அமைப்புச் சட்டத்தையும் செல்லுபடியற்றது எனக் கொள்ள முடியாது. அரசியல் அமைப்பில் மாறுதல் ஏற்படுத்த முனையும் எந்தத் திருத்தமும், அரச குடும்பத்தினர் எல்லோருடையவும்

ஒப்புதல்களையும் பெறவேண்டும் என்ற விதி இல்லாமையினால், அரச உறவினர் உரிமைகள் மீறப்படுகின்றன என்ற காரணத்தைக் கொண்டும் இதைச் செல்லுபடியற்றது எனக் கொள்ள முடியாது.

முக்கிய அரச உரிமைகள் அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தினால் மீறப்படுகிறது என்ற அறவே நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டைப் பொறுத்தவரை, பணிவார்ந்த கையொப்பக்காரர்கள், 26, செப்டம்பர், 1833 அரச கட்டளையை நிறைவுபடுத்தக் கோருகிறார்கள். இது அரச உரிமைகள் பாதுகாப்புப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெர்மன் பெடரல் மன்றத்தில் அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே, அரச உரிமைகள் பாதுகாப்புப் பற்றி ஒரு பொறுப்பாண்மைக் குழுவையும் அம்மன்றம் நிறுவிற்று. இதில் எங்குமே அரச உரிமைகள் மீறப்படுவதாகக் கண்டிக்கப் படவில்லை. மாறாக, அனைத்து ஜெர்மனியும், இந்த அரசியல் அமைப்புச் சட்டம் நிதானமும், முற்காப்புணர்வும் கொண்டது என்று பாராட்டியுள்ளது. என்னே, இப்பிரச்னையின் முக்கியத்தைப் பற்றிப் பொறுப்பு வாய்ந்த முறையில் ஆய்ந்த பின்னர், பணிவார்ந்த கையொப்பக்காரர்கள், அரசியலமைப்புச் சட்டம் முறைப்படி அமைந்த ஒன்றாகும், என்று உறுதி பெற்றனர். எனவே, அதைப்பற்றி எந்தவிதப் பரிசிலனையும் செய்யாமல். பாதிக்கப்பட்டவர்களை விசாரிக்காமல் பேரதிகாரத்தைக் கொண்டு மட்டும் அச்சட்டத்தை அழிக்க முற்படுவதை ஏற்றுக் கொள்ள இயலாது; அப்படிச் செய்தால் தங்கள் மனசாட்சிகளை அழித்தவர்களாவார்கள். எனவே அடிப்படை அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது ஆணையெடுத்துக் கொண்டதின் மூலம், அதனுடன் தொடர்ந்து பிணைக்கப் பட்டுள்ளார்கள் என்பதை பகிரங்கமாக அறிவிப்பது தங்களுடைய மீற முடியாக் கடமை என அவர்கள் கருதுகிறார்கள். மேலும் அரசியல் அமைப்புச் சட்டம் தவிர வேறு எந்த அடிப்படையிலும் நடக்கும் சட்டமன்றப் பிரதிநிதி தேர்தல் எதிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள்; அப்படி நடக்கும் தேர்தல் (முடிவு)களை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்; இறுதியாக அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தின் கொள்கைகளுக்கு எதிராகக் கூடும் எந்த மன்றமும் சட்டபூர்வமானது என ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

அரசினர் பல்கலைக் கழகத்தின் உறுப்பினர்களான பணிவார்ந்த கையொப்பக்காரர் ஒவ்வொருவரும் கீழே தனித்தனியாகக் கையெழுத்திட்டிருப்பதனால், அவர்களுக்குள் இதுபற்றி ஒருமுக

மான ஒற்றுமையான கருத்து இல்லையென ஐயப்படுதல் கூடாது. அடுத்த நாழிகை எழக்கூடிய எந்த முரண்பாடுகளிலும், தங்கள் நிலையைத் தெளிவுபடுத்தித் தயாராக நிற்கவே அவ்வாறு செய்துள்ளார்கள். கல்வி அதிகாரிகள் என்ற முறையில் தங்கள் கடமைகளை ஒழுங்கு பிறழாது நிறைவேற்றிவரும் அதே நேரத்தில் படிக்கும் இளைஞர்கள் அரசியலில் தீவிரமாக இறங்குவது பற்றி எச்சரித்து, அவர்கள் நாட்டின் ஆட்சியில் முனைப்பார்வமும், ஈடுபாடும் கொண்டிருக்க வேண்டுமென உறுதிப்படுத்துகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகளில் ஏற்படக்கூடிய வெற்றி அவர்கள் போதிக்கும் கல்வியின் மதிப்பைவிட, அவர்களுடைய சொந்த நேர்மையைப் பொறுத்திருக்கிறது. எனவே, ஒரு தடவை (அடிப்படை அரசியல் அமைப்புச் சட்டத்தின்மீது) ஆணையெடுத்து விட்டுப் பின்னர் சூதாடிகளைப்போல் அந்த ஆணையை விளையாட்டுப் போக்கில் அவர்கள் மறந்து விடுகிறவர்கள் என்று கல்வி பயிலும் இளைஞர்களுக்குத் தோன்றிவிட்டால், அவர்களுடைய முயற்சியில் ஏற்படும் பயனெல்லாம் மறைந்துவிடும். முன்னர் நாங்கள் (அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தின் மீது) எடுத்துக்கொண்ட புனிதமான ஆணையை மீறி விட்டோம் என்றால் — மாட்சிமை மிக்க அரசர்தான் இனி நாங்கள் எடுக்கப் போகும் ஆணையைப் பற்றியோ, சத்தியத்தின் மீது எங்கள் பற்றுறுதி பற்றியோ என்ன மதிப்பு வைப்பார்?

எஃப். சி. தால்மன், ஈ. அல்பிரெய்ஷ்ட்,
யாகோப் கிரிம், வில்யம் கிரிம், ஜி. கெர்வினுஸ்,
எச். ஏவால்ட், வில்யம் வேபர்.

கார்ல் மார்க்ஸ்

கார்ல் மார்க்ஸ் (1818—1883) அரசியல், தத்துவம், வரலாறு ஆகியவற்றை பெர்லினிலும், பானிலும் பயின்றார். 1843ஆம் ஆண்டு அவர் பாரிசுக்குக் குடிபெயர்ந்தார்; இங்கு ∴பிரீட்ரிஷ் எங்கெல்ஸுடன் சேர்ந்து உழைத்தார். அவருடைய கம்யூனிச எழுத்துப் படையல்கள் காரணமாக, பிரஷ்ஷிய அரசின் வேண்டு கோளின்படி மார்க்ஸ் பாரிசிலிருந்து வெளியேற்றப்பட்டார்; பிரஸ்ஸெல்சுக்குச் சென்றார்; அங்கிருந்தும் 1848ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்டார். இதன் பின்னர் அவர் பெரும்பாலும் லண்டனில், மிகுந்த வறுமையுடன், வாழ்ந்தார். அவருடைய பெரும் தத்துவ—விஞ்ஞான நூலான 'டாஸ் காபிடல்' மூலதனம் இங்குதான் எழுதினார். இதன் முதல் பாகம் 1856ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. ஜெர்மன் மொழியில் 1867இல்; அடுத்தடுத்த பாகங்கள் 1885ஆம் ஆண்டிலும், 1894ஆம் ஆண்டிலும், வெளிவந்தன. மேலை நாடுகளின் தொழிலாளர் இயக்கத் தலைவர்களில் பெரும்பான்மையோருடன் மார்க்ஸ் தொடர்பு கொண்டிருந்தார்.

மகளுடைய கடிதம்

மார்க்ஸ் தம் தந்தைக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளைக் கீழே தந்திருக்கின்றோம். அவர் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்திய கடிதங்களில் இது ஒன்றுதான் கிடைத்துள்ளது. பத்தொன்பது வயதான புகுமுகக் கல்லூரி மாணவர் மார்க்ஸ் தம் முதலாண்டுப் படிப்பு பற்றி இங்கு விவரிக்கிறார். மார்க்ஸுடைய இக்கால உணர்வுகள் பற்றியும், வாழ்க்கைப் பிரச்னைகள் பற்றியும் இக்கடிதம் விளக்குகிறது. ('யென்னி' என்பார், மார்க்ஸ் மணமுடிக்கத் திட்ட மிட்டிருந்து, பின்னர் அவருடைய மனைவியரான யென்னி ∴ப்ன் வெஸ்ட்∴பாலென் ஆவார்.) பயனில்லாக் கனவுமாய் இலட்சிய வாதங்களோத் தவறென ஒதுக்கிய; விஞ்ஞான ரீதியில், அனுபவத்தின் அடிப்படையில் உலகம் உருவாகுதல் வேண்டும் என்னும் கருத்து ஓட்டத்தையும் கொண்டே அவருடைய அறிவியல் வளர்ச்சியின் துவக்க கட்டத்தையும் இக்கடிதம் காட்டுகிறது.

பெர்லின் 10, நவம்பர் 1837

பேரன்புமிக்க தந்தையே!

வாழ்க்கையில், எல்லைக் கோடுகளைப் போல, கடந்த காலத்துக்கு வேலி கட்டி, பின்னர் ஒரு புதுத் திக்கைத் திட்ட மாகச் சுட்டிக் காட்டும் சில விஷயங்கள் இருக்கின்றன. இப்படிப்

பட்ட இடைநிலைக் காலத்தில் உள்ளத்தின் கழுகுக் கண்களைக் கொண்டு கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று நாம் தூண்டப்படுகிறோம்; இதன் மூலமாக நம்முடைய உண்மையான நிலைபற்றி நாம் உணர்ந்து கொள்ளமுடியும். உலக சரித்திரம்கூட இப்படியொரு தன்னை வையும், முன் நிகழ்ச்சிகள் பற்றிய சிந்தனையையும் விரும்பு கிறது; உலகம் இந்நிலையிலிருக்கும்போது அது அசையாமல் நிற்கிறது, அல்லது பின் நோக்கிச் செல்கிறது என்ற எண்ணத்தைக் கொடுக்கிறது—அப்படியல்ல, அது சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு தன்னையும், தன்னுடைய நடவடிக்கைகளுக்கு அறிவார்ந்த விளக்கங்களையும் பெறவே முயல்கிறது.

ஆனால் இக்காலங்களில் தனி மனிதனை காவியமே பொழிந்து விடுகிறான். ஏனென்றால் ஒவ்வோர் உருமாற்றமும், ஒளிவார்ந்த, ஆனால் தெளிவில்லா வண்ணங்களைப் பற்றி இசையெழுப்பும் ஒரு பெருங்கவிதையின் தொடக்க அடியாகவோ, இறுதிப் பாடலாகவோ தானிருக்கும். இருப்பினும், நாம் நம்முடைய கடந்த கால அனுபவங்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப விரும்பு கிறோம்; நம் செயல்களிலே அவ்வனுப்பவங்களை மீண்டும் படிக்க முடியாத காரணத்தினால், நம் உணர்விலாவது அவை இடம்பெற வேண்டும்; இதற்குப் பெற்றோரின் உள்ளங்களை விடச் சிறந்த தொரு புகலிடம் வேறெங்கேயிருக்க முடியும்? தீர்ப்பளிப்போரில் மென்மையானவர்கள்; மனப்பூர்வமான இரக்கமுடையவர்கள்; தன் இளவெப்பத்தால் நம் முயற்சிகளின் கருவையெல்லாம் சூடேற்றும் அன்புக் கதிரவன் பெற்றோர்களல்லவா? நாம் செய்யும் மிக ஆட்சேபகரமான, வெறுக்கத்தக்க செயல்களுக்கெல்லாம் மன்னிப்பும், கழுவாயும் தேடுவதற்கு, அவை மிக அத்தியாவசியமான தேவைகளை முன்னிட்டுச் செய்யப்பட்டன என்று கூறிவிடுவதைவிடச் சிறந்த வழி வேறென்ன இருக்கிறது? மனம் செய்யும் தவறுகளையும், சந்தர்ப்பங்கள் இழைக்கும் பிரதிகூலங்களையும் தீய நெஞ்சங்கள் குறை கூறுவதிலிருந்து வேறெப்படித்தான் காத்துக் கொள்வது? ஆகவே நான் இங்கு கழித்த இந்த ஆண்டின் முடிவில் இதன் நிலைபற்றிச் சிந்தித்து—அதன் வாயிலாகத் தாங்கள் எம்மிலிருந்து எழுதிய கடிதத் துக்குப் பதிலும் எழுதினாற்போல — நினைவுகூறும்போது; வாழ்க்கை மீது பொதுவே ஒரு கண்ணோட்டம் போகிறது; அப்பொழுது அறிவுத்தேட்டம், கலை, சொந்த விவகாரங்கள் ஆகிய எல்லாத் துறைகளிலும் உள்ளத்தின் செயலாக்கம் உருவெடுத்து, பின்னர் அவை வெளிப்படுத்தப்படுவதையே வாழ்க்கையெனக் காண்கிறேன்.

நான் உங்களைவிட்டுப் பிரிந்தபோது, ஒரு புது உலகம் என் முன்னே எழுந்தது—அன்பின் உலகமது—துவக்கத்தில் ஒங்கித் தவித்த, பயனேதும் கிட்டாத அன்பின் உலகமது! இயற்கையை ஆய்வதற்குத் தூண்டுவதும், வாழ்க்கையில் பேரூக்கத்தைத் தருவதும் நான் எப்பொழுதும் உவகையோடு மேற்கொள்வது மான பெர்லின் பயணம்கூட உற்சாகத்தைக் கொடுக்க வில்லை. அது மட்டுமல்ல, இப்பயணம் எனக்குச் சோர்வையும், தளர்ச்சியையுமே தந்தன: ஏனென்றால் வழியில் நான் கண்ட பாறைகள், என் உள்ளுணர்ச்சிகளைவிட உறுத்தலானவையல்ல: பாதையிலேயிருந்த பெருநகரங்கள் என் இரத்த ஓட்டத்தை விடச் சுறுசுறுப்பாக இல்லை: வழியிலேயுள்ள தங்கும் விடுதி களின் பெயர்ப்பலகைகள், என் கற்பனை சுமந்து செல்லும் பெரும் சுமையைவிட அதிகமாக இல்லை—கடைசியாக லீலை என் னென்னியைப்போல அழகாக இல்லை! பெர்லின் வந்தடைந்ததும், என் பழைய தொடர்புகள் அனைத்தையும் முறித்துக் கொண்டேன்; மனமில்லாது சில சமயம் வெளியே போவேன்— எவரையேனும் பார்ப்பதற்காக—மற்றபடி விஞ்ஞானத்திலும், லீலையிலும் ஆழ்ந்து விடவே முயன்றேன்.

பேரன்பு மிக்க தந்தையே! என்னுடைய சட்டத்துறை வாழ்க்கை சம்பந்தமாக அண்மையில் ஷ்மித்தென்னர் என்னும் அஸ்ஸெஸருடன் பழக்கமானேன். என்னுடைய மூன்றாவது சட்டத் தேர்வுக்குப் பின் நான் இதை மேற்கொள்ளலாமென்று அவர் ஆலோசனை கூறினர். மற்றெல்லா நிர்வாகப் பயிற்சி களையும் விட, நான் சட்டத்தையே விரும்புவதால், இதுதான் எனக்குப் பொருத்தமாகயிருக்கும் என அவர் கூறினர். லெஸ்ட்: பேலியாவிலிருக்கும் மியுன்ஸ்டரிலுள்ள நீதி மன்றத்தில் அவரும், வேறு பலரும் தங்கள் வாழ்க்கையைத் துவங்கி மூன்றாண்டுகளில் அஸ்ஸெஸர் பதவியை அடைந்து விட்டதாகவும் அவர் கூறினர். கடுமையாக உழைத்தால் இது அவ்வளவு ஒன்றும் சிரமமில்லை; ஏனென்றால் பெர்லின், மற்ற இடங்களைப்போல மேற்பதவி வாய்ப்புக்களை இங்கு கடினமாக்கவில்லை. பின்னர் ஒருவர் அஸ் ஸெஸராகவே பட்டம் பெற்றால், அவர் உடனடியாகப் பல்கலைக் கழக விரிவுரையாளராகப் பணியாற்றத் துவங்குவதற்கு நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. இப்படித்தான், ஹெகலிய சட்ட முறையின் ஆதரவாளராக மட்டும் அறியப்பட்டு வந்த, ஹெர் கெர்ட்னர் பான் என்பார் மாநில சட்ட நூற்கள் பற்றி இரண்டாம் தரமான ஒரு புத்தகம் எழுதிப் பதவி பெற்றிருக் கிறார். இருப்பினும், அன்புத் தந்தையே இவையனைத்தையும் பற்றி நான் உங்களுடன் நேராகப் பேசிக் கொள்ளமுடியாதா? எட்வார்டின் நிலையும் தாயாரின் பிணியும், உங்களுடைய கலக்

குறைவும்—இது அவ்வளவு கடுமையாகயில்லை என நம்புகிறேன்—இவை அனைத்தும் சேர்ந்து வீட்டுக்கு விரைந்துவர என்னைத் தூண்டுகின்றன. நீங்கள் இதற்கு அனுமதிக்கமாட்டீர்கள் என்றில்லாவிட்டால் நான் எப்பொழுதோ அங்கு வந்திருப்பேன்.

பேரன்புமிக்க தந்தையே! ஒன்றை மட்டும் நீங்கள் உறுதியாக நம்புங்கள்; யென்னியை மீண்டும் பார்ப்பதில் எனக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படும் என்றாலும், சுயநலக் காரணங்களினால் நான் அங்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை; நான் இங்கு இப்பொழுது வெளியிடக்கூடாத ஓர் எண்ணம் என்னை விரட்டிக் கொண்டிருக்கிறது. சில அம்சங்களை நோக்கினால் நான் இப் பொழுது அங்கே வருவது சிரமமானதாகக் கூட இருக்கும். ஆனால் என் இனிமை மிக்க யென்னி எழுதுவதைப்போல், நான் நிறைவேற்ற வேண்டிய புனிதமான கடமைகளுக்கு முன்னால் இந்த சிரமங்களுக்கெல்லாம் மதிப்பேயில்லை.

பேரன்புமிக்க தந்தையே! எப்படி நீங்கள் முடிவு கட்டினாலும். என் தெய்வத்தாயிடம் மட்டும் இக்கடிதத்தையோ, குறைந்தது இந்தத் தாளையோ நீங்கள் காண்பிக்காதிருக்குமாறு உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நான் திடுமென்று அங்கு வந்து நிற்பது என் அன்னைப் பெருந்தகைக்கு ஆறுதலாக இருக்கும்.

யென்னியின் சில வரிகள் எனக்கு வந்து சேருவதற்குப் பல நாட்களுக்கு முன்னரே நான் அன்புத் தாயாருக்குக் கடிதம் எழுதி விட்டேன். எனவே தெரியாமலேயே தெரிந்து கொள்ள வேண்டாதவற்றைப் பற்றி அதிகம் எழுதியிருக்கலாம்.

நம் குடும்பத்தைச் சூழ்ந்திருக்கும் கருமேகங்கள் வெகு விரைவில் சிதறியோடும் என்று நம்புகிறேன். உங்களுடைய துயரைச் சேர்ந்து அனுபவிக்கவும், உங்களுடன் வெம்பியழவும், உங்களுடன் எனக்கிருக்கும் உள்ளார்ந்த பரிவைப் புலப் படுத்தவும் எனக்கு உரிமைப்பேறு உண்டு எனப் பெருமிதங் கொள்கிறேன். ஆழங்காண முடியாத என் அன்பை நான் பெரும் பொழுது தக்கவாறு வெளியிட முடியாமல் தவிக்கின்றேன். இங்கு மங்குமாக ஊசலாடும் என் உள்ளத்தை, போராட்ட உணர்வால் பலமுறை தவறிழைக்கும் என் நெஞ்சத்தை மன்னித்தருளுமாறு, அன்புமிக்க தந்தையே, உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் வெகு விரைவில் உடல்நலம் பெற்று, உங்களை நான் நெஞ்சணைத்துக் கொண்டு, என் உள்ளத்திலுள்ள அனைத்தையும் உங்களிடம் சொல்ல வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்.

என்றும் மாறு அன்புடைய உங்கள் மகன்,

கார்ல்

தெளிவில்லாத என் கையெழுத்தையும், மோசமான நடையையும் மன்னிக்குமாறு, பேரன் புமிக்க தந்தையே உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். இப்பொழுது ஏழத்தாழ நான்கு மணியாகி விட்டது; மெழுகுவத்தி முற்றிலும் எரிந்து தீர்ந்து போய் விட்டது; என் கண்களும் மங்கலாகயிருக்கின்றன. அமைதியின்மை என்னைப்பற்றிப் பிடித்துக் கொண்டது. என்னுடைய அன்புக்குரிய உங்களனைவருக்கும் அருகே வந்து சேரும்வரை பரபரக்கும் என் உள்ளத்தில் அமைதியைக் காணமுடியாது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை

'லண்டன் நியாயஸ்தர்கள் சங்கம்' [பின்னர் இது கம்யூனிஸ்ட் லீகாயிற்று], 1847ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் திட்டம் பற்றி ஓர் அறிக்கை தயாரிக்குமாறு மார்க்ஸையும், எங்கெல்ஸையும் பணித்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த அறிக்கை, ஓர் அரசியல் துண்டு வெளியீடாக 1848ஆம் ஆண்டில் பல மொழிகளில் வெளியிடப்பட்டது. எனினும் 1848ஆம் ஆண்டு புரட்சியை இது எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. சர்வதேசப் புரட்சியின் திட்டத்தைப் பற்றியும், வரலாற்றுப் பரிணமித்தின் அடிப்படை அம்சங்களைப் பற்றியும் [பின்னர் இது மார்க்ஸீயமாயிற்று] ஆழிய முறையில் இந்த அறிக்கை விளக்குகிறது. ஜெர்மனியின் இலட்சியவாத காலத்தில் நிலவியிருந்த ஹெகலின் தத்துவத்திலிருந்து மார்க்ஸ் துவங்கினர். ஆனால் ஹெகலின் "இலட்சிய தூண்டுதல்" என்னும் தத்துவத்தை மார்க்ஸ் விட்டுவிட்டார்; அதிலும் குறிப்பாக உலக வரலாற்றுக்குப் பொருள் விளக்கும்போது. உலக வரலாற்றை வெறும் உலகாயதக் கருத்தாகவே மார்க்ஸ் சுருக்கிவிட்டார். வரலாற்றின் வளர்ச்சி குறித்துத் தாம் விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்திருப்பதாகக் கூறும் மார்க்ஸ், இதனால் தாம் வருங்கால வளர்ச்சிகள் பற்றியும் முன்கூட்டியே சொல்லமுடியும் என வாதிட்டார். மனித வாழ்வின், சிந்தனையின் அடிப்படையும், வரலாற்றின் ஆக்கம் செறிந்த சக்தியும் பொருளாதார நிலைகள் தாம் என்று மார்க்ஸீயம் எண்ணுகிறது. "வரலாறே வர்க்கப் போராட்டத்தின் சரித்திரம் தான். தற்காலத்தில் தொழில் மயமாக்கப்பட்ட பொருளாரத்தைக் கொண்ட பூர்ஷுவா முதலாளித்துவ சமுதாயத்தில், இப்போராட்டம் உச்ச கட்டத்துக்கு வந்து விட்டதென்று மார்க்ஸ் கருதுகிறார். தொழிலாளி தனக்காக நேரடியாக உழைக்கவில்லை; மாறாக, உற்பத்தி சாதனங்களைத் தன்னுடைமையாக வைத்திருக்கும் பூர்ஷுவா உற்பத்தியாளனுக்குத் தன் உழைப்பைக் கூலிக்கு விற்கின்றான்; தொழிலாளி தான் பயன்படுத்துவதை விட மிக அதிகமாக உற்பத்தி செய்கின்றான்; இதனால் "உபரிப் பொருளுற்பத்தி"க்கு பாதை அமைக்கப்

படுகிறது. இதை முதலாளி தன்னுடைய இலாபமென்று சுவாதீனப் படுத்திக் கொள்கிறான். இப்படியாக மூலதனம் ஒரு முனையில் குவிந்து, செல்வர் ஒரு சிலரிடையே திரண்டு சேர்கிறது; இதே நேரத்தில் கூலிக்கு உழைப்போர் சுரண்டப்பட்டு, துயர் மிக்க வாழ்க்கை நடத்த வேண்டியதாகிறது. பாட்டாளி மக்கள் எனப்படும் இவர்களின் தொகை பெருகிக்கொண்டே போகிறது. இதிலுண்டாகும் நெருக்கடி பொறுக்க முடியாததாகி, பாட்டாளி களின் புரட்சிக்கு வழிகோலுகிறது. உற்பத்தி சாதனங்களைப் பொது உடைமையாக்கி, சுரண்டுவோருக்கும், சுரண்டப்படுவோருக்கு மிடையே யுள்ள வகுப்பு வேற்றுமையை அறவே ஒழித்து, சோஷலிச வடிவுடைய சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும். இது எல்லா எதிர்ப்புகளையும் வென்று, உலகளாவப் பரவிப் பின்னர் மிகவும் விரும்பத்தக்க, நிரந்தரமான, இறுதியான கம்யூனிச நிலையை எய்தும்; இந்த நிலையில் அமைதியும், நீதியும் நிலவும்.

மார்க்ஸ் தன் தத்துவத்தால் உலக நிலைக்கு விளக்கம் கூறுவது தோடு மட்டுமல்லாது, அதை மாற்றியமைக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தார். இந்த மாற்றம் நிகழ்ந்து விட்டது; இது ஒரு தலைப் பட்சமாக இருந்தாலும், வருங்கால நிலைகளைப் பற்றிச் சொன்ன வற்றில் பிழைகள் இருந்தாலும், மார்க்ஸியத்தில் பல உண்மைகளும், அளவைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை நவீன உலகத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளை ஆய்ந்துணர்வதற்குத் துணை செய்யும்.

ஐரோப்பாவை ஒரு பூதம் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது —கம்யூனிசம் என்ற பூதம். பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத்தும், போப்பாண்டவரும் ஜார் மன்னனும், மெட்டர்னிஷும் கியூஸோவும், பிரெஞ்சுத் தீவிரவாதிகளும் ஜெர்மானியப் போலீஸ் ஒற்றர்களும், இந்தப் பூதத்தை விரட்டுவதற்காக ஒரு புனித ஒப்பந்தத்தையும் செய்து கொண்டிருக்கின்றனர்.

அதிகாரத்திலுள்ள எதிரிகளால் கம்யூனிஸ்ட் என்று பெயர் சூட்டப்படாத எதிர்க்கட்சி எங்காவது இருக்கிறதா? தன்னைவிட முற்போக்கான எதிர்க்கட்சிகளையும், தன்னுடைய பிற்போக்கான விரோதிகளையும் கம்யூனிஸ்ட் என்று ஏட்டிக்குப் போட்டியாகப் பட்டம் சூட்டி இகழாத எதிர்க்கட்சி எங்காவது இருக்கிறதா?

இந்த உண்மையிலிருந்து இரு விளைவுகள் ஏற்படுகின்றன.

I. கம்யூனிஸம் ஒரு தனிப்பெரும் சக்தி என்பதை ஐரோப்பிய சக்திகள் அனைத்தும் ஏற்கெனவே அங்கீகரித்து விட்டன.

II. தம் அபிப்பிராயங்களையும், தம் இலட்சியங்களையும், தம் போக்குகளையும் கம்யூனிஸ்ட்கள் பகிரங்கமாக உலகறியப்

பிரசுரிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. கட்சிக்கே உரிய அறிக்கை ஒன்றைக் கொண்டு, கம்யூனிஸ்ட் பூதம் பற்றிய சிறு பிள்ளைக் கதைக்கு மறுப்புக் கூற வேண்டிய காலம் வந்துவிட்டது.

இந்த நோக்கத்துடன் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் லண்டனில் கூடி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், பிளெமிஷ், டேனிஷ் மொழிகளில் வெளியிடுவதற்காகப் பின்வரும் அறிக்கையைத் தயாரித்தனர்.

இதுவரை இருந்து வந்திருக்கிற சமுதாயத்தின் சரித்திரம் எல்லாம் வர்க்கப் போராட்டத்தின் சரித்திரமே.

சுதந்திரப் பிரஜையும் அடிமையும், பாட்ரிஷியன் என்ற மேல்குடி மகனும், பிளெபியன் என்ற கீழ்க்குடி மகனும், பிரபுவும் பண்ணையடிமையும் கில்டு மாஸ்டரும் ஜேர்னிமனும், சுருங்கச் சொன்னால், ஒடுக்குபவனும், ஒடுக்கப்படுபவனும் என்றென்றும் எதிரெதிரே நின்று கொண்டு, சில சமயங்களில் மறைவாகவும், சில சமயங்களில் பகிரங்கமாகவும் இடையறாத போர் நடத்தி வந்தனர். ஒவ்வொரு தடவையும் அந்தப் போர் சமுதாயம் முழுவதையும் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதிலோ அல்லது போரிடும் வர்க்கங்களின் பொதுவான அழிவிலோ போய் முடிந்திருக்கின்றது.....

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் அழிவுக் குவியலிலிருந்து முளைத்தெழுந்துள்ள நவீன பூர்ஷுவா சமுதாயம் வர்க்க விரோதங்களை ஒழித்துவிடவில்லை. பழையவற்றிற்குப் பதிலாக புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட உருவமைகளையுமே அது அமைத்துள்ளது.

என்றபோதிலும் நம் சகாப்தமாகிய பூர்ஷுவா வர்க்கச் சகாப்தத்திற்கு இந்தத் தனிச் சிறப்புண்டு: அதாவது, வர்க்க விரோதங்களை அது எளிதாக்கி விட்டிருக்கிறது. சமுதாயம் முழுவதும் மேலும் மேலும் இரண்டு எதிரெதிரான மாபெரும் முகாம்களாக, எதிரெதிரே நிற்கும் இரண்டு பெரிய வர்க்கங்களாக—பூர்ஷுவா வர்க்கம் பாட்டாளி வர்க்கம் என்று—பிரிந்து வருகிறது.....

தற்கால அரசின் நிர்வாகம், பூர்ஷுவா வர்க்கம் முழுமையின் பொது விவகாரங்களை நிர்வகிப்பதற்கான கமிட்டியைத் தவிர வேறு ஒன்றுமல்ல.

சரித்திர ரீதியாகப் பார்க்கும்பொழுது, பூர்ஷுவா வர்க்கம் ஒரு மிகப் புரட்சிகரமான பாத்திரத்தை வகித்துச் செயலாற்றியிருக்கிறது.

எங்கெல்லாம் பூர்ஷுவா வர்க்கத்தின் கை ஓங்கிற்றோ, அங்கெல்லாம் அது சகல நிலப்பிரபுத்துவ உறவுகளுக்கும், தந்தை வழி உறவுகளுக்கும், சம்பிரதாய உறவுகளுக்கும் முடிவு கட்டியது. தன்னோவிட, 'இயற்கையிலே மேம்பட்டவர்' என்போரிடம் மனிதன் கட்டுண்டு கிடக்கும்படி செய்த பல்வகை நிலப்பிரபுத்துவத் தளைகளை அது தயவு, தாட்சண்யமில்லாமல் அறுத்தெறிந்தது. அம்மணமான சுயநலத்தைத் தவிர, உணர்ச்சி யற்ற "ரொக்கப் பட்டுவாடா"வைத் தவிர மனிதனுக்கும் மனித னுக்குமிடையே வேறு எந்த உறவுமில்லாமல் அது செய்துவிட்டது. சமய உணர்ச்சி வேகம், வீராவேசம், பிலிஸ்டைன்களின் உள நெகிழ்ச்சி ஆகியவற்றால் ஏற்படும் மிகத் தெய்வீகமான ஆனந்தப் பரவச உணர்ச்சிகளைத் தன்னலமயமான கணக்கீடு என்னும் உறைபனி நீரில் அது மூழ்கடித்து விட்டது. அது மனிதனின் மேன்மையைப் பரிவர்த்தனை மதிப்பாகப் பாகுபடுத்தி விட்டது. எண்ணிலடங்காத வையாக இருந்த, அகற்ற முடியாத, சாசனப் படுத்தப்பட்ட சுதந்திரங்களுக்குப் பதிலாக, வர்த்தக சுதந்திரம் என்ற பிறரைப்பற்றி அக்கறை கொள்ளாத ஒரே சுதந்திரத்தை பூர்ஷுவா வம்சம் ஏற்படுத்தி விட்டது. ஒரே வாக்கியத்தில் சொல்வதென்றால், மதம் சம்பந்தமான பிரமைகளாலும் திரை யிட்டு மறைக்கப்பட்டிருந்த சுரண்டலுக்குப் பதிலாக பூர்ஷுவா வர்க்கம், அம்மணமான, வெட்கமில்லாத, நேரடியான, முரட்டுத் தனமான சுரண்டலை ஏற்படுத்தி விட்டது.

அதுவரை நன்மதிப்புக்கும் பயபக்திக்கும் பாத்திரமாக இருந்த எல்லா அலுவல்களிலிருந்தும் மகிமையை பூர்ஷுவா வர்க்கம் அகற்றிவிட்டது. அது மருத்துவரையும், வக்கீலையும், மதகுருவையும், கவிஞனையும், விஞ்ஞானியையும் தன்னிடம் கூலி பெறும் உழைப்பாளிகளாகச் செய்து விட்டது.....

உலக மார்க்கெட்டைச் சுரண்டுவதன் மூலம், பூர்ஷுவா வர்க்கம், ஒவ்வொரு நாட்டின் பொருளுற்பத்திக்கும் பொருள் உபயோகத்திற்கும் ஒரு பொதுவான உலகத்தன்மையை அளித் திருக்கிறது.....

பூர்ஷுவா உற்பத்தி முறையை ஏற்றுத் தழுவாவிட்டால், அழிவே ஏற்படும் என்ற நிர்ப்பந்தத்தின் மூலம், சகல நாடுகளும் அம்முறையைக் கடைப்பிடிக்கும்படி அது செய்கிறது, தான் நாகரிகம் என்று குறிப்பிடுவதைச் சகல நாடுகளும் ஏற்றுத் தழுவ வேண்டுமென்று பூர்ஷுவா வர்க்கம் நிர்ப்பந்திக்கிறது; அதாவது அவையும் பூர்ஷுவாக்களாக வேண்டுமென்று அது கட்டாயப்படுத்துகிறது. ஒரே வாக்கில் சொல்லப் போனால், தன் பிரதி பிம்பத்தைப் போன்ற ஓர் உலகத்தை அது படைக்கிறது.

ஒரு நூற்றாண்டுகூட ஆகாத காலத்துக்குள், பூர்ஷுவா வர்க்கம், முந்திய தலைமுறைகள் அனைத்தும் படைத்ததைக் காட்டிலும் பிரமாதமான, பிரம்மாண்டமான உற்பத்திச் சக்திகளைப் படைத்திருக்கிறது. இயற்கையின் சக்திகளை மனிதனுக்கு அடிப்படுத்துவது, இயந்திரச் சாதனங்கள், தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இரசாயனத்தைப் பயன்படுத்தல், நீராவிக் கப்பல் போக்குவரத்து, ரயில் பாதைகள், மின்சாரத் தந்திகள், முழுமுழுக் கண்டங்களைச் சீர்படுத்திச் சாகுபடிக்குத் தகுதியாக்கல். கால்வாய்களை வெட்டி ஆறுகளுக்குப் பயன்படுத்துதல், மனித வாடை வீசா இடங்களில் பெரும் மக்கள் தொகைகளை மந்திர வித்தை மாதிரித் தோற்றுவித்தல்—சமுதாய உழைப்பின் மடியில் இத்தகைய உற்பத்திச் சக்திகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன வென்று இதற்குமுன் எந்த நூற்றாண்டாவது கற்பனைகூடச் செய்ததுண்டா?.....

எந்த ஆயுதங்களைக் கொண்டு பூர்ஷுவா வர்க்கம் நிலப் பிரபுத்துவத்தை வெட்டி வீழ்த்தியதோ, அதே ஆயுதங்கள் இப்பொழுது பூர்ஷுவா வர்க்கத்திற்கே எதிராகத் திருப்பப் படுகின்றன.

பூர்ஷுவா வர்க்கம் தனக்கே அழிவைத்தேடும் ஆயுதங்களை வார்த்தெடுத்திருப்பது மட்டுமல்ல: அந்த ஆயுதங்களை உபயோகிக்கவிருக்கும் மனிதர்களையும் — நவீனத் தொழிலாளி வர்க்கத்தையும், அதாவது பாட்டாளிகளையும் படைத்திருக்கிறது.

பூர்ஷுவா வர்க்கம், அதாவது மூலதனம் எந்த அளவுக்கு நவீனத் தொழிலாளி வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கமும் வளர்கிறது. இந்த வர்க்கத்தைச் சேர்ந்த உழைப்பாளிகள், வேலை கிடைக்கும் வரைதான் வாழமுடியும்; அவர்களுடைய உழைப்பு மூலதனத்தைப் பெருக்கும் வரையில்தான் அவர்கள் வேலை பெற முடியும்.....

பரந்த அளவில் இயந்திரங்கள் பயன்படுவது காரணமாகவும் உழைப்புப் பிரிவினை காரணமாகவும் பாட்டாளிகளின் வேலை, தன் தனித்தன்மை முழுவதையும் இழந்து விட்டது; எனவே அந்த வேலையில் தொழிலாளிக்கிருந்த கவர்ச்சி முழுமையும் இல்லாதொழிந்து விட்டது. அவன் இயந்திரத்தோடு தொடுக்கப்பட்ட பகுதியாகி விடுகிறான். அவனுடைய வேலையைச் செய்வதற்கு, அவனிடம் தேவைப்படும் சாமர்த்தியம், மிகவும் சாதாரணமானது; மிகவும் சுலபமாகப் பெறக் கூடியது.....

பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பல்வேறு கட்டங்களைக் கொண்டதாயிருக்கிறது. அது பிறந்தவுடன். பூர்ஷுவா வர்க்கத்துடன் அதற்குள்ள போராட்டம் ஆரம்பிக்கிறது. தங்களை நேரடி

யாகச் சுரண்டும் தனிப்பட்ட பூர்ஷுவாக்களை எதிர்த்து, இந்தப் போராட்டத்தை, முதலில் தனித்தனித் தொழிலாளர்களும், பிறகு ஒரு தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தும், அதன் பிறகு ஒரே வட்டாரத்தில் ஒரே தொழிலில் உள்ள தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தும் நடத்துகிறார்கள்.....

சில சமயங்களில் தொழிலாளர்கள் வெற்றியடைகிறார்கள்; அதுவும் தாற்காலிகமான வெற்றியே. அவர்களுடைய போராட்டங்களின் உண்மையான பலன் உடனடியான விளைவில் அடங்கியிருக்கவில்லை; தொழிலாளரின் ஒற்றுமை இடைவிடாமல் விரிவடைந்து கொண்டிருப்பதிலே அடங்கியிருக்கிறது. நவீனத் தொழில் படைத்திருக்கும் முன்னேற்றமடைந்துள்ள போக்குவரத்துச் சாதனங்கள், இதே ஒற்றுமை உருப்பெறுவதற்கு உதவுகின்றன. அந்தப் போக்குவரத்துச் சாதனங்கள் பல்வேறு இடங்களிலுள்ள தொழிலாளர்கள் பரஸ்பரத் தொடர்பு கொள்ளச் செய்கின்றன. ஒரே தன்மையைக் கொண்டு நிகழ்ந்த பலப்பல ஸ்தலப் போராட்டங்களை, வர்க்கங்களுக்கிடையே நடைபெறும் ஒரே தேசியப் போராட்டமாக ஒருமைப்படுத்துவதற்கு இந்தத் தொடர்புதான் தேவையாயிருந்தது.....

பழைய சமூகத்தின் அடித்தட்டுகளால் விசிறி எறியப்பட்டு, செயலற்ற வகையில் அழுகிக் கொண்டிருக்கும் சமூகக் கழிவு—"அபாயகரமான வர்க்கம்" இங்கும் அங்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் இயக்கத்துக்குள் இழுக்கப்படலாம்; எனினும், அதனுடைய வாழ்க்கை நிலைமைகள், பிற்போக்கான சூழ்ச்சியின் கருவியாகவே, இலஞ்சம் வாங்கிச் செயல்படும் கருவியாகவே, அதை இன்னும் அதிகமாகப் பக்குவப்படுத்துகின்றன.

ஏற்கெனவே பாட்டாளி வர்க்க வாழ்க்கை நிலைமைகளில், பழைய சமூகம் முழுவதின் வாழ்க்கை நிலைமைகள் புதைக்கப்பட்டு விட்டன. பாட்டாளிக்குச் சொத்து கிடையாது; மனைவியிடமும் குழந்தைகளிடமும் அவனுக்குள்ள உறவுக்கும் பூர்ஷுவா குடும்ப உறவுகளுக்கும் பொதுவான அம்சம் இப்பொழுது எதுவுமில்லை. நவீனத் தொழிலுக்குரிய உழைப்பும், பிரான்ஸிலிருப்பதைப் போலவே இங்கிலாந்திலும், ஜெர்மனியிலிருப்பதைப் போலவே அமெரிக்காவிலும் மூலதனத்துக்குக் கீழ்ப்படும் நவீனகலை அடிமைத்தனமும் பாட்டாளியிடமிருந்து அவனுடைய தேசியப் பண்பின் கடைசிச் சாயலையைக் கூட உரித்து எடுத்து விட்டன. அந்தப் பாட்டாளிக்குச் சட்டம், ஒழுக்கம், மதம் ஆகியவை அத்தனையும் பூர்ஷுவாக்களுடைய மனக் கோட்டங்களாகவே காட்சியளிக்கின்றன. அவற்றுக்குப் பின்னால் அத்தனை பூர்ஷுவா நலன்களும் பதிபோட்டுக் கொண்டிருக்கின்றன.....

வர்க்கங்கள், வர்க்கப் பழைமைகள் ஆகியவற்றைக் கொண்ட பழைய பூர்ஷுவா சமுதாயத்துக்குப் பதிலாக நாம் ஓர் அமைப்பைத் தோற்றுவிப்போம்; அதில் அனைவருடைய சுதந்திர வளர்ச்சியும், ஒவ்வொருவருடைய சுதந்திர வளர்ச்சியின் அடிப் படையிலிருக்கும்.

தம் கருத்துக்களையும், இலட்சியங்களையும் மறைத்து வைப்பதைக் கம்யூனிஸ்டுகள் இழிவாகக் கருதுகிறார்கள். இன்றைய சமுதாய நிலைமைகள் அனைத்தையும் பலவந்தமாக வீழ்த்தினால்தான் தம் இலட்சியங்களை அடைய முடியுமென்று அவர்கள் பகிரங்கமாகப் பிரகடனஞ் செய்கிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சியை நினைத்து ஆளும் வர்க்கங்கள் நடுங்கட்டும்! பாட்டாளி களுக்குத் தம் அடிமைத் தளைகளைத் தவிர இழப்பதற்கு வேறென்றுமில்லை. அவர்கள் வெல்வதற்கு ஓர் உலகம் இருக் கிறது.

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

ஹெர்மன் ஷுல்ஸெ—தெலிட்ஷ்

சமுதாய உரிமைகளும், கடமைகளும்.

ஹெர்மன் ஷுல்ஸெ—தெலிட்ஷ் (1808—1883) தம் எழுத்தால் மத்திய தர வணிக வகுப்பினரின் சமுதாய நிலைகளை உயர்த்துவதில் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். 1850ஆம் ஆண்டில், அவர் முதற்கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தை நிறுவினார்; அனைத்துக் கூட்டுறவு இயக்கத்தினுள்ளும், இச்சங்கம் இன்னும் சிறப்புப் பணி யாற்றுகிறது. 1859ஆம் ஆண்டில், அவர் கூட்டுறவு சங்கங்களை யும், "ஜெர்மன் பெருவணிக வியாபாரக் கூட்டுறவு சங்கங்களின் பொது அமைப்பு" என்ற பெயரில் ஒருங்கிணைத்தார். இதன் அடிப் படை என்னவென்றால் ஓர் ஒழுங்கமைவுள்ள சமுதாயத்தில் ஒரு வருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்து கொள்வது எளிதா யிருக்கும் என்பதுதான். அரசின் துணை எதுவுமில்லாது, நடத்தப் படும் கைத்தொழில் கூட்டுறவு சங்கங்கள் குறித்து அவர் முன்னரே சிந்தித்திருந்தார்; இவற்றில் இலாபங்கள் அனைத்தையும் உறுப் பினர்களே பகிர்ந்து கொள்வர். ஆனால், அவர் மார்க்ஸீயக் கருத்துக் களால் ஆட்கொள்ளப் படவில்லை; 1866ஆம் ஆண்டில் அவர் நிகழ்த்திய "சமுதாய உரிமைகளும், கடமைகளும்," என்ற சொற் பொழிவிலிருந்து இது தெளிவாகிறது. அவருடைய தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து, நாடு சமுதாயம் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து இயங்கவேண்டும் என்னும் அவர் நோக்குப் புலனாகின்றது.

பெர்லினில் சொற்பொழிவு—1866

மேலெழுந்த வாரியாகக் காணப்படுவது போலல்லாமல், அரசியல் பிரச்னைகளை விட, சமுதாயப் பிரச்னைகள் தாம் இன்றையப் பூசல்களையும், பிணக்குகளையும், தோற்றுவிக் கின்றன. அரசியல் — தேசிய வளர்ச்சிக்கான போராட்டங் களில் தேசிய சமுதாயங்கள் பெருமளவில் ஈடுபட்டிருக்கலாம்; இருப்பினும் தேசிய நடவடிக்கைகளின் துவக்கமும்—இலக்கும் மனித அம்சமும் தான்—அதாவது மனிதன் வாழ்வதற்குரிய உரிமை பெறுவதற்குத்தான் என்னும் உண்மை அதிகமதிக உணர்வுடன் மேலெழுகிறது; அரசியல் நிறுவனங்கள் அனைத்தும் இதற்கு ஒரு கருவியாகவே பயன் படுகின்றன. எனவே நம்முடைய இந்த சகாப்தத்தின் முயற்சியும், உழைப்பும் அரசுதான் செய்ய வேண்டுமென்ற படியில் நின்று விடாது; அந்த அரசின் நிரந்தர உட்பொருளான மனித சமுதாயத்துக்காகவே இந்த முயற்சியும்,

உழைப்பும் மேற்கொள்ளப்படுகின்றன; இயற்கை வகுத்த வழியும், மனித வாழ்வின் அடிப்படையும் இதுதான். அரசின் கட்டாயக் கட்டளைகள் ஒருபுறமிருக்க, சமுதாயத்திலுள்ள நம் நிலையிலிருந்து எழுப்பும் உரிமைகளும், கடமைகளும்தாம் நம் கவனத்துக்குரியவை. இந்த உரிமைகளுடனும் சம்பந்தப்பட்டவைதான் இக்காலத்தின் மிக முக்கியமான பணிகளும், பிரச்னைகளுமாகும்; இவையே நம்முடைய தலைமுறையினரின் உலகாயத நிலைகளையும் ஆத்மீக நிலைகளையும் சமமாக, ஆழமாகப் பாதிக்கின்றன. அதிலும் குறிப்பாக, பெரும்பான்மையினரான நம் மக்கள் எந்த சமுதாயக் கேடுகளின் பாதிப்பால் பெரிதும் துயரப்படுகிறார்களோ, அவை நம் கவனத்தை வலிந்து ஈர்க்கின்றன. இத்தகைய சமுதாயக் கேடுகளின் உணர்வு பாமர மக்களை மேலும் மேலும் விழித்தெழச் செய்யும்போது, வாழ்க்கை வசதிகளைப் பெற்றிருக்கும் வகுப்பினர் தம் முழு ஆற்றலும், வலிமையும் கொண்டு இக்கேடுகளைப் போக்கி, முன்னேற்றம் காணப் பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றனர்.

மேற்குறித்த, சமுதாய உரிமைகளையும் கடமைகளையும் பற்றி ஆராய்வதற்காக, மனித சமுதாயத்தின் இயல்புத் தன்மை, செயல் நோக்கம் ஆகியவற்றின் மீது பார்வையைச் செலுத்த வேண்டும். மனித சமுதாயம் என்பது எதைக் குறிக்கிறது? இந்த சமுதாயம் தன்னகத்தே கொண்டுள்ள மனிதர்களின் இயல்பென்ன, எதிர்காலம் என்ன என்பதில் நம் கவனம் செல்ல வேண்டும். தனி மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் உள்ள இயல்பான உறவு என்ன என்று நிர்ணயித்தால் இப்பொழுதுள்ள தீய நிலைகளை ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்குரிய வழிவகைகளையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

மனிதனும் சமுதாயமும்

முதன் முதலில் மனிதன் தனித்தன்மை உடையவன் என்ற நிலையில் தன்னுடனேயே எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அனைத்துலகும் அறிந்துள்ள பல அடிப்படைகளிலிருந்து மேலும் பல முடிவுகளைக் காண வேண்டும். பொதுவாக உயிரினங்கள் அனைத்தையுமோ, அல்லது இவனை மட்டும் குறிப்பாகவோ பாதிக்கக் கூடிய மாற்ற முடியா சில இயற்கை விதிகளுக்கு, உயிரியக்கமுள்ளவன் என்ற நிலையில் மனிதன் கட்டுப்பட்டிருக்கின்றான். உலகில் தொடர்ந்து நடைபெறும் சில முக்கிய விளைகளுடன் அவனுடைய வாழ்வு பிணைக்கப்பட்டிருக்கிறது; இந்த விளைகளில் பல விலங்கினங்களுக்கும் பொதுவானவை. அப்படியானால் உலகிலுள்ள மற்றெல்லா உயிரினங்களிலிருந்து மனிதனை வேறு பிரித்துக் காட்டுவது யாது? மனிதனுக்கு ஒரு தனித்தன்மை

யிருக்கிறது–அதாவது அவனுக்குத் தன்னுணர்வும், எதைப் பற்றியும் சுயமாகச் சிந்தித்து முடிவு கட்டும் ஆற்றலும் இருக்கின்றன. இப்பண்புகளினால் அவனுடைய வாழ்வை நிர்ணயிக்கும் அந்த இயற்கை விதிகளையும், விஞ்ஞானங்களையும் பொறுத்த வரையில், மற்றெல்லா உயிரினங்களையும் விட வேறுபட்ட ஒரு நிலையை எய்துகிறான். எனவே, இந்த விதிகளையும், விஞ்ஞானங்களையும் மாற்றத் திற்குட்படாதவை என்று அவன் கருதுகிறான். உலகிலே அவ்வப்போது மாறிக் கொண்டு வரும் நிகழ்ச்சிகளின் பின்னே இந்த நிலையான, நிரந்தரமான விதிகளும், விஞ்ஞானங்களும் இயங்கிக் கொண்டே யிருக்கின்றன. இவற்றையே அவன் தன் நடவடிக்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகளாக அமைத்துக் கொள்கிறான். ஆனால் விலங்கினங்களையும், தாவர இனங்களையும் பொறுத்த வரை இதே விதிகளும், விஞ்ஞானங்களும் நேரடியாகவும், பாதிக்கப்பட்ட இந்த இனங்கள் உணர்ந்து அறியாத நிலையிலும் நிறைவேற்றப் படுகின்றன. அதாவது, இந்த இனங்களுக்குப் புலனுணர்வோடு கூடிய அறிவாற்றலோ, விரும்பியோ வெறுத்தோ செயல்படும் ஆற்றலோ இருப்பதாக நாம் கூறமுடியாது. இயல்புணர்ச்சியின் தூண்டுதலால், விலங்கு தனக்குப் பொருத்தமானதைத் தேடிக் கொள்கிறது; தனக்குப் பகையானதைத் தவிர்த்துக் கொள்கிறது. ஆனால் மனிதன் தனக்குப் பொருத்தமானவை, எதிரானவை பற்றித் தேவையான அறிவைத் தேடி அடைகிறான்; செயல் முறைகளில் இந்த அறிவு, தனக்கு எந்த அளவுக்கு வழி காட்ட வேண்டுமென்பது அவனுடைய தீர்ப்பைப் பொறுத்தது. இதில்தான் அவனுடைய வலிமையையும் பலவீனத்தையும் பார்க்கிறோம். நிறைவேற்றிக் கொள்ளும் விலங்கினம் தப்பிழைக்க முடியாது, வழி தவறிப் போக முடியாது; ஆனால் மனிதன் இந்த இரு நிலைகளுக்கும் ஆளாக முடியும். அவன் எப்படி இயங்குகிறான், வெளி உலகோடு எத்தகைய உறவு வைத்திருக்கின்றான் என்பதைப் பொறுத்து அவன் செயல் முறைகள் நிர்ணயிக்கப் படுகின்றன; எனவே இதில் தவறுகள் நேர்வது சாத்தியமானதுதான். சரியான அறிவை அவன் பெற்றிருந்தாலும், சுயமாக எதையும் தேர்ந்தெடுக்கும் துணிவாற்றல் அவனுக்கு இருப்பதால் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்காமல், தன் செய்கைகளில் அவன் தவறிழைக்கலாம். இது இயல்புதான்; தப்புச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை யென்றால் அறிவாற்றலே தேட முடியாது; தவறிழைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லையென்று விட்டால் சுதந்திரம் இருக்க முடியாது. துவக்கத்திலிருந்தே பேருண்மைகளை நம் மீது திணித்து வைத்து விட்டால், பின்னர் பேருண்மைகளை நாமே முயன்று தேடிஞ்சும், அவற்றைக் கண்டோம் என்று நாம் சொல்லவே முடியாது; அதாவது நம்

முடைய உழைப்பாலும் நாம் உண்மையைக் காண வேண்டு மென்று சுயமாக விரும்பினாலும், நாம் பேருண்மைகளைக் கண்டோம் என்று கருதமுடியாது. ஏனென்றால் இதுதானே, "புலனுணர்வு உட்பட்ட முழு அறிவாற்றல் கூறு;" (Cognition) என்பது; மனிதனின் அறிவியக்க வாழ்க்கையின் அடிப்படைத் தூண்டுதல் என்று இதைத்தானே பெரிதும் மதிக்கிறோம். நமக்கு சுயமாக எதையும் தேர்ந்தெடுக்க உரிமை யில்லையென்றால், எடுத்த எடுப்பிலேயே சரியான ஒன்றைப் பற்றிப்பிடித்துக் கொள்கிறோமென்றால், சுதந்திரத்தின் அடையாளமே யில்லாமல் விலங்கினங்களுக்குள்ள இயல்புணர்ச்சியின் கீழ்தான் நாமும் இயங்க வேண்டும்.

நம் வாழ்வை இயக்கும் விதிமுறைகளை நாம் தவறுகப் புரிந்து, அவ்விதிமுறைகளுக்கு எதிராக நடந்து கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதனால் நாம் அந்த விதி முறைகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுக் கொள்ளலாம் என்று யாரும் விளக்கம் சொல்ல முடியாது. மாறாக, இவ்விதி முறைகள் மனிதனால் மாற்றமுடியா சில விஷயங்களை, அவன் செய்வதிலும்— செய்யாது விடுவதிலும் தோற்றுவிக்கின்றன. மனிதன் தன் நடைமுறையை அவற்றுக்கொப்ப அமைத்துக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், அந்த விதிமுறைகளின் தவிர்க்க முடியா விஷயங்களை அவன் ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும். இந்த விதிகளைச் சரியான முறையில் புரிந்து, அதற்கொப்ப நம் செயல் முறைகளை அமைத்துக் கொண்டால், நம் வாழ்க்கையின் நோக்கங் களை அடைவதில் ஊக்குவிக்கப்படுவது போலவே, மாறாகச் செயல்பட்டால் தடையுணர்ச்சியும், அமைதியின்மையும் நம் வாழ்க்கையில் ஒட்டிக் கொள்கின்றன: சுருங்கச் சொல்வதானால் கேடு நம்மைச் சூழ்கிறது. ஒவ்வொரு கணமும் நம் உடல் இயற் பொருள்களைப் பயன்படுத்தி, அப்படிப் பயன் படுத்தப்பட்ட வற்றைக் கழித்து வேறு பொருள்களை எடுத்துக் கொண்டு இயங்குகிறது. இதை, "உடலிலுள்ள இயற்பொருளான உணவுச் சத்து, உயிர்ச் சத்தாகவும், உயிர்ச் சத்து மீண்டும் இயற்பொரு ளாகவும் மாறுபடும். உயிர்ப் பொருள் மாறுபாடு" (Metabolism) என்று சொல்லப்படுகிறது. இப்படி இயங்கும் விதிமுறையோடு தான் நம் உயிர் வாழ்க்கை பிணைக்கப் பட்டிருக்கிறது. உயிர் வாழ்வதற்காக நாம் உண்ணவும், பருகவும். மூச்சுவிடவும் இன்னோரன்ன செயல்களைச் செய்யவும் வேண்டும். சிந்தித்துச் செயல்படக் கூடிய ஆற்றலால் மனிதன் மூச்சுப் போகாது நிறுத்தியோ அல்லது பசியாலோ தன்னை மாய்த்துக் கொள்ள முடியும்; ஆனால் மூச்சு விடாமல், உணவு கொள்ளாமல் நிச்சய மாக உயிர் வாழமுடியாது. எனவே மூச்சு விடாமல் இருப்பேன்,

அல்லது உண்ணுமல் இருப்பேன் என்று அவன் சுதந்திரமாக முடிவு செய்து, அதன்படி செயல்பட்டால் அவன் வாழ்வியக்கத்தின் விதிமுறைகளுக்கு எதிராகச் செயல்படுகிறான், அந்தச் சுதந்திர முடிவினால் தன்னை அழித்துக் கொள்கிறான்; இயற்கை விதிமுறைகள் நிறைவேற்றப்பட்டுப் போகின்றன.

இவற்றிலிருந்து, மனிதனின் தன்னுணர்வும், சுய நிர்ணயமும் அவனுடைய இயல்பின் உச்ச நிலையைக் குறிக்கின்றன. மனிதனின் தரத்திற்கு ஒத்த செயலும், எண்ணமும், சத்தியம், சுதந்திரம் இவற்றைப் பெற அவன் தூண்டப்படுவதில் நின்றும் பெருகுகின்றன. எந்த மனிதனிடத்தில் உண்மை அறிவாற்றலின் படி உழைக்கும் ஒரு சிறு பொறி—ஒளி—இருந்தாலும், அவன் நல்லதையும், அழகுடையதையும், நேர்மையையும், சத்தியத்தையும் உணர்ந்து கொண்டு, நாம் செயல்படும் எல்லாத்துறைகளிலும், எல்லா நிலைகளிலும் அவற்றை இடம்பெறச் செய்ய பாடுபடுவான். உண்மையைத் தேடும் உழைப்பு, அதற்கொத்த சுதந்திரமில்லா விட்டால், எப்படி அதன் இலக்கை அடைய முடியாதோ, அதேபோல் சுதந்திரம் மட்டும் இருந்து, உண்மையைத் தேடி உண்மையை உணரும் உழைப்பும் இல்லா விட்டால், அது தன்னழிவுக்குத்தான் வழிகோலும். எனவே இது ஒவ்வொன்றும் மற்றதைச் சார்ந்திருக்கிறது; ஊடுருவி நிற்கிறது; ஒவ்வொன்றும் மற்றதைக் கட்டுப்படுத்துகிறது. இப்படி இரண்டும் தன் தன் ஆற்றலை உணர்ந்து இணைந்திருப்பதனால் நம் வாழ்வியக்கத்தின் விதிமுறைகளையும், நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையின் விதி முறைகளையும் அறிந்து இவற்றுக் கொப்ப சுதந்திரமாக, விளைவுகள் இன்னவாகயிருக்கும் என்பதை உணர்ந்து சுயமாகச் செயல்படுவதில்தான் தனி மனிதனின் நிறைவான வளர்ச்சியென்னும் இலட்சியம் அமைந்திருக்கிறது.

இதுவரை தனித் தன்மையுடையவனான மனிதனின் தன்னியக்கம் பற்றிப் பார்த்தோம்; இப்பொழுது அவனைப்போன்ற மனிதர்களோடு அவனைப் பிணைக்கும் பரஸ்பர உறவுகளுக்கு வருவோம். இந்த வகையில் அவன், இயற்கை அமைப்பின் காரணமாகத் தன்னைப் போன்றாரைக் கொண்ட சமுதாயத்தில் இணைந்து வாழும் கட்டாயத்துக்குட்பட்ட சமூக உறுப்பினனாக நம் முன்னர் காட்சி தருகின்றான். தன்னையே தேய்த்துக் கொள்ள அவன் விரும்பினாலொழிய வன விலங்குகளைப் போலவோ, பாலையில் வாழும் வேட்டை மிருகங்களைப் போலவோ, தன்னினத்தைச் சார்ந்த பிறருடன் தொடர்பில்லாமல், தனிமையாக வாழமுடியாது. அப்படி முற்ற முற்றத் தனிமையில் இருந்தால் அவன் இலக்கை அடையத் தவறி விடுவான். இதை ஆராயும் போது, சமயச் சார்புடைய நிலைப் பிரச்னைகளையெல்லாம் நாம்

ஒதுக்கி விடுவோம். தன்னில் மறைந்து கிடைக்கும் எல்லா ஆற்றல்களும், இயல்பான எல்லா நற்போக்குகளும் முற்றி வளர்ச்சியுற வேண்டுமென்பதுதான், மனிதனுட்பட எல்லா உயிரினங்களின் இயற்கை விதி—இலட்சியம்—என்பது நம் கருத்து.

ஆனல் முற்றிலும் தனிமையில் வாழும் மனிதன் தானுக இந்த வளர்ச்சியடைய ஒருக்காலும் முடியாது; இத்தகு வளர்ச்சி பெறுவதற்கு அவனுக்குச் சமுதாய வாழ்க்கையும், தன்னை யொத்த மனிதர்களின் பரஸ்பர உதவியும் தேவைப்படுகின்றன. இவையின்றி, தனி மனிதன் அநேகமாக மிக மிக எளிய வாழ்க்கை தான் நடத்த முடியும். இப்படி ஒரு நிலை ஏற்பட்டு விடுமானல் அவனுடைய முழு வலிமையையும், செயல் திறமும் உயிர் வாழ்வதற்கு அவசியமானவற்றைத் தேடுவதிலேயே முற்றிலும் செலவழிந்துவிடும்; தன்னுடைய உயரிய ஆற்றல்களை வளர்த்துப் பரிபக்குவப் படுத்துவதற்குரிய நேரமோ, வாய்ப்புக்களோ இல்லாமல் போய்விடும். இதை நன்றுக கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; மனித சமுதாயத்தின் வட்டத்துக்குள் இருந்து கொண்டே இடர்ப்பாடுடைய வாழ்க்கையை நடத்துவது, அதற்கு வெளியேயிருப்பதைவிட மேலானது, அப்படி முற்ற முற்றத் தனிமையிலே எல்லாவற்றுக்கும் தன்னைத் தானே நம்பிக் கொண்டு வாழும் அவல நிலையிலுள்ள மனிதன், நம்மிலே மிக வறியவர்களுக்குக்கூட வாழ்க்கை எதனல் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றதோ, அதையெல்லாம் இழந்து விடுவான். மொழியையும், அதனுடன் ஒழுங்கமைக்கப்பட்ட எண்ணங்களையும் சிந்தனைகளையும் இழந்து விடுவான். எனினும் இத்தகைய நிலைகளை நம் அனுபவத்தில் காணமுடிவதில்லை; காரணம் அப்படி முற்றிலும் தனிமையாக வாழும் மனிதர்கள் இல்லை; இதுவே இந்த நில மனித இயல்புக்கு முரணனது என்பதை நிரூபிக்கப் போதுமானது.

சமுதாய வாழ்க்கையென்பது மனிதர்களால் கண்டுபிடிக்கப் பட்டதோ, அல்லது மிகுந்த வசதிகளுக்காக எவரும் தன்னிச்சை யாகப் புகுத்தியதோ அல்லது அவசியமற்றது என்று ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியதோ அல்ல. மாறுக அது மனிதனின் இயல்பான, அவனுடைய உள்ளார்ந்த தேவையின் நேரடியான விளைவாகும். மனிதர்கள் எங்கெங்கு, எந்தெந்தக் காலம் வரை இருக்கிறார்களோ அங்கெல்லாம் சமுதாயம் என்பது இருக்கவே செய்யும். சமுதாயத் தொடர்பில்லாத தனிமை மனிதர்களுக்குத் தேய்வுக்கு—சாவுக்கு—சமமாகும்: அவர்களுடைய இயற்கை நிலையே சமுதாய வாழ்க்கைதான். மனிதனின் தற்காப்பு உணர் வோடு ஒரளவு இணைந்திருக்கும் சமுதாய உணர்வுதான் நம்

இயற்கையின் மிக சக்தி வாய்ந்த உணர்வுகளாகும்; நம்முடைய ஒழுங்கு முறைகளுக்கொப்ப அந்த இயற்கையிலிருந்து பெறப் படும் தனி மனிதர்களின் சீரமைப்பான சமுதாயம் ஓர் இயற்கை விளைவேயாகும். எல்லா உயிரியலையும், சமுதாயத்தின் அங்கங் களான தனி மனிதர்களும் சில உயிராக்கமான விதிகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவதே போல, சமுதாயமும் அத்தகைய சில விதிகளுக்குக் கட்டுப்படுகிறது; இவ்விதிகளைக் கண்டுபிடிப் பதற்கு, சமுதாயத்தின் இயல்பென்ன என்பதைப் பற்றி நாம் முதலில் உற்றுணர வேண்டும்; இதையொட்டி. இரு நோக்குகளை இங்கே குறிப்பிடலாம்.

முதலில், தன் தனி வளர்ச்சிக்காகவும் தனி வாழ்க்கையில் தன் இலட்சியங்களையடையவும், மனிதன் சமுதாயத்தைச் சார்ந் திருக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு மனிதனுடைய வளர்ச்சியும், இலட்சிய சாதனையும் குறிப்பிட்ட ஓர் இலக்கில் அமைகிறது. இதன்படி பார்த்தால், ஒவ்வொரு மனிதனும் தன் நோக்குக்காகப் பாடுபடுகிறான்; இத்தகைய தனி மனிதர்கள் பலரைக் கொண்டது சமுதாயம்; ஆனால் எல்லோருடைய நோக்குகளும் நிறைவேறும் வகையில் அனைவருக்கும் பணியாற்றுகிறது சமுதாயம். இது சமுதாயத்தின் சட்டபூர்வமான அம்சம்; இதன்படி சமுதாயத்தின் நடவடிக்கைகளெல்லாம் இலக்குகளையடைவதற்குரிய வழிமுறை களே தவிர, அவையே இலக்குகளாகி விடா. இந்த சட்டபூர்வமான அம்சத்தில் ஒரு கொள்கை மேலோங்கி நிற்கிறது. நமக்கு அடுத்தவன் என்ன செய்யக் கூடாதென்று விரும்புகிறோமோ. அதை நாமும் அவனுக்கு செய்யக்கூடாது. இந்த அம்சத்தைத் தான் நாம் அரசிடமிருந்தும் கோருகிறோம்.

ஆக, இன்னும் உற்று நோக்கும்போது, தனி மனிதர்களின் குறிப்பிட்ட இலச்சுகளையடைய ஆக்கம் தரும் சமுதாயத்தில் இன்னும் ஓர் உயரிய நோக்கு நமக்கு புலப்படுத்தப் படுகிறது. தன்னுணர்வுள்ளவன் என்னும் நிலையில் மனிதன் தன் வாழ்வை யும் நடவடிக்கைகளையும் மீண்ட நாள் பிறர் நினைவிலிறுத்தும் படிச் செய்யமுடியும்; தன் எண்ணமும், செயலும் நிலையான பயனை விளைவுகளைத் தருமாறு செய்யமுடியும்; வெளிப் பொருள்கள் மீது தன் செயலைப் பதித்து, அவற்றைத் தன் நோக்குகளுக்கொப்ப சீரமைத்துக் கொள்ளமுடியும். இப்படியாக தனி மனிதன் தன் வாழ்க்கையின் அளவையும் விஞ்சி ஒரு முக்கியத்வத்தை அடைகிறான்; இம் முக்கியத்துவம் பிறர் மீதும், வரப்போகும் தலை முறையினர் மீதும் பதியும் என்னும் உறுதியும் பெறுகிறான். இப்படி நம்முடைய சிந்தனை, செயல்கள் ஆகிய வற்றின் பலன்கள் மறைமுகமாகப் பிறர் மீதும் பதிந்து, பாதிப்பு

ஏற்படுத்துகின்றன என்னும் காரணத்தால் அவை சகாப்தங்களின் பொதுச் சொத்தாகி, வரும் தலைமுறைகளுக்கும் அளிக்கப்படுகின்றன; இப்படி அவை ஒவ்வொரு நூற்றாண்டாகச் சேகரமாகி, மனித இனத்தின் வழிவழிச் சொத்தாக அமைகிறது; நமக்குப் பின்வரும் சந்ததியினர் பிறந்த உடனேயே இந்த சொத்துக்கு உரிமையுடையோராகி விடுகின்றனர். ஆதி விலங்குகள் எந்த நிலைமையில் இருந்தனவோ, அதே நிலையில்தான் அவற்றின் சந்ததியான இன்றைய விலங்குகளும் இருக்கின்றன; இதற்கு மாறாக நம்முடைய மூதாதையர் மிகக் கடினமான துவக்க காலத்தில் தங்களுடைய ஆற்றல் முழுவதையும் பல்வேறு அறிவுத் துறைகளில் போக்கினரே, அத்தகைய நிலைகளிலிருந்து நாம் காக்கப் படுகிறோம். முன்னோர் விட்டதிலிருந்து, அதற்குப்பின் வந்தோர் துவங்குகிறார்கள். எனவே இவர்கள், இன்னும் சிறிது தூரம் சென்றாக வேண்டும். இப்படி தலைமுறை முடிவில்லாத ஒரு வளர்ச்சியாக வாழ்வு அமைகிறது. வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் வாழ்ந்திருந்த மிக விவேகமுள்ள மனிதர்கள்கூட, பொருள்களின் இயல்பு பற்றி எத்தகைய சிதைந்த, கோணல்மானலான, முதிர்ச்சியற்ற கருத்துக்களை வைத்திருந்தனர். இன்று, இயற்கையின் மிக முக்கிய அமைப்புகளைப் பற்றியும் சரியான விளக்கங்களைப் பெறுகின்றனர் பள்ளிக்குச் செல்லும் நம் சிறுவர்கள். இந்த இரண்டு நிலைகளுக்கும் எத்தகைய மகத்தான வேறுபாடு இருக்கிறது? மேலும் ஆதிகால மனிதன், செய் கருவிகளும், வேறு சாதனங்களும் இன்றி, தன் சுய வலிமையால் மண்ணிலிருந்து தன் எளிய வாழ்வுக்கு வேண்டிய தேவைகளை அரும்பாடுபட்டுப் பெற்றான். இன்றோ, நவீன ஆலைத் தொழில்களின் முன்னேற்றங்களினாலும், மிக நுட்பமான இயந்திரங்களினாலும், இயற்கை சக்திகளை அதிசயமான முறைகளில் பயன்படுத்துவதன் மூலமாகவும், பண்டையக்கால அற்புதங்களையும் விஞ்சிடும் வகையில் மனிதன் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறான். இவ் விரண்டு நிலைகளுக்குமிடையே எத்தகைய மகத்தான வேறுபாடு உளது? இவையனைத்தையும் இயற்கை விதி முறைகளினால் இன்றையத் தலைமுறை தனக்குரிய அன்பளிப்பாகப் பெறுகிறது. இதன் மீது இன்னும் அரும் பொருள்களைக் குவித்து, இதை இன்னும் வளப்படுத்தி, பெருக்கி தனக்குப் பின் வருவோர்க்கு வழங்குவதற்கு இத்தலைமுறை ஊக்கமும் பெறுகிறது. இம்முறையில் நிகழ்காலத்தில் அடுத்தடுத்து வாழும் மனிதர்களை மட்டுமல்ல, இன்னும் தோன்றப் போகும் மனிதர்களையும் ஒருங்கிணைத்துக் காண்கிறோம். இவர்களனைவரும் ஒரு தொடர்பையும், உயிரார்ந்த ஓர் இணைப்பையும் அடைவதைக் காண்கிறோம்.

ஒவ்வொருவரும் கீழே காணப்படுவதைக் கருதிப் பார்க்க வேண்டும். ஒதுங்கி வாழ்வதனாலோ, அல்லது தன் இயற்கை நியதிகளுக்கு ஒரு விதி விலக்காக இருப்பதனாலோ அமைதியாக வாழ்வதற்குரிய உத்தரவாதத்தை மனிதன் பெற்றுக் கொள்வ தில்லை. அந்த அமைதியான வாழ்வு எல்லோரும் பெறவேண்டும். தனி மனிதர்கள் அத்தகைய வாழ்வு பெறுவதற்காகத் தங்களை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பதில்தான் அமைதியான வாழ்வுக்குரிய உறுதியிருக்கிறது.

விளக்கத்துக்குரிய பொருளாக நாம் வர்ணித்த சமுதாய உரிமைகள்—கடமைகள் ஆகியவற்றின் பொதுக் கருத்தை இது வரை சொன்னோம். சமுதாயத்தின் உயர் மட்டத்தைக் கட்டுப் படுத்தும் ஒழுக்க விதி, ஆட்சியின் ஆதரவைப் பெறுமலிருக் கலாம்; அதனால் அந்த ஒழுக்க விதி, மனிதனின் நல்லெண்ணத்தை மட்டும் நம்பியிருக்கிறதா? இல்லை—அந்த விதியின் செயலதி காரம் நம்மில்—நம்முடைய—மனச்சாட்சியில் அமைந்துள்ளது; அதாவது அத்தகைய ஓர் ஒழுக்க விதி நம் வாழ்க்கையின் நடு நாயகமானது; இயற்கையிலே தேவையானது; மனித வாழ்வின் அடிப்படைச் சட்டத்தை மீறும்போது ஏற்படுவது போலவே இந்த ஒழுக்க விதியை மீறும்போது தனி மனிதனுடையவும், சமு தாயத்தினுடையவும் ஆக்கக் கேடும், அழிவும் நேரிடுகிறது. இத னால் சமுதாயத்தின் நலம், நன்கு உணரப்படும். நம் ஒவ்வொரு வருடைய நலத்துடனும் இணைந்தே இருக்கிறது. இது பற்றி உயர் வசதிகள் படைத்த வகுப்பாரிடம் எவ்வளவு வலியுறுத்திச் சொன்னாலும் தகும்; ஏனென்றால் வாழ்க்கைக் கல்வியும், பெருமளவு வசதிகளும் பெற்றிருப்பதால் அவர்கள் வசதி யற்றோரை உயர்த்துவதை ஒரு சவாலாக ஏற்று, அதற்குரிய எல்லாச் செயல் முறைகளிலும் பங்கு கொள்ளவேண்டும். மனிதத்துவம் நமக்கு அப்பாற் பட்டதென்றோ, நம் வாழ்க்கை நலங்களை கவனிக்கும் போது அதைப்பற்றி அக்கறை கொள்வது பொருத்த மற்றதென்றோ கருதுவது சரியல்ல. மாறாக! மனி தத்துவம் என்பதை விட வாழ்க்கையில் மகத்தான விவேகம் எதுவுமில்லை. நம் ஆற்றலையும், வசதிகளையும் இதற்காகச் செலவழிப்பதை விட பயனுடைய பணி வேறெதுமில்லை. மேலே குறித்த உலகாயதக் காரணங்கள் போக, தனி மனிதனின் மேம் பட்ட சுய வளர்ச்சியையும் மனிதத்துவம் நிர்ணயிக்கிறது. அவனுடைய ஒழுக்க வலிமையின் ஊக்கமும், தான் நேர்மை யெனக் கண்டதைக் கடைப்பிக்கும் பண்பும் ஒருவனிடம் இல்லை யெனில் அவனிடம் பெரிய குறைபாடு ஏற்படுகிறது.

அக்குறையை உலகாயதப் பொருள்களாலும், ஏட்டறிவாலும் நிறைவு செய்து விடமுடியாது. நிந்தனையும் செயலும், ஊடுபாவாக இயங்கும்போதுதான்—நாம் என்ன செய்யக்கூடும், என்ன செய்தாக வேண்டும் என்ற உறுதிப்பாடும் ஏற்படும் போதுதான் தனி மனிதன் முழு வாழ்வு வாழ்வதை உணரமுடியும்; இவற்றிலிருந்து தான் அவன் நெஞ்சத்தைக் குளிர்விக்கும் ஒரு திருப்தி மலரமுடியும். சமுதாயத்தோடு நமக்குள்ள பரஸ்பர உறவு பற்றி கவனிக்கும்போது ஒழுக்க வலிமை, நேர்மைப்பண்பு ஆகியவற்றின் மதிப்பு அளவிட முடியாது பெருகுகிறது. தனி மனிதனின் செயலால் சமுதாயத்துக்குக் கிடைக்கும் நற்பயன் மீண்டும் அவனுக்கே இருமடங்கு ஆசியுடன் கிடைக்கிறது. சமுதாயத்துக்கென்று ஒரு மனிதன் எவ்வளவு கொடுத்தாலும், அவன் முற்கூட்டியே அதனிடமிருந்து வாங்கியது ஒவ்வொரு நாழிகையும் அதனிடமிருந்து வாங்கிக் கொண்டிருப்பது, அளவுக்கதிகமாகத்தானிருக்கும். ஒரு குறித்த காலத்திலுள்ள எல்லா மனிதர்களின் மொத்த வாழ்விலிருந்துதான் தனி மனித வாழ்வு ஊற்றெடுக்கிறது: மீண்டும் இது ஊற்றுக்கேத் திரும்பி அதனைப் பெருகச் செய்கிறது. பண்பாட்டின் வெற்றிகளிலிருந்து தன் ஆத்மீகச் செழிப்புக்கு உரம் தேடுவது, மனிதகுல உணர்வை யெல்லாம் தன் உள்ளத்தில் தேக்குமளவுக்கு நெஞ்சை விசாலப் படுத்துவது, ஒருயுகம் சரித்திரத்தின் அழியாத முத்திரையைப் பெறும் வகையில் ஆற்றப்படும் பணியில் மனப்பூர்வமாக பங்கு கொள்வது இவைதாம் உண்மையான வாழ்க்கை; இதுதான் மனிதனின் விதியைப் பூரணமாக நிறைவேற்றும் வகையில் அவன் உயர்ந்தான் என்று கருதப்படும். இதல்லாததை உயர் பண்புகளோப் பொறுத்த வரையில், செத்ததாகவே கருதப்படும்: அது ஆத்மீகச் சாவு.

இந்த நோக்குகளெல்லாம் செல்வமும், கல்வியும் படைத்த வட்டாரத்தில் அதிகமதிகம் ஊடுருவ வேண்டும்! ஒரு தனி மனிதன் இந்த உயரிய நோக்கங்களுக்கென குறைவாகவோ, மிகையாகவோ பாடுபடலாம்; மகத்தான இப்பணிக் கெதிரே தன்னுடைய ஆற்றல் குறைவானது என்று பணிவாக ஒருவன் நம்பலாம்—ஆனால் கூட்டு முயற்சிகளாலும், சக்திகளாலும் நாம் சாதனையைக் காண முடியும். இப்பொழுது, நம் காலத்தின் நம்பிக்கைக்கு அறிகுறியாக, பல சங்கங்கள் மலர்ந்து, இப்பக்க மாக மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. ஒத்த நோக்கும், குறிக்கோளும் கொண்டு இச்சங்கங்களோச் செயல்படுத்துவதனால், இன்றைய சமுதாயம் சுதந்திரமான கூட்டுறவு நடைமுறைகளோ ஓர் அறப்பண்பாக—தர்ம சக்தியாக—மாற்றிவிட்டது. ஆட்சியின்

சட்டம், அதனுடைய வெளிப்படையான அதிகாரத்தை வைத்து மனித இயல்பின் எல்லாப் பகுதிகளின் மீதும் ஆதிக்கம் செலுத்த முடியாது. ஆனால் தர்ம சக்தியாக மாறிவிட்ட இந்த இயக்கங்கள் உயர் பண்பாட்டுப் பணிகளையும், காலத்தின் மிகப்பெரும் சிக்கல் களையும் சமாளித்துத் தீர்வு காணமுடியும்.

ஃபிரீட்ரிஷ் வில்யம் ரைஃப்யெஸன்

கடன் வழங்கும் சங்கங்கள்

கிராமிய மக்களின் துயர் அகற்றுவதற்கான சாதனங்கள் கூட்டுறவு சங்கங்கள் (நாய்விட் 1866)

மத்திய தர வகுப்பின் சிறு, வணிகர்களின் இடர்ப்பாடுகளைத் தீர்த்து உதவுவதற்காக ஹெர்மான் ஷுல்ஸெ தெலிட்ஷ், அம் மக்களிடையே கூட்டுறவு சங்கங்களை நிறுவியது போல் ஃபிரீட்ரிஷ் ரைஃப்யெஸனும் (1818—1888) துரிதமாகத் தொழில் மயமாக்கப் பட்டதன் காரணமாக கொடும் வறுமையில் சிக்கிய உழவர்களுக் காகக் கூட்டுறவு சங்கங்களை அமைத்தார். இவ்வகையில் ரைஃப்யெஸனின் மனப்பான்மை, சமுதாய, கிறித்தவ அடிப்படை யைக் கொண்டிருந்தது. கூட்டுறவு இயக்கம் சமயச் சார் புடைய, நன்னெறி சிறந்த நிறுவனமாக இருக்க வேண்டுமென அவர் கருதினார். உறுப்பினர்களின் உதவியுடன், அரசாங்க ஒத்தாசையும் இணைந்து இவற்றை நிரப்பமாக்க வேண்டுமென அவர் பாடுபட்டார். அவர் நிறுவிய சேமிப்புப் பொருளகங்களும், கடன் வழங்கு வங்கிகளும் இன்னும் உழவர் கூட்டுறவு சங்கங் களின் பகுதிகளாக இருக்கின்றன; இவை ஜெர்மன் பெடரல் குடியரசில் இப்பொழுதிணைந்து. "ஜெர்மன் ரைஃப்யெஸன் சங்கம்" என்று அறியப்படுகிறது. கீழேயுள்ள பகுதிகள், "கடன் வழங்கும் அரசினர் அலுவலகங்கள் கூட்டுறவு சங்கங்கள்—கிராமிய மக்களின் துயர் அகற்றுவதற்கான சாதனங்கள்" என்ற நூலி லிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு சங்கங்களின் தேவையும் அவற்றின் அடிப்படையும்

கைக்கடன் சீட்டு—பிராமிஸ்ஸரி நோட்—இல்லாது, வாக்குறுதி யின் அடிப்படையிலேயே அண்டை அயலார், தேவைப்பட்ட நேரத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்த நல்ல பழங்காலம் போய்விட்டது. நம்பிக்கை யிருந்த இடத்தில், அவநம்பிக்கை அமர்ந்து கொண்டது; தன் சோதரன் ஒருவனுக்கு, அண்டை அயலிலிருக்கும் பிறிதொரு சோதரன் உதவி செய்வது ஆகக் குறைந்து விட்டது. பண விவகாரத்தில் தோழமை மறைந்து விட்டது. குறிப்பாக நாட்டுப்புறங்களில், இவை போன்ற முறையீடுகளை அடிக்கடி கேட்கலாம். இம்மனக்குறைகள் நியாய மானவையா? ஓரளவு நியாயமானவை என்றுதான் சொல்ல வேண்டும்.

பண்டைய நாட்கள் மீண்டும் வரவேண்டும் என்று நாம் விரும்பத் தேவையில்லை. ஏனென்றால் நாம் வாழுங்காலமும் நல்லதுதான்; பண்டைய நாட்களையும் விட நல்லது! தான் மாற்றமுடியா நிலைகளை ஒருவன் ஏற்றுக்கொண்டு, அவற்றிலிருந்து எத்தனை நலங்களையும், பயன்களையும் பெறப் பாடுபடுகின்றானே அவன் தான் சீரிய முன்னேற்றம் அடைவான். இது காலத்துக்கும் பொருந்தும்: இன்றைய கண்டுபிடித்தங்களும், விஞ்ஞான முன்னேற்றங்களும், பெருந்தொழில்களிலும், வாணிபத்திலும் அவை பயன் படுத்தப்படும் முறையும் சக்தி மிக்க ஒரு புரட்சியை உண்டாக்கி விட்டது. தற்காலத்தில் இப்புரட்சியின் முக்கிய நலங்கள் அனைத்தும் பெரும் வாணிபங்களுக்கும், சுரங்களுக்கும், தொழிற்சாலைகளுக்குமே கிடைத்திருக்கின்றன. பொருளாதாரச் சமநிலை பாதிக்கப்பட்டு விட்டது; கிராமப் பகுதிகளும், சிறு வாணிபங்களும் பின் தங்கி விட்டன. ஆனால் இப்புது யுகத்தின் நலங்களைத் தங்களுக்காக்கிக் கொள்வது இவர்களைப் பொறுத்தே யிருக்கிறது; இந்நலங்கள் இவர்களுக்கும் கிடைக்கும் போது, பண்டைய நாட்கள் திரும்பி வர வேண்டுமென்று இவர்கள் விரும்ப மாட்டார்கள்.

எழுப்பப்பட்ட கேள்விக்கு இதுவரை எதிர்மறையான பதில் தான் கொடுத்திருக்கிறோம்; ஓர் அம்சத்தில்; மேற்குறித்த மனக்குறைகள் நியாயமானவை தாம் என்பதை நாம் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும். கீழ்நிலையிலுள்ள மக்களிடமிருந்து ஒதுங்கி வாழ்கின்றார்களே அவர்கள் நினைப்பதை விட, ஏழை மக்களிடம் பல தேவைகள் நிறைவேறாமலேயே இருக்கின்றன; பணம் மிகக் குறைவாகவே யிருக்கிறது. இப்பொழுதுள்ள நிலைகளில், கிராமப் பகுதிகளிலிருந்தும் சிறு சிறு வாணிபங்களிலிருந்தும் பணம் அதிகமதிகம் வெளியே இழுக்கப்படுகிறது. எனவே இந்த முக்கியமான அம்சத்தைக் கருத்தில் கொண்டால், முறையீடுகள் நியாயமானவை என்றே சொல்ல வேண்டும்.

எனவே, தேவை இப்பொழுது இருக்கிறது; அது இனங்கண்டு கொள்ளப்பட்டும் விட்டது என்று ஏற்றுக் கொண்டால்; இதை எப்படி விடுவிப்பது; மிகவும் பயன் தரக் கூடிய முறையில் எப்படி உதவியளிப்பது? பெருமளவில் நடக்கும் தொழில்களும், வாணிபமும், தொழிலதிபர்களும், வியாபாரிகளும் வழிகாட்டியிருக்கின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகளைத் தங்களுடைய வையாக்கிக் கொண்டதினாலும், புதுப் புதுக் கண்டுபிடித்தங்களையும் புத்தாக்கப் புனைவுகளையும் வாணிபத்திலும், தொழிலிலும் பயன்படுத்துவதின் மூலமாகவும், இவற்றுக்காகப் போதிய பொருளாதாரச் சாதனங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வதின் வாயிலாகவும், அவர்கள் செல்வர்களாக, மேலும் மேலும்

கொழுத்த செல்வம் ஈட்டியவர்களாகத் திகழ்கிறார்கள்; இவர்களில் தனிப்பட்ட நபர்களின் சக்திகள் போதுமானவையாக இல்லாவிட்டால், அவர்கள் ஒன்றிணைந்து கூட்டுறவு அடிப்படையில் செயலாற்றுகின்றனர். இவ்வாறு, பணத்தையும், அறிவாற்றலையும் தக்க முறையில் பயன்படுத்துவதன் மூலம் இவர்கள் செல்வர்களாகிறார்கள்; இன்னும் அளப்பரிய செல்வங்களைக் குவிப்பார்கள்: சிறு சிறு தொழில்களிலிருந்தும், கிராமப் பகுதிகளிலிருந்தும் அவை உயிர் வாழ்வதற்கும், முன்னேற்றங் காண்பதற்கும் தேவையான பணத்தை அங்கிருந்து, அதிகமதிகம் தங்கள் பால் இழுத்துக் கொள்வார்கள். பணமும் அறிவாற்றலும் தாம் உழவனையும், சிறு தொழில் செய்வோனையும் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும்.

அறிவாற்றல் என்று நாம் இங்கு குறிப்பிடும்போது, பெரும் ஞானத்தைப் பற்றியோ பேரறிவுத் தேட்டத்தைப் பற்றியோ பேசவில்லை; குறுகிய எல்லைக்குட்பட்ட அறிவாற்றலின் தேவையோ, பயனை சுருங்கி விடுவதில்லை. கிராமப் புறங்களிலும் தக்க அளவில் நாம் காணும் பொது அறிவை—நல்லறிவைப் பயிற்சிக்குக் கொண்டு வருவது பற்றித்தான் குறிப்பிடுகிறோம். தாம் வேலை செய்யும் கருவிகளின் தரத்தையும், தகுதியையும் பற்றித் தீர்வு செய்யவும்; மண், உரம், உழவுக்குத் தேவையான இதர சாதனங்களின் நிலையையும், தரத்தையும் பற்றித் தெரிந்து கொள்ளவும்; நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், இவற்றின் மூலமாகத் தொழிலை அக்கறையோடும், சிக்கனமாகவும் நடத்தவும்; குடும்ப வாழ்க்கையில் சிறப்புடையவையான துப்புரவு ஒழுங்கமைப்பு போன்ற பண்புகளைத் தொழில் துறைகளிலும் ஏற்றமுறச் செய்யவும், உழவர்களும், கை வினைஞர்களும், சிறு தொழில் செய்வோரும் தங்கள் உளத் திண்மையையும், உடலாற்றலையும் அதிகமதிகம் பயன்படுத்த வேண்டும்; முன்னெல்லாக் காலத்தையும் விட இது இப்பொழுது மிக மிக முக்கியமான தேவையாகும். கிராமப் புறங்களில் வாழ்ந்தோருக்கு நாம் மேற்குறித்த அம்சங்களில் பெரும்பாலானவை அங்கு காணப்படாதவை என்பது நன்கு தெரியும்; இந்த வகையில் முன்னேற்றங்காண புகுத்துவது எவ்வளவு கடினமானது என்பதும் அவர்களுக்குத் தெரியும். நாம் இங்கு பொதுப்படையாகத்தான் பேசுகிறோம். தனிப்பட்ட சில பகுதிகள் பாராட்டத் தக்க விதிவிலக்குகளாக யிருக்கக் கூடும். பொதுவே, பழைய பாட்டையில் போய்க் கொண்டிருப்பதற்கே மக்கள் விரும்புகின்றனர்; தம் தந்தையரும், பாட்டனரும் செயல்பட்ட விதத்திலேயே தாங்களும் செயல்படுகின்றனர். புதியதான கண்டுபிடித்தங்கள் அனைத்தையும்அவ நம்பிக்கையுடன் உதறித்

தள்ளுகின்றனர். இவ்வாறு உண்மையான முன்னேற்றத்தில் தாங்கள் எந்தப் பங்கும் வகிக்க மறுக்கின்றனர். இதற்குரிய காரணம் ஓரளவுக்கு நாட்டுப்புற மக்களின் குணப் பண்புகளிலே பொதிந்து கிடக்கின்றது. இது வரை, குறைபாடுள்ள பள்ளிக் கல்விதான் இந்தக் குற்றச்சாட்டில் ஒரு பகுதியைச் சுமந்து வந்துள்ளது.

பிறர் நலங் கருதி உழைப்போர் எவ்வளவு பாடுபட்டாலுங்கூட, இத் தலைமுறையில், குறிப்பாக ஒதுங்கிக் கிடக்கும் பகுதிகளில், முன்னேற்றம் மிகச் சுருக்கமாகவேயிருக்கும். இளந்தலை முறையினர் நிலையில் மாற்றம் ஏற்படுத்துவதே இப்பொழுதுள்ள பணியாகும்: இதனை, உள்ளத்தைப் பல திசைகளிலும் பக்குவப் படுத்தி, நாட்டுப்புற மக்களை ஒரு நிலைக்கு உயர்த்தக்கூடிய தரமான ஆதாரக் கல்வி மூலம்தான் சாதிக்க முடியும். கிராம மக்கள் நல்ல தீர்ப்புகள் காண்பதற்கும், காய்தல், உவத்தலின்றிச் செயலாற்றுவதற்கும், சொற்பொழிவுகளையும், எழுத்தோவியங்களையும் அறிவதற்கும், அவற்றில் பொருத்தமுடையவற்றைத் தங்கள் சுயவாழ்வில் பின்பற்றுவதற்கும் பயிற்சி பெறவேண்டும். இளைஞர்கள் இப்படிப் பயிற்றுவிப்பதற்குத் தகுந்த, நன்கு பயிற்சி பெற்ற, ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்; இப்பொழுதுள்ள நிலைகளையும் கருத்தில் வைத்துக் கொண்டு, அத்தகைய ஆசிரியர்கள் கிடைக்க வேண்டுமென்றால் உடனடியாக அவர்களுடைய வருவாயை உயர்த்த வேண்டும். இதனால் ஆசிரியர்கள் சிறிது அதிகம் பொருளீட்டுவதற்காக 'டியூஷன்' சொல்லிக் கொடுப்பதிலோ, வேறு பகுதி நேரத் தொழில்களிலோ தங்களுடைய சிறந்த உழைப்பைச் சிந்த மாட்டார்கள்; சமுதாய நலனுக்காக முழுக்க, முழுக்கப் பாடுபடுவார்கள். உழவுத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களும், சீரமைப்புகளும் எல்லாத் திசைகளிலும் பரவிப் பயன் தருவதற்குரிய கால்வாய்களாக இவர்கள் அமைவார்கள். ஆதாரப் பள்ளிகளில் தேறிவரும் மாணவர்களுக்காக விவசாய, வாணிபப் பயிற்சிப் பள்ளிகளும், இளைஞர்களுக்கு விவசாயக் கூட்டங்கள் நடத்த அரங்குகளும் மிக அவசியமாக நிறுவப்படுதல் வேண்டும்.

எவ்வளவு சாதகமாக இச்சங்கங்கள் செயற்பட்டாலும் இவை இன்றிருக்கும் நிலைகளில் உடனடியான புரட்சிகளை ஏற்படுத்தி விடுமென்றோ, அல்லது அற்புதங்கள் விளைவித்து விடுமென்றோ நாம் எதிர்பார்க்கக் கூடாது. பயன்கள் மிக மெதுவாகத்தான் கிடைக்கும்; ஆனால் கருத்தூன்றிய நிர்வாகத்தில் இவை நிச்சயமாகக் கிடைக்கும். எனவே இக்காரணங்களுக்காக மீக்கூறிய வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ வேண்டியதன் அவசியத்தை எவ்வளவு வற்புறுத்தினாலும் தகும்.

இச்சங்கங்கள் யாருக்கு மிக மிகத் தேவையோ, அவர்கள் தாம் இதற்கு வேண்டிய சாதனங்களைத் தோற்றுவிக்கவோ, பேணவோ, நிர்வகிக்கவோ இயலாதவர்கள். எனவே எல்லோரும் முழு அளவில் இதில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். வறுமை மிகுந்து கொண்டே போகிறது. கொள்கை இலாபம் அடிப்படைதன் மூலம், இவ்வறுமையைப் பயன்படுத்த மறுக்கும் நல்லோரும் இருக்கின்றனர். எனவே, வாழ்க்கை வழிகளைப் பெற்ற உயர் வகுப்பாரும், இத்தகைய சங்கங்களைத் தோற்றுவித்து, அவசிய முள்ள அளவுக்கு அவற்றில் பங்கு பெறவேண்டும். கிராமப் புறங்களில் பல திறப்பட்ட கருவூலங்கள் புதைந்து கிடக்கின்றன. ஆழ உழுவதனாலும், நல்ல நீர் பாய்ச்சும் விதத்தினாலும், வனங்களையும் வயல்களையும் செம்மையாகப் பயன்படுத்துவதனாலும், விதைப்பதிலும், நடுவதிலும், திராட்சை, இதர கனி வகைகள், கன்று காலிகளுக்கு வேண்டிய தீவனம் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் முன்னேற்றமான முறைகளைக் கையாள்வதனாலும் சிக்கனம், இடையறாத உழைப்பு, போதிய பண வசதி ஆகிய வற்றாலும் இக் கருவூலங்களைப் பூமியிலிருந்து நாம் அடைய முடியும். பின்தங்கிய வகுப்புக்கள், கூட்டுறவு சங்கங்களின் வாயிலாகவும், நல்ல நிர்வாகத்தின் மூலமாகவும் செல்வ நிலை எய்த முடியும். சமயச் சார்பு, ஒழுக்க இயல், நன்னெறி இவற்றை வைத்துப் பார்த்தாலும் கூட்டுறவு சங்கங்கள் மிக முக்கியமானவை. வறுமை மிகுந்து தேவைகள் அதிகரிக்க, அதிகரிக்க ஒவ்வொரு துறையிலும் ஒழுக்கம் வீழ்ச்சியடைந்து கொண்டே போகும். மிக நன்னெக்கமும், மனப்பூர்வமான உழைப்பும் கூட, உலகாயத உதவியில்லாவிட்டால், ஆத்மீகத் துறையில் எந்தவிதப் பயனும் தரமாட்டா. பெருகி வரும் ஒழுக்கக் கேடுகளை இவை தடுத்து நிறுத்தவும் முடியாது. தர்மங்களும், இவையொத்த நன்கொடைகளும், ஒழுக்க வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்துவதில் பணிபுரிய மாட்டா: பொதுவாக இவற்றால் நல்லதை விடத் தீமைகள்தாம் அதிகமாகப் பெருகும். "எவன் வேலை செய்யமாட்டானோ, அவன் உண்ணவும் கூடாது" என்ற அடிப்படையில் தான் உதவி அமையவேண்டும். உதவி தேவைப் படுவோரின் ஆற்றலையும், திறமையையும் உச்ச அளவுக்கு வளர்ச்சியடையச் செய்வதே நம் இலக்காக இருக்கவேண்டும். இந்த ஆற்றல்கள் நன்கு பயன்படுத்தப்பட்டு, அனுமதிக்கப்பட்ட அளவு செல்வம் சேர்க்கத் துணையாயிருக்க வேண்டும். சுருக்க மாக தனக்குத் தானே மேற்கொண்டும் உதவிசெய்து கொள்ள இது வழியாக அமையவேண்டும்.

ஃபெர்டினண்ட் லாஸ்ஸல்லெ

அரசு—உழைப்பாளர் கருத்தில்

ஜெர்மனியில் சமுதாயக் குடியாட்சி இயக்கத்தைத் தோற்று வித்தவர் ஃபெர்டினண்ட்—லாஸ்ஸல்லெ (1825—1864) ஆவார் 1849ஆம் ஆண்டுக்குப் பின்னர், தீவிரக் குடியாட்சிப் பற்றுளர் என்ற நிலையில் அவர் திரும்பத் திரும்ப இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு அனுப்பப்பட்டார்; இதன் பின்னர் அவருடைய சோஷலிசக் கருத்துக்களுக்காக பல்வேறு வகுப்பினரிடையே பகைமையைத் தூண்டியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டது. லாஸ்ஸல்லெ எழுதிய சோஷலிச நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 1863ஆம் ஆண்டில், 'ஜெர்மன் பொதுச்சங்கம்' என்ற ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. லாஸ்ஸல்லெ இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கீழே தரப்பட்டுள்ள பகுதி அவரைத் தொழிலாளர்களின் சார்புரிமைப் பேச்சாளராக எடுத்துக் காண்பிக்கிறது—மார்க்ஸிய வாதியாக அல்ல. எல்லோருக்கும் பொதுவான, சமமான வாக்குரிமை வேண்டும்; தொழில் துறையில் உழைப்பாளர்களுக்கு இலாபப் பங்கீட்டுத் திட்டம் இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கோரினார்; ஆனால் அரசு இருக்க வேண்டுமென்ற கருத்துக்குச் சாதகமாகவே இருந்தார் - இவ்வகையில் அவர் மார்க்ஸுடன் துல்லியமாக வேறுபடுகிறார். அவர் வகுப்புப் போராட்டக் கருத்தின் தீவிர ஆதரவாளர் அல்லராதலால், தொழிலாளர் இயக்கத்தை அரசுடன் இணைக்க வேண்டும் என்ற முயற்சியில் பிஸ்மார்க்குடன் கூடப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அவருடைய தகராறெல்லாம் முற்போக்கு பூர்ஷுவாக்குடன் தான்; அவருடைய கருத்துப்படி பூர்ஷுவாக்கள் அரசு பற்றிக் கொண்டிருந்த கொள்கை உண்மைக் குடியாட்சி சார்புடையதல்ல. என்பதுதான். இதைக் கீழ்வரும் பகுதி எடுத்துக் காட்டும்:

நேரடியான பொது வாக்குரிமை இருக்க வேண்டுமெனக் கருதும் பத்திரிகைத் துறை பூர்ஷுவா மக்கள் தொகையை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டால் போதும் என எண்ணும் பூர்ஷுவா வகுப்பில் நின்றும் இந்த அரசியல் கொள்கை காரணமாக வேறுபடுகிறது. இது மட்டுமல்ல, வாழ்க்கையில் அது வகிக்கும் நிலையின் காரணமாக, தார்மீக சக்திகளுடன் அது கொண்டிருக்கும் உறவு உயர் வகுப்பார் கொண்டிருக்கும் உறவு போன்றதல்ல. இவற்றின் பகுதியளவான விளைவுகளால், அரசின் தார்மீக நோக்கு எப்படியிருக்க வேண்டு

மென்பதிலும், பூர்ஷுவாக்களில் நின்றும் மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறது.

தன்னுடைய ஆற்றல்களைத் தானே எந்தவிதத் தடையுமின்றிப் பயன் படுத்துவதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அரசு உத்தரவாதமளிக்க வேண்டுமென்பதே அரசுடைய தார்மீகக் கொள்கை பற்றி பூர்ஷுவா வகுப்புக் கொண்டிருக்கும் கருத்தாகும்.

நாம் அனைவரும் பலமும், அறிவாற்றலும், கல்வியும், செல்வமும் சமமாகப் பெற்றிருந்தோமானால், இது போதுமான, தார்மீகமான கருத்தென ஏற்றுக் கொள்ளலாம்.

மேற்சொன்ன வகைகளில் சமமாக இல்லை—இருக்கப் போவதும் இல்லை; எனவே இக்கருத்து திருப்தி தருவதாக இல்லை; ஆகவே இது ஆழிய ஒழுக்கக் கேடுகளைத்தான் விளைவக்கும். ஏனென்றால் வலிமை மிக்கவன், அறிவாற்றல் படைத்தவன், செல்வமுடையவன் இவ்வகைகளில் பலவீனமானவனைச் சுரண்டுவதற்குத்தான் இது வழி கோலும்.

உழைப்பாளர் கருத்தில் அரசு எப்படியிருக்க வேண்டும்? மேற் சொன்னதற்கு மாறுக—அதாவது தனிப்பட்ட மனிதனின் சக்திகளை அவனே தடையின்றி, சுதந்திரமாகப் பயன்படுத்துவது மட்டும் போதாது; ஒழுங்கமைவும், தார்மீக உணர்வும் கொண்ட ஒரு சமுதாயத்தில் இன்னும் சிலவும் இதில் சேர்த்துப் கொள்ளப் படவேண்டும். சமுதாயத்தின் மொத்த நலங்களிலே அக்கறையும், சமுதாய வளர்ச்சியிலே பரஸ்பர ஒத்துழைப்பும் சேர வேண்டும்.

இந்த வேற்றுமையின் காரணமாக, அரசின் தார்மீக இலக்கு தனிமனிதனின் சொத்தையும், சுதந்திரத்தையும் காப்பதாகத் தான் முற்றமுற்ற இருக்க வேண்மென பூர்ஷுவா வகுப்புக் கருதுகிறது.

இது போலீஸ்காரரின் கருத்து; நண்மக்களே, இது போலீஸ் காரரின் கருத்து! ஏனென்றால் இது, அரசை போலீஸ்காரரின் கண்ணோட்டத்தில்தான் கணிக்கிறது; அவருடைய மொத்தக் கடமையும் திருட்டையும், கொள்ளையையும் தடுப்பதானே. துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய போலீஸ்காரர் கருத்து உண்மையான முற்போக்காளரிடையே மட்டுமல்ல, குடியாட்சிப் பற்றுடையோர் எனச் சொல்லப்படுவோரிடையும் காணப்படுகிறது. பூர்ஷுவாக்கள் தங்கள் கருத்தைத் தர்க்க ரீதியாக இறுதிநிலை வரை எடுத்துச் சென்றால், முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டே யாக வேண்டும். அதாவது திருடர்களும், கொள்ளைக்காரர்களும் இல்லாமற் போய்விட்டால், அரசே தேவையில்லை என ஆகிவிடும்!

ஆனால் அரசின் இலட்சியம் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து முற்றிலும் வேறானது; அரசின் உண்மை இயல்பையும், இலக்கையும் நாம் காண்கிறோம்.

சரித்திரம் என்பது, நன்மக்களே, இயற்கையுடன் நடக்கும் போராட்டமேயாகும். வரலாற்றின் துவக்க காலத்தில் மனித இனம் களத்திலே தோன்றியபோது, கொடுந்துயர், அறியாமை, வறுமை, பலவீனம் ஆகியவற்றால் ஏற்பட்ட அடிமைத்தன்மை இவையனைத்திலும் நாம் கட்டுண்டு கிடந்தோம். இந்த பலவீனங்களோடு நாம் படிப்படியாக எப்படி வெற்றி கண்டோம் என்பதுதான் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டும் சுதந்திரத்தின் வளர்ச்சியாகும்.

இப் போராட்டத்திலே அவனவன் அவனுடைய வேலையை மட்டும் பார்த்துக் கொண்டால் போதும் என்ற கொள்கை கடைப் பிடிக்கப் பட்டிருக்குமானால் நாம் ஓரடிகூட முன்னேக்கி எடுத்து வைத்திருக்க முடியாது; அக்கொள்கையை இப்பொழுதும் செயல்படுத்தினோமானால் எதிர் காலத்திலும் முன்னேற்றப் பாதையில் நாம் ஓரடிகூட எடுத்து வைக்க முடியாது.

அரசின் பொறுப்பான பணி சுதந்திரத்துக்குரிய வளர்ச்சிக்கு உழைத்துக் கொண்டே போவதுதான்; அதாவது மனித இனத்தின் வளர்ச்சிக்காக அது முற்றிலும் சுதந்திரம் அடைவது வரை பாடுபடுவதுதான். அரசு என்பது தனிப்பட்டோருடைய தார்மீக ஒன்றிணைப்புத்தான்; இந்த ஒன்றிணைப்பில், அதில் அடங்கியிருக்கும் தனிப்பட்டோர் அனைவரின் வலிமையும் கோடி மடங்காகப் பெருக்கப்படுகிறது.

எனவே, பூர்ஷுவாக்களின் கருத்துப்போல அரசின் இலக்கு தனி நபர்களின் சுதந்திரத்தையும், சொத்தையும் காப்பது மட்டுமல்ல; மாறாக, அரசின் இலக்கு துல்லியமாக இதுதான்: தனி மனிதர்களால் அடையமுடியா குறிக்கோள்களையும், பெற முடியாத வாழ்க்கை நிலையையும், இந்த ஒருங்கிணைப்பின் மூலமாக, அவர்கள் ஒன்று சேர்ந்து பெறச் செய்வதுதான்: தனி நபர்களாக அவர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒருக்காலும் கிட்டியிருக்க முடியாத அளவு கல்வியும், ஆற்றலும், சுதந்திரமும் தேடுவதற்கு அவர்களை வலிமையுடையவர்களாக்குவதுதான்.

இவ்வாறாக, அரசின் இலக்கு மனிதனைப் படிப்படியான, ஆக்க பூர்வமான வளர்ச்சி நோக்கி அழைத்துச் செல்வதுதான்; வேறு விதமாகச் சொல்வதென்றால் — மனிதன் எந்தப் பண்பாட்டு வாழ்வு பெறத்தகுதியும், திறமையும் படைத்திருக்கின்றானே, அத்தகைய வாழ்வை நடைமுறையில் கொண்டு வருவதுதான் —

அதாவது மனித இனம் சுதந்திரம் பெறுவதற்குரிய பயிற்சியும், வளர்ச்சியும் தருவதுதான் அரசின் இலக்காகும்.

அரசின் மெய்யான, தார்மீகமான இலக்கும், அதன் உண்மையான, உயர்ந்த செயல்முறைத் திட்டமும் இதுதான். ஆதி காலத்தில் தொடங்கி, வரலாற்று நிகழ்ச்சிகளின் ஆற்றலால், அரசு விரும்பியோ விரும்பாமலோ, சில சமயம் ஆட்சித் தலைவர்களின் விருப்பத்துக்கு மாறுகக்கூட, இத்தகைய பயிற்சியும், வளர்ச்சியும் இருந்தே வந்திருக்கின்றன.

ஆனல் பொதுவே சமுதாயத்தின் கீழ் வகுப்பினராக இருக்கும் உழைப்பாளர்கள் தனி நபர்கள் என்ற முறையில் தங்களுடைய ஆதரவற்ற நிலையைக் கண்டு மேற் சொன்னவைதான் அரசின் இலக்காக இருத்தல் வேண்டும் என்ற ஓர் ஆழிய உணர்வு கொண்டவர்களாகவே இருந்திருக்கின்றனர் — அதாவது தனிப் பட்ட மனிதன் என்ற நிலையில் தான் பெறமுடியாத வளர்ச்சியை, தனிப்பட்ட நபர்களோ ஒருங்கிணைத்து அந்த ஒருங்கிணைப்பு மூலமாக அத்தகு வளர்ச்சி நான் பெறுமாறு செய்வதுதான் அரசின் இலக்காக இருக்க வேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்தே இருக்கின்றனர்.

எனவே உழைப்பாளர் வகுப்பின் இக்கருத்தை வைத்து ஆட்சி செலுத்தும் அரசு, முந்திய அரசுகளைப்போல், சுற்றுச் சார்புகளின் நிர்ப்பந்தத்தினல் தன் விருப்பத்துக்கு எதிராகச் செயல் பட கட்டாயப்படுத்தப்பட மாட்டாது. மாருக, அது பூர்ண உணர்வோடு, தெளிவான நோக்கோடு, நாம் மேற்கூறிய தார்மீக அடிப்படையைத் தன் செயல்முறைத் திட்டமாக்கிக் கொள்ளும். இதற்கு முன்னர் தனக்கு எதிரான எண்ணமுடையோரிடம் இருந்து முழுமையற்ற சிறு சிறு கூறுகளாக அரசு பெற்று வந்த வளர்ச்சியை, இனி தடையில்லா ஆர்வத்துடனும், பூரண உடன்பாட்டுடனும் அது பெற்றுக்கொள்ளும். ஆத்மீக வளர்ச்சி பெரிதும் மேம்பாட்டையும் உலக வரலாற்றிலேயே ஈடிணையில்லாத அளவுக்கு பண்பாடும், பெருமகிழ்வும், நலமும், சுதந்திரமும் வளர்ந்தோங்கும். இந்த வளர்ச்சியோடு ஒப்பிட்டால், முற்காலத்தில் இருந்த மிக சாதகமான நிலைகள்கூட சத்தியத்தின் மங்கிய நிழல்களாகத்தான் தோற்றமளிக்கும்.

நன் மக்களே! இதுதான் அரசு பற்றித் தொழிலாளர் கொண்டிருக்கும் கருத்து; அரசின் இலக்கு என்னவாயிருக்கும் என்ற கருத்து, பூர்ஷுவா கருத்துக்கு முற்றிலும் மாறுனது என்பதைக் காண்பீர்கள். குடிமக்கள் எல்லோருக்கும் அரசை இயக்கும் உரிமையிருக்க வேண்டும் — அதாவது யுக்தி வயது

வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையிருக்க வேண்டும் என்ற இக்கருத்தும், பூர்ஷுவாக் கருத்தும் வேறுபாடானவை.

உங்களுக்கு இதுவரை நான் விளக்கி வந்த கருத்துத் தொகுப்புத்தான் தொழிலாளர் வகுப்பு, அரசு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கையாகக் கருதப்பட வேண்டும். பிப்ரவரி 1848இல் துவங்கும் இக்காலக் கட்டம்தான் இக்கருத்தின் அடிப்படையிலான அரசைத் தோற்றுவிக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளது. வரலாற்றின் மிகப் புகழ் வாய்ந்த பணியைக் காணும் கால கட்டத்தில் நாம் பிறந்தோம்; அப்பணி நிறைவேறுவதில் பங்குபெற நாமும் அனுமதிக்கப் பட்டோம் என்பதற்காக நம்மை நாமே பாராட்டிக் கொள்ளலாம்.

யொகன் பேட்டர் ஹேபல்

பல்வகையான மழைகள்

யொகன் பேட்டர் ஹேபல் (1760 — 1826) தென்மேற்கு ஜெர்மனியில் ஊர்ச் சமய குருவாகவும், ஆசிரியராகவும் பணியாற்றினர். தென் ஜெர்மன் பிராந்திய மொழியில் முதன் முதலில் கவிதை இயற்றியவரும் அவரே; கதை சொல்வதில் சிறந்த ஆற்றல் படைத்தோராக அவருடைய உரைநடை எழுத்தோவியங்களில் விளங்குகிறர். நாம் கீழே தந்திருக்கும் மாதிரிப் பகுதி காண்பிப்பதுபோல, அவருடைய கதைகளும், விளக்கவுரைகளும் போதனை அம்சங் கொண்டவையாக யிருந்தன. அவருடைய எழுத்துக்களில் எளிமையும், தெளிவான போக்கும் மனங் குளிரச் செய்யும் நகைச் சுவையும் கூரறிவும் இணைந்திருந்தன. எளிமையான, அன்ருட வாழ்க்கையிலிருந்தே தம் எழுத்துக்கு வேண்டிய மூலக் கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும், அவர் தேர்ந்தெடுத்தார்; எனினும் அவற்றை நமக்கு அமைத்துத் தரும் பாணியினல், அவருடைய கதைகள் ஆழிய உட்பொருளைப் பெற்றுச் சிறக்கின்றன. ஹேபலின், "ரெனிஷ் குடும்ப நண்பன்" என்னும் ஐந்தொகுதியில் (பஞ்சாங்கத்தில்) 1808—1811இல் இக்கதைகள் வெளியாயின.

நம் வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும் குளிர நனைத்து, "கனியுங் கிழங்கும் தானியங்களையும் கணக்கின்றித் தரும்" மழை தான் சிறந்த மழை; இதைப் பற்றி மறுப்பேயில்லை," என்று உதவியாளர் கூறுகிறர். "ஆனல் வானத்திலிருந்து மழைக்கு பதிலாக கந்தகமோ, குருதியோ, கற்களோ, அல்லது போர் வீரர்களின் தொப்பியோ பெய்ய ஆரம்பித்து விட்டால், நாம் என்ன செல்வது?" என்று உதவியாளர் கேட்கிறர்.

கந்தக மழை

கடும் மழையோடு சேர்ந்து வரும் வசந்த காலப் புயல்களுக்குப் பின்னர், மழைத் தண்ணீர் தேங்கி நிற்பதனல் உண்டாகும் குட்டைகளின் ஓரங்களில் மாவாக அரைக்கப்பட்ட கந்தகத்தைப் போல ஒரு வித மஞ்சள் நிறமான பொடியை நாம் பல தடவை பார்த்திருக்கிறோம். புயல்களே மேகங்களில் உண்டாகும் கந்தக ஆவியின் விளைவுதான் என்றும், இக்கந்தகமே புயல் வீசும் சமயம் மழையுடன் சேர்ந்து பூமிக்கு வருகிறது என்றும் பலர் நம்புகின்றனர். முன்னர் ஒரு தடவை ஸோடம், கொமொர்ரா

(என்ற இரு தீய நகரங்கள்) மீது நெருப்பும், கந்தகமும் வானத்திலிருந்து பொழிந்ததை இவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். முதலில், நாம் ஸோடம், கொமொர்ரா நகரங்களில் வாழவில்லை. இதற்கு இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். இரண்டாவது: பொருள்கள் இப்படியும், அப்படியும் தோன்றலாம். நாம் பல தடவை நஷ்டத்துடன் கண்டுபிடித்திருப்பது போல, அவை உண்மையில் வேறென்னவாகவோ இருக்கும். இது போலவே, குட்டைகளில் ஓரங்களில் காணப்படுவது கந்தகமல்ல; தீயிலிடும் போது அவை எரிந்தாலும் சரியே! ஆனால் இது மகரந்தப்பொடிதான். டுலிப் மலரினுள்ளே சின்னஞ் சிறு ஆறு தூண்கள் வட்ட வடிவமாக நிற்கின்றன; ஒவ்வொன்றின் உச்சியும் கருத்த பொடியால் மூடப்பட்டிருக்கும். அதனால் தான் டுலிப்பை மோந்து பார்க்கும் போது, நம் மூக்கு கருப்பாகிவிடுகிறது. அல்லிப் பூவில் இந்தப் பொடி மஞ்சளாக இருக்கும். அதனால் இதை மோந்து பார்க்கும் போது நம் மூக்கு மஞ்சளாகி விடுகிறது. இது தான் மகரந்தப் பொடி. எல்லா மலர்களிலும் இது இருக்கிறது; ஏனென்றால் மலரிலிருந்து பழமும், விதையும் உற்பத்தியாக வேண்டுமென்றால் இது இன்றியமையாத தேவையாகும். இதனால் வசந்த காலத்தில் மரங்களெல்லாம் பூத்துக் குலுங்கும் போது கடும் மழை பெய்தால், அம்மழை இந்தப் பொடியை மலர்களிலிருந்து கரைத்துக் கொண்டு வந்து விடுகிறது; மலர்களிலே மழை கடுமையாகப் பெய்து விட்டால், அந்த ஆண்டு பழங்களோ எதிர்பார்க்க வேண்டாம் என்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இப்படி நிறைப் பூக்கும் மரங்கள் ஒன்று சேர்ந்து நின்று, அவற்றின் மீது மழை பெய்யும்போது, அம்மழை ஏராளமான மகரந்தப் பொடியை அடித்துக் கொண்டு வருகிறது. இது கீழே சேகரமாகி. மழை நீர் ஆவியாகிப் போனவுடன், தரையில் தங்கிவிடுகிறது. இதுதான் கந்தக மழை எனக் கருதப்படுவது. புயற் காற்றுக் கடுமையாக இருக்கும் வேளில் காலத்திலும், நாம் கந்தக மழையைப் பார்க்க முடியாது; ஏனென்றால் அக்காலங்களில் மரங்கள் மலர்களுடன் இருப்பதில்லை. அப்பொழுதுதான் ஆப்பிள் பழங்களும், கொட்டைகளும் கனத்த கிளைகளிலிருந்து மழையாகக் கொட்டும்; ஆனால் இந்தக் கற்பனைக் கந்தகம் அப்பொழுது கொட்டுவதில்லை.

குருதி மழை

வசந்த காலத்திலும், கோடை காலத்திலும் சில சமயம் மழைத் துளிகளைப் போன்று சில சொட்டுகளைக் காண்கிறோம். ஈரமாகவோ, காய்ந்தோ இருக்கும், இவை இலைகளிலோ, அல்லது ஏதாவது இலேசான நிறங்களுடைய பொருள்கள்—உதாரண

மாக சாயமேற்றுவதற்குப் பரப்பப்பட்டிருக்கும் துணிகள் மீதோ காணப்படும். இது எங்கிருந்து வந்திருக்கக் கூடும் என்று மக்கள் அறியாததாலும், இயற்கையான ஒன்றை விட, இயற்கைக்கு அப்பால் பட்டதையே அவர்கள் நம்புவதற்கு விரும்புவதாலும், அவர்கள் சுருக்கமாக இரத்த மழை பெய்திருக்கிறதென்று சொல்லி விடுகிறார்கள். இப்படி இரத்த மழை பெய்வது, இரத்தம் சிந்தும் போருக்கு அடையாளமாம்.

மஞ்சள் நிறமாகக் காணப்படுவதெல்லாம், கந்தகம் இல்லை யென்பது போல, செந்நிறமாக இருப்பதெல்லாம் இரத்தமும் இல்லை. இத்தடவை அதற்கு விளக்கம் இது தான். குளிர் காலம் முழுவதிலும் வேலியிலோ, அல்லது மரக்கிளையிலோ ஒட்டிக் கொண்டிருந்த சின்னஞ் சிறு முட்டையை, வசந்த காலத்தில் கதிரவனின் வெப்பம் குஞ்சு பொரிக்கச் செய்கிறது. இது சின்னஞ் சிறு கம்பளிப்புழுவாக வெளிவருகிறது. சில வாரங் களுக்கப்பால், அது கொழுக்கத் தின்று பெரிதாக, உருண்டை யாக ஆனவுடன் இக்கம்பளிப் புழு உயரமான இடத்துக்கு ஊர்ந்து சென்று, தன்னுடைய வால்புறத்தல் பற்றிக் கொண்டு அந்த இடத்தில் தலைகீழாகத் தொங்குகிறது. பிறகு தன் மேல் தோலை உரித்தெறிந்து விட்டுத் தலையும், காலும், இறக்கையும் இல்லாத கூட்டுப்புழுவாக மாறுகிறது. இதைப் பார்த்து இன்னும் எது என்னவாக உருவெடுக்கப் போகிறது என்று சொல்ல முடியாது. இன்னும் சிறிது காலத்துக்குள் அதன் தோல் உரிகிறது; அதன் வட்டமான, தடிப்பான பின்புறத்தில் சருகு போன்ற இறக்கைகளுடன் அது வெளிப்படுகிறது. இப்பொழுது தான் அது வண்ணத்துப் பூச்சியாக (வண்ணத்திப் பூச்சியாக) விரும்புகிறது. சில மணி நேரம் அது ஆடாமல் அசையாமல் இருக்கிறது; அப்பொழுது அதன் அழகான, வண்ண இறக்கைகள் முகூர்த்துப் பெரிதாக வளர்ந்து விடுகின்றன. அதன் பின்புறத்தி லிருந்து ஆறு முதல் எட்டுத் துளிகள் தரையில் விழுகின்றன. இப்பொழுது வண்ணத்துப் பூச்சி முழு உருவம் பெற்றுவிட்டது; காற்றிலே சுற்றிச் சுற்றி வருகிறது; மலருக்கு மலர் உற்சாக மாகப் பறந்து செல்கிறது. அழகில்லாத, இகழ்வான ஒரு கம்பளிப் புழுவை, கவினுருவும் களிப்புணர்வும் கொண்ட வண் ணத்துப் பூச்சியாக இறைவனால் மாற்ற முடியும். வசந்த காலத் தில் வேலிகளையும், மரங்களையும் ஆயிரக்கணக்கான முட்டை களைக் கொண்ட வலை போன்ற பைகள் மூடிக்கொள்ளும்போது, கதிரவனின் வெப்பம் எல்லா முட்டைகளையும் ஒரே காலத்தில் குஞ்சு பொரிக்கச் செய்துவிடுகிறது. இவற்றில் உயிர் மிஞ்சுவன அனைத்தும், ஏராளமான உணவுப் பொருளிருக்குமானால்—ஒரே நேரத்தில் முழு வளர்ச்சியடைந்து, ஒரே காலத்தில் கூட்டுப்

புழுக்களாக மாறி, அவற்றிலிருந்து ஒரே நேரத்தில் வண்ணத்துப் பூச்சியாக மாறுகின்றன. இம்மாதிரிப் பல கூட்டுப்புழுக்கள் ஒரு சேர இருக்கும்போது, அவை ஏராளமான சிவப்புத் துளிகளை வெளிப்படுத்திவிட்டு, பறந்து செல்கின்றன. ஒரு தோட்டத்தில் இவ்வாறு நூறு கூட்டுப் புழுக்கள் சேரும்போது, அவை அறுநூறு முதல் எண்ணூறு வரையிலும் செந்துளிகளை வெளிப்படுத்துகின்றன. இது தான் நாம் கற்பனையாகப் பார்க்கும் மழை.

தவளை மழை

தவளைகளாக மழை பெய்வதாகவும் மக்கள் சொல்வார்கள். ஆனால் வானத்திலிருந்து மழையோடு சேர்ந்து தவளைகள் வருவதை எவரும், எப்பொழுதும் கண்டிருக்கவே முடியாது. வேனிற் காலத்தில் தொடர்ந்து வெப்பமும், சூடும் இருக்கும்போது ஒரு வகையான நிலத் தவளை அருகேயிருக்கும் வனங்களில் போய் ஒதுங்குகின்றன; ஏனென்றால் அங்கே அத்தவளைகளுக்குக் குளிர்ந்த, ஈரமான தங்குமிடம் கிடைக்கிறது, வாழ்கின்றன. இலேசான மழை விழத் துவங்கியதும் அவை ஏராளமாக வெளியே வந்து குளிர்ச்சியான ஈரப்புல்லில் புத்துணர்வும், புத்தூக்கமும் பெறுகின்றன. இத்தகைய நிலப்பகுதிக்குச் செல்லும் எவரும், முன்னர் ஒரு தவளை கூட இல்லாத இடத்தில் திடீரென்று ஏராளமான சிறு, சிறு, தவளைகள் காணும்போது இத்தனை தவளைகள் எங்கேயிருந்து வந்திருக்கக் கூடும் என்று அவர்களால் கண்டு கொள்ள முடியவில்லை; எனவே தவளையாக மழை பெய்திருக்க வேண்டும் என்று அவர்கள் கற்பனை செய்து கொள்கின்றனர். தங்களுக்குப் புரியாதவற்றைப் பற்றிச் சிந்திக்கவோ, அறிவார்ந்த விளக்கங்களைத் தேடவோ, ஆராய்ந்து பார்க்கவோ சோம்பல் படும் மக்கள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத எத்தனையோ விஷயங்களை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

கல் மழை

ஆனால் கல் மழை முற்றிலும் வேறானது; இது கற்பனையல்ல. ஏனென்றால் இது பற்றிப் பல பண்டைய நம்பத்தக்க அறிவிப்புக்களும், தற்காலத்திய நிரூபணங்களும் இருக்கின்றன. சில சமயம் கனமான கற்கள் தனித்தனியாகவும்; சில சமயம் பற்பல அளவுள்ள கற்கள் ஒன்று சேர்ந்தும் வானத்திலிருந்து முன்னெச் சரிக்கை எதுவுமின்றி விழுந்திருக்கின்றன. இது பற்றிய மிகப் பண்டையக் குறிப்பு கி. மு. 426ஆம் ஆண்டைச் சார்ந்தது. அந்த ஆண்டு திரேசில் (இப்பொழுது துருக்கி மாகிலமான ரூமீலி) நீல

வானிலிருந்து ஒரு பெருங் கல் விழுந்தது. அந்த நாளிலிருந்து இன்று வரை, 2267 ஆண்டுகளாக நமக்குத் தெரிந்த வரை முப்பத்தெட்டுத் தடவை கல்மாரி பெய்திருக்கிறது! சான்றாக 1492 நவம்பர் நான்காம் தேதி 260 பவுண்ட் எடையுடைய ஒரு கல் என்ஸிஸ்ஹெமில் விழுந்தது. இருநூறும், முந்நூறும் பவுண்ட் எடையுடைய இரு கற்கள் 1672இல் இத்தாலியில் வெரோனு அருகே விழுந்தன. பண்டைக் காலம் பற்றிக் கதை சொல்வது எளிதானது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவை உண்மையா என்று யாரிடம் போய்க் கேட்பது? எனினும், மிக அண்மைக்கால அனுபவங்கள் இப்பண்டைய நிகழ்ச்சிகளும் உண்மை என்று உறுதிப்படுத்துகின்றன. 1789, 24—7—1790 ஆகிய இருதடவைகள் பிரான்சிலும், 1794 ஜூன் 16ஆம் நாள் இத்தாலியிலும் உயரேயிருந்து பல கற்கள் விழுந்தன. 1803, ஏப்ரல் 26ஆம் தேதி பிரான்ஸ் ஒர்னே மாநிலத்தில், கூக்ள் என்னும் கிராமத்தில் இரண்டாயிரம், மூவாயிரம் கற்கள் பெரு முழக்கத்துடன் வானிலிருந்து வீழ்ந்தன.

மொரேவியாவில் 1808 மே 22ஆம் தேதி வானிலிருந்து கற்கள் வீழ்ந்தன. ஆஸ்டிரியப் பேரரசர் இதைப்பற்றி நிபுணர் ஒருவர் விசாரணை நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டார். நிபுணர் கண்ட முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

காலை ஐந்தரை மணிவரை நன்றாகத் தானிருந்தது. சர்ச்சுக்குப் போய்க்கொண்டிருந்த ஷ்டான்னர்ன் ஊர் மக்கள் பழக்கமாகி விட்ட மூடுபனிபற்றி எதுவும் சிந்திக்கவில்லை. திடீரென்று மூன்று பலத்த சப்தங்கள் கேட்டன; அவர்கள் காலுக்குக் கீழேயிருந்த நிலமெல்லாம் நடுங்கிற்று. உடனே பனிப்படலம் நெருக்கமாகி முன்னே பன்னிரண்டடிக்கு மேல் பார்க்க முடியாதபடியாகி விட்டது. இதன் பின்னால் எட்டத்தில் வெடி வெடிப்பதைப் போன்ற சப்தங்கள் கேட்டன. பெரும், பெரும் முரசுகள் அதிர்வன போலவும் இந்த சப்தங்களிருந்தன. இந்த முரசொலியும், 'உஷ், உஷ்' என்ற சீழ்க்கை (சீட்டி)யடிக்கும் சப்தமும் தெலிஷிலிருந்து துருக்கிய இசை இசைத்துக் கொண்டு கோட்டைக் காவற் படையினர் வருவது போன்றிருந்தது. வெடிச் சத்தத்தைப் பற்றி அவர்கள் எதுவும் எண்ணிப் பார்க்கவில்லை. இதற்குள் மழை ஆரம்பித்தது: நான்கு மணி நேரம் நடந்து சென்றால் எவ்வளவு தொலைவு கடக்க முடியுமோ, அவ்வளவு தூரத்துக்கு ஒரே மழை. தோளிலோ சாக்கோ, கெட்டியான மேலங்கியோ எதுவும் இம் மழைக்கு எதிரே பயன்படாது. இதைப் பார்த்து மக்கள் ஆச்சரியமும், பீதியும் கொண்டனர். எண்ணிறந்த கற்கள், குமுறல், 'உஷ், உஷ்' என்ற ஒலி ஆகியவற்றுக்கிடையே மேலிருந்து நேராகவும், சாய்ந்தும் விழ ஆரம்பித்தன. இவை ஒரு வாதுமைக் கொட்டையி

லிருந்து, குழந்தைத் தலையின் பருமன் வரை பல்வேறு அளவு களிலிருந்தன. நிறையில் கால் அவுன்சிலிருந்து, பத்து பவுண்ட் வரையிருக்கும். மக்களில் பலர் இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தார்கள்; சிலர் அக்கற்கள் விழுந்ததும் ஓடிப் போய் எடுத்தனர். கற்கள், வெது வெதுப்பாக—இளம்சூட்டோடு இருந்தன. அவற்றின் கனத்துக்குத் தக்கபடி முதலில் விழுந்த கற்கள் பூமிக்குள் ஆழ்ந்து அமுங்கி விட்டன. சில கற்கள் இரண்டடி ஆழத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. பின்னர் விழுந்த கற்கள், சிரமப்பட விரும்பவில்லை போலும்—நிலத்தில் விழுந்த இடத்திலே கிடந்தன. கற்களின் உள்ளே சாம்பல் நிறத் தில், மணல் போன்ற பொருளிருந்தது; மேற்புறம் பளபளப்பாக வும், கருப்பாகவும் இருந்தது. மொத்தம் எத்தனை விழுந்தன என்று எவருக்கும் சொல்ல முடியவில்லை. பல கற்கள் பயிரான நிலங்களிலே விழுந்தன; இன்னும் அவை அங்கே மண்ணிலே மறைந்து கிடக்கலாம். கண்டுபிடிக்கப்பட்ட கற்களையெல்லாம் ஒன்று திரட்டி நிறுத்ததில் மொத்தம் இருநூற்றியெண்பது பவுண்ட் எடையிருந்தது. இவ்வளவும் ஆறு முதல் எட்டு நிமிடங் கள் தான் நீடித்தது; சில மணி நேரத்துக்குப் பின்னர் பனி விலகி விட்டது; உச்சிப் பொழுதுக்குள் எல்லாம் பளபளப்பாகவும், அமைதியுமாகி விட்டன. அங்கு எது நடந்ததென்றே யாரும் சொல்ல முடியாது. இவைதான் உண்மைகள். வானிலிருந்து வீழும் இத்தகைய கற்கள் பற்றிய விளக்கம் கேட்டால், அறிஞர் கள் இதை இரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறார்கள்; "தங்களுக்குத் தெரியா"தென்று சொல்லி விடுகிறார்கள்.

தொப்பி மழை

இவற்றிலெல்லாம் புரியாத புதிர், ஒரு தடவை போர் வீரர் களின் தொப்பியாக மழை பெய்ததாம். லாக்ஸனி நாட்டில் ஏதோ ஒரூரில் மலைக்கருகேயிருந்த தன் வயலில் ஒருவன் வேலை செய்து கொண்டிருந்தான். திடீரென்று வானிலே புயற் காற்றின் சின்னங் கள் தோன்றின; தொலைவில் இடி இடிக்கும் ஓசை கேட்டது; எங்கும் இருள் கவிய ஆரம்பித்தது; பெரிய கருமேகம் வானத் தில் படர்ந்தது; என்ன நடக்கிறது என்று அந்த நல்ல மனித னுக்குத் தெரிய வருவதற்கு முன்னரே அவனுக்கு வலப்புறமும் இடப்புறமும் அவனைச் சுற்றியும் அவன் மீதும் மேலே இருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொப்பிகள் விழலாயின. வயல் முழுவதும் கறுப்பாகி விட்டது; வயலுக்குரியவனுக்குத் தேர்ந்தெடுக்க பல நூறு தொப்பிகள் கிடைத்து விட்டன! திகைப்படைந்தவனாக அவன் வீட்டுக்கு ஓடி எல்லோரிடமும் நடந்ததைக் கூறினான். தன் கூற்றுக்கு ஆதாரமாகக் கைகள் கொள்ளுமளவுக்கு அவன்

தொப்பிகளைக் காண்பித்தான். தொப்பி தயாரிப்பாளருக்கு இது பிடிக்காமல் தானிருந்திருக்கும்! சில நாட்களுக்குப் பிறகு விவரம் தெரிய வந்தது. மலைக்குப் பின்னேயிருந்த சமவெளியில் சிப்பாய்கள் ஓரணிப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு சுழற்காற்று எழுந்து, சிப்பாய்களின் தலைகளிலிருந்து தொப்பிகளைக் கிளப்பி, மலைக்கு அப்பால் விழும்படிக் காற்றிலே செலுத்தியிருக்கின்றன. இதுதான் அந்த ஊர் மக்கள் சொல்லும் கதை. இது அசாத்தியமானதல்ல; ஆனால் இப்படிச் செய்வதற்கு மிகப் பலமான சுழற் காற்றுத் தேவைப்படும்; இதை ஏற்றுக் கொள்வதற்கும் மிகப்பலமான நம்பிக்கை தேவைப்படும்.

பிரபஞ்ச அமைப்புப் பற்றி ஒரு பொது ஆய்வு:

தமக்குப் பழக்கமாகி விட்ட தொலைவிலுள்ள மலைகளையும் மரங்களையும் தம் குடும்பத்தாருடன் வீட்டில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டோ அல்லது "ஈகில் இன்னில்" ஒரு கையில் கோப்பையை வைத்துக் கொண்டே இருக்கும் வாசகர் மனச் சாந்தியுடன் எதைப் பற்றியும் சிந்திக்காது இருப்பார். ஆனால் சூரியன் வைகறையில் பெரும் மாட்சியுடனும், பேரமைதியுடனும் உதிக்கும்போது அது எங்கிருந்து வருகிறது என்பது அவருக்குத் தெரியாது; மாலையில் அது அடையும்போது அது எங்கே போகிறது; இரவு முழுவதும் தன் ஒளியை எங்கே மறைத்து வைத்திருக்கிறது; அல்லது எந்த இரகசியப் பாதைகள் வழியாகத் தான் மீண்டும் உதிக்க வேண்டிய மலைகளுக்குத் தடங் கண்டு செல்கின்றதென்பதும் அவருக்குத் தெரியாது. சில சமயம் மங்கலாகவும் மெலிந்தும், சில சமயம் வட்டமானதாகவும் முழுமையானதாகவும் உள்ள நிலவு இரவினூடே உலவும் போதும் இது எப்படி நிகழ்கிறது என்பதும் அவருக்குத் தெரியாது. விண் மீன்களால் நிறைந்து விளங்கும் வானத்தை அவர் கூர்ந்து நோக்கும்போது, அவற்றுள் ஒன்று மற்றவற்றைவிட அழுகோடும், மகிழ்வோடும் மின்னுவதை அவர் காணும்போது, அவை அனைத்தும் தம் நன்மைக்காகவே அங்கே இருக்கின்றன என்று அவர் எண்ணுகிறார்; இருப்பினும் அவை எதற்காக இருக்கின்றன என்பதை உண்மையாகவே அவர் அறியமாட்டார். அன்பு நண்பா, இதைப் போன்று ஒன்றை தினமும் பார்த்துக் கொண்டு, ஆனால் அது எதைக் குறிக்கிறது என்று வினவாது இருப்பது பாராட்டுக் குரியதல்ல. இறைவனின் வரம்பில்லாத பேராற்றலையும், அன்பு உடைமையையும் பொதிந்து நிற்கும் வானம் ஒரு பெருநூல்; மூட நம்பிக்கையையும், பாவத்தையும் அழிக்க வல்ல பல மருந்துக் குறிப்புகள் அப்பெரு நூலில் ஊர் விண்மீன்கள் தாம் அந்நூலின்

பொன்னெழுத்துக்கள். ஆனல் இது அரபி மொழியிலே எழுதப் பட்டிருக்கிறது: மொழி பெயர்ப்பாளர் ஒருவர் இல்லாமல் இதை நாம் புரிந்து கொள்ளமுடியாது. ஆனல் ஒருவர் இந்நூலை—இந்தத் தோத்திர நூல்களை—ஓதி உணரத் தெரிந்து கொண்டால், இரவில் தனியே தெருக்களில் நிற்கும்போது நேரம் போகமாட்டேன் என்கிறதே என்று நினைக்கமாட்டார்; இக்காட்சியைக் கண்ட பிறகு, இருள் நீமை செய்ய அவரை ஆசைகாட்டி அழைத்தாலும் அவரால் தீயன செய்ய இயலாது.

அலெக்ஸாண்டர் ஃபன் ஹூம்போல்ட்

அமெரிக்காவின் நிலநடுக்கோட்டுப் பகுதிகளுக்குப் பயணங்கள்

இயல் நூல் வல்லுநரான அலெக்ஸாண்டர் ஃபன் ஹூம்போல்ட் (1769—1859) தம்முடைய சகோதரர் வில்ஹெல்மைப் போலத் தொன்மையான ஜெர்மன் மரபில் ஊறித் திளைத்தவர். ஆனால் இயற்கை ஆராய்ச்சித் துறைக்கும் தம் வாழ்க்கையில் தாராளமாக இடம் ஒதுக்கினர். தம்முடைய பிரெஞ்சு நண்பர் போன்ப்ளாந் துடன் அவர் மத்திய அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் 1799—1804இல் பெரும் பயணம் மேற்கொண்டார். இப்பெரும் பயணத்தைப் பற்றிய நூல் முப்பது பாகங்களில், 1811 முதல் 1826 வரை பாரிசில் எழுதப்பட்டது; தாம் எடுத்துக் கொண்ட பொருள் குறித்து அவருக்கிருந்த அரும் புலமையை இந்நூல் எடுத்துக் காண்பிக்கிறது. அடிமை முறை பற்றிய கீழேயுள்ள பகுதி ஸ்பானிய வெற்றி, சமயப் பரப்பாளர் ஆட்சி ஆகியவை குறித்து வரலாற்று ரீதியிலான, மிக நுட்பமான மதிப்பீடாகும். துவக்க கால சமயப் பரப்பாளர்களின் ஆர்வமெல்லாம், பொருளாதார ஈடுபாடுகளை மறைப்பதற்கான இலட்சிய ஏமாற்று வித்தைதான் என்பதை ஹூம்போல்ட் அம்பலப்படுத்துகிறார்.

விண்மீன்களையும், தட்ப வெட்ப மாறுதல்களையும் நோட்டமிடு வதற்கு குமானுவில் எங்கள் வீடிருந்த அமைப்பு பெரிதும் சாதக மாயிருந்தாலும், பகலிலும் வேதனையான காட்சிகளைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தங்களும் சில சமயம் எங்களுக்கு ஏற்பட்டன. பெரிய சதுக்கத்தின் ஒரு பகுதி வில் வண்டிகளால் சூழப்பட்டி ருந்தன. இவற்றுக்கு மேலே, வெப்ப நாடுகளில் சாதாரணமாகக் காணப்படும் ஒரு நுழை மாடம் பலகைகளினால் அமைக்கப்பட்டி ருந்தது. இங்குதான், ஆப்ரிக்கக் கடற்கரையிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் விற்கப்பட்டனர். ஐரோப்பிய நாடுகளில் அடிமை வியாபாரத்தை முதன் முதலில் ஒழித்த நாடும், நெடுங் காலமாக இதை ஒழித்திருந்த ஒரு நாடும், டென்மார்க்தான்; எனினும் விற்பனைக்கென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீக்ரோக் களில் நாங்கள் முதலில் பார்த்த அனைவரும் டென்மார்க் கப்பல் ஒன்றிலிருந்து இறக்கப்பட்டவர்கள் தாம். இழிந்த இலாபத்தைப் பெறுவதற்கென்று முனைந்து விட்ட மனிதர்களுக்கு மனிதத்து வத்தின் கடமை, நாட்டின் கௌரவம், தம் நாட்டின் சட்டங்கள் ஆகியவை பற்றி என்ன அக்கறையிருக்கப் போகிறது?

விற்பனைக்காக இருந்த நீக்ரோக்கள் பதினைந்து முதல் இருபது வயது வரையுள்ள இளைஞர்கள். ஒவ்வொரு நாள் காலையிலும், அவர்களுக்குத் தேங்காய் எண்ணெய் கொடுக்கப்பட்டது; அதை அவர்கள் தங்கள் உடல்களில் தேய்த்து, கறுத்த தோலை பளபளப்பாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இவர்களை வாங்கவந்தோர் இவர்களுடைய வயதையும், உடல் நலத்தையும் நிர்ணயிப்பதற்காக, இவ்வடிமைகளின் பற்களைப் பரிசோதித்துப் பார்க்கிறார்கள்; சந்தைகளில் நாம் குதிரைகளைக் கையைக் கொடுத்து, வாயைத் திறந்து பல்லைப் பார்ப்பது போலவே இவ்வடிமைகளையும் பரிசோதிக்கிறார்கள். வெறுக்கத்தக்க இப்பழக்கம் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தது என்பதை, மூர்களிடையே நெடுங்காலமாகச் சிறையிலிருந்து ஈடற்ற செரிவாண்டெஸ், அல்ஜியர்ஸில் கிறிஸ்தவ அடிமைகளின் விற்பனை பற்றி அருமையாகப் படம் பிடித்துக் காட்டியிருப்பது நிரூபிக்கிறது. மேற்கு இந்தியத் தீவுகளில், தங்கள் அடிமைகள் தப்பி ஓடி விட்டால் அவர்களை மீண்டும் கண்டு கொள்வதற்காக, அவர்களுக்குச் சூடு போடும் ஐரோப்பிய குடியேற்ற நாட்டார் இன்று கூட இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது. நிலத்தைப் பண்படுத்துவது, விதைப்பது, அறுவடை செய்வது ஆகிய வேலைகளிலிருந்து பிற மனிதர்களைக் காப்போர் நடத்தப்படும் விதமிது.

நீக்ரோக்களின் முதல் விற்பனை எங்கள் உள்ளத்தைப் பாதிக்க பாதிக்க நாங்கள் இத்தகைய காட்சி அரிதான மக்களிடையேயும், அடிமைகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவான ஒரு கண்டத்திலும் வாழ்வது குறித்து எங்களை நாங்களே பாராட்டிக் கொண்டோம். 1800ஆம் ஆண்டு குமானை, பார்சிலோனை ஆகிய இரு மாநிலங்களிலும் மக்கள் தொகை ஒரு லட்சத்துப் பத்தாயிரமாக இருந்தபோது அடிமைகளின் எண்ணிக்கை ஆறாயிரத்துக்கு அதிகமில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் இக்கடற்கரைகளில் அமெரிக்க அடிமைகளின் வியாபாரம் இருந்த வேகத்துடன் ஒப்பிடும்போது, ஆப்பிரிக்க அடிமைகளின் வியாபாரம் அதேகமாக ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மேலும் ஆப்பிரிக்க அடிமைகள் வியாபாரத்தை ஸ்பானிய சட்டங்களும் ஆதரிக்கவில்லை. மகாராபான் (பண்டைய அமரகாபானை), குமானை, ஆராயா, இன்னும் சிறப்பாக குபாகுவாச் சிறு தீவில் அமைந்துள்ள நியூ காடிஸ் ஆகிய இடங்களை அடிமை வாணிபத்தை ஊக்குவிக்கும் வியாபார நிலையங்களாகக் கருதலாம். மிலானைச் சேர்ந்த கிரிஸ்டோபர் கொலம்போனி தம் இருபத்து இரண்டாம் வயதில் டெர்ரா பேமாவுக்கு வந்தார்; 1542ஆம் ஆண்டில் போர்டினெஸ், காரியகோ, பாரியா ஆகிய கடற்கரைப் பகுதிகளிலிருந்து, அதிர்ஷ்டம் கெட்ட அவ்வூர் மக்களைத் தாக்கிச்

செல்லும் பயணங்களில் அவர் சேர்ந்து கொண்டார். அக் காலத்துச் சரித்திராசிரியர்களிடம் இல்லாத மென்மையோடு, எளிமையோடு, அடிமைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தாம் கண்ணுல் கண்டவாறு அவர் வர்ணிக்கிறார். அடிமைகள் நெற்றியிலும், புயங்களிலும் சூடு போடப்படுவதற்காகவும் நியூ காடிஸிக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். இந்தத் துறைமுகத்தில் இந்தியர்கள் ஹெய்ட்டி தீவுக்கோ, அல்லது ஸெயிண்ட் டொமிங் கோவுக்கோ அனுப்பப்பட்டனர்; வழியிலே பல தடவை இவர்கள் கைமாறுவார்கள். விற்கப்பட்டதனுல் இப்படிக் கைமாறு வார்கள் என்றல்ல; இராணுவ வீரர்கள் இவர்களைப் பகடைக் காயாக வைத்துச் சூதாடுவதனுல் இப்படி இவர்கள் கைமாறு வார்கள்.

முதன் முதலில் நாங்கள் ஆராயா தீபகற்பத்துக்கும், முற் காலத்தில் அடிமை வியாபாரத்துக்கும், முத்துச் சலாபத்துக்கும் பேர் போன நாடுகளுக்கும் நாங்கள் சென்றோம். ஆகஸ்டு 19ஆம் தேதி அதிகாலை இரண்டு மணிக்கு நாங்கள் ரையோ மன்ஸனரெஸ் ஆற்றில் கப்பல் ஏறினோம். ஆராயாக் கோட்டையின் அழிபாடுகளைப் பார்ப்பது, உப்பளங்களைப் பரிசோதிப்பது, குறுகிய மானிகுயாரெஸ் தீபகற்பத்தைச் சுற்றியிருந்த மலைகளில் நில இயல் ஆராய்ச்சிகள் சில நடத்துவது இவைதாம் இப்பயணத்தின் நோக்கங்களாகும். மினு மினுப்பான பூச்சிகள் கூட்டங் கூட்டமாகக் காற்றில் சுற்றிக் கொண்டிருந்தன; ஆற்றின் ஓரங்களிலெல்லாம் தொட்டாற் சுருங்கி போன்ற குத்துச் செடிகள் மண்டிக்கிடந்தன. இத்தாலியிலும், தென் ஐரோப்பா முழுவதிலும் மினிமினிப் பூச்சி எவ்வளவு சாதாரண மாகக் காணப்படுகிறது என்பது நமக்குத் தெரியும்; வெப்ப மண்டலத்தை ஒளி மயமாக்கும் எண்ணிறந்த இந்த அசைந்து செல்லும் விளக்குகளை நாம் மின்மினிப் பூச்சிகளோடு ஒப்பிட முடியாது. இங்கே காணப்படும் மினு மினுப்பான பூச்சிகள் ஒளி சிந்தும் விண்மீன்களைக் கொண்ட வானப்பரப்பின் பிரகாசத்தைப் போன்று பூமியில் பதிந்து விடுகின்றன.

ஆற்றை விட்டும் இறங்கி, சாராஸ் என்னும் தோட்டங்கள் அருகே வந்ததும் நீக்ரோக்கள் சொக்கப்பனைகள் கொளுத்தி வைத்திருந்ததைக் கண்டோம். வளைந்து வளைந்து சென்ற இலேசான புகை மரங்களின் உச்சிக்கு எழுந்து, சந்திரனின் பரப்புக்கே ஒரு சிவப்பு வண்ணத்தைக் கொடுத்துக் கொண்டி ருந்தது. அன்று ஞாயிறு இரவு; ஒரு வகையான சித்தார் யாழின் இசைக்கொப்ப அடிமைகள் ஆடிக் கொண்டிருந்தனர். நீக்ரோ இனத்தைச் சார்ந்த ஆப்ரிக்க மக்கள் என்றும் குறைவு படாத சுறுசுறுப்பும், களிப்பும் மிக்கவர்கள். வாரம் முழு

வதிலுமுள்ள கடும் வேலைகளை முடித்துக் கொண்டு, விழாக் காலங்களில், இவர்கள் நிம்மதியில்லாத் தூக்கத்தைவிட ஆட்டம், இசை போன்ற பொழுது போக்குகளையே அதிகம் விரும்புகின்றனர். துயரமும், வேதனையும் நிறைந்த வாழ்க்கையின் கசப்பை ஓரளவு மட்டுப்படுத்தும் இந்த விளையாட்டுத் தனத்தையும், பொறுப்பின்மையையும் நாம் குறை கூறக்கூடாது. பாரியா முனையிலிருந்து தான் கொலம்பஸ் முதன் முதலில் இந்த கண்டத்தையே பார்த்தார். மனிதர்களைத் தின்னும் பழங்குடி மக்களான காரிபுகளும், நாகரிகமும், வாணிப இயலும் கொண்ட ஐரோப்பிய சமுதாயங்களும் மாறி மாறிச் சூறையாடிய இந்தப் பள்ளத்தாக்குகள் பாரியா முனையில் தான் முடிகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் காருபானே, மாகரபான, காரகாஸ் கடலோரங்களிலிருந்த துரதிர்ஷ்டம் பிடித்த இந்தியர்கள், இனியா கடற்கரையோரமாக வாழ்ந்து வந்த மக்கள் நம் காலத்தில் எப்படி நடத்தப் பட்டார்களோ, அப்படியேதான் நடத்தப் பட்டார்கள். இந்தத் தீவுகளில் நிலங்கள் பயிரிடப்பட்டன; பழைய கண்டங்களிலிருந்த காய்கறி வகைகளெல்லாம் இங்கு நடப் பட்டன; ஆனால் ஒழுங்கான ஒரு குடியேற்றத் திட்டம் புதுக் கண்டத்தில் வெகு காலமாக இல்லை. வன்முறையாலோ அல்லது பண்டமாற்று முறையிலோ அடிமைகள், முத்துக்கள், தாவரங்கள், தங்கள் சாயத்துக்கு வேண்டிய மரங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு மட்டுமே ஸ்பானியர்கள் இக்கரைகளுக்கு வருவார்கள். தீராத இப்பேராசையை உயர்த்திக் காட்டுவதற்காக வேண்டி, இதற்குச் சமயப்பற்று, ஆர்வம் போன்ற தூய நோக்கங்கள் தாம் காரணம் என்று பாசாங்கு செய்யப்பட்டது. ஒவ்வொரு காலமும் அதற்குப் பொருத்தமான நிறத்தையும், குணப் பண்பையும் பெற்றுக் கொள்கிறது.

ஆப்ரிக்க நீக்ரோக்கள் எப்படி மனிதத் தன்மை யில்லாத முறையில் அடிமைகளாக வியாபாரம் செய்யப்பட்டார்களோ, அது போலவே செப்பு நிற இந்தியர்களும் வியாபாரம் செய்யப் பட்டனர்; அதே விளைவுதான் இங்கும் ஏற்பட்டது. அதாவது ஆக்கிரமித்தவர்களும், ஆக்கிரமிக்கப்பட்டவர்களும் அதிகக் கொடுமையுள்ளவர்களாக மாறினார்கள். இதனால் சுதேச மக்களிடையே போர்கள் அதிகமாயின. சிறை பிடிக்கப்பட்டவர்கள் உள் நாட்டிலிருந்து, கடற்கரைகளுக்கு இழுத்துக் கொண்டு வரப் பட்டு, வெள்ளையர்களுக்கு விற்கப்பட்டனர். வெள்ளையர்கள் இவர்களுக்கு விலங்கு பூட்டித் தங்கள் கப்பலில் தூக்கிப் போட்டுக் கொண்டு போனார்கள். இவ்வளவுக்கும் அக்காலத்திலும், அதற்குப் பின்னர் நெடுங்காலம் வரையிலும் ஸ்பெயின் நாட்டவர் ஐரோப்பாவில் நாகரிகமிக்க சமுதாயத்தினரிலே ஒரு சமுதாயத்

தினராக இருந்திருக்கின்றனர். அப்பொழுது இத்தாலி மீது இலக்கியமும் கலையும் வீசிய ஒளி, தாந்தே, பெட்ரார்க் ஆகியோருடைய மொழி எந்த மூலத்திலிருந்து வெளிப்போந்ததோ, அந்த மூலத்திலிருந்து தோன்றிய அத்தனை மொழிகளைக் கொண்ட சமுதாயங்களிலும் பிரதிபலித்தது. உள்ளத்தின் இந்த மேம்பாடான விழிப்பிலிருந்தும், கற்பனை தூய்மை பெற்று உயர்ந்த திலிருந்தும் ஒழுக்கத்திலும், பண்புகளிலும் சிறான மாறுதல் இயல்பாக ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். ஆனல் தொலை தூரமான நாடுகளில், பொருள் தேட்டத்திலுள்ள பேராசை எங்கெல்லாம் அதிகாரத்தை இழிவாகப் பயன்படுத்தத் தூண்டிற்றோ, அங்கெல்லாம் ஐரோப்பிய சமுதாயங்களும், தங்கள் வரலாற்றின் எல்லாக் காலங்களிலும், ஒரே மாதிரியான தன்மையுடன் தான் நடந்துகொண்டிருக்கின்றன. பத்தாம் லியோவின் புகழ் மிக்க காலம், புது உலகத்துக்கு அறிமுகமாக்கப் பட்டபோது, நடந்த கொடுமைகளும், குரூரச் செயல்களும் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருந்த காலத்துக்கு உரியவையாகும். ஆனல் மனிதப் பண்பை யொட்டிய சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பினும், ஆ::ப்ரிக்காவின் மேற்குக் கரையில் இன்னும் இழைக்கப்படும் கொடுஞ் செயல்களைப் பார்க்கும் போது அமெரிக்க ஆக்கிரமிப்பில் நிகழ்ந்த பயங்கரங்கள் நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

ஐந்தாம் சார்லஸ் கடைப்பிடித்த கொள்கைகள் புதுக் கண்டத்தில் அடிமை வியாபாரத்தை ஒழித்து விட்டன. ஆனல் ஸ்பானிய வீரர்கள் உள்ளேறிச் சென்று தொடர்ந்த தாக்குதலின் மூலம் சிறு போர்களைப் பல இடங்களில் தூண்டி அமெரிக்க மக்கள் தொகையை நசிக்கச் செய்து தேசியப் பகைமைகளை நிரந்தரமாக்கி விட்டனர். இப்படியாக ஒரு நீண்ட கால அளவில் வளர்ந்து வர வேண்டிய பண்பாட்டு விதையை அழித்தே விட்டனர். சமயப் பரப்பாளர்கள், ஆட்சியின் பாதுகாப்பில் இருந்துகொண்டு அமைதியும் சமாதானத்தையும் பற்றி நெடிது பேசினர்கள். தன் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகளில் ஒரு பகுதிக்காவது, மனித குலத்துக்கு ஆறுதல் கூறவேண்டியது மதத்தின் பொறுப்பும் உரிமையுமாகும். அரசர்கள் முன் சுதேச மக்களுக்காக வாதாடுவது, வன்முறைச் செயல்களைத் தடுத்து நிறுத்துவது, சுற்றித் திரியும் நாகரிகமற்ற மக்கள் கூட்டத்தை சிறு சிறு வகுப்புக்களாக ஒன்று சேர்ப்பது — இது உழவுத் தொழிலின் முன்னேற்றத்துக்குத் துணை செய்யும்—இவையனைத்தும் மதத்தின் கடமையாகும். ஆனல் ஒரே மாதிரியான, முன்னரே திட்டமிடப்பட்டுள்ள—வளர்ச்சியின் மூலமாக, வெறும் துறவி மடங்கள் அமைக்கப் பெற்று, பிரான்சை விட நான்கைந்து

மடங்கு விசாலமான நாடுகளெல்லாம் சமயக் குழுவினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

ஆனால் இந்த நிறுவனங்கள் ஆரம்பத்தில் இரத்தம் சிந்துவதைத் தடுப்பதிலும், சமுதாயத்தின் முதல் அடிப்படையை அமைப்பதிலும் பயனுடையவையாக இருந்த போதிலும், இறுதியில் உண்மை முன்னேற்றதுக்கே பகையாகி விட்டன. இதன் விளைவாக சமயப் பரப்பாளரின் பகுதியைச் சுற்றி ஒன்று சேர்க்கப் படுவதற்கு முன், சிதறிக் கிடந்த தங்கள் குடில்களில் எவ்வாறு இந்த இந்தியர்கள் வாழ்ந்தனரோ, அந்த நிலையிலிருந்து எந்த வித மாறுதலுமில்லாது தான் இன்றும் இருக்கின்றனர். அவர்களுடைய தொகை பெருகிற்று: ஆனால் அவர்களுடைய அறிவியல் வட்டம் விசாலமாகவில்லை. ஒவ்வொரு சமுதாயத்திலும் சுதந்திர உணர்வின் கனிகளாக இருக்க வேண்டிய ஆக்கத்தையும், ஆர்வத்தையும், உயிர்த் துடிப்பையும் அவர்கள் படிப்படியாக இழந்து விட்டனர். அவர்களுடைய குடும்ப வாழ்க்கையின் சின்னஞ்சிறு செயல்களைக் கூட மாற்றமில்லா விதிமுறைகளுக்கு உட்படுத்தி, அவர்களைக் கீழ்ப்படியச் செய்ததன் மூலம் அவர்கள் மந்த மதியினராக்கப்பட்டு விட்டனர். அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையானவை நிச்சயமாகக் கிடைக்கின்றன; அவர்களுடைய பழக்க வழக்கங்கள் அமைதியுடையனவாக இருக்கின்றன; ஆனால் சமயப்பரப்பாளர்களின் கட்டுப்பாட்டுக்கும், அலுப்புத் தட்டும் ஆட்சிக்கும் அவர்கள் உட்பட்டிருந்தாலும், இந்த அமைதிக்காகச் சுதந்திரத்தையே தியாகம் செய்து விட்டோமே என்ற சோகமும், சோர்வும் அவர்கள் முகத்திலே பதிந்திருக்கின்றன. பயனுள்ள குடிமக்களை அரசு இழக்கும் படியாகச் செய்கிறது, இந்தத் துறவு மட வாழ்க்கை; என்றாலும் இது சில வேலை, அலைமோதும் உணர்ச்சிகளை அமைதிப்படுத்தவும், தீராத் துயரங்களைச் சாந்தப்படுத்தவும், தியானத்துக்கு மனதைத் தகுதியுடையதாக்கவும் துணை செய்கிறது. ஆனால் இதே முறை புது உலகத்தின் வனங்களுக்கு மாற்றப்படும் பொழுது, இதன் விளைவு அபாயகரமாக முடிகிறது. தலைமுறை, தலைமுறையாக இது அறிவாற்றலை விலங்கிட்டு வைத்து விடுகிறது: தேசிய சமுதாயங்களுக்கிடையே யுள்ள அறிவியல் கூட்டுறவில் குறுக்கிடுகிறது; உள்ளத்தை உயர்த்துவதற்கும், அறிவைப் பெருக்குவதற்கும் பகையாக அமைகிறது. ஒன்றி ணைந்த இக்காரணங்களால் சமயப் பரப்பாளர்களைச் சுற்றி வாழும் சுதேச மக்கள் எல்லா முன்னேற்றங்களிலிருந்தும் தொலைவிலே வைக்கப்படுகின்றனர். இதை பண்பு மாற்றமில்லாத நிலை என்றுதான் நாம் சொல்ல வேண்டும். மனித உள்ளத்தின் வளர்ச்சிப் பாதையைப் பற்றிப் போகா சமுதாயங்கள் முன்னேறிச் செல்லாது நின்று விடும்போது அவை பிற்போக்கான சமுதாயங்கள் என்றுதானே கருதப்படும்.

மேரி ஃபன் எப்னர்-எஷன்பாக்

அண்டை வீட்டார்

மேரி ஃபன் எப்னர்-எஷன்பாக் (1830-1916) தம் நவீனங்களிலும், கதைகளிலும் வியன்னாவிலுள்ள ஆஸ்திரிய சமூகத்தின் வாழ்க்கையையும், உழவர் பெருமக்களின் வாழ்க்கையையும் மன இயல் நுட்பத்தோடு வர்ணிக்கிறார். அவருடைய எழுத்துக்கள் ஒழுக்க இயலையும், சமூக நீதி உணர்வையும் அடிப்படையாகக் கொண்டவை. இத்தன்மை இவருடைய விமர்சனங்களிலும் காணப்படும். இம்மூதாட்டியின் நீதிக் கதைகள், உருவகக் கதைகள், கவிதைகள் ஆகியவற்றின் தொகுப்பு 1892இல் வெளி வந்தது. இத்தொகுப்பிலிருந்து 'அண்டை வீட்டார்' என்னும் உருவகத்தை எடுத்திருக்கிறோம். எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடிய உருவகமும் இதன் எளிமையும் இக்கதையை என்றும் பொருத்த முடையதாக்குகிறது.

பொன்னிறத் தலையனும் செந்நிறத் தலையனும் அண்டை வீட்டாராக இருந்தனர். அவர்கள் இருவரும் நற்பண்புள்ள ஆடு மேய்ப்போர் கூட்டங்களின் தலைவராக இருந்தனர். தங்கள் தேவைகளுக்கேற்ப அவர்கள் தங்கள் நிலங்களின் விளைபொருள் களைப் பரிமாறிக் கொள்பவர்களாகவும், வேதனைக் காலத்திலும், சோதனைக் காலத்திலும் ஒருவருக்கொருவர் துணையாகவும் விளங்கினர். அவர்கள் இருவருள் இதனால் அதிக இலாபம் பெற்றவர் யார் என்று எவராலும் கூறமுடியாத அளவுக்கு இருந்தது அவர்கள் நட்பு.

இலையுதிர் காலத்தில் ஒருநாள் பலமான ஒரு புயற்காற்று செந்நிறத் தலையனின் வனத்தில் பெரும் சேதத்தை விளைவித்து விட்டது. பல இளமரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டன; முறிந்து விழுந்த மரங்களும் பல. பல மரங்கள் அடர்ந்த இலை களை இழந்தன.

செந்நிறத் தலையன் தன் ஆட்களை அழைத்தான்; அவர்கள் காய்ந்த சுள்ளிகளைக் கட்டுகளாகக் கட்டி அடுக்கினர்.

முறிந்து விழுந்த பச்சை மரங்களிலிருந்தும் இலைகள் வெட்டப் பட்டன. அவை செந்நிறத் தலையனின் கோழிகளுக்கு வசந்த காலத்தில் கூண்டமைக்கப் பயன்படும்.

இவற்றைக் களஞ்சியத்திற்குத் தூக்கிச் செல்லும்போது பொன்னிறத் தலையனின் பணியாள் ஒருவன் பார்த்துவிட்டான். விவேகமற்ற அவன் கண்களுக்கு அந்தச் சில கம்புகள் ஏராள

மானவையாகத் தென்பட்டன. அச்சத்தால் பீடிக்கப்பட்டவனைப், விரைந்தோடி வீட்டுக்குச் சென்று தன் ஆண்டானிடம் கூறினான்: "நம் அண்டை வீட்டார் நமக்குத் தீங்கு செய்யத் திட்டமிட்டிருக்கிறார். இது பொய்யானால் என்னை ஒரு துரோகி என்று சொல்லுங்கள்".

அவனும் அவனைப்போல் அஞ்சிய மற்றவர்களும்—அவர்களுள் விவேகிகள் சிலரும் இருந்தனர். தங்கள் தலைவனின் உள்ளத்தில் அவநம்பிக்கை எழச் செய்து அதன் மூலம் அவனை, அவனுடைய நெடுநாள் நண்பனுக்கு எதிராக முடுக்கி விட்டனர். தங்களை எதிர்ப்பதற்காக ஆயுத பாணிகளாக வருகிறார்கள் என்று முன்னவன் நண்பனையும் அவன் ஆட்களையும் கருதி இவர்களும் அவ்வாறே செய்ய முற்பட்டனர்.

செந்நிறத் தலையன் ஒரு களஞ்சியம் நிறைய கழிகள் வைத்திருந்தான். பொன்னிறத் தலையன் மூன்று களஞ்சியம் நிறையக் கழிகள் வைக்க வேண்டுமென்று விரும்பினான்.

மரம் வெட்டுபவர் வனத்துக்கு அனுப்பப்பட்டனர். கவினுறும் அதன் வளர்ச்சி பற்றி அவர்களுக்கு என்ன கவலை? பரந்து விரிந்த நுனி இலைகளையும், கதிரவன் கதிர்களை வரவேற்க உயரே, உயரே செல்லும் கிளைகளையும், அவற்றோடிணைந்து மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் பசிய இலைகளையும் வெட்டி வீழ்த்தியது அவர்களுக்கு எவ்வித வருத்தத்தையும் அளிக்கவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் வனம் முழுவதும் அழிக்கப்பட்டது; பொன்னிறத் தலையனிடம் பல ஆயிரம் கழிகள் குவிந்தன.

இவனுக்குத் தோன்றிய ஐயப்பாடுகள், இவனுடைய முன்னாள் நண்பனுக்கும் தோன்றின. அவனிடமிருந்த விவேகிகளும், முட்டாள்களும் முன் யோசனையற்றவர்களும், கோழைகளும் கூக்குரலிட்டனர், "எஜமானரே! போர் வந்துவிட்டால் நம்மிடம் கம்புகள் ஏராளமாக இருக்கவேண்டும். அதற்கு வழி செய்வது உங்கள் கடமை!"

செந்நிறத் தலையனும், பொன்னிறத் தலையனும் தங்களுக்குப் பாதுகாப்பைத் தேடுவதில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறினர். தாங்கள் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது வறுமையிலிருந்தும் துன்பத்திலிருந்தும்தான் என்ற உண்மையை இறுதியில் இருவரும் மறந்து விட்டனர். நெடுந்தொலைவு வரையில் மரமெதுவும் காணப்படவில்லை; நிலங்கள் உழுவாரில்லாமல் வறண்டு கிடந்தன. ஏர், மண்வெட்டி எதற்கும் வேலையில்லை. எனவே, இவையனைத்தும் கழிகளாக மாற்றப்பட்டு விட்டன.

இங்கிலீஷ், போர் வரட்டும்; எதிரிகள் எங்கள் மீது விழுந்து தாக்கட்டும்; நாங்கள் பசியால் சித்திரவதைப்பட்டுச் சாவதை விட, அவர்களின் கழிகளால் அழிந்து விடுகிறோம்" என்று இறைவனிடம் மக்கள் வேண்டும் அளவுக்கு நிலைமை துன்பமாகி விட்டது.

ஆண்டுகள் ஓடின. பொன்னிறத் தலையனும், செங்நிறத் தலையனும் முதுமையடைந்து விட்டார்கள்; பழைய தெம்புமில்லை. அவர்கள் சாவுக்கு இரகசியமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தனர். வாழ்க்கை அவ்வளவு வெறுத்து விட்டது.

மறுபடியும் ஒருமுறை சந்தர்ப்பம் தன் கை வரிசையைக் காட்டிற்று.

ஒருநாள் அவ்விருவரும் நிலங்களின் எல்லையாக இந்த ஒரு குன்றின் மீது ஒரே சமயத்தில் ஏறினர்.

"சிரழிந்துவிட்ட என் சொத்துக்களே இன்னும் ஒருமுறை காண வேண்டும்" என்று எண்ணிக் கொண்டே வந்தார்கள்.

பெரிதும் சிரமப்பட்டு ஏறி இருவரும் ஒரே நேரத்தில் மலையுச்சிக்கு வந்து சேர்ந்தார்கள். எதிரெதிரே வந்துவிட்ட இருவரும் திடுக்கிட்டுப் பின் வாங்கினர்கள்.....ஆனால் இது ஒரு கணம் தான், மறுகணமே, பாதுகாப்பிற்காகக் கோல்களைத் தாங்கியிருந்த கரங்கள் தாழ்ந்து அவற்றைக் கீழே நழுவ விட்டன.

அரை நூற்றாண்டாக வளர்ந்து, இறுதியில் வெறுப்பாகவும், பகையாகவும் மாறிய பாசமும், நேசமும் மீண்டும் கிளர்ந்து எழுந்தன. வேதனை மிகு உணர்ச்சியுடன் நண்பனும், நண்பனும் தங்கள் அரைகுறைக் கண்களால் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இப்பொழுது பொன்னிறத் தலையனும் இல்லை, செங்நிறத் தலையனும் இல்லை! ஒரே குரலில் இருவரும், "ஓ வெண்ணிறத் தலையனே!" என்று கூவி ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். பொன்னிறத்துக்கு ஒரு கட்சி; செங்நிறத்துக்கு ஒரு கட்சி என்று இருவரும் கட்சிகளின் தூண்டுதலால் பகை கொண்டார்கள். இப்பொழுது பொன்னிறமே இல்லை; செங்நிறமும் இல்லை. இருவருக்கும் தலை நரைத்துவிட்டது; பொதுவான இந்த ஒன்றே இருவரையும் இணைப்பதற்குப் போதுமானதாகி விட்டது.

ஒருவரையொருவர் கட்டித் தழுவுவதற்காக யார் கைகள் முதலில் நீண்டன என்பது அவர்களுக்குத் தெரியாது; மற்றவருக்கெதிராக முதலில் கழிகளை அடுக்கியவர் யார் என்பதும் அவர்கள் நினைவிலில்லை. தங்களுடைய, தங்கள் குடிமக்களுடைய இன்ப

வாழ்வையெல்லாம் பலியிடும் அளவுக்கு அவநம்பிக்கையும், குரோதமும் எப்படி ஏற்பட்டன என்பதும் அவர்களுக்குப் புலனாகவில்லை.

ஒன்று மட்டும் அவர்களுக்கு உறுதியாகப் புரிந்தது: "அவர்கள் மனதில் சொத்து சுகங்களோ இழந்து விடுவோமோ என்ற அச்சம் ஏற்படுத்தியது போன்று உலகில் வேறு எந்தச் சக்தியும் ஒரு பயங்கர உணர்வை ஏற்படுத்தியதில்லை" என்பதுதான்.

தெயடோர் ∴பொண்டானெ

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரும் நாவலாசிரியர்களில் ஒருவர் தெயடோர் ∴பொண்டானெ; அவருடைய எழுத்துக்கள் வாழ்க்கையின் உண்மை நிலைகளை அப்பட்டமாகப் பிரதிபலிப்பவை. ∴பொண்டானெ தம் சொந்த அனுபவத்திலிருந்து அவர் காலத்திய பெர்லின் சமூகத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தார். அதைப் பகைப் புலனாக வைத்து, தம் வாழ்க்கையின் கடைசிப் பத்தாண்டுகளில் அவர் எழுதிய நாவல்கள் தாம் அவருடைய தலைசிறந்த படைப்புகளாகும். பிரஷ்ஷியாவின் சிறு அலுவலர்கள், பெரும் அதிகாரிகள், மத்தியதர வகுப்பினர், பெர்லினைச் சுற்றி வாழ்ந்திருந்த நிலக்கிழார்கள் ஆகியோர்தாம் அவருடைய கதா பாத்திரங்கள். தொழிலாளர் வகுப்பு அவருடைய கவனத்தை ஈர்க்க வில்லை. குறிப்பிட்ட எந்தச் சாரியும், விளக்கங்களும், சொந்த விமர்சனங்களும் அவருடைய நாவல்களில் இடம் பெறவில்லை. இந்த நாவல்கள், மறைக்கப்பட்ட அல்லது சமுதாய மரபுகளால் ஒடுக்கப்பட்ட மனக்கிளர்ச்சிகளைத் தாமே வெளிப்படுத்தும் உரை யாடல்களையே பெரும்பாலும் உள்ளடக்கியிருந்தன. ஆஞல் பூர்ஷுவா ஆட்சியின் அரசியல், சமுதாய, அறிவியல் ஒழுங்கமைப் பைக் கவிழ்க்கும் எந்தக் கருத்தும் இந்த நாவல்களில் எங்கும் குறிப்பிடவில்லை. இருப்பினும், பாதுகாப்பான இந்தக் காலகட்டம் தன் இறுதியை நெருங்குவதை எவரும் உணரமுடியும். இந்த உண்மையை உணர்த்தும் கீழ்க்காணும் உரையாடல், ∴பொண்டா னெயின் கடைசி நாவலான ஷ்டெஷ்லினிருந்து (1898) எடுக்கப் பட்டது. கண்மூடித்தனமான பழமைப் பற்றினாலேயே, பண்டைய மரபுகளைப் பேணிக் காக்க முடியாது; அதற்காக அம்மரபுகளை முழுக்கவும் அழித்துவிட வேண்டுமென்பதுமில்லை. வரலாற்று வளர்ச்சியைக் குறிக்கும் இக்கருத்து ∴பொண்டானெயின் சொந்த நோக்காகவே யிருக்கும்.

ஸ்டெஷ்லின்

"உங்களுடைய ஸ்டெஷ்லின்—உங்களுடைய ஏரியிலிருந்துதான் நாங்கள் வந்து கொண்டிருக்கின்றோம். இந்த இடத்திலிருக்கும் மிக அழகுள்ளது அதுதான். ஏரியிலிருந்த பனிக்கட்டியை அவர்கள் உடைக்க விரும்பியபோது நான் ஆட்சேபித்தேன். ஏனென்றால் தன்னை ஒளித்து வைத்திருக்கும் எந்த விஷயத்திலும் தலையிடு வது, அல்லது அதில் பார்வையைச் செலுத்துவதுகூட என்னை அச்சமடையச் செய்கிறது. இங்கிருக்கும் எல்லாவற்றை நான் மதிக்கிறேன்; இது மட்டுமல்ல, உருவாகிக் கொண்டிருக்கும்

எல்லாவற்றையும் மதிக்கிறேன்; ஏனென்றால் உருவாகிக் கொண்டிருப்பது இப்பொழுதுதோ, பின்னரோ வாழ்வு பெறுகிறது. பழையனவற்றில் எவையெல்லாம் நம்முடைய நேசத்துக்கு உரிமை பெற்றிருக்கின்றனவோ, அவையனைத்தையும் நாம் நேசிக்க வேண்டும்; ஆனால் புதியவற்றுக்காக நாம் வாழவேண்டும் எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்டெஷ்லின் நமக்குப் போதிப்பது போல, எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. வெளித் தொடர்பிலிருந்து தன்னை ஒதுக்கி வைத்துக் கொண்டு வாழ்வது வாழ்வல்ல, சாவுதான். இதை எப்போதும் நினைவிலிறுத்திக் கொள்ளவேண்டும். என்னுடைய மைத்துனனை நான் மனப்பூர்வமாக, முழுமையாக நம்புகிறேன்; அவன் உயரிய பண்புடையவன்; ஆனால் நிலையான கொள்கைகளையுடையவனு என்பது எனக்குத் தெரியாது. அவன் மென்மையான உணர்ச்சிகள் கொண்டவன். ஆனால் இத்தகையோர் தாம் புறத் தூண்டுதல்களால் எளிதில் மாறக்கூடியவர்கள். வேறுபட்டுக் கருத்துக்களையும், உயர் நிலையிலிருப்போரின் தவறுகளையும், விருப்பு வெறுப்புகளையும் எதிர்த்து நிற்கும் மன வலிமையும் அவனுக்கில்லை. அவனுக்கு ஆதரவு — பக்கவலிமை தேவை; வோஸ்டெமார்! அவனுடைய இளமையிலிருந்தே அவனுக்கு அத்தகைய ஆதரவாக, பக்க வலிமையாக நீ இருந்திருக்கிறாய். "அப்படியே தொடர்ந்து நீ இருக்கவேண்டும்" என்றுதான் உன்னிடம் நான் இப்பொழுது வேண்டிக் கொள்கிறேன்.

"அன்புள்ள சீமாட்டி! உங்களிடம் வேலைக்கு அமர்வதில் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேன் என்று என்னால் எடுத்துச் சொல்ல முடியவில்லை உங்களுடைய இலட்சியங்களே என்னுடையவையாகவும் இருப்பதனால், என்னுடைய வேலை எளிதாகவே யிருக்கும். இந்த இலட்சியங்கள்தாம் என்னுடைய வாழ்க்கை. பழையன தோற்றுவிட்டன; எனவே, புதியனவற்றிற்கு என்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொள்வதைப் பெரும் பேறுகக் கருதுகிறேன். ஆனால் இந்தப் புதியவற்றின் தன்மை என்ன? இந்தப் புதுத் தன்மை நிலைபெற வேண்டுமா, வேண்டாமா என்பது எல்லாவற்றையும் பாதிக்கிறது. பண்டைய மரபுகள், அதிலும் மத குருக்களைச் சார்ந்த மரபுகள் அனைத்தும் ஸாலமனின் திருக்கோவிலைப் போல் காக்கப்பட வேண்டும் என்று தீவிரமாக நம்பும் நல்லோர் பலர் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றனர். (ஆனால் துரதிர்ஷ்டமாக கிறிஸ்தவ மரபுகளையும் இவர்கள் குறிப்பிடவில்லை). மேலும், நம் உயர் மட்டத்தில் பிரஷ்ஷியாவைக் குறிக்கும் அனைத்தும் சிறந்த பண்பாட்டு வடிவு உடையவை என்றும் எண்ணம் நிலவுகிறது.

"நீங்கள் சொல்வது போலத்தான் இருக்கிறது எனினும், நீதத்துக்காக நான் ஒரு கேள்வி கேட்க வேண்டும். அதாவது மரபுகள் காக்கப்பட வேண்டும் என்னும் நம்பிக்கையில் ஓரளவு நியாயமிருக்கிறதல்லவா!

"இருந்தது. ஆனல் நமக்கு முந்திய காலத்தில்! இப்பொழுது மக்கள் பிறப்பின் அடிப்படையில் தங்களுக்குரிய நிலையில் வைக்கப்படுவதில்லை என்பதுதான் புதுமையான அனுபத்தையும் பழமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் காணும் முக்கிய முரண்பாடு. இக்காலத்தில் மக்கள் தங்கள் திறமைகளை எத்துறையிலும், எந்த வகையிலும் பயன்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் இருக்கிறது. பண்டைய நாட்களில் ஒருவர் நிலக்கிழாராகவோ அல்லது நெசவாளராகவோ முன்னூறு வருடங்கள் இருப்பார். ஆனல் இன்று எந்த நெசவாளரும் ஒரு நாள் நிலக்கிழாராக முடியும்."

"ஆமாம். நிலக்கிழாரும், நெசவாளராக முடியும்" எனச் சொல்லி மெலூசைன் சிரித்தாள். "இந்த மென்மையான விஷயத்தை விட்டு விடுவோம். நாம் வாழ்க்கை, சமுதாயம் ஆகியவற்றின் அமைப்பின் மதிப்பென்ன; வாழ்க்கை, சமுதாயம் ஆகியவைபற்றி நாம் வைத்திருக்கும் பொதுக் கருத்துக்களை ஒத்துக் கொள்வதிலே உங்களுக்கு ஐயப்பாடுகள் இருக்கின்றன. எனவே, இவை பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைக் கேட்பதற்கு நான் மிக மிக விரும்புகிறேன்."

"முற்றிலும் அப்படியல்ல. எனக்கு ஐயப்பாடுகள் இருப்பின் அவை இந்த விஷயங்களைப் பற்றியவை அல்ல; இவற்றின் மீது வைக்கப்பட்ட மிகைபட்ட நம்பிக்கையைப் பற்றித்தான். சாதாரண விஷயங்களெல்லாம் ஏதோ தனிச் சிறப்புடையவையாகவும், மிக்க மேம்பாடுடையனவாகவும் கருதப்பட்டு, அவை காலாகாலத்துக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகிறது. இதுதான் தீமையானது. முன்னர் எப்பொழுதோ பொருத்தமானது, பொருத்தமானதாகவே இருக்குமாம்; முன்னர் எப்பொழுதோ நல்லதாக இருந்தது என்றும் நல்லதாக, ஏன் முன்னைவிட மிக நல்லதாக இருக்கும். ஆனல் இது ஒத்துக் கொள்ளமுடியாது.... கடந்த காலத்தை மீண்டும் கவனித்தால் முப்பெரும் சகாப்தங்களுடே நாம் வாழ்ந்திருக்கிறோம். இதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். முதல் சகாப்தம்; அரச வீரன் ஒருவன் ஆட்சியிலே நாம் இருந்தது. ஒருவேளை இந்த சகாப்தமே மிகச் சிறந்ததாக இருக்கலாம். அத்தகைய அரசனை எவ்வளவு போற்றினலும் தகும்; காலத்துக்குப் பொருத்தமாக விளங்கிய அவன் தன் காலத்தைவிட முற்போக்கான கருத்துக்

கலையும் வைத்திருந்தான். அவன் முடியாட்சியை நிலைப்படுத்தியது மட்டுமல்ல. புதிய ஓர் எதிர்காலத்துக்கு அடிப்படையையும் அமைத்துக் கொடுத்தான். இதுதான், மிக மிக முக்கியமானது. குழப்ப நிலையையும், தன்னலம் மிக்கப் பலராட்சியையும், எதேச்சாதிகாரத்தையும் ஒழுங்கு, பீதி இவற்றால் மாற்றியமைத்தான்.

"அதன் பிறகு?"

"அதன் பிறகு இரண்டாவது சகாப்தம் வந்தது. முதல் சகாப்தத்துக்கு அடுத்ததான இது வருவதற்கு நீண்ட காலம் ஆகவில்லை; தன் இயற்கையாலும், தன் வரலாற்றினாலும் ஊக்குவிக்கப்படாத அந்த நிலம் மேதா விலாசத்துடன் ஒளி வீசிற்று."

"இது எத்தகைய ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்"

"ஆம்! ஆனால் தன் நாட்டைவிட வெளி உலகில்தான் அதிக ஆச்சரியம் ஏற்பட்டது. எதையும் வியந்து போற்றுதலும் ஒரு கலைதான். சிறந்த ஒன்றைச் சிறந்தது எனத் தெரிந்து கொள்ளவும் கலையுணர்வு வேண்டுமே! இதன் பிறகு மூன்றாவது சகாப்தம் வந்தது. சிறந்ததல்ல; என்றாலும், ஒரு மேம்பாடு அதனுள்ளே இருக்கத்தான் செய்தது. ஏழ்மையும், துயரும் மிகுந்து பாதி பாழாகிவிட்ட நாடு; இப்பொழுது அறிவாற்றலில் அல்ல, ஆனால் ஆர்வத்தால் பிரகாசித்தது. மெய்யுணர்வு, அறிவு, சுதந்திரம் ஆகியவற்றின் உயர்ந்த ஆற்றல்மீது கொண்ட நம்பிக்கையாலும் ஒளிர்வு பெற்றது.

"நல்லது, லாரென்ஸொ: தொடர்ந்து சொல்."

"நான் இப்பொழுது கூறியவையெல்லாம் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள்ளாக நடைபெற்றவை. அந்நேரத்தில் நாம் மற்றவர்களை விட சில சமயம் உளப் பண்பாட்டாலும், ஆனால் எப்பொழுதும் ஒழுக்கத்தாலும் முன்னே இருந்தோம். ஆனால் அந்தப் பண்டைய ஆர்வம் மடிந்து விட்டது. பிற்போக்கு இயக்கம் ஒன்று தோன்றியிருக்கிறது. நெடுநாட்களுக்கு முன்பே வாடி, உலர்ந்து பொருள்களெல்லாம் மீண்டும் செழுமையோடு வளர வேண்டுமாம். இதை நான் மீண்டும் சொல்லியே ஆக வேண்டும். அவை அப்படிச் செழிக்க மாட்டா. ஒரு விதத்தில் பார்த்தால், ஒவ்வொரு பொருளும் என்றாவது ஒரு நாள் திரும்பி வரும்; ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தாண்டிய பிறகே அப்படித் திரும்பும்.

எப்பொழுதோ முன்னேற்றமாக இருந்த ஒன்று, இன்று பிற்போக்குள்ளதாக மாறிவிடுகிறது. போர்களும், அவற்றில் பங்கெடுத்துக் கொண்ட போர் வீரர்களும் நவீன வரலாற்றிலிருந்து படிக்கத் தகுந்த உண்மை வரலாற்றிலிருந்து, மறைகின்றனர். அப்படி அவர்கள் தாங்களாகவே மறையாவிட்டாலும்,

அவர்களிடம் மக்கள் கொண்டிருந்த ஈடுபாடு மறைந்து விடு கிறது. அந்த ஈடுபாட்டுடன், அவர்களுடைய பெருமையும் மறைந்து விடுகிறது. விஞ்ஞானப் புத்தமைப்புப் புனைவாளர் களும், புதிய கண்டுபிடித்தங்களுக்குப் பொறுப்பானவர்களும். பண்டைய அவ்வீரர்களின் இடங்களைப் பற்றிக் கொள்கின்றனர், முற்கால வீரர்களான டு கியூஸ் கௌன், பாயார்ட் இவர்களை விட ஜேம்ஸ் வாட்டும், ஸீமென்ஸும் இன்று நம்முடையே பெருமை பெறுகின்றனர். வீர மரபு தன் நற்பெயரை இழந்து விடவில்லை. இன்றும் நெடுங்காலத்துக்கு, அது இழக்கவும் செய்யாது. ஆனால் அது குறிப்பிடத்தக்க உச்சிக் கட்டத்திலிருந்த காலம் கடந்து விட்டது; இந்த உண்மையை உணர்வதை விடுத்து, இறங்கு முகமாக இருக்கும்—தேய்ந்து வரும் எல்லாவற்றுக்கும் ஒரு செயற்கையான முக்கியத்துவம் அளிப்பதில் முனைந்திருக் கின்றனர் நம் அரசினர்.''

''நீ சொல்வது உண்மைதான். ஆனால் யாருக்கு எதிராகக் கூறு கிறாய்? நீ ஆட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாய்: அந்த ஆட்சி என்ன? மனிதனா, பொருளா? அது பழைய நாட்களி லிருந்து விஞ்சிய — வெறுமையில் சுழலும் சக்கரங்களைக் கொண்ட — இயந்திரமா, அல்லது அதை இயக்குபவனா? நீ பேச ஒவ்வொன்றிலும் ஓர் எதிர்ப்புக் குரல் தொனிக்கிறது. உயர் மட்டத்திலிருப்பவருக்கு எதிரா? பண்டைப் பெருமை மிகுந்த குடும்பங்களை, நீ எதிர்த்து நிற்கிறாயா?''

''அப்படி யில்லை என்று முதலில் சொல்லிக் கொள்கிறேன். நான் பண்டைப் பெருமை மிகுந்த குடும்பங்களை நேசிக்கிறேன்— அவ்வாறு நேசிப்பதற்கு எல்லாக் காரணங்களும் இருக்கின்றன. அநேகமாக எல்லோரும் அவர்களை நேசிக்கின்றனர் என்றும் நான் கூறுவேன். இந்நாளில் கூட, அக்குடும்பங்கள் மக்களின் அன்பையும், அனுதாபத்தையும் பெற்றே இருக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு வகுப்புக்கும் தேவைப்படும் இந்த அனுதாபத்தை அப்பண்டைப் பெருமை யுடைய குடும்பங்கள் வீணாக்கி விட்டன. இந்தப் பழங் குடும் பங்கள் அனைத்துமே, 'தாங்கள் இல்லாமல் இந்த உலகமே இயங்காது' என்ற எண்ணத்தில் சிக்கி அவதிப்படுகின்றனர். இது உண்மைக்கு மாறானது; ஏனென்றால் வாழ்க்கை அவர்கள் இல்லாமலேயே இயங்க முடியும். முழு மாளிகையும் தாங்கும் தூண்களாக இன்று அக்குடும்பங்கள் இல்லை; அவை கல்லா லான பழைய முகடும், அதிகம் ஒட்டியுள்ள பாசியும்தான். இவற்றின் பளுவால் மாளிகையைக் கீழ் நோக்கி அழுத்த முடியுமே தவிர கடுங் காற்றிலிருந்தும், குளிரிலிருந்தும் மாளிகை யைக் காக்க முடியாது. என்றாவது ஒரு நாள் மேற்குடி மக்களின்

பழங்காலம் திரும்ப வரலாம்; ஆனால் இன்று நாம் எப்பாதையை நோக்கினாலும், அங்கு குடியரசுத் தத்துவத்தைக் காட்டும் கை காட்டியின் கீழ்தான் நாம் நிற்கக் காண்கிறோம். புது யுகம் ஒன்று உதயமாகிறது. இது முன்னதை விடச் சிறந்த, இன்பமான ஒன்று என்று நான் கருதுகிறேன். அப்படி அது மிக இன்பமயமானதாக இல்லாவிட்டாலும் கூட நாம் அப் புது யுகத்தில் நிம்மதியாகக் கூடுதல் பிராணவாயு கலந்த காற்றைச் சுவாசிப்போம். எவ்வளவு நிம்மதியாக நீங்கள் சுவாசிக்கிறீர்களோ அவ்வளவு நிம்மதியாக நீங்கள் வாழ்வீர்கள் சீமாட்டியே; எப்படியிருந்தாலும் வோட்டெமார் சம்பந்தப்பட்ட வரையில், என் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ளலாம். காண்டெஸ்ஸா இருக்கிறார்கள். அவர்களைக் குறித்து நீங்கள் தான் உத்தரவாதம் அளிக்க வேண்டும். மகளிர்தாமே இக்காலத்தில் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார்கள்.''

''இப்படித் தான் ஆண்கள் எல்லோருமே சொல்கிறார்கள்; நாங்களும் இதை நம்புவதைப் பெருமையாக எண்ணிக் கொள்கிறோம். ஆனால் இது நம்மை முற்றிலும் வேறு விஷயங்களுக்கு அழைத்துச் செல்கிறது. தற்பொழுது, இந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் கையை நீட்டுங்கள். புரட்சிகரமான நம்முடைய இந்த உரையாடலுக்குப் பிறகு, நான் அமைதியான மக்களின் இல்லங்களுக்கு இனி நான் போக அனுமதியுங்கள். அரை மணி நேரத்தில் வந்து விடுவதாக அம் முதியவரிடத்தில் சொல்லியிருக்கிறேன். நீங்களும் என்னுடன் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். நம் நிகழ்ச்சி நிரலின் படி நாம் பார்க்கவேண்டுமே, அந்த 'மியூசியம்' வரை வராவிட்டாலும் கூட, பண்ணை வரையாவது வர வேண்டும்.

சூரியோதயத்துக்கு முன்

21/22 அக்டோபர் 1889

''சூரியோதயத்துக்கு முன்'' கெர்ஹார்ட் ஹௌப்தமனின் இயற்கைப் பண்பாட்டைச் சார்ந்த முதல் நாடகமாகும். உள்ளத்தை உள்ளபடி கூறும் இலக்கிய வளர்ச்சியின் நிறைவான இறுதிப் பகுதிதான் இயற்கைப் பண்பாட்டைச் சார்ந்த இலக்கியப் படைப்பு என்பதை நன்கு உணர்ந்திருந்த ∴பொண்டானெ எழுதிய ஒரு விமரிசனத்திலிருந்து இந்நாடகத்தின் உள்ளடக்கமும், சிறப்புத் தன்மைகளும் நன்கு புலனாகும். உள்ளதை உள்ளபடி கூறும் தம் நாவல்களில் ∴பொண்டானெயும் இயற்கைப் பண்பாட்டுச் சார்பை ஒட்டி வந்து விட்டார்; அவரே ஹௌப்தமனே புதிய இயக்கத்தின் கொள்கை

மாறுப் பிரதிநிதி என்றும், உள்ளதை உள்ளபடியே வர்ணிப்பதில் சமர்த்தர் என்றும் கருதுகிறார். ஆனல் இதில் தத்துவ நோக்கும், கற்பனே வாதமும் இடையிடையே தலேநீட்டுவதை அவர் பழித் துரைக்கிறார். உள்ளதை உள்ளபடியே நாவலில் வர்ணிப்பதையும், அதையே மேடையில் நடிப்பதையும் பற்றி வேறுபடுத்திக் காட்டும் .:பொண்டானெயின் கருத்துக்கள் சுவையானவை. இயற்கைப் பண்பாட்டைச் சார்ந்த நாடகம், உண்மையின் துல்லியமான பிரதி பலிப்பாக இருக்க வேண்டுமென்றலும், அதற்கும் நாடக ஆசிரியர் கலேவடிவம் கொடுக்க வேண்டும் என்னும் அவர் கருத்து முக்கிய மானது.

விமர்சனம் செய்வது எப்பொழுதும் எளிதல்ல; சில சமயம் அது மிகவும் கடினமாகவும் இருக்கிறது. (குறைந்த பட்சம் நான் அப்படித்தான் இதைக் காண்கிறேன்.) இப்படி ஒரு விஷயம் நேற்று நடந்தது. ஹெளப்தமனின் இந்தப் புது சமூக நாடகத் தைப் பற்றி, நேரடியாக, தாராளமாக, உற்சாகமாக, வேகமாக வெறுப்பதற்கோ அல்லது அதை வானளாப் புகழ்வதற்கோ துணிவுள்ளவன் தான் தன் மூக்கையைப் போட்டுக் குழப்பாமல் இருப்பான். ஆனல், ஒருவனுக்கு இத்துணிவு இல்லாவிட்டால், ஒவ்வொரு புதுக் காட்சியிலும் புதுக் கேள்விகளும், சிக்கல்களும் அவனே எதிர்ப்பட்டால், அவன் அன்று அதைப் பற்றி எழுது வதற்கு மிகவும் சிரமப்படுவான்.

ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த நாடகம் என் கைக்கு வந்தது. கெர்ஹார்ட் ஹெளப்தமன் யார்? பின்னர்: "சூரியோதயத்துக்கு முன் — ஒரு சமூக நாடகம்" சமீபத் தில் நான் கழித்த வேனிற்கால விடுமுறை தந்த துணிவுடன், நான் செயல்படலானேன். ஆனல் இச்சிறு நூல் என்னுடைய கடிதங்கள், புத்தகங்களுக்கிடையே ஒரு வாரம் புதைத்து கிடந் தது. அது மீண்டும் மேற்பரப்புக்கு வந்ததும், அதை நான் படித் தேன்; ஒரே மூச்சில் துவக்கம் முதல் இறுதி வரை படித்து முடித் தேன்.

விசித்திரமான, கோரமான ஒரு கதை இப்பொழுது உழவர் களும், பண்ணேகளில் கூலிக்கு வேலே செய்வோரும் கூட திடீர்ப் பணக்காரர்களாகும் மாவட்டங்கள் நாட்டில் எங்குமிருக் கின்றன. இத்தகைய ஒரு மாவட்டத்துக்கு இந்நாடகம் நம்மை அழைத்துச் செல்கிறது. யெளவெருக்குப் பக்கத்திலுள்ள ஒரு சைலேஷிய கிராமம்; நாம் நுழையும் வீடு பட்டினத்துப் பாணி யில் படங்களால் அழகு செய்யப்பட்டிருக்கிறது; சுவர்களில் வண்ணத்தாள்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. டெலிபோனும் (தொலே பேசியும்) மின்சார மணிகளும் கூட அங்கே உண்டு.

மக்கள் 'டெலிபோனில்' பேசவும் செம்கிறார்கள். ஆம்! மணிகள், தொலை பேசி, குதிரைகள், கோச் வண்டிகள் ஆகியவற்றுடன் பணியாடை தரித்திருந்த 'எட்வர்ட்' என்ற தோற்றத்துடனிருந்த இவ்வீடு உண்மையில் ஒரு பயங்கரமான ஒரு வீடாகும்; அதன் மூலையிலும் ஒரு பேய் இருக்கிறது.

கிழட்டுக் குடியானவரான கிரௌஸை விடாக் குடியரானபடியி னல் அவர் உண்மையில் மதுக்கடையிலே தான் வாசம் செய் கிறார்; அவருடைய இரண்டாம் தாரம், வயதில் மிகக் குறைந்த வள். முன்னர் மாடு மேய்த்து வந்த அப்பெண் தான் விரும்பும் போது, சீமாட்டியாக நடித்துக் கொள்வாள். முதல்தாரத்தின் மூத்த மகள் இஞ்சினீயர் (பொறியியலாளர்) ஹாஃப்மனை மணம் முடித்திருக்கிறார். விடாது குடிக்கும் பழக்கத்தைத் தன் தந்தை யிடமிருந்து பாரம்பரியமாகப் பெற்றவள். அவளுடைய கணவ ஹாஃப்மன் தான் வீட்டின் உடைமையாளன். 'வக்கணையாக'ப் பேசுவதில் வல்லவன்; தன்னுடைய சிற்றின்பத் தேவைகளுக் காக எல்லாமே அவன் வசப்படவேண்டும். மென்மையான உணர்வுகளற்ற அவன் சிற்றின்ப நிறைவுகளுக்காகவே வாழ் பவன். வெறியும், பாவமும் நிறைந்த இந்தக் கூட்டம் நமக்கு முழுமையாகக் காட்சி தருவதற்குள்ளேயே நாம் ஹாஃப்மனின் முன்னாள் சக மாணவனான ஆல்ஃபிரெட் லோத் என்பானுக்கு அறிமுகமாகிறோம். தொழிலாளர்கள் — குறிப்பாக நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வோர்–பிரச்னைகள் குறித்து நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக அவன் வந்திருக்கின்றான். சமூதாயக் குடியாட்சிக் கொள்கைகளில் ஊறிய அவன் ஓர் இலட்சிய அரசியல்வாதி, கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதி வாழ்க்கை நடத்தி வந்தான். கொள்கைகளில் கண்டிப்பாக இருப்பவன்; சில சமயம் ஒருதலைப் பட்சமாக இருப்பானென்றாலும், மிகவும் நல்லவன்; நம்பகமானவன்; முற்றிலும் நேர்மையானவன். அவனுடைய கொள்கைகளில் ஒன்று, குடியை எதிர்த்துப் போராடுவது. தங்கள் ஆர்வத்தின் வலிமையால் ஒரு நல்ல வகை யான மனிதனை உருவாக்கி, அதன் மூலமாக மனித இனத்தைச் செம்மைப்படுத்தி, மனுக்குலம் முழுவதையும் நல்லின்பம் துய்க்கச் செய்யவேண்டும் என்று விரும்புவோரில் அவன் ஒருவன். உடல் நலம்தான் இதற்கு முதல் நிபந்தனை, அடிப் படை மனுக் குலத்தையே உய்விக்கவேண்டும் என்ற எண்ண மும், மதுப் பழக்கத்தை ஒழித்தேயாகவேண்டும் என்று உறுதியும் கொண்டுள்ள ஆல்ஃபிரெட் லோத், குடிகாரர்களின் குகைக்கே வந்து சேர்ந்திருக்கின்றான். எதையும் நுட்பமாகக் கவனிப்பது அவனுடைய சிறப்பம்சமல்ல; ஏனென்றால் எதையுமே அவன் ஊன்றிப் பார்ப்பதாகவே தெரியவில்லை. குருட்டுக் கோட்

பாட்டுப் போக்குடைய தீவிர வாதிகளுக்குச் சாதாரணமாக நேர்வது போல, இகோய மகள் ஹெலன்மீது ஈடுபாடு கொள்ள ஆரம்பித்து விட்டான்: அவளுக்கும் இவன் மீது அக்கறை பிறந்து விட்டது. மேலும் இவ்வீட்டின் இதர உறுப்பினர்களைப் போன்றவனல்ல ஹெலன். அவளுடைய தாயாரின் கடைசி விருப்பத்தின்படி அவள் பல வருடங்களுக்கு முன்னரே கல்வி பயில்வதற்காக ஹெர்ன்குட்டுக்குச் சென்று விட்டாள். ஆல்ஃபிரெட் லோத் அவள் தந்தை வீட்டுக்கு வந்து சேர்ந்தது, மக்களை அவள் சந்திக்கவும், உரையாடவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. தெய்வாதீனமாகத் தன் வீட்டுக்கு வந்து விட்ட எளிமையான இம்மனிதனுல்தான், சேற்றிலே சிக்கியிருக்கும் தான் விடுபட முடியும் என்ற எண்ணம் கணத்துக்குக் கணம் அதிக வலிமை பெற்று வந்தது. அவன் பளபளப்பான கவர்ச்சியுடையவனுக இல்லாதிருக்கலாம்; ஆனால் நேர்மை மிக்கவன்; கொள்கையுடையவன்; எல்லாவற்றுக்கும் மேலாக அவளைக் காதலிப்பவன் சம்பிரதாயமாகப் 'பரிசம்' போட்டுக் கொள்ளவில்லையே தவிர, அவர்கள் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற உறுதியிருந்தது; சுதந்தரமாக வேறு நிலைகளை அடையப்போகும் காலம், எப்பொழுது வரும் என்று அவள் நாளை எண்ணிக் கொண்டிருந்தாள். இதற்காக வீட்டை விட்டு எவருக்கும் தெரியாமல் வெளியேற வேண்டுமென்றாலும் அவள் தயாராகவே இருந்தாள். நல்லதற்கோ, கெட்டதற்கோ விதி கிராம மருத்துவர் டாக்டர் ஷிம்மெல்ஃபென்னிக்கை அந்த வீட்டுக்குள் அழைத்து வருகிறது. முன்னாள் ஹாஃப்மேன் இனங் கண்டு கண்டது போல, தன் பள்ளித் தோழன் என்று ஆல்ஃபிரெட் அடையாளங் கண்டு கொள்கிறான். ஆனால் அன்றையக் கொள்கையிலிருந்து பிறழாமல் டாக்டர் வாழ்ந்து வருவதையும் அவன் தெரிந்து கொள்கிறான். நாடகத்திலே மிக அற்புதமான, மிக முக்கியமான காட்சியில், வாழ்வே சோகமானது, தீயவை மலிந்தது என்று நம்பினாலும், லோத்தைப் போல இலட்சிய வாதியான ஷிம்மெல் பென்னிஷ் கிரௌலி இல்லத்தையும், குடும்ப வாழ்க்கையையும் பற்றி விவரிக்கிறார். இதை உற்றுக் கேட்டு வந்த லோத் திடுக்கிட்டு விடுகிறான். இப்பொழுது தன் கொள்கைகளைத் துறப்பதா, அல்லது காதலிக் கைவிடுவதா என்ற சிக்கல் எழுகிறது. காதலியே கைவிடுவது என்ற முடிவுக்கு வந்த லோத், விடை பெற்றுக் கொள்ளும் கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டு, அவ்வீட்டில் நின்றும் வெளியேறுகிறான். சில நிமிடங்களுக்குப் பின்னர், அச்சம் மிகுந்தவளாய் அவனைத் தேடும் ஹெலன் இக்கடிதத்தைப் படிக்கிறாள். விரக்தி மேலிட்டவளாகச் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து வேட்டைக் கத்தி ஒன்றை எடுத்துக்

கொண்டு, பக்கத்து அறைக்குள் பாய்ந்து செல்கிறாள். இந்நேரத்தில் பணிப்பெண் ஒருத்தி ஏதோ கடிதத்தை ஹெலனிடம் கொடுக்க, அதைப் படித்த ஹெலன் பக்கத்து அறைக்குச் செல்கிறாள். ஆனால் பயங்கரமான ஒரு கூச்சலுடன் அறைக்குள்ளேயிருந்து ஓடி வருகிறாள். வெறுமையான அந்த வீடு முழுதும். அங்கு இரத்தம் சிந்தப் பட்டச் செய்தியை எதிரொலிக்கிறது. திரை இறங்கும்போது மேடை காலியாகக் கிடக்கிறது.

இதுதான் கதையின் சாரம். இச்சிறு குறிப்பில் அதன் இயல்புக்கும், மூல அம்சத்துக்கும் ஒப்ப, கதையைச் சரியாக உருவகப் படுத்தியிருக்கிறேன் என்றே நம்புகிறேன். ஆனால் கதையின் நயத்தையும் நாதத்தையும் சரியாக உருவகப்படுத்தவில்லை; ஏனென்றால் அது இயலாத காரியம். எனவே எத்தனை தடவை கதையைத் திருப்பிச் சொன்னாலும், அது குறையுடையதாகவும், பயன் சிதைவதாகவுமே இருக்கும். நாட்டுப் பாடல்களின் பல அம்சங்களைத் தன்னுள்ளே கொண்டுள்ள இம்மாதிரி இலக்கியப் படைப்புகளில், நாதமும் நயமுந்தானே அநேகமாக எல்லாம்; ஏனென்றால் கதையின் மெய்ம்மையையோ அது இல்லாமையையோ குறிக்கும். இது என்னை உணர்ச்சி வசப்படச் செய்து விட்டதென்றால், இதன் வல்லமை கதையிலுள்ள பலவீனங்களையும், நகைப்புக்குரிய சில விஷயங்களையும்கூட குறைபாடுகளையும் நான் பொருட்படுத்தாதிருக்கச் செய்து விட்டதென்றால், ஒரு கவிஞன் என்னிடம் பேசிவிட்டான் என்றுதான் பொருள். தூய்மையான நோக்கு இல்லாது வாழமுடியாத ஒரு கவிஞன்; உண்மை நிலைகளை நீதத்தோடு எடுத்து முழங்கும் ஓர் உண்மைக் கவிஞன் என்னுடன் பேசிவிட்டான் என்றுதான் பொருள். இந்த விதமான பயன் கதையில் இல்லாவிட்டால், இந்த நயமும் நாதமும் தூய்மைப்படுத்தும் தங்கள் சக்தியைப் பிரயோகிக்கா விட்டால், குரூரமானவற்றையெல்லாம் மாற்றுருப் பெறச் செய்யா விட்டால், கவிஞன் தன் செயல் நோக்கில் தோற்றுவிட்டான்; இதற்குக் காரணங்கள்; கவிஞனின் ஆதாரங்கள் தூய்மையுடையவை—அல்ல; அவன் உள்ளத்தில் எங்கோ ஒரு பொய் ஒதுங்கி இருந்திருக்கிறது; அல்லது படைப்பாற்றல் அவனைக் கைவிட்டு விட்டது. அதனால் அவன் மிக மோசமான நேரத்தில் தன் இலக்கியப் படைப்பைத் துவங்கியிருக்கிறான். கடைசியில் நாம் குறிப்பிட்டவை காரணங்களாக இருந்தால் அவன் வேறு ஏதாவது தூய்மையான செயல் துறைக்குச் செல்ல வேண்டும். ஆனால் கெர்ஹார்ட் ஹௌப்தமன் தாமே தேர்ந்தெடுத்துள்ள இத் துறையிலேயிருக்கலாம்; அவர் இருப்பார்: ஏனென்றால் அவரிடம் பொருத்தமான நயமும் நாதமும் மட்டுமல்ல, சரியான துணிவும், அந்தச் சரியான துணிவுடன் இணங்கிப் போகக் கூடிய

கலையும் இருக்கிறது. இயற்கை உண்மைகளை எடுத்தியம்பும் இலக்கியப் படைப்புக்களில் கலை மெருகு இல்லையென்று எப் பொழுதும் ஊகிப்பது அறிவுடைமையல்ல; மாறாக இயற்கையான உண்மைகளைச் சரியான முறையில் பொருத்திக் காட்டுவதுதான் உயர் கலைக்கே சான்றாகும்.

கெர்ஹார்ட் ஹௌப்ட்மனுடைய நாடகத்தைப் படித்ததும் என்னுடைய கருத்துக்கள் ஏறத்தாழ இப்படித்தான் இருந்தன. இப்ஸனின் பணிகளை நிறைவேற்ற வந்திருப்பவராகவே அவர் தென்படுகிறார். "மனித வாழ்வின் முழுமையிலும் மூழ்கி விடுங்கள்" என்று அவர் குரல் கொடுத்தது, துணிகரமான, நவீனமான பிரச்னைகளை வைத்து நாடகம் இயற்றுவது, கலை யுணர்வு கலந்த எளிமையான நடை, கதாபாத்திரங்களை வார்ப் பதில் ஓர் அலாதியான திறமை, கதையின் போக்கு தர்க்க ரீதியான முறையில் அமைந்திருத்தல், கதையுடன் தொடர் பில்லாதவற்றை ஒதுக்கித் தள்ளி விடுதல் இவையனைத்தும் நான் இப்ஸனில் பாராட்டும் அம்சங்கள். இவையனைத்தையும் மீண்டும் ஹௌப்ட்மனில் கண்டேன். ஆரவாரம், கூர்மையான உரையாடல்களை மேலும் கூர்மையாக்க முயன்று கடைசியாக கூரே முறிந்து விடுதல், தெளிவில்லாது சுற்றுதல், தீர்க்க தரிசன முழக்கங்கள்; புதிர்களுக்கு மேல் புதிர்கள் போடுவது (ஆனல் எவரும் இப்புதிர்களை விடுவிக்க முயல்வதில்லை; ஏனென் றல் அதற்குள்ளாக அலுப்புத் தட்டி விடும்). இப்ஸனில் காணும் இம்மாதிரிகளை எதிர்த்து நெடுங்காலமாக நான் போராடு கிறேன். ஆனல் இத்தகைய குறைபாடுகளை ஹௌப்ட்மனில் காணவில்லை. தத்துவ, கற்பனை வாதங்களால் பாதிக்கப்பட்ட வரல்லர் ஹௌப்ட்மன்; ஆனல் உள்ளதை உள்ளபடியே சொல்லும் நடை பயின்றவர்; துவக்கத்திலிருந்து இறுதிவரை இதில் அவர் பிறழ்வதில்லை.

இந்த இளங்கவிஞரையும், அவர் நாடகத்தையும் பற்றி என் நோக்கு இதுவாகத்தானிருந்தது. இந்த நோக்கால் உரம் பெற்ற வனை நாடக அரங்குக்குள் நுழைந்தேன். என்னுடைய அடிப் படைக் கருத்துக்கள் எதுவும் அசைவு கொடுக்கவில்லை; ஆனல், நாடகத்தை நேரே பார்த்ததில் ஏற்பட்ட விளைபயன் அதைப் படிக்கும்போது ஏற்படவில்லை என்பதை நான் மறுக்கமுடியாது. விளைபயன் குறைவாக இருந்ததென்றல்ல; வேறாக இருந்தது. சம்பிரதாயமான சில காட்சிகள் வருகின்றன. சம்பிரதாயமான காட்சிகளென்றல் இவற்றில் நிகழ்பவையோ பேசப்படுப வையோ, வேறு நல்ல நாடகங்களிலும் வரக்கூடியவைதாம்; சான்றாக தன் நண்பன் ஹாஃப்மனுக்கும், அந்த வீட்டுப் பெண்

மணிக்கும் தன் அரசியல் வாழ்வுத் திட்டத்தை லோத் வெளிப் படுத்தும் காட்சி; லோத் — ஹெலன் ஆகியோருக்கிடையே யுள்ள காதல் காட்சி; லோத்துக்கும் ஹா.ப்மனுக்குமிடையே சண்டைவரும் காட்சி, கடைசியாக நான்காம் அங்கத்தில் பாதியை நிறைத்துக் கொண்டிருக்கும் அந்த மிகப் பெருங்காட்சி லோத்தையும் டாக்டர் ஷிம்மெல் பெண்ணிஷையும் பற்றியது இவையனைத்தும் பார்ப்பவர்களிடையே நல்ல விளைபயனைத் தான் ஏற்படுத்தின: எவரும், இதில் எதையும் குறை கூறவில்லை. நல்லதற்காகவோ, கெட்டதற்காகவோ நாடகத்துக்கு உருவத் தோற்றமேயளிக்கும் இதர நிகழ்ச்சிகள் இருக்கின்றனவே— அதாவது எந்தக் காட்சிகளிலிருந்து கலைத்துறையில் புரட்சிகர மான விளைபயன்கள் இருக்குமென்று நான் உறுதிப்பட்டு வந்தேனே—அவை எந்த விளைபயனையும், எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. நாடகத்தில் வரும் எந்தக் காட்சியை— பாத்திரங்களை பார்ப்பவர்கள் ஆதரிக்கிறார்களோ அதற்கொப்ப, அவர்களிடையே ஆதரவோ, எதிர்ப்போ பலமாகவே தெரிவிக்கப் பட்டன. பெர்லின் வாசிகள் ஒரு விஷயத்தில் மிகைத்தவர்கள். நாடகத்தை விமர்சிக்கும்போது திடுதிப்பென்று ஏதாவது பொதுவாகச் சொல்லிக் கொண்டிப்பார்கள். அதற்கும் குறை வில்லை: ஆமோதிப்பையோ, ஏளனத்தையோ குறிக்கும் சிரிப்பும் இருந்தது. ஆனால் நாடகத்தின் நண்பரிடத்திலோ, எதிர்ப்பாள ரிடத்திலோ குறிப்பிடத்தக்க எந்த விளைபயனையும் பாதிப்பை யும் காண முடியவில்லை. எந்தக் காட்சிகள் நன்றாக இருக்கும் என்று நான் பந்தயம் கட்டியிருப்பேனே, அந்தக் காட்சிகள் பெரும்பாலும் சலிப்பைத் தருவனவாகவே யிருந்தன. நாடகத்தில் மிகச் சிறந்தது, திறமிக்கது, ஒளிவார்ந்தது என்று நான் உறுதி யாகக் கருதிய இரண்டாவது அங்கத்தில்தான், முக்கியமாக இந்தச் சலிப்பு தோன்றிற்று. இது நடிக்கப்பட்டபோது எனக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்தது. திகிலூட்டும் காட்சிகள் ஒன்றன்மேல் ஒன்று நெருக்கியடித்துக் கொண்டு வருவதனால் உள்ளத்தில் வேர்விட வேண்டிய பேரச்சமும், பயங்கர உணர் வும் இதில் தோன்றவே யில்லை. இந்தத் திகிலூட்டும் காட்சிகள் தாம் நாடகத்துக்கும், அதன் சோக முடிவுக்கும் நடுநாயக மானவை. பெருங்குடியன் ஒருவனையும், கையாலாகாத பலரை யும் தாம் இக்காட்சியிலே ஒருவன் காண முடிகிறது. தூலில் முழுமையான கலையுணர்வுடன் கவிஞர் கோடிட்டுக் காண்பித்த கொடுமையின் அம்சங்களை, நாடகத்தில் வலியுறுத்திக் காண்பிப் பதின் மூலம், சக்தி வாய்ந்த ஒரு விளைபயனையும், பாதிப்பை யும் தோற்றுவித்திருக்க முடியும். ஆனால், மீண்டும் எண்ணிப் பார்க்கும்போது இது கூட அந்தத் திகிலூட்டும் அம்சத்தைப்

பூரணமாக வெளிக் கொண்டு வந்திராது; காவிய நயமும் சத்து மற்ற ஒன்றுக்குப் பதிலாக வெறுப்பூட்டும் ஒரு விகோபயணத் தான் தோற்றுவித்திருக்கு முடியும்; இது நாடகத்தின் முடிவி லுள்ள சுவையை பாதித்திருக்கக் கூடும். அதனால் தான் நாடக அமைப்பைக் கண்காணித்தவர் இரண்டில் சிறிது நயமிக்கதைத் தேர்ந்தெடுத்தார் போலும். இந்த நாடக நடிப்பைக் கண்டு விட்டு நான் வீடு திரும்பும்போது, நான் கொண்டு சென்ற உறுதியான முடிவுகள்: உள்ளதை உள்ளபடியே அமைக்கும் படையலை எத்தகைய அரிய கலை வடிவில் உருவாக்கினாலும், அது புத்தகத்தி லிருந்து மேடைக்கு மாற்றப்படும் போது, மேடை விதிமுறைகள் சிலவற்றுக்கு அது கட்டுப்பட்டேயிருக்கிறது; அன்றாட வாழ்க்கை யின் அம்சங்கள், அவை எத்துணை இழிந்தவையாக இருப்பினும் கூட, உள்ளதை உள்ளபடியே கூறும் நாவலுக்கு அணி செய் பவையாக இருக்கின்றன; ஆனால் அவை மேடையில் சுவையற்ற தாகி விடுகின்றன; அவற்றுக்கு வலுவூட்டிய நூலின் மூல பலமில்லாவிட்டால், அந்த அம்சங்களை அப்படியே அப்பட்ட மாக விட்டு வைத்தால் மேடையில் அவை ரசனையற்றவையாகி விடுகின்றன.

ஹௌப்தமனின் நாடகம் பற்றி நெடிய வாக்குவாதங்கள் இருக்கும்; நெடிய நட்புகள், குறைந்த அளவிலோ, பெரும் அளவிலோ பாதிக்கப்படலாம். ஆனால் ஒன்றைப் பற்றி மட்டும் எந்தவிதமான வாக்குவாதமும் இருக்க முடியாது. அதுதான் நாடகாசிரியரின் தோற்றம். விளிம்பு கீழ் நோக்கி சாய்ந்த ஒரு தொப்பியைப் போட்டுக்கொண்டு, 'ஆபரா கோட்' ஒன்றை அணிந்து கொண்டு, விரிந்த தோள்களையும் தாடியும் கொண்ட ஒருவரை எதிர்பார்த்திருப்பார்கள்; பதிலாக ஒல்லியான, உயர மான ஒரு மனிதர் மிக அருமையான ஆடைகளை அணிந்து கொண்டு, மிகச் சிறந்த பண்பாட்டுடன் வணக்கம் தெரிவித்த போது, அவரை எதிர்ப்போர் கூட, அவர்பால் ஈர்க்கப்படமால் இருக்கமுடியாது. ஆனால் ஒரு சிலர் அவர் தோற்றத்தையே அவரைத் தாக்குவதற்குக் கருவியாகப் பயன்படுத்தலாம். அதை ஏமாற்று வித்தையென்றும் சொல்லலாம். அனுபவங்கள் பற்றிய சிறந்த நூலை எப்படி ஆரம்பிக்கிறார் என்பதை நினைத்துக் கொண்டு (தோற்றத்தை வைத்து எதையும் முடிவு காணக் கூடாது) என வாதாடுவார்கள். காஸ்பர் இப்படித்தான் தம் நூலைத் துவங்குகிறார், "எனக்குத் தெரிந்த கொலைகாரர் களெல்லாம், இளம் மகளிரைப் போலத்தான் தோன்றி னார்கள்...."

∴ப்ரீட்ரிஷ் நீட்ஷெ

ஜெர்மனி (1870-1871)

செல்வாக்கு மிக்க ஜெர்மன் தத்துவ வாதியான ∴ப்ரீட்ரிஷ் நீட்ஷெ (1844—1900) இலட்சிய வாதத் தத்துவங்களையெல்லாம் செயல் முறைக்கு ஒவ்வாதவை, கனவியற் போக்குடையவை என்று ஒதுக்கித் தள்ளினார். ஆனால் அவர் கண்ட வாழ்க்கைத் தத்துவமோ அறிவுக்குப் பொருந்தா அடிப்படைகளில் அமைக்கப் பெற்றது. அதாவது மனித இயற்கையிலுள்ள அம்சங்கள் என்னென்ன செய்யத் தூண்டுகின்றனவோ, அவற்றின் அடிப்படையில் மனித வாழ்வு அமைய வேண்டுமென்பதுதான். இவ்வாறு தாம் கண்ட அபாயகர மான முடிவுகளைத் தொடர்ந்து, தம் பிற்கால நூற்களில் ஒழுக்க உணர்வுகள், ஒழுங்கான உறவு முறைகள் இவை எவையும் தேவை யில்லை என்ற கருத்துக்கு வந்தார். கிறித்துவத்தையும், சொல்லப் போனால் மனிதத்துவ, சமூக நலங்களின் அடிப்படையில் செய்யப் படும் அனைத்து முயற்சிகளையும் 'அடிமை ஒழுக்கம்' என்று வெறுத் தொதுக்கினார்.

'காலத்துக்கு ஒவ்வா எண்ணங்கள்' என்றும் தம் ஆரம்ப கால நூல் ஒன்றில் அக்காலக் கருத்துக்களை துணிவாக எதிர்த்து, தாம் தெளிந்த நோக்குடைய ஒரு திறனுய்வாளர் என்பதை மெய்ப்பிக் கிறார். நாம் அதில் முதல் கட்டுரையின் (1873) துவக்கத்தை இங்கு எடுத்தாண்டுள்ளோம். 1871இல் பிரான்ஸை வென்று, ஜெர்மனி பலத்திலும், பாதுகாப்பிலும், வளத்திலும் வியத்தகு முன்னேற்றம் பெற்றது. வருங்காலம் தங்களுடையது என்று பூர்ஷுவாக்கள் அளவு கடந்த நம்பிக்கையும், பெரு மகிழ்வும் கொண்டிருந்தனர். பூர்ஷுவா சமூகத்தினரிடம் பொருள் வளம் செறிந்திருந்த போதி லும், அதற்கொப்ப கலை, அறிவியல் துறைகளில் ஆர்வமும், படைப் பாற்றலும் இல்லாமலிருந்தன. அன்று அவர்களுடைய பண்பாடு என்று கருதப்பட்டதெல்லாம், ஒரு போலி நாகரிகமேயாகும் என்று நீட்ஷெ விளக்கிக் காட்டுகிறார். உலகாயத முன்னேற்றம் இருந்த போதிலும் உண்மையான பண்பாட்டை அழிய விட்டு விட்டதை எச்சரித்து, அவ்வாறு செய்வது தகாது என்று மன்றாடி எடுத்துச் சொல்லித் தம் காலத்தை எதிர்த்து நிற்கிறார் நீட்ஷெ.

போரினால்—அதிலும் வெற்றி கண்ட போரினால் எவ்வளவு தீமைகளும், அபாயங்களும் ஏற்படுகின்றன என்பதைப் பற்றிப் பேசுவதே கூடாது என்பதுதான் ஜெர்மன் பொதுமக்களின் அபிப்பிராயம் எனத் தெரிகிறது. பொது மக்களின் கருத்தைவிட முக்கியமான எதையும் அறியா எழுத்தாளர்கள் தாம், மக்களின்

கவனத்தை அதிகமாகப் பெறுகிறார்கள். எனவே அந்த எழுத்தாளர்கள் போரையும், ஒழுக்கம், பண்பாடு, கலைகள் ஆகிய வற்றின் மீது அதன் பேராற்றல் மிக்க செல்வாக்கையும் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு புகழ்கின்றனர். ஒரு வெற்றியை அடைவது சுலபமாயிருக்கலாம்; ஆனால் அது மீண்டும் ஒரு பெரும் தோல்விக்கு வழி வகுக்காமல் அதைக் காப்பாற்றுவது அவ்வளவு சுலபமானதல்ல. பிரான்சுக்கு எதிராக நாம் நடத்திச் சென்ற போரைத் தொடர்ந்து ஏற்பட்ட தீய விளைவுகளில் மிகக் கொடியது, பரவலாக—ஏன் உலகளாவியே—தோன்றியுள்ள தவறான ஒரு கருத்தாகும். ஜெர்மன் பண்பாடும் இப்போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டது; எனவே இத்தகைய வியத்தகு நிகழ்ச்சிகளுக்கும், வெற்றிகளுக்கும் பொருத்தமான முறையில் அது வாகைசூட வேண்டும். இதுதான் பொதுமக்கள் கொண்டுள்ள தவறான கருத்தாகும். இது மிகத் துரதிர்ஷ்டம் வாய்ந்தது எனக் கூறவில்லை. ஏனென்றால் மருட்சித் தோற்றங்களில் நலமுடைய, இன்பமானவையும்கூட உண்டு; ஆனால் இந்த மருட்சி நம் வெற்றியை முழுத் தோல்வியாக மாற்றிவிட வல்லது; எத்தகைய தோல்வி யென்றால், இதன் மூலமாக ஜெர்மன் பேரரசுக்காக உந்தியெழும் ஜெர்மன் ஆர்வ உணர்ச்சியே வேரோடு அழிக்கப்படும்.

இந்த இரண்டு பண்பாடுகளும் ஒன்றோடொன்று போரிட்டன என்றே வைத்துக் கொள்வோம்; அப்படியாயின் வெற்றி பெற்ற பண்பாட்டின் சிறப்பை மதிப்பீடு செய்ய முழுமையான ஓர் அளவுகோல் இல்லையே. எனவே, இங்கிலியிலும் எக்களிப்புக்கோ, அல்லது நம்மையே மேன்மையுடையோர் எனக் கருதுவதற்கோ நியாயமில்லை. ஏனென்றால் முதலில் வெற்றி கொள்ளப்பட்ட பண்பாட்டின் மதிப்புத் தெரிந்திருக்க வேண்டும்; ஒருவேளை அது மிகக் குறைவாகயிருக்கலாம்; அப்படியானால் போர்க்களத்தின் முழுமையான வெற்றிகூட மற்றையப் பண்பாடு அளவு கடந்து ஆனந்தப்படுவதற்கு இடம் தராது. இனியொரு வகையில் நோக்கினால் ஜெர்மன் பண்பாடுதான் வெற்றி கண்டது என்று சொல்ல முடியாது. ஏனென்றால் பிரெஞ்சுப் பண்பாடு முன்போலவே தானிருக்கிறது; முன்போலவே இப்பொழுதும் நாம் அதைச் சார்ந்து தானிருக்கிறோம். நம் பண்பாடு நம்முடைய இராணுவ வெற்றிக்குக்கூடத் துணை செய்யவில்லை. போர் வீரர்களின் கண்டிப்பான ஒழுங்கு முறை; இயற்கையான வீரம்; சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல், தலைவர்களின் மேம்பாடு, ஒற்றுமை, சாதாரணப் படை வீரர்கள் கீழ்ப்படிந்து நடக்கும் தன்மை — சுருக்கமாகச் சொன்னால் — பண்பாட்டுக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லா அம்சங்கள் தாம், எதிரிமீது

நம்மை வெற்றி கொள்ளச் செய்தன; ஏனென்றால் எதிரிகளிடம் அந்த அம்சங்களில் முக்கியமானவை இல்லை. இன்று ஜெர்மனியில் பண்பாடு என்று கருதப்படுவது ஒருபெரும் வெற்றிக்கு வேண்டிய இராணுவத் தேவைகளில் ஒன்றாக இல்லையே? இது வியப்புக்குரியதல்லவா? எனவே இன்று ஏதோ பண்பாடு என்று கருதப்படும் ஒன்றை வளரவிட்டால், பெருகவிட்டால், அதுவே தான் வெற்றி பெற்றது என்று அதற்குச் 'செல்லங் கொடுத்தால்', அதைப் புகழ ஆரம்பித்தால், நான் முன்னரே குறிப்பிட்டது போல, அது ஜெர்மனியின் ஆர்வ உணர்ச்சியை, உயிர் நாடியை அழித்துவிடும். பின்னர் ஜெர்மனியின் உடலிலுள்ள உறுப்புக்கள் பயனுள்ளவையாக இருக்கும் என்று சொல்ல முடியுமா?

நமக்கு இப்பொழுது உள்நாட்டிலேயே ஒரு பகை இருக்கிறது; ஜெர்மன் இயல்புக்கே முரணான, புறத்தோற்றத்தில் மட்டும் அழகாகத் தோன்றும் ஒன்றை மிகவும் அபாயகரமான கருத்துப் பிழையால் நாம் 'பண்பாடு' என்று அழைக்கிறோமே அதுதான் அந்த உட்பகை. பிரெஞ்சுக்காரர்களின் ஆரவாரமிக்க திடீர்க் கொடுவெறியை எந்த நிதானத்துடனும், அசையாத உறுதியுடனும், தளராத வீரத்துடனும் ஜெர்மனி எதிர்த்து நின்றதோ, அதே மாதிரி இந்த உட்பகையையும் எதிர்த்து நின்றால், மெய்யான ஜெர்மன் பண்பாடு குறித்து நாம் நம்பிக்கையிழக்க வேண்டியதில்லை. ஏனென்றால் இதற்கு வேண்டிய தெளிவான நோக்கும், தெளிவும் கொண்ட தலைவர்களுக்கும், ஜெனரல்களுக்கும் இங்கு குறைவேயில்லை. எனினும் ஜெர்மன் வீரத்தை இப்படி ஒரு புதுத் திசையில் திருப்பி விடுவது சாத்தியமா என்பதில் எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது; அதிலும் இந்தப் போருக்குப் பிறகு, அந்த சந்தேகம் வலுப்பட்டு வருகிறது. ஏனென்றால் அத்தகைய போராட்டத்துக்கும், வீரத்துக்கும் இனித் தேவையேயில்லை என்று ஒவ்வொருவருக்கும் உறுதியாகி விட்டதாக எனக்குத் தெரிகிறது; மாறாக எல்லாம் மிக ஒழுங்காக இருக்கின்றன; தேவையான அனைத்தும் எப்பொழுதோ நிறைவேற்றப்பட்டு விட்டன. சுருக்கமாகச் சொல்வதானால் பண்பாட்டு வித்துக்கள் எங்கும் விதைக்கப்பட்டு விட்டன அல்லது அவை தளிர்விட்டுக் கொண்டிருக்கின்றன, ஏன் சில இடங்களில் பூத்துக் குலுங்குகின்றன என்று எல்லோருக்கும் உறுதியாகி விட்டது போலும். இந்த வகையில் திருப்தி மட்டுமல்ல, மகிழ்வும் பேரானந்தமும் தோன்றிவிட்டன. ஜெர்மன் பத்திரிகை எழுத்தாளர்கள், நாவல்கள், நாடகங்கள், பாடல்கள், சிறுகதைகள் முதலியவற்றின் 'உற்பத்தியாளர்கள்' ஆகியோரிடையே காணப்படும் இணையில்லாத உறுதிப்பாடு இருகிறதே அதிலே இந்த திருப்தி, மகிழ்வு, பேரானந்தம் எல்லாம் காண்கிறேன். ஒரே

இனத்தைச் சேர்ந்த இவர்கள், தற்கால மக்களின் ஒய்வு நேரத்தை — 'பண்பாடு தேடும் நேரத்தை'க்—கைப்பற்றி அவர்களின் மூளையை, அச்சிட்ட தாளைக் கொண்டு குழப்புவதற்குச் சூழ்ச்சி செய்துவிட்டார்கள். போருக்குப் பின் எல்லாமே இன்பமும், மேன்மையும், சிறப்பும், தன் மதிப்பும் பெற்றுவிட்டன எனக் கருதுகிறது இக்கூட்டம். ஜெர்மன் பண்பாடு எனத் தாங்கள் கருதுவது வெற்றிபெற்று விட்டதனால், தங்களுக்குப் புனிதத் தன்மையும் ஏற்பட்டு விட்டதாக இக்கூட்டத்தினர் எண்ணுகின்றனர். எனவே, இப்பொழுது அவர்கள் பயபக்தியைத் தோற்றுவிக்கும் முறையில் பேசுகிறார்கள்; 'ஜெர்மன் மக்களே!' என விளித்துப் பேச ஆசைப்படுகிறார்கள். பண்டைய இலக்கியங்களைப் போல தாங்கள் எழுதியவற்றையும் தொகுத்து வெளியிட்டுக் கொள்கிறார்கள்; தங்கள், ஆதிக்கத்தின் கீழ்ப்பட்ட உலகளாவிய விற்பனையுள்ள தங்கள், 'கெஜட்'களில் ஏடுகளில் தங்களில் சிலரைப் பற்றி இலக்கியத்தின் சிகரம், ஜெர்மன் காப்பியம் என்று முழக்கமும் செய்து கொள்கிறார்கள்.

சிந்தனை ஆற்றலும், அறிவொளியும் படைத்த கற்றறிந்த ஜெர்மானியர் வெற்றியை இப்படி இழிவாகப் பயன்படுத்துவதின் அபாயகரமான விளைவுகள் பற்றி உணர்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக் கூடும்; குறைந்த பட்சம், தங்களுக்கெதிரே நடக்கும் இக்கேலிக்கூத்து குறித்து மன உளைச்சலாவது இருக்கும். குரூபியான ஒருவன் நிலைக் கண்ணாடி முன்னே நின்றுகொண்டு, தன்னை ஆணழகனைக் கருதி, கண்ணாடியிலே தோன்றும் தன் உருவத்தைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்து, இலயித்துப் போவதைவிட நகைப்புக்குரியது என்ன இருக்கிறது? ஆனால் கல்வியறிவு படைத்த வகுப்பார் போவது போகட்டும் என்று பாராமுகமாகவே யிருக்கின்றனர்; தங்களுடைய சொந்த விஷயங்களிலே அக்கறையாகயிருக்கும் அவர்கள் ஜெர்மன் உயிர் நாடியை, ஆர்வ உணர்ச்சியைப்பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் தங்களுடைய சொந்தப் பண்பாடுதான் இக்காலத்தில்—ஏன் எக்காலத்திலுமே—பக்குவமான, அழகான கனி என முற்றிலும் உறுதிகொண்டு விட்டார்கள். ஜெர்மனியின் பொதுவான பண்பாட்டைப்பற்றி எவரும் ஏன் அக்கறைப்பட வேண்டும், கவலை கொள்ள வேண்டும் என்றுகூட அவர்களுக்குப் புரியவில்லை. ஏனென்றால் அவர்கள் இம்மாதிரிக் கவலைகளையெல்லாம் கடந்து, முன்னேற்றத்துக்குப் போய்விட்டார்கள். கூர்த்த நோக்குடைய எவரும்—அதிலும் அவர் வெளிநாட்டவராக யிருந்தால்—ஒரு விஷயத்தைக் கவனிக்கத் தவற மாட்டார். அதாவது இன்றைய ஜெர்மன் அறிஞர்கள் எதைப் பண்பாடு என்று நினைக்கிறார்களோ, அது முன்னர் குறிப்பிட்டப் பத்திரிகைப் படையல்கள்,

காவல்கள், நாடகங்கள் ஆகியவை தோற்றுவித்திருக்கும் வெற்றி கரமான பண்பாடுதான். இன்றைய வாழ்க்கை எந்தப் பண்பாட்டுக்குச் சாட்சியாக இருக்கிறதோ அந்தப் பண்பாடுதான் பிரான்ஸை வெற்றி கொண்டதாம்!

இது பகுத்தறிவுக்கு ஒவ்வாத—நம்ப முடியாத கூற்றாகும். விருப்பு வெறுப்பில்லாது இப்போரை ஆய்ந்து பார்த்தோ மெல்லாம்—பிரான்ஸிலும்கூட ஜெர்மன் வெற்றிக்குச் சாதகமாய் இருந்ததாகக் கூறுவர்; ஜெர்மன் அதிகாரிகளின் மேம்பாடான கல்வி; போர் வீரர்களின் சிறந்த பயிற்சி; விஞ்ஞான ரீதியில் அமைந்த இராணுவப் போர்த்திறம் ஆகியவைதாம் இங்கு ஜெர்மன் கல்வியை, ஜெர்மன் பண்பாட்டிலிருந்து வேறு பிரித்துக் கூறும்போது, ஜெர்மன் பண்பாடு வெற்றி ஈட்டியதாகச் சொல்ல முடியுமா? அறிவுக்கு ஒத்ததாக இல்லையே; ஏனென்றால் கட்டுப் பாடு, கீழ்ப்படியும் தன்மை ஆகியவற்றுக்கும், பண்பாட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஏனென்றால் பெரிதும் பண்பாடு வாய்ந்த கிரேக்க வீரர்களோவிட, மாசிட்டோனியாப் படைகளுக்கு கட்டுப்பாடு, கீழ்ப்படியும் தன்மை ஆகிய சாதகங்கள் இருந்தன. எனவே ஜெர்மன் பண்பாடும், கல்வியும் வெற்றி பெற்றன என்று சொல்வது தப்பெண்ணத்தின் காரணமாகத்தான். ஆனால் இதை நம்பும் அளவுக்கு உண்மை பண்பாட்டைப் பற்றிச் சரியாக மதிப்பிடும் ஆற்றல் ஜெர்மனியிலிருந்து மறைந்து விடவில்லை.

ஒரு தேசிய இனத்தின் வாழ்க்கைத்துறை ஒவ்வொன்றிலும் இருக்கும் கலைத்திற மேம்பாட்டின் ஒன்றிணைப்புத்தான் எல்லா வற்றுக்கும் மேலாக பண்பாடு எனப்படும். இதற்கு படிப்பறிவும் கல்வித் திறமும் பெருமளவில் அவசியமானவை என்பதில்லை; இவை இருப்பது பண்பாடு இருப்பதன் அடையாளமுமில்லை. ஏனென்றால் கொடுஞ்செயல் புரிவோரிடத்தும் இத்தகு படிப்பறி வும், கல்வித் திறமும் உடனிருக்கக் கூடும். அதாவது எந்தவிதக் கலைப்பண்பும் இல்லாதவிடத்தும், அல்லது பல்வேறு கலைப் பண்புகள் ஒழுங்குபடுத்தப்படாது குழம்பிக் கிடக்குமிடத்தும், படிப்பறிவும், கல்வித் திறமும் இருக்கக் கூடும்.

இன்று ஜெர்மானியர், பல்வேறு கலைப்பண்புகள் ஒழுங்கு படுத்தப்படாது குழம்பிக் கிடக்கும் ஒரு நிலையிலேதான் வாழ் கிறார்கள். அவர்கள் பெற்றிருக்கும் கல்வியெல்லாம் வைத்துக் கொண்டு எப்படி இதைக் கவனியாது, அவர்களுடைய இந்த நவீன காலப் "பண்பாட்டை" இவ்வளவு தூரம் ஜெர்மானியர்கள் ரசித்து மகிழ்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. அவர்களைச் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றும் — உடை, வாழும் அறைகள், அவர்களுடைய வீடுகள், தம் நகரங்களின் வழியாக அவர்கள்

நடந்து செல்லும் ஒவ்வொரு போக்கு, நாகரிக விற்பன்னர் நிலையங்களுக்கு அவர் சென்று வருவது, இவற்றில் ஒவ்வொன்றும் அவர்களுடைய கண்களைத் திறந்திருக்க வேண்டுமே. சமுதாய வாழ்க்கையில் தங்களுடைய பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். நம்முடைய கலாச்சார நிறுவனங்களிலும், இசை, நாடக, நுண்கலை வாழ்வின் இன்பங்களிலும், பல்வேறு கலைப் பண்புகள் ஒன்றோடொன்று மோதிக் கிடப்பதையும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஜெர்மானியர்கள் தங்களைச் சுற்றி எல்லா நாடுகளுடையவும், எல்லாக் காலங்களுடையவும் வண்ணங்களை, வடிவங்களை, அரிய பொருள்களை யெல்லாம் குவித்து வைத்துக் கொண்டு, அவற்றில் மந்திர சக்தியைப்போல் ஏதோ பளபளப்பைக் காண்கிறார்கள்; இதை அவர்களுடைய அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து, இது நவீனம், நவீனப் பண்பு என்று சொல்வார்கள் பல்வேறு கலைத்திறங்கள் மோதிக் கொண்டு கிடக்கின்றனவே என்பது பற்றி யாரும் கவலைப்படுவதாகக் காணோம். எனவே, உண்மையான பண்பாண்டைப்பற்றிய உணர்வேயன்றி, எதையோ ஒன்றைப் பண்பாடு என்று கூறிக் கொண்டிருக்கிறோமே, அதைக் கொண்டு நீங்கள் உங்களை எதிரிகளைத் தோற்கடிக்க முடியாது. அதுவும் பிரெஞ்சு மக்களை நிச்சயமாகத் தோற்கடிக்க முடியாது. ஏனென்றால் உண்மையான, ஆக்கபூர்வமான பண்பாடு அவர்களிடம் இருக்கிறது. அந்தப் பண்பாட்டின் மதிப்பு என்ன இருந்தாலும் அந்தப் பண்பாட்டுத் துறையான பிரெஞ்சு மக்களைத்தான் நாம் எல்லா வகையிலும் பின்பற்றுகிறோம், ஆனால் மிகக் குறைந்த ஆற்றலோடு.

இப்படி அவர்களைப் பின்பற்றுவதை நாம் நிறுத்தியிருந்தால், அதுவே பிரெஞ்சு மக்கள் மீது, வெற்றி கொண்டதாகி விடாது, அவர்களிடமிருந்து விடுதலையடைந்தோம் என்றே அது பொருள் படும். அவர்கள்மீது கொஞ்சமேனும் அசல் ஜெர்மன் பண்பாட்டைச் சுமத்தியிருந்தோமானால், அப்பொழுது ஜெர்மன் பண்பாடு வெற்றி கொண்டதாக நாம் பேசலாம். இப்பொழுதுள்ள நிலையில், கலை வடிவங்கள் சம்பந்தப்பட்டவரை நாம் இன்னும் பாரிஸைத்தான் சார்ந்திருக்கிறோம். இது தேவையாகி விட்டது. ஏனென்றால் இதுவரை தூயதான ஜெர்மன் பண்பாடு என்று ஒன்று உருவாக வேண்டும்.

இதுபற்றி நாமனைவரும்—நாமாகவே—உணர்ந்திருக்க வேண்டும். சோதர ஜெர்மானியர்களுடன் கண்டித்துப் பேசும் உரிமை படைத்த சிலரும் இதை வெளிப்படையாகத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். "ஜெர்மனியராகிய நாம் நேற்றைய மக்கள்"

என்று எக்கர்மானிடம் கெதெ ஒரு தடவை சொன்னார்; "சென்ற நூற்றாண்டு முழுவதிலும் ஊக்கமாக நம்மை நயப்படுத்தி, பண்படுத்தி வந்திருக்கிறோம் என்பது உண்மைதான்; இருந்தாலும், 'அவர்கள் நாகரிகமற்றவர்களாக இருந்தது நெடுங்காலத்துக்கு முன்னே' என்று நம்மைப் பற்றிப் பிறர் சொல்ல வேண்டுமானால் இன்னும் பல நூற்றாண்டுகள் ஊக்கமாக முயன்று அறிவாற்றலையும், உயர் பண்பாட்டையும் நாம் தேடிப் பெற்றாக வேண்டும்."

ஒட்டோ ஃபன் பிஸ்மார்க்

ஹெர் ஃபன் புட்காமருக்கு ஒரு கடிதம்

ஒட்டோ ஃபன் பிஸ்மார்க் (1815—1898) தம் அரசியல் வாழ்க்கையை 1847ஆம் ஆண்டில் கன்சர்வேடிப் பிரதிநிதியாகத் துவங்கினார்; எனினும், அவர் எல்லாப் பொழுதிலும் ஆட்சியோடு இணங்கியிருக்கவில்லை. 1862ஆம் ஆண்டில் பிரஷ்ஷிய அரசர் அவரைத் தம் முதலமைச்சராக நியமித்தார். பிஸ்மார்க்கின் அரசியல் தலைமையின் கீழ், ஆஸ்டிரியாவுக்கு எதிரான 1866ஆம் ஆண்டுப் போரை பிரஷ்ஷியா நடத்திற்று. ஜெர்மனியோடு ஆஸ்டிரியா கொண்டிருந்த தொடர்பு இதோடு முறிந்தது. பிரான்ஸுக்கு எதிராகப் புரிந்த போரில் வெற்றி பெற்றதற்குப் பின்னர் 1871ஆம் ஆண்டில் ஜெர்மனி ஒற்றுமையடைந்து, ஜெர்மன் பேரரசு நிறுவப்பட்டது. பிஸ்மார்க் 1890ஆம் ஆண்டு வரை அதன் முக்கிய அமைச்சராக — சான்ஸலராகப் பதவி வகித்தார். பலமுனை ஒப்பந்தங்கள் மூலமாக அமைதி காப்பது அவருடைய வெளி உறவுக் கொள்கையின் நோக்கமாகயிருந்தது; ஆனால் உள்நாட்டு அரசியலில் அவர் மாறுதல் விரும்பாத வராகவும், எதையும் விட்டுக் கொடாதவராகவும் மேலும் மேலும் ஆகிக்கொண்டு வந்தார். 1883 முதல் 1889ஆம் ஆண்டு வரை அவர் புதிய, முன் மாதிரியான சமுதாயச் சட்டங்களை உருவாக்கினார்; இதே காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி சோஷியல்—குடியாட்சிக் கட்சியினரின் அரசியல் இயக்கத்தை எதிர்த்து வந்தார். இதன் விளைவாக உழைப்பாளர் வகுப்பு அரசை விட்டு வேறு படுத்தப்பட்டு, மார்க்ஸீயக் கருத்துக்களை நெருங்க வழியேற் பட்டது.

டிசம்பர் 1846ஆம் ஆண்டில் பண்ணை நில உரிமையாளரான ஹெர் ஃபன் புட்காமருக்கு எழுதிய கடிதத்தை, "என்னுடைய அக வாழ்வு பற்றியும்—சிறப்பாக கிறித்துவம் பற்றிய என் மனப் பான்மையையும் "குறிக்கிறது" என்று பிஸ்மார்க்கே வர்ணித்திருக் கிறார். இளமையில். பிஸ்மார்க் மரபு வழிப்பட்ட கிறித்துவ சமயத்தை விட்டு விலகி, கட்டற்ற பகுத்தறிவுப் போக்குடைய வராக இருந்தார். பெரும் பயபக்தியும், மிகைத்த இறையுணர்வும் கொண்ட ஒரு வட்டத்துக்கு அவர் அறிமுகமானதைத் தொடர்ந்து, அவர் மனம் ஆர்வத்துடன் பாதுகாப்பான ஒரு சமயத்துத் திரும் பிற்று. இந்த வட்டத்தில் தான் பிஸ்மார்க் யோஹன்ன ஃபன் புட்காமரை சந்தித்தார்; அவரையே 1847ஆம் ஆண்டு மணந்து கொண்டார்.

டிசம்பர் இறுதி, 1846

என் அன்புமிக்க ஹெர் .:பன் புட்காமர்,

இக்கடிதத்தின் உள்ளடக்கத்தைச் சுட்டிக் காட்டியவாறே, நான் இக்கடிதத்தைத் துவங்குகிறேன்: உலகிலே நீங்கள் எனக்கு அளிக்கக் கூடிய மிகப் பெரிய பரிசைக் கோருவதே, என் நோக்கம், உங்களுடைய மகள் கரம் பற்ற விரும்புகிறேன். இதற்கு, உங்களுடைய மனப்பூர்வமான நம்பிக்கை என் மீதிருக்க வேண்டும்; அந்த நம்பிக்கையின் சான்றை—உங்களுடைய மகள் கரத்தை—உங்களுடன் சமீப காலத்தில் அறிமுகமாகி அபூர்வ மாக ஒரு சில தடவை சந்தித்து உடனேயே கோருவது மிகத் துணிச்சலான காரியமாகக் கருதப்படும் என்பதை நான் உணர் கிறேன். காலமும் இடமும் என்னைப் பற்றித் தாங்கள் ஓர் அபிப்பிராயத்துக்கு வருவதற்குத் தடையாக யிருக்கலாம்; தாங் களிடம் கோரும் இந்த விலையுயர்ந்த பரிசுக்கு அதன் மதிப்புக் கொப்பான எந்த வருங்கால உத்தரவாதமும் நான் தர இயலாதே! எனவே இந்த விஷயத்தில் மனிதன் மீது கட்டாய மாகி இருக்கும் குறைவு பட்ட நம்பிக்கையை இறைவன் மீது நீங்கள் வைக்கும் அளப்பரிய நம்பிக்கை தான் நிறைவு செய்ய முடியும். நான் துணையாகச் செய்யக் கூடியதெல்லாம், எனக்கு என்னைப் பற்றி என்னென்ன தெளிவாகத் தெரியுமோ அவை யனைத்தையும் சிறிதும் ஒளிவு மறைவில்லாமல் உங்களிடம் தெரிவித்துக் கொள்வது தான். என்னுடைய புறத்தோற்ற நடத்தைகள் பற்றித் தாங்கள் யாரிடமும் தகவல் சேகரித்துக் கொள்ள முடியும். எனவே இதற்கு அடிப்படையாக இருக்கும் என்னுடைய அகவாழ்வு பற்றியும், குறிப்பாக கிறித்துவம் பற்றி என்னுடைய மனப்பான்மையையும் விளக்குவதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இதற்கு கடந்த காலத்தை நோக்கி நான் செல்ல வேண்டும். மிகச் சிறு பிராயத்திலிருந்தே நான் என் பெற்றோர் குடும்பத் துடன் மனவேறுபாடு கொண்டு விட்டேன்; பின்னர் எனக்கு அவர்களுடன் அமைதி காணமுடியவே யில்லை. புறப்பொருள் அறிவு தேடுவதற்கும், மனவளர்ச்சிக்கும் எல்லாம் கீழ்ப்படுத்தப் படவேண்டும்; அதிலும் சிறு பிராயத்திலேயே இம்முயற்சி துவங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் என் கல்விக்கு வழி கட்டினார்கள். சமயக் கல்வி கற்க நான் ஒழுங்காகப் போகவில்லை; அதில் நான் புரிந்து கொண்டதும் மிகக் குறைவே. என்னுடைய பதினாறாவது பிறந்த நாளில் ஷ்லீயர்மாக்கர் எனக்கு தீக்கைச் சடங்கு செய்வித்தார். ஆனால் இந்தக் கல்வியில் எஞ்சிய தெல்லாம் இறைவன் நேரில் வந்து அருள் செய்வான் என்பதை ஏற்காத இயற்கைக் சமயம்தான். இது கூட வெகு விரைவில்

எல்லாமே இறைவன்தான் என்ற கருத்துக்களோடு கலந்து விட்டது. நான் சிறு வயதிலிருந்தே இரவில் பிரார்த்தனை பண்ணுவது பழக்கம்; ஆனால் இக்காலத்தில் அதை நிறுத்தி விட்டேன். மெத்தனத்தினால் இப்படிச் செய்யவில்லை, பெரிதும் சிந்தித்தே இப்படி நிறுத்தினேன். ஏனெனில் பிரார்த்தனை இறைவனின் இயற்கைக்கு ஒத்ததாகயில்லை. சர்வ வியாபியாக—எங்கும் இருக்கும் தன்மையினால்—இறைவன் எல்லாப் பொருளையும் படைத்தான்; என்னுடைய ஒவ்வோர் எண்ணத்தையும், ஆசையையும் அவன் தான் படைத்தான். எனவே நான் பிரார்த்தனை பண்ணும்போது என் மூலமாக ஆண்டவன் தனக்கே பிரார்த்தனை பண்ணிக்கொள்கிறான். ஆனால் என்னுடைய விருப்பங்களையும், எண்ணங்களையும், அவன் படைக்கவில்லை யென்றால் பிறகு அந்த எண்ணத்தினாலான பிரார்த்தனையினாலும், இறைஞ்சுவதினாலும் அவனுடைய முடிவுகள் பாதிக்கப்படும், மாற்றப்படும் என்று கருதுவது ஆணவமாகும்.

பதினேழு வயதாவதற்கு முன்னர் நான் கோய்ட்டிங்கன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். படித்த எட்டு ஆண்டுகளில் நான் அபூர்வமாகவே என் பெற்றோர் இல்லத்துக்குப் போவேன். என் தந்தையார் தாராளத்தன்மையுடன் அனுமதித்து விட்டார். ஆனால் என் தாயார் நான் கல்வியை கவனியாத பொழுது, என் தொழில்துறை அலுவல்களில் அக்கறை கொள்ளாதபோது எட்டியிருந்தே திட்டுவார். எல்லாவற்றையும், மேலே இருந்து வரும் வழி காட்டுதலுக்கு விட்டு விட வேண்டுமென்பது அம்மாவுடைய நம்பிக்கை. இவை தவிர நான் வேறு எவரிடமிருந்தும் போதனையோ, ஆலோசனையோ பெறவில்லை. இக்கால கட்டத்தில் நான் ஆர்வத்துடன் கற்ற பாடங்களோ அல்லது என்னுடைய விரக்தி உணர்வோ வாழ்க்கையின் சீர்மைக்கும், முக்கியத்துவத்துக்கும் அருகில் என்னை இட்டுச் சென்றன என்றால் அது ஹேகல் (Hegel) ஷ்பினோஸா (Spinoza) ஆகிய இருவரின் எழுத்துக்கள் மூலமாகத்தான். ஆனால் ஹேகலின் நூற்கள் எனக்குப் பெரும்பாலும் புரியவில்லை. மனிதனின் புலனறிவுக்குப் புரியாதவற்றைப் பற்றி கணித இயலுக்குள்ள உறுதியும், தெளிவும் கொண்ட ஷ்பினோஸாவின் எழுத்துக்கள் எனக்கு ஆறுதல் தந்தன.

ஆனால் ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னர் என் அன்னையார் இறந்ததும் நான் கினீப்ஹோர்∴புக்கு வந்தேன். அக்காலத்தில் ஏற்பட்ட தனிமை தான் இவ்விஷயங்கள் பற்றி என்னைத் தீவிரமாக சிந்திக்க வைத்தன. என்னுடைய கருத்துக்கள் பெருமளவில் மாறவில்லை யென்றாலும், என் தனிமையில் என் ஆத்ம ஒலி

கேட்க ஆரபித்தது. இதிலிருந்து, அனுமதிக்கக் கூடியவை, சரியானவை என்று முன்னர் எனக்குத் தோன்றிய பல கருத்துக்கள் இப்பொழுது நேர்மையற்றவையாகப் பட்டன. இருப்பினும் நான் பேரறிவைத் தேடும் போதெல்லாம் அது புலனறிவின் வட்டத்துக்குள்ளே சுருங்கி நின்று கொண்டது; ஸ்ட்ரௌஸ், .:போயர்பாக், புரூனோபௌவர் ஆகியோரைப் படித்து என்னை ஐயப்பாட்டுக்குள்மேலும் ஆழ்த்திற்று. ஆண்டவன் எனக்குப் பேரறிவைத் தேடும் இயல்பான வலிமையைக் கொடுக்க மறுத்து விட்டான் என்பது என்னுடைய மூன் மாதிரியிலிருந்து தெளிவாகிவிட்டது. உலகாதிபதியான, ஆண்டவனின் திட்டத்தை யும், உள்ளத்தையும் அறிவோம் என்று கூறுவது ஆணவமாகும்; மரணத்துக்குப் பின் மனிதனின் நிலைபற்றி படைத்தவன் என்ன தீர்மானித்துப் இருக்கிறான் என்பதை மனிதன் பணிவோடு பொறுத்திருந்து தான் கண்டு கொள்ள வேண்டும்; உலகிலுள்ள இருளினூடே வழியறிந்து செல்வதற்காக ஆண்டவன் நமக்கு மனசாட்சியென்னும் உணர்கொம்பு—உணர்வுறுப்பு ஒன்றை வைத்திருக்கிறான்; அதன் மூலம் தான் இம்மண்ணில் நமக்கு அவனுடைய உள்ளத்தைத் காட்டுகிறான்—என்று நம்பலானேன். இந்த நம்பிக்கையில் நான் அமைதி காணவில்லை என்று சொல்ல வேண்டியதில்லை. என்னுடையவும், மற்ற மனிதர்களுடையவும் வாழ்க்கையே பயனற்றது, குறிக்கோளற்றது என்ற விரக்தியில் நான் அலைக்கழிக்கப்பட்டேன். சுழலும் சக்கரங்கள் மேலேறும் போதும், கீழிறங்கும் போதும் அள்ளியெறியும் தூசியைப் போல, இதுவும் படைப்பின் ஒரு துணை விளைவு தானே என்று மனங் கலங்கினேன்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மோரிட்ஸ் பிளாங்கன் புர்க்குடன் நான் நெருங்கிய உறவு கொண்டேன். என் பள்ளிக் கூட நாட்களுக்குப் பின்னர் இப்பொழுதுதான் அவரைக் காண நேர்ந்தது. அவரிடம் இதுவரை நான் பெற்றிரா ஒன்றைக் கண்டேன்—நட்பை! ஆனால் அவருடைய அன்பும் ஆர்வமும் என்னிடமில்லாத ஒன்றை, நம்பிக்கையை, வாதத்தாலும் தர்க்க ரீதியாலும் ஊட்ட முற்பட்டன. ஆனால் முயற்சி பயன் தரவில்லை! மோரிட்ஸ் மூலமாக க்ரீக்ல.:ப் இல்லத்தோடும், அதைச் சார்ந்தோரிடமும் அறிமுகமானேன். என்னைவிட மேம் பட்ட உள்ளங்களையுடைய அவர்கள் ஒரு குழந்தைக்குரிய நம்பிக்கையோடு மெய்யானது, புனிதமானது என்று ஏற்றுக் கொண்டதையெல்லாம், நான் என் புல்லறிவின் துணைகொண்டு ஆராய்ந்து பார்க்க முற்பட்டதை எண்ணி வெட்கமடையலானேன். அவர்களுடைய புறத் தோற்றத்தின் முயற்சிகளை வைத்துப்

பார்க்கும்போது, நான் எத்தகைய மனிதனாக இருக்க வேண்டு மென்று ஆசைப்பட்டேனோ, அதற்கு முன் மாதிரியாக அவர்கள் அமைந்திருந்ததைக் கண்டேன். அவர்களுடைய உள்ளத்தில் உறுதியும், அமைதியும் குடிகொண்டிருந்தது எனக்கு வியப்பைத் தரவில்லை. ஏனென்றால் அவை நம்பிக்கையின் உடன் சார்ந்த தன்மைகள் என்பது குறித்து நான் ஐயங்கொண்டதேயில்லை. ஆனால் நம்பிக்கை ஒருவர் தந்து, வேறொருவர் பெற்றுக் கொள்வ தில்லை. அசைவுறாத நம்பிக்கை என் உள்ளத்தில் என்றாவது வேர்விடுமா என்று நான் பொறுமையுடன் காத்திருந்துதான் பார்க்க வேண்டுமென்று நான் எண்ணினேன். விரைவில் அந்த இல்லத்தில் நான் இணக்கமாகயிருக்க முடிந்தது. இதுவரை எனக்குக் கிடைக்காத ஒரு மனநிறைவை நான் அங்கு பெற்றேன். குடும்ப பாசத்துடைய ஒரு வாழ்வு என்னைச் சுற்றிக் கொண்டது.

இதற்கிடையில் நான் தீவிரமாகப் பங்கு கொள்ளாத சில நிகழ்ச்சிகளினால் நான் பாதிக்கப்பட்டேன்; அவை பிறருடைய இரகசியங்களாதலால் நான் அவற்றை இங்கு வெளிப்படுத்த விரும்பவில்லை. இந்நிகழ்ச்சிகள் என்னை ஆழ்ந்து அதிர்ச்சி யடையச் செய்தன. இந்த விளைவுகளால், என்னுடைய வாழ்வின் போக்கு பயணற்றது என்று முன்பு எனக்கிருந்த உணர்வு தீவிர மாயிற்று. நண்பர்களின் ஆலோசனைகளினாலும், என்னுடைய சுய விருப்பத்தாலும், திருமறை நூல்களை முறைப்படிப் படிக்க தூண்டப்பட்டேன்; அப்படிப் படிக்கும்போது அவை பற்றிச் சொந்த முடிவுகள் கட்டாயமாக்க என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். கார்தமனில் நம்முடைய நண்பர் உயிர்போக்கும் நோய்வாய்ப் பட்டிருந்தபோது, என்னுள்ளே சுற்றிக் கொண் டிருந்த ஓர் உணர்வு உயிர் பெற்றது: மனப்பூர்வமான பிரார்த்தனை என் நெஞ்சத்திலிருந்து பிய்த்துக்கொண்டு வெளிப் போந்தது. அந்தப் பிரார்த்தனை பகுத்தறிவுக்கு இசைந்ததா என்று அப் பொழுது நான் நினைத்துப் பார்க்கவுமில்லை. என்னுடைய பிரார்த் தனையை இறைவன் ஏற்றுக் கொள்ளவுமில்லை; ஆனால் அவன் அதை மறுதளிக்கவுமில்லை. ஏனென்றால் அதன் பின்னர் அவன் கருணையைக் கோரிப் பிரார்த்திக்கும் திறமையை நான் என்றுமே இழந்து விடவில்லை. இதற்குப் பிறகு நான் அமைதி காணுமல் ஒருவேளை இருந்திருக்கலாம்; ஆனால் முன்னர் என்றுமே அறிந் திராத அளவில் என் வாழ்க்கையில் துணிவையும், நம்பிக்கையும் நான் பெற்றுக் கொண்டேன்.

நான் இம்மாறுதலடைந்து இரண்டு மாதங்கள் தானாயின. என் நெஞ்சம் பெற்றுள்ள இம்மாற்றத்தை நீங்கள் எப்படி மதிப்பிடப்

போகிறீர்கள் என்று நான் சொல்ல முடியாது. ஆனால் என் விஷயம் எப்படி முடிவானாலும், என் நம்பிக்கையை நான் இழக்க மாட்டேன் என்று தெளிவு கொள்கிறேன். ஒளிவு மறைவில்லாமல் உங்களிடம் இவையனைத்தையும் கூறியதன் மூலமாகவும் அந்த நம்பிக்கையை உறுதியாக்கிக் கொள்கிறேன். வேறு யாரிடமும் இவற்றையெல்லாம் நான் கூறியதில்லை. ஆண்டவன் நேர்மையுள்ளோரை வெற்றி கொள்ளச் செய்வான் என்ற உறுதிப் பாடுடன் சொல்கிறேன்.

உங்களுடைய மகள் பற்றி என்னுடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் வலியுறுத்துவதிலிருந்து என்னைக் கட்டுப் படுத்திக் கொள்கிறேன். ஏனென்றால் வார்த்தைகளைவிட என் நடவடிக்கைத் தெளிவாகவும், ஆற்றலோடும் பேசும். வருங் காலத்தைப் பற்றிய வாக்குறுதிகளையும் நீங்கள் பயனுடையவை யாகக் கருதப்போவதில்லை; ஏனென்றால் மனித இதயத்தின் நிலைபற்றி என்னைவிட உங்களுக்கு நன்கு தெரியும். உங்களுடைய மகளின் நலம் குறித்து நான் தரக்கூடிய உத்தரவாதமெல்லாம், இறைவனின் ஆசி கோரி நான் செய்யும் பிரார்த்தனைதான். நானும் யோஹன்னாவும் கூட்டாகச் சென்ற பயணத்துக்குப்பின் நான் அவளைப் பல தடவை கார்தமினில் பார்த்திருக்கிறேன், என்னுடைய எண்ணம் நிறைவேறுவதனால் உங்கள் மகளுக்கு வாழ்விலமைதியும். இன்பமும் கிடைக்குமா என்றும், ஒரு கணவனிடத்தில் அவள் எதிர்பார்க்கும் அம்சங்களெல்லாம் என்னிடம் இருக்கின்றனவா என்றும் சிந்தித்திருக்கின்றேன். அண்மையில், இறைவனின் கருணை மீது நான் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை என் எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்ற என் தீர்மானத்தை வலுப்படுத்திற்று. ஸிம்மர் ஹௌஸனில் நான் மௌனமாக இருந்தேன்; ஏனென்றால் சொற்களால் தெரிவிக்கக் கூடியதைவிட அதிகமதிகம் உங்களிடம் தெரிவிக்க வேண்டி யிருந்தது. இந்த விஷயத்தின் முக்கியத்தையும்: நீங்களும், உங்கள் மனைவியும் உங்கள் மகளைப் பிரிந்திருக்க வேண்டிய ஒரு தியாகத்தையும், இழப்பையும் கருதும்போது உங்கள் தீர்மானம் முற்ற முற்ற எனக்கு சாதகமாகயிருக்கும் என்று எதிர் பார்க்கவும் முடியாது; நான் உங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒரு வேளை நீங்கள் என் கோரிக்கையை நிராகரிக்க நேர்ந்தால், அதற்குரிய காரணங்கள் பற்றி உங்களிடம் கலந்து பேச எனக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்பது தான்.

இக்கடிதத்தில் நான் சொல்லாத — முழுதும் விளங்காத— பொருள்கள் பல இருக்கின்றன. நீங்கள் கேட்கும் எந்தக்

கேள்விக்கும் மனப்பூர்வமாகவும், சரியாகவும் பதிலளிக்க நான் காத்திருக்கிறேன். மிக முக்கியமானவை பற்றியெல்லாம் நான் இங்கு கூறிவிட்டதாகவே நம்புகிறேன்.

தங்கள் மகனிடம் என் ஆழ்ந்த மதிப்பைத் தெரிவிக்கக் கோருகிறேன்; என்னுடைய ஆழ்ந்த மரியாதையையும், அன்பையும் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

பிஸ்மார்க்.

மாக்ஸ் வேபர்

அரசியல்—வாழ்க்கைத் தொழில்

மனித சமுதாயத்தின் வளர்ச்சி, இயல்பு, சட்டங்கள் ஆகியவை பற்றி, ஆய்வுத்துறை வல்லுநரான மாக்ஸ் வேபர் (1864-1920), அவருடைய ஆய்வுகளை கார்ல் மார்க்ஸின் இத்துறைபற்றிய தத்துவங்களிலிருந்து துவங்கினர். ஆனால் மார்க்ஸின் மாரு நிலையுடைய வரலாற்று விளக்கத்துக்குப் பதிலாக, இவர் வரலாற்று, சமுதாய இயல் வளர்ச்சியில் ஆத்மீக சக்திகளுக்கும், உலகாயத சக்திகளுக்குமிடையே உள்ள தொடர்புகளை அனுபவபூர்வமாக ஆராய்ந்தார். முதல் உலகப் போருக்குப் பின்னர், தவருன கொள்கையினுலோ, அல்லது உருப்படியான ஒரு கொள்கையினுலோ, அல்லது உருப்படியான ஒரு கொள்கை யில்லாததினுலோ ஏற்பட்ட விளைவுகளுக்கு மத்தியிலே வாழ்ந்த மாக்ஸ் வேபர், தம் முடைய "அரசியல்—வாழ்க்கைத் தொழில்" என்னும் எழுத் தோவியத்தை 1919 ஆம் ஆண்டுக்குப் பிறகு படைத்தார். இங்கு அரசியலில் நன்னெறி சார்ந்த ஒழுக்க இயல்கள் பற்றி வலியுறுத்து கிறார்; இந்த ஒழுக்க இயல்களைப் புறக்கணிக்கும் மனப்பாங்கை அவர் காண்கிறார்; அரசியலின் பணிகளையும், சாத்தியக் கூறுகளை யும், அவர் விளக்குகிறார்; இப்படி விளக்கும்போது நடைமுறை வாழ்க்கையின் நிலைகளையும் அவர் புறக்கணித்து விடவில்லை.

ஒரு வாழ்க்கைத் தொழில் என்ற முறையில், அரசியலுக்கு வருவோர்க்கு, அது எத்தகைய மன நிறைவையும், உளமார்ந்த இன்பத்தையும் தருகிறது; அரசியலுக்கு வருவோரிடமிருந்து என்ன தனிப்பட்ட நிபந்தனைகளை அது விதிக்கிறது?

முதன் முதலில், அரசியல் வாதிக்குத் தான் அதிகாரம் பெற்று விட்டதாக ஓர் உணர்வை அரசியல் ஏற்படுத்துகிறது. மக்க ளிடையே தனக்குச் செல்வாக்கு இருக்கிறது: அவர்கள் மீது செலுத்தப்படும் ஆதிக்கத்தில் தனக்கும் பங்கிருக்கிறது என்ற உணர்வு, அரசியலைத் தொழிலாகக் கொண்ட அடக்க ஒடுக்கமான அரசியல் வாதியையும் சாதாரண மக்களுக்கு மேலே உயர்த்தி விடுகிறது; அதிலும் சிறப்பாக வரலாற்று முக்கியத்துவமுள்ள நிகழ்ச்சிகளின் நரம்பு மையத்தையே நாம் கூட்டாக இயக்கு கிறோம் என்ற உணர்வு இன்னிலையை உண்டாக்குகிறது. இருந் தாலும், இப்படிக் கிடைக்கும் அதிகாரத்தைச் செயல்படுத்தும் பொழுது—இது சம்பந்தப்பட்ட நபர் விஷயத்தில் எவ்வளவு சுருங்கியதாக யிருந்தாலும்—என்ன பண்புகளைச் சார்ந்து நீதத் துடன் நடந்துகொள்ள வேண்டும், தம் மீது இந்த அதிகாரம்

என்ன பொறுப்பைச் சுமத்துகிறது என்ற கேள்வி அவருக்கு எதிர்ப்படுகிறது. இது நன்னெறி சார்ந்த—ஒழுக்க இயலுள்ள—ஒரு வட்டத்துக்கு நம்மைக் கொண்டு செல்கிறது; ஏனென்றால் வரலாற்றின் சக்கரத்தை நல்வழியில் செலுத்தும் ஒருவர் எத்தன்மையானவராக இருக்க வேண்டும் என்ற பிரச்னை இங்குதான் எழுகிறது.

அரசியல் வல்லுநர் எவருக்கும் மூன்று பண்புகள் அவருடைய அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவை என்று நிச்சயமாகச் சொல்லலாம்: பேரார்வம்; பொறுப்புணர்ச்சி; எதிலும் தீர்வு காண்பதில் நேர்மை கொண்டு செயல் படுதல், பேரார்வம் என்பது ஓர் இலட்சியத்துக்காக, அந்த இலட்சியத்தை ஆளும் கடவுளுக்காக, அல்லது அதை ஆளும் பூதத்துக்காக முழு ஈடுபாட்டுடன் உழைத்தல். காலஞ்சென்ற என் நண்பர் கியோர்க் ஸிம்மல் வர்ணித்தாரே அது மாதிரி "பயனில்லாத பரபரப்புடன்" ஈடுபடவேண்டும் என்பது நோக்கல்ல; இத்தகைய பரபரப்பு ஒரு வகை அறிஞர்களுக்கு, அதிலும் ரஷ்ய அறிஞர்களுக்கு உரித்தானது; இந்தப் பயனற்ற பரபரப்புத்தான் இப்பொழுது (1919) நாம் புரட்சி என்று அழைக்கிறோமே அந்தக் களியாட்டத்தில் நம்முடைய அறிஞர்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பரபரப்பு அறிவுத் துறையில் சுவையுடையதாக இருந்தாலும், இதிலே ஒரு பொறுப்புணர்ச்சியை எங்கும் காண முடியாது. ஏனென்றால் எவ்வளவு மெய்யாகவிருந்தாலும் வெறும் பேரார்வம் மட்டும் போதாது. ஓர் இலட்சியப் பணிக்கு வேண்டிய பொறுப்புணர்ச்சி ஒருவனின் முழு நடத்தைக்கும் வழி காட்ட வேண்டும். அப்படி யல்லாது வெறும் பேரார்வம் மட்டும் அவனை அரசியல்வாதியாக்கி விடாது. இதற்கு, எதைப் பற்றியும் தீர்வு காண்பதில் நேர்மையும், திறமையும் கொண்டு செயல்படவேண்டும். இதுதான் அரசியல் வாதியின் தீர்மானமான மன இயல் பண்பு. உண்மை நிலைகள் எவ்வாறு இருந்தாலும், அவை பற்றித் தீர்வு காணும்போது அகத் தெளிவும், அவையடக்கமும், சாந்தமும் இருக்கவேண்டும். அதாவது தீர்வு காணும்பொழுது, சம்பந்தப்பட்ட மக்களிடமிருந்தும், பொருள்களிடமிருந்தும், மனதை எட்டத்தில் வைத்து அவற்றைப் பரிசிலனை செய்யும் திறமை வேண்டும்.

இப்படி எட்டத்தில் வைத்துப் பார்க்க முடியாததுதான் அரசியல் வாதியின் பெரும் பாவமாகும்; இதை வளர்த்து விட்டால், நம் அறிஞர்களையும் இது அரசியலில் வலிமையற்றவர்களாக்கி விடும். பிரச்னை இதுதான்: பேரார்வத்தையும், நிதானமாகத் தீர்வு காணும் பண்பையும் எப்படி ஒரே இதயத்தில் கட்டாயப்

படுத்தி ஒன்றாக வாழச் செய்ய முடியும். அரசியலில் திட்டங்கள் தகுதியினால், மூளையினால் வகுக்கப்படுகின்றன. வேறு எந்த உறுப்பினாலோ, ஆத்மாவினாலோ அல்ல; எனினும் அரசியல் ஈடுபாடு, ஒரு பொழுது போக்காக இல்லாது, மெய்யான மனிதப் பண்புடைய செயலாக இருக்க வேண்டுமானால், அது பேராவலத்தில் பிறந்து, அதனாலேயே வளர்க்கப்படவேண்டும். பிரச்னைகளை எல்லா வகையிலும் எட்டத்திலே யிருந்து ஆராயும் பண்பு, மனதின் மீது கட்டுப்பாடும் ஆதிக்கமும் கொண்டுள்ள அரசியல் வாதிக்குத் தான் முடியும்; இதுதான் பேராவல மிக்க அரசியல் வாதியையும், பயனில்லாது, பரபரப்பையே நோக்காகக் கொண்ட பொழுதுபோக்கு அரசியல் வாதியையும் வேறுபடுத்திக் காண்பிக்கிறது. சிறப்பியல்பு கொண்ட அரசியல்வாதி ஒருவரின் வலிமை முக்கியமாக இப்பண்புகள் பெற்றிருப்பதையே குறிக்கும்.

ஆதலால் தான், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாழிகையும், மிகச் சாதாரணமான எல்லா மனிதர்களுக்கும் இருக்கக் கூடிய ஒரு விரோதியை அரசியல் வாதி தோல்வியுறச் செய்யவேண்டும்.அந்த விரோதிதான், வீண் தற்பெருமை. எந்தப் பிரச்னையையும் எட்டத்திலே நின்று பரிசீலிப்பதற்கும், எதிலும் மனப் பூர்வமாக ஈடுபடுவதற்கும் பகையாகயிருப்பது இத் தற்பெருமை தான். இங்கு தன்னையே எட்டத்திலிருந்து நோக்குவதற்கு இத் தற்பெருமை தடையாகயிருக்கிறது.

தற்பெருமை மிகச் சாதாரணமாகக் காணப்படும் ஒரு தன்மை. வீண் பெருமையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர் எவருமிலர். கல்வித் துறைகளிலும், அறிஞர் வட்டாரங்களிலும் இது அத் 'தொழில்களுக்கே உரித்தான' ஒரு வகை நோய் என்பது உண்மை தான். எனினும், இது வெறுப்பூட்டும் தன்மையுடையதாக இருந்தாலும், அறிஞனைப் பொறுத்த வரை இது ஓரளவுக்குத் தீங்கற்றது; ஏனென்றால், இது அறிஞனின் கல்வித் தேட்டத்தில் தலையிடாது; அதற்குக் குறுக்கே நிற்காது. ஆனால் அரசியல் வாதியைப் பொறுத்த வரை நிலைமை நேர்மாறானது; ஏனென்றால் அரசியல்வாதி சக்தியும் அதிகாரமும் பெறவேண்டுமென்ற பேராவலுடன் உழைக்கின்றான்—அதிகாரம் தவிர்க்க முடியாத, தடுக்க முடியாத உறுதியான கருவி என்ற நிலையில் அதைப் பெறப் பாடுபடுகின்றான். எனவே மேலாண்மை பெற விழைதல், அதிகாரம் பெறவேண்டும் என்ற உந்துணர்வு, அரசியல் வாதியின் இயல்பான தன்மைகளுள் ஒன்றுதான்! ஆனால் மேலாண்மை, அதிகாரம் ஆகியவை பெறவேண்டும் என்ற பேராவல், தன்னைச் சுற்றிச் சுற்றியே நிற்கும்போது, "தான்", 'தனக்கு' 'தன்னுடைய' என்ற நிலையிலே அது அமைந்து விடும்போது, இலட்சியத்துக்காக

என்று அப்பேராவலே முற்ற முற்ற வழிப்படுத்தாது மதிமயக்கும் அளவுக்குத் தன் நன்மைக்காகவே அதைப் பயன்படுத்தும் போது தான் தன்னுடைய தொழில் துறையின் புனிதத் தன்மைக்கு எதிராக அவன் பாவம் செய்யத் துவங்குகிறான். ஏனென்றால் அரசியல் துறையில் மூலாதாரமான இரண்டே இரண்டு கொடிய பாவங்கள் தானுள்ளன: 'தான்,' 'தனக்கு,' 'தன்னுடைய' என்று தன்னையே சுற்றி நிற்கும் தன்மை பெரும்பாலும் இத்தன்மையைச் சார்ந்து நிற்கும் பொறுப்பின்மை இவையிரண்டும் தான் அக்கொடிய பாவங்கள். பலரறியத் தானிருக்க வேண்டும், உலகத்தின் முழு ஒளி விளக்கும் தன் மீது வீச வேண்டும் என்ற தூண்டுதல் தான் தற்பெருமை; இத்தூண்டுதலில் அரசியல்வாதி மீக்கூறிய ஏதேனும் ஒரு பாவத்தையோ, இரு பாவங்களையுமோ செய்யத் துணிகிறான். மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிப் பயன்படுத்தும் அரசியல்வாதி விளம்பரப் பலகைக் குறிக்கோளாக வைத்துச் செயல் படுவதனால், இப்பாவங்களைச் செய்தாக வேண்டியிருக்கிறது; அதனால் அத்தகைய அரசியல்வாதிக்கு இரு வகை ஆபத்துக்கள் எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கின்றன; ஒன்று: அவன் நடிக்க வேண்டியிருக்கிறது: இரண்டு: பிறர் மெச்ச வாழ வேண்டிருப்பதனால், தன் நடை முறையில் பொறுப்புகளைத் துச்சமாக எண்ணவேண்டி வருகிறது. புற உண்மைகளை உள்ளபடி உணராது, 'தான்,' 'தனக்கு' என்ற அவனுடைய நிலை, உண்மை அதிகாரத்தை விட்டு விட்டு, அதிகாரத்தின் பகட்டான மினுமினுக்கும் போலித் தோற்றத்துக்காகப் பாடுபட அவனை அழைத்துச் செல்கிறது. அது போலவே, எந்த வித ஆக்கபூர்வமான குறிக்கோளுமின்றி, அதிகாரம் பெற்றிருக்கின்றோம் என்ற திருப்தியிலேயே இன்பம் காணுமாறு அவனுடைய பொறுப்பின்மை அவனுக்கு வழி காட்டுகிறது. அதிகாரம் ஒருவனின் விருப்பத்தையடைய உறுதியான ஒரு கருவியாக இருப்பதனாலும்—எனவே அதிகாரம் பெறப் பாடுபடுவது அரசியலை இயக்கும் சக்திகளுள் ஒன்றாக அமைவதனாலும், அதிகாரம் பற்றி அற்பமாகத் தற்பெருமை கொண்டு திரிவதையும், அதிகாரம் இருக்கும் உணர்வினால் வீண் தற்புகழ்ச்சி கொள்வதையும் விட, அரசியல் வலிமையை அழித்துக் சிதைப்பது எதுவுமில்லை. ஆர்வமிக்க ஒரு மரபினர் கூட இந்நாட்டில் புகழ்ந்து போற்ற முற்படும் இந்த 'அதிகார அரசியல் வாதி' பார்வைக்கு வலிமை மிக்கவனைத் தோன்றினாலும், உண்மையில் அவனுடைய வேலை இலக்கில்லாதது; பயனற்றது. எனவே இவ்வகையில் அதிகாரம் பெற 'அரசியல்' என்ற கொள்கையைத் தாக்குவோர் முற்றிலும் நேர்மையானவர்களே. இப்படி வெறும் அதிகாரத்துக்கு மட்டும் அரசியலை மேற்கொள்

வோர், உளப் பண்பாடில்லாது தகர்ந்து விழும் சான்றுகளி லிருந்து போலித் தோற்றத்துக்கும், பகட்டான வாழ்வுக்கும் பின்னுல் எத்தகைய பலஹீனமும், செயல் திறமில்லாமையும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். இத்தகைய அரசியல், மனிதன் செயலாக்கம் பற்றி மேலெழுந்த வரரியான, இழிவான நோக்குக் கொண்டி ருப்பதன் விளைவாகும்.

அரசியல் ஒரு துறையில் செயல்படுவதனுல், இறுதியாக ஏற்படும் விளைவுக்கும், அந்தச் செயலுக்குத் தூண்டிய ஆரம்ப நோக்கத்துக்கும் பொருத்தமோ, போதிய இணக்கமோ பெரும் பாலும் இல்லாது போய் விடுகிறது என்பது சரித்திரத்தின் ஓர் அடிப்படை உண்மையாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கத் தோடு துவங்கப் பெறும், ஓர் அரசியல் நடவடிக்கையின் விளைவு, முற்ற முற்ற அந்த நோக்கத்தின் நிறைவேற்றமாக இருப்ப தில்லை. எனினும் இந்த நோக்கம், அதாவது ஓர் இலட்சியத்துக் கான பணி—இருந்தேயாக வேண்டும்; அப்பொழுதுதான் செயல் படும்போது, ஓர் உள்ளார்ந்த இசைவும், முனைப்பும் ஏற்படும். ஆனுல் அரசியல்வாதி அதிகாரம் பெறப் பாடுபடுவதும், அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது எந்த நோக்குக்காக, இலட்சியத்துக்காக இருக்க வேண்டுமென்பதும் அவனுடைய நம்பிக்கையைப் பொறுத்ததாகும். தேசியம், மனித இன நலம், சமுதாயம், அறநெறிச் சார்பு, பண்பாடு, ஆத்மீகம், சமயம் ஆகிய ஏதேனும் ஓர் இலட்சியத்துக்காக அவன் உழைக்கலாம்; முன்னேற்றம் வேண்டும், அது எந்த வகையிலாவது இருக் கட்டும் என்ற உறுதி ஒருவனுக்கு இருக்கலாம்; ஏதோ ஓர் எண்ணத்துக்காக ஒரு கருத்துக்காகப் பணிபுரிவதாகச் சொல்ல லாம்; அன்ருட வாழ்வில் எதிர்ப்படும் வெளிப்படையான ஒரு குறிக்கோளுக்காகப் பணி புரிகிறேன் என்று கூறலாம். ஆனுல் என்ன இருந்தாலும் ஏதோ ஒரு வகை நம்பிக்கை யிருந்தாக வேண்டும். இதில்லா விட்டால், மனிதன் சாபக்கேடுகளான தவறு செய்யும் இயல்பும், பயனில்லாதவற்றைச் செய்யும் இயல்பும் வெளித் தோற்றத்தில் மிகப் பெரிதாகத் தெரியும்; அரசியல் வெற்றியைக் கூடக் களங்கப்படுத்தி விடும்.

இதில்தான் தீர்மானமான கட்டம் வருகிறது. எல்லா அறச் சார்புடைய, ஒழுக்க பூர்வமான செயல்களும், அடிப்படையில் வேறுபட்ட, ஒன்றுக்கொன்று இசைவில்லாது முரண்பட்ட இரு கோட்பாடுகளால் நெறிப்படுத்தப் படுகின்றன என்பதை நாம் உணர வேண்டும். அவை முழு நலம் கருதும் நன்னெறியுடன் இணைக்கப்படலம், அல்லது பொறுப்பாண்மையின் நன்னெறி யுடன் இணைக்கப்படலாம். இதனுல் முழு நலம் கருதும் நன்னெறி

பொறுப்பில்லாதது என்றோ, அல்லது பொறுப்பாண்மையின் நன்னெறி முழுநலம் கருதாதது என்றோ கொள்ள வேண்டிய தில்லை; அப்படி எதுவும் இங்கு குறிப்பிடப்படவுமில்லை. ஆனால் மேற்சொன்ன இரு கோட்பாடுகளுக்கு ஒப்பச் செயல்படுவதில் ஒன்றிற்கொன்று மிகைத்த வேறுபாடு இருக்கிறது. இதைச் சமய இலக்கணப்படி கூறுவதானால்: "கிறித்துவன் தான் செய்ய வேண்டிய நல்லதைச் செய்கிறான்; (விளைவைப் பற்றிய) மற்ற வற்றை ஆண்டவனிடம் விட்டு விடுகிறான்." அதாவது முழுநலம் கருதும் நன்னெறிக் கோட்பாட்டுக்கொப்ப நடக்கிறான். இதன் பொருள்: தன் நடத்தையினால் ஏற்படக் கூடியவையும், முன்னரே அறிந்திடக் கூடியவையுமான விளைவுகளுக்குத் தானே பொறுப் பேற்றுக் கொள்ளல். தன் சங்கத்தின் கொள்கைகள் தாம் முழு நலம் கருதும் நன்னெறியாகும் என்று உறுதி கொண்டுள்ள தொழிற்சங்கத் தலைவன் ஒருவனிடம், அவனுடைய நடத்தையின் விளைவு அவனுடைய வகுப்பாரையே மேலும் கொடுமைக்கு ஆளாக்கும்; அவர்களுடைய எழுச்சியையும் தாமதப்படுத்தும் என்று நீங்கள் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அத் தலைவன் மனம் மாறமாட்டான். உள்ளத்தில் கொண்டுள்ள உறுதியால் தூண்டப் பட்ட ஒரு செயலின் விளைவுகள் தீமையாக யிருந்தால், அவன் அதைச் செய்தவர்கள் தாம் பொறுப்பேற்க வேண்டும் என்று சொல்ல மாட்டான்; மாறாக உலகம், மக்களின் மடமை, அவர்களை அப்படிப் படைத்த ஆண்டவனின் சித்தம்— எதோவொன்று பொறுப்பென்று சொல்வான். ஆனால் பொறுப் பாண்மை என்னும் நன்னெறியுடன் செயல்படுபவன், மனிதனின் சாரசரிக் குறைபாடுகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்வான். ∴பிஷ்டெ மிகப் பொருத்தமாகக் கூறியது போல, மனிதர்கள் அனைவரும் நல்லவர்களாகவோ, நிறை குணம் கொண்டவர் களாகவோ இருப்பார்கள் என்று அவன் கண்ணை முடிக்கொண்டு நம்புவதற்கு அவனுக்கு உரிமை கிடையாது. எனவே தன் நடத்தையினால் ஏற்படக் கூடிய, முன்னரே அப்படி ஏற்படக் கூடும் என்றும் அறிந்துள்ள விளைவுகளுக்குப் பிறரைக் குறை கூற மாட்டான். இந்த விளைவுகள் என் நடத்தையினால் ஏற் பட்டவை தாம்" என்றே அவன் சொல்வான். முழுநலம் கருதும் நன்னெறிப்படி நடப்பவன், சமூக அமைப்பில் காணும் அநீதியை எதிர்த்துப் பற்றவைக்கப்பட்ட கண்டனக் கனல் அணைந்து விடாது பார்த்துக் கொள்வதுதான் தன் பொறுப்பெனக் கருது கிறான். அதைக் கொழுந்து விட்டெரியச் செய்வதே, தன்னுடைய எல்லா நடவடிக்கைகளின் இலக்கும் ஆகும் என்றே எண்ணு கிறான். ஆனால் வெற்றி வாய்ப்புக்களை வைத்துப் பார்க்கும்

போது, அந்த நடவடிக்கைகள் பொறுத்த மற்றவையாகவே காணப்படும்.

தன்னுடைய ஆத்ம நலத்தையும், மற்றோரின் ஆத்ம நலத்தையும், தேடுபவன் அரசியல் மூலமாகத் தேடமாட்டான்: ஏனென்றால் அரசியலுக்கு வேறு பிரச்னைகளிருக்கின்றன. அவை வலிமையினால் மட்டுமே தீர்க்கப்படக் கூடியவை. அரசியலின் தேவதையோ அல்லது பூதமோ அன்புக் கடவுளுடன் எப் பொழுதும் உள்ளார்ந்த ஓர் இழுபறி நிலையிலே முரண்பட்ட நிலையிலேதான் நிற்கும்: சமய இலக்கணம் கற்பிக்கும் தன்மை யெலாம் கொண்ட கிறித்துவக் கடவுளுடனும், இதே முரண்பட்ட, இழுபறி நிலைதான். இந்த முரண்பட்ட இழுபறி நிலை, சில சமயம் இணக்கம் ஏற்படுத்த முடியாத சச்சரவாக வெடித்துக் கிளம்பு வதும் உண்டு. சர்ச் (மத குருக்கள்) ஆதிக்கம் செலுத்திய காலத் திலும் இந்த நிலையிருந்தது. அக்காலத்தில் சமயத் தொடர்பு களிலிருந்தும், உறவுகளிலிருந்தும் ஒரு நபரையோ அல்லது ஒரு வட்டாரத்தையோ 'போப்' விலக்கி வைத்தாரானால் அது மக்களை யும், அவர்களுடைய ஆத்ம நலத்தையும் பெரிதும் பாதிக்கும் எனக் கருதப்பட்டது (அதாவது ஜாதிப் பிரஷ்டத்துக்கு ஒப்பானது). இத்தகைய விலக்கல் உத்தரவு திருப்பித் திருப்பி பிளாரன்ஸ் வட்டாரத்தின் மீது பிறப்பிக்கப்பட்டது என்றாலும் பிளாரன்ஸ் குடிமக்கள் சர்ச் ஆதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்த்தே வந்தனர். இம்மாதிரி நிலைகளைப் பற்றித்தான் மாக்கிய வல்லி ஓர் அருமையான சொல்லோவியத்தில், "பிளாரென்டைன் கதைகள்" ஒன்றில் என்று நினைக்கின்றேன் குறிப்பிடு கின்றார். தங்களுடைய ஆத்மீக நலனைவிடத் தங்களுடைய நகர் மேம்பாடு அடைவதை அக்குடி மக்கள் முக்கியமாகக் கருதிய தற்காக அக்கதையில் வரும் கதாநாயகன் அம்மக்களைப் புகழு மாறு செய்திருக்கிறார்.

சொந்த ஊர்—சொந்த நாடு என்பவை தற்சமயம் எல்லோ ருக்கும் ஒரே மாதிரியான மதிப்புயர்வுள்ளவையாக இல்லா திருக்கலாம்: எனவே இவற்றுக்குப் பதிலாக, "சோஷலிஸத்தின் எதிர்காலம்" அல்லது "சர்வதேச நிலையை அமைதிப்படுத்தல்" போன்ற ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேசும்போது, இன்றி ருக்கும் பிரச்னைக்கு வருகிறோம். ஏனென்றால் வன்முறைகளாலும், பொறுப்பாண்மையின் நெறியைப் பற்றிச் செயல்படுவதனாலும் அரசியல் நடவடிக்கை அனைத்தும் ஆத்மீக நலனை அபாயத்துக் குள்ளாக்குகின்றன. எனினும், "முழு நலம் கருதும் நன்னெறி" என்று நாம் முன்னர் குறிப்பிட்டதைத் தீவிரமாகப் பின்பற்றும் வகையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், தலைமுறை,

தலைமுறைக்கு அவை ஊறு செய்யப்படலாம், அவமதிக்கப் படலாம்; ஏனென்றால் பின் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கும் தன்மை இங்கில்லை; அப்படி அரசியலில் ஈடுபடுபவன் என்ன பைசாச சக்திகள் அதைச் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றன என்பதை அறியமாட்டான். இந்த சக்திகள் இரக்கமற்றவை; இவற்றை அவன் சரியாகக் கவனிக்கத் தவறினால், இவை அவனுடைய அரசியல் நடவடிக்கைகளுக்கும், இவன் ஆத்மாவுக் கும், ஏற்படுத்தும் விளைவுகளுக்கு அவன் கருணையில்லாது ஒப்பு விக்கப்படுகிறான். 'பிசாசுக்கு வயது முதிர்ந்து விட்டது' என்று சொல்வதுண்டு; இது எத்தனை ஆண்டுக் காலம் என்று குறிப்பி தற்கல்ல இவ்வாக்கியம் ஏற்பட்டது. நாமும், அதைப்போல் முதிர்ச்சி பெற்றால்தான், பிசாசைப் புரிந்து கொள்ளமுடியும் என்பதுதான் பொருள். ஏதாவது வாக்கு வாதத்தின்போது, "எனக்கு வயது அதிகம், ஆகவே நான் சொல்வது சரி" என்று எவரேனும் சொன்னால் நானும் அக்கூற்றை ஏற்றுக்கொள்வ தில்லை. ஒருவன் இருபது வயதானவனை இருக்கின்றான்; எனக்கு ஐம்பதாகி விட்டது; எனவே அவனை நான் ஏதோ மதிப்பிற்கரிய சாதனை புரிந்துவிட்டான் என்று கருதமாட்டேன். வயதின் ஆண்டுகளால்ல இங்கு முக்கியமானவை. வாழ்க்கையின் உண்மை நிலைகளை நன்கு பயிற்றுவிக்கப்பட்ட கூரிய நோக்கால் பார்த்தல்; அவற்றைப் பொறுத்துக் கொள்ளவும், உள்ளார்ந்து அவற்றைச் சமாளிக்கவும் ஆற்றல் பெறுதல் இவைதாம் முக்கியமானவை.

திட்டங்கள் அறிவால் வகுக்கப்படலாம்; ஆனால் நிச்சமாக அறிவு மட்டும் தான் கொண்டு வகுக்கப்படுகின்றன எனச் சொல்ல முடியாது. இந்த வகையில் 'முழு நலம் கருதும் நன் னெறி'த் தத்துவத்துக்கும் விளக்கம் தருபவர்களின் நிலை முற்றி லும் சரியே. ஆனால் ஒருவன் இந்தத் தத்துவத்தின்படிச் செயல் பட வேண்டுமா அல்லது, 'பொறுப்பான்மை நெறி' என்னும் தத்துவத்தின்படிச் செயல்பட வேண்டுமா, அல்லது எந்தக் காலத்தில் எதைச் சார்ந்து செயல்பட வேண்டும் என்பது பற்றி யெல்லாம் நாம் எவருக்கும் மரபு வழி போதனையைப்போல போதிக்க முடியாது. ஒன்று மட்டும் சொல்லலாம். பயன் தராத பரபரப்புக்கு ஆளாவது இக்காலம். வெறும் பரபரப்பே மெய்யான பேராற்வம் என்று கருத முடியாது. இத்தகு சூழ் நிலையில் 'முழு நலம் கருதும் நன்னெறி' அரசியல் வாதிகள் திடீரென்று எல்லாத் திசைகளிலும் வெளிக் கிளம்பி, "உலகம் தான் முட்டாள்தனமானது; தீமை மிக்கது; என் வினைகளின் விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல; யாருக்காக நான் வினை யாற்றுகிறேனோ அவர்களின் பொறுப்புத்தான்; அவர்களுடைய

முட்டாள்தனத்தையும், தீய பண்பையும் ஒழித்துக் கட்டத்தானே நான் பாடுபடுகிறேன்'' என்று கோட்பாட்டைப் பரப்ப ஆரம்பித்தால், நான் வெளிப்படையாகவே, 'எங்கே இந்த முழு நலம் கருதும் நன்னெறி'க்குப் பின்னே உள்ளார்ந்த தூய வலு எந்த அளவுக்கு இருக்கிறது என ஆராய்வோம்'' என்று சொல்வேன். ஏனென்றால் இப்படிப் பேசுவோரில் தொண்ணூறு விழுக்காடு தாங்கள் மேற்கொள்ளும் பணியின் உண்மை நிலையை உணராதவர்கள்; அப்பணியின் கவர்ச்சிகரமான அம்சங்களினால் மதி மயங்கியவர்கள். மனிதன் என்ற நிலையில் இப்படி மதிமயங்கிப் போவார் குறித்து அக்கறை கொள்ளவுமில்லை; இரக்கப்படவுமில்லை. ஆனால் அளவிடமுடியாத இரக்க உணர்வை ஏற்படுத்தும் வேறொரு கட்டமுண்டு; அதாவது முதிர்ச்சியும், பக்குவமும் பெற்ற ஒரு மனிதன்—அவன் வயதில் முதிர்ந்தவனாகவோ, இளைஞனாகவோ இருக்கலாம்—பொறுப்பாண்மை நெறிப்படிச் செயல்பட்டு, அதனால் தோன்றும் விளைவுகளுக்கு நெஞ்சாறப் பொறுப்பேற்று: ''இதுவே என் நிலை; நான் வேறு எவ்வகையிலும் செயல்பட்டிருக்க முடியாது'' என்று சொல்லும் சமயம் நம் மனமிரங்கும் மெய்யான மனிதப் பண்புடைய, உள்ளத்தை உருக்க வல்ல நிலையிது. ஏனென்றால் மரத்துப் போகாத உள்ள முடைய எவருக்கும் இம்மாதிரி ஒரு கட்டம் ஏதாவது ஒரு வேளையில் கட்டாயம் ஏற்படக் கூடும். இந்த அடிப்படையில் பார்த்தால். 'முழு நலம் கருதும் நன்னெறி', பொறுப்பாண்மை நன்னெறி' ஆகிய இரு கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டதல்ல; மாறாக இவை ஒன்றையொன்று தழுவி, ஒன்றிலுள்ள குறையை மற்றொன்றை நிரப்பி, முழு மனிதனை, உண்மை மனிதனை உருவாக்குபவையாகும். அத்தகைய மனிதன் தான் அரசியலுக்குத் தூய்மையான தொழிலாக மேற்கொள்ளத் தக்கவன்.

பேரார்வத்தையும், எதையும் தீர்வு காண்பதில் நீதத்தையும், நிதானத்தையும் கொண்டு படிப்படியான, வலிமையான பயிற்சி பெற்றுப் பணியாற்றுவதைத்தான் அரசியல் குறிப்பாகச் சுட்டுகிறது. உலகத்தில் சாதிக்க முடியாதவற்றை அடைவதற்காக மனிதன் மீண்டும், மீண்டும் பாடுபடாவிட்டால் சாதிக்கக் கூடியவற்றை அவன் பெற்றிருக்க முடியாது என்பது முற்றிலும் உண்மை. இதற்கு வரலாற்று அனுபவம் முழுதும் சான்று கூறும். ஆனால் இதைச் செய்யக்கூடியவன் தகுதியுடையவனாகவே இருப்பான். அது மட்டுமல்ல அவன் வீரனாகவும் இருப்பான். இப்படித் தகுதியுடையவனாகவோ, அல்லது வீரனாகவோ இல்லாதவன், ஆர்வங்களின்—நம்பிக்கைகளின்—கலம் கவிழ்ந்து போனாலும் அதைச் சமாளிக்கக்

கூடிய நெஞ்சுறுதியும், உளத்திண்மையும், பெற்றிருப்பான்; இல்லாவிட்டால் இன்று கை கூடுவதைக்கூட அவனுல் சாதிக்க இயலாது போய்விடும். தன்னிடமுள்ள பண்புகளோ—திறமைகளோ—பெற்றுப் பயனடைய முடியாத அளவுக்கு உலகம் முட்டாள்தன மானதாகவோ, அல்லது தீமையுடையதாகவோ இருக்கின்றது என்று அவனுக்குத் தோன்றினுலும், அதனுல் அவன் சிந்தை கலங்க மாட்டான்; சிதைந்துவிட மாட்டான். மாருக அக்கட்டத் திலும், "இந்த எதிரான சூழ்நிலையிலும்...." என்று துவங்கித் தன் கருத்தை வலியுறுத்துவான்; அவன்தான் அரசியலைத் தொழிலாகக் கொள்ளத் தகுதியுடையவன்.

இருபதாம் நூற்றாண்டு

தமிழாக்கம் :

கா. திரவியம்

அறிமுகம்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இலக்கியத்தில், தனிப்பட்ட வேறுபாடுகள் பல இருந்த போதிலும், உணரக்கூடிய, காணக்கூடிய, மெய்ம்மையை அது சித்திரித்தது என்பது அதன் பொதுவான அம்சமாக விளங்கியது. உடல்சார்ந்த வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் சித்திரிக்க, எழுத்தில் உரை நடைக் கோவை அமைப்பு பெரும் வாய்ப்பளித்தது. இருபதாம் நூற்றாண்டில், இந்த முழுமைத் தன்மை, பல்வேறு பொருள்களுக்கும் வடிவங்களுக்கும் இடமளித்தது. ஆயினும் எழுத்தாளர்கள் மெய்ம்மையைச் சித்திரிப்பதைக் கைவிடவில்லை. அதற்கு மாறாக, மாறிய சூழ்நிலையின் புதுப்பிரச்னைகளையும் ஆக்கபூர்வமான வழியில் தெளிவாகச் சித்திரிக்கப் புதுப் புது வடிவமைப்பு முறைகளைக் காண அவர்கள் வீழைந்தனர். அதன் பயனாக, பிரச்னைகளை அலசி ஆராய்வதே எழுத்தின் பொறுப்பாகவும் அமைந்தது.

மெய்ம்மையியல் வாதம் (Realism) இயல்பான முறையில் வளர்ந்து, இறுதிக் கட்டத்தில், இயற்கை வாதமாக (naturalism) உருவானது. எதிர்காலத்தை நோக்கிச் சுட்டிக் காட்டும் போக்கில் அந்த எழுத்து அமைந்திருந்த போதிலும், இந்த வளர்ச்சி பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் உச்ச நிலையை அடைந்தது என்று கூறலாம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகள் மனித வாழ்விற்குப் பொருந்தும் முறையில், இயற்கை வாதத்தில் வெளிப்பட்டன. அதே வகையில், லோகாயதவாதத் தத்துவமும் இயற்கை வாதத்தில் முழு உருவம் பெற்றது. பாரம்பரியத்தாலும், சுற்றுச் சார்புச் சூழ்நிலைகளாலும், காலநிலைமைகளாலும் உருவாக்கப் பட்டவனாக மனிதன் மதிக்கப்பட்டான். அதன் பயனாக, வாழ்வில் அவன் இன்பம் காண வழி செய்யும் பொருட்டு, சூழ்நிலைச் சந்தர்ப்பங்களை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. சமூக அடித்தளத்தில் இருந்த கீழ் வகுப்பினர், குறிப்பாக இயந்திரத் தொழிலாளி வர்க்கத்தினர், சமுதாயத்தால் ஒதுக்கித் தள்ளிவைக்கப் பட்டவர் ஆகியோரின் பிரச்னைகளில், இயற்கை வாத நாடகங்கள் தலையாய கவனம் செலுத்தின. அவர்கள் அவலநிலையை மக்களுக்குத் தெளிவு படுத்திச் சமுதாயத்தின் அமைப்பு நியாயமற்றது, நீதிக்குத் துரோகம் இழைப்பது என்பதை அவர்களுக்கு மெய்ப்பிக்கும் வகையில் அந்த நாடகங்கள் அமைந்திருந்தன. கதியற்றிருந்த இந்தப் பாட்டாளி, தன்னுடைய வர்க்கத்துடன் இணைந்து, அந்த வர்க்கம் சமூக சக்தியாகி, உறுதியான நடவடிக்கை எடுக்கும் வல்லமையைப் பெறுவதன் மூலமாகத் தான், அவன் விமோசனம் காண முடியும்

என்ற மார்க்சிய சித்தாந்தத்தை அவை வலியுறுத்தின. ஆகவே அரசியல் முறையில், இயற்கை வாத எழுத்தாளரில் பெரும் பாலோர், தற்போதைய சமுதாய அமைப்பை மாற்றி, சோஷலிசத்தை நிலை நாட்டுவதைத் தீவிரமாக ஆதரித்தனர். தங்கள் படைப்புகளைப் பொறுத்த வரை, இயற்கை வாதிகள், தங்கள் சித்தாந்தத்திற்கு ஏற்ற முறையில், வாழ்க்கையில் உள்ளவாறே சித்திரிக்கப் பாடுபட்டனர்.

கலையின் உள்ளார்ந்த பண்புகளைத் தங்கள் எழுத்திலே வலியுறுத்திய எழுத்தாளர்களும், உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளியிடுவதற்கு இலக்கியம் ஒரு சாதனம் என்று நம்பியவர்களும், இயற்கை வாதத்தின் சித்தாந்தத்தையும் அதன் வடிவமைப்பு முறையையும் நிராகரித்தனர். ஆயினும் அவர்கள் கூட, கவிதையின் அழகுணர்வில் ஈடுபாடு கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல், நெருக்கடியான நேரங்களில் கவிதையில் சமய உட்பொருளும் அற உணர்வும் பொதித்திருந்தன என்பதைக் காண முற்பட்டனர். தனிப்பட்ட எழுத்தாளர்கள் பலர் இப்போக்கைப் பின்பற்றிய போதிலும், உணர்ச்சி, எழுத்தாளர் (expressionists) இயக்கம் என்ற முறையில், 1910—20 ஆண்டுகளுக்கிடையே தான் இவர்கள் முன்னுக்கு வந்தனர். தங்கள் காலத்தின் நயவஞ்சகம், நியாயமற்ற போக்கு ஆகியவற்றைக் கண்டு வேதனைப்பட்ட இளம் கவிகள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டனர். ஆதிக்கமும் புறப்பகட்டும் நிறைந்திருந்த காலம்; முதலாளி வர்க்கம் வசதியான வாழ்க்கை நடத்தி வந்தது; ஏகாதிபத்தியக் கொள்கையை நாடு பின்பற்றி வந்தது; விரைவில் மூளவிருந்த உலகப் போருக்கான அறிகுறிகள் ஏற்கெனவே தோன்றி, தங்கள் இருண்ட நிழலைப் படர்த்திக் கொண்டிருந்தன. இந்தக் காலச் சூழ்நிலை பற்றி அவர்கள் கொண்டிருந்த வேதனை, முதலில் தனிப்பட்ட எழுத்தாளர்களின் கிளர்ச்சியில் வெளிப்பட்டது. ஒரு சில எழுத்தாளர்கள், பொது வாழ்விலிருந்து விலகித் தனிமையில், துக்கத்தில் மூழ்கினர். ஆனால் 1914ஆம் ஆண்டில், உலகப் போர் மூண்டதைத் தொடர்ந்து, இந்த உணர்ச்சி எழுத்தாளர் இயக்கம், ஆக்க பூர்வமான அறஉணர்வும் அரசியல் நோக்கும் கொள்ளலாயிற்று. போர்ப் பிரளயம் ஏற்பட்டதற்குப் பழைய வல்லரசுகளும், இயந்திரத் தொழில் முதலாளிகளும், இராணுவ வெறியர்களும் தான் காரணம் என்று குறை கூறிய இந்த உணர்ச்சி எழுத்தாளர்கள், சோஷலிதையும் ஆதரிக்கத் தொடங்கினர். ஆனால் உலகை மாற்ற வேண்டுமென்று அவர்கள் கொண்டிருந்த உறுதிக்கு, லோகாயதவாத உணர்வுகளோ விஞ்ஞான அடிப்படைகளோ, ஆதாரமாக அமைய வில்லை; அப்பழுக்கற்ற இலட்சியவாத உணர்வுகளே ஆதாரமாக அமைந்திருந்தன. அவர்கள் காண விழைந்த புது மனிதன்,

இலட்சியக் கனவுலக மனிதனுக, ஆன்மாவும் ஆவியும் மட்டுமே உடைய மனிதனுகத் தோற்றமளித்தான். ஆகவே உணர்ச்சி எழுத்து இலக்கியம், எதிரே உள்ள சூழ்நிலையின் மெய்ம்மையைப் பிரதிபலிப்பதாக ஒரு போதும் அமையவில்லை; இலட்சிய அகநிலைச் சித்திரமாகவும், எழுத்தாளரின் உள்ள எழுச்சியில் தோன்றியபடி இனி வரவிருக்கும் அமைப்பின் அறிவிப்பாகவும் தான் அமைந்தது. நிலைமையை மிகைப்படுத்திச் சித்திரிப்பதன் மூலமாகவும், இலட்சியக் கனவுலக சஞ்சாரங்களில் ஈடுபடுவதன் மூலமாகவும் தான் அந்த இலக்கிய இயக்கம் தன் குறிக்கோளை எய்த முயன்றது.

ஜெர்மனியில், எழுத்தாளரின் பெரும் இயக்கமாக இயங்கிய கடைசி இயக்கம், உணர்ச்சி எழுத்தாளரின் இயக்கம் தான். நவீன இலக்கியப் பொது வளர்ச்சியின் மிக முக்கிய கட்டங்களில் ஒன்று என்ற முறையில், உணர்ச்சி எழுத்தாளரின் இயக்கத்தின் செல்வாக்கு ஜெர்மனியின் எல்லைகளையும் தாண்டி, ஐரோப்பிய இலக்கியத் துறையையும் கவர்ந்தது. இந்நூலின் இந்தப் பிரிவில் தரப்பட்டுள்ள பகுதிகள், தற்காலச் சூழ்நிலையின் மெய்மையைச் சித்திரிக்கவும், அதற்கு விளக்கம் கூறவும், மற்ற எழுத்தாளர்கள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. நம் காலத்தின் முக்கிய சமுதாய, அரசியல் நிகழ்ச்சிகளை, நிகழ்ந்தவாறே படம் பிடித்தும், உருவகப்படுத்தியும், சித்திரிக்கும் சாதனமாகப் பொதுவில் நாடகத்துறை அமைந்தது. நாடக ரசிகர்களின் உள்ளக் கிளர்ச்சிகளைத் தூண்டுவதன் மூலம், நிஜ வாழ்வில், உருவான மாறுதல்களை உண்டாக்கும் முயற்சியில், நாடக அரங்கின் செல்வாக்கும் சக்தியும் பயன்பட்டன. மெய்ம்மையையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் சித்திரிக்கும் பத்தொன்பதாவது நூற்றாண்டுப் பாணியுடன் தொடங்கிய புதினம் கூட, புதிய வடிவமைப்புகளைப் பெறலாயிற்று. நாகரிகத்தில் பொதுவாக ஏற்பட்டிருந்த சிக்கல், சோதனை, தற்கால உலகில் மனிதனின் இருத்தல் நிலை ஆகிய சமுதாயத் திறனாய்வின் தெளிவான குறிக்கோள்களுக்கு அப்பாற்பட்ட பிரச்னைகளையும் பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டு புதினங்கள் எழுதப் பட்டன. அக்காலப் பின்னணியாய் அமைந்தவை, ஜெர்மன், ஆஸ்திரிய சாம்ராஜ்யங்கள்; பின்னர், போருக்குப் பிறகு, ஓயாத போராட்டங்களாலும் நெருக்கடிகளாலும் வாட்டப்பட்ட ஜெர்மனியின் முதல் ஜனநாயக அமைப்பான வைமார் குடியரசு, (1919—1933), ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்து 1933இல் நேஷனல் சோஷலிச அரசை நிலை நாட்டியபின், ஜெர்மன் இலக்கியத்தின் அழிவுக் காலம் தொடங்கியது. வரலாற்றில் என்றும் ஏற்பட்டிராத அளவுக்கு, அதன் விளைவுகள் ஆபத்தானவையாய் இருந்தன. நாட்டின் முக்கிய எழுத்தாளர், கவிகள் அனைவருமே,

புது ஆட்சியாளரின் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியோ, வருங்காலத்தில் தங்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை எண்ணியோ நாட்டை விட்டு வெளியேறினர். அக்காலத்துப் பிரச்னைகளைத் துருவி ஆராய்ந்த அவர்கள் நூல்கள் தடை செய்யப்பட்டன. அவற்றில் பல, உண்மையான சோஷலிச நம்பிக்கையை வலியுறுத்தியவை. நேஷனல் சோஷலிச சித்தாந்தத்தை ஆதரித்துப் பரப்பியவர்களைத் தவிர, வெகு சில எழுத்தாளர்களே ஜெர்மனியில் தங்க முடிந்தது. அவர்களும் தலைதூக்காமல், ஒதுங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாயினர். ஆகவே இருபதாம் நூற்றாண்டு ஜெர்மன் இலக்கியத்தின் முக்கியமான நூல்களில் பெரும்பாலானவை அயல் நாடுகளில் எழுதப்பட்டவையே. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இலக்கிய வாழ்வு ஜெர்மனியில் மீண்டும் தலைதூக்கியது. ஆனால் சென்றகால நிகழ்ச்சிகளுக்குப் பின்பு, இலக்கியத்தின் பிரச்னைகளைப் பற்றிய உணர்வு, எழுத்தாளரை இன்னும் பலமாக ஆட்கொண்டிருந்தது. மாறிய சூழ்நிலையின் உண்மைகளை அனுசரித்த ஒரு வடிவமைப்பை இலக்கியம் நாடியது. ஆனால் அந்தப் பொறுப்புக்கு மேலாக, மாறுதல்களை உருவாக்கவும், நிஜ வாழ்வை மாற்றித் திருத்தி, புதிய அமைப்பைச் சமைக்கவும், இலக்கியத்துக்கு வல்லமையும் ஆற்றலும் உள்ளனவா என்ற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைத்த பாடில்லை.

கெர்ஹார்ட் ஹௌப்தமன்

நெசவாளர்

சைலேஷியாவைச் சேர்ந்த கெர்ஹார்ட் ஹௌப்தமன் (1862-1946), தமது முதல் சில நாடகங்களில், இயற்கைத் தத்துவத்தின் தலையாய ஆதரவாளராய் விளங்கினார். இன்னலுக்கு ஆளாக்கப் பட்ட உழைப்பாளி வர்க்கத்தினரின் துன்பத்தை,மனிதாபிமான உணர் வுடனும் அனுதாபத்துடனும் அவர் சித்திரித்தார். தன் இயல்பான அகத்தூண்டுதல்களினாலும், தன் சகோதர மக்களின் அக்கரையற்ற தன்மையினாலும், கதியற்ற நிலையிலிருந்து மீளமுடியாமல் தள்ளப் பட்டுள்ள தனி மனிதனின் நிலையையும் அவர் சித்திரித்தார். ஹௌப் தமனின் பிந்திய நாடகங்களிலும் இயற்கைத் தத்துவ அம்சங்கள் காணப்படுகின்றன: ஆனால் மற்ற அம்சங்களும் பாணிகளும் தான் ஓங்கி நிற்கின்றன. நாடகங்களின் கதைக் கரு உருவக மட்டத்திற்கு உயர்த்தப்படுகின்றது; இன்றையக் காலச் சூழ்நிலைக்குள் அவை கட்டுப்படவில்லை. நாடக நடையிலும் பாணியிலும், கற்பனை உலகக் கதையின் தன்மை அல்லது கனவுலகத் தன்மை காணப் படுகிறது.

1892இல் இயற்றப்பட்ட 'நெசவாளர்' என்ற நாடகம், 1844இல் எழுந்த சைலேஷிய நெசவாளர் கிளர்ச்சியைச் சித்திரிக்கும் காட்சி களைக் கொண்டது. இயந்திரத் தறி புகுத்தப்பட்டதன் காரணமாக, அந்த நெசவாளர் வேலையை இழந்தனர் அல்லது அற்ப ஊதியம் பெற்று உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். தங்களைச் சுரண்டிய முதலாளிகளை எதிர்த்துப் புரட்சி செய்யப் பசிக் கொடுமை அவர்களைத் தூண்டியது. அந்த முதலாளி வர்க்கத்தின் சின்னமாகத் தான் தொழிலதிபர் த்ரைஸிகர் இந்நாடகத்தில் வருகிறார். நாடகத் தின் முடிவு, பிரச்னைக்குத் தீர்வு காட்டவில்லை; எதிர்காலத்துக்கு ஓர் எச்சரிக்கை மட்டுமே விடுக்கின்றது. நாடகத்தில் நெசவாளி களின் நிலைமை, வரலாற்றுக்கு உண்மையாகச் சித்திரிக்கப் பட்டுள்ள போதிலும், நாடகம் எழுதப்பட்ட நேரத்து நிலைமையின் முனைப்புகளையும், இயந்திரத் தொழிலாளர் வர்க்கத்தின் மன நிலையையும் அது பிரதிபலிக்கின்றது. நாடகத்திலிருந்து இங்கு தரப் பட்டுள்ள பகுதி, த்ரைஸிகர் வீட்டில் நடக்கும் காட்சி. வீட்டுக்கு வெளியே நெசவாளர் கூட்டமொன்று திரண்டுள்ளது. முதலாளித் துவத் தொழிலதிபர்கள் (த்ரைஸிகர்), அரசின் அதிகாரம் (காவல் துறை அதிகாரி), திருச்சபையின் செல்வாக்கு, (பாதிரி கிட்டெல் ஹௌஸ்) ஆகியோர், புரட்சி செய்யும் கீழ் வர்க்கத்தினருக்கு எதிராக, ஒன்றுகூடி ஒப்பந்தம் செய்து கொள்வதை இக்காட்சி

அம்பலப்படுத்துகிறது. நெசவாளர் சார்பில் வாதாடும் இளைஞர், வைன்ஹோல்ட், வீட்டை விட்டு வெளியேற்றப் படுகிறார்.

பாத்திரங்கள்

பாதிரி கிட்டெல்ஹௌஸ்,
மிஸஸ் கிட்டெல்ஹௌஸ்,
மிஸ்டர் த்ரைஸிகர்,
மிஸஸ் த்ரைஸிகர்,
வைன்ஹோல்ட், (*த்ரைஸிகர்* மகனுக்குப் போதனாசிரியர்)
பைஃபர், மேலாளர் } *த்ரைஸிகரிடம்*
ஜான், கோச்சு வண்டிக்காரர் } வேலை பார்ப்பவர்கள்
வார்டர், போலீஸ் அதிகாரி.

நான்காம் அங்கம்

பீட்டர்ஸ்வல்டோ.—பருத்தி மணியாடைத் தொழிலதிபர், *த்ரைஸிகரின்,* தனி அறை. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வழங்கிய உணர்வற்ற, கண்டிப்பான பாணிக்கேற்ப, அறை அலங்கரிக்கப்பட்டுள்ளது. அறையின் உட்கூரை, கதவுகள், கணப்பு அடுப்பு அனைத்தும் வெள்ளை நிறத்தில் பூசப்பட்டுள்ளன. சுவரில் ஒட்டப்பட்டுள்ள வண்ணக் காகிதம், சிறிய நேர்க்கோடு பூப்பாணியுடன், மங்கலாகவும் உற்சாக மற்றதாகவும் காணப்படுகிறது. நாற்காலிகள் சீமை நூக்கு மரத்தில், அழகிய செதுக்கு வேலைகளுடன் செய்யப்பட்டுச் சிவப்புத் திண்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. வலதுபக்கம், திண் சிவப்பு நிறத்தில், வண்ண ஜன்னல் துகில் திரைகள் கொண்ட இரு சாளரங்களுக்கிடையே, உயரமான, மடிப்புப் பலகை கொண்ட எழுது மேசை காணப்படுகிறது. இதற்கு நேர் எதிராக, சோபா; பக்கத்தில் இரும்புப் பணப் பெட்டி; சோபா அருகில், ஒரு மேசையும், அதைச் சுற்றிலும் நாற்காலிகளும் சாய்வு நாற்காலிகளும், பின்புறச் சுவரை ஒட்டித் துப்பாக்கி அலமாரி. மூன்று சுவர்களிலும், பொன்பூச்சுச் சட்டங்களில், நேர்த்தியற்ற படங்கள், சோபாவுக்கு மேல், பகட்டான பொன்பூச்சுச் சட்டத்தில், நிலைக்கண்ணாடி, இடதுபக்கம், சாதாரணக் கதவு முன்னறைக்கு வழி காட்டுகிறது. பின்பக்கத்தில் ஒரு திறந்த மடிப்புக் கதவு, வரவேற்பறையைக் காட்டுகிறது. அதுவும், இதேபோல், வசதியற்ற ஆடம்பரத்துடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது. *த்ரைஸிகர்* மனைவியும், *பாதிரி கிட்டெல்ஹௌஸ்* மனைவியும், வரவேற்பறையில் படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். *பாதிரி கிட்டெல்*

ஹௌஸ்ஸும், அங்கு இருக்கிறார்; தத்துவப் பட்டதாரியும், ஆசிரியருமான, வைன்ஹோல்ட் உடன் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

கிட்டெல்ஹௌஸ்:

(வயதான, அனுதாபமான, கட்டையான ஒரு மனிதர் முன்னறைக்குள் நுழைகிறார்; புகைப்பிடித்துக் கொண்டே ஆசிரியருடன் பேசுகிறார்; ஆசிரியரும் புகைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார். சுற்றிப் பார்த்து, அறை காலியாய் இருப்பதைக் கண்டு, வயதானவர் வியப்படைகின்றார்). மிஸ்டர் வைன்ஹோல்ட், நீங்கள் இளவட்டம். அனைத்துக்கும் அதில் விளக்கம் கண்டுவிடலாம். உம் வயது இளைஞராய் நாங்கள் இருந்தபோது, இதே கருத்துக்கள் இல்லாவிடில், இதே போன்ற கருத்துக்கள்தான் கொண்டிருந்தோம். உயர்ந்த இலட்சியங்கள் கொண்ட இளமையில் ஒரு தனிப பெருமை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக, மிஸ்டர் வைன்ஹோல்ட், அவை நிலைப்பதில்லை. கோடை கால வெய்யில்போல் அவை விரைவில் ஓடி மறைகின்றன. நீங்கள் என் வயதுக்கு வரும்வரை காத்திருங்கள். கோவிலில் பிரசங்கி மேடையிலிருந்து, விசேஷ புனிதர் நாட்களைச் சேர்க்காமல், வாரம் வாரம் ஆண்டுக்கு ஐம்பத்திரண்டு முறை, முப்பது ஆண்டுகளாக, ஒருவன் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லித் தீர்த்து விட்டால், அவனுடைய வேகம் அடங்கி விடத்தான் செய்யும். நீங்கள் அவ்வளவு தூரம் வந்தபின், மிஸ்டர் வைன்ஹோல்ட், என்னைப்பற்றி எண்ணிப் பாருங்கள்.

வைன்ஹோல்ட்:

(பத்தொன்பது வயது; வெளிரிய முகம்; உயரமான உருவம்; நல்ல நிறமான நீண்ட முடி; பதட்டும் படபடப்பும் நிறைந்த தோற்றம்).

மிஸ்டர் கிட்டெல்ஹௌஸ், உங்களிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு. ஆயினும் உங்கள் கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. மக்களிடையே அவ்வளவு மாறுபட்ட இயல்புகள் உள்ளன என்று நான் எண்ணவில்லை.

கிட்டெல்ஹௌஸ்:

பிரிய மிஸ்டர் வைன்ஹோல்ட். ஒருவர் எவ்வளவுதான் நிதான மிழந்த, பதட்டமான நிலையில் இருந்தாலும்—நீங்கள் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு—எவ்வளவு கடுமையாகவும் வேண்டுமென்றே தீவிரமாகவும் இன்றுள்ள சமுதாய அமைப்பைச் சாடினாலும்,

இறுதியில் அவன் வேகம் அடங்கிவிடும். என் தொழில் முறைச் சகாக்களிலே, வயது முதிர்ச்சி அடைந்த பின்னும் சிறுபிள்ளைத் தனமாக விளையாடும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். குடிப் பழக்கத்தைக் கடிந்து ஒருவர் உபதேசம் செய்து, குடி தவிர்ப்போர் சங்கங்கள் நிறுவுகின்றார். இன்னொருவர் உருக்கமான வேண்டுகோள்களை வெளியிடுகிறார். ஆனால் அவற்றால் என்ன பலன் ஏற்படுகிறது? நெசவாளரிடை வேதனை இருக்குமிடங்களில், அவ்வேதனை குறைவதில்லை. ஆனால் சமூகத்தின் அமைதி குலைக்கப்படுகிறது. இந்த மேதாவிகளைப் பார்த்து எனக்குச் சொல்லத் தோன்றுகிறது; "ஆன்மாக்களைப் பராமரிப்பது உங்கள் பொறுப்பு; நீங்கள் வயிறுகளைப் பராமரிப்பது பற்றிக் கவலைப்படாதீர்கள். இறைவனின் தூய்மையான வாசகத்தை மக்களிடம் பரப்புங்கள். மற்ற பாரங்களையெல்லாம் அவன் மேல் போட்டு விடுங்கள். பறவைகளுக்கு உணவும் உறைவிடமும் தருவதும், வயலில் உள்ள அல்லி மலர்களுக்கு ஆடைகள் தருவதும் ஆண்டவனின் பொறுப்பு." அது இருக்கட்டும். மிஸ்டர் த்ரைஸ்கர் எங்கே திடீரெனக் காணமல் போய்விட்டார்?

(திருமதி த்ரைஸிகர், தாம் இருந்த இடத்திலிருந்து முன்னே வருகிறார். முப்பது வயதுடைய அவர், பகட்டான அழகுத் தோற்றமும் உடல்நலப் பொலிவும் கொண்டு விளங்குகிறார். அவருடைய பணக்கார அலங்காரத் தோற்றத்திற்கும், அவர் நடந்துகொள்ளும் விதத்திற்கும் பேசும் பாணிக்கும், இடையே ஒருவித முரண்பாடு தோன்றுகிறது. அவரைத் தொடர்ந்து மிஸஸ் கிட்டெல் ஹெளஸ் வருகிறார்.)

திருமதி த்ரைஸிகர் :

மிஸ்டர் கிட்டல்ஹெளஸ், வில்யம் எங்கே போய்விட்டார் என்பதைத்தான் நானும் அறிய விரும்புகிறேன். ஆனால் அவர் எப்பொழுதுமே அப்படித்தான். அவருக்கு ஏதாவது ஓர் எண்ணம் தோன்றிவிட்டால் போதும்: அதைத் துரத்திக் கொண்டு, எங்காவது போய்விடுவார், என்னைத் தனியாகத் திண்டாட விட்டுவிட்டு. நான் எத்தனையோ முறை இதைப் பற்றிச் சொல்லிக் காட்டி விட்டேன். ஆனால் அவர் காதிலே போட்டுக் கொள்வதில்லை.

கிட்டல்ஹெளஸ் :

வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எப்பொழுதுமே அப்படித் தான், மிஸஸ் த்ரைஸிகர்.

வைன்ஹோல்ட் :

கீழே ஏதோ பரபரப்பாய் நடந்து கொண்டிருக்கிறது என்று எனக்கு நிச்சயமாகப் படுகிறது.

(த்ரைஸிகர், பதட்டமாய், வேர்த்துக் களைத்து அறைக்குள் வருகிறார்)

த்ரைஸிகர் :

ரோஸா, காப்பி தயாராக இருக்கிறதா? திருமதி த்ரைஸிகர் (சற்று குறைபட்டுக் கொண்டு) ஏன்? திரும்பவும் நீங்கள் போக வேண்டியிருக்கிறதா?

த்ரைஸிகர் :

(துச்சமாக) இவையெல்லாம் உனக்குப் புரியாதவை.

கிட்டெல்ஹௌஸ் :

நான் கேட்பதால் வருத்தப்படாதீர்கள், மிஸ்டர் த்ரைஸிகர். ஆனால் உங்களுக்கு எரிச்சல் மூட்டுமாறு ஏதாவது நடந்துள்ளதா?

த்ரைஸிகர் :

அம்மாதிரி எதுவும் நடக்காமல், ஒரு நாள் கூடக் கழிவதில்லை. அது எனக்குப் பழக்கமாகி விட்டது. ரோஸா காப்பி என்ன ஆயிற்று?

[திருமதி த்ரைஸிகர், எரிச்சலுடன் சென்றுப் பணியாளரை வருவிப்பதற்காகப் பூவேலை செய்யப்பட்ட மணிக்கயிற்றை வேகமாக இருமுறை இழுக்கின்றார்]

த்ரைஸிகர் :

மிஸ்டர் வைன்ஹோல்ட், நீங்களும் கீழே என்னுடன் இருந்திருக்க வேண்டுமென்று சற்று முன் நினைத்தேன். உங்கள் அனுபவம் சுற்று விரிவடைந்திருக்கும். மேலும் பரவாயில்லை. இப்பொழுது சீட்டாட்டத்தைத் தொடங்கலாமா?

கிட்டெல்ஹௌஸ் :

தாராளமாக; மிஸ்டர் த்ரைஸிகர், தொழில் தொல்லைகளையும் சுமைகளையும் கீழே இறக்கி வைத்து, மறந்து விட்டு, எங்களுடன் விளையாட வாருங்கள்.

த்ரைஸிகர் :

(சாளரத்தருகே சென்று, திரையை நீக்கி வெளியே பார்த்துக் கொண்டே) வெறியர் கும்பல்! ரோஸா, இங்கே வந்து பார். (திருமதி த்ரைஸிகர் சாளரத்தருகே வருகிறார்.) அதோ பார்: உயரமாய், சிவப்பு முடியுடன், ஒருவன் அங்கு நிற்கிறான், பார்....

கிட்டெல்ஹெளஸ் :

அவன் தான் 'ரெட் பெக்கர்,' என்று அழைக்கப் படுபவன்.

த்ரைஸிகர் :

ரோஸா, முந்தா நாள் உன்னை அவமதித்தவன் அவன் தானே? கோச்சு வண்டியில் ஏற ஜான் உனக்கு உதவிக் கொண்டிருந்த போது, ஓர் ஆள் மரியாதைக் குறைவாய் நடந்து கொண்டான் என்று சொன்னாயே, நினைவிருக்கிறதா? அந்த ஆள், இவன் தானே?

திருமதி த்ரைஸிகர் :

(உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, சற்று அசட்டையாக) எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

த்ரைஸிகர் :

முகம் கோணுவதில் என்ன பலன்? அவன் தானே என்று எனக்குத் தெரிய வேண்டும். அவன் தானென்றால், அவனைக் கைது செய்ய ஏற்பாடு செய்யப் போகிறேன். (நெசவாளரின் கீதம் பாடப்படும் ஒலி வெளியிலிருந்து கேட்கிறது.) அதைக் கேளுங்கள். அவர்கள் பாடுவதைக் கேளுங்கள்.

கிட்டெல்ஹெளஸ் :

(மிகுந்த ஆத்திரத்துடன்) இந்தத் தொல்லைக்கு முடிவே கிடையாதா? போலீஸார் தலையிட வேண்டிய கட்டம் வந்து விட்டது என்று நான் ஒத்துக் கொள்ள வேண்டும். (சாளரம் அருகே சென்று.) மிஸ்டர் வைன்ஹோல்ட், இங்கு பாருங்கள். இங்கு இருப்பது, இளைஞர்கள் மட்டுமல்ல. வயதான, நிதானமான, நெசவாளர் பலர் இங்கிருக்கின்றனர். அவர்களில் பலரை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். அவர்கள் நல்லவர்கள்; தெய்வ பக்தி உடையவர்கள். அவர்களும், சகிக்க முடியாத இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, இறைவனின் சட்டத்தைக் காலுக்கடியில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கின்றனர். இனியும் இவர்களுக்கு நீங்கள் பரிந்து கொண்டு வரப் போகிறீர்களா?

வைன்ஹோல்ட் :

அவர்களுக்கு யாரும் பரிந்து கொண்டு வர வேண்டிய அவசிய மில்லையே. அவர்கள் பசியால் உந்தப்படுகின்றனர்; அறியாமை யில் மூழ்கியுள்ளனர். தங்கள் அதிருப்தியைத் தங்களுக்குத் தெரிந்த ஒரே வழியில் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் வேறு என்ன....

திருமதி கிட்டெல்ஹௌஸ் :

(சிறிய, ஒல்லியான, நறுங்கிய உருவம் கல்யாணமாகாமலே வயதாகிவிட்டது போன்ற தோற்றம்.) மிஸ்டர் வைன்ஹோல்ட், நீங்கள் இப்படிப் பேசுவது நியாயமா?

த்ரைஸிகர் :

மிஸ்டர் வைன்ஹோல்ட், நான் இவ்வாறு பேசவேண்டி யிருப்பது பற்றி எனக்கே வருத்தமாய் இருக்கிறது. ஆனால் தத்துவம் பற்றி எனக்கு உபதேசம் செய்ய நான் உம்மை என் வீட்டுக்குள் கொண்டு வரவில்லை. என் மகன்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையை மட்டும் கவனித்துக் கொண்டு, என் மற்ற பொறுப்புக்களை என்னிடமே விட்டு விடுங்கள்; அவற்றில் நீங்கள் தலையிட வேண்டாம், புரிகிறதா?

வைன்ஹோல்ட் :

(ஒரு நிமிடம், அசைவின்றி, முகம் வெளிறிப்போய் நிற்கிறார். பின்பு ஒரு புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டு, தாழ்ந்த குரலில் பேசுகிறார்.)

நன்றாகப் புரிகிறது. இந்த நெருக்கடி வரப்போகிறது என்று சில நாட்களாகவே எனக்குத் தெரியும். நான் விடை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் என் விருப்பமும் கூட.

த்ரைஸிகர் :

அப்படியானால், இந்த நிமிடமே செல்லுங்கள் (வெளியிற் செல்கிறார்) எங்களுக்கு அந்த அறை தேவை.

திருமதி த்ரைஸிகர் :

வில்யம்! வில்யம்!

த்ரைஸிகர் :

ரோஸா, உனக்கென்ன புத்தி தவறி விட்டதா? அந்த அயோக்கியத்தனமான, கேவலமான, அவதூறான பாட்டுக்குச் சமாதானம் கூறும் ஆளுக்கு நீ வக்காலத்து வாங்கலாமா?

திருமதி த்ரைஸிகர் :

வில்யம்! ஆனால் அவர் அந்தப் பாட்டுக்குப் பரிந்து பேச வில்லையே!

த்ரைஸிகர் :

மிஸ்டர் கிட்டெல்ஹௌஸ், நீங்கள் கூறுங்கள்; அவர் அந்தப் பாட்டுக்குப் பரிந்து பேசினாரா? இல்லையா?

கிட்டெல்ஹௌஸ் :

அவர் தவறுக்குச் சமாதானம் கூறுவது, அவர் இளமைதான், மிஸ்டர் த்ரைஸிகர்.

திருமதி கிட்டெல்ஹௌஸ் :

என்னால் இதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அந்த இளைஞர், நல்ல, கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தை நாற்பது ஆண்டுகளாக, ஒரு சிறு களங்கமும் இல்லாமல், அரசாங்கப் பதவி வகித்து வந்தார். தம் மகனுக்கு இக்குடும்பத்தில் நல்ல வேலை கிடைத்தது குறித்து, அவர் அன்னை பெரிதும் மகிழ்ச்சி கொண்டிருந்தார். அத்தனைக்கும் பிறகு, அவரோ, தமக்குக் கிட்டிய நல்ல வாய்ப்பின் அருமையை உணர்ந்து கொள்ளாமல் நடந்து விட்டார்.

பைம்பர் :

(முன்னறைக் கதவைத் திடீரெனத் திறந்து வந்து உரக்கக் கூவுகிறார்): மிஸ்டர் த்ரைஸிகர், ஒருவனைப் பிடித்து விட்டார்கள். தயவுசெய்து வந்து பார்ப்பீர்களா? அவர்களில் ஒருவனைப் பிடித்து விட்டார்கள்.

த்ரைஸிகர் :

(அவசரமாக) யாரும் போலீசைக் கூப்பிடப் போனார்களா?

பைம்பர் :

போலீஸ் அதிகாரி, மேலே வந்து கொண்டிருக்கிறார்.

த்ரைஸிகர் :

(கதவருகே) வாருங்கள். இங்கு உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.

(பெண்கள் அறைவிட்டுச் சென்றுவிடுவது நல்லதென்று கிட்டெல்ஹௌஸ் சைகை மூலம் உணர்த்துகிறார். அவர் மனைவியும் உள்ளே செல்கின்றனர்.)

த்ரைஸிகர் :

(மிகுந்த ஆத்திரத்துடன், போலீஸ் அதிகாரியிடம்) கிளர்ச்சித் தலைவர்களில் முக்கியமான ஒருவனைக் கடைசியாக என்னுடைய சாயத் தொழிலாளரில் ஒருவர் கைப்பற்றி அடக்கி வைத்துள்ளார். அவர்கள் துடுக்குத்தனம் எல்லைமீறிச் சென்றுவிட்டது. அதை என்னால் இதற்கு மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. என் வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளிகளைக் கூட, இந்தக் காலிப் பயல்கள்..... என் மனைவி வெளியில் தலை காட்டினால் இந்தக் காலிகள் கிண்டல் செய்கிறார்கள். என் மகன்களின் உயிர் பத்திரமாக இல்லை. என்னைப் பார்க்க வருபவர்கள் கூட்டத்தில் சிக்கித் திணறடிக்கப்படுகின்றனர். சட்டமும் அமைதியும் போற்றப்படும் ஒரு சமுதாயத்திலே, ஒரு குற்றமும் செய்யாத என்னையும் என் குடும்பத்தினரையும், ஓயாமல் பகிரங்கமாய் அவமானத்துக்கு உள்ளாக்குவது, அனுமதிக்கப்படும் என்று எண்ணிப் பார்க்கக் கூட முடியுமா; அப்படி அனுமதிக்கப்படுமென்றால், சட்டம், ஒழுங்கு ஆகியவை பற்றி நான் கொண்டிருக்கும் கருத்துக்கள் வேறு என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

போலீஸ் அதிகாரி :

(ஐம்பது வயது; நடுத்தர உயரம்; நல்ல வாட்டசாட்டமான உருவம். குதிரைப் படையினரின் சீருடை அணிந்து நீண்ட உடைவாளும், மிதி முள்ளும், தாங்கியுள்ளார்.) அப்படியெல்லாம் நினைக்காதீர்கள், மிஸ்டர் த்ரைஸிகர், உங்களுக்கு வேண்டிய உதவி செய்ய நான் காத்துக் கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி உங்கள் மனத்தில் சிறிதும் சஞ்சலம் வேண்டாம். நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் செய்ததுதான் சரி. கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவனைக் கைது செய்ய நீங்கள் ஏற்பாடு செய்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்தக் காலிகளுடன் கணக்குத் தீர்க்கும் நாள் வந்துவிட்டது குறித்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. பொது அமைதியைக் குலைக்கும் சில காலிகள் மீது நீண்ட காலமாகவே நான் கண் வைத்ததுண்டு. அவர்களில் சிலர் இன்று கூட்டத்தில் இருக்கிறார்கள்.

த்ரைஸிகர் :

ஆம்; ஓரிரண்டு பக்குவமடையாத இளைஞர்கள்; திருட்டுச் சோம்பேறிகள்; எந்தவித வேலையானாலும் அதைத் தட்டிக் கழித்து விட்டு, ஒழுக்கம் கெட்ட கேவலமான வாழ்க்கை வாழ்ந்து, மதுக் கடைகளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு, தங்கள் கையிலிருக்கும்

கடைசிக் காசு தீர்ந்து போகும் வரை, குடித்துக் கும்மாளம் அடிப்பவர்கள். ஆனால் இது போன்ற காலிகளின் அட்டகாசத்தை ஒரேயடியாய் நிறுத்திவிட நான் உறுதி கொண்டுள்ளேன். அது என் சொந்த நலனுக்காக மட்டுமல்ல, மக்களின் பொது நலனுக்காகவும் தான்.

போலீஸ் அதிகாரி:

நிச்சயமாகப் பொது நலனுக்கு அவசியமான நடவடிக்கைதான். அதில் சிறிதும் சந்தேகமில்லை. உங்களை யாரும் அதற்காக குறை கூற முடியாது. உங்களுக்கு உதவியாக என்னால் செய்ய முடிந்தது அனைத்தையும்.....

த்ரைஸிகர்:

அந்தப் பிச்சைக்காரக் கும்பலை, ஒன்பது ஆணி கட்டிய சவுக்கால் பிய்த்துப் பிராண்ட வேண்டும்.

போலீஸ் அதிகாரி:

நீங்கள் சொல்வது ரொம்ப, ரொம்ப, சரி. மற்றவர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படி, அவர்களை நாம் நடத்தித் காட்ட வேண்டும்.

ஹ்யூகோ ஃபன் ஹோஃப்மன்ஸ்தால்

லார்ட் சாந்தோஸ் கடிதம்

ஆஸ்திரியக் கவி ஹ்யூகோ ஃபன் ஹோஃப்மன்ஸ்தால் (1874–1929) இளைஞராக இருந்தபோதே ஆக்கிய படைப்புகள், நேர்த்தியான மொழி நடையினால், சிறப்புப் பெற்று விளங்கின. காதல் வீரக் கவிஞர்கள் (Romantics) காட்டிய ஏக்கமும், மரணத்தில் நாட்டமும் அவர் எழுத்தில் காணப்பட்டன. ஆஸ்திரிய-ஹங்கேரி சாம்ராஜ்யம் சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருந்தது என்பதை ஹோஃப்மான்ஸ் தால் உணர்ந்திருந்ததிலிருந்து, நாகரிகம் பற்றி ஒரு சலிப்பு எழுந்து அவர் எழுத்தில் ஒலித்தது. 'லார்ட் சாந்தோஸ் கடிதம்', (1902), அவர் எழுத்தில் ஒரு சோதனைக் கட்டத்தையும் திருப்பத்தையும் அது குறிக்கின்றது. அதே சமயத்தில், இருபதாம் நூற்றாண்டின் எழுத்தாளர் பலருக்குக் கிட்டியிருந்த அனுபவத்தை அக்கடிதம் வெளிப்படுத்துகின்றது. மொழி பற்றி நம்பிக்கை இழந்து வரும் ஒரு மனிதனின் ஆன்மீக சோதனையை அவர் சித்திரிக்கின்றார். எழுத்துத் துறையில் வெற்றி பெற்றுள்ள சாந்தோஸ், வாழ்வின் ஒருமைப் பாட்டில் கொண்டிருந்த நம்பிக்கையும் பாதுகாப்பு உணர்வும் குலைக்கப்பட்டு, உலகின் முரண்நிலையை அனுபவிக்கின்றார். சொற் களுக்குப் பின் படுபாதாளக் குழி விழுங்கக் காத்திருக்கிறது. மெய்ம்மை சிதறிச் சின்னபின்னமாகிறது. ஆகவே மொழியின் கவிதை நடை முடிவடைகின்றது. ஆனால் கடிதம் ஏக்கத்தில் முடியவில்லை. சில வேளைகளில், முக்கியமில்லாத சிறு நிகழ்ச்சி களும் பேருண்மையின் வெளிப்பாடுகளாகத் தமக்கு அமைகின்றன என்பதையும், ஆனால் அந்த வெளிப்பாடுகளின் உண்மையைச் சொற்களால் விவரிக்கத் தம்மால் இயலவில்லை என்பதையும் சாந்தோஸ் சூசகமாக உணர்த்துகின்றார். தம் வாழ்வின் பிற்பகுதி யில், சைகை, அமைப்பின் அழகு, இசை ஆகியவற்றால் வலுப் பெற்று விளங்கும் 'ஆப்பரா' இசை நாடகங்கள் எழுதுவதிலும், உயர்ந்த நாடகங்கள் அமைப்பதிலும் அவர் ஈடுபட்டிருந்தார். இக் கடிதம் மிக முக்கியமானது என்ற போதிலும், மொழியின் முறிவு, இதில் மிகுந்த சொல் வளத்துடனும் மொழி நயத்துடனும் சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதைக் காணவேண்டும்.

இலக்கியப் பணியை அடியோடு கைவிட்டு விட்டதற்காக வருத்தம் தெரிவித்து, லார்ட் சாந்தோஸ் பிலிப் (பாத் பிரபுவின் இளைய மகன்) பிரான்சிஸ் பேகனுக்கு (பின்னர் பேரன் வெருலாம், வைகவுண்ட் ஸெயிண்ட் ஆல்பன்ஸ் ஆனார்) எழுதிய கடிதம் இது.

இரண்டாண்டுகள் நான் எதுவும் எழுதாததையும் பொருட்படுத்தாது, எனக்கு இவ்வாறு எழுதியது, மதிப்பு மிக்க நண்பரே, உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. மனத்தேக்கம் என்று உங்களுக்குத் தோன்றும் என் நிலை பற்றித் திகைப்பையும், என்னைப் பற்றிக் கவலையும் தெரிவிக்கையில், சுமையாய் இல்லாத நகைச்சுவை கலந்த பாணியில் நீங்கள் எழுதியுள்ளது, அனுதாபத்துக்கு மேம்பட்ட உங்கள் அன்பைக் காட்டுகிறது. வாழ்க்கை ஆபத்துக்கள் நிறைந்தது என்பதை உணர்ந்த போதிலும், அதனால் சோர்வடைய மறுப்பவர்கள்தான் அந்தப் பாணியைக் கையாள முடியும்.

'கடுமையான நோய் தங்களை அரித்துத் தின்பதை உணராதவர்கள், உளநலன் இழந்தவர்கள்' என்று ஹிப்பாக்ரடீஸ் கூறியதை மேற்கோளாகக் கையாண்டு, நீங்கள் கடிதத்தை முடித்துள்ளீர்கள். ஆகவே என் நோயைத் தீர்க்க மருந்து மட்டுமல்ல, என் அக நிலையை உணர என் புலனறிவைக் கூர்மையாக்கும் மருந்தும், எனக்குத் தேவை என்பதையும் நீங்கள் எடுத்துக் காட்டியுள்ளீர்கள். ஒளிவு மறைவின்றி உங்களிடம் என்னைப் பற்றிய உண்மை அனைத்தையும் கூறுவது தான் என் கடமை. ஆனால் அதைச் செய்ய வகையறியாமல் திகைக்கின்றேன். உங்கள் அரிய கடிதம் யாருக்கு எழுதப்பட்டுள்ளதோ, அதே ஆள் தான் நான் என்ற ஐயப்பாடே எனக்கு எழுந்துள்ளது. பத்தொன்பதாவது வயதில் 'புது பாரிஸ்,' 'டேன்ப்னியின் கனவு,' 'எபிதலேமுயம்' ஆகியவற்றை, சொற்களின் போதை நிறைந்த இன்பச் சித்திரங்கள்; ஒரு தெய்வீக அரசியாரும், பரிவு மிக்க பல சீமான்களும் சீமாட்டிகளும் இன்னும் நினைவில் கொண்டுள்ள நாடகங்கள் ஆகியவற்றை எழுதிய நான் தானா, இப்பொழுது இருபத்தாறு வயதில் இந்நிலையில் இருக்கின்றேன்?

இருபத்தி மூன்றாவது வயதில், வெனிஷீயாவின் நேர்த்தியான பொதுச் சதுக்கத்தின் கல்தூண்கள் கொண்ட வில்வளைவு விதானத்தின் கீழ் அமர்ந்து, கடலிலிருந்து எழுந்த கலைச்சின்னங்களான, பல்லேடியோ, சான்ஸோவினோ ஆகியவற்றைக் காட்டியும், எனக்கு மகிழ்ச்சி ஊட்டிய, என் உரை நடையின் ஒழுங்கையும் கட்டுக் கோப்பையும் கண்டு பெருமிதம் கொண்டவன் நான் தானா? மற்ற அம்சங்களில் நான் இன்னும் அதே மனிதனாக இருந்தால், ஆழ்ந்த சிந்தனையிலிருந்து எழுந்த இந்தப் படைப்பாற்றலின் வடுக்களையும் சின்னங்களையும், என் அகத்தின் அந்தரங்கத்திலிருந்து எப்படி இழந்திருக்க முடியும்? உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள என் ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு, என்னிடம் எவ்வித உணர்ச்சியையும் எழுப்பாத அளவுக்கு, எனக்கு அறிமுகமாகாத ஒன்றுபோல் தோன்றும்

அளவுக்கு, நான் அப்படைப்பாற்றலே அடியோடு பறி கொடுத் திருக்க முடியுமா? அச்சொற்களின் பொருளோக் கூட என்னுல் முதலில் விளங்கிக் கொள்ள முடியவில்லே. அந்த லத்தீனச் சொற்களோ நான் முதன் முறையாக இப்பொழுது தான் சந்திப்பது போல், ஒவ்வொரு சொல்லாக நான் ஆராய்ந்து அறிய வேண்டியிருந்தது. ஆனுல் உண்மையைச் சொல்லப் போனுல், நான் அந்த ஆள் தானே? நான் தானு என்று கேட்டும் இக்கேள்விகளில், சொல்லணிக் கலே (rhetoric) தானே ஓங்கி நிற்கிறது. இச்சொல்லணி பெண்களுக்கும், காமன்ஸ் சட்ட சபைக்கும் ஏற்றதாக இருக்கலாம். அதன் பெருமை எவ்வளவு தான் இப்பொழுது மிகைப்படுத்தப் பட்டிருந்தாலும், உட் பொருளின் அடிப்படையை ஊடுருவும் ஆற்றல் அதற்குக் கிடையாதல்லவா? ஆனுல் என் அகத் தன்மையின் அந்தரங்கத் தைத் தான் நான் உங்களுக்கு வெளிப்படுத்தத் துடிக்கின்றேன். இதுவும் ஒரு விபரீத உணர்வு, ஒழுக்கக் கேடு, என் உள நோய் என்று வேண்டுமானுல் நீங்கள் கூறலாம். என் சொந்தப் படைப்புகள் என்று சொல்லிக் கொள்ள முடியாத அளவுக்கு எனக்கே புதிதாகத்தான் என் முந்திய இலக்கியப் படைப்பு களுக்கும், எதிர் காலத்தில் எனக்கு அழைப்புகளுக்கும், இடையே உள்ள படுபாதாளக் குழியை, தாண்ட முடியாதது போல் தோன்றும் குழியை, நீங்கள் காண வேண்டுமென்ருல், நான் என் அகத்தை உங்களுக்குத் திறந்து காட்ட வேண்டும்.

இலட்சிய ஆர்வத்தை நாம் இருவரும் பகிர்ந்து கொண்ட அந்த நாட்களில், நான் வகுத்திருந்த பற்பல சிறிய திட்டங்களோ நீங்கள் இப்பொழுது கிணவூட்டியுள்ளதைப் பார்த்தால், உங்களோ பிரிவின் வேகத்தை அதிகம் பாராட்டுவதா, அல்லது, உங்கள் வியத்தகு நிணவாற்றலேப் பாராட்டுவதா என்பது எனக்கு விளங்கவில்லே. மாண்புமிக்க நம் மன்னர், காலஞ்சென்ற எட்டாம் ஹென்ரியின் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளோச் சித்திரிக்க நான் முதலில் திட்டமிட்டிருந்தது உண்மை தான். என் தாத்தா, எக்ஸீடர் கோமகன், எனக்கு விட்டுச் சென்ற ஆவணங்கள், பிரஞ்சுடனும் போர்ச்சுகலுடனும் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றிச் சில விவரங்களோ எனக்களித்தது, என் முயற்சிக்கு ஆதாரமாய் அமைந்தன. அந்த இன்ப ஊக்கமிகு நாட்களில், சாலஸ்ட் வழியாய், எப்பொழுதுமே அடைபட முடியாத குழாய்கள் வழியாகப் பொழிவது போல், கட்டுக் கோப்பினழகு பற்றிய உணர்வு என்னே ஆட்கொண்டது. சொல்லணி உத்திகளுக்கு அப்பாற்பட்டு மட்டுமே அறியக்கூடிய, உண்மையான அகத்தே ஆழ்ந்த, வடிவழகு, பொருளோக் கோவை யாக்குவது மட்டும் அந்த வடிவழகு என்று கூற முடியாது.


ஏனென்றால் அந்த வடிவழகு பொருளையெல்லாம் ஊடுருவி, பொருளைக் கரைத்து, ஒரே சமயத்தில் கனவையும் மெய்ம்மையையும் உருவாக்கி, அழிவற்ற அமரசக்திகள் ஒன்றோடொன்று கலந்து விளையாடச் செய்து, இசை அல்லது இயற்கணிதம் போன்ற அற்புதமொன்றைப் படைக்கின்றது. இதுதான் அருமைத் திட்டங்களில் தலைசிறந்ததாய் இருந்தது.

ஆனால் திட்டங்கள் தீட்டுவதற்கு மனிதன் யார்?


மற்ற திட்டங்களுடனும் நான் விளையாடினேன். அவற்றையும் உங்கள் அன்பான கடிதம் நினைப்பூட்டுகின்றது. அவை ஒவ்வொன்றும், என் இரத்தத்தில் ஒரு துளியைக் குடித்து வீங்கி, அமைதியும் மகிழ்வும் நிரம்பிய ஒரு காலத்தில் சுடர் வீசிய கதிரவனின் ஒளி இப்பொழுது மங்கலாகி விட்டபின், இருளடைந்த சுவரின் மேல் சோர்வுற்ற ஒரு கொசு நடனமாடுவது போல், என்முன் நடனமாடுகின்றன.

பண்டைக்காலப் படைப்பாளர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள கற்பனை நீதிக்கதைகளை — ஓவியர்களுக்கும் சிற்பிகளுக்கும், முடிவில்லாத, சிந்தனைக்கு அப்பாற்பட்ட இன்பம் அளித்த கதைகளை — நான் துருவி ஆராய விரும்பினேன். திரைக்கு அப்பாலிருந்து என் மீது தென்றலென வீசி, என்னை ஈர்த்து ஆட்கொண்ட, முடிவற்ற ஒரு அந்தரங்க விவேகத்தின் சித்திர எழுத்துக்களென அவற்றை நான் ஆராய்ந்து, அவற்றிற்கு விளக்கம் காண விரும்பினேன்.

அத்திட்டம் எனக்கு நன்கு நினைவிருக்கின்றது. எந்தப் புலனுணர்வை, அல்லது ஆன்ம தாகம், அதற்கு அடிப்படையாக இருந்தது என்பதை நானறியேன். வேட்டையாடப்பட்ட மான் தண்ணீருக்காகத் துடிப்பது போல், அந்தக் கதைகளில் தோன்றிய பாத்திரங்களுள், அந்தரங்கத்தை மறைக்காமல் ஒளி வீசிய அந்த உருவங்களுள் நான் ஊடுருவிக் கூடுபாய விரும்பினேன். அந்த நீரணங்குகள், வனதெய்வங்கள், நார்சிஸஸ், ப்ரோட்டியஸ், பெர்சியஸ், அக்டேயியான் ஆகியோருள் புகுந்து புகலடைந்து, அவற்றின் அகத்திலிருந்து குரல் கொடுத்துப் பேச விரும்பினேன். இன்னமும் அதிகம் ஆசைப்பட்டேன். ஜுலிஸ் சீசர் தொகுத்தது போல், ஒரு பொன்மொழிக் களஞ்சியம் தொகுக்க விழைந்தேன். சீசர் தொகுத்த களஞ்சியம் பற்றிச் சிசரோ ஒரு கடிதத்தில் குறிப்பிடுவது உங்களுக்கு நினைவுருக்கலாம். அதில், என் பயணங்களில் நான் சேகரித்திருந்த பல்வேறு பொன்மொழிகளையும் நம் காலத்து அறிஞரும் நயமுறப் பேசும் அணங்குகளும் கூறும் பொன்மொழிகளுடன், பாமர மக்களிடையே குறிப்பிடத்தக்கவர்கள்




தெயடோர் ஸ்டோம்
(1817—1888)





கார்ல் மார்க்ஸ்
(1818—1883)

அலெக்ஸாண்டர் ::பன் ஹம்போல்ட்
(1769—1859)


தெயடோர் ::பொண்டானெ
(1819—1898)








ஃப்ரீட்ரிஷ் நீட்ஷே
(1844—1900)




ஒட்டோ ஃபன் பிஸ்மார்க்
(1815—1898)

கெர்ஹார்ட் ஹௌப்தமன்
(1862—1946)

ஹ்யூகோ ஃபன் ஹோஃப்மன்ஸ்தால
(1874—1929)





கூறிய உரைகளையும், படித்த, புகழ்பெற்ற பெரியோர்களின் அறிவுரைகளையும் ஒன்றுசேர்த்து அளிக்க விரும்பினேன். அவற்றோடு, பழைய இலக்கியங்களிலிருந்தும் இத்தாலி நூல்களிலிருந்தும் நயமான உரைகளையும் விவேக மிக்க மேற்கோள்களையும் நூல்களிலும், ஏட்டுப்படிகளிலும், உரையாடல்களிலும் என்னைக் கவர்ந்த அறிவுக்கனிகளையும் அணிகளையும் சேர்த்து ஒருங்கே அளிக்க விரும்பினேன். கவர்ச்சி மிக்க விழாக்கள், அலங்காரப்பவனிகள்; பயங்கரக் குற்றங்கள், வெறிச்செயல்கள், நெதர்லாண்ட்ஸ், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் புகழ் பெற்ற தொல்பொருள் சின்னங்கள் ஆகியவை பற்றியும் இன்னும் பலவற்றைப் பற்றியும் சுவை மிக்க செய்திகளை அதில் சேர்க்க விரும்பினேன். அந்தக் களஞ்சியத்துக்கு 'நோஸி யெ இப்ஸம்' என்று பெயரிட விரும்பினேன்.

சுருங்கச் சொன்னால், இடைவிடாத இலட்சிய போதை மிக்க அந்நாட்களில், வாழ்வனைத்தையும் ஒருங்கிணைந்த முழுமையாக நான் கண்டேன். ஆன்மீக உலகமும் சட உலகமும் முரண்பட்டதாக எனக்குத் தோன்றவில்லை. மெருகுமிக்க மேம்பட்ட நடத்தையும், மிருகத்தனமான நடத்தையும், கலையும் காட்டுமிராண்டித்தனமும், தனிமையும் சமூக உறவும், எனக்கு ஒன்றுகவே தோன்றின. ஸ்பெயின் நாட்டின் நாகரிகக் கொண்டாட்டங்களிலும் சரி, மதியீனத்தின் விபரீதத்திலும் சரி, இளம் விவசாயிகளின் முரட்டுத்தனத்திலும் சரி, மிக நுட்பமான உபமானக் கதைகளிலும் சரி—அனைத்திலும் நான் இயற்கையின் பொலிவையே கண்டேன். இயற்கையின் வெளிப்பாடு அனைத்திலும் என்னையே கண்டேன். அமைதியான, கிராமப் பெண் ஒருத்தி, மென்மையான கண்களுடைய ஒரு பசுவின் மடியிலிருந்து கடைசி வரைக் கறந்து மரவாளி ஒன்றில் ஊற்றியிருந்த, இளஞ்சூடான பாலை, நான் என் வேட்டைக் குடிலில் குடித்த போதும் சரி, ஒரு புத்தகத்தைப் படித்து ஊட்டமும் இனிய அனுபவமும் பெற்று, என் படிப்பறையின் சாளரத்தோடு ஒட்டிக் கட்டப்பட்டிருந்த பலகையில் நான் அமர்ந்திருந்த போதும் சரி, எனக்கு ஒரே மாதிரியான உணர்வுதான் ஏற்பட்டது. இந்த இரண்டு உணர்வுகளில் ஒன்று மற்றொன்றைவிட உயர்வானது என்று கூறுவதற்கில்லை. கனவு போன்ற தேவலோக உணர்விலும் சரி, புலன் அனுபவத்திலும் சரி, இரண்டு உணர்வுகளும் சமமாகவே எனக்குத் தோன்றின. வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் இந்த இயற்கை உணர்வுதான் என்னை ஆட்கொண்டது. எதிலும், மையத்தில் நான்தான் இருந்தேன். வெளித் தோற்றத்தைக் கொண்டு மட்டுமே நான் முடிவு கட்டவில்லை. எல்லாம் உண்மையில் ஒரு தொடர் உருவகமென்றும், ஒரு படைப்பை அறிவதன்

மூலம் மற்ற பிறப்புகளையும் அறிய முடியுமென்றும், மற்ற சில வேளைகளில் நான் அறிந்தேன். ஒவ்வொன்றின் அந்தரங்கக் கதவின் கைப்பிடியைப் பற்றவும், தங்கள் இரகசியத்தை எனக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருந்தவற்றைத் தட்டித் திறக்கவும் ஆற்றல் என்னிடம் இருந்தது என்று எனக்குத் தோன்றியது. ஆகவேதான் என் களஞ்சிய நூலுக்கு அத்தகைய தலைப்பைத் தர முடிவு செய்திருந்தேன்.

அவ்வாறு வீங்கிச் செருக்குற்ற நிலையிலிருந்து, இப்பொழுது, என்னகத்தே நிரந்தரமாகக் குடிக்கொண்டுவிட்ட எல்லையற்ற சோர்வும் தளர்ச்சியும் படிந்த நிலைக்கு என் உள்ளம் வீழ்ச்சி அடைய வேண்டும் என்பது, தெய்வ ஆக்கினையின் நியாயமான திட்டமே என்று அதில் நம்பிக்கை கொள்பவர்களுக்குத் தோன்றும். அத்தகைய சமயக் கருத்துக்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவை சிலந்திக் கூடுகள்; அவற்றிலிருந்து பல கருத்துக்கள் வெளியே வந்து விழக்கூடும். இன்னும் பலருடைய கருத்துக்கள் அச் சிலந்திக் கூடுகளில் சிக்கி, அங்கேயே அடைபட்டுக் கிடக்கக் கூடும். என்னைப் பொறுத்த வரை, சமய நம்பிக்கையின் அந்தரங்கம், உயர்ந்ததோர் உருவகத்தில் அடங்கியுள்ளன. அந்த உருவகம் என் வாழ்க்கை எனும் வயல்கள் மேல் ஒளிவீசும் வானவில் போல் சூழ்ந்துள்ளது. என்றும் தூரத்தில் இருப்பது அந்த வானவில்; அதை எட்டிப்பிடித்து, அதனுள் குடிகொள்ளும் ஆசை எனக்குத் தோன்றினால், அது எட்டிப் பிடிக்க முடியாமல் மேலும் மேலும் தொலைவில் சென்றுவிடும்.

ஆனால், என் அருமை நண்பர, அரிய கருத்துக்கள் கூட அது போலவே என் பிடியில் சிக்காமல் நழுவி விடுகின்றன. இந்த விசித்திரமான ஆன்மீக வேதனைகளை—எட்டிப் பிடிக்க முயலும் என் கைகளில் சிக்காமல் பழக்கனிக் கொப்புகள் உயர எகிறுவதை—தாகத்தால் துடிக்கும் என் உதடுகளிலிருந்து சலசலக்கும் ஓடை தூர விலகிச் செல்வதை—நான் எப்படி உங்களுக்கு விவரிப்பது?

சுருங்கச் சொன்னால் என் நிலை இதுதான்—எதையும் பற்றித் தெளிவாகச் சிந்திக்கவோ, கோர்வையாகப் பேசவோ, நான் ஆற்றலை அடியோடு இழந்து விட்டேன்.

சாதாரணமாக ஒருவர் தயக்கமின்றியும் சரளமாகவும் கையாளக் கூடிய நடையில், உயர்ந்த அல்லது பொதுவான ஒரு பொருள் பற்றி விவாதிக்கும் ஆற்றலைப் படிப்படியாக நான் முதலில் இழந்தேன். ஆவி, ஆன்மா, உடல் என்பன போன்ற சொற்களை உச்சரிப்பதில்கூட, விளங்கிக் கொள்ள முடியாத ஓர் அருவருப்பு எனக்கு ஏற்பட்டது. அரசு அலுவலின் நிகழ்ச்சிகள்,

பாராளுமன்ற விவாதங்கள் முதலியவை பற்றியும், வேறெந்தப் பிரச்னை பற்றியும் முடிவான ஒரு கருத்தைத் தெரிவிக்க இயலாத நிலையை அடைந்தேன். அவற்றிடம் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட மரியாதையோ பணிவோ இதற்குக் காரண மல்ல.¦ (விவேகமற்ற தன்மை என்று சொல்லும் அளவுக்கு நான் எதையும், ஒளிவு மறைவின்றிப் பேசுபவன் என்பதுதான் உங் களுக்குத் தெரியுமே.) முடிவான கருத்து தெரிவிக்க என் தயக்கத் துக்குக் காரணம், தீர்ப்புக் கூறுவதற்கு என் நா பயன்படுத்த வேண்டிய கருத்தியலான சொற்கள், பூஞ்சக் காளான்களைப் போல் என் வாயில் உதிர்ந்து பொடியாயின என்பதுதான். ஒரு நாள், என் நான்கு வயது மகள், காத்தரீனு பாம்பிலியா, சிறு பிள்ளைத்தனமான ஒரு பொய் சொன்னதற்காக, அவளைக் கடிந்து, எப்பொழுதும் வாய்மை பேசுவதன் அவசியத்தை வலியுறுத்த நான் முயன்றபோது, என் மனத்திற்குள் பாய்ந்த எண்ணங்கள், பன்னிறம் பகட்டிக் காட்டும் தன்மை பெற்று, ஒன்றோடொன்று மோதிக் குழப்பியதால், ஏதோ திடீரென நோயால் தாக்கப் பட்டதுபோல், வாக்கியத்தை ஒரே மூச்சில் கடகடவென்று கொட்டி முடித்தேன். உண்மையிலே என் முகம் வெளிறியது; என் நெற்றியில் கடுமையான அழுத்தம் ஏற்பட்டது. குழந்தையை அங்கேயே விட்டுக் கதவை எனக்குப் பின்னால் வேகமாகச் சாத்திக் கொண்டு, வெளியேறினேன். தனிமையில் பசும்புல் வெளியில் குதிரைமீது சிறிது தூரம் சவாரி செய்து திரும்பியபின் தான், எனக்கு ஓரளவு நிதானம் திரும்பியது.

சிறிது சிறிதாக, இந்த வேதனைத் தாக்குதல்கள், அரித்துத் தின்னும் துருப் போல் பரவின. சாதாரண, அன்றாட உரை யாடலில், கண்ணை மூடிக்கொண்டு, எளிதாகவும் உறுதியுடனும் தெரிவிக்கக் கூடிய முடிவுகளையும் கருத்துக்களையும் தெரிவிப் பதில், எனக்குப் பல ஐயப்பாடுகளும் தயக்கங்களும் எழுந்த தால், அத்தகைய உரையாடலில் பங்கு கொள்வதையே நான் அடியோடு நிறுத்தினேன். 'இது அவருக்கு நல்லதாக முடிந்தது அல்லது கெடுதலாக முடிந்தது; ஷெரிப் என். நல்லவர்; பாதிரி டி. கெட்டவர்; குடியானவர் எம். இரக்கத்துக்குரியவர்; அவருடைய மகன்கள் வீணர்கள்; இன்னொருவர் மகளிர் சிக்கனமானவர் களாதலால் அவர் அதிர்ஷ்டசாலி; அந்தக் குடும்பம் உலகில் முன்னேறி வருகிறது; இந்தக் குடும்பம் வீழ்ச்சி அடைந்து வருகிறது', என்பது போன்ற சாதாரண விமர்சனங்கள் செய்யப் படுவதைக் கேட்ட போதெல்லாம், விவரிக்க முடியாத ஓர் ஆத்திரம் என் உள்ளத்தில் குடிகொள்ளும்; அதை வெளியில் காட்டாமல் அடக்க, மிகவும் சிரமப்படுவேன். இத்தகைய விமர்சனங்கள் ஆதாரமற்றவை, எத்துச் சொற்கள், வெற்றுக்

கூற்றுகள், என்று எனக்குத் தோன்றியது. இத்தகைய உரையாடலில் வரும் சாதாரணமான கூற்றுகளைக் கூட, மிக நெருக்கமான, நுணுக்கமான பரிசீலனைக்கு உள்ளாக்க வேண்டுமென்று தோன்றியது. ஒரு சமயம், என் சுண்டு விரலில் சிறு தோலைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்த்தபோது, பொந்துகளும், உழுசால்களும் நிறைந்த ஒரு வயல்போல் அது தோற்றமளித்தது. அதுபோலவே, இப்பொழுது மனிதர்களும் அவர்கள் செய்கைகளும் என் கண்ணில் பட்டன. இயல்பான கண் கொண்டு எளிதாக அவற்றைக் கண்டு கொண்டு எளிதாக அவற்றைக் கண்டு விளங்கிக் கொள்ள என்னால் இயலவில்லை. எதுவும், பல்வேறு கூறுகளாக, என் கண்முன் சிதைந்தது. இக் கூறுகள் மீண்டும் உட்கூறுகளாய் உடைந்தன. எதையும் முழுமையாக ஒரு கருத்தைக் கொண்டு அரவணைக்க என்னால் இயலவில்லை. தனிச் சொற்கள் என்னைச் சுற்றி மிதந்தன; அவை கண்களாக உறைந்தன; அக் கண்கள் என்னை வெறித்துப் பார்த்தன; அக் கண்களை நானும் வெறித்து நோக்கும் நிர்பந்தத்துக்கு உள்ளானேன். இறக்கம் உண்டாக்கி, ஓயாமல் என் தலை சுற்றச் செய்து, வெறுமைக்கு என்னை அழைத்துச் செல்லும் பெருநீர்ச் சுழிகளாய் அக் கண்கள் அமைந்தன.

பண்டைக் காலச் சிந்தனையாளரின் ஆன்மீக உலகில் தஞ்சம் புகுந்து, இந்த அவல நிலையிலிருந்து என்னை மீட்டு விடுவிக்க முயன்றேன். பிளேட்டோவை மட்டும் நான் நெருங்கவில்லை. அவருடைய கட்டுக் கடங்கா கற்பனையின் ஆபத்துக்களைக் கண்டு நான் அஞ்சினேன். மற்ற சிந்தனையாளரில், செனெகா, சிஸரோ ஆகியோரை முகர்ந்து பயிலத் தொடங்கினேன். தெளிவான, கோவையாக அணி செய்யப்பட்ட, அவர்கள் கருத்துக்களின் ஒழுங்கிலிருந்தும் அமைதியிலிருந்தும் நான் என் உள நலனை மீண்டும் எய்த எண்ணினேன். ஆனால் அவர்களை என்னால் நெருங்க முடியவில்லை. அந்தக் கருத்துக்களை என்னால் நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது. தங்கப் பந்துகளை வீசி விளையாடிய எழில் மிக்க நீர்த்தாரைகள் போல், அக்கருத்துக்கள் ஒன்றோடொன்றுகப் பின்னித் தழுவி என் முன் விளையாடியதைக் கண்டேன். அவற்றைச் சுற்றிச் சஞ்சரித்து, அவற்றின் விளையாட்டை நான் வியந்து காணலாம். ஆனால் அவை தங்களைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டன. என் சிந்தனையின் ஆழ்ந்த, அந்தரங்கத் தன்மை, இந்த மந்திர வட்டத்திற்குள் புகமுடியாமல் விலக்கி ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவை கூட விருந்தபோதும், தனிமையின் கொடுமை என்னை வாட்டியது. கண்ணில்லாச் சிலைகளால் சூழப்பட்டு, ஒரு தோட்டத்தில் பூட்டி வைக்கப்பட்டவன் போலிருந்தது என் நிலை. ஆகவே மீண்டும் நான் வெளியே தப்பி ஓடினேன்.

அன்று முதல் நான் நடத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையை நீங்கள் கற்பனை செய்யக் கூட முடியாதென அஞ்சுகிறேன். அந்த வாழ்க்கையின் ஒட்டத்தில், உணர்வோ, சிந்தனையோ, சிறிதும் இல்லை. என் அண்டை வீட்டுக்காரர்கள், உறவினர், இந்த நாட்டில் நிலைப் பிரபுக்கள் பெரும்பாலோர் ஆங்கியோர் நடத்தும் வாழ்க்கைக்கும் என் வாழ்க்கைக்கும் அதிக வேற்றுமை இல்லை என்பது உண்மை தான். அதில் இன்பமான, ஊக்கமளிக்கும் நேரங்கள் அடியோடு இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. அந்த இன்பப் பொழுதுகள் எப்பொழுது எழுகின்றன என்று சுட்டுவதும் எனக்கு எளிதாயில்லை. மீண்டும் சொற்கள் என்னைக் கைவிடுகின்றன. ஏனெனில் அத்தகைய வேளைகளில் எனக்கு ஏற்படும் வெளிப்பாடுக்குப் பெயர் எதுவுமில்லை; பெயரிடவும் முடியாது. என் அன்றாட வாழ்வில் சூழ்ந்துள்ள அற்பப் பொருட்களைக் கூட, இந்த அபூர்வ வெளிப்பாடு, மேம்பட்ட வாழ்வெனும் வெள்ளப்பெருக்கால், நிரப்புகின்றது. எடுத்துக் காட்டுகளை நான் கூறுவிடில் இதை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள் என்று எதிர் பார்க்க முடியாது. அவை சிறுபிள்ளைத் தனமானவையாய் இருந்தால், பொறுத்தருள வேண்டும். ஒரு பாலை, வயலில் விட்டுச் செல்லப்பட்ட ஒரு கொழுத் தட்டு, வெய்யிலில் நிற்கும் ஒரு நாய், பாழடைந்த கல்லறை, ஒரு முடம், குடியானவனின் குடிசை இவை அனைத்திலும் அந்த அபூர்வ வெளிப்பாட்டை நான் காண்பேன். இப்பொருள்களில் ஒவ்வொன்றும், இவை போன்று அன்றாட வாழ்வில் நாம் சாதாரணமாய் அசட்டை செய்யும் ஆயிரக் கணக்கான அற்பப் பொருள்களும், திடீரென ஒரு மேம்பாடு பெற்றுச் சொற்களால் சித்திரிக்க முடியாத, உருக்கமான, உயர்வான, ஒரு தன்மையை எய்திவிடும். அவ்வாறு என்னை ஆட் கொள்ளும் நேரம் எப்பொழுது எழும் என்று அறிந்து கொள்ளும் ஆற்றல் என்னிடம் அறவே இல்லை. இல்லாத ஒரு பொருளின் கற்பனை உருவகம் கூட, மௌனமாக, ஆனால் திடீரென எழும் இத்தெய்வீக உணர்வால் நிரம்பி வழியும் அந்தரங்க ஆற்றல் பெறக்கூடும். எடுத்துக்காட்டாக, அண்மையில், என் பால் பண்ணை ஒன்றின் பால் சேமிப்பறைகளில் தெளிப்பதற்கு நிறைய எலிப்பாஷாணம் வாங்க ஏற்பாடு செய்திருந்தேன். மாலையில், அதைப் பற்றி எண்ணுமல், நான் குதிரைச் சவாரி செய்யச் சென்று விட்டேன். அப்பொழுது தான் உழப்பட்டிருந்த நிலத்தில், அச்சம் கொண்ட கவுதாரிக் கூட்டம் ஒன்றையும், தொலைவில் கதிரவன் விரிந்த வயல்பரப்பில் மறைவதையும், கண்டவுடன், ஏனோ, என்னை அறியாமலேயே, அந்தப் பால் கிட்டங்கியின் காட்சி என் கண் முன் எழுந்து, அக்கிட்டங்கியில் எலிக் கூட்டத்தின் மரண ஓலமும் ஒலித்தது. பாஷாணத்தின்

இனிய, காரமான, வாசனை நிறைந்த கிட்டங்கியின், குளிர்ச்சியான, ஊசல் வாடை நிறைந்த காற்று; பூசனம் பிடித்த சுவர்களில் மோதிய, மரண ஓலம்; சாவோடு போராடிப் பின்னிப் பிசைந்த எலிகளின் பயனற்ற வேதனை வெறியாட்டம்; தப்பி ஓட வழி தேடி அவை துடித்த பரிதாபம்; மூடப்பட்டிருந்த இடுக்கன் எதிரே இரண்டு எலிகள் மோதிக் கொண்ட போது எழுந்த ஆத்திரமிகுந்த, வெறித்த இளிப்பு; இவை பற்றிய உணர்வுகள் என் உள்ளத்தில் குடி கொண்டன. ஆனால் நான் துறந்து கை விட்ட சொற்களை நாடி ஏன் மீண்டும் அலைய வேண்டும்? ஆல்பாலாங்காவின் அழிவுக்கு முந்திய சில மணி நேரங்களை லிவி அற்புதமாய்ச் சித்திரிப்பது, என் நண்பரே, உங்களுக்கு நினைவிருக்கும். தாங்கள் இனிமேல் காண முடியாத தெருக்களில் கூட்டம் கூட்டமாய் மக்கள் குறிக்கோள் எதுவுமின்றி அலைந்து திரிகின்றனர்; தங்கள் கால்களில் மிதிபடும் கற்களிடமிருந்து பிரியா விடை பெறுகின்றனர், இக்காட்சியையும், தீப்பிடித்து எரியும் கார்த்தேஜ் நகரக் காட்சியையும், என் உள்ளத்தில் தாங்கியிருந்தேன் என்று, என் நண்பனே, உறுதி கூறுகின்றேன். ஆனால் அதைவிட மேலானது, அதிகத் தெய்வீகமானது அதிக மிருகத்தனமானது, ஒன்றும் இருந்தது. அது தான் நிகழ்காலம்: நிறைவான, மாண்புமிக்க நிகழ்காலம். மரண வேதனையில் சிக்கியிருந்த தன் இளம் குஞ்சுகளால் சூழப்பட்டிருந்த தாய் எலி, ஆனால் அவள் பார்வை, செத்துக் கொண்டிருந்த குழந்தைகள் மேலோ, ஈவிரக்கமற்ற கற்சுவர்கள் மேலோ, விழவில்லை. அவள் வெறுமையை நோக்கி, வெறுமையைத் தான் எல்லையற்ற நிலையை வெறித்து நோக்கிக் கொண்டே, தன் பற்களை நரநரவென்று கடித்துக் கொண்டிருந்தாள். சிதைந்து அழிந்து கொண்டிருந்த நியோபி அருகில் திகிலுடன், கதியற்று, நின்று கொண்டிருந்த அடிமை என்ன அனுபவித்திருப்பானோ, அதைத் தான் நானும் அனுபவித்தேன், அந்தப் பிராணியின் ஆன்மா, தன் பயங்கர முடிவைப் பார்த்துப் பல்லைக் கடித்த போது.

இந்த வர்ணனையைப் பொறுத்தருள்க. ஆனால் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி, இரக்கம் என்று எண்ணுகிறீர்கள். அவ்வாறு எண்ணினால், நான் பொருத்தமற்ற ஓர் எடுத்துக்காட்டைத் தேர்ந்தெடுத்தவனாவேன். என் உணர்ச்சி இரக்கத்தை விட மிக மேம்பட்டதாகவும் இரக்கத்தை விட மிகத் தாழ்த்தாகவும், இருந்தது. எல்லையற்ற ஓர் அனுதாபம்; அப்பிராணிகளுள் ஊடுருவும் ஓர் உணர்ச்சி; வாழ்வு, சாவு, கனவு, விழிப்பு ஆகியவற்றின் சுரப்பு இப்பிராணிகளுள் பாய்ந்ததென்ற ஓர் உணர்வு; ஆனால் எங்கிருந்து இவை எழுந்தன? மற்றொரு நாள் மாலை, பாக்கு மரத்தின் கீழ், தோட்டக்காரச் சிறுவன் விட்டுச் சென்றிருந்த,

பாதி நிரம்பியிருந்த ஒரு பாகீனையையும், அதில் இருந்த தண்ணீரும் அப்பாகீனையும் அருகில் இருந்த மர நிழலால் இருண்டிருந்ததையும், அத்தண்ணீரில் ஒரு வண்டு இக்கரைக்கும் அக்கரைக்குமாய் நீந்திக் கொண்டிருந்ததையும், கண்டபோது இச்சிறு சாதாரணப் பொருள்களின் சேர்க்கையைக் கண்ட போது எல்லையற்ற பரம் பொருளைக் கண்டது போல் ஓர் அச்சம், என் உச்சியின் ரோமச் செதிலிலிருந்து உள்ளங்கால் நுனிவரை, என் உடம்பில் பாய்ந்ததென்றால், அந்த உணர்வுக்கும் இரக்கத்துக்கும், அல்லது கற்பனை செய்து பார்க்கக்கூடிய எந்தவித மனித எண்ணங்களின் தொகுதிக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? என் உள்ளத்திலிருந்து நான் நாடிய சொற்கள் பீறிட்டெழுந்தால், நான் நம்பாத தேவதூதர்களையும் மண்டியிடச் செய்யக்கூடிய அச்சொற்களை நான் நாடித் துடித்தேன்? மௌனமாக, அந்த இடத்திலிருந்து என்னைத் திரும்பச் செய்தது எது? இப்பொழுதும், பல வாரங்கள் சென்ற பின்னரும், அந்தப் பாக்கு மரத்தைப் பார்க்கும்போது, வெட்கம் நிறைந்த பக்கவாட்டுப் பார்வையுடன் அதைக் கடந்து செல்கிறேன். அந்த அடிமரத்தைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் அந்த அற்புத நிலைவை அருகில், புதரில், பதுங்கிக் கொண்டிருக்கும் தேவதூதர்களின் துடிப்பை கலைக்க அஞ்சிக் கடந்து செல்கின்றேன். அத்தகைய நேரங்களில், ஓர் அற்பப் பொருள் கூட, ஒரு நாய், ஓர் எலி, ஒரு வண்டு, ஊனமுற்ற ஓர் ஆப்பிள் மரம், குன்றைச் சுற்றி வட்டமிடும் சந்து, பாசி படர்ந்த ஒரு கல் ஆகிய அற்பப் பொருள்கள் கூட நான் மிக இன்பமாய்க் கழித்த இரவில் உறவாடிய, எழில் மிக்க, காதல் கலையில் கைதேர்ந்த, ஆசை நாயகியை விட, எனக்கு முக்கியமாய், அருமை மிக்கதாய்த் தோன்றுகின்றன. இந்த ஊமைப் பிராணிகள், ஏன், சில வேளைகளில், உயிரற்ற பொருள்கள் கூட, நிறைவுடனும், அன்பின் உயிர்ப்புடனும், என்னை நோக்கிப் பாய்ந்து வரும்போது, இன்பப் போதை கொண்ட என் கண்ணுக்குப் பார்வையில் படும் பொருள் எதுவுமே உயிரற்ற பொருளாகத் தோன்றவில்லை. இருக்கும் எல்லாப் பொருட்களிலும், என் நினைவில் நிற்கும் எல்லாப் பொருட்களிலும், என் சூழம்பிய சிந்தனையில் பட்ட எல்லாப் பொருட்களிலும், ஓர் உட்பொருள், விளங்குகிறது. என் மந்த நிலையிலும், என் மூளையின் உணர்வற்ற தேக்கத்திலும் கூட, உட்பொருள் துலங்குகிறது. என்னைச் சுற்றி எல்லாப் பொருள்களும் ஓயாது ஒன்றோடொன்று விளையாடிக் கொண்டிருக்கின்றன என்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது. அவற்றுள், நான் கூடு புகுந்து கூடு பாயாத பொருள் ஒன்று கூட இல்லை. என் உடம்பு வெறும் சுன்னம், வெறுமை என்று தோன்றுகிறது.

அதில்தான் அனைத்தின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ளும் ஆற்றல் அடங்கியுள்ளது. இதயத்தைக் கொண்டு சிந்தனை செய்யத் தொடங்கினால் தான், படைப்புகள் அனைத்துடனும், நாம் பொருளுள்ள, நம்பிக்கைக்கு இடம் தரும், உறவு கொள்ள முடியுமெனத் தோன்றுகிறது. இன்ப போதை ஊட்டும் இந்த அபூர்வ உணர்வு என்னிடமிருந்து மறைந்தவுடன், எனக்குக் குழப்பம் ஏற்படுகிறது. என்னையும் உலகனைத்தையும் ஆட் கொண்ட இந்த இசைவு எவ்வாறு எழுந்தது, அந்த உணர்வு எனக்கு எவ்வாறு ஏற்பட்டது என்று என்னால் தெளிவாகக் கூற முடியவில்லை. என் இரத்த ஓட்டத்தில் அடர்த்தியும் தடையும் ஏற்படுவது எப்படியென்றோ, என் குடல் அசைவது எப்படி யென்றோ, என்னால் தெளிவாகக் கூறமுடியாதது போலவே, இந்த இசைவு உணர்வு எவ்வாறு எழுந்தது என்பதையும் என்னால் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

என் மனத்தில் எழுகின்றனவா, என் உடலில் எழுகின்றனவா, என்று நான் விளக்கம் கூற முடியாதபடி உள்ள இந்த விசித்திர நிகழ்வுகளைத் தவிர, நம்ப முடியாத வெறுமை குடிகொண்ட வாழ்க்கையையே நடத்துகின்றேன். இந்த அகத் தேக்கத்தை என் மனைவியிடமிருந்து மறைப்பதும், என் பண்ணை நிர்வாகம் பற்றி எனக்குள்ள அசட்டையை என் பணியாளரிடமிருந்து மறைப்பதும், எனக்குச் சிரமமாகி விடுகின்றன. காலஞ்சென்ற என் தந்தையாரிடமிருந்து எனக்குக் கிட்டிய உயர்ந்த, கண்டிப் பான கல்விப் பயிற்சியும், பகல் பொழுதில் ஒரு மணி நேரத்தைக் கூட வீணுக்காமல் இருக்க நான் தொடக்கத்திலிருந்தே கற்றுக் கொண்ட பழக்கமும்தான், என் வர்க்க அந்தஸ்துக்கும் என் நிலைக்கும் ஏற்ப, நிதானமும் கண்ணியமும் மிக்க ஒரு தோற் றத்தை வெளியுலகின் முன் நிலைநாட்ட, எனக்கு உதவுகின்றன.

என் வீட்டில் ஒரு பகுதியை நான் புதுப்பித்துக் கொண்டிருக் கிறேன். இந்த வேலையின் முன்னேற்றம் பற்றிக் கட்டிய நிபுண ருடன் அவ்வப்போது உரையாட என்னால் முடிகிறது. நான் என் பண்ணைகளை நிர்வாகம் செய்கிறேன். என் குடியானவர்களும் பணியாளர்களும், முன்புபோல் நான் அவ்வளவு கலகலவென்று பேசுவதில்லை என்று கூறலாமே ஒழிய, என் அனுதாபமோ, நல்லெண்ணமோ, குறைந்து விட்டன என்று கூற முடியாது. மாலையில் நான் குதிரைச் சவாரி செய்து அவ்வழியே செல்லும் போது, தங்கள் வீட்டின் முன் நின்று, தொப்பியைக் கழற்றி மரியாதை செய்து, என் கண்ணில் படப் பணிவுடன் காத்து நிற்கும் என் குடியானவர்களில் யாரும், செல்லரித்த எந்தப் பலகைகளின் கீழ் மீன் பிடிக்கப் புழுக்களைத் தேடுகின்றனரோ, அந்தப் பலகைகளின் மீதுதான் என் பார்வை ஆசையாக

விழுகிறது என்பதை அறியமுடியாது. பின்னல் வேலைப்பாடு அமைந்த சாளரம் வழியாக உள்ள இருக்கமான அறையையும், அந்த அறையின் மூலையில், கட்டம்போட்ட விரிப்பைத் தாங்கித் தாழ்வான ஒரு கட்டில், ஒருவர் பிறப்பதற்கும், இன்னொருவர் இறப்பதற்கும், முடிவின்றிக் காத்து நிற்பதையும்தான் நான் காண்கின்றேன் என்பதை அவர்களில் யாரும் கண்டு கொள்ள முடியாது. பூத்தொட்டிகளிடை, கள்ளத்தனமாய் உலாவும் பூனைகளின் அசிங்கமான தோற்றம் கொண்ட நாய்க் குட்டிகளின் மீதுதான் என் ஆசையான பார்வை நீண்ட நேரம் நிற்கிறது என்பதை அவர்கள் உணர முடியாது. அன்றுடக் குடியான வாழ்வின், அழகற்ற, அற்பப் பொருள்களில் ஏதாவது ஒரு பொருள், கவர்ச்சி சிறிதும் இல்லாத தன் தோற்றத்திலும், கண்ணிலே படாத அற்பமான தன்மையிலும், தன் ஊமை வெளிப்பாட்டிலும், அந்த அபூர்வமான, சொல்லுக்கு அப்பாற்பட்ட, எல்லையற்ற இன்ப உணர்வைத் தாங்கி என்னை ஆட்கொள்ளாதா என்று நாடி நான் அலைவது அவர்களுக்கு எப்படித் தெரியமுடியும்? பெயரிடமுடியாத என் இன்ப உணர்வுதான், விண்மீன்கள் நிறைந்த வானத்தில் தோன்றுவதைவிட, எளிதாகவும் விரைவிலும், தொலைவில் தனியாக உள்ள ஆடு மேய்ப்பவன் எழுப்பும் தீயினால் ஏற்படக் கூடியதாய் இருக்கிறதே. இசைக் கருவியின் மான்புமிக்க குரலைவிட, ஆள் நடமாட்டம் இல்லாத வயல்களில் இலையுதிர் காலக் காற்றுமாரிகால மேகங்களைத் துரத்தும்போது, சாகுந்தருவாயில் உள்ள கடைசிச் சிள் வண்டின் ஒலியினால், எழுப்பப்படக் கூடியதாய் உள்ளதே என் இன்ப உணர்வு. தன் அலங்காரப் பொய்கையில் இருந்த, வாயில்லாத, உணர்வில்லாத, சிவப்புக் கண்களையுடைய சாது மீன் ஒன்றின் மீது, சொல் வல்லுநர் கிராஸ்ஸஸ் அளவற்ற பிரியம் கொண்டதாகவும், அந்த விசித்திர அன்பு பற்றி ஊரெல்லாம் வியந்ததாகவும், கூறப் படுகிறது. அந்த மீன் இறந்தபோது, கிராஸ்ஸஸ் கண்ணீர் சிந்தியதைப் பரிகசிக்கும் முறையில் செனேட் அவையில் டோமிட்டஸ் பேசிக், கிராஸ்ஸஸ் ஒரு முட்டாள் எனத் தோன்றும் படி செய்தபோது, கிராஸ்ஸஸ் பதிலளித்தாராம்: "உங்கள் முதல் மனைவியும் இரண்டாம் மனைவியும் மரணமடைந்த போது கூட நீங்கள் சிந்தாத கண்ணீரை, நான் என் மீன் மரணமடைந்த தற்காகச் சிந்தினேன்." அடிக்கடி என் மனத்தில் நான் கிராஸ்ஸஸுடன் என்னை ஒப்பிட்டுக் கொள்வதுண்டு.

பல நூற்றாண்டுகள் இடைவெளியைத் தாண்டி, இந்தக் கிராஸஸ்ஸும் அவர் மீனும், என் அகத்தின் தன்மையின் பிரதிபலிப்பாக, என் மனத்தில் அடிக்கடி தோன்றுவது ஏன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவ்வாறு தோன்றுவதற்குக் காரணம்,

டோமிட்டஸுக்கு அவர் தந்த பதில்தான். அந்தப் பதிலின் காரணமாய், மற்றவர்கள் டோமிட்டஸைக் குறித்துத்தான் நகைக்கும்படி ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சி முழுவதுமே ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகி விட்டது. ஆனால் என்னைப் பொறுத்தவரை, அந்நிகழ்ச்சி என் உள்ளத்தை உலுக்கியது. தம் மனைவிகள் மரணமடைந்தபோது, டோமிட்டஸ் வேதனைக் கண்ணீர் சிந்தியிருந்தால் கூட, இன்னமும் அந்நிகழ்ச்சி என் உள்ளத்தை உலுக்கியிருக்கும். உலக ஆட்சிப் பிரச்னைகள் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த சென்னேட் அவையில், கேலிக்குரியவராயும், துக்கமானவராகவும் தோன்றிய அந்த ஆளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம், என் உள்ள எழுச்சியை வெளிப்படுத்த, அபூர்வமான ஒரு சக்தி என்னை உந்திக் கட்டாயப் படுத்துகின்றது. ஆனால் அந்த உணர்ச்சியை நான் சொற்களில் வெளிப்படுத்த முயன்றவுடன், அது மிகவும் மடத்தனமாகவும் சிறு பிள்ளைத்தனமாகவும் எனக்குத் தோன்றிவிடுகிறது.

அவ்வப்போது, இரவு வேளையில், இந்தக் கிராஸ்ஸஸின் உருவம் என் மூளையில் குடிகொள்கிறது: ஒரு சிம்பு போல் அது என் மூளையில் புகுந்து கொள்கிறது: அச் சிம்பைச் சுற்றி அனைத்தும் புறையோடிச் சீழ் வழிந்து, துடித்துக் கொதிக்கின்றது. அப் பொழுதுதான் நானே, புளித்துப் பொங்கப் போவதுபோல், நுரைத்து எழுவதுபோல், கொதித்து வெடிப்பதுபோல் தோன்றுகிறது. சிந்தனை, வெறிபிடித்தது போலாகிறது: ஆனால் சொற்களை விட, அவசரமான, நெகிழ்ச்சியுடைய, ஒளி வீசுகிற, ஒரு தன்மையின் மூலமாக, சிந்தனை நிகழ்கிறது. அதுவும் பெரிய நீர்ச் சுழிகளை உருவாக்குகிறது: ஆனால் மொழியின் நீர்ச்சுழிகள் பாதாளத்திற்கு அழைத்துச் செல்வது போலல்லாமல், இந்த நீர்ச்சுழிகள் என் அகத்தே பாய்ந்து, அமைதியில் ஆழ்ந்த சூற்பைக்குள், அழைத்துச் செல்கின்றன.

என் அருமை நண்பா, சாதாரணமாக என் அகத்தே புதைக்கப் பட்டு இருக்கும் விளக்க முடியாத இந்நிலை குறித்து உங்களுக்கு மிக விரிவாக எடுத்துச் சொல்லி, உங்களை அளவுக்கு மீறித் தொந்தரவு செய்துவிட்டேன்.

'நம் உறவை இழந்ததற்கு ஈடு செய்யும் பொருட்டு', நான் எழுதிய புத்தகம் எதுவும் உங்களுக்கு இப்பொழுதெல்லாம் வந்து சேர்வதில்லை என்று நீங்கள் குறைபட்டுக் கொண்டீர்கள். அதைப் படித்தபோது, துயரம் தோய்ந்த தெளிவுடன், உறுதியாக என்னிடம் ஓர் உணர்வு ஏற்பட்டது. அடுத்த ஆண்டிலோ, அதற்கு அடுத்த ஆண்டிலோ, என் வாழ்வில் எஞ்சியுள்ள எந்த ஆண்டிலோ, நான் ஆங்கிலத்திலும் சரி லத்தீன் மொழியிலும்

சரி, புத்தகம் எழுதப் போவதில்லை. இதற்கான காரணம் விசித்திரமானது; சொல்வதற்கும் தர்ம சங்கடமானது. காழ்ப்பு இல்லாத உங்கள் கண்முன், இசைவுடன் பரவி நிற்கும் பூத, ஆண்மீக, அம்சங்கள் நிறைந்த உலகில், அக் காரணத்தைக் கொண்டு வந்து நிறுத்த, உங்கள் உள்ளத்தின் எல்லையற்ற உயர் தன்மையால் இயலுமென்று நம்புகிறேன். என் சிந்தனைக்கும் எழுத்துக்கும் வாயிலாக அமையக் கூடிய மொழி, லத்தீனமோ, ஆங்கிலமோ, இத்தாலிய அல்லது ஸ்பானிஷ் மொழியோ அல்ல. நான் கையாளக் கூடிய மொழியின் சொற்கள் எவையும் எனக்கு அறிமுகமானவை அல்ல. அம்மொழியில் தான், உயிரற்ற பொருள்களும் என்னுடன் உரையாடுகின்றன. எனக்கு அறிமுக மில்லாத ஒரு நீதிபதி முன், என் சார்பில் நான் ஒரு நாள் வழக்காட வேண்டியிருக்கும்போது, அம்மொழியில்தான் என்னால் பேசமுடியும்.

பிரான்சிஸ் பேக்கனுக்கு நான் எழுதும் கடைசிக் கடிதமாக இது அநேகமாக அமையும். மனித சமுதாயத்துக்கு மகத்தான நன்மைகள் செய்துள்ள ஒருவருக்கு, என் காலத்தில் வாழும் ஆங்கிலேயர்களில் தலைசிறந்தவருக்கு, அவர்மீது நான் என் இதயத்தில் கொண்டுள்ள வரையற்ற பக்தியையும் அன்பையும் நன்றியையும் இக் கடிதத்தில் அடக்கும் ஆற்றல் எனக்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அந்த அன்பையும் நன்றியையும் பக்தியையும் மரணம் தான் முறிக்க முடியும்.

22, ஆகஸ்ட், கி. பி. 1603. சந்தோஸ்

பிரான்ஸ் காஃப்கா

பிரான்ஸ் காஃப்கா (1883—1924), பிராகாவில் பிறந்த யூத எழுத்தாளர். அவர் தாய் மொழி, ஜெர்மானிய மொழி. அவர் சட்டம் பயின்று, 1903 முதற்கொண்டு தம் மரணம் வரை, ப்ராகா இன்ஷியூரன்ஸ் நிலையத்தில் சட்டப் பணியாளராக வேலை செய்தார். 1917இல் காஃப்கா, எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்டார். அவர் வாழ்க்கையில் பெரும்பகுதி, அவருடைய இலக்கியப் படைப்புகளில், முடிவுறுத மூன்று நாவல்களிலும், சிறு கதைகள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளது. ப்ராகாவில் அவர் மற்றவர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட தனிமையான வாழ்க்கையே நடத்தினார். அவர் ஜெர்மன் மொழி, செக் மக்களிடமிருந்து அவரைப் பிரித்தது. அவருடைய இனமும் சமயமும் ஜெர்மானியரிடமிருந்து அவரைப் பிரித்தன. இத்தனிமை உணர்வு குறிப்பாக அவர் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. தம் வேலையில் அவருக்குத் திருப்தி இல்லை. மென்மையான உள்ளம் படைத்த அவரைப் புரிந்து கொள்ளாமல், அவரை அதிகாரம் செய்து துன்பப்படுத்திய அவர் தந்தையிடம் அவர் அச்சம் கொண்டிருந்தார். இவையும் அவர் படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. காஃப்கா எடுத்துக் காட்டியது போல், அவர் எழுத்து, அவருக்கு மட்டுமே உரித்தான உட்பொருள் கொண்டிருந்தது. எனினும் அவர் எழுத்து, இந்த நூற்றாண்டின் மிக முக்கிய படைப்புகளில் ஒன்றாகும். இன்றைய மனிதனின் இன்றியமையாப் பிரச்னைகளை அவை ஆராய்கின்றன. அதே சமயத்தில், அவை உருவாக்கியுள்ள ஒரு புதுமையான சிறப்பான, கலை வடிவத்தில், மெய்ம்மையல்லாததும், மேம்பட்ட ஒரு மெய்ம்மையின் வெளிப்பாடாக விளங்குகிறது. அவர் நூல்களுக்கு விளக்கம் கூறுவது அரிது. அதே சமயத்தில் அவை பொருளற்றனவாய்த் தோன்ற எழுதப் பட்டவையல்ல. இரகசியம், கவலை, பயங்கரம், தொடர்ச்சியான தோல்விகள் ஆகியவை குடிகொண்ட காஃப்காவின் உலகில், தத்துவப் பிரச்னைகளும் இருத்தல் நிலை (existential) பிரச்னைகளும் உருவாகியுள்ளன. குற்றவாளியாய் இருத்தல், ஆதல், மனிதனின் தன்னுணர் முரண்பாடு, தெளிவாக உணரும் ஆற்றல், சமூக அமைப்பில் அதிகாரத்தை நிலை நாட்ட அவனுக்குள்ள ஆர்வம், ஆகியவை அவர் படைப்புகளில் நிழலாடுகின்றன.

தீர்ப்பு

1912இல் வெளிவந்த 'தீர்ப்பு' என்ற கதைக்குப் பல பொருள்கள் உள்ளன. தீர்ப்பு கூறும் அதிகாரி போல் விளங்கும் தந்தையிடம் ஒரு மகன் கொண்டுள்ள அச்சம் பற்றியும், மகனுக்கும் தந்தைக்கும் இடையே மூளும் அதிகாரப் போராட்டம் பற்றியும் இக்கதை கூறு

கிறது. மரணத்தில்—தந்தையும் மரணமடைகிறார்—கதை முடிகிறது என்பது சாடையாகக் காட்டப்பட்டுள்ளது. மற்றவர்களிடமிருந்து தனித்து நிற்கும் ஜார்ஜ், குற்றம் இழைத்து, உணரும் மனநிலையையும், சித்திரிக்கும் இக்கதை, குற்றம் இழைத்த உணர்விலிருந்து விடுதலை பெற மரணம் ஒரு வழி என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

வசந்த காலத்தின் உச்ச கட்டம். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை. தன் வீட்டு முதல் மாடியில் தன் அறையில், இளம் வணிகர் ஜார்ஜ், பென்தெமன் அமர்ந்திருக்கிறான். அந்த வீடு, ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள சிறிய, பாழடைந்த, வீடுகளின் நீண்ட வரிசையில் ஒன்று. உயரத்தையும், நிறத்தையும் தவிர, மற்றப்படி ஒரு வீட்டுக்கும் மற்றொரு வீட்டுக்கும் வேறுபாடு காண முடியாது. அயல் நாட்டில் அப்பொழுது வாழ்ந்து வந்த தன் பழைய நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதி முடித்து விட்டுக் கனவுலகில் சஞ்சரிப்பது போன்ற மனநிலையில், அக்கடிதத்தை மெதுவாக ஓர் உறைக்குள் போட்டான். மேசை மீது முழங்கை கூர் ஊன்றியவாறு, சாளரம் வழியாக, ஆற்றையும், பாலத்தையும், தூரக்கரையில் பசுமை படர்ந்த குன்றுகளையும், நோக்கியவாறு அமர்ந்தான் ஜார்ஜ்.

சொந்த நாட்டில் தன் எதிர்காலத்துக்கான வாய்ப்புகள் பற்றிய அதிருப்தியில், ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ருஷ்யாவுக்கு ஓடிவிட்ட தன் நண்பனைப் பற்றி அவன் நினைத்துக் கொண்டிருந்தான். பீட்டர்ஸ்பர்க் நகரத்தில் அந்த நண்பன் கொண்டிருந்த வாணிபம், தொடக்கத்தில் தழைத்து, அதன்பின் சீர்கெட்டுத் தோல்வி முகத்தில் சென்று கொண்டிருந்தது என்று, அவன், நீண்ட இடைவெளிக்குப் பின், எப்போதாவது சொந்த ஊருக்குத் திரும்பி வந்த போதெல்லாம் குறைபட்டுக் கொண்டான். அயல் நாட்டில் அவன் வாழ்க்கை, விழலுக்கு இரைத்த நீர் போலாகிவிட்டது. குழந்தைப் பருவம் முதற்கொண்டே ஜார்ஜுக்கு நன்கு பழக்கமாகியிருந்த அந்த நண்பனின் முகம் புதிதாக வளர்க்கப்பட்டிருந்த பெரிய தாடியால், மறையாவிடினும், மாறுபட்ட தோற்றமளித்தது. அவனுடைய தோலில் மஞ்சள் நிறம் படர்ந்து, உள்ளூர ஒரு நோய் உடலை அரித்துக் கொண்டிருந்தது போல் தோன்றச் செய்தது. ருஷ்யாவில் வாழ்ந்து வந்த ஒரு சில சொந்த நாட்டுக்காரருடனே, ருஷ்யக் குடும்பங்களுடனே, நெருங்கிய உறவு கொள்ளாமல் தான் தனித்து வாழ்ந்து வந்ததாக அவன் கூறினான். நிரந்தர பிரம்மச்சாரி வாழ்க்கைதான் தனக்குக் கிட்டிய வாழ்க்கை என்று சூழ்நிலையின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து அவன் வாழ்க்கை நடத்தி வந்தான்.

இவ்வாறு வாழ்க்கையில் தடுமாற்றம் கண்ட ஒரு நண்பனுக்கு என்ன கடிதம் எழுத இயலும்? அவனிடம் அனுதாபம் காட்டலாம்; ஆனால் அவனுக்கு உதவி செய்யவோ வழி இல்லை. சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து, நண்பர்களுடன் பழைய உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டு, அவர்கள் உதவியை நம்பி வாழ்க்கை நடத்துவதே நலமென்றும், அவ்வாறு செய்யத் தடை எதுவுமில்லை என்றும், அவனுக்கு ஆலோசனை கூறுவதா? அவ்வாறு சொல்வது, அதுவரை அவன் நடத்திய வாழ்க்கை பயனற்றது, அதை இறுதியாகக் கைவிடவேண்டும், வீடு திரும்பி வழிதவறிச் சென்றவன் மீண்டும் திரும்பித் திருந்தி விட்டான் என்று பலரும் இடித்துச் சொல்வதைப் பொருட்படுத்தக் கூடாது, வாழும் வகை அறியாத பேதை என்ற தீர்ப்பை ஏற்றுக் கொண்டு, குடும்ப வாழ்வைச் சீராக நடத்துவதில் வெற்றி கண்ட தன் நண்பர்களின் ஆலோசனைகளுக்கும் அறிவுரைகளுக்கும் ஏற்ப நடக்கவேண்டும் என்று அவனிடம் கூறுவதாகும். அதை எவ்வளவு தான் இதமாகக் கூறினாலும், அவனை உறுத்தத் தானே செய்யும். அவ்வளவு தூரம் அவனுக்கு மனவேதனை அளித்த பின்பும், அந்த நோக்கம் நிறைவேறும் என்பது தான் என்ன நிச்சயம்? நாடு திரும்பவே அவன் உடன்படாமல் போகக்கூடும். சொந்த நாட்டு வணிகத்துறையில் அவனுக்கிருந்த தொடர்புகள் அனைத்தும் அறுந்து போயிருந்தன என்று அவனே கூறியிருந்தான். அதற்குப் பின்னும், அயல் நாட்டில் ஓர் அன்னியனைகவே, நண்பர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாததால் இன்னும் அதிக மனக் கசப்புடனும், அவர்களிடமிருந்து மேலும் ஒதுக்கப்பட்டவனாய், அவன் வாழத்தானே வேண்டும். அதற்கு மாறாக, அவர்கள் ஆலோசனையை ஏற்று அவன் நாடு திரும்பிய பின், தானே வலியக் கசந்து கொள்ளாதபோதிலும், சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தங்களினால், அவனால் சொந்த நாட்டுச் சூழ்நிலையுடன் ஒத்துப் போக இயலவில்லை யென்றால், நண்பர்களுடன் சேர்ந்து வாழ்வும், அவர்களில்லாமல் தனித்து வாழவும் அவனால் இயலாமல், அவமானத்துக்கு ஆளாகி, சொந்த நாட்டிலேயே நண்பர்கள் இல்லை யென்ற நிலை ஏற்பட்டால், அப்பொழுது, அயல் நாட்டிலேயே அவன் இருந்தவாறே வாழ்க்கை நடத்தியிருந்தால், அதுவே நலமாக இருந்திருக்கும் என்ற நிலை எழுந்தால் என்ன செய்வது? இதையெல்லாம் மனத்திற்கொண்டு பார்த்தால் அவன் சொந்த நாட்டிற்குத் திரும்பி வெற்றி கண்பான் என்று என்ன உறுதி?

ஆகவே, அவனுக்குக் கடிதம் எழுதும்போது, நெருங்கிய நண்பனுயிராமல் சாதாரணப் பழக்கமாய் உள்ளவருக்கு செய்திகளை வெளிப்படையாகக் கூறிக் கடிதம் எழுதுவது போல் கூடச் செய்ய

முடியாது. அவன் சொந்த நாட்டிற்கு வந்து மூன்று ஆண்டு களுக்கு மேலாகியிருந்தது. அதற்கு ருஷ்யாவில் அரசியல் நிலைமை தெளிவற்றிருந்ததை அவன் காரணம் காட்டியிருந்தான். அது நொண்டிச் சமாதானம் தான். இலட்சக்கணக்கான ருஷ்யர்கள் தடையின்றி அயல் நாடுகளில் பயணம் செய்ய முடிந்த போது, வணிகத்துறையில் சிறு அளவில் ஈடுபட்டிருந்த அவன் சிறு பொழுதுக்கு, அந்த நாட்டை விட்டு வர இயலவில்லை என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். அந்த மூன்றரை ஆண்டு இடை வெளியில், ஜார்ஜ் வாழ்க்கையிலே பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன், அவன் அன்னை இறந்தாள். அதற்குப் பின்பு, அவனும் அவன் தந்தையும் ஒன்றாகக் குடித்தனம் நடத்தி வந்தனர். அதைத் தன் நண்பனுக்கு அவன் தெரியப்படுத்தியிருந்தான், நண்பனும் அனுதாபக் கடிதம் அனுப்பியிருந்தான், ஆனால் சடங்குக்காக அனுப்பப்பட்டதாய்த் தோன்றிய அக்கடிதத்தில் உணர்ச்சியின் அழுத்தம் காணப்பட வில்லை. இத்தகைய இழப்பினால் ஏற்படும் துன்ப உணர்வு, தூர நாடுவரை செல்லுமுன் தேய்ந்து விடும் போலும். அந்த இரண்டு ஆண்டுகளில் ஜார்ஜ் மட்டும், தன் தொழிலிலும் சரி, சொந்த வாழ்விலும் சரி, முன்பை விட அதிக உறுதியும் தீவிரமும் காட்டி வந்தான்.


இந்த இரண்டு ஆண்டுகளில் ஜார்ஜ் தொழிலில் நல்ல முன் னேற்றம் வாய்த்திருந்தது. அன்னை உயிரோடிருந்த வரை, தந்தை தொழிலில் தீவிர அக்கரை கொண்டிருந்ததால் ஜார்ஜின் சுய முயற்சிக்கு அதிக வாய்ப்பில்லை என்பதும், அன்னை இறந்த பின், தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், அவ்வளவு அக்கரை காட்டவில்லை என்பதால், ஜார்ஜ் சுதந்திரமாகச் செயலாற்ற அதிக வாய்ப்புக் கிட்டியது என்பதும், இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்; அல்லது இந்த முன்னேற்றத்திற்குக் காரணம், தற்செயலாகக் கிட்டிய நல்ல வாய்ப்புகளாகவும் இருக்கலாம். பிந்திய காரணமே அதிகப் பொருத்தமாகத் தோன்றியது. எதுவாயினும், ஜார்ஜ் தொழில் எதிர்பாராதவகை யில் வளர்ச்சி கண்டது. பணியாளர் எண்ணிக்கை இரட்டித்தது. ஐந்து மடங்கு அதிக வியாபாரம் நடந்தது. மேலும் முன்னேற்றத் துக்கான அறிகுறிகளும் புலப்பட்டன.


இந்த முன்னேற்றம் பற்றி ஜார்ஜின் நண்பனுக்கு ஒன்றும் தெரியாது, முன்பெல்லாம் துக்கம் விசாரித்து எழுதியிருந்த கடிதத்தில் கூட ஜார்ஜ் ருஷ்யாவில் நல்ல வாய்ப்புகள் உண்டு என்றும் எடுத்துக் காட்டியிருந்தான். நல்ல வாய்ப்பு என்று நண்பன் கூறியிருந்தது, ஜார்ஜ் தொழிலில் ஏற்கெனவே ஏற் பட்டிருந்த பிரமாதமான வளர்ச்சியில் ஒரு சிறு கூறேயாகும்.

ஆயினும் தன் தொழிலில் மகத்தான வளர்ச்சி ஏற்பட்டிருந்ததை நண்பனுக்குத் தெரிவிக்க ஜார்ஜ் தயங்கியிருந்தான். இத்தகைய காலத்திற்குப் பிறகு அதைச் சொன்னால், முன்பு ஏன் கூறவில்லை என்பதற்குச் சமாதானம் சொல்வது சிரமமாக இருக்கும்.

ஆகவே ஜார்ஜ், தன் நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் விசேஷமான செய்தி எதுவும் குறிப்பிடவில்லை. அமைதியான ஞாயிற்றுக்கிழமையன்று பொதுப்படையாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது மேல்வாரியாக மனதிற்தோன்றும் முக்கியமில்லாத ஊர் நடப்பு பற்றிய செய்திகளையே கடிதத்தில் எழுதியிருந்தான். தன் சொந்த ஊர் பற்றி நண்பன் எவ்வாறு கற்பனை செய்து கொள்ள விரும்பினானோ, அவ்வாறே எண்ணிக் கொள்வதைத் தடை செய்ய ஜார்ஜ் விரும்பவில்லை. நீண்ட இடை வெளிக்குப் பின் எழுதிய மூன்று கடிதங்களில், முக்கியமில்லாத ஆண் ஒருவனுக்கும், அதே போல் முக்கியமில்லாத பெண் ஒருத்திக்கும், திருமணம் நிச்சயமாகியிருந்த செய்தியை மூன்று முறை ஜார்ஜ் திருப்பித் திருப்பி எழுதியிருந்தான். அதன் பயனாகவோ, என்னவோ, வழக்கமாக, இது போன்ற நிகழ்ச்சிகளில் அக்கறை எதுவும் காட்டாத அவன் நண்பன், அது பற்றி அக்கறை காட்டி, விசாரித்து எழுதியிருந்தான்.

ஆனால் இது போல், தங்களுக்குப் பெரிதும் தொடர்பற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எழுத ஜார்ஜ் முன் வந்தானே ஒழிய, வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஃப்ரீதா பிராண்டன்பெல்த் என்ற பெண்ணுடன் தனக்கு, ஒரு மாதத்திற்கு முன், திருமணம், நிச்சயமாகியிருந்த செய்தியை நண்பனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. தன் நண்பன் பற்றியும், கடிதங்கள் வாயிலாகத் தங்களுக்கிடையே வளர்ந்திருந்த ஒரு வகையான விசித்திர உறவு பற்றியும், ஜார்ஜ், தான் திருமணம் செய்து கொள்ளவிருந்த பெண்ணுடன் அடிக்கடி பேசுவான். "இந்த நண்பர் நம் திருமணத்திற்கு வர மாட்டார் போல் தோன்றுகிறதே. உங்கள் நண்பர்கள் அனைவரையும் அறிந்து கொள்ள எனக்கு உரிமை இல்லையா?" என்று அவள் கேட்டாள். "அவனைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. என்னைத் தவருகப் புரிந்து கொள்ளாதே. அநேகமாக அவன் வருவான் என்று தான் எண்ணுகிறேன். நிர்ப்பந்தத்தின் பேரில் வந்ததாக நினைப்பான். வந்தபின் வேதனைப்படுவான். என் மீது பொறுமை கொள்ளவும் கூடும். அவன் அதிருப்தி அடைவான் என்பது நிச்சயம். அந்த அதிருப்தி பற்றி எதுவும் செய்ய இயலாமல், அவன் மீண்டும் தனியாகத் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும். தனியாகத் திரும்பிச் செல்வது அவனுக்கு எவ்வளவு வேதனை தரும் என்பதை உணர்கிறாயா? என்று ஜார்ஜ் பதில் கூறினான்.







ஃபிரான்ஸ் காஃப்கா
(1883—1924)


கோட்ஃப்ரீட் பென்
(1886—1956)

ராபர்ட் முஸீல்
(1880—1942)

பெர்த்தோல்த் ப்ரெஹ்ட்
(1898—1956)









ஆல்பிரெட் டொப்ளின்
(1878—1957)


தாமஸ் மன்
(1875—1955)



ஹெப்ன்ரிஷ் மன்
(1871—1950)

கர்ட் டுஹோல்ஸ்கி
(1890—1935)





"அது சரி. ஆனால் நம் திருமணம் பற்றிய செய்தியை அவர் வேறு யார் மூலமாவது தெரிந்து கொண்டால், என்ன செய்வது?", என்று அவள் கேட்டாள். "அதை நான் தடுக்க முடியாது தான். ஆனால் அவன் வாழ்க்கை நடத்தும் விதத்திலிருந்து இச் செய்தி அவனுக்கு வேறு யார் மூலமாகவும் கிட்டுவது துர்லபம்" என்று ஜார்ஜ் கூறினான். "உங்கள் நண்பர்கள் அப்படி இருந்தால், நாம் திருமண நிச்சயம் செய்து கொண்டிருக்கவே கூடாது," என்று அவள் குறைபட்டுக் கொண்டாள். "அத்தவறுக்கு நாம் இரு வருமே பொறுப்பு தானே. எப்படியும், நாம் வேறு முடிவுக்கு வந்திருந்தால், அதை என்னால் இப்பொழுது தாங்கியிருக்க முடியாது," என்று கூறி, அவனை முத்தமிட்டான். "இருந்த போதிலும் எனக்கு மனமொப்பவில்லை," என்று அவன் முத்தங்களுக் கிடையே அவள் கூறினாள். நண்பனுக்குச் செய்தி அனுப்பினால் கூட, அதனால் தனக்குத் தொந்தரவு எதுவும் ஏற்படாது என்று அவன் நினைத்தான். "என் சுபாவத்தை நான் மாற்றிக் கொள்ள முடியாது. நான் உள்ளவாறே, என்னை அவன் ஏற்றுக் கொள்ளத் தானே வேண்டும். அவனுக்குச் சிறந்த நண்பனை இருக்கும் பொருட்டு, நான் என்னை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது," என்று அவன் தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அந்த ஞாயிற்றுக்கிழமை, அவன், தன் நண்பனுக்கு எழுதிய நீண்ட கடிதத்தில், காதலில் தான் வெற்றி பெற்றிருந்ததைக் குறிப்பிட்டிருந்தான். "மிக முக்கியமான நற்செய்தி ஒன்றைக் கடைசியாக எழுத வேண்டுமென்று வைத்திருந்தேன். ஃப்ரீதா பிராண்டன் ஃபெல்த் என்ற பெண்ணுக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகி உள்ளது. அவள் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். நீ ஊரை விட்டுப் போய் நீண்ட காலத்திற்குப் பின் தான் அவள் இங்கு வந்தாள். ஆகவே அவளைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்க முடியாது. அவளைப் பற்றி மேலும் விவரமாகப் பின்னர் எழுதுவேன். இது என் வாழ்வில் மிகுந்த இன்பம் அளித்துள்ளது என்று மட்டுமே இன்று கூறுவேன். இதனால் நம் உறவு மாறுபடாது. உன் நண்பன், சாதாரணமாய் இருப்பதை விட, மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறான் என்பது ஒன்று தான், இதனால் ஏற்படும் வேறுபாடு. என் மணப்பெண் உனக்குத் தன் உளங்கனிந்த சிநேகிதி ஒருத்தி கிடைப்பாள். கட்டைப் பிரம்மச் சாரிக்கு இது பெரிய லாபம் அல்லவா? நீ இங்கு வந்து எங்கள் அனைவரையும் சந்திப்பதில் பல தடைகள் இருக்கின்றன என்பதை நான் அறியாமலில்லை. ஆனால் இத் தடைகளையெல்லாம் மீறி நீ இங்கு வருவதற்கு, என் திருமணம் நல்ல வாய்ப்பல்லவா? இருந்த போதிலும், என் நலனைக் கருதாமல், உன் நலனைக் கருதியே, நீ இது பற்றி முடிவு செய்ய வேண்டும்."

இக்கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டே, ஜார்ஜ், நீண்ட நேரம், தன் மேசையருகில் அமர்ந்து, சாளரம் வழியாக வெளியே நோக்கிக் கொண்டிருந்தான். தெருவில், தனக்கு அறிமுகமானவர் ஒருவர் சென்று, தன்னைக் கவனித்துக் கையாட்டியதையும், பெரும்போக்காகவே அவன் ஏற்றுக் கொண்டு, அரைகுறையாய்ப் புன்சிரிப்பு செய்தான்.

வெகு நேரம் கழித்து, அவன், அக்கடிதத்தைப் பையில் போட்டுக் கொண்டு, சிறிய தாழ்வாரம் வழியாகப் பல மாதங்களாக அவன் சென்றிராத தன் தந்தையின் அறைக்குள் சென்றான். அந்த அறைக்குள் செல்ல வேண்டிய அவசியமே அவனுக்கு ஏற்பட்டதில்லை. தினமும், தொழில் சம்பந்தமாக அவன் தன் தந்தையைச் சந்திப்பதுண்டு. நண்பகல் உணவை இருவரும் ஒன்றாக உணவு விடுதி ஒன்றில் உண்பார்கள். மாலைப் பொழுதை, தங்கள் தங்கள் விருப்பப்படி, தனியாகக் கழிப்பார்கள். பெரும்பாலும் ஜார்ஜ் தன் நண்பர்களைப் பார்க்கச் செல்வான். சமீப காலமாக, அவன் தன் மணப் பெண்ணைச் சந்திக்கச் சென்று விடுவான். மற்ற நாட்களில், இருவரும் வீட்டு வரவேற்பறையில் சிறிது நேரம் அமர்ந்து, தங்கள் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருப்பார்கள்.

அன்று போல், நல்ல வெய்யில் அடிக்கும் காலை நேரத்தில் கூட, அவன் தந்தையின் அறை பெரிதும் இருட்டாக இருந்தது அவனுக்கு வியப்பு அளித்தது. குறுகிய முற்றத்திற்கு மறுபுறமிருந்த உயரமான சுவரும் அந்த அறையை மேலும் இருட்டாக்கியது. ஜார்ஜின் இறந்து விட்ட அன்னையின் ஒரு மூலையில், சாளரத்தின் பக்கத்தில் அமர்ந்து, அவன், தந்தை, பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். கண் பார்வையில் அவருக்கிருந்த குறையைச் சமாளிக்கப் பத்திரிகையை ஒரு பக்கமாய்ச் சாய்த்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். காலை உணவில், பெரும்பகுதி, சாப்பிடப்படாமல், அப்படியே மேசையின் மீது மிச்சம் வைக்கப் பட்டிருந்தது.

"ஆ, ஜார்ஜ்," என்று கூறிக் கொண்டே, அவன் தந்தை எழுந்து அவனை வரவேற்றார். அவர் நடந்தபோது, அவருடைய நீண்ட காலை அங்கி, முன்பக்கம் பிரிந்து ஆடியது. "என் தந்தையின் உருவம் இராட்சசனைப் போல் பிரும்மாண்டமாய் இருக்கிறது," என்று ஜார்ஜ் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். "இங்கு தாங்க முடியாமல் இருக்கிறதே," என்று வெளியில் உரத்த குரலில் கூறினான்.

"ஆம்; இருட்டாகத் தான் இருக்கிறது" என்று அவன் தந்தை ஒத்துக் கொண்டார்.

"அப்படியிருந்தும் சாளரத்தைச் சாத்தி வைத்திருக்கிறீர்களே," என்று கேட்டான்.

"அது தான் எனக்குப் பிடித்திருக்கிறது," என்று அவர் பதில் சொன்னார்.

"வெளியில் ஒரே வெக்கையாக இருக்கிறது," என்று சொல்லியவாறே, ஜார்ஜ் உட்கார்ந்தான்.

மேசை மேலிருந்து உணவுக் கிண்ணங்களை அப்புறப்படுத்தி, அவன் தந்தை, அவற்றைப் பக்கத்தில் அலமாரி மேல் வைத்தார்.

தந்தை என்ன செய்கிறார் என்று தன் மனத்தில் பதியாமலே, அவரைக் கவனித்துக் கொண்டிருந்த ஜார்ஜ் கூறினான்: "எனக்குத் திருமணம் நிச்சயமாகியுள்ள செய்தி பற்றிப் பீட்டர்ஸ்பர்குக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று உங்களிடம் சொல்லத்தான் வந்தேன்."

"பீட்டர்ஸ்பர்குக்கா?"

"ஆம் அங்குள்ள என் நண்பனுக்குத் தான்," என்று தன் தந்தையின் முகத்தை உற்று நோக்கியவாறே, பதில் கூறினான். வியாபார நேரங்களில் தன் தந்தையின் தோற்றம் வேறு விதமாய் இருக்குமே: இப்பொழுது, தன் முன்னங்கைகளை மடக்கிக் கொண்டு சாவதானமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார, என்று ஜார்ஜ் எண்ணினான்.

"ஓ, உன் நண்பனுக்கா," என்று, நண்பன் என்ற சொல்லில் ஒருவித அழுத்தம் தந்து, ஜார்ஜின் தந்தை கூறினார்.

"முதலில் என் திருமணத்தைப் பற்றி அவனுக்குச் சொல்ல வேண்டாமென்று எண்ணியிருந்தேன். அவனைச் சிரமப்படுத்த வேண்டாமென்று தான் அவ்வாறு முடிவு செய்திருந்தேன். அவன் சிக்கலான இயல்புதான் உங்களுக்குத் தெரியுமே. நானாகச் சொல்ல வேண்டாம், வேறு யார் மூலமாவது அவன் தெரிந்து கொண்டால், தெரிந்து கொள்ளட்டும் என்று நினைத்தேன். அவன் யாருடனும் அதிகம் பழகாமல் வாழும் நிலையில், மற்றவர்கள் அவனுக்கு இச் செய்தியைச் சொல்வார்கள் என்று எதிர் பார்ப்பதற்கும் இல்லை என்று எண்ணினேன்."

"இப்பொழுது உன் மனத்தை மாற்றிக் கொண்டாயா?", என்று கேட்டவாறே, பத்திரிகையைச் சாளர விளிம்பில் வைத்துத் தம் கண்ணுடியை அதன் மேல் வைத்துக் கண்ணுடியைக் கையை வைத்து மூடினார் அவன் தந்தை.

"ஆம். அதைப் பற்றி மேலும் சிந்தித்தேன். அவன் நல்ல நண்பன் என்றால், எனக்குத் திருமணம் நிச்சயமாகியுள்ள நற் செய்தி கேட்டு, அவனும் மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆகவே

அவனுக்கு உடனடியாகச் சொல்லி விடுவதே நல்லதென்று முடிவு செய்தேன். ஆனால் கடிதத்தை அஞ்சலில் சேர்க்குமுன், உங்களிடம் சொல்லி விடுவது நல்லதென்று நினைத்தேன்."

பல்லில்லாத தன் பொக்கை வாயை நீட்டிக் கொண்டே, ஜார்ஜின் தந்தை கூறினார்: "ஜார்ஜ், நீ இதுபற்றி என்னுடன் கலந்துபேச வந்திருக்கிறாய். அது உன் நல்ல குணத்தைக் காட்டுகிறது. ஆனால் நீ உண்மையை முழுதும் என்னிடம் கூறுவிடில், என்னுடன் பேசுவதால் பலனில்லை. இங்கு குறிப்பிட வேண்டாத பல விஷயங்களைக் குத்திக் கிளற நான் விரும்பவில்லை. உன் அன்பு அன்னை இறந்தபின், ஒழுங்கில்லாத பல காரியங்கள் நடந்துள்ளன. அவற்றைப் பற்றி நாம் பேசித் தீர வேண்டிய கட்டம், நாம் எதிர்பார்ப்பதைவிட, விரைவிலேயே வந்து சேரக் கூடும். வியாபாரத்தில் எனக்குத் தெரியாமல், பல காரியங்கள் நடக்கின்றன. வேண்டுமென்றே என்னிடமிருந்து அவை ஒளித்து வைக்கப்படுகின்றன என்று நான் சொல்லப் போவதில்லை. முன் போல், என்னால் வியாபார விவகாரங்களைச் சமாளிக்க முடியவில்லை. என் ஞாபக சக்தியும் குறைந்து வருகிறது. பலவற்றை என்னால் கவனிக்க முடியவில்லை. இயல்பான முதுமையின் கோளாறுகள் ஒருபுறம். உன் அன்னையின் பிரிவால், உன்னைவிட, நான் அதிக அதிர்ச்சி அடைந்துள்ளேன் என்பது மற்றொருபுறம். ஆயினும் இக் கடிதத்தைப் பற்றி நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருப்பதால், நீ என்னை ஏமாற்றக் கூடாதென்று கேட்டுக் கொள்வேன். இது மிகச் சிறிய விஷயம்; சொம்ப அற்பமானது; இதில் நீ என்னை ஏமாற்றத் தேவையில்லை. பீட்டர்ஸ்பர்கில் உண்மையில் உனக்கு ஒரு நண்பன் இருக்கின்றானா?"

தர்மசங்கடமான நிலையில் ஜார்ஜ் எழுந்து நின்றான். "என் நண்பர்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆயிரம் நண்பர்கள் கூட, என் தந்தைக்கு ஈடாக மாட்டார்கள். நான் என்ன நினைக்கின்றேன், தெரியுமா? நீங்கள் உங்களைப் போதிய அளவு கவனித்துக் கொள்வதில்லை. முழுமையில், நல்ல கவனிப்பு தேவை. நீங்கள் இல்லாமல் என்னால் தொழில் நடத்த முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆயினும், தொழிலினால், உங்கள் உடல்நலன் பாதிக்கப்படுமென்றால், நானே அத் தொழிலை நிரந்தரமாக நிறுத்திவிட நான் சித்தமாயிருப்பேன். உங்கள் வாழ்க்கை முறையில் ஒரு தீவிர மாறுதல் செய்து தீர வேண்டும். நீங்கள் இங்கு இருட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். வரவேற்பறையில் உட்கார்ந்தால், நல்ல வெளிச்சம் உங்களுக்குக் கிடைக்கும். உடம்பை நன்கு பராமரித்துக் கொள்வதற்குப் பதிலாகக் காலிச் சிற்றுண்டியைச் சிறிது கொரிக்கின்றீர்கள். நல்ல காற்று உங்களுக்குத் தேவை. ஆனால்

நீங்களோ, சாளரத்தை மூடிக் கொண்டு உட்கார்கிறீர்கள். இப்படிச் செய்யக்கூடாது. நான் ஒரு மருத்துவரை அழைத்து வருகிறேன். அவர் சொல்கிறபடி நாம் நடக்க வேண்டும். உங்கள் அறையை முதலில் மாற்ற வேண்டும். நீங்கள் முன்னறைக்கு வந்து விடுங்கள். நான் இங்கு வந்து விடுகிறேன். அதனால் உங்களுக்கு இடைஞ்சல் எதுவும் ஏற்படாது. உங்கள் பொருட்கள் அனைத்தையும் அங்கு மாற்றி விடலாம். ஆனால் அதையெல்லாம் பின்னால் செய்து கொள்ளலாம். இப்பொழுது, உங்களுக்கு ஓய்வு தேவை. நீங்கள் சற்று படுத்து இளைப்பாறுங்கள். முன்னறைக்கு இப்பொழுதே போக விரும்பினால் நீங்கள் என் படுக்கையில் சிறிது நேரம் படுத்துக் கொள்ளலாம். அதுதான் நல்லது.''

ஜார்ஜ் தன் தந்தையின் அருகில் நின்று பேசினான். அவன் தந்தையோ, நரைமுடி அலங்கோலமாய் இருந்த தன் தலையைத் தாழ்த்தியவாறு உட்கார்ந்திருந்தார்.

அசையாமலே, தாழ்ந்த குரலில், 'ஜார்ஜ்' என்று அவர் அழைத்தார்.

தன் தந்தையருகே ஜார்ஜ் மண்டியிட்டான். சோர்வு நிறைந்திருந்த அவன் தந்தையின் முகத்தில், பெரிய கருவிழிகள், தன்னையே உற்று நோக்கியிருந்ததை அவன் கண்டான்.

''உனக்குப் பீட்டர்ஸ்பர்கில் நண்பர் எவருமே கிடையாது. எப்பொழுதுமே பிறரை ஏமாற்றுவதில் உனக்கு அலாதிப் பிரியம். இப்பொழுது என்னையும் ஏமாற்ற நீ துணிந்து விட்டாய். உனக்குப் பீட்டர்ஸ்பர்கில் எப்படி நண்பர் இருக்க முடியும்? அதை நான் நம்பவில்லை.''

ஜார்ஜ், தன் தந்தையை நாற்காலியிலிருந்து தூக்கி, அவர் அங்கியைக் கழற்ற உதவினான். ''உங்களுக்கு நினைவிருக்கும். என் நண்பன் கடைசியாக நம்மைப் பார்க்க மூன்றாண்டுகளுக்கு முன் வந்தான். உங்களுக்கு அவனை அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது எனக்கு நினைவிருக்கிறது. இருமுறை என் அறையில் அவன் என்னுடன் இருந்தபோது, நீங்கள் அவனைப் பார்க்காமல், நானே தடுத்தேன். அவனை உங்களுக்குப் பிடிக்காததற்குக் காரணங்கள் எனக்கு நன்கு விளங்கின. அவன் சுபாவம் ஒரு மாதிரியானது. ஆனால் பிறகு, அவனுடன் நீங்கள் பிரியமாகப் பழகத் தொடங்கினீர்கள். அவன் சொல்வதற்கு நீங்கள் செவி சாய்த்துத் தலை அசைத்ததுடன், அவனைப் பல கேள்விகளும் கேட்டீர்கள். அது எனக்குப் பெருமிதம் அளித்தது. நீங்கள் யோசித்துப் பார்த்தால், நிச்சயம் உங்களுக்கு நினைவு வரும். ருஷ்யப் புரட்சி பற்றிப் பல திடுக்கிடும் தகவல்களை அவன் நமக்குச் சொல்லியிருக்கிறான். வியாபார நிமித்தமாய் ஒருமுறை

கீவ் நகரத்துக்கு அவன் சென்றபோது, அங்கு ஒரு கலகம் நேரிட்டது பற்றியும், ஒரு சமயகுரு தம் உள்ளங்கையில் இரத்தத் தால் ஒரு சிலுவையைக் கீறி, அக் கையை உயர்த்திக் கூட்டத்தை அமைதிப்படுத்த முயன்றதைப் பற்றியும் அவன் கூறியிருந் தானே, நினைவிருக்கிறதா? நீங்களே அந் நிகழ்ச்சியை இரண்டு மூன்று முறை குறிப்பிட்டுள்ளீர்கள்''.

பேசிக் கொண்டே, ஜார்ஜ் தன் தந்தையை மெதுவாக நாற்காலியில் உட்காரச் செய்து, அவர் கம்பளி உள்ளாடைகளைக் கழற்றினான். அவை சுத்தமாயிராததற்குத் தன் கவனக்குறைவு காரணம் என்று தன்னைக் கடிந்து கொண்டான். தந்தை அணியும் உள்ளாடைகள் சுத்தமாய் இருப்பதற்குத் தான் பொறுப்பேற் றிருக்க வேண்டுமென்று உணர்ந்தான். தன் திருமணத்திற்குப் பின்பு, தன் தந்தைக்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதுபற்றி அவன் குறிப்பாகத் தன் மணப் பெண்ணுடன் பேசியதில்லை. தங்கள் திருமணத்திற்குப் பின், பெரியவர், பழைய வீட்டில் தனியாக வாழ்ந்து வருவாரென்று அவர்கள் மனத்தில் எண்ணிக் கொண்டனர். ஆனால் தங்கள் வீட்டிற்கே தந்தையை அழைத்துச் செல்ல வேண்டுமென்று அவன், அந்த நிமிடத்தில், உடனடியாக ஒரு முடிவுக்கு வந்தான். தன் தந்தையைச் செல்ல மாகப் பராமரிக்க வேண்டுமென்று அவன் செய்த முடிவு, மிகவும் காலம் தாழ்த்திச் செய்யப்பட்ட முடிவாகப் பயனற்றுப் போய் விடுமோ என்ற அச்சம் அவனுக்கு எழுந்தது.

ஜார்ஜ், தன் தந்தையைப் படுக்கைக்குத் தூக்கிச் சென்றான். சில அடிகள் தொலைவில் இருந்த படுக்கைக்குத் தூக்கிச் செல்கையில், தன் கழுத்தில் தொங்கிய கடிகாரச் சங்கிலியுடன் தன் தந்தை விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்து அவனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவர் கடிகாரச் சங்கிலியை இறுகப் பிடித்துக் கொண்டிருந்ததால், அவரைப் படுக்கையில் கிடத்துவதே சிரமமாயிருந்தது.

ஆனால் படுக்கையில் கிடத்தப்பட்டபின், அவர் அமைதியாய் இருப்பதுபோல் தோன்றியது. அவர் கம்பளிகளை இழுத்து, வழக்கம்போல் அல்லாமல், தோளுக்கு மேலாகவே போர்த்திக் கொண்டு, கடுமையில்லாத பார்வையுடன் ஜார்ஜை உற்று நோக்கினார்.

"இப்பொழுது என் நண்பனைப் பற்றி உங்களுக்கு நினைவு வருகிறதல்லவா?", என்று ஜார்ஜ் தூண்டினான்.

தம் கால்கள் கம்பளியால் போர்த்தப் பட்டிருக்கின்றனவா என்பதைத் தம்மால் பார்க்க முடியாததுபோல், "கம்பளி சரியாகப் போர்த்தியிருக்கிறதா". என்று அவர் கேட்டார்.

"படுக்கையில் ஒய்வெடுப்பது இதமாக இருக்கிறதல்லவா?", என்று கேட்ட ஜார்ஜ், கம்பளியைச் சீர் செய்தான்.

"கம்பளி சரியாகப் போர்த்தியிருக்கிறதா?" என்று அவன் தந்தை மீண்டும் கேட்டார். அக் கேள்விக்குப் பதிலில் உயிர்ப் பிரச்னையே அடங்கியிருப்பதாக அவர் எண்ணியதுபோல் தோன்றியது.

"கவலைப்படாதீர்கள். நன்றாகப் போர்த்தியிருக்கிறது".

"இல்லை" என்ற உரக்கக் கூவிக் கொண்டே, ஜார்ஜ் பதில் கூறு முன்பே, கம்பளிகளை ஆவேசமாக உதறித் தள்ளி ஒரு கையை உயர்த்தி உத்தரத்தைப் பிடித்துக் கொண்டே, படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தார் அவர் தந்தை.

"என்னைப் போர்த்தி, ஒரேயடியாய் மூடிவிட நீ விரும்புகிறாய். அதை நான் அறிவேன். ஆனால் என்னை மூடுவதற்கு இன்னும் வெகுகாலம் இருக்கிறது. இதுதான் என் உடம்பில் உள்ள கடைசித் துளிப் பலமாயினும், அதைக் கொண்டே நான் உன்னைச் சமாளித்து விடுவேன். உன் நண்பனை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவன் எனக்கு மகனைப்போல் பிறந்திருக்க வேண்டியவன். அதனால்தான் நீ அவனிடம் இவ்வளவு காலமாய் விசுவாசமற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறாய். வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? அவனை நினைத்து நான் அனுதாபப்படவில்லை என்று கருதுகிறாயா? அதனால்தான், அவனுக்குப் பொய்க் கடிதங்கள் எழுதி, ருஷ்யாவுக்கு அனுப்ப, நீ உன் அலுவலக அறையைப் பூட்டிக் கொண்டு, யாரும் உன்னைத் தொந்தரவு செய்யக்கூடாது, நீ முக்கியமான வேலை செய்து கொண்டிருக்கிறாய் என்று நீ மற்றவர்களிடம் கூறவேண்டி ஏற்பட்டது. ஆனால் தன் மகனைப்பற்றிய உண்மையை அறிந்து கொள்ள, நல்ல வேளையாக, ஒரு தந்தைக்குச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. இப்பொழுது அவனைக் கீழே தள்ளி, அவன் மேல் ஏறிச் சவாரி செய்ய முடியுமென்று கண்டு கொண்டபின், என் அருமை மகன் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்துள்ளான்."

தன் தந்தை உருவகப்படுத்திய தன் நண்பனின் கற்பனை உருவத்தை ஜார்ஜ் வெறித்து நோக்கினான். அவன் நண்பனைப் பற்றி இப்பொழுது தந்தைக்கு நினைவு நன்கு வந்திருந்தது. ருஷ்யாவின் பரந்த வெளியில், கொள்ளையடிக்கப்பட்டுக் காலியாயிருந்த ஒரு கிடங்கின் வாசலில், காலிப் பெட்டிகள் இங்குமங்கும் சிதறிக்கிடக்க, நாசத்திற்கு நடுவே, தன் நண்பன் தனியாக நின்று கொண்டிருப்பது போல், தன் கற்பனையில் கண்டான். அவன் ஏன் இவ்வளவு தொலைவில், தூர தேசத்திற்குச் சென்றிருக்க வேண்டும்?

"நான் சொல்வதைக் கவனி," என்று அவன் தந்தை கூவினார். படுக்கையை நோக்கி ஓடிய ஜார்ஜ் நடு வழியில் திகைத்து நின்றான்.

"அந்தப் பெண் தன் பாவாடையைத் தூக்கியவுடன், உனக்குப் புத்தி கிலு கிலுத்து விட்டது", என்று உரக்கக் கத்திய அவன் தந்தை, ஒரு பெண் பாவாடையைத் தூக்குவது போல் பாவனை செய்து காட்டிப் பரிகசித்தார். தம் சட்டையை அவர் உயரத் தூக்கியதும், அவர் தொடையில், போரில் அவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தின் தழும்பு தெரிந்தது. "அவள் பாவாடையைத் தூக்கினாள். அவளுடன் நீ தடையின்றிச் சல்லாபம் செய்ய, உன் அன்னையின் நினைவுக்குத் துரோகம் செய்யவும், உன் நண்பனுக்குத் துரோகம் செய்யவும், உன் தந்தையை அசையமுடியாமல் படுக்கையில் கிடத்தி அழுத்தவும், நீ துணிந்து விட்டாய். ஆனால் உன் தந்தையை யாரும் அழுத்தி வைக்க முடியாது. முடியுமா, என்ன?"

தன் மகனின் உதவி இல்லாமலே, அவர் படுக்கையிலிருந்து எழுந்து நின்று, கால்களை உதறினார், உண்மையை உணர்ந்து விட்டது போன்ற அகத்தெளிவினால், அவர் முகத்தில் புதியதோர் ஒளி வீசியது.

தன் தந்தையிடமிருந்து ஒதுங்கி, ஜார்ஜ் ஒரு மூலையில் பதுங்கினான். திடீரென்று தன்னைத் தாக்கிவிடவோ, பின்புறமிருந்தோ, மேலிருந்தோ தன்மேல் பாய்ந்து விடவோ, இடம் தரக்கூடாதென்ற கவலையில், ஜார்ஜ், ஒவ்வோர் அங்க அசைவையும் எச்சரிக்கையாகக் கவனிக்கத் தன்னைப் பழக்கிக் கொள்ள வேண்டுமென்று நீண்ட நாட்களுக்கு முன் முடிவு செய்திருந்தான். ஆனால் அந்த நிமிடத்தில், நீண்ட நாட்களுக்கு முன் செய்திருந்த முடிவை சிறு நூலைக் கோப்பது போல், அதை மறந்து விட்டான்.

ஆனால் உண்மையில் உன் நண்பனுக்குத் துரோகம் இழைக்கப் படவில்லை. அவனுக்குப் பதிலாக, இங்கு நான் இருக்கின்றேன்," என்று அவன் தந்தை கூவிக் கொண்டே, அதை வலியுறுத்துவது போல், ஆள் காட்டி விரலை ஆவேசமாகக் குத்திக் காட்டினார்.

"கோமாளி போல் பேசுகிறீர்களே," என்று தன்னை அறியாமலே ஜார்ஜ் கூறினான். மறு நிமிடமே அச்சொற்களினால் விளைந்த தீமையை உணர்ந்து, சொற்களை அடக்கித் தன் நாக்கைக் கடித்துக் கொண்டு, வெறித்துப் பார்த்தான். அந்த வேதனையில் அவன் முழங்கால்கள் தள்ளாடின.

"ஆம். நான் கோமாளிக் கூத்து தான் ஆடுகிறேன். கோமாளி எவ்வளவு நல்ல சொல் அது! மனைவியை இழந்த ஏழைக் கிழவனுக்குக் கோமாளிக் கூத்தைத் தவிர வேறென்ன ஆறுதல்

இருக்கும்? பதில் சொல். பதில் சொல்லும் வரை, நீ என் மகனுக உயிர்வாழ். விசுவாசமில்லாத ஊழியரால் அலக்கழிக்கப்பட்டு, தோல் சுருங்கி உடல் வற்றிப் பின்புற அறையில் கிடக்கும் எனக்கு வேறு என்ன எஞ்சி இருக்கிறது? என் மகனே, நான் தொடங்கித் தந்த வியாபார ஒப்பந்தங்களைச் செய்து முடித்து, ஏதோ பெரிய சாதனையைச் செய்து விட்டது போல் எக்காள மிட்டுக் கம்பீர நடைபோட்டு, கண்ணியமிக்க வர்த்தகப் பிரமுகர் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டுத் தன் தந்தையிடமிருந்து ஒதுங்கித் தூரச் செல்கிறாய். நீ என்னைப் புறக்கணித்து நிராகரித்தாய். நான் உன் மேல் அன்பு வைக்க முடியாதென்று எண்ணி விட்டாயா?"

இப்பொழுது தன் தந்தை முன்னால் சாய்வார் என்று ஜார்ஜ் எதிர்பார்த்தான். சாயும் நேரத்தில் கீழே விழுந்து, அழிந்து போக மாட்டாரா? அந்த எண்ணம், உருவாகாத சொற்களாய், அவன் உள்ளத்தில் சீறியது.

அவன் தந்தை முன்பக்கம் சாய்ந்தார்; ஆனால் கவிழ்ந்து விழவில்லை. தான் எதிர்பார்த்தது போல், ஜார்ஜ் தன்னருகே வராததால், அவர் மீண்டும் நிமிர்ந்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டார்.

"நீ அங்கேயே நில். உன் உதவி எனக்குத் தேவையில்லை. என்னருகே வருவதற்கு வேண்டிய பலம் உன்னிடம் உள்ளதென்றும், நீயாக விரும்பிப் பின்னால் நிற்கின்றாய் என்றும் எண்ணிக் கொள்கிறாய். உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே. நம் இரண்டு பேரில் எனக்குத் தான் இன்னும் அதிக பலம் இருக்கிறது. எனக்கு மட்டும் தனியாக அவ்வளவு பலம் இருந்திருக்காது. ஆனால் உன் அன்னை, தன் பலத்தையும் எனக்கு விட்டுச் சென்றுள்ளாள். உன் நண்பனுடன் நானே நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளேன். உன்னுடன் வியாபாரம் செய்ய வருபவர்கள் எல்லோரையும் என் பைக்குள் போட்டு வைத்துள்ளேன்."

"அவர் தம் சட்டையில் கூட நிறையப் பைகள் வைத்திருக்கிறார்," என்று தனக்குள்ளாகவே ஜார்ஜ் ஏளனமாகக் கூறிக் கொண்டான். அந்தக் கேலிச் சொல்லிலே அவரை உலகின் கண் முன் ஏளனம் செய்து விட முடியுமென்று அவன் நம்பினான். ஆனால் ஒரு கணம் தான் அந்த எண்ணம் அவனுக்குத் தோன்றியது. அவன் மனத்தில் ஒரு கணம் தோன்றிய எண்ணங்களை, மறு கணமே அவன் மறந்து விடுவான்.

"நீ மட்டும் உன் மணப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு, என்வழியில் குறுக்கிட்டுப் பார்," என்று அவன் தந்தை சீறினார்.

தந்தை சொல்லை நம்பாதது போல், அவன் முகத்தைச் சற்றுச் சுழித்தான். தம் எச்சரிக்கையை வலியுறுத்துவது போல், அவர், ஜார்ஜ் நின்ற மூலையை நோக்கித் தம் தலையை லேகமாக ஆட்டினர்.

"உன் திருமணம் பற்றி உன் நண்பனுக்கு எழுதலாமா என்று நீ கேட்க வந்தது பெரிய வேடிக்கை தான். மடப்பையனே, அவனுக்கு அது பற்றிய எல்லா விவரங்களும் ஏற்கெனவே தெரியும். நான் அவனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டு தானிருக்கிறேன். நீ தான் எழுதுகருவிகளை என்னிடமிருந்து எடுத்து ஒளித்து வைக்க மறந்து விட்டாயே. உனக்கே தெரிவதை விட நூறு மடங்கு தெளிவாக அவனுக்கு எல்லா விவரங்களும் தெரியும். அதனால் தான் அவன் இங்கு பல வருடங்களாக வருவதில்லை. தன் வலது கையால் அவன் என் கடிதங்களை பிரித்துப் படிக்கின்ற அதே நேரத்தில், இடது கையால் உன் கடிதங்களைப் பிரிக்காமலே கசக்கி எறிவான்."

தம் உற்சாகத்தில், அவர், தம் கையைத் தலைக்கு மேல் உயர்த்தி ஆட்டினர்.

"அவனுக்கு, உன்னைவிட, ஆயிரம் மடங்கு தெளிவாக அனைத்தும் தெரியும்", என்று அவர் கத்தினர்.

"பத்தாயிரம் மடங்கு தெரியட்டுமே", என்று கூறி ஜார்ஜ் தன் தந்தையை நையாண்டி செய்ய நினைத்தான். ஆனால் அச்சொற்கள் அவன் வாயிலிருந்து வெளிவந்த விதத்தில், கேலி மறைந்து விட்டது.

"நீ இதுபோன்ற கேள்வியைக் கேட்க வேண்டுமென்று நான் பல ஆண்டுகளாகக் காத்திருந்தேன், தெரியுமா? நான் வேறெதையும் பற்றிக் கவலைப்படுகிறேன் என்று நினைக்கின்றாயா? நான் பத்திரிகைகள் படிக்கின்றேனா? பார்", என்று கூவிக் கொண்டே, படுக்கையில் எப்படியோ வந்து கிடந்த பத்திரிகை ஒன்றை அவர் ஜார்ஜ் முன் வீசினர். அது ஒரு பழைய பத்திரிகை; அதன் பெயர் கூட ஜார்ஜுக்குப் புதிதாக இருந்தது.

"உன் புத்தி வளர்வதற்குத்தான் எவ்வளவு காலமாயிற்று! அந்த நன்னாளைப் பார்க்காமலே உன் அன்னை இறந்துவிட வேண்டியதாயிற்று. உன் நண்பன் ருஷ்யாவில் நாசமாய்ப் போய்க் கொண்டிருக்கிறான். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அவன் பயந்து செத்துக் கொண்டிருந்தான். என்னைப் பொறுத்த வரையிலோ, நான் என்ன நிலையில் இருக்கிறேன் என்பது

உனக்குத் தெரியும். அதைப் பார்க்க உனக்குக் கண்கள் இருக்குமே."

"ஆகவே என் மேல் பாய நீங்கள் காத்துக் கொண்டிருந்தீர்கள் என்று கூறுங்கள்", என்று ஜார்ஜ் கூவினான்.

அவன் தந்தை, அவன் மேல் இரக்கப்படுவதுபோல் கூறினார். "அதை முன்பே சொல்ல வேண்டுமென்று நீ நினைத்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது அதைப் பற்றிக் கவலையில்லை". உரத்த குரலில் அவர் மேலும் கூறினார்: "இதுவரை உலகில் உனக்கு உன்னைப் பற்றித்தான் தெரியும். இப்பொழுது, உலகில் உன்னைத் தவிர என்ன இருக்கிறது என்பதை நீ அறிந்து கொண்டிருப்பாய். இதுவரை, நீ ஒன்றுமறியாப் பேதைக் குழந்தை; அது மட்டுமல்ல, உண்மையில் நீ மனிதப் பிசாசாகவே இருந்திருக்கின்றாய். ஆகவே இதை நீ மனதிற் கொள். நீரில் மூழ்கி நீ சாகக் கடவாய் என்று தீர்ப்புக் கூறுகிறேன்."

அறையை விட்டு வெளியே ஓடவேண்டுமென்று ஜார்ஜுக்குத் தோன்றியது. அவன் ஓடிய நேரத்திலேயே, அவனுக்குப் பின்னால் படுக்கையின் மீது தொப்பென்று அவன் தந்தை விழுந்த ஓசை கேட்டது. சரிந்த மாடிப் படிகளில் சருக்கி விழுவதுபோல், அவன் வேகமாகக் கீழே வந்தபோது, வீட்டு வேலைக்காரி மாடி அறையைச் சுத்தப்படுத்த மேலே போய்க் கொண்டிருந்ததைக் கண்டான். அந்த அதிர்ச்சியில் 'ஏசு சாமி' என்று அவள் கூவித் தன் முகத்தை முகப்புத் துண்டில் மூடிக் கொண்டாள். ஆனால் அதற்குள் அவன் போய்விட்டான். முன் வாயில் வழியாக, தெருவைத் தாண்டி, நீரை நோக்கி உந்தப்பட்டு அவன் ஓடினான். பசியால் வாடுபவன் உணவை ஆவலுடன் பற்றிக் கொள்வது போல், பாலத்துக் கைப்பிடிக் கம்பியை அவன் பற்றினான். தன் இளம் பருவத்தில் அவன் உடற்பயிற்சி வித்தைகளில் தேர்ச்சி பெற்றிருந்ததைக் கண்டு, அவன் பெற்றோர்கள் பெருமிதம் கொண்டதுண்டு. அதே பாணியில் அவன் கம்பி மீது தாவி, நீரை நோக்கித் தொங்கினான். கைப்பிடி தளர அவன் தொங்கிக் கொண்டிருந்த நேரத்தில், பஸ் ஒன்று பாலத்தை நோக்கி வருவதைக் கம்பி வழியாகப் பார்த்தான். பஸ் சத்தத்தில், அவன் நீருக்குள் விழும் சத்தம் அமுங்கி விடும். "அருமைப் பெற்றோர்களே, என்ன இருந்தாலும், உங்கள் மேல் எனக்கு எப்பொழுதும் அளவற்ற அன்பு உண்டு", என்று தாழ்ந்த குரலில் கூறியவாறு, பிடியைத் தளர்த்திக் கீழே பாய்ந்தான்.

அந்த நேரத்தில், பாலத்தின் மேல், வாகனங்களும் வண்டிகளும் முடிவற்ற பவனியில் சென்று கொண்டிருந்தன.

வழக்கு

காப்காவின் புதினமான 'வழக்கு', ஜெர்மன் மூலத்தில், அவர் மரணத்திற்குப் பின், 1925இல் வெளியிடப்பட்டது. அவருடைய நண்பர் மார்க்ஸ் பிரோட் அதைப் பதிப்பித்தார். அப்புதினம் முடிவு பெறவில்லை; ஆனால் எழுதாமல் எஞ்சியது, கடைசி அதிகாரமல்ல. வங்கியில் எழுத்தராகப் பணியாற்றும் ஜோசப் கே., தானறிந்த வரை குற்றம் எதுவும் செய்யாத போதிலும் கைது செய்யப் படுகிறான். கைதுக்குக் காரணம் அவனுக்குத் தெரிவிக்கப்பட வில்லை. அவனுடைய நடமாட்ட சுதந்திரமும் தடை செய்யப்பட வில்லை. அவனை விசாரிக்கும் நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை வேறு உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்யமுடியாது. அத்தகைய மன்றம் முன் விசாரணைக்கு வர அவன் ஒப்புகின்றான். அதற்கு மேல் உயர்நீதி மன்றம் இருப்பது அவனைப் பொறுத்த மட்டிலும் தெரியாதது. தான் குற்றம் செய்யவில்லை என்று மறுப்பதுடன், நீதிமன்ற அதிகாரிகளையே தாக்கி, அவர்கள் மீது குற்றம் சாட்டு கின்றான். ஆனால் போகப் போக அவனுக்கு ஐயப்பாடுகளும் ஏக்கமும் வலுக்கின்றன. இறுதியில் அவன் தீர்ப்பு பெறவில்லை. நீதிமன்றக் கையாட்கள் இருவரால் அவன் கொல்லப்படுகின்றான். இந்தப் புதினத்துக்கு அடிக்கடி மேல்வாரியான விளக்கம் தரப்பட்டு, எதேச்சாதிகார அரசின் கீழ் தனி மனிதன், கதியற்று, உரிமையற்று வாழும் நிலையைச் சித்திரிப்பதாகக் கொள்ளப்படுகிறது. தெய்வீகத் தீர்ப்பின் சித்திரமென்று இதற்குத் தரப்படும் வேறெரு விளக்கமும் பொருத்தமற்றதே. தன்னைத் தானே அறிந்து கொண்டு, தனக்கு நியாயம் காண, ஜோசப் கே. விசாரணைக்கு ஆளாகின்றார். ஆனால் இதில் அவர் தோல்வி அடைகிறார். மனிதப் பிறவியின் உள்ளார்ந்த இயல்பாக அவனுடைய குற்ற உணர்வுக்கு விளக்கம் கூற முடியும். தனக்குப் பலன் கிட்டினால்தான் மற்றவர்களுடன் உறவு கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில், அவன் மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்த நிலையிலிருந்து, இந்தக் குற்ற உணர்வு தோன்றி யிருக்கவும் கூடும். விசாரணையை ஏற்றுக்கொள்ள இசைந்த பின், அவன் எதிர்வழக்காடிய முறையிலிருந்து இக்குற்ற உணர்வு ஏற்பட்டது என்றும் விளக்கம் கூறலாம். நாவலின் இரண்டாம் பிரிவிலிருந்து இங்கு தரப்பட்டுள்ள முக்கிய பகுதி, நீதி மன்றத்தின் உறுப்பினரில் ஒருவரான பாதிரியாருடன் ஜோசப் நடத்தும் உரையாடலைச் சித்திரிக்கின்றது. இப்பகுதியிலும், குறிப்பாகச் சட்டத்தைச் சந்திக்க விரும்பும் மனிதனின் கதையிலும், புதினத் தின் சாரம் அடங்கியுள்ளது என்று கூறலாம். ஆனால் அதுவும் முழுமையான விளக்கம் ஆகாது. சட்டத்தைப் பற்றிய உருவகக் கதை குறித்தே, நீண்டதோர் உரையாடல் தொடர்கிறது. ஆனால்

சட்டத்தின் உட்பொருளை அது தெளிவாக விளக்கவில்லை என்றே கூறவேண்டும்.

"நீர் ஜோசப் கே. தானே?" என்று பாதிரி கேட்டார், கைப் பிடித் தூணிலிருந்து தம் கையை உயர்த்திக் கொண்டே. "ஆம்" என்று கே. பதிலளித்தான். தன் பெயரை எவ்வளவு உற்சாக மாக முன்பெல்லாம் கூறுவான் என்பதையும் அண்மையில் தன் பெயர் தனக்கு எவ்வளவு பெரிய சுமையாகி விட்டது என்பதை யும் அவன் தனக்குள்ளாக எண்ணிக் கொண்டான். இப்பொழு தெல்லாம் தனக்கு அறிமுகமில்லாத பலரும் தன் பெயரைத் தெரிந்து கொண்டிருந்தனர். அடையாளம் கண்டுபிடிக்கப் படுமுன், தன்னை அறிமுகம் செய்துகொள்ள வேண்டுமென்ற நிலை இருந்தால், எவ்வவவு நன்றாக இருக்கும்? "நீர் குற்றம் சாட்டப்பட்டவர்", என்று பாதிரி தாழ்ந்த குரலில் கூறினார் "ஆம்: அவ்வாறுதான் என்னிடம் சொன்னார்கள்", என்று கே. கூறினான். "ஆப்படியானால், நான் சேருகின்ற மனிதர் நீர்தான்: நான் இந்தச் சிறையின் பாதிரி", என்றார் அவர். 'அப்படியா?' என்றான் கே. "ஆம். உம்முடன் பேசவேண்டும் என்பதற்காகத் தான் உம்மை இங்கு அழைத்து வரச் சொன்னேன்". "அது எனக்குத் தெரியாதே. இத்தாலியர் ஒருவருக்குத் திருக்கோயிலைச் சுற்றிக் காட்ட நான் இங்கு வந்தேன்", என்று கே. கூறினான். "அது முக்கியமல்ல. உம் கையில் இருப்பது என்ன? வழிபாட்டு நூலா?", என்று பாதிரி கேட்டார். "இல்லை. ஊரில் பயணிகள் பார்க்க வேண்டிய காட்சிகளின் படங்கள்", என்று கே. கூறினான். "அதைக் கீழே வை", என்றார் பாதிரி. கே. அதை வேகமாக வீசி எறிந்தான். புத்தகம் தரையில் சிறிது தூரம் சருக்கித் திறந்த பக்கங்களுடன் அலங்கோலமாக விழுந்தது. "உம்முடைய வழக்கு விசாரணை உமக்குப் பாதகமாகச் சென்று கொண்டிருப்பது உமக்குத் தெரியுமா?", என்று பாதிரி கேட்டார். "அப்படித் தான் நானும் நினைக்கிறேன். என்னால் இயன்றதைச் செய்துள்ளேன். ஆனால் இது வரை பலன் கிட்டவில்லை. என்னுடைய முதல் விண்ணப்ப மனு இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை," என்று அவன் கூறினான். "விசாரணை எப்படி முடியும் என்று நீ நினைக்கின்றாய்?", என்று பாதிரி கேட்டார். "எல்லாம் நன்றாக முடியுமென்று தான் முதலில் எண்ணினேன். ஆனால் இப்பொழுது அடிக்கடி எனக்கு ஐயங்கள் எழுகின்றன. எப்படி முடியும் என்று எனக்குத் தெரி வில்லை. உங்களுக்குத் தெரியுமா?", என்று கே. பதிலுக்குக் கேட்டான். "எனக்குத் தெரியாது. ஆனால் பாதகமாக முடியு மென்று தான் அஞ்சுகிறேன். நீ குற்றவாளி என்று தீர்ப்பு கூறப் படும். கீழ்க் கோர்ட்டைத் தாண்டி உன் வழக்கு அதிகமாச் செல்லாது. உன் குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதுதான்

தற்போது முடிவு", என்று பாதிரி கூறினர். 'ஆனால் நான் குற்ற வாளியல்ல. தவருன எண்ணத்தால் ஏற்பட்ட குழப்பம் இது. அப்படியே பார்த்தாலும், குற்றவாளி என்று ஒரு மனிதனைப்பற்றி எப்படித் தீர்ப்பு கூறமுடியும். இங்கு நாம் அனைவரும் மனிதர்கள் தான்; ஒருவனை விட மற்றவன் குறைந்த மனிதனல்ல," என்ருன் கே. "அது உண்மைதான். ஆனால் அது குற்றவாளிகள் பேசும் பேச்சு," என்ருர் பாதிரி. "உமக்கும் என்மேல் காழ்ப்பு உண்டா?" "இல்லை. உன் மேல் எனக்குத் துவேஷம் கிடையாது." அதற்கு நன்றி. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருமே என் மேல் துவேஷம் கொண்டிருக்கிருர்கள். வெளியார் மனத்தையும் அவர்கள் மாற்றி விடுகிருர்கள். என் நிலை நாளுக்கு நாள் கடின மாகி வருகிறது," என்ருன் கே. "வழக்கு விவரங்களை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தீர்ப்பு, திடீரென முடிவு செய்யப்படுவ தல்ல. விசாரணையின் போக்கிலிருந்து தீர்ப்பு உருவாகிறது," என்று பாதிரி விளக்கினர். "அப்படியா," என்று கூறி கே. தலை குனிந்தான். "அடுத்த நடவடிக்கை என்ன எடுக்கப் போகின்ருய்?" என்று பாதிரி கேட்டார். "பிறர் உதவியை நாடப் போகிறேன். நான் புதிய முயற்சிகள் மேற்கொள்ள இன்னும் பல வாய்ப்புகள் இருக்கின்றன," என்று கே. கூறியவாறே, தான் சொல்வது பாதிரியாருக்கு எப்படிப் படுகின்றது என்றறிய அவர் முகத்தை நோக்கினன். "அயலார் உதவியை, அதிலும் குறிப்பாகப் பெண்கள் உதவியை நீ அதிகம் நாடுகிருய். அது சரியான முயற்சியல்ல என்பது உனக்குத் தெரியவில்லையா?" என்று பாதிரியார் கடிந்து கொண்டார். "நீங்கள் சொல்வதைப் பெரும் பாலும் ஒத்துக் கொள்கிறேன். ஆயினும் பெண்களுக்கு அதிகச் செல்வாக்கு இருக்கிறது. எனக்குத் தெரிந்த சில பெண்களின் ஆதரவை நான் வெற்றி பெறுவேன் என்பதில் ஐயமில்லை. அதிலும் குறிப்பாக, இந்த நீதி மன்றத்தில் உள்ளவர்கள் அனை வருமே பெண் வேட்டை ஆடுபவர்கள். விசாரணை நீதிபதி தூரத் தில் ஒரு பெண்ணைப் பார்த்தால் போதும். அவளை எட்டிப் பிடிக்கும் ஆர்வத்தில், நீதிபதி, தன் மேசையில் தடுக்கி விழுந்துப் பிரதிவாதியையும் தள்ளிவிட்டு, அந்த பெண்ணை நெருங்க முயல் கிறர்." பாதிரி தலை மேலிருந்த படுதா அவருக்குத் தாங்க முடியாத சுமையாகத் தோன்றியது. பகல் வெளிச்சம் அடியோடு மறைந்து, இரவின் இருள் சூழ்ந்தது. பெரிய சாளரத்தின் கண்ணுடி வழியாய் வந்த சிறு வெளிச்சம், இருட்டைப் போக்க முடியவில்லை. அதே நேரத்தில் திருச்சபைப் பணியாளர், வழி பாட்டுப் பீடத்தில், ஒவ்வொன்றாக மெழுகு வத்திகளை ஏற்றி வைத்தார். "என்மேல் உங்களுக்குக் கோபமா? நீதி மன்றத்தின் தன்மையை நீங்கள் இன்னும் உணராமல் இருக்கக் கூடு

மல்லவா?'' என்று கே. கேட்டான். பாதிரியிடமிருந்து பதில் இல்லை. ''இவையெல்லாம் என் சொந்த அனுபவங்கள்,'' என்று கே. வற்புறுத்திச் சொன்னான். அதற்கும் பதில் இல்லை. ''நான் உங்களை அவமானப் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பேச வில்லை,'' என்றான் கே. அப்பொழுது தான், ''உனக்கு ஒன்றுமே புரியாதா?'' என்று கோபத்துடன் பாதிரி கூவினார். அதில் ஆத்திரம் தொனித்த அதே நேரத்தில், மீண்டுமொரு முறை வீழ்ச்சியைக் காண்கிற ஒருவர் அடையும் அதிர்ச்சியும் அதில் எதிரொலித்தது.

இருவரும் நீண்ட நேரம் பேசாமலிருந்தனர். சூழ்ந்திருந்த இருளில் கே. யின் முகம் பாதிரிக்குத் தெரியவில்லை. ஆனால் சிறிய விளக்கு வெளிச்சத்தில் கே. வுக்குப் பாதிரியின் முகம் தெளிவாகத் தெரிந்தது. அவர் உபதேச மேடையிலிருந்து ஏன் கீழே இறங்கி வரவில்லை? அவர் உபதேசம் ஒன்றும் செய்ய வில்லை, சில தகவல்களை மட்டும் கே. வுக்குச் சொல்லியிருந்தார். சிந்தித்துப் பார்த்தால், அத் தகவல்களால் கே. வுக்கு நன்மை ஏற்படுவதைக் காட்டிலும் தீமை தான் அதிகம் ஏற்படக்கூடும். ஆனாலும் பாதிரியார் நல்லெண்ணத்துடன் தான் பேசினார் என் பதில் கே. வுக்கு ஐயமில்லை. பாதிரியார் மட்டும் உபதேச மேடையை விட்டுக் கீழே இறங்கினால், அவருடன் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொள்வது அசாத்தியமல்ல என்று அவனுக்குத் தோன்றியது. வழக்கு விசாரணையில் மாற்றம் உண்டாக்க முயலாமல், வழக்கு விசாரணையையே தவிர்த்து, நீதிமன்றத்தின் ஆளுகைக்கு அப்பாற்பட்டு வாழ, பாதிரியாரிடமி ருந்து, உருவான, உசிதமான, ஆலோசனைகள் பெற முடியு மென்று அவனுக்குத் தோன்றியது. அவ்வாறு வாழ ஒரு வழி இருக்க வேண்டுமென அவனுக்குப் பட்டது. அண்மையில் அவன் அது பற்றி அதிகம் சிந்தித்ததுண்டு. அத்தகைய வழி பாதிரி யாருக்குத் தெரிந்திருந்தால், அவரை வேண்டிக் கொண்டால், அவர் அது பற்றிச் சொல்லக்கூடும். பாதிரியாரும் நீதிமன்றம் தனக்கு இயல்பான மிதமான தன்மையை மறந்து விட்டு, கே. யைச் சத்தம் போட்டுத் தள்ளி விட்டது என்பது பாதிரியா ருக்குத் தெரிந்தவுடன், அவர் அவனுக்கு உதவ முன்வரக்கூடும்.

''நீங்கள் கீழே இறங்கி இங்கு வரக்கூடாதா? எனக்கு நீங்கள் உபதேசம் செய்யத் தேவையில்லையே. என்னருகே இங்கு வாருங்கள்,'' என்று கே. யோசனை கூறினான். ''இப்பொழுது நான் கீழே வரலாம், முதலில் தூரத்திலிருந்து நான் உன்னிடம் பேச வேண்டியிருந்தது. இல்லாவிடில், என் மனம் மாறவும் நான் என் கடமையை மறக்கவும் இடம் ஏற்பட்டிருக்கக் கூடும்.'' இவ்வாறு

கூறிக் கொண்டே விளக்கைச் சங்கிலியிலிருந்து பாதிரியார் கழற்றினர்.

அவர் வருவதற்காகப் படிக்கட்டு அடியில், கே. காத்து நின்றான். பாதிவழி இறங்கி வரும்போதே பாதிரியார் கே.யை நோக்கித் தன் கையை நீட்டினார். "எனக்காகச் சிறிது நேரம் ஒதுக்க முடியுமா? என்று கே. கேட்டான். "எவ்வளவு நேரம் உனக்கு வேண்டுமோ, அவ்வளவும் தரத் தயார்", என்று கூறிய பாதிரி, சிறிய விளக்கைக் கே. யின் கையில் கொடுத்தார். தன்னருகில் நின்றபோது கூடப் பாதிரியின் முகத்தில் ஒருவிதப் புனித கம்பீரம் காணப்பட்டது. "நீங்கள் என்னிடம் அதிக இரக்கம் காட்டுகின்றீர்கள்", என்று கே. கூறினான். இருட்டியிருந்த கோயில் பாதையில் இருவரும் ஒன்றாகச் சிறிது நேரம் முன்னும் பின்னும் நடந்தனர். "நீதி மன்றத்தைச் சேர்ந்த மற்றவர்கள் போல் நீங்கள் இல்லை. மற்றவர்களைக் காட்டிலும் உங்களிடம் என்னால் நம்பிக்கை வைக்கமுடிகிறது. அவர்களில் பலரை எனக்குத் தெரியும். ஆனால் உங்களிடம்தான் மனம் விட்டுப் பேச முடிகிறது," என்றான் கே. "உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே," என்று பாதிரி கூறினார். "எப்படி என்னை ஏமாற்றிக் கொள்கிறேன்?", என்று கே. கேட்டான். பாதிரி விளக்கிச் சொன்னார்: "நீதிமன்றங்களைப் பற்றி நீ தவறான எண்ணம் கொண்டிருக்கிறாய். சட்டத்துக்கு இயற்றப்பட்டுள்ள பீடிகையில், அத்தவறான எண்ணம் பற்றி இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது: சட்டத்தின் வாயிலில் ஒரு வாயிலோன் காவல் காத்து நிற்கின்றான். கிராமப் புறத்திலிருந்து ஒருவன் இந்த வாயிலோனை அணுகி, சட்டத்தின் அவைக்குள் நுழைய வேண்டுமென அனுமதி கோருகின்றான். அப்பொழுது அனுமதிப்பதற்கில்லை என்று வாயிலோன் கூறுகிறான். பிறகாவது தான் அனுமதிக்கப்படுவானா என்று வந்தவன், சிறிதுநேரம் சிந்தித்து விட்டு வற்புறுத்திக் கேட்கின்றான். பிறகு "அனுமதிக்கக் கூடும். ஆனால் இந்நிமிடம் அனுமதி கிடையாது," என்று வாயிலோன் கூறுகின்றான். சட்டத்தின் சன்னிதானக் கதவு திறந்திருக்கின்றது. வாயிலோன் ஒருபுறம் ஒதுங்கி நிற்கின்றான். வந்தவன் குனிந்து வாசல் வழியாக எட்டிப் பார்க்கின்றான். அதை வாயிலோன் பார்த்தபோது, சிரித்துக் கொண்டே கூறுகின்றான்: "அவ்வளவு ஆவல் இருந்தால், என் அனுமதி இல்லாமலே உள்ளே நுழைய நீ முயலலாம். ஆனால் எனக்கு அதிக அதிகாரம் உண்டு என்பதை மனதிற்கொள். இங்குள்ள வரில் நான்தான் கடைநிலைப் பணியாளன். ஒவ்வொரு மண்டபத்தின் வாயிலிலும், ஒரு வாயிலோன் நிற்பான். உள்ளே செல்லச் செல்ல, அவர்கள் அதிகாரமும் உயரும். மூன்றாவது

வாயிலோனைப் பார்ப்பதற்கே, எனக்கே பயங்கரமாக இருக்கும். இவ்வளவு சிரமங்கள் இருக்குமென்று, கிராமப் புறத்திலிருந்து வந்தவன் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் எந்நேரத்திலும் எளிதாகச் சட்டத்தின் சன்னிதானத்திற்குள் செல்ல வசதியிருக்க வேண்டுமென்று அவன் எண்ணுகிறான். பெரிய கூர்மையான மூக்கும், நீண்ட, மெல்லிய தாடியும் கொண்டு, கம்பளி அங்கி அணிந்துள்ள வாயிலோனை உற்றுப் பார்த்ததும் அவன் அனுமதியைப் பெற்றபின் உள்ளே செல்வது நல்லது என்று அவன் தீர்மானிக்கின்றான். வாயிலோன் ஒரு மூக்காலியை எடுத்துப் போட்டுக் கதவின் ஓரத்தில் உட்காருமாறு அவனிடம் செல்கிறான். அங்கே அவன் பல நாட்களாக, ஆண்டுக்கணக்கில், உட்கார்ந்து காத்துக் கொண்டிருக்கிறான். உள்ளே செல்ல அனுமதி கோரிப் பலமுறை மன்றாடுகின்றான். அவன் ஓயாமல் கொஞ்சுவதில், வாயிலோனுக்கே சலிப்பு ஏற்படுகிறது. அவ்வப்போது வாயிலோன், அவனுடன் சிறிது உரையாடுவான். அவன் குடும்பத்தையும் மற்ற விவகாரங்களைப் பற்றியும் வாயிலோன் கேள்வி கேட்பான். ஆனால் பதில்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல், பெரும் போக்காகவும் துச்சமாகவும் கேள்வி கேட்கும் பெரிய மனிதர்கள்போல் கேள்வி கேட்பான். முடிவில் அவனை இன்னும்உள்ளே அனுமதிப்பதற்கில்லை என்று வாயிலோன் மீண்டும் கூறுவான். தன் பயணத்திற்காக மதிப்பு மிக்க பொருட்களைக் கொண்டு வந்திருந்த கிராமப்புறத்தான், வாயிலோன் தயவை நாடும் நோக்கத்துடன், ஒவ்வொன்றாக அவற்றை அவனுக்கு அன்பளிப்பாய்க் கொடுப்பான். "உன் முயற்சியில் குறை எதுவும் வைத்தாய் என்று நீ நினைக்காமல் இருப்பதற்காகத்தான், நான் இப் பொருட்களை ஏற்றுக் கொள்கிறேன்", என்ற விளக்கத்துடன் ஒவ்வோர் அன்பளிப்பையும் வாயிலோன் ஏற்றுக் கொண்டான். அத்தனை ஆண்டுகளாகக் கிராமப்புறத்தான் அந்த வாயிலோனையே இடைவிடாது பார்த்துக் கொண்டிருக்கிறான், மற்ற வாயிலோன்கள் பற்றி மறந்துவிடுகிறான். இவன் ஒருவனே தனக்கும் சட்டத்தின் சன்னிதானத்திற்கும் இடையே குறுக்கே நிற்பவன் என்று எண்ணுகிறான். முதல் சில ஆண்டுகளில், தன் விதியை நொந்து, உரக்க அங்காலாய்க்கின்றான். வயதாக ஆகத் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொள்கிறான். சிறு பிள்ளைத்தனம் அவனை மீண்டும் பற்றுகிறது. ஓயாமல் வாயிலோனையே கவனித்துக் கொண்டிருப்பதால், அவன் அங்கியில் மொய்க்கும் ஈ, எறும்பு, பூச்சிகளைக் கூட, தனக்கு உதவி செய்யுமாறும், வாயிலோன் மனத்தை மாற்றத் தன் சார்பில் வாதாடுமாறும், மன்றாடுகிறான். இறுதியில் அவன் கண்கள் மங்குகின்றன. உண்மையில் வெளியுலகம் இருண்டு

விட்டதா, அல்லது தன் கண்கள் தன்னை ஏமாற்றுகின்றனவா, என்பதுகூட அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அந்த இருளையும் கிழித்துக் கொண்டு, சட்டத்தின் சன்னிதானத்திலிருந்து அமர ஒளி வீசுவதைக் காண்கிறான். அவன் வாழ்க்கை இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சாவதற்கு முன், வாழ்வில் அவன் அனுபவித்த தெல்லாம், திரண்டு, ஒரே கேள்வியாக உருவாகின்றது. அந்தக் கேள்வியை வாயிலோனிடம் அவன் கேட்டதில்லை. முடங்கிவிட்ட தன் உடலைத் தாங்கிக் கொண்டு வாயிலோனை அழைக்கின்றான். பெருத்த உருவம் கொண்ட வாயிலோனுக்கும் குறுகி நறுங்கியுள்ள கிராமப் புறத்தானுக்கும் உருவத்தில் இருந்த வேறுபாடு முன்னிலும் பெருகியுள்ளது. அவன் சொல்வதைக் கேட்க வாயிலோன் குனிய வேண்டியிருக்கிறது. 'உன்னைத் திருப்தி படுத்தவே முடியாது போல் இருக்கிறதே. உனக்கு இப்பொழுது என்ன வேண்டும்?' என்று வாயிலோன் கேட்கிறான். 'சட்டத்தின் சன்னிதானத்திற்குள் நுழைய ஒவ்வொருவரும் பாடுபடுவார்களே. அப்படியிருக்க, இத்தனை ஆண்டுகளாய், உள்ளே நுழைய அனுமதிகோரி, என்னைத் தவிர ஒருவரும் வராதது ஏன்?' என்று அவன் கேட்கிறான். அவன் இறுதிக் கட்டத்தில் இருப்பதையும், கேள்வி மங்கிவிட்டதையும் உணர்ந்த வாயிலோன், அவன் காதில் உரக்கக் கூவுகின்றான். 'உன்னைத் தவிர வேறு யாரும் இக்கதவு வழியாக உள்ளே நுழைய முடியாது. உனக்காக மட்டுமே இக்கதவு அமைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது கதவை மூடப் போகின்றேன்.'

கோட்ஃப்ரீட் பென்

கவிகள் உலகை மாற்ற இயலுமா?

வானொலி உரையாடல்

கோட்ஃபிரீட் பென் (1886–1956) பெர்லினில் மருத்துவராகப் பணி பாற்றியவர். உலகப் போர்கள் இரண்டிலும் இராணுவ மருத்துவ ராகத் தொண்டாற்றியவர். சீர்திருத்தம் செய்யக்கூடிய ஆன்மீக சக்தியாக, நேஷனல் சோஷலித்தை அவர் முதலில் வரவேற்றார். ஆனால் தாம் எண்ணியது தவறு என்பதை விரைவில் உணர்ந்தார். தொடக்கத்தில் பென் எழுதிய கவிதைகள் மனித வாழ்வின் அருவருக்கத் தக்க, அவலமான, அம்சங்களை, உள்ளதை உள்ள வாறே பயங்கர நிலையில் சித்திரித்து, எதிலும் நம்பிக்கை கொள் ளாத இன்மைக் கொள்கையில் (nihilism) ஈடுபட்டிருந்தன. அனால் அவற்றிற்கு அப்பாலிருந்த தூய்மையையும் எழிலையும் காண விழையும் ஆர்வம், விரைவில் தலைதூக்கியது. அவர் பிற்காலத் தில் எழுதிய கவிதைகள், மனித வாழ்வின், நாகரிகத்தின், எல்லா அம்சங்களையும் ஒன்று சேர்க்கும், இணையற்றதோர் நடையில் எழுதப்பட்டவை. அவற்றில் கடுமையோ, நம்பிக்கைக் குறைவோ, காணப்படவில்லை. உலகின் குழப்பமும் விவேகமற்ற தன்மையும், மனிதனின் படைப்பாற்றலினால், கலையின் தூய வடிவத்தால், கட்டுப் படுத்திப் பண்படுத்தப்பட்டுத் தோன்றின. கவிகள் உலகை மாற்ற முடியுமா என்பதுபற்றி பென்னின் வானொலி உரையாடலில், கலை பற்றிய இக்கோட்பாடு விளக்கம் பெறுகிறது. இந்த உரையாட லில், 'பி', பாத்திரத்தை ஏற்றுப் பங்கு கொண்ட பென், நம் காலத்து இலக்கியம் பற்றிய மிக முக்கிய பிரச்னைகளுக்குப் பதிலளிக்கின்றார். உண்மையான கவிதை தன்னிறைவு கொண்டது; வாழ்க்கையின் உண்மை நிலைமைகளில் அது குறுக்கிட முடியாது; குறுக்கிடக் கூடாது. இந்நோக்குடன் ஒட்டியதுதான், சூழ்நிலைகள் மொத்தத் தில் ஒன்றுபோலவே, மாறுமல், இருக்கின்றன என்ற அவர் கருத்து.

ஏ: 'கவி தன் காலத்தை மாற்ற ஒன்றும் செய்ய முடியாது. வரலாற்றின் போக்கை மாற்றுவதில் அவனுக்குப் பங்கு இல்லை; கவியென்ற முறையில் அவனால் பங்கு கொள்ளவும் முடியாது. அவன் வரலாற்றுக்குப் புறம்பாய் நிற்கிறான்.' பல கட்டுரைகளில் கவியைப் பற்றி நீங்கள் தெரிவித்துள்ள கருத்து இது தான். இது சூழ்நிலையை மனதிற் கொள்ளாமல் கூறப்படும் தத்துவார்த்தக் கருத்து அல்லவா?

பி: பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சியிலும், நிலத்தை விலைக்கு வாங்குவதிலும், தொழில் துறைச் சிக்கல்களிலும், பத்திரிகை வளர்ச்சியிலும் கவிகள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் எழுதியிருக்க வேண்டுமென்று விரும்புவீர்களா?

ஏ: உங்கள் எதிர்மறை நோக்கை ஆதரிக்காத, புகழ் பெற்ற எழுத்தாளர் பலர் இருக்கின்றனர் அல்லவா? வரலாற்றின் திருப்பு முனைக் கட்டத்தில் நாம் இருக்கிறோமென்றும், ஒரு புதிய மனிதப் பிறவி உருவாகி வழிகிறதென்றும், புதிய முன்னிலும் சிறப்பான, எதிர்காலத்துக்கான வழியைத் தங்கள் நூல்களில் காட்ட முடியுமென்றும் அவர்கள் நம்புகிறார்களே.

பி: முன்னிலும் சிறப்பான ஓர் எதிர்காலத்தை அவர்கள் சித்திரிக்க முடியும் என்பது உண்மை தான், ஜூல்ஸ் வெர்னே, ஸ்விப்ட் போன்று, இலட்சிய உலகைச் சித்திரிக்க முன்வரும் எழுத்தாளர்கள் எப்பொழுதும் இருந்ததுண்டு. காலத்தில் திருப்பு முனை என்பதைப் பொறுத்த வரை, காலம் எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கிறது. புதிய தொரு மனிதப் பிறவி உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தி மாலை நேரம், அல்லது மனித சமுதாயத்தின் விடிவெள்ளி நேரம் போன்ற சொற்கள், புராணங்களில் சொல்லப்படும் முன்னோடிகள் போல், அடிக்கடி கையாளப்பட்டு வருகின்றன என்ற உண்மைகளை நான் பல முறை எடுத்துக் காட்டியுள்ளேன்.

ஏ: ஆகவே அன்றாடப் பிரச்னைகளில் கவிகள் கலந்து கொள்வது பொருத்தமற்றது என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

பி: அது மேற்போக்காகக் கலையில் ஈடுபடுவதாகும் என்று நான் கருதுகிறேன். 218வது பாராவை* விலக்க வேண்டுமென்று எழுத்தாளர் கூட்டமொன்றும், மரண தண்டனையை நீக்க வேண்டுமென்று இன்னொரு கூட்டமும் வற்புறுத்தி வருவதைக் காண்கின்றேன்.

'அறிவு விளக்கம்' ஏற்பட்ட காலம் முதற்கொண்டு பொதுப் பிரச்னைகளில் தம் கருத்தை வன்மையாக வலியுறுத்தும் எழுத்தாளர் உருவாகியுள்ளார். உள்ளூரில் பரபரப்பூட்டும் பிரச்னைகள், முற்போக்கான முயற்சிகள், வால்டேரின் காலப் போராட்டமும் ஸோலாவின் 'குற்றம் சாட்டுகிறேன்' இயக்கமும் எதிரொலிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் அந்த எழுத்தாளர் முனைகிறார்.

ஏ: எழுத்தின் இந்தப்போக்கு, கவிதையின் எல்லைக்குள் அடங்கியது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?

*அக்காலத்தில் கருச் சிதைவைத் தடை செய்தது, ஜெர்மன் குற்றச்சட்டத்தின் 218வது பாரா.

பி: கவிதையின் எல்லைக்குள் இது பெரும்பாலும் அடங்குவதில்லை என்பதை அனுபவம் உணர்த்துகிறது. நாகரிகத்தில், அனுபவ அடிப்படையில், உருவாகும் அமைப்புகளை நோக்கி எழுதும் எழுத்தாளர்கள், உலகம் இன்றுள்ள நிலையில் அதை அனுபவிக்கும் கொள்கையினருக்கு உலகம் மூலப்பொருட்களால் உருவாக்கப்படுவது, மூன்று பரிமாணங்களில் இயங்குவது, என்ற கொள்கையினருக்கு, ஆதரவாகச் செல்கின்றனர். போரில் ஈடுபடுவோர், தொழிற் கலைஞர், எல்லைகளை மாற்றி அமைப்போர் பக்கம் அவர்கள் சென்று விடுகின்றனர். மேல்வாரியாக, தற்செயலாக நிகழும் மாறுதல்களில் அவர்கள் சிக்கி விடுகின்றனர். ஆனால் உண்மையில் கவியோ, வேறுவிதமான அனுபவம் உடையவன். செயல்முறையில் பலனளித்து, முன்னேற்றம் என்று பொதுவாக அழைக்கப்படுவதை நிலைநாட்டுவதைவிட, வேறு குறிக்கோள்களுக்காகப் பாடுபடுபவன் கவி.

ஏ: போர் வீரர்களும் தொழிற் கலைஞர்களும் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். அவ்வாறுயின், அவர்கள் மட்டுமே உலகை மாற்றக் கூடியவர்கள் என்று எண்ணுகிறீர்களா?

பி: மாற்ற முடியுமென்றால், அந்த அளவுக்கு அவர்களால் தான் முடியும். உண்மையில் போர் வீரர்களுக்கும் தொழிற் கலைஞர்களுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் விஞ்ஞானிதான் இந்த மாறுதல்களைச் செய்பவன். கவிக்கு நேர் எதிராக உள்ள விஞ்ஞானி அனைத்துலகுக்கும் பொருந்துவதாகக் கருதப்படும், ஆனால், உண்மையில் லாபகரமானதாக இருக்கும், ஒரு நியாய நியதியை உருவாக்கும் விஞ்ஞானி எல்லோராலும் அனுபவிக்கக் கூடியது, பயன்படுத்தக் கூடியது, நிரூபணம் செய்து நிலை நாட்டக் கூடியது, வாய்மை என்று பொதுமக்கள் கொண்டுள்ள கருத்துக் கேற்ப, ஒரு வாய்மை நெறியைச் சுமத்தும் விஞ்ஞானி சாதாரணத் திறமை உடையவர்கள் செல்வாக்கு பெற்று ஓங்கி நிற்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் விஞ்ஞானி—இவன் தான் உலகை மாற்றுபவன். கலையையும் விஞ்ஞானத்தையும் பற்றி ஒரே மூச்சில், ஒன்று சேர்த்துப் பேசக் கற்றுள்ள ஒரு நாடு, அதிலும் குறிப்பாகப் படைப்பாற்றல் பெற்று விஞ்ஞானம் ஓங்கியுள்ள ஒரு நூற்றாண்டில்—கலை, விஞ்ஞானம், இரண்டையும் ஒருங்கே கண்டு, அவற்றின் இணைப்பால் ஏற்படுவதாக நம்பும் அறிவு விளக்கத்தை ஆர்வத்துடன் நாட முனைகிறது என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அதற்கு அப்பாற்பட்டதும் எனக்குப் புரிகிறது. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, பெர்லினிலிருந்து வடக்கே அறுபது மைல் காரில் சென்று, கிராண்ட் எலெக்டார், ஸ்பெர் பெல்லின், மாண்புமிக்க பிரெடரிக்குடன் தொடர்பு கொண்ட நகரங்கள் ஆகியவற்றைப் பாருங்கள். அந்த வறண்ட,

வெற்று நிலப்பரப்பைச் சொற்களால் சித்திரிக்க முடியாது. வறுமை, இன்னல் ஆகியவற்றின் உருவகங்களாய் அமைந்துள்ளன அந்நகரங்கள். காரண காரிய நியதியில் நம்பிக்கை கொண்டுள்ள தீவிரவாதிகள் வாழும் பகுதிகள் அவை. நடைமுறையில் பயனுள்ளதா என்பதையே தகுதியாயதாகப் போற்றி, மென்மையான மேம்பாடான உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காத மனநிலையைப் போற்ற, நகரக் குடியானவரையும் உள்ளூர் நீதிபதியையும் உதாரணங்களாகக் கொண்டு கற்றுள்ள ஒரு நாடு, 'பெந்தசீலியா'வின் ஆசிரியரை,* செருக்குள்ள தர்ம சங்கடமான பேர்வழியாக மதிக்கத்தான் முடியும் என்பதை அப் பகுதிகளுக்குச் சென்றால், நீங்கள் உணர்வீர்கள்.

ஏ: 'பெந்தசீலியா' சிறந்த இலக்கியப் படைப்பாயினும், அரசியல், சமூகத் துறைகளிலோ, கல்வி வளர்ச்சித் துறையிலோ, அதனால் ஒரு சிறிதும் நன்மையோ முன்னேற்றமோ ஏற்படவில்லை என்பதுதானே நீங்கள் கூறுவதன் பொருள்.

பி: ஆம். நான் சொல்வதன் கருத்து அதுதான். அது மட்டுமல்ல, பெந்தசிலியாவுக்கு அடுத்தபடியாக, மிகச் சிறந்த இலக்கியப் படைப்பான, ஹெய்ன்ரிஷ் மன்னின் 'சிறிய நகரம்' கூட, உருவான நன்மை ஏதும் பயக்கவில்லை. எழுத்து நடையில் ஒரு பாணியை உருவாக்குவதில் கூட அது வெற்றி பெறவில்லை. இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கலைப் படைப்புகள், தமக்குள் தாமே அடங்கும் தோற்றங்கள், வரலாற்றில் அவற்றால் மாறுதல் எதுவும் செய்ய முடியாது. நடைமுறைப் பலன் எதுவும் அவற்றால் கிட்டாது. அவற்றின் உயர்வே அதில் தான் அடங்கியுள்ளது.

ஏ: இக்கருத்தை ஏற்றுக்கொள்வது, இலக்கியத்தை இன்மைக் கொள்கையைக் கண்கொண்டு பார்ப்பது ஆகாதா?

பி: சமூக முன்னேற்றம் தீவிரமானது என்றால், அக்கருத்து தான் சரியானது. வரலாற்றால் விட்டுச் செல்லப்பட்ட கலைப் படைப்புகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாகப் பவனி வருவதாகக் கற்பனை செய்து பாருங்கள். நெ:பர்டிடி, டோரியன் ஆலயம், அன்னா கரீனினா, ஒடிஸியில் நௌஸிக்காவின் கீதம்— இவை அனைத்திலும் தங்களுக்கு அப்பால் எதையும் சுட்டிக் காட்டும் அம்சம் எதுவுமில்லை. அவற்றில் எதற்கும் விளக்கம் தேவையில்லை. தனக்குப் புறம்பாய்ப் பலன் எதையும் உண்டாக்க நாடும் எதுவுமில்லை. தங்களில் தாமே ஈடுபாடு கொண்டு மூழ்கியுள்ள, மௌனமான, ஆழ்ந்த உட்பொருள் கொண்ட

*ஹெய்ன்ரிஷ் மீபன் க்கோல்த்.

உருவங்களின் பவனி அது. அதை இன்மைக் கொள்கையின் நோக்கு என்று நீங்கள் குறிப்பிட விரும்பினால், அது கலியின் சிறப்பான இன்மைக் கொள்கைதான்.

ஏ: நீங்கள் பார்ப்பது இந்த மௌன உருவங்களின் பவனி. நான் இன்னொரு பவனியை உங்களுக்குக் காட்டுகிறேன். எலும் புருக்கி நோயால் வாடும் முப்பத்தாறாயிரம் பேர் பெர்லினில் வாழ்கின்றனர். அவர்களுக்குப் போக்கிடம் கிடையாது. நீங்கள் குறிப்பிட்டபடி, சட்டப்படி கருச்சிதைவு தடை செய்யப்பட்டுள்ள தால், கள்ளத்தனமாய்க் கருச்சிதைவு செய்வதால், ஒவ்வோ ராண்டும் நாற்பதாயிரம் பெண்கள் மரணமடைகின்றனர். கல்வி பெறுவதற்காகச் சொல்லொணாத் துன்பங்கள் அனுபவித்துப் பரிதாபகரமான போராட்டம் நடத்தும் நம் நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் பற்றி எண்ணிப் பாருங்கள். இந்த நகரத் தில் வேலை கிடைக்காமல், ஊதியம் பெற வழியில்லாமல், இரவில் மட்டும் அறைகளில் எலிகளுடன் வாசம் செய்யும், முப்பது வயது இளைஞரை எண்ணிப் பாருங்கள். எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறுகின்றேன். பன்னிரண்டு பேர் கொண்ட ஒரு குடும்பம். தந்தை குடிகாரர். தாய் தனது பத்தாவது குழந்தையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தனக்கு எலும்புருக்கி நோய் வந்து விட்டதென்று பாவனை செய்து, எப்படியாவது இடநெருக் கடி அதிகமாயிருந்த வீட்டிலிருந்து தப்பி, எலும்புருக்கி நோய் சிகிச்சை நிலையத்திற்குச் செல்ல நினைத்துப் பதினைந்து வயது மகள், கசாப்புக் கடையிலிருந்து கொஞ்சம் இரத்தத்தை விலைக்கு வாங்கித் தான் இரத்தம் கக்கியதுபோல் தோன்றும்படி, அதைத் தன் மேல் ஊற்றிக் கொண்டாள். இதுதான் துயரம்; இவைதான் கண்ணீர்; ஏழை நிரபராதிகளின் இன்னல் இது தான். இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு, கவி சும்மா இருக்க வேண்டுமா?

பி: ஆம்; கவி, அவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக் கத்தான் வேண்டும் என்று சொல்வதில் எனக்குச் சிறிதும் தயக்க மில்லை. ஆனால் நாகரிக எழுத்து எழுதி, அரசியல் சூதாட்டத் திற்கும் மோசடிக்கும் ஆன்மீகச் சமாதானங்களையும் சாக்குகளை யும் எடுத்துச் சொல்லி, மாலையில் அமைச்சர் அருகே அமர்ந்து, அங்கியிலே அலங்காரப் பூ சூடிக் கொண்டு, தன் உணவோடு ஐந்து மதுக் கிண்ணங்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்ப வன் சும்மா இருக்கமாட்டான். நாட்டில் உள்ள அவல நிலைமை களைக் கண்டித்துக் கண்டன அறிக்கைகளில் அவன் கையெழுத் திடுவான். ஆனால், நியாயமற்ற இந்த இன்னல்களைச் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளால், நீக்க முடியாது என்பதையும்,

ஒரு சில வசதிகள் செய்து தருவதால் தணிக்க முடியாது என்பதையும், உணர்ந்துள்ள கவி, இவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மாதான் இருப்பான். குட்டைக்கால் உடைய பகுத்தறிவு வாதிகள் பற்றிய சுத்தமான காட்சிகள்; ஒய்வுச் சம்பளத்தை உள்ளங்களிலும், சூரியக் கதிர் விளக்கை வீட்டிலும் வைத்திருங்கள். பயங்கரம் இல்லாத படைப்பு; பற்களும் விலங்கின் கை நகங்களும் இல்லாத காடுகள்; உலுக்கி உறிஞ்சும் கோரக் கனுக்கள் இல்லாத இரவுகள்:—இல்லை; கலி இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு, மரணத்திலும் மறுதளிக்கமுடியாத நம்பிக்கையுடன், பயங்கரத்தைப் போக்கி, அதற்கு ஆளாக்கப் பட்டுள்ளவர்களைச் சமாதானப்படுத்தும், பொருள் தன்னிடம் மட்டுமே உள்ளதென்ற நம்பிக்கையுடன் சும்மா இருக்கின்றான். அப்படியானால் மூழ்கி அழிந்து போங்கள் என்று அவர்களிடம் கூவுகின்றான்; மூழ்குங்கள்; ஆனால் எழுங்கள் என்றும் உங்களுக்கு நான் சொல்லமுடியும்.

ஏ: நல்ல விசித்திரமான பொருள்தான் கவியின் கையில் இருப்பது. ஆனால் அதற்கு எதிரா...

பி: அதற்கு எதிராக! இன்று சிந்திப்பவர், ஒவ்வொருவரும், பாட்டாளிகள் இயக்கத்தை ஆதரிக்கவேண்டும், கம்யூனிஸ்டாக இருக்கவேண்டும், தன் ஆற்றலைப் பாட்டாளிகளுக்குக் காணிக்கையாகப் படைக்கவேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஏன்? அந்த நம்பிக்கைக்கு உங்கள் ஆதாரம் என்ன? சமூக இயக்கங்கள் எப்பொழுதும் இருந்ததுண்டு. எப்பொழுதுமே ஏழைகள் உயரவேண்டுமென்றும், பணக்காரர்கள் தாழக் கூடாதென்றும், எண்ணியதுண்டு. வாசனைத் திரவியங்களின் வாணிபத்தில் எகிப்து ஏகபோகம் நிலைநாட்டியது முதற்கொண்டே, பணத்தைக் கொண்டு பாபிலோனிய வங்கிக்காரர்கள் வியாபாரம் செய்து, கடனுக்கு நூற்றுக்கு இருபது விகித வட்டி வாங்கியது முதற் கொண்டே, இந்த உலகம் பயங்கர, முதலாளித்துவ உலகமாகத் தான் இருந்துள்ளது. ஆசிய மக்களில், நடுத்தரப் பகுதி மக்களின், அப்பண்டைக்கால மக்களின் ஏகபோக முதலாளித்துவம். பட்டாடை வாணிகர் கூட்டு, கப்பல் உரிமையாளர் கூட்டு, இறக்குமதி—ஏற்றுமதி, பருத்தி வியாபாரச் சூதாட்டம், இன்ஷியூரன்ஸ் நிறுவனங்களும், மோசடிகளும். உற்பத்திப் பொருள்களை இயந்திரங்களாலேயே தூக்கி எடுத்துச் செல்லும் முறை உடைய தொழிற்சாலைகள், ஒருவன் தோலை வெட்ட, ஒருவன் அங்கிகளைத் தைக்கும் முறை, அநியாய வாடகைகள், வீட்டு நெருக்கடியைப் பயன்படுத்தி நடக்கும் அநீதிகள், போர்க் கருவிகளை உற்பத்தி செய்து பங்குதார்களுக்குப் போர் ஊழியத்திலிருந்து விலக்களிக்கும் நிறுவனங்கள்—இவை போன்றவை

நிறைந்த பயங்கர முதலாளித்துவ உலகம். இந்த அநீதிகளை எதிர்த்து, எதிர்ப்பு இயக்கங்கள் எப்பொழுதும் எழுந்துண்டு. ஸைரீனிய தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றிய அடிமைகள் கூட்டம்; ரோமர் காலத்தில் அடிமைகளின் புரட்சிப் போர்கள். ஏழைகள் என்றுமே உயர விழைகின்றனர்; பணக்காரர்கள் கீழே இறங்காமலிருக்க விரும்புகின்றனர். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் மூவாயிரம் ஆண்டுகளாக நடந்த பின்னர், இவை நல்லதுமல்ல, கெட்டதுமல்ல, இவை இருக்கின்ற உண்மை, என்ற முடிவுக்குத்தான் வரக்கூடும்.

ஆகவே இந்தக் கேள்வி எழுகிறது: மொத்தத்தில் தங்கள் நிலை உயரும் என்று எண்ணும்படி, மனித சமுதாயத்தில் பாதிப் பகுதியினரை ஏமாற்றுவது, நியாயமா, வீரமா, புரட்சிவாதமா? பர்க்ஹார்ட் கூறுவது போல், 'அறிவுள்ள முட்டாளின் ஆசையை எழுப்பும் விளையாட்டாக' இது முடியாதா? இது மக்களை ஏமாற்றுவதாகாதா? லாசால் கூறியது போல், இது 'மக்களை மோசடி செய்யும் விளையாட்டு' அல்லவா? வாழ்க்கை என்பது, மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆரஞ்சுப் பழம்; எவரிடம் உயரமான ஏணி இருக்கிறதோ, அவர் அதைப் பறித்து உருண்டு திரண்டு, பொன்னை அப் பழத்தைத் தன் கைவசப் படுத்த முடியும், அது தான் நிலைமையின் உண்மைச் சித்திரம் அல்லவா? நான் இப்பொழுது சொல்லப் போவது, வறுமையையோ, செல்வ வளங்களைப் பங்கிடு செய்துள்ள முறையையோ குறிப்பதல்ல; அரசியல் இயக்கத்தால் நடத்தப்படும் ஒரு விதப் பிரசாரத்தையே அது குறிக்கும். முந்திய பல நூற்றாண்டுகளில் பெரிய நிலக் கிழாரையும் கோட்டையில் குடியிருந்த கோமான்களையும் விட, இன்று பிரிட்டனில் பாட்டாளிகள், உயர்ந்த, வசதிகள் நிறைந்த, வாழ்க்கை நடத்துகின்றனர். ஒரு பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் விடுத்த அறிக்கையை அண்மையில் நான் படித்தேன். முன்பு வீடுகள் இருட்டாகவும், இறுக்கமாகவும், வெப்ப வசதி இல்லாமலும், இருந்ததற்கு மாறாக, இப்பொழுது வீடுகள் வசதியாக இருக்கின்றன. முன்பு மார்ட்டின்மாஸின் போது எல்லாக் கால்நடைகளையும் கொல்ல வேண்டியிருந்தது மாரி மாதங்களில் அவற்றுக்குத் தீனி போடமுடியாது என்ற காரணத்தால். இப்பொழுதோ, உணவின் தரம் உயர்ந்துள்ளது. முன்பு மக்கள் பிணியை எதிர்த்துப் போராட வசதியற்ற நிலையில் இருந்தனர். இப்பொழுதோ, பிணியைத் தீர்ப்பதில் பற்பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, நூறு ஆண்டுகளுக்கு முன் பணக்காரர்கள் மட்டுமே வாழ்ந்து வந்த வசதியான வாழ்க்கையை இன்று ஏழைகளும் வாழ்கின்றனர். இன்றுள்ள நிலையை, நூறு ஆண்டுகளுக்குப் பின் வரப் போகும் நிலையுடன் ஒப்பிட்டால்,

இது போலவே அமையும். இது போல், நிலை உயர்ந்து கொண்டே செல்லும். முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும், மனித இனத்தின் அந்திக் காலத்தையும் விடிவெள்ளிக் காலத்தையும் பொறுத்த வரை இது தனி மனிதன் தன் சொந்த அனுபவத்தால் அறியக் கூடியதல்ல. மனித சமுதாய இயக்கத்தில் உள்ளார்ந்த அம்சம் இது. மனித வாழ்வுக்குப் புறம்பானது இது. இந்த நியதி, உண்மை நிலைக்கு மாறுபட்டதென்று நான் கருதுகிறேன். நீண்ட காலத்துக்கு முன்பே, என்னிடமிருந்து வெகு தொலைவில், தன்னகத்தே உள்ள சக்திகளுக்கு இணங்கத் தொடங்கித் தன் போக்கை நிர்ணயித்துக் கொண்ட ஒரு நியதிக்குத் தத்துவார்த்த விளக்கம் தரும் பொறுப்பை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இல்லை. இப்படி நீ இருப்பாய்; எப்பொழுதும் நீ வேறுவித மாய் இருக்க முடியாது. இது தான் நீ வாழும் முறை; இப்படித் தான் நீ வாழ்ந்துள்ளாய்; என்றும் இப்படித் தான் வாழ்வாய்' என்று மனித இனத்துக்குச் சொல்லிக் கொடுப்பது, புரட்சிகரமானதல்லவா, உறுதியான, உடல் நலம் வாய்ந்த மனிதனின் உடல் வலிமைக்கு ஏற்றதல்லவா என்று நான் எண்ணுமல் இருக்க முடியவில்லை. பணம் வைத்திருப்பவனுக்கு உடல் நலம் வளரும். அதிகாரம் உடையவன் உறுதியாய்ச் சூளுரைக்கின்றான். வன்முறையைப் பயன்படுத்துபவன் நீதியை உருவாக்குகின்றான். அது தான் வரலாறு. வரலாறு வாழ்க! இன்றைய நாள் உன் முன் இருக்கின்றது. அதன் உடம்பைக் கைப் பற்றி, உண்டு, சாகு. அரசியல் கட்சிகள் வாக்களிக்கும் இன்ப வாழ்வை விட, இந்தக் கருத்து, புரட்சிகரமாகவும், ஆழ்ந்த நோக்குக் கொண்டதாகவும், ஆன்மாவை வளமாக்குவதாகவும் எனக்குத் தோன்றுகிறது. ஆம்; சென்ற பத்தாண்டுகளில் நடந்துள்ளதற்குப் பின்பும், ருஷ்யாவிலிருந்து நாம் கேள்விப்படும் செய்திகளுக்குப் பின்பும், உண்மையை உள்ளவாறே நாம் காணச் சித்தமாக வேண்டும் என்பது எனக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. பாட்டாளி இயக்கத்தின் இயல்பான பண்புகள், புரட்சியின் அதிர்ச்சியின் உள்ளுறை இயல்பு, ஏகாதிபத்திய முதலாளித்துவ போக்குகள் மாறுமல் இருக்கையில், அதிகாரப் பங்கீட்டின் புது நியதிப்படி ஒருவர் இடத்தை இன்னொருவர் கைப் பற்றியுள்ளது ஆகிய உண்மைகளை நாம் உணர வேண்டும். ஆனால் பிரெஞ்சுப் புரட்சியின் எதிரொலிக்காகக் காத்து நிற்பதை விட, காலம் தாழ்ந்த டார்வினியக் கொள்கையைப் போர்த்திக் கொள்வதை விட, எதிர் காலத்தின் மீது ஒரு பாரத்தைத் சுமத்தி, மற்றவர்கள் நனவாக்க வேண்டிய கனவுகளைக் காண்பதை விட, இதற்கு அதிகத் துணிச்சல் வேண்டும் என்பது உண்மையே. நாம் முதலில் குறிப்

பிட்ட கனவான்கள் செய்வதெல்லாம், துதிப்பாடல்களும் பிரசார உரைகளும் எழுதுவது தான். பலூன் மேலே பறக்கும் போது, அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். மற்றதையெல்லாம் தொண்டர் படையினருக்கு தோழர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, அவர்கள் விட்டுவிட்டு வேடிக்கை பார்ப் பார்கள். ஆனல் தங்கள் ஆடம்பர மாளிகைகளிலும் ஆரோக்கிய தலங்களிலும் வாழ்ந்து கொண்டு, அந்தப் பாட்டாளிகளே முதலில் தூண்டி, உந்திக் குத்திவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் அவர்கள் தான்.

ஏ: நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அப்படியானல், இன்று நிலவும் பொருளாதார அமைப்பை, நீங்கள் அடிப்படையில் ஏற்றுக் கொண்டு ஆதரிக்கிறீர்கள் என்று பொருளா?

பி: நேரடியாகப் பதில் சொல்ல வேண்டுமென்றல், உழைப்பு அணைத்துப் படைப்பின் நிர்ப்பந்தம் என்றும், சுரண்டல், உயி ருள்ள பிறவி அனைத்தின் அகனமர்ந்த தன்மை என்று நான் கருதுகிறேன்.

ஏ: இது பெரிய பிரபஞ்சத் தத்துவமாய் இருக்கிறதே!

பி: ஆனல் உங்கள் தொழில் நுட்ப நிபுணர்களையும், போர் வீரர்களையும், விஞ்ஞானம், பொருளாதாரத் தத்துவங்கள், இலக்கியம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களையும், நாகரிகத் தின் வெறுமையான பிதற்றலையும் உங்களிடம் விட்டு விடுவேன். தங்கள் சொந்த வருவாயை இழந்து, நாணய மதிப்புக் குறைவு பற்றிக் கடுமையாகக் கண்டனம் செய்யும் சிறிய மனிதர்கள் ஒரு பாதியாகவும், ஹெர்த்தா, போஸிடான் நீச்சல்காரர்கள் மற்றொரு பாதியாகவும் உள்ள—மக்கள் கூட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்கும் சுதந்திரம் கவிக்கு இருக்க வேண்டுமென்று மட்டுமே நான் கோருவேன். அவன், தனக்கு உரித்தான தனி வழியில், செல்ல உரிமை பெற்றிருக்க வேண்டும்.

ஏ: கலையுணர்வு கொண்ட கொள்கைகள் தான்.

பி: இல்லை. ஒழுக்க நெறிக் கொள்கைகள். சமூகச் சூழ்நிலையும் பண்பாண்மையும், சமூக உறவுகளே நிர்ணயிக்கும் விதிகளாகவே காணும், நாகரிகத்தைப் பற்றிய நோக்கு, மீளமுடியாமல் சிக்க வைக்கும் சக்தி. கலைஞனுக்குச் சமூகப் பண்பமைதி கிடையாது. அவன் சுயேச்சையாய்த் திரிபவன்; பிச்சைக்காரன்; அழ குணர்வைப் போற்றுபவன். தன் மூளையில் உதிப்பது அனைத்தை யும் அவன் எழுதிக் கிறுக்குவான்—ஒரு கோமாளி போல. வெறுங் காலுடன் நடக்கும் பாதிரி பற்றி நேற்று ஒரு நாடகம் எழுதினன்.

ப்ரோமித்தியப் பிரசாரப் பிரசுரம் ஒன்றை இன்று எழுதுவான். இதை யாருக்கு நான் விளக்க முடியும்? ரேச்சலை நாடி ஜேக்கப் அலைந்ததுபோல், உரைநடையில் ஒரு பக்கம் எழுத, செய்யுளில் ஒரு வரி எழுத, நகரத்திலும் கிராமப்புறத்திலும், ஏழு ஆண்டுகள் தாம் தனிமையில் பாடுபட்டதாக ஒருவர் எழுதினார். ஹெய்ன்ரிஷ் மன்னின் கட்டுரை பற்றி நான் யாரிடம் குறிப்பிட முடியும்? ப்ளாபர் பற்றி அவர் எழுதுகிறார். கலையைப் பற்றி நிறைய எழுதிய பின்பு, அதைத் தவிர வேறு எதையாவது, மனிதாபிமான உணர்வுடன் சிறந்தது எதையாவது, மனதுக்குப் பிடித்த மானதை, அன்றாட வாழ்வின் கவலைகள் பற்றி, ஒவ்வொரு வருடைய இன்ப உணர்வுகள் பற்றி, ஏதாவது எழுத வேண்டுமென்று ப்ளாபர்ட் விரும்பினார். ஆனால் அவரால் அது இயலவில்லை. தம் எழுத்து முறைக்குள் அதைப் பொருத்த முடியவில்லை. புதினப் படைப்பாளரின் நோக்கு கொண்டு அதைக் கண்டு தழுவ இயலவில்லை. நடையழகுடன் அவர் தொடர்ந்து எழுத வேண்டியதாயிற்று. வாக்கியங்களுக்குக் கட்டுப்பட்டுக் கால்களையும் கைகளையும் சீவி எறியும் கலைப் படுக்கையில், அவர் கிடக்க வேண்டியிருந்தது. 'ஒரு மனிதன் விழுந்து கொண்டிருந்தால், அவனைத் தள்ளி விடுங்கள்', என்ற கடுமையான, மிருகத்தனமான சொற்களை எழுதுவதற்கு முன், மென்மையான உள்ளம் படைத்த நீட்ஷெ எவ்வளவு வேதனைப்பட்டிருக்க வேண்டும் என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. ஆனால் அவ்வாறு எழுதுவதைத் தவிர, அவருக்கு வேறு வழியில்லை. அவர் கப்பலில் ஏறியாக வேண்டும். காலம், இடம் ஆகியவற்றின் மீது நண்பகல் தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே ஒரு கண்தான் அவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது—முடிவற்ற நிலையின் கண். தன்னடை, தன் அகத் தெளிவு ஆகியவற்றின் வாய்மையைத் தவிர அவருக்கு வேறு எந்த ஒழுக்க நெறியும் கிடையாது. ஏனென்றால், கவியைப் பொறுத்தவரையில், அறப் பண்பினங்கள் அனைத்தும், தனிப்பட்ட முறையில் தன்னை நிறைவாக்கிக் கொள்ளும் தன்மையில் தான் முடிகின்றன.

ஏ: அது உண்மையில் பயங்கரமானது. ஆனால் அவல நிலைகளையும் பயங்கரப் போக்குகளையும் சொல்லால் சித்திரித்து, அதன் மூலம் அவை பற்றிய அச்சத்தையும் திகிலையும் போக்க உதவி, தொன்று தொட்டே கலைஞர்கள் தொண்டாற்றியுள்ளனர், அல்லவா?

பி: கலைஞர்களிடம் உள்ள உட்பொருள் பற்றி நான் முன்பு பேசிய போது, இதையே தான் குறிப்பிட்டேன். தன் தகவிதியின் காரணமாய், தெளிவற்ற இருத்தல் நிலையில் பிறந்த

கவி, ஆக்கெராணுக்குரிய நடுக்கத்துடன் தனித் தன்மை என்ற பாதாளத்திற்குள் குதித்து, அதைப் பகிர்ந்து, கலை வடிவம் மூலமாக ஒளிவீசச் செய்து, இயற்கையின் மிருகத்தன இயல்புக்கு மேம்படுத்தி, காரண காரிய நியதியின் கண்மூடித்தனமான கட்டுக்கடங்காத பேராசைக்கு மேம்படுத்தி, தாழ்ந்த நிலை நோக்கின் மட்டமான கட்டுப்பாடுகளுக்கு மேம்படுத்தி, அதன் நியதிகளுக்கு ஏற்ற ஒரு கட்டுக்கோப்பை அதற்கு அளிக்கின்றான். உலகில், கவியின் நிலையும் கடமையும் இதுதான் என்று எண்ணுகிறேன். உலகை அவன் மாற்ற வேண்டுமென்று எண்ணுகிறீர்களா? எந்நிலைக்கு மாற்ற வேண்டும்? இன்னும் அழகுறச் செய்ய வேண்டுமா?—ஆனால் அழகு என்பதை எந்தத் தரம் கொண்டு, எந்தச் சுவை கொண்டு நிர்ணயிப்பது? உலகை இன்னும் நல்லதாக்க வேண்டுமா? எந்த ஒழுக்க நெறி நியதிகளைக் கொண்டு இதை நிர்ணயிப்பது? உலகை இன்னும் ஆழ்ந்த பொருள் கொண்டதாக ஆக்க வேண்டுமா? எந்த உள்நோக்கையும் தெளிவையும் அடிப்படையாகக் கொண்ட தரங்களைக் கொண்டு இப்பிரச்னையை அணுகுவது; உலகைத் தழுவும் இலட்சிய நோக்கு, உலகுக்கு வழி காட்டும் அறிவுத் தெளிவு, அதன் குறிக்கோள்களுக்கு நியாயம் வழங்கும் பெருந்தன்மை—இவற்றைக் கவி எங்கிருந்து பெறுவது? யார் மேல் அவன் சாய்வது? "தன் குழந்தைகளிடம் வாழ்கிறாள்: ஆனால் அன்னை—அவள் எங்கே', என்று கெதெ கூறுகிறாரே, அவள் மீது சாய்வதா?

ஏ: ஆகவே கவி, தன் நெறிநியதிகள் அனைத்தையும் தன்னகத்தே இருந்து மட்டுமே எடுத்துக் கொண்டு, எந்தக் குறிக்கோள்களுக்கும் பாடுபடாமல், எந்தப் போக்கையும் ஆதரிக்காமல், இருக்கவேண்டுமா?

பி: அவன் தனக்கே உரித்தான தனியொரு கருத்தில் முழு ஈடுபாடு கொண்டு, அதைப் பின்பற்றுவான். இக்கருத்துவெறி பொதுமையாகவும் அனைத்தையும் தழுவுவதாகவும் இருக்கும் போது, மனிதனால் இறுதியில் எய்தக் கூடிய உச்சநிலை உயர்வின் இலட்சியச் சித்திரம் உருவாகிறது. இந்த உயர்நிலை, மாறுதல் செய்யவோ, மற்றவர்களைப் பாதிக்கவோ, விரும்பவில்லை. இந்த உயர்நிலை, உயர்நிலையாய் இருப்பதையே நாடுகிறது. பகுத்தறிவு வாதத்தின் மடமை அதை என்றும் எதிர்க்க, மனித இனத்தின் மேதை அதை என்றும் உறுதிப்படுத்த, அந்த உயர்நிலை, உயர்நிலையாய் விளங்கும். மனித இனத்தின் விதியை என்னால் காண முடிந்த அளவுக்கு, என்றுமே மனித இனம் கொள்கைகளைப் பின்பற்றாமல், நிகழ்ச்சித் தோற்றங்களையே பின்பற்றி, தத்துவங்களை அல்லாமல் உருவங்களையே பின்பற்றியுள்ளது என்று

அறிகிறேன். அந்த மனித இனம் மாறும்போது, நம் கண்ணுக்குப் புலனாகாத அளவு வெகு தொலைவில் மாறுகிறது.

ஏ: ஆகவே கவி, தன்னுடன் தானே உரையாடிக் கொள்ளும், தனிமொழிதான் எழுதுகிறான் அல்லவா?

பி: இச்சைப்படி சுயேச்சையாய் நடக்கும் போக்கு. ஷில்லர் மொழியில் கூறினால், அவசியம் என்னும் கடிவாளத்திற்குக் கட்டுப்படாமல், விதிகளின்றி, சுதந்திரம் திரிகிறது. ஆனால் இந்த அவசியம் அப்பாற்பட்ட கடந்த நிலையில் உள்ளது; அனுபவத்தை ஒட்டி எழுவதல்ல; சமயத்தைப் பயன்படுத்தி எழுவதல்ல; புற வசதிகளைப் பொறுத்ததல்ல; முற்போக்கானதல்ல. அது 'அநாங்கே'; அது விதியின் ஊழிப்பாட்டு; பாதாளத்தின் ஆழத்திலிருந்து ஒலிக்கும் நியாயமான தீர்ப்பு. சிந்தனையின், பொதுவாக உள்ளத்தின், இரகசியம் அது. அது ஒரு சிலரைத் தான் ஆட்கொள்கிறது. அதன் இறுதி வெளிப்பாட்டில், கவிகளும் சிந்தனையாளரும் அதன் முன்னிலையில் ஒன்றுகவே தோன்றுகின்றனர். ரோடின் ஆக்கிய சிற்பம் போல், சிந்தனையாளர் பாதாள உலகின் வாயிலருகே நிற்கிறார். அடித்தளத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம், இரண்டுக்கும் பொருந்தும், வேதனை தோய்ந்த கனவில், மாமனிதன் மூழ்கியுள்ளான். 'கிரேக்கரின் துன்ப யுகத்தில் மெய்யியல்' பற்றி நீட்ஷெ எழுதிய கட்டுரையில் கையாண்டுள்ள இணையற்ற உருவகம் இரண்டுக்கும் பொருந்துவது போல. "அவர்களுக்கு அவர்கள் பணியை எளிதாக்கப் புதுமை எதுவும் முன்வரவில்லை." ஒரு மாமனிதன், காலத்தின் வெற்று இடைவெளியைக் கடந்து, மற்றொரு மாமனிதனைக் கூவி அழைக்கின்றான் என்று அவர் எழுதுகிறார். தங்களுக்கு அடியில் ஊர்ந்து செல்லும் குள்ளர்களின் விகாரமான பேச்சினால் கலைக்கப் படாமல், அம் மாமனிதர்களின் உள்ளங்களிடையே உயர்ந்த உரையாடல், ஒருவித இடைவிடாத தொடர்கின்றது.

ராபர்ட் முஸீல்

குணங்கள் இல்லாத மனிதன்

ஆஸ்திரியாவில் பிறந்த ராபர்ட் முஸீல் (1880–1942), சில சிறு நூல்களையும் கணக்கற்ற கட்டுரைகளையும் எழுதியதோடு, 'குணங்கள் இல்லாத மனிதன்' என்ற உயர்ந்த புதினம் ஒன்றை எழுதினார். தம் வாழ்நாள் முழுவதும் முஸீல் இக்கலைப் படைப்பை ஆக்கிக் கொண்டிருந்த போதிலும், அது முடிவு பெறவில்லை. பகுதி பகுதியாக, 1930, 1933, 1943, 1952 ஆண்டுகளில் அது வெளியானது. அதில் கதைப் போக்கும் நிகழ்ச்சிகளும் அதிகமில்லை. ஆனால் பல சிந்தனைகளின் களஞ்சியமாய் அது விளங்குகிறது. புதினத்தின் இயல்பான கட்டுக்கோப்பை நெகிழ்த்தி, விரிவான விவாதங்கள், கலாச்சாரத் திறனாய்வுக் கட்டுரைகள் ஆகியவை அதில் புகுத்தப் பட்டுள்ளன. 1913–14ஆம் ஆண்டில் வியன்னாவின் பின்னணியில் அந்தப் புதினம் வரையப்பட்டுள்ளது. ஆஸ்திரிய ஹங்கேரி மன்னர் பரம்பரை, தன் இறுதிக் கட்டத்தில், உலகப் போரை நோக்கி அடித்துச் செல்லப்படுவதை, முஸீல் கேலிச் சுவையுடன் சித்திரித்துள்ளது, நவீன ஐரோப்பாவின் முழுமைக்கும் பொருந்தும். எல்லாக் கருத்துக்களும், சட்டங்களும், அரசியல் கட்சிகளும், சமயங்களும், சீர்குலைந்து சிதைந்து கொண்டிருந்தன. 'குணங்கள் இல்லாத மனிதன்', உல்ரிஷ், பல வகைகளில், முஸீலின் சொந்த வரலாற்றுச் சித்திரமேயாகும். இங்கு தரப்பட்டுள்ள பகுதியில் சித்திரிக்கப்படும் உல்ரிஷ், உலகைப் பற்றி, எவ்வித உறுதியான தெளிவான கொள்கையும் இல்லாதவன். உண்மையில் அத்தகைய கொள்கைக்கு இடமில்லாத ஒரு நிலையை உலகே உருவாக்குகிறது. கண்டிப்பான உறுதியான குணநலன்கள் படைத்த ஆளுமையை வளர்க்க அவன் விழையவில்லை. புற வசதிகளையே பெரிதாகப் போற்றும், இன்றைய நாகரிக உலகில், அத்தகைய ஆளுமை, பயனற்றதாகவும், தேவையற்றதாகவும், அமையும். எது சாத்தியமோ அதையே அவர் உறுதியாகப் பற்றிக் கொள்கிறார். தற்காலிகமாய் உள்ள நிலைக்குள்ள நியாயமே சாத்தியமானதுக்கும் பொருந்தும். ஆயினும் அவர் நேரில் உள்ள நிலைமையிலிருந்து விலகாமல், அதைக் கேலியாகவும் விளையாட்டாகவும் சமாளிக்கின்றார்.

குணங்கள் இல்லாத ஒரு மனிதனில்
ஒரு மனிதனில்லாத குணங்கள் அடங்கியுள்ளன.

ஆனால் அன்று மாலை உல்ரிஷ் அங்குபோய்ச் சேரவில்லை. தன்னை விட்டுவிட்டு, இயக்குநர் ஃபிஷல் அவசரமாகச் சென்றபின், தன்

இளமை பற்றிய பிரச்னையில் அவன் மீண்டும் ஆழ்ந்தான். உருவகமான கூற்றுக்களும், (அச் சொல்லின் உயர்ந்த பொருளில்) உண்மையல்லாத கூற்றுக்களும், உலகின் பேராதரவைப் பெறும் விந்தையை எண்ணி அவன் வியந்தான். 'ஒருவன் பொய் சொல்லும்போது தான், ஒரு அடி மேலும் முன்னேறுகிறான். அவரிடம் அதையும் நான் சொல்லியிருக்க வேண்டும்' என்று அவன் எண்ணினான்.

உல்ரிஷ் உணர்ச்சி வெறிவசப்பட்ட மனிதன். ஆனால் சாதாரணமாய் உணர்ச்சி வெறிகள் என்ற இச்சைகளைக் குறிப்பதாக இச் சொல்லை இங்கு பொருள்படுத்தக் கூடாது. அவ்வப்போது அவனிடம் இச்சை வெறியை ஏதாவது ஒன்று எழுப்பியிருக்க வேண்டும். அதனால் அவனுக்கு உணர்ச்சி வெறி ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்தப் பதட்ட நிலையிலும், பதட்டமான நடவடிக்கைகளின் போது, அவன் உணர்ச்சி வெறியுடன் இருந்த அதே சமயத்தில், பற்றற்ற நிலையும் மேற்கொண்டு ஒதுங்கியிருந்தன. அநேகமாக எல்லாவித அனுபவங்களிலும் அவன் ஈடுபட்டிருந்தான். இப் பொழுதும், செயலாற்றும் ஆர்வத்தைத் தன்னிடம் உந்திய போது, உண்மையில் தன்னை ஆட்கொள்ளாத ஒரு புதிய அனுபவத்தில் தான் பாயக் கூடுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே, தன் வாழ்க்கையில் நிறைவு பெற்று விளங்கிய அனுபவங்கள் எல்லாம், தனக்குச் சொந்தமாயிராமல், தங்களுக்குத் தாங்களே சொந்தமாய் ஒன்று சேர்ந்தன என்று தன் வாழ்க்கையைப் பற்றி மிகைப்படுத்தாமல். அவன் கூறமுடியும். போட்டியிலும் சரி, காதலிலும் சரி, ஓரடி எடுத்து வைத்தால், ஒன்பது அடி எடுப்பதில் அவன் ஈடுபட்டிருந்தான். ஆகவே இந்த முறையில் தான் சேகரித்திருந்த தனிப்பட்ட குணங்கள், தனக்குச் சொந்தமாய் இருந்ததை விட, தங்களுக்கிடையே ஒவ்வொன்றுக்கும் சொந்தமாயிருந்தன என்று நம்ப வேண்டிய அளவுக்கு நிலை ஏற்பட்டிருந்தது. அக் குணங்களில் ஒவ்வொன்றையும் அவன் கூர்ந்து பரிசிலனை செய்தபோது, அதே குணங்களைப் பெற்றிருந்த மற்றவர்களுடன் அக் குணங்கள் எவ்வாறு இணைந்திருந்தனவோ, அதைவிட நெருக்கமான தொடர்பு தன்னுடன் கொண்டிருக்கவில்லை என்பதை அவன் உணர்ந்தான்.

ஆயினும், இக் குணங்களால் நாம் நிர்ணயிக்கப் படுகின்றோம் என்பதும், நாம் அவற்றின் தொகுதிகளாய் உள்ளோம் என்பதும் ஐயத்துக்கு அப்பாற்பட்ட உண்மை. நாம் அவையாக இல்லாமல் இருக்கலாம். ஆகவே தான் நாம் ஒய்வாய் இருக்கும் போதும், நாம் செயலில் ஈடுபட்டிருப்பது போலவே, நமக்கு, நாம் பழக்கமில்லாதவர்கள் விளக்கம் கேட்கப்பட்டால், விளக்கம் தர இயலாதவனாய் உல்ரிஷ் இருந்திருப்பான். ஏனென்றால் பல

பேரைப் போல, ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதிலும், தனக்கும் அதற்கும் உள்ள தொடர்பிலும் தான், அவன் தன்னைப் பரிசோதனை செய்திருப்பான். அவன் தன்னம்பிக்கை பாதிக்கப் படவில்லை; அவன் தன்னம்பிக்கை செல்லம் கொடுக்கப் பட்டுச் செருக்கு அடையவுமில்லை. மனச் சாட்சியைப் பரிசீலனை செய்யும் போது, தன்னம்பிக்கையை அலசி ஆராய்ந்து, அதற்கு மெருகு கொடுக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு ஏற்படவில்லை. அவன் உறுதியான ஆளுமை படைத்தவனா? அதுவும் அவனுக்குத் தெரியாது. அதில் ஒருவேளை அவன் கொண்டிருந்த எண்ணம் மிகத் தவறானதாக இருந்திருக்கக் கூடும். ஆனால் தன் உறுதியில் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்த மனிதன் அவன், என்பது மட்டும் உண்மை. இப்பொழுது கூட, தனக்குச் சொந்தமான அனுபவங்களையும் குணங்களையும் பெற்றிருப்பதற்கும், அவற்றிலிருந்து வேற்றுமையாக இருப்பதற்கும், உள்ள வேறுபாடு, மன நோக்கில் உள்ள வேறுபாடு என்பதிலும், ஒரு வகையில் இயற்றி நிலையின் செயல், அல்லது, பொதுமை, தனித்துவம், என்பவற்றிற்கு இடையே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிலையில் வாழும் முறை, என்பதிலும் கூட அவனுக்கு ஐயப்பாடு சிறிதுமில்லை. எளிய முறையில் சொல்ல வேண்டுமென்றால், ஒருவனுக்கு ஏற்படும் அனுபவங்களையும், ஒருவன் செய்யும் செயல்களையும் பற்றி ஒருவன் கொண்டுள்ள மன நோக்கு, பொதுமையானதாகவும் இருக்கலாம், நேரிடையாகத் தனிப்பட்ட முறையிலும் இருக்கலாம். ஓர் அடி விழும்போது அதை வலியாகவும் ஏற்றுக் கொள்ளலாம்; அவமதிப்பாகவும் ஏற்றுக் கொள்ளலாம். அவமதிப்பாக ஏற்றுக் கொண்டால், வலி தாங்கமுடியாததாகும். ஆனால் உற்சாகம் இழக்காமல் துணிவுடன் அதை ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம். அது தன்னை அச்சுறுத்தவோ, கண் மூடித்தனமான ஆத்திரம் உண்டாக்கவோ, இடம் தராமல், அதை வெறும் தடையாக ஏற்றுக் கொள்ளலாம், அவ்வாறு செய்தால், பெரும்பாலும், அதைப் பற்றிக் கவலைப் படாமலே இருக்க முடியும். ஆனால் பிந்திய முறையில் எடுத்துக் கொண்டதில், வேறொன்றும் நடக்கவில்லை. அத்தடையைச் சூழ்ந்துள்ள சிக்கலில் ஒரம்சமாகவே கருதியதால், அதைப் போராட்டமாகக் கருதும் உணர்வே மூண்டுள்ளது. அதன் காரணமாய், அத்தடையின் தன்மை, நிறை வேற்றப் பட வேண்டிய பொறுப்பைப் பொறுத்திருக்கிறது. ஓர் அனுபவத்தின் முக்கியத்துவம், அதன் உள்ளடக்கத்திலிருந்தும், காரண காரிய நியாயத்திற்குப் பொருத்தமாயுள்ள செயல்களின் சங்கிலித் தொடரில் அது பெற்றுள்ள இடத்திலிருந்தும் தான் எழுகிறது. அனுபவம் தனிப்பட்ட முறையில் எழுவது என்று மதிக்காமல், ஒருவன் ஆன்மீக

உறுதிக்கு அறைகூவல் என்று மதிக்கும் அனைவரிடமும் இந்த உண்மை வெளிப்படையாய் நிற்கும். அப்பொழுது அவனும் தன் செய்கைகளை, ஏதோ தொலைவில் நேரிட்ட நிகழ்ச்சிகள் போல், இலேசாக அனுபவிப்பான். குத்துச் சண்டையில் ஒரு குறிப்பிட்ட நிலை, உயர்ந்த அறிவின் அறிகுறியாக மதிக்கப் படுகிறது. ஆனால், குத்துக் சண்டையிட இயலாதவர்கள், வாழ்க்கையில் அறிவு சார்ந்த நோக்கு கொண்டிருக்க விரும்புவதால், அதே நிலையை மேற்கொள்ளும் போது, அது அனுதாபமற்ற, உணர்ச்சியற்ற நிலையின் அறிகுறி என்று மதிக்கப் படுவது விந்தையே. நிலைமைக் கேற்ப, பொதுமை நோக்கு கொள்வதா, தனிப்பட்ட நோக்கு கொள்வதா என்பதை வற்புறுத்த அல்லது முடிவு செய்வதற்கு உதவியாக, எத்தனையோ பல வேற்றுமைகளும் வேறுபாடுகளும் பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஒரு கொலைகாரன், உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல், திறமையாகக் கொலை செய்தால், அது மிகக் கொடுமையான மிருகத்தனம் என்று சொல்கிறோம். மனைவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டே, ஒரு பிரச்னை பற்றி மனக் கணக்கு போடும் பேராசிரியரை, சிறிதும் உணர்ச்சியில்லாத, புத்தகப் புழு என்போம். சாகடிக்கப் பட்டவர்கள் மேல் ஏறி நிற்கும் அரசியல்வாதி, வெற்றி பெற்றால், மாபெரும் தலைவனென்றும், வெற்றி பெறுவிடில் கயவன் என்றும் கூறுவோம். ஆனால் எந்த உணர்ச்சியில்லாமல் செயலாற்றும் தன்மையை மற்றவர்களிடம் கண்டிக்கின்றோமோ, அதே தன்மையை சிப்பாய்களும், தூக்குமேடைப் பணியாளரும், அறுவை சிகிச்சை நிபுணர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். இந்த எடுத்துக் காட்டுகளில் பொதிந்துள்ள நியாயத்தை மேலும் துருவி ஆராயத் தேவையில்லை. ஒவ்வொன்றிலும் நிச்சயமற்ற குழப்பான நிலைமை உள்ளதென்பதும், அதன் விளைவாய்ப் புறநிலைப்படி நேர்மையான நடத்தைக்கும் தனிப்பட்ட முறையில் நேர்மையான நடத்தைக்கும் நடுவே ஓர் இடைநிலையைத் தேடுகிறோம் என்பதும் தெளிவாகிறது.

இந்தத் தெளிவற்ற தன்மையே உல்ரிஷின் சொந்த வாழ்வுப் பிரச்னைக்குப் பின்னணியாய் அமைந்தது. உயர்ந்த மனச்சாட்சியுடைய மனிதனுய் வாழ்வது, இன்றைவிட முந்திய காலங்களில் எளிதாக இருந்தது. வயலில் பருத்திக் கதிர்களைப்போல் மனிதர்கள் இருந்தனர். இன்றைவிட, அன்று, ஆண்டவன், ஆலங்கட்டி மழை, நெருப்பு, நோய், போர் ஆகியவற்றால் அவர்கள் அதிகம் அலைக்கழிக்கப் பட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த முன்னேற்றம், நகரங்கள், கிராமப்புறம், வயல்கள் ஆகியவற்றில் மொத்தமாய் ஏற்பட்ட ஒன்று. தனிப்பட்ட கதிர் சொந்தமாய் ஆடி அசைவதற்குக் கிடைத்த வாய்ப்பு, தெளிவாக அறுதியிடப்பட்டது.

அந்தப் பொறுப்பைத் தெளிவாக நிர்ணயிக்க முடிந்தது. இன்ரே, அதற்கு மாறாக, பொறுப்புணர்வின் ஈர்ப்பு மையம் தனி மனிதனிடம் இல்லை; பொருள்களிடையே உள்ள தொடர்பில் உள்ளது. மனிதனைவிட்டுப் பிரிந்து, தங்களுக்கென்று தனியாக ஓரிடத்தை அனுபவங்கள் பெற்றுள்ளன. அந்த அனுபவங்கள் நாடகமேடையில் ஏறியுள்ளன; புத்தகங்களிலும், விஞ்ஞானக் கழகங்கள், ஆராய்ச்சிப் பயணங்கள் ஆகியவற்றின் அறிக்கைகளிலும், புகுந்துள்ளன. சமூக ஆராய்ச்சிப் பரிசோதனைகளில்போல், மற்றவர்கள் அனைவரையும் பயன்படுத்திச் சில வித அனுபவங்களை உருவாக்கும், நம்பிக்கைகள் அல்லது சமயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகத் தொகுதிகளில் புகுந்துள்ளன. வேலையில் கிடைக்காத அனுபவங்களைப் பொறுத்தவரை, அவை காற்றிலே சஞ்சரிப்பதுபோல் பரவியுள்ளன. நீ கோபம் கொள்ளும்போது, அதில் பல தலையிட்டு, அந்த விவகாரம் பற்றி உன்னைவிட அதிகம் தெரிந்து வைத்திருக்கும் நிலையில், உன் கோபம் உனக்கே சொந்தமான கோபம் என்று எப்படிக் கூற முடியும்? குணங்களைத் தாங்கிக் கொள்ள மனிதன் இல்லாமலே, குணங்கள் நிறைந்த ஓர் உலகம், அனுபவிக்க யாரும் இல்லாமலே அனுபவங்கள் நிறைந்த ஓர் உலகம், இன்று எழுந்துள்ளது. இலட்சியச் சூழ்நிலையில் மனிதன் எதையுமே அனுபவிக்க முடியாது போலவே தோன்றுகிறது. தனி மனிதனின் சொந்தப் பொறுப்பு என்ற கோட்பாட்டில் ஆறுதல் அடைவதற்குப் பதிலாக, புதிதாகக் காணக்கூடிய உட்பொருள் கொண்ட சூத்திரங்கள் அடங்கிய விதிமுறை உருவாகியுள்ளது போல் தோன்றுகிறது. மனிதனையே, பிரபஞ்சத்தின் மையமாகக் காணும் போக்கு நீண்ட காலமாகத் தடைப்பட்டு, இப்பொழுது சில நூற்றாண்டுகளாகக் கரைந்து வருகிறது. இந்த மனித மையக் கொள்கை கரைந்ததனால், ஆளுமையே பாதிக்கப்படத் தொடங்கியுள்ளது என்று கூற இடமுண்டு போலும். ஏனென்றால், அனுபவத்தின் முக்கிய அம்சம், அதை அனுபவிப்பதுதான் என்றும், செயலின் தலையாய அம்சம் அதைச் செய்வதுதான் என்றும் கருதும் நம்பிக்கை, வெறும் ஜாலம் என்று பெரும்பான்மையான மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளனர். அனுபவங்களை நேரடியாகத் தாமே அனுபவிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். 'நேற்று இவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தோம்,' 'இன்று இதை அல்லது அதைச் செய்யப் போகிறோம்,' என்று கூறுபவர்கள், அந்தக் கூற்றில் வேறெந்த உட்பொருளையோ நுணுக்கத்தையோ எதிர்பார்க்காமல், நேரடியான அந்த அனுபவத்தில் திளைப்பவர்கள். தங்கள் கைவிரல்கள் தொடும் எல்லாப் பொருள்களும் அவர்களுக்குப் பிடித்தமானவை. தனி மனிதன் எவ்வளவு அந்த

ரங்கமாய் இருக்க முடியுமோ, அவ்வளவு அந்தரங்கமான, சொந்தமான, வாழ்க்கையை அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டவுடன், உலகம், தனியான அந்தரங்கமான உலகமாகி, வானவில் போல் ஒளி வீசுகின்றது. அவர்கள் ஒரு வேகோ இன்பமாய் இருக்கலாம். ஆனால் அத்தகைய மனிதர்கள் சாதாரணமாய் இப்பொழுது மற்றவர்களுக்கு வேடிக்கை மனிதர்களாய்க் காணப்படுகின்றனர். அது ஏன் என்பது மட்டும் இன்னும் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை.

திடீரென, இந்தச் சிந்தனைகளுக்கிடையே, தனக்கெனக் குணம் எதுவுமில்லாத போதிலும், தான் ஒரு விசித்திர குணப் பிறவி, என்று உல்ரிஷ், சிரித்துக்கொண்டே, தனக்குத் தானே ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

பெர்த்தோல்த் பிரெஹ்ட்

பெர்த்தோல்த் பிரெஹ்ட் (1898–1956) இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த, கவி, நாடகாசிரியர்களில் ஒருவர். அவர் நாடகப் படைப்புகளும், அவற்றிற்குத் துணையாக அவர் எழுதிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், நம் காலத்து நாடக இலக்கியத்துக்கு வழிகாட்டியாய் அமைந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளன. கலையின் உன்னத வெளிப்பாடும், வரலாற்று அரசியல் குறிக் கோளும் இலட்சிய உணர்வும், பிரெஹ்டின் படைப்புகளில் இணை யற்ற முறையில் இணைந்துள்ளன.

பிரெஹ்ட், தெற்கு ஜெர்மனிப் பகுதியில் ஆக்ஸ்பர்கில் 1898இல் பிறந்தார். எழுத்தாளராகவும், நாடக இலக்கிய ஆலோசகராக வும் அவர் மூனிக், பெர்லின் நகரங்களில் பணியாற்றினார். 1933இல் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், அவர் முதலில் ஆஸ்திரி யாவிற்கும், அங்கிருந்து டென்மார்க், ஸ்வீடன், ருஷ்யாவுக்கும் சென்று, இறுதியில் அமெரிக்காவில் குடியேறினார். போருக்குப் பின் அவர் ஜெர்மனி திரும்பி, கிழக்குப் பெர்லினில் தங்கித் தன் கடைசி காலம்வரை, தன் நாடகங்களை அரங்கில் தயாரித்து அளிப்ப தில் ஈடுபட்டார். சில்லரை முதலாளி வர்க்கத்தையும், அதன் எண்ணங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றையும், கேளிக்கை யையே நோக்கமாகக் கொண்டு கருத்துக்கள் பற்றிக் கவலைப்படாத சில்லரை முதலாளி வர்க்க நாடகங்களையும், அவர் தொடக்கத்தில் தீவிரமாக விமர்சனித்தார். அந்தக் கட்டத்தில், தனி மனிதன் தன் வாழ்வில் நிறைவு காண்பதில் தடை எதுவும் இருக்கக்கூடாது என்ற கருத்தே, அவருடைய இன்மைக் கொள்கையின் ஆக்க பூர்வ அம்சமாய் அமைந்திருந்தது. பிரெஷ்ட் மார்க்சிய சித்தாந் தத்தை ஏற்றுக் கொண்டபோது, ஒரு திருப்பம் ஏற்பட்டது. அப் போது முதல், அவருடைய நாடக, ஆராய்ச்சிப் படைப்புகள் அனைத் திற்கும் மார்க்சிய சித்தாந்தமே அடிப்படையாய் அமைந்தது. நவீன யுகத்தைச் சித்திரிப்பதற்கு உகந்ததாகவும், அதே சமயத்தில் கலையுத்திகள் மூலம், ரசிகர்களின் மனத்தை ஆட்கொண்டு கருத்தை மாற்ற வல்லதாயும் அமைந்த, ஒரு புது நாடகப் பாணியை அவர் உருவாக்கினார். மனிதனின் தலைவிதியை நிர்ண யிக்கும் சக்திகளான, சமுதாய வர்க்கம், பொருளாதார முன்னேற் றம், வரலாற்றுச் சூழ்நிலைகள் ஆகியவற்றை அவர் அரங்கில் வெளிப்படுத்தினார். உணர்ச்சிகளை மட்டுமே தூண்டிய, கற்பனை சஞ்சாரங்கள் நிறைந்த பழைய நாடகங்கள் போலல்லாமல், ரசிகர் கள் தாமாகச் சிந்தித்துப் பார்க்கத் தூண்டும் முறையில், அவர் நாடகங்களைத் தயாரித்தார். பிரெஹ்டின் நாடக அரங்கில், நாட கம், நாடகமாக அளிக்கப்படுகிறது. நடிகர்கள், வெவ்வேறு

போக்குகளைச் சித்திரித்து, தாங்கள் பார்ப்பதைத் திறனாய்வு செய்யுமாறு ரசிகர்களையே அழைத்தனர். நாடகப் போக்கும், அதற்கு அடிப்படையான, சமூக நிலைமைகளும், தோரணங்களில் கோஷங்கள் மூலமாகவும், இடையிடையே சில பாடல்கள் மூலமாகவும், நாடகத்தில் கதையை எடுத்துச் சொல்லும் சூத்திரதாரி மூலமாகவும், விளக்கப்பட்டன. மேடையில் காட்டப்படுவது, வழக்கத்துக்கு மாறுபட்டதாகவும், முரண்பாடுகள் நிறைந்ததாகவும் சித்திரிக்கப்பட்டது: ஆகவே ரசிகர்கள், தாங்கள் பார்ப்பதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், நாடகப் போக்கு பற்றிச் சிந்தித்துத் தாங்களே சில முடிவுகளுக்கு வர, வழி செய்யப்பட்டது. உலகம் மாறிக் கொண்டிருக்கிறது என்பது சித்திரிக்கப்பட்டது. உலகத்தை மாற்ற உதவுவதே பிரெஹ்ட்டின் நாடக அரங்கின் நோக்கமாக இருந்தது. சில்லரை முதலாளி வர்க்க நாடக அரங்கிலிருந்து தோன்றிய இப்பாணி, அந்த சமுதாயத்தையே நோக்கிப் பேசி, அதன் சூழ்நிலைகளைச் சித்திரித்துத் திறனாய்வு கொண்ட ரசிகர் அந்தச் சூழ்நிலைகளின் முரண்பாடுகளை உணர்ந்து, சமதர்ம சமுதாய அடிப்படையில் அவற்றிற்குத் தீர்வு காணுமாறு தூண்டியது. முரண்பாடுகளை அறிவு பூர்வமாய் ஆராய்ந்து, ரசிகர்களை விவாதத்தில் ஈடுபடுத்தும் தம் புதிய பாணியை, பிரெஹ்ட் மேலும் மேலும் அதிகத் திறமையுடன் தம் நாடகங்களில் புகுத்தினார். ஆனால் மேலைநாட்டு உலகில், ரசிகர்களின் சமுதாயச் சார்புகளும் தன்மைகளுமே, பிரெஹ்ட்டின் பாணியின் குறிக்கோளுக்குக் குந்தகமாய் அமைந்தன. ஆனால் அது ஒரு புறமிருக்க, நாடகத்தின்மூலம் இவ்வளவு சாதிக்க முடியும் என்று பிரெஹ்ட் எண்ணியது மிகையானதல்லவா என்ற கேள்வியும், ரசிகப் பொதுமக்களிடம் இவ்வளவு அறிவாற்றலும் ஆய்வுத் திறனும் இருக்குமென்று அவர் எதிர்பார்த்தது தவறல்லவா என்ற கேள்வியும் எழுந்து நம்மைத் திகைக்க வைக்கின்றன. சொந்த நாட்டைவிட்டு வெளியேறியிருந்தபோது, அவர் ஆக்கிய சிறந்த படைப்புகளில் சில? 'கலிலியோவின் வாழ்க்கை', 'அன்னை வீரமும் அவள் குழந்தைகளும்,' 'காக்கேசிய சாக் வட்டம்,' ஆகியவை.

'ஸெட்ஸுவானில் ஒரு நல்ல பிறவி'

'ஸெட்ஸுவானில் ஒரு நல்ல பிறவி' (1942) என்ற நாடகத்தின் இறுதியுரையில், தன் படைப்புகள் அனைத்திலும் தன் நோக்கமாய் அமைந்துள்ளதைத் தெளிவாக பிரெஹ்ட் விளக்குகிறார்: பிரச்னைகள் என்ன என்பதை நாடகம் சுட்டிய பின்னர், ரசிகர்கள் தாமே அவற்றிற்குத் தீர்வு என்று கண்ட பின், அரசியல் நடவடிக்கை மேற்கொள்ள அவர்கள் முன்வரலாம். நாடகமேடை

நிகழ்ச்சியிலிருந்து, நாடகத்தின் பிரச்னை எழுகிறது. இன்பமான, நல்ல பிறவி ஒன்றை நாடி, மூன்று தேவர்கள் ஸெட்ஸுவானுக்கு வருகின்றனர். அனுதாபமிக்க வேசி, ஷென்தெயை அவர்கள் சந்திக் கின்றனர். அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது. அந்தக் குழந்தையை அவள் பேணி வளர்க்கப் போகிறாள். ஆயினும் அன்றையச் சமூகச் சூழ்நிலையில், அவளுடைய நல்ல பண்புகளால் அவளுக்குச் சோதனைகளும் சங்கடங்களுமே ஏற்படுகின்றன. அவளுக்குப் பணம் கொடுத்தவர்கள் அவளை நிர்ப்பந்திக்கின்றனர். பட்டினியால் வருந்தும் மற்றவர்கள் அவளை ஏமாற்றிச் சுரண்டு கிறார்கள். உடலும் உயிரும் ஒட்டியிருக்கச் செய்வதற்கும், தன் குழந்தையைப் பராமரிப்பதற்கும், ஷென்தெ மாறுவேடம் பூண்டு, தன் ஒன்றுவிட்ட சகோதரி ஷுயிதாவின் பெயரை ஏற்றுக் கொள் கிறாள். அந்த வேடத்தில், அவள் மற்றவர்களிடமிருந்து ஈவு இரக்கமின்றிப் பணம் கறந்து, ஒரு தொழிற்சாலையே நிறுவி, முதலாளித்துவச் சுரண்டல் முறையில் அதை நடத்துகின்றாள். அவள் இதுபோல் இரட்டை வாழ்வு வாழ்வதைத் தேவர்கள் கண்டு கொண்டதும், அவர்கள் திகைப்படைந்து, தேவலோகத்துக்கே திரும்பி விடுகின்றனர். கதியற்ற ஷென்தெ தனிமையில் தவிக் கின்றாள்.

இறுதியுரை :

நாடக மேடையில் ஒரு நடிகர் தோன்றி, வருத்தமும் விளக்கமும் தெரிவிக்கும் முறையில், ரசிகர்களுக்கு இறுதியுரை கூறுகின்றார்.

நடிகர் :

நாடகத்தைக் காணவந்த பெரியீர் மற்றும்
தாய்க்குலத்தீர்! ஏமாற்றங் கொள்ளல் வேண்டா!
நாடகத்து முடிவுகண்டு சிலபேர் உம்முள்
முகஞ்சுளித்தீர் நலக்குறைவைப் புரிந்து கொண்டோம்!

பொன்னான புராணத்துக் காதை ஒன்றை
வழங்கத்தான் நினைத்ததெலாம்: முடிவோ வேறாய்
நின்றதுபோல் இடைநடுவே ஆன தென்றால்
நிலையினையாம் சமானித்த தறிவீர் அன்றே?

பார்ப்பவர்கள் ஏமாற்றம் அடைந்தா ரென்றால்
படுத்திடுமே தொழிலெமக்கு; உண்மை சொன்னால்
பார்ப்பவர்கள் ஏற்கவில்லை என்றால் எங்கள்
நாடகமும் பரிதாபத் தோல்வி தானே?

அரங்கத்து அச்சந்தான் அனைத்து மெம்மை
மறக்கச்செய் திடுமென்றால், அதுவும் உண்டே;
சிறப்பாக விளங்குதற்கே இன்னும் என்ன
மாற்றங்கள் செய்திடலாம் கருத்தைச் சொல்மின்!

கலீஞரது நடிப்பையின்னும் கூட்ட லாமா;
அன்றியிந்த உலகைமாற்றிக் காட்ட லாமா;
இலையந்தக் கடவுளரை மட்டும் மாற்றி
ஒருவருமே இலாதபடி செய்ய லாமா?

குறைவில்லா துழைத்திட்ட உணர்வெங் கட்கு;
நல்முடிவு கொண்டகதை வழங்கு தற்கு
உரையுங்கள் வழி; நாங்கள் பிழைப்ப தற்கே
உள்ளவழி இதுவொன்றே புரந்த ருள்வீர்!

பெருமக்காள், தாய்க்குலத்தீர்! உம்மை நாங்கள்
பெரிதாக நம்பியுள்ளோம்; நீங்கள் செய்யும்
ஒருமித்த மகிழ்ச்சிதரும் முடிவெங் கட்கு
வேண்டுமய்யா வேண்டுமம்மா வேண்டும் வேண்டும்!

லா சியோதாத் சிப்பாய்

பாசிச இத்தாலியின் படைவீரர்கள் எத்தியோப்பா மீது படையெடுத்தபோது, 1935இல் 'லா சியோதாத் சிப்பாய்', பிரெஞ்சிலுல் எழுதப்பட்டது. போர்க் காயங்களினுல் ஒரு சிப்பாய் உடலுணர்வு கனை இழந்து, விறைத்த தோற்றம் கொள்ளமுடிகிறது. இந்த விபரீத ஆற்றலையே பயன்படுத்தி, அதை மற்றவர்களுக்கு விந்தைக் காட்சியாகக் காட்டிப் பிச்சை கேட்கிறுன். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆதிக்க ஆட்சியாளரால் மூட்டப்பட்ட போர்களில் பங்கெடுத்து, அடக்கப்பட்ட நிலையில் தாங்கள் இருப்பதால் அப் போரில் அக்கறையோ அதனுல் பலனே பெறுமல், கைப்பாவை களாகப் பயன்பட்டு, உலக வரலாற்றில் உருத்தெரியாமல் சிதைந் துள்ள எல்லா சிப்பாய்களின் சின்னமாக, இந்தச் சிப்பாய் சித்திரிக்கப்படுகிறுர். இந்த அவலநிலையின் கொடுமையைக் காணும் பிரெஞ்ட், இச் சூழ்நிலைகளை மாற்றி விமோசனம் பெறமுடியாதா என்ற கேள்வியை எழுப்புகிறுர்.

தெற்குப் பிரான்சில், சிறிய துறைமுக நகரமான லா சியோதாத்தில், முதல் உலகப் போருக்குப் பின், ஒரு புதுக் கப்பலின் கீரோட்டத்தை ஒட்டி நடந்த கேளிக்கை விழாவில், ஒரு பொதுச் சதுக்கத்தில், பிரெஞ்சுப் போர் வீரர் ஒருவரின் வெண்கலச் சிலையைச் சுற்றி ஒரு கூட்டம் சூழ்ந்து நின்றதைக் கண்டோம். அருகில் சென்றபோது, அது சிலையல்லவென்றும் உயிருள்ள ஆள்

என்றும் கண்டோம். பழுப்புச் சாம்பல் நிறத்தில் நீண்ட அங்கியும், தலையில் தகரத் தொப்பியும் அணிந்து கொண்டிருந்த அச் சிப்பாய், கையில் ஈட்டித் துப்பாக்கியைத் தயாராகத் தாங்கிக் கொண்டு, கடுமையான ஜூன் மாத வெய்யிலில், அசைவற்று ஒரு பலகை மீது நின்று கொண்டிருந்தான். அவனுடைய முகத்திலும் கைகளிலும் வெண்கலப் பூச்சு பூசப்பட்டிருந்தது. அவன் உடலில் ஒரு தசைகூட அசையவில்லை. கண் இமைகள் படபடக்கவில்லை.

அவன் காலடியில், ஓர் அட்டையில் கீழ்க்கண்ட குறிப்பு எழுதி வைக்கப்பட்டிருந்தது:

மனிதச் சிலை

'...பட்டாளத்தைச் சேர்ந்த சிப்பாயான நான் சார்லஸ் லூயி .பிரயின்சார்ட், வெர்தூனில் உயிரோடு புதைக்கப்பட்ட காரணத் தால், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சிறிதும் அசையாமல் ஆடாமல் சிலைபோல் நிற்கும் அபூர்வ ஆற்றலைப் பெற்றுள்ளேன். இந்த ஆற்றலைப் பல நிபுணர்களும் பரிசீலனை செய்து, அது இனம் கண்டு கொள்ள முடியாத ஒரு நோய் என்று கூறியுள்ளனர். வேலையில்லாமல் திண்டாடி, ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்புள்ள எனக்குச் சிறிது நன்கொடை அளித்து உதவுங்கள்.'

அந்த அட்டையின் அருகே இருந்த தட்டில் நாங்கள் ஒரு காசை வீசி விட்டுத் தலையை அசைத்துக் கொண்டே சென்று விட்டோம்.

காலத்தால் அழிக்கப்படாத சிப்பாய், வரலாறு படைக்கப் படுவதற்குப் பயன்பட்டவன், நாம் பள்ளிப் புத்தகங்களில் படிக்கும் வீர தீர சாகசச் செயல்களை அலெக்சாந்தர், சீசர், நெப் போலியன் ஆகியோர் சாதித்ததைச் சாத்தியமாக்கிய சிப்பாய், இதோ, ஆயுதம் தாங்கிப் போருக்கு ஆயத்தமாய் நிற்கிறான் என்று நாங்கள் எண்ணினோம். அந்தச் சிப்பாய் தான் இவன். கண்ணிமைகளைக் கூட இவன் அசைப்பதில்லை. சிரஸ் படையின் வில்வீரன்; பாலவனத்தின் மணற் பரப்பும் கூட எக்காலத்துக்கும் அழித்து விட முடியாத, கேம்பிஸ் வீரனின், அரிவாள் பொருத்திய சக்கரங்கள் கொண்ட தேரை ஓட்டுபவன்; சீசரின் படைவீரன்; செங்கிஸ் கானின் குதிரைப் படையாள்; பதினாலாம் லூயி மன்னரின் ஸ்விஸ் காப்பாளன்; முதலாம் நெப்போலியனின் எறிகுண்டு வீரன் அனைவரும் இவன் தான். எந்தக் கொடுமையான அழிவுக் கருவி இவன் மீது பரிசோதிக்கப் பட்டாலும், தன் உணர்ச்சிகளை இம்மியளவு கூட வெளியில் காட்டாத ஆற்றல்—அது அவ்வளவு அபூர்வமான ஆற்றல் அல்ல தான்—

உடையவன் இவன். சாவை நோக்கி அனுப்பப்படும் போதும், உணர்வில்லாமல், கல்போல் நிற்பவன் இவன் என்று தானே கூறுகிறான். கல், வெண்கல, இரும்பு யுக ஈட்டிகளால் குத்தப் பட்ட போதும், ஆர்டாக்ஸெர்ஸெஸ், அல்லது தளபதி லூடர்தோ அனுப்பிய போர்ச் சகடத்தால் வெட்டி வீழ்த்தப்பட்ட போதும், ஹானிபாலின் யானைகளாலும் ஆட்டிலாவின் குதிரைகளாலும் கீழே மிதித்து நசுக்கப் பட்ட போதும், பல நூற்றாண்டுகளின் பக்குவத்தின் பயனுய் மேலும் மேலும் பயங்கர மாக்கப்பட்டுள்ள பீரங்கிகளிலிருந்து சிதறும் உலோகத் துண்டுகளால் சின்ன பின்னமாக்கப்பட்ட போதும், கவண்களிலிருந்து வீசப்படும் சிறு கற்களாலும், புரு முட்டை போன்ற பெரிய துப்பாக்கி ரவைகளா லும், வண்டுகள் போன்ற சிறு ரவைகளாலும், உடலெல்லாம் சல்லடையான போதும் அழியாமல் நின்று, வெவ்வேறு மொழி களில் புதுப்புது ஆணைகளை, ஏன், எதற்காக, என்பதை எப்பொழுதும் அறியாமலே ஏற்றுக் கீழ்ப்படியக் காத்து நிற்கும் சிப்பாய் இவன். வென்று கைப்பற்றிய நிலங்களை உடைமை யாக்கிக் கொண்டது இவனல்ல. கொத்தனுர், தான் கட்டிய வீட்டுக்கு உரிமையாளன் அல்ல என்பது போலவே. இவனுடைய போர்க்கு கருவிகளும் போர்ச் சீருடை, சாதனங்களும் கூட இவனுக்குச் சொந்தமானவையல்ல. ஆனல் விமானங்களி லிருந்து கொட்டும் நிலக் கிலேயும், தன் காலடியிலேயே வெடிக்கக் கூடிய சுரங்கக் குண்டுகளையும் பொருட்படுத்தாமல் தன்னைச் சுற்றிலும் உள்ள நோய்க்கும், நச்சு வாயுவுக்கும், ஈட்டிக்கும் அம்புக்கும் இலக்காக, பிரங்கி வண்டிப் பசையாக, விஷவாயுவை உறிஞ்சும் பொருளாக எதிரி தனக்கு முன்னலும், தளபதி தனக்குப் பின்னலும் இருக்க உயிரைப் பணயம் வைத்துக் காத்து நிற்கிறான் இவன்.

அவன் போரங்கியைத் தைத்து, போர்க் கவசத்தைப் பின்னி, அவனுக்குக் காலணிகளைத் தயாரித்து, அவனைப் போருக்கு ஆயத்தம் செய்து அனுப்பிய கைகள் தான் எத்தனை எத்தனையோ! அவனல் நிரப்பப்பட்ட பைகள் தான் எத்தனையோ! அவனை உந்தித் தூண்டி, ஒவ்வொரு மொழியிலும் பேசப்பட்ட சொற்கள் எத்தனையோ! அவனுக்கு ஆசி கூறுத கடவுள் கிடையாது. பொறுமை எனும் தொழு நோயால் பீடிக்கப்பட்டு, உணர்ச்சி யற்ற தன்மை எனும் தீராத நோயால் சத்தெல்லாம் உறிஞ்சப் பட்டு, நிற்பவன் அவன்.

இந்தப் பயங்கரக் கொடிய தொற்று நோய் இவனுக்கு ஏற்படக் காரணமாய், உயிரோடு அவன் புதைக்கப்பட்டது எப்படி, ஏன், என்று நாங்கள் எண்ணினேம்.

இதற்கெல்லாம் ஒரு முடிவு, ஒரு விமோசனம், இருக்கத்தான் வேண்டுமல்லவா என்று எங்களை நாங்களே கேட்டுக் கொண்டோம்.

துன்பவியல் பற்றி முப்புற விவாதம்

கீழே தரப்பட்டுள்ள பகுதி, 1940இல் பிரெஹ்ட் எழுதியது. அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சில சமயங்களில் உரையாடல் வடிவில் எழுதப்பட்டன. வெவ்வேறு தரப்புக் கருத்துக்களையும் தெளிவாக எடுத்துரைத்துப் படிப்பவர்களுக்கு எளிதில் விளங்க அவை உதவின. உலகம் மாறும் ஆற்றல் உடையது. ஆகவே பழைய, வைதீக மரபுப்படி, துன்பவியல் ஒங்கி நிற்கத் தேவையில்லை என்பதை உணர்த்தும் புது நாடக அரங்கை ஆதரித்துத் தோமாஸ் பேசுகிறார். துன்பவியலின் அடிப்படைகள் பற்றியும் ரசிகர்களிடையே அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் நடக்கும் இந்த விவாதம், முரண் பாட்டுத் தத்துவ அடிப்படையில் அமைந்த நாடக அரங்கின் முக்கிய அம்சங்களையும் விளக்குகிறது.

கரார்ல்: நாடகத்தை அமைப்பது பற்றி நீங்கள் பேசுவதைக் கேட்கும் போது, இன்பவியல் நாடகத்திலிருந்து குறிப்பிட்ட சில அம்சங்களை எடுத்து, கருத்து நாடகத்திலும் அவற்றை அப்படியே கையாண்டுள்ளது போல் எனக்குத் தோன்றுகிறது. நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு மனப் போக்கைக் கடைந்தெடுத்துக் காட்டும் பாணியை நீங்கள் உங்கள் நாடகங்களில் கையாள்கிறீர்கள். அது மிக மட்டமான கேலிக் கூத்து நாடகத்திலும் கையாளப் படும் பாணியல்லவா? அத்தகைய நாடகம் ஒன்று என் நினைவிற்கு வருகிறது. ஒருவன் தன் மகள் தன்னைப் பராமரித்து வர அனுமதித்து வந்தான். ஒரு நாள் அவன் தன் காம இச்சையை நிறைவேற்ற வெளியில் செல்ல விரும்பினான். அவன் மகள் குறுக்கே நின்றது அவனுக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. இதுவரை அவளிடமிருந்து கிடைத்து வந்த பாதுகாப்பு, அந்தரங்கத்தின் அடித்தளத்தில் ஒரு கடுமையான ஆதிக்கமாக அவனுக்கு அப் பொழுது தோன்றியது. நாடகம் பார்த்த ரசிகர்களுக்கும் அவ்வாறே தோன்றியது. சமூக நோக்கு ஒன்றை நிகழ்ச்சிகளின் போக்கிலிருந்து கடைந்தெடுத்துக் காட்டும் பாணிக்கு அது ஓர் எடுத்துக்காட்டு அல்லவா?

தோமாஸ்: ஆம்.

கரார்ல்: ஆனால் கேலி நாடகத்திலிருந்து இத்தகைய உத்தி களை அப்படியே இழுத்துக் கருத்து நாடகத்தில் புகுத்தினால், துன்பவியல் தன்மைக்கு ஊறு நேரிடுவதில்லையா?

லூகாஸ்: இத்தகைய உத்திகளால் துன்பவியல் தன்மை குலைந்து விடுமென்று நான் கூட எண்ணுகின்றேன். ஏனென்றால் துன்பவியல் நாடகத்தில் புகுத்தப்படும் கேலிக் காட்சிகள், துன்பத்திற்கு நடுவே, நம்மைச் சுற்றியுள்ள சாதாரண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கின்றன. துன்பவியல் தன்மையை வற்புறுத்த, குறிப்பிட்ட நிகழ்ச்சி, பொதுவான போக்கிலிருந்து பிரித்துக் காட்டப்படுகிறது. அது மட்டுமல்ல, சாதாரண நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பது போலவே, பெருங்கோடுகளும் சித்திரிக்கப்படுகின்றன, அல்லவா?

தோமஸ்: அப்படித்தான். ஒன்று மட்டும் கூறுவேன். ஷேக்ஸ்பியர் நாடகங்களில், துன்பவியலின் சித்திரம், சாதாரண மாய் இன்பவியல் நாடகங்களிலும் கேலி நாடகங்களிலும் காணப்படும் அம்சங்களினால் வலுப் பெறுகிறதென்றே சொல்ல வேண்டும். ஷேக்ஸ்பியர் பாணியில் எழுத வேண்டுமென்று முயலும் இரண்டாந்தர நாடகாசிரியர்கள் நாடகங்களில், இன்பக் காட்சிகளுக்கும் துன்பக் காட்சிகளுக்கும் இடையே முரண்பாடு வற்புறுத்தப்பட்டு மிகையாகத் தோன்றுகிறது. ஷேக்ஸ்பியர் நாடகங்களை எடுத்துக் கொண்டால், அந்த நாடகங்களின் அடிப்படைத் தன்மை, கேலிக் காட்சிகளால் குறைந்தோ மங்கியோ விடவில்லை. இன்னும் சொல்லப் போனால், இவ்வாறு வாழ்க்கையோடு ஒட்டி இருப்பதால், அந்த அடிப்படைத் தன்மை வலுப் பெறுகிறது.

லூகாஸ்: ஆனால் உங்கள் நாடகங்களில், அடிப்படைத் துன்பவியல் தன்மை உண்மையில் கேலிக் காட்சிகளில் மறைந்து விடுகிறதல்லவா? அது எனக்கு வியப்பு அளிக்கவில்லை. இலட்சிய உலகை நாடும் உணர்வை அதில் காண்கிறேன். சமுதாய அநீதிகளை ஒழித்து விடுவதன் மூலம், உடனடியாக, ஒவ்வொருவருக்கும், பொதுவான, சமமான, இசைவான, இன்பம் கிட்டிவிடுமென்ற மேல்வாரியான, பெரும்போக்கான இனிமை நம்பிக்கை உணர்வு அதில் காணப்படுகிறது. இந்த அநீதிகளை எதிர்த்து நடக்கும் போராட்டத்தின் போதே, இவை மீங்கிவிடும் என்ற நம்பிக்கையின் காரணமாய், இது தற்காலிகமான, இடைக்காலத் துன்பம் என்ற எண்ணத்தில், துன்பப்படும் மனித சமுதாயத்தின் குறைகள் பற்றியும் தனி மனிதர் குறைகள் பற்றியும் மெத்தனமான போக்கு வளர்ந்து விடுவதும் இதில் தென்படுகிறது.

தோமஸ்: கூடியவரை, 'இன்ப உலகம்', 'இனிமை நம்பிக்கை,' 'இன்பம்' போன்ற பொதுப்படையான சொற்களைக் கையாளாமலே, நாம் இந்த உரையாடலை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன். 'துன்பவியல் தன்மை' என்ற சொற்கள், கலை நுகர்வுத் துறையில் நாம் சஞ்சரிக்க நம்மைத் தூண்டுகின்றன

என்பது உண்மைதான். ஆனால் இந்தத் தூண்டுதலுக்கும் நாம் இடம் கொடுக்காமலிருக்க முடியும். நம் நண்பன் கார்ல், இது வரை ஒன்றைமட்டுமே எடுத்துக் காட்டியுள்ளார். மகிழ்ச்சி நாடகங்களில் இதுவரை கையாளப்பட்டு வந்த கேலி அம்சங்கள், தன்மைகள், சிந்தனை முறைகள் ஆகியவற்றைப் புதுப்பாணி படைப்பாளர்களாகிய நாங்கள் கருத்து நாடகங்களிலும் புகுத்தி வருகிறோம் என்பதை மட்டுமே அவர் சுட்டியுள்ளார். கதாநாயகனின் துன்பத்திற்கான சமுதாய அடிப்படையை நிரந்தரமானதாகவும், மனிதனால் மாற்ற முடியாததாகவும், எல்லோரையும் தவிர்க்க முடியாமல் அழுத்தக் கூடியதாகவும், சித்திரிக்கப் புதுப் பாணி நாடகங்கள் தவறுகின்றன. ஆதலால் பழைய பாணி நாடகங்களில் காணப்பட்ட துன்பவியல் தன்மை வெகுவாகப் பாதிக்கப்படும் என்பது உண்மைதான். கதாநாயகனுடன் நாமும் சேர்ந்து ஏங்க வேண்டுமானால், கதியற்ற அவன் நிலையில் நாம் பங்கு கொள்ளவேண்டும். அவன் வாழ்க்கையை நிர்ணயிக்கும் விதியைத் தெளிவாக உணர்ந்து, அவ்வுணர்வால் எழுச்சி பெற வேண்டுமானால், அவன் தனிப்பட்ட வாழ்க்கையில் நடப்பது உண்மையில் மாற்ற முடியாத ஒரு விதியின் நிர்ப்பந்தம் என்று நாம் காணவேண்டும். சமூக அடிப்படை, நடைமுறையில் மாறக் கூடியது, தற்காலிகமானது என்று சித்திரிக்கும் ஒருமுறை, நியதிகள் அநீதிகளாகக் கூடும், கருத்துக்கள் துவேஷங்களாகக் கூடும் என்ற எண்ணத்துக்கு இடம் தருவதால், துன்பவியல் தன்மைக்கு நிச்சயமாக ஊறு செய்யும். ஆனாலும் புதுப்பாணியினால், துன்பவியல் தன்மையைச் சித்திரிக்க இயலாது என்று சொல்ல முடியாது. துன்பவியல் தன்மையை உருவாக்குவது, இந்தப் பாணியின் நோக்கமல்ல. துன்பவியல் சூழ்நிலையைச் சித்திரிப்பதற்காகக் கட்டுக்கதைகள் கற்பனை செய்ய இப்பாணி விரும்பவில்லை. ஆயினும் சமூக அடிப்படையின் வரலாற்றுத் தன்மையையும் நடைமுறைப் பொருத்தத்தையும் சித்திரிக்கையில், துன்பவியல் தன்மையை உருவாக்க முடியுமானால், அதற்கு இப்பாணி இடம் தரும்.

கார்ல்: 'இது இயலும்,' 'இது இயலாது' என்று ஒவ்வொன்றையும் பற்றி குறிப்பிடும் உங்கள் பாணி, அதிலும், துன்பவியல் தன்மைக்கு இடம் தரும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

தேசமரல்: மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையுடன். வேறொரு நடவடிக்கையும் அதே அளவு சாத்தியமே என்ற எண்ணத்தை மனத்தில் கூட்டிப் பார்த்து, இக்கணிப்பை நாடகம் சித்திரித்தாலும் கூட, உண்மையில் நடந்த செய்கை, தேர்ந்தெடுக்கப்பட்ட செய்கை, நம் சிந்தனையைத் தூண்டிக் கவலை உண்டாக்கித் துயர நெகிழ்ச்சியை உருவாக்க முடியுமே!

லூகாஸ்: அது சாத்தியம் என்று நம்பவே நான் விரும்புகிறேன். பழைய பாணி நாடகாசிரியர்களின் நாடகங்களிலும், அவர்களைப் பின்பற்றும் சில இன்றைய எழுத்தாளர் நாடகங்களிலும், எந்த உணர்ச்சி கொள்ளலாமென்ற உரிமை நாடக ரசிகருக்குத் தரப்படவில்லை என்பதை நான் அறிவேன். அங்கு அவனுக்குக் கிடைப்பது வாழ்க்கை அனுபவத்தில் பகுதிகளல்ல; துன்பவியல் உணர்ச்சிப் பெருக்குகளே. அன்றாட வாழ்வில் போதிய பயிற்சியும் பக்குவமும் பெருமல் மந்தமாயுள்ள உள்ளங்களைப் பிடித்துவிட்டு வருடும் முயற்சியே அந்நாடகங்களில் நடக்கிறது. அவர்களுக்காக, வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகளை ஒன்றுய்க் குலுக்கி, துன்பவியல் உணர்ச்சியையோ, மற்ற உணர்ச்சிகளையோ தூண்டும், ஒருவிதக் கதம்பக் கூட்டு தயாரிக்கப் படுகிறது. ஆனல் நாடக ரசிகர்களின் உணர்ச்சி நிலைகளை முன்னதாகவே நிர்ணயிக்க விரும்பாமல், வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் திறமையாகச் சித்திரிக்கவே விரும்பும், புதுப்பாணிப் படைப்பாளர்கள் இப்போக்குக்குப் பொறுப்பல்லவே.

லூகாஸ்: ரசிகர்களின் உணர்ச்சிப் பெருக்கை அவர்கள் தடுக்க விரும்புகிறார்கள் என்று கூடச் சொல்லலாமா?

தோமாஸ்: சில இடங்களில், குறிப்பிட்ட ஒரு முறையில். நாங்கள் உணர்ச்சிப் பெருக்கைத் தடுக்கவும் விரும்பலாம். ஆனல் பொது நியதியாக அல்ல.

லூகாஸ்: பொது நியதியாகவே என்று நான் எண்ணினேன். ஏனென்றால் ரசிகர்கள் முக்கியமாகச் சிந்திக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். உங்கள் கருத்துப்படி, உணர்ச்சிகள் சிந்தனையில் குறுக்கிடுமல்லவா?

தோமாஸ்: இல்லை. அதற்கு மாருக, உணர்ச்சிகள் இல்லாமல் சிந்தனை எப்படி வளர முடியும்? ஆனல் பொருத்தமற்ற சிந்தனைகள் மட்டுமல்ல, போலி, பொய்ச் சிந்தனைகள் இருப்பது போலவே, பொருத்தமற்ற உணர்ச்சிகள் மட்டுமல்ல, போலி உணர்ச்சிகளும் இருக்கின்றன. அவற்றைத் தடுத்தாக வேண்டும். ஆனல் நாம் பிரச்னையைவிட்டு எங்கோ மேய வேண்டாம். துன்பவியல் உணர்ச்சிகளைக் கண்டிப்பாக வரவழைக்கக் கூடிய விதத்தில், நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துக் கோவையாக்கிச் சித்திரிக்கப் புதுப்பாணியினரான நாங்கள் விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்டால் போதும். ஆயினும் சில நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும்போது, இத்தகைய உணர்ச்சி மேலீடுகள் ரசிகர்களிடை ஏற்படக் கூடும்.

காரில்: தன்னைக் கெடுக்காத ஒரு காரியத்திற்குப் பதிலாகத் தன்னைக் கெடுக்கும் ஒரு காரியத்தை ஒருவன் செய்வ

தாகச் சித்திரிக்கும் போது, இத்தகைய உணர்ச்சி மேலீடு எழலாமல்லவா?

லூகாஸ்: பழைய பாணிக்கிணங்க, ஒருவன் தன் இயல்பைப் பின்பற்றும்போது, துன்ப உணர்ச்சிப் பெருக்கு மேலிடும்; ஆனால் அவனுக்கு இயல்பே கிடையாது என்றல்லவா புதுப் பாணியினரான நீங்கள் கூறுகின்றீர்கள்?

தோமாஸ்: இருக்கிறது என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இருந்தாலும், அவன் தன் இயல்புக் கிணங்க நடக்க முடிவதில்லை.

லூகாஸ்: அதை இயல்பு என்று நான் கூறமாட்டேன்.

தோமாஸ்: அது இயல்பு என்றுதான் நாங்கள் கூறுகின்றோம்.
காசல்: அது பெரிய தத்துவ நுட்பமாய் உள்ளதே.

பாட்டாளி இலக்கியம் பற்றிச் சில குறிப்புகள்

இலக்கியத்தில் கருத்து மெய்ம்மை இயல் (realism) பற்றிய தம் கோட்பாட்டை விளக்கும் இக்குறிப்புகள் பிரெஹ்ட்டால் 1940 அல்லது 1941இல் எழுதப்பட்டவை. கருத்து மெய்ம்மை இயலில், அவர் எவ்வித நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் உள்ளவாறே விவரிக்க வேண்டுமென அவர் விரும்பினர். ஆனால் மெய்ம்மை இயலை ஏற்றுக் கொள்வதால், இலக்கியம், தன் வெளிப்பாட்டு வடிவத்திலும் அன்றாட வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டுமென்று அவர் கருதவில்லை என்பதை அவர் நாடகங்கள் தெளிவாக்குகின்றன. ஏனென்றால், பொருள்களின் வெளித்தோற்றம் அல்ல, முக்கியமானது. முரண்பாட்டுநிலை விளக்கம், உண்மையான அடிப்படைச் சூழ்நிலை களை வெளிப்படுத்த வேண்டும். ஆகவே வடிவம், அதன் முரண்பாடு விளக்கம் ஆகியவை அவசியமானவை; அவற்றிற்கு ஒரு காரணமுண்டு. அவரை விளங்கிக் கொள்ளத் தவறிய மார்க்சிய திறனாய்வாளர் அடிக்கடி அவர் மேல் குறை கூறியதுபோல், அவை 'விதிமுறைக் கண்டிப்பு' (formalism) அல்ல.

1. எழுத்து மூலம் போராடு! நீ போராடுகிறாய் என்பதைக் காட்டு! தீவிரமான கருத்து மெய்ம்மை உன் பக்கம் உள்ளது. நீ மெய்ம்மை பக்கத்தில் இரு! வாழ்க்கை பேசட்டும்! அதைக் கட்டுப்படுத்தாதே. அதைப் பேசவிடாமல் சில்லரை முதலாளி வர்க்கத்தினர் தடுக்கின்றனர் என்பதை அறிந்து கொள். ஆயினும் உன்னைப் பேச அனுமதித்துள்ளார்கள். நீ பேசித் தீரவேண்டும். மெய்ம்மையை மறுதலித்து, ஒதுக்கித் தள்ளிப் பூச்சுப் பூசி,

பொய்யாக்கப்படும் இடங்களை நீ தேர்ந்தெடு. பூச்சைப் பெயர்த்தெடு. நீயே தனிமொழி பேசிக் கொண்டிராமல், மறுத்துப் பேசு. மற்றவர் மறுப்பையும் எதிர்ப்பையும் தூண்டு. உயிருள்ள, செயல் திறனுள்ள மனிதனும், அவன் நடைமுறை வாழ்வும், உள்ளது உள்ளபடியே, உன் வாதங்கள். அச்சம் தவிர்; வாய்மையே தலையாயது. உன் முடிவுகளும் திட்டங்களும் உண்மையாக இருந்தால், அவற்றிற்கும் இன்றுள்ள நிலைக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளைத் தாங்கிக் கொண்டு, சிரமங்கள் முழுவதையும் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கமாக ஆராய நீ ஆயத்தமாய் இருக்கவேண்டும். உன் வர்க்கத்தின் இலட்சியம், மனித சமுதாயம் முழுவதற்கும் உரிய இலட்சியம். அதைப் போற்றி வளர்க்க உன்னுள் இயன்றதனைத்தையும் செய். ஆனால் உன் முடிவுகளுக்கும் திட்டங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஒத்து வரவில்லை என்பதற்காக எதையும் விலக்கி விடாதே. ஒரு விசேஷ சந்தர்ப்பம் எழுந்தால், வாய்மையைக் கைவிடுவதற்குப் பதிலாக, உன் முடிவையே கைவிடச் சித்தமாயிரு. ஆனால் அப்பொழுதும், நீ சுட்டிக் காட்டிய கடுமையான சிக்கலும் சிரமமும், சமாளிக்கப் பட்டன என்பதை வற்புறுத்து. நீ மட்டும் போராடவில்லை. போராட்ட ஆர்வத்தை நீ அவனுக்கு ஊட்டினால், உன் வாசகனும் போராடத் தயாராக இருப்பான். நீ மட்டும் பிரச்னைகளுக்குத் தீர்வுகள் காணமாட்டாய்; அவனும் அத் தீர்வுகளைக் காண்பான்.

2. உன் வறுமையை எதிர்த்துப் போராடு. எழுத்தாளன் என்ற முறையில், உன் மேசையினருகே அமர்ந்து, உன் வாழ்வின் அவல நிலையிலிருந்து நீ உன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த தன்மையுடன் நீ அனுபவங்களை எதிர்நோக்க வேண்டும்.

தீவிர கருத்து மெய்ம்மை இயல் என்ற குறிக்கோளுக்கு ஆதரவாகப் போராடுவது பற்றிக் குறிப்புக்கள்.

1. எல்லா நாட்டுப் பாட்டாளி மக்களின் சார்பிலும், சுரண்டப் பட்டு அடக்கப்பட்ட மக்கள் சார்பிலும், தீவிரக் கருத்து மெய்ம்மை உணர்வைப் போற்றுவது தங்கள் கடமை என்ற அறைகூவலை ஏற்க எழுத்தாளர்களை அழைக்க வேண்டும். உறுதியான கருத்து மெய்ம்மை உணர்வே—சுரண்டலையும் ஆதிக்கத்தையும் கண்டனம் செய்து அம்பலப்படுத்த முடியும்.

2. ஆயினும் கருத்து மெய்ம்மை உணர்வுடன், போராட்ட உறுதியுடன் எழுதுவதற்கு ஆழ்ந்த அறிவு—பொருளாதார, வரலாற்று ஆராய்ச்சி அறிவு நுட்பம்—வேண்டும். இந்த அறைகூவலை நிற்கும் எழுத்தாளர்களுக்கு இந்த அறிவைப் புகட்ட வேண்டும். எழுத்தாளர்களுக்கு அறைகூவல் விடுப்போரின்

கடமை, இந்த அறிவு அவர்களுக்குத் தடையின்றிக் கிடைக்கச் செய்வது, இல்லாவிடில் இந்த அறைகூவல் நாணயமற்ற சைகை யாகி விடும்.

3. போதனை செய்வதன் மூலமாகத்தான் எழுத்தாளர்கள் தங்கள் அறிவைப் பரப்புவதன் மூலம், தாங்களும் தங்கள் அறிவை வளர்ப்பார்கள். அவர்கள் கல்வி பயிலச் செய்வதற்கு அவர்களைத் தீவிர விஞ்ஞானப் பணியில் ஏற்படுத்த வேண்டும்.

4. தங்கள் படைப்புகளை உருவாக்குவதில், தங்கள் உள்ளத் தின் அடியுணர்வுத் தளத்தின் உந்துதல்களைப் பயன்படுத்துவது மிக முக்கியம் என்று பல எழுத்தாளர்கள் கருதுகின்றனர். தங்கள் படைப்பில் உணர்வுத் தெளிவை அதிகம் ஈடுபடுத்த, ஆற்றலோ விருப்பமோ அவர்களுக்கு இல்லை. தங்கள் அடி வுணர்வுத் தள நூல்களுடன், உணர்வுத் தெளிவு பெற்ற மற்ற வர்கள் நூல்களையும், அதாவது, தலையாய அறிவு புகட்டும் நூல் களையும், ஆராய்வதில் இந்த எழுத்தாளரை ஈடுபடுத்த முயல வேண்டும். இம்முறையினால் இந்த எழுத்தாளரின் அடியுணர்வைச் சீராக உருவாக்க முடியும். அவர்களுடைய உள்ளார்ந்த அடி யுணர்வுப் படைப்புகளும், இந்தத் துணைப் படைப்புகளால் பலனடையும்.

5. அறிவு புகட்டும் நூல்களையும் புள்ளி விவர நூல்களையும் எழுத இன்றைய சில்லரை முதலாளி வர்க்க எழுத்தாளர்கள் ஆர்வம் கொண்டிருப்பதும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நாவலாசிரியர்கள் எழுதும் விஞ்ஞான சார்பு படர்ந்த புதுவிதக் கலைக் களஞ்சியத்தை வெளியிடும் முயற்சியில் பலர் பங்கு கொள்ள வாய்ப்பிருக்கிறது. இத்தகைய கலைக் களஞ்சியம் தெளிவான விஞ்ஞான அரசியல் தன்மை பொருந்தியதாக இருக்காது என்பது உண்மைதான். இப்பொழுது பெரிதும் தேவைப்படும் கம்யூனிஸ்ட் கலைக் களஞ்சியத்தின் தேவையை அது நிறைவு செய்யாது. ஆனால் பாசிச எதிர்ப்பு எழுத்தாளர்கள் தங்கள் நிலையைத் தங்களுக்கே தெளிவுபடுத்தி, உறுதிப்படுத்திக் கொள்ள அது பெரிதும் உதவும்.

எசமானர் புன்தீலாவும் அவர் பணியாள் மாத்தியும்

'எசமானர் புன்தீலாவும் அவர் பணியாள் மாத்தியும்' என்ற பிரெஹ்டின் நாடகம் (1940), ஒரு வலுவான கருத்தை அடிப்படை யாகக் கொண்டது. பின்லாந்து இனத்தைச் சேர்ந்த நிலக்கிழார் புன்தீலா, தன் பணியாட்களை மிகவும் கொடுமைப்படுத்தி அடக்கு முறைக்கு உள்ளாக்குபவர். ஆனால் அவர் குடிபோதையில் ஆழ்ந்த

வுடன்—அநேகமாக நாள் முழுவதும் குடிபோதையில்தான் இருப்பார்—அவர் மனிதனாக மாறி, சமூக நீதி உணர்வும் மற்ற மனிதப் பண்புகளும் கொண்டவராகி விடுவார். ஆனால் போதையில் செய்த தவறுகளுக்காக வருத்தப்பட

போகாமல் இருக்குமா" என்று கேட்டான். சமய உணர்வு இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா? இதையெல்லாம் நிகழ்த்துப் பார்த்தால், நம் முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

நீதிபதி: என் கருத்தும் அதுதான். இந்த இருளடைந்த பாழிடங்களுக்குப் பண்பாட்டை எடுத்துச் செல்வது என்பது, முள்மேல் நடப்பது போன்றது.

வழக்கறிஞர்: வழக்கறிஞர்களாகிய எங்களுக்கும் வாழ்க்கை எளிதாக இல்லை. பட்டிக்காட்டுச் சின்ன மனிதர்களோ, தங்கள் உரிமைகளோ இழப்பதைவிடப் பிச்சை ஏடுக்கவும் சித்தமாக இருக்கும் பிடிவாதப் பிறவிகளோ—நம்பித்தான் நாங்கள் எப் பொழுதுமே பிழைப்பு நடத்தி வருகிறோம். இவர்கள் ஓயாமல் சண்டை போட்டுக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் கஞ்சத் தனம் குறுக்கே நிற்கிறது. ஒருவரை ஒருவர் தூற்றி அலர் பேசுவார்கள்; குத்திக் கொள்ளக் கூடத் தயாராக இருப் பார்கள்; ஆனால் வழக்கு நடத்த அதிகச் செலவாகும் என்று தெரிந்தவுடன், அவர்கள் உற்சாகம் தணிந்து விடுகிறது, காசைப் பற்றிக் கவலைப்பட்டு, மிக நேர்த்தியான வழக்கைக் கூட நடுவிலே நிறுத்தி விடுகிறார்கள்.

நீதிபதி: அதுதான் வியாபார யுகம். எல்லாம் மேல்வாரியாகப் போய் விட்டது. மரபில் ஊறிய பண்புகள் மறைந்து வருகின்றன. மக்களிடத்தில் நம்பிக்கை இழக்காமல், அவர்களை இன்னும் கொஞ்சம் நாகரிப்படுத்த மீண்டும் மீண்டும் முயற்சி செய்வது, வரவர மிகச் சிரமமாகி வருகிறது.

வழக்கறிஞர்: புன்னீலாவின் வயலில் பயிர் தானாக வளரலாம். ஆனால் வழக்குகள் அப்படியல்ல. அவற்றைப் பராமரித்து, வளர்த்து, வலுவான ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்குள் தம் தலையே நரைத்து விடும். 'இனிமேல் இந்த வழக்கை நடத்திப் பயனில்லை; இது தொய்ந்து விட்டது; விரைவில் தோற்றுவிடும்; அல்லது மடிந்து விடும்; புது சட்ட நுணுக்கங்களை எழுப்புவதில் பயனில்லை' என்று அடிக்கடி தோன்றும். திடீரென, எதிர்பாராமல் வழக்கு சூடுபிடித்து வலுத்துக் கொள்ளும். குறிப்பாகத் தொட்டில் பருவத்தில் உள்ள வழக்குகளை மிக உன்னிப்பாகக் கவனித்து வளர்க்க வேண்டும். வழக்குகளைப் பொறுத்தவரை, சிசு மரண விகிதம் மிக அதிகம். வயது வந்த நிலைக்கு வழக்கு வந்தவுடன், அதுதானாக வளர்ச்சி அடையும் வகையைக் கற்றுக் கொள்கிறது. நான்கைந்து வருடங்கள் நீடிக்கும் வழக்கு, செழித்துத் தழைத்து முழுமைப் பருவம் அடைய நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் அது

வரை அந்த வழக்கைப் பராமரித்துப் பாதுகாத்துப் பக்குவப் படுத்துவதற்குள் நாய் படும் பாடு ஆகி விடுகிறது.

(அட்டாஷெயும் சமயகுருவின் மனைவியும் உள்ளே வருகின்றனர்)

சமயகுருவின் மனைவி : மிஸ்டர் புன்தீலா, உங்கள் விருந்தாளி களை நீங்கள் கொஞ்சம் அக்கரையுடன் கவனிக்க வேண்டு மல்லவா? ஈவாவுடன் அமைச்சர் நடனமாடிக் கொண்டிருக் கிறார். (புன்தீலா பதில் கூறாமல் இருக்கிறார்)

அட்டாஷெ : சமயகுருவின் மனைவி, அமைச்சர் கேட்ட ஒரு கேள்விக்கு மிகச் சாமர்த்தியமாய் பதில் சொன்னார். ஜாஸ் இசையில் அவருக்கு ஈடுபாடு உண்டா என்று அமைச்சர் கேட்டார். அந்தத் தர்ம சங்கடமான கேள்வியை அவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்று நான் திகைத்தேன். அவரும் ஒரு நிமிடம் அதைப் பற்றிச் சிந்தனை செய்தார், "திருக்கோயில் இசைப் பெட்டியை வைத்துக் கொண்டு எப்படியும் நடனமாட முடியாதல்லவா? ஆகவே வேறெந்த இசைக் கருவி பயன் படுத்தப்படுகிறது என்பதுபற்றி நான் கவலைப்படுவதில்லை", என்று அவர் பதில் கூறினார். அமைச்சரோ, பதிலைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார். இதற்கு என்ன சொல்கிறீர்கள், புன்தீலா?"

புன்தீலா : நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால் நான் என் விருந்தாளிகளைக் குறை கூறுவதில்லை. நீதிபதியைத் தன்னருகே வருமாறு சைகை செய்து) பிரடெரிக், அந்த மூஞ்சி உங்களுக்குப் பிடிக்கிறதா?

நீதிபதி : யாருடைய மூஞ்சி பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்?

புன்தீலா : அட்டாஷெ மூஞ்சி பற்றி. உண்மையைச் சொல்லுங்கள்.

நீதிபதி : ஜோஹன்னஸ்; எச்சரிக்கை, அது மதுவில் வேகம் அதிகம்.

அட்டாஷெ : (அடுத்த அறையில் பாடப்படும் மெட்டை மெல்லத் தனக்குள்ளாக இசைத்துக் கொண்டும், காலால் தாளம் போட்டுக் கொண்டும்) அந்த இசை நம் கால்களை நன்கு ஆட்டி வைக்கிறதல்லவா?

புன்தீலா : (மீண்டும் நீதிபதிக்குச் சைகை காட்டுகிறார்; நீதிபதி அதைப் பொருட்படுத்தாமல் இருக்க முயல்கிறார்). பிரெடரிக், உண்மையைச் சொல்லுங்கள். அந்த மூஞ்சி உங்களுக்கு எப்படிப் பிடித்திருக்கிறது ?

(மற்றவர்களும் அந்த மெட்டை மெல்ல இசைக்கின்றனர்)

(அட்டாஷெ தன்னைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல்) எனக்குப் பாட்டு எதுவும் எப்பொழுதுமே நினைவில் நிற்பதில்லை—பள்ளிப் பருவம் முதற்கொண்டு. ஆனால் இசையின் சந்தம் என் இரத்தத்திலேயே கலந்துள்ளது.

வழக்குரைஞர்: (புன்தீலா, மற்றவர்களுக்கும் தெரியும்படி தனக்குச் சைகை செய்வதைப் பார்த்துவிட்டு), இங்கு புழுக்கமாக இருக்கிறதே. வரவேற்பறைக்குப் போகலாம், வாருங்கள்.

(அட்டாஷெயை அங்கிருந்து இழுத்துச் செல்ல முயல்கிறார்).

அட்டாஷெ: ஆனால் சில நாட்களுக்குமுன், ஒரு பாட்டின் வரி எனக்கு நினைவிற்கு வந்தது. "ஆம். நம்மிடம் வாழைப்பழங்கள் இல்லை", என்பது அந்த வரி. ஆகவே என் நினைவாற்றல் பற்றி நான் நம்பிக்கை இழந்துவிடவில்லை.

புன்தீலா: பிரெடரிக், அந்த மூஞ்சியைப் பார்த்துவிட்டு நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

நீதிபதி: யூதர் ஒருவர் தம் மேலங்கியை உணவு விடுதியில் தவறவிட்ட கதைபற்றி உங்களுக்குத் தெரியுமா?. "அந்த அங்கி அவருக்குத் திருப்பிக் கிடைத்துவிடும்", என்று எதிலும் தோல்வியே காண்பவன் கூறினான். "ஒருபோதும் திருப்பிக் கிடைக்காது", என்று எதிலும் நன்னம்பிக்கை கொண்டவன் கூறினான்.

அட்டாஷெ: அவனுக்குத் திருப்பிக் கிடைத்ததா?

(ஆண்கள் சிரிக்கின்றனர்)

நீதிபதி: கதையின் சூட்சுமம் உங்களுக்குப் புரியவில்லை என்றெண்ணுகிறேன்.

புன்தீலா: அதை நீங்கள் எனக்கு விளக்கிச் சொல்லவேண்டும். நீங்கள் பதிலை மாற்றிச் சொல்லிவிட்டீர்கள் என்று எண்ணுகிறேன். 'திருப்பிக் கிடைத்துவிடும்' என்றல்லவா நன்னம்பிக்கை கொண்டவன் சொல்லவேண்டும்?

நீதிபதி: இல்லை. இல்லை. எதிலும் தோல்வி காண்பவன்தான் அவ்வாறு சொல்கிறான். அந்த அங்கி அது காணாமல் போனாலே நல்லது. அதுதான் வேடிக்கை!

அட்டாஷெ: அது பழைய அங்கியா? அதை நீங்கள் முதலில் சொல்ல மறந்துவிட்டீர்கள். ஹா! ஹா! நான் வாழ்வில் கேட்ட கேலித் துணுக்குகளில் இது தான் தலை சிறந்தது.

புன்தீலர : (பயங்கரத் தோற்றத்துடன் எழுந்து) நான் இப் பொழுது தலையிட வேண்டும். இது போன்ற ஓர் ஆளை நான் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. என் குடும்பத்தில் நேரப் போகும் இந்த ஆளின் மூஞ்சிபற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள் என்று நான் கேட்ட கேள்விக்கு, பிரடெரிக், நீங்கள் நேராகப் பதில் சொல்லாமல் மழுப்புகிறீர்கள். நகைச் சுவை இல்லாதவன் மனிதப் பிறவியேயல்ல. (கம்பீரமாக) என் வீட்டைவிட்டு வெளியேறும். ஆம், உம்மைத்தான் சொல் கிறேன். வேறு யாரையோ சொல்வதுபோல் திரும்பிப் பார்க்காதீர்.

நீதிபதி : புன்தீலா, நீங்கள் அத்து மீறிப் பேசுகிறீர்கள்.

அட்டாசெ : தயவு செய்து நீங்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியை மறந்து விடுங்கள். நான் மன்றுடிக் கேட்டுக் கொள்கிறேன். இராஜதந்திரத் தூதராலய அதிகாரி ஒரு வரின் நிலை எவ்வளவு நிச்சயமற்றது என்பது உங்களுக்குத் தெரியாது. ஒரு சிறு ஒழுக்கத் தவறு நடந்து விட்டால் கூடப் போதும். உடனே உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படும். பாரிஸ் நகரத்தில், மான்ட்மார்ட்ரியில், ருமேனிய தூதராலயச் செயலாளரின் மாமியார் தம் காதலரை ஒரு குடையால் நையப் புடைத்து விட்டார். அதையொட்டி உடனடியாக எவ்வளவு அலரும் தூற்றுதலும் சூழ்ந்து விட்டன, தெரியுமா?

புன்தீலர : அங்கியும் அழகு ஆடையும் அணிந்த வெட்டுக் கிளி. காடுகளை அழித்துத் தின்னும் வெட்டுக்கிளி.

அட்டாசெ : (ஆர்வத்துடன்) அலருக்குக் காரணம், அவளுக்குக் காதலன் இருந்தான் என்பதல்ல. அது வழக்கமானது தான். அவளை அவள் புடைத்து விட்டாள் என்பது கூடக் காரணமல்ல. அது கூட நடக்கக் கூடியது தான். ஆனால் குடையைக் கொண்டு புடைத்தது தான் தவறு. அது மட்டரகமான செய்கை. எது ரசமட்டமானது என்பது தான் முக்கியம்,

வழக்கறிஞர் : புன்தீலா, அவர் சொல்வது சரிதான். அவர் இராஜதந்திரப் பணியமைப்பில் அதிகாரி; கௌரவம் அவருக்கு மானப் பிரச்னை.

நீதிபதி : ஜோஹன்னஸ், மதுபானப்போதை உங்கள் தலைக்கு ஏறிவிட்டது.

புன்தீலர : பிரெடரிக், இது எவ்வளவு முக்கியமான பிரச்னை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை;

சமையற்காரி : (தம் மனைவியிடம்) மிஸ்டர் புன்தீலா சற்று பதட்ட மாக இருக்கிறார். அன்னை, நீ பக்கத்து அறைக்குப் போவது நல்லது.

புன்தீலா: அம்மையே, நான் நிலை தவறி விடுவேன் என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். மதுபானம் வழக்கம் போல் தான் இருந்தது. ஆனால் என்னால் தாங்க முடியாதது, இந்த ஆளின் மூஞ்சி. அவரிடம் எனக்கு அருவருப்பு ஏற்பட்டுள்ளது.

அஸ்டாரஷெ: என் நகைச்சுவைப் பண்பைப் பாராட்டி, பீபெஸ்கோ இளவரசி, ஆக்ஸ்போர்ட் சீமாட்டியிடம் பேசியுள்ளார். கேலித் துணுக்கைச் சொல்வதற்கு முன்னதாகவே நான் சிரித்து விட்டேன் என்று பாராட்டியுள்ளார். நகைச்சுவையை அவ்வளவு விரைவில் நான் விளங்கிக் கொள்வேன் என்பது தான் அவர் சொன்னதன் கருத்து.

புன்தீலா: அவர் நவைச்சுவை ஆற்றலாம்! பிரெடரிக்!

அஸ்டாரஷெ: நபரைக் குறிப்பிடாதவரை எதையும் சரி செய்து விடலாம். பேரைச் சொல்லி அவமதிக்கும் போது தான், அதை அழிக்க முடியாமல் போகும்.

புன்தீலா: (குத்தலாக) பிரெடரிக், நான் இப்பொழுது என்ன செய்வது. அவர் பேரை நான் எற்கெனவே மறந்து விட்டேன். இப்பொழுது அவரை என்னால் விரட்டவே முடியாது என்று அவர் கூறுகிறார். நல்ல வேளையாக, அவர் பெயர் ஈஜே சிலாக்கா என்று நான் லீலைக்கு வாங்க வேண்டியிருந்த ஒரு பாத்திரத்தில் பார்த்தேன். இப்பொழுதாவது அவர் போவாரா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அஸ்டாரஷெ: கனவான்களே, ஒரு பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இனிமேல் எந்த சொல் சொன்னாலும், அதை எடைபோட்டுக் கவனமாகச் சொல்ல வேண்டும்.

புன்தீலா: எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. (திடீரென உரக்கக் கூவி) நீர் உடனே வெளியே போம். புன்தீலா கண்ணில் இனி எப்பொழுதுமே படாதீர்கள். அங்கி அணிந்த வெட்டுக்கிளிக்கு நான் என் மகளைத் தரப்போவதில்லை.

அஸ்டாரஷெ: புன்தீலா, இப்பொழுது நீங்கள் அவமரியாதையாகப் பேசுகிறீர்கள். இப்பொழுது என்னை உங்கள் வீட்டை விட்டு வெளியேற்றுவதன் மூலம், மரியாதையின் மெல்லிய எல்லைக்கோட்டைத் தாண்டி, அவர் ஏற்பட வழி செய்கிறீர்கள்.

புன்தீலா: தாங்க முடியாதென்றால் தாங்க முடியாது. என் பொறுமை அனைத்தும் தீர்ந்துவிட்டது. உம் மூஞ்சியைக் கண்டால் எனக்கு அருவருப்பு ஏற்படுகிறது, நீர் போய்விடுவது நல்லது, என்று சாடையாகச் சொல்ல எண்ணியிருந்தேன். ஆனால் தெளிவாகவும், நேராகவும், சொல்லும்படி நீர் என்னைக் கட்டாயப் படுத்துகின்றீர். 'வெளியே போ, கயவனே'.

அட்டாலிஷ்: புன்தீலா, நான் இதைச் சகிக்க முடியாது. கனவான்களே, நான் விடை பெறுகிறேன். (வெளியேறுகிறார்).

புன்தீலா: சீக்கிரம் போம்! நீர் ஒட்டம் பிடிப்பதை நான் பார்க்க வேண்டும். உம் துடுக்குத்தனமான பதில்களுக்குச் சரியாகப் பாடம் கற்பிக்க வேண்டும். (அவர் பின்னல் புன்தீலா ஓடுகிறார். சமயகுருவின் மனைவியையும் நீதிபதியையும் தவிர, மற்றவர்களும் புன்தீலா பின் செல்கின்றனர்).

சமயகுருவின் மனைவி: இதைப் பற்றிப் பெரிய அலர் உண்டாகுமே.

(ஈவா உள்ளே வருகிறாள்)

ஈவா: என்ன நடந்தது? முற்றத்தில் என்ன இரைச்சல்?

சமயகுருவின் மனைவி: (அவளை நோக்கி ஓடுவந்து) என் அன்புக் குழந்தை, இக்கட்டான ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. நீ தைரியமாக இருக்க வேண்டும்.

ஈவா: என்ன நடந்தது?

நீதிபதி: (ஷெர்ரி பானத்தை ஊற்றித் தந்து) ஈவா, அதைக் குடி. உன் அப்பா மதுபானச் சீசா முழுவதையும் குடித்துவிட்டு, ஈனை முகத்தின் மேல் திடீரென அருவருப்பு கொண்டு, அவரை வீட்டிலிருந்து துரத்தி விட்டார்.

ஈவா: (குடித்துக் கொண்டே) குடித்து முடித்து விட்டேன். பாவம்? அவரிடம் என்ன கூறினர்?

சமயகுருவின் மனைவி: ஈவா, உனக்கு இது பெரும் அதிர்ச்சியாய் இல்லையா?

ஈவா: ஆம்; அதிர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்.

(சமயகுரு திரும்புகிறார்)

சமயகுரு: இது பயங்கரமாக இருக்கிறதே.

சமயகுருவின் மனைவி: எது? எதுவும் நடந்ததா?

சமயகுரு: முற்றத்தில் ஒரே ரகளை. அவர் மீது கற்களை வீசினர்.

ஈவா: கல்லடி அவர் மேல் விழுந்ததா?

சமயகுரு: தெரியாது. வழக்கறிஞர் அவர்கள் இருவருக்கும் கும் இடையே புகுந்து தடுத்தார், வரவேற்பறையில் இருந்த அமைச்சரும் வந்தார்.

ஈவர : பிரடெரிக் மாமா, அந்த மனிதர் இப்பொழுது நிச்சயம் போய் விடுவாரென்று நினைக்கிறேன். நல்ல வேளை, நாம் அமைச்சரையும் இங்கு அழைத்திருந்தோம். இல்லாவிடில், இந்த நிகழ்ச்சி அவ்வளவு பெரிதாகியிராது.

சமயருவின் மனைவி : ஈவா, நீ என்ன சொல்கிறாய்?

(புன்தீலா, மாத்தியுடன் வருகிறார்; அவர்களுக்குப் பின் கூலு, ∴பீனு ஆகியோரும் வருகின்றனர்.)

புன்தீலா : உலகின் நய வஞ்சகத் தன்மையை நான் இப்பொழுதுதான் நேரில் நன்கு பார்த்தேன். நான் பக்கத்து அறைக்குள் புகுந்து, ஒரு தவறு நடந்து விட்டது, என் ஒரே மகளை ஒரு வெட்டுக்கிளிக்குத் திருமணம் செய்யப் போனேன், இப்பொழுது, அவளை ஒரு மனிதனுக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறேன் என்று மிகவும் இதமாகச் சொன்னேன். அவளை நல்ல மனிதர் ஒருவருக்கு, திறமையான காரோட்டியும் என் நண்பருமான மாத்தி ஆல்டோனெனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் நீண்ட நாட்களாகவே முடிவு செய்திருந்தேன். மணமக்கள் நலம் நாடி அனைவரும் பானம் பருகி வாழ்த்த வேண்டுமென அவர்களைக் கேட்டுக் கொண்டேன். என்ன பதில் சொன்னார்கள் என்று நினைக்கிறீர்கள்? படித்த மனிதன் என்று நான் எண்ணியிருந்த அமைச்சர், நான் நச்சுக் காளான் என்பது போல் என்னை விறைத்துப் பார்த்து விட்டுத் தன் காரை உடனே கூப்பிட்டார். மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? அவர்களும் அவரைப் பின்பற்றினர். பாவம்! சிங்கக் குகையில் வீசப்பட்ட கிறிஸ்துவ வீரனைப் போல் நான் நின்று, என் மனதில் பட்டதை வெளிப்படையாக அவர்களுக்குச் சொல்லி வைத்தேன். அவர் காருக்கு விரைந்து சென்றார். ஆனால் நானும் அவர் காரில் ஏறுவதற்குள் அவரை நெருங்கி 'நீரும் ஒரு கயவர் என்றுதான் நினைக்கிறேன்' என்று சொல்லி விட்டேன். நான் சொன்னதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

குர்ட் பிந்தூஸ்

இளம் கவிகளுக்கு உரை

1886இல் பிறந்த குர்ட் பிந்தூஸ், எழுத்தாளர்; இலக்கியத் திறனாய்வாளர்; பதிப்பகத்தார் அலுவலகத்தில் பிரசுரத்திற்குமுன் நூல்களைப் படிப்பவராகப் பணியாற்றினார். முதல் உலகப் போருக்குப்பின், இலக்கியத்தில் அகத்திறப் பாங்கினை (expressionism) சலியாது ஆதரித்தவர். 'மனித இனத்தின் அந்திநேரம்: புதுக் கவிதையின் இசைத் தொகுதி', என்ற தலைப்பின்கீழ், அவர் 1920இல் வெளியிட்ட கவிதைகள் தொகுதி, குறிப்பாகப் பெரும்புகழ் ஈட்டியது. 'நம் காலத்து உணர்ச்சிப் பெருக்குகள், அதிர்ச்சிகள் ஆகியவற்றின் தொகுதி' என்று அவர் அதை அழைத்தார். அவர் காலத்தில் ஓங்கியிருந்த இன்மைக் கொள்கைப் போக்குகளை வெல்வதில் அவர் தலையாய கவனம் செலுத்தினார். 'இளம் கவிகளுக்கு உரை', என்ற கட்டுரையில், இலக்கிய அகத்திறப் பாங்கின் தன்மையும், உந்து விசைகளும், குறிக்கோள்களும் விளக்கப்பட்டுள்ளன. கவிதையின் சக்தி, உள்ளத்தின் வல்லமையில் அதற்கிருந்த நம்பிக்கை, அதன் உயர்ந்த இலட்சிய ஆர்வம் ஆகியவற்றைப் பிந்தூஸ் வலியுறுத்துகின்றார். முதல் உலகப் போரின்போது இது வெளிவந்தது.

கொடிய காடுகளின் தனிமையிலிருந்து நான் இம் மண்டபத்திற்கு வந்துள்ளேன். இங்குக் கூடியுள்ள உங்கள் ஆர்வமிக்க வெள்ளை முகங்களிலிருந்து, அறிவின் காந்த சக்தி பாய்ந்து என்னை ஆட்கொண்டு, ஒற்றுமை உணர்வின் துடிதுடிப்பையும் பரவசத்தையும் உண்டாக்குகிறது.

உங்களிடையே, பழக்கமான பல முகங்களைப் பார்க்கும்போது, உங்கள் நீண்ட இளமைப் பருவத்தில் அடங்கியுள்ள ஏக்கத்தையும் ஊக்கத்தையும், போராட்டத்தையும் போதை வெறியையும் நான் காண்கிறேன். மாலை நேரத்தில் நகரங்களில், ஆன்மீக சாம்ராஜ்யத்தை எய்தும் ஆர்வத்துடன், நீங்கள் தோழமையில் பங்குகொண்ட புதுமை முயற்சிகள், ஆராய்ச்சிகள், நீங்கள் ஒன்று சேர்ந்துக் குடியிருந்த இராணுவ விடுதிகள், ஏமாற்றங்கள், உரையாடலிலும் தோழமையிலும் நீங்கள் கழித்துள்ள பல பகற்பொழுதுகள், இரவுகள் ஆகியவை நம் முகங்களில் ஒரு விதமான வாழ்க்கைக் குறிகளைப் பொறித்து, நம் உள்ளங்களில் ஒரேவித எண்ணங்களையும் குறிக்கோள்களையும் வளர்த்துள்ளன. இன்று இக்கூட்டத்தில் என் தலைமுறையினர் பலரைக் காண்கிறேன். அவர்கள் புத்தகங்கள் வாயிலாகத்தான் நான் அவர்கள்

வாழ்க்கைபற்றியும் குறிக்கோள்கள் பற்றியும் அறிவேன். இப் பெருங் கூட்டத்தில், இங்குமங்கும் முதுபெரும் எழுத்தாளர் சிலர் விரவியுள்ளனர். அவர்கள் இன்று தனிமையில் வாழும் நிலையை அடைந்து விட்டார்கள். அவர்கள் எழுத்துக்கள், நமக்கு இலட்சிய வேகம் ஊட்டி, நம் இளமையில் முப்பது ஆண்டுகளாக நமக்கு வழிகாட்டியாய் அமைந்தன. மண்டபத்தின் பின்பகுதியில் இளம் எழுத்தாளர் கூட்டம்; அவர்கள் பெயர்கள் இன்னும் மக்களுக்கு அறிமுகமாகவில்லை. அவர்கள் கவிதைப் படைப்புகள் இன்னும் உருப்பெறவில்லை. அக்கூட்டம், முன்னுக்குப் பாயத் துடித்துக் கொண்டிருக்கிறது. கவிகள், பிரச்சார எழுத்தாளர், அறிஞர்கள், அரசியல் வாதிகள், திறனுய்வாளர் — அனைவரும் இன்று இம் மண்டபத்தில் ஒன்று சேர்ந்துள்ளதைக் காணும்போது, இக்காட்சி யின் மகிழ்ச்சியை, வேதனையும் வருத்தமும் வீழ்த்துகின்றன. ஏனென்றால், ஆவியுருவில் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் நீங்கள், இக்கற்பனைக் கூட்டத்தின் உறுப்பினர்கள், உண்மையில் ஒன்று கூடி, ஒற்றுமைப்பட்டு, இன்று பெரிதும் தேவையான, உறுதியான, ஆன்மீக அணியை உருவாக்கவில்லை.

ஆயினும் நம் தலைமுறைச் சமுதாயத்தைப்போல், வேறெந்தச் சமுதாயமும், எதிர்ப்பு சூழ்ந்திருக்கும் நிர்ப்பந்தத்தால், ஒன்று சேர்ந்து பொது இலட்சியத்தால் ஒற்றுமைப்படவேண்டிய அவசி யத்துக்கும் பக்குவத்துக்கும் ஆளாக்கப் பட்டதில்லை.

ப்ரான்ஸ் ப்கோ, நீங்கள் குதித்து எழுந்து ஆட்சேபித்தாலும், நம் தலைமுறை என்று துணிந்து சொல்வேன். ஏனென்றால், சாதாரண வழக்கின்படி, நம் வயது கணக்கிடப்படுவதுபோல் இலக்கிய உலகில் கணக்கிடப்படுவதில்லை. அகவேட்கை, ஆழ்ந்த வேதனை ஆகியவற்றை நாம் பகிர்ந்து அனுபவிப்பதே நம்மை ஒரே தலைமுறையினராக ஒன்று சேர்க்கிறது. ஆதலால் தான் ஒருவர் எழுத்தில் ஒரு சில பக்கங்களைப் படித்தவுடனேயே, நம் அனைவரையும் பொதுவாகத் தழுவும் விதி, இலட்சியச் செய்தி ஆகியவை அதில் ஊடுருவி நிற்பதை உணர்ந்து, 'இவர் நம்மில் ஒருவர்', என்று சொல்லத் தோன்றுகிறது.

நம்மில் பெரும்பாலானவர் பெரிய நகரங்களிலிருந்து வருப வர்கள். அநேகமாக, நாம் அனைவருமே நாம் வாழும் காலத்தை எதிர்த்து, எதிர்நீச்சல் அடித்துச் சிந்தனை செய்து எழுதுகின்ற வர்கள். போரின் பயங்கர அனுபவம் நமக்கு எதையும் மாற்றித் தரவில்லை; அது நம் நம்பிக்கைகளை உறுதிப்படுத்தி, மற்றவர்களை மாற்ற வேண்டுமென்ற நம் ஆர்வத்தை வலுவாக்கியுள்ளது. நம் நட்பு உறவுகள், வயதின் ஒற்றுமையினால் வளர்ந்தவையல்ல; பொதுவான குறிக்கோள்களால் வலுத்துள்ளவை. ஒரே நகரத்தில்

வாழ்கின்றோம் என்ற தற்செயலான நிகழ்ச்சியால் வளர்ந்தவையல்ல: ஒரே இலட்சிய ஆர்வத்தில் பங்கு கொள்கின்றோம் என்ற ஒற்றுமையால் உறுதிப்பட்டவை. வயது, தேசிய இனம் ஆகிய வேறுபாடுகள் நம்மைப் பிரிக்க இயலவில்லை என்ற சுரணத்தால்தான், நம் உறவும் ஒற்றுமை உணர்வும், நம்மைப் பலமாக ஆட்கொண்டுள்ளன. ருஷ்யாவிலிருந்தும் இத்தாலியிலிருந்தும், ப்ரான்ஸ் பார்பூஸ், துஹாமேல், பி. ஜே. ஜூவ், பெகூய்த், வில்ராக், க்யூல்பொ ஆகிய இடங்களிலிருந்தும், பேர் தெரியாத பல தோழர்கள், விவேகமும் அன்புள்ளமும் படைத்த பெரியார் ரொமெயின் ரோலாண்டு தலைமையில், கூடியுள்ளோம். ஒற்றுமையை உருவாக்குவதற்கு அல்லாமல் கொல்லும் பிரிவினையைப் புகுத்தும் நோக்கத்துடன், உங்கள் மீதும், எங்கள் மீதும் கட்டாயமாகச் சுமத்தப்பட்ட, இராணுவ உடையினால் கூடப் பிரிக்க முடியாத ஒற்றுமை உறவால் உறுதிப்பட்டது நம் சமுதாயம்.

நீங்கள் திடீரெனத் தீவிரமாக அரசியலை நோக்கித் திரும்பியுள்ளதுதான், உங்கள் ஒற்றுமை உணர்வுக்கு, மற்றவை அனைத்தையும்விடச் சிறந்த சான்றாக அமைகின்றது. உண்மையான அரசியல், இக்காலத்தில் நடக்கும் அரசியல் சூதாட்டமல்ல; எல்லைப் பிரச்னைகளைத் தீர்ப்பதல்ல; வெளிநாட்டு உறவு முறைகளில் புது உத்திகளைப் புகுத்துவதல்ல; மனிதரை நேரடியாக அணுகும் உயர்ந்த, பயனை, பண்பட்ட, அரசியலே உண்மை அரசியல் என்பதை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். அத்தகைய அரசியல், மனிதனைச் சந்தர்ப்பங்களால் மாற்றுவதில்லை; சந்தர்ப்பங்களை மனிதன் மூலம் மாற்றுகின்றது. ஏனென்றால், விழிப்புற்ற, தெளிவு கொண்ட, உயர்ந்த மனிதன், உயர்ந்த சமுதாயச் சூழ்நிலைகளையும், சிறந்த அரசையும், உயர்ந்த பொருளாதார அமைப்பையும், வாழ்வில் ஈடுபடும் இலட்சிய நிறைவும் உண்டாக்கும் வாழ்க்கை நிலையையும், தானே உருவாக்குகின்றான். அரசு, தன்னில் தானே, ஓர் இலட்சியமல்ல. ஒரு குறிக்கோளை எய்தி, அது ஒரு தற்காலிக ஏற்பாடு. தற்காலிக ஏற்பாட்டை, தெய்வத்தின் சித்தம் என்று சொல்வது, தெய்வத்தையே அவமதிப்பதாகும். அரசின் பெருமையும் செழிப்பும் முக்கியமல்ல; மனிதனின் பெருமையும் செழிப்புந்தான் முக்கியம்.

ஆகவே, மனிதன்தான், உங்கள் கலைக்கு மிக முக்கியமானவன். கலையின் தலையாய கவலை, மனிதனைப் பற்றித்தான். 'கலைக்காகவே கலை' என்ற கொள்கையிலிருந்து, இன்றுள்ளதைப் போல் என்றும், கலை வெகுதூரத்தில் இருந்ததில்லை. மனிதன் தன் உருவம் நிழலாடுவதையே கண்டு களித்துத் திளைத்து, அதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் பெறுவதற்காக, மனிதனை

நீங்கள் சித்திரிப்பதில்லை. தனக்கு எதிராகவே எழுச்சியுற்று, ஆன்மீக வழிகளில் சிறந்த வளமான வாழ்வை எய்த முடியும் என்ற நம்பிக்கை கொள்ளும்படி, அவனைத் தூண்டுவதே, நம் நோக்கம். நமது உணர்ச்சிக் குட்டையிலே நாம் ஊறிக் கிடப்பதில்லை; நம் சகோதரர்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகின்றோம். மனித இதயம் மீதே நாம் குறி வைத்துள்ளோம்.

களங்கமற்ற நிறைவு நிலையை எய்த, மனிதனின் தன்னுணர்வை உந்துவதுதான் ஆன்மா என்று நான் தரும் விளக்கத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டால், சொல்லிலும் எழுத்திலும் ஆன்மாவின் வெளிப்பாடு, அரசியல் நடவடிக்கைக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்பது உறுதி. ஆகவே உங்கள் பணி ஆன்மா சொல்லின் மூலம் மனிதனைப் பலமாக ஆட்கொள்ளச் செய்து, அவனைச் செயலுக்கு உந்துவதாகும். உணர்ச்சி மூலமாகவும் அறிவின் மூலமாகவும், ஆன்ம உலகை, அன்றாட நேரிடை உலகில், வெளிப்படுத்த முயலவேண்டும். ஆனால் மனித இனத்தை எப்படி நீங்கள் அறிந்தீர்கள்? மனித இனத்தின் நடுவே நீங்கள் எப்படி இடம் பெற்றீர்கள்?

உயிரோடு இருப்பதன் இன்பத்தையும் போதையையும் அனுபவிப்பதோடு மட்டும் நில்லாமல், தன்னுடைய தவறான செயல்களிலிருந்தே தன்னை விடுவித்துக் கொள்ளத் துணிவில்லாத மனிதப் பிறவியின் துன்பத்திற்கும் நாம் பொறுப்பானவர்கள் என்ற உணர்வு உங்களை விரைவில் தாக்கியது என்பதுதான் உங்கள் இளமைப் பருவத்தின் வேதனை. தன்னால் இனம் கண்டு கொள்ள முடியாததால், தானே உருவாக்கிய நிலைமைகளின் கீழ் அழுந்தி அல்லல்பட்ட மனிதனின் வேதனைக் குரல்கள் உங்கள் செவிகளில் விரைவில் விழுந்தன. ஏனென்றால், மனிதன், தன்னைச் சூழ்ந்திருந்த இயற்கையை, விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும், ஆற்றலையும் ஊக்கத்தையும் வியத்தகு அளவில் பயன்படுத்தி, வென்று கட்டுப்படுத்திய போதிலும், அதே ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்தித் தன் சொந்த இயல்பை மேம்படுத்தி, நேர்மையான, நியாயமான நெறியை மேற்கொள்ளத் தன்னால் இயலுமென்ற துணிவும் நம்பிக்கையும் அவனுக்கு எழவில்லை—புறஉலகில் அவன் வென்ற இயற்கை, அவனகத்தே இருந்து எழுச்சி பெற்றுப் பொங்கி வழியத் தொடங்கிய வரை. இயற்கையின் நியதிகளிலிருந்து கடைந்தெடுக்கப் பட்டனவாய்த்தான் கற்பனை செய்து கொண்ட விதிமுறைகளின் ஆதிக்கத்தை, அவன் மனமொப்பி ஏற்றுக் கொண்டான். ஆன்மாவின் தலையாய எதிரியாய் எது விளங்கியதோ, அதன் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படிக் கட்டாயப் படுத்தித் தன் ஆன்மாவை இழிவு படுத்தினான். தன் செயல்

களுக்கு அறிவு வழிகாட்டியாய் அமைவதற்குப் பதிலாக, செயலற்ற தன்மை, பரிணும வளர்ச்சி ஆகியவற்றின் விதிகளால் தன் செயல்கள் நிர்ணயிக்கப்பட அவன் இடம் கொடுத்தான்.

உலகைத் தூக்கித் தாங்கிநிற்கும் அட்லாஸ் என மனிதன் தன்னைத்தானே நியமனம் செய்து கொண்டு, இதைத் தாங்கி நின்றது மட்டுமல்ல, மனித இனத்தின் பழமையெனும் பாரம் முழுவதையும் அவன் சேர்த்துச் சுமக்கலாயினன். சுதந்திரமாக நடமாடுவதற்குப் பதிலாக, அவன் இடைவிடாது வரலாற்றுடன் தன்னை இணைத்துப் பொருத்திக் கொண்டான். நல்லது, கெட்டது, அறிவுடைமையானது, என்ற காரணத்திற்காக எதையும் செய்யாமல், தன் செயல்கள் அனைத்தையும், பழமையில் நடந்ததுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் செய்தான். தன் செயல் களுக்குத் தானே பொறுப்பேற்பதற்குப் பதிலாக, வரலாற்றின் நிர்ப்பந்தத்தினால் அவை அவசியமானவை என்று சமாதானம் கூறினன்.

புற வசதிகளையும் பொருள் வளங்களையும் பெருக்குவதைக் குறிக்கோளாகக் கொள்ளாத மனித சமுதாயம் எதுமே இப்போது இல்லை என்பதை நீங்கள் உணர வேண்டியதாயிற்று. இளைஞர்கள் மிகுந்த கண்ணியத்துடன் வாழ்ந்து, ஆன்மிக உணர்வைத் தடையின்றிப் பெற்று அனுபவித்து, மற்றவர்களுக் கும் பரப்புவதற்குச் சாதகமான, கனிந்த சமூக உறவு மறைந்து விட்டது என்பதை உணர்ந்து உங்கள் இளமை வேதனைப்பட்டது. ஆகவே, தனிமையின் தவிப்பிலும் ஏக்கத்திலும், நீங்கள் ஆன்மிகம் பற்றி ஆராயத் தொடங்கினீர்கள். பல்கலைக் கழக ஆசான்கள், ஆன்மீகப் பிரச்னைகளுக்கும் விஞ்ஞான நோக்கு என்று தாங்கள் அழைத்த முறையைப் பொருத்திப் பயனற்ற வெறுமையில் சிக்கியதால், பல்கலைக் கழகங்களில், ஆன்ம உணர்வு தன்னையே அவமதித்துக் கொள்கிறது என்று நீங்கள் கண்டு, அவற்றை விட்டு வெளியேறி ஓடினீர்கள். ஆன்மீக உணர் வின் கருத்தையும் உட்பொதியும் விளக்குவதற்குப் பதிலாக, ஆன்மீக உணர்வு வளர்ந்து இயங்கும் முறையைத் துருவி ஆராய்ந்து, விளையாட்டுப் பிள்ளைத்தனமாய்ப் படம் பிடித்துக் காட்டுவதில் பல்கலைக் கழகங்கள் ஈடுபட்டன. முன்பே தயாரிக்கப் பட்ட, இயற்கை விதிகளிலிருந்தும் கண்மூடித்தனமான வன் முறையின் இயக்கத்திலிருந்தும் தொகுத்து எடுக்கப்படும் அரசியல் கோட்பாட்டின், கண்டிப்பான விதிமுறைகளுக்குள், போர்களையும் ஆட்சிக் காலங்களையும் புகுத்தித் திணித்து, வரலாற்றைப் பல்கலைக் கழகங்கள் உருக்குலைத்தன. அது மட்டு மல்ல; ஆன்மீகப் படைப்புக்களையும், அவற்றின் படைப்பாளர்

கூடாயும் வரலாற்று ஆராய்ச்சிக்குரிய பொருள்களாக மட்டுமே, அதாவது சடப் பொருள்களாக ஆக்கி, அவற்றைக் களங்கப் படுத்தின.

ஆகவே உங்களில் பெரும்பாலோர், கலாச்சாரம் எனும் உயர்ந்த தத்துவம் முழுவதையுமே அற்பமென்று புறக்கணித்து, அதன் மூலம் உங்களையே நீங்கள் உண்மையில் இருப்பதை விட ஏழ்மையாக்கிக் கொண்டீர்கள். பண்டைக் காலத்தின் ஆன்மீகப் படைப்புக்களைப் பல்கலைக் கழகத்தின் கரடுமுரடான நோக்கு கொண்டு மட்டுமே காண வேண்டியிருந்ததால், அவற்றில் ஈடுபாடு அனைத்தையும் அடியோடு நிராகரித்தீர்கள்.

ஆனால் இதற்கு ஆட்சேபம் எழுப்பப்பட்ட போதெல்லாம், மனிதன், காரண காரிய நியதி என்ற பொருளற்ற மூட நம்பிக்கையை நியாயம் காட்டிச் சமாதானம் கூறினன். பண்டைக் காலத்துக் கோட்பாடான விதியை ஏற்றுக் கொண்ட போது, அனைத்திற்கும் அது ஒரு கேவலமான சமாதானமாக அமைந்தது. அதை எதிர்த்துப் போராடி தன்னைக் காத்துக் கொள்ள மனிதனால் இயலவில்லை; ஏனென்றால் தன்னைக் காத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை. இப்பொழுதோ, விதிக்குப் பதிலாகக் காரண காரிய நியதி அவனுக்குச் சமாதானமாக அமைந்தது.

மனிதன் உலகைச் சீர் குலைத்துள்ள நிலையில், அதை எப்பொழுதுமே அவனால் நிமிர்த்தித் திருத்த முடியாது. அந்த மாண்புக்கும் அவலத்துக்கும் அடியிலே அவன் புதைக்கப்பட்டுக் கிடந்தான். அவனைத் தட்டி எழுப்பும் பொருட்டு நீங்கள் அவனைத் தோண்டி எடுத்தீர்கள்.

அவ்வாறு தான் நீங்கள் அவனைக் கண்டு பிடித்தீர்கள். சுதந்திர மான இயல்பு நிலையும் சுதந்திரமான உணர்வும் அவனை ஆள வில்லை. ஒரு சில சக்திகளுக்கு அவன் தானே விரும்பித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அந்தச் சக்திகள் தான் அவனை ஆட்டி வைத்தன. அவற்றின் பிடியில் அவன் சிக்கி அடங்கி யிருந்ததால், அவற்றைக் கவர்ச்சிகரமான பெயர் சொல்லி, அழைத்தான்: காலத்துக்கு ஒவ்வாத அரசு அமைப்பு முறை: வரலாறு, உயிரியல், அடிப்படையாக எழுந்த சட்ட நியதிகள்: முதலாளித்துவம்: வாழ்க்கை, சிந்தனை, முறைகள்; இராணுவத் தீவிரம்; அவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சூழ்நிலையை நிர்ண யிக்கச் சக்தி பெற்றிருந்தது: பசி.

இவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டது, இவை கல்வி நிபுணர்களாலோ சிளர்ச்சிக்காரர்களாலோ, உங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன என்பதால் அல்ல. அதைவிட

வேதனை தரும் வழியில் நீங்கள் அவற்றைக் கற்றுக் கொண்டீர்கள்; அவை உங்கள் இளமையின் அனுபவங்களால் அமைந்த காரணத்தால். ஆனால் கெட்டது, தீமை என்று நாம் அழைக்கப் பழக்கப் பட்டுள்ளதில் பெரும்பகுதிக்குக் காரணம், சோம்பிச் செயலற்றிருக்கும் நிலை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆகவே ஒன்று கூடி நீங்கள் நடத்தும் தாக்குதல், அறிவுத் தெளிவு மிக்க உங்கள் ஆராய்ச்சிகள், உங்கள் கூக்குரல்கள், உங்கள் பிரகடனங்கள் ஆகியவற்றின் உணர்ச்சி மிக்க குறிக்கோள், இச் செயலற்ற நிலையை மாற்றித் தீவிர இயக்கமாக உருவாக்குவதுதான். உள்ளத்திலும் இதயத்திலும் குடிபுகுந்துள்ள இச் செயலற்ற நிலை எனும் மிக்க கொடிய ஒழுக்கக் கேட்டை எதிர்த்துப் போராடவே நீங்கள் எழுதுகிறீர்கள்.

ஆகவே, உங்கள் அரசியல் கவிதையின் குறிக்கோள், எழுச்சி பெறச் செய்வது, வெளிப்படுத்துவது, அறைகூவல் விடுப்பது, விழிப்படையச் செய்வது.

நம்மில் மிகத் தீவிர இளைஞரின் ஆத்திர மிக்க சஞ்சிகைகளிலும், தொகுக்கப்பட்ட நூல்களிலும், போராட்ட அறை கூவல்களிலும், ஒலிக்கும் உணர்ச்சி வீறுயர்ந்த அரசியல் தாக்குதல்களும் கோரிக்கைகளும் தான், ஹெய்ன்ரிஷ் மன்னே, உங்கள் இறுதிப் புதினங்களிலும், நாடகங்களிலும், கட்டுரைகளிலும், முழக்கமிட்டு, அறை கூவல் விடுக்கின்றன. ஆனால், லுட்விக் ரூபினரே 'மத்தியில் உள்ள மனிதன்' என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ள உங்கள் அறிக்கைகளில், மனித இனத்தின் கீழ், கோடிக்கணக்கான டன் வெடி மருந்துகளை வைத்தீர்கள். ஆன்ம உணர்வு கொண்டவர்கள், தீவிர நடவடிக்கை எடுத்து, பொறுப்புணர்வை மேற்கொள்ள வேண்டுமென்று, எங்களைவிட அதிக உணர்ச்சி வெறியுடன் நீங்கள் அழைத்தீர்கள். வீழ்ச்சியுற்ற நம் யுகத்தில், நீங்கள் 'பேரின்ப வான ஒளி', எனும் முதல் மாபெரும் அரசியல் இசைக் கவிதையை உருவாக்கினீர்கள். காலமெனும் வெள்ளத்தினூல் புதைக்கப்பட்டுள்ள இலக்கியப் படைப்புகள் மீதும், எதிர்கால நாட்டின் மீதும், அக்கவிதை ஒளி வீசிக் கலங்கரை விளக்கமாகவும், உறுதியான ஒளி வீசும் பாறையாகவும், அமைந்தது. வீரனுகத் தோன்றிய போதிலும், உண்மையில் பரிகாசத்துக்கும் பரிதாபத்துக்கும் உரியவனுய் விளங்கிய சில்லரை முதலாளி வர்க்க சோஷலிச ஊழியனின் வேதனைகளை வீழ்த்தும் இறுதி அடிகளையும், தாக்குதல்களையும், கார்ல் ஸ்டன்ஹாம் தமது இன்பவியல் நாடகங்களில் தர முன் வந்தார். அதே நேரத்தில், தன்னை அறிந்த தன்மை, இரக்கம், அனுதாபம் ஆகியவற்றின் உணர்ச்சி மிக்க, ஆத்திரம் கொண்ட, தீர்க்கதரிசியாக, பிரான்ஸ் வெர்ஃபல்

நம்மிடையே தோன்றினர். இனிமையும் வல்லமையும் ஒருங்கே அமையப் பெற்ற அவர் குரல், வாயிலிருந்து வெளிவருவதற்குப் பதிலாக, உலகனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள இதயத்திலிருந்து நேராக வெளி வருவதுபோல் தோன்றியது. பிரான்ஸ் .:பெம்.:பெர்ட்! அடக்க முடியாத தீவிர வாதியான நீங்கள் வெளியிட்ட பத்திரிகை 'செயல்' என்பதிலிருந்து, அரசியல் அனைத்தையும், அதிகாரத்திலிருந்த ஆதிக்கவாதிகள் நீக்கினர். ஆனால் அதிலும் 'செயல் நூல்' என்ற பிரசுரத்திலும் நீங்கள் வெளியிட்ட கட்டுரைகளின்மூலம், அன்றைட அரசியல் உணர்வைப் பரப்புவதில் வெற்றி காண முடியுமென்று எங்களுக்குக் காட்டினீர்கள். சந்தி இலக்கணத்தைப் பிய்த்தெறிந்து, மனமெனும் புயலில், உலகின் சிறு துண்டுகளை வீசிக்கொண்டே, ஜோஹன்னஸ் ஆர். பீச்சர், சகோதரத்துவப் போரில் ஐரோப்பா முழுவதும் ஈடுபட வேண்டுமென நீங்கள் அறைகூவல் விடுத்தீர்கள். லியோனர்ட் பிராங்க்! போரைப்பற்றிய உங்கள் சிறு கதைகளில் போருக்குப் பொறுப்பாயிருந்தவர்களைக் குற்றம் சாட்டி வன்மையாகக் கண்டித்தீர்கள். பல்வேறு நாடுகளிடையே நடக்கும் போராட்டங்களில், தவிடுபொடியாக்கி அழிக்கப்பட்ட மக்களின் விதி பற்றி ஓரளவு நிதானத்துடன், ரேனே ஷிகெலெ, சித்திரித்துள்ளார். மனித ஒருமைப்பாடு காணும் வேட்கையில், கொந்தளிக்கும் மூளை வெடித்துக் கல் தீப்பந்தங்களாகக் கொளுந்து விட்டெரியச் செய்த, வல்.:பென்ஸ்டைன்; ஆற்றலும் அறிவுத் தெளிவும் மிக்க, பாட்டாளி மக்களின் உணர்ச்சியூட்டும் தலைவரான மேக்ஸ் பிராட்; அரசியல் புதுமைக் கவிதை, அதற்கும் மேலாக, புதுமை அரசியல் நாடகம் ஆகியவற்றின் ஆத்திரமிக்க தேவதூதராய், துணிவுடன் உயரப் பறக்கும் ஹேஸன் கிளெவர்; மனித வாழ்வை நிர்ணயித்து நிர்ப்பந்திக்கும் சக்திகளை எதிர்த்து நடத்தப்பட்ட, வேதனையான புரட்சிகளைப்பற்றி நீங்களும், மற்ற இளம் நாடகாசிரியர்களும் இசைக் கவிஞர்களும் எழுதியுள்ளீர்கள். உங்கள் நூல்கள் தோன்ற மூலகாரணமாய் இருந்தது, கலையைப் படைக்க வேண்டுமென்ற ஆர்வமல்ல; மனிதாபிமானமும் ஆன்மீக அகத் தெளிவும் கொண்ட ஓர் அரசியலைப் படைக்கும் ஆர்வமே காரணமாய் இருந்தது. மனித சமுதாயம், சகோதரத்துவம், ஆன்மீக சுதந்திரம், பரிவு, நீதி, இன்பம், பொறுப்புணர்வு, அன்பு ஆகிய இந்த ஏழைச் சொற்களால் குறிக்கப்படும் கோட்பாடுகளுக்காக, உயர்ந்ததொரு மனித சமுதாயத்தை நிலைநாட்டுவதற்காகப் போராட்ட அறைகூவல்நம்மிடையே, நம் அனைவரிடமும் ஒரே நேரத்திலே, ஒலித்து, நம்மை ஆட்கொண்டதே, நம் இளமைப் பருவத்தின் தலையாய, அலட்சியச் சிறப்பு பெற்ற அனுபவமாகும்.

உங்கள் நூல்கள், வெறும் இலக்கியங்கள் என்றும், உங்கள் கோரிக்கைகள், கற்பனையில் மட்டுமே காணக்கூடிய இலட்சிய உலகங்கள் என்றும் கூறப்படும் ஆட்சேபத்தினால், நீங்கள் பாதை தவறிச் செல்லாதீர்கள். புதிய கருத்து எதுவுமே, முதலில் கற்பனைத் தன்மை கொண்டதாகத் தானே இருக்க முடியும். முதலில் இலக்கியமாய் இராமல், சிந்தனை எதுவுமே இருக்க முடியாது. மனித இனத்தின் தலைசிறந்த எண்ணங்கள், முதன் முதலில், பிரபலமடையாத சஞ்சிகைகளிலும், மிகச் சிலரே படித்த நூல்களிலும், சிறு அறிஞர் குழுக்களிலும்தான் தோன்றின என்பதை நினைவில் கொள்ளுங்கள். பல்கலைக் கழகங்களின் பேராசிரியர் நாற்காலிகளிலிருந்தும், பிரபலமான பத்திரிகைகளிலிருந்தும், புதுக் கருத்துக்கள் எப்பொழுதுமே வெளியிடப் பட்டதில்லையே. ஆன்மீக, அறக் கோரிக்கைகள் பொருத்தமற்றவை என்று பரிகசித்துப் பழித்த ஏளனச் சிரிப்புதான் அந்த இடங்களிலிருந்து ஒலித்தது,

நூறு ஆண்டுகளுக்குமுன் .:ப்ரீட்ரிஷ் ஷ்லெகெல் ஒருண்மையை விளக்கினர்: "ஜெர்மன் ஆசிரியர்கள், ஒரு குறுகிய வட்டத்திற்காகவே எழுதுகின்றனர்; என் ஒருவருக்காக மற்றொருவர் எழுதிக் கொள்கிறார் என்று கூடச் சொல்லலாம், என்று எப்பொழுதும் குறை கூறுகிறார்கள். அது நல்லது தானே. அதன் மூலம் ஜெர்மன் இலக்கியம் மேலும் மேலும் ஆன்ம உணர்வும் பண்பு உயர்வும் பெறும். அதற்கிடையில், வாசகர் எண்ணிக்கை பெருகக் கூடும்". ஷ்லெகெலின் பதிலால் அந்த ஆட்சேபம் மூழ்கடிக்கப்பட்டது போலவே, புது எழுத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள பிளவு பற்றிய கூக்குரல்களும், எண்ணற்ற இளம் எழுத்தாளர் நூல்களை எத்தனை பேர் படிக்கின்றனர் என்பது பற்றிய ஏளனக் கேள்விகளும், இதே பதிலில் இன்றும் மூழ்கடிக்கப் படுகின்றன. பெரும் வாசகர் வட்டம் என்ற கோட்பாடும், கற்பனையில் மட்டும் காணும் இலட்சிய உலகக் கோட்பாடுதான், நீங்கள் பாமர மக்களுடன் பேசியபோது, அவர்கள் நிலைக்குக் கீழே இறங்கி இறங்கி வரவில்லை என்பது உங்கள் சாதனைகளில் ஒன்றுக ஒரு நாள் மதிக்கப்படும் அசட்டுத்தனமான, சம்பிரதாய முறைகளில் ஊறியிருந்த பத்திரிகைகளில் பணியாற்ற முயன்ற என்னைப்போல், உங்களில் சிலரும், பத்திரிகைகள் எவ்வளவு பயங்கரப் பாதையில் சென்று கொண்டிருந்தன என்பதை விரைவில் உணர்ந்தீர்கள். தாங்களே தாழ்த்தும் பரஸ்பர முயற்சியில், பொதுமக்களுக்கு ஏற்றாற்போல் பத்திரிகைகளும், பத்திரிகைகளுக்கு ஏற்றாற்போல் பொதுமக்களும் ஒத்துப் போயினர். அதன் பயனாக, சுதந்திர உணர்வு சிறிதும் இல்லாத உள்ளங்களின் தலைமையில், மக்கள் சிந்திக்கத் தூண்டப்படு

வதற்குப் பதிலாக, சிந்திப்பதை மறப்பதற்குத் தூண்டப்படு கின்றனர்.

பாவம், அந்த ஏழை அத்தீனியச் சிந்தனையாளர், சாக்ரட்டீஸ் பற்றி உங்களுக்கு நினைவு வந்தது போலும். எழுத்தில் ஒரு சொல் கூட, அவர் விட்டுச் செல்லவில்லை யெனினும், அவர் சிந்தனைகளே ஆதாரமாகக் கொண்டுதான், ஐரோப்பாவில் மூவாயிரம் ஆண்டு களாக மெய்யியல் தத்துவங்கள் வளர்ந்துள்ளன என்பது உங்க ளுக்கு ஆறுதல் அளித்தது போலும். பாரிஸ் நகரத்தில் இசைக் குறிகளை எழுதிக் கொண்டு ஏளனத்திற்கு உள்ளாகியிருந்த ரூஸோ பற்றி உங்களுக்கு நினைவு வந்திருக்கக் கூடும். பாரிஸ் நகரத்தில் இசை மெட்டுக் குறிகளைப் பிரதி எடுத்து அவர் பிழைப்பு நடத்தி னார். அவருடைய நூல்கள் சட்டப்படி தடை செய்யப்பட்டுப் பகிரங்கமாகக் கொளுத்தப்பட்ட அதே நேரத்தில், அதே நூல் களின் அடிப்படையில், அரசியல் சட்டம் ஒன்று தயாரித்தளிக்கு மாறு, போலந்து அவரை அழைத்தது. அன்னிய நாட்டில் அஞ் ஞாத வாசம் புரிந்த போதிலும், மனித சமுதாயத்தைப் புரட்சி கரமாகத் திருத்தி அமைக்கும் வெற்றிகரமான முயற்சிக்கும் மிகப் பெரிய இயக்கத்திற்கும், ஆதாரமாய்த் தம் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தம் வாழ்நாளிலேயே கண்ட கார்ல் மார்க்ஸ் பற்றி நீங்கள் நினைத்திருப்பீர்கள்.

ஆகவே ஒரு கருத்து, ஒருமுறை கூறப்பட்டால் அழிக்க வியலாத ஒரு வல்லமையுடனும், மையத்திலிருந்து புறநோக்குச் செல்லும் வேகத்துடனும், மனிதர் மூளைக்குள் புகுந்து குடிகொள்கிறது என்பதையும், செயலற்ற நிலையிலிருந்துப் பாமர மக்களைத் தட்டி யெழுப்புவது, பற்றுக்குறையோ, பணபலமோ, அல்ல, கருத்து மட்டுமே என்பதையும் நீங்கள் வெகு விரைவிலேயே உணர்ந் தீர்கள். சூழ்நிலையினால் நிர்ணயிக்கப்பட்டு ஆளப்படுவதல்ல கருத்து, கருத்தினால்தான் சூழ்நிலை நிர்ணயிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை நீங்கள் உறுதியாகக் கொண்டிருந்ததால், சூழ்நிலை யின் மெய்ம்மையைச் சித்திரித்த உங்கள் இளம் கலையை மிகுந்த செருக்குடன், திகைப்பூட்டும் முறையில் நீங்கள் போற்றியதுடன், மனிதப்பற்று என்ற கோட்பாட்டின் வெற்றியை, அவசரமாகவும், சிந்தனையைக் கிளறும் வகையிலும், நீங்கள் எடுத்துரைத்தீர்கள்.

முதலாவதாகவும் மிகுந்த ஆத்திரத்துடனும் நீங்கள் படை யெடுத்த துறை, இசைக் கவிதை, பெரிய நகரங்களின் பெரும் புள்ளிகள் பற்றியும் அவர்கள் சாகசச் செயல்கள் பற்றியும், நீங்கள் பரவசத்தில் பாதியும், கேலி உணர்வில் பாதியும், அக் கறை செலுத்திக் கொண்டிருந்தபோது, உங்கள் யுகத்தின் துன்ப, அவல, நிலையை, உங்களை அறியாமலே நீங்கள் கண்டு

கொண்டீர்கள். இரக்கம், ஆத்திரம், வெறுப்பு ஆகியவை உங்களிடம் மூண்டிருந்ததால், உலகைப்பற்றி உங்களால் அதற்குப் பின்பு பாட முடியவில்லை. பிரேத நிலையங்கள், பைத்தியக்கார விடுதிகள், கண்மூடித்தனமான காம வெறி, கயமைத்தனம், குழந்தைகள், வேசிகள், வயோதிகர், குற்றவாளிகள், தேவ தூதர்கள் ஆகியோரை நீங்கள் உங்கள் படைப்பில் சித்திரித்தீர்கள். ஆனால் புற இயல் மெய்ம்மையிலிருந்து நீங்கள் ஓடவில்லை. மண்ணுலக நரகத்தின் வாயிலாகப் பாய்ந்து, புற இயல் மெய்ம்மையுடன் போராடி, அதை அறிவு பூர்வமாய் வெல்ல நீங்கள் முயன்றீர்கள். அதன் பின்பு, ஆன்மீகப் புரட்சிமூலம் விமோசனம் காண வேண்டுமென நீங்கள் பிரச்சாரம் செய்யத் தொடங்கினீர்கள். அதை யொட்டி, உங்கள் கவிதை பற்றி முன்பு அசட்டையாகவோ எதிர்ப்பாகவோ இருந்தவர்கள்கூட, உங்களுடன் சேர்ந்து கொண்டனர். மக்கள் விழிப்புற்றுத் தாங்கள் உள்ள நிலையினை உணர்ந்து, திருந்தவேண்டுமென நீங்கள் அழைத்தீர்கள். இந்த அழைப்பு பல ஆண்டுகளாக ஒலிக்காத அழைப்பு. தம் நாடகங்களில் இந்த அழைப்பை விடுக்க ஸ்ட்ரிண்ட்பெர்க் கூட துணிவு பெறவில்லை. இதுவரை புறக்கணிக்கப்பட்ட உயர்ந்த உணர்ச்சிகளும், மறக்கப்பட்டிருந்த மகத்தான கருத்துக்களும், மீண்டும் வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டுமென்ற கோரிக்கைக்கு, நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தது வரை, இந்த அழைப்பு ஒலிக்கவில்லை.

ஆனால் சென்ற சில பத்தாண்டுகளாகச் செய்யப்பட்டு வந்த உளவியல் பாங்கான புதுமை முயற்சிகளோடுதான் நீங்கள் இன்னமும் உங்கள் உரை நடையில் தொடர்ந்து வந்தீர்கள் என்று உங்கள் எதிரிகள் குறை கூறினர். ஆனால் உண்மையில், புதுமைப் பரிசோதனைகள் செய்ய உளவியல் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதிலும், உள்ளங்களின் உறவுகளையும் அவற்றின் பின்னல்களையும் சித்திரித்துச் சிக்கலான பிரச்னைகளைப் பகுத்து அவற்றிற்குத் திருப்திகரமான முடிவுகளை வகுத்து, அதன்மூலம் உங்கள் நூல்களுக்கு வாசகர் வட்டத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், நீங்கள் மிகக் குறைந்த அக்கறையே காட்டுகிறீர்கள். இருவரிடையே எழுச்சி பெற்றுள்ள ஆண்—பெண் உணர்வின், போராட்டத்தின், வேதனைகளை வெளிப்படுத்த, ஆணின், பெண்ணின், இதயத்தையும், உணர்ச்சிகளையும் நீங்கள் துருவி ஆராயும் போது — உங்கள் தன்னறிவு நிலையின் இறுதித் தொடர்புகள் வரை உங்கள் அகத்தே ஊடுருவும்போது, மேலே படர்ந்துள்ள பொருக்கைப் பெயர்த்து, மனித இனத்தின் மேல் தோட்டை உரித்தெடுத்து, மனிதனைத் தனியாகப் பிரித்தெடுத்து, 'இதோ

பாருங்கள், மனிதன்', என்று அவன் சகோதரப் பிறவிகளுக்குக் காட்டுவதற்குத்தான் அவ்வாறு செய்கிறீர்கள்.

கலை, அக உணர்வின் வெளிப்பாடு. புறநிலையைப் படம் பிடித்துக் காட்டுவதல்ல அதன் பணி. புறநிலையில் மெய்ம்மை, மெய்ம்மையல்லாதது ஆகியவற்றிற்கிடையே இருந்த எல்லைக் கோடு தானாகக் கரைந்து விடுகிறது என்பதை நீங்கள் உணர்ந்து தெளிந்துள்ளீர்கள். சாதாரண நிகழ்ச்சிகளை, நடந்தவாறே, நீங்கள் எடுத்துரைக்கிறீர்கள். எளிமையை மறந்துவிட்ட வாசகன், இது பெரிய அற்புதம் என்று எண்ணுகிறான். கற்பனை நிகழ்ச்சிகளையும், கற்பனைக்கு எட்டாத அற்புத நிகழ்ச்சிகளையும், நீங்கள் உணர்ச்சியில்லாமல், அறிவிப்பதால், அவனுக்கு வியப்பு எழுவதில்லை. திடீரெனப் புறநிலை மெய்ம்மை விதிகள் அகத்தும் தள்ளுபடியாகின்றன. எழுத்தாளரின் குறிக்கோள் நிறைவேறி விட்டது. வாசகர் உள்ளத்தில் அமைதி குலைகிறது. உள்ளத்தினுல் உலகை உருமாற்ற முடியும் என்பது கதையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

இப்பொழுது நீங்கள் நாடகத் துறையிலும் ஆட்சி செலுத்தி வருகிறீர்கள். இலக்கிய வடிவங்களில், உணர்ச்சி மிக்கதாயும் மிகுந்த பயனளிக்கக் கூடியதாயும் உள்ளது நாடகம் என்று நினைக்கிறீர்கள் அல்லவா? அதிலும் குறிப்பாக, அகத்திறப் பாங்கு (expressionist) நாடகத்துக்கு அதிக வல்லமை உண்டு. அதில் மனிதன் முன்பாகவே வெடிக்கின்றான். ஓர் இதயத்திலிருந்து வெளியாகும் கதிர், கேட்டுக் கொண்டிருக்கும் பெரும் கூட்டத்தினர் இதயத்தில் ஊடுருவுகிறது. தனிமொழியின் முக்கியத்துவத்தை நீங்கள் மீண்டும் கண்டு பிடித்துள்ளீர்கள். தனி மனிதன் ஒருவன் தன்னை உணர்ந்து கொள்வதாக அமையும் அதே நேரத்தில், மனித சமுதாயம் முழுவதற்கும் விடுக்கப்படும் செய்தியாகவும் அமைவது, நாடகத்தில் தனிமொழி (Monologue).

ஆனால் நாடகமேடை, தீர்ப்பு மன்றமல்ல என்பதை மறந்து விடாதீர்கள். அவை இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை மனத்திற் கொள்ளுங்கள். அதன் பின்னர் இவை இரண்டில் எது அதிகப் பயனுள்ளது என்று முடிவு செய்யுங்கள். கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன், கூட்டத்தினருடன் பேசுவது சிறந்ததா? அல்லது, ஒளி வட்டத்தால் சூழப்பட்ட உயர்ந்தோர் உலகின் நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் பார்த்தும் கேட்டும் கூட்டத்தினரே பங்கு கொள்வது சிறந்ததா? தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் உலகமே உண்மையான உலகமென்றும், நம் உண்மையான வாழ்க்கை, அந்த உலகின் மங்கிய பிரதிபலிப்பே

என்றும், அவர்களுக்குத் தங்களே அறியாமலேயே, ஆயினும் மிக உறுதியாக, எண்ணம் ஏற்படுகிறது. உங்கள் குழந்தைப் பருவத்தில், நாடகமேடையில் நீங்கள் பார்த்த நிகழ்ச்சிகளும் கருத்துக்களும் உங்களைக் கவர்ந்து நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று உள்ளத்தில் ஆட்சி செலுத்தியதுபோல், சொந்த அனுபவமோ, நேரடியான கல்விப் பயிற்சியோ போதனையோ, அவ்வளவு பலமாக உங்களைக் கவரவில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். கருத்தின் ஓட்டத்தையும் நிகழ்ச்சியின் போக்கையும் சித்திரிக்கும் நாடகம், பேச்சைவிட வல்லமை மிக்கது என்பதையும், நம் முன்னுள்ள உலகில் ஆன்மீக உலகின் ஆட்சியை நிலை நாட்டுவதற்கான உயர்ந்த வாய்ப்பை அது சித்திரிக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

உங்கள் எதிரிகள் கூறும் குறைகளில் பெரும்பாலானவை, உங்கள் உணர்ச்சிப் பெருக்கின் உண்மையான விசுவாசத்துக்குச் சான்று. உங்கள் உணர்ச்சியின் ஆழம், உங்கள் குறிக்கோளின் தன்மை, உங்கள் மனஉறுதி ஆகியவை, அரை மனதான, நிதானமான சொற்களைச் சகிக்கமாட்டா. உங்களுக்குக் கொள்கைப் பிரகடனம் தேவை. உங்கள் கவிதையின் குழப்பம் கொந்தளிக்கிறது. துன்ப வேதனைக் குரலும், பரவசக் குரலும், திடீரெனத் தோன்றும் மலர்போல் எழுந்து பாய்கின்றன. குரலின் வல்லமையைப் பயன்படுத்துவதில் உங்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. வேண்டுகோள்களும் அழைப்புகளும் அறைகூவல்களும் இதயங்களைப் பிளக்கட்டும். தீர்க்கதரிசியின் கடுமையான எச்சரிக்கை, தன் முழு வல்லமையுடன் ஒலிக்கட்டும். சில்லரை முதலாளி வர்க்கத்தைச் சுற்றிச் சிரிப்பு கொப்புளிக்கின்றது; கோமாளித் தோற்றங்கள் கொட்டம் அடிக்கின்றன. அவதூறான ஏளனம் ஒலிக்கிறது: அத்துடன் துச்சமான, கண்டனச் சிரிப்பும் கலந்து கொள்கிறது. இந்தக் காலத்திற்கு உரிய இயல்புகளைக் கொண்டே, பொய், பிரசாரம், புரட்டு ஆகியவற்றைக் கொண்டே இந்தக் காலத்தைச் சாடுவதற்குப் பலர் தயங்குவதில்லை. இனிய இசை ஈர்க்கின்றது; தீக்கொளுந்துபோல் கொண்டாட்ட ஆர்ப்பாட்டம் எழுகிறது. ஒரு காலத்தில் வெறுக்கப்பட்ட, அவலச் சுவை, மீண்டும் ஓங்கி, எதிர்காலத்தின் நிலநிறமும், ஆத்திரத்தின் புயல் மேகங்கள் சூழ்ந்ததால் கருமையும் சூழ்ந்த வானை விரிக்கின்றன. 'எம் சோதரரே, உடன் பிறப்புகளே', என்று நீங்கள் மீண்டும் மீண்டும் கூவுகிறீர்கள். 'நாங்கள் இருக்கின்றோம்,' 'ஒருவர்க்கொருவர்', 'ஐரோப்பாவுக்கு', 'உறவாடுதல்', 'மத்தியில் உள்ள மனிதன்', 'மரணமும் மறு பிறப்பும்', 'நீங்களும் மனிதர்களே', 'அறைகூவல்', 'நட்பின் ஒளி', 'மனிதன் இதயக் கூக்குரல்', 'ஒரு புதுத் தொடக்கம்',

'தோழர்கள்...' ஆகியவை, உங்கள் நூல்களில் சிலவற்றின் தலைப்புக்கள்.

சொல்லாகத் திரண்டுள்ள உணர்வின் வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்துவது உங்கள் உரிமையும் கடமையும் ஆகும். உங்கள் ஆற்றல், உணர்ச்சிப் பெருக்கு ஆகியவற்றில் நீங்கள் ஐயம் கொள்ளவில்லை. உங்கள் படைப்பும் அதன் வடிவமும் உங்கள் இதயத்திலிருந்து அடியோடு எழுகின்றனவா, உங்கள் குறிக்கோள் நிறைவு பெறுகின்றதா என்பவை பற்றித் தான் உங்களைப் பற்றித் தீர்ப்புக் கூறும் திறனாய்வாளர் பரிசீலனை செய்ய வேண்டும். மனித இனத்தை மாற்றித் திருத்த வேண்டுமென்ற ஒரே உறுதிதான் உங்களை உந்துகிறது என்ற அடிப்படையில், உங்கள் பல்வேறு படைப்புகளின் தோற்றங்களையும் பெருக்கத்தையும் கண்டு, எவரும் ஐயப்பாடு கொள்ளக் கூடாது.

தீவிரவாதிகள் என்று உங்களைக் கூறிக் கொண்டு, மனித இனத்தின் முன்னேற்றம் காண அழைப்புகள் விடுத்தாலும் சரி, அல்லது உங்கள் கோரிக்கைகளும் சமயங்களின் அடிப்படை போதனைகளில் ஊன்றி மனித சமுதாயத்தின் மாற்றமுடியாத, இறுதியான, விதிகளாக விளங்க, அந்த சமய போதனைகளையே மீண்டும் புதுப்பிக்கும் முறையில் உங்கள் பாடல்கள் அமைந்தாலும் சரி, அந்த மன உறுதி ஒன்றுதான். தன் ஆயிரம் ஏக்கங்களின் ஆத்திரமிக்க உணர்வையும் அந்த ஏக்கங்களிலிருந்து விடுதலை பெறும் வழியையும், இரத்தினச் சுருக்கமான சூத்திரங்களில் வெளிப்படுத்த ஒருவரை உந்துவதும் அந்த மன உறுதிதான். நீர் வீழ்ச்சிபோல் பாய்ந்து வரும் சொற்பெருக்கில், உயர்ந்த நிலைகளுக்கு மக்களை அடித்துச் சென்று, அவர்கள் அனுபவங்களை வளமாக்க, இன்னொருவருக்குத் துணையாய் நிற்பதும் அந்த மன உறுதிதான். எல்லையற்ற புலமையின் இடிமுழக்கத்தினால், மனித இனத்திற்குப் புத்தி வரச் செய்ய நீங்கள் விரும்பினாலும் சரி, அல்லது கண்ணொளி இயலின் விதிகளும், இடவெளி பற்றிய உணர்வுகளும் மீறப்பட்டுச் சீர்குலைக்கப்படும், எல்லையற்ற வெளிக்கு—பரிமாணமில்லா எல்லையற்ற நிலைக்கு—மனித இனத்தை அமைத்துச் செல்ல விரும்பினாலும் சரி, செய்தித் தாள்களிலிருந்து ஊர் நடப்பு பற்றிய அவலச் செய்திகளை, காலத்தின் கோலத்தை அம்பலப்படுத்தும் செய்திகளை, நீங்கள் எங்கள் முன் வைத்து அதிர்ச்சியுறச் செய்தாலும் சரி. நீங்கள் சித்திரிக்கும் காட்சியிலே கொடிய ஏளனத்தைக் கொட்டிச் சித்திரத்தை உருக்குலைத்து, உலகெங்கும் பரவியுள்ள விபரீதச் சீரழிவை நீங்கள் வற்புறுத்திச் சுட்டினாலும் சரி. நம் உலகில் நடமாட்டாத உணர்ச்சி வெறிகளும் படைப்பினங்களும் தலை விரித்

தாடும் புதியதோர் உலகம், உள்ளத்திலிருந்து பாயும்படி நீங்கள் செய்தாலும் சரி. சொல் ஒவ்வொன்றிலும் வேகத்தை அளந்து புகுத்தி, அச் சொற்களைக் கொண்டு கூர்மையாக்கிய வாக்கியங்களை உங்கள் மூளையில் காய்ச்சி எடுத்து, எங்கள் இதயங்களிலே பாய்ச்சினாலும் சரி. இவை அனைத்திலும் உங்கள் நோக்கம் எப்பொழுதும் ஒன்றே: மனித இனத்தைத் தீவிரப்படுத்துவது; மனிதர்களிடையே மனிதத் தன்மையை வலியுறுத்துவது.

நீங்கள் பலபேர் இருக்கின்றீர்கள். அது நல்லதே. ஒவ்வொரு மாதமும் உங்கள் எண்ணிக்கை பெருகுகிறது; உங்கள் செல்வாக்கு வளர்கிறது. புதுத் தொடக்கத்தை நாடும் மக்களின் இந்தப் பேரணி, மனித இனத்தின் விமோசனத்திற்காக, ஆன்ம உணர்வு நடத்தும் இந்த இலட்சியப் போராட்டம், இது மகத்தான தொரு காட்சி.

கடந்த காலத்தின் புனிதமான குரல்கள் நம்மிடையே ஒலிக்கின்றன. ஏனென்றால் நம்மை உந்தும் கருத்துக்கள், மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென நாம் உந்தும் கருத்துக்கள், புதியன அல்ல. அவை காலத்தைக் கடந்து என்றென்றும் நிற்பவை. ஆகவே தான், இன்றைய வாழ்வின் இரைச்சலை மட்டுமே கேட்டுப் பழக்கப்பட்ட செவிகளை உடையவர்க்கு இவை புதிய கருத்துக்களாகத் தோன்றுகின்றன. ஐரோப்பாவின் உண்மையான சிந்தனையாளரின் அழைப்பும் அறை கூவலும் நாம் செயலற்ற நிலையிலும் சோர்விலும் இன்னமும் அழுந்தி அழிய வில்லை. ருஷ்யக் கதாசிரியர்களின் குரல்கள், அனைவரையும் தழுவும் சோதர அன்பின் சின்னமான வால்ட் விட்மன் கவிதை ஆகியவை இன்னமும் நம் செவியில் ஒலிக்கின்றன. 'களையிழந்த உலகின் எதிர்ப்பை என்றுவது ஒரு நாள் முறியடிக்கும் ஆற்றல் கொண்ட சக்தி, ஆன்ம உணர்வு', என்ற கெதெயின் நம்பிக்கையை நாம் நம் துணைக்கு அழைக்கலாம்.

பழைய தலைமுறை ஏற்கெனவே நம்முடன் சேர முன்வந்து கொண்டிருக்கிறது. பல்கலைக் கழகப் பேராசியர்கள் தங்கள் குரலை, நம் குரலுடன் இணைத்து ஒலிக்கின்றனர். அரசின் ஆதிக்கத்தை நம்பியிராமல், இளைஞரின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொருட்டுச் சில பேராசிரியர்கள் தங்கள் பல்கலைக் கழகப் பதவிகளைத் துறந்துள்ளனர். அரசியல் வாதிகள் தங்கள் கோரிக்கைகளைத் தெளிவாகவும் உறுதியாகவும் வகுப்பதற்கு ஆதரவான குழுநிலை உருவாகியுள்ளது; அவர்கள் கட்டுரைகளிலும் பேச்சுக்களிலும் சொற்களை மட்டும் வைத்து விளையாடாமல், நாம் ஏற்றுள்ள குறிக்கோள்களையும் அவற்றுடன் இணைத்துள்ளனர். ஹெய்ன்ரிஷ் மன்! உணர்வில் பிறக்கும் உலகத்தின் படைப்

பாளரும், பழைய உளுத்துப்போன உலகை அழிப்பவரும், புதிய மனித சமுதாயத்தின் முன்னோடியும் ஆன நீங்கள், எங்களுக்கு முன்னால் வழிகாட்டிச் செல்கிறீர்கள். மண்ணுலக எழில்கள் பற்றிப் பாடத் துணிந்த கடைசி இசைக் கவிஞரான தெயடோர் தாப்லர்; நம் முன்னுள்ள உலகின் மெய்ம்மைக்கு அப்பாற்பட்டதாய், காலம், இடம் ஆகியவற்றின் கட்டுகளி லிருந்து விடுதலை பெற்றதாய், தூய்மையான துடிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நிறைந்ததாய், உள்ள ஒரு மெய்ம்மையை உரு வாக்கியுள்ள தந்தை, பால் ஆட்லர்; நீங்கள் எங்களிடையே இருக்கின்றீர்கள். ஃப்ரிட்ஸ் ஃபன் உன்ரூ, இதுவரை உங்கள் வாழ்க்கையும் எழுத்தும் வளர்ந்த வட்டாரங்களிலிருந்து நீங்கள் விலகி வெளியேறி, உங்கள் உளமார்ந்த விருப்பத்தின் பேரில், எங்களுடன் சேர்ந்துள்ளீர்கள். உங்கள் துன்பவியல் நாடகங் களில், ஐயப்பாடுகள் கொண்ட மனிதன் தன்னைத் தானே அறிந்த மனிதனின் முதுகெலும்பு விரைத்துப் போகச் செய்யும், பயங்கர ஓலம் மட்டும் ஒலிக்க வில்லை; ஐயப்பாடுகளைக் கைவிட்டு, இரத்த வெறி நிறைந்த உலகில் ஒளி புகுத்தி, பரிவு மிக்க, தெளிவு மிக்க மனித சமுதாயத்தை உருவாக்க உங்கள் நாடகங்கள் உதவின.

உணர்வின் வல்லமையில் உறுதியான நம்பிக்கையும், அரசியலில் தளராத விசுவாசமும் கொண்டுள்ள நம் தலைமுறை, நம் உள்ளத்தை ஆட்கொண்டுள்ள மகத்தான கருத்தை மக்களுக்கு வழிகாட்டி, மக்களுடன் போராடும் ஆன்ம உணர்வு செறிந்த கட்சி என்ற கருத்தை, இறுதியில் உணரக்கூடும். பிளேட்டோவின் அரசில், ஆன்மீக மனிதன் செலுத்தும் பற்று மிக்க அறிஞர்கள் குடியரசு வரை 'வில்யம் மெய்ஸ்தர்' இல், கெதெ சித்திரித்த, அரண்சிகரச் சங்கம், பேரறிஞர் செல் வாக்கையும் அதிகாரத்தையும் நிலை நாட்ட வேண்டுமென்ற ஜார்ஜ் சாண்ட் விடுத்த உணர்ச்சி மிக்க கோரிக்கை ஆகியவை முதல், ரேனன் கூறியபடி 'மெய்ம்மையின் மிக முக்கிய அந்தரங் கங்களை அறிந்து, தங்கள் கைவசமுள்ள வல்லமை மிக்க மெய்யறி ஞர் வரை பல நூற்றாண்டுகளின் குழப்பத்திற்கும் இடையே இக் கருத்து இடைவிடாது ஒளி வீசுகிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரசியல் குழப்பத்திலிருந்து, இக் கருத்து ஒன்று தான் விமோசனம் அளிக்குமென்று, சில அரசியல் வாதிகளும் புதினப் படைப்பாளரும் நம்புகின்றனர். புரட்சிக்குப் பின்னும், நெப்போலியனின் போர்களுக்குப் பின்னும், இதே நம்பிக்கை தான் 'ரொமாண்டிக்' கொள்கையினருக்கு ஏற்பட்டது. ப்ரஷ்ய இனத்தைச் சேர்ந்த ஜங்கர் அக்கிம் ஃபன் ஆர்னிம், அக் கொள்கையினரில் ஒருவர். அவர் சிறந்த படைப்பான டை க்ரோனேவாச்டர் என்ற நூலில், 'இனிமேல் ஜெர்மனியின் மணி

மகுடத்தை, ஆன்மீக வழியில் மட்டுமே தான் பெற்று நிலை நாட்ட முடியும்,' என்ற நம்பிக்கை ஒளி வீசுகிறது.

முன்பொரு முறை, ஆன்ம உணர்வில் நம்பிக்கை கொண்டவர்கள் ஒன்று கூடி, ஜெர்மன் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்க முயன்றது உங்களுக்கும் நினைவிருக்கும். பிராங்க்பர்ட் பார்லிமெண்ட் கூடியபோது, உலகில் கூடிய சட்டப் பேரவைகளில் தலைசிறந்ததாகவும் கண்ணியம் மிக்கதாயும், அற உணர்வு மிக்கதாயும், அமைந்திருந்தது, அது. 1750—1848 ஆண்டுகளில் மனித சமுதாயத்தின் ஆன்ம உணர்வின் கனிவுக்குச் சின்னமாக அமைந்தது, அது. ஆன்ம உணர்வினால் அரசியல் பலனும் அடைய வேண்டுமென்ற வேட்கை ஒன்றே அப் பேரவையின் உறுப்பினரை ஒன்று சேர்த்திருந்தது. இன்றோ இப் பேரவையை அரசியல்வாதிகளும் வரலாற்றுப் பேராசிரியர்களும் ஏளனம் செய்கின்றனர். அன்றையப் பேராசிரியர்களோ, வல்லமை மிக்கோருக்குத் தோரணங்களாகவும் துந்துபிகளாகவும், பாமர மக்களின் செயலற்ற தன்மையை எதிர்த்தும் அவர்கள் உறுதியாகப் போராடித் தங்கள் கோரிக்கைகளைக் கைவிடுவதை விடப் பல்கலைக் கழகத்தில் தங்கள் பதவிகளையே கைவிடச் சித்தமாயிருந்தனர்.

மனிதாபிமானம், சகோதரத்துவம், ஆன்ம உணர்வு, சுதந்திரம், இன்பம், பொறுப்புணர்வு, அன்பு ஆகிய உறுதியான, எக்காலத்துக்கும் ஏற்ற, குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட தற்காலிகத் திட்டத்தை வகுத்துள்ள இடது சாரி அறிஞர் அணி என்று, இளம் கவிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், பிரச்சார எழுத்தாளர் ஆகிய நீங்கள் ஒன்று கூடியுள்ளதைச் சட்டமன்றப் பாணியில் வர்ணிக்கலாம். அந்த மூலமுதலான, மனிதாபிமானக் கருத்துக்கள், உங்கள் கவிதைகளிலும் இடி போல் முழக்கமிடுகின்றன. எங்கள் கதைகளின் நிகழ்ச்சிகளிலிருந்து அவை ஒளி பெற்று எழுந்து, துடிப்புடன் விளங்குகின்றன. அக் கருத்துக்களைத் துணைக் கொண்டு தான், உங்கள் நாடகங்களில் உரையாடல்களும் துன்ப நிகழ்ச்சிகளும், சோதர மக்களின் சோர்வுற்ற இதயங்களைப் பொடியாக்கிப் புதுப்பிக்கின்றன....காலத்தை வென்று நிற்கும் இச் சொற்கள், பொருளற்ற வெற்றுச் சொற்கள் என்று, பொய்யையே அன்றாடம் அர்ச்சனை செய்து பிழைப்பு நடத்திச் செருக்குற்றுக் கண் மூடித்தனமான வாழ்க்கை நடத்துவோரை, ஏளனம் செய்கின்றன. இக் கருத்துக்கள் தங்கள் வல்லமையையும் ஏற்புடையையும் இழந்து விட்ட காரணத்தாலேயே, முறிவு அடைந்துள்ள மனித சமுதாயத்தின் நடுவே, இந்த ஏளனப் பேச்சு நடக்கிறது.

இந்தக் கருத்துக்களை நீங்கள் ஆதரிக்க முன் வந்து, உருக்கமான வேண்டுகோள்களையும், பலமான கண்டனங்களையும், அர்ச்சனைகளையும் அறை கூவல்களையும், உங்கள் படைப்புகளில் வெளியிடத் தொடங்கிய அதே நேரத்தில், மாறுதல் ஏற்படும் இடைக்காலக் கட்டம் முடிவடைந்தது என்று நினைக்கிறேன். நம் முன்னோடிகளில் பலர், இப் புது மகிழ்ச்சிகளாலும் புது அறிவினாலும் ஏற்பட்ட எழுச்சியிலும் கொந்தளிப்பிலும் குழம்பி, பழமையில் இன்னும் அழுந்தியிருந்த உணர்வுகள், உணர்ச்சி நெரிசல்கள் ஆகியவற்றின் சுழியையும் சிக்கலையும் தாங்க முடியாமல் முறிந்தனர்.

உங்கள் அனைவர்க்கும் பொதுவாகக் கிட்டவிருக்கும் புகழுக்கு ஆதாரம், இந்தக் கோரிக்கைகளையும் கருத்துக்களையும் நீங்கள் வெளியிட்டீர்கள் என்பதல்ல: இந்த நேரத்தில், நீங்கள், பேச்சிலும், பாட்டிலும், பிரக்சாரத்திலும், அவற்றை வெளியிட்டீர்கள் என்பதுதான். உங்கள் படைப்புகள் தவிர, மற்ற இலக்கியங்கள், இன்றைய அரசியல், சமூக, அரீதிகளைக் கண்டு ஆத்திரப்படாமல், அவற்றைப் பெரும் போக்காகவும் சாதகமாகவும் சித்திரித்து, அவை சுவையுள்ளனவாகத் தோன்றச் செய்து, கவனக் குறைவாக அவற்றைப் புகழ்வதிலும் ஈடுபட்டு, இலக்கியங்கள் தம்மைத் தாமே இழிவுபடுத்திக் கொண்டிருக்கும் இன்றையச் சூழ்நிலையில், காலத்தின் போக்கை எதிர்த்து, நீங்கள் இக் கருத்துக்களை வெளியிட்டீர்கள் என்பதுதான் உங்கள் புகழுக்கு ஆதாரமாக அமையும். நீங்கள் இன்பமும் துன்பமும் அனுபவித்த பழமையின் கரைகளும் களங்கங்களும் படித்திருந்த போதிலும், உங்கள் தலைமுறையைப்போல் வேறெதுவும் இருந்ததில்லை. இலட்சியச் சிறப்பு உடைய படைப்புகளை நீங்கள் உருவாக்கினீர்கள் என்று பெருமை பேச முடியாது. ஆனால் சில படைப்புகளின் முன்னோடிகள் நீங்கள் என்பதில் பெருமை கொள்ளலாம். நிலைமையின் நிர்ப்பந்தங்களாலும் வரலாற்று நிர்ப்பந்தங்களாலும் கட்டுப்பட்டு, அவற்றிற்குப் பலியாகியிருந்த மனித சமுதாயத்திற்கிடையே, மனிதன் ஏற்று நடத்துதற்குரிய ஒரே போராட்டத்தை, நிலைமையின் மெய்ம்மையை எதிர்த்துக் கருத்துக்களின் போராட்டத்தை, முதலில் ஏற்று நடத்தியவர்கள் நீங்கள்தான். இதுவரை, உணர்வு, உண்மை நடப்பின், அடிமையாகத் தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொண்டிருந்தது. அறிவு சார்ந்த ஆதாரங்கள் தேடித்தரும் முயற்சியில் அறிவு மாயைகளையும் எழுப்பி, அவற்றைப் பக்கபலமாகக் கொண்டு, இன்று நிலவும் அமைப்பை நிலைநாட்டி உறுதிப்படுத்தும் பணியில் உணர்வு இதுவரை ஈடுபட்டிருந்தது. ஆனால் இன்றே உண்மை என்று பெயர் பெற்ற போதிலும், செயலற்ற தன்மையின் சுமையாகி

விட்ட நிலையை எதிர்த்து, எப்பொழுதும் தீவிரமாக உள்ள கருத்தை நிலைநாட்ட, உணர்வு போராட்டம் நடத்தி வருகிறது.

ஆகவே, உண்மையில் தொன்மையில் ஊன்றியிருந்த புதுமையை நீங்கள் தொடங்கிய அதே நேரத்தில், உளுத்துப்போன பழமையின் சுமை உங்கள் மீது அழுத்திய சம்பிரதாயப் போக்கை நீங்கள் ஒழிக்க வேண்டியிருந்தது. இந்த எதிர்ப்புப் பணி, சீரழிக்கப்பட்ட உங்கள் இளமை மீது மேலும் துன்பங்களைச் சுமத்தியுள்ளது. உங்கள் உள்ளமும் புலன்களும் பிரியப்படும் பலவற்றைக் கைவிட்டுப் பாழ்படுத்த, ஆன்ம உணர்வு உங்களைக் கட்டாயப்படுத்துகிறது. தியாகத் துறவின் கணைகள் உங்கள் உள்ளங்களில் பாய்வது, என் செவிகளில் ஏற்கெனவே எதிரொலிக்கிறது.

நீங்கள் கையாளும், மகத்தான, உணர்ச்சி மிக்க சொற்கள், மிதப்பு வாய்ந்த துடுக்குத்தனமான சொற்கள் என்று யாரும் ஏளனம் செய்ய முடியாது. ஏனென்றால், ஓர் இலட்சியத்திற்காகப் பாடுபடும்போது, உயர்ந்த இலட்சியச் சிறப்புடைய குறிக்கோள் ஒன்றை நாடுவதும் விரும்புவதும் மட்டும் போதாது என்பதையும், விருப்பம், உழைப்புக்கு முதற்படி தான் என்பதை நீங்கள் உணர்ந்து உறுதி கொண்டுள்ளீர்கள். தம்மைத் தாமே அழித்துக் கொண்ட யுகங்களைக் கடந்து நாம் வந்து விட்டோம். மறுபிறப்பு எய்தியுள்ள நாம், உருக்கமான நம் அழைப்புக்களையும், எதிர்காலத்தில் நமக்காகக் காத்து நிற்கும் நூற்றாண்டுகளை நோக்கி விடுக்கின்றோம்.

(சுருக்கப்பட்டது. முதல் உலகப் போரில், ஆசிரியர் இராணுவப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, 1917ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. 1918இல் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டது.)

ஆல்பிரெட் டொப்ளின்

பெர்லின் அலெக்ஸாண்டர் பிளட்ஸ்

ஆல்பிரெட் டொப்ளின் (1878—1957) மருத்துவத் தொழிலே மேற் கொண்டிருந்தார். 'சமூக ஜனநாயகவாதிகளுடன் அவர் அரசி யல் சார்புகள் கொண்டிருந்தார். 1933இல் அவர் பிரான்சுக்குக் குடியேறினர்; மரணமடையும்வரை பெரும் பகுதிக் காலத்தை அவர் அங்கேயே கழித்தார். புதினங்களில் அவர் படைப்புக்கள் வெவ்வேறு விதமாய் அமைந்திருந்ததால், தற்காலப் புதின இலக் கியத் துறையின் தலைவர்களில் ஒருவராகவும், முக்கியமான முன் னோடியாகவும் அவர் விளங்கினர். நம் சமூகத்தில் தனி மனிதனின் வாழ்விலும் சிந்தனைகளிலும், தனி மனிதனுக்கு மேம்பட்ட சக்திகள் குறுக்கிடுவது பற்றியும். அதன் விளைவாய்ப் பொருளாதார சக்தி பெற இருபதாம் நூற்றாண்டுப் போராட்டத்தில் தனி மனிதர்கள் தொகுதிகளாகக் கூட்டு சேர்வது பற்றியும் அவர் புதினங்கள் தலை யாய கவனம் செலுத்துகின்றன. டொப்ளின் புதினங்களில் புகழ் பெற்றது, 'பெர்லின் அலெக்ஸாண்டர் பிளட்ஸ்'. 1929இல் எழுதப் பட்ட இப் புதினத்தில், சிறையிலிருந்து விடுதலை பெற்றுள்ள போக்கு வரத்துத் தொழிலாளி ∴பிரான்ஸ் பீபர்கா∴ப் பெரிய நகரமாகிய பெர்லினுடன் நடத்தும் போராட்டத்தை ஆசிரியர் சித்திரிக்கின்றார். நாணயமான வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமென்று தனியாக அவன் முயற்சி செய்கிறான், ஆனால் சாமர்த்தியமோ, சூதுவாதோ இல்லாமல், பொதுவாக நல்ல இயல்பு கொண்ட போதிலும் உணர் வுத் தெளிவு இல்லாத அவன் பெர்லின் நகரத்தின் ஆபத்துக்களுக் கும் மோகக் கவர்ச்சிகளுக்கும் விரைவில் இரையாகி விடுகிறான். குற்றம் புரியும் கயவன் ஒருவனே அவன் நம்பி வாழ்கிறான்; இறுதி யில் அக்குற்றவாளி ∴பிரான்ஸ் பீபர்கா∴ப் காதலியையே கொன்று விடுகிறான். அதன் பயனாய் பீபர்கா∴ப் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. தான் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், தன்னைச் சுற்றிலும், தனக்கும், என்ன நடக்கிறது என்பதை அறிவது அவசியம் என்பதை அவன் உணர்கிறான். இரைச்சலும் பதட்ட மும் நிறைந்த நகர வாழ்க்கை இந்தப் புதினத்தில் போல், வேறெந்த ஜெர்மன் புதினத்திலும் படம் பிடித்துக் காட்டப்படுவதில்லை. அந்தப் பதட்டத்தை மிகைப்படுத்திக் காட்டித் தனி மனிதனை விழுங்கும் இன்றைய நாகரிக வாழ்வின் சித்திரமாக நமக்கு அளிக்கப்படுகிறது. அரசியல் அதிகார ஒழிப்பு வாதிகள் (anarchists) நடத்தும் கூட்டமொன்றை இப்பகுதி வர்ணிக்கின்றது. அவர்கள் மார்க்சிய சித்தாந்த அடிப்படையில் முதலாளித்துவ அரசை ஆராய்ந்து, சட்டமன்றவழி ஜனநாயக அமைப்பு கொண்ட

வைமார் குடியரசை எதிர்த்துப் போராடுகின்றனர். ∴பிரான்ஸ் பீபர்கா∴ப் இத்தகைய கூட்டங்களில் அக்கறை காட்டவில்லை. மக்கள் அரசியல் கட்சிகளில் சேர்வது ஏன் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. தன்னந்தனியாகவே வாழ்க்கையைச் சமாளித்து விட முடியுமென்ற நம்பிக்கையில், அவன் அணைத்தையும் எதிர்க்கும் மனநிலையில் பிடிவாதமாக இருக்கின்றான்.

ஜெர்மன் ரீஷ் ஒரு குடியரசு. அதை நம்பாதவர் உயிருக்கு ஆபத்துதான். கோப்பெனிக்கர் ஸ்ட்ராஸ்ஸேயில், மைக்கேல் கிர்க்ஸ்ட்ராஸ்லே மூலையில் ஒரு கூட்டம் நடக்கிறது. கூட்டம் நடக்கும் மண்டபம் நீண்ட, குறுகிய இடம். தொழிலாளர்களாகிய இளைஞர்கள், ஷில்லர் 'டை'களும் பச்சைச் சட்டைத் தோள் பட்டைகளும் அணிந்து கொண்டு, ஒருவர் பின் ஒருவராக வரிசையாக உட்கார்ந்திருக்கின்றனர். பெண்களும் சிறுமிகளும், பிரச்சாரப் பிரசுரங்களை விற்பவர்களும், மண்டபத்தில் இங்கு மங்கும் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். மேடையில், மேசைக்குப் பின்புறம், இரண்டு ஆண்களுக்கு இடையே, பாதி வழுக்கைத் தலையுடன், தடியான ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவர் கூட்டத்தினரை மாறிமாறித் தூண்டிக் கொண்டும், புகழ்ந்து பாராட்டிக் கொண்டும், கேலி செய்து கொண்டும், சில சமயங்களில் ஆத்திரமூட்டிக் கொண்டும் இருக்கிறார்.

"நம் சொற்களைக் காற்றினில் வீசிப் பேச, நாம் இங்குக் கூடியிருக்கவில்லை. அந்த வேலையை, ரீஷ்ஸ்டாக் சட்டப் பேரவையில் உள்ள பேர்வழிகளிடம் விட்டுவிடுவோம். சட்டப் பேரவைக்குச் செல்ல உங்களுக்கு விருப்பமில்லையா, ஏன் நம் தோழர்களில் ஒருவரை, யாரோ ஒருவர் கேட்டாராம்: மேலே, பொன்னிறத் தூபி மாடமும், சொகுசான நாற்காலிகள் கீழேயும், கொண்டுள்ள அப்பேரவையில் செல்ல விருப்பமில்லையா என்று கேட்டாராம். தோழர் பதில் சொன்னார்: ரீஷ்ஸ்டாக் பேரவைக்கு நான் சென்றால், அங்கு இன்னுமோர் அயோக்கியன் சேர்ந்துவிட்டான் என்றுதான் ஏற்படும். தோழர்களே, பொறுப்பில்லாமல் பெரும் போக்காகப் பேசிக் கொண்டிருக்க நமக்கு நேரமில்லை. அதிகாரிகளை நாங்கள் அப்பலப்படுத்தப் போகிறோம் என்று மனப்பூர்வமாக நம்பிக் கம்யூனிஸ்ட்கள் கூறுகின்றனர். அதனால் என்ன விளைவு நேரிடுகிறது என்று நாம் கண்டு கொண்டுள்ளோம். கம்யூனிஸ்ட்களே, முழுக்கச் சீர்கேட்டுக்கும் ஊழலுக்கும் ஆளாகி விடுகின்றனர். ஆகவே அதிகாரிகளை அம்பலப்படுத்துவதாக அவர்கள் பேசுவதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. அது ஒரு பெரும் மோசடி. ஜெர்மனியில், அம்பலப் படுத்த வேண்டியுள்ள அதிகாரிகள் ஒரு

குருடன் கூடக் காணமுடியும். அதற்காக நாம் ரீஷ்ஸ்டாக் பேரவைக்குச் செல்ல வேண்டியதில்லை. ஆனால் அந்த அரசியல்வாதிகளைப் பார்க்கத் தெரியாதவனைப் பற்றி நாம் கவலைப்பட்டுப் பலனில்லை. அவன் ரீஷ்ஸ்டாக் பேரவைக்குச் சென்றாலும் சரி, செல்லாவிட்டாலும் சரி, அவனால் எதையும் தெரிந்து கொள்ளமுடியாது. அந்தப் பேரவையில், வெப்பக் காற்று வீசுவதைத் தவிர வேறென்ன நடக்கிறது? மக்களை முழுக்காட்டி, மேல்பூச்சு பூசி, மயக்கி, மழுப்பவே அது பயன்படுகிறது. அந்த உண்மையைப், பாட்டாளி மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்வோரைத் தவிர, மற்றெல்லா அரசியல் கட்சிகளும் உணர்ந்துள்ளன.

"தத்துவம் பேசும் நம் சோஷலிஸ்டுகள், சமயப் பற்று கொண்ட சோஷலிஸ்ட்டுகள் சிலர் அக்கட்சியில் இருப்பதை நாம் ஏற்கெனவே பார்க்கின்றோம். அதில்தான் சூட்சுமம் அடங்கியுள்ளது. அவர்கள் அனைவரும் சமயப்பற்றை நாடுகின்றவர்கள்: பாதிரிமார் பின்னால் ஓடுகின்றவர்கள். அவர்கள் பாதிரியின் பின்னால் ஓடினாலும் சரி, முதலாளி பின்னால் ஓடினாலும் சரி, அவர்கள் முக்கிய வேலை, கீழ்ப்படிந்து நடப்பது. (கூட்டத்தில் ஒருவர்: நம்பிக்கை கொள்வதும் அவர்கள் வேலை). அதைச் சொல்லவே தேவையில்லையே. சோஷலிஸ்டுகள், எதையும் விரும்பாதவர்கள், எதையும் அறியாதவர்கள், எதையும் செய்ய ஆற்றலற்றவர்கள். அவர்களுக்கு எப்பொழுதுமே பேரவையில் பெரும்பான்மை பலம் உண்டு. ஆனால் அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்பதை அவர்கள் அறியாதவர்கள். மன்னிக்கவும். அவர்களுக்கு அது தெரியும் என்றுதான் சொல்லவேண்டும். சொகுசான நாற்காலிகளில் சாய்ந்து, சுருட்டு பிடித்து, மந்திரி பதவி வகிக்க அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதற்காகத்தான் பாட்டாளி மக்கள் அவர்களுக்குத் தங்கள் வாக்குகளை அளித்தோடு, சம்பளம் வாங்கும் போதெல்லாம், தங்கள் பையிலிருந்து காசையும் அவர்களுக்குக் கொட்டிக் கப்பம் செலுத்தினர். பாட்டாளி மக்களைச் சுரண்டி ஐம்பது அல்லது நூறு பேர், தங்கள் பணப்பை பெருக்கச், சொகுசான வாழ்வு வாழ்வதற்காக சோஷலிஸ்ட்டுகள் அரசியல் அதிகாரத்தை வென்று விடவில்லை. அரசியல் அதிகாரம்தான் சோஷலிஸ்ட்டுகளை வென்று விட்டது. கழுதை வயதாகிறது என்று வயதானவர் பற்றிக் கூறுவார்கள். வயதாக ஆக, அறிவு பெருகும் என்றும் கூறுவார்கள். ஆனால் ஜெர்மன் பாட்டாளியைப் போல் கோவேறு கழுதை உலகில் இனி மேல்தான் பிறக்க வேண்டும். மீண்டும் மீண்டும் ஜெர்மன் பாட்டாளிகள், தேர்தல் சாவடிக்குச் சென்று, வாக்குப் பதிவு செய்து விட்டுத் தங்கள் கடமையை ஆற்றி விட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள். தங்கள் குரல் ரீஷ்ஸ்டாக் பேரவையில் எதிரொலிக்கச்

செய்ய விரும்புவதாக அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு, அவர்கள் திருக்கோயில் பாடற்குழு தொடங்குவது நல்லது.

"தோழர்களே, சகோதர, சகோதரிகளே, நாம் வாக்குச் சீட்டைத் தொடப் போவதில்லை. நாம் எந்தத் தேர்தலிலும் பங்கு கொள்ளப் போவதில்லை. அதைவிட ஞாயிற்றுக்கிழமை உல்லாசப் பயணம் செல்வதே நல்லது என்று நான் கூறுகின்றேன். ஏன்? சட்டத்திடம் தான் கொண்டுள்ள மதிப்பில் வாக்காளன் சிறைப் பட்டு இருக்கின்றான். ஆனால் சட்டம் என்பது மிருகத்தனமான பலம்; ஆதிக்க வர்க்கத்தின் இரும்பு முட்டி. ஆனால் இந்த வாய்ப் பேச்சு வீரர்கள் நம்மை மயக்கி, மோசடி செய்து, பிரச்னையை மழுப்பிச் சட்டத்தின் உண்மைத் தன்மையை நாம் உணர்ந்து விடாமல் தடுக்கின்றனர். ஆனால் சட்டம் என்ன, அரசு என்ன, என்பதை நாம் உணர்ந்து விட்டதால், நாம் வாக்கு செலுத்த மாட்டோம். அரசுக்குள் நாம் புகுவதற்கு இடுக்கு எதுவுமில்லை. தப்பித் தவறி நாம் உள்ளே புகுந்தாலும், அதிகார வர்க்கத்தின் அடிமைக் கழுதைகளாகவோ, பொதி சுமக்கும் கழுதைகளாகவோ தான் பயன்படமுடியும். அதைச் சாதிக்கத்தான் தேர்தல் பிரசார வாதிகள் முனைந்து செயல்படுகின்றனர். நம்மைக் கடத்திச் சென்று, அடிமைக் கழுதைகளாகப் பழக்க விரும்புகின்றனர். பாட்டாளி மக்களில் பெரும்பான்மையினரைப் பொறுத்த வரை, அவர்கள் தங்கள் குறிக்கோளை வெகு நாட்களுக்கு முன்பே அடைந்து விட்டனர். ஜெர்மனியில் நாம் சட்டம், ஒழுங்கு ஆகிய வற்றின் உணர்வில் பயிற்சி பெற்றவர்கள். ஆனால் தோழர்களே, நீங்கள் நெருப்பையும் நீரையும் மணந்து கொள்ள முடியாது, பாட்டாளி அதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

"சில்லரை முதலாளி வர்க்கக் கட்சிகளும் சோஷலிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்களும் ஒன்று கூடி, ஒரே மகிழ்ச்சிப் பல்லவி பாடு கின்றனர்: 'சூலன்கள் அனைத்தும் மேலிருந்து வருகின்றன— அரசு, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் உச்ச நிலையிலிருந்து' என்பது அப் பல்லவி. ஆனால் அது நடைமுறையில் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பாருங்கள். நாட்டில் வாழும் ஒவ் வொரு குடிமகனுக்கும் உரியவை என்று சில சுதந்திரங்களும் உரிமைகளும் அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அவை அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளன என்பது உண்மை தான். ஆனால் நமக்குத் தேவையான சுதந்திரத்தை நமக்கு எவரும் வழங்கமாட்டார்கள். அதை நாமே தான் எடுத்துக் கொள்ள வேண்டும். நியாயமான மக்களின் அரசியல் உரிமைச் சட்டத்தை, இந்த அரசியல் சட்டம் அழிக்கப் பார்க்கிறது. ஏட்டிலே எழுதப்பட்டு மட்டுமே உள்ள உரிமைகளையும், சட்டத் திலே தொகுக்கப்பட்டுள்ள சுதந்திரங்களையும், வைத்துக்

கொண்டு நாம் என்ன செய்ய முடியும், தோழர்களே? சுதந்திரத்தை நாம் தேடினால், போலீஸ்காரன் திடீரெனத் தோன்றி, மண்டையில் ஒரு போடு போடுகிறான். 'சட்டத்தில் எனக்கு அந்த உரிமை இருக்கிறதே', என்று நீங்கள் வாதாடினால், 'அந்தத் துப்பாக்கித்தனம் என்னிடம் வைத்துக் கொள்ளவேண்டாம்' என்று அவன் பதில் கூறுகிறான். அவன் சொல்வதும் நியாயம் தான். அவனுக்கு அரசியல் சட்டத்தைப்பற்றிக் கவலையில்லை. அவனுக்கு அவன் விதி முறைகள் உண்டு. கையில் ஒரு குண்டாந்தடி உண்டு. ஆகவே நீங்கள் வாயை மூடிக் கொள்வதுதான் உசிதம்.

''இன்னும் சிறிது காலத்தில், முக்கிய தொழில்களில் வேலை நிறுத்தம் செய்ய வாய்ப்பு இராது. மத்தியஸ்த மன்றங்கள் என்ற தூக்கு மேடை உங்களுக்குக் காத்திருக்கிறது. அதன் நிழலில்தான் நீங்கள் நடமாட முடியும்.

''தோழர்களே, ஆண்களே, பெண்களே, நீங்கள் மீண்டும் மீண்டும் வாக்குப் பதிவு செய்கிறீர்கள். 'இம்முறை நிலைமை திருந்தும். இன்னும் சற்று முயற்சி செய்து, வீட்டிலும் தொழிற்சாலையிலும் பிரச்சாரத்தைப் பரப்பி, இன்னும் ஐந்தே வாக்குகள், பத்தே வாக்குகள், இன்னும் பன்னிரண்டு வாக்குகள் கிடைத்து விட்டால் போதும். பொறுத்திருந்து பாருங்கள். உண்மையில் ஒரு கலக்கு கலக்கி விடலாம்,' என்று நீங்கள் கூறுகிறீர்கள். கலக்கு கலக்குவீர்கள். உண்மைதான். ஆனால் முடிவில்லாத, சுருட்டு வட்டத்தில், எல்லாம் பழையபடியே மீண்டும் மீண்டும் சுற்றிவரும். சட்டமன்றவழி ஆட்சிமுறை, பாட்டாளிகளின் துன்பத்தை நீடிக்கிறது. நீதித் துறையில் ஒரு திருப்பம், ஒரு நெருக்கடி, என்றெல்லாம் அவர்கள் பேசலாம். உண்மையில் நீதி நிர்வாகத்தை அடியோடு, சீர்திருத்த வேண்டியதுதான். நீதி நிர்வாக அமைப்பைப் புதுப்பித்துக் குடியரசு அமைப்பைச் சார்ந்ததாகவும், அரசியல் கட்டத்துக்கு அடங்கியதாகவும், நியாயமானதாகவும், அதைத் திருத்தி அமைக்கவேண்டும். உண்மைதான். ஆனால் நாங்கள் கேட்பது, புது நீதிகள் அல்ல. இந்த நீதிக்குப் பதிலாக, எந்த நீதியும் வேண்டாம் என்று தான் நாங்கள் கூறுகின்றோம். நேரடி நடவடிக்கை மூலம் நாம் அரசின் அமைப்புகள் அனைத்தையும் கவிழ்த்து வீழ்த்தவேண்டும். நம்மிடம் அதற்குத் தேவையான கருவி இருக்கிறது. நம் உழைப்பைத் தர மறுப்பது சுழலும் சக்கரங்கள் அனைத்தும் நின்றுவிடும். ஆனால் இது உரக்கப் பாடக்கூடிய பாடல் அல்ல. நம்மைப் பொறுத்தவரை, தோழர்களே, சட்டமன்ற வழி ஜன நாயகம், சமூக சேவை, இவை போன்ற சமூக—அரசியல் மோசடிகளால் மயங்கி, நம் அறிவு மழுங்க இடம் தரக்கூடாது. நம் ஒரே எதிரி—அரசு. நம் குறிக்கோள்கள்—அதிகார ஒழிப்பு, நமக்கு நாமே உதவுதல்.''

கெட்டிக்காரப் பையன் வில்லியுடன் ∴பிரான்ஸ் அறையைச் சுற்றி வந்து, சில துண்டுப் பிரசுரங்களை வாங்கித் தன் சட்டப் பையில் திணிக்கின்றான். இயல்பாக, அவன் அரசியலுக்கு ஏற்றவனல்ல. ஆனால் வில்லி பிடிவாதமாக அவனிடம் பிரச்சாரம் செய்கிறான். புதுமையைக் காணும் ஆர்வத்துடன் ∴பிரான்ஸ் கவனித்துக் கேட்கிறான். ஒரு கணம், கருத்து அவனுக்குப் பிடிபடுவது போல் தோன்றுகிறது; அதில் அவனுக்கு ஈடுபாடு தோன்றுகிறது. மறு கணமே அவன் அதில் அக்கறை இழந்து விடுகிறான். ஆனால் வில்லியை விட்டு அவன் விலகிச் செல்லவில்லை.

பாட்டாளி வர்க்கத்தைப் பொருளாதார, அரசியல், சமூக அடிப்படைகளில் அடிமைப் படுத்தியுள்ளதை ஆதாரமாகக் கொண்டு எழுப்பப்பட்டதே இன்றைய சமுதாய அமைப்பு, சொத்துரிமை, ஏகபோக உடைமை, அரசின் அதிகார ஏகபோகம் ஆகியவை அந்த அமைப்பின் வெளிப்பாடுகள். இன்று உற்பத்திக்கு ஆதாரமாய் இருப்பது, இயற்கையான மனிதத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற தேவையல்ல; லாபத்தை எதிர்பார்க்கும் ஆசையே ஆதாரமாக இருக்கிறது. தொழில் நுட்பத்தில் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும், உடைமையாளர் வர்க்கத்தின் செல்வத்தைக் கணக்கின்றிப் பெருக்கி, சமுதாயத்தின் பெரும்பாலான மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் தொடர்ந்து அமுந்தியிருப்பதை அனுமதிக்கின்றது. உடைமையாளர் வர்க்கத்தின் வசதிகளைக் காக்கவும், கணக்கற்ற பாமர மக்களை அடக்கிச் சுரண்டவும் அரசு பாடுபடுகிறது. ஏகபோகத்தை நிலை நாட்டவும் வர்க்க வேறுபாடுகளை உறுதிப்படுத்தவும், சூது, வன்முறை ஆகிய ஆயுதங்களை அரசு பயன்படுத்துகிறது. அரசு உருவான காலம் முதற்கொண்டு, மேலிருந்து கீழே சுமத்தப்படும், செயற்கையான, ஒரு சமுதாய அமைப்பு தோன்றியுள்ளது. தனி மனிதன் இதில் உணர்வற்ற ஒரு பொறியாகின்றான்; பெரிய இயந்திரத்தில் உயிரற்ற ஒரு சிறு சக்கரமாகின்றான். நம்மை நாமே தட்டி எழுப்பி, விழிப்படைய வேண்டும். மற்ற கட்சிகள் அனைத்தையும் போல, அரசியல் அதிகாரத்தை வெல்ல நாம் பாடுபடவில்லை; அந்த அரசியல் அதிகாரத்தை அடியோடு ஒழிப்பதே நம் நோக்கம். சட்ட மன்றங்கள் என்று சொல்லப்படும் அமைப்புகளுடன் சேர்ந்து ஒத்துழைக்காதீர்கள். தன் அடிமைத்தனத்தின் மீது, சட்டத்தின் முத்திரையைத் தானே பொறித்துக் கொள்வதற்காகத்தான். அடிமைக் குடிமகன் அந்தப் பேரவைக்கு அழைக்கப் படுகின்றான். எதேச்சாதிகாரமாக வகுத்து நிறுவப்பட்டுள்ள அரசியல், தேசிய, எல்லைக் கோடுகளை நாம் நிராகரிக்கின்றோம். இன்றைய ஆதிக்க அரசின் சமயம், தேசியம். தேசிய அமைப்பு அனைத்தை

யும் நாம் நிராகரிக்கின்றோம். அதற்குப் பின்னால் உடைமையாளர் வர்க்கத்தின் ஆட்சி பதுங்கிக் கொண்டிருக்கிறது. தோழர்களே, விழிப்படையுங்கள்.

வில்லி தந்ததை .:பிரான்ஸ் பீபர்கா.:ப் விழுங்கினான். கூட்டம் முடிந்தபின் ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களும் தங்கி, வயதான ஒரு தொழிலாளியுடன் விவாதத்தில் கலந்து கொள்கின்றனர். வில்லிக்கு அந்தத் தொழிலாளியைத் தெரியும். வில்லியும் தன்னுடைய தொழிலைச் சேர்ந்த தோழன் என்று அந்தத் தொழிலாளி நினைத்து, இன்னும் தீவிரமாகக் கிளர்ச்சி செய்யத் தூண்டுகிறான். அசட்டுத் துணிச்சல் கொண்ட வில்லி, சிரிக்கிறான். "இதோ பார், எப்பொழுதிருந்து நாம் சக ஊழியர்களானோம்? நிலக்கரித் தொட்டியில் நான் வேலை பார்க்க வில்லையே," என்று வில்லி கேட்டான். "பரவாயில்லை. நீ எங்கு வேலை செய்தாலும் சரி, நீ யாராக இருந்தாலும் சரி, உருப்படியாகச் செய்," என்று தொழிலாளி இடித்துரைத்தான். "நான் எதுவும் செய்யத் தேவையில்லை. நான் வேலை பார்க்குமிடத்தில், தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை யெல்லாம், தொழிலாளர் வெகு காலத்திற்கு முன்பே கற்றுக் கொண்டு விட்டனர்," என்று வில்லி கூறிக் கொண்டே, விழுந்து விழுந்து சிரித்து, மேசை மேல் சாய்ந்தான். மண்ணுங்கட்டி; என்றாவது ஒரு நாள், பசைச் சட்டியை எடுத்துக் கொண்டு ஒருவன் வந்து, சுவரொட்டிகள் ஒட்டுவதற்கும் தங்களுக்குச் சொல்லிக் கொடுப்பான் போலிருக்கிறதே, என்று வில்லி ஆத்திரப்பட்டு, .:பிரான்ஸின் காலிக் கிள்ளினான். நீண்ட நரைத்த முடியுடன் மார்பிலே சட்டையைத் திறந்து அணிந்து கொண்டிருந்த அத் தொழிலாளியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, வில்லி, கேட்டான். 'பாதிரியின் கண்ணாடி', 'கருப்புக் கொடி', 'நாத்திகன்,' என்ற பத்திரிகைகளை நீ விற்கிறாயே. அவற்றில் என்ன எழுதியிருக்கிறது என்று எப்பொழுதாவது பார்த்ததுண்டா?" தொழிலாளி பதில் சொன்னான்: "பெரிய மேதாவியைப் போல் நீ பேச வேண்டாம். நானே எழுதியுள்ளதை உனக்கு எப்பொழுதாவது காட்டுகிறேன்." வில்லி சொன்னான்: "நிறுத்தும். பீத்திக் கொள்ள வேண்டாம். ஆனால் என்றாவது ஒரு நாள், நீ எழுதியுள்ளதை நீயே படித்து, அதன்படி உறுதியாய் நடப்பாய் என்று நம்புகிறேன். உதாரணமாக, 'நாகரிகமும் தொழில் நுட்பமும்' என்ற தலைப்பின் கீழ் இதில் எழுதப்பட்டுள்ளது: 'அரசரின் கல்லறையைக் கட்ட, இயந்திரங்களின் உதவி இல்லாமல், எகிப்திய அடிமைகள் பல்லாண்டுகள் பாடுபட்டனர். ஐரோப்பியப் பாட்டாளிகளோ, தனி மனிதன் ஒருவனுக்குச் செல்வத்தைக் குவிக்க, பல்லாண்டுகளாக இயந்திரங்களுடன் பாடுபடுகின்றனர். இது முன்னேற்றமா?

இருக்கலாம். ஆனால் யாருக்கு முன்னேற்றம். எஸ்ஸன் நகரத்தில் க்ருப் அல்லது போர்சிக், பெர்லின் அரசன் போல், மாதம் இன்னும் ஒர் ஆயிரம் மார்க்குகள் சம்பாதிப்பதற்காக, நானே உழைத்துப் பாடுபட்டுக் கொண்டிருக்கக் கூடும். தோழனே! உன்னைப் பற்றி என்ன நினைப்பது என்றே எனக்கு விளங்க வில்லை. நேரடி நடவடிக்கையில் இறங்குபவன் என்று நீ உன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறாய். அந்த நேரடி நடவடிக்கையை, எங்கேயப்பா, ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாய்? என் கண்ணில் அது படவில்லையே. ∴பிரான்ஸ், உன் கண்ணில் படு கிறதா?" "வில்லி. அவனைச் சும்மா விடு." "∴பிரான்ஸ், நீயே சொல். இந்தத் தோழருக்கும் சோஷலிஸ்ட் கட்சிப் பேர்வழி ஒருவனுக்கும் இடையே உன்னால் ஏதாவது வேறுபாடு காண முடிகிறதா?".

தொழிலாளி நாற்காலியும் வசதியாக உட்கார்ந்து கொள் கிறான். வில்லி மேலும் கூறுகிறான். "என்னைப் பொறுத்தவரை, தோழா, எதுவும் எனக்குத் தென்படவில்லை. அதுதான் உண்மை. ஒரே ஒரு வேறுபாடு தான் இருக்கிறது. அது ஏட்டில் பத்திரிகை யில். சரி. நீ உன் கருத்திலே உறுதியாக இரு. நான் தடை சொல்லவில்லை. ஆனால் அக் கருத்துகளைக் கொண்டு, என்ன செய்யப் போகிறாய்? அதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீ இப்பொழுது அதை வைத்து என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டால், நான் உடனடியாகப் பதில் கூறுவேன்: சோஷலிஸ்ட் கட்சிக்காரன் என்ன செய்கிறானே, அதையே தான் நீ செய்கிறாய். அதில் துளியும் மாறுதல் இல்லை. சுழலுகின்ற கடைசல் இயந்திரம் முன்பு நீ நிற்கிறாய்; பாடுபட்டுச் சம்பாதித்த இரண்டு செப்புக் காசுகளை வீட்டுக்கு எடுத்துச் செல்கிறாய்; உன் உழைப்பினால் கிட்டிய லாபத்தில் பங்கை, உன் கம்பெனி, பங்குதாரர்களிடையே பகிர்ந்து தருகிறது. தனி யொருவனுக்குச் செல்வம் குவித்துத் தர, ஐரோப்பியப் பாட்டாளிகள் பல்லாண்டுகளாக இயந்திரங்களுடன் பாடுபடு கின்றனர். அதை நீதான் எழுதினாய் என்று எண்ணுகிறேன்."

நரைமுடித் தொழிலாளி ∴பிரான்ஸிடமிருந்து தன் பார்வையை வில்லிக்குத் திருப்பித் தனக்குப் பின்னால் மது பரிமாறும் இடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு சிலரையும் பார்த்தான். தொழிலாளி மேசையின் கிட்டே நெருங்கிக் கொண்டே, தாழ்ந்த குரலில் கேட்கிறான்: "ஆமாம், நீ எங்கே வேலை செய்கிறாய்?". வில்லி, ∴பிரான்ஸை நோக்கி, "நீயே பதில் சொல்," என்றான். ∴பிரான்ஸ் முதலில் பதில் கூற விரும்பாமல், அரசியல் உரை யாடல்களில் தனக்கு அக்கறையில்லை என்று கூறுகிறான். ஆனால்

நரைமுடித் தொழிலாளி வற்புறுத்திக் கூறுகிறான்: "இது அரசியல் உயைாடல் அல்லவே. நாம் நம்மைப் பற்றித் தானே பேசிக் கொண்டிருக்கிறோம். நீ என்ன வேலை செய்கிறாய்?"

.:பிரான்ஸ் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து, 'பீர்' கோப்பையைப் பற்றிக்கொண்டு, அதிகார ஒழிப்புவாதியை, (anarchist) உற்று நோக்கினான். வெறுக்கத் தக்க சாவு; புல்லை வெட்டித் தள்ளுவதுபோல், உயிர்களை வெட்டி வீழ்த்துவது. மலைகளில் அழுகைக் குரல் ஒலிக்கச் செய்வேன். பாலைவனத்திலும் துன்ப ஓலம் குடியிருக்கச் செய்வேன். அவை எரிந்து பொசுங்கி விட்டன. யாரும் அவற்றைக் கடந்து செல்ல முடியாதபடி வானத்தின் பறவைகளும் விலங்கினங்களும் கூட ஓடி, மறைந்து விட்டன.

"நான் என்ன வேலை செய்கிறேன் என்பதைச் சொல்லமுடியும், நண்பனே; ஏனென்றால் நான் தோழன் அல்ல. நான் இங்குமங்கும் செல்கிறேன்; இங்கு ஓர் வேலையையும் அங்கு ஓர் வேலையையும் முடிக்கின்றேன். ஆனால் நான் உழைப்பதில்லை. மற்றவர்கள் எனக்காக உழைக்கும்படி செய்கிறேன்".

அவன் என்னைக் கேலி செய்கிறான்; அவர்கள் என்னை நையாண்டி செய்கிறார்கள் என்று தொழிலாளி எண்ணினான். "அப்படியானால் நீ முதலாளியாய் இருக்க வேண்டும். உன் கீழ் வேலை செய்பவர்கள் பிறர் இருக்க வேண்டும். எத்தனை பேர் உன் கீழ் வேலை செய்கிறார்கள்? எப்படியும், நீ முதலாளியாய் இருந்தால், இங்கு உனக்கென்ன வேலை?" ஜெரூசலத்தை நான் பாழிடமாகவும், நெருப்புயிர்க்கும் வேதாளங்கள் நிறைந்த குகையாகவும், ஆக்குவேன். ஜூடாவின் நகரங்களைப் பாழ்படுத்தி, அங்கு எவரும் குடியிருக்க முடியாமல் செய்வேன்.

"இந்தாப்பா; எனக்கு ஒரு கைதான் இருக்கிறது என்பது உனக்குத் தெரியவில்லை. இரண்டாவது கையை இழந்துவிட்டேன். என் உழைப்புக்குக் கிடைத்த ஊதியம் அது. ஆகவேதான் கண்ணியமான உழைப்பு என்றெல்லாம் கதை பேசுவதை நான் இனியும் கேட்க விரும்பவில்லை." அது உனக்குப் புரிகிறதா? கண்ணைத் திறந்து பார்; கண்ணாடி வாங்கித் தரட்டுமா? "புரியவில்லை, தோழா. கண்ணியமில்லாத வேலை என்றால், கேவலமான வேலையாய் இருக்குமென்று எண்ணுகிறேன்."

.:பிரான்ஸ் மேசையில் கைமுட்டியை ஓங்கி அடித்து, அதிகார ஒழிப்பு வாதியை நோக்கித் தன் கை விரலைச் சுட்டிக் காட்டித் தலையை முன்னால் தள்ளிக் கொண்டே கூறுகிறான்: "தப்பித் தவறி, உண்மையில் அவன் தடுக்கி விழுந்துள்ளான். கேவலமான வேலை தான். உன் கண்ணியமான வேலையெல்லாம் அடிமைத்தனம். அதைத்தானே நீயே கூறினாய். அதைத்தான் நானும் கண்டு

கொண்டுள்ளேன்". உன் உதவி இல்லாமலே கண்டு கொண்டேன். பூச்சு பூசுபவனே, மை தெளிப்பவனே, போலி அறிஞனே, அதற்கு உன் உதவி தேவையில்லை.

அந்த அதிகார ஒழிப்பு வாதி, ஒரு பொறி நுட்பத் தொழிலாளி. தன் கை நுனிகளைப் பார்த்துக் கொண்டு, இவர்கள் கூடக் காணப் படுவது நமக்கு ஆபத்தாக முடியக் கூடும். இந்த மோசடிக்காரர் களை அம்பலப்படுத்துவதே நல்லது, என்று எண்ணினான். அவன் சொல்வதைக் கேட்க, இன்னொருவர் யாரையாவது அழைக்க வேண்டும். அவன் எழுகிறான்: ஆனால் வில்லி அவனைத் தடுத்து நிறுத்துகிறான்: "எங்கே போகிறாய்? நாம் பேச்சை முடித்து விட்டோமா? முதலில் இங்கு என் தோழனுடன் பேசி முடி. நழுவப் பார்க்கிறாயா? "இந்தப் பேச்சைக் கேட்பதற்கு இன்னொருவரை அழைத்து வரத்தான் போகிறேன். ஒரு ஆளுக்கு எதிராக நீங்கள் இரண்டு பேர் இருக்கிறீர்களே". "இன்னொருவரைக் கூட்டிவரப் போவதாகச் சொல்கிறாயா? வேறு யாரும் இங்கு வேண்டிய தில்லை. என் நண்பனிடம் என்ன சொல்லிக் கொண்டிருந்தாய்?" அதிகார ஒழிப்பு வாதி மீண்டும் அமர்கிறான்; ஆகவே தனி யாகவே, நாம் அதைத் தீர்த்துக் கொள்வோம். "அவன் தோழனல்ல; அவன் சக ஊழியனுமல்ல. ஏனென்றால் அவன் உழைப்பதில்லை. வேலையில்லாத நேரத்தில் கிடைக்கும் உதவிப் பணத்தையும் அவன் பெறுவதாகத் தோன்றவில்லை."

∴பிரான்ஸ் முகத்தில் கடுமை குடி கொள்கிறது. அவன் கண்கள் எரிகின்றன. "இல்லை. அவன் உதவிப் பணமும் வாங்கவில்லை". "அவன் என் தோழனுமல்ல; சக ஊழியனுமல்ல; வேலையில்லாமல் திண்டாடும் தொழிலாளரில் ஒருவனுமல்ல. அப்படியானால் நான் ஒரு கேள்வி மட்டுமே கேட்க விரும்புகிறேன்: மற்றவை பற்றி எனக்குக் கவலை இல்லை. இங்கு எதைத் தேடி அவன் வந்திருக் கிறான்?". ∴பிரான்ஸ் அவனைக் கடுமையான பார்வையுடன் பார்க் கிறான். உனக்கு இங்கு என்ன வேண்டுமென்ற கேள்வியை நீ கேட்க வேண்டுமென்றுதான் நான் காத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் எத்தனையோ பத்திரிகைகளையும் துண்டுப் பிரசுரங் களையும் விற்கிறீர்கள். அவற்றில் என்ன எழுதியிருக்கிறது, முக்கிய கருத்து என்ன, என்று நான் உங்களைக் கேட்டால், "ஏன் என்னை அந்தக் கேள்வி கேட்கிறாய்? இங்கு உனக்கு என்ன வேலை என்று கேட்கிறீர்கள். கூலி வாங்கிப் பிழைப்பது, பரிதாபமான அடிமை நிலையென்றும், கையும் காலும் ஆட்டக்கூட உரிமை இல்லா தீண்டாதார் நாங்கள் என்றும் நீங்களே எழுதியிருக் கிறீர்களே." பூமியின் பறையர்களே, பட்டினியால் வாடுமாறு உங்கள் எசமானர் உங்களுக்குச் சாபம் இட்டிருக்கிறார். விழிப் படையுங்கள்! "ஆமாம். முழுவதையும் நீ கேட்கவில்லையே. வேலை

செய்ய மறுப்பு பற்றி நான் பேசினேன். ஆனால் முதலில் ஒருவன் வேலை செய்தால் தானே, வேலை மறுப்பு பற்றிப் பேச முடியும்?" "நான் வேலை செய்ய மறுக்கிறேன்." "அதனால் எங்களுக்குப் பலனில்லை. நீ வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொண்டாலும் ஒன்றுதான். நான் பேசிக் கொண்டிருந்தது, வேலை நிறுத்தம், கூட்டு கூட்டாக வேலை நிறுத்தங்கள், பொது வேலை நிறுத்தங்கள், பற்றி."

∴பிரான்ஸ் தன் கையை உயர்த்திச் சிரிக்கின்றான். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "நீங்கள் இப்பொழுது செய்து கொண்டிருப்பது, நேரடி நடவடிக்கை என்று கூறுகிறீர்களா? இங்கும் மங்கும் ஓடிச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டு, பிரசங்கங்கள் செய்வதுதான் இன்று நீங்கள் செய்யும் வேலை. அதனால் முதலாளி வர்க்கம் மேலும் பலம் பெறச் செய்கிறீர்கள் என்பதுதான் உங்கள் சாதனை. அட முட்டாளே, நீ உற்பத்தி செய்யும் குண்டு ரவைகளைக் கொண்டு தானே அவர்கள் உன்னைச் சுட்டுத் தள்ளப் போகிறார்கள். உற்பத்தி உழைப்பு, பற்றி நீ எனக்கு உபதேசம் செய்யப் போகிறாய். வில்லி, இப்பொழுது நீ என்ன சொல்கிறாய்?" "எனக்குப் பேச்சே வரவில்லை." "நான் மீண்டும் மீண்டும் உன்னைக் கேட்கிறேன். நீ என்ன வேலை செய்கிறாய்?" "நான் மீண்டும் மீண்டும் உனக்குச் சொல்வேன். ஒன்றுமில்லை. நான் ஒரு வேலையும் செய்யவில்லை. ஏன் செய்யவேண்டும்? செய்யும் துணிவு எனக்கில்லை. உன்னுடைய சித்தாந்தப்படி, நான் வேலை செய்தால், எனக்குத் தானே கேடு? முதலாளி வர்க்கம் மேலும் பலம் பெறும்படி நான் செய்யப் போவதில்லை. உண்மையைச் சொன்னால், உங்கள் வேலை நிறுத்தம், நமக்கு நன்மை செய்யப் போகும் குணக்குன்றுகள் போன்ற எதையும், உங்கள் கூத்து முழுவதையும், நான் ஒரு பொருட்டாய்க் கருதவில்லை. ஒரு மனிதனுக்குத் தானுண்டு, தன்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. நான் என்னைக் கவனித்துக் கொள்கிறேன். தன் தேவைகளைத் தானே நிறைவு செய்பவன், நான்."

சோடா பானத்தைத் தொழிலாளி விழுங்கிக் கொண்டே, தலையை ஆட்டி, "அப்படியானால், தனியாக நின்று பார்," என்று கூறுகிறான். ∴பிரான்ஸ் விழுந்து விழுந்து சிரிக்கிறான். தொழிலாளி கூறுகிறான்: "எதையும் உன்னால் தனியாகச் செய்ய முடியாது என்று முப்பது முறை உனக்கு நான் சொல்லி விட்டேன். போராடுகின்ற அமைப்பு ஒன்று வேண்டும். அரசின் எதேச்சாதிகார ஆட்சியையும் பொருளாதார ஏகபோகத்தையும் சமாளித்துப் பாமர மக்களிடையே நாம் அறிவை பரப்பவேண்டும்." ∴பிரான்ஸ் சிரித்து அடங்கிய பாடில்லை. நமக்கு மேலான சக்தி

எதுவும்,—ஒரு கெய்சர், அல்லது, மக்கள் மன்றத் தலைவர், அல்லது, கடவுள்கூட—மனித சமுதாயத்தை, துன்பச் சுழலின் பிடியிலிருந்து மீட்க முடியாது. தனித்து நின்று, நாம் வேதனையை அனுபவித்தே தீரவேண்டும்.

அவர்கள் எதிரும் புதிருமாய், மௌனமாய், உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். பச்சைத் தோள்பட்டை அணிந்த வயதான தொழிலாளி ஃபிரான்ஸை முறைத்துப் பார்த்தான். ஃபிரான்ஸும் அவனைக் கண்கொட்டாமல் பார்த்தான். என்ன பார்க்கிறாய்? என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? தொழிலாளி வாயைத் திறக்கிறான்: தோழா நான் உன்னிடம் பேசுவதில் பலன் எதுவும் இல்லை என்பதை உணர்கிறேன். என் தொண்டைத் தண்ணீர்தான் வற்றும். உனக்கு முரட்டு மண்டை ஓடு. நீ உன் தலையைச் சுவரில் முட்டி மோதிக் கொள்வாய். பாட்டாளி மக்களுக்குத் தலையாயது ஒற்றுமை, என்பது உனக்குத் தெரியாது. உனக்குப் புரியாது.'' ''அப்படியானால், தொப்பியை மாட்டிக்கொண்டு நாம் புறப்படுவதுதான் நல்லது. என்ன, வில்லி? எனக்கு உன் பேச்சு கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. நீ சொன்னதையே தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறாய்.'' ''அப்படித்தான் நான் பேசுகிறேன். ஆகவே நீ வேண்டுமானால் உக்கிராண அறைக்குச் சென்று, அங்கேயே சமாதியாகி விடு. ஆனால் பொதுக் கூட்டங்களுக்கு நீ செல்லக் கூடாது.'' ''போய் வருகிறேன், முதலாளி. இதுவரை ஒய்வு நேரம் எங்களுக்கு இருந்தது. மெத்த மெத்த நன்றி. வெயிட்டர், எவ்வளவு கொடுக்க வேண்டும். மூன்று பீர், இரண்டு பிராந்தி; ஒரு மார்க் பத்து காசு; இதற்கு நானே காசு கொடுத்து விடுகிறேன். என் நேரடி நடவடிக்கை எப்படி?''

''அது சரி; நீ யார் என்று இன்னமும் சொல்லவில்லையே'' என்று அந்த ஆள் பிடிவாதமாய்க் கேட்டான். சில்லரையை வாங்கிப் ஃபிரான்ஸ் பையில் போட்டுக் கொண்டான். நானு? நான் ஒரு காமத் தரகன். என்னைப் பார்த்தால், தெரியவில்லையா?'' ''உன்னைப் பார்த்துக் காமத் தரகன் இல்லை என்று சொல்ல முடியாது.'' ''நான் காமத் தரகன் தான். நான் தான் உன்னிடம் சொன்னேனே: வில்லி, நீ யார் என்று அவனிடம் சொல்.'' ''அதைப் பற்றி அவனுக்கென்ன கவலை?'' அவர்கள் மோசடிக் காரர்கள்தான். அப்படித்தான் தோன்றுகிறது. நான் நினைத்த படியேதான் இருக்கும் போலும். இந்த எத்தர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள்; பன்றிகள்; என்னை கையாண்டி செய்ய நினைத்தார்கள். ''முதலாளித்துவ வர்க்கத்தின் எச்சம் நீங்கள். வெளியேறுங்கள். நீங்கள் பாட்டாளிகள் அல்ல; நீங்கள்

புல்லுருவிகள்." ∴பிரான்ஸ் ஏற்கெனவே எழுந்து நின்று கொண்டிருக்கிறான். "ஆனால் நாங்கள் பிச்சைக்காரர் விடுதிக்குப் போகப் போவதில்லை. நேரடி நடவடிக்கைத் தோழனே, போய் வருகிறோம். முதலாளி வர்க்கத்தினர் மேலும் மேலும் கொழுக்க உதவி செய்து கொண்டே இருங்கள். எலும்புத் தொழிற்சாலையில் காலை ஏழு மணிக்குப் போய் நின்று, இரண்டு செப்புக் காசு கூலைச் சம்பாதித்து மனைவியிடம் போய்க் கொடு." "இனிமேல் இங்கு என் கண்ணில் படாதீர்கள்." "நேரடி நடவடிக்கைத் தோழனே, உன் கண்ணில் படமாட்டோம். முதலாளி வர்க்கத்தின் அடிமைகளுக்கும் எங்களுக்கும் தொடர்பு எதுவும் இருக்க முடியாது."

அமைதியாக வெளியேறுகிறார்கள். தூசி படிந்த தெருவில், இருவரும் கை கோத்து நடக்கிறார்கள். வில்லி, மூச்சை நன்றாக உள்ளே இழுத்துக் கொண்டு, கூறுகிறான்: "∴பிரான்ஸ், அவனுக்குச் சரியான அடி கொடுத்தாய்." ∴பிரான்ஸ் மௌனமாய் இருப்பதைக் கண்டு அவன் வியக்கின்றான், ∴பிரான்ஸுக்கு ஒரே ஆத்திரம். மண்டபத்தைவிட்டு வெளியே வந்தபோது, அவன் உள்ளத்தில் அவ்வளவு வெறுப்பும் ஆத்திரமும் குமுறிக் கொண்டிருந்தது, விந்தையே. அவன் உள்ளத்தில் ஒரு கொந்தளிப்பு ஏனென்று அவனுக்கு விளங்கவில்லை.

முன்பு ஸ்ட்ராஸ்ஸேயில் மொக்கா-பிக்ஸ் உணவு விடுதியில் மீஸையை அவர்கள் சந்திக்கின்றனர். அங்கு ஒரே இசைச்சல். மீஸையை அழைத்துக் கொண்டு, வீட்டுக்குச் செல்ல ∴பிரான்ஸ் தீர்மானிக்கிறான்; அவளுடன் உரையாட, அவள் அருகில் அமர்ந்திருக்க, அவன் விரும்புகிறான். நரை முடித் தொழிலாளியுடன் நடத்திய உரையாடல் பற்றி அவன் அவளிடம் கூறுகிறான். மீஸை அவனிடம் மிகவும் பரிவாக நடந்து கொள்கிறாள். ஆனால் தான் பேசியது பொருத்தமானது தானா, சரிதானா, என்று அவளிடம் அவன் கேட்கிறான். விளங்கிக் கொள்ளாமலே, அவள் புன்சிரிப்பு செய்து, அவன் கைகளை அன்புடன் தடவிக் கொடுக்கிறாள். தன்னகத்தே ஒன்று விழித்துக் கொண்டுவிட்டது, ஆகவே இனி அவளிடமிருந்து, தான் ஆறுதல் பெறமுடியாது, என்று எண்ணி, ∴பிரான்ஸ் பெருமூச்சு விடுகிறான்.

காஸிமிர் எட்ஷ்மித்

தொழுநோய்க்காரர் காடு

அகத்திறப் பாங்கு இயக்கம் பற்றி எண்ணற்ற ஆக்கபூர்வமான கட்டுரைகள் எழுதிய காஸிமிர் எட்ஷ்மித் (1890—1966) அந்த இயக்கத்தின் முன்னோடி அறிஞர்களில், தலைவர்களில் ஒருவராய் விளங்கினார். அகத்திறப் பாங்கு இயக்கக் கோட்பாடுகளை உரை நடை வடிவில் வெளிப்படுத்தும் போக்குக்கு எடுத்துக் காட்டாகத் தொடக்கக் கட்டத்தில் அவர் எழுத்து அமைந்திருந்தது. தேசிய சோஷலிச இயக்கம் ஓங்கியிருந்த காலத்தில், அவர் பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாதென்றும், பின்னர் நூல்கள் வெளியிடக் கூடாதென்றும், தடை விதிக்கப்பட்டது. அவருடைய பிந்திய நூல்களில் கவிதை உட்பொருள் அவ்வளவாக ஓங்கி நிற்கவில்லை. 'தொழுநோய்க்காரர் காடு' (1915) என்ற கதை, 'ஆறு ஆற்று மூலங்கள்' என்ற கதைத் தொகுப்பில் அடங்கியது. 'பல பக்கங்களிலிருந்து தோன்றி இறுதியில் நம் உணர்வுகளின் முக் கூட்டான, துறவு, ஆழ்ந்த வேதனை, எல்லையற்ற மரணம் ஆகியவை நோக்கி அவை பாய்வதால்,' தொகுப்புக்கு அந்தத் தலைப்பு தரப்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு வீரரான யெஹான் போதேல், செயல்துடிப்பும் செருக்கும் மிக்க வாழ்க்கை நடத்திய பின், துறவை மேற்கொள்ள வேண்டியதாகிறது. தொழுநோய்க் காரர்களைத் துச்சமாகத் துன்புறுத்திய அவன் தானே தொழு நோயால் பீடிக்கப் படுகின்றான். உலகைத் துறக்கும் வேளையில், அவன் தன்னையே வென்று, புது வாழ்வு எய்துகின்றான். 'கம்பீரத் துடனும் அரச கனியுடனும்', அவன் தொழுநோய்க்காரர்கள் காடு நோக்கி நடக்கின்றான்.

யெஹான் போதேல் காடு வழியாகச் சவாரி செய்து கொண்டிருந்தான்.

மஞ்சள் நிறக் கோவேறு கழுதை மேல் சவாரி செய்த அவன், மிகவும் துச்சமாக, டமாஸ்கஸ் நகரத்தில் செய்யப்பட்ட ஒரு சிறிய கத்தியைத் தன்னுடைய இடுப்பில் செருகியிருந்ததைத் தவிர, வேறு ஆயுதங்கள் எதுவும் எடுத்துச் செல்லவில்லை. சேணத்தின் இரு புறத்திலும் அவன் கைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, காதைத் துளைக்கும் ஊதல் ஒலி ஒன்று கேட்டது.

புதர்களின் தொகுதி ஒன்றிலிருந்து, சில மனிதர்கள் மலைச் சரிவில் ஓடிவந்து, கதிரவன் வெளிச்சத்தில் காய்ந்தனர். சிலர்

தங்கள் கையில், மரத்தால் செய்த குண்டாந்தடிகளோத் தூக்கி வந்தனர். முதலில் நின்றவன், அதே இடத்திலேயே, மேலும் கீழும் குதித்துக் குனிந்து உட்கார்ந்து நடனமாடிக் கொண்டிருந்தான். தன் இடதுகை இரும்புக் கருவியொன்றைச் சுற்றிச் சுற்றிச் சுழற்றிக் கொண்டிருந்தான். அவன் வலது கையில், கையெலும்புகள் சதையைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்திருந்தன. கைமுட்டி எலும்பு இருந்த இடத்தில், முரடான சிவப்புப் பொருக்கு படர்ந்திருந்தது. வலது கை, பழைய துருப்பிடித்த வாள் ஒன்றை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. பயங்கரமான, அழுக்குப் பிடித்த கந்தைகளில் அனைவரும் காணப்பட்டனர். அவர்களில் பலருடைய முகத்தைக் கட்டிகளும் தழும்புகளும் அரித்துத் தின்றிருந்தன. அவர்களுக்குப் பின்னாலிருந்து எதோ ஒன்று நாலு கால் நடையில், தன் நீண்ட வெள்ளை முடி தொங்கத் தயக்கத்திலும் திகைப்பிலும் ஆழ்ந்து நின்று, வியப்பில் நாடுவது போல் இரு கைகளையும் உயர்த்தி, கண் இருந்திருக்க வேண்டிய இடத்தில் இருந்த சிவப்புக் காலிப் பொந்துகளை தகிக்கும் வெளிச் சத்தை நோக்கித் திரும்பியது.

யெஹான் போதேல் தன் கத்தியைப் பற்றினான். அது மிகவும் சிறியதாய் இருந்தது. தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அவன் கைக்கு எட்டும் தூரத்தில் எதுவும் கிட்டவில்லை. ஓர் அடி பின்னால் எடுத்து வைத்து, ஆத்திரத்துடன் அவன் காரித் துப்பினான்.

சிலந்திப் பூச்சிகளைப்போல், அந்த மனிதர்கள் அவனை நோக்கி, ஊர்ந்து வந்தனர். அவர்கள் தலைவன், ஓசை செய்யாமல், அவனைச் சுற்றி வேகமாகக் கீழும் மேலும் குதித்து ஆடினான்.

யெஹான் கழுதையைத் தரையில் உதைத்து, அதன் தொடையின் பின்புறத்தில் மூன்று வெட்டுக்குறிகளை வெட்டி, அதன் காலைப் பியத்துத் திருகி, தன்னைத் தாக்கியவரில் சிலரைக் கொன்றுவிட்டு, கழுதையிடம் திரும்பி, ஒலமிட்டுக் கொண்டிருந்த அம்மிருகத்தின் மூக்கையும் வாயையும் கழுத்தையும் தடவிக் கொடுத்து, அதைக் கொன்றுவிட்டுச் சற்றும் சட்டை செய்யாமல் செருக்குடன், எதுவும் குறுக்கிடாத, சூரிய வெளிச்சத்தில் ஒளி வீசிய பாதை வழியாய்க் காட்டைக் கடந்து சென்றான்.

அவன் உள்ளத்தை ஒரே ஒரு உணர்ச்சிதான் உலுக்கியது. கழுதையைக் காயப்படுத்துவதற்முன் அதைக் கொல்வதற்குத் தனக்கு அவகாசம் கிடைக்கவில்லையே என்ற கோபம். அதன் மீதேறி அவன் தப்பி ஓடியிருக்கக் கூடும் என்பது அவனுக்குத் தோன்றவில்லை, யெஹான் தப்பி ஓடுவதில்லை.

உச்சி வேளையில், க்ரீனி என்ற ஊரை அவன் அடைந்தான். அங்கு பெரிய கடைத் தெரு இருந்தது. சதக்கத்தில் பல கடைகள்

கவர்ச்சிகரமாக இருந்தன. உற்சாகம் நிறைந்த கூட்டத்தினர் தெருக்களில் பவனி வந்தனர். சதுக்கத்தின் நடுவில் இருந்த மேடைமீது யெஹான் ஏறினான். இரைச்சல் அடங்கி, அமைதி நிலவி, அனைவரும் அவனையே உற்றுநோக்கியபோது, தன் குரலிலேயே அருவருப்பு தொனிக்க, அவன் ஓர் அறிவிப்பு செய்தான். காட்டிலே தொழுநோய்க்காரன் ஒருவனைக் கொல்லும் ஒவ்வொரு வருக்கும், இருபது வெள்ளிக் காசுகள் தருவதாக வாக்களித்தான்.

அதற்குப் பிறகு அவன் இரு வேட்டை நாய்கள், வெள்ளிச் சேணம், பனிபோன்ற வெண்ணிற வழிகாட்டி நாய், தரை வரை தவழ்ந்து புரண்ட வாலுடைய ஒரு பெண் குதிரை ஆகியவற்றை வாங்கினான்.

அவற்றை யெல்லாம், தான் தங்கியிருந்த சத்திரத்துக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தான். பிறகு இசைவாணர்களை வரச் சொல்லி, விருந்துண்டான். தனக்கு மிகவும் பிடித்தமான மீனை அவன் பிய்த்துத் தின்று கொண்டிருந்தபோது, ஒரு துறவி கதவு வழியாக முண்டியடித்து, யெஹான் அருகில் வர முயன்றார். சத்திரத்து உரிமையாளன் தன் கைகளை அகல விரித்து, அவரைத் தடுத்துப் பின்னால் தள்ளினான். யெஹான் போதேல் உணவருந்தும் போது, தனியாக இருக்க விரும்புவது வழக்கம். ஆனால் துறவியோ பிடிவாதமாய் முரண்டு செய்து, புனிதர் வின்சென்ட் பெயரை அர்ச்சனை செய்து, கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். அவர் போட்ட இரைச்சல் யெஹான் கவனத்தைக் கவர்ந்தது. யெஹான் அவரைத் தம் அருகே அழைத்தான். ஆறடிக்குமேல் அவர் தன்னை நெருங்குவதை, அத்துறவியின் மூச்சு தன்மேல் படுவதை, அவன் விரும்பவில்லை. துறவி ஏதோ ஒரு வியாபாரம் பற்றிப் பேசினார். யெஹான் அதைத் துச்சமாக ஒதுக்கிவிடவே, அதற்காக வருந்தி இரவெல்லாம் யெஹான் தன் நெஞ்சில் அடித்துக் கொண்டு ஓலமிடப்போவது உறுதி என்று புனிதர் மோராண்ட் இரத்தத்துளிமேல் ஆணையிட்டுச் சொல்வதாகத் துறவி எச்சரித்தார். உணவு அருந்திய திருப்தியில், யெஹான் முகத்திலிருந்த கடுமையான பார்வையும் கடுப்பும் மறைந்த பின்னர், துறவி முன்னால் ஓரடி எடுத்து வைத்துத் தாழ்ந்த குரலில் ஏதோ கூறினார்.

யெஹான் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தோன்றவில்லை. முக்கியமான அந்தரங்கம் பேசுவதுபோல், துறவி, தன் கனத்த முகத்தை வைத்துக் கொண்டார். சரக்கு நல்ல சரக்கு என்று, புனிதர் அப்ஸ்லீஸ் திருவுடல் மீது ஆணையிட்டுக் கூறினார்.

நம்பாததுபோல், யெஹான் சிரித்தான். சட்டை செய்யாத உயர்ந்த மனிதன்போல், சிறிது அருவருப்புடனும், ஆனாலும்

ஆசையுடனும், யெஹான் துறவியைப் பின்தொடர்ந்து நடந்தான். அவர்கள் முற்றத்தைக் கடந்து. வைக்கோல் போர் ஒன்றைத் தள்ளி, தொழுவம் வழியாக நடந்து சென்றனர் மறைவாய் இருந்த ஒரு கதவைத் துறவி திறந்தார்.

அங்கு காணப்பட்ட அறையில் சுவர் ஓரமாக ஒரு கட்டில் மட்டுமே இருந்தது. சுமார் பதினேழு வயதுப் பெண் ஒருத்தி கட்டிலின் ஓரத்தில் கூனிப் பதுங்கிப் படுத்திருந்தாள். வெட்கப் பட்டுக் கொண்டே, ஆனல் கம்பீரம் குறையாமல், அவள் எழுந்து நின்றபோது, உள்ளத்தை உருக்கும் கொள்ளை அழகு வெளிப் பட்டது. அவளுடைய அங்கியைக் கழற்றத் துறவி விரும்பினர். ஆனல் யெஹான் அவரை ஒதுக்கிவிட்டுப் பெண்ணுக்கு மரியாதை செலுத்தி, அவளுடைய பெயரைக் கேட்டான்.

'பியாடீஸ்' என்று அவள் கூறினுள். விமூஸின் மொழி நடையில் அவள் பேசினுள். அந்தப் பாணியில் சொல்லின் ஆழ்ந்த துடிப்பதிர்வு அவன் செவியில் நிறைந்தது. உருகிவிடும் பனி போன்ற அவள் தோலின் வெண்மையைப் பார்த்தால், ப்ரோவன்ஸ் பகுதியிலிருந்து அவள் வந்திருக்கக் முடியாது என்று தோன்றியது. 'பைசன்ஷியம் பகுதியைச் சேர்ந்தவள்' என்று துறவி கூறினர்.

அதன் பேரில், அவளைப் பரிசீலனை செய்யாமலே, இரண்டாயிரம் வெள்ளிக் காசுகள் கொடுத்து அவளை விலைக்கு வாங்கினன், யெஹான்.

அவளைக் கோவேறு கழுதை ஒன்றின்மேல் ஏற்றிக் கொண்டு, நகரத்தை விட்டுப் புறப்பட்டான். யெஹான் அடிமைகளிடம் பேசுவதில்லை. இருவரும் மௌனமாகவே சவாரி செய்தார்கள்: அவனுக்குச் சற்று தூரத்துக்குப் பின்னல், அவள் சவாரி செய்தாள்; அவர்களை நோக்கி ஓர் இரைச்சல் ஒலித்தது. முரட்டு மண்ணைக் குதிரைகளின் குழம்புகள் கடையும்போது ஏற்பட்ட சத்தத்தைத் தவிர, எங்கும் ஓசையின்றியிருந்த வெற்று வெளியில், வெளிச்சத்தில், திடீரென காட்டுக் கூச்சல்கள் பாய்ந்தன.

சாலைகள் சந்திக்கும் இடத்தில், ஒரு நிர்வாண ஊர்வலம் அவர்களைக் கடந்து விரைந்து சென்றது. அழுக்குப் படிந்த ஆண்கள், கொடிகளைத் தாங்கிக் கொண்டிருந்தனர். பெண்கள், குழந்தைகள்; பால் குடித்துக் கொண்டிருந்தனர். வயோதிகர், சோர்வுற்றிருந்த தங்கள் கால்களை இயன்றளவு வேகமாய் இழுத்து நடந்தனர். எல்லோரும் கூச்சலும் இரைச்சலும் போட்டுச் சென்றனர். ஆண்களில் பலர், தங்கள் கைகளால் பெண்களைச் கற்றி வளைத்து

அவர்களை நெருக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர். பெண்கள் ஓடுகையில், அவர்கள் முடி, காற்றிலே விரிந்து ஆடியது. ஆடிய அம்முடியில், ஆண்கள் தங்கள் முகத்தைப் புதைத்தனர். அத்தனை பேருமே, பாடிக் கொண்டும், கூவிக் கொண்டும், உயரக் குதித்துக் கொண்டும், வேகமாகக் கடந்து சென்றனர்.

பியாடீஸ் நாணத்தால் முகம் சிவந்து, ஊர்வலம் கடந்து சென்ற போது தான் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

தான் வாங்கியிருந்த சரக்கு, உயர்ந்த சரக்கு என்ற திருப்தி யெஹானுக்கு ஏற்பட்டது. அவள் சவாரி செய்து கொண்டிருந்த கழுதையிலிருந்து அவளைத் தன் குதிரைக்குத் தூக்கித் தன் முழங்கால் மேல் அவளை வைத்துக் கொண்டு, வெடிப்புச் சிரிப்புடன் கழுதையை விரட்டி விட்டு, அவளுடன் காட்டுக்குள் வேகமாகச் சவாரி செய்தான், யெஹான்.

நாய்கள் அவனுக்கு முன்னால் விரைந்து ஓடின.

அவன் தொழுநோய்க்காரர்கள் பற்றி எண்ணவில்லை. பியாடீஸ் உடம்பில் சூடேறிக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரிந்தது. அவளை அவன் மீண்டும் முத்தமிட்டான். அந்தி இருள் சூழ்ந்து விட்டது. வழிகாட்டும் வேட்டைநாய், வெண்மைக் கதிர் போல் அவர்களுக்கு முன் விரைந்து சென்றது.

கண்புருவம் போல், கருப்பு வளையமாகக் காடு அவர்களுக்குப் பின்னால் விரிந்து பரந்திருந்தது. இரண்டு வெளவால்களின் இறக்கைகள் போல், ஆர்ராஸ் நகர வாயில் கதவுகள், மழுங்கிய ஓசையுடன் மூடின.

இந்த உபமானம் யெஹான் போதேல் மனத்தில் உதித்தது. அதைப் பியாடீஸிடம் அவன் சொன்னான். தான் கவி என்பதைத் வாழ்க்கையில் ஓயாது வெளிப்படுத்திக் கொண்டோ, தன் அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் அதைப் பிரதிபலித்துக் கொண்டோ அவன் இருப்பதில்லை என்ற போதிலும், யெஹான் போதேன் பிகார்டியில் தலைசிறந்த கவி யாவான்.

தன் வீடு வந்து சேர்ந்ததும், அவன் குதிரையிலிருந்து இறங்கி, இடது கையால் அவள் பின் முழங்கால்களையும், வலது கையால் அவள் தோள்களையும் தாங்கிக் கொண்டு, மரப்பலகை வேலைப் பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பெரிய அறைக்கு அவளைத் தூக்கிச் சென்றான். அந்த அறையில் பெரிய கட்டில் ஒன்று இருந்தது. அது அவளுக்குச் சொந்தம் என்று அவளிடம் கூறினான்.

பிறகு தன் ஆடைகளை மாற்றிக் கொண்டு, நகரத்தின் மேற்குப் பகுதியில், யெஹான் அமர்த்தியிருந்த தனி வீட்டில் குடியிருந்த ஒரு பெண்ணைப் பார்க்கப் போனான். அப்பெண் மாதா கோவி

லுக்குப் போயிருந்ததாகப் பணிப்பெண் கூறினாள். அவளைத் தேடி அவனும் கோயிலுக்குச் சென்றபோது, 'மாஸ்' ஆராதனையை முடித்துக் கொண்டு, அப்பெண் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளையும், அவளுடன் ஒரு சில பெண்களையும், சதுக்கத்தின் ஒரு மூலையில் இருந்த மதுவிடுதிக்கு அழைத்துச் சென்றான், யெஹான்.

அந்த அறையில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. மங்கலான ஒரு விளக்கு அங்கு எரிந்து கொண்டிருந்தது. அறைச் சுவர்கள் நெடுகிலும், நடுவில் நின்று வட்ட மேசையைச் சுற்றிலும், மேலே சமக்காளம் போட்ட மரப் பெஞ்சுகள் இருந்தன. ஒளி வீசிய, வெள்ளை, மஞ்சள், தரை ஓடுகள், தரையில் பதிக்கப் பட்டிருந்தன. திராட்சை ரசப் பானம், ரோசாப்பூ ஆகியவற்றின் வாசனை, அறையில் நிறைந்திருந்தது. பல்வகை ரசப்பானம் கொண்டு வரச் சொல்லிவிட்டுத் தான் அழைத்து வந்திருந்த பெண்ணைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டான். ஒரு மணி நேரம் கழித்து, இன்னும் சில ஆண்கள் வந்தனர். மற்ற பெண்கள் பெஞ்சுகளில் படுத்துப் பாடிக் கொண்டிருந்தனர்.

பெண்களில் இருவர், திருக்கோயிலில் தாங்கள் கூறிய பாப ஒப்புதல் அறிக்கையை இங்கு மீண்டும் சொல்லி, அச்சொற்களுக்கு ஏற்ப கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தனர். தன் முடியைக் குறைத்துக் கொண்டு, தங்கள் ஆண் சந்நியாசிக் கூட்டத்தில் சேர்ந்து விடுமாறு, முந்திய தினம் பிரான்சிஸ்க துறவி ஒருவர் தனக்கு யோசனை கூறியதாகப் பல்லைக் கடித்துக் கொண்டு, ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டிருந்தாள், சிவப்புத் தலைமுடி கொண்டிருந்த ஒரு பெண். பொன்னிறமாக முடிக்குச் சாயமிட்டு, 'களங்கமற்றவள்' என்ற துறவிப் பெயர் வைத்துக் கொள்வாயா, என்று ஓர் இளைஞர் கேலியாகக் கேட்டார். அதனால் ஆத்திரமடைந்ததாகப் பாவனை செய்த அப்பெண், கோப்பையிலிருந்த பானத்தை அந்த இளைஞர் சட்டையின்மேல் கொட்டினாள். ஆனால் அவ்வாறு செய்துவிட்டு, அவன் முழங்கால்கள்மேல் அவள் குறுக்கே படுத்துக் கொண்டு, அவன் புறக்காதின் மடலை வருத்தத்தோடு கடித்தாள்.

திராட்சை ரசத்தில் போட வாசனைத் திரவியங்களைக் கொண்டு வர யெஹான் பணித்தார். அவர்கள் ஆசை தீரக் குடித்துச் சிரித்தனர். பெண்கள் பெஞ்சுகளில் ஊஞ்சலாடிக் கொண்டே, குளறிய குரலில், பல பாடல்களின் கதம்பத்தைப் பாடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் யெஹான் இவற்றில் உற்சாகம் அடையவில்லை. வழக்கமாக, அவனுடைய செல்வத்தினாலும் சுபாவத்தினாலும் எளிதில்

கிட்டிய இத்தகைய கேளிக்கைகளில் அவன் ஓரளவு மகிழ்ச்சி காண்பதுண்டு. தன் நிலைமையில் அவசியம் என்பதால் அவற்றை அவன் ஏற்றுக் கொண்டதுபோல் தோன்றியதே ஒழிய, அவற்றில் அதிக ஈடுபாடு கொண்டதாகத் தோன்றவில்லை. ஆனால் இன்றோ அவற்றால் அவனுக்குச் சோர்வும் சலிப்பும் தான் ஏற்பட்டன.

தனக்குப் பழக்கமில்லாத ஒரு பெண்ணின் தலை முடியின் வாசனை, அந்த அறையின் இருளை ஊடுருவி, அவன் கைகளில் ஒட்டிக்கொண்டிருந்தது போல் தோன்றியது.

தன் நிலையில் ஏற்பட்ட மாற்றம் அவனுக்குப் புரிந்தது. ஆனால் சோர்வுக்கான காரணம் அவனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. தான் ஆதரித்து வந்த பெண், தனக்குத் துரோகம் செய்து வந்தாள் என்ற செய்தியைத் தன் நண்பர்களில் ஒருவன் மூலம் அவன் அப்பொழுது அறிந்தபோது, அதனால்தான் தன்னை அறியாமலே தனக்குச் சோர்வு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான். இம்முறையும் அவன் பாதையில் படர்ந்தது. ஒரு சந்நியாசியின் நிழல்தான். முந்திய சந்நியாசி ஒரு பெண்ணைக் கொடுத்தார்; இந்த சந்நியாசி தன் பெண்ணைத் திருடியிருந்தார். இந்தப் பண்டமாற்று ஒருவகையில் பொருத்தமானது என்றெண்ணி அவன் உள்ளூரச் சிரித்துக் கொண்டான். அப்பொழுது தான் தன் வலது கையில் எடுத்திருந்த கோப்பையைக் கூடக் கீழே வைக்காமல், தனது இடது கையால் அந்தப் பெண்ணின் தலை முடியைப்பற்றி, ஒலமிடக்கூட முடியாமல் திகைத்துப் போயிருந்த அப்பெண்ணை, அறைக்கு வெளியே தள்ளினான். பின்னர் எழுந்து நின்று புன்சிரிப்பு செய்து, கதம்ப ரசத்தில் ஐந்து கோப்பைகளை முதலில் எந்தப் பெண் குடிக்கிறாளோ, அவளுக்கு, நகரத்தின் மேற்புறத்தில் இருந்த தன் வீட்டைப் பரிசாக அளிப்பதாக அறிவித்துவிட்டுக் கவலை ஒழிந்ததென, வானத்தை நிமிர்ந்து நோக்கும் வண்ணம் தலையைப் பின்னால் சாய்த்துக் கைகளை மேலே உயர்த்திய வண்ணம், அவன் வெளியே இரவினில் காலெடுத்து வைத்தான்.

ஒரு சந்து வழியாக அவன் நடந்து கொண்டிருந்தபோது, அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. ஒரு வியாபாரி வீட்டுக் கதவைத் தட்டிச் சன்னல் வழியாகத் தலையை நீட்டிய அந்த வியாபாரியிடம், தன் சாக்குகளில் மிகச் சிறந்தவற்றை எடுத்துக் கொண்டு தன்னை மறுநாள் நண்பகலில் வந்து பார்க்குமாறு கூறினான்.

விடிவெள்ளி தெருக்களில் பரவிக் கொண்டிருந்தது. யெஹான் தன் வீட்டுக்குள் புகுந்தபோது எல்லா மணிகளும் ஒருங்கே ஒலிக்கத் தொடங்கின. அவன் தன் முகத்தையும் கைகளையும்

அலம்பியபின், மாடிக்குச் சென்று, ஒரு கதவைச் சிறிது திறந்து பார்த்தான். பெரிய கட்டிலில் பியாடீஸ் படுத்திருந்தாள்; அவள் மென்மையான அங்கங்கள் காலை வெளிச்சத்தில் ஒளி வீசின.

அதற்குப் பிறகு அவன் நண்பகல் வரை தூங்கினான். எழுந்த பின், தன்னுடன் உணவருந்த பியாடீஸை அழைத்து வரச் சென்றான். முந்தின நாள் அணிந்திருந்த அழுக்கான முரட்டு வெள்ளை ஆடையை அவள் அன்றும் அணிந்திருந்தது கண்டு அவன் மிகவும் பரிதாபப் பட்டான். ஆனால் அவள் அங்க அசைவுகளைப் பார்த்தால், அவள் ஆடையே அணிந்திராதது போலவோ, நேர்த்தியான பாரசீக ஆடை அணிந்திருந்தது போலவோ. தோன்றியது. அவள் மேன்மைக்கும் மேலாடைக்கும் சிறிதும் தொடர்பு இடையாது என்பதுபோல் தோன்றியது. யெஹானுக்கும் அந்த உணர்வுதான் திடீரென ஏற்பட்டது.

அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது, எதிர்பாராமல் ஒன்று நடந்தது. அப்பெண்ணை நெருங்கும்போது, தனக்கும் அந்த அடிமைப் பெண்ணுக்கும் இடையே, தன்னை அறியாமல், தனக்குப் புதிதான, ஒரு மரியாதை உணர்வு, குறுக்கிடுவதை யெஹான் உணர்ந்தான். திடீரென அப்பெண் கண்ணீர்விட்டு அழுததை அவன் கண்டு, காரணம் விசாரித்தான். அழுகைக்கும் அரைச் சிரிப்புக்கும் ஊடே, அவள் தன் தட்டைச் சுட்டிக் காட்டி, அந்தக் காய்கறியைத் தன்னால் சாப்பிட முடியாது என்று கூறினாள். அது முட்டைக்கோஸ். யெஹான் வாய்விட்டுச் சிரித்தான். அதன்பின், துணிமணிகளைக் கொண்டு வந்திருந்த வியாபாரியுடன் அவளை விட்டுவிட்டு யெஹான் சென்றான்.

மறுநாள் காலை, சிவப்பு மலர்களையும் சிவப்புக் கற்களையும் எடுத்துக் கொண்டு, அவள் படுத்திருக்கும் போதே கொடுக்க வந்தான். மாலையில் அவள் அவனுக்காகப் ப்ரோவென்ஸ் பகுதிப் பாடல் ஒன்றைப் பாடினாள்:

ஆ மிக், சியூ வாஸ் ட்டேனியா
டின்ஸ் மா சாம்ப்ரா கார்னியா,
டி யியாய் வாஸ் பய்சாரியா,
க்வார் நா' டி—
டென் டெர் லா'ட்டர் டி.
க்வான்ட் லோ கிலாஸ் எர் ∴போரா,
பெல்ஸ் ஆது,
வெனி — வாஸ் ஆ மி.

தன் ஆடையைச் சிறிது தூக்கிச் செருகிக் கொண்டு, அவள் நடனமாடினாள். மெழுகுவர்த்திச் சுடரும் கூடவே ஆடி அடங்கியது.

மறுநாள், ஒரு காதல் ஜோடி வல்லூருப் பறவைகளை அவன் அவளுக்குக் கொண்டுவந்தான். 'வெள்ளிக்குயிலே' என்று அவளைச் செல்லமாக அழைத்துக் கொஞ்சி அவளுடன் தங்கி அவளை முத்தமிட்டான். அவன் முன் அவள் வெட்கப்படவில்லை. காலை வெளிச்சம் தரையில் தவழ்ந்தபோது அவள் ஆடை உடுத்திக் கொண்டாள். 'மாஸ்' ஆசாரத்திற்காகத் திருக்கோயிலுக்குச் செல்ல அவள் அனுமதி கோரினாள். அவனும் அவளுடன் சென்றான். மூன்று தொழுகை பீடங்கள் முன்னிலையில் அவள் பிரார்த்தனை செய்தாள். ஒவ்வொரு பீடத்தின் முன்பும், அவள் கைகளைக் கூப்பி உயர்த்தி நன்றிக் கடன் செலுத்தினாள். சொல்லில் அடங்காத செய்தியைச் சொல்லத் தொடங்கும் முயற்சி போல், அந்த சைகை காணப்பட்டது. திருக்கோயிலை விட்டு வெளியே வந்தபோது, அவர்கள் பாதை தடை செய்யப்பட்டிருந்தது. ஒருத்தி, தரையில் குப்புறப் படுத்துக் கைகளை நீட்டிக் கொண்டு, சிலுவை போல் தோற்றமளித்து வெறிபிடித்தவள் போல் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி நான்கு சிலுவைகள் நின்றன. ஒவ்வொரு சிலுவை பக்கத்திலும், முழங்கை நீளத்திற்கு, ஒரு மெழுகுவர்த்தி. அதில் சிவப்பு ஒளிக் கதிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அந்தப் பிரார்த்தனை நோன்பு செய்து கொண்டிருந்த பெண்ணைச் சுற்றிச் சிலர் நின்று கொண்டிருந்தனர். ஆனால் அந்தப் பெண் தலையை நிமிர்த்திப் பார்க்கவில்லை. பியாடீஸ் தயங்கினாள். ஆனால் யெஹான் பதட்டம் அடையவில்லை. அவனுக்கு அந்தப் பெண்ணைத் தெரியும். முதல் நாள் போல, யெஹான் பியாடீஸைக் கையில் தூக்கிக் கொண்டு, தரையில் கிடந்த பெண்ணைத் தாண்டி அடியெடுத்து வைத்துத் திருக்கோயின் இருட்டான, வளைவான, வாயில் வழியாக, வெளிச் சத்தை நோக்கி நடந்தான். அதற்குப்பின்பும் யெஹான் அவளைக் கீழே இறக்கி விடாமல், சந்தை வழியாக அவளைத் தூக்கிச் சென்றான். தெருவை அவன் நெருங்கிக் கொண்டிருந்தபோது, உரத்த குரலில் ஓர் ஓலம், தெருவில் எதிரொலித்து, அவன் செவியில் விழுந்தது. அவன் சற்றே தன் தலையைச் சாய்த்துப் பார்த்தான். கரு முடி தொங்க, வாயில் நுரை தள்ள, கைகளை வீசிக் கொண்டு, பிரார்த்தனை நோன்பிருந்த அப்பெண், திருக்கோயிலின் வாயிலருகே நின்று, பியாடீஸை வேசி என்று சபித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், வெட்கத்தால் முகம் சிவந்த, பியாடீஸைக் கீழே இறக்காமல், யெஹான் அவளை வீட்டிற்குள் தூக்கிச் சென்றான்.

மறுநாள் யெஹான் அவளிடம் வரவில்லை. ஆனால் பியாடிஸின் துடிப்பு நிறைந்த முகத்தில் படர்ந்திருந்த நிழல்திரையை, விடி வெள்ளி விலக்கியபோது, யெஹான் அவளைத் தன் வல்லூருப் புறவை என்றழைத்து வாயாரக் கொஞ்சினான். இரவு முழுவதும் அவன் தங்கியிருந்தான்.

அன்று காலை முதல், ஒவ்வொரு நாள் விடிகாலையிலும், யெஹான் பியாடிஸைத் தன் வல்லூருப் பறவை என்றழைத்துக் கொஞ்சுவான். சில சமயம் வெள்ளிக் குயிலே என்று கொஞ்சுவான். சில சமயங்களில் புயல் காற்று வீசி, ஜன்னலருகே ஒலி மயமான சிவப்பு வலைகளைப் பின்னிச் சீறும் வெப்பத்தைத் திரட்டும் புயல் காற்று பிடித்து இழுத்து வைத்த திரைபோல் நின்று அது பிய்ந்து கிழியும்போது மஞ்சளும் பச்சையும் கலந்த கம்பிப் பின்னலை வீசுவதுபோல் தோன்றும். அவ்வேளைகளில் பியாடிஸ் யெஹான் மேல் சாய்ந்து கொண்டு, நடுங்குவாள். புயல் அவள் இதயத்தை உலுக்கும்; யெஹானின் தொழிலறையில் இருந்த மூர் இரும்புப் பின்னல் புயலின் பயங்கரத்தில் வளைந்து உருக்குலைந்திருந்தது. அந்த சன்னலைப் பார்க்கும்போது பியாடிஸுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

இரண்டு வாரங்கள் கழித்து, யெஹான் ரூயன் நகரத்திற்குச் சென்றான். அவன் திரும்பியபோது, பியாடிஸ் பல மணி நேரங்களாக அவனுக்காக, வாயிலருகிலேயே காத்திருந்தாள். பரந்த சமவெளியைத் தாண்டி அவன் வருவதை அவள் தூரத்திலேயே பார்த்து விட்டாள். அவன் அவளைப் பார்த்ததும், கையை ஆட்டி, குதிரையை வேகமாய் உந்தினான். தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க அவன் அவளுக்கு ஒரு குரங்கைப் பரிசாக அளித்தான். குரங்கு நாள் முழுவதும் மரக் கூண்டு ஒன்றில் அடைபட்டுச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பியாடிஸ் தன் உதட்டைப் பிதுக்கினாள். ஆகவே யெஹான் குரங்கை வீட்டுக்கு வெளியே தூர எறிந்துவிட்டு, அவளுக்காக அழகான பூ மாடம் ஒன்றைக் கட்டித் தந்தான். அதைத் தவிர, கண்ணுக்கினிய வண்ணங்கள் நிறைந்த ஒரு கிளியை அவளுக்கு வாங்கித் தந்தான். அவள் நாள் முழுவதும் அக்கிளியுடன் விளையாடிக் கொண்டிருப்பாள். தன் பெண் குதிரையைப் போலவே வெள்ளை நிறம் கொண்ட ஆண் குதிரை ஒன்றையும் அவன் அவளுக்காக வாங்கினான். அவளைச் சுற்றி யிருப்பதனைத்தும் ஒலி மயமாக இருக்கவேண்டும் என்று அவன் விரும்பினான். ஒருநாள் அவன் வெண்மையான வல்லூருப் பறவை கொண்டுவருமாறு, உத்தரவிட்டிருந்தான். ஒரு கிரேக்கன் கொண்டு வந்த பறவை அவ்வளவு வெள்ளையாய் இல்லை. அதனால் ஆத்திரமடைந்த யெஹான் அந்தக் கிரேக்கனைச் சவுக்கால் அடித்

தான். ஆர்ராஸ் நகரத்தின் அணையாத விளக்காகவும் ஒளிப் பிழம்பாகவும், இருந்த பியாடீஸின் சரும மத்துக்கு ஏற்றமாதிரி வெண்மை கொண்டிருக்க வேண்டுமல்லவா அப்பறவை?

ஒருநாள் காலையில், குதிரைகள் ஓட்டத்தின் ஓசை அவள் தூக்கத்தைக் கலைத்து, அவளை வெளியே ஈர்த்தது. மஞ்சள் காலுறையை பியாடீஸுக்கு யெஹான் தானே அணிவித்தான். பியாடீஸ், முழங்கால் வரை மட்டும் எட்டிய அங்கியை அணிந்து, மூன்று நட்சத்திரங்கள் கொண்ட ரிப்பனைச் சடையோடு பின்னினாள். அதன் பிறகு பியாடீஸ், இரண்டு வல்லூறுகளையும், எடுத்துக் கொண்டு, முயல்வேட்டை ஆடச் சென்றனர். வேட்டையின் போதையில் வெறி ஏறிய ஒரு பறவை, சுற்றிச் சுற்றி வளையங்களில் உயரப் பறந்து, 'ஹெரான்' பறவை ஒன்றுடன் உயரப் பறப்பதில் போட்டியிட்டு, அப்பறவையை விஞ்சி வென்றது, ஒளி மயமான அந்த நாளையும், தொலைவில் அடிவானம் அருகே பறந்து மறைந்த வல்லூறுப் பறவையின் வீரப் பயணத்தையும் எண்ணி, வியந்து, பியாடீஸ், வானத்தை நோக்கிப் பின்னால் சாய்ந்தபோது, யெஹான் அவளுடைய வெண்மையான கையுறையைக் கழற்றிக் கட்டுக் கடங்காத காதல் வெறியில் அவள் முன்கையில் அழுத்திக் கடித்து விட்டான். 'வில்லோ' செடிகள் அடர்ந்த ஒரு சமவெளிப் பகுதியைக் கடந்து அவர்கள் நீண்டநேரம் சவாரி செய்தார்கள். புதர்களூடே சவாரி செய்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் அந்தப் பகுதியில் நிறைந்திருந்தனர்.

சிறிது நேரத்துக்கு, பியாடீஸைத் தவற விட்டான், யெஹான். தொலைவில் அவளுடைய ஆடையில் ஜிகினுவைக் கொண்டு, அவள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து, யெஹான் அங்கு சவாரி செய்தபோது, இளம் வயதான வீரன் ஒருவன், அவள் கீழே தவறவிட்டிருந்த கையணியை எடுத்து, அவளிடம் கொடுத்துக் கொண்டிருந்தான். கொடுப்பதற்கு முன், அவளை ஆசையுடன் பார்த்துக் கொண்டே, அந்தக் கையுறையை நீண்ட நேரம் முத்தமிட்டுக் கொண்டிருந்தான் அந்த வீரன்.

மனம் திருப்தி அடையும் வரை வேட்டையாடி, புதுமைகள் பல கண்டு, வேட்டையில் நல்ல பெயரும் பெறும்வரை, அவர்கள் பகல் முழுவதும் சவாரி செய்தனர். களைப்படைந்த போதிலும் உற்சாகமாக ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு கூட்டத்துடன் அவர்கள் சேர்ந்து கொண்டனர். பெண்களிடையே அவ்வப் போது எழுந்த சிரிப்பொலி, மௌனத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது. பியாடீஸ் கையுறையை எடுத்துத் தந்த வீரனுடன்,

யெஹான் சவாரி செய்து கொண்டிருந்தான். அந்த வீரனின் பெயர், ஜிரார்ட்.

அவர்கள் ஊருக்குத் திரும்பியபோது, ஊர்ச் சதுக்கத்தில் அழுகை ஒலியும் ஓலங்களும் நிறைந்திருந்தன. துப்புபி முழுக்கங்கள் பின்னி வகீத்துக் குலிக்கப்பட்டிருந்ததுபோல், ஓலங்களும் கூக்குரல்களும் ஒரு மூலையிலிருந்து எழுந்து அவர்களைத் தாக்கின. முரட்டுத் துணியில் போர்த்தப்பட்டு, முகத்தில் முக மூடி ஒன்று அணிவிக்கப்பட்டிருந்த மனிதன் ஒருவன், முன் கைகள் உடலின் மேல் குறுக்கே வைத்துக் கழுவில் கட்டப் பட்டிருந்தான். பரவச வெறிபிடித்தவனின் ஆட்டம்போல், கயிறு களுக்கு இடையே, அவன் உடல் இங்குமங்கும் பின்னி, நெளிந்து, துடித்தது. கழுத்து இறுகப் பிடிக்கப்பட்டிருந்ததால், அவனுடைய தலை மட்டும் ஆடாமல் அசையாமல் நின்றது. தலையில், உதடுகள் மட்டும் அசைந்தன; பெரிய, விரிந்த, உருண்டையான கண்கள் உருண்டன. அவனுக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ஒரு குழாயை, இன்னொருவன் பிடித்துக் கொண்டிருந்தான். அந்தக் குழாயிலிருந்து அவ்வப்போது கொதிக்கும் எண்ணெய், அந்தத் துர்ப்பாக்கிய மனிதன் மண்டை ஓட்டின் மேல் சொட்டிக் கொண்டிருந்தது. அந்த மனிதன் யார் என்று அவர்கள் விசாரித் தார்கள். அவன் பெயர் திபாட்டி நெஸ்லே என்றும், அவன் தொழு நோயால் தாக்கப்பட்டிருந்தானென்றும், முதல் அறி குறிகள் தோன்றியவுடனேயே, ஊரை விட்டுப் போகாமல் இரகசியமாய் வைத்திருந்ததற்காக அவன் இவ்வாறு தண்டிக்கப் படுகிறான் என்றும் பக்கத்து வீடு ஒன்றிலிருந்து யாரோ பதில் கூறினர்கள். அதைக் கேட்டதும் யெஹான் முகம் ஆத்திரத்தால் வீங்கியது. டவுலோஸிடமிருந்து தனக்குப் பரிசாகக் கிடைத் திருந்த மஞ்சள் கோவேறு கழுதையின் சாவு மீண்டும் அவன் நினைவுக்கு வந்தது. காட்டில் தொழு நோய்க்காரன் ஒருவனைக் கொல்பவருக்குத் தாம் முன்பு தருவதாகச் சொன்ன வெகு மதியை இரண்டு மடங்காக்கி, நாற்பது வெள்ளிக் காசுகள் தருவதாக யெஹான் அறிவித்தான். அதற்குப் பிறகு, ஜிரார்டிடம் சென்று, கழுவில் கட்டப்பட்டுள்ள ஆள் மேல் கொதிக்கும் எண்ணெயில் இன்னும் ஐம்பது சொட்டுக்கள் ஊற்றத்தான் உத்தரவிட்டதாக, கழுமரப் பணியாளரிடம் கூறுமாறு ஜிரார்டை யெஹான் பணித்தான். இந்த உத்தரவு குதிரை மீதிருந்த மற்றவர்களுக்கும் கேட்கும்படி, உரக்கக் கூறினான். சதுக்கத்தைச் சுற்றியிருந்த வீட்டுச் சாளரங்களிலிருந்து எட்டிப் பார்த்தவர்கள் அனைவருக்கும் கேட்கும்படி உரக்கச் சொன்னான்.

ஜிரார்ட் தன் முகவாய்க்கட்டையை நிமிர்த்தி நோக்கினான். இருவரும் ஒருவரையொருவர் கண்ணில் உற்று நோக்கினர்.

யெஹானின் பார்வை அந்த வீரன் கண்ணைத் துளைத்தது. இறுதியில் வீரன் விட்டுக் கொடுத்து, அந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு, கழுமரப் பணியாளரிடம் பேசினான். பேசிவிட்டுத் திரும்பி வந்தபோது, அவன் முகம் வெளிறியிருந்தது; அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

தொழுநோய்க்காரன் அடித் தொண்டையிலிருந்து இட்ட ஓலம், அம்பு போல் பாய்ந்து அவர்களிடம், வந்தது.

பியாடீஸ் முகத்திலும் கண்ணீர் வழிந்தது. வீடு போய்ச் சேரும்வரை அவள் கண்ணீர் அடங்கவில்லை. அந்த வீர இளைஞரை அவமானத்துக்கு உள்ளாக்கியது ஏன் என்று அவள் யெஹானிடம் கேட்டாள். கொடுமையை எண்ணி அவள் நடுங்கினாள்.

ஆனால் யெஹான் பதட்டமடையாமல், அவள் அணிந்திருந்த கையுறையைச் சுட்டிக்காட்டி, அதில் ஜிரார்ட் முத்தமிட்டிருந்த இடத்தைக் கைவிரலால் கோடிட்டுக் காட்டி, "இல்லாவிடில் நான் அந்த இளைஞனைக் கொன்றிருக்க வேண்டும்," என்று விளக்கினான்.

தன் மீது எவ்வளவு அளவற்ற அன்பு யெஹானுக்கு உள்ளது என்றெண்ணிப் பியாடீஸ் பூரித்தாள். அன்று மாலை அவள் தன் உடம்பைப் பலமுறை வாசனை எண்ணெயும், பைஸான்டியம் நகரத் தண்ணீரும் ஊற்றிக் கழுவினாள். அவனைக் கோலாகலமாக வரவேற்க அவள் விரும்பினாள். அன்று முதல் தொடர்ந்த ஏழு வாரங்கள் அவனை மகிழ்விக்க அவள் தன் முயற்சிகளைப் பத்துமடங்கு அதிகமாக்கினாள். அந்த ஏழு வாரங்களில் பகல் பொழுது அமைதியாகவும் தெளிவாகவும் கழிந்தது. ஆனால் இரவுகள், ஒளிமயமாகவும், இன்பமயமாகவும், ஆயிரம் புயல்களின் வேகத்துடனும் கழிந்தன.

ஒரு நாள் புரேவன்சுப் பகுதியிலிருந்து வந்த ஒரு நாடோடி இசைப் பாடகன், இரவை யெஹான் வீட்டில் கழித்தான்.

வகுந்து நின்று, ஒலி எழுப்பிப் பாடிய மரங்கள் அடர்ந்த ஒரு காட்டின் வழியாகத் தான் சென்று கொண்டிருந்ததாக, யெஹான் போதேல், அன்றிரவு கனவு கண்டான். அப்பாடல் அவனுக்கு மிகுந்த வேதனை தந்தது. அதிலிருந்து தப்ப ஒரு கண்ணாடித் தொட்டியில், அவன் ஒளிந்து கொண்டான். அத் தொட்டி அசைந்து, ஒரு பாறையைத் தாண்டிக் கடலுக்குள் விழுந்து கடலின் அடித்தளத்தில் புதைந்தது. சிறிது நேரத்திற்குத் தண்ணீர் கண்ணாடி மேல் உராயும் ஓசைதான் அவனுக்குக் கேட்டது. அதற்குப் பிறகு மீன்கள் தோன்றி மறைந்தன. கடலைத் தவிர வேறெதுவும் இல்லை. எல்லையற்ற கடல்வெளி அவனை

அச்சத்தில் ஆழ்த்தியது. முடிவற்ற ஒரு வெறுமை அவன் எண்ணங்களைச் சூழ்ந்தது. அவன் விழித்தபோது, எண்ணங்கள் துகளாக்கப்பட்டுத் தூசி மேகமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தது போலவும், அவன் மிதந்து கொண்டிருந்தது போலவும் அவனுக்கு எண்ணம் ஏற்பட்டது.

நண்பகலில் நாடோடிப் பாடகன் சென்றான். அவன் நார்மண்டியில் மாண்ட் புனிதர் மைக்கேல் துறவி மடத்திலிருந்து வந்தவன். ஸான் இயகோ டி கம்போஸ்டெல்லாவுக்கு யாத்திரை செய்து கொண்டிருந்தான்.

அவன் முகம் கருத்த ஆரஞ்சு நிறமாக இருந்தது. அவன் முடி கருப்பாக இருந்தது.

அவன் மிகுந்த நன்றியுடன் யெஹானுடன் கைகுலுக்கிச் சென்றான்.

மாலையில் யெஹான் தன் ஆடைகளை மாற்றியபோது, அவனுக்குத் திகைப்பு ஏற்பட்டது. அவன் கண்ணாடியில் கூர்ந்து பார்த்தான்.... அவனை ஆட்கொண்ட வெறுமையில். அவன் உடலை நீத்ததையும் குடைந்தெடுத்து வெற்றுக் கூடாக்கிய நிலையில், புதியதோர் உணர்வு அவனைச் சுட்டுப் பொசுக்கித் தாங்க முடியாத சுமையை அவன் மேல் சுமத்தியது.

யெஹான் தன் கைகளைத் தனக்குப் பின்னால் கோத்து வைத்துக் கொண்டான். அறையில் மேலும் கீழும் நடந்தான். மணிக்கணக்காக நடந்து கொண்டிருந்தான். பியாடீஸ் அவன் கதவைத் தட்டினாள். அது அவன் காதில் விழவில்லை. இரவு வந்துவிட்டதென்று அவள் சொன்னாள். இரவு முழுவதும் அப்பெரிய படுக்கையில் அவள் தனியே படுத்திருந்தாள். நிலா அவளைச் சுற்றி விளையாடியது. இது அவளுக்குப் புதிய அனுபவமாய் இருந்தது. அதை எட்டிப் பிடித்துத் தன் கைகளில் தழுவிக் கதறி அழுதாள்.

ஒரு நாள் முழுவதும் அசையாமல் யெஹான் போதேல், ஒரு திறந்த ஜன்னல் அருகே அமர்ந்து, நகரத்தை நோக்கிக் கொண்டிருந்தான், குறுகிய சோபா ஒன்றில் அவன் அமர்ந்திருந்தான். அவனுக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு தூண்கள் அசைவற்று நின்றன. அவன் எழுந்தபோது, வாயிலிருந்து நுரை வழிந்தது. கருப்புக் கதவுத் திரையை அவன் கிழித்துச் சின்னாபின்னமாக்கினான். தன்னுடைய சிறந்த உடைவாள்களிலிருந்து, கத்தியால் துண்டுகளைச் செதுக்கி, தன் கைகள் இரத்தம் கட்டி எரியும் வரை, அத் துண்டுகளை ஓடித்து உடைத்துச் சுக்கு நூறாக்கினான். பிறகு மீண்டும் அமர்ந்து, நகரத்தை நோக்கி வெறித்துப் பார்த்தான். ஒரு முதிய பணிப்பெண் அவனுக்குப் பணிவிடை

செய்தாள். அவன் தரையில் படுத்து உறங்கி, அஸ்கலோனிய வெங்காயத்தைக் கொண்டு உடம்பெல்லாம் தேய்த்தான். அதற்குப் பிறகு உட்கார்ந்து வெறி பிடித்தவன்போல் எழுதினான்.

பியாடீஸ் பொறுத்திருந்து கதவைத் தட்டினாள்.

அவன் பதில் கூறவில்லை.

அவனுக்கு அவள் ஒரு கடிதம் எழுதினாள். அதில் சொற்கள் சிலவே இருந்தன: ஆனால் உணர்ச்சி ததும்பியது. கடிதத்தைப் படித்த வேதனையில், அழுகையை அடக்கும் பொருட்டு, அவன் உதட்டைக் கடித்துக் கொண்டான். அவளுடைய அன்பைப் பரிகசித்து அழிக்க, அவளுக்கும் பிடிக்காத முட்டைக் கோஸை அவளுக்கு அனுப்பினான்.

ஆனால் அதனால் அவளுடைய அன்பை அவனால் அழித்துவிட முடியவில்லை.

ஒரு வாரம் கழித்து, மறுநாள் தமது புதிய உயில் ஒன்றை யெஹான் படிக்கப் போவதாக, நகரத்தைச் சுற்றியும் மாவட்டத்தைச் சுற்றியும், ஒரு வதந்தி பரவியது.

அன்று காலை அவனே பியாடீஸைப் பார்க்கச் சென்றான். சாப்பிடாததால் வெளிறிய முகத்துடன், தன் கட்டில் படியிலேயே தலையணை வைத்து அவள் படுத்திருந்தாள். மிக நேர்த்தியான ஆடை அணிந்து கொண்டு, தன்னுடன் வரும்படி, அவளிடம் அவன் சுருக்கமாகக் கூறினான். அவன் வாய் இருந்த விதத்தில் ஒரு கடுமை காணப்பட்டது. அவன் மேல் சாய்ந்து, அவனைத் தழுவ அவள் விரும்பினாள். ஆனால் அவன் அவளை உதறித் தள்ளினான். அவள் முகத்தில் சினத்தின் சாயல் படர்ந்தது. மெத்தையின் சரிகைத் தொங்கலுடன் அவள் விளையாடிக் கொண்டு, அவன் போகும் வரை அசையவில்லை. அவன் போன பின்பு, மூர் நகரப் பாணி இரும்புச் சன்னலுக்கு அவள் ஓடிச் சென்று அதன் வழியாகப் பார்த்தாள். அவன் சோபாவில் உட்கார்ந்து கொண்டு, அவளுக்காகக் காத்திருந்தான். அவன் கண்களிலிருந்த கோபம் கரைந்திருந்ததையும், அவை களையிழந்த மந்தமான பார்வை கொண்டிருந்தன என்பதையும் அவள் கண்டாள். அதன்பின் அவள் தயங்கவில்லை.

நீல, மஞ்சள் வண்ணங்கள் கலந்த தலைப்பாகையைத் தன் தலையில் சுற்றிக்கொண்டு, ஏழு பட்டாக் கத்திகளை அதில் செருகிக் கொண்டு, ஒரு வெள்ளை முகத்திரையை முதல் கத்தியில் கட்டித் தன் முகவாய்க் கட்டை கீழ்த் தொங்கலாக விட்டுப் பிறகு ஏழாவது கத்தியுடன் சேர்த்துக் கட்டினாள். தோளில் மெல்லிய சிவப்புக் கொளுக்கள் கொண்ட வெள்ளை முன்னங்கை முகப்பைத்

தன் இளம் தனங்களைச் சுற்றிக் கட்டிக் கொண்டாள். சுத்தமான தங்கச் சரிகைத் துணி, தோளிலிருந்து அவள் இரு கைகளிலும் தொங்கியது. கீழே அவள் அணிந்திருந்த வெள்ளைப் பட்டாடை, காலடியில் கிரிப்பட்டாலும், சிவப்பு, இளஞ்சிவப்புக் கண்கள் போன்ற பின்னல் வேலைப்பாட்டாலும், அணி செய்யப் பட்டிருந்தது. இருவரும் ஒன்றாக அங்காடிச் சதுக்கத்துக்கு நடந்து சென்றனர். அங்கு ஒரு பெருங்கூட்டம் கூடியிருந்தது. வரிசையாகக் குழுமியிருந்த மக்கள் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டிருந்தனர். வெளியிலிருந்து வாயிற்கதவு வழியாக இன்னும் பல பேர் வந்து குவிந்துகொண்டிருந்தனர். சிலர் கூட்டம் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தனர். ஒரு பாதிரி, சிவப்புக் கையுறை அணிந்த கைகளில் ஒரு தோரணத்தைத் தாங்கிக் கொண்டிருந்தார். சில குழுக்கள் பாடிக் கொண்டிருந்தன. பெண்கள் கூட்டமொன்று கோடைகாலப் பாடல்களைப் பாடியது. புதிதாக வந்தவர்களின் பேச்சு, அந்தப் பாடல்களுக்கிடையே, கிளிகளின் குளறு மொழிபோல் பட்டது.

யெஹான் மேடையில் ஏறினான். அவனுக்குப் பின்னால் மாதா கோவிலில் ஆலயக் கதவு விரியத் திறந்திருந்தது. அக்கதவிலே பல சித்திரங்கள் செதுக்கப்பட்டிருந்தன. மங்கலான மெழுகு வர்த்திகள் அங்கு எரிந்து கொண்டிருந்தன. யெஹான் சிரித்துக் கொண்டே, பொதுமக்களுக்கு நல்வாழ்த்து கூறினான். அவர் களும் சிரித்துக் கொண்டே பதில் வாழ்த்துக் கூறினர். பட்டுப் போன்ற நீலவானம் சதுக்கத்தின்மேல் ஒளி வீசியது. திடீரென யெஹானின் சிரிப்பு அடங்கி, அவன் பார்வையில் ஒருவிதக் கடுமையும் கண்டிப்பும் புகுந்தன. யெஹான் போதேலின் புதுப் பிரகடனத்தை அவன் வாசித்தான். அதாவது நகர மக்களிட மிருந்து அவன் விடைபெற்றுக் கொண்டான். அவன் தொடர்ந்து படிக்கையில், மக்கள் முகங்கள் பரபரப்பு கொண்டன. அவர்கள் பதட்டமடைந்து நிலை கொள்ளாது துடித்தனர். ஒருவன் தன் கையைத் தூக்கினான். அனைவரும் தங்கள் கையைத் தூக்கினர். தூக்கிய கைகள் அனைத்தும் புயல்போல் எழுந்து, யெஹான் தங்களைவிட்டுச் செல்லக்கூடாதென்ற மக்கள் விருப்பத்தைத் தெரிவித்தன. கூட்டத்தினர் முகங்கள் வெறித்த நிலை விலகி, உணர்ச்சி வசப்பட்டன. கட்டுக்கடங்காத வேகத்துடன் அவர் கள் கோஷமிட்டு, உரக்கக் கூவிக்கொண்டு முன்னுக்கு நெருக் கினர்.

யெஹான் தன்னிரு கைகளையும் குரல்வளைக்கு உயர்த்தித் தன் ஆடைகளைப் பிய்த்தெறிந்து, கூச்சலிட்டுக் கொண்டிருந்த கூட்டத் தினருக்குத் தன் மார்பைத் திறந்து காட்டினான். தன் கைகளையும் அகல விரித்தான். அவன் சருமத்தில் நீல தழும்புகள் படர்ந்

திருந்தன. ஒரு சிவப்புக் கட்டி, அவன் மார்பில் மூர்க்கமாய் முளைத்திருந்தது.

கூட்டத்தினர் ஒரு கணம் திகைப்பில் ஆழ்ந்து நின்றனர். அவன் கைகளைத் தொங்கப் போட்டான். கூட்டத்தினரின் கூச்சல் கோபமான கூக்குரலாக மாறிற்று. தொழு நோயிலிருந்து தூர விலகிச் செல்ல, கூட்டத்திலிருந்த ஆண்கள் தங்கள் பெண்களைப் பின்னால் இழுத்தனர். சவுக்கால் அடிபட்டதுபோல், சத்தம் அடங்கியது. ஓட்டம் ஒன்றுதான் எஞ்சி நின்றது. ஒருவன் மட்டும் துணிச்சலுடன் தன் கையைத் தூக்கிக் 'கழுவிலேற்றுங்கள்' என்று கூக்குரலிட்டான்.

ஆனால் அவன் ஒருவன் தான் அவ்வாறு கூக்குரலிட்டான்.

நீர்க்குமிழியைக் சுற்றி வட்டம் வட்டமாக நீர் கொப்புளிப்பது போல், யெஹானிடமிருந்து வெளிக்கிளம்பிய சக்தி ஏதோ ஒன்று கூட்டத்தினரை விலக்கிப் பின் தள்ளிச் சதுக்கத்தில் கூடியிருந்தோரை வீடுகளுக்குள்ளும் தெருக்களுக்கும் விரட்டி விட்டது. மயக்கமுற்று விழுந்த பியாடீஸை இருவர் தூக்கிச் சென்றனர்.

அதற்குப் பின்பு ஒரே நிசப்தம்.

சிறு ஓசை கூட இல்லை.

யெஹான் சிரித்தான்; கனவிலே, கண்ணுடித் தொட்டியிலே சிரித்தது போல.

சதுக்கத்திலிருந்து வெளியே செல்ல இரண்டு வழிகள் இருந்தன. அவற்றில் ஒன்றை நோக்கி யெஹான் கம்பீரமாக நடந்தான். உயர்ந்த ஒரு கதவு; இரண்டு கைப்பிடிகளைப் போல், மேலே பிளவுபட்டு இருந்தது. அப்பிளவில் ஒரு பெரிய கண்டாமணி. நடுவிலே, தெளிவற்ற உருவில், தொப்புள் போல், கதிர் நிழற் கடிகை. யெஹான் தெருவைச் சுற்றிலும் நோக்கினான் அங்கு எவரும் கண்ணில் படவில்லை. பிறகு சதுக்கத்தை மீண்டும் கடந்து மறுபக்கம் நோக்கி நடந்தான். தொழுநோய்ப் புண்ணை ஒரு கேடயம் போல் அவன் தாங்கி நடந்தான். நடமாட்டமில்லாத இரு இடுக்குகளிடையே இருட்டான ஒரு குறுகிய பாதை இருந்தது.

விலங்கின் மென்மயிர்த் தகட்டைப் பாகை ஒன்றை யெஹான் அணிந்திருந்தான். அவனுடைய சட்டையின் முன் கைகள் குறுகியதாகவும், மணிக்கட்டுப் பட்டையில் மென்மயிர்த் தோல் கொண்டதாகவும் இருந்தன. கருஞ்சிவப்பு அங்கி, மார்பில் மட்டும் திறந்திருந்து, உடலின் மேல் பகுதியில் உடலோடு ஒட்டி இருந்தது. இடுப்பிலே கட்டியிருந்த முதுகுத் தோல் வாரில் செருகியிருந்த

அங்கி, கணுக்கால் நோக்கி விரிவடைந்து, கால்பட்டையில் அகல மான மெல்லிய மயிர்க் கரையிலும், தங்கச் சரிகைப் பட்டை யிலும் முடிந்தது, அவன் காலணிகள் பச்சையாய் இருந்தன.

மந்தமாக எதிரொலித்த, சரிவான, முடுக்குகளிடையே அவன் கம்பீரமார்க நடந்து சென்றான். எவராவது தன்னைக் குத்திக் கொல்ல முன்வருவாரென்று அவன் எதிர்பார்த்தான்.

ஆனால் ஒருவரும் அவனைக் கொல்லவில்லை.

அவனுடைய வீட்டின் முன்வாசல் விரிவானது. மாடிகளில் தூண் களால் தாங்கப்பட்ட பெரிய சாளரங்கள் இருந்தன. கீழே, நடுவிலே, உயரமான ஒரு கதவு. அது இரவும் பகலும் திறந் திருந்தது. யெஹான் காத்திருந்தான். ஆனால் எவரும் வரவில்லை.

பகலில் பல கதவுகள் திறந்தன. மெழுகு வர்த்தியைத் தாங்கிக் கொண்டு, பலர் திருக்கோயிலை நோக்கி நகரில் நடந்து சென்றனர்.

நாள் முழுவதும் யெஹான் தன் சோபாவில் மீண்டும் உட் கார்ந்து காத்திருந்தான், அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. பகல் முழுவதும், ஒவ்வொரு முறை மணியோசை கேட்டபோதும், பியாடிஸ் கதவைத் தட்டினாள். கதறி அழுது கொண்டே, யெஹானைப் பெயர் சொல்லி அழைத்தாள். கதவின் மேல் விழுந்து, அதைத் திறக்க முயன்றாள். யெஹானுக்குத் தொழு நோய் கொண்டு தந்த பிரவென்சுப் பாடகனை மனமாரச் சபித் தாள். ஆனால் யெஹான் செவியில் எதுவும் விழவில்லை. கதவு சிறிது கூட அசைந்து கொடுக்கவில்லை.

மறு நாளும், மறு இரவும், யெஹான் போதேல் வீட்டின் கதவு திறந்திருந்தது. ஆனால் எவரும் வரவில்லை. வீட்டைக் கடந்து கூட அதிகப்பேர் செல்லவில்லை. மாலையில் யெஹான் இரும்புப் பின்னல் கதவு வழியாக நோக்கினான். நேர்த்தியான, வெளிறிய தோல் உடைய விலங்கு போல் பியாடிஸ் தரையில் படுத்திருந் தாள். சிறிது நேரம் கழித்து, ஊருக்குப் புதிதான, பிரிட்டன் பாடகர் குழு ஒன்று நகரைக் கடந்து சென்றது. அவர்கள் வயலின் களும் குழல்களும் ஊருக்குள் எதிரொலித்தன.

நடு இரவுக்குப் பின், வீரூர்ந்த குரல் ஒன்று, இருளைக் கிழித்துக் கொண்டு, யெஹான் சாளரத்தின் கீழ் எதிரொலித்தது. ஆமிஸ், கதையை அப்பாட்டு கூறியது. அவர்கள் இருவரும் உடன் பிறப்பு சோதரர்கள்; அழகானவர்கள்; ஒத்த தோற்றம் உடைய வர்கள்; ஒருவர் மீது ஒருவர் ஆழ்ந்த அன்பு கொண்டவர்கள். ஆமிஸ், மாமன்னரின் மகனைக் கடத்திச் சென்றான். சண்டையில் தோற்றால் அவன் உயிரிழக்க வேண்டும் என்று சோதனை

வைக்கப்பட்டது. ஆமிஸுக்குப் பதிலாக ஆமில் சண்டை இட்டான். எவரும் அவனை இனம் கண்டு கொள்ளவில்லை. ஆமில் சண்டையில் வெற்றி அடைந்தான். அரசகுமாரி அவனுக்குத் திருமணப் பெண்ணாய் பரிசளிக்கப் பட்டாள். ஆனால் அப்பெண் மீது ஆமிஸ் அளவற்ற காதல் கொண்டிருந்தால், ஆமிஸை மணப் படுக்கைக்கு அனுப்பினான், ஆமில். அதற்குத் தண்டனையாக அவன் தொழுநோயால் பீடிக்கப்பட்டான். ஆமிஸ் தன்னிரு மகன்களையும் கொன்றான். அவர்கள் இரத்தத்தில் முழுகிய ஆமில், தொழுநோய் தீர்ந்து குணமடைந்தான்.

பாடல் முடிந்ததும், அக்குரல் இரவினில் கலந்து மறைந்தது. காலையில் ஒரு துறவி வந்து, இரண்டு பையன்களை விற்க முன் வந்தான்.

யெஹான் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

அன்று காலை பியாடீஸ் ஒரு கத்தியை எடுத்துக் கதவைச் சிறிது சிறிதாகச் செலுக்கித் தள்ளினாள். ஆனால் மையத்தில் இரும்பு இருந்ததால் கத்தி தான் முறிந்தது.

செயல்வகை அறியாமல் அவள் முற்றத்தில் விழுந்து கிடந்தாள். காலையில் தன் கை முட்டிகளால் கதவைத் தட்டினாள், தட்டினாள்,—கை முட்டிகள் மரத்துப் போகும் வரை. பின்னலழிப் புழைக்கதவு வழியாக அவள், யெஹான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். அவன் தன் கைகளை உற்று நோக்கிக் கொண்டிருந்ததுபோல், அவளுக்குத் தோன்றியது. தாழ்ப்பாளின் இரும்பை அவள் கடித்து விட்டதால், இரத்தம் சிந்த, அவள் தரையில் வீழ்ந்தாள்.

மூன்றாம் நாள் இரவு வந்தது. யெஹானின் வீட்டு வாயிற் கதவு விரிந்து, வாயைப் பிளந்து நின்றதுபோல் இருந்தது, ஆனால் ஒருவரும் வரவில்லை. கழுமரத்தில் ஏற்றும் கொலைகாரனும் வரவில்லை. இரவில் கொண்டிருந்த நிசப்தமே, இரைச்சல் போடுவதுபோல் கனத்தது.

நிசப்தம்; தெருவில் ஓசை ஒன்றும் ஒலிக்கவில்லை.

ஒருமுறை அவன் எழுந்தான். கதவுக்கு வெளியே, பியாடீஸ் படுத்திருந்தாள். அவள் முகவாய்க் கட்டையின் மீது இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதை அவன் பார்த்தான். அன்றிரவுப் பொழுதையும், இரு தூண்களுக்கிடையே இருந்த சோபாவில் உட்கார்ந்து அவன் கழித்தான், தனிமையில்.

பொழுது புலரும் வேளையில் அவன் எழுந்தான். நேராகக் கதவுக்குச் சென்று திறந்தான். பியாடீஸ் அங்கில்லை. முதல் மாஸ் ஆராதனை நடக்கும் வேளை. தொற்றுநோய் பரவுவதைத் தொடக்

கத்தில் தடுக்கவல்ல அஸ்கலானிய வெங்காயங்களை முகத்திலும் கைகளிலும் தேய்த்துக் கொண்டான், யெஹான், அதற்குப் பின்பு அவன் மெதுவாக பியாடீஸ் அறைக்கு நடந்து சென்றான். பாடத்தில் வெள்ளை மலர்களை முகர்ந்தான். டீஜான் நகரத்திலிருந்து பெரிய கப்பலின் பொம்மையை அவன் கொண்டு வந்து அறையின் மாடத்தில் வைத்திருந்தான். கிளி ஆடும் சத்தம் அவன் காதில் விழுந்தது. திரும்பிப் பார்க்கையில், சாமான்கள் வைக்கும் சிறிய அலமாரி செதுக்கு மரவேலைப்பாட்டையும், அறைச் சுவர்களில் அழகிய மரவேலைப்பாட்டையும், அதன் மேல் தொங்கிய பாலஸ்தீனத்துத் திரைகளையும் கண்டான். சுவரில் இருந்த தீவட்டிகளை ஏற்றினான். அவை கொளுந்து விட்டெரிந்தன. அவற்றின் நிழல், அங்கிருந்த அலங்கார உலோகச் சித்திரங்கள் மீது விழுந்து ஆடியது. அந்தத் தீவட்டிகளின் வெளிச்சம், அறையில் மங்கலான ஒளி பரவச் செய்தது. அறையை இறுதி முறையாக அவன் பார்த்தான்.

துறவில் ஊறிவிட்ட அவன் உள்ளத்தின் புதிய உணர்வு நிலைகளை ஊடுருவும் அளவுக்கு அந்த வேதனை கூர்மையாயில்லை. மேல் வாரியாக எழுந்த ஒரு வலி போலவேதான் அவனுக்குத் தோன்றியது. சற்று வருத்தத்துடன் செல்வதுபோல் அங்கிருந்து வெளியேறினான். பிறகு, மூன்று மாதங்களாகப் பியாடீஸ் ஒளிமயமான உடலுடன் உறவாடிப் படுத்திருந்த அறையைக் காண. அவன் இன்னொரு கதவைச் சற்றே திறந்தான். அந்த அறையில் இருந்த படுக்கையில் யாரும் அன்றிரவு படுத்திருக்கவில்லை என்று கண்டான். வேதனை தோய்ந்த விடியற்காலை சன்னலைப் பிராண்டிக் கொண்டிருந்தது. காலைப் பொழுதின் வாசனையை உள்ளே இழுத்தான். 'வெள்ளிக் குயிலே' என்று தனக்குள்ளாகக் கொஞ்சிக் கொண்டான்.... அந்த வேளையில், பக்கத்து வீட்டிலிருந்து இரண்டு பெண்கள் பகற்கனவுப் பாடல் ஒன்றை இசைத்தனர்.

காலைப் பொழுதின் வெளிச்சம் பெருகியது. வெள்ளி குயில்....

அவன் தன் லாயத்துக்குச் சென்று, தன் பெண் குதிரையின் கழுத்தைத் தடவிக் கொடுத்தான். அது அவனை உற்று நோக்கியது. அந்த நேரத்தில் தான், தான் இழக்கப்போகும் அனைத்தையும் பற்றிய உணர்வு இலேசாக அவன் மூளையில் ஒரு சிறு பகுதியில் உறுத்தியது. அவன் பின்னால் ஒரு அடி எடுத்து வைத்தான். அவன் அகத்தே அழுகை குமுறியது. தன் கையைக் குதிரையின் வாயில் வைத்தான். அவன் பரந்த தோள்கள் நடுங்கின. சிரிப்பு அவனிடமிருந்து நிரந்தரமாய் விடை பெற்றுக் கொண்டது. அதன் பிறகு அவன் திரும்பினான்.

கதவுகே வந்ததும் மீண்டும் திரும்பித் தன் தோள்களைப் பின்னால் உதறினான். தன்னால் அச்சுமையைத் தாங்க முடியாதென்று எண்ணி அதையும் துடைக்க விரும்பியது போல், அவன் அக்குதிரையிடம் மீண்டும் சென்று அதைக் கொன்றான்.

காலைப் பொழுதின் பழுப்பு வெளிச்சத்தில் அவன் தெருக்கள் வழியாக நடந்து சென்றான். கழுமரத்தை அவன் துச்சமாகத் தாண்டிச் சென்றான். புண்ணால் கரைபட்டிருந்த அவன் மார்பு திறந்திருந்தது. அந்நேரத்தில் எல்லா மணிகளும் ஒருங்கே ஒலித்தன. காலை ஆராதனை வேளை. அங்காடிச் சதுக்கத்தை அவன் கடந்தபோது, நல்ல வெளிச்சம் வந்து விட்டது. பெண் குதிரை மேல் சவாரி செய்த ஒரு பாதிரி, உரக்கப் பாடி, வழிபாடு செய்து வந்தார். தேவாலயத்திற்கு மக்கள் வந்து கொண்டிருந்தனர். யெஹான் அவர்களிடையே நடந்து சென்றான். அவர்கள் பணிவுடன் ஒதுங்கி, வணக்கம் செலுத்தினர். அன்றும், அவனுக்கிருந்த அதிகாரமும் செல்வாக்கும் குறையவில்லை.

நகர வாயிலுக்கு வந்து, பாலத்தைக் கடந்தான். அவன் மேலே நடந்து சென்றான். ஒரே ஒரு முறை தான் திரும்பிப் பார்த்தான். நகர வாயிற்கதவுகள் மூடியிருந்தன. அவனுக்கு வலதுபக்கத்தில் ஏரி இருந்தது. வாயிலைச் சுற்றியிருந்த அரணில் எட்டு கோபுரத் தூபிகளும் கனமாக அமைந்திருந்தன. அவன் வயல்களை நோக்கி நடந்தான். தொழுநோய்க்காரர்கள் காடு அவன் முன்னால் இருந்தது கண்ணின். புருவம் போல் வளைந்திருந்ததாக அவனுக்குத் தோன்றியது.

திடீரென அழுகைக்குரல் கேட்டது. ஒரு கை அவன் கண்ணில் பட்டது. புதர்களிலிருந்து வெள்ளை உருவம் ஒன்று வெளிப்பட்டது. பியாடீஸ் அவன் காலடியில் விழுந்தாள்.

"எங்கே செல்கிறீர்கள்?"

"காட்டுக்கு"

"என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்."

அவன் தன் மார்பைத் திறந்து காட்டினான். அவள் காலை ஒங்கித் தரையில் மிதித்து, "எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை." என்று கூறினாள்.

"முடியாது" என்று யெஹான் அமைதியாகக் கூறினான். அவன் கையைப் பிடித்து அவள் நிறுத்தினாள். "எனக்கும் தொழுநோய் வரவேண்டும் என்பது என் ஆசை. அதைப்பற்றி உங்களுக்கென்ன?

யெஹான் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆத்திரத்தில் வாயில் நுரை வழிய, அவள் அவன் முன்வந்து நின்றாள்.

"என்னை முதன் முதலில் அங்கு முத்தமிட்டீர்களே, எத்தனையே இரவுகள் தொடர்ந்து என்னுடன் இன்பமாய்க் கழித்தீர்களே. வல்லூறுப் பறவை என்று என்னை வாயாராக் கொஞ்சினீர்களே".

அவையெல்லாம் அவனுக்கும் நினைவிருந்தன. "ஆம்", என்று கூறி அவன் தலையசைத்தான். "வெள்ளிக் குயிலே" என்று அவன் வாய் உச்சரித்தது.

அவனில் அனைத்தும் செத்துவிட்டது என்பதை அவளால் அறிய முடியவில்லை. பெண்மையின் அந்தரங்கத்தை அவன் இனி எட்ட முடியாது—அவன் அடிவானத்தின் மூலையில் ஓர் ஓரத்தில் கூட இனி அதற்கு இடமில்லை, — அவளிடமிருந்து விலகி, வேறு அன்னிய ஈர்ப்பு மையத்தைச் சுற்றி எழுந்த அவன் வாழ்வின் புதிய உட்பொருளில் ஊன்றியிருந்தது அவன் உள்ளம் என்பதை அவளால் உணர இயலவில்லை. அவள் அவன் காலடியில் விழுந்து, தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று மன்றாடினாள். திரும்பிச் செல்லுமாறு அவளுக்கு அவன் உத்தரவிட்டான். அவள் தரையில் புரண்டு துடித்தாள்; திரும்பிச் செல்ல மறுத்தாள். "அடிமைப் பெண்ணே" என்று அவனை அதட்டினான். அவள் எழுந்து உட்கார்ந்து, நிகைத்து அவனை நோக்கியபோது, "இரண்டாயிரம் வெள்ளிக் காசுகளுக்கு வாங்கிய அடிமைப் பெண்ணே", என்று அவனை மீண்டும் இடித்துரைத்தான்.

அவள் அவனை இறுகப் பற்றிக் கொண்டாள்.

அவனை அவன் உதறித் தள்ளி, அடித்தான்.

அடித்துவிட்டு, அவன் மேலே நடந்தான். அவனுக்குப் பின்னால், வெளிறிய சதைப் பிண்டமாய், சொல்லொணா வேதனையால் வீங்கி வாடி, துரசி படர்ந்து, வெய்யில் வீசும் அச்சாலையில் அலங்கோலமாய்க் கிடந்தாள் பியாடஸ். பசும்புல் வெளியில் வண்ணமிகு மலர்கள் ஒளிவீசித் திகழ்ந்தன. ஒளிமயமான காலை வேளை உலகையே தழுவி நின்றது.

பரந்த சமவெளிப் பரப்பைத் தாண்டி, யெஹான் கம்பீரமாய் நடந்து சென்றான். ஜெரிக்கோவில் கொடிகளைக் கொய்திருந்த யாத்ரீகர்களை அவன் வழியில் சந்தித்தான். 'ஆல்ட்ரீ தெயூஸ் ஐயி' என்று பனங் குருத்தைத் தாங்கிய யாத்ரீகர்கள் பாடினர்கள். அவன் ஒதுங்கி, தலை தாழ்த்தி, வணக்கம் செலுத்தினான்.

மீண்டும் ஒருமுறை திரும்ப வேண்டியதாயிற்று. வெள்ளை வழி காட்டி வேட்டை நாய் அவனைத் தொடர்ந்து ஓடிவந்தது. கால்வாய் அருகே அதைத் தூக்கிச் சென்று அவன் அதைக் கொன்று போட்டான்.

அவன் மேலே நடக்கலானான். டி அர்ராஸ் மகனை யெஹான் போதேல், மென்மயிர்க்கரை வைத்த கருஞ்சிவப்பு அங்கியுடனும், மென்மயிர்த் தலைப்பாகையுடனும் நடந்து சென்றான். அவன் காலில், பச்சை நிறக் காலணிகள் அணிந்திருந்தான்.

சரிவுப் பாதையில் அவன் கம்பீரமாக நடந்து சென்றான். அவனை அறியாமல் அவன் உதடுகள் அசைந்தன. அவன் சிந்தித்துப் பார்த்தான். எங்கோ, எப்பொழுதோ, கேட்டிருந்த பாடலை அவன் பாடினான். உள்ளத்தின் சிறிய இடை வெளி வழியாக அப்பாடல் புகுந்தது. அதை அவன் கேட்டது, ஒரு நண்பனிடமிருந்தா, பிரிட்டானியில் ஒரு வீட்டில் நெருப்பைச் சுற்றிக் குளிர் காய்ந்த போதா, கேலே ப்ருல்லேயிடமிருந்தா?

அவனுக்கு நினைவில்லை. அவன் சிந்தனைகள் எங்கோ சிதறி விட்டன. தன் வாய் உரக்கக் கூவிக் கொண்டிருந்த சொற்களின் பொருள் அவனுக்கு விளங்கவில்லை. அது ஒரு காதல் பாட்டு. இரத்தம் சொட்டிக் கொண்டிருந்த தன் கைகளை அவன் உற்று நோக்கினான்.

ஹே பிளாஞ்சே, க்ளேர் எட் வெர்வெய்ல்லி,
டி வாஸ் சான்ட் ட்டூய்ட் மி டெசிர்;
க்கார் .:பெய்ட்டஸ் என்ட்டெல் மெர்வெய்ல்லி
டிராய்ட்சர் எட் ரெய்சன் .:பெய்ல்லிர்.
க்வான்ட் ஜே வாஸ் வ்யூவில் அ ஆ மீ,
டிராய்ஸ் நெல் ப்ராய் ஆட்ரீயர்:
சே வாஸ்ட்டர் இரான்ட் க்கார்ட்டாசி,
டி ஜென்ட்டில் பெளசார் கார்னீ,
நெ மெ டெய்னி க்கான் செய்ல்லியர்;
மார் வாஸ் ஆய் ட்டாஅட் ப்ரிசீயர்.

அவன் நின்றிருந்த முறை இராஜ கம்பீரமானதாக—வலிவான தாக இருந்தது.

அளவிற்கு விஞ்சிய எளிய சமிக்ஞையுடன், காட்டை நோக்கி அவன் சென்றான்; காடோ அவனை நோக்கி நெருங்கிற்று.

அவன் தோற்றத்தில் வலிமையும் உறுதியும், அரச கலையும் கம்பீரமும் காணப்பட்டன.

உள்ளத்தின் உறுதியில் ஊற்றெடுத்த எளிமையுடன், அவன் காட்டை நோக்கிச் சென்றான். காடும் அவனை எதிர்கொண்டு அழைத்தது.

க்யோர்க் கைஸர்

போரில் தோல்விக்குப் பின்

(1878—1945) பல நாடகப் படைப்புகளை ஆக்கியவர். ஜெர்மன் அகத்திறப் பாங்கு இயக்கத்தின் மிக முக்கிய நாடகாசிரியராக அவர் மதிக்கப்படுகிறார். 1933இல் அவர் நாடகங்களை நடிக்கக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டது. 1938இல் அவர் சுவிட்சர்லாந்து நாட்டுக்குக் குடியேறினார். இயந்திரமயமாயுள்ள, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு கொண்ட உலகில், தனி மனிதனின் சுதந்திரமும் ஆளுமையும் அழிக்கப்படுகின்றன என்பது அவர் நாடகங்கள் சுட்டிக் காட்டும் செய்தி. உலகப் போருக்குப் பின் எழுந்த அரசியல், சமுதாயக் கொந்தளிப்புகளையும் அவர் நாடகங்கள் சித்திரிக்கின்றன. இயற்கையான, சுதந்திரமான, அமைதியான, வாழ்வை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதில்தான் மனிதாபிமான உணர்வு மிக்க அவருக்கு முக்கியக் கவலை. 'போரில் தோல்விக்குப் பின்', என்ற கட்டுரை, பொதுவாக உலகுக்குப் பொருந்தும் ஓர் அரசியல் உண்மையைச் சுருக்கமாகக் கூறுவதுடன், அடால்ஃப் ஹிட்லரின் வேகமான வளர்ச்சி பற்றியும், குறிப்பாக தேசிய சோஷலிச இயக்கம் பற்றியும் பல உண்மைகளைப் புலப்படுத்துகிறது.

தோல்வி கண்ட ஒரு போருக்குப் பின், பட்டினியும் ஒழுக்கக் கேடும், மக்களை வாட்டி, நியதி நெறிகள் சீர்கெட்டு நிற்கும் நிலையில், போலி அறிஞன் கொட்டமடிக்க அரிய வாய்ப்பு கிட்டுகிறது. கீழ்த்தரமான ஆசைகளும் அகத் தூண்டுதல்களும் உடைய அவன், கதியற்ற நிலையிலிருந்து மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாக வாக்களித்தால், அவரை மீதும் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை ஊகித்தறிகின்றான். ஆகவேதான், மக்கள் தன் தலைமையைப் பின்பற்றுவார்களானால், எதையும் தருவதாக அவன் துணிந்து வாக்களிக்கின்றான்.

அந்தத்தையும் இழந்து, மீள வழியறியாமல் விழிக்கும் நாடு, தன் மடமையில், இந்த வெற்று வீம்புப் பேச்சுக்களை—பொது நலனுக்குப் பயன்படாமல், தனி மனிதரின் வரட்டுப் பெருமையையும் அதிகார மோகத்தையும் நிறைவு செய்யவே பயன்படும் பேச்சுக்களை—நம்பும் அளவுக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறது. அதில் நம்புபவர் எண்ணிக்கை முதலில் குறைவாகவே இருக்கும், ஆனால் தருக்குரைகள் மேலும் மேலும் உரக்க ஒலித்து, வாக்குறுதிகள் மேலும் மேலும் தாராளமாகின்றன. அவற்றைத் தடை செய்ய முடியாது; யாரும் தடை செய்வதுமில்லை. தங்களிடம் இழப்பதற்கு எதுவும் இல்லாதவர்கள், சிந்திக்கவோ

துருவி ஆராயவோ விரும்பாதவர்கள், அழிவுப் பாதையில் தங்களை மயக்கி அழைத்துச் செல்லும் போலித் தலைவனைப் பின் பற்றுகின்றனர். பட்டினியால் வாடி, ஆர்ப்பாட்டத்தால் திகைப் படைந்து, சுதந்திரம், அமைதி காணும் வேட்கையால் உந்தப் பெற்று, அவர்கள், தங்கள் ஆழ்ந்த ஆசைகளையும் அபிலாஷை களையும் கோரிக்கைகளாகவும் கோஷங்களாகவும் கூக்குரல் இடுகின்றனர்.

கயவர்களில் தலையாயவன் தன் குறிக்கோளை எய்திவிட்டான். தன் அபாண்டமான பொய்களால் ஏய்த்து மோசடி செய்து மக்களை இன்று அடக்கி நசுக்கிப் பரிதாபக் கூட்டமாக்கி, அதை ஆதிக்கச் சுரண்டலுக்கு ஆளாக்குகிறான். தன் அரண்மனையை அடுத்தே சிறைச்சாலையைக் கட்டும் அளவுக்குக் கொடுமை வெறியில் அவனுக்கு ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. கைதிகளின் சங்கிலிகள் உராய்ந்து ஒலிப்பதையும், சித்திரவதைக்கு உள்ளாக் கப்படுபவர் வேதனையில் கதறுவதையும் அவன் கேட்டு, மனிதப் பிறவிகள் மேலும், வாழ்க்கை மேலும், தான் வரையற்ற ஆதிக்கம் செலுத்த முடிகிறதே என்றெண்ணி மேலும் ஆணவச் செருக்கு எய்துகிறான். சுற்றிலும் அவனரும் பசியால் வாடிப் பதறித் துடிக் கும் நேரத்தில், சுவைக்க உணவும் பானங்களும் தாங்கிச் செல்லும் லாரி ஒவ்வொரு நாளும் சிறை முற்றத்தைத் தாண்டி அரண்மனைக்குச் செல்கிறது. பிறர் கண்டுபிடிக்காமலிருக்க, லாரி பொய்ப் பெயரைத் தாங்கிச் செல்கிறது. மாளிகையில் உல்லாச வாசம் செய்பவன் இந்த நேர்த்தியான தின்பண்டங் களை விழுங்கினால்தானே, என்றுமே மெய்யாக முடியாத அபாண்டக் கற்பனைகளையும் புதுப் புதுப் பொய்களையும் சொல் வதற்கு, அவனுக்கு உடலில் தெம்பு ஏறும்.

ஆனால் அவனுடைய வாக்குறுதிகளில் எதுவுமே நிறைவேற்றப் படவில்லை என்பதை மக்கள் மெதுவாக உணரத் தொடங்கு கிறார்கள். தங்கள் ஆத்திரம் கொள்பவர் எண்ணிக்கை வேகமாக வளர்கிறது. இன்னமும் இரகசியமாகவே, ஒளித்து மறைத்தே பேச்சு நடத்த வேண்டியிருக்கிறது. ஆயினும் அகம்பாவம் மிக்க அந்தப் பொய்யனைக் கவிழ்க்கத் திட்டம் கனிந்துவிட்டது. ஒரு நாள், லாரியின் இயக்காழி சிக்கி, லாரி சுவரில் மோதி, நேர்த்தி யான அருசுவை உணவு பட்டினியால் வாடுவோர் முன்பு சிந்திச் சிதறும்போது, புரட்சிக்கு அறிகுறியாக அது எடுத்துக் கொள்ளப் படுகிறது. சிலர் விலங்குச் சங்கிலிகளை முறித்துக் கொண்டு தப்புகின்றனர். வாயிலில் காவலர் எளிதில் கைப்பற்றப்படு கின்றனர். கொலை செய்யவும் துணிந்து, மக்கள் கூட்டம் மாளிகை யைத் தாக்குகிறது.

ஆபத்து எதிர்நோக்கி நிற்கும் நிலையில், கயவன் வேகமாகச்

சிந்தனை செய்கிறான். தான் செய்தது நியாயம் என்று உறுதியாய் நிற்கும் துணிவில்லாத அக்கோழை, தன் தாடியையும் முடியலங்காரத்தையும் சிறிதே மாற்றி, மாறுவேடம் பூண்டு, சுரங்கப் பாதை வழியாகச் சிறைக்குப் தப்பி ஓடுகிறான். மேல் பார்வையாகப் பார்த்தால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி இருக்கும் அவன், தனக்குத் தானே விலங்குகள் பூட்டிக் கொண்டு, விடுதலை வேண்டி மன்றாடுகின்றான். புரட்சிக்காரர்கள் அவன் வேண்டுகோளை ஏற்று அவனை விடுதலை செய்கின்றனர். அவனும் சேர்ந்து ஓடுகிறான், அவனையே தேடிப்பிடிக்க. கொடுங்கோலனிடமிருந்து மக்களை விடுவிப்பதாக நம்பிக்கை ஊட்டும் நயவஞ்சக உரைகளையும் ஆவேசப் பேச்சுக்களையும் மீண்டும் பேசுகின்றான். தாங்கள் மீண்டும் ஏய்க்கப்படுவதை மக்களில் எவரும் உணரவில்லை, தன்னையே தேடிக் கண்டுபிடித்து ஒழிக்கத் தானே மக்களுக்குத் தலைமை தாங்குகிறான். ஆவேசம் கொண்ட மக்கள், அழிக்க விரும்பும் மனிதனையே, ஆதரித்துப் பின்பற்றுகின்றனர்.

ஓடிப்போய் விட்ட கோழையை இழித்துப் பழித்து, அவனைக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பெரிய பரிசுத் தொகை அளிக்கப்படும் என்று, அவன் தன் தலைக்கே விலை நிர்ணயிக்கின்றான். இரண்டாம் முறையாக அவனே வீரத் தலைவனைத் தேர்ந்தெடுக்கப்படுகிறான். மக்கள் அனைவரும் அவன் சொல்லுக்குப் பணிந்து, அவனைப் பின்பற்றுகிறார்கள். யாரும் அவனை இனம் கண்டு கொள்ளவில்லை. தனக்குச் சொந்தமான உயரமான கண்ணாடிகள் முன் இரகசியமாக நின்றுகொண்டு, தன் உண்மைத் தோற்றத்தைக் கண்டு அவனே ரசித்துக் கொள்கிறான். அடுத்த மாறுவேடம் என்னவென்று எப்பொழுதோ ஒத்திகை பார்த்துக் கொள்கிறான். சினிமா நட்சத்திர வேடம் தாங்கலாமா? அல்லது தன்னையே கண்டனம் செய்து, ஆவேசக் கட்டுரைகள் பிரசுரித்துக் கொள்ளலாபம் சுருட்டும் பத்திரிகை நிருபர் வேடம் தாங்கலாமா?

இரண்டாம் முறையாக ஆர்ப்பாட்டமும் வேட்டையும் தொடங்குவதற்குச் சற்று முன்பு, அவன் தன் திட்டத்தை வகுத்து விடுகிறான். அவன் தன்னைத் துறவியாக மாற்றிக் கொள்கிறான். உபவாசம் மேற்கொண்டு, வழிபாட்டில் ஈடுபட்டு, அவன் காட்டிலே ஒரு குடிசையில் வசிக்கின்றான். மனிதன் எவனிடமும் நிவாரணமும் பெறுத அந்தக் கண்மூடிக் கும்பல் அவனை தெய்வ அவதாரம் போற்றி வணங்க, அவன் சன்னிதானத்துக்கு யாத்திரை செய்கிறது. இப்பொழுது அவன் இறுதி வெற்றி எய்தி விட்டான். இனி அவன் எந்த வாக்குறுதியும் அளிக்கலாம். அதை நிறைவேற்ற வேண்டுமென்ற அவசியம் அவனுக்கு இனி கிடையாது.

தாமஸ் மன்

தாமஸ் மன் (1875—1955), லூபெக்கில், வசதியான உயர் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். 1900ஆம் ஆண்டு வரை எந்த நிறுவனத்திலும் பணிபுரியாமல் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்த அவர், 1933இல் செக்கோஸ்லேவேகியாவுக்குக் குடியேறி, அங்கிருந்து சுவிட்சர்லாந்து சென்று, இறுதியில் அமெரிக்காவுக்குச் சென்றார். போருக்குப்பின் பலமுறை ஜெர்மனிக்கு வந்து, மீண்டும் 1952இல் சுவிட்சர்லாந்தில் குடியேறினார். இந்த நூற்றாண்டில் ஜெர்மனியின் தலைசிறந்த கதையாசிரியரான தாமஸ் மன், உளப் பாங்கு மெய்ம்மை அடிப்படையில் எழுதப்பட்ட புதின மரபை வளர்த்ததுடன், முரண் நகைச்சுவை, நையாண்டிப் போலி ஆகிய அம்சங்களால், அம்மரபை வலுப்படுத்தினார். குறிப்பாகக் கலைஞனுக்கும் நடுத்தர வர்க்கத்துக்கும் இடையே இருந்த வேற்றுமை குறித்தும், பொதுவாகக் கலை, ஆன்மீக மேம்பாடு ஆகியவற்றை நோய், சீரழிவு ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக விளக்குவது குறித்தும், தாமஸ் மன்னின் படைப்புகள், அதிலும் அவருடைய தொடக்க காலப் படைப்புகள், பெரிதும் கவனம் செலுத்தின. ஐரோப்பாவின் கலாச்சாரப் பாரம்பரியத்தை நுட்பமாக மதிப்பிட்டுத் தம் காலத்துப் போக்குகளை அறிவார்ந்த முறையில் ஆய்ந்த அவர், சீரழிவைக் கண்டதிலிருந்து, ஆக்கபூர்வமான, உறுதியான, மனிதாபிமான உணர்வுக்கு முன்னேறினார். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்த அவர், பின்னர் தேசிய சோஷலிசத்தை வன்மையாகவும் வீரார்ந்த உறுதியுடனும் எதிர்த்துப் போராடி, ஜனநாயக நெறிக்குத் தம் விசுவாசத்தை வலியுறுத்தினார். 'புட்டன் ப்ரூக்ஸ்' தவிர அவருடைய இலக்கியப் படைப்புகளில் முக்கியமான புதினங்கள், 'மந்திர மலை' (1924), 'ஜோசப், அவர் சகோதரர்கள்' (1933—43), டாக்டர் பாஸ்டஸ் (1947) ஆகியவை.

புட்டன் ப்ரூக்ஸ்

தாமஸ் மன்னின் புதினமான புட்டன் ப்ரூக்ஸ் (1901), 'ஒரு குடும்பத்தின் சீரழிவு' என்ற துணைத் தலைப்பைத் தாங்கியுள்ளது. லுப்ஸெக் வர்த்தகக் குடும்பம் ஒன்றின் நான்கு தலைமுறை வாழ்வை எடுத்துக் கொண்டு, தன்னம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் நடத்தும் வாழ்க்கை முறை முதல், வாழ்க்கைக்குச் சிறிதும் தகுதியில்லாத நிலைவரை, அது சித்திரிக்கின்றது. பிந்திய கட்டத்தில், சில்லரை முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து பிரிந்து நிற்கும் நிலைக்கு எடுத்துக்காட்டாக, இளம் ஹான்னே புட்டன் ப்ரூக்ஸ்

அமைகிறான். அவன் வளமான கலையாற்றல் வாய்ந்தவன்; மென்மையான தன்மையும் துல்லியமான இயல்பும் உடையவன். அறிவுப் பண்புகளும் கலையார்வமும் ஓங்கி வேறுபட்டு நிற்கும் நிலை, வசதியான நடுத்தர வர்க்கத்தின் சீரழிவின் அறிகுறியாகத் தோன்றுகிறது. ஒரு குடும்பத்தின் வரலாற்றைத் தாமஸ் மன் சித்திரிப்பதிலிருந்து, பொதுவான வரலாற்று, சமுதாயச் சித்திரமே புலனாகி, நாட்டானிலிருந்து சில்லரை முதலாளியாகும் சமுதாய மாறுதலும் சுட்டிக் காட்டப்படுகிறது.' புட்டன் ப்ரூக்ஸ்' புதினம் பற்றி, அதை எழுதிப் பல ஆண்டுகளுக்குப்பின், 1950இல், ஆசிரியரே பின்வருமாறு திறனாய்வு செய்தார்:'' என் சொந்த வாழ்வில் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஏற்பட்ட பல அனுபவங்களை ஒரு புதின வடிவில் வார்த்தேன். ஒரு நடுத்தரக் குடும்பத்தின் சீர்குலைவைச் சித்திரிக்கையில், மேலும் சீர்குலைவு ஏற்பட்டு, இறுதிக் கட்டம் உருவாகி, நம் கலாச்சார, சமூக வரலாற்றிலே மிகத் தீவிர முறிவு உண்டாகும் என்பதை முன்னதாகவே கணித்துக் கூறினேன் என்பதை நான் அப்போது உணரவில்லை.'' இங்கு தரப்பட்டுள்ள பகுதியில் வரும் கான்ஸல் ஜீன் புட்டன் ப்ரூக், குடும்பத்தின் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர். டோனியின் பெற்றோர்கள், சம்பிரதாய முறைப்படித் தங்கள் மகளுக்குத் திருமணம் நிச்சயம் செய்கின்றனர். அம்முடிவில் மற்ற காரணங்களும் கணிப்புகளுமே தலையாய இடம் பெறுகின்றனவே ஒழிய, மக்களின் விருப்பம் ஒரு பொருட்டாக மதிக்கப்படுவதில்லை.

சில நாட்கள் கழித்து, உலாவச் சென்று திரும்பிய டோனி, ஹெர் க்ரூன்லிஷை, மெங் தெரு மூலையில் சந்தித்தாள். "அன்று உங்களைச் சந்திக்க இயலாது போனது குறித்து நான் பெரிதும் வருந்துகிறேன். உங்கள் அன்னையைக் கண்டு மரியாதை செலுத்தச் சென்றிருந்தேன். நீங்கள் அப்போது அங்கில்லாதது, எனக்குச் சொல்லொணா வருத்தம் தந்தது. இப்பொழுது எதிர்பாரா விதமாய், உங்களைச் சந்திப்பது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது," என்றாள்.

அவர் பேசத் தொடங்கியதும், அப்போலன் பூடன் ப்ரூக் அரை மனதாய் நின்றாள். ஆனால் பாதிமூடியிருந்த அவள் கண்கள், க்ரூன்லிஷின் நெஞ்சுக்கு மேல் எட்டவில்லை. இளம் நங்கை ஒருத்தி ஓர் ஆண்மகனை எடைபோட்டு நிராகரிக்கும் போது, கொள்ளும் ஏளன, இரக்கமற்ற சிரிப்பு, அவளுடைய உதடுகளில் விகாரமாடியது. அவள் உதடுகள் அசைந்தன. அவள் என்ன சொல்வது? ஒரேயடியில், இந்த பென்திஷ் க்ரூன்லிஷை மட்டம் தட்டி, ஒழித்துக் கட்டும் சொல்லாகச் சொல்ல வேண்டும். அச் சொல் அவனை நிர்மூலமாக்க வேண்டும். திறமையாகவும், சொல்

நயத்துடனும், அதே சயமத்தில் பலன் தரு முறையிலும். அச் சொல் அமைய வேண்டும். அவன் உள்ளத்தைத் தைத்துப் புண் படுத்தும் அதே நேரத்தில், பேச்சு நயத்திற்காக அவன் பாராட்டு தலை சுர்க்கும் வண்ணமும் அமைய வேண்டும்.

'நீங்கள் காணும் மகிழ்ச்சி, ஒரு தலையானதுதான்,' என்று அவன் நெஞ்சு மட்டத்திலே தன் பார்வையைச் செலுத்திக் கொண்டே, அவள் கூறினாள். இந்த நச்சுக்கணையை எய்துவிட்டு, தன் பதிலின் சாதுரியத்தில் பெருமிதம் கொண்டதனால் முகம் சிவக்க ஒய்யாரப் பார்வையுடன் அவள் வீடு நோக்கிச் சென்றாள். அவனை அங்கேயே நிற்கவிட்டு, வீட்டை அடைந்த பின் தான், அடுத்த ஞாயிறு, விருந்துண்ண அவன் அழைக்கப்படிருந்தான் என்பதை அவள் அறிந்தாள்.

அழைப்பை ஏற்று அவனும் வந்தான். அவன் அணிந்திருந்த அங்கி புதுப் பாணியைச் சேர்ந்ததென்று சொல்ல முடியாது. சிறிது சுருக்கம் கூட விழுந்திருந்தது. ஆயினும் கண்டா மணி போல கட்டுக்கோப்பாக அமைந்திருந்த அந்தக் கோட்டு அழகாகத்தான் இருந்தது. கண்ணியமிக்க, நம்பிக்கையான தோற்றத்தை அந்த ஆடை அவனுக்கு அளித்தது. அவன் நல்ல மலர்ச்சியாகவும் புன்சிரிப்புடனும் தோற்றமளித்தான். தலைமுடி குறைவுதான்; ஆனால் ஒழுங்காக வகிடு எடுக்கப்பட்டிருந்தது. அவன் மீசை இருபக்கமும் நன்ருக முறுக்கி, வாசனை பூசப்பட்டு இருந்தது. புதிய உணவு பரிமாறப்பட்ட ஒவ்வொரு முறையும், அவன் வெகுவாகப் பாராட்டினான். இறுதியில் இனிப்பு பரிமாறப் பட்டபோது, கரண்டியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, துணி யிலே நெய்திருந்த சிலை ஒன்றைப் பார்த்துக் கொண்டே, அவன் கூறினான். "நான் ஏற்கெனவே வயிறு புடைக்க உண்டு விட்டேன். கடவுள் தான் என்னை மன்னிக்க வேண்டும். ஆயினும் இந்தக் களி! அற்புதத்திலும் அற்புதம். இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று அம்மையாரைக் கேட்டு வாங்கி உண்ணப் போகிறேன்." இவ்வாறு பேசிக் கொண்டே கான்ஸலின் மனைவியை, அவன் குறும்புடன் நோக்கினான். கான்ஸலுடன் அவன் அரசியல் பற்றி யும் வர்த்தகம் பற்றியும், திறமையாகவும், பாராட்டுக்குரிய வகையிலும், பேசினான். கான்ஸல் மனைவியுடன் நாடகம் பற்றி யும் ஆடையணியில் புதுப் பாணி பற்றியும் பேசினான். டாம், கிறிஸ்டியன், க்ளொத்தில்ட் ஆகியோருடனும், ஏன், சிறுமி கிளாரா, ஐடா ஜங்மான் ஆகியோருடனும் கூட, இதமான சொற்கள் பேசினான். டோனி மட்டும் மௌனமாக உட்கார்ந்திருந் தாள். அவளுடன் பேச்சுக் கொடுக்க அவன் முன்வரவில்லை. அவ்வப்போது, தலையைச் சிறிது சாய்த்து, அவளை நோக்குவான்.

அந்த நோக்கின் விளைவாய் மாறிமாறி உற்சாகமும் ஏக்கமும் கொள்வான்.

க்ரூன்லிஷ் அன்று மாலை விடைபெற்றுச் சென்றபோது, முதன் முறை வந்தபோது அவனைப் பற்றி வீட்டிலிருந்தோர் கொண்டிருந்த நன்மதிப்பு வலுவடைந்திருந்தது. 'நல்ல பண்பான மனிதர்', என்று கான்சலின் மனைவி கூறினாள். 'மதிப்புமிக்க கிறிஸ்துவக் கனவான்," என்பது கான்சலின் கருத்து. முன்பை விடத் திறமையாக, கிறிஸ்டியன் அவனைப் போலவே பேசி, நடந்து காட்டினான். புருவத்தைச் சுழித்துக் கொண்டு, அவர்களிடமிருந்து விடைபெற்று, டோனி தன் அறைக்குச் சென்றாள். இவ்வளவு விரைவாகவும் எளிதாகவும் தன் பெற்றோர்களின் இதயத்தைக் கவர்ந்து விட்ட இந்த ஆளைச் பார்ப்பது, இது கடைசி முறையாக இருக்காது என்று அவளுக்கு ஏனோ தோன்றியது.

அவள் எண்ணியது போலவே நடந்தது. ஒரு நாள் பிற்பகலில், தன் தோழிகள் வீட்டுக்குச் சென்று திரும்பியபோது, டோனி கண்டதென்ன? சித்திர அறையில் வசதியாக உட்கார்ந்திருந்த க்ரூன்லிஷ், ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய வேவர்லி என்ற புதினத்தைக் கான்சல் மனைவி கேட்க உரக்கப் படித்துக் கொண்டிருந்தான். அவன் ஆங்கில உச்சரிப்பு சிறப்பாக இருந்தது. வர்த்தக அலுவலாய், தான் இங்கிலாந்து செல்லப் பல வாய்ப்புகள் கிட்டியிருந்தன என்று அவன் விளக்கம் கூறினான். டோனி சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டு, வேறொரு புத்தகத்தை எடுத்துப் பிரித்தாள். "எங்கள் புத்தகம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று க்ரூன்லிஷ் நயமாகக் கேட்டான். "சற்றும் பிடிக்கவில்லை," என்று அவள் குத்தலாகவும் ஒய்யாரப் பார்வையுடனும் பதில் சொன்னாள்.

பதிலைக் கேட்டு அவன் மலைத்து விடவில்லை. நீண்ட நாட்களுக்கு முன்பே இறந்து விட்ட தன் பெற்றோர்கள் பற்றி அவன் பேசத் தொடங்கினான். தன் தந்தை கிறிஸ்துவப் பாதிரி என்றும், ஆனால் பரந்த மனப்பான்மை உடையவர் என்றும், அவன் தெரிவித்தான்.

சில நாட்களுக்குப் பின், அவன் ஹாம்பர்க் செல்ல வேண்டி வந்தது. அவர்கள் வீட்டிற்கு வந்து, அவன் விடைபெற்றுச் சென்ற போது, டோனி அங்கில்லை. "ஐடா, அந்த மனிதன் போய் விட்டான் போலிருக்கிறதே," என்று அவள் ஜங்மானிடம் கூறினாள். "கொஞ்சம் பொறுத்துப் பார், குழந்தை," என்ற பதில் தான் ஜங்மானிடமிருந்து கிடைத்தது.

எட்டு நாட்களுக்குப் பின், காலைச் சிற்றுண்டி அறையில் அக்காட்சி நடந்தது. காலை ஒன்பது மணிக்கு டோனி கீழே வந்த

போது, தன் அப்பாவும் அம்மாவும் இன்னும் மேசையருகே அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவர்கள் தன் நெற்றியில் முத்தமிடக் குனிந்துவிட்டு, அவள் உணவருந்த உட்கார்ந்தாள். அவள் கண்கள் உறக்கத்தால் இன்னும் சிவந்திருந்தன. அவளுக்குப் பசி அதிகமாயிருந்தது. சர்க்கரை, வெண்ணெய், பால்கட்டி முதலியவற்றைச் சாப்பிடத் தொடங்கினாள்.

குட்டையில் முட்டையைப் பிடித்துக் கொண்டு, கரண்டியால் அதைத் திறந்து கொண்டே, "அப்பா, அபூர்வமாய் உங்களை இங்கு பார்ப்பது எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது", என்று கூறினாள்.

"தூங்கு மூஞ்சிப் பெண்ணைப் பார்ப்பதற்குத்தான் இன்று காத்திருந்தேன்," என்றார் கான்சல். அவர் புகைபிடித்துக் கொண்டே, மடித்த செய்தித் தாளால் மேசையைத் தட்டிக் கொண்டிருந்தார். அவர் மனைவி, உணவைச் சாவதானமாகவும் நேர்த்தியாகவும் முடித்துவிட்டு, சோபாவில் பின்னால் சாய்ந்தாள்.

'டில்டா ஏற்கெனவே சமையல் கட்டில் மும்மரமாக வேலை செய்து கொண்டிருக்கிறாள். நானும் சாதாரணமாய், வெகு நேரத்துக்கு முன்பே வேலைக்குப் போயிருக்க வேண்டும். ஆனால் இன்று எங்கள் சின்னப் பெண் பற்றி உன் அம்மாவும் நானும் முக்கியமான பேச்சு பேச வேண்டியிருந்தது", என்று கான்சல் விளக்கினார்.

ரொட்டியும் வெண்ணெயும் வாய் நிறைய வைத்துக் கொண்டு அச்சமும் ஆவலும் கலந்த பார்வையுடன், அப்பாவையும் அம்மாவையும் டோனி மாறி மாறிப் பார்த்தாள்.

"சாப்பிட்டு முடி, குழந்தை," என்று கான்சல் மனைவி கூறினாள். டோனி, தன் கத்தியைக் கீழே வைத்துவிட்டு, "அப்பா, தயவு செய்து உடனே சொல்லுங்கள்" என்று கூவினாள். 'முதலில் சாப்பிட்டு முடி', என்றுதான் அவள் தந்தையும் பதில் சொன்னார்.

டோனி காபியைக் குடித்துவிட்டு, முட்டை, ரொட்டி, பால் கட்டி ஆகியவற்றை வேண்டா வெறுப்பாய்ச் சாப்பிட்டாள். தன் பெற்றோர்கள் தன்னிடம் சொல்லப் போவது என்னவாயிருக்கும் என்று அவள் ஊகித்துப் பார்த்தாள். காலைப் பசுமையும் குளிர்ச்சியும் அவள் கன்னங்களிலிருந்து மறைந்தன. அவள் முகம் சற்று வெளிறியது. தேன் பரிமாறியபோது 'நன்றி' என்று கூறி அதை ஏற்றுக் கொண்டு, சாப்பிட்டு முடித்து விட்டதாகச் சற்று கம்மிய குரலில் அவள் கூறினாள்.

"என் அன்புக் குழந்தை, நாங்கள் கூற விரும்பும் செய்திக் கடிதத்தில் அடங்கியுள்ளது," என்று கான்சல் கூறிதி

பத்திரிகைக்குப் பதிலாக நீளே நீலநிறக் கடித உறையைக் கொண்டு மேசையில் தட்டிக் கொண்டிருந்தார். சுருக்கமாகச் சொன்னால், சந்தித்த சிறிது காலத்திற்குள், உயர்ந்த பண்பட்ட மனிதன் என்று நாம் இனம் கண்டுள்ள பென்திஷ் க்ரூன்லீஷ், எங்கள் மகள் மேல் ஆழ்ந்த பிரியம் கொண்டுள்ளதாக இக் கடிதத்தில் எழுதியுள்ளார். அவளே மணம் செய்ய விரும்புவதாக, முறைப்படி தெரிவித்துள்ளார். என் குழந்தை என்ன கூறுகிறாள்?"

டோனி தன் நாற்காலியில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து, தலையைச் சிறிது தாழ்த்திய வண்ணம், வலது கையால் மேசைக் குட்டை வெள்ளி வளையத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள். திடீரென அவள் தலைநிமிர்ந்து பார்த்தபோது, அவள் கண்கள் நீர்க்குளமாகி யிருந்தன. "அந்த மனிதர் என்னிடம் என்ன கேட்கிறார்? அவருக்கு நான் என்ன செய்து விட்டேன்?" என்று கேட்டுக் கொண்டே, அவள் 'ஓ'வென்று அழத் தொடங்கினாள்.

கான்சலுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. தன் மனைவியையும், காலியாயிருந்த தன் காப்பிக் கோப்பையையும் அவர் மாறி மாறிப் பார்த்தார்.

அவர் மனைவி இதமாகக் கூறினாள்: "டோனி, ஏன் இப்படிச் செய்கிறாய்? உன் நன்மையைத்தான் உன் பெற்றோர்கள் கருதுவார்கள் என்பது உனக்குத் தெரியாதா? இந்தத் திருமண ஏற்பாட்டை நீ உடனடியாக நிராகரிப்பது நல்லதென்று நாங்கள் சொல்ல முடியாது. ஹெர் க்ருன்லிஷ் மீது உனக்குப் பிரியம் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் பிரியம் வரும் என்பது எனக்கு நன்கு தெரியும். உன்னைப் போல சிறுசுக்குத் தனக்கு நல்லது என்பது எப்பொழுதும் தெரியாது. இதயத்தைப் போலவே மனமும் குழம்பித் தானிருக்கும். இதயம் கனிய நீ அவகாசம் தரவேண்டும். அதுவரை, மனத்தைத் திறந்து வைத்திருந்து, அனுபவப்பட்டவர்களும் உன் நன்மையையே நாடுபவர்களும் கூறும் ஆலோசனையை ஏற்றுக் கொள்ள நீ தயாராக இருக்க வேண்டும்."

முட்டைக் கறை படிந்திருந்த மேசைத் துண்டால் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, டோனி கூறினாள்: "அந்த மனிதரைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாதே. எனக்குத் தெரிந்ததெல்லாம், ஆட்டுக்குட்டி போல் அவருக்கு மஞ்சள் தாடி இருக்கிறதென்பதும், லாபகரமான தொழில் நடத்துகிறார் என்பதும்தான்", அவளைப் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது.

திடீரென ஊற்றெடுத்த பரிவுடன், கான்சல் தன் நாற்காலியை அவள் பக்கத்தில் இழுத்துப் போட்டுப் புன்சிரிப்பு செய்து கொண்டு, அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

"டோனி, அவரைப் பற்றி உனக்கு என்ன தெரிய வேண்டும்? நீ இன்னும் சிறு பெண்தானே. அவர் இங்கு நான்கு வாரங்களுக்குப் பதிலாக ஐம்பத்திரண்டு வாரங்கள் தங்கினாலும், அவரைப் பற்றி நீ அதிகமாக ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாதல்லவா? நீ குழந்தை. உனக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புவர்களை நீ நம்ப வேண்டும்."

தன் தலையைத் தடவிக் கொடுக்கும் கையருகே தலையை வைத்துக் கொள்ளும் பூனைக்குட்டி போல், தலைகுனிந்து, அழுது கொண்டே, பரிதாபமாய் டோனி கதறினாள்: "எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவர் இங்கு வந்து, எல்லோரிடமும் நயமாய்ப் பேசிவிட்டுப் போய் விடுகிறார். அதன்பின் உங்களுக்குக் கடிதம் எழுதுகிறாரென்றால் எனக்கு ஒன்றே விளங்கவில்லை? எதற்காக அப்படிக் கடிதம் எழுதினார்? நான் அவருக்கு என்ன செய்து விட்டேன்?"

கான்சல் மீண்டும் சிரித்தார். "அதையே நீ மீண்டும் கேட்கிறாய். சிறுபிள்ளைத்தனமாய் நீ வாதாடுவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தன்னை மற்றவர்கள் தூண்டி வற்புறுத்துகிறார்களென்றோ, தொந்தரவு செய்கிறார்களென்றோ, என் பெண் நினைக்கக் கூடாது. நாம் இதை அமைதியாகவும் நிதானமாகவும் ஆலோசிக்கலாம்; இன்னும் சொல்லப் போனால், அவ்வாறு தான் ஆலோசிக்க வேண்டும். ஏனென்றால், இது மிக முக்கிய பிரச்னை. அதற்கிடையில் ஹெர் க்ரூன்லிஷ் யோசனையை நிராகரிக்காமலும் ஏற்றுக் கொள்ளாமலும் அவருக்குப் பதில் எழுதுகிறேன். நாம் நிறைய யோசிக்க வேண்டியிருக்கிறது. சரிதானே? இது உனக்குச் சம்மதம் தானே. இப்பொழுது அப்பா வேலைக்குப் போகலாமல்லவா? பெட்ஸி, நான் போய் வருகிறேன்.

"போய் வாருங்கள், ஜீன்."

தலை குனிந்தவாறே, தன் இடத்தில் அசையாது அமர்ந்திருந்த தன் மகளிடம் கான்சல் மனைவி கூறினாள்: "இன்னும் கொஞ்சம் தேன் சாப்பிடம்மா. நன்றாகச் சாப்பிட வேண்டுமல்லவா?".

டோனியின் கண்ணீர் சிறிது சிறிதாக அடங்கியது. தன் எண்ணங்களின் சுமையால், அவள் தலை கனத்துச் சூடாயிருந்தது. இது என்ன சோதனை. தான் என்றாவது ஒரு நாள் திருமணம் செய்து கொள்ளவேண்டும், ஒரு தொழிலதிபர் மனைவியாகிக் குடும்பக் கவரவத்திற்கும் தொழில் அந்தஸ்துக்கும் ஏற்ப, வசதியான, மதிப்புமிக்க, குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இப்பொழுதோ, தன் வாழ்வில் முதல் முறையாக, ஒரு நிஜ ஆள், நிஜமாகவே, தன்னைக்

கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் மற்றவர்கள் எப்படி நடப்பார்கள்? இது வரை, புத்தகங்களில் மட்டுமே படித்திருந்த சொற்கள் எப்படி இப்பொழுது அவள் வாழ்வில் சோதனைகளாக உருவாகியிருந்தன. 'திருமணக் கோரிக்கை,' 'சம்மதம்,' 'உயிருள்ளவரை பிரியாமலிக்க ஒப்பந்தம்,' இது போன்ற சொற்கள் இப்பொழுது அவளுக்கு அறைகூவல் விடுத்தன. திடீரென அவள் எவ்வளவு பெரிய ஒரு முடிவு எடுக்க வேண்டியிருந்தது.

"அம்மா. நான் என் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நீங்களும் கூறுவீர்களா?" என்று கேட்டாள். 'ஒப்புதல் அளிக்க,' என்று சொற்களைச் சற்று தயக்கத்துடன் இழுத்துச் சொன்னாள். அச் சொற்கள் சற்று உறுத்தலாகப் பட்டன. ஆனால் இம்மாதிரிப் பாணியில் பேசுவதற்குரிய கட்டம் அவள் வாழ்வில் இப்பொழுது தான் முதன் முறையாக எழுந்திருந்தது. நிதானமில்லாமல் முதலில் அழுது விட்டதற்காக அவள் இப்பொழுது வெட்கப்பட்டு வருந்தினாள். தான் ஹெர் க்ரூன்லிஷைத் திருமணம் செய்வது, பத்து நிமிடங்களுக்கு முன் தோன்றியது போல், இப்பொழுது அவ்வளவு பயங்கரமாகத் தோன்றவில்லை. தன் முடிவை எதிர் பார்த்து, இவ்வளவு பெரிய காரியம் நடக்கவிருக்கிறது என்று எண்ணி இவ்வளவு முக்கிய பொறுப்பு தன் கையில் ஒப்படைக் கப்பட்டுள்ளதே என்று சற்று பெருமையாக இருந்தாள்.

"நீ ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் யோசனை கூறுவதா? உன் அப்பா கூட அப்படிச் சொல்லவில்லையே. நீ ஒப்புக்கொள்ள வேண்டாம் என்று அவர் சொல்லவில்லை. அவ்வளவுதான். உனக் காக நாங்கள் இருவரும் முடிவு செய்தால், அது பொறுப்பற்ற செய்கையாய் இருக்கும். இப்பொழுது வந்துள்ள சம்பந்தம், நல்ல பெரிய இடத்துச் சம்பந்தம். நீ பெரிய அந்தஸ்துடன் ஹாம்பர்க் சென்று, அங்கு வசதியான வாழ்க்கை நடத்துவாய்."

டோனி அசைவற்று உட்கார்ந்திருந்தாள். தன் தாத்தாவின் வரவேற்பறையில் இருப்பதுபோல், பட்டுச் சித்திரங்களைத் தன் மனக் கண்ணில் கண்டாள். க்ரூன்லிஷ் மனைவி என்ற முறையில் காலையில் அவள் சாக்லேட் குடிக்க வேண்டியிருக்குமா? அதைப் பற்றிக் கேள்வி கேட்பது உசிதமல்ல என்று அவளுக்குத் தோன்றியது.

கான்சல் மனைவி மேலும் கூறினாள்: "உன் அப்பா சொன்னது போல், இதைப் பற்றி ஆலோசிக்க உனக்கு அவகாசம் இருக் கிறது. ஆனால் இதுபோன்ற சம்பந்தம் ஒவ்வொரு நாளும் வராது, இதனால் உனக்குப் பெரும் செல்வம் கிட்டும், அந்தஸ்தையும் கடமையையும் கருதி, உனக்குகந்த திருமண ஏற்பாடு இது,

என்பதை உனக்கு எடுத்துக் காட்டுவது எங்கள் கடமையாகும். இதை உனக்குச் சொல்வது என் பொறுப்பு. இன்று உனக்குக் கிட்டியுள்ள வாய்ப்பு, உன் எதிர்கால வாழ்வு அமைய வேண்டிய நியதிக்கு ஏற்றது ஏன்பது உனக்கே தெரியும்.''

''ஆம்''. என்று சிந்தனையில் ஆழ்ந்தவாறே டோனி கூறினாள். தன் குடும்பத்துக்கும், குடும்பத் தொழிலுக்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி அவள் நன்கறிவாள். அவற்றில் அவளுக்குப் பெருமையும்கூட; தன் குடும்ப வரலாற்றுப் பெருமையில் அவள் ஊறியிருந்தாள். கான்சல் பூடன் புரூஷின் மகள் என்ற முறையில், அவள் ராணிபோல் ஊரில் பவனி வருபவள். காவல்காரர் மத்தீசன் அவளைக் காணும் போதெல்லாம், மரியாதையாகத் தொப்பியை எடுத்துத் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்துவார். அந்த ராஸ்டோக் தையற்காரர், முதலிலேயே வசதியாக இருந்தவர். ஆனால் அவர் காலத்தில் குடும்பத்தின் செல்வநிலை மிகக் கணிசமாய் உயர்ந்திருந்தது. பணக்காரப் பெரிய இடத்தில் சம்பந்தம் செய்து, தன்னிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட வழியில், குடும்பத்தின் கவுரவத்தையும் தொழில் லாபத்தையும் உயர்த்துவது, தன் கடமையென்பதை அவள் உணர்ந்தாள். அதே நோக்கத்துடன்தான் டால் அலுவத்தில் வேலை பார்த்து வந்தாள். ஆம்; அந்தத் திருமணம் மிகப் பொருத்தமானது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆயினும்—ஆயினும் பொன்மஞ்சள் நிற மீசையுடனும், மலர்ச்சியான, புன்சிரிப்பு தாங்கிய முகத்துடனும், மூக்கில் இருந்த பருவுடனும், குதிநடையுடனும், அவன் தோற்றம், அவள் கண் முன் தோன்றியது. அவன் கம்பளி ஆடை அவள் மேல் உராய்ந்ததுபோல் பட்டது. அவன் மென்மையான குரல், அவள் காதில் ஒலித்தது.

''நியாயத்தை எடுத்துச் சொன்னால் நீ ஏற்றுக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருந்தது. நீ ஒரு முடிவுக்கு வந்து விட்டாய் என்று நம்புகிறேன்,'' என்று கான்சலின் மனைவி கூறினாள்.

திடீரென டோனி கூவினாள். ''ஐயையோ, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.'' அந்த 'ஐயையோ'வில் எரிச்சல் வெடித்தது. ''என்ன அபத்தம். அவரை நான் ஏன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? அவரை எப்பொழுதுமே நான் கேலிதான் செய்து கொண்டிருந்தேன். அதைத் தவிர நான் வேறெதுவும் செய்ததில்லை. என்னை அவர் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை. அந்த மனிதர் உடம்பில் சிறிதாவது தன்மானம் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமே.'' இவ்வாறு கூறிக் கொண்டே, ஒரு சொட்டித் துண்டு மேல் தேனை ஊற்றத் தொடங்கினாள், டோனி.

ஷில்லர் பற்றிக் கடைசிக் கட்டுரை

ஷில்லரின் மறைவின் 150-வது ஆண்டு நிறைவை ஒட்டி 1955-இல், அவருக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. அதில் கலந்து கொண்டு ஸ்டட்கார்ட்டிலும் வைமாரிலும் தாமஸ் மன் நினைவுரை ஆற்றினார். அந்த ஆண்டிலேயே தாமஸ் மன்னும் மரணம் அடைந்தார். அந்த நினைவுரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. ஷில்லரின் பெருமைகளையும், எக்காலத்துக்கும் அவர் கூற்றுக்களின் ஏற்புடைமையையும், அந் நினைவுரை விளக்கிய அதே நேரத்தில், ஷில்லர் கூற்றின்படி மனிதாபிமானி என்று சொல்லத் தக்கவர் தாமஸ் மன் என்பதை எடுத்துக் காட்டி, அவருடைய இயல்புகளையும் விளக்குவதாக அமைந்திருந்தது. இரண்டு உலகப் போர்களுக்குப் பின்பும் அறிவு நிதானம் அடையாத மனித இனத்துக்கு அவர் எச்சரிக்கையும் பணிவான வேண்டுகோளும் விடுக்கின்றார். உலகப் பொதுமையான மனிதாபிமானம் நம் காலத்திற்கு இன்றியமையாத தேவை. தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் அவல நிலையிலிருந்து மனித இனம் விடுதலை பெற அதுதான் வழி காட்டும்.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு வாலன்ஸ்டைன் பற்றிய நூலை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில், ஷில்லர், வில்ஹெல்ம் ஃபன் ஹம்போல்டுக்குப் பின்வருமாறு எழுதினார்: "நான் இப்போது மேற்கொண்டுள்ள பாதை, கெதெயிடம் என்னை அழைத்துச் செல்கிறது என்பதும், அவருடன் நான் மோத வேண்டியிருக்கும் என்பதும், அந்த மோதலில் அவரிடம் நான் தோல்வி அடைந்தே தீர்வேன் என்பதும், உண்மையே. ஆயினும் எனக்கே உரியதும், அவரால் எப்பொழுதும் எய்தமுடியாததும் என்னிடம் எஞ்சி நிற்கும் என்ற காரணத்தால், அவருடைய உயர்வினால், என்னுடைய மதிப்பை என் படைப்பின் மதிப்பை குறையாது. ஆக மொத்தம், நான் அவருக்கு ஈடு கொடுக்க முடியும். திறனாய்வாளர்கள் எங்களிடையே வேற்றுமைகளை எடுத்துக் காட்டுவார்கள் என்ற போதிலும், என்னுடைய படைப்புக்களின் இனம், அவருடைய படைப்புக்களின் இனத்துக்குத் தாழ்ந்ததல்ல, சமமானதே. இலட்சிய உலகில் இரண்டுக்கும் ஒரே சமமான இடம் உண்டு, என்பதையும் எடுத்துக் காட்டுவார்கள் என்று, துணிவு தளராத வேகங்களில், எனக்கு நானே உறுதி கூறிக் கொள்வேன்." நீண்ட காலமாகக் கெதெயுடன் போட்டியிட மறுத்த போதிலும், உண்மையில் அவருக்கு ஈடு கொடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் ஷில்லர் தம்மைப் பற்றிச் செய்த விமர்சனம் இது. கெதெயின் விமர்சனத்துக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. "ஷில்லர் பெரியவரா, நான் பெரியவனு, என்று ஜெர்மானியர் எப்பொழுதுயாது சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு

சண்டையிட்டுக் கொள்ள எங்களைப் போல் இருவர் கிடைத்த தற்கு, அவர்கள் நன்றி செலுத்த வேண்டும்," என்று கெதெ எழுதினார். பூசைக்குரிய புனிதராகப் கெதெயை ஷில்லர் ஒரு போதும் மதிக்கவில்லை. ஆனால் ஷில்லர் மறைந்த பின், பூசைக் குரிய புனிதராகக் கெதெ மதித்தார். ஷில்லரைப் படிப்பதில் சுவை காண முடியவில்லை என்று கெதெயின் கடைசி நாட்களில், அவருடைய மருமகள் ஓட்டிலி கூறியதுண்டு. "நீங்கள் அனைவரும் மண்ணுலக வாழ்வில் சிக்கி மூழ்கியுள்ளவர். ஆகவே தான், ஷில்லரின் அருமை பெருமையை உங்களால் உணர முடிய வில்லை," என்று கெதெ பதில் கூறினார்.

தம்முடைய வயோதிகப் பருவத்தில், கெதெ இவ்வாறு இடித் துரைத்ததில் நம் அனைவருக்கும் ஒரு படிப்பினை உள்ளது. தம் கடைசி காலம் வரை, ஷில்லர் தம்முடன் இருந்திருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணி ஏங்கியவர் கெதெ. அத்தகைய பெரியாரின் அருமை பெருமையை உணர முடியாத அளவுக்கு நாம் மண்ணுலக வாழ்வில் சிக்கி மூழ்கியிருக்கக் கூடாது. அவருடைய நினைவை அசட்டை செய்து, அவர் நாம் காலத்துக்கு ஒத்தவரல்ல, அவர் இனி நமக்குக் கூறக் கூடியது ஒன்றுமில்லை, என்று நாம் எண்ணினால் அது தவறும் மடமையும் ஆகும். அத்தகைய எண்ணமே காலத்துக்கு ஒவ்வாத கர்நாடகக் கருத்து. அவருடைய நூல்களை நான் மீண்டும் ஒரு முறை அண்மையில் படித்தபோது, இந்த எண்ணம்தான் என்னைப் பெரிதும் ஆட்கொண்டது. தன்னுடைய நலக்குறைவையும் நலிவையும் சமாளித்த ஷில்லர், நாம் மட்டும் அவருடைய குரலுக்குச் செவிசாய்க்கச் சித்தமாயிருந்தால், நலமிழந்து நலிவுற்றுள்ள இன்றைய யுகத்தைக் குணப்படுத்தும் மருத்து வராக விளங்கக் கூடும்.

ஓர் உயிரினத்தின் உடலமைப்பில் ஒரு முக்கிய பகுதியோ, உயிர்ச் சத்தோ, ஊட்டப் பொருளோ, குறைவாயிருந்தால், அந்த உயிரினம் நலிவுற்று வாடி அழியக்கூடும். இன்றியமையாத இந்த உயிர்ச்சத்து, இன்றைய சமுதாய அமைப்பில் குறைவாக இருக் கும் ஊட்டப் பொருள், ஷில்லர் என்ற சத்துப் பொருள் என்று நாம் கூறலாம். 'ஹோரனின் பொது அறிவிப்பு' என்ற அவர் நூலை நான் மீண்டும் படித்தபோது, எனக்கு ஏற்பட்ட எண்ணம் இதுதான். மிக உயர்ந்த அந்த உரைநடைப் படைப்பில், காலத் திலேயே காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களாகத் தோன்றி யிருக்கக் கூடியவற்றைத் தம் காலத்தின் குறைகளுக்கும் கேடு களுக்கும் அவை அருமருந்தாகும் வண்ணம் அவற்றை வியத்தகு முறையில் கையாண்டு, காலத்துக்கு அப்பாற்பட்டு எக்காலத்

துக்கும் பொருத்தமுடைய கருத்துக்கள் அவை என்பதை உணர்த்துகின்றார், ஷில்லர். 'நெருங்கி வரும் போர்களின் இடி முழக்கம் நாட்டை அச்சுறுத்தும்' இந் நாட்களே 'நாட்டிற் குள்ளாகவே பற்பல பிரிவுகளுக்கும் இடையே எழும் சண்டை சச்சரவுகள், இப்பிரிவுகளுக்கிடையே போராட்டத்தின் வித்துக் களே விதைத்து, உரையாடலிலும் சரி, இலக்கியப் படைப்பிலும் சரி, அரசியல் சர்ச்சை எனும் இக் கொடிய பூதத்திலிருந்து தப்ப முடியாத சூழ்நிலை' உருவாகியுள்ள இந்நாட்களைப் பின்னணி யாகக் கொண்டு அவர் எழுதுகிறார். இன்றையச் சிக்கலின் சில்லரை இடர்ப்பாடுகள் மனிதனைச் சிறைப்படுத்தி, அவன் மனத்தை அடிமைப்படுத்தும் போக்கு வளர வளர, உலக வாழ்க்கைச் சார்புகளுக்கு மேம்பட்டனவாகவும், மனிதாபிமானம் நிறைந்தனவாகவும் உள்ள, உயர்ந்த அனைத்துலகப் பொதுமை யான, கோட்பாடுகளில் அக்கறையை வலுப்படுத்தி, மனித உள்ளத்துக்கு மீண்டும் விடுதலை காண்பதன் அவசியமும் வளர்ந்து வலுக்கிறதென்று அவர் கூறுகிறார். அரசியலால் பிளவு பட்டுள்ள உலகை, வாய்மை, அழகு என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் மீண்டும் ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்று அவர் கூறுகிறார். அன்றாட நிகழ்ச்சிகளால் ஒரு நேரத்தில் ஆத்திர மும் மற்றொரு நேரத்தில் சோர்வும் கொண்டுள்ள வாசகர்களின் உள்ளத்திற்கும் இதயத்திற்கும் ஆறுதல் செய்தி கூறி, விமோசனம் பெற வழி காட்டுவதே அவருடைய எழுத்தின் நோக்கமாகும். அரசியல் கொந்தளிப்புக்கு இடையே, அவர் எழுத்து இக் கோட்பாடுகளை உறுதியாக மேற்கொண்டு, சில சமயங்களில் நகைச் சுவையுடனும், சில சமயங்களில் ஆழ்ந்த ஆராய்ச்சி உணர்வுடனும், அவற்றை விளக்கும். தூய்மையற்ற ஒரு தலைச்சார்பு உணர்வு அனைத்தும் அவர் சஞ்சிகையிலிருந்து அறவே விலக்கப்படும். ஆனால் இன்றைய உலக நிகழ்ச்சிகளின் போக்கு பற்றியும், மனித இனத்தின் உடனடியான எதிர்கால வாய்ப்புகள் பற்றியும், அது எதுவும் குறிப்பிட முன்வராத அதே நேரத்தில், பழமையிலிருந்து என்ன படிப்பினைகளை அறிய முடியும் என்று வரலாற்றையும், எதிர்காலத்தைப் பற்றி என்ன உணர முடியும் என்று தத்துவத்தையும், அது கேள்விகள் கேட்கும். நியாயம் தெளிவாக்குகின்ற, ஆனால் துரதிருஷ்டவச மாய், வாழ்க்கை குழப்பிச் சீர்குலைக்கின்ற பண்பட்ட மனிதாபி மானக் கொள்கையை ஆதரிக்கின்றவர்களின் மன்றமாகவும் உறைவிடமாகவும் அச் சஞ்சிகை விளங்கும். உலகின் மேம் பாட்டுக்கு உண்மையில் ஆதாரமாயுள்ள உயர்ந்த குறிக் கோள்கள், தூய்மையான கொள்கைகள், பண்பட்ட அற உணர் வுகள் ஆகியவற்றை வளர்க்க அது அமைதியாகப் பாடுபடும்.

"கண்ணியம் ஒழுங்கு நீதி, அமைதி ஆகியவையே, இந்த சஞ்சி கைக்கு ஆதார உணர்வாகவும், மூல வாசகமாகவும் விளங்கும்."

இத்தகை முயற்சியைப் பலவீனமான அழகுணர்வு என்றோ, வாழ்விலிருந்து தப்பியோடும் போக்கு என்றோ இப்பொழுது குறிப்பிடப்படுகிறதே, அவ்வாறே, அழைக்கத் துணிந்து விடக் கூடாது. நாட்டின் உள்ளத்தை, ஒழுக்க உயர்வை, கலாச் சாரத்தை, ஆன்மீக சுதந்திரத்தை, அறிவு மேம்பாட்டை, வளர்க்க உதவுவது, வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடுவதாகாது. மற்ற வரலாற்றுக் சூழ்நிலைகளிலும், வெவ்வேறு அரசியல் தத்துவங் களின் ஆட்சியிலும், மாறுபட்ட சமுதாய அமைப்பிலும் வாழும் மற்ற மக்களும் மனிதர்கள் தான் என்பதை நாம் உணர்வதற்கு அது ஒன்று தான் வழி. மனிதப் பண்பை வளர்க்கப் பாடுபடுவது. கண்ணியம், ஒழுங்கு, நீதி, சமாதானம் ஆகியவற்றை நிலை நாட்ட வும், ஒருவரை யொருவர் பழிப்பது, அபாண்டப் பொய்கள், மூர்க்கத்தனமான பகைமை ஆகியவற்றைக் களையவும் பாடுபடு வது—பயனற்ற அழகுணர்வு வேட்டையில் ஈடுபடுவதல்ல. உண்மையில் அது தான் வாழ்க்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வ தாகும்; மனிதனின் ஆன்மாவை விடுவிப்பதன் மூலம் மனிதனின் கவலைக்கும் வெறுப்புக்கும் மருந்தாகி அவனைக் குணப்படுத்தும் முயற்சி, அது. ஆயினும் தம் சொல்வன்மை, கவிதை ஆர்வம் ஆகியவற்றை முழுதும் பயன்படுத்தி, ஷில்லர் கனவு கண்ட இலட்சியக் குறிக்கோள்களான, உலகப் பொதுமை நோக்கு, தூய்மையான மனிதாபிமானம் ஆகியவை, காலத்துக்கு ஒவ்வாத, கர்னடகமான, உளுத்துப்போன, மங்கிவிட்ட இலட்சியங்கள் என்று தலைமுறையினர் பலர் கருதினர். உயிர்த்துடிப்பும் செல் வாக்கும் நிறைந்த, புதிதான, உண்மையான, காலத்திற்கேற்ற மூல வாசகங்களாகத் தோன்றியவை, உண்மையில் குறிப்பான, நேர்மறையான, தேசிய உணர்வை மையமாகக் கொண்ட சில உணர்ச்சிகளேயாகும். பொதுவாக ஷில்லரைப் பாராட்டிக் கார்லில் எழுதிய வாழ்க்கை நூலில், தம் பாராட்டுக்குரிய காப்பி யத் தலைவனிடம் ஒரே ஒரு குறை மட்டும் கண்டார். போஸா சீமான் போல, அவருடைய இதயமும், 'மனித இனம் முழுவதற் காகவும், உலகிற்காகவும், வரவிருக்கும் தலைமுறைகளுக்காகவும், துடித்துக் கொண்டிருந்தது' என்பது தான் அவரிடம் கார்லில் கண்ட குறை, மனித வரலாற்றின் ஆரம்பக் கட்டத்திற்குரிய பக்குவமடையாத கோட்பாடு தான் தேசியம் என்று ஷில்லர் விளக்கியபோது, கிரேக்கருடனும் யவனருடனும் ஒப்பிடும்போது, 'நாம் முற்போக்கானவர்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். "தனி யொரு நாட்டுக்கு மட்டுமே எழுதுவது குறுகிய அற்பமான குறிக் கோளாகும். இவ்வாறு தடை விதிக்கப்படுவதை, மெய்யியல்

உணர்வு கொண்டவர் யாரும் சகிக்க முடியாது. மனித இனத்தில், அடிக்கடி மாறக்கூடிய, தற்செயலான, நியாயப் பொருத்தம் சிறிது மற்ற ஓர் ஏற்பாட்டுக்கு, உணர்வுள்ள எவரும் அடங்கியிருக்க முடியாது. மிக முக்கிய நாடும், மனித சமுதாயத்தின் ஒரு சிறு பகுதிதானே. அந்த நாட்டின் வரலாற்றில் ஒரு புது முயற்சி, மனித இனத்தின் முன்னேற்றத்திலும் ஒரு படியாய் அமைந்தால் தான், நாட்டுப் பற்று நியாமானது," என்று ஷில்லர் எழுதினர்.

இத்தகைய முற்போக்கு நிலைக்கு எதிராய், அதி முற்போக்கான தம் நோக்கை ஈடு கொடுக்கிறார் கார்லில். "நம் பற்றுதல்கள் தனித் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மனிதர் அனைவரையும் தழுவுகின்ற அன்பு, அவ்வாறு விரிக்கப் படுவதாலேயே தளர்ச்சியுற்று, யாருக்குமே உருவான பலன் பயப்பதில்லை. மனித இனம் அனைத்தையும் தழுவும் பொதுமையான அன்பு, நம்பமுடியாத, வல்லமையற்ற ஒழுக்க விதியாகும். (ஷில்லரின் வரலாற்று நூல்களில் காணப்படும் மேம்பட்ட, வலுவான, அறிவுத் தெளிவு பெற்ற ஆர்வ உணர்வு, குறுகிய எல்லைக்குள் அடங்கி இருந்தால், நம் இதயத்தில் இன்னும் பலமாகப் பதிந்திருக்கும்" என்று கார்லில் எழுதுகிறார்.

கார்லில் சொற்களில் தொனிக்கும் செருக்கு, ஒரு சகாப்தம் முழுவதும் ஒங்கி நின்ற ஓர் உணர்வை, தேசிய உணர்வைச் சித்திரிக்கின்றது. ஆனால் அவருடைய மொழி நடையோ, நேற்றைய மொழி நடை. மனித எண்ணத்தின் வரலாற்று அலைகள் பொங்கி ஒங்கி அடங்கி ஒடுங்குகின்றன. விதியின் போக்கு, ஒரு காலத்தில் புதுமையாய் இருந்தவற்றைக் காலத்துக்கு ஒவ்வாதனவாய் மாற்றுவதையும், தீர்ந்து அழிந்து விட்டவை என்று தள்ளப்பட்ட கருத்துக்களைப் புதுப்பிப்பதையும், கூடான காலப் பொருத்தமும், துடிப்பான உயிர்ப்பும் கொண்டனவாய், முன்பு என்றும் இராதது போல், உயிர்ப் பிரச்னைகளாய், அவற்றை ஆக்குவதையும், நாம் இன்று கண்டு வருகிறோம். இன்று நம் நிலை என்ன ? தேசியக் கோட்பாடு, 'குறுகிய நிலப் பரப்புக்' கோட்பாடு, ஏற்கெனவே பத்தாம் பசலிக் கொள்கையாகி விட்டது. அரசியல், பொருளாதார, அறிவுப் பிரச்னைகளில் அக் கோட்பாடு இனி நமக்கு உதவ இயலாது என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். உலகப் பொது நோக்குதான் இன்று நம் காலத்துக்கும், கவலை படர்ந்த நம் உள்ளங்களுக்கும் தேவையானது. 'மனிதப் பண்பு' என்ற சொல், மனித இனத்தின் மானம், இயன்ற அளவு விரிந்து அனைவரையும் தழுவும் பரிவு, அனுதாபம் ஆகியவை, வல்லமை இழந்த ஒழுக்க

விதியாகவும், நம் உணர்ச்சிகளைத் தளர்த்திப் பலவீனப்படுத்துவ தாகவும், இருந்த நிலை, கடந்து வெகு காலமாகி விட்டது. அனை வரையும் தழுவும் பொதுமை நோக்கு தான் இன்று நமக்குத் தேவை ; அவசரமான, இன்றியமையாத தேவை, மனித இனம் முழுவதும் அறிவு நிதான நிலைக்கு வந்து, தன்னுடைய மானத் தையும், கௌரவத்தின் அந்தரங்கத்தையும், நினைத்துப் போற்றி னால் ஒழிய, மனித இனம் ஆன்மீகச் சீரழிவு அடையும் என்பது மட்டுமல்ல, எதிர் காலத்தில் மனித இனத்திற்கு வாழ்வே இராது.

சென்ற அரை நூற்றாண்டாய் மனிதாபிமானம் தேய்ந்து மங்கி யுள்ளது ; கலாச்சாரம், திடுக்கிடும் வகையில் குறுகிக் கூனி யுள்ளது. பண்பு, கண்ணியம், நீதி உணர்வு, விசுவாசம், நம் பிக்கை, அடிப்படையான நாணயம் ஆகியவை பயங்கரமான அளவு பலம் குறைந்துள்ளன. இரண்டு உலகப் போர்கள், பிருகத் தன்மையையும் மித மிஞ்சிய பேராசையையும் மூட்டி, மனித ரின் அறிவு நிலையும் ஒழுக்க நிலையும் (அவை இரண்டும் பிரிக்க முடியாமல் பின்னி நிற்பவை) சீர்கெட்டுச் சிதைவுறச் செய்து, உலகனைத்தையும் நிர்மூலமாக்கக் கூடிய மூன்றாம் உலகப் போர் நோக்கிப் பாய்வதைத் தடுக்க வல்லமையற்ற, குழப்பமிக்க நிலையை விட்டுச் சென்றுள்ளன. அச்சமும் ஆத்திரமும், நியாயத் துக்குச் செவிசாய்க்காத பகைமை உணர்வும், பயங்கரப் பீதியும், கட்டுக் கடங்காத அடக்கு முறையில் மோகமும், மனித இனத்தை ஆட்கொண்டு உலுக்குகின்றன. வான வெளியை வென்று, அங்கு இராணுவத் தளங்கள் அமைப்பதிலும், பகலவனின் ஆற்றலை களைத்தனமாகக் கையாண்டுப் பயங்கர அழிவுக் கருவிகளை உற்பத்தி செய்வதிலும், மனித இனம் பெருமிதம் கொள்கிறது.

∴பெண்டே இச் ஸோ டென் மென்ஸ்சென் வீடர்,
டெம் வீர் அன்செர் பைல்ட் கெலிஎன்,
டெஸ்ஸன் ஸ்சோங் கெஸ்ட்டால்ட்டே கிலீடர்—
டுரோபென் இன் ஒலிம்ப்பஸ் ப்ளூஹென்?
காபென் வீர் இஹிம் ஜூம் பெசிட்சே
நிச்சிட் டெர் எர்டே காட்டர்ஸ்சோஸ்,
உண்ட் ஆ∴ப் செய்நெம் கோணிக்கிட்சே
ஸ்செவெய்ப்∴ட் எர் எலண்ட், ஹெய்மாட்லோஸ்?

நம்முடைய தெய்வீக நெறிமேற் கொண்டே
உள்ளபடி ஒழுகியிவன் நடப்போன் தானே?
நம்முடைய சிறப்புயர்த்தும் ஒலிம்ப்பஸ் பெற்ற
உயர்ந்த இனம் இதுதானே? சொல்வீர், அன்னேன்

நம்மிடத்தே நிலங்கேட்டுப் பெறவில் லேயா
தன்வீட்டை அமைப்பதற்கு? கடைசி யாக
நம்மைவிட்டு அயல்மண்ணில் தனித்துச் சுற்ற,
இதுதானே அவனடைய முடிந்த தெல்லாம்?

"எல்யூஸியன் திருவிழாவில்" ஸீரஸ் இடும் ஓலம் இது. இதில் ஷில்லரின் குரல் ஒலிக்கின்றது. 'உலகின் மேம்பாட்டுக்கு ஆதார மான உயர்ந்த கோட்பாடுகள், தூய்மையான குறிக்கோள்கள், பண்பட்ட அற உணர்வுகள் ஆகியவற்றை வளர்க்க அமைதி யாகப் பாடுபட, அவர் விடுத்த அழைப்பைப் பொருட்படுத்தாது, மடமையில் ஊறிய மனித இனம், சீர்கேடுற்ற ஓர் இனம், தொழில் நுட்ப முன்னேற்றம், விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் தன் புதிய அகன்துலகச் சாதனைகளைப் பற்றிப் பெருமை பேசிக் கொண்டு, ஒருவரும் விரும்பாத நிலை என்று அடியோடு சொல்லி விட முடியாத அழிவு நிலையை நோக்கித் தடுமாறுகின்றது.

1859 நவம்பரில் ஷில்லர் பிறப்பின் நூறாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டபோது, ஆர்வப் பெருக்கில் அகன்து ஜெர்மனி யும் ஒன்றுபட்டது. உண்மையில் அவ்வாறு நடந்தது என்று நாம் அறிகிறோம். என்றுமே பிளவுபட்டு நிற்கும் ஜெர்மானிய மக்கள், வரலாற்றில் முதல் முறையாக ஒன்று சேர்ந்து, தங்கள் கவிக்கு அஞ்சலி செலுத்த அணி அமைத்த காட்சி உண்மையிலே வியப்பூட்டும் காட்சி. அது தேசியத் திருவிழாவாக அமைந்தது. இன்று நாம் பங்கு கொள்ளும் கொண்டாட்டமும் அவ்வாறே அமையட்டும். பயங்கர அரசியல் இன்று நம்மை எதிர்நோக்கும் நிலையில், பிளவுபட்ட ஜெர்மனி, அவர் பெயரால் ஒன்று கூடும் உணர்வு பெறட்டும். இது வெல்லாம் நல்லதுதான். ஆனால் இன்றையச் சூழ்நிலையில், நம் நிலைவுக் கொண்டாட்டம், மேலும் சிறந்ததோர் உட்பொருளும் உணர்வும் பெறச் செய்வோமாக! தன்னை ஈன்ற மண்ணுடன், மனிதன், நிலையான, நிரந்தரமான உறவு கொள்வதற்குத் துணையாய் நிற்கும் ஷில்லரின் பண்பட்ட பெருமைக்கு ஏற்ப, உலகளாவிய தழுவும் பொதுமை உணர்வுக் கும் அனுதாபத்துக்கும் ஆதரவாக இக்கொண்டாட்டம் அமையட் டும். அவர் மறைந்ததையும் உயிர்த் தெழுந்ததையும் கொண் டாடும் இவ்விழாவின் மூலம் அவருடைய வீர உணர்வில் ஒரு சிறு பகுதியாயினும் நம்மிடம் குடி கொள்ளட்டும். அழகு, வாய்மை, நற்பண்பு, ஒழுக்க உயர்வு, அகத்தின் சுதந்திரம், கலை, அன்பு, சமாதானம், மனிதனின் சுயமரியாதை ஆகியவற்றை எய்த அவர் கொண்டிருந்த உறுதியில் சிறு பகுதியேனும், நம்மகத்தே பாய்ந்து குடிபுகட்டும்.

வெனீஸில் மரணம்

தாமஸ் மன்னின் குறுநாவல், 'வெனீஸில் மரணம்,' (1913) கலை ஞனுக்கும் சில்லரை முதலாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள மாறுபாட்டை மீண்டும் வற்புறுத்துகிறது. மிகுந்த சுயக் கட்டுப் பாடு மூலம், அக அமைதியும் பாதுகாப்பும் அடைந்ததையொட்டி, எழுத்தாளர் குஸ்டாஃப் அஷென்பாக், இரண்டு வாழ்க்கை நியதி களையும் ஒன்றுய் இணைப்பதில் வெற்றி கண்டதுபோல் தோன்று கிறது. ஆனல் வெனீஸ் நகர லீடோவில், தட்ஸியோ என்ற பையனைக் குஸ்டாஃப் காண்கிறுன். அவன் அழகில் தன்னைப் பறி கொடுக்கின்றுன். அரும்பாடுபட்டு அவன் அடைந்திருந்த மன நிறைவும் நிதானமும் ஒரு நொடியில் சீர்குலைக்கின்றன. அப்பை யனிடம் தீராத மோகம் கொண்ட குஸ்டாஃப், கிலேயிழந்து, அப் பையன் செல்லும் இடமெலாம் பின் தொடர்கிறுன். இங்கு தரப் பட்டுள்ள பகுதி கதையின் முடிவிலிருந்து எடுக்கப்பட்டது, மோகம், பரவச நிலேயில், குஸ்டாஃப் முன் தோன்றும் ஒரு கனவை இப்பகுதி சித்திரிக்கின்றது. அஷென்பாக்கின் அழிவிற்கு முன்னேடியாக அவன் அச்சம் அமைகின்றது. மேன்மை எய்திய கலேஞனை அவன், கீழ்த்தரமான அனேத்தையும் வென்று, வடிவின் தூய்மையை எடுத்துக்காட்டாக நிலே நாட்டி விட்டதாக எண்ணிக் கொண்டிருந்த அவன், கலேஞன் என்ற முறையில், அழகின் மேல்தான் கொண்ட மோசத்திற்கும் வேட்கைக்கும் பலியாகி விட்டான். 'ஸ்ட்ரோபரி' பழங்களேத் தின்றதால், காலராவால் பீடிக்கப்பட்டுச் சுரத்தால் வருந்திக் கடற்கரையில் அவன் மரணமடையும் தருவாயில், அப் பையன் தட்ஸியோ தன்னேக் கூப்பிடுவதைக் காண்கிறுன். 'அழுகி அழியும் நிலேயைச் சித்திரித்து, அழிவின் வரலாற்றை எழுதுபவன்; மரணம், மனக் கோளாறு ஆகியவற்றில் பிரியம் கொண்டவன்; அதல பாதாளத்தில் நாட்டம் கொண்ட அழகு ரசிகன்,' என்று தாமஸ் மன் தன்னேயே சித்திரித்துக் கூறியது இங்கு முற்றும் பொருந்தும்.

அன்றிரவு அவன் ஒரு பயங்கரக் கனவு கண்டான். ஆழ்ந்த உரக்கத்தில் அவனுக்கு உள்ளத்திலும் உடலுணர்விலும் ஏற்பட்ட ஓர் அனுபவத்தைத்தான் அதில் கலந்திருந்ததாகக் காணுமல், தனித்து நின்ற, புலன்களுக்கு மெய்யெனப்பட்ட ஓர் அனு பவத்தை கனவு என்று கூறலாமென்றல், அவன் கனவு கண்டான் என்று சொல்லலாம், அந்த அனுபவம் வெளிப்பட்ட அரங்கம், அவன் ஆன்மா; ஆயினும் அந்த நிகழ்ச்சிகள் வெளியிலிருந்து பாய்ந்தது போலவும், அவன் ஆன்மாவின் சூழ்ந்த எதிர்ப்பை வென்றது போலவும் தோன்றியது என்று சொல்லலாம். அந்த நிகழ்ச்சிகள் அவனே ஊடுருவி அப்பால் சென்று, அவனேயும்,

ஒரு வாழ்நாளின் கலாச்சார அமைப்பு முழுவதையும். மிதித்துச் சூரையாடி அழித்து விட்டுச் சென்றது போல் தோன்றியது எனலாம்.

தொடக்கத்தில், அச்சம் ; அச்சமும், ஆசையும் கலந்த, புதுமை அறியும் துடிப்பும் நடுக்கமும். இரவு குடிகொண்டது. அவன் புலன்கள் விழிப்படைந்தன. வெகு தொலைவிலிருந்து, அவனுக்கு உரத்த, குளறிய கூக்குரலும், ஆர்ப்பாட்ட ஒலியும், இரைச்சலும் கேட்டன. தட தட வென ஒலித்த ஓசை, நொறுங்கி விழுந்த ஓசை, மந்தமான இடி முழக்கம் ஆகியவை கேட்டன. காதைத் துளைக்கும் ஒலி — இறுதியில் ஊ—என்று இழுத்து நீண்ட ஓர் ஓலம் — அங்கு ஒலித்தது. இவற்றுடன் சேர்ந்து, இவை அனைத்துக்கும் மேலாகக் கொடுமையில் தோய்ந்த இனிமை பரவிய புல்லாங்குழல் ஒலி — கொஞ்சித் தவழும் ஒலி — கேட்போர் குடலையே மயக்கும்வரை, வெட்கமின்றி தொடர்ந்து இசைத்த ஒலி — ஓங்கி நின்றது. வரவிருப்பதன் பெயர் சொல்லி, இருட்டில், ஒரு குரல் அழைத்ததை அவன் கேட்டான். 'புதிய தெய்வம்!. சூழ்ந்திருந்த மூடுபனியை ஓர் ஒளி ஊடுருவியது. அந்த வெளிச்சத்தில், தன் கிராமப் பண்ணை வீட்டைச் சுற்றி அமைந்திருந்தது போன்ற ஒரு மலைக் காட்சியை அவன் கண்டான். மரம் அடர்ந்த மலைப் பகுதிகளிலிருந்து, அடிமரங்கள் நடுவிலிருந்து, பாசை படர்ந்து, பொடியாகிக் கொண்டிருந்த பாறைகளிலிருந்து, ஒரு படை—மனிதர்களும் விலங்குகளும் சேர்ந்த ஒரு படை—பாய்ந்து, உருண்டு வந்தது. மலைச்சரிவெல்லாம் சுடரொளிகளும் மனித உருக்களும், ஆர்ப்பாட்டமும் சுழலும் நடனமும், நிறைந்து ஒலித்தன. தங்கள் அரைக் கச்சையிலிருந்து தொங்கிய நீண்ட, முடி நிறைந்த, கம்பளித் தோலில், பெண்கள் தடுக்கி விழப் போனார்கள். தங்கள் தலையைப் பின்னால் உதறி, நீண்டொடுங்கிய முரசை உயரத் தூக்கிக் குலுக்கி, உரத்த கரகரத்த குரலில் அவர்கள் கூக்குரல் எழுப்பினர். உருவிய பட்டாக்கத்திகளையும், பொறி பறக்கச் செய்த தீவட்டிகளையும், அவர்கள் சுழற்றிக் கொண்டு ஆடினர். கொங்கை இரண்டையும் இரு கைகளில் பிடித்துக் கொண்டு, அவர்கள் ஓலமிட்டனர். துடிக்கும் நாக்கு கொண்டு சுருளும் பாம்புகளை அவர்கள் தங்கள் இடுப்பைச் சுற்றி இறுகப் பற்றினர். தலையில் கொம்பு தாங்கி, உடம்பெல்லாம் உரோமத்தால் போர்த்தப்பட்ட அவர்கள், இடுப்பில் விலங்குத் தோல்களைக் கட்டிக்கொண்டு, தலையைத் தாழ்த்திக் கைகளையும் தொடைகளையும் ஒரு சேரத் தூக்கி, வெறி பிடித்தவர்கள் போல் முரசு அடித்தனர்; சிலர் பாத்திரங்களில் அடித்து, இடி முழக்கம் போன்ற அதிர்வொலியை எழுப்பினர். நீளுருளைகளுக்கு மாலையிட்டு, அவன்றை ஆயுதமாகத் தாங்கிக்

கொண்டு, மீசை முளைக்காத இளைஞர்கள் பின்னால் ஓடி, தங்கள் கையிலிருந்த உருளைகளைக் கொண்டு அவற்றின் பிட்டத்தை இடித்தனர். அதன்பின்பு அவற்றின் பாயும் கொம்புகளை இறுகப் பற்றிக் கொண்டு, வெற்றி ஒலி எழுப்பிக் கொண்டு, ஆடுகள் தூக்கிச் செல்லப்பட்டன. கொட்டம் அடித்த அக் கூட்டத்தில் அத்தனை பேரும், ஒருவர் விடாமல், மென்மையான மெய்யெழுத்தொலியும் இறுதியில் நீண்டு இழுத்த 'ஊ' ஒலியும் கொண்ட அக்கூக்குரலை எழுப்பினர். அதில் காட்டுத் தனமும் இனிமையும் கலந்திருந்தன. அதைப்போன்ற கூச்சல் வேறெப் பொழுதும் எங்கும் கேட்டதேயில்லை. ஆத்திரம் கொண்ட ஆண் மானின் உக்காரம்போல் அது ஒலித்து, காற்றிலே எதிரொலித்து, பல மடங்கு அதிக ஓசையுடன் திரும்பும். வெறிப் பிடித்தது போல் கை கால்களை ஆட்டி, வேகமாக நடனமாட, ஒருவரை ஒருவர் உந்துவதற்கு அந்த ஒலியைப் பயன்படுத்துவார்கள். எப்படியும் அந்த ஒலி அடங்க அவர்கள் இடம் கொடுக்கவில்லை: ஆனால் புல்லாங்குழலின் கனமான, மயக்குகின்ற ஒலி, அனைத்தையும் ஊடுருவி, ஓங்கி நின்றது. இந்த ஒலிகளிலும் காட்சிகளிலும் சிக்கித் தினறி, வரவிருக்கும் விருந்தையும், பூரண சரணாகதியையும் வெட்கமின்றி எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனைக் கூட புல்லாங்குழல் ஒலி கவர்ந்து மயக்கியது. அவன் நடுங்கினான்; அவன் கூசிக் குறுகினான்; கண்ணியத்திற்கும் தற்கட்டுப்பாட்டுக்கும் கடும் பகைவனாய் விளங்கிய இப்புதிய தெய்வத்துக்கு எதிராகத் தன் சொந்த தெய்வத்தைக் காத்துப் போற்ற அவன் தளராத உறுதி கொண்டிருந்தான். ஆனால் அந்த ஓசையையும் ஒலியையும் மலைச் சுவர் வாங்கிக் கொண்டு, அதைப் பன்மடங்கு பெருக்கித் திருப்பித் தந்தது. அந்த ஒலி உரத்து, ஓங்கி, உச்ச நிலையை அடைந்து, தன் வெறியில் அவனை அடித்துச் சென்றது. மூச்சுத் திணறிப் பதைக்கும் உடல்களின் பவனி, ஆடுகளின் கார்ப்பான துர்நாற்றம், தேங்கி நிற்கும் தண்ணீர்க் குட்டைகளின் ஊத்த வாசனை—இவற்றைவிட இன்னும் பழக்கமான ஒரு வாசனை—காயங்கள், அசுத்தம், நோய், ஆகியவற்றின் அழுகிய வாசனை—ஆகியவற்றில் சிக்கித் திணறி அவனுடைய புலன்கள் சுழன்றன.

இக் கனவிலிருந்து அந்தத் துர்ப்பாக்கிய மனிதன் விழித்த போது, அவன் நிலையும் நிதானமும் இழந்து, தகர்த்து நொறுக்கப் பட்டவனாய், வேதாளத்தின் பிடியில் சிக்கிச் செயலற்றவனாய் இருந்தான். மனிதர் கண்ணில் படாமலிருக்கவேண்டு மென்று அவன் இனி கவலைப்படவில்லை. மற்றவர்கள் அவநம்பிக்கைக்கும் ஐயப்பாட்டுக்கும் தன்னை இலக்காக்கிக் கொள்வது பற்றி அவன் இனி கவலைப்படவில்லை. மேலும், அங்குக் கூடியிருந்தவர்கள் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தனர். குளிக்கும்

அறைகள் பல காலியாய் இருந்தன. உணவு அறையில் பல இடங்கள் காலியாயிருந்தன. தெருக்களில் அன்னியர் எவருமே கண்ணில் படவில்லை. இரகசிய உண்மை எப்படியோ வெளியில் தெரிந்துவிட்டது போலும். எவ்வளவு தடுத்துப் பார்த்தும் எங்கும் பீதி பரவியிருந்தது. ஆனால் முத்துக்கள் அணிந்திருந்த அச்சிமாட்டி மட்டும் தன் குடும்பத்துடன் அங்கு தொடர்ந்து தங்கினாள். ஒருவேளை அந்த வதந்திகள் அவள் காதுக்கு எட்ட வில்லையோ—அல்லது, தன் மதிப்பும் அச்சமற்ற தன்மையும் கொண்டிருந்த அவள் அவற்றைச் சட்டை செய்யவில்லையோ. தட்ஸியோ அங்கு தங்கினான். மரணமும் பீதியும் சேர்ந்து அத்தீவிலிருந்து மற்றவர்கள் அனைவரையும் விரட்டிவிட்டுத் தன்னையும் தன் ஆசைக்குரியவனையும் மட்டும் தனியாக விடக் கூடுமென்று, மோகத்தில் மூழ்கியிருந்த அஷென்பாக்குக்குச் சில சமயங்களில் தோன்றியது. நீண்ட காலை வேளைகளில், கடற்கரை யில் படுத்திருக்கும்போது, அவன் அப்பையனையே வெறித்துத் துணிந்து பார்ப்பான். அப்பையனைவிட்டு அவன் பார்வை இரவு நேரங்களில், வெட்கத்தை மறந்துவிட்டு, பயங்கர மரண மும் நடமாடிய நகரத்தின் குறுகிய பாதைகளில், அப்பையனைப் பின்தொடர்ந்து செல்வான். அத்தகைய நேரங்களில், ஒழுக்க நெறி பாழடைந்து விட்டது போலவும், கீழ்த்தரமானதும் இயற் கைக்கு முரணானதும் தான் நம்பிக்கைக்கு இடமளிப்பவை போல வும் அவனுக்குத் தோன்றியது.

எல்லாக் காதலரையும் போலவே, அவனும் தன் அன்புக்குரிய வனை மகிழ்விக்க விரும்பினான். வெற்றி கிட்டாதோ என்று அஞ்சி வேதனையில் துடித்தான். மிடுக்கான 'டை' கைக்குட்டைகள் போன்றவற்றாலும், இளமைக்குரிய மற்ற அலங்காரங்களாலும், தன் ஆடையை அழகுபடுத்திக் கொண்டான். வாசனைத் திரவி யங்கள் பூசி, அணிகள் பூண்டு ஒவ்வொரு நாளும் ஆடையலங் காரத்தில் பல மணி நேரம் செலவு செய்தான். பகட்டாக உடை யுடுத்திப் பதட்டமான துடிப்புடன், இரவு உணவு அருந்த வரு வான். தன் மனத்தைக் கவர்ந்திருந்த இளமையழகிற்கு எதிரே, தன் வயதான உடம்புபற்றி எண்ணியபோது, அவனுக்கே அரு வருப்பு ஏற்பட்டது. தன் நரைமுடியையும் வற்றிய உடலையும் கண்டு அவனுக்குத் தாங்கொணா வேதனை ஏற்பட்டது. இளமை யின் தோற்றத்தையும் பசுமையையும் பெற, அசட்டுத் துணிச்ச லான முயற்கள் பல செய்தான். ஹோட்டல் நாவிதனிடம் அடிக் கடி சென்று வந்தான்.

ஒருநாள் மாலை அவன், தான் காமுற்ற பையனைப் பின் தொடர்ந்து, அந்த துர்ப்பாக்கிய நகரத்தின் மையப் பகுதிக்குச் சென்றான். நெளிந்து வளைந்த சிறு தெருக்கள், சதுக்கங்கள்,

ஓடைகள், பாலங்கள் ஒவ்வொன்றும் மற்றொன்றைப் போலவே வேறுபாடு இல்லாமல் காணப்பட்டதால், அவன் அடியோடு வழி தவறி நிலையிழந்தான். எந்தத் திக்கில் அவன் சென்றான் என்பது கூட அவனுக்கு விளங்கவில்லை. அவன் கண்கள் எந்த உருவத்தைக் கண்டு பருகத் தாகம் கொண்டிருந்தனவோ, அந்த உருவத்தைத் தவறவிடக் கூடாதென்பதில் மட்டுமே அவன் கவலை கொண்டிருந்தான். சுவர்களின் ஓரத்தில் பதுங்கிச் சென்றான்: கட்டடங்களுக்குப் பின்போ, மற்றவர்கள் முதுகுக்குப் பின்போ மறைந்து நின்றான். நீண்ட நேரம் களைப்பை அவன் உணரவில்லை என்ற போதிலும், அவன் புலன்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சி, அவனுக்கு மேலும் மேலும் களைப்பை ஊட்டியது. தட்ஸியோ மற்றவர்களுக்குப் பின்னால் நடந்தான்; குறுகிய சந்துகளில் அவர்கள் தன்னை முந்திச் செல்ல இடம் கொடுத்துவிட்டு, மெதுவாக அவர்களுக்குப் பின்னால் நடந்து செல்கையில், தன்னுடைய புதுமையான மங்கிய பழுப்பு நிறக் கண்களின் பார்வையினால், தன் காதலன் தனக்குப் பின்னால் வருகிறான் என்பதை அவ்வப்போது பார்த்துத் திருப்தி அடைந்து கொள்வான். தட்ஸியோ அவனைப் பார்த்தான்; ஆனால் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதை அறிந்த அஷென்பாக் பரவசமடைந்தான். அந்தக் கண்களின் காந்தப் பார்வையால் கவரப்பட்டு, தன் மோகம், மடமை எனும் பாசக்கயிற்றால் இழுக்கப்பட்டுக் காதலுக்குத் தன்னைப் பறிகொடுத்துத் தன் கேவலமான ஆசையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவன் நடந்தான். இறுதியில் அவன் ஏமாற்றம் அடைந்தான். வளைவான ஒரு சிறு பாலத்தை அப்போலந்து இனக் குடும்பம் கடந்தது. பாலத்தின் வளைவு, அவர்களை அவன் பார்வையிலிருந்து மறைத்தது. அதில் அவன் ஏறி வந்தபோது, அவர்கள் கண்ணில் படவில்லை. மூன்று திக்கிலும், நேராகச் சென்ற பாதையிலும், அசுத்தமான, குறுகிய, ஓடத் துறையின் இரு மருங்கிலும்—அவன் தேடினான். ஆனால் அவர்களைக் காணவில்லை. அடியோடு சோர்ந்து, தெம்பிழந்து, அவன் அப்பையனைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று.

அவன் தலை சாய்ந்தது; அவன் உடம்பெல்லாம் ஒட்டும் வேர்வையில் ஊறியிருந்தது. அடங்காத தாகம் அவனை வருத்தியது. பசியைத் தீர்க்க ஏதாகிலும் கிடைக்குமா என்று அவன் தேடிப் பார்த்தான். ஒரு சிறு பழக்கடையைக் கண்டுபிடித்து, அதில் சில 'ஸ்ட்ரோபரி' பழங்களை வாங்கினான். அவை அதிகம் பழுத்து, மிருதுவாக இருந்தன. நடந்துகொண்டே அவற்றைத் தின்றான். அந்தத் தெருவின் கோடியில் ஒரு சிறு சதுக்கம் காணப்பட்டது. அவனுக்குப் பிடித்த, தனிமையான, மனத்திற்கு இனிய

இடங்களில் ஒன்றுக அது அமைந்திருந்தது. சில வாரங்களுக்கு முன்பு, அதே இடத்தில் தான் உட்கார்ந்திருந்தது, தப்பி ஓடத் தான் வகுத்துத் தோல்வியில் முடிந்த திட்டம் அந்த இடத்தில் தான் உதயமானது என்பதும், அவன் நினைவிற்கு வந்தது. கிணற்றின் படிக்கட்டில் அவன் சோர்ந்து உட்கார்ந்து கல்வகையத் தின் மீது தலையைச் சாய்த்தான். அங்கு அமைதியாக இருந்தது. கற்களுக்கிடையே புல் முளைத்திருந்தது. செத்தையும் குப்பையும் சுற்றிலும் சிதறிக்கிடந்தன. உயரமான, கனையிழந்த, பழைய வீடுகள் சதுக்கத்தைச் சுற்றி நின்றன. அவற்றில் ஒன்று மிக விசாலமான வீடாம், காலிப் பொந்துகளாய் இருந்த சாளரங் களும், சிறிய உப்பரிகைகளும் கொண்டிருந்தது. இன்னொரு வீட்டின் அடித்தளத்தில், ஒரு மருந்துக் கடை இருந்தது. நச்சரி நீர்மத் திராவகத்தின் வாசனை, காற்று வீச்சில் மிதந்து வந்தது.

அங்கு, அக் கிணற்றின் படிக்கட்டில், அவன் உட்கார்ந்திருந் தான். கலையையும் கௌரவங்களையும் ஒருங்கிணக்கும் வகை கண்ட அறிஞன் அவன். 'கதியிழந்தவன்' என்று நூலை ஆக்கிய வன்; கலைமரபைப் பின்பற்றாத பாணியையும், அப் பாணியில் எழுதப்பட்ட நூல்களையும், அதல பாதாள நிலையிடமும் விலக்கி ஒதுக்கப்பட்ட மனித ஆன்மாவின் சஞ்சல நிலையிடமும், கொள்ளும் அனுதாபத்தையும், மரபுக்கிசைந்த தூய்மையுடன் நிராகரித்த இலக்கியப் படைப்பாளன் அவன். அறிவைத் தன் காலடியில் கிடத்தி, உச்சிக்கு ஏறியவன் அவன். அவலச் சுவையில் ஈடுபாடு கொண்ட நிலைக்கு அப்பாற்பட்டு, புகழின் பொறுப்பு களுக்கும் கடமைகளுக்கும் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்ட வன் அவன். அவன் புகழ் அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. அவன் பெயர் பெருமதிப்பு ஈட்டியிருந்தது. அவனுடைய எழுத்து நடை, மாணவர்க்கு எடுத்துக்காட்டாய் பள்ளிகளில் ஏற்கப்பட்டிருந்தது. அத்தகைய புகழ் பெற்ற பேரறிஞன் அங்கு உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்ணி மைகள் மூடியிருந்தன. கண்ணின் கரு மணிகள் மட்டும் அவ்வப் போது, விரைவாகவும் பக்கவாட்டிலும், பளிச்சிட்டுக் குறிக்கும் காமப் பார்வைக்கும் இடையே நின்றன. கனவுகளுக்கு அடிப் படையாய் இருக்கும், இயல் முரணிய நியாய வாதத்தால், அவனுடைய குழம்பிய மூளையில் உருவான வாக்கியங்களின் பகுதியான தனித் தனி வார்த்தைகளைச் சாயம் பூசிய, தொங்கிய வாய் முணுமுணுத்தது.

சில நாட்கள் கழித்து ஒரு நாள் காலையில், குஸ்டாஃப் அஷென் பாக், வழக்கமான நேரத்தை விடச் சற்றுத் தாமதித்தே அவன் விடுதியை விட்டுப் புறப்பட்டான். அவனுக்கு உடல் நலமில்லை.

அவ்வப்போது தலை சுற்றி மயக்கமாய் வந்தது அவனுக்கு. அந்த மயக்கம், உடல் நலக்குறைவால் மட்டும் ஏற்பட்டதல்ல. அத்துடன் வேகமாக அவனைக் கவ்விய அச்ச உணர்வும், வெறுமை உணர்வும், அனைத்தும் பயனற்றது என்ற ஏக்க உணர்வும் அவனைத் தாக்கின. இந்த வெறுமை, தன்னை மட்டிலும், பொருத்ததா, அல்லது, வெளியுலகிற்கும் பொருந்துமா, என்று அவனுல் கூற இயலவில்லை. விடுதியின் தாழ்வாரத்தில் மூட்டை முடிச்சுகள் கட்டி பயணத்திற்கு எடுத்துச் செல்லத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. அவை யாருடைய சாமான்கள் என்று விடுதிப் பணியாளரைக் கேட்டான். அவன் எந்த பதிலை எதிர் பார்த்தானோ அந்தப் பதிலே கிடைத்தது. அப் போலந்து இனக் குடும்பத்துக்குச் சொந்தம் என்று தெரியவந்தது. துன்பத்தின் தழும்பேறிய அவன் முகத்தின் தோற்றம் மாறவில்லை. சாதாரண மாய்க் கேட்ட கேள்விக்குக் கிடைக்கும் சுவையற்ற பதிலைப் பெரும் போக்காகக் கேட்டுக் கொள்ளும்போது, அசட்டையான பாவத்துடன் தலையை நிமிர்த்துவது போலவே, அவனும் செய் தான். 'எப்பொழுது புறப்படுகிறீர்கள்?' என்று இன்னொரு கேள்வி கேட்டான். 'மதிய உணவுக்குப் பின்,' என்று பதில் கிடைத்தது. அவன் தலையை ஆட்டி விட்டுக் கடற்கரையை நோக்கிச் சென்றான்.

கடற்கரைக் காட்சி உற்சாக மூட்டுவதாய் இல்லை. கடற்கரைக் கும் முதல் மணல் திட்டுக்கும் இடையே, ஆழமில்லாத, பரந்த நீர்ப் பரப்பு, நெடுகிலும் சுருள்சுருளாக நீர்ச் சுழிகள் தோன்றி மறைந்து, நீரே நடுங்குவதுபோல் காட்சியளித்தது. ஒரு நேரத் தில் கலகலப்பாகவும் துடிப்பாகவும் இருந்த கடற்கரை, இப் பொது இலையுதிர் காலத்திற்குரிய தோற்றம் கொண்டு, பருவம் கடந்துவிட்டது போல் காணப்பட்டது. அங்கு மக்கள் நடமாட் டமே இல்லை. கடற்கரை சுத்தமாகக் கூட இல்லை. ஒரு முக்கால் நிலைச் சட்டத்தின்மேல் புகைப்படக் கருவி ஒன்று, நீர் ஓரத்தில் நின்றது. அது வேண்டாமென்று விட்டுச் செல்லப்பட்டது போலும். வீசிய காற்றிலே, அவன் கருப்புத் துணி பிய்ந்தது.

தட்ஸியோ அங்கு இருந்தான். தன்னைவிட்டு இன்னமும் செல்லாமலிருந்த மூன்று நான்கு விளையாட்டுத் தோழர்களுடன் அவன் தன் குளிக்கும் அறையின்முன் நின்று கொண்டிருந்தான். குளிக்கும் அறைகளுக்கும் நீருக்கும் நடுவழியில் தன் நாற்காலி யைப் போட்டு தன் முழங்கால்கள்மீது கம்பளியை பிரித்து, அஷென்பாக் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தான். பயணத்திற்கு மூட்டை முடிச்சுகள் கட்டுவதில் பெரியவர்கள் முனைந்திருந்ததால், சிறுவர்கள் விளையாட்டை மேற்பார்வை செய்ய அங்கு யாரு மில்லை. விளையாட்டு, விதி முறைகளை மீறிக் காட்டுத்தனமாகவே

இருந்தது. மிடுக்காக உடையணிந்து, நேர்த்தியாக வாரப்பட்ட, கருமையான முடியுடன் வாட்ட சாட்டமாய் இருந்த ஜாஸ்கியு என்ற பையன். தன் கண்ணில் மண் விழுந்து விட்டதென்று கோபம் கொண்டு, தட்ஸியோவைச் சண்டைக்கு இழுத்தான். அச்சண்டையில், பலவீனமான பையன் விரைவில் தோல்வி அடைந்தான். பல வாரங்களாகத் தட்ஸியோவுக்குப் பணிந்து செல்ல வேண்டியிருந்ததற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பு கிட்டியது என்று பண்படாத முரட்டு சுபாவம் கொண்ட ஜாஸ்கியு எண்ணினான் போலும். தோற்றுப்போனவனே எழுந்திருக்க விடாமல், தட்ஸியோ முதுகில் தன் முழங்காலை வைத்துத் தட்ஸியோ முகத்தை மண்ணிலே நீண்ட நேரம் அழுத்திக் கொண்டிருந்தான் ஜாஸ்கியு. களைப்புற்றிருந்த தட்ஸியோவுக்கு மூச்சுத் திணறிவிடும் போலிருந்தது. தன் மேலேயிருந்த பையனை உதறித்தள்ள அவன் விட்டுவிட்டு முயன்றான்; அதன் பிறகு ஒன்றும் முடியாமல் படுத்துக் கொண்டான். திடீரென அவனுக்குத் தசை இழுத்துக்கொள்ளத் தொடங்கியது. ஆத்திரம் கொண்ட அஷென்பாக் பாய்ந்து, தட்ஸியோவை மீட்கப்போகும் நேரத்தில், ஜாஸ்கியு தானாகத் தன் பிடியைத் தளர்த்தி எழுந்து அவன் போய்விட்டான். வெளிறிய முகத்துடன், தட்ஸியோ, பாதி எழுந்து உட்கார்ந்து, ஒரு கையில் சாய்ந்து கொண்டு, பல நிமிட நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் ஒளியிழந்திருந்தன; அவன் முடி கலைந்திருந்தது. சில நிமிடங்களுக்குப்பின் அவன் எழுந்து மெதுவாக நடந்து சென்றான். மற்ற பையன்கள் முதலில் சிரித்துக் கொண்டு அவனைக் கூப்பிட்டனர்; பிறகு கெஞ்சி அழைத்தனர். ஆனால் அவன் செவிசாய்க்கவில்லை. விரைவிலேயே ஜாஸ்கியு தன் செயலுக்கு மிகவும் வருந்தினான். அவன் தன் நண்பனைத் தொடர்ந்து அவனுடன் சமாதானம் செய்து கொள்ள முயன்றான். ஆனால் தட்ஸியோ, அவனை நிராகரிக்கும் வகையில் தன் தோளை உலுக்கிவிட்டுத் தண்ணீர் ஓரத்துக்குச் சென்றான். அவன் காலணி எதுவும் அணியவில்லை; கோடிட்ட நார்மடி 'சூட்'டும் சிவப்பு 'டை' முடிப்பும் அவன் அணிந்திருந்தான்.

தண்ணீர் ஓரத்திலேயே சிறிதுநேரம், தலைகுனிந்து, கால் பெருவிரல் ஒன்றால் ஈரமண்ணில் படம் வரைந்து கொண்டு, நின்றிருந்தான். அதற்குப் பிறகு நீரில் அவன் காலெடுத்து வைத்தான். மிக ஆழமாயிருந்த இடத்திலும் கூட, தண்ணீரில் தத்தி நடந்து, மணல் மேட்டை அடைந்தான். அங்கு கடலை நோக்கி முகத்தைத் திருப்பிச் சிறிது நேரம் மீண்டும் நின்றுவிட்டு, இடதுபக்கத்தில் கடல் ஒதுக்கிவிட்டிருந்த குறுகிய மணல் பரப்பில் மெதுவாக நடக்கத் தொடங்கினான். அந்த இடத்தில் அவன் இங்குமங்கும்

நடமாடினான். கடற்கரைக்கும் அவனுக்கும் நடுவே நீர்ப்பரப்பு நின்று பிரித்தது. அவனுக்கும் தன் நண்பர்களுக்கும் நடுவே அவனுடைய கோபமும் பெருமையும் குறுக்கே நின்றன. தன் மூடி காற்றில் மிதக்க, காற்றும் கடலும் அவனைச் சூழ்ந்திருக்க, மூடுபனிப் புகைப்படலம் பின்னணியில் அமைய, அவன், தனியனாய், வெகு தொலைவில் உள்ளவனாய் நின்றான். மீண்டும் ஒருமுறை நின்று திரும்பிப் பார்த்தான். திடீரென நினைவு வந்தது போலவோ, அகத்தூண்டுதலின் பேரிலோ, அவன் இடுப்புக்கு மேல் உடலை வளைத்து மிக ரம்மியமாக இடையில் ஒரு கை வைத்துத் தன் தோளுக்கு மேல் கடற்கரையை நோக்கிப் பார்த்தான். அந்த ஆள் இன்னமும் தன்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். முதன் முறையாக, ஹோட்டல் தாழ்வாரத்தில் அவன் உட்கார்ந்திருந்து தன் மங்கிய பழுப்பு நிறக் கண்கள் தட்ஸியோவின் கண்களோடு உறவாடச் செய்ததுபோலவே, இப்பொழுதும் உட்கார்ந்து உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் நாற்காலியில் தலையைச் சாய்த்து தொலைவில் இருந்த பையனின் அங்க அசைவுகளைக் கூர்ந்து கவனித்து, தட்ஸியோவின் பார்வைக்குப் பதில் சொல்வதுபோல, தன் தலையை நிமிர்த்தினான். நிமிர்ந்த தலை நெஞ்சிலே சாய்ந்தது. கண்ணிமைக்குப் பின்னிலிருந்து கண்கள் தங்கள் பார்வையைச் செலுத்தின. ஆழந்த உறக்கத்தின் அமைதியான, குவிந்த பார்வை அவன் முகம் முழுவதும் பரவியது. வெளிறிய முகமும் அழகிய உருவும் கொண்ட அந்த 'அழைப்பாளன்', தன்னைப் பார்த்துச் சிரித்தது போலவும், தன்னை அழைத்தது போலவும், அவனுக்குத் தோன்றியது. எல்லையற்ற வளம் நிறைந்த புதுமையை எதிர்பார்த்து அவன் செல்கையில், அப்பையன் தன் இடுப்பிலிருந்து எடுத்த கையைக் கொண்டு, வெகு தொலைவில் வெளியே சுட்டிக் காட்டி, அங்கு தன்னை அழைத்ததுபோல் அவனுக்குத் தோன்றியது.

நாற்காலியில் உட்கார்ந்தபடியே, மயங்கி கிடந்த பெரியவரின் உதவிக்கு ஒரு சில நிமிடங்கள் கழித்துத்தான் சிலர் சென்றார்கள். அவர் அறைக்கு அவரைத் தூக்கிச் சென்றார்கள். இரவு வருமுன், அவருடைய மரணம் பற்றிய செய்தி பரவி, அவரிடம் மதிப்பு கொண்டிருந்த உலகுக்கு அதிர்ச்சியை அளித்தது.

ஹெய்ன்ரிஷ் மன்

அடிமைக் குடிமகன்

தாமஸ் மன்னின் உடன் பிறப்பான ஹெய்ன்ரிஷ் மன் (1871–1950) தம் நூல்கள் தடை செய்யப்பட்டபோது ஜெர்மனியை விட்டு வெளியேறி, முதலில் செக்கோஸ்லாவியாவுக்குச் சென்று, பின்னர் கலிஃபோர்னியாவில் குடியேறினார். அவருடைய புதினங்களும் கதைகளும், அநேகமாக எல்லாம், அரசியல் சார்பும் ஈடுபாடும் கொண்டவை. கெய்ஸர், வேமார் குடியரசு, நாஜிகளின் மூன்றும் ரீஷ் ஆகிய ஆதிக்கங்களின் கீழ், ஜெர்மன் அதிகார வர்க்கத்தின் நடத்தையை அவை வன்மையாகக் கண்டனம் செய்தன. தைக்கும் நையாண்டிச் சொற்கள் மூலமும் மிகைப்படுத்திக் காட்டி விபரீத நிலையைப் புலப்படுத்துவதன் மூலமும் அவர் தம் நடையில் மெருகேற்றினார். தமது கணக்கற்ற கட்டுரைகளிலும் பிரச்சார அறிக்கைகளிலும், ஹெய்ன்ரிஷ் மன் மனிதாபிமானம் கொண்ட சோஷலிசத்தை ஆதரித்து, தேசிய சோஷலிசத்தையும் இராணுவ வெறியையும் எதிர்த்துப் போராடினார். அடிமைக் குடிமகன் என்ற அவர் புதினம் 1906—1914 ஆண்டுகளுக்கிடையே எழுதப்பட்ட போதிலும், 1918ஆம் ஆண்டு வரை முழு வடிவில் வெளியாகவில்லை. அந் நூலில் இரண்டாம் வில்ஹெல்மின் காலத்தின் போக்கை அம்பலப்படுத்துகிறார். சில்லரை முதலாளி வர்க்கம், கைஸருக்கும் திருச்சபைக்கும் பணிந்து அடங்கித் தன் தன் மதிப்பை இழந்து, 'அடிமை'யாய் அதே நேரத்தில், தனக்கிருந்த வல்லமையைப் பயன்படுத்திப் பலமிழந்திருந்த கீழ்மட்ட மக்களைச் சுரண்டிக் கொடுமைப்படுத்தியதை அவர் அந்தப் புதினத்தில் சித்திரித்திருந்தார். தீதரிஷ் ஹெஸ்லிங், இந்த வர்க்கத்தின் பிரதிநிதி. அவர் அதிகாரத்தை அடையும் நிலையில், அவர் ஒழுக்கச் சீரழிவு முற்றுப் பெறுகிறது. இங்கு தரப்பட்டுள்ள முதல் பகுதி, வேலை கிடைக்காத பாட்டாளிகள் செய்யும் ஆர்ப்பாட்டக் கிளர்ச்சி பற்றியது. அரசரும் முதலாளி வர்க்கமும் பாட்டாளி மக்களுக்கு எதிராகப் பிற்போக்குக் கூட்டு சேர்ந்துள்ளதையும், மேல் வர்க்கத்தினரின் தயவை அடியோடு நம்பியே வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையில் பாட்டாளிகள் உள்ளதையும், கொள்கை வெறி, இராணுவ வெறி வலுத்துள்ளதையும், இப்பகுதி சித்திரிக்கிறது. இரண்டாவதாகத் தரப்பட்டுள்ள பகுதியில், புதுத் தொழிலதிபராக ஹெஸ்லிங் நிகழ்த்தும் உரை, வேண்டுமென்றே சற்றுமிகையாகச் சித்திரிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தக் காலத்தில் முதலாளிக்கும் தொழிலாளருக்குமிடையே இருந்த உறவைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

1892ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மழையும் குளிரும் மிகுந்த அந்த நாட்களில் அவன் அடிக்கடி தெருவில் அலைந்து கொண்டிருந்தான். மகத்தான நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துக் கொண்டு, உன்டர் டென் லின்டன் சாலை எப்படியோ மாறியிருந்தது; அந்த மாறுதலின் தன்மை மட்டும் இன்னும் தெளிவாக எவருக்கும் புலப்படவில்லை. தெருக்கள் சந்திப்பில், குதிரைப் போலீசார் ஆயத்தமாய் நின்று கொண்டிருந்தனர். தெருக்களில் நடமாடியவர்கள், இந்தப் போலீசு கெடுபிடியைச் சுட்டிக் காட்டித் தங்களுக்குள்ளாகப் பேசிக் கொண்டனர். 'வேலையில்லாமல் திண்டாடுவோர்' கிளர்ச்சி நடத்தப் போவதை வேடிக்கை பார்க்கப் பொதுமக்கள் சிறிது நேரம் நின்றனர். வடக்கிலிருந்து, அவர்கள் சிறு சிறு குழுக்களாக, மெதுவாக அணிவகுத்து வந்தனர். லின்டன் சாலையை அடைந்ததும் அவர்கள், குழப்பமுற்றதுபோல் தயங்கி, நின்று யோசனை கேட்பதுபோல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, அரண்மனை பக்கம் திரும்பினர். அங்கு அவர்கள் மௌனமாகச் சட்டைப் பையில் கை வைத்துக் கொண்டு, நின்றனர். அவர்களைத் தாண்டிச் சென்ற கோச்சு வண்டிகளின் சக்கரங்கள் அவர்கள் மேல் நீரை வாரி இறைத்தன. நிறம் மங்கி வெளுத்துப் போயிருந்த அவர்கள் மேலங்கி மேல் விழுந்த மழை உடம்பு மேல் படாமலிருக்கத் தங்கள் தோள்களைக் குவித்த வண்ணம் அவர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் பலர் தலையைத் திருப்பி, அந்த வழியே சென்று கொண்டிருந்த அதிகாரிகளையும், கோச்சு வண்டிகளில் சென்ற சீமாட்டிகளையும் பர்க்ஸ்டிரஸ்ஸேயிலிருந்து அப்பக்கம் உலாவ வந்த கனவான்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முகங்களில் அச்சுறுத்தும் பார்வையோ, புதுமை காணும் ஆர்வமோ கூட, காணப்படவில்லை. அவர்கள் மற்றவர்களைப் பார்க்க விரும்பியதற்கு மேலாகத் தங்களை மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியதாகவே தோன்றியது. ஆனால் இன்னும் சிலரோ, அரண்மனையின் சாளரங்கள் மேல் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். மேலே நிமிர்ந்த அவர்கள் முகங்கள் மேல், மழை விழுந்தது. குதிரை மேல் சவாரி செய்த ஒரு போலீஸ்காரன், அவர்களை விரட்டிக் கொண்டிருந்தான்; வேகமாகத் தெருவைத் தாண்டிச் செல்லவோ, அடுத்த மூலையில் போய் ஒதுங்கி நிற்கவோ, அவர்களைப் போலீஸ்காரன் தூண்டிக் கொண்டிருந்தான். அவர்கள் மீண்டும் நின்றனர். மங்கலான ஒளிபடர்ந்த அவர்களின் பரந்த, சும்பிய, முகங்களுக்கும், அந்தி வேளை இருளால் சூழப்பட்ட உறுதியான சுவருக்கும் இடையே, உலகம் தொங்கிக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

"இது கட்டுக்கடங்காத கிளர்ச்சிக்காரக் கும்பல்தானே. போலீசார் ஏன் இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை" என்று தீதரிஷ் கூறினர்.

"கவலைப்படாதீர்கள். என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போலீசாருக்குத் தெளிவாக உத்தரவிடப்பட்டுள்ளது. மேலே இருக்கும் பெரியவர்கள் இதைப்பற்றி ஆழ்ந்து ஆலோசித்துத் தெளிந்த முடிவுக்கு வந்துள்ளார்கள்; அதை மட்டும் நிச்சயமாக நீர் நம்பலாம். சமுதாய அமைப்பில், இத்தகைய கொப்புளங்களை தொடக்கத்திலேயே அடக்கிவிடுவது சில சமயங்களில் உசிதமல்ல. அவை கனிய அனுமதித்து, அதற்குப்பின் அடியிலிருந்து களைந்தெறிய வேண்டும்", என்று லீபல் பதிலளித்தார்.

லீபல் குறிப்பிட்ட கனிவுக் கட்டம் ஒவ்வொரு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. 26ஆம் தேதி அக்கூட்டம் உருவாகிவிட்டது போல் தோன்றியது. வேலையில்லாதவர்களின் ஆர்ப்பாட்டம் முன்னிலும் தீவிரமாகவும் முனைப்பாகவும் இருந்தது. வடக்குத் தெருக்களில் ஒன்றுக்குத் துரத்தி அடிக்கப்பட்ட அவர்கள், தடுத்து நிறுத்தப்படுவதற்குமுன், முன்னிலும் அதிக எண்ணிக்கையுடன், பக்கத்துத் தெருவிலிருந்து பாய்ந்தனர். உண்டர் டென் லின்டென் சாலையில், அபேரணியின் பிரிவுகள் ஒன்று கூடின; கலைக்கப்பட்டபின் மீண்டும் மீண்டும் ஒன்று கூடின; அரண்மனையை அடைந்து, அங்கிருந்து தள்ளப்பட்டுப் பின்பு மீண்டும் அங்கு நெருங்கின. ஓசையின்றி, அடக்கமுடியாதாய் பெருக்கெடுத்தோடும் நீர்போல், கூட்டம் பொங்கி வழிந்தது. போக்கு வரத்தில் நெரிசல் ஏற்பட்டது; நடைப்பயணர் ஒருவரோடு ஒருவர் இடித்து மோதினர். சதுக்கத்தில் மெல்லப் பெருக்கெடுத்து வழிந்த வெள்ளத்திலே, அவர்கள் ஈர்க்கப்பட்டனர். ஏழைகளின் கூட்டமாகிய இக் கருங்கடல், பிடிவாதமாய் அலைமோதி, ஆர்ப்பரித்தது. 'ரொட்டி, வேலை' என்ற தோரணங்களைத் தாங்கும் கம்பளங்கள், அக்கடலில் மூழ்கிவிட்ட கப்பல்களின் பாய்மரக் கம்பங்கள்போல் காட்சியளித்தன. அலைகடல் ஆழத்திலிருந்து, ஒருகணம் இந்த மூலையிலிருந்தும் மறுகணம் மறு மூலையிலிருந்தும், 'ரொட்டி, வேலை,' என்று தெளிவான முழக்கம் ஒலித்தது. மேகம் இடிப்பதுபோல், அக்கூட்டத்தின்மேல் மோதி, முழங்கியது, 'ரொட்டி, வேலை,' என்ற முழக்கம். குதிரைப் போலீசார் தாக்கினர்; பொங்கிய கூட்டம் பின்வாங்கியது; கூட்டத்தின் ஆரவாரத்துக்கு மேலாக, 'ரொட்டி, வேலை,' என்று பெண்களின் கீச்சுக் குரல் ஒலித்தது.

போலீசார் கூட்டத்தின்மீது பாய்கின்றனர். அப்ரீட்ரிஷ் நினைவுச் சின்னத்தில் நின்று வேடிக்கை பார்த்தவர்கள் விரட்டி அடிக்கப்

பட்டனர். ஆனல் அவர்கள் வாய் திறந்த வண்ணம் இருக்கின்றனர். சில்லரை அதிகாரிகள் கூட்டத்திலிருந்து, உதறப்படும் சமக்காளங்கள் போல் தூசி எழும்புகிறது. தீதரிஷ் பழக்கமில்லாத ஒரு கோணல் முகம், அவரிடம் ஏதோ உரக்கக் கூவுகின்றது. ஹெர்.ஃபன் பார்னிம் என்று அவர் இனம் கண்டு கொள்வதற்குள், அந்த முகம் மறைந்து விடுகிறது. அவரைப் பின் தொடர்ந்து செல்ல தீதரிஷ் முயல்கிறார். கூட்டத்தின் மோதலில் தெருவில் வெகு தூரம் வரை தள்ளப்பட்டு, உணவு விடுதி ஒன்றின் சன்னலருகே இழுத்துச் செல்லப்படுகிறார். சன்னல் தவிடு பொடியாகும் சத்தம் கேட்கிறது. "நான் அழகுத் தகிலத் தொப்பி அணியவில்லை என்ற காரணத்திற்காக, என்னை, என் முப்பது காசுகளுடன், இங்கிருந்து அன்றொரு நாள் விரட்டியடித்தனர்", என்று ஒரு தொழிலாளி கூவிக்கொண்டே, மற்றவர்களை முந்திக்கொண்டு, சன்னல் வழியாக, உள்ளே நுழைகிறான். உள்ளே, மேசைகள் தரையில் தலை கீழாய்க் கவிழ்க்கப்பட்டிருந்தன. கூட்டத்தினர் உடைந்த கண்ணாடித் துண்டுகள்மேல் விழுந்து, ஒருவரை ஒருவர் வயிற்றில் முட்டி மோதி, உதவி நாடி உரக்கக் கூவிக் கொண்டிருந்தனர். "இனிமேல் யாரும் உள்ளே வராதீர்கள். எங்களுக்கே மூச்சு திணறுகிறது" என்று கூவக் கூவ, மேலும் மேலும் அதிகப் பேர் உள்ளே ஏறி வந்தனர். போலிசார் ஆட்களை இடித்துப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தனர். தெருவின் நடுப்பகுதி காலியாய்க் கிடந்தது, வெற்றிப் பவனிக்கு ஆயத்தமாய் இருப்பதுபோல். "அது வில்லியம் அல்லவா," என்று திடீரென ஒருவர் கூவுகிறார்.

தீதரிஷ் எப்படியோ மீண்டும் வெளியே வந்து விட்டார். திடீரென தெருவின் அகலம் முழுதும், நெருக்கமான கூட்டமாய், ஊர்வலம் செல்ல முடிந்தது எப்படி என்பது எவருக்குமே விளங்காததாக இருந்தது. கைஸர் வீற்றிருந்த குதிரை அருகில்வரை, இரு மருங்கிலும் அவர்கள் ஊர்வலமாய் வந்தனர். கைஸரைப் பார்த்துக் கொண்டே அவர் அருகே நடந்து சென்றனர். கோஷமிட்டுக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் இங்கு மங்கும் கலைக்கப்பட்டுத் தள்ளப்பட்டது. அவர்கள் அனைவரும் அவரைப் பார்த்துக் கொண்டே சென்றனர். இருண்ட, உருவமற்ற, கூட்டம்; திட்டமில்லாத, எல்லையில்லாத, கூட்டம்; அக் கூட்டத்திற்கு மேல் தகிலக்கவசம் அணிந்து, உயர்ந்து நின்ற இளைஞர் கைஸர். அவர்கள் அதைப் பார்த்தனர். அரண்மனையிலிருந்து அவர் வெளியே வரும்படி அவர்கள் செய்திருந்தனர். 'ரொட்டி, வேலை,' என்ற அவர்கள் விடாப்பிடியான கோஷம் அவரை வெளியே இழுத்து வந்திருந்தது. அவர் வெளியே வந்திருந்தாரே ஒழிய, வேறெதுவும்

மாறிய பாடில்லை. டெம்பெல்ஹாப் மைதானத்தை* நோக்கிச் சென்று கொண்டிருந்ததுபோல், அவர்கள் ஏற்கெனவே அணி வகுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஊர்வலத்தின் இரு ஓரங்களிலும் கூட்டம் அதிகமாக இல்லை. நடுத்தர வர்க்கத்தினருக்குரிய ஆடை அணிந்து கொண்டிருந்த வர்கள், ஒருவர்க் கொருவர் கூறிக் கொண்டிருந்தனர்: "ஆண்ட வன் அருளாலே, அவர் என்ன செய்யப் போகிறார் என்பது அவருக்கு நல்ல வேளையாய் நன்கு தெரியும்."

"அவர் என்ன செய்யப் போகிறார்?"

"யார் கையில் அதிகாரம் இருக்கிறது என்று அவர் இந்தக் கலகக்காரக் கும்பலுக்குக் காட்டப் போகிறார். அவர்களைப் பரிவுடன் நடத்திப் பார்த்து விட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரகடனம் செய்த ஆணைகளில், அவர் அவர்களிடம் அள வுக்கு மீறிய அனுதாபம் காட்டியிருந்தார். ஆனால் அவர்களோ ஆணவம் கொண்டு விட்டார்கள்."

"அவர் அச்சம் என்பதையே அறியாதவர். அதற்காக நீங்கள் அவரைப் பாராட்டித் தானாக வேண்டும். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க தொரு கட்டம்."

இதைக் கேட்ட தீதரிஷ் நடுங்கினார். அவரிடம் பேசிய பெரியவர், அவனை நோக்கித் திரும்பினர். வெள்ளைக் குத்து மீசை உடைய அவர், 'இரும்புச் சிலுவை' அணிந்திருந்தார்.

"தம்பி, இன்று நம் மாண்பு மிக்க இளம் கைஸர் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது பற்றி, ஒரு நாள் பள்ளிக் குழந்தைகள் தங்கள் பாட புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொள்வார்கள். அதை நீ பார்க்கப் போகிறாய்," என்று அப் பெரியவர் கூறினர்.

பெருமிதத்தில் பலருடைய நெஞ்சு விம்மியது. அவர்கள் முகத் தில் வீரூர்ந்த பார்வை காணப்பட்டது. கைசரைப் பின் தொடர்ந்து வந்திருந்தவர்கள், திடமான துணிவுடன் கீழ்நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அதே சமயத்தில், மிகப் புனிதத் திருவிளையாடல் நாடகத்தில், கூட்டத்தோடு கூட்டமாய் நடமாடும் பாத்திரமேற்கப் பணிக்கப்பட்டிருந்த நடிகர்களைப்போல், தங்கள் குதிரைகளைக் கூட்டத்தின் நடுவே செலுத்திக் கொண்டிருந் தனர். தங்களைப் பற்றிப் பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள அவ்வப்போது பக்கவாட்டில்

* இராணுவப் பயிற்சிக்காக முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த மைதானம்; இப்பொழுது பெர்லினின் முக்கிய விமான நிலையம்.

பார்த்துக் கொண்டனர். கைஸரைப் பொறுத்தவரை, அவர், தம்மையும் தம் சாதனையையும் மட்டுமே கண்டார். உன்னிப்பான பார்வை, அவர் முகத்தைச் சிறிது கடுமையாக்கியது. அவருடைய காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு மெய்ம்மறந்து இருந்த ஆயிரக் கணக்கான மக்கள் மீது அவர் கண் பார்வை பளிச்சிட்டது. அவர் களோடு தம்மை அவர் ஒப்பிட்டு, அளந்து பார்த்தார். ஆண்டவன் ஆக்கினையால் அரசுப் பொறுப்பை ஏற்றிருந்தவர் தாம்! கலகக் காரக் குற்றேவல் பணியாளர் அவர்கள். துணையின்றி பாது காப்பின்றி, அவர் அவர்கள் நடுவே தனியாகத் துணிந்து வந்திருந்தார். தம் பணியே தமக்கு வலிமை என்ற நம்பிக்கையில், ஆண்டவன் சித்தம் அதுவாக இருந்தால், அவர்கள் அவரைத் தாக்கலாம். தம் புனிதமான குறிக்கோளுக்குப் படையலாக அவர் தம்மை அளித்திருந்தார். இறைவன் அவர் பக்கம் இருந் தால், அவர்கள் அதை உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்தால், அவருடைய சாதனையும், தங்கள் வீரியமின்மையும், அவர்கள் நெஞ்சில் நிலைத்துப் பதிந்திருக்கும்.

கலிலேயன் பாணியில், தொய்வான தொப்பி ஒன்றை அணிந் திருந்த இளைஞன், தீதரிஷ் பக்கத்தில் நடந்து கொண்டிருந்தான். "நாம்தான் இதை முன்பு பார்த்துள்ளோமே. மாஸ்கோவில் தன்னந்தனியனாய், மக்கள் கூட்டத்திற்கு நடுவே காணப்பட்ட நெப்போலியன் போல", என்று அவன் கூறினான்.

"இது மகத்தானது," என்று தீதரிஷ் சாதித்தார். அவருடைய குரல் தவறியது. கலிலேயன் துச்சமாகத் தன் தோள்களை உதறினான்.

"எல்லாம் நடிப்பு. அதிலும்கூட, உயர்ந்த நடிப்பல்ல."

தீதரிஷ் அவனை உற்று நோக்கினார். கைசர் போலத் தாமும் அவன்மீது கண் வீச்சைப் பாய்ச்ச முயன்றார்.

"நீயும் அவர்களில் ஒருவன்தான் போலும்"

எவர்களில் ஒருவன் என்று அவரால் விளக்கிக் கூறியிருக்க முடியாது. கண்டன எதிர்ப்புக்கு ஈடு கொடுத்து, உயர்ந்ததொரு குறிக்கோளை நிலைநாட்டப் பாடுபடும் பொறுப்பு, தம் வாழ்வில் முதன் முறையாகத் தமக்குக் கிட்டியிருந்தது என்று அவருக்குத் தோன்றியது. தம் பதட்டமான நிலையிலும், அவர் அவன் தோள் களை உற்று நோக்கினார். அவை விரிந்து, திண்மை பெற்றனவாய் இல்லை. சுற்றியிருந்த மக்களும் தங்கள் அதிருப்தியைத் தெரி வித்துக் கொண்டிருந்தனர். தீதரிஷ் துணிந்து பாய்ந்தார். தம் வயிற்றில் எதிரியை மோதிச் சுவர் ஓரமாய் அவனை அழுத்தி, அவன் தொப்பியை நோக்கிக் குத்துக்கள் விட்டார். மற்றவர் களும் சேர்ந்து அவனை நையப்புடைத்தனர். முதலில் தொப்பி

தரையில் விழுந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம், தொப்பிக்குத் துணையாக ஆளும் தரையில் கிடந்தான்.

அங்கிருந்து நடந்துகொண்டே, தன்னோடு சேர்ந்து சண்டை யிட்டவர்களிடம் தீதரிஷ் கூறினார்: "இந்த ஆள் இராணுவத்தில் சேர்ந்து சண்டை போட்டவனல்ல என்பது விளங்குகிறது. அவன் உடம்பில் தழும்பு எதுவுமில்லை."

குத்து மீசையும் இரும்புச் சிலுவையும் அணிந்திருந்த பெரிய வரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் டியடெரிக் கையைக் குலுக் கிக் கொண்டே, "நல்ல பாடம் புகட்டினீர்; நன்று, நன்று," என்று கூறினர்.

"வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நேரத்தை, இந்த ஆள் பாழாக்க நினைத்தது பற்றி, அவன் மேல் ஆத்திரம் வருகிற தல்லவா?" என்று மூச்சு வாங்க, தீதரிஷ் கூறினர்.

"நீர் இராணுவத்தில் பணியாற்றினீரா?"

"ஆம். இராணுவத்திலேயே நிரந்தரமாய் இருப்பதையே நான் விரும்பி யிருப்பேன்," என்று தீதரிஷ் கூறினர்.

"ஒவ்வொரு நாளுமா செடான் நடக்கும்? நாம் அந்த மகத்தான சாதனையை அன்று செய்து முடித்தோமே," என்று பெரியவர் தம் இரும்புச் சிலுவையைத் தடவிக்கொண்டே பெருமிதத்துடன் கூறினர்.

"இதுவும் செடானைப்போல் மகத்தான நிகழ்ச்சிதான்," என்று, கம்பீரமாய் நிமிர்ந்து தீதரிஷ் கூறினர், கைசரைச் சுற்றி, அடங்கி யிருந்த மக்களைச் சுட்டிக் காட்டி.

"ஒரு நிமிடம். உங்கள் அனுமதியுடன், இச் செய்தியைக் குறித்துக் கொண்டு, பத்திரிகையில் எழுத விரும்புகிறேன். பின்னணியோடு செய்தியை வெளியிடவேண்டும். நீங்கள் இப் பொழுது ஒரு தோழரை யைப் புடைத்தீர்களல்லா?", என்று தன் குறிப்புப் புத்தகத்தை நீட்டிக்கொண்டு ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

"அது ஒன்றும் பிரமாதமில்லை. என்னைப் பொறுத்தவரை, உள்நாட்டுப் பகைவரை எதிர்த்து மீண்டும் போராட்டம் தொடங்க எந்நேரமும் தயார். நம் கைசர் நம்முடன் இருக்கும் போது, நமக்கென்ன குறை?", என்று தீதரிஷ், மூச்சு வாங்கிக் கொண்டே, கூறினர்.

"பேஷ்! பேஷ்!" என்று பாராட்டிய நிருபர், "பதட்டமடைந் திருந்த அக்கூட்டத்திலே, பல்வேறு வகுப்பு மக்களும் மாண்பு மிக்க தலைவனிடம், உறுதியான விசுவாசத்தையும் அசைக்க

முடியாத நம்பிக்கையையும் தெரிவித்தது, ஊக்கம் அளிப்பதாக இருந்தது," என்று தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார்.

"வெற்றி, வெற்றி," என்று தீதரிஷ் கோஷமிட்டார். அவரைச் சுற்றிலும் அனைவரும் அவ்வாறே கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். ஆரவாரம் செய்த மக்கள் கூட்டத்தால் தள்ளப்பட்டு, தீதரிஷ் பிரான்டென்பர்க் வாயிலை அடைந்தார். அவருக்கு இரண்டு அடி முன்னால், கூட்டத்தின் நடுவே கைஸர் குதிரைமேல் சவாரி செய்து கொண்டிருந்தார். அவருடைய ஒளி வீசிய பார்வையையும், முகத்தில் காணப்பட்ட உறுதியான கடுமையையும், தீதரிஷ் கண்டார். ஆனால் உற்சாகப் பெருக்கில் அவர் ஆரவாரம் செய்து கொண்டிருந்ததால், அவர் கண்பார்வை தெளிவற்றதாகி, மயக்க உணர்வு ஏற்பட்டது. மதுபானம் பருகுவதால் ஏற்படுவதைவிட, அதிகத் தெம்பும் உற்சாகமும் ஏற்படும் உணர்வு அவரை ஆட்கொண்டது. காற்றில் பறப்பது போன்ற பெருமித உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. சுற்றியிருந்த மக்கள் அனைவரையும் உணர்ச்சி வெறி ஆட்கொண்டிருந்தது. அவர் தம் தொப்பியை உயரத் தூக்கி ஆட்டினார். வானம் எங்கிலும் உணர்ச்சி வெறி வியாபித்து நின்றதுபோல் தோன்றியது. அதற்கிடையே, குதிரைமேல், வெற்றிப் பவனிகள் சென்ற வாயிலுக்கடியே, கடுமையான பார்வையுடனும் ஒளி வீசும் கண்களுடனும், 'சக்தி', கொலுவீற்றுப் பவனி வந்தது. நம்மீது ஆதிக்கம் செலுத்தும் 'சக்தி' அதன் குழம்புகளை நாம் பணிவுடன் முத்தமிடுகிறோம். பசி, எதிர்ப்பு, வெறுப்பு, அனைத்தையும் மிதித்துச் செல்லும் 'சக்தி'!. அதை எதிர்த்து நாம் ஒன்றும் செய்ய முடியாது—நாம் அதனிடம் அகலாத அன்பு கொண்ட காரணத்தால், அது நம் இரத்தத்திலேயே கலந்து ஊறியுள்ளது. அடங்கிச் செல்வது நம் இரத்தத்திலேயே இரண்டறக் கலந்து விட்டது. நாம் அதன் ஒரு சிறு துகள். அது உமிழ்ந்ததன் ஒரு சிறு தூசி. நாம் ஒவ்வொருவரும் வெறும் சுன்னம்; 'புது டியூட்டான்'களைப்போல், ஒழுங்கான, கட்டுக் கோப்பான, பேரணியாய் நாம் மேலே ஏறி முன்னேறுகின்றோம். சிப்பாய்கள், அதிகாரிகள், திருச்சபை, கல்வி, பொருளாதார அமைப்புகள், அதிகாரக் குழுக்கள், அனைவரும் ஒன்று சேர்ந்து, உச்சியை அடைகிறோம். உச்சியில் அந்த உன்னதத் தலைவன் நிற்கிறான்—ஒளி வீசும் கண்களுடனும், கடுமையான பார்வையுடனும், அதில் நாம் வாழ்கிறோம்; அதில் கலந்து பங்கு கொள்கிறோம். அவனிடமிருந்து விலகித் தூர நிற்பவர்களிடம் நாம் இரக்கம் காட்டுவதில்லை. அது நம்மைத் தகர்க்கும்போது கூட, நாம் வெற்றி உணர்வில் பூரிக்கின்றோம். நம் அன்புக்

குக் கிடைக்கும் பரிசு தானே அது என்று பெருமை கொள் கிறோம்.

வாயிலருகே கூட்டத்தைத் தடுத்து நிறுத்திய போலீஸ்காரர் களில் ஒருவர், தீதரிஷ் நெஞ்சில் ஒங்கி அடிக்கின்றார். அவர் மூச்சு திணறுகிறார். அடக்கி ஒடுக்கப்படும்போது, பட்டினியை விழுங்கித் திணறும் அந்த மக்கள் கூட்டத்தின் மீதுதான் சவாரி செய்வது போன்ற வெற்றி எக்களிப்பு டியெடரிக்கு ஏற்படுகிறது. கைஸரைப் பின்பற்றுங்கள்! கைஸரைப் பின் தொடர்ந்து செல்லுங்கள்! கூட்டத்தில் அனைவருக்கும் தீதரிஷுக்கு ஏற்பட்டது போலவே, உணர்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. அந்த உணர்ச்சிப் பெருக்கைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் போலீஸ் படைக்கு இல்லை. போலீஸ் அரணைக் கூட்டத்தினர் முறித்துக் கொண்டு சென்றனர். அதற்கு அப்பால், இன்னொரு போலீஸ் வளையம். சுற்று வழியில் டியர்கார்டன் மிருகக்காட்சிசாலையை அடைவதற்கு அவர்கள் வேறு வழியாகத் திரும்பி, போலீசார் கையில் சிக்காமல் தப்ப வேண்டியிருந்தது. வெகு சிலரால்தான் அவ்வாறு தப்பிச் செல்ல முடிந்தது. சவாரிப் பாதைக்குத் தாவிச் சென்று, கைஸரை நோக்கித் தனியாகத் தீதரிஷ் பாய்ந்தார். கைஸரும் தனியாகத் தானிருந்தார். அபாயகரமான, வெறியின் உச்ச நிலையில், அசுத்த மாய், அலங்கோலமாய், காட்டுமிராண்டியின் கண்களுடன், தீதரிஷ் பாய்ந்தார். குதிரைமேல் வீற்றிருந்த கைஸர், அவரை நோக்கித் தன் கண் வீச்சைப் பாய்ச்சித் தன் பார்வையால் அவரைக் குத்தினர். தீதரிஷ் தன் தொப்பியைப் பிய்த்தெறிந்தார்: அவர் வாய் விரியத் திறந்த வண்ணம் இருந்தது; ஆனால் அதிலிருந்து ஒலி எதுவும் வரவில்லை. திடீரென அவர் நின்றதால், அவர் நின்றதால், அவர் கால்மாறி, நீர் தேங்கியிருந்த ஒரு குழியில் தொப்பென்று விழுந்தார்: சகதி படிந்த அவர் கால்கள் உயரப் பறந்தன. அதைப் பார்த்த கைஸர் சிரித்தார். இந்த ஆள் பெரிய அரச விசுவாசி போலும்! அரசனின் உண்மையான குடிமகன் போலும்! கைஸர் தம் தோழர்களைத் திரும்பிப் பார்த்துத் தன் தொடையைத் தட்டிக் கொண்டே, சிரித்தார். குட்டையில் விழுந்து கிடந்த வண்ணம், தன் வாய் இன்னமும் பிளந்திருக்கக் கைஸர் திரும்பிச் செல்வதை வைத்த கண் வாங்காமல், தீதரிஷ் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தம் தொழிலாளருக்குத் தீதரிஷ் நிகழ்த்திய உரை:

....'பீர்' பானத்தை ஒரே மடக்கில் குடித்து விட்டுத் தன் குடும்ப உறுப்பினர் தகுமையில், தீதரிஷ் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். முற்றம் சுத்தமாக அலம்பப்பட்டிருந்தது. தொழிற்

சாலையின் வாயிலில் மலர்த் தோரணங்களும், 'நல்வரவு' என்ற எழுத்துக்களுச் சுற்றிப் பூவலையமும் கட்டப்பட்டிருந்தன. தொழிற்சாலையில் கணக்காராகப் பணியாற்றிய சோட்பீயர் வாசல் முன்னால் நின்று கொண்டிருந்தார். "வாருங்கள், டாக்டர். எனக்கு இங்கு இன்னமும் கொஞ்சம் வேலை இருந்ததால், மேலே வரவில்லை," என்று அவர் கூறினர்.

"வேலையை இன்று தள்ளி வைத்திருக்கலாமே," என்று தீதரிஷ் பதிலளித்து விட்டு, சோட்பீயரைத் தாண்டிச் சென்றார். உள்ளே கந்தை அறையில் தொழிலாளர்கள் ஒரே கூட்டமாய்க் கூடி நின்றிருந்தனர். காகித இயந்திரம், அரைவை இயந்திரம், அறுக்கும் இயந்திரம் ஆகியவற்றில் வேலை செய்த பன்னிரண்டு தொழிலாளரும், மூன்று எழுத்தரும், கந்தைகளைப் பிரித்து எடுக்கும் வேலை பார்த்த ஒரு பெண்ணும், எல்லோரும் ஒரே கும்பலாய்க் கூடி நின்று கொண்டிருந்தனர். ஆண்கள் தொண்டையைக் கனைத்துக் கொண்டனர். ஒரு நிமிடம் நிசப்தம் நிலவியது போல் தோன்றியது. பெண்களில் பலர் ஒரு சிறுமியைப் பிடித்து முன்னால் தள்ளினர். பூச்செண்டு ஒன்றைத் தாங்கி நின்ற அச் சிறுமி, உரத்த குரலில், டாக்டருக்கு நல்வரவு கூறி, அவருக்கு எல்லா இன்பங்களும் கூட வரவேண்டுமென வாழ்த்துத் தெரிவித்தாள். கனிந்த பார்வையுடன் தீதரிஷ் பூக்களை தாங்கிக் கொண்டார். பிறகு அவர் தொண்டையைக் கனைத்தார். தன் குடும்பத்தினரைத் திரும்பிப் பார்த்தார். பிறகு தொழிலாளர் ஒவ்வொரு வரையும், கண்டிப்பான பார்வையுடன் பார்த்தார். கருப்புத் தாடி வைத்த இயந்திரத் தொழிலாளியைக் கூட முறைத்துப் பார்த்தார் அத் தொழிலாளியின் பார்வை தன்னைச் சற்று உறுத்திய போதிலும் பின்பு அவர் பேசத் தொடங்கினர்: "ஜனங்களே! நீங்கள் என் கீழ் வேலை பார்ப்பவர்களாதலால், இனி இங்கு வேலை மிகத் தீவிரமாக நடக்கும் என்பதை மட்டுமே உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன். தொழிலை ஊக்குவித்து வளர்க்க நான் உறுதி கொண்டுள்ளேன். சமீப காலமாக இங்கு எஜமானர் யாரும் இல்லாதபோது, உங்களில் பலர் சும்மா உலாவிக் கொண்டிருக்கலாம் என்று எண்ணினீர்கள் போலும். அது பெரும் தவறு என்பதை நீங்களும், குறிப்பாக, என் அருமைத் தந்தை காலத்திலிருந்து இங்கு வேலை பார்த்துக் கொண்டிருக்கும் வயதானவர்களும் உணர வேண்டும்."

உரத்த குரலில், அவர் மேலும் வேகமாகவும் கண்டிப்பாகவும் பேசினர். வயதான சோட்பீயரைப் பார்த்துக் கொண்டே.

"இப்பொழுது இம் மரக்கலத்தைச் செலுத்தும் பொறுப்பை நான் என் கையிலேயே எடுத்துக் கொண்டுள்ளேன். சரியான

பாதையில் நான் செலுத்தி, மகத்தான எதிர்காலம் நோக்கி உங்களை அழைத்துச் செல்வேன். இதில் எனக்கு உதவ விரும்பு வோர் தாராளமாய் உதவலாம். இவ் வேலையில் என்னை எதிர்ப்ப வர்களை, நான் தகர்த்து ஒடுக்குவேன்."

தம் கண்களில் ஒளி வீசச் செய்ய முயன்றார் டியடெரிக். அவருடைய மீசை சிலிர்த்து எழும்பியது.

"இங்கு ஒருவர் தான் எஜமானர். அது நான்தான். இறைவனுக் கும் என் மனச்சாட்சிக்கும் தான் நான் பொறுப்பு. ஒரு தந்தை யின் பரிவை உங்கள்பால் நான் காட்ட எப்பொழுதும் தயார். ஆனல் அசைக்க முடியாத என் உறுதி முன், புரட்சி மோகம் நிற்க முடியாது."

கருப்புத் தாடி கொண்ட இயந்திரத் தொழிலாளி சந்தேகத்தால் முகத்தைச் சுளித்ததைப் பார்த்து, அவனை முறைத்துக் கொண்டே, தீதரிஷ் தொடர்ந்து பேசினர்:

"உங்களில் எவருக்கும், சமுதாய ஜனநாயக வட்டாரங்களுக் கும், தொடர்பு இருப்பதாக எப்பொழுதாவது தெரிய வந்தால், அந்த ஆளுக்கும் எனக்கும் உள்ள தொடர்பை அடியோடு நான் அறுத்து விடுவேன். என்னைப் பொறுத்தவரை, சமுதாய ஜன நாயகவாதி ஒவ்வொருவனையும் என் தொழிலுக்கு விரோதியாக வும் என் சொந்த நாட்டின் பகைவனுகவும் நான் கருதுகிறேன்..... ஆகவே, இப்பொழுது நான் சொன்னதையெல்லாம் மனதிலே நன்றுகப் பதியவைத்துக் கொண்டு, வேலைக்குத் திரும்பச் செல்லுங்கள்."

திடீரென அவர் திரும்பி, மூச்சு வாங்க வெளியே சென்றார். அவர் பேசிய கடுமையான சொற்கள் அவருக்கு ஒரு மயக்க நிலையை உண்டாக்கியிருந்தன. அந்தக் கலக்கத்தில், அவரால் எவருடைய முகத்தையும் இனம் கண்டு கொள்ள இயலவில்லை. குழப்பமடைந்த நிலையில், ஆனல் மிகுந்த பணிவுடன், அவர் குடும்பத்தினர் அவரைப் பின் பற்றிச் சென்றனர். தொழிலாளரோ நீண்ட நேரம் பேசாமல் ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்து நின்றனர். அதன்பின், அன்றைய நாளைக் கொண்டாட ஆயத்த மாய் வைக்கப்பட்டிருந்த 'பீர்' பான புட்டிகள் மீது பாய்ந்தனர்.

ஜோசஃப் ரோத்

ராதத்ஸ்கியூமார்ஷ்

1894—1939 ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த ஆசிரியர், ஜோசஃப் ரோத், தம் காலத்தின் கோலங்களைச் சித்திரித்தும், நவீன நாகரிகத்தின் குறைகளை அம்பலப்படுத்தியும், புதினங்கள் எழுதத் தொடங்கினார். இத்தகைய கண்டனப் போக்கு அவர் நூல்களில் காணப்பட்ட போதிலும், தவிர்க்க முடியாமல் நடப்பதை ஏற்றுக் கொள்ளும் வருத்தம் தோய்ந்த நிலையே, அவர் முக்கிய படைப்புகளில் ஓங்கி நின்றது. ஆஸ்திரிய—ஹங்கேரி சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியைச் சித்திரிக்கும் அந்நூல்கள், சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு தளத்திலிருந்து பார்க்கும் நோக்குடன் எழுதப்பட்டவை. ரோத்தின் புகழ்பெற்ற புதினமான, 'ராதத்ஸ்கியூமார்ஷ் (1932), அரச பரம்பரையிடம் ஆழ்ந்த விசுவாசம் கொண்டிருந்த ஆஸ்திரிய அதிகாரிகள், அரசாங்கப் பணியாளர் ஆகியோர் அடங்கிய 'த்ரோத்தா' என்ற குடும்பத்தினரின் வாழ்க்கையையும் வரலாற்றையும் சித்திரிக்கின்றது. இக்குடும்பத்தைச் சேர்ந்த கடைசி அதிகாரி, கண்ணியம் இழக்காமல், ஆனால் வல்லமை இழந்து, உலகப் போரில் மரணமடைந்தார். போருக்கு முன் ஆஸ்திரிய அரசின் சீரழிவை அவர்கள் தனிப்பட்ட வாழ்வு பிரதி பலித்தது. இங்கு தரப்படும் பகுதி, இறுதிக் கட்டத்தில் சீரழிவை நோக்கிச் சிதைந்து கொண்டிருந்த ஆஸ்திரிய அரசின் சின்னமாக, வயோதிக மாமன்னர் ஃபிரான்ஸ் ஜோசஃப், தம் படைவீரர்கள் இராணுவப் பயிற்சியைப் பார்வையிடுவதைச் சித்திரிக்கின்றது. ஆயினும் ரோத் எழுத்தில், பழிக்கும் பரிகாசம் ஒலிக்கவில்லை; பரிதாபமும் சோகமும், அனுதாபமும் வருத்தமும்தான் ஒலிக்கின்றன. சோகப் பிரிவைச் சித்திரிப்பதே, இக்காட்சி.

மாமன்னர் மிகவும் வயதானவர். உலகிலேயே மிகவும் வயது முதிர்ந்த மாமன்னர் அவர் தான். அவரைச் சுற்றி எல்லா மருங்கிலும் மரணம் சுற்றித் திரிந்து, வீழ்த்திக் கொண்டிருந்தது. வயல் முழுவதும் காலியாக இருந்தது. மாமன்னர் மட்டும், யாரோ மறந்துவிட்ட வெள்ளிப் பருத்திக் கதிர்போல, நின்று காத்துக் கொண்டிருந்தார். பல ஆண்டுகளாகவே, பார்வை மங்கிக் கடுமையாகியிருந்த அவர் கண்கள், தூரத்தில் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவருடைய மண்டை ஓடு, காலியாக இருந்தது—வகுந்த பாலைவனம்போல். அவருடைய குத்து மீசை வெள்ளையாய், பனிக்கட்டியால் செய்த இரு சிறகுகள் போல் இருந்தது. சுருக்கம் விழுந்திருந்த அவர் முகம்,

காலம், பல ஆண்டுகள் குடியிருந்த கரடுமுரடான பாழ்நிலத்தின் ஒரு பகுதிபோல் காணப்பட்டது. அவர் உடல் ஒட்டி உலர்ந்த தாய் இருந்தது; அவர் முதுகு சிறிது கூனியிருந்தது. வீட்டிலே அவர் சிறு சிறு அடி எடுத்து வைத்துத் தடுமாறி நடந்தார். ஆனால் தெருவில் காலெடுத்து வைத்தவுடன், தம் தொடைகளோ உறுதிப்படுத்தி, முழங்கால்கள் தளராமல், பாதங்களோ மென்மையாக்கி, முதுகை நிமிர்த்திக்கொள்ள அவர் முயன்றார். மன்னரின் கண்களுக்கு இருக்கவேண்டிய உண்மை இயல்பான பரிவை அவர் செயற்கையாகத் தம் பார்வையில் புகுத்திக் கொண்டார். மாமன்னரைப் பார்த்த அனைவரையும் அக்கண்கள் நோக்குவது போல் தோன்றின. தம்மை வரவேற்ற அனைவரையும் அக்கண்கள் வரவேற்றன. ஆனால் உண்மையில் முகங்கள், அவர் கண்களோக் கடந்து மிதந்து சென்றன. வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையே எல்லையாய் உள்ள மெல்லிய, துல்லியமான கோட்டை—அடிவானத்தின் ஓரத்தில், வீடுகள், காடுகள், மலைகள் ஆகியவற்றால் மறைக்கப்பட்டிருந்த போதிலும், முதியோர் கண்ணுக்கு மட்டும் தெளிவாகத் தெரிகின்ற கோட்டை—அக்கண்கள் நேராக நோக்கி நின்றன. தங்களோவிட ஃபிரான்ஸ் ஜோசஃப் மிக வயதானவர் என்பதால், தங்களுக்குத் தெரிந்ததை விட அவருக்குத் தெரிந்தது மிகக் குறைவாக இருக்குமென்று மக்கள் நினைத்தனர். ஆனால் உண்மையில், பெரும்பாலோர்க்குத் தெரிந்ததைவிட அவருக்கு அதிகமாகவே தெரிந்திருந்தது. தம் சாம்ராஜ்யத்தில் கதிரவன் மறைந்து கொண்டிருந்ததை அவர் பார்த்தார்; ஆனால் அவர் ஒன்றும் பேசவில்லை. கதிரவன் மறையுமுன், தாம் மரணமடைய போவது அவருக்குத் தெரியும். சில சமயங்களில் தாம் ஒன்றும் அறியாதவர்போல் பாவனை செய்து, உண்மையில் தமக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது பற்றி, மற்றவர்கள் கூறும் மீண்ட விளக்கங்களோக் கேட்டுக் கொண்டிருப்பதில், அவர் மகிழ்ச்சி அடைவார். மற்றவர்களோ ஏமாற்றுவதில், குழந்தைகளுக்கும் வயோதிகர்களுக்கும் இருந்த சூதான மகிழ்ச்சியுடன், அவர் மற்றவர்களோ ஏமாற்றுவதில் ஈடுபடுவார். தம்மைவிட மற்றவர்கள் சாமர்த்தியசாலிகள் என்பதைத் தங்களுக்குத் தாங்களே மெய்ப்பித்துத் திருப்தி அடைவது கண்டு, அவர் தமக்குள் சிரித்துக் கொள்வார். அமைச்சர்களோவிட மாமன்னர் திறமை சாலியாக இருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை என்பதால், தமது சாமர்த்தியத்தை மறைத்துக் கொண்டு, அவர் அப்பாவி போல் தோன்றினார். சாமர்த்தியசாலி என்பதைவிட அப்பாவி என்று மற்றவர்கள் தம்மைப்பற்றி நினைத்துக் கொள்வதையே அவர் விரும்பினார். தாம் வேட்டையாடச் சென்றபோது, தம் துப்பாக்கி முனைக்கு முன் மிருகங்களோ விரட்டி, மற்றவர்கள் உதவி

செய்தனர் என்பது அவருக்குத் தெரியும். மற்ற மிருகங்களையும் அவர் சுட்டிருக்க முடியுமென்ற போதிலும், தம் முன்னால் கொண்டு வரப்பட்ட மிருகங்களை மட்டுமே அவர் சுட்டார். தந்திரத்தைப் புரிந்துகொண்டு, வேட்டைக்காரரைவிடத் திறமையாகத் தம்மால் சுடமுடியும் என்று வயதான ஒரு மாமன்னர் நிரூபிப்பது பொருத்தமாயிராது என்று அவர் உணர்ந்தார். கற்பனையுலகக் கதை ஒன்று சொல்லப்பட்டபோது, அதைத் தாம் நம்புவதுபோல் பாசாங்கு செய்தார். ஒருவர் பொய் சொல்வதைக் கண்டுபிடித்து விடுவது மாமன்னர்க்கு அழகல்லவே. தமக்குப் பின்னால், மற்றவர்கள் சிரித்தபோது, அதைக் கவனிக்காததுபோல், அவர் பாசாங்கு செய்தார். தம்மைப் பார்த்து யாரோ ஒருவர் சிரிப்பதைக் கவனிப்பது மன்னருக்கு அழகல்லவே. மேலும் அவர் அதைக் கவனிக்காதவரை, சிரித்தவன்தான் ஏமாளியாவான். தமக்குச் சுரம் கண்டு, தம்மைச் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் நடுங்கிக் கொண்டிருந்தபோது, சுரம் எதுவுமில்லை என்று தம் அணுக்க மருத்துவர் கூறியபோது, தமக்குச் சுரம் இருப்பது தெரிந்திருந்த போதும், "சுரம் இல்லையென்றால், கவலை ஒன்றுமில்லை" என்று தான் மாமன்னர் கூறினர். மருத்துவர் சொல்வது பொய் என்று கூறுவது மாமன்னருக்கு அழகல்லவே! மேலும், தம் மரணவேளை இன்னும் வரவில்லை என்பது அவருக்குத் தெரியும். மருத்துவர்க்குத் தெரியாமலே, கடும் சுரத்தால், பல இரவுகள் அவர் வேதனைப்பட்டது அவருக்குத் தெரியும். மற்றவர்கள் கண்ணில் படாமலே, அவர் பலமுறை நோய்வாய்ப் பட்டிருந்ததுண்டு. மற்ற வேளைகளில், அவர் உடல் நலமாயிருந்தபோதுகூட, அவருக்கு உடல் நலமில்லை என்று மற்றவர்கள் கூறினபோது, தமக்கு உண்மையில் உடல் நலமில்லாததுபோல் அவர் பாவனை செய்ததுண்டு. அவர் மிகவும் அனுதாபமாய் இருப்பதாக மற்றவர்கள் நினைத்தபோது, அவர் அசட்டையாக இருந்தார். அவர் உணர்ச்சியற்று இருந்ததாக மற்றவர்கள் கூறியபோது, அவர் இதயம் உண்மையில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. உண்மையைச் சொல்வது மடமை என்று உணரும் அளவுக்கு, அவர் வாழ்ந்து அனுபவம் பெற்றிருந்தார். மற்றவர்கள் தவறு செய்தபோது, அந்த உரிமையை அவர்களுக்கு அளிக்க அவர் மறுக்கவில்லை. தம்மைப் பற்றித் தம் பரந்த சாம்ராஜ்யம் நெடுகிலும் கேலிபேசிய வெட்டிப் பேச்சுக்காரர்கள் உணர்ந்ததை விட, தம் உலகம் நிலையற்றது, விரைவில் கரையக் கூடியது என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆனால் கேலி பேசுபவர்களுடனும், உலக அனுபவத்துடன் பேசுவதாக எண்ணுவோருடனும், ஒரு மாமன்னர் ஈடு கொடுப்பது அழகல்லவே. ஆகவே மாமன்னர் ஒன்றும் பேசாமல் வாளாவிருந்தார்.

ஒருநாள் அவர் அரச இரயிலில் ஏறிக் கிழக்கு நோக்கி விரைந் தார்.

ருஷ்ய எல்லைக்குப் பத்து மைல் தூரத்துக்குள்ளாக, ஒரு கிரா மத்தில், பழைய கோட்டை மாளிகை ஒன்றில், அவர்கள் அரசரின் தலைமை அலுவலக முகாமை நிறுவினர்கள். அதிகாரிகள் குடி யேறிய ஒரு சிறு குடிவில், தாம் குடிபுக, மாமன்னர் விரும்பினர். பல ஆண்டுகளாகவே, உண்மையான இராணுவ வாழ்க்கையை வாழ, அவர் அனுமதிக்கப்பட்டதில்லை. ஒரே ஒரு முறைதான், துரதிருஷ்டவசமான இத்தாலியப் போரின்போது, மாமன்னர் தமது படுக்கையில் உயிருள்ள ஒரு ஈயைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருந்தது. ஆனால் அதைப் பற்றி அவர் எவரிட மும் கூறவில்லை. பூச்சிகளைப் பற்றிப் பேசுவது மாமன்னருக்கு அழகல்லவே. அந்த நாட்களிலேயே அவர் அதை உணர்ந் திருந்தார்.

அவர் படுக்கை அறையில் சாளரங்கள் மூடப்பட்டிருந்தன. இரவில் அவருக்கு உறக்கம் வரவில்லை. ஆனால் அவரைக் காவல் செய்யவேண்டிய பொறுப்பேற்றிருந்த அனைவரும் அவரைச் சுற்றி நன்கு உறங்கிக் கொண்டிருந்தனர். உடலோடு ஒட்டாத, நீண்ட, இரவு அங்கியை அணிந்து கொண்டு, மாமன்னர் படுக்கை யிலிருந்து எழுந்து, மற்றவர்களை விழிக்கச் செய்யாமல், மெது வாக, உயரமாயிருந்த குறுகிய சாளரத் தாழ்ப்பாளைத் திறந்தார். இலையுதிர்காலப் பருவத்தின் இனிய இரவுக் காற்றை அனுபவித் துக் கொண்டே, கருநீல வானில் விண்மீன்களையும், படைவீரர்கள் முகாமல் எரிந்து கொண்டிருந்த தீச்சுடர்களையும், பார்த்துக் கொண்டே, அவர் சிறிது நேரம் அங்கு நின்றார். 'மூதலாம் ப்ரான்ஸ் ஜோச.ப் மன்னர் இன்பவாதியல்ல,' என்று தம்மைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த ஒரு புத்தகத்தை அவர் எப்பொழுதோ படித்திருந்தார். "நான் இலட்சிய இன்பவாதியல்ல என்று எழுதுகிறார்கள். ஆனால் படைவீரர் முகாமில் கொளுந்து விட்டெரி யும் தீச்சுடர்களைப் பார்ப்பதில் எனக்கு அலாதிப் பிரியம்," என்று நினைத்துக் கொண்டார். இளம் வயதுடைய, சாதாரண, இரா ணுவ அதிகாரியாய் இருப்பதில் அவருக்கு அதிக ஈடுபாடு உண்டு. நான் இலட்சிய இன்பவாதியாய் இல்லாமல் போகலாம்; ஆனால் நான் இளைஞனாக இருக்க விரும்புகிறேன் என்று அவர் எண்ணி னார். நான் அரசர் அரியணை ஏறியபோது, எனக்குப் பதினெட்டு வயது தானே ஆகியிருந்தது, என்று அவர் நினைத்துப் பார்த்தார். 'அரியணை ஏறியபோது,' என்ற எண்ணம் அவருக்கு மிகவும் துடுக்கானதாகத் தோன்றியது. தாம் மாமன்னர் என்று எண் ணிப் பார்ப்பதே, அவருக்கு அந்த நிமிடத்தில் கடினமாக இருந் தது. ஆனால் வழக்கமான பணிவுடன், தமக்குக் காணிக்கையாக

அளிக்கப்பட்ட புத்தகத்தில், தாம் மாமன்னர் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. தாம் முதலாம் .:பிரான்ஸ் ஜோசப்:. மன்னர் என் பதில் ஐயமில்லை. தம் சாளரத்துக்கு வெளியே, எல்லையற்றக் கருநில, விண்மீன் நிறைந்த வானம், வகுந்து விளங்கியது. கிராமப்புறம், மேடுபள்ளம் இல்லாமல் பரந்து விரிந்து காட்சி யளித்தது. அந்த சாளரம் வடகிழக்கு நோக்கி யிருந்தது என்று எவரோ சொல்லக் கேட்டது அவருக்கு நினைவிருந்தது. ஆகவே அவர் ருஷ்யாவை நோக்கிக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் நாட்டு எல்லை அவர் கண்ணுக்குப் புலப்படவில்லை. அந்த நேரத் தில், தம் சாம்ராஜ்யத்தின் எல்லைகளைக் காண அவர் விரும்பி யிருப்பார். அவர் புன்சிரிப்பு செய்தார். இரவு நீலமாகவும், வட்ட வடிவாகவும், பரந்து, விண்மீன்கள் நிறைந்ததாகவும் விளங்கியது. ஒட்டிய உடலுடன் வயோதிக நிலையில், வெள்ளை இரவு அங்கி அணிந்து, சாளரமருகே நின்று கொண்டிருந்த மாமன்னர், எல்லையற்ற இரவு வெளியில், அற்பமான சிறு தூசி போலத் தோன்றினர்.

கூடாரத்துக்கு முன் காவல் செய்து கொண்டிருந்த தம் படை வீரர்களில் கடை நிலை வீரர் கூடத் தம்மை விட வல்லமை பொருந்தியவராய் இருந்தார் என்பதை அவர் உணர்ந்தார். கடை நிலைப் படைவீரர் கூட, படைகளின் தலைமை அதிபதியான தம்மை விட வல்லமை மிக்கவராய் இருந்தார். சர்வவல்லமை வாய்ந்த மாமன்னர் முதலாம் .:பிரான்ஸ் ஜோசப்:.புக்கு விசுவா சம் பூண்டவர் ஒவ்வொரு படை வீரரும். ஆண்டவனின் அருளால், அவர் மாமன்னர். சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவனிடம் அவர் நம்பிக்கை கொண்டவர். மனித கற்பனைக்கு அப்பாற்பட்டு, பொன்னிற விண்மீன் செறிந்த வானத்திற்குப் பின்னால் மறைந் திருந்தார், சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவன். அவருக்குச் சொந்தமான விண்மீன்கள் தான் வானில் ஒளிவீசிக் கொண்டி ருந்தன. அவருக்குச் சொந்தமான வானம் தான், பூமியைக் சுற்றி வகுத்துச் சூழ்ந்து நின்றது. அந்த வையகத்தில் ஒரு பகுதியை, ஆஸ்திரிய ஹங்கேரி, அரசை, ஆண்டவன், முதலாம் .:பிரான்ஸ் ஜோசப்:.ப்பிடம் ஒப்படைத்திருந்தார். அந்த .:பிரான்ஸ் ஜோசப்:. ப் மன்னரோ, உடல் ஒட்டிய வயோதிகரால், சாளரத்தருகே தாம் நின்று கொண்டிருப்பதைப் படைவீரர்கள் எந்த நிமிடமும் கவனித்து விடக் கூடுமென்ற அச்சத்தில், நின்று கொண்டிருந்தார். வெட்டுக் கிளிகள் கீதம் இசைத்துக் கொண்டிருந்தன. இரவைப் போலவே முடிவற்ற அவற்றின் கீதத்தைக் கேட்டு, இரவைக் கண்டதால் ஏற்பட்டது போலவே, மதிப்பும் அச்சமும் கொண்டி ருந்தார், மாமன்னர். விண்மீன்களே பாடிக் கொண்டிருந்தது போல் சில வேளைகளில் மாமன்னருக்குத் தோன்றியது. அவர்

சிறிது நடுங்கினர். ஆனல் சாளரத்தை மூட அவர் அஞ்சினர். ஒசையின்றித் திறந்தது போல், ஒசையின்றி மூடமுடியாமல் போகலாம். அவர் கைகள் நடுங்கின. நீண்ட நாட்களுக்கு முன், ஒருமுறை, இந்த மாவட்டத்தில் இரணுவத்தினர் பயிற்சியைப் பார்வையிட அவர் இங்கு வந்திருக்க வேண்டும் என்பது அவர் நினைவுக்கு வந்தது. இதே படுக்கையறையில், அவர் என்றோ ஒரு நாள் படுத்திருந்த நினைவு, கடந்த காலத்தின் திரையைக் கிழித்துக் கொண்டு வந்தது. அது பத்து, அல்லது இருபது, ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியா என்பது அவருக்கு நினைவில்லை. கால மென்னும் கடலில் நீந்திக் கொண்டிருந்தது போல் குறிப்பிட்ட ஓர் இலக்கை நோக்கியல்லாமல், இங்கு மங்கும் அலைக்கப்பட்டு, கடந்த காலத்தில் கண்டிருந்த பாறைகள் மீது மீண்டும் வீசப் பட்டது போல் ஓர் உணர்வு அவருக்கு ஏற்பட்டது. என்றாவது ஒரு கட்டத்தில், அவர் அந்தக் கடலில் மூழ்க வேண்டும். அவ ருக்குத் தும்மல் வந்தது. ஆம், அந்த நீர்க்கோம்பு தும்மலைக் கேட்டு யாரும் விழித்துக் கொள்ளக் கூடாதே. அவர் கூர்ந்து கவனித்தார். தம் உள்ளறையில் யாரும் அசையவில்லை. கவன மாகச் சாளரக் கதவைச் சாத்தி விட்டு, மெதுவாகப் படுக்கையை நோக்கி நடந்தார். வீண்மீன் நிறைந்த நீலவானின் சித்திரம் அவர் மனத்தில் பதிந்து விட்டது. மூடிய அவர் கண்கள், அக் காட்சியை இன்னும் கண்டன. அவ்வாறே, வெளியில் படுத்திருப்பது போல், இரவின் விதானத்தின் கீழ், அவர் உறங்கினர்.

இராணுவப் பயிற்சிகளைப் பார்வையிட முகாமிடும் போதெல் லாம், வழக்கமாய்க் காலையில் நான்கு மணிக்கு எழுந்திருப்பது போல், அவர் எழுந்து விட்டார். அவர் அணுக்கப் பணியாளர், ஏற்கெனவே அறைக்குள் வந்திருந்தார். அறைக்கு வெளியே, தம் மெய்காப்பாளர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆம், அவர் அன்றைய நாளைத் தொடங்க வேண்டும். நாள் முழுவதும், ஒரு மணி நேரம்கூட அவர் தனிமை யில் இருக்க முடியாது. அதற்கு ஈடு செய்வதற்குத்தான், அவர் அவர்களனைவரையும் ஏமாற்றிவிட்டு, நேற்றிரவு, கால் மணி நேரத்துக்கு மேலாகத் திறந்த சாளரத்தருகே நின்றிருந்தார். யாரும் அறியாமல் தாம் இரகசியமாய் அனுபவித்த இந்த இன்பத்தை நினைத்துப் பார்த்து, மகிழ்ச்சி பொங்கப் புன்சிரிப்பு செய்தார், தம் வேலையாளைப் பார்த்து ஓரப்புன்னகை செய்தார். மாமன்னரின் புன்சிரிப்பைப் பார்த்து, வாழ்வில் முதன் முறை யாகத் தான் பார்க்கும் அரசரின் உள்ளாடையைப் பார்த்து,— மன்னரின் சோகை படர்ந்த முகத்திலே, தோல் செதிலுதிர்ந்த வெட்டையருகே, குலைந்து அலங்கோலமாய் விளங்கிய குத்து மீசையிடையே, அமைதியாகக் களைப்புற்று இங்குமங்கும் பறந்த

கிழட்டுப் பறவைபோல, விகாயாடிய புன்சிரிப்பைப் பார்த்து— அதிர்ச்சி அடைந்து இன்னொரு வேலையாள் திகைத்து நின்றான். இரு வேலையாட்களும். மன்னருடன் சேர்ந்து புன்சிரிப்பு செய்வதா, அல்லது மௌனமாய்க் காத்திருப்பதா என்று அறியாமல் திகைத்து நின்றனர். திடீரென மாமன்னர் வாயால், குழல் ஊதுவதுபோல் ஒலி எழுப்பினார். தம் உதடுகளை மன்னர் குவித்துக் கொண்டார். குத்துமீசையின் இரு பகுதிகளும், ஒன்றையொன்று நெருங்கின. பலரும் அறிந்த ஒரு ராகத்தை அவர் வாயால் ஊதத் தொடங்கினார்; இசை தவறி, ஓசை எழும்பியது. ஆடு மேய்ப்பவன் ஊதும் சிறு குழல்போல், அவர் பாட்டு ஒலித்தது. "ஹோஜோஸ் எப்பொழுதும் இந்தப் பாட்டை ஊதிக் கொண்டிருப்பான். அது என்ன பாட்டு என்றறிய விரும்புகிறேன்" என்று மாமன்னர் கூறினார். ஆனால் என்ன பாட்டு என்பது, அந்தப் பணியாளர் இருவருக்கும் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து முகம் கழுவுவதற்குள், மாமன்னர் அப் பாட்டைப் பற்றி மறந்து விட்டார்.

அன்று முழுவதும் அதிக வேலை. மணிக்கு மணி என்ன வேலை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்த, துண்டுக் காகிதத்தைப் .:பிரான்ஸ் ஜோச.:ப் பார்த்தார். அந்த ஊரில் கிரேக்க வைதீகத் திருச்சபை ஒன்றுதான் இருந்தது. ரோமன் கத்தோலிக்கப் பிஷப், முதலில் தொழுகை ஆராதனையைப் படிப்பார்; பிறகு கிரேக்க வைதீகப் பாதிரி அதைப் படிப்பார். திருச்சபை வைதீக ஆசாரங்கள் போல், அவருக்கு வேறெதுவும் சோர்வு தரும் சுமையாக இல்லை. மேலதிகாரி முன் பணிந்து நிற்பது போல், இறைவனின் முன்னிலையில் நிற்க வேண்டும் போல் அவருக்குத் தோன்றியது. அவரோ முதுமை அடைந்தவர். ஆண்டவன் சில சுமைகளிலிருந்தாவது அவருக்கு விதிவிலக்கு அளித்திருக்கலாம் என்று மன்னருக்குத் தோன்றியது. ஆனால் தம்மையும் விட மூத்தவர் ஆண்டவன். அரசரின் ஆணைகள் பொருளற்றதாகப் படைவீரர்களுக்குத் தோன்றுவது போலவே, ஆண்டவனின் ஆணைகளும் பொருளற்றதாக மன்னருக்குத் தோன்றின. ஆனால் கீழதிகாரி ஒவ்வொருவரும் மேலதிகாரியைக் குறைகூற முற்பட்டால் எங்கு போய் முடிவது? ஆண்டவனின் கதிரவன் உதிப்பதை, உயர்ந்த வகுந்த சாளரம் வழியாக, மாமன்னர் பார்த்தார். முழங்காலைத் தாழ்த்திச் சிலுவையில் குறி இட்டுக் கொண்டார். தொன்று தொட்டு, அவர் ஒவ்வொரு நாள் காலையிலும் கதிரவன் உதயமாவதைப் பார்த்ததுண்டு. தம் மேலதிகாரி எழுமுன்பே எழுந்ததுண்டு. நெருப்புப் பிழம்பாய், இன்பக் களஞ்சியமாய், எழும் கோடைகாலக் கதிரவன் உதயம்; மூடுபனிசூழ்ந்து, சோபையிழந்து, காலம் தாழ்த்தி உதிக்கும் மாரிக்காலக் கதிரவன்; இது

போல் எல்லாக் கதிரவன் உதயங்களையும் மாமன்னர் கண்டதுண்டு. தம் வாழ்வில் துன்பமோ இன்பமோ ஏற்பட்ட நாட்கள் பற்றி, ஆண்டு, மாதம், தேதி, அவருக்கு இப்பொழுது நினைவில்லை என்ற போதிலும், தம் வாழ்வில் முக்கியமான நாள் ஒவ்வொன்றுக்கும் முன்னோடியாய் உதித்த காலைப் பொழுது மட்டும் அவருக்கு நன்கு நினைவிருந்தது. ஒரு நாள் காலைப் பொழுது உற்சாகமாய் உதித்தது, மற்றொரு நாள் காலைப் பொழுது சோர்வாய்த் தொடங்கியதும் அவருக்கு நினைவிருந்தது. புயல்கள் தோன்றும் நாளாயிருந்தாலும், வசந்த காலத்தில் கொடிய கோடரி விழும், அல்லது கடுமையான மூடுபனி சூழும், நாளாயிருந்தாலும், அமைதியும் வாழ்வில் வளமும் பொலிவும் குடி கொள்ளும் நாளாயிருந்தாலும், ஒவ்வொரு நாளும் கதிரவனைக் கண்டு இலைகள் விரிவது போல், அவரும் ஒவ்வொரு காலையும் சிலுவைக் குறியிட்டு, வழிபாடு செய்தார்.

கர்ட் டுஹோல்ஸ்கி

சொந்த நாடு

கர்ட் டுஹோல்ஸ்கி (1890—1935), வைமார் குடியரசுக் காலத்தின் மீது தன் அறிவுக் கூர்மையால் கண்டனக் கணைகள் எய்திய வர்; மனிதாபிமான உணர்வு மிக்க சோஷலிச வாதி; தீவிர சமாதான வாதி. சில்லரை முதலாளி வர்க்கத்தின் மொத்தமான போக்கையும் செயலற்ற தன்மையையும், அரசியல் பிற்போக்கையும், ஒரு தலைப் பற்றுள்ள ஆட்சியையும். இராணுவ வெறியையும், தேசியச் செருக்கு வெறியையும் எதிர்த்து, அவர் தம் வாழ்நாள் முழுவதும் போராடியவர். 1924ஆம் ஆண்டிலேயே அவர் ஜெர்மனியைவிட்டு வெளியேறிப் பின்னர் சுவீடன் நாட்டில் குடி புகுந்தார். நேஷனல் சோஷலிச இயக்கத்தின் வெற்றி கண்டு, வேதனே தாங்காமல், தம் உயிரைத் தாமே பறித்துக் கொண்டார். 1929இல் எல்லாவற்றிலும் உபரியான ஜெர்மனி ஜெர்மனி என்ற தலைப்பில் டுஹோல்ஸ்கி வெளியிட்ட திறனுய்வுக் கட்டுரைகளும் நையாண்டிக் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பில் கடைசிக் கட்டுரையான, 'சொந்த நாடு' இங்கே தரப்பட்டுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள பகுதியின் முதல் வரியும் தொகுப்பின் தலைப்பையே குறிப்பிடுகிறது. இங்கு, முதன் முறையாக, டுஹோல்ஸ்கி, ஒரு கேள்விக்கு 'ஆமாம்' என்று கூறுகிறார். ஆயினும் அவர் குறைகளைக் கண்டனம் செய்யத் தயங்கவில்லை. தேசிய உணர்வுக்கும் தேசிய வெறிக்கும் இடையே பெருத்த வேறுபாடு உண்டு என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

நாம் இதுவரை பலவற்றையும் 'வேண்டாம்' என்று கூறி, நிராகரித்து விட்டோம். அனுதாபம் வேண்டாம், அன்பு வேண்டாம், வெறுப்பு வேண்டாம், உணர்ச்சிப் பெருக்கு வேண்டாம், என்றெல்லாம் கூறிவிட்டோம். இப்பொழுது ஒரு முறையாகிலும், 'வேண்டும்' என்று கூறுவோமாக. ஜெர்மனி நாடும் இராமப் புறமும் 'வேண்டும்' என்று கூறுவோம்.

நாம் பிறந்த நாடும் பேசும் மொழியும் வேண்டும் என்று கூறுவோம்.

சொந்த நாட்டுப் பற்றைப் பொறுத்தவரை, அரசு பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஏன் இந்த நாடு? மற்ற நாடுகளில் ஒன்று வேண்டுமென்று ஏன் கூறக்கூடாது? அவற்றில் இனிய, அழகிய, நாடுகள் பல இருக்கின்றனவே.

ஆம். ஆனால் அங்கு நம் இதயம் பேசுவதில்லை. பேசினாலும், வெவ்வேறு மொழியில் பேசுகிறது. அந்நாட்டு மண்ணைப்

பற்றிப் பேசுகிறோம்; பாராட்டுகின்றோம்; போற்றுகின்றோம். ஆனால் அதில் ஒரு வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

ஜெர்மனியில் ஒவ்வோர் இடத்திற்கும் முன்னால் மண்டியிட்டு, எவ்வளவு இனிய இடம், என்று உண்மைக்குப் புறம்பாக வியந்து பாராட்டத் தேவையில்லை. ஆனால் எல்லா சமயங்களுக்கும் பொதுவானது ஒன்றுண்டு. அது, நம் ஒவ்வொருவருக்கும், வேறுக இருக்கலாம். உங்கள் இதயம் மலர்வது மலைப்பகுதியில் இருக்கலாம்; வயலும் புல்வெளியும் சிறிய பாதைகளோ நோக்கு மிடத்தில், தனித்து ஒருவர் இன்புறக் கூடிய இடத்தில், உங்கள் பிறப்பிடம் அங்கிருந்தால், அதன் இதய நாடி ஒலிப்பதை அங்கு நீங்கள் கேட்கலாம். இந்த உணர்ச்சி, தரம்கெட்ட புத்தகங்களி லும், சிறு பிள்ளைத்தனமான கவிதைகளிலும் திரைப்படங்களி லும் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளதை நினைத்தால், நம் சொந்த நாட்டிடம் அன்பு கொண்டுள்ளோம் என்று நாம் சொல்லவே வெட்கப்படலாம். ஆனால் மலைகளின் இசையை அறிந்தவன், அந்த இசை எதிரொலிப்பதற்குச் செவி சாய்ப்பவன், கிராமப் புறத்தின் இசைவின் இனிமையை உணர்பவன், தன் சொந்த நாட்டோடு இணைந்து வாழ்பவன், தனக்குச் சொந்தமாக ஓரடி மண்ணும் இல்லாத போதிலும் தன் நாடு, தன் மலைகள், தன் ஏரி, என்ற உரிமை உணர்வில் திளைப்பவன்—அவனை ஆட்கொள்ளும் உணர்வு அரசியல் அனைத்துக்கும் அப்பாற்பட்டது. அந்த உணர்விலிருந்துதான், இந்நாட்டின்மீது அன்பு நமக்குச் சுரக் கின்றது. இந்நாட்டில் தெருக்களில் வீசும் காற்று, நாம் அறிந்த விதத்தில் வீசுகின்றது: வேறு விதமாக வீசாமல், நமக்கு பழக்க மான விதத்தில் வீசுவதிலிருந்து தான் இந்நாட்டின்மேல் நாம் கொண்டுள்ள அன்பு பிறக்கின்றது. இங்கு பாயும் ஒளிப் பின்னல்கள், நமக்குப் பழக்கமானவை. இவைபோன்ற இன்னும் பல ஆயிரம் காரணங்களால்—நம்மால் விவரித்துக் கூறமுடியாத, காரணங்களால், நம் உதிரத்தோடு கலந்துவிட்ட போதிலும் உணர்வால் தெளிவாக அறிய முடியாத காரணங்களால்—நம் நாட்டின்மீது நமக்கு அன்பு பிறக்கின்றது.

காலத்துக்கு ஒவ்வாத, உயிரோட்டத்திற்கு உண்மையாயிராத, பல சிற்பக் கட்டடக்கலைச் சீரழிவுகள் இந்நாட்டில் உள்ளன, அவற்றைப் பார்க்காமல் இருக்கும் பொருட்டு, நாம் வேறு வழி திரும்பிச் சந்து பொந்தில் செல்கின்றோம். அந்தக் கலைக் கொடுமைகளைப் பொருட்படுத்த மறுக்கின்றோம். இவற்றை யெல்லாம் மீறி, இந்த நாட்டின் மேல் அன்பு கொள்கின்றோம். சோலைகளிலும் பொது இடங்களிலும், அரச குமாரனின் பளபளப் பான பொம்மை உருவம் நம்மைப் பயமுறுத்துகிறது. அது பயமுறுத்தட்டும் என்று ஒதுக்கிவிட்டு, எல்லாவற்றையும் மீறி

இனிமையின் உறைவிடமாய் உள்ள பசும்புல் வெளிகளில் நாம் திரிந்து, சிந்தனையில் ஆழ்ந்து, இந்நாட்டின் மேல் அன்பு கொள்கின்றோம்.

பெரும்பாலும் இந்த அழகு, செல்வத்தோடு சார்ந்த அழகாய் அமைந்த போதிலும், இது அடிப்படையில் ஜெர்மன் அழகுதான். ஒவ்வொரு மாளிகையையும் சுற்றி, நூறு குடியானவர்கள் ஏழ்மையிலும் இன்னலிலும் வாழ்ந்ததால்தான், அந்த மாளிகை அங்கு உருவாகியது என்பதை நான் மறக்கவில்லை. ஆயினும் அந்த மாளிகை எழில் மிக்கதாய் உள்ளது மட்டும் உண்மைதான். பிறந்த நாள் பரிசாக, இன்பக் காட்சிகள் களஞ்சியமாக, இதை நான் தரவில்லை. எண்ணற்ற காட்சிகள் இருக்கும்போது, எல்லாவற்றையும் எப்படிப் படம் பிடித்துத் தொகுத்துத் தரமுடியும்? புகைப்படக்காரர் பிடிக்கத் தவறிய ஓர் எழிலிடம், அமைதியான ஒரு மூலை, ஒரு கிராமப் புறக்காட்சி, ஜெர்மனியில் எப்பொழுதும் எஞ்சியிருக்கும். மேலும் ஒவ்வொருவர் மனத்துக்கு பிடித்தமான, தனக்கே உரிய, சிறு ஜெர்மனி இருக்கத்தான் செய்யும். எனக்குப் பிடித்தமானது வடக்கே இருக்கிறது. மத்திய ஜெர்மனியில் அப் பகுதி தொடங்குகிறது. அங்கு வீட்டு உச்சிகள் மீது தெளிவான காற்று வீசும். வடக்கு நோக்கிச் செல்லச் செல்ல, உங்கள் இதயம் வேகமாகத் துடிக்கும். இறுதியில் கடலின் வாசனை உங்களை ஆட்கொள்ளும். கடலை நெருங்குவதற்குப் பல மைல்கள் தூரத்துக்கு முன்பே, ஒவ்வொரு கம்பத்திலும், ஒவ்வொரு ஓலைக் கூரையிலும், கடலின் வாசனை வீசுகிறது. நாங்கள் இங்கே நிற்பது, எங்களுக்குப் பின்னால் உடனடியாகக் கடல் காத்திருப்பதால் தான், நாங்கள் இருப்பதே கடலுக்காகத்தான், என்று அந்தக் கம்பங்களும் கூரைகளும் கூறுகின்றன. செடியில் கடல் காற்று விளையாடுகிறது. துல்லியமான கடல் மண் உங்கள் பல்லுக்குள் கூடப் புகுந்து விடுகிறது....

கடல். நம் குழந்தைப் பருவ நினைவுகள், என்றுமே மறக்க முடியாதவை. கடலோரம் கழித்த ஒவ்வொரு மணி நேரமும் நெஞ்சிலிருந்து நீங்காதது. ஒவ்வோராண்டும் கடற்கரையில் நண்பர்கள் நல்வாழ்த்துக் கூறி வரவேற்பது, உங்களுக்குத் தனி மகிழ்ச்சி அளிக்கும். மத்தியதரைக் கடல் நீலக்கடலாய் எழில் மிக்கதாய் இருந்தாலும், எனக்கு வேண்டியது ஜெர்மன் கடல். கடலோரத்தில் அடர்த்தியான மரங்கள். அங்கு படர்ந்துள்ள பாசையோ, காலடி ஓசை கூடக் கேட்காத அளவுக்கு மிருதுவாக இருக்கும். காட்டின் நடுவே சிறிய குட்டை. அதில் பூச்சி வகைகள் நடனம் ஆடிக் கொண்டிருக்கும். மரங்களை நாம் தொட்டுப் பார்க்கலாம். காற்று மரங்களிடையே சீறுகின்ற

போது அதன் பொருள் நமக்கு விலங்கும். ஜெர்மனி மற்றதற் கெல்லாம் விஞ்சியதோ, மேலானதோ, இல்லை; ஒருபோது மில்லை. ஆனல் நம் ஒவ்வொருவர் உள்ளாகவும் உடனும் இருக்க வேண்டியது, நம் நாடு. ஆம். மனம் திறந்து நாம் ஒப்புக் கொள்வோமாக.

ஆம். இந் நாட்டை நாம் நேசிக்கின்றேரும்.

இக் கட்டத்தில் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

தேசியவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்ட போதி லும், சில்லரை முதலாளித்வ தன்மையும் இராணுவப் போக்கும் கொண்டவர்கள் மட்டுமே, இந் நாட்டையும் மொழியையும் தங்கள் ஏகபோகமாக்கிக் கொண்டுவிட்டனர் என்று சொல்வது மட்டும் பொய். காலை அங்கி அணிந்த அரசாங்க அதிகாரி, பேராசிரியர், இராணுவத் தொப்பி அணிந்த கனவான்கள், சீமாட்டிகள், இவர்கள் மட்டுமல்ல ஜெர்மனி. நாங்களும் இங்கு இருக்கத்தான் செய்கிறேரும்.

அவர்கள் வாயை அகலப் பிளந்து, "ஜெர்மனியின் பெயரால்," என்று கத்துகின்றனர். "நாங்கள் இந் நாட்டை நேசிக்கின்றேரும். நாங்கள் மட்டுமே நேசிக்கின்றேரும்," என்று கூவுகின்றனர். அது உண்மையல்ல.

தேசியத்தில் நம்மை மற்றவர்கள் விஞ்ச நாம் அனுமதிக் கின்றேரும்; நாம் சர்வ தேச உணர்வு கொண்டிருக்கின்றேரும். ஆனல் நாட்டுப் பற்றில் நம்மை எவரும் விஞ்சி விட முடியாது; அடங்கலில் எவர்கள் பெயரில் நிலம் பதிவு செய்யப் பட்டுள்ளதோ, அவர்கள் கூட விஞ்சி விட முடியாது. நாட்டுப் பற்று நமக்கே உரித்தானது.

நிலத்தின் பெருமையை உணராமல், அதைக் கூறுபோட்டு, காடுகளைச் சீரழித்து, வானையும் அலைகளையும் களங்கப்படுத்தும், தேசியக் குதர்க்கவாதிகளைக் கண்டால் எனக்கு எவ்வளவு அரு வருப்பு ஏற்படுகின்றதோ, அவ்வளவு கண்டிப்பாகவே, நாம் தேசிய வலையில் விழ மறுக்கின்றேரும். கொடிகளை நாங்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை; ஆனல் இந்த நாட்டை நாங்கள் நேசிக்கின்றேரும்.

தெருக்களில் பவனிவரும் போது தேசியக் கட்சிகள் எவ்வளவு உரிமையுடன் முரசு கொட்டுகின்றனவோ, அதே உரிமையுடன், நாங்கள், இந் நாட்டில் பிறந்த நாங்கள், அந்தத் தேசியக் கழுதை களில் பெரும்பாலோரை விட ஜெர்மன் மொழியைச் சிறப்பாக எழுதிப் பேசும் ஆற்றல் பெற்ற நாங்கள் அதே உரிமையுடன் தான், இந் நாட்டின் ஆறுகள், காடுகள், வீடுகள், கடற்கரைகள்,

வயல்கள், பசும்புல் வெளிகள் ஆகியவற்றின் மீது உரிமை கோரு கின்றோம். இது எங்கள் நாடு. ஜெர்மனியை வெறுக்க எங்களுக்கு உரிமை உண்டு; ஏனென்றால் ஜெர்மனி மீது எங்களுக்கு அன்பு உண்டு. ஜெர்மனி என்று பேசும்போது, எங்களைப் பற்றியும் எண்ண வேண்டும். கம்யூனிஸ்ட்கள், இளம் சோஷலிஸ்ட்கள், சுதந்திரத்தில் பற்றுதல் கொண்ட அனைவரும் சார்ந்த எங்களை யும் எண்ண வேண்டும். தேசியக் கட்சிகள் மட்டுமே கொண்டது ஜெர்மனி என்று ஏமாற்றுவது இயலாது.

ஜெர்மனி பிளவுபட்ட நாடு. நாங்களும் அந் நாட்டுக்குச் சொந்த மானவர்களே.

பல்வேறு முரண்பாடுகளுக்கும் மேலாக அசைக்க முடியாமல் உறுதியாகக் கொடியின்றிக் கொட்டு முரசமின்றி, உணர்ச்சி வெறியின்றி, உருவின வாளின்றி நிலை பெற்று நிற்பது, எங்கள் தந்தை நாட்டிடம் கொண்டுள்ள அமைதியான, ஆழமான அன்பு.

அனுபந்தம்

Acknowledgement

We are much indebted to the following publishers for their permission to reprint the texts mentioned below:

Peter Rosegger:
கானகத்தின் கணக்கெடுப்பு
"Volkaszaehlung in den Waldhuetten"
© by L. Staackmann Verlag, Muenchen

Marie von Ebner-Eschenbach:
அண்டை வீட்டார்
"Die Nachbarn"
© by Wlnkler Verlag, Muenchen

Max Weber:
அரசியல்—வாழ்க்கைத் தொழில்
From Max Webers Vortrag (Muenchen 1919) "Politik als Beruf", Teil II "Der Beruf zur Politik"
© by Duncker & Humblot, Berlin

Gerhart Hauptmann:
நெசவாளர்
From "Die Weber"
© by Verlag Ullstein GmbH, Berlin

Hugo von Hofmannsthal:
லார்டு சாந்தோஸ் கடிதம்
"Ein Brief" (=Lord Chandos) from "Hugo von Hofmannsthal Gesammelte Werke in Einzelausgaben, Prosa II"
© by S. Fischer Verlag GmbH, Frankfurt am Main 1951.

Franz Kafka:
தீர்ப்பு
"Das Urteil" from Franz Kafka "Erzaehlungen," ed. by Max Brod
© by Schocken Verlag Berlin, 1935.

© by Schocken Books, Inc., New York City, USA, 1946/63
Rights through S. Fischer Verlag GmbH, Frankfurt am Main

Franz Kafka:

வழக்கு
"Der ProzeB", ed. by Max Brod
© by Schocken Verlag Berlin, 1935.
© by Schocken Books, Inc., New York City, USA, 1946/63
Rights through S. Fischer Verlag GmbH, Frankfurt am Main

Gottfried Benn:

கவிதைகள் உலகை மாற்ற இயலுமா?
"Koennen Dichter die welt aendern?"
© by Limes Verlag Max Niedermayer, Wiesbaden

Robert Musil:

குணங்கள் இல்லாத மனிதன்
"Der Mann ohne Eigenschaftern"
© by Rowohlt Verlag GmbH-Hamburg 1952

Bertolt Brecht:

ஸெட்ஸுவானில் ஒரு நல்ல பிறவி
"Der gute Mensch von Sezuan"
© by Suhrkamp Verlag, Frankfurt am Main 1957 (from "Stuecke, Band 8, Frankfurt am Main 1957)

Bertolt Brecht:

லா சியோதாத் சிப்பாய்
"Der Soldat Von La Ciotat" from "Kalendergeschicjten"
© by Suhrkamp Verlag, Frankfurt am Main 1965 (from "Prosa, Band 2", Frankfurt am Main 1965)

Bertolt Brecht: துன்பவியல் பற்றி முப்புற வாதம்
"Dreigespraech ueber das Tragische"
© by Suhrkamp Verlag, Frankfurt am Main 1963 (from "Schriften zum Theater", Band 3, Frankfurt am Main 1963)

Bertolt Brecht: எசமானர் புன்தீலாவும் அவர் பணியாள் மாத்தியும்
"Herr Puntila und sein Knecht Matti"
© by Suhrkamp Verlag, Frankfurt am Main 1957 (from "Stuecke, Band 9", Frankfurt am Main 1957)

Kurt Pinthus: இளம் கவிகளுக்கு உரை
"Rede an junge Dichter"
© by Professor Dr. Kurt Pinthus

Alfred Doeblin: பெர்லின் அலெக்ஸாண்டர் பிளட்ஸ்
"Berlin Alexanderplatz"
© by Walter-Verlag GmbH, Freiburg i. Br.

Kasimir Edschmid: தொழுநோய்க்காரர் காடு
"Der aussaetzige Wald"
© by Hermann Luchterhand Verlag, Neuwied

Georg Kaiser: போரில் தோல்விக்குப் பின்
from "Stuecke, Erzaehlungen, Aufsaetze, Gedichte"
© by Kiepenheuer & Witsch, Koeln, and by the Georg Kaiser-Archiv in Berlin

Heinrich Mann: அடிமைக் குடிமகன்
"Der Untertan" from "Die Demonstration der Arbeitslosen"
© by Aufbau-Verlag Berlin and Weimar

Thomas Mann: புட்டன் ப்ரூக்ஸ்

from "Buddenbrooks"

© by Frau Professor Thomas Mann

© by S. Fischer Verlag, Frankfurt am Main

Thomas Mann: ஷில்லர்பற்றிக் கடைசிக் கட்டுரை

"Schillerrede"

© by Frau Prafessor Thomas Mann

© by S. Fischer Verlag GmbH, Frankfurt am Main

Thomas Mann: வெனீஸில் மரணம்

"Tod in Venedig"

© by Frau Professor Thomas Mann

© by S. Fischer Verlag GmbH Frankfurt am Main

Joseph Roth: ராதத்ஸ்கியூ மார்ஷ்

Radetzkymarsch

from Joseph Roth "Radetzkymarsch"

all rights with Verlag Kiepenheuer & Witsch, Koeln

Kurt Tucholsky: சொந்த நாடு

"Heimat" from Kurt Tucholsky "Gesammelte Werke" Band III, S. 312

© by Rowohlt Verlag GmbH Reinbek bei Hamburg 1960

Sources of Pictures

Staatsbibliothek Berlin Bildarchiv (Handke):
Heinrich von Kleist, Otto von Bismarck, Friedrich Nietzsche, Joseph von Eichendorff, Adalbert Stifter, Georg Büchner, Karl Marx, Theodor Storm, Gottfried Keller, Eduard Mörike, Heinrich Heine, Jean Paul, Johann Wolfgang von Goethe, Immanuel Kant, Martin Luther, Gotthold Ephraim Lessing, Alexander von Humboldt, Wilhelm Raabe, Gottfried Herder, Theodor Fontane, Friedrich Schiller, Friedrich der Grosse

Verlag Ullstein, Berlin: Gerhart Hauptmann

S. Fischer Verlag, Frankfurt: Hugo von Hofmannsthal, Franz Kafka, Thomas Mann

Studio Rama, Berlin : Gottfried Benn

Rowohlt Verlag, Reinbek/Hamburg : Robert Musil

Deutsche Presseagentur : Bertolt Brecht

Walter-Verlag, Freiburg : Alfred Döblin

Aufbau-Verlag, Berlin : Heinrich Mann

Kuri Tucholsky-Archiv (Mary Tucholsky), Rottach-Egern : Kurt Tucholsky